JL
Zm211, N08YB
N08.6
162048

# விவேக போதினி

## ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

**தொகுதி 5**

**1912**-ம் ௵ ஜூலை ௴—**1913**-ம் ௵ ஜூன் ௴
**1912—13**

சென்னை
ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாரவர்களால்
"கமர்ஷியல் அச்சுக்கூடத்தில்" பதிப்பிக்கப்பட்டது

காபிரைட் ரிஜிஸ்டர் செய்தது.

விலை ரூபாய் 4

# அட்டவணை


பக்கம்

## மதவிஷயக் குறிப்புகள் :—

ஜீவன்முக்தன் ... 1
ஜீவன்முக்தர் பாகுபாடு ... 47
முடிவான நிலை ... 91
ஈஷணா த்ரயம் ... 131
புத்தியின் ஸ்வதந்திரம் ... 171
வாழ்க்கை அவஸ்தை ... 209
தேசகால நிமித்தம் 249, 285, 325
உள்நாட்டம் 363, 433, 473

## மதவிஷயங்கள் :—

### விக்ரஹ ரஹஸ்யம்

8. அநந்த கிருஷ்ணன் ... 2
9. ஸ்ரீராமர் ... 48
10. தக்ஷிணாமூர்த்தி ... 92

### ஸ்ருஷ்டி விஷயம்

1. மஹாப்பிரளயம் ... 132
2. சாஸ்திர சிருஷ்டிக்கிரமம் 172, 210
3. சாஸ்திர புராண சிருஷ்டிகளின் பொருத்தம் 250, 286
4. யுகங்கள் முதலிய நெடுங்கால அளவைகள் 326

திரிமூர்த்திகள் ... 364
சைவ வைஷ்ணவ ஸமரஸம் 434, 474

## உபநிஷத் ரத்தினமாலை :—

பைங்கலோபநிஷத் ... 67
பிக்ஷுகோபநிஷத் ... 70
கிருஷ்ணோபநிஷத் ... 70
பஹ்வருசோபநிஷத் ... 154
அக்ஷ்யுபநிஷத் ... 223
நாரத பரிவ்ராஜகோபநிஷத் ... 337
ஹம்ஸோபநிஷத் ... 399
ஸர்வஸாரோபநிஷத் ... 400
நிராலம்போபநிஷத் ... 401
மைத்ராயண்ய உபநிஷத் 459, 496
ருத்ரஹ்ருதயோபநிஷத் ... 500

## பெரியோர் சரிதை :—

ஸ்ரீமான் பாண்டித்துரை தேவரவர்கள் சரித்திரம் ... 6
தெய்வப்புலமை நக்கீரனர் ... 10
காலஞ்சென்ற ஜெப்பான் சக்ரவர்த்தியவர்கள் 102

பக்கம்

ஆலன், ஓ. ஹியூம் ... 143
ஜெயதேவர் சரித்திரம் ... 176
ஜான் மில்டன் சரிதை ... 253
ராபர்ட்—ஸிஸிலி அரசன் ... 293
பிரஸிடெண்ட் லிங்கன் ... 382

### பிரசித்திபெற்ற வானசாஸ்திரிகள்

1 டாலமி ... 213
2 கோபர்னிகஸ் ... 478

## பிரகிருதி தத்வசாஸ்திரம்:—

### சக்திதத்வ போதினி

ஒளியின் போக்கு மாற்றம் ... 19
ஷை இருபுற வளைவு கண்ணாடிகள் ... 264
சூரிய சக்தி யந்திரம் ... 483

### வஸ்து தத்வ போதினி

தண்ணீர் அல்லது ஜலம் ... 62
தண்ணீர் வகைகள் ... 112
காற்று அல்லது சகஜவாயு: அதன் குணங்கள் 218

### வானசாஸ்திரம்

சந்திரன் 183, 258, 452

### ஸங்கீதம்

ராகங்களின் உற்பத்தி 75, 302
ஆர்ய ஸங்கீத முறை ... 225

### ஜீவவர்க்க விசாரம்

பிராணிகளின் விருத்தாந்தம் ... 107
பூச்சிகள் உண்ணும் மிருகங்கள் ... 331
விநோதமான சில மீன்கள் ... 390

### தாவரநூல்

உருளைக்கிழங்கு ... 256
வாழையின் வகை ... 344
காப்பிச்செடி ... 373

## விவசாயம் :—

விவசாயம் விரைவாக விருத்தியடைய வழி 395
விவசாயக் கருவிகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய அவசியம் ... 478

பக்கம்

## ராஜாங்க முறை :—

### பிரதமக் கொள்கைகள்

போர்த்துகேசிய சகோதரர்கள் ... 17
கிழவனும் ஒரு கட்டுக் கழிகளும் ... 18
பிறரிடத்து செலுத்தவேண்டிய கடமைகள் 59
வேலைக்காரனிடம் நடந்துகொள்ள வேண்டிய விதம் ... 59
ஆல்பான்ஸோ என்னும் சிசிலி அரசன் ... 60
பிளாஸ்கஸும் அவன் அடிமைகளும் ... 60
ஒரு வேலைக்காரனுடைய உண்மை அபிமானம் 61

## பிரிட்டிஷ் துரைத்தன ரீதி :—

ஆங்கிலேய அரசியல் ... 147
அரசர் ... 181
பார்லிமெண்டு-அதன் வரலாறு ... 261
பிரபுக்கள் சபை ... 295
சாமான்யர் ஸபை 342, 405
மந்திர சபையும், மந்திர சங்கமும் ... 444

## ஸ்தல சரித்திரக் கதைகள் :—

விக்ரமசோழன் ... 53
டேனிஷ் தரங்கம்பாடி ... 139

## கவிகள் :—

சிற்றாறு ... 143
உயர்பதம் ... 224
திருத்தணிகை தசாங்கம் ... 329
கடல் ... 346
மயிலைக் கபாலிக் கலிவெண்பா ... 403
திருவண்ணாமலை விரூபாக்ஷி குகையின் கண் அமர்ந்தருளும் ஸ்வாமிகளின் மேல் தோத்திரப்பாக்கள் ... 457

## வியாக்யானங்கள்:—

ஆத்திச்சூடிவிளக்கம் 14, 55, 100, 353, 462, 501
நியாயமஞ்சரி 23, 108, 161

## மொழிபெயர்ப்புகள் :—

உல்லாஸன் சரித்திரம் 24, 72, 120
பெரும்புயல் 29, 81
வசந்தமாளிகை 32, 195, 274, 308
கல்யாணி 77, 114, 158, 228
நாகாநந்தம் 79, 122, 196, 233
இந்துலேகை ... 419

## திராவிடக்கதைகள் :—

1. அஞ்சாள் வேலைக்காரன், ஒராள் திண்டிக்காரன் ... 266
2. இன்றைக்குத் தப்பினால் இன்றைக்குப் பதினைந்தாநாள் ... 310
3. தும்மட்டிக்காய்ப் பட்டன் ... 407
4. உதடன்கதை ... 447
5. தவலைக்கதை ... 489

பக்கம்

## சிறு கதைகள் :—

தூங்கா விளக்கு ... 110
இரணியகேசி கதை 149, 188
கமலாகாந்தன் அல்லது ஓர் பித்தன் 268, 303
இவனே வீரன் 347, 416
சங்கல்பமும், சம்பவமும் ... 351

## வியாஸங்கள் :—

### அறிஞர்க்குரியவை

தேவாரம் சிற்றாராய்ச்சி ... 64
பாஷாஞானத்தை விருத்திசெய்வதெப்படி 152
மனிதன்: அவனது யாத்திரை ... 227
தமிழின் தற்கால நிலைமை ... 376
புதிய தமிழ் அகராதியின் விவரம் ... 424
சிவபுராண சரிதங்கள் ... 439

### ராஜாங்க விஷயம்

டெல்லிமாநகர் வெடிகுண்டு விபத்து ... 283
புதுக்கோட்டை மஹாராஜா அவர்களின் வெள்ளி ஜூபிலி ... 360
சென்னைச் சட்டநிருபணசபை ... 369

### நீதி விஷயம்

ஈகை ... 98
செல்வச் சிறப்பு ... 136
மூடநம்பிக்கை ... 221
கடமை முரண் ... 380

### கல்வி விஷயம்

ஹிந்தி ... 288
இயற்கைப் பொருளறிவு ... 412

### இடம்பற்றியவை

பர்மாவில் இந்துக்கள் ... 157
கஞ்சீ கருடோத்ஸவம் ... 441

### விவேகவிளக்க வியாஸத்திரட்டு

1. கடவுள் ... 450

பக்கம்

## மாணவர் பக்கம் :—

4. ஆராய்ச்சி வியாஸங்கள்

8. மனதைப்பற்றிய விஷயங்கள்—மனோ ராஜ்யம் ... 35
9. இலக்கிய விஷயங்கள்—கம்பர் ... 84
10. ௸ வேர்ட்ஸ்வொர்த் 123
11. பொது விஷயங்கள்— தேசாவஷ்ண ஸ்திதியும் மனோநிலையும் ... 163

ஆத்திச்சூடி விளக்கம்

'வியாக்யானங்கள்' என்னும் தலைப்பைப் பார்க்க

நியாயமஞ்சரி ௸

## மொழிபெயர்ப்பு விளக்கம் :—

உண்மையும் தோற்றமும் ... 37
எதிரிகளை அழித்தல் ... 87
விரைவாய்ச் சுழலும் சிறுதொட்டியிலிருக்கும் தண்ணீர் கீழே விழாதிருப்பானேன் ? ... 125
மனிதன் சிறப்பு ... 166
அல்லின் பிரபுவின் மகள் ... 200
பழுப்பு இலை உதிருங்கால் நடப்பது என்ன? ... 202
போர்வீரன் கனவு ... 239
சாவைப்பற்றியது ... 241
அசையும் படையந்திரத்தின் உபயோகங்கள் ... 278
மனத்தடுமாற்றம் ... 314
ஸூர்யன் அஸ்தமிக்குங்காலத்தில் பல வர்ணங்கள் தெரிவானேன் ? ... 356
ஸம்பாஷண ரஹஸ்யம் ... 424
கடவுளுடன் வியாபாரஞ்செய்தல் ... 465
கண்ணைமூடிக்கொண்டு எந்த வெளிச்சத்தை நோக்கிலும் சிவப்பாகத் தெரிவானேன் ? ... 504

## சிறுவர்களுக்கான பக்கங்கள் :—

உண்மை உயர்வு அல்லது வாஸுதேவசாஸ்திரி

13. வித்தர் பூர்வசரித்திரம் ... 38
14. சாஸ்திரி வேலையில் புகுதல் ... 88
15. ஒரு விதவையைத் தேற்றியது ... 125
16. ஆசார்யாந்வேஷணம் ... 167
17. கடவுளிடம் வந்த கடுங்கோபம் ... 203
18. சாஸ்திரியின் ஸமாதி ... 241

பக்கம்

19. நிலவொளிக் கேளிக்கைகள் ... 278
20. வேதாந்தம் நிலைபெற்றது ... 314

நந்தன் சரித்திரம்

1. ஆதனூர்ச் சருக்கம் ... 357
2. திருப்புன்கூர்ச் சருக்கம் ... 425
3. கழனிச் சருக்கம் ... 465
4. வேதியச் சருக்கம் ... 504

## ஸ்திரீகளுக்கான பக்கங்கள் :—

ருக்மணி அல்லது பக்தி நிலை

பக்திமலர்ந்த காதை—42, 89, 128, 169, 204, 243

சாந்தை அல்லது பொறுமையினிலை

உபோத்காதம் ... 281
1. காமருற்ற காதை ... 282
2. ஒற்றியுரைத்த காதை 318, 359, 429
3. உடன்சென்ற காதை 469, 509
4. சிந்தனைக் காதை ... 509

## விசேஷக் குறிப்புகள் :—

மதுரைத் தமிழ்ச்சங்கம் ;—லார்ட்பெண்லண்ட்:— ... 45

உலகத்தில்உள்ள உன்னத சிகரம்;—ஒரு புதுவகைப் பெட்டி;—நான்கு பிள்ளைகளை ஒரே முறையில் பெற்றவள் ;—கானடா ரயில் பாதையின் நீளம்;—காப்பியின் குணக் குற்றங்கள்;—ஸ்டெட் என்பவரது ஆஸ்தி;—சென்னை மாகாணத்தில் இறக்குமதி யாகும் சைகிலும், மோடார்காரும்;—பர்மா அரிசி. 46

வெங்கோபாசாரியார் காலமானது ;—நரிகளின் விசேஷ குணம்;—ஒரு வெண்கல வீடு ;—புதுவகையான ஒரு தொட்டில் ;—பிள்ளைபெறும் ஸ்திரீகளுக்குக் கிராண்டு;—ஒரு செம்புலியின் யுத்தம்;—மிருகங்களின் வயது. ... ... ... 90

சென்னை புதுக் கவர்னர்;—ஆகாயக் கப்பலில் விவாஹ பவனி;—கடல் நீரில் பொன்;—ஏ. ஒ. ஹியூம் காலமானது ;—கிழவனுகா திருக்க ஓர் புது முறை. ... ... 129

ஒரு தீவில் புதையுண்டுள்ள பெருஞ்சொத்து;—ஒரு விசித்திரப் பிரதிமை;—சுரங்க வெடிப்பால் நேர்ந்த விபத்து;—பூகம்ப விபத்து;—பம்பாய்க் கவர்னர் நியமனம்;—ஸ்டாம்பு விற்பனை. ... ... ... 130



பக்கம்

பூமிக்குள் பஞ்ச லோகங்கள் கண்டுபிடிக்கும் ஸ்திரீ ;—ஒரு பெரிய குழந்தை;—வைக்கோல் கடிகாரம்;—மிக வாழமுள்ள சுரங்கம்;—மிகப் பழைய மரக் கட்டடம்;— ஒற்றைக் கம்பி ரயிற் பாதை;—தபால் தந்தியிலாக்காக்களில் உத்தியோகஞ் செய்யும் பெண்களின் தொகை;—உடன் கட்டை ஏறல்;—பருத்திக்கொட்டை எண்ணெயின் வருமானம் ;—அமெரிக்காவிலுள்ள இந்துக்களின் தொகை ;—ஒரு சிகரெட் யந்திரம் ... ... ... 170

லார்ட் பெண்ட்லண்ட், நமது புதிய கவர்னர்;—துருக்கி பால்கன் யுத்தமும் இந்தியாவும் ;—புகைக்கூண்டுகள் ; —இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு ஆகாயமார்க்கமாய் வருதல். ... ... ... 207

மழுங்கின ரத்தினங்கள் ஒளிபெறுதல்;—தொழிற் படிப்பு;—புதிதாய் ஸ்கூல் ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர்களின் நியமனம். 208

டாடா இரும்புத் தொழிற்சாலை;—கள்ளிக்கோட்டை கவர்ன்மெண்ட் கமர்ஷியல் ஸ்கூல்;—லார்ட் ரிப்பன் உருவச் சிலை;—ராமநாதபுரத்தில் ஒரு புதிய முன்சீப் கோர்ட்டு;—ஒரு புதிய தபால் வண்டி;—புதுக்கோட்டை ஸ்ரீமார்த்தாண்டப் பொருட்காட்சி; —ஒரு வைரம் ;—பல்கேரியரின் ஆயுள் விருத்தி. ... ... 248

சென்னைக்கும் ரங்கூனுக்கும் கப்பற் பிரயாணம்;—போர் செய்யும் ஒரு செர்வியப் பெண்;—ஒரு பெரிய குடும்பஸ்தர்;—ஒரு கப்பல் முழுகிப்போயிற்று;—லார்ட் கார்மிகேலின் ஒரு விசேஷச் செய்கை ;—சென்னை ஹைகோர்ட் புதிய ஜட்ஜ்;—11-ஜட்ஜிகள் அரஸ்ட் செய்யப்பட்டனர்;—டோகியோவில் ஸ்நான கட்டங்கள். ... 248

புதுக்கோட்டை, இரண்டாவது ஸ்ரீமார்த்தாண்ட வருஷாந்தர பொருட் காட்சி சபை. 320

சென்னையிலிருந்து இரங்கூனுக்குச் செல்லுங் கப்பல்;—துருக்கியின் விஸ்தீர்ணமும் ஜன சங்கியையும் ;—இரங்கூனிலிருந்து சென்னைக்கு வருங் கப்பல்கள்;—திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் இறந்துபோனார்;—இரவு 8-மணிக்குப் போடப்படுங்குண்டு.—பம்பாய் கவர்னர் லார்ட் வில்லிங்க்டன்;—புதுக்கோட்டை ராஜா அவர்களுக்கு ஜி. ஸி. ஐ. ஈ. பட்டம் அளிக்கப்பட்டது ... 321

பக்கம்

ராஜகுடும்பச் செலவு ;—பிரிடிஷ் ராஜ்யத்தின் பெருக்கம்;—வங்காளத்தில் ஸபைகள்;—எலிமெண்டரி உபாத்தியாயர் சம்பளம்;—இந்தியாவில் தபால்கள் பட்டுவாடா;—நெல்சாகுபடி ; ஆல்ப்ஸ் மலையைக்கடந்தவர்;—ஜப்பானில் ரயில்பாதைகளும் கப்பல்களும்;—ஜப்பான் புதியசக்ரவர்த்தியின் முடிசூட்டு 322

சென்னை ராஜதானியில் பிரசுரமாகும் சமாசாரப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும்;—புதிய தலைநகரம்;—எழும்பூர் கவர்ண்மெண்ட் விதவாச்ரமம்;—கொசுக்கடிக்கோர் உபாயம்;—ராயல் கமிஷன் ... ... 323

சிவப்புவர்ண விசேஷம் ;— விக்ரஹங்கள் கண்டெடுக்கப்பட்டன;—சென்னை கவர்ன்மெண்டும் வித்யா இலாகா டைரக்டரும்;—எலிமெண்டரி ஸ்கூல்களுக்கு கிராண்டு;—ஓர் நவீன கடியாரம் ... ... 324

ஸ்கூல்களில் தோட்ட வேலை ;—சென்னை ராஜதானியில் பிளேக் என்னும் வியாதியால் மரணம்;—இவ்வருஷ நெல் விளைவு;—ஜார்ஜ் சக்ரவர்த்தியின் உருவச்சிலை ... 363

ஜாவா தீவிற்கு இந்தியாவிலிருந்து கால் நடைகள்;—ஐக்கியநாணய சங்கத்தாரால் ஒரு செகண்டரி பாடசாலை;—சென்னை கார்பொரேஷனுடைய முதல் எலிமெண்டரி பாடசாலை;—செகண்டரி பாடசாலை உபாத்தியாயர்களும் பிராவிடண்ட்பண்டும்;—பிரொபசர் ஹனுமந்தராவ் அவர்களது உருவப்படம்;—தேங்காயுரிக்கும் யந்திரம் ... ... 430

ஜட்ஜ் ராணடேயின் உருவச்சிலை ;—ஆஸாம் மாகாணத்திலிருந்த அருணசல ஆசிரமம்;—ம-ா-ா-ஸ்ரீ திவான் பஹதூர் சா. ராம மு. ராமசாமி செட்டியாரவர்கள் எழுதியது ;—ஒருவியவசாயச்சாலை ;—மலயாளத்தில் ரப்பர் சாகுபடி;—டெல்லியில் லார்ட் ஹார்டிஞ்சுக்கு உருவச்சிலை ... ... 431

மண்டபம் - பாம்பன் வாராவதி ;—பம்பாய் புதியகவர்னர்வில்லிங்க்டன்;—அமெரிக்காவில் சர்க்கரைத் தீர்வை;—மயிலாப்பூர் ராமகிருஷ்ண மாணவர்களின் ஆச்ரமம் ;—மதுரைராமனுதபுரம்கூட்டுறவுச் சங்கத்தின் மஹோத்ஸவம் ... ... 432

(சோடா உப்பு நிறைந்தஏரி ;—கோடீசுரனைப் பார்த்து வர 100 பவுன் பந்தயம்;—ஜில்லா போர்டுகளும் ரயில்வேயும்;—டாக்வில்லா நகரம்;—பால் ஸப்ளையும் சிசுக்களின் மரணமும். ... ... ... 472

பக்கம்

துருக்கி கவர்ண்மெண்டாரால் மெடினாவில் ஒரு சர்வகலாசாலை;—சீனராஜ்யத்தில் இந்திய அபினி;—அமெரிக்காவில் ரயில்வேலைக்காரர்களுக்கு படிப்பு;—பசுக்களின் அபிவிருத்திக்காக K. S. ஐஸ்வல்லாவின் ஏற்பாடு... 511

நமது ராஜப் பிரதிநிதியின் பிறந்தநாள்கொண்டாட்டம்;—சென்னை இஞ்சினீரிங்காலேஜ்;—லண்டனில் ஜியார்ஜ் சக்ரவர்த்தியின்பிறந்தநாள் கொண்டாட்டம்;—லண்டன்நகர சிசுக்கள்;—பிறந்தநாள் கௌரவப்பட்டங்கள்;—கோநகர் ஞானசம்பந்த நற்சபையின் முதல் வருட பூர்த்திக்கொண்டாட்டம்;—பிரிடிஷ் ராஜ்யமுழுமைக்கும் கம்பியில்லாத் தந்தித் தொடர் ... ... 512

## அடிக் குறிப்புகள்

பற்றிலா உலகவாழ்க்கை ... ... 5
மருந்துப் பக்குவமான மிளகாய் ... 29
ஆளி விதை ... ... 31
ஓர் அற்புத தபால் யந்திரம் ... ... 37
வைரக்கல் செய்யும் முறை ... ... 67
கடவுளின் பிரகாரம் பல ... ... 71
ஜகன் மாதாவின் ஸ்மரணம்... ... 79,80
வேஷம் போடுகிறவர்களை நம்பாதே ... 108
நேரில் மல்லுக்கு நிற்காதே ... ... 109
பக்தியுள்ள தாயின் ஜபம் ... ... 113
பிரஹ்மான்வேஷணம் ... ... 121
கடவுள் வேட்கை ... ... 146
பகவத் பக்தர்கள் ... 157,395
நரம்புச் சிலந்தி ... ... 176
யானைத்திப்பிலி ... ... 180
வசம்பு ... ... 182
ஸவிசேஷ நிர்விசேஷ ப்ரஹ்மம் ... 188
அயச்சிந்தூரம் ... ... 194
சென்னை ராஜதானியில், பிளேக் மரணம் ... 199
கடவுளைக் கண்டவர்கள் ... 204,336
குருவின் மஹிமை ... ... 213
உலகப்பற்றுள்ளவன் மதம் .. ... 218
தெய்வமானுஷ ஸம்பந்தம் ... ... 225
ஞானியின் பூஜ்யதை ... ... 242
மதோபதேச அசிரத்தை ... ... 247
மனிதன் இருவித ஸ்வபாவம் ... 257
குழந்தையைப்போல் இரு ... ... 297
தீயாரோ டிணங்கேல் ... ... 311
பற்றுள்ள பக்தன் ... .. 341
திண்டிவனம் கல்விப் பொருட்காட்சி ... 361
டிரெயினிங் ஸ்கூல் சம்பளம் ... 361
பாபாத்மாவின் ஹிருதயம் ... ... 375
கடவுளைக் கண்டவனை உலகம் பாதிக்காது 394

பக்கம்

கர்மானுஷ்டானம் ... 403,407
வீண்வாதம் புரியேல் ... ... 409
திவ்ய ஞானத்தின் ரக்ஷக சக்தி ... 425
விக்ரஹாராதனம் ... ... 429
ஸ்வேச்சை ... ... 483
அவஸரம் ... ... 487
சொல்வதைக் கவனியாதிருத்தல் ... 495
விச்வாஸ யோக்யம் ... ... 503
ஆணை, ஸத்தியம் ... ... 508

## சித்திரப்படங்களின் அட்டவணை

ஈசுவரலீலை, கிருஹஸ்தலீலை
அந்தர்யாமிலீலை, ஆசார்யலீலை 1
ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவர் ... 6
ஒளியின் போக்குமாற்றம் ... 19,20,21,22
ஸ்ரீ ராமபஞ்சாயதனம் ... ... 47
தக்ஷிணாமூர்த்தி வைபவம் ... ... 91
காலஞ்சென்ற ஜப்பான் சக்கிரவர்த்தி ... 102
ஆலன் ஒ ஹியூம் ... ... 131
டேனிஷ் நாணயங்கள் ... ... 140
லண்டன் பார்லிமெண்ட் மஹாஸபை ... 171
சந்திரன் 186,187,452,455,456
லார்ட், லேடி பெண்ட்லண்ட் ... 209
கிரஹங்களின் கதி ... ... 217
காற்று அல்லது ஸஹஜவாயு 218,220
புதுக்கோட்டை மஹாராஜா ... 225
ஜான் மில்டன் ... ... 250
ஒளியின் போக்குமாற்றம் ... 264,265
லார்ட், லேடி ஹார்டிஞ் ... ... 255
டெல்லிமாநகரின் சில காட்சிகள் ... 325
எலி, மூஞ்சூறு ... ... 332
அகழெலி... ... 333,334,335
வேலிப்பன்றி ... ... 334
முட்பன்றி ... ... 335
லக்ஷ்மி, ஸரஸ்வதி, பார்வதி ... 363
சுறுமீன் ... ... 390
நாக்குமீன் ... ... 391
ஈல் (குழிப்பாம்பு) ... ... 392
முட்பலாச்சி, கடற்குதிரை ... 394
சிதம்பரம், ஸ்ரீரங்கம்கோயில்கள் ... 403
கஞ்சீ கருடோத்ஸவம், திருவண்ணுமலை விருபாக்ஷ் குஹையின் கண் அமர்ந்தருளும் ஸ்வாமிகள் ... ... 437
பரமசிவன், மஹாவிஷ்ணு ... ... 433



[Supplement to the "Viveka Bodhini"]


# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி VI } பிரமாதீச வருஷ ஆனிமீ = 1913-ஞு ஜூலைமீ { பகுதி 1


## ஜீவ ஸப்தாவரணங்கள்

### SEVEN STATES OF THE SOUL.

இதுவரையில் எடுத்துக்கூறப்பட்டுவந்த உள்நாட்ட விஷயம், சாஸ்திரங்களில் அநேக விதமாக எடுத்துப் பாராட்டப்பட்டு வருகின்றது. அவைகளுள் இங்கு ஜீவ ஸப்தாவரணத்தை எடுத்துக்கொள்வோம்.

பந்தத்திலிருந்து மோக்ஷபரியந்தம் ஜீவர்களுக்கு ஏழு அவஸ்தைகள் உண்டு. அவையாவன, அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேபம், பரோக்ஷஞானம், அபரோக்ஷஞானம், சோக நிவர்த்தி, நிரங்குச திருப்தி என்பவைகளே. இந்த ஏழு அவஸ்தைகளையும் நன்றாக உணர்த்துவதற்கு தசபுமான் திருஷ்டாந்தம் என்ற உதாரணம் ஒன்று கொடுப்பது வழக்கம். அவிவேகபூர்ணர் என்ற ஒருகுருவுக்கு பத்துபேர் சிஷ்யர்கள். அதில் ஒருவன் அதிமேதாவி. இவர்கள் ஒருநாள் ஒரு ஆற்றைக் கடக்கவேண்டிவந்தது. ஆற்றில் வெள்ளம் அதிகமாயிருந்தபடியால் வெகுஜாக்கிரதையாக எல்லோரும் அதைக்கடந்து அக்கரை ஏறினார்கள். உடனே எல்லோரும் ஸுகமாகவந்து சேர்ந்து விட்டார்களா என்று பார்க்க எண்ணத் தொடங்கினான் அதிமேதாவி. ஒன்பதுவரையில் ஸரியாக எண்ணிவிட்டான்; பத்தாமவனைக்காணாது விழிக்கத் தொடங்கினான். இதுபோல மூல அஞ்ஞானத்தால் ஏற்பட்டிருக்கும்ஆத்மா தன் தோழர்களாகிய கர்த்தா, கர்மம், கார்யம், போக்தா, போகம், போக்யம், ஞாதா, ஞானம், ஞேயம் என்ற நவவித ஸம்ஸாரங்களுடன் மோஹமாகிய ஆற்றைக் கடந்து சற்று நிதானித்து தன்னிடம் எல்லாம் ஸரியாக இருக்கின்றனவா என்று விசாரிக்க உள் முகப்படுவன். அப்பொழுது ஒன்பதுவித ஸம்ஸாரத்தை உணர்ந்துவிட்டு, பத்தாமவன் ஒருவன் உண்டென்று ஒரு அரைகுறையான ஞாபகம் அவனுக்கு ஏற்பட அவன் எங்கே என்று மயங்கித் தவிப்பன். இப்படி உள்நாட்டத்தில் திரும்பும் ஜீவனுக்குத்தான் முற்கூறிய ஏழு அவஸ்தைகளும்.

(1) **அஞ்ஞானம்:**—தான் பத்தாமவன் என்று அறியாததேதான்; அதுபோல ஜீவன் தன் உண்மைநிலை ஸாக்ஷித்வம் என்பதை உணராதிருப்பதுதான்.

(2) **ஆவரணம்:**—பத்தாமவன் இல்லை இருந்தால் காணப்படமாட்டானா என்ற அதிமேதாவியின் தீர்மானத்தைப்போல பத்தாவதாகிய ஸாக்ஷியில்லை; இருந்தால் விளங்காதா என்று ஜீவன் மதிப்பதே.

(3) **விக்ஷேபம்:**—ஐயோ பத்தாமவன் ஆற்றில் அடித்துக்கொண்டுபோகப்பட்டு இறந்துவிட்டானே என்று துக்கிக்கத் தொடங்குவதுபோல, நான் கர்மங்களைச்செய்து பலன் அனுபவித்துத் திண்டாடுகிறேனே என்று உழலுதல்தான் இது.

(4) **பரோக்ஷஞானம்:**—அக்கரையில், சாந்தமாயிருக்கும் ஒருவன் அருகில் போகையில், அவனிடம் தன்கஷ்டத்தை அதிமேதாவி சொல்லிக்கொள்ள, அவன் 'இந்த மூடத்தனமுண்டா நீங்கள் பத்துப்பெயர்கள்தான் இருக்கிறீர்களே' என்று கூறியதைக் கேட்டு, அப்படியா பத்தாமவன் இருக்கிறானா என்ற உணர்ச்சிவருவதுபோல ஜீவன் ஸத்குரு வசனத்தால் ஸாக்ஷி இருக்கிறான் என்று ஒருவாறு உணர்தல் இந்த நிலை.

(5) **அபரோக்ஷ ஞானம்:**—அதிமேதாவிக்கு பூர்ணதிருப்திவாராது கண்டு சாந்தன் 'ஒன்பது பெயர்களை எண்ணின நீ பத்தாவான்' என்று பிரித்து உணர்ந்து தேறித்தெளிவதுபோல், ஸம்ஸாரத்தையும் பிரித்துக்காட்டி அவைகளை உணரும் நீதான் ஸாக்ஷி என்று காட்ட பூர்ணமாகத் தெளிதல்தான் இந்த நிலை.

(6) **சோக நிவர்த்தி:**—அதிமேதாவி துக்கம் நீங்குவது போல ஆத்மா போக்திருத்வம் நீங்குவதுதான்.

(7) **நிரங்குச திருப்தி:**—மாண்டவன் மீண்டு விட்டானே என்று அதிமேதாவி ஆனந்தத் தாண்டவமாடிக் கொண்டு போவதுபோல, ஜீவன் தன் கர்த்ருத்வம் நீங்கி ஸாக்ஷியாகச் சாந்திபெறுதலே.

இதன் பின்னர் நம் உண்மையை இதுவரையில் உற்றுப் பாராதிருந்ததனால்அல்லவா துக்கப்பட்டதுபோலவும் தேறித் தெளிந்தது போலவும் ஏற்பட்டது! உண்மையில் இவ்விரு காலத்தும் மாறாது ஒரு படித்தாயிருந்த வஸ்துவே நான் என்று நிஜவடிவாக அமர்ந்து அதுவேயாயிருத்தல் ஸஹஜநிலை: வரிஷ்டநிலை.

# விவேக போதினி

தொ. 6.] பிரமாதீச௵ ஆனி௴ [பகுதி 1

## அவதாரம், பக்திவழி

### AVATARS THE PURANIC VIEW

விக்ரஹ ரஹஸ்யத்தைப்பற்றிக் கூறியவிடத்து அநேக சைவ வைஷ்ணவ விக்ரஹங்களைப் பற்றிக் கூறியிருக்கிறோம். இவைகளுள் ஸ்ரீராமர், கிருஷ்ணர் இந்த விக்ரஹங்களைத் தவிர மற்றவைகள் கடவுளது பொது விக்ரஹங்கள். இவை இரண்டுமாத்திரம் உலகில் மானிடர்கள்போல உலாவி வந்தவர்களின் உருவங்கள். இம்மாதிரி, கடவுளே மானிட உருவுடன் உலாவிவரும் தோற்றங்களுக்கு அவதாரங்கள் என்று பெயர். இவைகளின் ஸ்வரூபத்தையும் இவைகளோடு ஸம்பந்தப்பட்டிருக்கும் விஷயங்களையும் இங்கு எடுத்து விஸ்தரிப்போம்.

விக்ரஹரஹஸ்யங்களை உணருவதற்கு இரண்டுவழிகள் உண்டென்று முன்னரே கூறியாகிவிட்டது. அவையாவன பக்திவழி என்றும், ஞானவழி என்றும் கூறப்பட்டவைகளே. இவ்விரண்டுள் அவதாரங்கள் பொதுவாக பக்திவழியைத்தான் சேர்ந்தவைகள். ஆயினும் அவைகள் ஞானிக்கும் உபயோகப்படாமல் போகக் கூடியவைகள் அல்ல. ஆகவே இங்கு அவதார விஷயத்தை பக்திவழியிலும், ஞானவழியிலும் எடுத்து ஆராய்ந்து அவைகளின் சிறப்பை வெளியிடுவோம்.

அவதாரம் என்ற பதத்திற்கும் அவதரணம் என்றபதத்திற்கும்ஒரேதாது. தாதுப்பொருள், இறங்குவது என்பதே. அதாவது, மேலான நிலையிலிருந்து ஒரு தாழ்ந்த நிலைக்கு வருவதே. இதிலிருந்து பரம்பொருள் தன்னிலையிலிருந்து ஒரு காரணத்திற்காக இறங்கித் தாழ்ந்தநிலையில் தோற்றுவதைத்தான் அவதாரங்கள் என்னப்படும் என்பது வெளியாகும்.

பரம்பொருள் இறங்கி அவதரிப்பது எப்படி, ஏன், என்ற கேள்விகள் பிறக்கும். பக்தியைப் புகட்ட ஏற்பட்டிருக்கும் புராணங்களில் இந்த விஷயம் வெகு விசித்திரமாயும் கேட்பவர் மனம் களித்து திருப்தியடைந்து கடவுள் வழிபாட்டில் முனையும்படியாயும் கூறப்பட்டிருக்கின்றது. 'பரம்பொருள் இவ்வுலகங்களை ஸ்ருஷ்டித்து தர்மா தர்மங்களை வேதங்களால் வெளியிட்டு ஜீவராசிகள் அவைகளைப் பின்பற்றி ஸன்மார்க்கத்தில் நடந்து கடைத்தேற, வழி ஏற்படுத்தி ஸர்வாந்தர்யாமியாக எல்லோருடைய கர்மங்களையும் உணர்ந்துகொண்டிருக்கிறார். இப்படி இருக்கையில், சிற்சில காலங்களில் தர்மங்கள் சிதைந்து அதர்மங்கள் மேலிட்டுவிடும் தருணங்கள் வந்துவிடும். அப்பொழுது கெட்டவர்களை சிக்ஷித்து, நல்லவர்களைக் காத்து, தர்மத்தை நிலைநிறுத்தக் கருணாநிதியாகிய கடவுள் மானிடம் முதலிய பலவித உருவுகளில் ஒன்றைத் தாங்கிவந்து முன்னர் குறித்த செய்யவேண்டியவைகளைச் செய்துவிட்டு மறைவர். இப்படி வரும் கடவுள் உருவங்களே அவதாரங்கள் என்னப்படும்.' என்று புராணங்கள் பொதுவாகக் கூறும்.

பொதுவாக நிறுத்திவிடாமல் இந்த விஷயத்தைஉட்புகுந்தும் விவரிக்கும், புராணங்கள். அவைகளின்படி அவதாரம் இரண்டுவிதம்.



அவையாவன பூர்ண அவதாரம், அம்சாவதாரம் அல்லது கலாவதாரம் ஆகிய இவைகளே. கிருஷ்ணாவதாரம் பூர்ண அவதாரம். மற்றையவைகள் எல்லாம் அம்சாவதாரங்கள் தான். பரம்பொருள் என்ற உணர்ச்சி விடாதிருக்கும், பூர்ணாவதாரத்திற்கு. உணர்ச்சியின் ஏற்றத் தாழ்வுப்படி அம்சாவதாரங்களில் வேற்றுமைகள் உண்டு. ராமாவதாரம் பரசுராமாவதாரத்தைவிட ஏற்றமானது என்பதுராமாயணத்தில் பரசுராமர் வலியிழந்து தவத்திற்குச் சென்ற கதை நன்கு விளக்கும். வேறு ஒரு நிலையிலிருந்து நோக்குங்கால், அவதாரங்கள் வேறு இரண்டு விதங்களாக பிரிக்கப்படும். அவையாவன, அவஸர அவதாரங்கள், தீர்க்க அவதாரங்கள் என்பவைகளே. கிருஷ்ணர், ராமர், பரசுராமர், புத்தர், வாமனர் முதலிய அவதாரங்கள் மானிட உருவாகத் தோன்றி ஆயுள் முழுவதும் நம்மோடு ஒருவராகப் பழகி தர்மானுஷ்டானம் செய்து காட்டியவைகள். இவைகளுக்கு தீர்க்க அவதாரங்கள் என்று பெயர். மச்சம், கூர்மம், வராஹம் நரஸிம்ஹம் முதலிய அவதாரங்கள் தத்தந்த தருணங்களில் தோன்றிக் காரியம் முடிந்ததும் மறைந்து போய்விட்டன. இவைகளுக்கு அவஸர அவதாரங்கள் என்று பெயர்.

வைஷ்ணவ ஸித்தாந்தத்தில் இந்த விஷயம் இன்னும் நுட்பமாக விவரிக்கப்பட்டு வழங்கி வருகிறது. 'பரமபதம் அல்லது வைகுண்டம் என்னும் ஒரு அழியாலோகத்தில் பரம்பொருள் நித்ய ஸூரிகள் என்றமஹான்களால் பூஜிக்கப் பட்டிருக்கிறார். அவரிடம் சென்று நிலைப்பதே மோக்ஷம். அதை ஜீவர்கள் அடையவேற்பட்ட உலகில் முற்கூறிய அவஸர ஸமயங்களில் பரம் பொருள்வந்து அவதாரம் எடுப்பது வழக்கம். சிற்சில ஸமயங்களில் தமது அம்சத்தால் அவதரிப்பார், அல்லது தாமேவருவார். அப்பொழுது அவரைச் சூழவிருக்கும் ஸூரிகள் தேவதைகள் எல்லோரும் லோக ஹிதத்திற்காக அவதாரங்கள் செய்து, பகவத் அவதாரத்திற்கு ஸஹாயமாக விருப்பர்' என்று கூறும் புராணங்கள் என்பதை ராமாயணம் முதலிய திவ்ய இதிஹாஸங்களில் காணலாம். இதோடு மாத்திரமல்ல. 'வைகுண்டத்திலிருக்கும் பகவத் ஆபரணங்கள், மணிகள் போன்ற பூஜாத்ரவ்யங்கள் எல்லாம் சேதனர்கள்; அவைகளும் சிற்சில ஸமயங்களில் அவதாரங்கள் எடுக்கும். அம்மாதிரி வந்தவர்கள்தான் பரதலக்ஷ்மண சத்ருக்னர்கள், நம்மாழ்வார் முதலியவர்கள்'; என்பர் வைஷ்ணவ ஸித்தாந்திகள்.

இவைகளைப், புராணங்கள் பொதுக்கொள்கைகளோடு பொருத்திப் பார்த்தால் வேறு ஒரு அவதார ரஹஸ்யமும் வெளிப்படும். கிருஷ்ண பரமாத்மா, அர்ஜுனன் இருவரும் இணைபிரியாது இருந்தவர்கள். அர்ஜுனன் மஹாபலவான், சூரன். பகவான் பரமபதத்திற்குப் போனதும் அவன் சக்தி எல்லாம் போய்விட, தன் காண்டீவத்தைக்கூட அவனுக்குத் தூக்கமுடிய வில்லையாம். அவன் ஸாதாரண மனிதனாகி விட்டான். இதுபோலவே பரசுராமரும் தமது அவதாரச் சிறப்பை எல்லாம் ஸ்ரீராமருக்கு ஸமர்ப்பித்துவிட்டு வெறும் ஆளாக தவத்திற்குப் போனார். விதுரர் தமது தர்மராஜர் அம்சத்தைத் தமது நிர்யாணகாலத்தில் தர்மபுத்திரருக்கு ஸமர்ப்பித்துவிட்டு முக்திபெற்றார். இவைகளிலிருந்து ஒரு தேவதை அநேக அவதாரங்கள் எடுக்கலாம் என்றும், ஒவ்வொரு அவதாரத்திலும் இரண்டுவித சைதந்யங்களிருக்கும் என்றும், அவைகளுள் ஒன்று அந்த ரூபத்தின் ஜீவாத்மா என்றும், மற்றது மேலான தேவதை அல்லது கடவுளது சக்தி என்றும், ஜீவன் பிரியும்தருணம் வருங்கால் அதில் உள்ள மேலானசக்தி

பிரிந்து அந்த சக்தியின் வேறு ஒரு அவதாரமிருந்தால் அதில் சேரலாம் அல்லது மூலரூபத்தோடு சேரலாம் என்றும், அந்தமேலான சக்தி அவதாரத்தின் ஜீவனிருக்கையிலேயே பிரிந்து மேலான வேறொரு அவதாரத்தோடு சேர்ந்துவிடலாம் என்றும், அப்பொழுது சக்திநீங்கப்பட்ட அவதாரம் வெறும் ஸாதாரண உலக ரூபமாகிவிடும் என்றும் வெளியாகும்.

வைஷ்ணவ புராணங்கள் இந்த ஸாதாரண ஜனங்கள் பற்றிவழிபடுவதற்காக இன்னும் ஸுலபமாக இந்த விஷயத்தை விவரிக்கின்றன. 'இந்த மாதிரி ஸாதாரண அவதாரங்கள்தான் ஆவேசங்கள். இதில் ஒரு தெய்வம் நல்லசக்தியுடையவன்மேல் இறங்கி அவன் உணர்ச்சியை இழக்கும்படி செய்து அற்புதசக்தி அவனுக்கு ஏற்படும்படி செய்யும். ராமகிருஷ்ணாதி தீர்க்க அவதாரங்கள் வருங்கால் வைகுண்டம் காலியாகிவிடும். நாளாகிவிட்டால் வைகுண்டவாஸிகள் தேவதைகள் முதலியவர்களின் மூலரூபங்கள் 'காலம் அதிகமாகிவிட்டது, சீக்கிரம் வைகுண்டம் வந்தால் நலம் என்று துதித்து அவர்களுக்கு நினைப்பூட்டுமாம். பின்னர் இவர்கள் வைகுண்டம்போய் தமது ஆஸ்தானத்திலிருந்து எல்லோரையும் ஆனந்தப்படுத்துவார்கள். அவதாரங்கள் உலகில் வருங்கால் அவர்கள் தேஹங்கள் நமது தேஹம்போல பாஞ்சபூதிக அசுத்த சரீரங்களல்ல: சுத்தஸத்வ தேஜோமயமான திவ்ய சரீரங்கள். அவர்கள் சிற்சில ஸமயங்களில் எல்லோரையும்போலப் பிறப்பதாகத்தோற்றியபோதிலும் உண்மையில் அப்படி வருபவர்கள் அல்லர்: தோற்றமாத்திரம் தான் அப்படி இருக்கும்' என்று புராணங்களும் காவ்யங்களும் இந்த விஷயத்தை விஸ்தரிக்கும்.

இவ்வாறு அவதாரங்கள் நேரே கடவுள் ஸம்பந்தம் அல்லது தெய்வவிஷய ஸம்பந்தம் உடையவைகளாதலால் ஒருவிதிக்கும் நிஷேதத்திற்கும் உட்பட்டவைகளல்ல. இந்த அவதாரங்கள் நம்மாழ்வார், திருப்பாணாழ்வார் இவர்களைப்போன்ற தாழ்ந்த ஜாதியில் ஏற்பட்ட போதிலும் பரமபத அர்ஹர்களாகி விடுவார்: அவதார ஆற்றல் ஸாதாரண ஜீவர்களுக்கு வாராது. அவைகளைப் போல நடந்தால் ஜீவர்களுக்குப் பாபமேவரும். வேதவிதியை எக்காரணத்தாலும் கடந்து நடக்கலாகாது' என்பர் பக்த சிகாமணிகள்.

உலகம் தோன்றிய நாள் முதல், அவதாரங்கள் அநேகம் ஏற்பட்டுள்ளன பரம்பொருளுக்கு. அவைகளில் சிலவற்றை பிரஹ்மா நாரதருக்கு எடுத்துக் கூறுவதாக ஸ்ரீமத்பாகவதம் இரண்டாம் ஸ்கந்தத்தில் காணப்படுகிறது.

'பிரபஞ்ச முழுவதுமே பகவானது அவதாரமாகிலும் அவைகளுள் சிற்சில முக்ய அவதாரங்கள் பின் வருவன. பிரளய ஸமுத்திரத்தில் பூமியைக் கொண்டுபோய் ஒளித்த ஹிரண்யாக்ஷனைக் கொன்று, அதை உயர்த்த வராஹரூபியாகவும், உலகத்தை ஸ்ருஷ்டிக்கப்படுத்த ஸ்வயஞ்ஞராகவும், தாய் மூலமாக உலகத்தில் சிறந்த ஞானத்தை வெளியிட கபிலராகவும், ஸந்யாஸ தர்மத்தை விளங்கச்செய்ய தத்தாத்ரேய ரிஷபரூபிகளாகவும், தபஸ் மூலமாக உலகைரக்ஷிக்க நர நாராயணராகவும், வேனராஜ வம்சத்தை ரக்ஷித்துஉலகைக்காக்க பிருது சக்ரவர்த்தியாகவும், பிரளயத்திலிருந்து வைவஸ்வதமனுவைக் காக்க மத்ஸய ரூபியாகவும், தேவர்கள் திருப்பாற்கடலைக் கடையுங்கால் மத்தாகவைத்த மந்தரகிரியைத் தாங்கக் கூர்ம ரூபியாகவும், சிறந்த பக்தனாகிய தனது பிள்ளையை வருத்திய லோககண்டகனை ஹிரண்யகசிபுவைக் கொல்ல நரஸிம்ஹ ரூபியாகவும், முதலையால் பிடிபட்டு ஆதிமூலமே என்றழைத்த கஜேந்திரத்தைக் காக்க வந்த பகவத் ரூபியாகவும், மஹாபலியின் வலியை அடக்கி தேவர்களுக்கு ஸஹாயம் செய்யவந்த வாமன ரூபியாகவும், தேவர்கள் பாற்கடலைக் கடையுங்கால் உலகத்தை வியாதியிலிருந்து பிழைப்பிக்க வெளிவந்த தந்வந்தரி ரூபியாகவும், உலகில் கெட்டு தமது தர்மங்களை விட்டு நடந்துவந்த க்ஷத்ரியாது குலத்தை 21-தரம் வேரறுக்கப் பரசுராம ரூபியாகவும், க்ஷத்ரிய தர்மங்களை உள்ளவாறு அநுஷ்டித்துக் காட்ட ஸ்ரீராமரூபியாகவும், அநேக லீலைகள் மூலமாக சிறந்த ஞானத்தைப் புகட்டி பக்தர்களை உயர்த்தவும் பூபாவம் நீக்கவும் பரம்பொருள் ஸ்வரூபத்தை எல்லோரும் உள்ளபடி உணரக் காட்டவும் கிருஷ்ண பலராம ரூபிகளாகவும் நாளடைவில் ஜனங்கள் புத்தி பலங்குறைய அப்பொழுது அநுகூலமாக விருக்கும்படி பரந்துகிடந்த வேதங்களைச் சீர்திருத்திப் பிரித்துவைக்க த்வைபாயன வ்யாஸ ரூபியாகவும், அஸுரபாவனை உடையவர்களை மயக்கித், தமது குற்றம் வெளியானதும் நல்லவழிக்குக் கொண்டுவருவதற்காக புத்தரூபியாகவும்,

பகவான் அநேகவித அவதாரங்கள் எடுத்தார்?' என்றார் பிரஹ்மா நாரதரைநோக்கி. இந்த அவதாரங்களுக்கும் பரம்பொருளுக்கும் பேதமே இல்லை.

இவைகளுள் மச்ச, கூர்ம, வராஹ, நரஸிம்ஹ, வாமன, பரசுராம, ராம, கிருஷ்ண, பலராம, கல்கி ஆகிய பத்து அவதாரங்களேமிக முக்யமானவை என்றும் தசாவதாரங்கள் என்றும் கூறப்பட்டு வழங்கி வருகின்றன. அவைகள் விஷயத்தை பின்வரும் பாட்டுக்களால் ஜயதேவஸ்வாமிகள் சரித்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. முன்கூறிய அவதார மாலையில் இவைகளின் விஷயம் இருப்பினும் அவைகளின் சிறப்பை நன்கு தனியாக வெளிப்படுத்த ஜயதேவர் செய்த தசாவதார ஸ்தோத்ரம் இங்கு கூறப்படுகிறது.

திருவருட் பொருளாயாதி தேவனாய்த் தேவர்கோனாய்
அருவமாய்த் தூயவன்பர்க் கன்பனா யகண்டானந்த
சொரூபமாய்த் துலங்கியெங்குஞ் சோதியாய் நிறைந்த மூர்த்தி
தெருள்செக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. (க)

சுருதியைத்திருடிப்போன சோமுக வசுரன் றன்னைத்
திரைகடற் குள்ளேமீனாய்ச் சென்றுகொன் றவனே நேமி
கரைமுடை கமலக்கண்ணா கர்த்தனா கியகார்வண்ணா
தெருள்செக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. (உ)

சூர்கடல் கடையும்போது தூயகச் சபமாய்நீமந்
தரமலை யினையாழாமற் றாங்கின தயவேதையா
முராஹரி யெழிலார்மெய்யா மூடன்மேன் முனிவேன் றய்யா
தெருள்செக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. (௩)

தரைதனைச் சுருட்டியாழ்ந்த சமுத்திரத் தொளித்திருந்த
இரணியாக் கனை வராக வெழிலுரு வெடுத்துக் கொன்ற
பரமனே பதுமநாபா பரஞ்சோதி யானதீபா
தெருள்செக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. (௪)

பிரகலா தனுக்காகத் தூணிற்பெருநர ஹரியாய்த் தோன்றி
இரணியன் றனைவதைத்த வீசனே நெடியமாலே
பிரமனைப் பெற்றநாதா பேதையே னானெனீதா
தெருள்செக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. (௫)

திருமகா பலிபாதாளஞ் சேரலிவ் வுலகளந்த
சரணனே வாமனாவ தாரகெம் பீரசூரா
திருவுருங்க ளபமார்பா திவ்விய துளபமார்பா
தெருள்செக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. (௬)

அரசர்கடமை யடக்கி யந்தணர் தம்மைக்காத்த
பரசுராமா கோபாலா பரந்தாமனே பூபாலா
விரிமறை தேடுமூலா வேலையிற் றுயின்ற சீலா
தெருள்செக நாததேவா சீக்கிரங் காக்கவாவா (௭)

இருடிகட வஞ்செழிக்க விராவணன் றனைவதைக்கத்
தரைதனில் வந்தராமா சாச்வதனே சங்கராமா
முருகனுக் கிசைந்தமாமா முறையிடு மெனையாள் சோமா
தெருள்செக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. (அ)

பிரலம்பன் முதலானோரை பிடித்திகல் செய்துகொன்ற
தரையும்விண் புகழுநாமா ஜயபல பத்ரராமா
தாணியிற் கொடுமைசெய்தச் சண்டாள னனவென்னைத்
தெருள்செக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. (௯)

திரைகட லுலகிலுற்ற தீயர்கட மையழித்துத்
தருமமா திபரைக்காத்த சங்குசக்கரனே கிருஷ்ண
வரையினைச் சுமந்தசீலா வாரியிற் றுயின்றபாலா
தெருள்செக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. (ம)

பரியவ தாரராகிப் பாரினை யழிக்கவுன்னுங்
கரியனே கஞ்சத்தாளா கடையனேன் றன்னையாள
யுரியனே முறையோவென்னு மோலங்கேட் டிருக்கலாமோ
தெருள்செக நாததேவா சீக்கிரங் காக்கவாவா. (மக)

இதுவரையில் கூறிவந்தது வைஷ்ணவ ஸம்பிரதாயப்படி ஏற்பட்டுள்ள அவதாரவிஷயம். இனிசைவ ஸித்தாந்தப்படிப் பரம்பொருளுக்கு அவதாரமே இல்லை. ஆனால் அவஸரத் தோற்றங்கள் மாத்திரமே உண்டு. அம்பிகை ஸுப்ரஹ்மண்யர், கணேசர், சிவபரிவாரங்கள் எல்லோருக்கும் அவதாரங்கள் உண்டு. இவர்களுக்கு எல்லாம் பிள்ளைத்தமிழ் என்ற ப்ரபந்தம் உண்டு. அதில் இவர்கள் பிறப்பு இளமை, விளையாட்டு முதலிய பர்வ விஷயங்கள் வர்ணிக்கப்பட்டு ஸ்தோத்திரங்கள் செய்யப்பட்டிருக்கும். மீனாக்ஷி அம்பிகையினதும், திருஞான ஸம்பந்தர் ஸுப்ரஹ்மண்யரதும் அவதாரங்கள் என்பது ப்ரஸித்தம். பரம்பொருளோ பக்தர்களை கடாக்ஷிக்க அநேக உருவத்தில் தோன்றி மறைந்து தம் ரூபத்திலேயே இருப்பர். திருவிளையாடல் புராணம், பெரியபுராணம் எல்லாம் இம்மாதிரியான சிவன் அவஸர அவதாரங்களைப் பற்றியே கூறுபவைகள். மஹாபாரதத்திலும் அர்ஜுனனுக்கு பாசுபதம் கொடுக்கப் பரம சிவன் கிராத (வேட) ரூபியாக வந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. அவதாரங்கள்சைவப்படி ஒரேவிதமாக விருப்பதால் வைஷ்ணவத்தில் காணப்படுவதுபோல அவதார விஷய விஸ்தாரம் சைவத்தி லில்லை.

இவ்விருவித பக்தி வழியாக அவதாரங்கள் கருதப்படும் மாதிரியைப் பொதுப்படையாக நோக்கில் வைஷ்ணவசைவர்கள் பரம்பொருளை திரிமூர்த்திகளில் விஷ்ணு சிவ ஸம்பந்தபடுத்தி அவைகள் வழியாக ஆராதிப்பதால் ஏற்படுபவைகள் என்பது விளங்கும். விஷ்ணு காக்கும் கடவுளாதலால் அவர் பிரபஞ்ச வைசித்ரியத்தை மேற்கொண்டு உலகை நிலைகுலையாது காக்க பலவித ரூபங்கள் வாழ்வுகள் எல்லாவற்றிற்கும் உட்பட்டவர் போலக்காட்டி அவதரிப்பதாகவும் கருதப்படுகிறார். இவரிடமிருந்து அவதார விசித்ரங்கள் ஏற்படுவது காக்கும் தன்மைக்குத் தகுந்ததே. சிவனோ, ஸம்ஹாரக்கடவுளாதலால் தேறிவரும் பக்தர்களுக்கு அவர் எண்ணத்திற்கு ஏற்ப பக்தி முடிவில், ரூபம் தாங்கி அவஸர அவதாரம் செய்து அவர்களை ஈடேற்றுவதாக மாத்திரம் கருதப்படுகிறார். இப்படி இருவிதமாகக் கருதப்படினும் ஒவ்வொரு அவதாரத் தோற்றமும் மும்மூர்த்தி அம்சங்களை ஸமயங்களுக்குத் தக்கபடி ஏற்று காரியம் நடத்துவதாகப் புராணங்கள் கூறும் என்பதையும், முன்னர் கூறியுள்ள திரிமூர்த்தி ரஹஸ்யத்தையும்(தொகுதி 5, பகுதி 10, பக்கம் 364) மறக்கலாகாது.

இதுவரையில் பக்திவழியாக அவதாரவிஷயம் எடுத்துக் கூறப்பட்டது. இனி ஞான வழியில் இதை எடுத்து விவரிப்போம்.

---

**ஒருவரையும் இகழாதே.**—ஒருமனிதன் எவ்வளவுதான் தள்ளாதவனும் மதிப்பற்றவனுமிருந்தபோதிலும் அவனும் ஒருசமயத்தில் உனக்கு ஏதாவது உதவிசெய்யும்படி நேரிடுமாகையால், நீ ஒருபொழுதும் ஒருவரையும் இகழவே இகழாதே. "சிறுதுரும்பும் பல்லுக்குத்த வுதவும்' என்ற பழமொழியின் அர்த்தம் இதுவே. நாம் ஒருவருக்கு ஒரு தீங்கு செய்தால் வெகுவாய்அவர்கள் அதைப்பொறுக்கலாம்; இகழ்ச்சியையோ ஒருநாளும் பொறுக்க மாட்டார்கள். ஒவ்வொருவனுடைய அகங்காரமும் அதைச் சதாமனதில் வைத்துக்கொண்டே இருக்கும். நாம் இகழ வேண்டியவனாய் இருந்த போதிலும் அதை மனதுக்குள் வைத்துக்கொள்ள வேண்டுமேயல்லாது வெளியில் காட்டக்கூடாது.



## ஸஹஜாநந்தர்

## SAHAJANANDA

இவர் அயோத்தியா நாட்டில் லக்னௌவுக் கருகாமையிலுள்ள சாபாய் என்னும் ஊரில் 1781-ம்வருஷம் ஏப்ரல் மாதம் பிறந்தவர். அதி வாலிபத்திலேயே, இவர் பரதக்கண்டத்திலுள்ள க்ஷேத்திரங்களுக்கெல்லாம் யாத்திரை செய்து ராமேசுவரத்தில் சூரியனைக்குறித்துத் தவஞ்செய்து தான் எடுத்த காரியமெல்லாமினிது முடிய வேண்டுமென்ற வரன்பெற்றுக் கொண்டார். இவர் மேற்குப்பிரதேசங்களில் யாத்திரை செய்துவந்தபொழுது மாங்க்ரல் ஜனகாட் வழியாகச் செல்லுகையில் அங்கு ராமாநந்த சுவாமிகளைத் தரிசித்து அவரிடம் சிஷ்யராக அமர்ந்தார். இவர் அசாதாரணமான அபூர்வச்செய்கைகளைக் காண்பித்தும் தன்னைப் பார்த்தவர்களெல்லாம் தன்னை கிருஷ்ண பகவானென்று நம்பும்படிக்குச் செய்ததால் ஜனங்கள் இவரை அவதார புருஷனென்று நம்பினார்கள். இவருடைய பிரபாவம், இவர் தம் குரு ராமாநந்தர் காதில் படவே அவர் ஸஹஜானந்தரைப் பரீட்சிக்கத் தொடங்கினார். சிஷ்யன் குருவின் முன் தோன்றவே ராமாநந்தரும் ஸஹஜாநந்தரை கிருஷ்ண பகவானென்று பிரேமை கொண்டார். இதினால் ஸஹஜாநந்தரின் பெருமையை உணர்ந்து, ராமானந்தர் அவரைத் தன் பிரதம சிஷ்யராக நியமித்துக் கொண்டது மன்றி ஆறுமாதத்துக்குப் பிறகு அவர் முக்தியடைந்தபோது ஸஹஜாநந்தரையே தனக்குப் பிறகு ஆசாரியராக அனைவரும் அங்கீகரிக்க ஏற்பாடும் செய்தார். ஸஹஜாநந்தருடைய வாக்கு சாமர்த்தியத்தாலும் அபூர்வ நடத்தையாலும் பல ஹிந்துக்கள் மாத்திரமேயன்றி அநேக மகமதியர்களும் பார்ஸி ஜாதியாரும் இவரை அனுசரித்தார்கள். பதினேழாவது நூற்றாண்டில் இஸ்லாம் மதத்தைக்கொண்ட மாதீயகும்புகளில் பெரும்பாலர் இவரால் திரும்பவும் ஹிந்துக்களாக்கப்பட்டார்கள். ஸஹஜாநந்தரின் முக்கிய கருத்து என்னவென்றால் வல்லபசுவாமிகளின் பட்சத்தாராலும் இன்னும் பல அசாஸ்திரமானக் கொள்கைகளாலும் இழிவுபட்டிருந்த வைஷ்ணவமதத்தைப் புராதன உயர்வுக்குக் கொண்டுவரவேண்டுமென்பதே. இவர் பிராமணவகுப்பினரே யானாலும் ஜாதிவித்தியாச மின்றி காட்டு ஜனங்கள் சண்டாளர்கள், அனைவரையும் ஏற்றத் தாழ்வின்றி தன் மதத்தில் சேர்த்துக்கொண்டார். இதனால் இவர் குஜராத்தில் வைதீகப்பிராமணர்களாலும், பேஷ்வாராஜ்யத்தின் உத்தியோகஸ்தர்களாலும், பரோடா கெய்க்வாரினாலும் மிக்க ஹிம்ஸிக்கப்பட்டு நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டார். ஆனால் ஆமடாபாட் ஆங்கிலேயர் கைக்குட்பட்டதும், கலெக்டர் இவரைத் திரும்பவும் 1818-ம் வருஷத்தில் ஆமதா பாத்துக்கு வரவழைத்து அவர் ஒரு கோவிலையும் அதைச் சேர்ந்த கட்டிடங்களையும் இயற்றுவதற்காக வேண்டிய நிலத்தையும் இனமாக உதவி,ஜனங்களுக்கு நல்லுபதேசஞ் செய்யும்படியாக வேண்டிக்கொண்டார். பரோடா மகாராஜாவும் அவரைப் பிறகு மிக்க மரியாதையுடன் அரண்மனைக்கு வரவழைத்து உபசரித்து அவருடைய கோவில்களுக்கு ஏராளமான வெகுமதிகளையுஞ் செய்தார். ஸஹஜாநந்தர் வேதாந்தத்தில் மிக்க பாண்டித்தியம் பெற்றவராயிருந்தபோதிலும், ஜனங்கள் தத்துவ விஷயங்களையும் மதசூஸ்திரங்களையும் பற்றி விவாதஞ் செய்வதைச் சிறிதும் அங்கீகரிக்கவில்லை. நன்னடக்கையும், நற்குணமும் பிரதானமென்று அவர் வற்புறுத்துவதுவழக்கம். ஒருவனுடைய சரித்திரம் சரியாயிருந்தால் அவனுடைய பக்தியும் மெச்சத்தக்கதாயிருக்குமென்பது இவர் நம்பிக்கை. இவரது உபதேசங்கள் சிகாபத்திரி என்னும் 212ஸம்ஸ்கிருத சுலோகங்களடங்கிய ஒரு சிறு கிரந்தத்திலடங்கி யிருக்கின்றன. அதை இவர் 1826-ம் வருஷத்தில் எழுதினார். அது குஜராத்தி பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஸ்திரீ புருஷர்களின் வாழ்க்கையையும் நடத்தையையும் போற்றி போதனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஸஹஜாநந்தருடைய கொள்கைகளை யனுசரிக்கும் 3 லட்ச ஜனங்களால் பாராயணஞ் செய்யப்பட்டு வருகிறது. இம்மகானுடைய உபதேசங்களில் சிலவற்றை எடுத்துரைப்போம். துஷ்டர்கள் அவதூறு செய்தாலும் அடித்தாலும் சுத்தர்கள் சாந்தத்துடன் பொறுத்துக்கொள்ள வேண்டும். திருப்பி தூறவாவது அடிக்கவாவது கூடாது. அத்துஷ்டர்களுக்குத் தீமை நேர வேண்டுமென்று எண்ணவுங் கூடாது. அவர்

களுடைய நன்மையையே கோரவேண்டும். கடமைகளைச் செய்யாமல் கிருஷ்ணனிடத்தில் பக்தியைச் செலுத்துதல் மாத்திரம் உதவாது. ஒருவனின் சொந்தக் கடமைகளை ஒருபோதும் விடக்கூடாது. அயலாரின் கடமைகளில் அநாவசியமாகப் பிரவேசிக்கவுங் கூடாது. சன்மானங் கிடைப்பதாயிருந்தாலும் கடமையைத் தவறிய காரியத்தைச் செய்யவே கூடாது. நம்பிக்கைத் துரோகம் செய்யவே கூடாது. ரகசியத்தை வெளியிடவுங் கூடாது. இவ்வித உத்கிருஷ்டமான உபதேசங்களைச் செய்ததாலும், அநுஷ்டித்ததாலும், மகமதியர்களும் பார்ஸி ஜாதியாருங்கூட ஸஹஜாநந்தரின் சிஷ்யர்களானார்கள். சூரத்தில் பிரிட்டிஷாரிடம் பெரிய உத்தியோகத்திலமர்ந்து பார்ஸி ஜாதியாரால் மிகவும் நன்குமதிக்கப்பட்டுவந்த ஆர்டேஷிர் கொத்தவால் என்னும் பார்ஸி கனவான் ஸஹஜாநந்தருடைய சிஷ்யராகி அவரை மிகவுந் தொழுதுபசரித்து வந்தார். பில், காதி, கோலி, காண்பி முதலிய முரட்டுக் காட்டு ஜனங்கள் மேற்படி உபதேசங்களால் வசீகரிக்கப்பட்டு தங்களுடைய துர்நடத்தை, வஞ்சகம், கொடுமை முதலிய தீக்குணங்களை விட்டு விட்டார்கள். அன்றியும் ஸஹஜாநந்தருடைய போதனைகளெல்லாம் ராஜவிசுவாசமும் அமைதியும் அடக்கமுமேயானதால் அவ்வகுப்பைச் சேர்ந்தஜனங்களெல்லாம்ராஜாங்கத்துக்கு அநுகூலமே செய்து வந்தார்கள். இதனால் இக்கொள்கையை ஒரு சாரார் "இங்கிலீஷ் தர்மம்" என்று சொல்வதுண்டு. ஸஹஜாநந்தரின் உண்மையான திருநாமம் கணேசம். அவர் பிரும்மசாரி ஆசிரமம் பெற்றதும் நீலகண்டனென்ற நாமம் பெற்றார். ஆனால் ஜனங்கள் அவரை மகாவிஷ்ணுவின் அம்சமென்று நம்பி அவரை சுவாமி நாராயணனென்றே அழைத்து வந்தார்கள்.

இவ்வகுப்பாரைச் சிலாகித்து அநேக கவர்னர்களும், கலெக்டர்களும் போலீஸ் சூப்பரின்டெண்டுகளும் பேசியிருக்கிறார்கள். 1880-ம் வருஷத்தில் ஸர் ஜேம்ஸ் பர்கூஸன் "இக்கூட்டத்தாரின் தூய வாழ்க்கைக்கும் போலான சீலத்துக்கும் எனக்கு முன்னிருந்த கவர்னர்களும் இன்னும் அநேக பிரபலமான கீர்த்திமான்களுமே அத்தாட்சி" என்று கூறியிருக்கிறார். ஆமடாபாட்டில் போலீஸ் சூப்பரின்டெண்டாக விருந்த காப்டன் ஹம்ப்ரி "இக்கூட்டத்தாரின் உயர்ந்த சீலமே குஜராத் முழுமையும் பேசப்பட்டு வருகிறது. இவர்களின் மதம் நமது மதத்திலும் வித்தியாசப் பட்டிருந்தபோதிலும் தானம், கற்பு, தர்மம் இவ் விஷயங்களைப்பற்றிய உபதேசங்களில் நமது மதோபதேசங்களிலும் தாழ்ந்ததல்ல" என்றார். ஒரு கலெக்டர் "இக்கூட்டத்தாரில்யாரும் அதிகமாக தொல்லையிலகப் பட்டுக் கொள்ளுகிறது கிடையா தென்பதையும், பரிசீலத்தில் தேர்ந்தவர்களென்பதையும், மாஜிஸ்டிரேட்டாக நானிருந்ததால் நன்றாகக் கண்டிருக்கிறேன்" என்று உரைத்தார். உயர் பதவியாயிருந்த காஸி ஷாபுடீன் என்னும் மகம்மதிய கனவானும் "எனக்கு ஸ்வாமி நாராயணன் மதத்தாரை வெகு நாளாகத் தெரியும். ஹிந்துக்களுக்குள் சாஸ்திரம் என்ற பெயரைவைத்துக் கொண்டு செய்யும் இழிவான கிருத்தியங்களை இக்கூட்டத்தார் சீர்திருத்தம் நன்றாகச் செய்திருக்கிறார்கள். குற்றங்களைத் தடுப்பதிலும், அமைதியைப் பரவச் செய்வதிலும் அவர்கள் உதவிபுரிய முன்னிற்பதைக் கண்டிருக்கிறேன். அவர்களுடைய ஐக்கியமும் சிட்டையும் அவர்கள் எக்காரியத்தை ஏற்றுக்கொண்டபோதிலும் எளிதில் முடிக்க அதிக அநுகூலமாயிருக்கின்றன" என்று சொல்லியிருக்கிறார்.

---

**ஆணிச் சொல்.**—நாம் வெகு அழகாகவும், காலத்துக்குத் தக்கபடியாகவும், கம்பீரமாகவும், ஒருவர் மனமும் நோகாதபடியும் பேசப் பயிலவேண்டும். வெடு வெடு என்றும், கடு கடு என்றும் ஒருபொழுதும் பேசவே கூடாது. அல்லாமலும் நாவில் நரம்பில்லாமல் கண்டபடி பேசக்கூடாது; ஒருதடவை சொல்லை வாயால் இறைத்து அதன் பின்பு அதைப் பொறுக்கி எடுப்பது வெகு சிரமம். ஒருவராலும் முடியாதென்றே பலரும் சொல்லி யிருக்கிறார்கள். துடுக்காய்ப் பேசி பிறர் மனதை நோகச்செய்வதால் எத்தனையோ பெயர்கள் பலவித நஷ்டங்களுக்கு உள்ளாயிருக்கின்றார்கள். பதவியை யிழந்தும், பெயரை யிழந்தும், புகழை யிழந்தும் இன்னும் மற்றவிதமாய் நஷ்டங்களை யடைந்து மிருக்கின்றார்கள். ஆகையால் நாம் கம்பீரமான வாக்கை அப்பியஸித்து ஒருவர் மனமும் நோகாதவண்ணம் பேசப் பயிலவேண்டும். அதுதான் நாம் இவ்வுலகத்தில் எல்லாவித க்ஷேமத்தையும் அடைவதற்கு முக்கிய காரணம்.



# ஸந்திவிளக்கம்

## EXPLANATION OF SANDHIS

1 வாக்கியம்

"தமிழ் இலக்கணம் படித்தும், பல சொற்களுக்கும் உறுப்புகளுக்கும் சொன்ன பொது விதிகளையும், சிலசொற்களுக்கும் உறுப்புகளுக்கும் சொன்ன சிறப்புவிதிகளையும் கொண்டு, இன்ன இடத்திலே ஸந்தியாவது விகாரமாவது வேண்டும், இன்ன இடத்திலே அது வேண்டாம் என்று ஓர்ந்து உணர்ந்து, பயன் உள்ள ஸந்தியையும் விகாரத்தையுமே அநுசரித்து, நமது முன்னோர்கள் கருதியபடிக்கு லோகோபகாரத்தை நிலைநிறுத்தாமல், பயன் இல்லாத ஸந்தியையும் விகாரத்தையுமே எங்கெங்கும் அநுசரிக்கப் புறப்பட்டு, அந்த லோகோபகாரத்தை நிலைகெடுக்கிற பல இளங் கல்விமான்கள் இருக்கிறார்கள். அவர்களை ஸந்திப்பேய் அறையாமலும் விகாரவெறி பிடியாமலும் அவர்களுக்குத் தெளிவு உண்டாகிக் கலக்கம் தீரும்படியாய், இந்த ஸந்தியையும் விகாரத்தையும் குறித்து, ஸந்திவிளக்கம் என்று ஒருநூல் செய்யவேண்டும்" என்றும், "கற்றவர்களுக்கே செம்பாதிபொருள் விளங்காது என்று லோகவதந்தியாயிருக்கிற ஸ்ரீமத் கம்பராமாயணத்திலே, மேற்படி ஸந்தியையும் விகாரத்தையும் தகுந்தபடி பிரிவினை செய்தால் அது முழுவதும் பொருள் விளங்கும்என்று எண்ணி, முதலிலே அயோத்யாகாண்டத்தில் அப்படியே பிரித்து அச்சில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதனாலே ஆரணியகாண்டம்பாதிவரைக்கும் போயும், இது வரைக்கும் யாதொரு திருவிருத்தமும் எமக்கு அர்த்தமாகாதது இல்லை; இப்படிச் செய்யாததற்கு முன்னே எமக்கு இதில் இருந்த மயக்கமும் இப்படிச் செய்த பின்பு அல்லவோ தீர்ந்தது. உங்களுக்கும் இப்படியே அநுபவம் ஆகலாம்" என்றும் எழுபது வருடங்களுக்கு முன்னே திரு-வேங்கடாசல முதலியார் தமது கம்பராமாயணப் பதிப்பின் விளம்பரத்தில் எழுதியிருந்தனர்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பாதியில் இங்கிலீஷ் தமிழ் இரண்டிலும் புலமை மிக்கவர்கள், தமிழில் வசன நூல்கள் எழுதுவதில் இன்றியமையாத ஸந்திகளை மாத்திரமே அநுஸரித்து, சொற்களையும் தொடர்களையும் இன்னோசை பிறக்குமாறு ஏற்ற பெற்றிப் பிரித்து எழுதிவந்தனர். இங்ஙனம் செய்து வந்தவர்களில் யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதன்மையாக எடுத்துக்காட்டத் தக்கவர். இங்ஙனம் ஒரு நியதியை அநுஸரித்து வந்தமையால், திரிபெய்தலும் வெளிறுபடுதலும் இன்றி, அவர் வசனம் செம்பாகமான இயற்றமிழாய்ச் சிறப்பெய்துவதாயிற்று. தமிழ் வித்தியார்த்திகளுக்குப் பாடபுஸ்தகங்களான சில வசன நூல்களை எழுதப் புகுந்தவர்களில் சிலர் இந்த முறையை அநுசரித்து அதனை வழக்காற்றில் கொண்டுவந்தனர். இந்த முறையை உள்ளபடி உணர்வது ஸுலபஸாத்தியமானதே. அவ்வசன நூல்களைச் சிறிது கவனத்தோடு படித்துவந்தால், அப்புலவர்கள் அநுஸரித்திருக்கும் சில விதிகள் விளக்கமாகும்.

ஆறுமுகநாவலருடைய தனிவாக்கியங்களில் சிலவற்றை இங்கே எடுத்துக் காட்டலாம்:—

1. அடக்க முடைமை பாலியர்களுக்குச் சிறந்த ஆபரணம்.
2. சோம்பலே தீமைக்கும் துன்பத்துக்கும் பிறப்பிடம்.
3. திரவியம் தேடுதற்கு முயற்சியே சிறந்த கருவி.
4. உள்ளதுபோதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ்சியம்.
5. கோட்கேட்பவன் இல்லையாயின் கோட் சொல்பவனும் இல்லை.
6. நீ பிறர்க்குச்செய்த உபகாரங்களை நீயே எடுத்துப்புகழ்தல் தக்கதன்று.
7. நம்மேல் அன்பில்லாதவர்கள் மேலும் நாம் அன்புள்ளவர்களா யிருத்தல்வேண்டும்.
8. கடன்படும் செல்வர்களினும் கடன்படா வறியவர்களே சுகம் உடைவர்கள்.
9. ஒரு பொய்சொன்னவன் அதைத் தாபிக்கப் புகின் ஒன்பதுபொய் சொல்லல் வேண்டும்.
10. ஆசானுடைய உள்ளத்திலே அருள் வரும்படி நடத்தலே கல்விக்குச்சிறந்த கருவி.

இந்த வாக்கியுங்களை ஆராய்ந்து பார்த்தால் பின்கண்ட குறிப்புகள் புலப்படும்.—

(a) இரண்டாம் வேற்றுமையுருபு விரிந்து வந்த இடத்தில் வலிமிகுதல்

(b) நான்காம் ௸ ௸ ௸.

(c) வன்றொடர்க் குற்றியலுகரத்துக்கு முன் வலிமிகுதல்.

இரண்டாவது பாலபாடத்தில் உள்ள காற்று என்னும் பாடத்தை ஆராய்ந்து பார்க்கலாம்.

காற்று கண்ணுக்குத் தோன்றாது; எங்கும் பரந்திருக்கும். அதைப் பரிசத்தால் அறியலாம். அது மெல்ல வீசினால் இளங்காற்று என்றும், பலமாகவீசினால் கடுங்காற்று என்றும் பெயர்பெறும். நிலத்திலிருந்து சுழன்றுகொண்டு மேலே எழும்பும் காற்றுக்குச் சுழல் காற்று அல்லது சூறைக்காற்று என்றுபெயர். காற்று, தான் இருந்துவரும் திக்குகளின் பேதங்களினாலே கீழ்காற்று முதலாகப் பல பெயர்களைப் பொருந்தும். குணங்களினாலும் வேறுபட்டிருக்கும்.

வாடை, தென்றல், கொண்டல், மேல்காற்று என்னும் நான்கு காற்றினுள்ளும் தென்றற்காற்றே உடம்புக்கு மிகுந்த ஆரோக்கியத்தைத் தருவது. அது சித்திரை வைகாசி மாதங்களில் வீசும். கடல்நீரில் விழுந்துவரும் காற்று, வாதம் முதலிய நோய்களை நீக்கும். ஆதலால் கடற்காற்றுப் படும்படி சிறிதுநேரம் உலாவுவது உடம்புக்குச் சுகத்தைக்கொடுக்கும்.

காற்றுச் சீவன்களுக்கு மிகவும் உபயோகமானது. நல்லகாற்று இல்லாமல் அடைபட்டிருக்கிற அறையினுள் இருந்தால், நோய் உண்டாகும். அதனால், நல்லகாற்று உலாவும் அறையில் நித்திரைசெய்தல் வேண்டும்.

இதை ஆராய்ந்துபார்ப்பதில், மேற்காட்டிய குறிப்புக்களோடு, மற்றொன்று புலப்படுகிறது.—

(d) அகரவீற்று வினையெச்சத்தின் முன் வலிமிகுதல்.

ஸ்ரீ ஜே. எம். வேலுபிள்ளை யவர்கள் மொழிபெயர்த்துள்ள பூகோளசாஸ்திரத்தில் ஏஷ்யாவில் அரேபியாவின் விவரத்தைப் படித்துப்பார்க்கலாம்.

அரேபியா

அரேபியாவின் பெரும்பாலான பாகம் படுபாலைநிலம் என்று அநேகர் எண்ணுகிறார்கள். உண்மை அதல்ல. மூன்றிலொரு பாகத்தில் மாத்திரம் மனுஷனுக்கு உதவும் பயிர்வகைகள் உண்டாகா. இத்தேசத்தின் மத்தியபாகம் ஒரு பீடபூமி. இதைச்சுற்றிப் பாலைநிலங்களும், இப்பாலை நிலங்களின் எல்லையில் சில தாழ்ந்த குன்றுகளும் இருக்கின்றன. இவைகளுக்கு அப்பால் ஒடுக்கமான தாழ்ந்த சமநிலங்கள் கடற்கரை வரைக்கும் எட்டி யிருக்கின்றன. இந்தியாவில் இருப்பதுபோல் அவ்விடத்தில் பெரிய நதிகள் இல்லை. மேட்டு நிலங்களில் சீக்கிரகதியாய்ப் போகும் சில அருவிகள், மழை பெய்யும்பொழுது உண்டாகி மழையும் விட அவைகளும் வற்றிப்போம்.

அரேபியாவில், விசேஷமாய் மேலேசொன்ன பள்ள நிலங்களிலும், மழை பெய்யாத இடங்களிலும் வெப்பம் மிகவும் கொடிது. வேனிற்காலத்தில் சில வேளைகளில் ஸைமூம் என்னும் பயங்கரமான தீக்காற்று இவ்விடங்களில் மோதியடிக்கும். இதனால் அநேக மனுஷரும் மிருகங்களும் இறந்துபோவார்கள்.

அரேபியாவில் உஷ்ணம் மிகுதி, தண்ணீர் அருமை; ஆயினும் இந்தியாவில் உண்டாகும் சில பல தானியங்களும் கனிவர்க்கங்களும் அங்கும் உண்டாகின்றன. நாம் கடைகளில் வாங்கும் பேரீச்சம்பழம் அரேபியாவிலிருந்து தான் வருகின்றது. மேலும் அத்தேசத்தின் தென்மேற்கில் உள்ள யீமென் என்னும் பாகத்தில் முதல்தரமான காப்பிக்கொட்டை உண்டாகின்றது.

அரேபியாவில் நேர்த்தியான குதிரைகள் இருக்கின்றன. அராபியர் அவைகளை ஏறு குதிரைகளாக உபயோகப்படுத்துவதே தவிர வண்டியில் கட்டுகிறதில்லை. அவர்கள் இம் மிருகத்தின்மேல் அதிக பிரீதியுள்ளவர்கள். அடிக்கக் கைவராது. தங்கள் சாப்பாட்டைக் கூடச் சிலவேளைகளில் அவைகளுக்குக் கொடுத்து விடுவார்கள். அங்கே ஒட்டையும் உண்டு. இது ஒன்றுதான் மணல் வெளிகளில் இளைப்படையாமல் பலநாள் பயணம் பண்ணத்தக்கது. கடலுக்குக் கப்பல் எப்படியோ அப்படியே மணல் வனத்துக்கு ஒட்டை. இதனால் இம்மிருகத்தை "வனக்கப்பல்" என்று சொல்வார்கள்.



அரேபியா வர்த்தகத்தால் சிறந்ததல்ல; ஆயினும் எகிப்திலிருந்து கப்பல்வழியாய்த் தானியம் அங்கே போகின்றது. அரேபியாவிலிருந்து ஏற்றுமதியாகும் காப்பிக்கொட்டை எகிப்துக்குப் போய் அங்கிருந்து யூரொப்புக்குச் செல்லுகின்றது.

அரேபியா தேசத்தவர்களுக்கு அராபியர் என்றும், அவர்கள் பாஷைக்கு அரபி என்றும் பெயர். இவர்கள் முகம்மதியர்கள். இவர்களில் அநேகர் தேசாந்திரிகளாய்க் கூடாரங்களில் வசிக்கிறார்கள். குதிரை, ஒட்டை, செம்மறியாடு இவைகளைத் தவிர அவர்களிடத்தில் ஒன்றுமில்லை.

அரேபியாவில் மக்கா, ஜிட்டா, மதினா, முஸ்காத் என்னும் சில பட்டணங்கள் இருக்கின்றன. மக்கா முன் முக்கிய பட்டணமாயிருந்தது. அநேகர் இதினின்று ஏடன் பட்டணத்துக்குக் குடிபோய் விட்டார்கள். இது யூரொப்புக்கும் இந்தியா சீனா தேசங்களுக்கும் போக்குவரவு செய்யும் வர்த்தக நீராவி மரக்கலங்கள் தங்கிப்போகும் முக்கிய பட்டணம். இது பிரிட்டிஷ்காரருக்கு அதீனம். இதில் அவர்கள் குடியேறி யிருக்கிறார்கள்.

இதில் பின்னும் புலப்படும் முக்கிய குறிப்புகளாவன:—

(d) அகரவீறு மாத்திரமே யன்றி இன்னும் அநேக உயிரீற்று வினையெச்சத்தின் முன்னும் வலிமிகுதல்.

(e) சுட்டெழுத்தின் முன் வருகின்ற மெய் மிகுதல்.

(f) நிலை மொழியீற்று மெய்யின்மேல் வருமொழி முதலில் வரும் உயிர் ஏறுதல்.

(g) குற்றியலுகரத்துக்குமுன் உயிர் வந்தால் குற்றியலுகரம் கெட்டு நின்ற மெய்யின் மேல் வந்த உயிர் ஏறுதல்.

(h) இகர வீற்றின்முன் உயிர் வந்தால் யகரம் தோன்றுதல்.

இந்தக் குறிப்புகளைப் பரிசோதித்துப் பார்க்கையில் இவைகளை அநுசரிப்பதற்கு அடியிற்கண்ட நன்னூல் விதிகளைப் பாராட்டுவது போதுமென்பது தெளிவாகும்:—

(1) இஈ ஐவழி யவ்வும் ஏனை
உயிர்வழி வவ்வும்...... [162
உயிர்வரின் உடம்படு மெய்யென்றாகும்

(2) எகரவினா முச்சுட்டின் முன்னர்
(உயிரும் யகரமும் எய்தின் வவ்வும்)
பிறவரின் அவையும்........
........தோன்றுதல் நெறியே (163)

(3) உயிர் வரினுக்குறள் மெய்விட்டோடும் [164]

(4) இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்........ (165)

(5) வன்றொடரல்லன முன்மிகா அல்வழி (181)

(6) உடல்மேல் உயிர்வந் தொன்றுவது [யல்பே

இவைகளை உரையும் உதாரணமுமாக நெட்டுருப்பண்ணி இடர்ப்பட வேண்டா. இவைகளின் பிரயோகத்தை அறிவதுபோதும். ஸரியான புஸ்தகங்களைப் படிப்பதும் தாங்கள் எழுதுவதை ஸரியான ஆசிரியரிடம் காட்டித் திருத்திக் கொள்வதுமாகப் பயின்றால், சிலகாலத்தில் ஒரு கஷ்டமுமின்றி நல்லபடி எழுதுதல் அதிகஸுலப ஸாத்யமாகும். குற்றியலுகரம் இன்னதென்று கண்டு கொண்டவர்களுக்கு ஒரு கஷ்டமும் இராது.

வடமொழிகள் தமிழில் செய்யுள் வழக்கில் தற்பவங்களாக வழங்கிவருகின்றன. இவை தமிழ்ச்சொற்களுக்குரிய ஸந்திகளையே பெற்று வருகின்றன. தமிழில் மணிப்ரவாளம் என்னும் வசனநடையில் வடமொழிகள் தற்சமங்களாக வழங்குதலால் அவை தமிழுக்குரிய ஸந்திகளைப் பெறாமல் வழங்கும். இலக்கிய இலக்கணங்களின் உரையாசிரியர்கள் மணிப்ரவாள நடையில் எழுதாமையால், அவர்களுடைய நடையை முன்மாதிரியாகப் பின்பற்றிய தமிழ்ப்புலவர்கள் வசன நூல்களில் வடமொழிகளை வழங்குமிடத்தில் தற்பவங்களையே தமிழுக்குரிய ஸந்தியைப் புணர்த்தி எழுதலாயினர். இங்ஙனம் எழுதிய நூல்கள் தமிழில் விற்பத்தி

இல்லாதவர்களுக்கு உபயோகமாவதில்லை. தமிழில் அதிக விற்பத்தியில்லாத பாலியர்களும், பாலிகைகளும், பிறரும் விஷயங்களை எளிதில்' உணர்ந்து அறிவு தெளிவடையும் பொருட்டு அவர்களுக் குரிய நூல்களை எழுதுவதில் சிலர் வடமொழிகளை வழங்கு மிடத்தில் தற்சமமாக வழங்கி, "இடையுரிவட சொலின் இயம்பிய கொளாதவும்......இயையப் புணர்த்தல்யாவர்க்கு நெறியே" என்னும் விதியை அநுசரிக்கின்றனர். இங்ஙனம் தற்சமங்களை வழங்குவதால் ஶ, ஸ, ஷ, ஜ, ஹ, க்ஷ, ஸ்ரீ என்கிற சில கிரந்தாக்ஷரங்கள் கலந்து வருவதுண்டு. க, ச, ட, த, ப என்னும் வல்லெழுத்துக்களை எடுத்தொலிக்கவும் படுத்தொலிக்கவுமான வெவ்வேறு எழுத்துக்கள் இல்லாமையால், அவைகள் அமைந்து வரும் வடமொழிகளைத் தற்சமமென்று அறியும்படி எடுத்தொலிக்கும் இடங்களில் அவைகளைத் தமிழுக் குரிய ஸந்தியை ஏற்றுமல் விடுவது உசிதம். அதனுல் நன்மையும் ஏற்படுகிறது. அதாவது, அவ்விதமான சொற்களின் உச்சாரணம் கெடுவதில்லை. அவைகளை வடமொழிகள் என்றறிவது ஸுலப ஸாத்தியமாகின்றது. தமிழ்ச் சிறுவர்கள் எளிதில் உச்சரிக்க இயலாத ம்ருகம், ம்லேச்சன், க்ருபை, ப்ரமரம் என்றாற் போன்றவைகளைத் தற்பவமாக வழங்கலாம்.

தாங்கள் கெட்டியாக வாசித்தும் பிறர் கெட்டியாக வாசிக்கக் கேட்டும் இன்னேசையில் பயின்றவர்களுக்கு இன்றியமையாத ஸந்திகளை அமைத்தெழுதுவதில் இடர்ப்பாடு அதிகம் இருக்காது. ஆகவே நல்லாசிரியர் எழுதிய நூல்களைப் படிப்பதும் படிக்கக் கேட்பதும் இதற்குரிய சிறந்த ஸாதனம். தமிழில்விற்பத்தியில்லாதவர்கள் பணம் பறித்தற் பொருட்டு எழுதி வெளியிடுகின்ற நாவல் என்னும் சில கற்பிதக் கதைகளை வாசிப்பதில் பல வித்தியார்த்திகள், சொற் குற்றங்களோடு ஸந்திப் பிழைகளை விலை கொடுத்து வாங்கி, உள்ளதும் கெடுவாராகின்றனர். வித்தியார்த்திகள் தங்கள் தமிழாசிரியரை உசாவி, பிழையறப் பரிசோதித்து அச்சிட்ட நல்ல வசன நூல்களைத் தேடிக்கொண்டு, அவைகளில் நன்கு பயிலல் வேண்டும்.

**த. செல்வகேசவராய முதலியார், எம். ஏ.**

## மேனுட்டுப் பூர்வகாலத்திய ஸ்மிருதி கர்த்தர்கள்

## WESTERN LAW-GIVERS

# லைகர்கஸ்

## LYCURGUS

ஐரோப்பா கண்டத்தில், க்ரீஸ் என்று ஒரு தேசம் இருக்கிறதென்பது எவரும் அறிந்த விஷயம். இக்காலம் க்ரீஸ் ஒரே அரசனுல் ஆளப்பட்டு வருகிறது. பூர்வகாலத்தில் இதே நாடு பல சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. இரண்டு நகரங்கள், மிகுந்த கீர்த்தியைப் பெற்றிருந்தன:—அவற்றில் ஆதென்ஸ் ஒன்று: மற்றொன்று ஸ்பார்டா. ஆதென்ஸ் நகரமானது ஸகல கலைகளுக்கும் உறைவிடமாயிருந்தது. ஸாக்ரடீஸ், ப்லேடோ முதலான தத்வசாஸ்திரிகள் வசித்த இடம். ஆதென்ஸ் நகரத்திய சிற்பிகளைப்போல உலகிலேயே சிற்பிகள் இல்லையென்னலாம். இலக்கண இலக்கியப் பயிற்சியிலும் ஆதென்ஸ் முதன்மை பெற்றிருந்தது. அரசாக்ஷி வெகுகாலம் குடியரசாகவே இருந்தது. எல்லா நலங்களும் தழைத்தோங்கும் செழிப்புள்ள பூமி ஆதென்ஸாக இருந்ததென்பதற்குத் தற்காலத்திலும் போதுமான ஸாக்ஷ்யமுளது.

ஸ்பார்டாநகரமோ கல்வியால்பெருமைபெற்றதன்று. குடிகளின் நல்லொழுக்கத்தால் பிரசித்தி அடைந்திருந்தது. ஸதாசாரம் ஸ்பார்டர்களுக்கு உண்டானது லைகர்கஸ் என்னும் அரசனுலென்று சரித்திரங்கள் கூறுகின்றன.

ஸ்பார்டாவில் யூனேமன் என்னும் அரசன் ஒருவனிருந்தான். அவனுக்கு பாலதத்தன், லைகர்கஸ் என்று இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். லைகர்கஸ் பிறந்தது கி. மு. 835. ஜேஷ்டகுமாரனுன பாலதத்தன் பட்டத்திற்கு வந்து சிறிதுகாலத்தில் இறந்துபோனுன். பாலதத்தன் மனைவி அக்காலத்தில் கர்ப்பிணியாயிருந்தனள். தன் மைத்துனன்பட்டத்துக்குரியவனுயிருந்ததைக் கண்டு கர்ப்பத்தைக் கலைக்கவும் லைகர்கஸை விவாகம் பண்ணிக்கொள்ளவும் எண்ணங் கொண்டனள். நீதிமானுன லைகர்கஸோ அவ்வாறு செய்வதில் பிரியப்படாதவனுயிருந்தான். ஆயினும் தன் அண்ணன் மனைவியிடத்தில் நம்பிக்கை பிறக்கும்படி சில



வார்த்தைகளைச் சொன்னபடியால் அவள் சிசுஹத்தி செய்யாமலும் புனர் விவாகத்தைப்பற்றிப் பேசாமலும் இருந்துவிட்டாள். காலக்கிரமத்தில் இவ்வருந்ததிக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்தது. லைகர்கஸ் அடைந்த ஆனந்தம் அளவிறந்தது. தன் தமையன் குமாரனுக்கு சாரிலஸ் என்று பெயரிட்டு உடனே அவனுக்கு மகுடாபிஷேகமும் செய்வித்தான். இளவரசனுக்குப் பிரதிநிதியாக அரசு நடத்திவந்தது லைகர்கஸ்.

"குடி உயரக் கோல் உயரும்" என்ற தமிழ்ப் பழமொழியின் உண்மையை முற்றிலுமுணர்ந்தவன் லைகர்கஸ் என்பது இனிக்கூறுஞ் சரித்திரத்தால் செவ்வையாய் விளங்கும்.

லைகர்கஸ் ராஜப்பிரதிநிதியாயிருந்த காலத்தில் ஸ்பார்டா நகரத்திய சட்டதிட்டங்கள் ஒழுங்கில்லாமலிருந்தன. அவற்றைச் சீர்திருத்தவேண்டி லைகர்கஸ் சிறிதுகாலம் தேசாடனஞ் செய்து பலநாடுகளின் சட்டதிட்டங்களை நேரில்பார்த்துப் பிறகு தன்னுட்டில் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்த எண்ணினுன். எகிப்து, இந்தியா, ஆசியாகண்டத்தில் பேர்பெற்றிருந்த வேறுராஜ்யங்கள் எல்லாவற்றையும் நேரில் போய்ப் பார்த்து வந்ததாகச் சில சரித்திரங்களில் எழுதப்பட்டிருக்கிறது. நீதிமானுயிருக்கிற அரசனுக்கு அவனுடைய நிஷ்களங்கமான சித்தமே சட்டதிட்டங்களை அமைத்துக் கொடுக்கும். ஆயினும் சரித்திரக்காரர்கள் சொல்வதையும் நாம் விசுவஸிக்கக் கடமைப்பட்டவர்கள். தேசயாத்திரை செய்தானபிறகு டெல்பி என்னும் தேவாலயத்திற்குப்போய் அங்குள்ள தெய்வத்தின் அனுமதியைப் பெற்றுப் பிறகு தன் பிரஜைகளுக்கு நூதன சட்டதிட்டங்களைப் பிரசுரஞ் செய்தான். அவற்றை விரிவாய்க் கூறுவது அஸாத்யமானபடியால் இங்கு சுருக்கிச் சொல்வோம்.

(1) உலகத்தில் மனிதர் ஒருவருக்கொருவர் மனஸ்தாபப்பட்டுச் சண்டைபூசலுக் கிடங்கொடுப்பது இடம், பொருள், ஏவலின் தாரதம்மியமே. அண்டை வீட்டுக்காரன் நூறுவேலியுடையவனும், நாம் நூறுகுழி மண்ணும் இல்லாதவராயுமிருத்தலால், நிலமுடையவனுக்கு நம்மிடத்தில் அலக்ஷிய புத்தியும் நமக்கு அவனிடத்தில் ஆசூயையும் பிறக்கின்றன. ஒற்றுமை நாசத்திற்குப் பொருளுடைமையின் ஏற்றத்தாழ்ச்சிகளே முக்கிய காரணங்களாயிருப்பதை யுணர்ந்து லைகர்கஸ், ஸ்பார்டா நாட்டிலுள்ள பூமியை முற்றிலும் பிரஜைகளுக்குச் சமபாகமாகப் பிரித்துக் கொடுத்தான். பூஸ்திதியில் பிரஜைகள் எல்லோரும் ஒரே மாதிரியாய் விட்டார்கள். ஒருவகையில் பொறாமை மாண்டதென்னலாம்.

(2) பொன்னைப் பெரியோர் "ஆட்கொல்லி" என்பார்கள். இதனுண்மையை லைகர்கஸ் செவ்வையா யுணர்ந்தவனுதலால், பொன், வெள்ளி நாணயங்களை நிறுத்தி, இரும்பு நாணயங்களை அடித்துப் பிரஜைகள் பண்டமாற்று செய்யும்படி ஆக்ஞாபித்தான். பொன்னும் வெள்ளியும் ஸ்பார்டாவில் அனுதைப் பிரேதங்களாகவே பூசலுக்கே இடமில்லாமற் போனதுடன் சோரபயமும் அற்றுப் போய்விட்டது. பரிதானம் வாங்குவதும் நின்றுவிடவே நியாயாதிபதிகள் தப்பான தீர்ப்புக்கள் செய்வதே இல்லை.

(3) பிரஜைகள் தம் தம் வீட்டிலேயே போஜனம் செய்யும் பக்ஷத்தில் அமித போஜனத்திற்கும் சுக போஜனத்திற்கும் இடமுண்டாகி துர்க்குணங்கள் விருத்தியடையு மென்றஞ்சி லைகர்கஸ் பொது ஸ்தலத்தில் எல்லோரும் கூடிப் போஜனஞ் செய்யவேண்டுமென்று கட்டளையிட்டான். உணவுப் பொருள்களை ஒவ்வொரு புருஷனும் பொதுஸ்தலத்தில் கொணர்ந்து சேர்த்தல் வேண்டும். அங்கு சரீர போஷணைக்கும் ஆரோக்யத்திற்கும் போதுமான ஆகாரங்கள் மட்டில் பக்குவஞ் செய்யப்பட்டன. சோற்றுச்செலவு மட்டுக்கட்டிற்று. நாவைத் தீட்டிக்கொண்டு தூக்கடாக்களில் ஆசைவைத்தவர்களுக்கு, இடங்கொடுக்கப்படவில்லை. நாவடங்கவே மற்றப்புலன்களும், தாமே அடங்கிப் போயின.

(4) அந்நியதேசத்திலிருந்து விலை யுயர்ந்த பொருள்களை ஸ்பார்டாவுக்குக் கொண்டுவருகிறது நின்று போயிற்று. இரும்பு நாணயத்தை மாற்றிக்கொள்ள எவர் தாம் ஸம்மதிப்பார்? ஸ்பார்டாவின் ஐவேஜி அந்நியரால் கவரப்படவில்லை. தரித்திரமும் ஸ்பார்டாவில் கிடையாது. உணவுக்கும் உடுக்கைக்கும் போதுமான அளவுள்ள பொருள்கள் ஸ்பார்டாவிலே உண்டாயின.

(5) கூத்தாடிகள், குரங்காட்டிகள், ஜோஸியர்கள், குறிசொல்பவர்கள், பாடகர்கள், நடர்கள், இவர்கள் தொழில்கள் அற்றுப்போயின.

(6) சிறுகுழந்தைகளும் பெரியவர்களோடு பொதுஸ்தலத்தில் வந்து உண்ணவேண்டும். பெரியோருடைய மிதபோஜனப் பழக்கம் சிறுவர், சிறுமியர்க்கும் பழக்கமாயிற்று.

(7) இரவில் பொதுஸ்தல போஜனமான பிறகு எவரும் விளக்கில்லாமலே தத்தம் வீட்டிற்குப் போகவேண்டியது. இருட்டிலும் கண்பார்வை கூர்மையாயிருக்கிற பழக்கமுண்டாவதற்கு இவ்வாறு விதி ஏற்படுத்தப்பட்டது.

(8) ஸ்திரீகளுக்கு "அபலா" என்று ஒரு பெயர் தற்கால நாகரீகத்தை அனுசரித்தவர்கள் எல்லோரும் கொடுத்திருக்கின்றனர். ஸ்பார்டாவில் புருஷர்களைப்போலவே ஸ்திரீகளும் சரீரமுயற்சிகள் பலவும் செய்துவந்தனர். இவ்வாறு செய்துவந்தமையால் ஸ்திரீகளுக்குப் பிரஸவ வேதனையே கிடையாதாம். பந்தய ஓட்டம், யுத்தம், முதலியவற்றில் ஸ்திரீகளும் ஸம்பந்தப்பட்டிருந்தனர்.

(9) விவாக விஷயம் ஸ்பார்டாவில் இக்காலத்தவர் நகைக்கும்படியானதாக இருந்தது. பொது ஸ்தலத்தில் ஒவ்வோர்காலத்தில் சிறுவர் சிறுமியர் சேர்ந்து நடனமாடுவதுண்டு. அந்தக்காலங்களில் ஸ்திரீகளும் புருஷர்களும் தத்தமக்குப் பிரியப்பட்டவர்களை மணம்புரிவார்கள். உபயஸம்மதமில்லாத விவாகங்களே ஸ்பார்டாவில் கிடையாது. மனமொத்த புருஷன் மனைவிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் லக்ஷணமாயும் நோயில்லாமலும் இருந்தன. புருஷன் தான் இஷ்டப்பட்ட கன்னிகையைப் பலாத்காரமாயுங் கொண்டு போகலாம். பின்பு விவாகமுஞ்செய்து கொள்ளலாம்.

(10) கலியாணம் பண்ணிக்கொள்ளாத புருஷர்களுக்கு ஒருமரியாதையும் ஸ்பார்டாவில் இல்லை. இந்த விதியே ஸ்திரீகளையும் புருஷர்களையும் வ்யபசார தோஷத்திலிருந்து காத்தது.

(11) பிறன் மனைவி ரூபவதியாயிருந்து அவளிடத்தில் புத்ரோற்பத்தி செய்துகொள்ள மற்றொருவன் கருதினால் அந்த ஸ்திரீயின் ஸம்மதத்தைப் பெற்றுச் செய்துகொள்ள சட்டம் இடங்கொடுத்தது. [மஹாபாரதம் ஆதி பர்வத்தில் இந்த வாடிக்கை இருந்ததென்று சொல்லியிருக்கிறது.]

(12) நாட்டிலுள்ளவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் பெற்றோருடைமையல்ல: துரைத்தனத்தாருடைய உடைமையாகப் பாவிக்கப்பட்டு ஒவ்வொரு குழந்தையும் தேக ஆரோக்யம், நல்லொழுக்கம், இரண்டிலும் குறைவுபடாமலிருத்தல் கவனிக்கப் பட்டது. கால் கைகள், புலன்கள் ஹீனமான குழந்தைகள் எவருக்காவது பிறந்தால் அதை ஆற்றில் எறிந்து போடுவது வாடிக்கையாம். நாட்டிற்கு உதவி செய்ய இயலாத குழந்தைகளை வளர்த்துப் பயனென்ன? நாட்டிற் பிறக்கும் மக்களுக்குக் கல்வி பயிற்றுவித்தல் பெற்றோர் கடமையன்று. துரைத்தனத்தாருடைய பெருங்கடமைகளில் ஒன்றாக நிச்சயிக்கப்பட்டு அவ்வாறே நடந்தேறி வந்தது. குடிகள் ஞானவான்களாயும், தெய்வபக்தி, ராஜபக்தி, நல்லொழுக்க முடையவர்களாயு மிருந்தால் நாட்டில் கலகமும் குறைவு முண்டாகா வென்று நம்பி மக்கள்கல்வியைத் துரைத்தனத்தாரே வகித்து வந்தனர்.

(13) ஏழாவது வயது பிறந்தவுடனே ஆண் பிள்ளை ஒருவன் அவனுக்கு ஏற்பட்ட சங்கத்தில் போய்ச் சேர்ந்து, சங்கத் தலைவன் ஆக்ஞைக்குக் கீழ்ப்பட்டு நடக்கப் பயிலுதல் முதற்படிப்பா யிருந்தது. மனக்கோழையாய் எவரும் இருத்தலுக்கு இடங்கொடுத்தல் கிடையாது. பாலர்களுடைய ஒழுக்கங்களைக் கவனிக்க மேல் பார்வை உத்யோகஸ்தர் ஒருவர் துரைத்தனத்தாரால் நியமனம்பெற்றிருந்தார். இளமையில் வளையாதது முதிர்ந்த பிறகு வளையுமா? நல்ல பழக்கங்கள் சிறுபிராயத்திலேயே உண்டாயின.

(14) மாடுகள், குதிரைகள் வாங்கும்போது அவற்றின் அங்கங்களைச் செவ்வையாய்ப் பரிசிலனை செய்து வாங்குவது வழக்கமாயிருக்க, குடும்ப விருத்திக்குச் செய்யுங் கலியாணங்களில் வதுவரர்களுடைய சரீரங்களின் அமைப்பை நன்றாகப் பரிசீலனை செய்யாமல் கலியாணம் செய்யக்கூடாதென்று சட்டமும் ஏற்பட்டிருந்தது.



(15) ஸ்பார்டாநாட்டுச் சிறுவர் சிறுமியர் அதிவாதஞ்செய்வதில்லை; "சுருங்கச்சொல்லுதலை" நன்றாய்ப் பழகியிருந்தனர். எதிர்த்துப் பேசுங்கால் உரக்கவும் பேசுவார். அயல் நாட்டுப்பெண் ஒருத்தி ஸ்பார்டா பெண்ணொருத்தியைப் பார்த்து "நீங்கள் உங்கள் புருஷர்களை நன்றாயடக்கிவைத்திருக்கிறீர்கள்" என்று பரிகாசஞ்செய்ய, ஸ்பார்டாவாஸி "எங்கள் நாட்டுப்பெண்கள் மாத்திரந்தான் புருஷர்களைப் பெறுகிறார்கள்" என்று கூற அயல்நாட்டுப் பெண் அவமானமடைந்து மௌனமாயிருந்தாள். புருஷர்கள் யுத்தத்துக்கு வெளியே போயிருக்கிறகாலத்தில் ஸகல அதிகாரங்களையும் ஸ்திரிகளே செலுத்திவந்தனர்.

(16) அந்நிய தேசத்தார் ஸ்பார்டாவைக் கைப்பற்ற வராமலிருக்க நாம் செய்யவேண்டிய உபாயம் என்ன? என்று ஒருவன் கேட்க லைகர்கஸ் "பொன்னைப் பொருளாக நாம் மதிக்கலாகாது. கோட்டை கொத்தளங்கள் நமக்கு ரக்ஷணையாகக் கொள்ளாமல் குடிகளே மதில்களாக அமைதல் வேண்டும். அயல்நாட்டிலும் நமது நாடு செல்வத்தில் உயரக்கூடாது" என்றான். ஆதாயமில்லாத செட்டியார் ஆற்றோடு போகமாட்டார்.

(17) பொன், வெள்ளி நாணயங்கள் இல்லாமற்போகவே ஸ்பார்டாவில் வழக்கு என்பதே இல்லாமற் போயிற்று.

(18) ஸ்பார்டா நாட்டார் ஸம்பாஷணைகள் ஸத் புருஷர்களுடைய உத்தம குணங்களைப் பற்றியும் துர்ஜனருடைய தீக்குணங்களைப் பற்றியுமே. சிறுவர் சிறுமியர், இவற்றைக் கேட்டுக் குணத்தைக் கைப்பற்றிக் குற்றத்தை விலக்கினவரானார்.

(19) தேனீக்களைப்போல ஸ்பார்டர்கள் பொதுநன்மையில் ஒரேமனத்தினராய் வேலை செய்தனர்.

(20) ஜனப்பிரதி நிதிகள் அறுபது வயதிற் குட்பட்டவர்களைத் தெரிந்தெடுப்பதில்லை.

(21) ஸ்பார்டர்கள் பரதேசயாத்திரை செய்ய அனுமதி பெறுவதில்லை. அகாரணமாக அந்நியர்களும் ஸ்பார்டாவில் பிரவேசிக்கக்கூடாது. அந்நிய தேசத்தார் நாட்டில் பிரவேசித்தால் நவீனப்பழக்கங்கள் வந்து ஸ்திரமாயேற்பட்ட சட்டங்கள் மாறுதலை யடைகின்றன. புதிய விஷயங்களில் பிரஜைகளின் புத்தி செல்வதனால் விருப்பு, வெறுப்பு, சண்டை பூசல்கள் உண்டாகின்றன. இத்யாதி காரணங்களை முன்னிட்டு அந்நியதேச யாத்திரைகள் விலக்கப்பட்டன. ஒருவன் லைகர்கஸை நோக்கி "உமது நாட்டின் ஜனத்தொகை என்ன?" என்று வினவ "துஷ்டர்களை உள்ளே பிரவேசியாமல் செய்வதற்குப் போதுமான ஜனங்கள் உண்டு" என்று மறுமொழி சொன்னான்.

லைகர்கஸ் நியமித்த சட்டங்கள் எழுதப்படவில்லை; பிரஜைகளின் அநுஷ்டானங்களிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டன.

கே. வேங்கடராமையர், பி. ஏ.

---

### ஒவ்வொருவனையும் உற்சாகப்படுத்து

நீ ஒரு சங்கத்திற்போய் உட்காரும் பொழுது அதிலிருக்கும் ஒவ்வொருவனும் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றிப் பேசுவதைக் காணலாம். அதனால் நீ யாருக்கு எதில் இஷ்டமென்பதை அறிந்து கொள்ளவேண்டும். அதன் பேரில் எவனுக்கு எதில் இஷ்டமோ அதைக் குறித்தே அவனிடம் பேசுவாயானால், உன்னை அவன் தன் தலைமேல் வைத்துக் கொண்டாடுவான். இப்படியே ஒவ்வொருவனுக்கும் செய்து வருவாயானால் எல்லாருக்கும்நல்லவனாய் நீடூழிகாலம் வாழலாம். ஒவ்வொருவனையும் உற்சாகப்படுத்தவேண்டு மென்று சொன்னதனால் ஒவ்வொருவனையும் தப்பு ஸ்தோத்திரம் பண்ணவேண்டுமென்பதல்ல நம்கருத்து. ஒருவனிடமிருக்கும் துர்க்குணங்களையும் குற்றங்களையும் எடுத்துக் கொண்டாடுவோமானால் நாம் குற்றவாளிகளாவோம். அதுவுமன்றி ஒவ்வொருவனும் சிலசமயத்தில் தன்னைப் பற்றிக்கொண்டிருக்கும் அகங்காரத்தையனுசரித்துப் பேசுவதனால் என்ன பார்த்தம். இப்படி நாம் செய்தாலொழிய நாம்உலகத்தில் எல்லோருக்கும் நல்லவனாய் ஒத்து வாழ்வது முடியவே முடியாது.

# இந்திய ராஜாங்கம்
## THE INDIAN CONSTITUTION
### 2 சட்ட நிருபண இலாகா
### LEGISLATIVE DEPARTMENT

அரசனுக்கு இயற்கையாயமைந்துள்ள அநேக தர்மங்களில், துஷ்டநிக்ரஹம் சிஷ்டபரிபாலனம் என்பது முக்யமான தொன்று. நமதுராஜாங்கத்துக்கும் அந்நிய ராஜாங்கத்துக்கும் ஏற்படும் விரோதங்களால் ஸம்பவிக்கும் கெடுதிகளும், நன்மைகளும், அதனால் நேரிடும், சண்டை, தேசச்சேர்க்கை, கொள்ளை, கொலை, சமாதானம் முதலானவைகளெல்லாம் 'ராஜ கார்யங்கள்' (acts of State) என்று சொல்லப்படும்.

ஒருராஜாங்கத்தின் ப்ரஜைகளுக்குள்ளேயே பரஸ்பர விரோதங்களால் ஏற்படும், குற்றங்களும், அவைகளை நிவர்த்திக்க அரசன் செய்யும் முறைகளும் ந்யாய(Justice) இலாகாவைச் சேர்ந்தன. அவ்விதமாய் 'ந்யாயம்' செலுத்த வேண்டி நிரூபிக்கப்படும் விதிகளுக்குச் சட்டங்கள் (Legislatures) என்றுபெயர்.

### இந்தியாவிலுள்ள சட்டசபா நிர்மாணங்கள்
### GROWTH OF INDIAN LEGISLATURES

நமதுதேசத்தில் சட்டநிருபண இலாகாவின் அபிவிருத்தியைப்பற்றி, ஆதிகாலம் முதல் எழுத இங்கு அவகாசமில்லை.

ப்ரிடிஷ் ராஜாங்கம் சம்பந்தப்பட்ட மட்டில், 1833௵ வரை, சட்டநிருபண அதிகாரமானது ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருக்குக் கொடுக்கப்படவில்லை. ஆனால் அக்கம்பெனியின் கவர்னர்களும் அவரவர்கள் சபையோரும் காலதேச வர்த்தமானங்களுக்குத் தகுந்தபடிக்கும் பார்லிமெண்ட் சாஸனங்களுக்கு விரோதமில்லாமலும் சில 'ஆட்சிவிதிகள்' (Regulations) ஏற்படுத்திக் கொள்ளலாமென்ற அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது.

1833௵ புதிதாய் ஓர் லா-மெம்பர் 4-வது மெம்பராய் க்வர்னர் ஜெனரல் ஸபைக்கு நியமனமானார். இப்புதிய மெம்பருக்கு சட்ட சம்பந்தமான ஆலோசனைகளில் மாத்திரம் அதிகாரமுண்டேயொழிய, ராஜாங்க நிர்வாஹ அதிகாரங்களில் இவர் ஆலோசனைசெய்ய அதிகாரமில்லை. இதுமுதல், கவர்னர்ஜெனரல் சபையார் சட்டங்கள் இந்தியாவின் நியாய அரசாட்சிக்குப் பிறப்பிக்கலாமென்ற அதிகாரம் கொடுக்கப்பட்டது.

பிறகு 1853-ம் ௵, இந்த 4-வது மெம்பரும் நிர்வாக சபையில் ஒருவராக நியமிக்கப்பட்டார். இதுதவிர, சட்ட நிருபண சபையில், புதிய மெம்பர்கள் நியமனமானார்கள். அவர்கள் வங்காள ஸுப்ரீம்கோர்ட் ப்ரதம ஜட்ஜ், இதர ஸுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்களில் ஒருவர், வங்காளம், பம்பாய், வடமேற்கு மாகாணம், சென்னை ராஜாதானிகளின் ப்ரதிநிதிகள்.

பிறகு 1861-ப் ௵ சட்டசபா மெம்பர்களின் தொகை அதிகரிக்கப்பட்டது. உத்தியோகமல்லாதவர்களும் மெம்பர்களாக நியமிக்கப்பட்டார்கள். இவ்விதச் சட்ட சபா நிர்மாணமும், சட்ட நிருபண அதிகாரமும், சென்னை ராஜாங்கத்துக்கும்,பம்பாய் ராஜாங்கத்துக்கும் கொடுக்கப்பட்டன. அவர்களின் அதிகார வரம்புகளும் நிர்ணயிக்கப்பட்டன.

பிறகு 1892-ம்௵ கவர்னர் ஜெனரல் சபை உதவி மெம்பர்கள் 10-க்குக் குறையாமல் 16. வரை இருக்கலாமென்றும், பம்பாய்,சென்னைச் சட்டசபா உதவிமெம்பர்கள்,அட்வகேட் ஜெனரல்தவிர, 8க்குக்குறையாமல் 20வரை இருக்கலாமென்றும், அதே மாதிரிச் சட்ட சபைகள், வங்காள மாகாணத்துக்கும் வடமேற்கு மாகாணத்துக்கும் நியமிக்கப்படலாமென்றும்,பார்லிமெண்ட் ஆக்ட் பிறப்பிக்கப்பட்டது.

1909௵ இந்தியன் கௌன்ஸில் ஆக்ட் ப்ரகாரம், சில புதிய மாஹாணச் சபைகள் நிர்மாணமானதுடன், சட்டசபை உதவி மெம்பர்களின் தொகையும் அதிகரிக்கப்பட்டது. புதிதாய் எலெக்ஷன் விதிகளும் ஏற்படுத்தப்பட்டன.

பிறகு 1912௵ இந்திய கௌன்ஸில் ஆக்ட் ப்ரகாரம் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன.

இவ்விரண்டு ஆக்டுகளின் ப்ரகாரம் இப்பொழுது ஊர்ஜிதத்துள்ள சட்ட சபைகளும், அவைகளின் அமைப்புக்களும், எலெக்ஷன் விதிகளும் அடியில் விவரமாய்க் கூறப்படும்.



## இந்தியாவிலுள்ள சட்ட நிருபண சபைகள்
## (INDIAN LEGISLATIVE COUNCILS)

| ராஜ அதிகாரிகள். (Ex-officio) | | | | உதவி மெம்பர்கள். (Additional Members.) | | | | | | | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நம்பர். | மாகாணங்கள். | மாஹாண அதிகாரிகள். | நிர்வாக அதிகாரிகள். | உயர்ந்தது. | ப்ரக்ருத அமைப்பு. | உத்யோகஸ்தர்கள். லா-ஆபீஸர். | உத்யோகஸ்தர்கள். இதரர்கள். | உத்யோகமில்லாதவர்கள். எலெக்ஷன். | உத்யோகமில்லாதவர்கள். நியமனம். | நிபுணர்கள். | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 1 | இந்தியா | கவர்னர் ஜெனரல் 1 | * 7 | 60 | 60 | ... | 28 | 27 | 5 | ... | 68 |
| 2 | சென்னை | கவர்னர் 1 | 3 | 50 | 45 | 1 | 16 | 21 | 5 | 2 | 49 |
| 3 | பம்பாய் | கவர்னர் 1 | 3 | 50 | 45 | 1 | 14 | 21 | 7 | 2 | 49 |
| 4 | வங்காளம் | கவர்னர் 1 | 3 | 50 | 50 | ... | 16 | 28 | 4 | 2 | 54 |
| 5 | பிஹார் | உப. கவர்னர் 1 | 3 | 50 | 41 | ... | 15 | 21 | 4 | 1 | 45 |
| 6 | ஐக்யமாகாணங்கள் | உப. கவர்னர் 1 | ... | 50 | 49 | ... | 20 | 21 | 6 | 2 | 50 |
| 7 | பஞ்சாப் | உப. கவர்னர் 1 | ... | 30 | 26 | ... | 10 | 8 | 6 | 2 | 27 |
| 8 | பர்மா | உப. கவர்னர் 1 | ... | 30 | 17 | ... | 6 | 1 | 8 | 2 | 18 |
| 9 | அஸ்ஸாம் | சீப். கமிஷ்னர் 1 | ... | 30 | 25 | ... | 9 | 11 | 4 | 1 | 26 |
| | | 9 | 19 | 400 | 358 | 2 | 134 | 159 | 49 | 14 | 386 |

குறிப்பு :—(1) 7, 8, 10, 11-வது கலத்தில் குறிக்கப்பட்டவர்கள் ஸர்க்காரால் நியமிக்கப்படுவார்கள்.
(2) 9-வது கலத்தில் குறிக்கப்பட்டவர்கள் எலக்ஷன் விதிப்பிரகாரம், அந்தந்த எலக்டர்கள் வர்க்கங்களால், நியமிக்கப்படுவார்கள்.
(3) 11-வது கலத்தில் குறிக்கப்பட்ட நிபுணர்கள், அந்தந்த சமயத்துக்குத் தக்கபடி சட்ட மஸோதாக்களில் விசேஷப் பயிற்சியுள்ளவர்களாய்த் தற்காலத்துக்கு நியமிக்கப்படுவார்கள். அவர்கள் உத்யோகஸ்தராயுமிருக்கலாம். உத்யோகமில்லாதவராயு மிருக்கலாம்.
(4) உப. கவர்னர்=லெப்டினண்ட் கவர்னர்.
(5) லா-ஆபீஸர்=ஸர்க்கார் வக்கீல்.

## இந்தியாவின் சட்ட சபைகள்

(1) சட்டமஹாசபை

(Imperial Legislative Council)

(2) மாஹாணச் சட்டசபைகள்

(Local Legislative Councils)

இருவகுப்பாய் இருக்கின்றன.

சட்ட மஹாசபை யென்பது கவர்னர் ஜெனரலவர்களின் சட்ட சபைக்குப் பெயர். அது இந்தியா முழுமைக்கும் சட்டமேற்படுத்தக் கூடிய அதிகாரம் பெற்றிருப்பதால், அதற்கு சட்ட மஹாசபை யென்று பெயர்.

### இந்தியா சட்ட மஹா சபை

அதிகார வரம்புக்குட்படாத விஷயங்கள்

(1861ஞ இந்தியா கௌன்ஸில் ஆக்ட் 19-வது பிரிவு) கவர்னர் ஜெனரல் அவர்களுடைய முன் அனுமதியின்றி அடியிற் கண்ட விஷயங்களைப்பற்றி யாதொரு மசோதா (Bill) வும் எந்த மெம்பரும் ப்ரேரிபிக்கலாகாது. அவைகளாவன :—

(1) ராஜாங்கக் கடன்கள், ராஜாங்கவரிகள், (Revenue) அல்லது அவைகளைப்பொறுத்த ஏதாவது செலவுகளைப்பற்றிய விஷயங்கள்.

(2) மஹா சக்ரவர்த்தி யவர்களின் ஆட்சிக்குட்பட்டிருக்கும் எந்த ஜாதியாரினுடையவும் மதவிஷயம், மதவிஷயமான பாத்யதைகள், மதாசாரங்களைப் பற்றிய விஷயங்கள்.

(3) சக்ரவர்த்தியா ரவர்களின், ராணுவம், கடற்படைகளைப் பற்றிய(Naval Forces) விஷயங்கள்.

(4) இந்திய ராஜாங்கத்துக்கும், இதர ராஜாங்கங்களுக்குமுள்ள பரஸ்பர ஸம்பந்தங்களைப்பற்றின விஷயங்கள்.

### மாஹாண (Provincial) சட்டசபைகளின் அதிகாரத்துக்குஉட்படாதவிஷயங்கள்

(1861ஞ இந்தியா கௌன்ஸில் ஆக்ட், 43வதுபிரிவு) கவர்னர்ஜெனரல் அவர்களின் அனுமதியின்றி மாஹாணச் சட்டசபைகளில் அடியிற்கண்ட விஷயங்களைப்பற்றி யாதொரு மசோதா (Bill) வும் ப்ரேரேபிக்கப்படலாகாது.

(1) ராஜாங்கக்கடன்கள், ஏற்றுமதி இறக்குமதிச் சுங்கங்கள், அல்லது தற்காலத்தில் இந்தியமஹா (Imperial) ராஜாங்கத்தரால் தங்கள் அதிகாரத்தின் பேரில் பொதுக் கார்யங்களை உத்தேசித்து ஏற்படுத்தப்பட்ட வரிகள் ஸம்பந்தமான விஷயங்கள்.

(2) நாணயங்கள், ஹுண்டிகள், நோட்டுகள் முதலான கடிதநாணயங்கள் ஸம்பந்தமான விஷயங்கள்.

(3) தபால், தந்திஸம்பந்தமான விஷயங்கள்.

(4) இந்தியன் பினல்கோட் ஸம்பந்தமான விஷயங்கள்.

(5) சக்ரவர்த்தி யவர்களின் எந்த ஜாதியாருடையவும், மதம், மதாசாரம், வழக்கம் இவைகள் ஸம்பந்தமான விஷயங்கள்.

(6) ராஜாங்கத்தின் கடற்படை, ராணுவ சம்பந்தமான விஷயங்கள்.

(7) யந்த்ரபாத்ய (Patents) ங்கள், க்ரந்தபாத்யங்கள் (Copyrights) ஸம்பந்தமான விஷயங்கள்.

(8) அந்நியதேசச் சிற்றரசர்களுக்கும்ராஜாங்கத்துக்கு முள்ள பரஸ்பர ஸம்பந்த விஷயங்கள்.

மாஹாணச் சட்ட சபைகள். சட்டமஹாசபையொன்றைத்தவிர மற்றசட்டசபைகளெல்லாம் மாஹாணச்சட்டசபைகள் என்றுபெயர். ஒவ்வொரு மாஹாணத்தின் சம்பந்தமான விஷயங்களைப்பற்றி மாத்திரம் அம்மாஹாணச்சட்ட சபை சட்டங்கள் நிரூபிக்கலாம். அந்நியமாஹாணத்தைப்பற்றியாவது, அல்லது அவைகளின் பரஸ்பர ஸம்பந்தங்களைப்பற்றியாவது, அல்லது இந்தியாவின் மஹாராஜாங்கம் (Imperial Government) சம்பந்தமான, ராணுவம், வர்த்தகம், பிரதேச ஸம்பந்தம், தபால்தந்தி முதலான பொதுக்காரியங்களைப் பற்றியாவது மாஹாணச்சட்டசபைகளுக்கு அதிகாரங்கிடையாது. மாஹாணச் சட்டசபைகளின் ஆக்ட்கள் கவர்னர் ஜெனரல் சம்மதத்தின்பேரில் தான் சட்டங்களாகும். இவர்கள் செய்யும் சட்டங்கள் இந்தியசட்ட மஹாசபையின் சட்டங்களுக்காவது ப்ரிடிஷ் பார்லிமெண்ட் சட்டங்களுக்காவது எந்த அம்சத்திலும் விரோதமில்லாமல், தங்களுக்குக்கொடுக்கப்பட்ட அதிகார வரம்பை யனுசரித்தே இருக்கவேண்டும்.

R. S. நாராயணஸ்வாமி அய்யர், B.A., B.L.



# திலீப சக்ரவர்த்தியின் தபஸ்

## DILIPA'S PENANCE

### (Adapted From Kaḷidasa's Raghuvamsa)

அளவற்ற புகழும் பெருமையும் வாய்ந்து லோகத்தின் க்ஷேமத்தின் பொருட்டு, இக்ஷ்வாகு, தசரதர் முதலிய அநேக ராஜரிஷிகளை, பரம்பரையாக நீண்டகாலம் அளித்துவந்த ரகு வம்சத்தில் மற்றவர்களைக் காட்டிலும் இன்னும் விசேஷமாய் பரிசுத்தமான ஸ்வபாவமுடைய திலீபர் என்ற ராஜசிகாமணி ஒருவர், பாற்கடலில் சந்திரன் ஜநித்ததுபோல், உற்பத்தியானார். எல்லா உத்தம லக்ஷணங்களும் பொருந்திய மிகவும் கம்பீரமான அங்கவடிவுக்குத் தகுந்தபடி புத்தி மேன்மையும், விசாலமானவும் கூர்மையானவுமான புத்திக்கு ஏற்ப விஸ்தாரமான ஆழ்ந்த கல்விப்பயிற்சியும், கல்விக்கு ஒத்தபடி உசிதமான ஸத்கார்யங்களில் முயற்சியும், முயற்சிக்குத் தகுந்தபடி பயனும் ஆகிய இவை யெல்லாம் ஒன்று சேர்ந்து திலீபரிடத்தில் விளங்கின. மேலும் ஜனங்கள் கண்டு அஞ்சும்படியான சௌர்யம் பராக்கிரமம் முதலிய உக்கிரமான குணங்களுடன், ஜனங்களினுடைய மனதைக் கவர்ந்து அவர்களினுடைய விசுவாஸத்தையும், அன்பையும் ஸம்பாதிக்கக்கூடிய ஸௌம்யமான குணங்களும் அத்திலீப சக்ரவர்த்தியினிடத்தில் பூராய்ப் பொருந்தி யிருந்தமையால், அவர், பயங்கரமான பெரிய ஜலஜந்துக்களுக்கும், முத்து பவழம் முதலிய ரத்தினங்களுக்கும் இருப்பிடமாகிய ஒரு பெரிய மகா சமுத்திரம்போல, யாவராலும் மீறமுடியாத சக்தியுள்ளவராயிருந்தும் எல்லாரும் பிரியமாய் விரும்பி செல்லத்தக்க மனோகரமான குணசாலியாயு மிருந்தார். பூமியிலிருந்து தன்னுடைய கிரணங்களால் ஜலத்தை ஆகர்ஷித்து பிறகு ஆயிரம் மடங்காக மழையாய்ச் சொரியும் சூரியபகவானைப்போல் அத்திலீபசக்ரவர்த்தியும் ஜனங்களிடமிருந்து வாங்கின வரி எல்லாவற்றையும் அவர்களின் க்ஷேமத்தின் பொருட்டே திரும்பச் செலவிடுவார். பயம் இன்னதென்று அறியாத சூரனாயிருந்தும் தன்னுடைய தேகத்தை நன்றாய் ரக்ஷித்துக்கொண்டும், நோய் முதலிய உபத்திரவங்கள் இல்லாமலிருந்தும் புண்யகர்மங்களைச் செய்துகொண்டும், பொருளாசை இல்லாமலேயே திரவ்யங்களைச் சம்பாதித்துக்கொண்டும், பற்று இல்லாமலேயே ஸுகங்களை அனுபவித்துக்கொண்டும் வந்தார். கல்வியில் தேர்ந்து பரிபூர்ணமான ஞானமுள்ளவரா யிருந்தும், வாய் அடக்கமுள்ள மௌனியாயும், பராக்ரமமுள்ள சூரனாயிருந்தும் பொறுமைசாலியாயும், பெருங்கொடை வள்ளலா யிருந்தும் ஆத்மஸ்துதியின்றியும் அவர் இருந்தமையால், அவரிடத்தில் பரஸ்பரம் விரோதமான குணங்கள் ஒரு தாய்வயிற்றுப் பிள்ளைகள்போல் ஒன்று சேர்ந்து உறவாடின. ஜனங்களுடைய சரீர போஷணைக்கு வேண்டிய ஸாதகங்களைக் கற்பித்தும், அவர்களுக்கு நேரிடக்கூடிய கஷ்டங்களையும் அபாயங்களையும் நிவர்த்தி செய்தும், அவர்களுக்கு விநயத்தைப் போதித்து அவர்களை நல்ல வழியில் செலுத்தியும் வந்தமையால் அத்திலீப சக்ரவர்த்தியானவர், தன்னுடைய பிரஜைகளுக்குத் தானே உண்மையில் பிதாவாக விளங்கினார். மேலும் ஒரு நோயாளி மருந்தை ஏற்றுக்கொள்வது போல் அத்திலீப சக்ரவர்த்தி நன்னடக்கையுள்ள ஒருவன் தன் மனதிற்கு இஷ்ட மில்லாதவனா யிருந்தாலும் அவனை ஏற்றுக் கொண்டும், பாம்பால் தீண்டப்பட்ட தன்னுடைய விரலைப்போல, துஷ்டனொருவன் தனக்கு மிகவும் பிரியமுள்ளவனாயிருப்பினும் அவனைத் தள்ளிவிடுவார். அவருக்கு தாக்ஷிண்யம் முதலிய உத்தமகுணங்கள் உருவெடுத்து வந்தாற்போல் ஸுதக்ஷிணை என்ற ஒரு தர்மபத்னி இருந்தாள். ஸகல ஐசுவரியமும் ஸத்குணங்களும் பொருந்திய இத்தம்பதிக்கு வெகுகாலம் வரை புத்திரபாக்யம் உண்டாகவில்லை. இந்தப் பெருங்குறையைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு அவர்கள் தங்கள் குலகுருவாகிய வஸிஷ்டருடைய ஆச்ரமத்திற்குப் புறப்பட்டார்கள்.

அளவற்ற பராக்ரமமும் வலிமையும் பொருந்திய கம்பீரமான ஆகாரத்தோடு கூடிய திலீப சக்ரவர்த்தியும் ஒளிவீசுகின்ற அழகிய மெல்லிய சரீரத்தோடுகூடிய அந்தப்பெண்மணியும் சேர்ந்து,மிகவும் மதுரமாயும் கம்பீரமாயும் ஒலி செய்துகொண்டு செல்லும் ஒரேரதத்தில் ஏறிக்கொண்டு பிரயாணம் செய்யும் அந்தக் காட்சியானது, ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் இந்திரனுடைய யானையாகிய ஐராவதமும்ஒருமின்னற்

கொடியும் சேர்ந்து மாரிகாலத்தில் இடிமுழக்கம் செய்யும் ஒரே மேகத்தின் பேரில் ஏறிச்செல்வது போல் விளங்கிற்று. வஸிஷ்டருடைய ஆச்ரமத்திற்கு அஸௌகர்யம் நேரிடக் கூடாதென்று, மிகவும் ஸ்வல்ப பரிவாரத்துடன் செல்லும் அந்த ராஜதம்பதி, தங்களுடைய தேஜோவிசேஷத்தினால், ஸகல அங்கங்களுடன் கூடிய ஒரு பெரிய ஸேனையால் சூழப்பட்டவர்கள் போல் விளங்கினார்கள். அவர்கள் செல்லும் வழியெல்லாம் சால விருக்ஷங்களில் வடியும் பாலின் மணமும் பற்பல வாஸனையுள்ள புஷ்பங்களின் தாதுக்களும் நிறைந்த குளிர்ந்த காற்று, மரங்களின் இலைகள் மெல்ல மெல்ல அசைய, மிருதுவாய் வீசிற்று. அவர்களின் ரதத்தின் கம்பீரமான ஒலியைக் கேட்டு, இடிமுழக்கம் என்று எண்ணி ஆனந்தத் தாண்டவம் செய்யும் மயில்களின் ஷட்ஜஸ்வரத்தை ஒத்த இனிமையான நாதங்களை, திலீப சக்ரவர்த்தியும் அவர் பத்னியும் செவிகொடுத்துக் கேட்பார்கள். மேலும் வழியைவிட்டு சற்று விலகி ஸமீபத்தில் நின்றுகொண்டு தங்களுடைய ரதத்தைக் கண்கொட்டாமல் பார்க்கும் பல மான்தம்பதிகளின் கண்களில் தங்கள் தங்கள் கண்களின் உவமையைப் பார்த்துக்கொண்டு போவார்கள். மேலும் சக்ரவர்த்தியும் அவர் பத்னியும் வருகிறார்களே என்று ஆகாசத்தில் ஸ்தம்பமில்லாமல் தோரணங்கள் நிர்மாணம் செய்வதுபோல் வரிசை வரிசையாய் இனிமையான குரல்களுடன் அங்கங்கு தோன்றும் ஸாரஸ பக்ஷிகளின் அழகை நிமிர்ந்து பார்த்து ஆனந்திப்பார்கள். மேலும் அவர்கள் வழியிலிருக்கும் தடாகங்களில் அலைகள் மோதி துளிகள் பறந்து அதனால் மிகவும் குளிர்ந்திருக்கும் அரவிந்த மலர்களின், தங்களின் ச்வாஸத்தை ஒத்த பரிமளத்தை, அனுபவிப்பார்கள். மேலும் தங்களால் தானம் செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள யாகம்செய்த பெரியோர்கள் அங்கங்கு வந்து கொடுக்கும் அர்க்யங்களையும் அதன் பிறகு அவர்கள் செய்யும் அமோகமான ஆசீர்வசனங்களையும் தலைவணங்கி மிகவும் விநயத்துடன் ஏற்றுக்கொள்வார்கள்—மேலும் முதல் நாள் கறந்தபாலில் உண்டான வெண்ணெய், நெய் இவைகளை எடுத்துக்கொண்டு தங்களை அங்கங்கு காணவரும் வயதுசென்ற இடையர்களிடம், வழியிலுள்ள காட்டு மரங்களின் பெயர்களைக்கேட்பார்கள். இவ்விதம் பிரயாணஞ் செய்கையில் திலீப சக்ரவர்த்தியானவர் வழியில் அங்கங்குள்ள விநோதங்களை தன்னுடைய நாயகிக்குக் காட்டிக்கொண்டு கடந்த வழிகூடத் தோன்றாமற் சென்றார். வஸந்தகாலத்தில் சித்ரா பௌர்ணமியன்று, பனியினுடைய மூட்டம் கொஞ்சமேனுமில்லாத பூர்ணசந்திரனும் சித்ராநக்ஷத்திரமும் ஒன்றுசேர்ந்து உண்டாகும் வைபவம் போல், தங்களுடைய ஸ்வபாவ அழகை மறைக்கும் தங்களுடைய பதவிக்குரிய உடுப்புகளின்றி கேவலம் சுத்தவேஷம்பூண்டு ஆச்ரமத்திற்குச் செல்லும் அந்தராஜ தம்பதியின் காந்தியும், ஸௌந்தர்யமும் கண்கொள்ளாக் காட்சியாய் இன்னதென்று வர்ணிக்கக் கூடியதாயில்லை. இவ்விதம் பிரயாணம்செய்து அன்று சாயந்திரம் வஸிஷ்டமகரிஷியின் ஆச்ரமம் சேர்ந்தார்கள்.

அப்பொழுது அக்கம்பக்கம் வனங்களிலிருந்து, ஸமித், குசம், பழங்கள் இவைகளை ஸம்பாதித்துக்கொண்டு திரும்பிவரும் தபஸ்விகளை அவர்கள் உபாஸிக்கும் அக்னிதேவதைகள், பிறர் கண்களுக்குப் புலன்படாமல் எதிர்கொண்டு அழைத்தன. ரிஷிகள் வஸிக்கும் பர்ணசாலைகளின் வாசல்களில் அவர்களுடைய ஆகாரமாகிய நீவாரதான்யத்தில் ஒருபாகத்தை வழக்கமாய்ப்பெற்று வளர்ந்துவரும் மான் கன்றுகள் ரிஷிபத்னிகளின் குழந்தைகள் போல நெருங்கி விளையாடிக்கொண்டிருந்தன. ரிஷிகன்னிகைகள் ஆச்ரமத்திலிருக்கும் விருக்ஷங்களுக்குத் தண்ணீர்கொட்டிவிட்டு சற்று விலகிநின்றுகொண்டு, பாத்திகளில் கொட்டின நீரை பக்ஷிகள் பயமின்றி வந்து பருகும் அழகை பார்த்துக்கொண்டிருந்தார்கள். பர்ணசாலைகளின் முற்றங்களில் சாயங்காலம் வெய்யில் சாய்ந்ததின் பேரில் நீவாரதான்யங்கள் குவியல் குவியலாகக் குவிக்கப்பட்டும், மான்கள் அதன்மீது படுத்துக்கொண்டு அசை போட்டுக்கொண்டுமிருந்தன. மேலும் ஸாயங்காலத்தில் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் அக்னியில் ரிஷிகள் ஹோமம் செய்துகொண்டிருக்கும் விஷயத்தை அறிவிக்கிறதும், ஆகுதிகளின் புண்யகந்தங்களால் நிறைந்ததுமான புகைகள் காற்றினால் நாலு பக்கமும் விசிறப்பட்டு, ஆச்ரமத்தை நோக்கி வரும் அதிதிகளை வெகு தூரத்திலேயே பரிசுத்தமாகச் செய்தன.



ஆச்ரமத்திலுள்ள முனீச்வரர்கள் திலீப சக்ரவர்த்தியையும் அவர் பத்னியையும் எதிர்கொண்டு சென்றழைத்து மரியாதை செய்தார்கள். ஸாயங்காலத்தில் செய்ய வேண்டிய கர்மங்கள் முடிந்த பிறகு, தன் பத்னியாகிய ஸ்வாஹாதேவியுடன் அக்நிபகவான் அமைந்திருப்பது போல, அருந்ததிதேவியுடன் உட்கார்ந்திருந்த வஸிஷ்டமகரிஷியை திலீபசக்ரவர்த்தி கண்டு தன் பத்னியுடன் வந்தனம் செய்தார். ராஜ்யத்தையே ஒரு ஆச்ரமமாகக் கொண்ட அந்த ராஜரிஷியாகிய திலீபருக்கு, அதிதிக்குச் செய்ய வேண்டிய உபசாரங்களையெல்லாம் வஸிஷ்டர் செய்து அவர் வழிவந்த சிரமத்தை நீக்கிப் பிறகு அவர் யோக க்ஷேமத்தைக் குறித்து விவரமாய் விசாரித்தார்.

வஸிஷ்டருடைய கேள்விகளுக்குத் திலீபர் பின் வருமாறு மறுமொழி கூறினார்:—"தேவதைகளாலும் மனுஷ்யர்களாலும் நேரிடக் கூடிய ஸகல விதமான துரிதங்களையும் நீக்குவதற்குத் தாங்கள் இருக்கையில் எனக்கு என்ன குறைவு இருக்கக் கூடும்; என்னுடைய ராஜ்யத்தில் எல்லா அங்கங்களும் யாதொருகுறைவுமின்றி நன்றாய்ச் செழித்திருக்கின்றன. என்னுடைய பாணங்களினாலே நேரில் பார்க்கக் கூடிய சத்ருக்களைத் தானே நான் வெல்லக் கூடும். தங்களுடைய மந்திரங்களோ, என்னுடைய சத்ருக்கள் என் கண்களுக்குப் புலப்படு முன்னமேயே தூரத்திலேயே அவர்களை அடக்கி விடுகின்றன. தாங்கள் விதிப்படி அக்னியில் செய்யும் ஹோமங்களின் ஆஹுதிகள் மழையாகப் பரிணமித்து ராஜ்யத்தில் துர்பிக்ஷமென்பதில்லாமல் மிகுந்த ஸமிர்த்தியையுண்டு பண்ணுகிறது. என்னுடைய பிரஜைகள் பூர்ணாயுஸ்ஸோடு ரோகமற்று யாதொரு துரிதமின்றி ஸுகமாயிருப்பதற்குக் காரணம் தங்களுடைய விரதம், அத்யயனம் முதலிய தபஸ் அன்றோ. ஆகிலும் எனக்கு ஒரு புத்ரனில்லாத் குறை பெருங்குறையாக விருக்கிறது. அளவற்ற ஐசுவரியங்கள் நிறைந்த பூலோக சக்ரவத்தியாயிருந்தும் மனஸுக்குக் கொஞ்சமேனும் ஸந்தோஷமில்லை. தபஸ் தானம் முதலியவைகள் பரலோகத்தில்தான் சுகத்தைக் கொடுக்கக் கூடியவைகள். நல்ல வம்சத்தில் பிறந்த ஸந்ததியோ இஹத்திலும், பரத்திலும் பழுதற்ற சுகத்தைத் தரக்கூடியது. அப்படிப்பட்ட ஸந்ததியில்லாமல் நான் இருப்பதைப்பார்த்து தங்களுக்கு மனஸு இரங்கவில்லையா? ஆச்ரமத்தில் தாங்களே வைத்துத் தண்ணீர் ஊற்றி பரிபாலித்து வந்த ஒரு விருக்ஷம், புஷ்பிக்காமலும் காய்க்காமலும் மலடாயிருந்தால் தங்கள் மனம் ஸஹிக்குமா? ஓ பகவானே! பிதுருக்களுக்குச் செய்யவேண்டிய கடனிலிருந்து என்னைத் தாங்கள்தான் தயவு செய்து நிவர்த்திக்கவேண்டும்."

இந்த வார்த்தைகளை வஸிஷ்ட மகரிஷியானவர் கேட்டு, சற்று நேரம் அசைவற்று ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தார். அச்சமயம் அம்மகரிஷி மீன்களெல்லாம் உறங்கிப் போய் காற்றென்பது கொஞ்சமேனும் இல்லாமல் சிற்றலையுமின்றி அசைவற்றிருக்கும் ஒருபெரியதடாகம் போல் விளங்கினார். திலீபசக்ரவர்த்திக்கு ஸந்ததியில்லாமல் இருந்ததின் காரணத்தை வஸிஷ்டர் ஸமாதிகாலத்தில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாய்த் தெரிந்துகொண்டார். அதாவது முன் ஒரு ஸமயம் திலீபர் இந்திரலோகத்திலிருந்து திரும்பி வரும்போது, வழியில் நின்ற காமதேனுவை பூஜை செய்யாமல் அவமதித்து விட்டதாயும், அதனால் அது கோபங்கொண்டு தன்னை ஆராதிக்கும் வரையில் திலீபருக்கு ஸந்ததியில்லாமல் போகக்கடவது என்று சபித்துவிட்டதாயும் அறிந்து, வஸிஷ்டர் இந்த ரஹஸ்யத்தை திலீபரிடம் சொல்லி தன் ஆச்ரமத்திலிருக்கும் காமதேனுவின் பெண் நந்தினியை திலீபரும் அவர் பத்நியும் பூஜைசெய்யவேண்டுமென்று கட்டளையிட்டார். இவ்விதம் கட்டளையிட்டுக் கொண்டிருக்கும் பொழுதே, இளந்தளிர்போல் ஸுகுமாரமான சிவந்த மேனியுடனும், நெற்றியில் மாத்திரம் நல்ல வெளுப்பான சற்று வளைந்த ஒரு சுட்டியுடனும், செவ்வானமாகிய தனது மேனியில் மூன்றாம் பிறைச் சந்திரனுடன் விளங்கும் ஸந்தியா தேவதை போல், மேற்சொல்லிய நந்தினி அவர்கள் முன் தோன்றிற்று. தன்னுடைய கன்றைக் கண்டதும் அதனுடைய விசாலமான நிறைந்த மடியிலிருந்து பால் சுரந்து பூமியில் பெருகிற்று. யாகத்தின் முடிவில் செய்யும் அவப்ருவஸ்தானத்தைக் காட்டிலும் கூட பவித்ரமான அந்தப் பாலினால் ஆச்ரம பிரதேசமெல்லாம் விசேஷமாய்ச் சுத்தமாயின. நந்தினியின்

பாத தூளிகள் திலீப சக்ரவர்த்தியின் தேகத்தில் பட்டதனால் அவர் கங்கை முதலிய புண்ய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தாற்போல் உத்தமமான பரிசுத்தியை அடைந்தார். இச்சமயத்தில் நந்தினியைக் கண்டதே நல்லசகுனமென்றும், இடைவிடாத அப்யாஸத்தினால் வித்தையை உபாஸித்து ஸித்தி பெறுவது போல், இதையும் சோர்வற்று உபாஸித்தால் ஸித்திபெறலாமென்றும் வஸிஷ்டர் திலீபருக்கு உபதேசஞ் செய்தார். தன்னுடைய தபோபலத்தால் சக்ரவர்த்திக்குரிய ஸகல விதமான ஸவுகரியங்களையும் காட்டில் கற்பிக்க வல்லவராயிருந்தும், திலீபர் நியமமாய் தபஸ் செய்ய வேண்டியவர் என்பதை உத்தேசித்து, அரண்யத்திலிருக்கும் தபஸ்விக்குரிய ஏற்பாட்டை மட்டும் அச்சக்ரவர்த்திக்கு, வஸிஷ்டர் செய்வித்தார். அதை அநுஸரித்தே திலீபரும் அவர்பத்னியும் வேறொருவர் ஸகாயமின்றி ஒருபர்ணசாலையில் வஸித்துக்கொண்டு தர்பையால் செய்த பாயில் உறங்கிக் காலையில் ரிஷி சிஷ்யர்கள் வேதாத்யயனம் செய்யும் சப்தத்தைக்கேட்டு விழித்துக் கொண்டார்கள்.

ஜி. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயர், பீ. ஏ.

---

**சொந்தக்காரியங்களை எடுத்து உரையாமை.**— உன்னுடைய வீட்டுக் காரியங்களைப் பற்றியாவது பிறருடைய காரியங்களைப் பற்றியாவது பேசவே பேசாதே; அவரவர்கள் வீட்டில் எத்தனையோ விஷயங்கள் இருக்கலாம். அவர்களும் உன் வீட்டு விஷயங்களைப்பற்றிப் பேசலாகாது; நீயும் அவர்கள் வீட்டு விஷயங்களைப்பற்றிப் பேசக்கூடாது. வீட்டு விஷயங்கள் எப்பொழுதும் வெகு சாவதானமாய்ப் பேசவேண்டியவை. ஏனெனில், எப்பொழுதாவது எவ்வளவு கொஞ்சமாய்ப் பேசினாலும் அப்படிப்பட்ட விஷயங்கள் யாருடையமனதுக்காவது வருத்தத்தைஉண்டு பண்ணவே பண்ணும். ஸ்திரீ புருஷர்கள், தகப்பன் பிள்ளைகள், இஷ்டர்கள் சிநேகிதர்கள் இவர்களுக்குள் எவ்வளவோ சமாசாரங்கள் இருக்கலாம். இவர்களில் சிலர் பார்வைக்கு ஒருவிதமாயும் அந்தரங்கத்தில் மற்றொருவிதமாயும் இருப்பார்கள். யார் எப்படிப் போனாலும் நமக்கென்னவென்று ஒருவருடைய வீட்டு விஷயங்களைப்பற்றியும் பேசாமலிருப்பதே மரியாதை.

# தெய்வ நீதி

## THE WAYS OF GOD

ஓர் உந்நதமான மலையில் வஸித்துக்கொண்டிருந்த ஸந்நியாஸி யொருவர், இவ்வுலகத்தில் நடக்கும்காரியங்களைக் கவனித்து, துர்மார்க்கர்களாயுள்ளவர்கள் தங்கள் நடத்தைக்கேற்பத் தாங்களடையவேண்டிய துக்கத்திற்குப் பதிலாகச் சுகம் அனுபவிப்பதையும், சன்மார்க்கர்களாயுள்ளவர்கள் தங்கள் நடத்தைக்கேற்பத் தாங்களடையவேண்டிய ஸுகத்திற்குப் பதிலாகத் துக்கம் அனுபவிப்பதையும் கண்கூட நகப் பார்த்துத் திகைப்புற்றவராய், இவ்வுலகத்திற்குக் காரணராகவுள்ள கடவுள், பூரண நீதியுடையவராயின், இவ்வித மாறுதல்கள் நடத்தல் எவ்வாறென்றெண்ணி, அவ்வெண்ணத்தினாற் பலபல சந்தேகங்களடைந்து மனவருத்தமுற்று, இவ்வித சந்தேகங்களையும் மனவருத்தத்தையும் நிவர்த்தித்துத் தெளிவையும் மெய்ஞ்ஞானத்தையும் கொடுக்கவேண்டுமென்று கடவுளை நோக்கித் தியானஞ்செய்துகொண்டிருந்தார். இவ்வாறிருக்கும் ஸந்நியாஸி, ஓர் நாள் தமது தியானம் கலைந்து, அம்மலையடிவாரத்திலுள்ள ஓர்சுனையில் ஓடுகின்ற நீரோட்டத்தை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது ஓர்மனிதன் குதிரைமேலேறிச் சவாரி செய்து களைத்தவனாய், அச்சுனையினிடத்தில் வந்து சேர்ந்து குதிரையைவிட்டுக் கீழேயிறங்கித் தன்தோளில் மாட்டிக் கொண்டிருந்த பொற்காசுப் பையைக்கழற்றிக் கரையோரத்தில் வைத்துவிட்டுத் தண்ணீர்மொண்டு குடித்துத் தாகசாந்தி செய்துகொண்டு இளைப்பாறித் திரும்பிப் போகையில், பொற்காசு நிறைந்த பையை எடுத்துக்கொள்ள மறந்து, குதிரைமேலேறி வேகமாய்ப் போய் விட்டான். அவன்போன சற்றுநேரத்திற்குள் வேறொரு பிரயாணி களைத்தவனாய்த் தண்ணீர் குடிக்க அங்குவந்தபோது, பொற்காசு நிறைந்த பையைப்பார்த்துப் பொட்டென வெடுத்து மறைத்துக்கொண்டு அதிதீவிரமாய் நடந்து விட்டான். அதன்பின் சற்றுநேரம் பொறுத்து விறகு வெட்டுவோனொருவன், காடெங்கும் அலைந்து திரிந்து வெகுபிரயாஸத்துடனே



விறகுகளை வெட்டிப் பெருஞ்சுமையாக்கித் தலைமேற்சுமந்து களைத்தவனாய் அச்சுனைக்கு வந்து சுமையை இறக்கிவிட்டுத் தண்ணீர்குடித்துத் தாகவிடாய் தீர்த்து தனது ஆயாசம்தீரும் பொருட்டு அக்கரையின்மேற் சற்றுநேரம் படுத்திருந்தான். அத்தருணத்திற் பையை மறந்து விட்டுப்போன பிரயாணிக்குத் தன் பொற்காசுப்பையின் ஞாபகம் தோன்ற, திடீரென்று குதிரையைத் திருப்பி அதிவேகமாய் அச்சுனையண்டைவந்து அதன் கரையெங்குந்-தேடித்தன் பொற்காசுப்பையைக் காணாமையால்அங்கு படுத்திருந்த அவ்விறகுதலைவனே அப்பையை எடுத்திருக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு, அவனைப்பார்த்து "நான் இங்கு வைத்துப்போன பொற்காசுப்பை எங்கே" என்றான். அதுகேட்ட விறகுதலையன், (வாஸ்தவத்தில் ஒன்றுமறியாதவனாகையால்) "உண்மையாகவே நானொன்றுமறியேன்" என்றான். அப்போது பிரயாணி மிகவும் கோபாவேசங்கொண்டு, தன் உடைவாளையுருவி அவ்விறகுதலையனை ஓரேவெட்டாக வெட்டி, அவனுடைய மூட்டை முடிச்சுகளைச் சோதித்துப் பார்த்துத் தன்னுடைய பொற்காசுப்பை அகப்படாமையால் மனவருத்தத்துடன் திரும்பிப் போய் விட்டான். இவையனைத்தையும் உற்றுப்பார்த்துக் கொண்டிருந்த ஸந்நியாஸியானவர் பெருமூச்செறிந்து, "ஆ! கடவுளே!! ஒன்றுமறியாத ஏழை யொருவன் அநியாயமாய்த் தன்னுயிரைப் பறிகொடுத்தானே" இதென்ன விபரீதம்! என்ன அலங்கோலம்!! அப்பொற்காசுப்பை அபகரித்தவனொருவனிருக்க, குற்றமற்ற விறகுதலையன் கொலையுண்டானே!" என்று மனம்பதறி நாக்குளறிப் புலம்பினர்.

அப்போது, "ஓ ஸந்நியாஸியே! இதைப் பற்றி உனக்கென்ன கவலை? இது உன்னுடைய வேலையல்லவே! உன் சொந்த வேலைகளிலுள்ள குற்றத்தை யுணராது நீ பிறருடைய குற்றத்தை ஏன் கவனிக்க நாடுகின்றாய்? ஒரு நிமிஷத்திற்குமுன் நீ செய்திருக்கிற வேலை இன்னதென்றும், ஒரு நிமிஷத்திற்குப்பின் நீ செய்யப் போகிறவேலை இன்னதென்றும் மறதியுள்ளவனும் உணராதவனுமாகிய நீதானா ஸர்வக்ஞனும் ஸர்வசக்தியுமுடைய ஜகத்ரக்ஷகரின் கிருத்தியத்தை அளந்தறியச் சக்தியுடையவன்? ஓ தபோதனனே! தொடுத்த கருமத்தை முடித்து விடுவேனென்னும் தைரியமில்லாத நீதானா கோடானு கோடி அற்புதச் செயல்களை அடைவாகச் செய்துவரும் ஆண்டவருடைய கிருத்தியத்தைக் கண்டறியப் போகின்றாய்? ஓ! ஞானியே! உனக்குச் சமீபத்திலுள்ளதும் உன் திருஷ்டிக்கு அகப்படக்கூடியதுமான ஒரு பொருளினுண்மையைக் கூட அறிந்துகொள்ளக்கூடாத நீதானா, உனதறிவிற்குப் புலப்படாத அனந்த சக்தியையுடைய அறிவாளரின் அற்புதத்தை அளவிடப் போகின்றாய்? ஓ! யோகியே! உனது சுற்றத்தார்களின் அவாவைத் திருப்திசெய்ய ஏலாத நீதானா, அண்டகோடிகளிலுள்ள ஸர்வாத்மாக்களின் அபீஷ்டங்களனைத்தையும் அப்போதைக்கப்போது திருப்தி செய்விக்கும் ஸர்வ அதிகாரியினுடைய திருவுளச் செயலின் திறத்தைக் காண்பவன்? இது மதிஹீனம்! மதிஹீனம்!! அவருடைய கிரியைகள் உன்னுடைய பராக்கான பார்வைக்கு எவ்வாறு தோற்றினும் அதைப்பற்றி எப்போதும் உன்மனதிற் சந்தேகங்கொள்ளாதே! ஸர்வலோகாதிபரானவர் ஓரணுவளவும் பழுதுறாத நீதிபரர் என்பதை மாத்திரம் உன்மனதில் உறுதியாய் வைத்துக்கொள். அவர் இவ்வுலகத்தை யாளும் விதம் அணுவுக் கணுவாகவும் மஹத்துக்கு மஹத்தாகவும் உள்ளீடாகவேயிருந்து நடத்தி வருவதாயிருக்கின்றது. கருவிகளையும் ஹேதுக்களையும் கொண்டே தமது திருவுளப்பாங்கை நடத்திவருகின்றார். மானிடர் இவ்விஷயங்களை யுணராமையால் அவரது திவ்ய லக்ஷணங்களையும் அறியாமல் ஐயமுறுகின்றார்கள். இதுபிழையாகும். ஆகிலும் நீஇப்போது கண்ட காட்சியின் * உண்மையை உணரவேண்டுமானால் இதோ தெரிவிக்கின்றேன் கேள்.

"பொற்காசுப் பையைக் கண்டெடுத்தவனுடைய பிதாவின் ஆஸ்தியை அநேக வருஷங்களுக்குமுன்னே குதிரைச்சவாரிப் பிரயாணியின் தகப்பன் அபகரித்துக் கொண்டானாகையால், ஆஸ்தியை இழந்தவனுடைய குமாரன், ஆஸ்தியை அபகரித்தவனது குமாரனுடைய பொற்காசுப்பையைப்பெறும்படிச் செய்தோம். சிறிதுகாலத்திற்குமுன் விறகுதலையன், காட்டில்தனியேவந்து கொண்டிருந்த குதிரைச் சவாரிப்பிரயாணியின் தகப்பனைக் கொ[illegible] திருந்தான்; அதனால் கொலையுண்டோன் [illegible]

ரனல் விறகுதலையன் கொலையுண்ணச் செய்தோம். ஓ தபஸ்வியே! காரியம் இவ்வாறிருப்பதனல் முன்னும் பின்னும் சம்பந்தமாயுள்ள விஷயங்களை யறியச் சக்தியில்லாத நீ கடவுளுடைய செயல்களைப்பற்றிச் சந்தேகங் கொள்ளும் மதிஹீனத்தை இன்றோடே விட்டுவிடு” என்னும் அசரீரிவாக்குப் பிறந்தது. இவ்வசரீரியைக் கேட்ட ஸந்நியாஸி தம் மதிஹீனத்தை யுணர்ந்து மிகப்பணிவாய்க்கடவுளைப்பன்முறை நமஸ்கரித்து, “ஹே ஸர்வேச! உமது திருவுளத்தை யறியாத எளியேனது அபாரதத்தை மன்னித்தருளுக” என்று துதித்துத் தமது வாஸஸ்தானஞ்சென்றனர். சிறுவர்களே! கடவுளது நீதி முறையைப் பாருங்கள்! அவர் அறியாதது ஒன்றுமிராது என்பது இதனல் தெரிய வருகிறது. ஆதலால், இனி நீங்கள் ஒருவருக்கும் தீங்கிழையாமலும் பொய்மொழியாமலும் தாய்தந்தை குரு முதலியோரிடம் அன்பு பூண்டு பரோபகாரிகளாய் இருப்பீர்களாக.

T. K. இராமபத்ர சாஸ்திரி.

---

**முகத்தைப்பார்த்துப் பேசுதல்.**—நீ ஜனங்களுடன் பேசும்பொழுது எப்பொழுதும் அவர்கள் முகத்தைப்பார்த்தே பேச வேண்டும். அப்படிச் செய்யாவிடில் நீ சொல்வதில் உனக்கே சந்தேகமிருப்பதாகப் பிறர் எண்ண இடமாகும். அன்றியும் நீ பேசும்பொழுது ஜனங்களுடைய முகங்களைப்பார்த்து அவைகளில் உண்டாகும் குறிகளைக் கவனியா விடில், உன் பேச்சுக்கள் அவர்கள் மனதில் எவ்வித அபிப்பிராயத்தை உண்டாக்கின வென்பதை எப்படி அறியக்கூடும்? அகத்தழகு முகத்திலே தெரியுமாதலின், ஜனங்களுடைய அந்தரங்கமான அபிப்பிராயத்தை, அவர்கள் சொல்லும் சொல்லைக் காதால் கேட்பதைவிட அவர்கள் முகக்குறிகளைக் கண்ணால்பார்ப்பதனல் எளிதில் அறியலாம். “அடுத்தது காட்டும் பளிங்குபோனெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்,’ என்று திருவள்ளுவரும் சொல்லியிருக்கிறார்.

# உபநிஷத் ரத்னமாலை

## THE SUMMARY OF THE MINOR UPANISHADS

### 41. முக்திகோபனிஷத் (108)

ஸுரம்மியமான அயோத்தியில், ரத்னமண்டபத்தில் ஸீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன ஸமேதராய் வசிஷ்டசுகாதி பாகவதர்களால் இடைவிடாமல் துதிக்கப்பட்டு ஸர்வஸாக்ஷியாக ஸ்வரூபத்யானத்தில் மூழ்கியிருந்த **ஸ்ரீ ராமரது** ஸமயத்தை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்த **ஹநுமார்**, அவர் ஸமாதிகலைந்து விழித்த தருணம் நோக்கி, மஹாவிநயத்துடன் அடுத்து, தீர்க்க தண்டம் ஸமர்ப்பித்து, ‘உமது உண்மை உருவை உள்ளபடி விளக்கும், பந்த நிவர்த்தி மோக்ஷப்ராப்தி உபாயத்தை கிருபை கூர்ந்து அருளிச்செய்யவேண்டும் என்று ப்ரார்த்தித்தார்.

**ஸ்ரீ ராமர்:**—வேதாந்தத்தில் நான் நிலைத்திருக்கிறேன், அதை நன்றாக ஆராய்ச்சி செய்.

**ஹநுமார்:**—வேதாந்தங்கள் எவை?

**ஸ்ரீ ராமர்:**—வேதம் என்னுடைய மூச்சுக்காற்று. எள்ளுள் எண்ணெய்போல வேதாந்தம் வேதத்துள் கலந்து நிலை பெற்றுள்ளது.

**ஹ:**—வேதவேதாந்தங்களை விளக்கவேண்டும்.

**ரா:**—வேதம் நான்கு. ஒவ்வொன்றுக்கும் அநேக சாகைகள் உண்டு. வேதாந்தங்களாகிய உபநிஷத்துக்களும் அநேகம்: ருக்வேதத்தில் 21 சாகைகள், யஜுஸில் 109, ஸாமத்தில் 1000, அதர்வண வேதத்தில் 50, ஒவ்வொரு சாகைக்கும் ஒவ்வொரு உபநிஷத்துண்டு. ஆக உபநிஷத்துக்கள் 1180. இவைகளுள் ஒரு ருக்கை எவன் என்னிடம் நிஜ பக்தியுடன் படிக்கிறானே, அவன் மேலான ஸாயுஜ்யபதத்தை அடைவன்.

**ஹ:**—முக்தி ஒன்றென்று சிலரும் முக்தி அநேகமென்று வேறு சிலரும் கூறுகிறார்கள். பின்னவர்கள் அவைகளை அடைய வெவ்வேறு வழிகளையும் கூறுகிறார்களே. இதன் உண்மை என்ன?

**ரா:**—பரமார்த்த ஸ்வரூபமாக விருக்கும் முக்தி ஒன்றே. இதன் கீழ்ப்பட்டதாக சிற்சில அபிவிருத்தி நிலைகள் உண்டு. என் நாம பஜனம் ஸாலோக்யமுக்தியைத் தரும். காசியில் எந்த விடத்தில் மரணமடைந்த போதிலும், விச்வநாதரால் என் தாரக மந்திர உபதேசஞ் செய்யப்பட்டு இறப்பவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டு என் ஸாரூப்ய முக்தியை அடைகிறான். ஸதாசாரம், இந்திரிய மனோ நிரோதம் முதலியவையுடைய த்விஜன் என்னிடம் புத்தியைச் செலுத்தி என் ஸாமீப்ய மடைகிறான். குரு உபதேச மார்க்கப்படி என்னை த்யானம் செய்பவன் ப்ரமாகீட ந்யாயப்படி என்ஸாயுஜ்யத்தை அடைவான். கைவல்ய முக்தி, முமுக்ஷுக்களுக்கு மாண்டூக்ய உபநிஷத் ஒன்றாலேயே ஏற்படும். இதனல் ஏற்படாவிட்டால் 10 உபநிஷத்துக்கள் அப்யாஸம் செய்யவேண்டும். இதனாலும் ஞானம் திடப்படாவிடில் 32 உபநிஷத்துக்களை அப்யஸிக்கவேண்டும். 108 உபநிஷத்துக்களால் விதேக முக்தி ஏற்படும். (பின்னர் ஸ்ரீ ராமர் 108 உபநிஷத்துக்கள் பெயரையும் சாந்தி மந்திரங்களையும் கூறுகிறார்). இவைகளால் ஸகல பந்தமும் நீங்கி முக்தி கைகூடும். இவைகளை அனதிகாரிகளிடம் கூறலாகாது. ஸதாசார ஸத்குண ஸம்பூர்ண ஞான ஸாதனசதுஷ்டய ஸம்பன்னன் இவைகளை, தேஹம் நீங்கும் வரையில் விதிப்படி அப்யாஸம் செய்துவந்தால் முடிவில் ஏற்படும் முக்தியே கைவல்ய முத்தி: விதேஹ முக்தி. இது ஞான மார்க்கத்தால் ஏற்படுவது. முடிவான ஸத்ய லோகத்தில் ப்ரஹ்மா இந்த ஞானத்தைப் புண்யவான்களுக்கு உபதேசித்து அவர்களைத் தம்முடன் கைவல்யம் பெறும்படி செய்கிறார்.

**ஹ:**—ஜீவன் முக்தி என்றால் என்ன?

**ரா:**—கர்திருத்வ போக்த்ருத்வ ஸுக துக்க முதலியவைகள் ரூபமான மனம் துக்க ரூபமானதால் பந்தம் ஏற்படுகிறது. இதன் அடக்கம் ஜீவன் முக்தி.

**ஹ:**—விதேஹ முக்தி என்றால் என்ன?

**ரா:**—பானை உடைபட்டால் அதனுள்ளிருந்த ஆகாசத்தின் நிலையைப்போல ப்ராரப்த க்ஷயத்தாலே ஏற்படும் நிலை விதேஹ முக்தி.

**ஹ:**—இம்முக்திகளுக்குப் பிரமாணம் என்ன?

**ரா:**—108 உபநிஷத்துக்களும்.

**ஹ:**—அவை நிறைவேறுதல் எப்படி?

**ரா:**—புருஷ ப்ரயத்தனத்தாலேயே நிறைவேற வேண்டும்.

**ஹ:**—அவைகளின் பிரயோஜனம் என்ன?

**ரா:**—கர்திருத்வாதி துக்கம் நீங்குவதால் ஏற்படும் நித்யானந்தந்தான் பலன்.

மேல் ஸ்ரீ ராமரே இந்த விஷயங்களை எடுத்துப் பலவாறு விஸ்தரிக்கிறார்:—

புருஷப்ரயத்னம், சாஸ்திரீயம் அசாஸ்திரீயம் என இருவகைப்படும். முன்னது பரமார்த்தத்தையும் பின்னது அநர்த்தத்தையும் விளைக்கும்.

வாஸனைகள் என்பவைகள் விஷயத்தில்தான் உன் புருஷ யத்தனத்தைச் செலுத்தவேண்டும். வெளி வஸ்து உணர்ச்சியால் வெளிப்பட்டு அந்த வஸ்துக்களில்பற்றி மனதின் சஞ்சல ஸ்வரூபத்திற்குக்காரணமாக விருப்பது வாஸனை. மேலும் இந்த வெளிப் பழக்கத்தால் உறுதியான பாவனை ஏற்பட்டு முன்பின் யோசனை இல்லாமலிருக்கையில் திடீரென்று வெளி வஸ்துக்களை விரும்பிப் பாய்ந்தோடுவது இந்த வாஸனையின் தடிப்பு. இந்த வாஸனை இரண்டுவிதம். சுப அசுபவாஸனைகளே; அதாவது சுத்தமலினம்என்றும் கூறுவதுண்டு. அசுபவாஸனைகள் மாறிமாறி ஜனன மரணச்சுழற்சிக்குக் காரணம். சுபவாஸனை வறுத்தவிதைபோல மேல்முளைப்பதற்குக்காரணமாகாது. அசுப வாஸனைகள் தேஹவாஸனை, லோகவாஸனை, சாஸ்திரவாஸனை எனமூவகைப்படும். இவைகளால்ஞானம் விளங்காமல் தடைபடும். இவைகளைப் புருஷமுயற்சியால் தடுத்துசுபவாஸனைகளிலேயே பழக்கவேண்டும். சுபாசுபங்களுக்கிடையில் தான் வாஸனைகள் மாறி வரும். ஸாவதானமாகவும், பொறுமையுடனும் இந்த நற்பழக்கத்தைச் செய்து வரவேண்டும். இப்படிச் செய்துவந்தால் இரண்டுவித வாஸனைகளும் உன்னை விட்டு நீங்க, வாஸனக்ஷயம் ஏற்படும். இந்த க்ஷயம் வந்ததோ இல்லையோ என்றஸந்தேஹம் உள்ள வரையில் சுபவாஸனைகளிலேயே நிலைபெற்றிருக்க வேண்டும். இதனல் ஒருகெடுதியும் வாராது. ஒரு புருஷன் அவனது வாஸனஸ்வரூபமே ப்ரபஞ்சஸம்பந்த வாஸனை உள்ளவரையில் மோஹமடைவன். அதன் வேகமிருக்கின்றவரையில் இது நீங்குவதில்லை. இவன் பைத்தியம் பிடித்தவன்போலாவான். வாஸனக்ஷயமாகி எதைப்பற்றுகிறானே அதேயாகிறான். அநேக சாஸ்திரங்களைப் படித்தும் பயனில்லை. வாஸனக்ஷயத்தை முன்னிட்டு ஆத்மாவை பிரயத்தனத்தால் தேடவேண்டியது.

இதை வேறு இரண்டுடன் சேர்த்தே அப்யஸிக்க வேண்டும்; இல்லாவிடில் மோக்ஷம் ஏற்படாது. அவை யாவன, மனோநாசம் தத்துவஞானம் என்பவைகளே. தனித்தனி இவைகளில் எவ்வளவு காலம் பழகிவந்தாலும் பயன் ஏற்படாது. இவைகளில் வெகுகாலம்ஸமப் பழக்கமாகிய யோகத்தால் ஹிருதயப்பற்றுகள் சிதறிவிடும். வெகுகாலப் பழக்கமல்லவா ஸம்ஸாரம்! இதனால் மனம் எண்ணெய்வற்றிய தீபத்தைப்போல அடங்கிவிடும். இப்படிப்பட்டமனதை என்னிடம் செலுத்துபவன் நானேயாய் விடுவான். இந்நிலையை அடைந்தவனெல்லாம் செய்து முடித்தவனவன். இது தான் மோக்ஷமார்க்கம், இப்படிப்பட்டவன் விஷயங்கள் மத்தியிலிருந்தும் தாக்கற்றிருப்பன்.

வாஸனையால் மூச்சும், மூச்சால் வாஸனையும் பரஸ்பரம் திடப்பட்டு அதிகமாகும். இவைகளால் மனம் தலை தூக்கும். இவைகள் இரண்டின் எதையடக்கினாலும் மனம் அடங்கிவிடும். வாஸனக்ஷயத்தால் மனம் உருவிழக்க அமனஸ்க நிலைவரும். உண்மை விளங்கும்வரை சாஸ்திரப்படி நடக்

வேண்டும். உண்மை விளங்கிவர சுபவாஸனை தாமே நீங்கும்.

மனோநாசம் இருவிதம். ஜீவன் முக்தனிடமிருப்பது ஸ்வரூபநாசம். விதேஹமுக்தனிடமிருப்பது அரூபநாசம். நன்மனம் அடங்கி விடுகையில் ஏற்படுவது ஸ்வரூபநாசம். மனமே ஸம்ஸாரமரத்திற்கு வேர். அது ஸங்கல்பரூபம். இதன் ஆணிவேரான ஸங்கல்பம் க்ஷயமாகவேண்டும். ஸங்கல்பம் உண்டாகும்போதே, தலை எடுக்க வொட்டாது அடிப்பது ஒன்றுதான் இதற்கு வழி. ஏக வஸ்து அப்யாஸத்தால் மனமடங்காதவரையில் அது இருட்டில் உலாவும் வேதாளந்தான். இதனை அடக்கிவருபவனுக்கு ஆசைகுறைந்துகொண்டேவரும். எவ்வளவு கஷ்டம் வந்தபோதிலும் பல்லைக்கடித்துக்கொண்டு இந்த மனதை அடக்கமுயலவேண்டும். தத்வஞானம் ஸத்ஸங்கம், வாஸனாக்ஷயம் சுவாஸபந்தம் இவைகள் மூலமாக மனதை யடக்கவேண்டும். இவைகளில்லாது இதைச் செய்யவே முடியாது. இதைச்செய்வதற்கு உற்பத்தி கிரமத்திற்கு விரோதமாக ஒடுக்கியபின் மிஞ்சும் ஆதிகாரணத்தைச் சிந்திக்கவேண்டும். இதனால் ஏற்படும் அகங்காரமற்ற பிரஹ்மாகார விருத்திக்கு ஸம்பரஞ்ஞாத ஸமாதி என்றும், இதில் பரமானந்தம் பிரகாசிக்கும்போது அஸம்பரஞ்ஞாத ஸமாதி என்றும் பெயர். ஒன்றன்தாக்கின்றி ஏற்பட்டு நிலைக்கும் ஸமாதிக்கு அதத்வ்யாவிருத்தி ஸமாதி என்று பெயர்.

ஞானஞானங்களுக்கு அப்பாற்பட்டு எவன் நானே பிரஹ்மம் என்று நிலை பெறுகிறானோ அவன் பிரஹ்மத்தை உணர்ந்தவனல்லன், பிரஹ்மமே. இவ்வாறு பிரஹ்மத்தை உணரா சாஸ்திர பண்டிதர்கள் சுவையறியா அகப்பையே.

தேஹ விரக்தியில்லாதவனுக்கு என்ன கூறினாலும் என்ன? தேஹ அசுத்தம்,ஆத்மா சுத்தம்: வாஸனா ஸம்பந்தமே பந்தம், இதன் நாசமே மோக்ஷம். விஷயவாஸனையை முந்தித்தள்ளி சுத்த வாஸனையைப் பிடித்து அவைகள் நழுவி மோக்ஷ ஆசையாக இதுவும் நழுவும் ஸமாதியில் நிலைப்பாய். நிற்குண, நித்ய, துக்கத்வம்ஸகமான என் ரூபத்தை பஜி. 'நானே ப்ரஹ்மம் நானே எல்லாம்: ஓம் நான் ஸர்வ ஸம்பூர்ணன்? என்று ஸதா பாவனை செய்.

இப்படி இருந்தால் தேஹம் நீங்குகையில் விதேஹ முக்தி தானே ஏற்படும். ஆகாசத்தில் யாதொரு தடையுமின்றி கண் எப்படி அகண்டமாக நோக்குகிறதோ அதுபோல விஷ்ணுவின் பரமபதத்தை ஞானிகள் இடைவிடாது காண்கின்றனர். இந்த அகண்டக் கண் உடைய ப்ராஹ்மணர்கள் அதை வாயாரத் துதித்து வெளிப்படுத்துகின்றனர்.

---

**நசுக்கிப் பேசுதல்.**—நாம் ஏதாவதொரு சங்கத்தில் பேசும்பொழுது நசுக்கினாற்போல் ஞாபகத்தில் உள்ள கோணல்களை யெல்லாம் எடுத்து இகழ்ந்து பேசுவோமேயானால் அது சங்கத்தார்களுக்குப் பிரியமாயிருக்கவே மாட்டாது.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### 1. ஆத்திசூடி விளக்கம்

### 28. அழகலாதன செயேல்

பழிப்புக்கு இடமாக உள்ளகாரியங்களை ஆபத்காலத்திலும் செய்யாதிருக்கவேண்டும்என்பது இதன் பொருள். வெறும்முகத்தழகுஅழகல்ல நடத்தையழகே யழகு. ஒருவனுக்கு நடத்தை யழகு இருந்துவிட்டால் வெளியழகில்லாவிடினும், 'இயற்கை விஷயத்தைப்பழிப்பதுபாவம், இவன் தன்னால் இயன்றவரையில் நல்வழியிலேயே முனைந்திருக்கிறான்;' என்று கருதி அவன் அழகின் குறைவை ஒருபொருட்டாகப் பாராட்டார்கள் உலகத்தவர். இராயர்சபைக்கு இரண்டு வேசிகள்வர, அவர்கள் அரசன்குணத்தைக் கொண்டாடிப் பேசிவிட்டு முடிவில்ஒருத்தி 'அரசன்குணம் கல்லும் காடுமாக விருக்கிறது' என்றும், மற்றொருத்தி 'அரசன் குணம் முள்ளும் முரடுமாக இருக்கிறது' என்றும் கூறிவிட்டுப் போனார்கள். இதன்பொருள் ஒருவருக்கும் விளங்காமற் போக அப்பாஜியிடம் இந்த விஷயம் கூறப்பட்டது. கொஞ்சங்கூட நிதானிக்காமல், அவர்கள் 'அரசன்குணம் கற்கண்டு போலவும் பலாப்பழம்போலவும் இருக்கிறதுஎன்றார்கள்' என்று மறுமொழி கூறிவிட்டான். ஒருவனுக்கு நடத்தையழகிருந்து முகத்தழகு இல்லாமற் போனாலும் கற்கண்டு, பலாப்பழம் முதலிய பார்வைக்குக் கடினமாயும் உண்மையில் ருசியாயும் உள்ள பொருள்களைப் போல சிறந்தவனென எல்லோராலும் கொண்டாடப்படுவான்.

இப்படி இல்லாது ஆள் ஒழுங்காக விருந்து காரியத்தில் மாத்திரம் இகழக் கூடியவைகளைச் செய்து வந்தால் அவன் புகழ் நீடித்து நிற்காது. முதல் முதல் பார்வைக்கு எல்லோரும் அவனைச் சிறப்பாக மதிக்கலாம். நெருங்கிப் பழகத் தொடங்கிவிட்டால் அவன் சாயம் வெளுத்துவிடும். 'இவன் ஏதடா பூநாகமிருக்கும் தாழம்பூப்போல பார்வைக்குப் பகட்டாயும் உண்மையில் கொடியவனாயுமிருக்கிறான்' என்ற அபகீர்த்தி அவனுக்குச் சீக்கிரம் வந்துவிடும். இதோடு நின்றுவிடாது உண்மையான உள்ளழகாகியநடத்தை அமைந்து வெளியழகும் சேர்ந்த எவனிடத்தும் இக்கொடியவன் வேஷத்தால் ஜனங்களுக்குப் பொதுவான அவநம்பிக்கையும் ஏற்பட்டுவிடும். ஆகவே அழகலாதனசெய்தால், செய்பவனுக்கு அபகீர்த்தி வருவதோடுங்கூட, அவனைப்போல வெளித்தோற்றமாத்திரமிருந்து உண்மையில் நல்லவனாக விருப்பவனிடம் ஜனங்களுக்கு வீண் அவநம்பிக்கை உண்டாகிவிடும்.

இம்மாதிரி அழகலாதன செய்வதால் செய்பவனுக்கும் அவனைப் போன்று இருப்பவனுக்கும் வீண் அபவாதம் ஏற்படும் என்பதற்கு அநேக திருஷ்டாந்தங்கள் இருக்கின்றன. ஸந்யாஸி ஆச்ரமம், மிகச்சிறந்ததென்று ஸகலசாஸ்திரங்களும் கூறுகின்றன. ஸந்யாஸிகள் என்று வேஷம் தரித்துவரும் சிலபாசாங்குக்காரரது வஞ்சகச் செயல்களால் அந்தச் சிறந்த ஆச்ரமத்திற்கே ஒரு அபவாதம் இக்காலத்தில் ஏற்பட்டுவிட்டது. இம்மாதிரியேசிலபிராஹ்மணர்களதுகூத்தொழில்களால் இக்காலத்தில் பிராஹ்மண த்வேஷம் அதிகமாகிவிட்டது. பரமமுடிவை எடுத்துக் கூறும் நிஷ்களங்கமான வேதாந்த சாஸ்திரத்திற்கு ஆபாஸ வேதாந்திகள் துணிச்சலான காரியங்களால், நன்னடக்கைக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் விரோதமானது வேதாந்தம் என்ற கெட்டஎண்ணம், இப்பொழுது பெரும்பாலாருள்ளும் பரவிவருகிறது. 'கும்பிடப்போனவன் தெய்வத்தைக் கெடுத்தான்' என்று ஒரு பழமொழி யுண்டு. விக்ரஹாராதனை செய்பவர்களில் பெரும்பாலார் காம்ய ஆராதனைகளை விடாது செய்து மஹாவிஷ்ணு, ஸுப்ரஹ்மணியம் முதலிய ஸாத்வீக தெய்வங்களை ஆவேசம் உண்டாக்கும் ஐயன்பிடாரி முதலிய க்ஷுத்ர தேவதைகளுக்கு நிகராக்கிவிட்டனர். 'குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பு' என்ற ஒரு வசனமும் உண்டு. கோடரிக் காம்பு மரத்தாலாகியது. ஒரு மரம் அவ்வாறு ஏற்பட்டு தன்னைப்போன்ற மரங்களை யெல்லாம் அந்தக் கோடரி தறித்து அடிக்கும்படி செய்கிறது. இதுபோலவே சிறந்த குலத்தில் பிறந்தவன் அழகலாதனசெய்தால் அவன் குலம் முழுவதையும் கெடுக்கவந்த ஒரு கோடரிக் காம்பாகிவிடுவான். வியபிசாரம் என்ற அழகலாதனசெயலைச் செய்யும் பெண் ஒருத்தி எவ்வளவுஅழகு, உயர்ந்த குடிப்பிறப்பு, செல்வச் சிறப்பு முதலிய சீர்கள் எல்லாம் வாய்க்கப் பெற்றிருப்பினும், எல்லாவற்றையும் அழித்துவிட்டு பெண்களுக்கே பொதுவான கெட்ட அபவாதத்தை இழுத்துவிட்டுவிடுவாள். ஆதலால் சிறந்த விஷயங்களோடு ஸம்பந்தப்பட்டவர்கள் அழகலாதன செய்தால், தமது சீர் குலையும்படி செய்துவிடுவதுமன்றி தம்போலவிருந்து நற்குணமும் வாய்ந்திருக்கப் பெற்றவர்கள் எல்லோரது சீரையும் குலைத்துவிட்டு; மஹா பாபியுமாகிவிடுவர்.

இவ்வளவுகொடியஅழகலாதனவற்றைச்செய்யும்படி அறிவுடையோரைத் தூண்டுவது யாது என்றசங்கை பிறக்கும். இரண்டுவித காரணங்கள் இதற்கு உண்டு. அவையாவன: ஆபத்காலங்கள், ஆசை என்னும் இவைகளே. மனத்தின்கண் ஆசை ஏற்படாவிட்டால் வெளியில் எவ்வளவு ஆபத்துகள்வரினும் அழகலாதன செய்வது ஏற்படாது. ஆபத்துகள் இல்லாவிடினும் ஆசை மனத்தில் ஏற்பட்டுவிட்டால் கொடியநிலை உடனே வந்துவிடும். இந்த ஆசைதான் அழகலாதன செய்வதற்கு முக்கிய காரணம் என்று கூறுகிறார் பகவான் கீதையில். ஆசைஅதிஸூக்ஷ்மமாக உள்ளே இருப்பது. இதைத்தந்த விசாரங்கள் மூலமாக உணர்ந்து, விஷயங்கொடுத்து திருப்திபண்ண முயன்றால்நெய்பெய்த நெருப்புப்போல ஆசைகிளம்பி ஓங்கும் என்று கண்டு எல்லாவற்றிற்கும் ஆதாரமாக விருக்கும் ஆத்மாவில் இதற்கு இருப்பே இல்லை. அதைக் கவனியாது ஒதுக்கிவிட்டால்தான் ஆசையை வெல்லலாம் என்று தேறித் தெளிந்து உண்மையில் நிலைக்கமுயலுவதே அழகலாதனசெய்யாமைக்கு நேரானவழி. இவ்வாறு ஆத்ம நிஷ்டையில்பழகினால்தான் ஆபத்துக்கள் எப்படி வரினும் அவைகளில் அகப்பட்டுக்கொண்டு இந் நீதிவாக்யத்திற்கு மாறாக நடக்காது தப்பிவிடலாம். இப்படிச் செய்ய முடியாதவர்கள் அழகலாதன செயல்களை விட்டுவிலகியே பழகி அந்த ஆசையைப் பட்டினிபோட்டுக் கொல்ல முயலவேண்டும். நமது முயற்சியையும் மீறி அப்படிச் செய்யும் நிலை நிற்காது வருமாயின் முற்பழக்க வீரியத்தால் ஏற்பட்டிருக்கும் வெறுப்பால் முரட்டுத்தனமாக அதற்கு இடங்கொடாது நின்றுதப்புவிக்கப் பழகவேண்டும். எந்த ஸமயத்திலும் இப்படிப்பட்டவர் 'அழகலாதனவற்றிற்கு இடையிலிருந்துகொண்டு அதைத்தடுக்க முயலுவதே மேலானநிலை' என்று குதர்க்கம் பேசி ஆபத்திற்கு இடையில்போக யத்தனிக்கவே கூடாது. இப்படிச் செய்யத் துணிபவன் நிச்சயமாக அகப்பட்டுக் கொண்டு விழிப்பது திண்ணம். இப்படிச் செய்யவேண்டும் என்ற குதர்க்க எண்ணம் தோற்றியதே அகப்பட்டு விட்டதற்கு ஓர் அடையாளம். எவனும் வருவதை முன்னமே தடுத்துவிடவேண்டும். மீறிவந்தால் ஒருகைபார்த்து விடவேண்டும் என்ற உறுதியே அழகலாதன செய்யாதிருப்பதற்கு முக்கியமான ஸாதனம்.

அழகலாதன செய்வதால் ஏற்படக்கூடும் கொடுமைகளை விளக்க அநேகம் கதைகள் உண்டு. சிவபக்தசிகாமணியாகிய ராவணன் பரதாரஹரணம் என்ற அழகலாததைச் செய்ததால் நிர்மூலமாகநாசமானான். ஸத்புத்திரவதமாகிய அழகலாததைச் செய்யப்புகுந்த ஹிரணியகசிபுஎன்றஸர்வசக்திமானும்முடிவில் இறக்கும்படி நேரிட்டது. இதுபோல புராணங்களில் அழகலாதன செயேல் என்பதற்கு உதாரணகதைகள் ஏராளமாகக் காணலாம்.

அராபிக்கதையிலும் ஒன்று இந்தவிஷயமாக உள்ளது. ஒருவூரில் நேபர், டேஹர், என்ற இரண்டு அராபிப்பிரபுக்கள் இருந்தனர். நேபரிடம் அழகியகுதிரை யொன்றிருந்தது. அதற்கு எல்லா லக்ஷணங்களும் பொருந்தியிருந்தது. ஓட்டம் முதலியவைகளிலும் மிகச்சிறந்ததாக விருந்தது. டேஹர் இதை எப்படியாவதுவாங்கிவிடவேண்டும் என்று ஆசைவைத்து எவ்வளவோ பணம்ஒட்டைமுதலியவைகளை அதற்குப் பதிலாகக் கொடுப்பதாக ஆசைகாட்டினான். நேபருக்குத் தன்குதிரையை விட்டுப்பிரிய மனம்வரவில்லை. இப்படி இருக்கையில் ஒருநாள் டேஹர் ஒருநொண்டிப் பிச்சைக்காரன் வேஷம்போட்டுக்கொண்டு பட்டினிகிடப்பவன்போலப் பாசாங்கு செய்துகொண்டு கடைத்தெருவில் உட்கார்ந்து கொண்டிருந்தான். நேபர் தன் அழகிய குதிரையின்மீது ஸந்தோஷமாக ஸவாரி செய்துகொண்டு அவ்வழியேவர, அவனைக்கண்டதும் டேஹர் தீனஸ்வரத்துடன் 'ஐயா! ஏழை, நொண்டி மூன்றுநாள் பட்டினி; ஒரு பொட்டு ஜலம் கூடக்

கிடைக்கவில்லை; காதடைத்துப் போகிறது நகாமுடியவில்லை; எனக்கு உதவிசெய்தால் புண்யமுண்டு உனக்கு' என்று கெஞ்சி மன்ருடினன். மனங் கரைந்த நேபர் கருணையுடன் 'அப்பா என் குதிரை மேல் ஏறிக்கொள், உன்னை வீட்டிற்கு அழைத்துப் போய் சேர்ப்பிக்கிறேன்' என்றான். 'ஐயா என்னால் அசையமுடியவில்லையே! நான் என்ன செய்வேன்' என்று பாசாங்கு செய்து கண்ணீர்வடித்தான் வஞ்சகப் பிச்சைக்காரன். உண்மைதான் என்று மதித்து நேபர் கீழேஇறங்கிநொண்டியை மெதுவாகத் தூக்கிக் குதிரையில் உட்காருவித்தான். நேபர் குதிரைமேலே ஏற யத்தனிப்பதற்குள் டேஹர் குதிரையைத் தாண்டி நாலுகால் பாய்ச்சலில் செலுத்தி 'அடே நேபர்! நான் யார் என்று தெரியவில்லையா? நான் ஆசைவைத்திருந்த குதிரைஎன்கையில்சிக்கிவிட்டது. வந்தனம் போய்வருகிறேன்' என்று விளித்துக் கூறிக்கொண்டே போனான். முதல் நேபருக்கு ஆச்சர்யமும், துக்கமும் வந்துவிட்டது. அதை அடக்கிக்கொண்டு திருடனைத்தொடர்ந்து சென்று சற்று நின்று தான் சொல்லப்போவதை கேட்டுவிட்டுப் போகும்படி நயந்துவேண்டினன். நேபர் டேஹர்கொஞ்ச தூரத்தில் குதிரையை நிறுத்த, அவனை நோக்கி நேபர் 'என் குதிரையைத்தான் கைப்பற்றிவிட்டாய், பகவத் ஸங்கல்பமும் அப்படி இருந்ததுபோல விருக்கிறது. போனால் போகட்டும். நீ என்னிடமிருந்து குதிரையை கைக்கொண்ட விதம் இன்னது என்பதை மாத்திரம் வெளிப்படுத்தி விடாதே. இதுதான் உன்னிடம் நான்கூறவேண்டியது போய்வா என்றுகூறித் திரும்பிவிட்டான் நிச்சிந்தையாக. 'ஏன்! வெட்கம் பாதிக்கிறதோ நேபர்' என்று பரிஹாஸம் பண்ணினான் டேஹர். 'எனக்கென்னப்பா வெட்கம்! ஈசன் செயலென்று நான் தேறிவிட்டேன். எனக்கொன்றுமில்லை. உலகில் நிஜமானபிச்சைக்காரர்கள்பட்டினி கிடந்து கொண்டிருப்பர். அவர்களுக்கும் ஸஹாயம் செய்ய ஜனங்கள் பயப்படுவர், உன் மோசத்தொழிலை நீ வெளிப்படுத்தினாய். நான் குதிரை இழந்ததை ஒரு பொருட்டாக மதியாவிடினும், அநேக ஏழைகள் வாயில் என்னால் மண் விழுந்து விடக்கூடாதே என்ற ஏக்கத்தால் இவ்வாறு கூறினேன். வேறொன்றும் இல்லை. போய்வா' என்று திரும்பிவிட்டான் சாந்தமாய் நேபர். டேஹர் இதைக்கேட்டதும், இடி விழுந்தவன்போல் அசைவற்று நின்றுவிட்டான். 'ஆஹா! என்ன மதிமோசம் போனேம்! அழகலாததை செய்து ஆனந்திக்கப் பார்த்தோமே யொழிய, அது எவ்வளவு கொடியது என்பதை நிதானிக்காமல் போய்விட்டோமே!' என்று எண்ணமிட்டுக்கொண்டு நேபரை அணுகி 'இந்தா அப்பாஉன்குதிரையைப் பிடித்துக்கொள். என் அழகலாதசெயலால் ஜனங்களுக்குதர்மசிந்தைஇப்படிக்குன்றிவிடும் என்று உணராது செய்துவிட்டேன். மஹா பாபம் செய்ய யத்தனித்த என்னை தருணத்தில் கை

(இதன் தொடர்ச்சி 29-ம் பக்கம், முதல் பத்தி)

# மொழிபெயர்ப்பு விளக்கம்

## TRANSLATION MODELS

The old King shed tears and besought Theseus not to leave him desolate in his old age, more especially just as he had begun to know the happiness of possessing a good and valient son. Theseus, however, felt that he was in the right and therefore would not give up his resolution. But he assured his father that he did not intend to be eaten up unresistingly like sheep and that if the Minotaur devoured him, it should not be without a battle for his dinner. And finally, since he could not help it, King Ægeus consented to let him go. So a vessel was got ready and rigged with black sails; and Theseus with six other young men and seven tender and beautiful damsels, came down to the harbour to embark. A sorrowful multitude accompanied them to the shore. There was the poor old King, too, leaning on his son's arm, and looking as if his single heart held all the grief of Athens.

'என்னை அனாதையாகவிட்டுப் போகாதே. நல்ல தீரனான பிள்ளையை அடைவதால் ஏற்படும் ஸுகத்தில் ருசிகண்ட என்னை இப்பொழுது இப்படி விட்டுப் போவது நியாயமன்று' என்று கண்ணும் கண்ணீருமாய் மன்ருடினன் தீஸியூஸ் என்பவனைநோக்கி அந்த கிழவரசன். தான் நேர் நெறியிலிருப்பதாக தீஸியூஸுக்குத் தோற்றியபடியால் தன் உறுதியை மாற்றவிடங் கொடுக்கவில்லை. ஆயினும், ஆடுகள் போலத்தடையின்றி தன்னைத் தின்றுவிட இடங் கொடுப்பதாக வில்லை என்றும், சாப்பாட்டிற்குச் சண்டையிடாது தன்னை விழுங்க மைனோடாரை விடுவதில்லை என்றும், தன் தகப்பனுக்கு அவன் உறுதிமொழிகூறினன். முடிவில் எவ்விதத்திலும் தடுக்க முடியாமற் போய் விட, ஈஜியுஸ் ராஜன் அவனைப் போகவிட இசைந்தான். கறுப்புப்பாய் கட்டிய கப்பலொன்று அப்பொழுது தயார் செய்யப்பட்டது. ஆறு இளைஞருடனும் ஏழு அழகிய மிருதுவான பெண்மணிகளுடனும் தீஸியூஸ் கப்பலேறத் துறை முகத்திற்கு வந்தான். கரையை நெருங்குகையில் துக்கத்தில் ஆழ்ந்தஒரு கூட்டம் ஒன்று அவனைத்தொடர்ந்து வந்தது. அதற்கிடையில் பிள்ளை தோள்மேல் சாய்ந்து கொண்டு தன் மனத்துள் ஆதென்ஸ் வாஸிகள் துக்கமெல்லாம் திரண்டு குடிகொண்டிருப்பதாகக் காட்டும் முகக்குறியுடன் காணப்பட்டான், பாபம்! அந்த கிழவரசன்.



# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### நந்தன் சரித்திரம்

### 5. யாத்திரைச்சருக்கம்

அல்லது

### நந்தன்பக்தி முற்றியது

பாளைப்பூங்கமுகுடுத்த பழம்பதியினின்றும்போய்
வாளைப்போத் தெழும்பழனம் சூழ்தில்லை மருங்
[கணைந்தார்.

என்று இச்சருக்கக்கதையை சேக்கிழார்ஸ்வாமிகள் சுருக்கிக்கூறிவிட்டார்.

அறியாது போலிருந்த—செம்பொன்
அம்பலத்தாடியைக் கும்பிடவே
ஆதனூர் தனிலிருந்து—விடும்
அம்புபோலப் பறந்தையமின்றி
தில்லையருகில் வந்தார்—மனம்
தேறிக்கொண்டார் குறையாறிக்கொண்டார்

என்ற நொண்டிச்சிந்தால் இதேகதையைக் கோபால கிருஷ்ண பாரதியவர்களும் வெளியிட்டார்.

தனக்கும் தன் அம்பலக்கூத்தனுக்கும் இடையில் தடைபோல நின்றவேலை விலகியதும், நந்தனுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. கானவர் வலையிற்பட்டுக் கைதப்பி ஓடும் மானுக்கும், புலி தாய் விடுபட்ட அடிமைக்கும், ஆண்குழந்தையை யடைந்த மலடிக்கும், நடுவில் கண்போய் திண்டாடிப் பின் திடீரென்று கண் பெற்றவனுக்கும், நந்தனுக்கு இப்பொழுது இருந்த கங்கு கரையிலா வானந்தம் இருக்காது என்றுதான் சொல்லவேண்டும்.

நந்தன் சிதம்பரம் நோக்கிப் புறப்பட்டு கொள்ளிடம் தாண்டிவந்தசிறப்பைக் கோபாலகிருஷ்ண பாரதிகள்,

நந்தன் சிதம்பரம் வருகிருன்—ஆதனூரை விட்டுக்
கொள்ளிடக் கரைபோனான்-நந்தன்
கோபுரங்களைக் கண்டான்

என்ற கீர்த்தனையாலும் நன்ருக வர்ணிக்கிருர்.

தன் இரைமேல் பாய்ந்து வரும்புலிபோல ஏழைக்குள் ஏழையாகிய மீனாக்ஷிதாயின் மார்ப்பிள்ளையான நடராஜமூர்த்தியாகிய த்யேயவஸ்துவின் மேல் பாய்ந்து, ஆனந்தத்தாண்டவ மாடிக்கொண்டு, செழித்த கழனிகள், புற்றரைகள் அடர்ந்த ஸமவெளிகள் வழியாக ஓடிவரும் நந்தனைக்கண்டு தேவர்களும் ஆனந்த பரவசர்களாகி விட்டனர், நந்தனும்:—

அருள்வடிவான மருந்து— நம்முள்
அற்புதமாக வமர்ந்தமருந்து
இருளறவோங்குமருந்து—அன்பர்க்
கின்புருவாகி இருந்தமருந்து
சஞ்சலம் தீர்க்கும் மருந்து—எங்கும்
தானேதானுகித் தழைத்தமருந்து
பிறப்பை ஒழிக்குமருந்து—யார்க்கும்
பேசப்படாத பெரியமருந்து
இறப்பைத் தவிர்க்குமருந்து—என்னுள்
என்றும் மதுரித்தினிக்கும் மருந்து.
நடராஜா நடராஜா நடராஜா நடராஜா
நடராஜா என்பதியே நடராஜா நடராஜா
நடராஜா என்நிதியே நடராஜா நடராஜா
நடராஜா நடராஜா நர்த்தன ஸுந்தர நடராஜா!

என்று வாய்விட்டுப் பாடவும் தொடங்கிவிட்டான். பக்தியால் மனமுருகிப் பரவசமாகி ஆடிப்பாடி அலைந்துவரும் புண்யாத்மாக்களைக் காணுங்கால் தேவர்களுக்கு ஏற்படும் ஸந்தோஷம் வேறு எப்பொழுதும் உண்டாகாது—அவர்கள் பக்தி வெள்ளத்தில் மூழ்கிக் கிடப்பவராதலால்தான் இந்நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. நந்தன் ஆனந்தத்தாண்டவமாடி இப்படி ஓடிவந்தகாலத்தில், பூமி ஆனந்தத்தால் அசைந்து கொடுத்ததாம், புற்கள் எல்லாம் அலைபாய்ந்து அசைந்தனவாம், தேவதைகள் ஆனந்தபாஷ்பமோ என்று ஐயுறும்படி ஆகாயத்திலிருந்து சிறு மழைத்துளிகள் உதிர்ந்தனராம். நந்தன் ஆனந்தத்தால் எழும்பிக் குதித்தான். கண்காதுகள் தன்னது என்ற உணர்ச்சியே நந்தனுக்குப் போய்விட்டது. ஆனந்த மேலீட்டால் மெய் மறந்துவிட்டான் அவன். பாம்பிற் கன்றே தெரியும் பாம்பின்கால்—அதுபோல பக்தர்களுக்கன்றே விளங்கும் பக்தியின் ஆனந்தவெள்ளம். நந்தன் ஆடி அழுதான், 'மலையை விழுங்கும் மஹாதேவருக்குக் கதவு ஒரு அப்பளம்' என்றபடி பண்ணை வயல்கள் எல்லாவற்றையும் கொஞ்ச நாழிகையில் அறுத்துக் குவித்த அவனுக்கு ஆதனூரிலிருந்து கொள்ளிடக்கரை வருவது ஒரு பெரிய காரியமா?

ஆற்றில் வெள்ளம் இருகரையும் புரண்டு ஓடியது. ஒன்றன்பின் ஒன்ருய் அலைகள் தொடர்ந்துபோனதைப் பார்த்தால் ஆனந்தபரவசமாகப் புரண்டோடியதோ என்று தோற்றியது. சிற்சில இடங்களில் தேஹ உணர்ச்சியற்றுச் சுழன்று தள்ளாடும் குடிகாரன்போலவும், வேறு சில விடங்களில் வெறிகொண்ட சிங்கம் பிடரிமயிரை அசைத்துக்கொண்டு போவதுபோலவும், மற்றும் சில விடங்களில் புருத்த திமிலுடைய காளை அசைந்தாடிக்கொண்டு போவதுபோலவும், வேரோர் இடத்தில் மலை நகர்ந்துபோவதுபோலவும், விதம் விதமான கதியாக அந்த வெள்ளம்

(28-ம் பக்க முதல் பத்தித் தொடர்ச்சி)

தூக்கிவிட்டாயே. இதற்குள்ளகைம்மாறுசெய்தால் ஈடாகும்' என்று கண்ணீர்உதிர்த்துப் பரிதபித்தான். இருவருக்கும் ஸ்நேகமும் பரஸ்பரம் மதிப்பும் அதிகரிக்க அன்றுமுதல் அவர்கள் இணைபிரியா நண்பர்களாகி பரோபகார நிதிகளாக விளங்கி வந்தனர்.

ஓடியபோதிலும், எல்லாவிடத்திலும், வெகு தூரம் வடக்கே தோன்றும் சிதம்பர கோபுர ஸந்நிதானத்தில் அது ஆனந்தப்பட்டு, தன்னியற்கைக்கேற்ப அடங்கிய வேதஸ்வரம் பாடுவதுபோலக் காணப்பட்டது. இதனால் அந்த வெள்ளத்தில் ஒரு பயங்கரமான இயற்கை காம்பீர்யம் வெளிப்பட்டுக் காணப்பட்டது நந்தன் ஆழ்ந்தும் தெளிந்துமிருக்கும் தண்ணீரைக் கண்ணுற்றான். அதனுள் ஆடும் பரம்பொருளை உணர்ந்து அதனுடன் மாறா உறவுகொண்டாடினான். அந்தக் காலத்தில் இருப்புப்பாதைகள் இல்லை. நந்தன் அந்த ஸமயத்தில் ஒரு இருப்புப்பாதைத் தொடரைக் கண்டிருப்பானாயின், அவன் ஆனந்த பரவசத்தில்:—

‘இதுதான் என் பர தெய்வம்! வயது, பால், நிலைமை, ஜாதி வர்ணாச்ரம தர்மம், ஒன்றையும் கவனியாது ஒவ்வொருவரையும் அவரவரிடத்தில் கொண்டு சேர்க்கவில்லையா இது? ப்ரணவ த்வனி போன்ற ஏக சப்தத்தால் தன்னுள் எல்லாவற்றையும் ஒழுங்குப்படி பரிபாலனம் செய்துகொண்டு, அவ்யக்தமான ஒருவித சக்தியால் தூண்டப்பட்டு ஒழுங்குபடுத்தப்படவில்லையா இது?’ என்று ஆடிப்பாடி அரற்றியிருப்பான். பார்ப்பாருக்குப் பார்த்தவிடமெல்லாம் பரவெளியாகத்தானே தோற்றும்!

நந்தன் கம்பீரமான நதியைக் கண்டான். நடராஜரை அநேக விஷயத்தில் அது ஒத்திருந்ததை உணர்ந்து தாண்டவமாடினான். ‘என் கண்மணிக்கு இனிய பாட்டுகள் பாடி ஆடிக் குதிக்கிறது இந்த ஆறு, அதுபோல நானும் செய்வேன்’ என்று கிளம்பிக் குதித்து,

நடராஜர் தன்னடம் நன்னடமே
நம்நடமெல்லாம் மருணடமே.

என்று நாமாவளி பாடினான். பரம பக்தவத்ஸலரான பரம்பொருளுக்கு ஓயாத பக்தி என்ற நடனத்தைப் புரிந்தான் அப்பொழுது.

ஒரு படகு வந்து கரையோரமாய் ஒதுங்கியது. ஒரு கறுப்பன் படகுக்காரனாக வந்தான். அவன் முகமெல்லாம் வியர்த்து மேலெல்லாம் வடிந்துகொண்டிருந்தது. ஆனால் அவனிடம் விபூதி ரேகைகள் காணப்பட்டன, கற்பூரவாஸனையும் வீசியது, நந்தன் அவனைக் கண்டு தீர்க்கதண்டம் ஸமர்ப்பித்தான். அவனுக்குப் படகுக்காரன் நடராஜராகவே காணப்பட்டான். படகுள் ஏறிவிட்டான் நந்தன். நடராஜப் பிரபுவினது மழுங்காச் சிறப்பைக்குறித்து, ஆச்சர்ய பரவசர்களாக விருந்த படகு ஜனங்களுக்கு விளக்கத் தொடங்கிவிட்டான் நந்தன்.

பார்க்கப் பசிபோ மருந்து—தன்னைப்
பாராதவர்களைச் சேராமருந்து
ஏகவுருவாமருந்து—மிக்க
வேழைகளுக்கு மிரங்குமருந்து
சோகம்தவிர்க்கு மருந்து—பரஞ்
ஜோதியென்றன் பாலுதிக்குமருந்து.
பெண்ணாசைதீர்க்குமருந்து—பொருட்
பேராசையெல்லாம் பிளக்குமருந்து
மண்ணாசைதீர்க்குமருந்து—எல்லாம்
வல்லமருந்தென்று வாழ்த்துமருந்து
மறந்தாலொளிக்கும் மருந்து—தன்னை
மறவாதவர்க்கருள் வழங்குமருந்து
இறந்தாலெழுப்புமருந்து—எனக்
கென்றும் துணையாயிருந்தமருந்து
நடராஜ நடராஜா நடராஜ நடராஜா
நடராஜ என்குருவே நடராஜ நடராஜா
நடராஜ என்மணியே நடராஜ நடராஜா
நடராஜ நடராஜா நர்த்தனஸுந்தர நடராஜா!

படகு ஆற்றில் ஆடி அசைந்து நகரத்தலைப்பட்டது. நந்தன்படகினுள் தாண்டவமாடினான். படகுஜனங்கள் நந்தனோடு குதித்தாடினர். கரிய படகுக்காரனும் துடுப்பைமறந்து ஆடத் தொடங்கிவிட்டான். அப்பொழுது ஒரு ஏகாண்டதாண்டவம் ஏற்பட்டது; பரவசநடனமாயினும் அது 10 நிமிஷந்தான் நடந்தேறியது. படகு இருபுறமும் அசைந்து அசைந்து தானே எதிர்க்கரையோரமாகச் சென்று ஒதுங்கியது. நந்தன் கரையில் குதித்தான்; நடராஜர் எல்லை என்று உணர்ச்சி எழ அந்தநிலம் மிகப்பரிசுத்தமாகப்பட்டது அவனுக்கு. தான் வேலைசெய்து கஷ்டப்பட்டு ஸம்பாதித்த செப்புநாணயங்களில் சிலவற்றை எடுத்துப் படகுக்காரனுக்குக்கொடுக்க தன்மடியைத் (அந்தக்காலத்தில் பைகள் இல்லை) தடவிப்பார்த்தான். படகுக்காரன் கண்ணுங்கண்ணீருமாக, ‘எனக்கு வேண்டியதில்லை ஐயா! எனக்குக் காசு எதற்கு? மஹாத்மாவே, உங்களை இனிப்பறையன் என்று கூறவிடமேது? கடவுள் உம்மை தாமே யாக்கிக்கொண்டுவிட்டார். நான் ஒரு அடிமைப்பறையன்: காசுவாங்கிச் சேர்க்க எனக்கு அதிகாரமேது?’ என்று மன்றாடினான். மனக்கனிவுமிகுந்த **ஜான்ஸன்** என்ற நூலாசிரியர் **பர்க்**கென்னும் வாக்மியின் சிறப்பைப்பற்றி ‘சிறுமழை அல்லது வழியில் ஓடிவரும் காட்டெருமை இவைகளுக்கு விலகும் காலமாகிய ஸுமார் பத்து நிமிஷம் பர்க்கோடு சேர்ந்து நின்று பின்னர் பிரிந்துபோகும்படி நேரிட்டபோதிலும், அதற்குள் நமக்கு விளங்கிவிடும் அவர் வாக்கு வல்லமையும் மனத்தூய்மையும்’ என்று மனமுருகி வியந்து மொழிந்திருக்கிறார். இதுபோலவேதான் நந்தன் விஷயத்திலும் 10 நிமிஷத்திற்குள் ஆறு கடந்தாய்விட்டது. இந்த அற்பநேரத்திற்குள் பக்தர் பெருமைவிளங்கிவிட்டது. அவரைச் சுற்றியிருந்தவர் எல்லோரும் பக்தர்களாகி அவரை ஆராதிக்கத் தொடங்கிவிட்டனர். படகுக்காரன் படகைவிட்டுவிட்டான். வேலைமேல் வந்தவனுக்கு வேலைமறந்துபோய்விட்டது. வியாபாரி தன் வியாபார உணர்ச்சியிழந்து விட்டான். குடியானவன் கலப்பையை எறிந்துவிட்டுப் புறப்பட்டு விட்டான்.



பஜனைக்கூட்டமொன்று நந்தனைச்சுற்றி ஏற்பட்டுவிட்டது. ஆனந்தபரவசமாக அவர்கள் தாண்டவமாடத் தொடங்கிவிட்டனர். நந்தனைச்சுற்றி நடராஜரைப்போல எல்லோரும் கால்தூக்கியாட ஆரம்பித்தனர்.

வெகுதூரத்திலிருந்து சிறந்த கம்பீரத்துடன் மங்கலாகத்தோற்றிய சிதம்பர கோபுரம் நந்தனை நோக்கி,

‘ஆனந்தத் தாண்டவம் ஆடவாரீர்
ஆடவாரீர் அம்பலத்தான் திருக்கூத்தை
அறியாமையறவே நின்றாடவாரீர்’

என்று கூறுவது போலத்தோற்றியது. நந்தன் பார்த்ததும்,

கோபுரதரிசனமாம்—என்றன்
பாபவிமோசனமாம்

என்று பரவசமாகப் பாடி அதற்குத் தீர்க்க தண்டம் ஸமர்ப்பித்துத் துதிக்கத் தொடங்கிவிட்டான்.

‘ஸ்வாமீ உன் மஹிமை அளவிடப்படாதது. மனோவாக்குக் கெட்டாமலும் தட்டாமலும் நின்றபொருள் நீ ஒருவனே. உன் ஸ்வரூபமாய் இவ்வுலகை ஆதரித்தடக்கும் இவ்வாகாயமும் அதில் நீ இட்டதைச் செய்து ஸஞ்சரிக்கும், நக்ஷத்திரக் கூட்டமாகிய அகிலாண்டகோடிகளும் நிறைந்த இப்பரபஞ்சத்துள் நான் ஒரு ஏழை, பஞ்சை, அனாதை, நாயினும் நாயேன் புழுவினும் புல்லன். இவ்வுலகங்களின் ஓட்டத்தினால் உதிரும் ஒரு தூளிக்குக்கூட நான் ஈடல்லன். பெருங்கடலிலுள்ள ஒரு துளி உவர் நீர் அழகாலும் குணத்தாலும் என்னிலும் உயர்ந்தது. வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து காற்றில் உலரும் செயலற்ற சிறு மணலுக்கும் நான் ஈடல்ல. மலை, நதி, கடல், காற்று, மேகம், ஸூர்யன், சந்திரன், நக்ஷத்திராதிகள் முதலிய பெரிய குடும்பத்தை நிலை குலையாது நெறி வழுவாது பாதுகாக்கும் லீலையையுடைய ஸங்யாஸ ஸம்ஸாரியான உனக்கு நானும் ஒரு பொருட்டாகத் தோன்றியதையும் என்னையும் கூட அனாதையாய்விட ஸம்மதியாது ஆதரிக்க நினைத்த உன் நினைப்பையும், கிருமி முதல் கிரஹங்கள்வரை சலியாது ஸஞ்சரிக்கும் உன் சித் விலாஸச்சிறப்பையும் நினைக்கும்போது உன் கோபுரத்தைக்கண்டு தண்டனிடுவதும் எனக்கு ஒரு ச்ரமமா? இந்த கோபுரத்திற்கென்ன குறைவு? இது தரையிற் கிளம்பி உயரச்சென்று உம்பருலகுடன் உறவாடி கீழே அடிக்கும் காற்று இடிமழைகளுக்கெல்லாம் சற்றேனும் அசைந்துகொடாது வேறொன்றி நிலையாய் நிற்பதுபோல என் உள்ளமும்மேல்நோக்கி ஸம்ஸாரக் குழப்பங்களால் கொஞ்சமேனும் வாடாது, மயங்காது உன்னையே எண்ணி நிற்கும்படி அனுக்ரஹிக்கவேண்டும் என்னையனே! இதுதான் என் கோரிக்கை’ என்றான் நந்தன்.

கொஞ்சதூரம் போனதும் கோபுரத்தின் அடிபாகம் தென்பட்டது: கோபுர வாயில் நன்றாக விளங்கியது. ‘இதுதான் கைலாஸத்வாரம், நல்லோர்க்கே திறக்கும் திருக்கதவு. நல்லோர் சென்று மீளா நெறி இதுதான். இதுவழியாகத்தான் மாணிக்கர் புகுந்து உள்ளே எதிரொலி எழத் தமது அருள் வாக்கியாமிருதங்களை வெளியிட்டருளியது: அப்பர் ஸ்வாமிகள் நுழைந்து தமது வேதவாக்யங்களை ஸமர்ப்பித்தது: ஸுந்தரர் புகுந்து பரமபுருஷருடன் சோபனானந்தம் அனுபவித்துப்பரவசமானது. அநேகபக்தர்களை, அவரது பக்தியைத்தவிர வேறொன்றையும் மதியாது, ஐக்கியம் செய்துகொண்ட கருணாநிதியின் கோபுரவாயில் இது. என் நண்பர்களே, அன்பர்களே,

இதுதானோ தில்லை ஸ்தலம்-இத்தனைநாளுமறி
இதுதானோ தில்லை ஸ்தலம் [யேன்

என்று வியந்துகூறி

தில்லை தில்லை என்றால் பிறவி
இல்லை இல்லை என்று மறைமொழியும்

என்று அதன்சிறப்பை எடுத்து மனமுருகிப்பாடி,

‘ஸ்வாமி உண்டென்பதும் இங்கேதான்: இல்லை என்பதும் இங்கேதான். ஆனந்தத்தாண்டவமாடுவதும் இங்கேதான்; அசைவற்று வெளியாயிருப்பதும் இங்கேதான். அறியாதார் அறிவைப்பெறுவதும் இங்கேதான்: அறிந்தவர்கள் அனுபவிப்பதும் இங்கேதான். உருவமும் இங்கேதான் ஒளியும் இங்கேதான். ஸ்ருஷ்டியும் ஸம்ஹாரமும் இங்கேதான். இதுதெரியாமலா

தேங்கு நீர் சூழ்வயல் தில்லைக் கூத்தனை
பாங்கிலாத் தொண்டனேன் மறந்துய்வனோ

என்றான் எங்கள் அப்பன்’ என்று சரமாரியாகப் பொழிந்து விட்டான் நந்தன்.

**நந்தன் (மேலும்):—**

அம்பலத்திலாடுகின்றார்—பாங்கிமாரே [மாரே
ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன் பாங்கி
ஆடுகின்ற சேவடிமேல்—பாங்கிமாரே
ஆசைகொண்டு வாடுகின்றேன் பாங்கிமாரே.

**எல்லோரும் (சேர்ந்து):—**

நடராஜர் தன்னடம் நன்னடமே
நடம்புரிகின்றதும் என்னிடமே.

**நந்தன்:**

இன்பவடிவாய்ச் சபையில் பாங்கிமாரே—நட
மிட்டவர் மேலிட்டம்வைத்தேன் பாங்கிமாரே
உத்தமர் பொன்னம்பலத்தே பாங்கிமாரே—
உருவாகி ஓங்குகிறார் பாங்கிமாரே. [இன்ப

**எல்லோரும்:—**

மஹாசிவா ஸதாசிவா
ராஜாதிராஜா ஸர்வதயாபரா
சிவாசிவா ஸதாசிவா
சபைதனிலாடும் ஸாம்பசிவா.

**நந்தன்**

ஈன உலகைக் கருதேன் பாங்கிமாரே—மன்றில்
உத்தமருக்குறவானேன் பாங்கிமாரே
கற்பனை யெல்லாம் கடந்தார் பாங்கிமாரே—என்றன்
கற்பனைக் குட்படுவாரோ பாங்கிமாரே.

**எல்லோரும்:—**

அம்பலப்பாட்டே அருட்பாட்டு
அல்லாதபாட் டெல்லாம் வெறும்பாட்டு
நடராஜர்பாட்டே நறும்பாட்டு
அல்லாதபாட் டெல்லாம்வெறும்பாட்டு

**நந்தன்:—**

கண்டிலர் நான்படும்பாடு பாங்கிமாரே—மூன்று
கண்ணுடையார் என்பரைய்யோ பாங்கிமாரே.
கன்மமெல்லாங் கரைப்பார்பாங்கிமாரே—மனங்
கரையார் என்னளவிலே பாங்கிமாரே.
கள்ளமொன்று மறியேன் பாங்கிமாரே—என்
கைவிடவும் துணிவாரோ பாங்கிமாரே. [னைக்

**எல்லோரும்:—**

பதியுறுபொருளே பொருளுருபயனே
பயனுறுநிறைவே நிறைவுறுவெளியே
மதியுறுமமுதே யமுதுறுசுவையே
மறைமுடிமணியே மறைமுடிமணியே
அருளுருவெளியே வெளியுறுபொருளே
அதுவுறுமதுவே மதுவுறுசுவையே
மருளுறுதெருளே தெருளுறுமொளியே
மறைமுடிமணியே மறைமுடிமணியே

இதன் பின்னர் நந்தர் சிவபக்தியில்லாது இருக்கலாகாது என்றுகூறி இல்லாதவர்களை

வானோர் புகழ்தில்லை வனநாதர்வாழும்
ஞானசபையைப்போற்றி நமச்சிவாயவென்று
சொல்லாதவன்-கல்வி-கல்லாதவன்-வெகு பொல்
[லாதவன்

என்றுபலவாறு பழித்துக்கூறி சிவபக்திச் சிறப்பை எடுத்துப் பாராட்டிக் கொண்டு தில்லையை அணுகி வந்தார்.

---

**ஒருவரையும் தாழ்த்தப்படாது.**—நம்மைவிடஒருவன் தனம், வித்தை, அந்தஸ்து முதலியவைகளில் தாழ்ந்தவனுயினும் அதை நாம் வெளியில் காட்டவேகூடாது. அப்படிச் செய்வது நமது மனுஷ்யத்தனத்துக்கு மிகவும் குறைவு. கூடியமட்டும் நாம் ஒருவரையும் நமக்குச் சரியானவர்களாக ஒவ்வொரு விஷயத்திலும் எடுத்துக்கொண்டே பேசவேண்டும். அப்படிச் செய்வது எவ்வளவு அழகு! ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தான் என்கிற எண்ணம் இருந்துகொண்டேயிருக்கும். அவனைச் சந்தோஷிப்பித்தால் அவன் நம்மிடத்தில் எவ்வளவோ பிரீதியுள்ளவனுயிருப்பான். இந்த விஷயத்தில் நமது வாழ்நாள் முடிய நாம் ஜாக்கிரதையாயிருந்தது காலம் தள்ளவேண்டும்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### சாந்தை அல்லது பொறுமையினிலை

### 4. சிந்தனைக்காதை

நமது மனோதைரியத்தில்தானே எதுவும் நிலைத்திருக்கிறது? நமது வாழ்க்கைத் திராசில் காரணமென்னும் தடை காமமென்னும்தடையை ஸமநிலைக்குக் கொண்டுவரா இல்லாவிட்டால், இயற்கையில் மனுஷ ஸ்வபாவத்தில் விளங்கும் கீழ்மையும் ரக்த சேஷ்டைகளும் நம்மைக் கீழ் நிலையை அடையச் செய்து விடாவா? நம்மால் கடக்கமுடியாது உள்ளே தூண்டும் காமாதி ரக்த சேஷ்டைகளை அடக்கி அவற்றின் உஷ்ணத்தை குறைக்கவல்லவா நமக்கு உணர்ச்சி என்பதிருக்கிறது? நமது காம சூத்திரங்களையும், ஆசைப்போக்குகளையும், மூண்டு மூண்டு உள்பொங்கி வரும் மனச்சலனங்களையும் அடக்கி யாளத்தானே அது கொடுக்கப்பட்டிருக்கிறது? நீ சொல்லும் காமமென்பது ஒருவித கோட்பாடு என்றுதான் நான் எண்ணுவேன்" என்று அயோக்யபுஞ்சன் சொன்னான்.

"அது அப்படி இருக்கமுடியாது" என்று காமன் தடுத்தான்.

"அது ரக்தக் கொதிப்பாலாகும் பெருஞ்சேஷ்டைதான்; உள்ளத்தின் ஸம்மதியைக்கொண்டு செய்யும் காரியந்தான். சீச்சி! கெட்டுப் போகாதே! உன் வீரமெங்கு போய்விட்டது? இங்குவா! மனிதனுக இரு! கிணற்றில் விழுந்து பிராணத்தியாகம் செய்கிருயா? குருட்டு நாய்க் குட்டிகளையும் பூனைகளையுமப்படிச் செய் அப்பா! உன்னுடைய ஆத்ம நேசன் நான்! உன்னை விட்டுப் பிரியேன் என்று வாக்தானம் செய்தவன்—இப்பொழுதல்லாமல் எப்பொழுது உன்னைக் காப்பாற்றுவது? பணந்தானே பந்தியிலே—என்று கேட்டதில்லையோ? பணத்தைப் பை நிறைய சேகரி. தெரிகிறதா? இந்தச் சண்டை நடக்குமிடம் நாமும் போகலாம். இந்த சாந்தையின் கூத்தெல்லாம் எத்தனை நாள்? பணத்தைச் சேகரி பத்ரம்!—அந்த மௌர்யனுடைய ஆசை யெல்லாம், எத்தனை நாள்? எவ்வளவு தடபுடலாக அவளிடம் ஆசை கிளம்பியதோ அவ்வளவு தீவரமாகத்தான் அது கடிய முடியப் போகிறது. நீயே பார்க்கப்போகிருய். உன் பை நிறையமாத்திரம் பணத்தை எடுத்துக்கொள்.—இந்த மௌர்யருடைய குணம் எப்பொழுதும் மாறுந் தன்மையுடையது. நீ வேறு வேஷம் போட்டுக் கொள்; பொய்தாடியை மாட்டிக்கொள். பை நிறைய பணத்தை வாரிப்போட்டுக்கொள்—அம்ருதம்போலிருக்கும் உணவு கொஞ்சம் நாளில் அவனுக்கு எட்டி போல் கசக்கும் பார்;—சிறுக்கி அவள். மனம் மாறும்; தான் செய்த தவறை அறிவள்—பின் காளையரை அவள் தேடுவதை நீயே பார்க்கப் போகிருய்;—



ஜாக்ரதை! பணத்தை உன் பைநிறைய நிறப்பு, அதனுல் கிணற்றில் விழுந்து முடிப்பதைக்காட்டிலும் காரியத்தை ஸுகமாக முடிக்கலாம். உன்னுல் எவ்வளவு பணம் சேகரிக்க முடியுமோ அவ்வளவையும் சேகரி. அவளுடைய திடவைராக்கியமும் வைதிகப் பைத்தியமும் அலையும் அப்பேய் மிலேச்சன்மேல் ஆசையை ஒழிக்க தடைசெய்யாதிருக்கும் பக்ஷம், என் சூது கொண்ட யுக்தியும் மாயவழிகளும் அவளை உனக்காளாக்கும். ஆகையால் பணத்தை சேகரி. பணந்தான்! பணந்தான்! வேண்டும்! பிராணத்தியாக பித்தம் பறந்தோடட்டும்! அவளை அடையாது நீரில் அமிழ்வதைக் காட்டிலும்அவளை அடைய முயற்சித்து ஆனந்தத்தோடு உரிச்சுருக்குக்கு உகந்து இருக்கலா மல்லவா?" என்று அயோக்யன் சொன்னான்.

"ஆமாம்! நீ என்னைக் கைவிடாமலிருப்பாயா?" என்று காமன் கேட்டான். அயோக்யன் "நான் விட மாட்டேன். சீக்கிரம் போ! பணத்தைச் சேகரி! எத்துணை முறை சொன்னேன்—மறுபடியும் சொல்லுகிறேன் போ!; கைகொண்ட காரியம் என் மனத்திற்கொத்தது; உன் மனதிற்கு இன்னும் ஒத்தது. காலகர்ப்பத்தில் விளங்கும் சூழ்வினை இன்னும் எத்தனையோ வெளிக்கு வரவேண்டி இருக்கிறது. நட! போ! பணத்தைச்சேகரி! மற்றதெல்லாம்நானே தான்" என்று சொல்ல, காமன் தனக்குள்ள ஆஸ்தியை எல்லாம் விற்று விட்டு பணங் கொண்டுவரப்போனான். மனமே உன் மயக்கமும் இப்படியும் உண்டா?

ருத்ரகாமன் போனான். தனது பணக்கருவி சென்றதும் அயோக்யனுக்கு ஆலோசனை மிகுந்தது. உத்துல்லனிடம் மந்திராலோசனையிலிருக்கும் காச்யபனைக்கொண்டு அவனுக்குத் தெரியாது உத்துல்லனுக்கு கெடுதிசெய்ய வலையைப் பின்னிக்கொண்டிருந்தான். ஒவ்வொரு நூலிலும் பசைகுறை என்பதே கிடையாது. தான் செய்யும் வினை இருவரையும் —உத்துல்லனையும் காச்யபனையும்—ஒருங்கே அழிக்கும் என்று அவன் அறியாதவனல்லவா?—

தனது தருமத்தைச் செய்வதில் அவனுக்கெவ்வளவு ஆனந்தம். எவ்வளவு முயற்சி; நிஷ்காமமாக அவனைப் போலச் செய்யக்கூடியவர் யார்? பிறந்தபொழுது கால அளவைச் சற்று ஜன்மத்தில் தவறுண்டாக்கியது, இல்லாவிடில் அவனுக்கேன் அவ்வுத்ஸாகம், ஆனந்தம், திடவைராக்யம், நிச்சலனத்வம், பலனைக் கருதாது செய்யும் தருமம்—இவை முதலான அடைய முடியாத அதிசய குணங்கள் முழுக்ஷு மார்க்கத்திற்கு ஹேதுவாக இருக்கா? உண்மையில் அயோக்யன் ஒரு வேதாந்தி தான். ஆனுல் நிலைமாறி விளங்குபவன். சாந்தையை நோக அடிப்பதாலாவது, உத்புல்லன் காசியபன் இவருடைய மனத்தை முறிய அடிப்பதிலாவது அவனுக்கென்ன லாபம்? அப்படி ஒன்றுமில்லாவிட்டால் காரணமாவது உண்டா? அதுவுங் கிடையாது. தன்னை மறந்து அவன் செய்கிற செயல் என்ன விசித்திரம். இது மானுஷ பிரகிருதியின் பொருந்தாது ஆங்காங்கு காணப்படும் விசித்திரங்களில் ஒன்றல்லவா?

## லார்ட் ஹார்டிஞ் பிரபு அவர்களின் பிறந்தநாள்கோண்டாட்டம்

## HIS EXCELLENCY LORD HARDINGE'S BIRTHDAY

மாட்சிமை தங்கிய ஜார்ஜ் மன்னர் புராதன நகராகிய டெல்லிமாநகரத்தை இந்தியநாட்டின் தலைநகராக்கியது யாவருமறிந்த விஷயம். அதற்கிணங்க இராஜப்பிரதிநிதியாராகிய மிக உயர்ந்த ஹார்டிஞ்ஜ பிரபுவானவர் அரசாணையைத் தலைமேற்கொண்டு நகரப்ரவேசஞ் செய்தபோது பித்தம்பிடித்த சிலர் சண்ட்னி சௌக்கில் பிரபு அவர்கள் பவனிவருங் காலத்தில் வெடிகுண்டொன்றெறிய அதனுல் யமன் வாயில் விழுந்தவர் மீண்டு திடசவுக்கியத்தை அடையுமாறு இந்திய ஸமூஹங்கள் தேவனைக் குறித்துப் பிரார்த்தித்ததற் களவே இல்லை. அதிலும் பெருமை வாய்ந்த உத்தமகுண சீலராகிய ஹார்டிஞ்பிரபுவும் மன்னரைப்போலவே தாமும் கஷ்டமடைந்த காலத்திலும் இந்தியரிடம் ஆசையைக் குறைக்காது காட்டிவந்தார்.

எந்தகஷ்டம் வந்தாலும் குழந்தைகளிடம் தந்தைக் காதை ஒழியாது. தன்னுயிர் போல மன்னுயிர் ஆளும் அரசநிலையி லிருப்பவர்க்கும் அது பொருந்தும். டெல்லி விபத்திலிருந்து தப்பி பிரதிநிதியார் எம்பெருமானுடைய கருணைவிலாசத்தால் உயிரோடு விளங்கியதை நினைத்துப் பிரதிநிதியாரிடம் கொண்ட அனுதாபத்தைக் காட்ட இந்தியநாட்டார் பல ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்த முயற்சித்தார்கள். இதற்காக ஜனங்களிடமிருந்து அன்போடு குவிந்த பொருளுக்கு அளவேயில்லை. பலபேர்கள் இப்பொருளை பலவிதமாக விநியோகிக்கவேண்டும் என்று பேசினுர்கள்; எழுதினுர்கள்; வித்தாந்தப்படுத்தினுர்கள். இவற்றை எல்லாங்கண்ட பிரதிநிதியாரின் உத்தமத்தலைவி துன்பத்திலிருந்து வெளிமீண்ட தந்தை முன் தன் குழந்தைகளை அணைந்து முத்தமிட்டு உச்சிமுகந்து வாய்க்கினிய அமுதங்கொடுப்பதுபோல, தமக்காகச் செய்யும் ஞாபகச் சின்னம் சிறுவர்க்கே உரியதென்றுறுதிமொழி கூறினுர். பிரபுவின் பிறந்தநாளை குழந்தைகள் நாளாகக் கொண்டாடி, அச்சிறூர் அந்நாளைத் திருவிழாவாகக் கொண்டாடவேண்டுமென்றுஞ் சொன்னுர். அம்மொழியை மேற்கொண்டு, எங்கும் சென்ற ஜூன்மீ 20வ யன்று இந்தியாமுழுதும் பெருந்திருவிழாக் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு சிறுவர் வாயிலும் சிற்றுண்டி கொண்டு "நமது பிரதிநிதியாரின் பிறந்தநாள் கொண்டாட்டம்" என்கின்ற மொழிகள், ஒவ்வோர் வீட்டிலும் பொங்கல் பண்டிகையன்று "பொங்கலோ பொங்கல்" என்று கூவும் சந்தோஷமொழிகள் போல குலாவியன. கஷ்டமடைந்த பிரதிநிதியாரை துதியாத சிறுவரில்லை. அவர் கோலாஹலத்திற்கு அளவே கிடையாது.

இவ்வாறு இளம் வயதில் விளங்குபவர் இனிய சுவையோடு உண்டியுண்டு உயர்மன்னருடைய பிரதிநிதியின் பேரைச் சொல்லிக் கொண்டாடுவதைக் கேட்பதுங் காண்பதுவுமே ஹார்டிஞ்பிரபுவுக்கு ஸந்தோஷம் போலும்! தமது மக்களின் ஸுகத்தையும் ஆனந்த ஆலோலத்தையும் கருதும் அரசர்களின் குணமல்லவா அது? ஆனந்தத்துடன் சிறுவர் பாடியாடி குதித்துக் கூத்தாடி தேக்கி யிரைச்சலிட ஆனந்தப் பேரொலி ஓர் பெரும் இடிபோல அம்மயில் போன்ற ஹார்டிஞ்சி பிரபுவின் மனதிற் புகுந்து அவரை மதிப்புடைய ஆசை நடனஞ்செய்ய இடந் தரும் என்பதற்கு ஸந்தேஹங் கிடையாது.

சிறுவரும் ராஜபக்தி விளங்கி நன்னெறி வாய்ந்து விளங்கி அன்றடைந்த ஆனந்தத்தை என்றுமடைந்து பெருமை பெருவாரென்பதற் கையமில்லை. பிரபு அவர்களும் தமது கவுரவச் சுபாவத்தாலும் நல்ல குணத்தாலும் பெருமிதத்தாலும் இந்நாட்டிற்கென்றும் இடையறாத நன்மையைப் பயக்க திடமான மனமும் சௌக்யமும் பெற்று நீடூழி வாழ்ந்து இந்நாட்டின் உதயசூரியன்போன்று அஸ்தமிக்காது தேஜோமயமாகிய நன்மை என்னும் ஒளியைப் பரப்ப எவற்றிற்கு மூலகாரணத்தை எத்துகிறோம். சுபம்.

---

**பிண்ணாக்கின் உபயோகம்.**—பிண்ணாக்கின் உபயோகத்தை அறிந்து ஐரோப்பிய தேசத்தார் ஏராளமாய் இந்தியாவிலிருந்து அவற்றைச் சுலபமாய் ஏற்றிக்கொண்டு போய், அதைத் தகுந்த வழியில் உபயோகப்படுத்தி, மிகுந்த லாபமடைகிறார்கள். கடந்த ஒரு வருஷத்தில் இச்சென்னை மாகாணத்திலிருந்து மாத்திரம் சற்றுக்குறைய 52 லக்ஷம் ரூபாய்க்கு, நிலக்கடலை, எள்ளு, தேங்காய், இவைகளின் பிண்ணாக்கு ஏற்றுமதியா யிருக்கின்றது. ஸிலோன் மாத்திரம் கொட்டைமுத்து (ஆமணக்கு). பிண்ணாக்கை ரூபா $3\frac{1}{2}$ லக்ஷத்துக்கும், நிலக்கடலைப் பிண்ணாக்கை 11 லக்ஷத்துக்கும் எள்ளுப் பிண்ணாக்கை 26 லக்ஷத்துக்கும் இச்சென்னை இராஜதானியிலிருந்து ஏற்றுமதி செய்து கொண்டுபோயிருக்கின்றது. இவ்வளவும் எருவாக உபயோகிக்கப் படுகின்றன. விவசாயத்தில் ஊக்கங்கொண்டிருக்கும் ஜெர்மனியும் லக்ஷக்கணக்கான தொகைக்குப் பிண்ணாக்கைக் கொண்டுபோயிருக்கின்றது. இச்சென்னை மாகாணத்தார் அவற்றை உபயோகப்படுத்திக்கொள்ள வழிகளில்லாமற் போகவில்லை. நம் விவசாயிகள் ஏழைகளாயிருப்பதே இதற்குக் காரணம். கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்தியால்தான், விவசாயிகள் பிண்ணாக்கை விலை கொடுத்து வாங்கி வயலுக்கு எருவாக உபயோகப்படுத்திக் கொள்ள சக்தியுடையவர்களாகவேண்டும். கோவாபரேடிவ் சங்கங்கள் தீவிரமாய் அபிவிருத்தி யடையுமாறு கவர்ன்மெண்டார் அதற்குரிய அநுகூலங்களைத் தாராளமாய்ச் செய்தல் வேண்டும்.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**மைசூரில் கல்வி அபிவிருத்தி.**—மைசூர் ராஜ்ஜியத்தில் பப்ளிக் ப்ரைவேட் கல்வி ஸ்தாபனங்களின் தொகை 4,267 ஆக இருந்தது 4,478 ஆக அதிகரித்திருக்கிறது. அதில் படிக்கும் மாணவர்களின் தொகை 138,153 ஆக இருந்தது. இப்பொழுது 149,214 ஆக அதிகரித்திருக்கிறது. அத்தொகையில் ஆண்கள் 124,324 பெண்கள் 24,890. பிளேக் வியாதியினால் பல ஜில்லாக்களில் ஸ்கூல்கள் பல மாதங்கள் மூடப்பட்டதினால், பிள்ளைகளின் தொகை குறைந்தும் போயின. சமஸ்தானத்திலுள்ள மூன்று இங்கிலீஷ் காலேஜ்களிலுள்ள மாணவர்களின் தொகை 438 ஆக இருந்தது. 394 ஆக குறைந்துவிட்டது. ஸென்ட்ரல் காலேஜில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. செக்கெண்டெரி ஸ்கூல்களில் படித்த பிள்ளைகளின்தொகை 14,772 ஆக இருந்தது. இப்பொழுது 16,109 ஆக ஜாஸ்தியாயிருக்கிறது. மெட்ரிகுலேஷன் பரிட்சையில் தேர்ந்தவர்களின் எண்ணிக்கை அவ்வளவு திருப்திகரமாக இல்லை. பிரைமெரி படிப்பு விருத்தியாகி வருகிறது. மொத்தம் 1,866 பிரைமெரி ஸ்கூல்கள் இருந்தன. இப்பொழுது 1955 ஆக அதிகரித்திருக்கின்றது. அதில் படித்துவந்த மாணவர்கள் 64.956 ஆக இருந்தவர்கள் 69,492 ஆக ஜாஸ்தியா யிருக்கிறார்கள். அவர்களுள் பெண்கள் 5,189. ப்ரைவேட் பிரைமெரி ஸ்கூல்கள் 1,807 ஆகஇருந்தது 1,911 ஆக ஜாஸ்தியா யிருக்கின்றன. பெண்கல்வியும் விருத்தியாகி வருகிறது. பெண்களுக்கு என்று ஏற்பட்ட பப்ளிக் ஸ்கூல்கள் 294 ஆக இருந்தது; இப்பொழுது 306 ஆக இருக்கிறது. அவைகளில் ஒன்று இங்கிலீஷ் காலேஜ். மற்றொன்று ஓரியண்டல் காலேஜ். இரண்டு ஹைஸ்கூல்கள்; இரண்டு நார்மல் ஸ்கூல்கள்; ஒன்று தொழிற்சாலை மீதி மிடில் ஸ்கூல்களும், பிரைமெரி ஸ்கூல்களுமாம். படிக்கும் பெண்களின் மொத்தம் 24,890. சென்னையைப்போல் இங்கேயும் தகுந்த பெண்கள் உபாத்திமார்கள் கிடைக்கிறதில்லை. மகம்மதிய பிரைமெரி ஸ்கூல்கள் அதிகரித்து வருகின்றன. 19,357 பிள்ளைகள் வாசித்து வருகிறார்கள். அதில் 14,490 ஆண்பிள்ளைகள்; 4,867 பெண்கள். ஹைஸ்கூல் காலேஜ் இவைகளில் படிக்கும் மகமதியர்களின் தொகை மிகக்குறைவு. மைசூரில் பஞ்சம கல்விச்சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கன்னட லோயர் செகண்டெரி பரிட்சைக்குச் சென்ற 7 பஞ்சம பிள்ளைகளுள், 5 பேர் முதல் வகுப்பில் சேர்ந்திருக்கிறார்கள். பிரைமெரி ஸ்கூல்களின் கட்டடம் கட்டுவதற்கு ஒரு லட்சம் ரூபாய் சாங்கிஷன் செய்யப்பட்டிருக்கிறது. எலிமெண்டெரி படிப்பை கட்டாயப்படிப்பாக ஆக்கவேண்டியதற்கு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.



**மாடுகளின் விருத்தி.**—விவசாயத்திற்கு முக்கிய ஆதாரம் மாடுகள் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இவை பயிர்த்தொழிலுக்கு இன்றி யமையாத சாதகமான ஜீவன்கள். மேலும், மற்ற தேசங்களில் நீராவி, மின்சாரம், முதலிய சக்தியால் நடத்தப்படும் இயந்திரங்கள் பயிர்த்தொழிலுக்கு உபகரணங்களாயிருக்க, இந்தத் தேசத்தில் பயிர்த்தொழிலை மாடுகளின் உதவியைக்கொண்டே நடத்தி வரவேண்டியதாயிருக்கிறது. ஆகையால் நம்முடைய கால்நடைகளை அபிவிருத்தி செய்வது மிக்க அவசியமாயிருக்கிறது. நல்ல ஜாதிக் கால் நடைகளை உற்பத்தி செய்து கொள்ளும் விஷயத்திலும் நாம் அதிகமாய்க் கவனிக்க வேண்டியது. மேலும் நம்முடைய தேசத்துப் பூசாரத்தைக் கொழுக்கச் செய்யும் விஷயத்தில் எரு அவசியம். அந்த விஷயத்திற்கு நம்முடைய கால்நடைகளின் சாணம், மூத்திரம் ஆதாரமாயிருப்பதால், அக்காரணத்தைப்பற்றியும் கால்நடைகளின் க்ஷேமத்தை நாம் நன்றாய்க் கவனிக்கவேண்டும். நம்முடைய தேசத்தில் அனேகருக்கு விவசாயத் தொழிலே ஜீவனம். இத்தொழிலுக்கு ஆதாரம் கால்நடைகள். ஆகையால் நல்ல மாடுகளை உற்பத்தி செய்து கொண்டு அவைகளைச் சௌக்கிய காலத்திலும் அசௌக்கிய மடைந்தகாலத்திலும் கண்ணேக்கமாய்க் காக்கவேண்டிய விஷயத்தில் நாம் கவனிக்க வேண்டியது மிக்க அவசியம். ஆகையால், நம்முடைய கால் நடைகள் க்ஷீணதிசை யடையாமல் பாதுகாத்துக்கொள்ளும் விஷயத்தில் நாம் செய்ய வேண்டியன பலவுள.

***

**மாட்டுச் சாணம்:**—பிரான்ஸில் சாணி யெருவை வெகு ஜாக்கிரதையாகச் சேர்க்கிறார்கள். மாட்டுக் கொட்டகைக்குச் சமீபத்தில் கல்லினால் ஒரு தொட்டி கட்டி, உள் பக்கத்தில் ஸிமெண்டுபூசி, அடியில் ஒரு குழிவெட்டி, வாய்க்கால் வழியாக அதில் ஆடுமாடுகளின் மூத்திரத்தைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறார்கள். குழியை இருப்புத் தட்டியால் மூடி, அதன்மேல் தினம் விழும் சாணத்தைப்போட்டுப் பரப்பிவிடுகிறார்கள். மத்தியில் ஒரு குழாயுண்டு. அதன் வழியாக, மூத்திரத்தை சாணத்தின்மேல் அடிக்கடி தெளிப்பார்கள். ஆதலின், சாணம் குளிர்ச்சியாய் எப்போதும் ஈரமாகவே யிருக்கும். மூத்திரம் சாணத்தோடு கலந்து அதை மேம்படுத்துவதுமன்னியில் வீணாய்ப் போகாமல் உபயோகப்பட்டு அதன் எருத்தன்மையை யிழக்காது காத்துக்கொள்கிறது. இவ்வெரு, வயலுக்கு உரம் கொடுப்பதோடுங்கூட வயலின் தரையை மெதுவுமாக்குகிறது. சர்க்கரை போன்ற மண், உழ இலகுவானது. பயிரும் நன்றாயும் சுலபமாயும் செய்யலாம். இப்படிப்பட்ட சாணி யெருவைப்போட்டால் களிமண்ணும் நன்றாகப் பலன்கொடுக்கிறது. இச்சாணி யெருவில் பூண்டு முதலியவைகளின் சதது ஜாஸ்தியா யிருப்பதால் களி நிலங்களுக்கு அது உயர்ந்த எருவாகிறது. களி நிலங்கள் புழுதி பண்ணப்பட்டாலொழிய உபயோகமில்லை. அப்போதும் இந்த எரு அடிக்கடி போடப்பட்டு வாராவிட்டால் அவ்வளவு பலனில்லை. ஏனெனில் இவ்வெரு அதன் இறுகிய தன்மையைக் குறைத்து காற்றுலாடும் ஜலம் அணுக்களுக் கிடையில் செல்ல இடங்கொடுத்து நல்ல பலன்கொடுக்கும்படியான ஸ்திதிக்குக் கொண்டுவந்துவிடுகிறது. சாணத்திலுள்ள வைக்கோல் முதலியவை அழுகி மக்கவே அதன் சாரம் வெளிப்பட்டு உஷ்ணம் உண்டாகிப் பயிருக்கு நலத்தைத் தருகிறது. அது எப்படி களி நிலத்துக்கு உபயோகமோ அப்படியே இரைச்சல் மண்ணுக்கும் சாணியெரு நலம். அதில் ஜலம் சீக்கிரம் வற்றாதபடி காத்து, சீக்கிரமாக மக்கச் செய்யும் சுபாவத்தை மாற்றி நல்ல பலன் கொடுக்கச் செய்கிறது.

***

**இந்தியாவில் நெல் சாகுபடியின் குறைவு.**—சில வருஷங்களாக இந்தியாவிலே, உணவுப்பொருள்களின் சாகுபடி குறைவுபட்டு, ஏற்றுமதி செய்யப்படுவதற்குதவக்கூடிய உணவுப் பொருள்களல்லாத இதர வஸ்துக்களின் சாகுபடி அதிகரித்து வருகின்றது. இதனால் உணவுப்பொருள்களுக்கு கிராக்கி அதிகரித்து ஜனங்களை வருத்துமென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. கடந்த மூன்று வருஷங்களுக்குள், உணவுப்பொருள்களின் சாகுபடி பயப்படத்தக்கவிதமாய் குறைந்திருக்கின்றது. 1909-10-ம் வருஷத்தில் இந்தியாமுழுவதிலும் உணவுப் பொருள்கள் சாகுபடி செய்யப்பட்ட விஸ்தீரணம், 2035-லக்ஷம் ஏகர். 1911-12-ம் வருஷத்தில் 1950 லக்ஷம் ஏகரா, விஸ்தீரணத்தில் குறைவு நேரிட்டிருப்பது ஆழ்ந்த யோஜனைக்குரியது. நெற் சாகுபடி செய்யப்பட்ட விஸ்தீரணம் 780 லக்ஷம் ஏகராவிலிருந்து 760 லக்ஷமாகக் குறைந்திருப்பதாய் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இதுபோலவே, கோதுமை, கேழ்வரகு இவைகளின் சாகுபடியும் குறைந்திருக்கின்றது. உணவுப்பொருள்களின் சாகுபடி இப்படிக் குறைந்திருக்க, நிலக்கடலை, பருத்தி, தேயிலை, காப்பி, ஆமணக்கு, ஆளிவிதை முதலியவைகள் லக்ஷக்கணக்கான ஏகர் விஸ்தரித்துச் சாகுபடியா யிருக்கின்றன. பருத்தி சாகுபடி மாத்திரம், வழக்கமாய் பயிரிடப்பட்டு வந்த விஸ்தீரணத்தைவிட 15 லக்ஷம் ஏகர் அதிகரித்திருக்கின்றது. விவசாயப் பொருள்களில் எவை அந்நிய தேசங்களுக்கு ஏற்றுமதிசெய்யப்படக்கூடியனவாயிருக்கின்றனவோ அவைகள் அதிகமாய்ச் சாகுபடி செய்யப்பட்டும் உள்நாட்டிலேயே உணவுப்பொருளாய் உதவக்கூடியவைகளின் சாகுபடி குறைவுபட்டும் வருவது தேசத்தின் பொருளாதார விருத்திக்குரியதாகமாட்டாது என்று "ட்ரிப்யூன்" பத்திரிகை கூறுகிறது.

**செப்புப் பாத்திரத்தின் விசேஷம்.**—செப்புப் பாத்திரத்தில் ஜலத்தை வார்த்து வைத்தால் அதிலுள்ள விஷப் பூச்சிகளிறந்து போகுமாம். அதனால் அது சுத்தமாய் விடுமாம். விஷ ஜுரம் முதலியவற்றை யுடையவர் அந்த ஜலத்தைச் சாப்பிட்டால் அவை நீங்கிப் போகுமாம். செப்புப் பாத்திரத்தில் ஜலத்தைக் காச்சி ஸ்நானம் செய்பவர்க்குச் சர்ம வியாதி நீங்கித் தேகத்திற்கு ஆரோக்கிய முண்டாகுமாம். செப்புப் பாத்திரத்தில் வெந்நீரை விட்டுக் குடித்தால் வியாதி யுண்டாகுமாம். வயிற்றுவலி வந்தபோது செப்புப் பாத்திரத்தில் வெந்நீரை விட்டு வலியுள்ள விடத்தில் அதை பொற்றினல் அது நீங்கிப்போகும்.

***

**கூலியாட்களுக்குத் துண்டுப் பத்திரிகைகள்:**—யுனைடெட் ஸ்டேட்டில் வசிக்கும் கூலியாட்கள் பற்பல பாஷைகளில் 300 வகையாகப் பதிக்கப்பட்ட துண்டுப் பத்திரிகைகளை வாசித்து வருகின்றனர். ஒவ்வொரு வாரமும் 30 லட்சக் காப்பிகள் அச்சிடப் படுகின்றன. அவற்றை பிரசுரஞ் செய்வது பற்றி ஸோஷலிஸ்டு என்னு மிராஜாங்கக் கட்சியார் ஒவ்வொரு வருஷமும் 32லட்சம்ரூபாய் செலவு செய்கின்றனர்.

***

**இந்தியாவில் பருத்தி நூல்.**—பிரிட்டிஷ் இந்தியாவிலும் சுதேச சமஸ்தானங்களிலும் 1912-ம வருஷத்தில் ஏப்ரல் மாத முதல் ஆகஸ்டு மாதமுடிய 5 மாதங்களில் 29 கோடி பவுண்டு நிறையுள்ள பருத்திநூல் உண்டாக்கப்பட்டது. அதற்கு முந்திய வருஷத்தில் (1911-ம் வருஷத்தில்) அந்த 5மாதங்களில் 25கோடி பவுண்டு நிறையுள்ள பருத்திநூல் செய்யப்பட்டது.

***

**உதிர எரு.**—மாடு ஆடு முதலிய மிருகங்களினுடைய இரத்தத்தைச் சேகரித்து நல்ல நிலத்திலே ஒரு குழி வெட்டி அக்குழியை களி மண்ணினல் தீத்தி மெழுகி அதில் அடிப்படைக்கு மக்கின இலை தழையை யிட்டு அதன்மேல் அவ்விரத்தத்தை ஊற்றி பின்னும் அதை இலை குழையாமல் மூடிக் காயவிட்டு இடங்கிவிட்ட இலைதழை மக்கியபின் அது முழுவதையுங் கிளறி எடுத்து எலுமிச்சை, நார்த்தை, முந்திரிகை, கரும்பு முதலிய பயிர்களுக்கு இட்டுவர அப்பயிர்கள் மிகச் செழிப்பாய் வளர்ந்து அதிகப் பலனைக் கொடுக்கும். எவ்வகை மிருகங்களாகிலுஞ் சரி, அவைகளின் மாமிசம், தோல், மயிர், எலும்பு, கொழும்பு, கொம்பு நகம், குளம்பு: நரம்பு முதலியவைகளெல்லாம் பொதுவாய் பயிர்களெல்லாவற்றிற்கும் மிக்க விசேஷமான எருவேயாம். இவை அனைத்தையும் எருவாக இடுமுன் மக்கவைத்தே அதன் பின்னர் பிரயோகப் படுத்தவேண்டியது.

---

**நமது சந்தா நேயர்களுக்கு:**—சந்தா நேயர்கள் கடிதம் எழுதும்போதும் சந்தாத்தொகை அனுப்பும் போதும் தமது விலாஸத்துக்கெதிரே யிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**மானேஜர்.**

**மோடார் வண்டிகள்:**—டெட்ராயிட் என்னும் நகரத்தில் இருபது மிலியன் பவுண்டு மதிப்புள்ள மோட்டார் வண்டிகள் ஒவ்வொரு வருஷமும் செய்யப்படுகின்றனவாம்.

***

**போதனமுறையில் பயின்ற உபாத்திமார்களுக்கு அலவன்ஸ்.**—மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் பெறும் பப்ளிக் மானேஜ்மெண்டிலுள்ள ஸ்கூல்களிலிருக்கும் ட்ரெய்ண்ட் உபாத்திமார்களுக்கு 1912-ம் வருஷம் மேமாதம் 22-ந்தேதி பிறந்த 445.வது நெம்பர் (வித்யா இலாகா) கவர்ன்மெண்ட் உத்தரவில் சாங்கிஷன் செய்திருக்கிற அலவன்ஸை 1913-14வது வருஷத்திற்கும் கொடுத்து வரும்படி கவர்ண்மெண்டார் உத்தரவு அனுப்பியிருக்கிறார்கள்.

***

**அந்நியநாடுகளில் தமிழர்கள்.**—மலேயா நாடுகளில் தமிழர்கள் வரவர அதிகமாய்க் குடியேறுகிறார்களென்று தெரியவருகிறது. 1905-ம் வருஷத்தில் 35,549-பேர் அவ்விடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். அவர்களில் 19,785-பேர் தான் சுதேசத்துக்குத் திரும்பி வந்திருக்கிறார்கள். சென்ற வருஷம் 1,06,678-பேர் சென்றதில் 63,885-பேர்தான் திரும்பி வந்திருக்கிறார்கள். ஆகையால் அநேக தமிழர்கள் மலேயா நாடுகளில் சாச்வதமாய் வாசஞ்செய்து வருகிறார்களென்று தெரிகிறது.

***

**ஆட்டெரு.**—இது மிகக் காரமான எரு. ஒரு ஏகருக்கு 2,000 ஆடுகளை ஓர் இரவுக் கிடைவைக்கப் பின் அந்நிலத்துக்கு அதுபோதிய எருவாகின்றது. இது உடனே பலனைக்கொடுக்கும் தன்மை யுடையனபற்றியே, "ஆட்டெரு அந்த போகம்" என்று சொல்வதுண்டு. இதை ஜலத்திற்கரைத்து உபயோகித்தாற் பயிருக்கு மிகவும் நன்மையைக் கொடுக்கின்றது. பாத்திரம், சட்டிகளில் வளர்க்கும் புஷ்பம் முதலிய அலங்காரப் பயிர்களுக்கு ஆட்டுப் புழுக்கைகளை மேலே தூவி தண்ணீரூற்றிவர அதன் சாரம் நாளடைவிற் கீழே இறங்கி பயிர் செழிப்பாய் வளரும்.

***

**ஒரு பெரிய ஸ்நானக் கட்டடம்.**—ஆஸ்டிரிய தேசத்தின் பிரதான பட்டணமான வீயன்னவில் 578 அடி நீளமும், $15\frac{1}{4}$ அடி அகலமு முள்ள ஒரு ஸ்நானக் கட்டடம் கட்டப்பட்டிருக்கின்றது. அதில் ஒரே காலத்தில் 1500 பேர் ஸ்நானஞ் செய்யலாம். இது உலகத்திலுள்ள ஸ்நானக் கட்டடங்களுள் மிகப் பெரியதாம்.

***

**நம்முடைய சரீரத்தின் சூடு.**—நம்முடைய சரீரம் 24 மணி நேரத்தில் 2 காலன் தண்ணீரைப் பொங்கப் பொங்கக் காய்ச்சுவதற்கு எவ்வளவு சூடு வேண்டுமோ அவ்வளவு சூட்டை யுண்டுபண்ணுமாம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
14 AUG 1913
MADRAS

Supplement to the "Viveka Bodhini"

["விவேக போதினி" அனுபந்தம்]



கூர்மாவதாரம்



மத்ஸ்யாவதாரம்

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 14 AUG 1913 MADRAS.



# விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி VI } பிரமாதீச ஞு ஆடி மீ = 1913-ஞு ஆகஸ்டு மீ { பகுதி 2



## எழு அஞ்ஞான பூமிகள்

### SEVEN STEPS IN DESCENT

உள்நாட்டத்தின் விஷயத்தில் ஸாக்ஷிமயமாக திருச்யம் தோன்றாமலிருக்கும் நிலையாக நமது உண்மை நிலைக்கு அடுத்த கீழ்நிலையிலிருக்க நமது அறிவு தடித்து உலக ரூபமாக இறங்கி வரும்வழியில் எழு முக்ய நிலைகள் உண்டு; அவைகளுக்கு அஞ்ஞான பூமிகள் என்று பெயர். அவையாவன:—பிந்துஜாக்ரம், ஜாக்ரம், மஹாஜாக்ரம், ஜாக்ரத்ஸ்வப்நம், ஸ்வப்நம், ஸ்வப்நஜாக்ரம், ஸுஷுப்தி ஆகிய இவைகளே.

(1) **பிந்துஜாக்ரம்**:— அகண்டமாக மிஞ்சியிருக்கும் ஆதிநிலையில் எதிரிட்டறியும் அறிவு ரூபமாக உள்ளே எழும் ஒருவித கலக்க ரூபமான எழுச்சியே.

(2) **ஜாக்ரம்**:—இந்த ஸூக்ஷ்ம அறிவில் அறிபவன் நான் என்றும், அறிபடுபொருள் எனது என்றும் ஸூக்ஷ்மமாகவே இரட்டித்துத் தோற்றுவதே.

(3) **மஹாஜாக்ரம்**:—பலஜன்மப் பழக்கத்தால் இந்த பேதபுத்தி திடப்பட்டு விரிவது.

(4) **ஜாக்ரத்ஸ்வப்நம்**:— இப்படித் தடித்த நான் எனது என்ற விருத்தியால் மனம் விஷயங்களில் உழன்று நிற்றல் (இதுதான் ஸாதாரண ஜாக்ராதாவஸ்தை).

(5) **ஸ்வப்நம்**:—இப்படி வெளி வ்யவஹாரத்தின் இடையில் உறங்கிக் கனவில் வ்யவஹரித்தலே.

(6) **ஸ்வப்நஜாக்ரம்**:—தூக்கத்தில் கண்டவைகளை மறுபடியும் நினைப்பு மூட்டிக்கொண்டு ஜாக்ரத்தில் மனோராஜ்யம் செய்வதே.

(7) **ஸுஷுப்தி**:—பூர்வகர்ம பலனான போகங்கள் நாசமாகி, மேல் கர்மபலன்கள் வருவதற்கிடையில் எல்லாம் அஞ்ஞானத்தில் ஒடுங்க ஏற்படும் நல்ல தூக்கம்.

நமக்கு ஸாதாரணமாகக் கடைசி நான்கு பூமிகள் தான் அனுபவத்திலிருக்கின்றன. முதல் மூன்று பூமிகளும் உள்நாட்டத்தில் பழகுங்கால்தான் அனுபவத்திற்கு வரும். அவைகளெல்லாம் அதி ஸூக்ஷ்மமான நிலைகள். ஸாதாரணமாக நம்மைப்போன்றவர்களுக்கு இந்த விஷயத்தை நன்றாக உணர்த்த பகவான் கீதையில்,

நினைத்தலினால் ஒன்றையதில் நேயமுளதாகும்
சனித்திடுமந் நேயத்தால் சார்வு—மனித்தர்தமக்
காசையினால் கோபம் அடுத்திடுமே ஆசையது
தேசுறமுற்றாவிடில்நீ தேர்.

கோவத்தாற் கூடும் கெடுமோஹம், மோஹத்தால்
மேவும் நினைவின்மை நினைவின்மையினால்—தாவரிய
புத்திக்கே யுண்டாகும் புத்திகெடின் ஒருபுருடன்
அத்தருணம் முற்றுமறும் ஆங்கு.

என்று கூறிப் பின் நான்கு பூமிகளையும் அவைகளின் காரணநிலைகள் அறிந்து கீழிறங்குவதை அடக்காவிடில் மேல் ஏற்படும் நாசத்தையும் நன்கு விளக்கிக் காட்டுகிறார். மனதை ஒருவன் அடக்கி சும்மாவிருக்க முயற்சித்தால்தான் அதன் அருமை வெளிப்பட்டு நான்காம் பூமியாகிய பாழ்த்த கருமங்கள் போராடும் நிலையாகிய ஜாக்ரத் ஸ்வப்நநிலை நன்கு அனுபவத்திற்கு வரும். இதில் அடிக்கடி வந்தால் முறையே மஹாஜாக்ரத், ஜாக்ரத் என்ற நிலைகள் விளங்கக் கொஞ்சம்நேரமாவது பிந்து ஜாக்ரத் நிலையில் ஒருவாறு சாந்தம் பிறந்து ஸாக்ஷி விருத்தி ஏற்பட இடம் ஏற்படும். ஸாதாரணப் பழக்கத்தில் நான்காம் பூமியின் வீரியமே நமக்கு விளங்காது. மனதில் எண்ணம் தோற்றுவதற்கு முன்னே வெளிமுகப்பட்டு உழலும் தன்மை வாய்ந்த நமக்கு அது எப்படி எங்கு உண்டாயிற்று என்ற விசாரம் உற்றுப்பார்த்தல் ஆகிய இவைகள் ஏற்பட இடமேது? அலைபாய்ந்தோடும் மனதை இந்திரிய மூலமாகப் போகவொட்டாது தகைந்துபார்த்தால் அல்லவோ அதன் குரங்குத்தனம் வெளியாகும்! பின்னர் அல்லவோ அதை ஆட்டுங் கோல், கோல்பிடித்திருக்குங்கை, கையையுடைய குரங்காட்டி எல்லாம் ஒழுங்காக வெளியாகும்!

# விவேக போதினி

தொ. 6.] பிரமாதீசஹு : ஆடிமீ [பகுதி 2

## அவதாரங்கள்

### உபாஸனை வழி

### AVATARS-MEDITATION VIEW

உபாஸனைவழி என்பது கடவுள் உபாஸிப்பவனைவிட்டு வேறு, எப்படி இருந்தும் உபாஸிப்பவன் ஒரு வஸ்துவின் குணம் போலவும், கடவுள் குணியான வஸ்து போலவும் இருக்க ஏற்படும் ஸம்பந்தமே இவர்களுள்ளிருக்கும் நெருங்கிய ஸம்பந்தம். இதை நன்குணர்ந்து கடவுளை உபாஸித்து, அவரால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட இந்த உலகை இதற்கு ஸஹாயமாகக் கொண்டு இதற்கு அப்பாற்பட்டு விலகி கடவுள் அதீனமாக நின்று விடுவதே மோக்ஷம் என்று கூறும் வேதாந்த பாகங்களுக்கே உபாஸனவழி என்று பெயர். இதன்படி அவதார விஷயம் எவ்வாறு கருதப்படுகின்றது என்பதை இங்கு எடுத்து நன்கு விவரிப்போம்.

இந்த அவதார விஷயத்தை ஆராயப்புகும் முன் கடவுள், ஜீவன், ப்ரபஞ்சம் இவைகளுக்கு இந்த உபாஸனை வழிப்படி என்ன ஸம்பந்தம் என்பதை நன்கு உணர்ந்தால்தான் மேல் விஷயம் நன்கு விளங்கும்: கடவுள் அனந்த கல்யாண்குண பரிபூரணர். அவர் தமது கருணை மேலீட்டால் சேதனர்களாகிய ஜீவராசிகள், தம் மேல் மனத்தைச் செலவிட்டு நிலைபெற்று பரம நிலை எய்த, ப்ரகிருதியை ஆதாரமாகக்கொண்டு உலக விசித்திரத்தை ஸ்ருஸ்டித்து, ஜீவர்கள் தமது சிற்றறிவால் செய்த கர்மங்களின் பலன்களை அனுபவித்து அடிபட்டுத் தேறி தமக்கும் கடவுளுக்கும் உள்ள ஸம்பந்தம்விளங்கக் கடைத் தேறுவதற்காக வேண்டிய ஏற்பாடுகளையும் ஒழுங்குகளையுமெல்லாம் வேதங்கள் மூலமாக வெளியிட்டு, யாரார் தம்மை இவைகள் மூலமாக வந்தனுக மனப்பூர்வமாக முயற்சிக்கிறார்களோ, அவர்கள் உள்ளன்பை மாத்திரம் முக்யமாகக் கொண்டு அவரை அங்கீகரிக்கிறார். இப்படி உலகில் அடிபட்டு அதை விட்டுத் திரும்பி கடவுளிடம் நிலைபெற்றுச் சாந்தி பெற ஏற்பட்டிருக்கும் மார்க்கங்களுக்குத் தர்மம் என்று பெயர். இந்த தர்மம் ஸரிவர நடந்து வருகிறதா என்று ப்ரபஞ்சத்தில் ஒரு அணுவிடங்கூட விடாது கடவுள் ஸர்வவ்யாபகத்தால் எங்கும் பரவியிருந்து தமது ஸர்வஞ்ஞத்வத்தால் எல்லாவற்றையும் ஸாக்ஷியாகவிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார். சிற்சில ஸமயங்களில் அவர் தமது ஸர்வ சக்தியால் விஷயங்களைச் சீர்திருத்தியும் வருவார். ஆகவே ஒவ்வொரு இடத்திலும் அசித்ஸம்பந்தமாகத் தோற்றப்படும் தேஹம் ஒன்றும், அதனுள்ளிருக்கும் ஜீவன் ஒன்றும், ஜீவனுள்ளும் தேஹத்துள்ளும், மணிகள் மாலையில் ஊடுருவிப் போகும் கயிறு போலவும், தேஹத்துள் ஜீவனிருந்து ஆட்டிவைத்து ஸாக்ஷியாயிருப்பதுபோலவும், தேஹத்திற்கும் ஜீவனுக்கும் ஆத்மஸ்தானத்திலிருக்கும் கடவுளும் உண்டு. இதுதான் உபாஸனு மூலமான ஜீவேச்வர ஜகத்ஸம்பந்தம்.

இனிக் கடவுள் நிலையை நோக்குங்கால் அவர் ஜகத்ஜீவன், இவைகளை சரீரமாக உடைய சரீரி என்று வெளியாகும். தேஹத்தில்



ஜீவன் ரூபமின்றி எங்கும் பரவியிருப்பினும் மூளை, கண்டம், ஹ்ருதயம் இவைகளை முக்ய ஸ்தானமாகக் கொண்டு ஒரு ஸமயத்தில் பார்ப்பவன்போலக் கண்ணிலும் அதுபோன்ற இந்திரிய ஸ்தானங்களிலும் ஜீவன் ஒவ்வொரு குணமுடையவனாக விளங்குகிறான். இதுபோல பரம்பொருளுக்கும் ஒரு ரூபம் ஒரு ஸ்தானம் என்ற வரையறை இல்லாதிருப்பினும் அவர் வைகுண்டம் அல்லது கைலாஸம் அல்லது பிரஹ்மலோகம் என்ற ஸ்தானத்தை நிலயமாகக்கொண்டும், ஸகலரூப நிலயமாகி அவசிய ரூபங்கள் தாங்கும் தன்மையையே முக்ய குணமாகக் கொண்டும் விளங்குகிறார். ஆனால் ஜீவன் ஒரு தொழில் செய்பவனாக வெளிப்படுகையில், அவன் சிற்றறிவுடையவனாதலால், அதன் மயமாகித் தன் பொதுநிலையை மறந்துவிட்டுத் தத்தளிப்பன். பரமாத்மாவோ பேரறிவாளராதலால் எந்தரூபம் தாங்கிவரினும் தம் ரூபம் நிலை முதலியவற்றையும், தம் ரூபங்கள் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு அவைகளுக்கு எப்பொழுதும் அப்பாற்பட்டே நின்று தமது காரியங்களைநடத்துவார். இம்மாதிரி கடவுளுக்கு ரூபம் அரூபம் என்ற தந்நிலை மாறு இரண்டு நிலைகளிலிருந்துதான் அவதாரங்கள் ஏற்படுகின்றன. இக்கருத்தை பகவானே கீதையில்,

என் பிறப்பும் போரில் இலங்கும் பரந்தாபநின் [றை
தன் பிறப்பும் எத்தனையோ தாம்சென்ற—முன்பவற்
எல்லாம் அறிந்திடுவேன் ஈங்கவற்றை நீ அறியாய்
புல்லாருக் கேறனையாய் போர்ந்து.

பிறப்பிலனாய்த் தேய்தலறு பெற்றியனாய் யார்க்கும்
சிறப்புமலி ஈசனாய்ச்சீர்மை—உறப்பெறினும்
என்பகுதி தன்னை வசப்படுத்தித் தன் மாயையினால்
ஸம்பவிப்பேன் தானீ துணர்.

என்றென்று தன்மம் இளைப்படையும் இப்புவியில்
என்றென் றதன்மம் எழுச்சிபெறும்—அன்றன்று
பண்பாலே என்னைப் படைத்தருளாற் போதருவேன்
திண்பாரில் நீயதனைத் தேறு.

நல்லாரைக் காத்தற்கும் நன்மையறு தீயவரை
வல்லாய் அழித்தற்கும் வந்துதிப்பேன்—அல்லாதும்
செவ்வே அறத்தைத் திரமாக நாட்டுதற்கும்
ஒவ்வோர் உகந்தனிலும் உற்று.

என்று எடுத்துக்கூறி விஸ்தரித்திருக்கிறார். இந்த நான்கு ச்லோகங்களும்தான் உபாஸனு வழியில் அவதார விஷயத்தை உள்ளபடி ஆராய முக்யமான ஆதாரம்.

முன்னர் எடுத்துக்காட்டிய ச்லோகங்களிலிருந்து வெளியாகும் கருத்துக்களை நம் ஆராய்ச்சிக்குத் தகுந்தபடி ஒழுங்காக அமைத்துப் பார்ப்போம். ஈசனும் மனிதன்போல அநேக ரூபம் தாங்கி வருவாராயினும் பேதம் அநேகம் உண்டு. ஈசனுக்குத் தன்னிலை தன் பிறப்புக்களின் ஸ்வரூபம் எல்லாம் உள்ளது உள்ளபடி உணர்ந்திருக்குந் திறன் உண்டு: மனிதனுக்கு அது இல்லை. ஈசன் தன்னிடம் உள்ள ஜகத் காரணமான ப்ரகிருதியைத் தன் வசப்படுத்திக் கொண்டு தமது மாயாசக்தி மூலமாக உருவம் தாங்கி வருவர்: மனிதனே தான் ப்ரகிருதி வசப்பட்டு மாயைக்குட்பட்டு தன் கர்மவசமாக இழுத்துவரப்பட்டு அதன் பலனை அனுபவித்துத்தீரக் கைதிபோல வந்து தேஹத்துள் புகுத்தப்படுவன். மேலும் கடவுள் அவதாரங்கள் உலகிற்குப் பொது. ஆபத்துகள் அதர்மக்கிளர்ச்சி தர்மத்தளர்ச்சியால் வருமாயின் அப்பொழுது பொது நன்மைக்காக துஷ்டரை சிக்ஷித்து, சிஷ்டரைத் தாங்கி இருவருக்கும் பொதுவான தர்மத்தை நிலைநிறுத்துதல் என்ற மூன்று உபகாரங்களைச்செய்துதாமேஒருவிதப் பந்தமின்றித்தோன்றுவர்: மனிதனே தன்கர்ம பலனை அனுபவித்துத் தேறித் தெளியமாத்திரம் தான் வருவான். இது தான் அவதார விஷயச் சுருக்கம். இதை முடித்ததும் பகவான்:—

திவ்வியமாம்என்னரிய ஜென்மத்தைச்செய்தொழிலை
இவ்வகையா நன்குணர்வான் யாவன்காண்—அவனுடலை [ருன்
விட்டொழிந்துதன்னுடலை மீண்டும் பிறப்படையான்
திட்டமெனை வந்தடைவன் தேர்.

என்று கூறி இந்த அவதார ரஹஸ்யத்தை உணர்ந்தவர் பரம்பொருளை அடைவர் என்று வற்புறுத்துகிறார். இவ்வாறின்றி அவதாரத்தை வெறும் மானிட ஜன்மமாகக் கருதிவிட்டால் வரும் கேட்டை பகவானே,

எப்பொருட்கும் பேரான ஈசன்யான் என்னுடைய
ஒப்பிலுயர் நன்னிலையை ஓராமல்—இப்பொழுதோர்
மானிடத்தேஹத்தை வஹித்தவெனை வந்திகழ்வார்
ஊனெடுத்த ஏழையர்கள் ஊங்கு

வீணாசை வீண்கருமம் வீணறிவார் ஏழையர்கள்
பூணுநராய் மோஹம் புணர்த்துமொரு—மாணு
அரக்கரியல் ஆசுரவெந்தன்மையினை அந்தோ
தருக்கி இகழ்வாரெனையே தாம்.

என்று விஸ்தரித்துக் கூறியிருக்கிறார்.

உபாஸனை வழியில் கடவுளுக்கும் ஜீவனுக்கும் என்ன நெருங்கிய ஸம்பந்தமிருப்பினும் கடவுள் ஜீவனைவிட அநேக விஷயங்களில் வேறானவரே யாதலால் முற்கூறிய ச்லோகங்களிலிருந்து அவதார விஷயம் பின்வருமாறு வெளிவரும். உலகில் ஒவ்வொரு வஸ்துவிலும் ப்ராக்ருதி தத்வங்களாலாகிய சரீரம் ஒன்று உண்டு. இது ஸாதாரணமாக ஸத்வ ரஜஸ்தமோகுண பூதங்களாலாகிய அசுத்த சரீரம். அதில் கர்மபலனை அனுபவிக்க ஈசன் ஸந்நிதானத்தில் கர்மவாஸனைகளால் இழுத்து புகுத்தப்பட்ட சிற்றறிவுடைய ஜீவன் உண்டு. அதன் எண்ணம் தொழில் முதலியவைகளை நேரிடக் கண்டறிய கடவுள் வ்யாபகம் ஒன்று உண்டு. ஆனால் அவதாரத்திலோ தேஹம் கேவலம் சுத்த ஸத்வத்தாலாகியது. நமது தேஹங்கள்போல மலம் வியர்வை முதலிய அசுத்தங்கள் அதிகம் சொரியாது. அதற்குத் தூக்கம் ஆஹாரம் முதலியன அதிகம் வேண்டியிராது. அதில் கடவுள் விளக்கம் இருக்குமே ஒழிய, பொதுவாக கர்ம பந்தத்தில் கட்டுண்ட ஜீவனிராது. அந்த ஈசன் இச்சைப்படி உண்டாவது அந்த திவ்ய சரீரம். உலகத்தார் வியந்து, ரஹஸ்யம் உணராது அவர்கள் கர்மபலப்படித் தேறிவந்து தம்மைஅடைய, அவர் தாம் தாயின் வயிற்றிலிருந்து பிறப்பது போன்ற தோற்றத்தை உண்டாக்கிக்காட்டுவாரே ஒழிய உண்மையில் நமது தேஹம்போன்ற மலசரீரமல்ல அவர் கொண்ட சரீரம். அவஸர அவதாரங்கள் விஷயத்தில் அவர் தேஹம் திவ்யமானதுஎன்று நமக்கு வெளிப்படையாக எப்படித் தெரிகிறதோ, அதேமாதிரிதான் தீர்க்க அவதார விஷயத்திலும்; ஆனால் தோற்ற மாத்திரத்தில் இந்த எண்ணத்திற்கு விரோதமாக விருப்பதுபோலக் காணப்படும்: அவ்வளவுதான். அதைக் கண்டு மயங்கி விடாது ஒரு அவதார ரூபமாக வருபவரே திவ்ய சரீரமுடையவர், உண்மையில் எங்கும் பாவியுள்ளவர், எந்தக் கார்யமத்தியில் அவர் முனைந்து தொழிற்படினும்அவர் எல்லாவற்றிலும் ஒட்டாது அப்பாற்பட்டு ஸாக்ஷியாக விருக்கும் பரமாத்மா, என்ற திட நிச்சயத்துடன் அவதாரத்திற்கும் மூலரூபத்திற்கும் பேதமே இல்லை; தோற்றமாத்திரமே பேதம், என்று துணிந்து அவதார உருவத்தைவழிபட்டு உபாஸனைசெய்தால் மேலான நிலை தானே வரும். அவ்வாறின்றி அதுவும் ஒரு மனித ரூபந்தான்; நமக்கிருக்கும் கோப தாபப்பற்றுகள் அதற்கும் உண்டு; ஆனால் நம்மை விடக்கொஞ்சம் ஏற்றமாக விருக்கிறது, அவ்வளவு தான் என்று தாழ்ந்த அபிப்ராய மனதில் ஊறும்படி விட்டுவிட்டால், அபிவிருத்திக்கு ஏற்பட்டிருக்கும் கடவுள் கருணையைக் காலால் உதைத்துத் தள்ளிவிடத் தயங்கித் தவித்து வழியறியாது திண்டாடும் மூடர்களாகி விடுவோம்.

ஆகவே உபாஸனை வழிப்படி (1) அவதாரம் என்பது தனக்கு என்று ஒரு உருவம் இல்லாது எல்லா உருவத்திற்கும் நிலையமாகிய பரம்பொருள் தம் ஸந்நிதான விசேஷத்தால் சேஷ்



[illegible]கும் ஜீவஜகத்தில் ஒரு காரியார்த்தமாகத் [illegible]னை தனக்கு ஏற்படுத்திக்கொண்டு உண் [illegible]க்கும் தோற்றம். (2) அது மற்றைய ப்ரபஞ்ச [illegible]வராசிகளைப்போல ஸத்யமானதே: அவை [illegible]கள் தன்னிடம் நிலைத்து தனியிருப்பில்லாதிருந்தும் வேறாக இருப்பதுபோல இந்த அவதாரத் தோற்றங்களும். (3) இப்படி இருப்பினும் இத்தோற்றங்களது சுத்தஸத்வசரீரச் சிறப்பாலும், இவை ஏற்படுவதற்கும், இவை தொழில் நடத்துவதற்கும் ஈசனே நேரே காரணமாக இருப்பதாலும் இவைகள் நிகழ்ந்த காலத்தில் கடவுளே என்று வழிபடத் தக்கவைகள் (4). அவதாரம் ஏற்பட்டு காரியம் முடித்து மறைந்துவிட்டபோதிலும், அந்த உருவங்களை விக்ரஹரூபமாகச் செய்து கடவுளென ஆராதித்தால் கடவுளை நேராக ஆராதித்துக் கடைத்தேறும் திறன்வரும். (5) இவைகளை ஒருநாளும் நம்மைப்போன்ற மனிதன் என்று கருதாமலிருந்து, அவைகளின்தொழில்கள் சிற்சிலவிடங்களில் யுக்தி, தர்மம் இவைகளுக்கு முரணாகவிருக்கின்றன என்று தோற்றியபோதிலும், அவைகளிலிருந்தும் கடவுள் எப்படி தாக்கற்றிருப்பதாக வெளியிட்டிருக்கிறாரோ, அதுபோல நமக்குத் தர்மமாக ஏற்பட்ட விஷயங்களில் தாக்கற்றிருக்க முயன்றுகொண்டு ஒரு தர்மத்தையும்விட்டு விலகாமலிருக்க முயலவேண்டும். (6) அவர்களது அதர்மம்போன்ற காரியங்கள் ஏற்பட்ட ஸந்தர்ப்ப அவச்யங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து, கடவுளாக விருந்ததனால் அவர்கள் அப்படிச் செய்யவேண்டி வந்த தருணத்தில், செய்ய வேண்டியதை மாத்திரம் செய்து தீர்த்துவிட்டு, மேல் அந்த விஷயஸ்மரணை கூடவின்றி தாக்கற்றிருந்தார்: நமக்கோ தர்மமார்க்கப்படி நடந்தால் இப்படி வரவேமாட்டாது, அப்படி நமது முயற்சியின்றி வந்தால் ஒருகை பார்ப்போம், ஆயினும் அந்த ஸமயத்தில் நமது கதி என்னவாகுமோ, ஆதலால் நம்மிடம் வரும் கஷ்ட நிலைகளில் அவதாரச் செயல்களைக் கூடியவரையில் பின்பற்றுவதும், மற்ற ஸமயங்களில் அதன் சரித்திரத்தில் ஈடுபட்டு அதை வழிபடுவதுமே, ரஹஸ்யமான உபாஸனைவழி.

இந்த உபாஸனை விஷயத்தை முடிக்கும் முன்னர் உபாஸனை வழிக்கும் மேற்கூறப்போகும் ஞான அல்லது வேதாந்த வழிக்கும் இடையில் நிற்பதுபோலக் காணப்படுவதாயும், தோற்ற மாத்திரத்தில் வெகு ஒழுங்காயும், யுக்திக்குப் பொருத்தம்போன்றதாயும், கேட்பவரை ப்ரமிக்கச் செய்வதாயும் முற்றிலும் வேதாதி சாஸ்திரத்திற்கு விரோதமாயும் உள்ள தற்கால பிரமஞானவழி (Theosophical view) என்று பட்டப்பெயர் பெற்று உலாவிவரும் அவதார ரஹஸ்யத்தை வெளிப்படையாகக் கூறாதிருக்க முடியாது. இந்தவழி தற்காலப் படிப்புப் படித்தவர்கள் மனதை மயக்கி நமது சாஸ்திர வழிகள் எல்லாம் தவறு, இதுவே நேரானவழி என்ற குதர்க்க உணர்ச்சியை உண்டாக்கிவிட்டபடியால் அதை இங்கு எடுத்துக்கூறி அது முற்றிலும் நமது சாஸ்திரங்களுக்கு முரணானது என்று காட்டுவது அவசியமே.

தற்கால பிரமஞான வழிப்படி (1) ஈச்வரனும் பிரஹ்மமும் (பரம்பொருளும்) வேறு வஸ்துக்கள். இரண்டும் ஸ்வரூபத்தில் ஒன்றாயினும் ஈசனுக்கு சக்தியோடுகூடி தனியான இருப்பு பரம்பொருளை விட்டு உண்டு. (2) இந்த தனியிருப்புடைய ஈசன் தம் நிலையைவிட்டு இறங்கி ஸாதாரண ஜீவன் நிலைக்கு வந்து அதனுடன் கலந்து அதன் மூலமாக மானிட உலகில் பொதுநன்மைக்காகச் சிறந்தகாரியங்களைச்

செய்வார். இந்த இறக்கங்களுக்குத்தான் அவதாரங்கள் என்று பெயர். இது தோற்ற மாத்திரத்தில் வெகு ஒழுங்காக விருக்கிறது. ஆனால் புராணவழி, கடவுளது ஸர்வாந்தர்யாமித்வத்திற்கு எவ்வளவு முரணுகவிருக்கிறதோ அது போலவேதான் இந்தத் தற்கால பிரஹ்மஞான வழியும். முதலில் இறக்கம் ஏற்றம் என்று ஸர்வாந்தர்யாமி விஷயமாகக் கூறுவதே யுக்திக்குப் பொருத்தமுடையதல்ல. கீதையில் பகவானது ஸர்வாந்தர்யாமித்வத்தைப்பற்றிக் கூறுமிடங்களை வாசித்துப்பார்த்தால் இந்த விஷயத்தின் உண்மை விளங்கும். இந்த அவதார விஷய ஆராய்ச்சிக்கு ஆதாரமான, பிசாசு, க்ஷுத்ர தேவதைகள் ஆவேசமாக ஒருவனைப் பிடித்தாட்டுவது போல, அவதாரமும் ஒருவித ஜீவனுடன் ஈசச்சேர்க்கையால் ஏற்படும் தோற்றம் என்று விளக்கும் கொள்கையும், அதற்காதாரமாகிய ஈசப்ரஹ்மபேதவாதமும் நமது சாஸ்திர விஷயங்களுக்குப் பொருந்தினவைகளேயல்ல. விசிஷ்டாத்வைத வேதாந்தப்படி ஈசனே ப்ரஹ்மம் இரண்டிற்கும் பேதமே இல்லை. அத்வைதப்படியோ ஈசன் என்றவஸ்து அவித்தையில் கட்டுப்பட்டிருக்கும் ஜீவர்களுக்கு பிரஹ்மம் தோற்றும் ஒருவிதமே ஒழிய ஈசனுக்குப் பிரஹ்மத்தைவிடத் தனியான இருப்பே இல்லை. பிரஹ்மம் ஸகுணம் நிர்க்குணம் என்று இருவகைப் படினும், இது அஞ்ஞானத்துள்ளிருக்கும் ஒருவிதத் தோற்றமே ஒழிய உண்மையிலிருப்பது பிரஹ்மமொன்றே. இப்படி நமது வேதாந்தங்கள் பரம்பொருளை இரண்டுவிதமாக இரண்டுபடுத்திக் கூறாதிருக்க, தற்கால பிரமஞானிகளுக்கு மாத்திரம் இந்தக் குதர்க்கக் கொள்கை எப்படித்தான் கிடைத்ததோ தெரியவில்லை. அவர்கள் மூலக்கொள்கை இப்படி அசாஸ்திரீயமாகிவிட அதிலிருந்து உண்டாக்கப்படும் அவதாரவிஷயக் கொள்கைக்கும் ஆதாரமில்லாமற் போகிறது.

இந்தக் கொள்கையை ஆதியில் ஏற்படுத்தி விவரித்து தற்கால பிரமஞானிகளுக்குக் கொடுத்தவர் கற்றுத் தேர்ந்த நம்மவருள் ஒருவரே. இவர் இப்படி பிரஹ்ம ஈச்வரர்களை உணரும் விதம் தான் ஸ்ரீமத்சங்கர பகவத்பாதாசார்யரது கொள்கை, மற்றைய பரதகண்ட வேதாந்திகள் எல்லாம் அவரை உள்ளபடி உணரவில்லை என்றுபீடிகைபோட்டுக்கொண்டு தமதுகொள்கையை விஸ்தரிக்கப் புகுந்துவிட்டார். 'பகவத்கீதையில் கிருஷ்ணன் தன்னை ஈசனுகவும் பிரஹ்மம் ஒன்று வேறாக உள்ளது என்பதாகவும் குறிப்பாகக் காட்டியும்பேசுகிறார். இந்த ஈசன் ப்ராகிருதப்ரளயத்தில் பரமாத்மாவை ஆதாரமாகக்கொண்டு நிலைபெற்றிருந்து ஸ்திதிகாலத்தில் அநேக சக்திகளுக்கு இருப்பிடமாக வெளிப்படுகிறார். கீதை முழுவதுமே இந்த பிரஹ்மத்தை நிலயமா உடைய ஈசன் விளக்கமே. கிருஷ்ணன் தன்னைப்பற்றிக் கூறுங்கால் பரப்ரஹ்மம் என்ற பதத்தை கீதையில் உபயோகப்படுத்துவதில்லை. தன்னை ப்ரத்யகாத்மா க்ஷேத்ரஞ்ஞன் என்ற நிலையில் வைத்துப் பேசுவார். இப்படிப்பேசுவதாலேயேஈசனும் பிரஹ்மமும் வேறு வஸ்துக்களே என்பது விளங்குமென்று' மூலக்கொள்கை ஸ்தாபிக்கப்படுகிறது.

கீதையில் உள்ள உண்மை இப்படியல்ல. பொதுவாக நான், ஈசன், வாஸுதேவன், ஆத்மா, பகவான் பரமாத்மா என்ற பதங்களை பேதாபேதமின்றி தப்விஷயமாக உபயோகப்படுத்துகிறார்பகவான். ஆனால் 12-ம் அத்யாயத்தில் ஸகுண நிர்குண த்யானத்திற்கு முள்ள வேற்றுமையைப் பிரித்தும் கூறுகிறார். இதனால் வஸ்து இரண்டென்று எப்படி ஏற்



படும்? ஒரே வஸ்துவை ஆராதிக்க ஏற்பட்ட இரண்டுவழிகள் என்றுதான் கூறவேண்டி வரும். 14-ம் அத்யாயத்தில் 27-ம் ச்லோகத்தில் நானே பிரஹ்மத்தின் நிலயம் என்று கூறிவிடுகிறார் பகவான். ப்ரஹ்மம் ஈசனது நிலயம் என்று கூறும் தற்கால பிரஹ்ம ஞானக் கொள்கைக்கு இதுமாறாக அமைந்து கிடக்கிறதே! ஆகலால் ஈசனும்பிரஹ்மமும் இரண்டு வஸ்துக்கள் என்று கூற நமது சாஸ்திரங்கள் வேதங்கள் பாஷ்யகாரர்கள் ஒருவரும் இடங்கொடுக்கவே இல்லை. ப்ரபஞ்ச வைசித்ரியத்தை பலஎன்று அங்கீகரிக்க மனம் வாரா நமதுசாஸ்திரங்களா பரம்பொருள் இரண்டுபட்டிருக்கின்றது என்றகொள்கைக்கு இடங்கொடுக்கும். இந்த முதற் கொள்கை இப்படி இருப்பதால், இதை ஆதாரமாகக்கொண்டுள்ள அவதாரக் கொள்கையும் சாஸ்திரீயமானதல்ல. ஆனால் புராணக் கொள்கைகள் போல ஸாதாரண ஜனங்களது மனதை ஒருவாறு கொஞ்சகாலம் திருப்தி செய்யத்தக்க கற்பனைக் கொள்கை என்று அங்கீகரித்து ஒதுக்கி விடலாமே ஒழிய, இங்கு கூறிய உபாஸனு வழி இனி விஸ்தரிக்கப் போகும் ஞான வழி இவைகளைப் போன்ற யுக்திக்குப் பொருத்தமான சாஸ்திரீயவழி என்றுஇதைஒருநாளும் அங்கீகரிக்க முடியாது.

---

உடைதரிக்கும் முறை—நாம் ஒருநாளும் ஒரு டம்பாசாரி போட்டுக்கொண்டிருக்கும் உடுப்பைப் பார்த்துமலைத்து அவனைப்போலப் போட்டுக்கொள்ள முயலக் கூடாது; நம்மைச் சுற்றிலுமிருக்கிற பிரசித்தபெற்ற பெரியோர்கள் உடுப்பதுபோல நாமும் உடுக்க முயலவேண்டும். ஒருநாளும் ஜனங்கள் நம்மைச் சுட்டிக்காட்டும்படியான தனித்த உடுப்புகள் தரிக்கவே கூடாது. நாம் ஒருதடவை வேஷ்டி கட்டிக்கொண்ட பிறகு அன்றுமுடிய அது சரியாயிருக்கும்படியாகவும் அது அவிழ்ந்து போமேயென்கிற கவலையின்றியும் இருக்க வேண்டும். பிடிப்பான உடுப்புகள் தரித்துக் கொள்ளவே கூடாது.

---

காலஞ்சென்ற மிஸ்டர் ஜஸ்டிஸ்

# மகாதேவ் கோவிந்தரனடே

## THE LATE Mr. JUSTICE MAHADEV GOVINDA RANADE C.I.E.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்ருமை நன்று"

பிறப்பும் வளர்ப்பும்.—பம்பாய் ஹைகோர்ட்டு நியாயாதிபதியாய் இருந்து இந்தியா முழுமைக்கும் ஓர் சிறந்த ஆபரணம்போன்று விளங்கிய ஜஸ்டிஸ்-மகாதேவ் கோவிந்த ரனடேயவர்களைப்பற்றி யறியாதவர் சொற்பரே யாவர். இவர் தந்தை கோலாப்பூர் சமஸ்தானத்துத் திவான். தம்முடைய குலஞ்செய்த நற்றவப் பயனால், 1842-ம் வருஷத்தில் பம்பாயில் நல்லோரையில் இம்மகான் ஜனித்தார். இவரைப் பெற்றவரும் பன்னாட் டயின்ற பெரும் புண்ணியத்தால் விலையற்ற கோடி ஸூர்யப் பிரகாசம் பொருந்திய மாணிக்கமலை யொன்றைப் பெற்றாரே யாவர்.

"தம் பொருளென்ப தம் மக்கள் அவர் பொருள்
தம்தம் வினையான் வரும்"

என்னும் பொய்யாமொழி இங்ஙனம் மெய்யாகி நின்றது அறியத்தக்கதே. இத்தகைய புத்திரப் பேறடைந்த நற்றாய் தந்தையர் 'வறியன் கண்ட மாநிதி' யென்னத் தம் சிறு குழவியை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து தம் சுதேச பாஷையை யவருக்குச் சரிவர கற்பித்து வந்ததுமன்றி, இராஜ பாஷையாகிய ஆங்கிலத்தையும் ஓதியுணரச் செய்தனர்.

கல்வி.—மகாதேவ் கோவிந்த ரனடேயவர்களது இயற்கைக் குணங்கள், தாம் பள்ளிக்கூடத்தில் பயின்று வருங்காலத்திலேயே 'குன்றின்மேலிட்ட விளக்கு' போன்று பிரகாசிக்கலாயின.

'முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்'

என்னும் முதுமொழியைப் பொதுமொழியாக்காது, தமக்கே திருவள்ளுவர் கூறினதாகக் கொண்டு, உறுதியோடும் [illegible]

தோடும் இவர் கற்று வந்தார். அவர் கற்குங் காலத்தில் 'பசியுடையவன் பதம் உண்பது' போல ஆர்வத்தோடு ஆசிரியர் கூறுவனவற்றை இடைவிடாது தம் மனத்தில் மன்னவைப்பார். இவ்விதம் கற்றுவந்ததால் இவரது அபூர்வ சக்தியும், திறமையும் வளர்பிறைபோல் பிரகாசிக்கத் தொடங்கியது. அப்பொழுதே ஆரம்பித்த அந்த அழியா நற்பிரகாசம் தினேதினே மேற்கிளம்பித் தனது எல்லையின் உச்சத்துச் சென்று, பூவுலகெங்கும் புகழொளி பரப்பிப் பூமிதேவிக்குத் திலகம் என்னும் இந்தியா முழுதும் தனது எண்ணிலாக் கிரணங்களை விரித்து ஆடியது. இவர் படித்த ஆண்டோ சொற்பம்; எடுத்த பரீசோ நூறு; அடுத்த கீர்த்தியோ கோடியே. இஃதன்றோ பாக்கியத்தினும் ஓர் பெரும் பாக்கியம்!

உத்யோகம்.—அவர் பெரும் பட்டப்பரீக்ஷையிற்றேறிப் பாடசாலையை யகன்றது தான் தாமதம், இவரது மேன்மையான குண விசேஷங்களைப் பற்றி யறிந்திருந்த வித்யாதிகாரிகள் இவருக்குத் தமது இலாகாவில் உயர் பதவி யொன்றைத் தந்தனர். இக் கல்வியிலாகாவில் மிஸ்டர் ரனடேயவர்கள் 20-வருஷகாலம் உழைத்துக் காண்பித்த அபூத காரியங்கள் எழுதி முடியாதன. பின்னர், இவர் ரேவினியூ, ஜூடிஷியல் அதிகாரங்கள் பல செலுத்தி, ஸப் ஜட்ஜ் பதவிக்கு வந்து, கனம் ஜஸ்டிஸ் திலாங் இறந்தபின் அவருடைய ஸ்தானத்தில் பம்பாய் ஹைகோர்ட்டு ஜட்ஜாக நியமிக்கப் பட்டார்.

> "இறைகாக்கும் வையக மெல்லா மவனை
> முறை காக்கு முட்டாச் செயின்"

என்னும் மெய்ம்மொழியை மிஸ்டர் ரனடேயவர்கள் ஐயம் சிறிதேனும் இன்றி, நல்லிசைப் புலவரிடத்து உணர்ந்தவராகலின் அணுத்துணையேனும் நடுநிலைமையிற் சிறுகாது, தயாநிதிக் கடவுளுக்கும் மனசாட்சிக்கும் பயந்து, குற்றஞ் செய்தாரை பொறுத்து, அவர்களாற் றுன்பெய்தித் தம்மை வந்தடைந்தவர்களின் றுயரைக் களைந்து, நீதிபதிகட்கெல்லாம் அதிபதியாக விளங்கி வந்தனர். பம்பாய் இராஜதானியின் மக்களில் நீதிபதி ஸ்தானத்தில் சீருஞ்சிறப்பும் பொருந்தியவர் மகாதேவ் கோவிந்த ரனடே யவர்களே. இவருக்கு ஒப்பு இகத்திலும் இல்லை, பரத்திலுமில்லை; முன்னும் இல்லை, பின்னும் இல்லை.

தேசவுழைப்பு.—அப்பெரும்பதவியை யடைந்து, நீதிசெலுத்தும் அதிபர்கள் செய்யும் காரியங்கள்யாவும்தெய்வத்தன்மைபொருந்தியவை யென்பதை நமது ரனடே யவர்கள் செவ்வனே உற்றுணர்ந்திருந்தாராகலின், தாம்வீற்றிருந்து நீதி கூறும் ஸ்தானத்தை "நியாயத்திருக் கோயில்" என்பர். இவரது சாமர்த்தியத்தைக் கருதியே C.I.E., பட்டமும் அளிக்கப்பட்டது. ப்ரிடிஷ் கவர்மெண்டாருக்கு நாம் எல்லோரும் ஐக்கியப்பட்டு, மதுவையுண்டு களிக்கும் தேனீயைப் போன்று, அவர்கள் புரியும் நன்மைகளை யநுபவிக்கும் நாம் அவர்களுக்கு எவ்வளவு நன்றி யறிவுள்ளவர்களாயிருத்தல் வேண்டும் என்பதைப் பற்றி எவரும் இனிது அறியச் சொன்னயம் பொருணயம் விளங்க, வாக்கு தாட்டிகம் நிரம்பப்பெற்ற ரனடேயவர்கள் தெளிவாய்ப் பலசமயங்களில் பிரசங்கிப்பதுண்டு. இராஜாங்க விஷயம், தேசவளம், மதாசாரம், ஜனசாரம், கல்வியபிவிர்த்தி, செல்வநூல், முதலிய சீர்திருத்த விஷயங்களின் ஆழ்ந்த துறைகளில் அவர் இறங்கி அவ்வத்துறையில் அவருக்கு மிஞ்சியவர் இந்தியாவில் யாருமில்லை என்னும்படித் தமது குசாக்கிர மதிநுட்பத்தால் அபூர்வ சக்திகாட்டி விளங்கினர்.

சென்னையில் சுதேச பாஷாபிவிருத்தி.—இராஜாங்க சீர்திருத்த விஷயமாகப் பெரும் காங்கிரெஸ்கள் கூடினும் இவரன்றி யோரணுவும் அசையாது. ஜனசார விஷயத்தில் இவர் உழைத்த விதத்தை என்னென்று உரைப்பது? தற்காலப் போலிப் புலவர் போன்றிராது சுதேச பாஷாபிவிர்த்தி விஷயமாக இவர் எடுத்துக்கொண்ட முயற்சியை ஆயிர நாக்களுடைய ஆதிசேஷனும் சொல்லத் திறன் அல்லன். சென்னையில் சுதேச பாஷாபி விர்த்தியைப் பற்றித் தர்க்கமுண்டான காலத்தில் கல்வியிலாகாவில் 20 வருஷகாலம் தாம் உழைத்து வந்ததிலிருந்து தமது அநுபவத்தைப் பசுமரத்தாணிபோல் எவர் மனத்திலும் பதிய எடுத்துச் சொன்னர். அவரது அநுபவத்தைக் கொண்டு இச் சென்னையில் எடுத்த முயற்சி தற்சமயம் பயன்தரா தொழிந்தது எவரும் விசனிக்கத் தக்கதேயாம். இம் முயற்சி வீணே யெனினும் நமது ரனடே யவர்கள், இவ்வித அவக்கேடுகளுக்கெல்லாம் பயந்து



அதைரியங் கொள்ளலாகாது என்று ஒவ்வொரு நாளும் வற்புறுத்திக் கூறுவர்.

பிரஜைகள் அவரை விச்வாஸித்தல்.—இச் சத்புருஷர் தமது தேக அசௌக்யார்த்தம் 6-மாதம் உத்தரவு வாங்கிக்கொண்டு தமதில்லத் தமர்ந்து இருக்க,சித்திரமெழுத வுதவும் சுவராகிய இவர் வுடம்பைப் பாதுகாப்பதற்காகப் பல பிரபல வைத்யர்கள் மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டனர். அக்காலம் பரவிவந்த சமாசாரப் பத்திரிகைகள் யாவும், கனம் ஜஸ்டிஸ் மஹாதேவ் கோவிந்த ரனடே யவர்களது தேக சௌக்கியத்தைப்பற்றிக் கோரும் லக்ஷக்கணக்கான பிரஜைகள் மனம் திருப்தியடைய, எழுதிக்கொண்டே வரும். ஒருநாள் பேப்பரில் அவரது தேக சௌக்கியத்தைப்பற்றி வெளிவராவிடில், "ஏன் இன்று வரவில்லை?" என்று பல கேள்விகள் அவர்கள் கேட்பார்கள். இவ்விதமாக நடந்து காட்டியது அவர்பால் உள்ள அந்தரங்க பக்தியும் அன்பும் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று விளக்குகிறதன்றே?

தேகவியோகம்.—மிஸ்டர் ரனடே தேகாப்பியாஸத்தில் மிக்க பிரீதி வைத்திருந்தார். அவர் தேக வியோகமான நாளாகிய 1901-ம் வருஷம் ஜனவரிமீ 16௳ புதன்கிழமை யன்று சாயந்திரம் கூட ஓர் மைல் உலாவப்போய்த் திரும்பிவந்தார். அன்றிரவு வழக்கமேபோல் உண்டுடுத்திப் பூசிமுடித்துப் படுக்கையறைக்குப் போகுஞ் சமயத்தில், சுவாஸம் விடத்தடுமாறி மாரடைத்து மண்ணுலகை நீத்துப்பொன்னுலகை யடைந்தனர் நம் ஜஸ்டிஸ் மகாதேவ் கோவிந்த ரனடேயவர்கள்.

முடிவு.—கனம் ஜஸ்டிஸ் மகாதேவ் கோவிந்தரனடே C.I.E. அவர்கள் 57 ஆண்டு நிரம்பப்பெற்ற தெய்வாம்சம் பொருந்திய ஓர் சிறந்த மனுஷ்ய சிரேஷ்டர்.

"முயற்சி திருவினையாக்கும்" என்ற பெரியார் மொழியைக் கடைப்பிடித்ததால் அவர் சகலமுங் கூடிவரப் பெற்றவர்;

> "இருவேறு உலகத்து இயற்கை அதுவே
> திருவேறு தெள்ளியராதலும் வேறு"

என்பது அவர்பால் நிதரிசனம். 'கல்வி, கேள்வி, அறிவுடைமை, குற்றங்கடிதல், பெரியாரைத் துணைக்கோடல், சிற்றினஞ் சேராமை, தெரிந்து வினைசெயல், நடுவுநிலைமை, ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினை யுடைமை, இடுக்கணழியாமை, மனத்திட்பம், வினைத்திட்பம்' முதலிய நல்லியல்கள்யாவும் ஒருங்கே அமையப் பெற்றவர்; புத்தி, வித்தை, அடக்கம், ஊக்கம், உழைப்பு, சாந்தம், சாத்வீகம், பக்தி, சிரத்தை, பரோபகாரம், தன்னயம் பாராட்டாமை, முதலிய பற்பல சிறந்த குணங்களும் ஒன்று கூடி விளங்கிய சத்குணப் பொக்கிஷமான சாத்விக புருஷர்; ஆசாரச் சீர்திருத்த விஷயத்திலும், தேசபாஷை விர்த்திசெய்வதிலும் ஆழ்ந்தகருத்து அமையப் பெற்றவர்; மேனாட்டுப் பெண்டுகளைப் போன்று நம் தேயத்துப் பெண்டுகளும் கல்விகற்றுச் சீருற விரும்புபவர். தமது பிரசங்கங்கள் தோறும் அவர் நடந்து காட்டியவிதம் புகழத்தக்கதே. 'நல்ல பேச்சுக்காரர்' என்ற பட்டமும் அவர் அளிக்கப் பெற்றார்; இராஜவிசுவாசம் நிரம்பப் பெற்றார். அவரிடத்து ஜனங்களுக்குப் பூரண நம்பிக்கையும் அன்பும் உண்டு. அவர் தமது மனதை அநுதினமும் ஜகதீசன் பாதாரவிந்தத்திற் படியவைத்துத் தாம் தப்பித் தவறிச் செய்யும் பாபங்களைப்போக்க மனமொழி மெய்களால் தொண்டுசெய்து இறைஞ்சுவார். சென்னையில் சுதேச பாஷாபிவிர்த்தியைப் பற்றி இவர் எடுத்துக் கொண்ட ஊக்கத்திற்காக நாம் எவரும் எக்காலத்தும் இவ்வரிய மகானுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

S. V. விவேகாநந்தர்

---

பெரிய கப்பல் காட்சி.—சமீபத்தில் ஜியார்ஜ் சக்கரவர்த்தியும் மேரி சக்கரவர்த்தினியும் லிவர்ப்பூலுக்கு விஜயஞ் செய்தார்கள். 100-வியாபாரக் கப்பல்கள் 10-மைல் விஸ்தீரணத்துக்குள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காட்சியைக் கண்ணுற்றார்கள். ஒரே காலத்தில் இவ்வளவு வியாபாரக் கப்பல்கள் இதற்கு முன் ஒரு இடத்தில் கூட்டப்பட்டதே இல்லை. கடலோரத்தில் கட்டப்பட்டிருந்த கிளாட்ஸ்டன்டாக் என்ற கப்பல் செப்பனிடுந் துறையைச் சக்கரவர்த்தி திறந்துவைத்தார். அவ்வளவு பெரிய டாக் உலகில் வேறெங்கு மில்லை. 10 லட்சம் ஜனங்கள் கடலோரத்தில் வேடிக்கை பார்க்கக் கூடியிருந்தார்கள்.

# கடமை முரண்

## CONFLICT OF DUTIES

பல கடமைகள் முரண் படுமிடத்து அவைகளில் முக்கியமான கடமை எது என்று தெரிந்து அதையே கருத்தில் வைத்து அதைச் செய்து முடிப்பதே அறிந்தோர் செயல். ஆனால் முக்கிய கடமை எது, முக்கியமில்லாத கடமை எது என்று தெளிவது எப்படி? மேலே காட்டிய உதாரணங்களில் ஒவ்வொரு கடமையும் முக்கியமானதாகவே தோற்றுகிறது. அப்படி ஒன்றைப்போல் பிரதானமான பல கடமைகளில் முக்கியமானது இது என்று ஒன்றைத் தேர்ந்து குறிப்பது எப்படி? இதற்கு ஒரு சாதனம் உண்டு. பொதுவாய் கடமையென்று ஏற்படுத்தி யிருப்பதின் கருத்து என்ன என்று ஆராய்ந்து தெரிந்து கொண்டால் அந்தக் கருத்திற்கு எது அதிக அனுகுணமானதாய் இருக்கிறதோ அதுவே முக்கிய கடமை என்று துணியலாம்.

'கடமை' என்பதன் பொதுக்கருத்து ஜன சமூகத்தின் பொது நன்மையே. அவ்விதம் ஜனங்களின் நன்மைக்கு உரித்தான செயல்களெல்லாம் கடமைகள் என்று விதிக்கப்பட்டிருக்கின்றன. வெகு நீண்ட காலத்திய அனுபவத்தில் சில செயல்கள் பொது நன்மைக்கு உரித்தானவை என்றும் மற்றுஞ் சில செயல்கள் பொது நன்மைக்குக் கெடுதலானவை என்றும் அறியப்பட்டிருக்கின்றது. முன் சொல்லியவைகளைச் செய்தலும்பின்சொல்லியவைகளைச் செய்யாது விலக்கலும் பொது ஜன அபிவிர்த்திக்கு இன்றியமையாதன. ஆதலால் விலக்கற்பாலன வென்றும் செயப்பாலன என்றும் எல்லாக் காரியங்களையும் வகுத்து, செய்யவேண்டியவைகளைச் செய்தலும் விலக்க வேண்டியவைகளை விலக்குதலும் கடமைகள் என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உதாரணமாய் கொலை, களவு, பொய் பேசுதல் இவை பொது நன்மைக்கு ஏற்றனவல்ல என்பதும் ஈகை, உண்மையுடைமை, செய் நன்றி மறவாமை இவைகள் பொது நன்மைக்கு ஏற்றவை என்பதும் நன்றாய்த் தெரிகிறதல்லவா? முற்கூறியவைகளை ஒழிப்பதும் பிற்கூறியவைகளை அனுஷ்டிப்பதும் கடமை யென்று ஏற்பட்டுள்ளது. ஆகவே எந்தக் கடமைக்கும் நோக்கம் பொதுஜன நலத்தின் அபிவிர்த்தியே. அவ்வபிவிர்த்திக்கு அனுகுணமானவைகளைச் செய்தலும் அதற்கு விரோதமானவைகளைச் செய்யா தொழிதலும் கடமையாம்.

கடமைகள் முரண்படு மிடத்து அம்முரண்படு கடமைகளுள் உயர்ந்த கடமையையே முடித்துத் தீரவேண்டும். உயர்ந்த கடமை எது என்றால் கடமைகளின் முக்கிய நோக்கத்தை விசேஷமாய் அபிவிர்த்தி செய்யக் கூடியது எதுவோ அதுகடமையின் கருத்து பொது ஜன நன்மையாதலின் அப்பொது நலத்திற்குப் பெரிதும் அனுகுணமானதே பிரதானமான கடமையாகிறது. ஆகவே கடமை முரண் ஏற்படுமிடத்து எந்தக் கடமையைச் செய்து முடிப்பது பொது நன்மைக்கு விசேஷ சாதகம்என்று தெரிந்து அதையே செய்துமுடிக்க வேண்டும்.

கடமைகள் எல்லாவற்றிற்கும் முக்கிய நோக்கம் "பொது நன்மையே" என்று கொள்வது தகுமோ வெனில் தகும். மேலே கூறியபடி பொதுஜன நலத்திற்கும் விரோதமானவை இன்னின்ன காரியங்கள் என்றும் அதற்குச் சாதகமானவை இன்னின்ன காரியங்கள் என்றும் நீடித்த அனுபவத்தில் தெரிந்துள்ளவைகளையே இருகூறாக வகுத்துச் செய்ய வேண்டியவை இவை என்றும் தவிர்க்க வேண்டியவை இவை என்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் எல்லாருக்கும் நன்மையை விளைத்துத் தீமையை விலக்க வேண்டியதாதலின் ஆகவே அந்நன்மையைப் பாதுகாத்தலே பெரிய கடமையாகிறது. அக்கடமைக்கு விரோதம் இல்லாமல் மற்றக்கடமைகளை முடிக்கவேண்டியது. இதை உத்தேசித்தே நமது தொன்னூல்களிலும் ஒருகுடும்பத்தின் க்ஷேமத்திற்காக அதில் ஒருவனுக்குக் கெடுதி செய்வதும், ஒரு தெருவாரின் க்ஷேமத்திற்காக ஒரு வீட்டாரைக் கெடுப்பதும் ஒரு ஊராரின் க்ஷேமத்திற்காக ஒரு தெருவாரைக்கெடுப்பதும் தப்பிதமல்லவென்று விதிக்கப்பட்டிருக்கிறது. மனிதர்கள் காரியங்களை ஒழுங்கு செய்வதற்காகக் கடமைஏற்பட்டிருக்கிறதே யல்லது கடமையைச் செய்து முடிப்பதற்காக மனிதன் உண்டாக்கப்படவில்லை என்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளக்கூடியதல்லவா? ஆதலின் கடமை



முரண்படுமிடத்து அதில் ஏதோஒன்றிரண்டை மீறும்படி நேர்ந்தாலும் ஜனநன்மைக்கு இடையூறு இல்லாமல் பாதுகாத்துக்கொண்டுவிட்டால் அக்கடமைகளை மீறினது குற்றமாகாது.

மேலேபொதுவாய்ச்சொல்லப்பட்டிருக்கிறதை விளக்க ஒரு உதாரணம் எடுத்துக்கொள்வோம். ஸூரிச் (Zurich) என்னும் நகரத்தில் ஒரு நாடகசாலையில் ஒரு இரவு ஒருநாடகம் நடந்துகொண்டிருக்கும்போது ஒருபுறம் தீப்பிடித்தது. அதை அந்நாடக மானேஜர் மட்டும் பார்த்தார். பார்த்ததும் அவர் அரங்கில்வந்து நின்று தமது நாடகபாத்திரங்களில் ஒருவர் வெகு அசௌக்கியமாய் இருப்பதாயும் அதனால் அன்று நாடகம் அத்தோடு நிறுத்தப்பட்டதென்றும் சபையோர்களுக்குத் தெரியப்படுத்தினர். இதைக்கேட்டதும் அந்நாடகம் பார்க்கவந்தவர்கள் ஒவ்வொருவராய் வெளியே போய்விட்டார்கள். தீப்பிடித்திருக்கும் சங்கதியைச் சொல்லியிருப்பாரானால் ஜனங்கள் 'நான் முன்' 'நான் முன்' என்று ஒருவர்மேல் ஒருவராய் விழுந்து ஓடி அனேகருக்குப் பலவிதமான தீங்கு நேர்ந்திருக்கும். இந்தச் சமயத்தில் அந்த மானேஜர் பொய் பேசியதால் ஜனங்களுக்கு ஒருவித கெடுதியும் நேரிடாமலிருந்தது. அவ்விதம் கெடுதி வாராமல் பாதுகாப்பதற்காக அவர் பொய்பேசியது குற்றம் என்று யாராவது சொல்வார்களா? இதுபோலவே ஒவ்வொரு சமயத்திலும் யோசித்துப்பார்த்து ஜனநன்மைக்கு ஏற்றகாரியத்தையே செய்து முடிக்கவேண்டும். ஆனால் சில சமயங்களில் இந்த சாதனமும் பயன்படாமலிருக்கக்கூடும். இருவித கடமைகளில் பொதுநன்மைக்கு ஏற்றது இதுதான் என்று சந்தேகமின்றிச் சொல்லக் கூடாமல் இரண்டும் ஒரே விதமாய் இருக்கலாம். அந்தச் சமயங்களில் ஏதாவது ஒன்றைச் செய்து முடிப்பதால் மற்றதைக் கைவிட்டது தவறாகாது.

இதுவரை விசாரித்து வந்ததில் ஏற்படுகின்றதென்னவென்றால்—மனிதர்கள் ஒழுக்கங்களைச் சீர்படுத்த கடமைகள் பல விதிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சமயங்களில் இக்கடமைகளிற் சில ஒன்றற்கொன்று மாறுபட்டு இவ்விதம் செய்கிறது என்று துணிய முடியாமல் மனிதரை பிரமிக்கச் செய்யும். அப்படி மாறுபடும் காலத்து ஜனநன்மைக்கு ஒருவித கெடுதியுமின்றி இருப்பது எது வென்று அறிந்து அதைச் செய்யவேண்டும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் ஜனநன்மைக்கு விரோதமானதாகவே இருந்தால் அதிகமாய் விரோதமில்லாமலிருப்பது எதுவோ அதைச் செய்து முடித்தல் வேண்டும். எவ்வளவு ஆராய்ந்த போதிலும் இந்தக் கடமைதான் ஜன நன்மைக்கு முக்கியமானதுஎன்று தெளிய முடியாமலிருக்குமாயின் ஏதாவது ஒரு கடமையைக் கடைப்பிடித்துச் செய்து முடிக்கலாம்.

ஜி. ஏ. சுந்தரம் அய்யர், பி. ஏ., பி. எல்.

---

**சங்கத்திற்குத் தக்கபடி பேசு.**—நீ எந்தச் சங்கத்தில் போய் உட்காருகிறாயோ அதற்குத் தக்கபடி பேசவேண்டும்; ஒரு வித்வானிடத்தில் பேசுவது போல வீட்டுப் பெண்களுடனும் நீ பேசுவாயா? சங்கத்தில் யாராவது சிரித்தால் உன்னைப்பார்த்துச் சிரிப்பதாக எண்ணாதே. ஒரு சங்கத்தில் பலவிதப் படிப்புள்ளவர்களும் வந்து சேருவார்கள்; சிறிதும் படிக்காதவர்களும் இருப்பார்கள். சங்கத்தில் யாராவது சிரித்தால் படியாதவர்கள் தங்களை யுத்தேசித்தே சிரிப்பதாக எண்ணுவார்கள். ஏதாவது பொது நிந்தையாய்ச் சொல்லப்பட்டாலும் தங்களை யுத்தேசித்தே சொல்லப்படுவதாய் எண்ணி உடனே முகம் சுளிப்பார்கள். பேச்சு நடக்க நடக்க இவர்கள் ஆக்கிரகம் பொங்கிக்கொண்டே வந்து கடைசியாய்த் தங்கள் கோபத்தை வெளியிட்டுக் காட்டிவிடுவார்கள். இதைப் பற்றியன்றோ 'பேசப்போனாயோ சாகப்போனாயோ' என்னும் பழமொழி வழங்குகின்றது. இப்படி ஒருவன் நிசமாகவே செய்துவிடுவானே யானால் அவனது அசட்டுத் தனத்தையும் புத்தியீனத்தையும் தனக்குத்தானே வெளியிட்டுக்கொள்வதுடன் தன்னிடத்தில் அந்நியர் ஏதாவது கொஞ்சம் மரியாதை வைத்திருப்பார்களே யாகில் அதையும் இழந்து விடுகிறான். நிசமாகவே சங்கத்தில் யாராவது ஒரு மனிதனை உத்தேசித்துப் பேசிச் சிரிப்பானேயானால் யாரை உத்தேசித்து நகைக்கிறானோ அவன் வித்வானாயும் தெரிந்தவனாயும் இருக்கும் பட்சத்தில் அவைகளொன்றையும் லக்ஷியம் பண்ணமாட்டான்; என்னவோ பயித்தியக்காரர் சொல்லிக்கொண்டு போகிறார்களென்றிருந்து விடுவான்; புத்தியீனனோ அதற்குப் பதிலாய் தன்னைச்சுட்டி ஒருவனும் பேசாவிடினும், தன்னைப்பற்றியே பேசுவதாய் எண்ணுவான்; முகத்தை முதலில் சுளித்துக்கொள்ளுவான்; பிறகு நிசமாகவே கோபிப்பான். அப்பேர்ப்பட்டவனது நேசம் ஆகவே ஆகாது. அவன் பேசும்பொழுதெல்லாம் வேறொன்றும் அவனுக்குத் தெரியாதாகையால் தன் பெண்சாதி பிள்ளைகள், மாடு கன்று, நிலம் பலம் இவைகளைக்குறித்தே திருப்பித் திருப்பிப்பேசுவான்.

# சீனதேசத்திய இஸ்லாம் மதம்

## MUHAMMADANISM IN CHINA

திபெத்து தேசத்தில் சீன தேசத்து நாகரிகம் பரவினது முதல் அதாவது கி.பி. 622-வது வருஷமுதல் அந்நாடு அயல் தேசங்களுக்குப் பெரும் பயத்தை விளைவித்தது. எட்டாவது நூற்றாண்டின் முடிவில் திபெத்து சீனாவின்மீது படையெடுத்துச் சென்றபோது சீனர்கள் அரேபியர்களின் உதவியைக் கோரினார்கள். அப்போது அரேபியர்கள் ஒரு பெரிய அரேபிய சைனியத்தை அனுப்பி சீனர்களுக்கு உதவி செய்யும்படி ஏற்பாடு செய்தார்கள். இதனால் திபெத்தின் பலம் நாளாவட்டத்தில் குறைந்து அச் சனங்களை முறியடித்து விட்டது. சீனாவிற்கு அனுப்பிய அரேபிய சைனியம் சீனாவிலேயேதங்கி சீன ஸ்திரீகளை மணந்து வாழ்ந்து வந்தார்கள். ஒன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்திலும் மற்றொரு அரேபிப்படை சீனாவின் உதவிக்குச் சென்றது. அதுவும் தன் நாட்டிற்குப் போகாமல் பழையசைனியத்தைப் போலவே சீன ஸ்திரீகளை மணந்து சீனாவிலேயே தங்கிவிட்டது. இதுவுந்தவிர அநேக அரேபிய வியாபாரிகளும் சீனாவில் குடியேறியிருந்தார்கள். அச்சமயத்தில் டெய்ஸீங் என்ற சக்கரவர்த்தி ஒருநாள் படுத்து நித்திரை செய்யும்போது கறுத்த முகமும், வழுக்கைத் தலையும், அகண்ட வாயும், கோரப்பல்லுமுடைய ஒருவன் தன் எதிரில் வந்து நின்று தன்னை அதட்டியதாகவும் அப்படி அதட்டினவனை தலைப்பாகை தரித்த ஒரு புருஷர் அடித்துத் துரத்தியதாகவும் கனவு கண்டாராம். கனவில் தலைப்பாகை தரித்துவந்த புருஷர் மகம்மதுவேயென்று எண்ணி அவர் விஷயத்தில் நம்பிக்கை வைத்து உடனே மெக்காவுக்குத் தூதனுப்பி 800 மகம்மதியர்களை சீனாவிற்குக் கொண்டு வரும்படிச் செய்து அவர்களுக்கு வீடு, நிலம் முதலியதுங் கொடுத்து அவர்கள் தொழுவதற்குப்பள்ளிவாசல்களுங்கட்டிக்கொடுத்தாராம். அவர்களுக்குள் ஏதாவது வழக்குகள் நேரிட்டால் அவர்களுக்குள்ளாகவே நியாயந் தெரிந்தவர்களை நியாயாதிபதிகளாக நியமித்து அவர்களால் விசாரிக்கச் செய்துவந்தார்களாம். பிறகு பதின்மூன்றாம் நூற்றாண்டில் மங்கோலிய அரசனாகிய ஜெங்கிஸ்கான் சீனாவை கைவசப்படுத்தி ஆண்டுவந்தபோதும் அவனுடைய மகன் காலத்திலும் மகம்மதியர்களுக்கு யாதொரு சுதந்தரமுங் கொடுக்காமல் அவர்களை அதிக தொந்தரவு செய்துவந்தார்கள். ஆனால் ஜெங்கிஸ்கானுடைய பேரனாகிய குப்லேகான் அரசாண்டகாலத்தில் மகம்மதியர்களுக்குப் பலவித அனுகூலங்களைச் செய்து அவர்களை சீனாவில் தழைக்கச் செய்தான். 1260-வது 1368-வது வருஷம் வரையில் மகம்மதியர்கள் சீனாவில் மேன்மேலுங் குடியேறினார்கள். 1645-வது வருஷத்திலும் 1670-வது வருஷத்திலும் மகம்மதியர்கள் பெருங்கலகஞ் செய்து கடைசியில் அடக்கப் பட்டார்கள். அப்போது நடந்த கலகத்தால் ஆயிரக்கணக்கான மகம்மதியர்கள் கொல்லப்பட்டார்கள். 1751-வது வருஷத்தில் சீன சக்கரவர்த்தியாயிருந்த யுங்சங் என்பவர் பசுக்களையும் எருதுகளையும் ஒருவருங் கொல்லக்கூடாதென்று ஒரு மசோதா ஏற்படுத்தியதால் மகம்மதியர்கள் இராஜாங்கத்தாரை எதிர்த்துச் சண்டை செய்தார்கள். பிறகு சமாதானஞ் செய்யப்பட்டனர். 1785-வது வருஷத்திலும் 1863-வது வருஷத்திலும் பெருங் கலகங்கள் உண்டாக்கினார்கள். மகம்மதியர்கள் சீனாவில் அடிக்கடி கலகங்கள் செய்து வந்ததால் தங்களுக்கு சீனாவிலிருந்த சுதந்தரங்களை யெல்லாம் நாளாவட்டத்தில் இழந்து விட்டார்கள். சீனாவிலுள்ள மகம்மதியர்கள் பயிரிடுந் தொழிலில் சாமர்த்தியம் பெற்றிராவிடினும் வியாபாரத்தில் மிகவும் கைதேர்ந்தவர்கள். சீனர்களைக் காட்டிலும் மகம்மதியர்கள் அதிக தேகக்கட்டும், வலிவும் படைத்தவர்கள். யுத்தத்தில் வேலைசெய்ய அவர்களுக்கு அதிக ஆசையுண்டு. சீனர்களை விட தாங்கள் மேலானவர்கள் என்று எண்ணி அவர்களுடன் வாசஞ்செய்யாமல் தனிமையாயிருந்து காலங்கழித்து வருகிறார்கள். சட்டப்படி மயிரைப் பின்னல் போட்டு வைத்திருக்க வேண்டியிருந்தபோதிலும் அவர்கள் சடையைத் தலைப்பாகைக்குள் மறைத்து வைத்திருப்பார்கள். சீன ஸ்திரீகளை தாங்கள் மணந்துகொண்டாலும் தங்கள் பெண்களை சீனர்களுக்குக் கொடுக்கமாட்டார்கள். மகம்மதியர்



திருவண்ணாமலை சுவாமிகள்—பால்ய பருவம்



கள் இராஜாங்க பாடசாலைகளில் கல்வி கற்கலாம். ஆனால் மதபோதனைகளுக்காகத் தாங்களே பாடசாலைகள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமாம். மகம்மதிய பெண்களுக்காக தங்களுக்குள் பிரத்தியேக பாடசாலைகள் ஏற்படுத்தி ஸ்திரீகளால் கற்பிக்கப்பட்டு வருகின்றன. சீனா தேச முழுமையிலும் ஒரு கோடியே இருபது லட்ச மகம்மதியர்களும், தீபேத்தில் ஒரு லட்ச மகம்மதியர்களும் இருக்கிறார்களென்று கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது.

வீ. சுப்பிரமணிய அய்யர், பீ. ஏ.

**உன்னையே முதன்முதல் திருத்துக்கோள்.**—மற்றவர்களை நாம் திருத்தெடுப்பது எவ்வளவு முக்கியமோ அதிலும் முக்கியம் நம்மையே நாம் திருத்தெடுப்பது. ஒவ்வொருவனும் நமக்கிருக்கும் நியாயமான யோக்கியதை என்ன என்பதைத் தனக்குத் தானாகவே நன்றாக ஆராய்ந்தறிந்துகொள்ளவேண்டும். பல பேர் இதைச் செய்யாமல் தங்களைப்பற்றி எப்பொழுதும் மேலான அபிப்பிராயங்கொள்ளுகின்றார்கள். மேலான அபிப்பிராயங் கொள்ளுதல்தான் பிசகு. கீழான அபிப்பிராயம் கொள்ளுவது அவ்வளவு தோஷத்துடன் சேர்ந்ததன்று. இவ்வண்ணம் நம்மையே நாம் சீர்தூக்கி நியாயமாய் விலை மதித்துக்கொண்டு விடுவோமேயானால் நாம் இவ்வுலகத்தில் வசிக்கும் அந்தஸ்தை வெகு கௌரவமாக வகிப்போம். இவ்வாறு செய்வதிலும் நம்மைப்பற்றிச் சிறுமைப்படுத்திக் கொள்ளும்படி நம்மை வெகு தாழ்ச்சியாக விலை மதித்துக் கொள்ளக்கூடாது. நமக்கு எந்தெந்த விஷயமாய் எவ்விதமான யோக்கியதை யிருக்கின்றதோ அந்தந்த விஷயமாக அதற்குத் தக்கபடி நாம் நம்மைக் கருதவேண்டும். இம்மாதிரி நாம் செய்வதால் நமது சக்திக்கு அதிகமாக நாம் எழும்பி முடவன் கொம்புத்தேனுக்கு முயன்றதுபோல் எல்லாராலும் பரிகாசம்பண்ணப்படாமல் நமது சக்திக்குத் தக்கவாறு காரியங்களைச் செய்துவருவோம். நம்மைவிட மற்றவர்கள் எவ்விதத்தில் எவ்வளவு அதிகம் குறைவு என்பதையும் நமக்குள்ளேயே நாம் யோசித்துப் பார்த்துக் கொள்ளலாம். அதற்குக் காரணம் ஏதாவது இருந்தாலும் அதையும் யோசித்துக்கொள்ளலாம். இவைகள் எல்லாம் நமது மனதுக்கு எப்பொழுதும் திருப்தியைக்கொடுக்கும். நம்மைவிட அதிக புத்திசாலியாயிருப்பவர்கள் பரம்பரையாக வித்வான்கள் வம்சத்தில் உதித்தவர்களாக விருக்கலாம். அவர்களைப்போல நாமும் வித்வான்களாக வேண்டின் சில தலைமுறைகள் போகவேண்டுமல்லவா? இவ்விதமாய் நம்மை நாமே திருத்தெடுத்துக்கொண்டு ஈச்வரபக்தியுடன் நடப்போமேயானால் நாம் ஒருவிதமான குறைவுமின்றி இவ்வுலகத்தில் வாழ்வோம்.

# திருவண்ணாமலை

# சுவாமிகள் சரிதம்

## ABOUT THE SWAMIGAL AT TIRUVANNAMALAI

நேரிசை வெண்பா

வானோர் உயர்பதமும் மாநிலத்தார் வாழ்வதுவும்
தானே யிவைவரினுஞ் சான்வேண்டேன்—தேனூரும்
செய்யவிரு பாக்ஷிகுகைத் தெய்வமணி யாருவந்து
மெய்யருளை யெற்கீயு மேல்.

இம்மஹரிஷியவர்களைப்பற்றி ஞானியர் பலரும் தத்தம் நிலைக்கேற்ப அபிப்பிராய முறுவதால் உண்மையை விளக்குவான் கருதி வரையலுற்றேன்.

சரிதம் வருமாறு:—

விதிவிண்டுகாணா விமலன் திருக்கோயிற் கொண்ட தலங்க ளோராயிரத் தெட்டினுட், பல்வளஞ் செறிந்த பாண்டிநாட்டில் திருவாலவாய்க்குத் தென்பாலுள்ளதும், "திருநாவலூரார்" என்னும் சுந்தரமூர்த்தி நாயனாரால் "ஊனாயுயிர்புகலா யகலிடமாய் முகில் பொழியும்" எனப் பதிகமாலை சூட்டப்பெற்றதும், பாண்டியனுக்குற்ற, பிரம்மஹத்தி தீர்த்ததும், துணைமாலையம்மை வலபாகத்தமர்ந்து அருள் பெற்றதுமான "திருச்சுழியல்" என்னுந் திவ்ய க்ஷேத்திரத்தில் பிராமண குலதிலகரும் கல்வி, கேள்வி, பொறை, முதலிய பொருந்தியுள்ளவரும், தொழின்முறையாக வக்கீலுத்தியோகம் பெற்றவருமான சுந்தரமையர் என்பார் கற்புக்கணிகலமான அழகம்மாள் என்னுந் தருமபத்னியால் மூன்று ஆண்மகவையும், ஓர் பெண்மகவையும் ஈன்றனர்.

சுந்தரம் அழகு என்னும் பாஷாந்தரங்களாலான பேதச்சொற்கள். இடையிலுள்ள ஒரே பொருளைப்போல ஆண் மகவு மூன்றினுள் இடையிற்றோன்றிய * "ரமணன்" என்னும் மஹாத்மாவின் சரிதமே நாம் எடுத்துக் கொண்டது. தந்தைமுத லிருமைந்தரையும்

* வெங்கடரமணன் என்றும் பாடம்.

கல்வி பயிற்றுவான் கருதி மதுரையிலுள்ள தம் அநுசர்பால் ஒப்புவித்தனர். அவர்கள் பள்ளியிற் பயின்று வருவாராயினர்.

சுவாமிகள் மெட்ரிகுலேஷன் வகுப்பிற் படித்தபோது வயது பதினாறு. இவர் சென்ற பிரமாதி வருஷம் மார்கழி மாதம் புனர்பூச நக்ஷத்திரத்திற் பிறந்தவர்.

இவர் மெட்ரிகுலேஷன் வகுப்பில் பயின்று வருகையில், தமக்கு அறிவுதோன்றியது முதல் உடன்றோன்றிக் கொண்டே யிருந்த அருணாசல தியானபலனால் சிந்தனையானது உலக முகத்தினின்றும் அந்தர்முகமாகத் திரும்பியது. இக்கால் தம்மாக மொருவாறு எரியத் தலைப்பட்டது. தேகத்தின் அனித்யத்வமும், ஈசனின் நித்யத்வமும், ஆகிய நித்யாநித்ய விவேகம் தோன்றி சத்தினிபாத முதித்து, அறுபத்துமூவர் முதலிய அன்பரில் தன்னையும் ஒருவனாக்க வேண்டுமென்று "மீனாக்ஷி சுந்தரர்" திருக்கோயிலிற் சென்று இடையறா அன்பினால் நாத்தழும்பேற உள்ளங்குழைய உரோமஞ் சிலிர்ப்ப, அன்புநீர் ஆறாய்ப்பெருக உருகுவாராயினர்.

இங்ஙனம் நிகழ ஓர் வைகல் சுவாமிகள் ஏதோ ஒரு புத்தகம் படித்துவரும்போது சமாதிநிஷ்டரா யிருந்ததை யிவர் முற்பிறந்தார் கண்ணுற்று, "இந்நிஷ்டையுள்ள நினக்கு உலகப்பற்றுதல்வேண்டாமன்றோ?" எனவாளாமொழிய சுவாமிகள் அவ்வாக்கியத்தினையே உறுதியாய்க்கொண்டு, தன்வய மிருந்த சிறு பொருளை உதவியாகக்கொண்டு "நான் என்றந்தை தானைத் தேடிச் செல்கிறேன்" "நீவிர் தேடுதல் ஒழிக" என ஓர் துண்டு கடிதம் வரைந்து ஆங்கோரிடத்து வைத்து, திருவண்ணாமலைக்குப் பிரயாணமாயினர்.

தான் இதற்குமுன் தனிப்பிரயாணஞ் செய்தவ ரல்லர். டிக்கட் பெறுங்கால் திண்டிவனம் என்று டிக்கட் பெற்றனர். [இவர் புறப்படுங் காலத்திற்குமுன் திருவண்ணாமலைக்குப் புகைவண்டி ஏற்படவில்லை. உலகப் படங்களை கவனித்தபோது திருவண்ணாமலை திண்டிவனம் இரண்டும் சமீபமா யிருத்தல் கண்டு திண்டிவனமிழிந்து திருவண்ணாமலைக்குச் செல்லலாமெனக்கருதி டிக்கட் பெற்றனர். திருவண்ணாமலைக்குப் புதிதாய் ரயில் ஏற்பட்டது சுவாமிகட்குத் தெரியாது.] வண்டியேறிய நம் சுவாமிகள் விழுப்புரம் இழிந்து, பசி மிகுதியால் "வெங்குவையர்" ஹோட்டலிலுண்டு திருவண்ணாமலைக்குப் புகைவண்டிமார்க்க முண்டெனத் தெரிந்து கையிற் சிறுபொருளிருத்தலால் மாம்பழப்பட்டென்னும் ஸ்டேஷன் வரையிற் டிக்கட் பெற்று அவணிழிந்து, கால்நடையாய் திரு அறையணி நல்லூர் அடைந்தனர். அவ்வூர் கற்பாறையின்மீதுள்ள அதிதுல்லிய நாதேசுவரர், சௌந்தரிய கனகாம்பிகையை தரிசனஞ் செய்து, அங்கு திருஞான சம்பந்தரால் பிரதிஷ்டித்துள்ள அருணாசல இலிங்கத்தின் சமீபமாக தியானத்திலிருக்க, சுழிமுனையில் பெருஞ்சோதி தோன்ற ஈசன் தோன்றியதாய்க் கருதி இலிங்கத்தினிடம் சென்று நோக்க இலிங்கமே கண்டனர்.

பிறகு, "பொன்மாரி பெய்யுமூர் பூம்பருத்தியாடையாம்" எனவும் "திருக்கோவலூருக்கு வருமளவுங் கொண்டோடிவா" எனவும் நம் மூதாட்டியால் பாடல் பெற்றதும், அந்தகனைக் காய்ந்த செஞ்சடைக் கடவுள் அமர்ந்ததுமான கோவல் வீரட்டம் சென்று வீரட்டேஸ்வரர் பெரிய நாயகியைத் தரிசித்து அங்கு கிடைத்த அமுதுண்டு அன்றிரவு தங்கி மறுநாள் அவ்வூரிலுள்ள முத்துகிருஷ்ண பாகவதர் இல்லிற் சிறிது பழையவமுதுண்டிருக்கையில் இறைவன்பாலுள்ள அன்பு மேலீட்டால் ஆநந்தக்கண்ணீர் பெருகுவதைக் கண்ட பாகவதர் யாது காரணமெனக் கேட்க வேறு காரணம் மொழிந்தனர். திருவண்ணாமலைக்குச் செல்ல ரயில்சார்ஜ் இல்லாததால், விலையேறப்பெற்ற காதணியை பாகவதரிடம் வைத்து சிறிது பொருள்பெற்று புகைவண்டி மார்க்கமாய்த் திருவண்ணாமலை வந்தனர்.

வண்டி விட்டிழிந்து கிரிதரிசனங் கண்டு சினகரம்புகுந்து,

"அண்டத் தலைவனை அருமறை யாதியை
பிண்டப் பொருளை பிறப்பிலி யானை
மாலயன் தேடும் வத்துவை ஞான
பேரொளிச் சுடரைப் பெருங்குணக் குன்றை,"

இலிங்கவுருவிற்கண்டு, "நின் ஆணைப்படி வந்தனன்" எனவும் தம்மேனி எரிவு குளிர்ந்தது. சுவாமிகள் வெளிப்போந்து, யக்யோபவீத



உத்தரீயாதிகளை யொழித்து, ஆயிரக்கால் மண்டபத்துள்ள பாதாள லிங்கரின் பாங்கர் வதிவதாயினர். இங்கு சில துன்மார்க்கர், மஹரிஷிகளின் நிட்டையைக் கெடுக்குமாறு கல்மாரி வருஷித்தனர். ஞான பாதையையடைந்த இம்மஹானுக் கிப்பாதைகள் யாதுஞ் செய்தில.

சின்னாள் செல்ல அங்கிருந்து சிவகங்கைக்குச் சமீபத்துள்ள இலுப்பைமரத்தடியிலும், வாழைத் தோட்டத்திலும், சுப்பிரமணியர் கோயிலிலும் ஆறுமாதம் தங்கிப் பிறகு, வேட்டவலம் ரோட்டிலுள்ள குரு முகூர்த்தத்தில் இரண்டு வருட மிருந்தார். இங்கே சுவாமிகளின் அன்னை சிறியதந்தை முதலானவர் வந்து பார்த்துப் போயினர். அவணின்றும் சுவாமிகள் தற்கால மிருந்துள்ள விரூபாக்ஷி குகையையடைந்தார்கள்.

இவரைத் தரிசிக்கப் பலவிடங்களினின்றும் பல்லாயிரக் கணக்கான ஜனத்திரள் வருகின்றன. சீமையிலும் ஐரோப்பியரும் சிறுபான்மை வந்து தரிசித்து ஆனந்தமடைகின்றனர். இவ்வாநந்தம் அநுபவித்தார்க்கன்றி ஏனையோர்க்குப் புலப்படாது; சொல்வதற்கும் எழுதுவதற்கும் இயலாது. ஞானியர் பலரும் இம்மஹானை அவதார புருடரென்றே கூறுகின்றனர்.

மஹான்கள் அவதரிப்பது உலகினர்க்காகவே தான். அவர்கள் நிலைகண்டறிந்து அதற்கிணங்க ஒழுகுவது நமது கடமை. உலகத்தாலவர்களுக்கியாது மிலதெனினும் தந்நிலைக்குப் பிறரும் வரவேண்டு மென்பதே அவர்கள் அணிபு. "சேரவாரீர் செகத்தீரே" எனக் கூறியுள்ளாரு மிக்கருத்துட்கொண்டன்றோ? இத்தகைய மஹான்களை அடிக்கடி தரிசித்து நல்வழி நின்று அழியாப்பதம் அடைவோமாக.

K. V. ராமச்சந்திரன்

சுவாமிகள்மொழியும் உபதேசமறைகளை "போதினி" மூலமாய் வெளியிடுவோம்

**கௌரவம்.**—எப்பொழுது பார்க்கினும் சிரித்து விளையாடி அட்டஹாசம் பண்ணிக்கொண்டிருப்பதைவிட முகத்தில் கொஞ்சம் பெருமை வைப்பது நலம். ஆனால் சிரிப்பு முதலியவைகள் சிறிதுமில்லாமல் எப்பொழுதும் கடுகடு என்றிருக்கவுங்கூடாது; முகத்தை எப்பொழுதும் வலிய இழுத்துக்கொண்டிருத்தலும் ஆகாது.

# உபநிஷத் ரத்தினமாலை

## THE SUMMARY OF THE MINOR UPANISHADS

### 42. ச்வேதாச்வதரோப நிஷத் (14)

இந்த உபநிஷத் விஷயம் தபோபலம் ஈச்வர கிருபை இவைகளை முன்னிட்டுக்கொண்டு விளங்கிய ச்வேதச்வதரர் என்ற ஸந்யாஸிச் சிரேஷ்டரால் வெளியிடப்பட்டு மற்ற ருஷிகளால் அங்கீகரிக்கப்பட்டவை.

அத்யாயம்-1:—ப்ரஹ்மசாரிகள் 'ப்ரஹ்மம் ஆதி காரணமா? நாம் வெளிவந்ததெப்படி? எதில் நிலைபெற்றிருக்கிறோம்? எங்கு மறைவோம்? ஸுகதுக்காதிகளில் ஈடுபட்டிருப்பது எதற்குக் கட்டுப்பட்டு? காலம், ஸ்வபாவம், கர்ம பலம், பூதங்கள் அல்லது புருஷன் (ஜீவன்) காரணம் அல்லது எல்லாம் தற்செயலாக நடப்பதா? இவைகள் சேர்க்கையே காரணம் என்று கூறவும் இடமில்லை, சேர்ப்பவன் வேண்டியிருப்பதால். ஜீவன்தான் காரணம் என்று கூறவும் இடமில்லை, அது ஸ்வயேச்சையாயும், சக்திமானாயும் உள்ளதல்ல, கர்மபலன்களால் கட்டுண்டிருக்கிறதே?' என்று ருஷிகளை நோக்கிக் கேட்டனர்.

தாரணைத்யானாதிகளால் முக்குணங்களுள் மறைந்து கிடக்கும் ஈசன் சக்தியை உணர்ந்தவர்களாதலால் பரம்பொருள்தான், காலம், ஜீவன், முதலிய எல்லாக் காரணங்களையும் தூண்டி நடத்துவது. எல்லாம் அடங்கிய இவரை சக்கரரூபியாகவும், ஆறாகவும் எண்ணி த்யானம் செய்கிறோம். இந்தச் சக்கரத்தில் ஜீவன், ஈச்வரன் இதைச் சுற்றும் பரம்பொருளைவிட்டு வேறு என்ற எண்ணம் மாறாதிருக்கிறவரையில், சுழன்று வருந்தும். ஈசன் கருணை ஏற்பட்டால் அமரனாவன். இந்த பரப்ரஹ்மம்தான் சிறந்ததாகக் கூறப்படுவது. இவருள் ஈசன், ஜீவன் ப்ரபஞ்சம் எல்லாம் அடங்கியுள்ளன. ஈசன் வெளிப்படையாக விருப்பன அடங்கியிருப்பன ஆகிய எல்லாவற்றிற்கும் ஆதாரம். ஜீவன் கர்ம பலன்களால் கட்டுண்டிருப்பதால் ஸ்வதந்திரனல்லன், ஈசனை உணர்ந்தால் விடுபடுவன். ஆதலால் ஈசன், ஜீவன், கர்மபலனை யூட்டுவிக்கும் ஈசன் சக்தி ஆகிய மூன்றுண்டு. பரம்பொருள் ஒன்றே இப்படி எல்லாமாயிருந்தும் நிர்விகாரமாக விருப்பது. ப்ரகிருதி அழியும் தன்மையுடையது. நிலையாயுள்ளது ஹரனே. இவரே ப்ரகிருதியையும், ஜீவனையும் அடக்கி யாள்

பவர். இவரை த்யானித்து, அணுகி, ஒன்றுபட்டால் தான் மயக்கம் முற்றிலும் நீங்கும். இப்படிச் செய்தால் பந்தம், துக்கம், ஜனனமரணம் நீங்கும். தேஹம் நீங்குங்கால் இவனுக்கு ப்ரஹ்மலோகப்ராப்தியாகிறது. ஆனால் கேவலம் தனித்து ஏகமாய் நின்றால்தான் அவனுக்கு பூர்ண திருப்தி ஏற்படும். ஆத்மா அடி அரணிக்கட்டை, ப்ரணவம்மேல் அரணிக்கட்டை கடைதலாகிய ப்ரணவத்யானத்தால் ப்ரஹ்ம தேஜஸ் வெளிப்படும். இதற்கு தபஸும் ஆத்ம ஞானமாகிய ஸத்யமுமே ஸாதனங்கள். எள்ளுள் எண்ணெய், பாலில் வெண்ணெய், ஆற்றுள் ஊற்று, கட்டையில் நெருப்பு இவைகளைப்போலிருக்கும் ஆத்மாவே ப்ரஹ்மம் என்று உபநிஷத்துக்களில் கூறப்படுகிறது.

**அத்யாயம்-2** :—இதில் யோகாப்யாஸ விஷயம் கூறப்படுகிறது. முதலில் ஸூர்யரூப மூலமாக பரம்பொருள் துதிக்கப்படுகிறது. மார்பு கழுத்து தலை இவைகளை ஸமமாக வைத்துக்கொண்டு மனதை உள்முகப்படுத்தி பயகாரணமான ஸம்ஸாரமென்ற காட்டாற்றை ப்ரஹ்மம் என்ற கப்பல் மூலமாகக் கடக்க வேண்டும். மூச்சை அடக்கி அசையாது ஸாவதானமாக மூக்கால் மூச்சைவிட்டு இழுக்கவேண்டும். மனதைப் போனபடி விடாது அடக்கிக்கொண்டுமிருக்க வேண்டும். ஸமமாயும், சுத்தமாயும், கல், நெருப்பு, தூசி முதலிய உபத்ரவம் இல்லாமலும், சப்தம், ஜலம், செடிகொடிகளால் கண் முதலிய இந்திரியங்களுக்கு ரமணீயமாகவும் குகை முதலிய ஒதுங்குமிடமும் அமைந்துள்ள விடத்தில் இந்தப் பழக்கத்தைச் செய்ய வேண்டும். இப்படிப் பழகுங்கால் ப்ரஹ்ம ஸம்பந்தமாக புகை, ஸூர்யன், நெருப்பு, காற்று, மின்மினி, மின்னல், சந்திரன் முதலிய தோற்றங்கள் உண்டாகலாம். இவைகள் நீங்கி யோகத்தில் நிலைபெற்றால் வ்யாதி முதலிய துக்கங்கள் நம்மை அணுகா. முதல் முதல், ஸந்தோஷம், நோயின்மை, ஸ்திரத்வம், தேஜஸ், வாக்சாதுர்யம், ஸுவாஸனை, அழுக்குக் குறைவு எல்லாம் ஏற்படும். துலக்கிய கண்ணாடி போல இவன் சுத்தமாகிவிடுவன் இப்படித் தன்ரூபம் விளங்கியதும், இந்த தன்விளக்கத்தால் ப்ரஹ்ம ரூபம் விளங்கிவிட்டால் பந்தத்திற்கு அப்பாற்பட்டு விடுவன். இவன் எல்லாவற்றிற்கும் ஆதாரமாகிவிடுவன். எங்கும் பரவி நிறைந்துள்ள பரம்பொருளுக்கு நமஸ்காரம்.

**அத்யாயம்-3**:—இந்த அத்யாயத்தில் பரம்பொருள் மாயையோடு கூடிய ருத்ரமூர்த்தியாகக் கூறப்படுகிறது. ஒப்புயர்வின்றி ஏகனாய்த் தன் சக்தியால் எல்லாவற்றையும் அடக்கியாண்டு அவைகளுள் மாறுபாடற்று எவன் இருக்கிறானோ அவனை உணர்ந்தவர் அமரராவர். இவர்தான் ருத்ரன். ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரம் செய்பவரும் இவரே. இவருக்கு எங்கும் கால், எங்கும் கை, எங்கும் கண் முதலியன. இவரைப் பலவாறாகத் துதிக்கவேண்டும். இவருக்கும் அப்பாற்பட்டு எங்கும்ஆதாரமாக விளங்கும் பரப்ரஹ்ம உணர்ச்சியே அழியாநிலையில் நிலைபெறும்படி செய்வது. இருட்டிற்கு அப்பாற்பட்ட ஸூர்யன் போல விளங்கும் இவரை உணர்ந்து விட்டேன். மரணத்திற்கு அப்பாற்பட்டு விட்டேன். இதைவிட முக்தியடைய வேறு வழியில்லை. ப்ரபஞ்சம் எல்லாம் இவனால் பரவப்பெற்றிருக்கிறது: இவனைவிட வேறானது ஒன்றுமில்லை, ஒப்புயர்வற்றவன். இவன் அரூபன், துக்காரஹிதன். ஜீவர்கள் ஹ்ருதயத்தில் இருப்பவரும் இவரே. தேஜோரூபி அழிவற்றவர், எல்லாவற்றையும் அடக்குபவர். அதிஸூக்ஷ்மர், இவரை மனத்தால் உணரவேண்டும். எங்கும் மறைந்திருப்பவரும் இவரே. இருந்தது, இருப்பது, உண்டாகப் போவது எல்லாம் இவரே. இவர் ப்ரபஞ்சமெல்லாம் உள்ளவர். இந்திரியங்களுக்கு அப்பாற்பட்டவராயினும் அவைகளை ஆட்டி வைக்கும் ஆதாரம். நவத்வாரபுரத்தில் கட்டுண்ட புருஷன் வெளிப்பட்டு எல்லாவற்றையும் உணருவன். இவனுக்கு இந்த்ரிய ஸஹாயமன்றியிலே எல்லாவற்றையும் உணரும் சக்தியுண்டு. இவன்தான் பரமபுருஷன். இந்த இந்த்ரிய அபேக்ஷையின்றி அப்பாற்பட்டிருக்கும் இவனை உணர்ந்தால் ஜனனமரணாதிகள் நீங்கி விடும்.

**அத்யாயம் 4** :—இந்தப் பரம் பொருள் தான், அக்னி, ஆதித்யன், வாயு, சந்திரன், ஆகாயம், ஹிரண்யகர்ப்பர் ப்ரஜாபதி பெண், யுவா யுவதி, கிழவன், ஸர்வதேவர், கருவண்டு, பச்சைக்கிளி, மழைமேகம், ருதுக்கள், ஸமுத்ரங்கள். ஆதிமத்யாந்தரஹிதரான அனந்தர். எல்லாம் உம்மிடமிருந்துஉண்டாயின. அனுபவிப்பவன் அனுபவப் பொருள் இரண்டு உண்டு. இரண்டின் சேர்க்கையால் அனுபவ விசித்ரங்கள் உண்டாகும். இதனால் அனுபவிப்பவன் ஒதுங்கி விடுவன். (இரண்டு பக்ஷி த்ருஷ்டாந்தம் கூறப்படுகிறது). ப்ரகிருதி தான் மாயை, ஈசன்தான் மாயாவி. இவன் வெளியிடுபவைகளே உலகம், எல்லாவற்றிற்கும் ஆதாரமான இவனை இந்தருத்ரனை உணர்ந்தவன் நல்ல எண்ணம் எழப்பெற்று சாந்தி பெறுவன். ஞானோதயமானதும் இராப்பகலற்ற நிலை வரும். பரசிவம் மாத்திரம் தான் இங்கு உண்டு. இவன் ஊனக்கண்ணுக்கு விளங்கான். ஞானக்கண்ணுக்கே பெறப்படுவன். இவர் நம்மைக் காப்பாற்றட்டும்.

**அத்யாயம் 5** :—அகண்ட பரப்ரஹ்மத்தில் ஞானஞ்ஞானம் இரண்டும் அடக்கம். அது இதற்கு அப்பாற்பட்டது. முன்னது நித்யம் பின்னது அநித்யம்; ஸூர்யன் தன் ஒளியால் எங்கும் நிறைந்திருப்பது போல இவரும் எல்லாவற்றையும் அடக்கியாள்வர். இந்தரஹஸ்ய வஸ்துவை உணர்ந்த தேவதைகள் இந்த வஸ்துவேயாகி நிலைபெற்று விட்டனர். காம்ய கர்மிகள் இதை உணராது கர்மபந்தத்தில் அகப்பட்டு விட்டனர். ஜீவன் அதிஸூக்ஷ்ம வஸ்து ஆயினும் அது விரிந்ததே. அதற்குப்பால்பேதம் இல்லை. ஸம்பந்தத்தால் எல்லா பேதமும் அதற்கு ஏற்படுகிறது. தேஹபேதத்தால் பலவாகக் காணப்படுகிறது.



ஆதியந்தமற்ற காரணங்களால் இந்த பரவஸ்துவை தேஹாதிக் குழப்பங்களுக் கிடையில் ஞானஞ்ஞானாதீதனாக எவன் உணருகிறானோ அவன் தேஹஸம்பந்தம் இல்லாமலே போய்விடுவன்.

**அத்யாயம் 6** :—இந்தப் பரம்பொருளே எல்லாவற்றிற்கும் காரணம். சிலர்படித்தும் மயக்கத்தால்காலம் ஸ்வபாவம் முதலிய எல்லாம் காரணம் என்பர். இவர்தான் எல்லாவற்றையும் தோன்றி ஒடுங்கும்படிச் செய்வது: ஜீவனையும் ப்ரபஞ்சத்தையும் சேர்த்துவைப்பது. இவர் காலம் தேஹம், ப்ரபஞ்சம் முதலியவைகளுக்கு அப்பாற்பட்டவர். இவர் ஸ்வயம்பு. இவரே சிலந்தி வலை செய்வது போல உலகை ஏற்படுத்தினார். இவரே ஸர்வஸாக்ஷி. ஸாங்கிய யோகாதிகளில் கூறப்படும் ஆதிப்பொருள் இவரே. இவர் எல்லாப்ரகாசங்களுக்கும் அப்பாற்பட்டிருந்து அவைகளை விளங்கும்படிச் செய்பவர். இவரே யாகிவிடுபவன் அழியாநிலை எய்துவன்: இவர்தான் வேதத்தை ப்ரஹ்மாவிடம் ஒப்புவிப்பவர்: மீளாநெறி இவரேதான்.

ஆகாயத்தை பாய்போலச்சுருட்டி விட்டாலும் விடலாம், இவரை யுணராது துக்கநீக்கம் வரும்படிச் செய்யமுடியாது. அதிகாரிகளிடம் இதைக் கூறினால் அவர்களுக்குப் பரமநிலை உண்டாகும்: அனதிகாரிகளிடம் இதைக் கூறலாகாது.

## 43. கௌஷீதகி உபநிஷத் (25)

**அத்யாயம். 1** :—காங்கிய வம்சத்தைச் சேர்ந்த சைத்ரன் என்பவன் ஒரு யாகம் செய்ய நினைத்து ஆருணியை புரோஹிதராக விருக்கும்படி அழைத்தான். அவர் தன் பிள்ளை ச்வேதகேதுவை அனுப்பினார். அவரை நோக்கி 'ஒருவழியால் கொண்டுபோய் (தேவ யானமார்க்கமாக) என்னை ரஹஸ்ய ஸ்தானத்தில் நிறுத்தப் போகிறாயா அல்லது மற்றைய (பித்ர்யான மார்க்கமாக) மார்க்கமாகக்கொண்டு இங்கேயே நிறுத்திவிடப் போகிறாயா' என்று கேட்டார். 'எனக்கு இரண்டுவழியைப் பற்றி ஒன்றும் தெரியாது என்தகப்பனாரைக் கேட்டுவருகிறேன்' என்று கூறிப்போனான் ச்வேதகேது. தகப்பனார் இந்த விஷயத்தைக் கேட்டதும் 'எனக்கு மரணத்திற்குப் பின் ஏற்படும் விஷயம் தெரியாது, பிரஹ்மஞானம் தான் பழக்கம், இதை சைத்ரனிடமிருந்து கேட்டுணர்வோம்வா' என்று கூறிப்புறப்பட்டு ஸமித்தைக்கையிலேந்தி சிஷ்யனைப்போல சைத்ரனிடம் வந்து சேர்ந்தார். சைத்ரன் அவருக்கு தேவயான பித்ர்யான மார்க்கங்களை நன்றாக எடுத்து விளக்கி, ஸ்வர்க்கம் நரகம் இரண்டிற்கு அஞ்சி ஒதுங்குபவனே ப்ரஹ்ம விசாரம் செய்யயோக்யன் என்று கூறினான். இவைகளுள் பித்ர்யான மார்கமாகப் போகிறவன் இம்மாதிரி ஒதுங்கி தெய்வயான மார்க்கத்தில் திரும்பி ப்ரஹ்ம நிலையமாகிய ஜகஜ்ஜ்யோதியான பிராணனை அணுக வேண்டும். இந்த ப்ராண நிலையத்தை ஒருபெரிய ஸிம்மாஸனமாகவும்,ப்ரஹ்மத்தைஅதில்உட்கார்ந்திருக்கும் ராஜனாகவும் விஸ்தாரமாக வர்ணித்திருக்கிறது. அந்த ராஜாவான பிரஹ்மம் 'நீயார் என்றுகேட்டால்அணுகுபவன், 'நான் உன்னிடமிருந்துஉண்டானவன். நீஎல்லாவற்றிற்கும் ஆதிகாரணன்; ஆத்மா 'நீ எதுவோ அது தான் நானும் என்று கூறிவிடவேண்டும்' பிரஹ்மா 'நான் யார்' என்று கேட்டால், 'நீர் ஸத்யம்.' 'ஸத்யம் என்றால் பொருள் என்ன?' என்ற கேள்வி பிறக்கும் அதற்கு 'இந்திரியங்கள் ப்ராணாதிகள் இவைகளது தேவதைகளுக்கு அப்பாற் பட்டது ஸத். தேவதைகளுக்கு எல்லாம் த்யம் இவை எல்லாம் ஸத்யம்' என்ற விடை பிறக்கவேண்டும். 'உனக்கு நாமம் ரூபம் முதலிய விசித்ரங்கள் எப்படி தோற்றும்படி வருகிறது' என்ற கேள்வி ஏற்பட, அதற்கு 'எல்லாம் ப்ரஞ்ஞையால் முதலில் ஏற்பட்டு இந்திரியம், மனம் ப்ராணாதிகளால் விளக்கமாகத் தோற்றுகின்றன' என்று உணர்ந்து கூறிவிடவேண்டும், இப்படிப்பட்ட விளக்கம் ஏற்பட்டால் ப்ரஹ்மாவினது பலம் முதலியன வெல்லாம் இவன் அடைவன்.

**அத்யாயம் 2** :—இங்கு பிராணாராதனம் கூறப்படுகிறது ப்ராணனுக்கு மனம் தூதன், வாக்கு காரியஸ்தன், கண் காவற்காரன், காது வேவுகாரன். கேட்காமலிருக்கையிலேயே இவர்கள் எல்லாம் விஷயங்களைப் பிராணனிடம் கொண்டு ஸமர்ப்பிக்கின்றனர். இவைகளைக் கவனியாது ப்ராணனிருந்தால் இவைகள் தடையின்றி வந்து கொண்டே இருக்கும். ப்ராணன்தான் ப்ரஹ்மம், வாக்கு, கண், காது, மனம் இவைகளுள் முன்னதன் பின் பின்னது இருந்தே தொழிற்படும்.

ப்ராண ஸம்பாதனம்:—பௌர்ணமி அமாவாஸைகளில் தகுந்தபடி ஹோமத்திற்குத் தயார் செய்து கொண்டு அக்னியில் ப்ராணம், கண், காது, மனம், ப்ரஞ்ஞை இவைகளுக்கு நெய்ஆஹுதிகள்கொடுத்து புகையை முகர்ந்து நெய்யை மேலே தடவிக்கொண்டு எந்த விஷயத்தில் உத்தரவு செய்தாலும் அது நடந்தேறும்.

தெய்வங்களால் ஈடேறுபவைகள்:—எவர் ப்ரீதியையாவது ஸம்பாதிக்க வேண்டுமாகில் முற்கூறியபடி ஹோமம் செய்து அவர்களது வாக் முதலியவைகளை தன்னுள் ஆஹுதி செய்துகொண்டு முன்போலப் புறப்பட்டால் அவர்கள் நம்மை ப்ரியமாக நடத்துவார்கள்.

அடக்கும் வழி:—வாக்கும் பிராணனும் ஒரே ஸமயத்தில் தொழிற்படா. ஒன்றுதொழிற்படும் பொழுது மற்றொன்று அதனுள் அடங்கி யிருக்கும். இதுதான் முடிவில்லா ஆஹுதிகள். இவைகளை உணர்ந்து மற்றவைகளைக் கவனியாது விட்டனர் சிலரிஷிகள். இந்தவிஷயத்தை ஒரு யாகமாக இங்கு வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

மூன்று விதத்யானம்:—ஸூர்யன் உதயம், உச்சம், அஸ்தமனம்; இந்தக் காலங்களில் பாவம் [illegible] வேண்டும் என்று ஸூர்யனை ப்ரார்த்திப்பது [illegible]

வது. அமாவாஸை காலங்களில் ஸூர்யாஸ்தமன ஸமயத்தில் குழந்தைகளிருப்பவர்கள் 'குழந்தைகள் விஷயதுக்கம் எனக்கு வாராதிருக்கவேண்டும்' என்று ப்ரார்த்தித்துக் கொள்ளவேண்டும். பிள்ளை இல்லாதவர்கள், 'எனக்குப்பலம் முதலியன உண்டாகட்டும்' என்று ப்ரார்த்திக்க வேண்டும். இது இரண்டாவது விதமான த்யானம். மூன்றுவது பௌர்ணிமையன்று ஸாயங்காலம்சந்திரனைத்துதித்துமுன்போன்ற பிரார்த்தனைசெய்து தன் ஸ்திரீயோடு ஸங்கித்தால் அவளுக்குப் புத்திர சோகமேவாராது. பின்னர் தகப்பன் பிள்ளையை ஆசீர்வதிக்கும் விதம் கூறப்படுகிறது.

**தேவதா ஒடுக்கம்:**—அக்னி, ஸூர்யன், சந்திரன் மின்னல், வாக்கு, கண், காது, மனம், இவைகள் தொழிற்படுங்கால் ப்ரஹ்மம் வெளிப்படையாயும், அடங்குங்கால் அடங்கியும் இருந்து ப்ராணனுள் மறையுமே ஒழிய அழிந்து போவதில்லை.

**ப்ராணன் ஏற்றம்:**-வாக்கு, கண், காது, மனம், ப்ராணன் இவைகளுள் எது சிறந்தது என்ற தர்க்கம் வர எல்லாம் தேஹத்தை விட்டு நீங்க தேஹம் அசைவற்றுக்கிடந்தது. வாக்குமுதலிய புகுந்தன. அவைகளின்தொழில்கள் நடந்தனவேஒழிய தேஹம் அசையவில்லை. ப்ராணன் புகுந்ததும் தேஹம் கிளம்பி நகர்ந்தது. ப்ராணனே ப்ரஜ்ஞை. இதை உணருபவன் அமரனுவன்.

**வம்ச பரம்பரா விஷயம்:**—மரணவ்யாதியிலிருக்கும் தகப்பன் பிள்ளையை அழைத்துத் தன் வாக்கு முதலியவைகளை அவனுக்குத்தத்தம் செய்யவேண்டும். அவன் அவைகளை அங்கீகரித்து தகப்பனுரை ப்ரதக்ஷிணம் செய்துபோகவேண்டும். அப்பொழுது தகப்பன் 'கீர்த்தி, தேஜஸ், கௌரவம் உனக்கு உண்டாகட்டும்' என்று ஆசீர்வதிக்க வேண்டும். பிள்ளை இடது தோள்புறம் திரும்பிநோக்கித் துணியால் மூடிக்கொண்டு 'ஸ்வர்க்கம் அடைந்து திருப்தி பெறுவாய்' என்று கூறவேண்டும். தகப்பன் பிழைத்துவிட்டால் பிள்ளையினிடம் அடங்கியே யிருக்கவேண்டும், அல்லது ஸந்யாஸியாக உலாவவேண்டும். இறந்து விட்டால் விதிப்படி அபரக்ரியைகளை பிள்ளை செய்துவிடவேண்டும்.

**அத்யாயம்-3:**—காசி ராஜன் பிள்ளை பிரதர்த்தனன் புண்ய கர்மங்கள் செய்து இந்திரலோகம் சென்றுன். இந்திரன் 'ஏதாவது வரங்கேள் தருகிறேன்' என்றுன். 'நான் கேட்டால் அது எப்படி நீர் தந்த வரமாகும். ஆதலால் மனிதர்களுக்கு ரொம்ப ஹிதமான தை நீரே ஆராய்ந்து பார்த்து எனக்குக் கொடும்' என்றுன். அதற்கு இந்திரன் "என்னை உள்ளபடி உணர்ந்திருப்பதுதான் மனிதர்களுக்கு ரொம்ப ஹிதமானது. நான் தேவதைகளுக்காகஅநேகசண்டை முதலியன * செய்திருக்கிறேன். ஆயினும் எனக்கு யாதொரு குறைவும் ஏற்படவில்லை. நான் ப்ராணன்; ப்ரஜ்ஞாத்மா. இந்த ப்ராணனுல்தான் தேஹத்தில் உயிர் இருக்கும். இதை உணர்ந்தவன் அழியாத் தன்மையை அடைவன்' என்றுன். அதற்குமேல் ப்ரதர்த்தனன் 'ப்ராணன்கள் ஒன்று பட்டால் வாக்காதிகள் தொழிற்படா, இப்படியான பிராணன் ஒவ்வொன்றின் வழியாகச் சென்று ஒவ்வொரு தொழிலை நடத்தும்' என்று சிலர் சொல்லுகிறுர்களே இதன் உண்மை யாது என்று கேட்டான்.

இந்திரன் 'இது உண்மைதான் ஆயினும் ப்ராணன்களுள் ஏற்றம் உண்டு. இந்திரியாதிகள் ஊனமாயும் மனிதனிருக்கலாம். ப்ராணனுல்தான் தேஹம் அசைந்து தொழிற்படும். ப்ராணன் என்றாலும் ப்ரஜ்ஞை என்றாலும் ஒன்றுதான் நல்ல தூக்கத்தில் ப்ராணனில் மனிதன் லயித்திருக்கிறுன். வாக்காதிகள் லயிக்க அவைகள் விஷயங்களுள் ஒடுங்கி விடுகின்றன. விழிக்குங்கால் ப்ராணன்களின் ரூப பேதங்கள் நெருப்பிலிருந்து வரும் பொறிகள்போல ப்ரஜ்ஞையிலிருந்து வெளிப்பட்டுத் தம் தம் விஷயங்களை நோக்கிப்போய் பதிகின்றன. இறக்குந்தருணத்தில் முற்கூறிய ஒடுக்கம் தான் ஏற்படுகிறது. இந்திரிய விஷயம் எல்லாம் ப்ராணனுள் அடங்கிவிட ப்ராணன் ப்ரஜ்ஞா நிலையை அடைந்துவிடும். இவ்விரண்டும் சேர்ந்தேதான் தேஹத்திலிருக்கும், சேர்ந்தேதான் வெளிப்படும். வாக்காதிகள் எல்லாம் இந்த ப்ரஜ்ஞையின் பாகங்கள், இவைகள் பிரிந்துவெளிப்பட்டதும் இவைகள் விஷயங்கள் வெளியி லிருப்பதாகத் தோற்றும். ப்ரஜ்ஞா ஸம்பந்தத்தால்தான் விஷயானுபவம் ஏற்படும்: இந்த ஸம்பந்தம் இல்லாத இந்திரியாதிகள் வெளிவிஷயங்களைக் கிரஹிக்கா. ஆதலால் வாக் முதலியவைகள் ஸ்வரூபத்தை ஆராயாது அவைகளை ஆட்டிவைக்கும் ப்ராணனுகிய ப்ரஜ்ஞையின் ஸ்வரூபத்தை ஊஹித்தறியட்டும். இது ஒன்றாகவே இருப்பது; சக்கரத்தில் குறுக்குக்கழிகள் வந்துசேர மத்தியிலிருக்கும் குடம்போல இது ஸகலவித துவந்துவங்களுக்கும் அப்பாற்பட்டது. இதுதான் இந்திரனுகிய எனது ஸ்வரூபம். இதை உணர்ந்து தேறித் தெளிந்திரு' என்று ப்ரதர்த்தனனை நோக்கி உபதேசித்தான்.

**அத்யாயம்-4:**—இதில் ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் 2-ம் அத்யாயத்தில் காணப்படும் அஜாதசத்ரு கார்க்ய பாலகி ஸம்வாதம் காணப்படுகிறது.

---

**எழுத்துப்பிழை.**—ஆதியிலிருந்து நாம் படிக்கும் பொழுதும் எழுதும்பொழுதும் எழுத்துப் பிழை வாராமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டும், சரியாய்ப் படித்து வருவதே இதற்குப் பெரிய சாதனமாம். எழுத்துப் பிழைகளால் ஒவ்வொரு சமயங்களில் பிரமாதமான சங்கடங்கள் உண்டாகும். "தவலை போய் விட்டது" என்பதற்குப்பதிலாக "தலைபோய்விட்ட" தென்று ஒருவன்எழுதுவானேயானுல் அதனு லுண்டாகும்பிரமாதங்கள் எவ்வளவா யிருக்கும்? யோசித்துப் பாருங்கள்.





Supplement to the "Viveka Bodhini"

[" விவேக போதினி " அனுபந்தம்



# திவ்யப்பிரமாணங்கள்

## ORDEALS

முகவுரை:—நாம் வாசஞ்செய்து வரும் பரதகண்டமாகிய இந்தியாவில் ஜனங்களுக்குள் ஏற்படும் வியவகாரங்களை லிகிதம் முதலான மானுடப்பிரமாணங்கள், யுக்திகள், சாட்சியங்கள், இவைகளைக்கொண்டு தீர்த்து வந்தார்கள். இந்தச் சாதனங்கள் போதுமானபடி ஏற்படாத சமயங்களில் அடியிற் கூறிய சபதங்களைக்கொண்டும் வழக்குகளைத் தீர்த்துவந்தார்கள்.

வாகனம், ஆயுதம், பசு, விதை, பொன், தெய்வத்தின் பாதம், தந்தை பாதம், மைந்தன் தலை, மனைவி தலை, இவற்றைத் தொட்டுச் சபதம் செய்தல்; தடாகப் பிரதிஷ்டை முதலியவற்றால் உண்டாகின்ற புண்ணியம் கெட்டுப்போகட்டுமென்பது முதலாகிய பிரதிஞ்ஞைகள் செய்தல்; இராமாயணம், பாரதம், வேதபுஸ்தகங்கள் இவைகளைக்கொண்டு நியாய சபைகளில் கட்சிக்காரர்கள் பிரமாணம் சொல்லுதல்; மத்தியஸ்தர்கள் முன்பாகவும் தெய்வ சந்நிதிகளிலும் நெய்விளக்கை அணைத்தல். இச்சபதங்கள் பிற்கூறிய பிரகாரம் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்என்ற நான்கு வருணத்தார்களுக்குஅனுகுணமாகத் தொன்று தொட்டு உலக வழக்கத்தில் ஏற்பட்டு வந்தன.

**பிராமணன்** :—உண்மை சொல்லுதலினுலுண்டாகும் புண்ணியம் பயன்படாமற் போகுக என்று சொல்லுதல்.

**க்ஷத்திரியன்** :—வாகனமும், ஆயுதமும் பலியாது ஒழிக என்று சொல்லுதல்.

**வைசியன்** :—பசு, விதை, பொன்; இவை எனக்குப் பலியாது கெடுக என்று சொல்லுதல்.

**சூத்திரன்** :—அறுகு, எள்ளு, வெள்ளி, பொன், கலப்பையாற் பேர்க்கப்பட்ட வோடு—இவற்றுள் ஒன்றை யேந்தி நான் கூறுவது பொய்யெனின் எல்லாப்பாதகங்களும் என்னிடத்து அடைக என்று சொல்லுதல்.

இவைகளைத் தவிர்த்து முற்காலங்களில் திவ்வியப் பிரமாணங்களைக் கொண்டும் வழக்குகளின் நியாயத்தைக் கண்டு பிடித்து வந்தார்கள்.

திவ்வியப்பிரமாண மென்றால் வியவகாரங்களின் உண்மையை அறிய உலகத்தில் நீடித்து வழங்கிவரும் பத்திரம்முதலிய பிரத்தியக்ஷ சாட்சியங்கள் ஏற்படாத பிரஸக்திகளில் வாதிப் பிரதிவாதிகள் தெய்வங்களின் மேல்பாரத்தைப்போட்டு, தெய்வங்களைப் பிரார்த்திக்கப் பின்னால் வரையப்பட்ட சில ஏதுக்களினால் தெய்வங்களே அந்தர்த் தானமாய்த் தோன்றி நியாயத்தை அளிப்பது என்று கூறலாம். இப்பிரமாணங்கள் பல வகைப்படும்.

அவைகளில் (1) துலா (தராசு) பரீக்ஷை (2 அக்கினி (தீ) பரீக்ஷை (3) ஜலம் (நீர்) (4) விஷம், 5) கோசம் (அபிஷேக ஜலத்தைப் பானம்செய்தல்) (6) (தண்டுலம் தானியம்) (7) தப்தமாஷம் (மழு) (8) பாலம் (கலப்பை) (9) தருமாதர்மம் என்ற ஒன்பது வகைகளும் முக்கியமாக ஏற்படுத்தப்பட்டுவந்தன. இந்த ஒன்பது பிரமாணங்களில் துலாம், அக்கினி, ஜலம், விஷம், கோசம் என்ற ஐந்து வகைகள் பெரிதான வழக்குகளிலும் மற்றைய நான்கு திவ்வியங்களும் அற்ப வியவகாரங்களிலும் முற்காலத்தில் விதிக்கப்பட்டுவந்தன. இந்தப்பிரமாணங்களில், பிராமணனுக்கு துலாமும் க்ஷத்திரியனுக்கு அக்கினியும், வைசியனுக்கு ஜலமும், சூத்திரனுக்கு விடமும், கோசபானம் எல்லாருக்கும் கொடுக்கப்பட்டுவந்தன. இன்ன இன்ன வருணத்தாருக்கு இன்ன இன்ன திவ்வியங்கள் அளித்தல் கூடாதென்றும், இன்ன பிணியுள்ளவர்களுக்கு இன்ன இன்ன திவ்வியங்களைக் கொடுக்கக்கூடாதென்றும் இன்ன இன்ன தொழிலை அனுஷ்டித்து வந்தவர்களுக்கு இன்ன இன்ன பிரமாணங்களை ஏற்படுத்தக் கூடாதென்றும் ரிஷி சிரேஷ்டர்கள் நிர்ணயித்திருந்தார்கள்.

**திவ்யங்கள் அளிக்கத்தகும் காலம்:—**

இன்ன இன்னகாலத்தில் இன்ன இன்னதிவ்யங்களைக் கொடுக்கக் கூடாதென்று முனிவர்கள் ஏற்படுத்தி யிருந்தார்கள். எப்படியெனில், குளிர்காலத்தில் ஜலதிவ்யமும், வேனிற்காலத்தில் அக்கினி திவ்யமும், மழைகாலத்தில் விடதிவ்யமும், மிகுந்த காற்றடிக்கும் சமயங்களில் துலா திவ்யமும் செய்வித்தல் கூடாதென்றும், அக்கினி திவ்யத்திற்கு மழைக்காலமும், ஜலதிவ்யத்திற்கு இலை உதிர்காலமும் வேனிற்காலமும், விடதிவ்யத்திற்கு மழைக்காலமும், சித்திரை, வைகாசி, ஆனிமாதங்களும் உரியனவென்றும் இந்த மூன்றுமாதங்களும் எல்லா திவ்யங்களுக்கும் பொதுவென்றும் கோச திவ்யத்திற்கும் துலா திவ்யத்திற்கும் காலநிர்ணயம் ஏற்படாமல் எக்காலத்திலும் செய்யலா மென்றும் ஒவ்வொரு நாளிலும் நடுமத்தியானம், பிற்பகல், சாயங்காலம், இவ்வேளைகளில் திவ்யங்கள் செய்யக் கூடாதென்றும் முனிவர்கள் நிர்ணயித்திருந்தார்கள்.

**திவ்யங்கள் செய்யவேண்டிய இடம்:—**

மகாபாதகஞ் செய்தவன் தேவாலயத் தெதிரிலும், இராசதுரோகம் செய்தவன் அரசனுடைய அரண்மனைக்கெதிரிலும், பிரதிலோம ஜாதியன் நாற்சந்தியிலும் திவ்வியம் செய்யும்படிக்கும், மேற்கூறிய மகாபாதகம் முதலியவற்றிற்கு வேறான அகாரியங்களைச்செய்தவர்கள் துலாம் முதலான திவ்வியங்களையெல்லாரு மறிய இராசசபையிற் பண்ணும்படிக்கும் முனிசிரேஷ்டர்கள் நிர்ணயித்திருந்தார்கள்.

**துலாதிவ்யம் :—**

காட்டுதேவதையாகிய 'ஸோபனை' மந்திர பூர்வமாகப் பிரார்த்தித்துக்கொண்டு ஒருமரத்தை வெட்டி,

‘யூபம்’ என்று சொல்லப்பட்ட பலிஸ்தம்பத்திற்குரிய விதிகளின்படிச்செய்யவேண்டியசடங்குகளைச்செய்து அஷ்டதிக் பாலகர்களை வணங்கியபிறகு துலாம் அறிவிற் சிறந்தோரால் நிரூபிக்கப்படவேண்டிய தென்றும், துலாக்கோல் ஒழுங்காகச் செய்யப்பட்டும், சரியான இடங்களில் மூன்று வளையங்கள் போட்டும் சாஸ்திரத்தில் ஏற்படுத்தியபடி அளவு முதலியவைகள் உள்ளனவாக விருக்கவேண்டுமென்றும் உறுதியான கயிறுகளால் துலாக்கோல் கட்டப்படவேண்டுமென்றும் அதைக் கீழ்பார்சுவமாக அசையாமல் யாதொரு குற்றமும் ஏற்படாத ஒரு பரிசுத்தமான விடத்தில் நிலைநாட்டி, ஒவ்வொரு தராசுத்தட்டிலும் தருப்பைப் புல்லைப் போட்டபிறகு இந்தப் பிரமாணத்தில் பரிசோதிக்கப்பட வேண்டியவனை மேலண்டைத் தட்டிலும் மற்றைய தட்டில் சுத்த மண்ணையும் வைத்து இரண்டு தராசுகளின் கிடங்குகளைச் செங்கல் தூள் பருமணல் அல்லது மண் இவைகளில் எந்தப்பொருளினாலாவது துலாக்கோலை நிரப்பி, சாமர்த்தியமாக எடைகட்டத் தெரிந்தவர்களைக்கொண்டு எடைகட்டி. தராசுத்தட்டுகளில் ஜலத்தை மேல்வழியாமல்வைத்து பரிசோதிக்கப்பட வேண்டியவனைத் துலைத்தட்டிலேற்றி எடைகட்டி யிறக்கவேண்டும். தராசு, கொடி முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு, மந்திரப்பரிச்சயமுள்ளவர்களைக் கொண்டு தரும தேவதை முதலிய தேவதைகளை யாவாகனம் பண்ணி, விதிப்படி ஆராதனை செய்து பூஜித்து வாத்திய கோஷத்துடன் கந்த, தூப, தீப வாசனைத் திரவியங்களையும் புஷ்ப மாலைகளையும் அன்ன ஆகார நைவேத்தியங்களையும் தேவ சந்நிதியில் சமர்ப்பிக்க வேண்டியதென்றும், சோத்தியன் இன்ன குற்றம் செய்தானென்று குற்றத்தைத் தெளிவாக ஒரு பத்திரத்திலெழுதி அபபத்திரத்தை அவன் நெற்றியில் கட்டி, வேத வேதாங்கங்களில் பாண்டித்தியமுள்ளவராயும் சாஸ்திர விதிப்படி அனுஷ்டித்து வருகிறவராயும், பாரபட்சம், காமக்குரோதலோபம் முதலிய அறுவகைக் கெடுதிகளில்லாதவராயும், சத்தியமே விருதமாகக்கொண்டவராயும் தர்ம சிந்தனையுள்ளவராயுமிருக்கிற ஒரு பிராமணனை முக்கிய நியாயாதிபதியாகத் தெரிந்தெடுத்துக்கொள்ள வேண்டியதென்றும், இவர் துலாத்தை ஆகருஷித்து “ஓ, துலாம், தங்களுக்கு மறு நாமம் ‘தாதா’—அதாவது ‘உலக சிருஷ்டிகளின் புண்ணிய பாவங்களை நன்கு அறிந்தவர் தாங்கள் துர்மார்க்கர்களைக் கண்டுபிடிப்பதற்காக பிரம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டவர்; இந்தச்சோத்தியன் தன்பேரில் சாட்டப்பட்ட குற்றத்திலிருந்து நிவர்த்தித்துக்கொள்ள, தங்களையே தெய்வமாக நாடியிருக்கிறான்; நியாயம் அளிக்கவேண்டியதென்று” நியாயாதிபதி பிரார்த்தனை செய்து, நான்கு அக்கினி ஹோத்திரிகளைக் கொண்டு தராசுக்கு நான்கு திக்குகளிலும் ஆஜ்யம், ஹவிஸ், சமித்து, இவைகளைக் கொண்டு காயத்திரி மந்திரத்தை ஜபித்து அக்கினியில் நூற்றெட்டுத் தடவை ஹோமம் செய்து ஹோமசேஷத்தைத் தேவதைகளுக்கு நிவேதனம் செய்விக்க வேண்டியதென்றும் ரிஷி சிரேஷ்டர்கள் ஏற்படுத்தி யிருந்தார்கள். இதற்கு அந்தச் சோத்தியன் “இன்னது உண்மை, என்பேரில் வீணைக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள்; இந்த ஆபத்திலிருந்து என்னை நிவர்த்திக்கவேண்டும்” என்று தேவதைகளைப் பிரார்த்தித்த பின்னர் அவனை முன்போலத் துலைத்தட்டில் ஐந்து விநாடிபரியந்தம் வைக்க வேண்டியதென்றும், வேத வித்தான பிராமணர்களைக் கொண்டு நிறைபார்க்கச் செய்வித்து முன்பு எடைகட்டிய நிறைக்கு உயர்வாக விருந்தால் சோத்யன் குற்றவாளியில்லை, எதிரிக்கு அபராதம் முதலியவைகளை விதித்தல் வேண்டுமென்றும் நிறைக்குச் சமமாக வேனும் தாழ்ந்தாயினுமிருந்தால் சோத்தியன் குற்றவாளி யென்றும், தட்டு மட்டாயிருந்தால் சோத்தியன் அற்பக் குற்றம் செய்தவனென்றும் தீர்மானஞ்செய்து இராசனுக்குத் தெரிவிக்க வேண்டியதென்றும், சோத்தியனை நிறுக்கும் பொழுது தராசின் விட்டம் முதலியது, ஒடிந்து போனாலும் சரி, அல்லது தட்டு தொங்கும் கயிறு அறுந்து போனாலும் சரி, அச்சோத்தியன் குற்றம் செய்தவனென்று ஏற்படு மென்றும் முனிவர்கள் நிர்ணயித்திருந்தார்கள்.

**அக்கினி திவ்யம்**:—50-பலம் மிருதுவானவும் காய்ச்சப்பட்டதுமான இரும்பை எட்டு விரல் சுற்றளவுள்ள பந்தாக உருட்டி, நயமாக ராவி, நன்றாய்க் காய்ச்சி ஜலத்தில் தோய்த்து மறுபடியும் முன்போலவே காய்ச்சி ஜலத்தில் தோய்த்துக் குறடால் எடுத்துத் துலாப்பிரமாணத்தில் கூறிய பிரகாரம் சற்குணங்கள் பொருந்திய பிரதான நியாயாதிபதி சுத்தமான நெய்யைக் கொண்டு நூற்றெட்டுத் தடவை அக்கினியில் ஹோமம் செய்து அவ்விரும்புப்பந்தை அதிற்போட்டு தர்மாதி தெய்வங்களை முன்போலவே ஆவாஹனாதிகள் செய்து பிரார்த்தித்துக் கொள்ள வேண்டியதென்றும், பிரதான நியாயாதிபதி இவ்விதம் மிகுந்த மகிமையோடு விளங்குகின்ற தேவ சந்நிதியில் பூமியைச் சுத்திபண்ணி அவ்விடத்தில் மேற்கே தொடங்கிக் கிழக்கே முடிவாகப் பதினாறங்குல வளவுடைய ஒன்பதுமண்டலங்களையும் அவ்வளவினையுடைய இடை வெளிகளையும் கோமயத்தினாலே செய்விக்க வேண்டியதென்றும் அம்மண்டலங்கள் தோறும் கிழக்கு நுனியாகத் தருப்பைகளைப் பரப்பி, முதலாவது மண்டலமுதல் எட்டாவது மண்டலம் வரையும் முறையே அக்கினி, வருணன், வாயு, யமன், இந்திரன், குபேரன், சோமன், சூரியன் இவர்களையும் ஒன்பதாவது மண்டலத்திலே மற்றைய சகல தேவதைகளையும் ஆவாஹனம் செய்விக்கவேண்டியதென்றும், சோத்தியனை முதலாவது மண்டலத்திலே கிழக்கு முகமாக நிறுத்தி, அவன் கைகளிலே நெல்லைத் தேய்க்கச்செய்து கைகளிலே மறுக்களிருந்தால் அம்மறுக்களிலே செம்பஞ்சுக்குழம்பு முதலானவைகளால் குறியிட்டு இரண்டுகைகளையும் கூட்டி விரிக்கச்செய்து, அக்கைகளில் ஏழு அரசு அல்லது புரசிலைகளை வைத்து வெள்ளை நூலாலே ஏழுசுற்றுச்சுற்றி ஏழு வன்னியிலைகளையும் ஏழறுகுகளையும் ஏழு மல்லிகை மலர்களையும் தயிராலே நனைக்கப்பட்ட அக்ஷதைகளையும் வைத்து அக்கினியைப் பிரார்த்தித்து சோத்தியனுடைய வாக்கினாலே தன்னுடைய நிரபராதத்தை வெளியிட வேண்டுமென்று ஸ்துதித்து அவ்விரும்புப் பந்தைப் பற்றுக்குறட்டினாலெடுத்து அவனுடைய கையிலே வைத்து அவன் அந்தப்பந்தை உள்ளங்கையில் வாங்கிக்கொண்டு மெதுவாய் இரண்டாவது வட்டம் முதல் எட்டு வட்டங்களுக்குள் செல்ல வேண்டுமென்றும் அப்படிச் செல்லுகையில் ஒவ்வொரு வட்டத்திலேயும் இரண்டுபாதங்களையும் வைத்துக்கொண்டு குதித்துக் குதித்துத் தாண்டிப் பின்வாங்காமல் சென்று எட்டாவது வட்டத்தில் நின்றுகொண்டே ஒன்பதாவது வட்டத்தில் சோத்தியன் அவ்விரும்புப் பந்தைப்போட்டு விடவேண்டுமென்றும் பிறகு அவன் கைகளிலுள்ள இலைகளை அவிழ்த்து முன்போலவே நெல்லைத் தேய்க்கச் செய்தபின்பு சாயங்காலம் வரையிலும் அவன் கைகளில் கொப்புளம் முதலானவைகள் காணப்படாவிடில் அவன் பேரில் குற்றமில்லை யென்று தீர்மானஞ் செய்ய வேண்டியதென்றும் அவன் கைகளில் சுடப்பட்டிருந்தால் அவன் குற்றவாளியென்று ஏற்படுத்த வேண்டியதென்றும் ஒருகால் சோத்தியன் தேக நடுக்கத்தினாலே கைகளில் சரியான விடங்களிலில்லாமல் வேறு இடங்களில் சுடப்பட்டிருந்தாலும் அவ்விரும்புப்பந்து பயத்தினால் கைதவறி நழுவி வீழ்ந்தாலும் கைகள் சுடப்பட்டதோ இல்லையோ வென்ற சம்சயம் தோற்றினாலும் மீட்டும் அவ்விரும்புப் பந்தை ஏந்தும்படிச் செய்யவேணு மென்றும் முனிவர்கள் ஏற்படுத்தி யிருந்தார்கள்.



## நமது சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் கடிதம் எழுதும்போதும் சந்தாத் தொகை அனுப்பும்போதும் தமது விலாஸத்துக்கெதிரே யிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதக் கேட்டுக்கொள்ளுகிறோம். நம்பரைக் குறிப்பிடாத பக்ஷத்தில் வீண் காலதாமதமாகும்.

மானேஜர்

# குருசிஷ்ய ஸம்பாஷணை

## GURU AND DISCIPLE—A DISCUSSION

### முன்னுரை

“கற்றோர்கள் தாமுகப்பர் கல்விதனில் ஆசையுள்ளோர்
பெற்றோம் எனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
மாற்சரியத்தால் இகழில் வந்ததென் நெஞ்சேயிகழ்கை
ஆச்சரியமோ தான் அவர்க்கு”

தேவர்களாலும் மனிதர்களாலும்புண்ணியகாலம் என்று கொண்டாடப்படுகிற மார்கழிமாதம்; ஏராளமான பனி பெய்துகொண்டிருந்தது; மந்தமாருதம் நன்மணம் வீசியது; இன்னிசையும் புள்ளோசையும் எங்கும் எழுந்தன; கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான். கனையிருள் அகன்றது. அக்காலையம் பொழுதில், எண்ணிலாக் கிளைகளும் இலைகளும் தாங்கி எழில்பெற ஓங்கிய ஓர் ஆலமரத்தின் அடியில் ஞானவரம்பெனும் மோன உருவோடு பத்மாசனத்தில் எழுந்தருளியிருந்தார் ஓர் மகான். விழிகள் இரண்டும் திறந்திருந்தனவாயினும் ஏதோ ஆழ்ந்த யோசனையில் அறிதுயில் அமர்ந்தன போலத் தோன்றின. சற்றுநேரத்தின் பின் அவர் “எல்லாம் பகவானது அருளே. எம்பெருமானே, எங்ஙனமாயினும் நின் எண்ணம் நிறைவேறவும்...சுடு மணல் நிறைந்த வெய்யகானகத்தில், வழி தடுமாறி, தண்ணீர் வேட்கை மிகுந்து, கானல் நீர் கண்டு மயங்கியலைந்து, தன்னந்தனியனாய் மனம் வருந்தின ஓர் பால்யப்பையனுக்கு நான் எம்பிரான் அருளால் நீரும் நிழலும் கொடுத்துதவினதாகத் தரிசனம் கண்டேனே. அதன் பொருள்யாது? ஒருக்கால் யாராவது ஒருவர் ஞானம் விரும்பி என்னை நாடுவார் போலும், ” என்று மெல்லிய குரலுடன் கூறினார். பின்னர் தன் எதிரே கீழ் வானத்தின் அழகையும் வர்ணத்தையும் பனியைப் பறந்தோடச்செய்த சூரியனையும் கண்டு எவருடைய வல்லமையினால் இந்தச் சூரியன் பிரகாசிக்கிறதோ எவருடைய வல்லமையையும் சிலாக்கியமான தேஜஸையும் இந்தச் சூரியன் குறிப்பிக்கிறதோ அந்தப்பரமபுருஷனுடைய தேஜோமயம் நம்மனம் என்னும் ஆகாயத்தில் பிரகாசிக்கப் பெற்றால் இவ்வாறே மாயையும் நீங்கும் என்று நினைந்து அகமகிழ்ந்தார்.

அப்போது வைகறையில் துயிலெழுந்து, நதியில் நீராடி, பட்டாடை யணிந்து, பாகவத சுலோகங்களையும் பிரபந்தங்களையும் இனிமையாய்ப் பாடிக்கொண்டு அவ்வழியாக நடந்து வந்தான் ஓர் இளம்பிராயத்தனை வைணவப்பையன். வரும் வழியில் ஆலமரத்தடியை உற்றுநோக்கினன். அவனது கால்கள் அப்புறம் எழும்பவில்லை. ஏதோ மெய்ம்மறந்து நின்றவன்போல் தோன்றினான். அவனது கண்கள் இமையா நாட்டங்களாய்விட்டன. அவன் உட்டும்

அசைவற்று நின்றது. "ஆகா அவர் முகம் எவ்வளவு அழகுடையது; இவ்வுலகிற் பாயிருள் பருகிப் பகல் காற்று எழும் என்பர் பல்கதிர்ப்பருதி; இவரது திருமுக மண்டலமோ அக இருள்நீக்கி ஆனந்தம் விளைக்கும் தன்மையது; அநேக ஆயிரம் பருதியும் மதியும் ஒருங்கே திகழ்ந்தன என்ன இலங்கா நின்றது. அந்தச் சூரியனைக்கண்டு மலர்ந்தனவோ அந்நயனமாமரைகள்? அன்பெனும் நறவம் அருவிபோல் பொழியும் அக்கண்கள் அழகையோ அல்லது அவ்வதன அழகையோ யான் காண்பேன்" என்று தனக்குள் நினைந்து அம்முகத்தின் அழகையே கண் வாயிலாகப் பருகுவானாயினன். இன்னும் சிந்திப்பான். "இதுவரையும் நெடுநாளாய் நாம் அவாவுற்றிருந்த பொருளை இன்றைக்கு நாம் கண்ணாரக் கண்டோம். சீ, இப்பூலோக வாழ்க்கை என்னவாழ்க்கை, நமது கல்வியும் வியர்த்தமான கல்வி, வெறும்பேச்சொழிய வேறு பேச்சில்லை. நம் சந்தேகங்களை யெல்லாம் நிவிர்த்தி செய்து நல்வழி காட்டும் பேரருளாளர் இவரே," என்றெண்ணி அவர் அருகாமையில் வந்து மனப்பூர்வமாய்க் கைகூப்பி நின்றான். அவரும், நினைத்தது சரியே, என்றெண்ணி குழந்தாய், நீ யார்? யாதுகாரியம்?" என்றார்.

**பையன்:**—கல்விச்சாலை மாணவன். அநேக நாளாய் இயல்பாகவே என்மனதில் ஞானம் அடைய வேண்டும் என்னும் ஆசை குடிகொண்டிருந்தது; ஆயினும் யாதொரு வழியும் அறியேன்; அறியாமையைப் பற்றியும் அறிந்தார் உதவி யில்லாமையாலும் அநேக சங்கைகளும் எனக்கு உண்டு. ஐயம் போக்கவும் பெரியார் கிருபா நோக்கம் பெறவும் அடியேன் வந்தேன்.

**மகான்:**—சரி, நீ உன் கேள்விகள் அனைத்தையும் கேள்.

**பையன்:**—ஆம் அப்படியே. ஞானம் அடைய வேண்டுவது ஏன்? அதன் பயன் என்ன?

**மகான்:**—இவ்வுலகம் துக்க சொரூபம் என்பதை நீ அறிவாய். பார்க்குமிடமெங்கும் நிலையாமையும் அழிவும் மாறுதலும் நிறைந்திருக்கின்றன. உயிரைக் காப்பாற்றுவதற்காக சுயநயங்கருதி ஒருபிராணி மற்றொன்றைக் கொன்று ஜீவிக்கிறது. அதை மற்றொன்று பக்ஷிக்கிறது. பலவழிகளிலும் மனிதர் மனம் வருந்தவேண்டியிருக்கிறது. சுகமும் துக்கமும் ஒன்றைவிட்டு ஒன்று இணைபிரியாது ஒருங்கே இயங்குகின்றன. வாணாள்முழுதும் சுகம் அடைந்தவரில்லை; முழுதும் துக்கம் அடைந்தவரும் இல்லை. ஒவ்வொரு கண நேரமும் சுகமும் துக்கமும் மாறிக்கொண்டேயிருக்கிறது. சுகமே துக்கத்தை விளைக்கிறது; துக்கமும் சுகத்தை உண்டாக்குகிறது. இரண்டும் அநித்யம். அநித்யமான பொருள்கள் அழிவதையாவது மாறுவதையாவது காணும்போதும், நாம் விழைந்த பொருள் கிடையாமலும், கிடைத்த பொருள் நிலையாமலும், நாம்வெறுக்கும் ஒரு பொருள் தானே வந்து நேர்ந்தும், நேர்ந்தபின் நிலைத்தும், இன்னும் பலவிதமாயும் மாந்தர் அனைவரும் துக்கத்திற்கு உள்ளாகின்றார்கள். அந்தோ! அந்த துக்கத்தைப்பற்றி ஊன்றி யோஜிக்கும் போது எவனுடைய மனம் தான் இரக்கத்தால் இளகாது. அவ்வாறு அத்துக்கத்தைப் பற்றி அடிக்கடி சிந்தித்த புத்தர் என்னும் ஒருமகான் சகல போக்கியங்களையும் அனுபவத்திற்கு இன்றியமையாத செல்வம், இளமை, பேரழகுள்ள மங்கை, அதிகாரம், அழகு, புகழ் முதலிய துணைக்கருவிகள் பலவும் அமையப் பெற்றிருந்தும், ஜீவகாருண்ய நிறைவினால் துக்கத்தைச் சகிக்கமாட்டாதவராய் துக்கத்தின் காரணத்தையும் நிவாரணத்தையும் அந்நிவாரணத்திற்கு வழியையும் நான் கண்டாலன்றி இனித்திரும்பேன் என்று சபதம் செய்து அனைத்தையும் துறந்து சென்று, அலைந்து திரிந்து அரிதில் முயன்று இறுதியில் நிர்வாண சுகத்தைக்கண்டு பிடித்தார். அதுவே ஞானத்தின் எல்லை, ஞானத்தின் முடிவும் பயனும் அதுவே. ஒரு நாளும் குறையாததும், அழியும் பொருள் ஒன்றுடனும் சம்பந்தப்படாததும், அனுபவிக்குந் தோறும் இன்னும் அனுபவிக்கப் பேரவா உண்டாக்கும் தன்மையதும், பொதுவாய் நிறைவினால் உண்டாகும் அருவருப்பை அறியாததுமான, அழிவில் பேரின்பம், நிரதிசயாநந்தம், சச்சிதானந்தம், எனப்படும் ஆனந்தமே ஞானத்தின் பயன். யார்தான் அதை அடைய விரும்பார்கள்? இந்த உலகில் யார்தான் துக்கம் அடைவதிலேயே திருப்தியுள்ளவர்கள்? பையனே, பகவான் சிருஷ்டி செய்தது ஜீவன்கள் ஆனந்தம் அடையட்டும் என்றே யன்றி வேறல்ல.

**பையன்:**—எல்லாரும் சந்தோஷத்தையே நாடுகின்றனராயின், ஞானிகளை இதர ஜனங்களினின்றும் பிரித்து உயர்த்திக் கூறுவானேன்? அவர்கள் அனுபவிக்கும் ஆனந்தத்திற்கும் இதர சாமானியர்களின் ஆனந்தத்திற்கும் வித்தியாசம் என்ன?

**மகான்:**—எல்லாரும் சந்தோஷத்தையே நாடுகின்றனர் என்பது வாஸ்தவந்தான். ஆனால் பொன்னாலும் மாதராலும் பூமியாலும் அவ்வானந்தம் அடையலாம் என்று கருத்திற்கொண்டு இம்மூன்று சம்பந்தமாகவே தங்கள் வாணாளை வீணாகக் கழிக்கின்றனர். வீண் எனென்றால், இம் மூவகைப் பாசங்களினால் மனமானது கட்டுண்டு, அவைகளால் உண்டாகும் விஷய சுகத்தையே விரும்பி, மேலும் மேலும் ஆசையை அபிவிர்த்தி செய்து ஆசை நிறைவேறிய பின் உண்டாகும் அருவருப்பையும் ஆசையின் ஆரம்பத்திலும் நடுவிலும் முடிவிலும் சதாகாலமும் மனதில் சஞ்சலம் உண்டாவதால் வரும் துக்கத்தையும் சிறிதும் கவனியாமல் சுகவேடம் பூண்டு வரும் துக்கத்தை சுகமாகக் கருதி மயங்கித் துன்பமுற்று மறுபடியும் அவ்வாறே முயன்று சிறிது நேரமாயினும் ஆசையற்ற நிலையின்



சுகத்தின் ருசியை அறியாதவராகின்றார். குழந்தாய், யான் தேச சஞ்சாரஞ்செய்யுங்காலங்களில் குபேர வாழ்வில் இருந்த அளவிறந்த செல்வம் உடையார் பலரைக் கண்டு, உமது வாழ்வில் திருப்தி தானோ, மனதில் சமாதானமும் ஆனந்தமும் உண்டோ என்று கேட்டேன். உண்மையான சுகம் எங்களுக்கு ஏது என்றார்கள். பெரிய கல்விச் சாலையில் அநேக நீண்ட பெரிய பட்டங்களையும் புகழையும் சுமந்து நின்ற கல்விமான் அநேகரையும் கண்டேன். அவர்களும், எல்லாம் சந்தேகமே ஒழிய வேறில்லை, ஒன்றும் திட்டமாய்த் தெரியாமல் இருக்கும்போது சமாதானம் எப்படி உண்டாகும் என்றார்கள். இவர்கள் எல்லாரும் தங்கள்தங்கள் அனுபவத்தை உள்ளபடி யறிந்து உண்மையை உணர்த்தினவர்களே தான். ஊண், உடை, உறக்கம் என்னும் மூன்றும் இல்லாமற் போக போக்கியங்களைச் சிறிதும் லக்ஷியம் செய்யாத ஒரு சன்னியாசியின் மனதில் உள்ள சமாதானமும் முகமலர்ச்சியும் இவர்கள் யாரிடத்திலாவது உண்டோ? ஏன்? அழியும் பொருள்களைப் பற்றிவரும்சுகம் பொருள்கள் உள்ளமட்டும் அன்றோ? அவை எப்படி நீடித்து நிற்கும்? செல்வம் செல்வம் (செல்வோம்) என்றும், தங்கம் (தங்கோம்) என்றும் வையம் இப்புவியில் ஒன்றையும் வையம் (வையோம்) என்றும், கூறி வருகிறதை யார் கவனிக்கிறார்கள்? தரித்திரம் இனிமையான குரலோடுநாம்தரித்து இரம் (இருக்கமாட்டோம்) என்று மனிதருக்குத் தேறுதல் சொல்லுவதையும் யார்தான் கவனிக்கிறார்கள்! அழியுந் தன்மையைக் கண்டு மனம் அஞ்சாமல் ஆசை கொள்வது ஆச்சரியப்படத் தக்கதே. அணுகமுடியாத செந்தணலை அணிந்து கொள்ளும் மாணிக்கம் என மயங்கி அதைமார்போடணைத்துக்கொள்வார் எத்தனை மாந்தர். என்னே, என்னே நெருப்பெனத் தெரிந்துநீங்கும் பெரியாரைச்சிரிப்பாச்சிரித்து இகழ்பவர்எத்தனை சிறியார். அழிபொருள்களின்மேல் ஆசைவைத்து அவைகளால் ஆனந்தம் அடையலாம் என்று எண்ணுகிற எல்லாரும் முடிவில் தம் பெருந்தப்பைத் தாமே கண்டுகொள்வர். யாவரும் விரும்புவது ஒன்றேதான். சரியான வழிகளில் செல்லுபவர் அதை அடைவார்; மற்றவர் வழிதப்பி யலைந்து மனம் வருந்துவர். உதாரணமாக, பையனே, உனக்கு மணம் நடந்தாயிருக்கும். மனைவாழ்க்கையின் சுகம் தெரிந்திருக்கும். நீயோ மெத்தப்படித்தவன். சற்றே, உனது இல்வாழ்க்கை எவ்விதம் இருத்தல்வேண்டும் என்று நீ தீர்மானித்திருக்கிறாயோ அதை என்னிடம் உரை, பார்ப்போம்.

# வஸந்த மாளிகை

## VASANTHA MALIKAI

### அத்தியாயம் 12

அன்றுகாலை சுமார் 8-மணியிருக்கலாம். மதுரைக்கு வடக்கே சுமார் 12மைல் தூரத்திலுள்ள அழகாபுரி என்ற கிராமத்தில், பெருஞ்சாலைக்கடுத்த பெருமாள் கோயில் திண்ணையில், துவாதச நாமந்தரித்துக் கழுத்தில் துளஸிமணி மாலைகளணிந்த ஓர் வைஷ்ணவ ஸ்வாமிகள், ராமாயண காலக்ஷேபஞ் செய்துகொண்டிருக்கின்றார். கோயில்களிலுள்ள ஓர் பெரிய ஆலமரத்தடியில், அவ்வூர் ஜனங்கள் உட்கார்ந்து பக்திச்ரத்தையுடன் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்விதமாக இளைய பெருமாள் சக்கரவர்த்தி திருமகனுடைய செந்தாமரைபோன்றதிருவடித் தாமரைகளில் சேவித்து, திருமேனியை—என்னப்பனே ராகவா!—ராமானுஜா!—இவ்விதமாகத் திருமேனியில் ஈடுபட்டு—அண்ணா! இந்த எரிஞ்சுபோட்டமஹாபாபியா யிருக்கின்ற, லோககண்டகன், தேவகண்டகன்—"

என்று சொல்லிக்கொண்டு இருக்கையில், அச்சிறுசபையினின்றும் 'கலகல' வென்ற ஓர்சத்தம் பிறந்தது. எல்லோரும் திடுக்கிட்டெழுந்து கலைந்து நான்கு பக்கங்களிலும் சென்றார்கள். பாகவதரும் கதையை நிறுத்தினர். திடீரென்று சம்பவித்த இவ்வளவு குழப்பத்துக்கும் காரணம் யாதென்று விசாரிக்கத் துணிந்தவர் யாருமில்லை.

கடைசியாக, நமது தர்மராஜன் ராணுவ உடையுடன், தன் குதிரையைக் கையில் பிடித்துக் கொண்டு கோயில் முன் ப்ரவேசமானான்.

அக்காலத்தில் ராணுவவீரரைத் தற்செயலாய்க் கண்டுவிட்டால், க்ராமத்தார்கள் பயப்படுவதும் எதிரில் கூடநிற்காமல் ஓடிப்போவதும் வழக்கம்.

தர்மராஜன் அதிவேகமாய்க் காட்டுப்பாதை செல்லுகையில் தன் குதிரையின் லாடங்கள் வீழ்ந்துவிட்டன. அதனால் தான் அதைச் சவாரி செய்யாது கையில் பிடித்துக்கொண்டு அவ்விடம் வந்து சேர்ந்தான்.

தான் வந்ததும், என்ன என்று கூட விசாரிக்காமல் எல்லோரும் கலைந்து போகும் கோலத்தைப் பார்த்துத் தர்மராஜன் சற்றுத் திகைத்து நின்றான். அத்தருணத்தில், ஆலமரத்துக் கொப்பிலிருந்து, கறுத்த சரீரமும், அம்மைத் தழும்பு முகமும். நெற்றியில் நாமமும், அரையில் தார்ப்பாய்ச்சிக் கட்டிய ஆடையுமுடைய, சுமார் 14-வயதுள்ள சிறுவன் திடீரென்று குதிரை முன்குதித்தான். குதிரை வெருண்டது. தர்மராஜன் அதை அடக்கி நிறுத்திக்கொண்டான்.

கீழே குதித்தபையன் ஒருதடவை மணலில் புரண்டெழுந்து 'அப்பப்பா! கால் போச்சே! கால்போச்சே! என்று சொல்லிப் பாசாங்குசெய்து சிரித்துவிட்டு, பல்லைக்காட்டிக்கொண்டு, தர்மராஜன்முன் நின்றான். இதையெல்லாம் சற்று தூரத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்த அவன் அருமைப்பாட்டியார், 'அடேடே! அடியோடே போகிறபிள்ளை அடே! அடிமாழி! இங்கேவாடா! அடிமாழி! அங்கே போகாதேடா! சிப்பாயடா அவன் சிப்பாயடா! ஐயையோ! பாவிபிள்ளை! என் வாயிலே மண்ணைப்போட்டுடாதேடா!' என்று கைகளைப்பிசைந்துகொண்டு அலறிக்கொண்டு நின்றாள்.

கதையை நிறுத்தின பாகவதர் ஒன்றும் செய்யத்தோன்றாதவராய் 'ஆஞ்சனேயா! சக்கரத்தாழ்வாரே,' என்று ஸம்போதனஞ்செய்து அவர்கள்பேரில் பாரத்தைப்போட்டுவிட்டுச் சும்மா இருந்துவிட்டார்.

பையன் தைர்யமாய், தர்மராஜனை நோக்கி, 'என்னவோய்! என்ன! என்னவேணும்! பூசைவேளையிலே கரடியை விட்டு ஓட்டினாற்போல, எங்கே வந்தார் என்று வினவ,

**தர்மராஜன்:**—பையனுடைய தைர்யத்தை மெச்சி பையா!—

**பையன்:**—'என்ன, பொய்யா!'

**தர்மராஜன்:**—'ஏ! ஏ! கோபித்துக் கொள்ளாதேயும் பிள்ளாய்—'

**பையன்:**—"என்ன? சொல்லித்தொலையுமே! உடுப்புப்போட்டிட்டாக்காக்கண்டவிடத்தெல்லாம் நொழையலாமென்னு பாத்துக்கிட்டீரோ—"

**தர்மராஜன்:**—"இல்லையப்பா—"

**பையன்:**—"என்ன லொள்ளையப்பா—?"

**தர்மராஜன்:**—"பொறும்பிள்ளாய்—"

**பையன்:**—சீக்கிரஞ் சொல்லும்—"

**தர்மராஜன்:**—'குதிரைக்கு லாடங்கட்டணும்—'

**பையன்:**—"அதற்காகப் பெருமாள் கோவிலுக்கு வந்தீரோ? நல்லாயிருக்குதே தென்னமரத்திலே புல்லுப் பறிக்க ஏறின வியாபாரமாய்—"

**தர்மராஜன்**—இல்லேபையா! எனக்கு இந்தப்ரதேசமெல்லாந் தெரியாது. ஒரு கொல்லனிருக்குமிடம் நீ சொன்னால்' என்று சொல்லி ஓர் வெள்ளி நாணயத்தை யவன் கையில் கொடுக்கப் பையன் அதை வாங்கிக் கண்ணிலொற்றி ஒருகுதிகுதித்துக்கொண்டு வாரும் காட்டுகிறேன் என்றழைத்துச்சென்றான்.

தர்மராஜனும் அவனுடைய வழிகாட்டியாகிய பையனும், ஊரினின்றும், சுமார் 2 மைல்தூரம் வரை மலையடிவாரத் தோரமாய் ஓர் குகையை நோக்கிச் சென்றார்கள். எங்கும் நிர்மானுஷ்யமாயும், கொக், கொக், கொக், என்ற பக்ஷிகளின் ஒற்றைக் குரல்களும், தும்பிகளின் ரீங்காரங்களும், இடையிடையே, வேட்டை நாய்களின் ஒற்றைக்குரல்களும் மாத்திரம் கேட்டன. சுமார் 10 மணியாய் விட்டது. பையன் முன்னேசெல்ல, தர்மராஜன் குதிரையைப் பிடித்துக்கொண்டு, பையனுடைய பின்னழகையும், அவன் சேஷ்டைகளையும், கவனித்து வியந்து சென்றான். பையன் அடிக்கடி மரத்துண்டுகளையும் கற்களையும், வாய்ப்புக்களையும், பந்துபோல் துள்ளித்தாவித் தர்மராஜனைத் திரும்பிப் பார்த்துப் பற்களை இளிப்பதையும் கண்டு தனக்குள்ளேயே அடங்காச்சிரிப்புக் கொண்டான். வெய்யிலோ ஏற, தர்மராஜன் "என்னடா! சிறுபையன் வார்த்தையைக்கேட்டு, ஊரைவிட்டு எங்கேயோ போகிறோமே. கொல்லன் ஊரிலிருப்பானா மலையிலிருப்பானா? "

ஏன்னடா! துஷ்டப்பயல் நம்மைக் கேலிபண்ணுகிறானா" என்று சந்தேகிக்கலானான்.

கடைசியாய் மௌனத்தை முறித்து முன் செல்லும் பையனை நோக்கி "என்னழகப்பா? " என்று அழைத்தான்.

**பையன்:**—திரும்பிப்பார்த்து "ஓய் என் பெயர் உமக்கு எப்படித் தெரிந்தது?"

**தர்மராஜன்:**—உன் முகம் சொல்லுகிறதே. உன் பெயர், அதுதானா!

**பையன்:**—எங்க தாத்தா இருக்காரே, அவர் என்னை அழகாசாரி என்றழைப்பார்—இதோ இருக்காரே அழகர்—கள்ளழகர்—அவர் எங்க குலதெய்வம்—எங்கபாட்டி அழகப்பா என்பாள். என் சிநேகிதாள், அழகு எனறு அழைப்பார்கள்.

**தர்மராஜன்:**—உன் தாத்தா யார்?

**பையன்:**—அங்கே புடலங்காய் ராமாயணம் வாசிக்கல்லே. அவர்தான்.

**தர்மராஜன்:**—என்னபையா! புடலங்காய் ராமாயணமாவது?

**பையன்:**—என்ன ஓய் சுத்த—ஒன்னும் தெரியாதவராயிருக்கிறீரோ—நெரையப் புடலங்காய் வரும் இந்த ராமாயணம்—

**தர்மராஜன்:**—சரி இதிருக்கட்டும், இப்போ என்னை எங்கே அழைத்துச் செல்லுகிறாய்?

**பையன்:**—சரி. இதிருக்கட்டும். உம்மை எங்கே அழைத்துச் செல்லவேண்டும்?

தர்மராஜனுக்குக் கோபம் ஒருபக்கம் சிரிப்பு ஒருபக்கம் "பையா, கேலியாபண்ணுகிறாய்? எங்கேடாபோகிறாய்"? என்று சொல்லிக் கொண்டு பையனை எட்டிப்பிடிக்கப் போனான்.



பையன், துள்ளிக் குதித்துச் சற்று தூரத்தில் நின்று, தர்மராஜனைப் பார்த்துக் கை கொட்டிப் பற்களை இளித்துக்கொண்டு, இடி யிடி யென்று சிரித்துக்கொண்டு, " ஓய் ! என்னை நினச்சீர் நான் குட்டிச் சாத்தானில்லே. தம்பி போலே துள்ளிப் பறந்துடுவேன், நீர் திண்டாட வேண்டியதுதான் குதிரையை வைத்துக்கொண்டு—" என்றான்.

தர்மராஜன் இவ்வடங்காமாறித் துஷ்டப் பையனோடு இப்போது விரோதித்துக் கொள்ளுவது பேதமை யென்றுணர்ந்து "பையா உன்னைக்கட்டி முத்தமிட்டுக் கொள்ளவேணுமென்று தோன்றிற்று; அதற்காகத்தான் உன்னை எட்டிப்பிடித்தேன். நீ பிகு பண்ணிக்கொள்ளுகிறாய்.

**பையன்:**—எங்க பாட்டி என்னை முத்தமிடுவாள்—காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு என் தாத்தா சுதர்சனாசாரியார் முத்தமிடுவர் — இல்லாவிட்டால் அவருக்கு—எத்தனை புடலங்காய் கிடைத்தாலும், சோறு கிடையாது. நீர் என்னை முத்தமிடவாவது ? ஆகா ! ஒரு வேலை காரியமாகும்வரை கழுதையின் காலைப்பிடி; அப்படித்தானே" என்று தர்க்கித்தான்.

**தர்மராஜன்:**—கண்ணைக் கெடுத்த தெய்வம், மதியைக் கொடுத்ததென்ற பிரகாரம், இவ்வழகு கோரமான பையனுக்கு புத்திபுத்தி மாத்திரம் மதிகமாகவிருப்பதைப் பார்த்து வியந்தான்.

**தர்மராஜன்:**—பையா! கொல்லன் உலை எங்கே இருக்கிறது—"

**பையன்:**—அவசரப்படேல், சரி இருக்கட்டும். நான் ஊரிலிருந்தால், இதற்குள்ளே, ஒரு கூடை நவ்வல்பழமாவது பறித்துத்தின்றிருப்பேனே உம்மோடே வந்து எனக்கு என்னலாபம்?

கொல்லன் உலைகாட்டினால், நீர் எனக்கென்ன உபகாரம்—!

**தர்மராஜன்:**—நீ கேட்பது—"

**பையன்:**—சரி அதேபோதும். நான் கேட்கும் போது—நீர் கொடும். ஞாபகமிருக்கட்டும் " காரியமான பிறகு கழுதையின் காலை விடு " என்று போய் விடாதேயும் நான்—கொள்ளிப்பையல்—லேசு என்று நினைத்துவிடாதேயும்

**தர்மராஜன்:**—தெரியுமப்பா! கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பலாகாது—"

**பையன்:**—ஞாபகமிருக்கட்டும், கூடிய சீக்ரம், புது அரமனைமந்திரி கட்டாரே அதற்கு க்ருஹப்ரவேசத்துக்கு, எங்கதாத்தாவருவார், நானும்வருவேன்.

**தர்மராஜன்:**—உங்களுக்கென்ன வேலை? இரும்புப் பட்டரையில் ஈக்கு என்னவேலை?

**பையன்:**—ஹோ பருப்பில்லாமல் கல்யாணமா? இந்த ராஜாங்கத்தில் என்ன எழவு நடந்தாலும் எங்க தாத்தா போகாமலா நடக்கும்—"

## அத்தியாயம் 13

## அக்கொல்லனுடைய மாயம்

நமது கதாபுருஷர்கள் இவ்வாறு சம்பாஷித்துகொண்டே கடைசியாய், அவ்வழகர்மலையின் ஓர்க் குகைமுன் வந்து சேர்ந்தார்கள்.

பையன் திடீரென்று தர்மராஜனை நோக்கி, கை குவித்துக்கொண்டு" ஓய்உமக்குக்கோடி புண்யமுண்டு நான் சொல்வதை மாத்திரம் கேளும். ஏதாவது, மீறிச் செய்தீரோ, நம்ம இரண்டுபேர் தலைகளும் வெடித்துப்போய்விடும். இங்கே யிருப்பவர் ஓர்பெரிய சித்தர். மாந்த்ரீகம், கருவித்தை, மூலிகைவைத்யம், ரஸாயனம் எல்லாம் தெரிந்தவர். உலகத்தைப் புரட்ட வேண்டுமானாலும் புரட்டிவிடுவார். அவர் மனிதரைப்பார்ப்பதுமில்லை. அவரை மனிதர் பார்க்கவும் ஆகாது—"

**தர்மராஜன்:**—அதிக சந்தேகத்துடன் " பையா! கேலியா பண்ணுகிறாய்? கொல்லன் உலைக்கு அழைத்து வருவதாய்ச் சொன்னவன் என்னெல்லாமோ பிதற்றுகின்றாயே" என்ற உரக்கச் சொன்னான்.

**பையன்:**—துள்ளி சற்றுத் தள்ளி நின்று " ஓய் ஓய் ! இரையாதேயும் ஏதோ அனர்த்தந்தான். உம்முடைய குதிரைக்கு லாடந்தானே கட்டவேணும், நான் செய்துவைக்கிறேன். நான் சொல்லுகிறபடி மாத்திரம் கேளும். இல்லையோ, உம்முடைய வழி பார்த்துச்செல்லும். அப்பப்பா ! எங்கம்மாளுக்கு நான் தான் ஒருபிள்ளை.

**தர்மராஜன்** ஒன்றும் நிர்ணயிக்கத்தோன்றாதவனாய் " பையா ! நீ என்ன சொல்லுகிறாய் ? அப்படியே செய்கிறேன், " என்று வெறுப்புடன் சொன்னான்.

**பையன்:**—" இதோபாரும். இந்த ஆலமரத்தில் குதிரையைக்கட்டும். அதனடியிலிருக்கும் பீடத்தல், ஒரு வராகன் நாணயத்தைவையும், என்னுடன் கூட இந்தப் புதரில் மறைந்து கொள்ளும். கண்களை நன்றாய் மூடிக்கொள்ளும். கண்ணைத்திறந்தீரோ தலைவெடித்துப்போம். அப்புறம் என்னைச் சொல்லாதேயும்—"

தர்மராஜன் பையன் சொன்னபடி செய்து விட்டு, "ஏதோமோசடியாயிருக்கிறதே. குதிரைக்கேமோசம் வந்து விடுமோ என்று சங்கித்து, " பையன் கையை இறுகப்பிடித்துக்கொண்டு, புதரில் மறைந்தான், பையன் தன் உதடுகளைக் குவித்துக்கொண்டு, " ஸ், ஸ், ஸ்," என்று மூன்றுதரம் சீதியடித்தான், தர்மராஜன், கண்களை மூடுவதும் திறந்து பார்ப்பதுமாயிருந்தான். ஆனால், தனக்கு உபதேசித்த பையன் கண்ணைத்திறந்து பார்ப்பதும், தான்திறக்கும் பொழுது மூடுவதுமாயிருப்பதைக் கண்டான்.

இதில் எதாவது மோசம் போகா வண்ணம் கூடியவரை ஜாக்ரதையா யிருக்கவேண்டு மென்ற எண்ணத்துடன் பையன் கையை யிறுகப்பிடித்துக் கொண்டு, புதரின் இடைகள் வழியாய், தன் குதிரைப்பக்கத்தில் கவனித்துக் கொண்டிருந்தான்.

மூன்றுவது சீத்தியடித்த ஒரு நிமிஷத்துக் கெல்லாம், அப்பீடத்தடியில், சம்மட்டியால் அடிக்கும் ஓசை கேட்டது. இவ்வாறு, சிறிது நேரம் சென்றதும் தர்மராஜன் எட்டிப்பார்க்கவே தான்வைத்த நாணயத்தைக் காணேம். குதிரைக்கு லாடம் கட்டியாயிருந்தது. உடனே திடீரென்று! தன் உடைவாளை யுருவிக்கொண்டு புதரைத்தாண்டிக் குதிரையண்டை செல்ல, அப்பொழுது தான், ஓர் மனிதன் சம்மட்டியும் கையுமாய், அருகிலிருந்த நுழைகாட்டில் மறைவதைக் கண்டான். உடனே, தர்மராஜன் / "அடே! யாரங்கே நில், இல்லாவிட்டால், இந்தத் துப்பாக்கியால் சுட்டுவிடுவேன்," என்று கம்பீரமாய்ச் சத்திக்க, இதற்குள் பையன் பின்தொடர்ந்து, தர்மராஜன் கைகளைப் பிடித்துக்கொண்டு, என்ன ஐயா! வீரரே! இது தானு ந்யாயம், உம்முடைய காரியமானுல் நீர் போகவேண்டியது தானே. அவர் யாராயிருந்தாலென்ன உமக்கு:? . ஓய் ஓய் உமக்குக் கோடிபுண்ணிய முண்டு" என்று கெஞ்ச,

"பையா! நமது மங்கம்மாள் மஹாராணியார் ராஜ்யத்தில் கபடமென்பதே கூடாது. இவன் யோக்யனுனல் என் இவ்வாறு, ஒளிந்து திரியவேண்டும்? இதில் ஏதோ மோசமிருக்கிறது: துஷ்ட நிக்ரஹம் சிஷ்டபரிபாலனமென்பது ராஜதர்ம மல்லவா? அதை நிறைவேற்றுவதில் ராஜபக்தியுள்ள ஒவ்வொருவனும் தன்னுலியன்றவரை ராஜாங்கத்தாருக் குதவி செய்ய வேணுமல்லவா?" என்றுன்.

இதற்குள், கொல்லன், திரும்பிப்பார்த்து, தன் சம்மட்டியைக் கிறு கிறு என்று சுழற்றிக் கொண்டும் "அடே டே யாரடா, ஆண்நாற்றம், பெண்ணுற்றம், அடிமலயாள பகவதி மாயாவதார, ஓடிவா, ஓடிவா! செக்கமமா, படவத்ரகாளி! என்று கோஷித்து தர்மராஜனண்டை ஓடிவந்து மறுபடி, பையா நீ செய்த வேலை, உன்னைமுதலில்" என்று சொல்லி, பையன் மேல் ஓங்கினுன். இதற்குள், தர்மராஜன். அச்சம்மட்டியைத் தன் கத்தியால் தகைந்து, பிடுங்கிக் கொண்டு, 'அடே துஷ்டா! இனி நீ என்வசப்பட்டு விட்டாய், உண்மையைச் சொல் நீயார் என்று, இல்லாவிட்டால்—"

பையன், இருவர் நடுவில் புகுந்து மண்டி போட்டு, "நீங்களிருவரும் சண்டை போடாதேயுங்கள். சமாதானமாய்ப் . போங்கள்" என்று பிரார்த்திக்க, கொல்லன், சிரித்து விட்டு, "வாருமையா வாரும் நமக்குள் என்ன சண்டை யிருக்கிறது' என்று சொல்ல, மூவரும் சமாதானமாய் குகைக்குள் நுழைந்தார்கள்.

சிறிது நேரத்துக் கெல்லாம் ஓர் அதிர்வேட்டுக் கேட்டது அந்தக் குகாப்ரதேசம் முழுதும், தீயால் சூழப்பட்டு விட்டது.

உடனே, அப்பக்கத்தினின்றும், நமது கதா புருஷர் மூவரும் உத்ஸாகமாய் வெளியே வந்தார்கள். கொல்லன் அங்கே மேய்ந்து கொண்டிருந்த ஓர் குதிரையைப் பிடித்துக் கொண்டு, ஆலமரத்தண்டை வந்து சேர்ந்தான். சற்று நேரம் உத்ஸாகமாயும் ரகஸ்யமாயும் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். பையன், இருவரிடமும் விடைபெற்றுக்கொண்டான். தர்மராஜன் ஒருவராகன் பையனுக்குப் பரிசளித்தான். பையன் அதைக் கண்களில் ஒற்றிக்கொண்டு, ஒரு குதிகுதித்துவிட்டு, "ஞாபகமிருக்கட்டும். ஒரு ஏழைப்பையன், அழகப்ப னிருக்கிறுன் என்று ஞாபகம் இருக்கட்டும். 'யானைக் கொருகாலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம்வரும்' நான் உம்மை ஒரு வரங்கேட்க நேர்ந்தாலும் நேரும்" என்று சொல்லி விட்டுப் பதிலெதிர்பாராமலே அழகாபுரி செல்ல குறுக்குப் பாதையாய் ஓர் நுழைகாட்டில் மறைந்தான்.

அதிகதாமத மன்னியில், கொல்லனும், தர்மராஜனும் தங்கள் குதிரை மேறிச் சென்றுர்கள்.

**தர்மராஜன்:**—என் ஓய் ஆசாரியாரே! சொல்லுவதாய் வாக்களித்தீரே, உம்முடைய பேரென்ன?

**கொல்லன்:**—என்பெயர் மாயனுசாரி, மாயன் என்றழைப்பார்கள்.

**தர்மராஜன்:**—நீரோ நல்லவேலைக்காரராயிருக்கிறீரே, என் இவ்வாறு ஒளிந்து காலங்கழிக்க வேண்டும்? ஏதாவது குற்றஞ் செய்தாவது, ராஜதண்டனை யடைந்தாவது—

**மாயன்:**—ஐயா! நான் பிறந்தது முதல் என்னுல் கொஞ்சமாவது பிறருக் குபகார மிருந்திருக்குமே யொழிய, அபகாரம் செய்தது கிடையாது.

"பிறகு என்னகாரணம் இவ்வளவு ரகஸ்யத்துக்கு?"

மாயன் தன் கதையைச் சொல்லுகிறுன்.

வஞ்சனுசாரி யென்று ஒருவன், ஏதோ, இம்மலையிலுள்ள சித்தர்கள், உபதேசம் பெற்று, இவ்விருண்ட குகையில் ரகஸ்யமாயிருந்து 'ரஸவாதம் செய்து கொண்டிருந்தான். எனக்கும், ரஸவாதம் மூலிகைகள், சித்தர்கள், இவைகளிலெல்லாம், கொஞ்சம்'—அதிகப் பைத்திய முண்டு. நான், இப்பிரதேசத்தில், சுமார் 15 வருஷங்களுக்கு முன் திரிந்துகொண்டிருக்கையில், வஞ்சன் கண்ணிற் பட்டேன். அவனை நானடைந்து, உபதேசம் பெற்றேன். ஆனுல், சும்மா, அடுப்பு மூட்டுதல், விறகு சேகரித்தல், தண்ணீர் கொண்டுவருதல், மருந்து அரைத்தல், முதலான சாதாரணத் தொழில்களில் மாத்திரம் என்னை உபயோகித்தாரே யொழிய, கல்பம் சேர்ப்பது முதலான ரகஸ்யங்களில், என்னை நம்பி ஒன்றும் செய்யச் சொல்வதில்லை.

நாளடைவில், இவர்குணம் அவ்வளவாக நல்லதல்ல வென்றும், சூன்யம், கருவித்தை, பாஷாணம், வசிய மருந்து முதலான தீத் தொழில்கள் செய்து காலங்கழிக்கிறுர் என்றும், அவைகளை, என் மூலமாய் அனுப்புகிறுரென்றும், அறியாமலே, அவர்செய்யும் பாவத்துக்கு நானும் உடந்தை யாகிறேனென்றும் அறிந்து கொண்டேன்.

ஒரு நாள், குகைவெளியே சில ராஜபுருஷர்களுடன் ரகஸ்யம் பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுதே ஏதோ மோச ஆலோசனை நடக்கிறதென்று உணர்ந்தேன்.

வரவர என்னிடம் நம்பிக்கைமுற்றிலும் அவருக்குக் குறைந்துவிட்டது. ஒருநாளும் வெளியேபோகாத அவர் மறுநாள், என்னைப்பார்த்து "மாய! நீ இங்கேயே இருந்து பத்திரமாய்க் குஹையைப்பார்த்துக் கொள், நான் வெளியே சென்று இரண்டு தினங்களில் திரும்பிவருகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றுர்.

சுமார், ஒரு ஜாமப்பொழுதுக்குப் பிறகு, நான், இக் குகைக்குவெளியே உட்கார்ந்து கொண்டு, என் குருவின், குணத்தைப்பற்றியாலோசித்துக்கொண்டிருந்தேன். திடீரென்று, இப்பொழுது கேட்டாற்போல ஓர் அதிர்வேட்டுக் கேட்டது. குஹைமுழுதும், தீப்பற்றி எரிந்துவிட்டது. நல்லவேளை நான் தப்பினேன். எரிந்ததுபோக மீந்ததைவைத்து, நான் இந்தப்பையன் தயவால் காலங்கழிக்கிறேன். நான் இறந்து விட்டதாய் என் குருவினைத்திருக்கிறுர். நான் உயிருடன் இருக்கக்கேட்டால், என்னை ஹிம்ஸிக்க வேண்டிய ஏற்பாடு செய்வாரென்றும், இப்பொழுது அவர்ஏதோ ராஜாங்க உத்யோகஸ்தராயிருக்கிறுரென்றும், இந்தப்பையன் மூலமாயறிந்து கொண்டேன். இதுதான் என் ரகஸ்யம்"

---

**கிருஷியை விர்த்தி செய்ய அமெரிக்கரின் ஏற்பாடு.**—பலவித காரியங்களும், கிருஷித்தொழிலுக்கு வேண்டிய உபகரணங்களும் அடங்கிய காட்சி சாலை பொருந்தியவண்டிகள் 5 முதல் 10 வ. ரயில்மாகாணம், மாகாணமாக போகும்படி 81 மா ணங்களிலுள்ள கிருஷிகல்லூரிகள் ஏற்பாடு செய்கின்றன. அத்தொடர் வண்டிகளுடன் செல்லும் மனிதர்கள் கிருஷி ஸாஸ்திர நிபுணர்கள் ஆங்காங்கு இறங்கி 2 மணி நேரம் முதல் 6 மணி நேரம் வரையில் இடத்திற்குத் தகுந்தபடி தங்கி குடியானவனுக்கு வேண்டிய வற்றைப் பற்றி உபந்யாசம் செய்வார்கள்.



# கமலரேகை

அல்லது

"இந்திரபுரி" இரகசியம்

# KAMALAREKA

OR

# THE SECRET OF "INDRAPURI"

## முதலாம் அத்தியாயம்

### அயலூர்வாசியின் அதிசயப்பிரவேசம்

"நல்லது; அவர் இறந்துபோனுல்?—"

"அவர் இறந்துபோனுல்,—இரகசியம் நம்முடையது தான்"

"நாம் நம்முடைய நோக்கங்களைப் பரஸ்பரம் அறிந்திருக்கின்றோ மாதலால், ஒருமுறை பேசி முடிந்ததைப்பலமுறைபேசுவதில்பயனில்லை" என்று முன்னவன் உரைத்துப் பிறருடைய காதில் விழாதிருக்கவேண்டி மெல்லிய குரலுடன் "உண்மையில் அவர் இறந்துபோனுல் நமக்கு நலமென்றுதான் நீர் கருதுகின்றீரோ?" என்று மீண்டும் வினவினுன்.

அவன் கேட்ட இக்கேள்விக்கு மற்றொருவர் எதும் பதில் கூறுமல் சிறிதுநேரம் மயங்கினுர். அப்பெரியாரின் சிறுவிரலில் அணியப்பட்டிருந்த வைர மோதிரம் விளக்கு ஒளியினுல் ஆயிரம் விளக்குகளைப்போல் பிரகாசித்தது.

"நாம் கருதுகிறபடியே எப்போதும் நம்முடைய எண்ணங்கள் நிறைவேறுகின்றனவா? இல்லையே?" என்று சிறிதுநேரம்கழித்துப் பதில் உரைத்தார் அவர்.

"ஆனுலும், ஐயா, ஒரு பெரும்பலனை உத்தேசித்து நாம் வேலைசெய்ய ஆரம்பிக்கும்போது, நம்முடைய எண்ணம் கைகூடும் என்னும் நம்பிக்கையுடன்தானே ஆரம்பிக்கவேண்டியிருக்கிறது? அது இருக்கட்டும்;—ஐயா, தொகை இவ்வளவு என்று நீர் இன்னும் தெரிவிக்கவில்லையே?" என்று கமலநாதன் அந்த மனிதரைக் கேட்டான்.

"இருநூற்றைம்பதினுயிரம் ரூபாவுக்குமேல் மதிப்பிடலாம்,—இரத்தின கற்களைத்தவிர!" என்று அவர் விடைபகர்ந்தார்.

"இரண்டரை இலட்சம் ரூபாவா?" என்று அதிசயத்தோடுகூவி, "இரத்தினக்கற்களின் மதிப்பு எவ்வளவு இருக்கும்?" என்று ஆவலோடு கமலநாதன் கேட்டான்.

"அவைகள் குறைந்தது இரண்டரை இலட்சம் ரூபா பெறுமென்று இரத்தின வியாபாரிகள் அபிப்பிராயப்படுகிறுர்கள். ஆதலால் நம்முடைய முயற்சி கைகூடினுல் உன்னுடைய பாகத்துக்கு இரண்டரை

லட்சம் ரூபா கிடைக்கும். எனக்கும் அவ்வளவு தொகை கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் முதலில் நாம் பணத்தை ஏராளமாய்ச் செலவு செய்யும்படி நேரிடும். உன்னிடம் செலவு செய்வதற்குப் பொருள் இல்லாவிடினும் நான் உனக்குப் பொருளுதவி செய்யச் சித்தமாயிருக்கின்றேன்" என்று அந்த மனிதர் புகன்றார்.

"நான் தங்களுடைய தயாளகுணத்திற்காக வந்தனம் செய்கின்றேன். தயாளமே உருக்கொண்டு வந்ததுபோல் தாங்கள் காணப்படுகிறீர்கள்" என்று கமலநாதன் கூறிப் புன்னகை செய்தான்.

"நம்முடைய முயற்சி பெரும் முயற்சியானதால் நமக்குக் கிடைக்கும் இலாபமும் ஸரியாகவே இருக்கும். **அரசனுக்கு மாத்திரந்தான்** அந்த இரகசியம் தெரியும். அவர்தான் மிகுந்த ஜாக்கிரதையோடு அவ்விரகசியத்தைக் காப்பாற்றி வருகின்றார். அதை மாத்திரம் அறிந்து நாம் கைப்பற்றிக்கொண்டால் நம் இருவருக்கும் தனித்தனி இரண்டரை இலட்சம் ரூபா கிடைக்கும்,—நாம் அந்தப் பெண்ணை நமக்கு இடையூறாக இல்லாதபடி ஒழித்துவிடுவோமானால் இன்னும் அதிகமான பொருள் கிடைத்தாலும் கிடைக்கலாம்" என்று அந்த மனிதர் கூறினார்.

"அரசகுமாரியைச் சொல்லுகின்றீரோ? அவளை எவ்விதம் ஒழிப்பது?" என்று கமலநாதன் கேட்டான்.

"ஓ! இதுதானா பிரமாதம்!" என்று அந்த மனிதர் ஆச்சரியத்தோடு கூவி, "மிகச்சுலபமாக நாம் இக்காரியத்தைச் செய்து முடித்துவிடலாம். **கமலரேகையை** நாம் எவனுக்காவது விவாகஞ் செய்து கொடுத்துவிடலாம் அவள் பேரழகும் பெருவனப்பும் இனிது வாய்ந்தவள். அவளுக்கு வயது இரண்டு குறைய இருபதுதான் ஆகிறது!" என்று மறுபடியும் விரித்து உரைத்தார்.

"நல்லது; உண்மையைக் கூறுமிடத்து நீங்கள் சொன்னவிஷயம், அதிசயமும் ஆச்சரியமுமான ஒரு கதைபோல் இருக்கிறதேதவிர வேறன்று. அவ்விஷயத்தின் உட்புகுந்து விவரங்கள் எல்லாவற்றையும் அறிந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்பவில்லை. ஆனால், அந்த விஷயம் நம்பக்கூடியதாக வில்லை என்று மாத்திரம் சொல்லாமலிருக்க என்னால் முடியவில்லை" என்று கமலநாதன் ஆச்சரியத்தோடு கூவினான்.

"ஆமாம்; எனக்குத் தெரியும்,—எனக்குத் தெரியும்!" என்று அந்த மனிதர் பரபரப்புடன் கூறி "வேறு சில உண்மைகளைப்பற்றி ஏதுமே அறியாத உனக்கு, நான் சொல்லும் உண்மையான விஷயம் ஒரு மாயக்கதையைப்போல் தோன்றுவது இயல்புதான். ஆனால் அந்த உண்மைகளைத் தற்சமயம் வெளிப்படுத்தாமல் இரகசியமாகவே நான் வைத்திருக்கவேண்டியவனாயிருக்கிறேன். இருந்தபோதிலும், நான் சொன்ன விஷயம் முற்றும் உண்மையே என்பதாக இன்னொருமுறைவற்புறுத்திக்கூறுகின்றேன். நாம் செய்து முடிப்பதாக உத்தேசித்திருக்கும் காரியம், முயற்சிக்குத் தகுந்த பலனைக் கொண்டுவந்து விடும் என்பதை உண்மையாய் நம்பி, நீ என்னுடன் கலந்து வேலை செய்வதற்கு இசைந்தால், அவ்வுண்மைகளை நாளடைவில் நீயே அறிந்துகொள்ளுதல் கூடும்" என்று அந்த மனிதர் கமலநாதனுக்குப் பதில் உரைத்தார்.

அந்த மனிதர் கூறியது உண்மையில் கமலநாதனுக்குப் பேராச்சரியத்தையே விளைவித்தது. அவர் சொன்னதை அவன் ஒரு அதிசயமான கதை என்றே கருதினான். ஆனாலும், ஒரு விஷயத்தின் உண்மையை யெந்திரிபற அறிந்த ஒரு மனிதன், எவ்வளவு சாவதானத்துடனும் அமைதியுடனும் நிச்சயத்துடனும் பேசுவாரோ, அம்மாதிரியாக அம்மனிதன் பேசியதானது கமலநாதனுக்குச் சிறிது நம்பிக்கையையுங் கொடுத்தது. கமலநாதன், விஷயத்தின் விவரங்களைக் கேட்டபோதும் அம்மனிதர் சிறிதும் ஆலசியமின்றி உடனுக்குடன் பதில் சொன்னார். அந்த மனிதர் பயித்தியக்காரரா யிருக்கவேண்டும், அல்லது சதியாலோசனையிற் கைதேர்ந்த ஒருபெரிய மாயக்காரனா யிருக்கவேண்டும் என்று கமலநாதன் உன்னினான். இரண்டொரு மணி நேரத்திற்கு முன்புதான் கமலநாதன் அந்த மனிதரைத் தற்செயலாகச் சந்தித்தான். விதியின் வலிமையே அவர்கள் இருவரையும் இவ்விதம் சந்திக்கும்படிச் செய்தது என்றுஞ் சொல்லலாம். இவ்விதம் **தற்செயலாய் நேரிடும்** சிற்சில **சந்தர்ப்பங்களால்** மனிதர்களுடைய வாழ்நாளை ஒருவழியிலிருந்து வேறொருவழியில் சென்று விடுகிறதை நாம் இவ்வுலகத்தில் அனுபவத்தில் பார்ப்பதுபோலவே, அந்த மனிதருடைய சந்திப்பினால் கமலநாதனுடைய ஜீவியதசை முற்றும் மாறுகிறது என்பதை இக்கதையிற் காணலாம். அந்த மனிதர் தேகப்பயிற்சியில் கைதேர்ந்தவராய் இருக்க வேண்டுமென்பதை அவருடைய சரீரத்தோற்றம் இனிது புலப்படுத்திற்று. அகன்ற மார்பும், திரண்டுருண்டு பருத்த புஜமும், கல்லினைப்போல் திண்ணென்ற சரீரமும் வாய்க்கப்பெற்ற அவருக்கு, வயது நாற்பது அல்லது நாற்பத்தைந்துதான் இருக்கும். அவருடைய தேகவளர்ச்சியும், பருமனும், அவருடைய பேச்சின் போக்கும் அவர் பாண்டிநாட்டைச் சேர்ந்தவராயிருத்தல் வேண்டுமென்பதை இனிது விளக்கின. கமலநாதன் சாமானியமான ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்து, பெற்றோரின் முயற்சியினால் நன்றாய்க் கல்விபயின்று, ஆனால் விதிவசத்தால் அக்கல்வியைக் கெட்ட வழிகளில் உபயோகித்து, எக்காலமும் சூதாடுவதையே தனக்குத் தொழிலாகக் கொண்டு, ஊரூராய்த் திரிந்து காலங்கழித்துவரும் ஒரு சிறுவனாவான். அவனுக்கு வயது இருபத்திரண்டு அல்லது இருபத்து மூன்றுதான் இருக்கலாம். சிறந்த அழகுவாய்ந்தவனாயும், தேகக்கட்டும் சரீரப்



பொலிவும் நன்கு பெற்றவனாயும் கமலநாதன் இருந்தானாதலால், அவனை யார்கண்டபோதிலும் அவனிடம் அன்புடன் நடந்துகொள்ளவே நினைத்தார்கள். அவன் அதிபாலியனாக இருந்தபோதிலும், பற்பல தேசங்களையும் சுற்றிப்பார்த்துப் பற்பல ஜாதியாருடனும் பழகியிருந்தானாதலால் உலகஅனுபவம் நிரம்ப வாய்ந்தவனாக இருந்தான். கமலநாதன் புதிதாக வந்த அந்தமனிதரை ஏற்கெனவே இரண்டொரு முறை சந்தித்திருக்கின்றான்,—ஆனால் அவருடன் வார்த்தையாடினதில்லை. **காஞ்சிபுரத்தில்** ஒருநாள் இரவு கமலநாதன் ஒரு சூது மண்டபத்தில் சூதாடிக்கொண்டிருந்தான். அந்த இடத்திற்கு அந்த மனிதரும் போய்ச் சேர்ந்தார். சூதாட்டம் கலைந்த பிறகு கமலநாதனும் அவரும் தனியாக இருந்தார்கள். அப்போதுதான் இக்கதையின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட சம்பாஷணை அவர்கள் இருவருக்கும் நடந்தது.

"ஐயா; தாங்கள் சொல்வனயாவும் உண்மையே! ஆனாலும் எந்த விஷயத்தைக்குறித்து, என்ன பலனைக் குறித்து நாம் வேலைசெய்யப்போகிறோம் என்பதை ஒருசிறிதாவது அறிந்துகொள்ளாமல் நான் எவ்விதம் தங்களுடன் கலந்துவேலை செய்யமுடியும்? தாங்கள் சொல்லுகிற விஷயம் எவ்வளவு பரமரகசியமாக இருந்தபோதிலும் என்னிடம் சொல்வதால் பாதகம் நேரிடாது. நான் அந்த இரகசியத்தைத் தலைபோவதாயிருந்த போதிலும், வெளிவிடாமற் பாதுகாப்பேன். நான் சொல்லுவதை உறுதியாய் நம்புங்கள். நான் சூதாடுவதைத் தொழிலாகக் கொண்டிருப்பவனயினும், சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பவன் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்" என்று கமலநாதன் கூறினான்.

"ஆமாம்; உன்னுடைய சிறந்த குணத்தை நான் நன்றாக அறிந்திருக்கிறேன். கடந்த ஐந்தாறு மாதகாலமாய் உனக்குத் தெரியாமல் நான் உன்னைப் பின்தொடர்ந்துவந்து, நீ செய்யும் ஒவ்வொரு காரியத்தையும், உன்னுடைய நடத்தையையும் மிகக் கூர்ந்து கவனித்து வந்திருக்கிறேன். அவ்விதம் கவனித்ததில் எனக்கு மனப்பூரணமான திருப்தியும் நம்பிக்கையும் ஏற்பட்டபடியால்தான் நான் உன்னை என் அந்தரங்கத்தோழனாய் ஏற்படுத்திக் கொள்ளத் துணிந்தேன். ஆனாலும் நான் சொல்லுகிற விஷயங்களில் ஒரு வார்த்தையாவது உன்வாயிலிருந்து எனக்குத் தெரியாமல் வெளிப்படுமாயின்,—உனக்கு நேருவது **மரணந்தான்**" என்று அந்த மனிதர் வற்புறுத்திக் கூறி எச்சரித்தார்.

"மரணமா?—என்க்கா?" என்று கமலநாதன் அச்சத்துடன் உசாவினான்.

"ஆம்; என்னை நீ காட்டிக்கொடுத்துவிட முயல்வாயானால், நீ நிச்சயமாயும் விரைவாயும் உயிர் துறப்பாய்! இது சத்தியம்! பிற்காலத்தில் நமக்குள் அபிப்பிராயபேதமும், பிறழ்ந்த உணர்ச்சியும் ஏற்படுதல் கூடாது! அதற்காக இப்போதே மனத்திலுள்ளதை நான் வெளிப்படையாய்ச் சொல்லிவிட்டேன்! ஜாக்கிரதை!" என்று அந்த மனிதர் மறுபடியும் எச்சரித்தார்.

"நம்முடைய உயிரைத் திரணமாக நினைத்து நாம் முயற்சி செய்வோமானால், அதனால் நாம் அடையும் லாபம் என்ன?" என்று கமலநாதன் கேட்டான்.

"நாம் இருவரும் பெரிய கோடீசுரர்களாக ஆகலாம்" என்று அந்தமனிதர் பதில் சொன்னார்.

"அந்த இரகசியம் எத்தகையது?" என்று கமலநாதன் கேட்டான்.

"வீணாக விஷயங்களை வளர்த்துவதால் என்னபிரயோஜனம்? கமலநாதா! நான் சொல்லுவதைக்கவனி. நீயும்பிறரை ஏமாற்றிப்பொருள் பறிப்பதில் கைதேர்ந்த சதிகாரன்; நானும் அப்படியே இருக்கின்றேன். உனக்கும் பணம் வேண்டும்; எனக்கும் பொருள் தேவை! நாம் இருவரும் ஒரேமனதுடன் கலந்து வேலைசெய்வோமானால் பெறும் பொருள் நம் இருவருக்கும் கிடைக்கும்! முன்யோசனை, சாமர்த்தியம், தைரியம், ஊக்கம், தளராத சிந்தை, பரஸ்பர உதவி இவைகளைத் துணையாக வைத்துக் கொண்டு நாம் இரகசியமாக வேலைசெய்வோமானால், அந்த இரகசியத்தை நாம் கண்டு பிடித்துவிடலாம்! மதுரையில் ஒரு மனிதர் இருக்கின்றார்! அவர் எத்தனையோ இலட்சம் ரூபாய்க்கு அதிபதியாய் இருக்கின்றார். ஆனால் அவ்வளவு ஆஸ்தியும் அதிரகசியமாய் வைக்கப்பட்டும் அவரால் பாதுகாக்கப் பட்டும் வருகிறது! அந்த மனிதர் அவ்வளவு இரகசியமாய் வைத்திருப்பதை நாம் கண்டு பிடித்துவிட்டால், அவ்வளவு ஆஸ்தியும் நம்முடையது தான்" என்று அயலூர் வாசி கமலநாதனிடஞ் சொன்னார்.

"அந்த மனிதனுடைய பெயர் யாது?" என்று கமலநாதன் வினவினான்.

"அவருடைய பெயர் **நன்மாறன்** என்பது. அவர் அடிக்கடி வெளியூர்களில் வசிக்கும் இயல்புடையவர். ஒரு நாளைக்கு அவர் மதுரையில் இருப்பார்; இன்னொரு நாள் தஞ்சையில் வசிப்பார்; மற்றொருநாள் சென்னையில் உறைவார்; வேறொருநாள் காஞ்சியில் வதிவர்" என்று அந்த மனிதர் கூறினார்.

"ஓ! அவரா? அவரைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன்! இரண்டொருமுறை அவரைப் பார்த்து மிருக்கிறேன்! அவரைப்பற்றி ஜனங்கள் ஏதேதோ பேசிக்கொள்ளுகிறார்கள்" என்று கூறிக் கமலநாதன் முறுவலித்தான்.

"ஆமாம்; நீ சொல்லுவது உண்மையே! அவர் ஒரு மாதிரியான இயல்புடையவராதலால், ஜனங்கள் அவர் சம்பந்தமாய்ப் பலவதந்திகளை எங்கும் பரவவிடுகிறார்கள்! அவருடைய மனைவியாகிய **மதன காந்தி** நாலைந்து வருஷங்களுக்கு முன்னர், திடீரென்று இறந்துபோனாள். தம்பதிகள் இருவரும்

மன ஒற்றுமையுடன் இல்லையென்றும், மதனகாந்தி சாதாரணமான சாக்காட்டினால் இறந்தவளல்லள் என்றும் ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள்" என்று அந்த மனிதர் கூறினார்.

"அதாவது, வியக்தமாய்ச் சொல்லப்போனால், 'நன்மாறனே தன் மனைவியைக்கொன்றான்' என்று சொல்லலாமோ?" என்று கமலநாதன் கேட்டான்.

அந்த மனிதர் வாய்திறந்து எதும் பதில் சொல்லாமல் "ஆம்" என்று சொல்லுபவரைப்போல் தலையை அசைத்தார்.

"தாங்கள் இப்போது சொல்லுகிற இரகசியத்திற்கும் மதனகாந்தியின் மரணத்துக்கும் ஏதாவது சம்பந்தமிருக்குமோ?" என்று கமலநாதன் சந்தேகத்தோடு வினவினான்.

"இல்லை; சம்பந்தம் இருக்குமென்று நான் நினைக்கவில்லை" என்று அந்த மனிதர் விடை பகர்ந்தார்.

"நினைக்கவில்லையா?" என்று கமலநாதன் அதிசயத்தோடு வினவி, "இந்த இரகசியத்தைப் பற்றி,—அதாவது நாம் கண்டுபிடிப்பதாக இருக்கும் இரகசியத்தைப்பற்றி—உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா?" என்று மீண்டும் கேட்டான்.

'அந்த இரகசியத்தின் இயல்பைப்பற்றி எனக்கு ஒன்றுமேதெரியவில்லைஎன்று நான்தான் முன்னமேயேகூறினேனே?" என்று அந்தமனிதர் சொன்னார்.

"அப்படியானால் நாம் துணிந்து வேலை செய்வது எப்படி? நாம் மிகுந்த முயற்சி செய்தும் கடையில் முயற்சிக்குத் தகுந்தபலன் கிட்டாமல் 'மலை கெல்லி எலிபிடித்த' கதைபோலானால் என்ன செய்வது?" என்று கமலநாதன் வினவினான்.

"இல்லை; நீ என்னைச் சரியானபடி அறிந்து கொள்ளவில்லை! ஒரு இரகசியம் இருக்கிறதென்றும் அதை வெளிப்படுத்தினால் இலட்சக்கணக்கான ரூபாய் கிடைக்குமென்றும் மாத்திரம் நான் இப்போது அறிந்துளேன்!" என்று அந்தமனிதன் கூறி நன்மாறனைப் பற்றிய சில விவரங்களையும் கமலநாதனுக்கு எடுத்துரைத்தான்.

நன்மாறன் என்பவன் பாண்டிய அரசர்களின் வம்சத்தில் பிறந்த ஒரு பெரிய ஜமீன்தார் என்றும், கிறிஸ்து பிறந்த ஐம்பதாவது வருஷம் முதல் எழுபத்தைந்தாவது வருஷம் வரையில் பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையம் பதியில் அரசு செலுத்தி வடக்கே இருந்து வந்த ஆயப் படைகளைப் போரில் வென்றவனும், கண்ணகியின் சாபத்தால் சிம்மாசனத்திலேயே உயிர் துறந்தவனுமாகிய நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய அரசனுடைய நான்காவது அல்லது ஐந்தாவது முறையில் பாண்டிய நாட்டை அரசாண்டு இறுதியில் 'இலவந்திகைப்பள்ளி' என்னுமிடத்தில் இறந்து போனதனால் 'இலவந்திகைப்பள்ளி துஞ்சிய நன்மாறன்' என்று பண்டைக் காலத்துத் தமிழ்வித்துவான்களால் புகழப்படும் பாண்டியன் நன்மாறனுடையபரம்பரையில் உதித்தது கொண்டு 'நன்மாறன்' என்னும் பெயர் சூட்டப்பட்டவன் என்றும், அவனுக்குத் தமிழ் நாட்டில் பற்பல இடங்களில் நிலங்களும், மாளிகைகளும் ஏராளமாய் இருக்கின்றன என்றும், அவன் தன்னுடையபுத்திரியாகிய கமலரேகை என்பவளைச் சென்னையில் கல்வி பயிலும்படி விட்டிருந்தான் என்றும், அது முதல் அவள் மதுரையில் வசிப்பதைவிடச் சென்னையில் வசிப்பது நலமென்று கருதிச்சென்னையிலேயே வசித்து வருகிறாள் என்றும் கமலநாதன் அந்த மனிதர் சொன்னதைக் கொண்டு அறிந்து கொண்டான்.

"ஆதலால், நீங்கள் ஏற்கெனவே சொன்னது போல் நன்மாறனை எவ்விதமாவது கொன்று விடவேண்டும்; அல்லது கமலரேகையை நாம் எவனுக்காவது விவாகஞ் செய்து கொடுக்க வேண்டும். இவ்விரண்டில் ஒன்று நிறைவேறினாலன்றி நம்முடைய முயற்சி கைகூடாது. என்? அப்படித்தானே?" என்று கமலநாதன் அந்த மனிதரைக் கேட்டான்.

"ஆம்; அப்படித்தான்!" என்று அந்த மனிதர் பதில் கூறினார்.

"இந்த இரகசியத்தை உங்களுக்கு முதலில் யார் சொன்னார்கள்?" என்று கமலநாதன் கேட்டான்.

"அதைச் சொன்னவர் என்னுடைய நண்பர் ஒருவராவர். அவர் இப்போதில்லை! அவர் இறந்து போய் விட்டார் என்று கூறி, இருக்கட்டும், என்னோடு சேர்ந்து வேலை செய்ய இஷ்டமுண்டா, இல்லையா?" என்று மீண்டும் அந்த மனிதர் கேட்டார்.

"இஷ்டந்தான்! தங்களுடை பெயர் என்ன? தங்களை எங்கே வந்தால் பார்க்கலாம்? விவரம் தெரிவித்தால் நாளையதினம் வருகிறேன் இப்போது நேரமாகி விட்டது! நான் வீட்டுக்குப் போகவேண்டும்" என்று கமலநாதன் கேட்டான்.

"சரி; என்னுடைய பெயர் சித்திரவர்மன் என்பது. நாளைமாலை மூன்றுமணி சுமாருக்கு ஏகம்பநாதர் வடக்குவீதி இருபதாம் எண்ணுள்ள வீட்டுக்கு வந்தால் என்னைப் பார்க்கலாம்!" என்று அந்த மனிதர் பதில் கூறிவிட்டு சூதமண்டபத்தை விட்டு நீங்கினார். கமலநாதனும் அவ்விடம் விட்டுச் சென்றான். இந்த அயலூர்வாசியின் அதிசயப்பிரவேசம் கமலநாதனுக்கு ஆச்சரியத்தையே விளைவித்தது.

---

**மனித வளர்ச்சி.**— மனிதனுடைய அவயவங்களும் எலும்பு, நரம்பு முதலியவைகளும் அவனுக்கு 40 வயது ஆகும் வரையில் மேன்மேலும் வளர்ந்து கொண்டே வரும். அதாவது அவனுடைய இருதயம் பலப்பட்டும் ஈரல்கள் விசாலப்பட்டும், மூளைகள் பருத்தும் வரும். ஆனால் வனது உயரம் மாத்திரம் முப்பது வயதுக்கு மேல் அதிகரிப்பதில்லை. இதன் காரணம் முப்பது வயதில் மனிதனின் உடல் கனத்து அவனது ஆகிருதியைக் கீழே இழுக்கிறதாம். இதனால் அவன் உயரமாகவளரக்கூடாமல் ஆகிறானாம்.



# பாரத வர்ஷ மஹிமா

அல்லது

# இந்திய சரித்திரச் சிறப்பு

## THE GREATNESS OF INDIAN HISTORY

இந்நிலவுலகின்கணுள்ள பற்பல தேச சரித்திரங்களை ஆராயுங்கால், அத்தேசங்கள் ஆதிகாலத்தில் யாவராலும் கவனிக்கப்பெறாத சூன்யதசையி லிருந்து, தம் இயற்கை யமைப்பினாலும் குடியேறும் பிரஜைகளின் ஸ்வபாவ குணங்களாலும் பற்பல துறைகளிலும் விருத்தியடைந்து காலக்கிரமத்தில் எல்லாராலும் மதிக்கக்கூடிய முதன்மையைப் பெற்று, உலக சரித்திரத்தில் தம் பெயரை நிலைநாட்டி, பிற்காலத்தவரின் நாகரிகத் தேர்ச்சிக்காதாரமாய் விளங்கிவந்தன வென்று நாம் அறிகிறோம். ஒரு தேசத்தார் கல்விச் சிறப்பினாலும், மற்றோர் நாட்டார் தம் துரைத்தன ரீதியினாலும், இன்னொரு ஜாதியார் தம் மதவிசேஷத்தினாலும், ஏனை நாட்டார் தம் வாணிபப் பாங்கினாலும் உலகத்திற்கு விசேஷ உதவி புரிந்திருக்கிறார்கள். இத்தகைய நாடுகளெல்லாம் ஏதோ ஓர்காலத்தில் மாத்திரமே உன்னத பதவியை யடைந்து, சிறிதுகாலம் அந்நிலையிலிருந்து, பிறகு, உச்சத்தை யடைந்த பகலவன் படிப்படியாய் ஆகாய மண்டலத்தில் தாழ்ந்திறங்கி அஸ்தமிப்பது போலவும், வானத்தில் விட்டெறிந்த ஓர் கல்லானது வேகம் குன்றியவுடன் மறுபடியும் பூமியில் வீழ்வது போலவும், க்ஷீணதசையை யடையத்தலைப்பட்டு, இக்காலத்தில் தம் மஹிமை யெல்லாம் ஒழிந்து நிற்கத் தாழ்மை யடைந்து இருக்குமிடமும் தெரியாமற் கிடக்கின்றன. ஆனால் தற்காலம் எல்லாத் துறைகளிலும் மேன்மையுற்றிருக்கும் மேனாடுகளிற் பெரும்பான்மை வெகு சமீபகாலத்தில் தாம் தோன்றியவை. அவைகளிடத்தில் எல்லா நாகரிகச் சிறப்பையும் நாம் கண்டபோதிலும், பிராசீன நாகரிகத்திற் கிருப்பது போன்று இதற்கு ஆழ்ந்த அஸ்திபாரம் என்பது கிடையாது. பிராசீன தர்மங்கள், பிராசீன பழக்க வழக்கங்கள் ஆகிய இவைகளின் தத்வார்த்தத்தை யறியாது கேவலம் வெளிப்பகட்டைக்கண்டு மயங்கித் திரியும் சில கசடர்போன்று அந்நாடுகளும் தமக்கேற்பட்டுள்ள காரியங்களை முற்றும் மறந்து பற்பல வழிகளை நாடிச் செல்கின்றன. அவற்றின் நாகரிகத் தேர்ச்சியெல்லாம் வெறும் வெளித்தோற்றமேயன்றி உண்மையில் அவற்றுடன் பிறந்து வளர்ந்து வந்ததல்ல; தமக்கு முன்னிருந்த ஆதாரமற்ற நாகரிகத்தை (ஏன், அநாகரிகத்தை என்றே சொல்லலாம்) தாமும் கைக்கொண்டதனால், நாடகசாலையில் அரசவேஷம் தரிப்பவன்போலும் "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி" போலும் அபிநயிக்கும் கேவல பொய்த்தோற்றமே யாகிவிடுகின்றன.

இதனால் அம்மேனாடுகளில் உண்மையான நாகரிகம் இருந்திருக்கவில்லையென்று யாம் கூற வந்தோமில்லை. அம்மேனாடுகளின் புராதன நாகரிகம் இறந்து அழிந்து விட்டது என்பதும் அவ்விடத்திய தற்காலத்திய நாகரிகம் துருப்பிடித்த இருப்பணிக்கு தங்கமுலாம் பூசியது போலும் என்பதுமே யாம். இம்மாதிரி அந்நாடுகளில் மாத்திரம் பண்டைக் காலத்துத் தர்மம், கல்வி முதலியவை அழிந்து போயிருக்கவும் அல்லது பற்பல மாறுதல்களை அடைந்திருக்கவும் வேறு எங்காயினும் அத்தகைய மாறுதல்கள் யாதொன்று மடையாமலும், தம்மொளி மழுங்காமலும் எக்காலத்தும் நாகரிக ஒளி வீசிவந்திருக்கின்றதா என்று சிலர் ஐயமுறலாம். ஆம், பிராசீன நாகரிகம், பிராசீன பழக்க வழக்கங்கள், பிராசீன அரசாங்கம், பிராசீனதர்மம் ஆகிய இவையெல்லாம், எத்தனை நூற்றாண்டுகள் கழிந்தும் நம்நாட்டில் தொன்று தொட்டு வருகின்றன, என்பதைக் கேட்டுப் பலர் வியப்படையலாம்.

கிரீஸ்தேசத்தின் கல்வியும், கைத்தொழிற் சிறப்பும், வீரபராக்கிரமும் தற்காலம் எங்குபோய் ஒளிந்தன? கார்த்தேஜ் நகரத்தின் அகண்ட ஐச்வர்யமும் வீர்யமும் எங்கேனும் எவருக்காயினும் புலப்படுகின்றனவோ? ரோமாபுரியின் பரப்பமைந்த ராஜ்யமும் அளவிட வொண்ணாசைன்னியங்களும் எங்கே? இவைகிடக்கட்டும். இவர்கள் எல்லாரும் கடைப்பிடித்த பண்டைக்கால தர்மங்களும் ஆசாரங்களும் நிலைபெற்று நின்றனவா? அல்லது இவற்றைக் குறித்த சின்னங்களாவது அத்தேயங்களில் பாமர ஜனங்கள் அறியும்படி உள்ளனவா? அல்லது இவர்களுள் புண்ணிய சீலர்களாகவும் வீர புருஷர்களாகவும் மேன்மை பெற்று விளங்கிவந்தவர்களின் பேராவது யாருக்காயினும் தெரியுமா? இவ்வினாக்களின் கருத்தை யுட்கொண்டபின் இந்தியாவையும் இந்திய சரித்திரத்தையும் பற்றிக் கருதுவோமாயின் அப்படிப்பட்ட யாதொரு வியப்புக்கும் இடமில்லை. அன்னம் மற்றதேச சரித்திரங்களுக்கும் நம் தேச சரித்திரத்திற்குமுள்ள சிலமுக்கிய தாரதம்மியங்களை ஆராய்வோம்.

தற்காலத்தில் பாடசாலைகளில் உபயோகிக்கப்பட்டு வரும் சில இந்திய சரித்திர புத்தகங்கள் உண்மையான இந்திய சரித்திரத்தைக் கூறுவதாக நாம் காண்கிறதில்லை. அவை பெரும்பாலும் இந்தியாவில் ஆதிகாலத்திலேயே வந்து ஏற்கனவே குடியேறியுள்ள ஸ்வதேசப் பிரஜைகளின் சரித்திரத்தைக் கூறாது ஒழித்துவிட்டு, பிற்காலத்தில் அவர்களை வென்று தம் ஆட்சிக் குட்படுத்திய அந்நிய தேசத்தாரின் சரித்திரத்தினையே எடுத்துக் கூறுகின்றன. உதாரணமாக இப்புத்தகங்களின் இந்திய சரித்திரத்தின் பிற்பகுதிகளிலெல்லாம் "ஆங்கிலேய துரைத்தனம்" என்றேகுறிக்கப்பட்டு ஆங்கிலேயருடைய நடவடிக்கைகளைக் கூறுகின்றதேயன்றி இத்தேசவாசிகளைப்பற்றிய ஒரு விஷயத்தையாவது கூற

கின்றதில்லை. ஆனால் ஆங்காங்கே ரோமேஷ், சந்தர்டட், ரானடே முதலியவர்களைப்போல் தேசபக்தி பூண்டுள்ள சரித்திர விற்பன்னர்களால் இந்தியசரித்திரம் சிறிதுசிறிதாய் உள்ளது உள்ளபடியே எழுதப்பட்டு வருகின்றது.

அத்தகைய சரித்திரத்தில் ஆரியர் பூர்வீகத்தில் அடைந்திருந்த சீரும் சிறப்புமமைந்த நிலைமையும் எக்காலத்தும் ஒருவராலும் ஸ்வப்பனத்திலும் கண்டறியப்படாத இத்தேசத்திற்கேயுரியதான நாகரிகமும் உலகத்தில் மற்றத் தேசங்களிலும் உள்ள ஜனங்கள் காட்டுமிராண்டிகளாய் மரங்களிலும் குகைகளிலும் வசித்து, காய்கிழங்குகளையும் தம்வேட்டையில் கிடைக்கும் மிருகங்களையும் பக்குவப் படுத்தவும் தெரியாமையின் அப்படியே பச்சையாய் உண்டு, நிர்வாணமாயும் அல்லது தோல், இலைகள் முதலியவைகளை அணிந்துகொண்டும் திரிந்துவந்த ஆதிகாலத்திலேயே நம்நாட்டில் விளங்கி வந்தன என்றும் அறிகிறோம். அவை கொஞ்சகால மாத்திரம் நிலைத்து நின்று பிறகு அழிந்து விட்டதாக எங்கும் கூறப்படுகிறதில்லை. அப்பண்டைக்கால நாகரிகம் இக்காலத்திலும் இத்தேசம் ஒன்றில் மாத்திரமே நீடித்து நின்றிருக்கின்றது. இதன் காரணமென்னவென்று சற்றுயோசிப்போமாயின் இந்திய சரித்திரத்தின் போக்கு மற்ற எத்தேச சரித்திரத்தின் கதியைப் போலல்லாமல் அதற்கென்றே யமைக்கப்பட்ட ஒரு கம்பீரத்துடனும் அமைதியுடனும் விளங்குகின்றதென்று தெரியவரும். நம் நாட்டார் ஏனைய தேசத்தார் போன்று நினைத்ததற்கெல்லாம் பிறருடன் போராடி, எங்கும் குருதி நீர் தேக்கி, நாடுகளை அபகரிக்கமுயன்றதாக யாம் வெகுவாய் அறிந்ததில்லை.

அதற்குப் பிரதியாக, இத்தகைய கொடுங்கொலையாளிகளுக்கும் கொள்ளைக்காரர்களுக்குமே அவர்கள் சுமார் 2000 வருஷங்களாக இரையாக வந்திருக்கிறார்கள் என்று நன்றாய்த் தெரியவருகிறது. எங்கு சென்றாலும் அழுதாலையும் தீப்பிடித்த கிராமங்களையும் விட்டுச்சென்ற சில மஹாவீரர்களைப் போலல்லாமல், எங்கும் தம் சாத்விக குணத்துடனும் மேலான நாகரிகம், குணம், கல்வி, மதாசாரம் இவைகளுடனும் சென்று யாதொரு கோலாஹலமுமின்றித் தம் அமைதி பொருந்திய ஆட்சியைச் செலுத்திவந்தார்கள். ஹிமாசலம் முதல் கன்யாகுமரி வரையில் ஆர்ய நாகரிகம், ஆர்யதர்மம், ஆர்யநீதி, ஆர்ய அரசாங்க முறைமை ஆகிய இவையெல்லாம் பரவினதற்குக் காரணம் அவர்களிடம் குடிகொண்டிருந்த மேன்மைக்குணங்களையன்றி வேறல்ல. மற்றதேச சரித்திரங்களில் ஒருகட்சியார் தம் கொள்கைகளையும் ஆசாரங்களையும் பரவச்செய்யவிரும்பினால் பலவந்தத்தின் உதவியைக்கொண்டு பரவச் செய்தனரென்றும், ஏனையகொள்கையோர் தம் கொள்கைக்குவராவிடின் அவர்களை உயிருடன் தீயிலிடுதல் முதலிய சித்திரவதைகள் புரிந்துவந்தனரென்றும் அறிகிறோம். ஆனால் நம்மவரோ தம் மதம் பிறரால் கொள்ளப்படுதற்குத் தகுந்த முயற்சி யாதும் செய்திலர். அதற்குப்பதிலாய், தம்நாட்டில் மதவிஷயத்தில் தமக்கு நேரிடும் கஷ்டங்களினின்றும் தப்பிப் பிழைக்க இடந்தேடி ஓடிவந்த பிறமதஸ்தர்களுக்கு அபயங்கொடுத்து அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்துத் தம்நாட்டில் அவர்கள் குடியேற இடமும் அளித்தனர். அவர்களின் இயற்கைக் குணங்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ?

அரசாங்கமுறையிலும் நம்மனோர் பண்டைக் காலந்தொட்டு மேன்மையுற்றிருக்கிறார்கள். ஆதிகால முதற் கொண்டு மனுநீதிவழுவாத அரசர்களும் ராஜ்ய தந்திரநிபுணரான அமைச்சர்களும் கண்ணை இமை காப்பது போலவும், குழந்தையை அன்னைபாதுகாத்து வருதல் போலவும் தம் நாட்டின் பிரஜைகளைப் பாதுகாத்து வந்திருக்கின்றனர் என்று அறிகிறோம். இதைப்பற்றி இத்தேசத்திற்கு யாத்திரையாக வந்த அந்நிய தேசத்தார்களும் சாட்சி பகர்கின்றனர். அலக்ஸாந்தர் இந்தியாவின் மீது படை யெடுத்தகாலத்திலும், கௌதம புத்தர் காலத்திலும் ஆங்காங்கே குடியரசுகளும் இருந்தனவாகத் தெரியவருகிறது. சந்திரகுப்த மௌர்யனுடைய நாட்டின் அரசாட்சியைப்பற்றி மெகாஸ்தனிஸ் கூறும்போது சில விஷயங்களில் இக்காலத்து அரசாட்சியும் இதற்கு நிகராமோ வென்று ஐயுறவேண்டியிருக்கிறது. சாணிக்யன், தோடர்மால், நாநாபர்நாவிஸ், பூர்ணியா இவர்கள் இந்தியாவில் முதிர்ந்த அரசாங்க முறைமையின் கனிகளென்றே இவர்களின் சரித்திரத்தைப் படிப்போர் யாவரும் ஒத்துக்கொள்வார்கள். தற்காலத்தும் ஆங்காங்கேயுள்ள ஸ்வதேசமாகாணங்களில் நடந்தேறும் இராசாங்கத்தையும், பிரிடிஷ் துரைத்தனத்தாரால் அளிக்கப்பட்டு இந்தியர் வஹித்துவரும் பெரிய உத்தியோகங்களின் ஒழுங்கையும் கவனிப்பவர்கள் இந்தியர்கள் அரசாங்க முறையில் மற்றெந்நாட்டாரைக் காட்டிலும் தாழ்வடையாமல் ஒருபடி மேலேயே யிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.

கல்வித் துறையிலும் நம் நாட்டார் வெகு காலமாய் தலை யெடுத்து வந்திருக்கிறார்கள். உலகத்துள் எந்நூலும் எழுதப்படு முன்னமேயே நந்தேயத்தில் ரிக்வேதம் இயற்றப் பட்டது. அந்நாள் முதற்கொண்டு நாளது வரையிலும் கல்விப்பயிற்சியில் இந்தியருக்கு இணையாக எவரும் வந்திலர். பரதகண்ட வாசிகளே நுண்ணறிவைப் பெற்று அவ்வறிவுணர்ச்சியினால் ஆனந்த மடைதற்குரியார் என்று பிரபலமேனாட்டு நிபுணர்களும் கூறி யிருக்கின்றனர். மற்றப் பாஷைகளில் உள்ள நூல்களுக்கு இணையாய் நம் நாட்டின் பொதுமொழியாம் வடமொழியில் இருத்தலுமின்றி, மற்றப் பாஷைகளில் அநேகமாய் இல்லாத ஈச்வரனைப் பற்றியும் பகவானது கல்யாண குணங்களைப் பற்றியும் லீலா விநோதங்களைப் பற்றியும் உள்ள நூல்களும் இம்மொழியிலேயே அநேகமாய் நிறைந்துள்ளன. இதுவே இத்தேசத்தாரின் கல்வி சிறந்ததா யிருப்பதற் கோர் சிறந்த காரணமாகும்.



ராஜதரங்கிணியும், சரிதகமும் இன்னும் இவை போன்ற கிரந்தங்களும் இந்தியரும் சரித்திரம் எழுதுவதிலும், வைத்திய சாஸ்திரத்திலும் விற்பன்னராயிருந்தனர் என்பதற்குச் சிறந்த உதாரணங்களாகும்.

இவையன்றி கைத்தொழில்களிலும், சித்திரம் வரைவதிலும், அரிய கட்டடங்கள் நிர்மாணம் செய்வதிலும் நம் நட்டாரும் மற்றவருக்குப் பின்வாங்காமலிருக்கின்றனர். பண்டைக்காலத்தில் இந்தியாவிற்கும் மற்றத் தேசங்களுக்கும் இருந்த கூட்டுறவின் காரணங்களில் இந்திய கைத்தொழிற் சிறப்பு ஒன்றாகும். தவிரவும் கௌசாம்பி, பாடலிபுரம், டக்கா முதலிய பட்டணங்கள் தம் கைத்தொழில் அபிவிருத்தியினால் தாம் அடைந்த பெருமையின் பொருட்டும் ஐச்வர்யத்தின் பொருட்டுமே பிறரால் மதிக்கப்பட்டு வந்தனவுமன்றி அநேக அந்நியர்களின் மனதைக் கவரவும் தொடங்கின. பௌத்தமதம் இந்நாட்டில் பரவத்தொடங்கிய நாள் முதற்கொண்டு நாளது வரையிலும் இப்பாரதவாசிகளின் கைத்திறனை எங்கும் காணலாம். பௌத்தபடிமங்களுக்கென்றேற்பட்ட ஆலயங்களும், கல்லில் செதுக்கப்பட்டுள்ள அற்புத குஹாலயங்களும், ஸ்தூபங்களும், விக்கிரகங்களும், அவைகளைக்கட்டிய சிற்பிகளின் நுண்ணறிவையும், தென் தேயத்தில் உள்ள காஞ்சி, தஞ்சை, ஸ்ரீரங்கம் முதலிய தேவாலயங்கள் அவற்றை நிர்மாணஞ் செய்தவரின் மனோநிலைமையையும், வடக்கே ஆக்ரா, ஜான்பூர், டெல்லி முதலிய நகரங்களில் உள்ள மொகலாய கட்டடங்கள், அவற்றை எழுப்பியவர்களின் கற்பனா சக்தியையும் நன்று புலப்படுத்துகின்றன. மொத்தத்தில் இந்நாட்டின் வேலைப்பாடுகள் எல்லாம் கேவலம் வெளித்தோற்றத்தின் சாயலைப்பெறாமல் ஆத்மவிலக்ஷணத்தை வெளியில்காண்பிக்கும் பாவனையிலேயே இருக்கின்றன.

இவை மாத்திரமா? இன்னும் அநேக விஷயங்களிலும் இந்திய சரித்திரம் மற்ற தேசசரித்திரங்களிலும் சிறந்ததாய் இருப்பதுமன்றி, ஏனைய சரித்திரங்களில் நாம் படிக்கும் ரணயுத்தங்களும், பொய் புரளிகளும், மததூஷணையான விஷயங்களும், சித்திரஹிம்ஸைகளும் அநேகமாயில்லாமல் நிர்மலமாய் நின்று சாந்தமயமாய் விளங்குகின்றது. இதனாலேயே நம்நாட்டில் வீரபுருஷர் இருந்திருக்கவில்லை என்று சிலர் நினைக்கலாம். இத்தேசத்தில் துஷ்டநிக்ரகசிஷ்டபரிபாலனம் செய்யும் பொருட்டு ஈச்வரபிரஸாதத்தினால் வந்துதித்த சுத்த வீரர்களுக்கும் எண்ணிக்கையுண்டோ? மற்ற சரித்திரங்களில் ஸீஸர், ஹானிபால், நெபோலியன் இவர்களைப் பற்றிப்படித்தால் நம் நாட்டுச் சரித்திரத்தில், ஸிவாஜி விக்ரமார்க்கன், சந்திரகுப்தன் இவர்களைப் பற்றிப் படிக்கலாம். அந்நிய தேசங்களில் ஒரு கான்ஸடெண்டைன், ஒருஆல்பிரட் இவர்களைக் கண்டால் இத்தேசத்திலும் அசோகவர்த்தனன், கனிஷ்கன் இவர் போன்றவர்களைக் காணலாம். அங்கே ஜோன் அப்ஆர்க், எலிஸபெத் இவர்களைப் பற்றிப்படித்தால் இங்கும் மீராபாய், சாண்ட்பீபீ, அஹல்யாபாய் முதலியவர்களைப் பற்றியறியலாம். ஆனால் உலகத்துள்ள ஜீவகோடிகளின் மீது அருள் சுரந்து மனங்கசிந்து உருகித்தம் ஆயுள் முழுமையும் அவர்களுக்கென்றே அர்ப்பணம் செய்து அடியார்க் கெளியராய் உழைத்து வந்து விளங்கிய கௌதம புத்தரைப் போன்ற ஒருவரை மற்ற எத்தேச சரித்திரத்திலும் காண்பதரிது. இவர் போன்ற புண்ணிய புருஷர்களின் சரித்திர மஹிமையைப் பெற்றுள்ள இத்தேச சரித்திரம் யாவராலும் பாராட்டற் பாலதன்றோ? இப்புண்ணிய பூமி தன் அகண்ட பரப்பினாலும், தான் கொண்டுள்ள மஹா நதிகளாலும் மஹோன்னத பர்வதங்களாலும் கம்பீரமாய் விளங்குவது போல், தன்னையடையும் சகலஜீவகோடிகளையும் அன்புடன் ஏற்று உபசரித்து "ஏகம் ஸத்விப்ரா பஹுதா வதந்தி" என்னும் உபநிஷத் வாக்கியத்தின் உண்மையைத் தன் சரித்திர வாயிலாய் வெள்ளிடைமலை போல் விளக்கி நிற்கின்றது.

**K. S. வீராசாமி அய்யர், B. A.**

---

நல்லிணக்கம்:—லௌகிக ஞானமில்லாத ஒருசிறுவன் ஏதாவது ஒருசங்கத்தில் சேரும்பொழுது அங்கிருந்து நற்குணங்களைக்கிரகிக்காமல் துர்க்குணங்களைக் கிரகிக்கிறது வழக்கம். இதுவே விவேக மின்மை. எவ்வாறு என்றால் ஒரு சங்கத்தில் சில மகாவித்வான்களே சேர்ந்திருந்தால், அவர்கள் ஒவ்வொருவரும் படிப்பு முதலியவைகளில் தேர்ச்சி அடைந்தவர்களாயிருப்பினும் அவர்களிடம் ஏதாவது ஒரு துர்க்குணம் சில சமயங்களிலிருக்கும். அதாவது ஒருவர் சற்றுச் சிற்றின்பங்களில் ஞாபக முடையவராயிருப்பார்; மற்றொருவர் எப்பொழுதும் சூதாட்டத்தில் பிரியப்பட்டவராயிருப்பார். இவர்களைப் பார்த்து இவர்களே இப்படிச்செய்யும்பொழுது நாமும் ஏன் அப்படிச் செய்யக்கூடாது என்று சில வாலிபர்கள் ஆரம்பிப்பார்களேயானால் அவர்களைப் பார்க்கிலும் புத்தியீனர்கள் இந்த உலகத்திலுண்டோ? இல்லை. மேலும் அந்த வித்வான்களிடம் ஆயிரம் நல்ல குணங்களுடன் ஒரு துர்க்குணமுமிருப்பதால் எவரும் அதைக் கவனிக்காமலிருக்கலாம். அவர்களுடைய நற்குணங்களை யெல்லாம் விட்டுத் துர்க்குணத்தைமாத்திரம் எடுத்துக் கொண்டால் ஜனங்கள் நம்மை இலக்ஷியம் பண்ணுவார்களா? எல்லா நற்குணங்களையும் நாம் எடுத்துக் கொண்டு துர்க்குணத்தை மாத்திரம் தள்ளியிருப்போமேயானால் நம்மைக்கண்டு அநேக ஜனங்கள் எவ்வளவு சந்தோஷப் படமாட்டார்கள்.

ஒரு சங்கத்தில் சேர்ந்ததுமுதல் அதில் நமக்குக் காணப்படும் நற்குணங்களையே நாம் கிரகிக்க முயல வேண்டும். ஜனங்கள் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் மரியாதை, நடையுடை பாவனை, பேசிக் கொள்ளும் இனிய வார்த்தை, இவைகளை யெல்லாம் நாம் உற்றுப் பார்க்கவேண்டும்.

# மாணவர் பக்கங்கள்.

## STUDENTS' PAGES

## I. ஆத்திசூடி விளக்கம்

### 29. இளமையிற்கல்

இளமைப் பருவத்திலேயே கல்வி கற்றுவிட வேண்டும். ஏன் இப்படிச்செய்ய வேண்டும்? இல்லாவிடில் என்ன கேடுவிளையும்? என்ற இரண்டு சங்கைகள் பிறக்கும். இவைகளை ஒவ்வொன்றாக எடுத்து ஆராய்வோம்.

இளமைப் பருவத்தில் மனம் ஒருவாறு தெளிவாக விருக்கும். பூர்வஜன்ம வாஸனைகள் அதிகமாக ஓங்கிக் கிளம்பி வரமாட்டா. அப்படிவந்து மனதைக் கலக்குவதற்குவேண்டிய உலக அனுபவம் இளமையில் ஏற்படக்காரணமும் வாராது. அதில் எப்படிப்பட்ட கெட்டவாஸனைகளிருந்த போதிலும் இந்தப் பருவத்தில் தலைதூக்காதிருந்து பின்னர் உலகத்திலடிபடுவதற்கேற்ப வெளிப்படையாக விளங்கத் தொடங்கும்: இதுபற்றியே பரமஞானி பாலனைப் போலிருப்பான் என்றும், சிறுகுழந்தைகள் பிரஹ்மஸ்வரூபம் என்றும் நம்முள் ஸாதாரணமாக வழங்கி வருகிறது. இளமைப்பருவத்தில் ஒருகுற்றமும் அறியாத் தன்மை உண்டு. இந்த ஸமயத்தில் கல்விகற்பித்துத் தர்மவிஷயங்களை மனதில் புகுத்திவிட்டால்எதிரான சக்திகளால் கலக்கப்படாது இவை பதியும். அதனால் மேல் உலக வாழ்க்கையில் தன் வாஸனைக்கு ஏற்பக் கெட்டவழியில் ஒருவன் தூண்டப்பட்டபோதிலும் தங்கு தடையின்றி அவனை அதில் பாய்ந்தோடவொட்டாது இந்த தர்மவிஷயங்கள். இளமையில் பதிந்தகல்வி தடுத்துக் கொண்டாவதிருக்கும். வரவர இந்தத் தடைபலத்து வாசனைகளை அடக்கி அழிக்குந் திறன்கூட அவனுக்கு வந்துவிடும். இதுபற்றியே தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்று கூறுவதும் உண்டு.

இளமைப்பருவம் தேஹம் நன்றாக வளரும்பருவம். ஒருமரத்தை சிறு செடியாக விருக்கும்பொழுது ஒருவிதமாக வளைத்து விட்டால்அப்படிவளைந்தேஅதுவளரும். மரமானபின்பு அதை வளைப்பதென்பது அஸாத்யம். இதுபோல இந்தப் பருவத்தில் மனதை எப்படி வேண்டுமானாலும் திருப்பி ஒருவித நிலையில் வைத்தால் நிற்கும். மேலும் புத்தி முதலியன வளரும் ஸமயத்தில் திருத்தி விட்டால் திருத்தம் நன்றாகப் பதிவதோடும் புத்தி வளர்ந்தோங்கும்பொழுது இதுவும் நன்றாக வேரூன்றிக்கொண்டு வந்து ஒருவன் நடத்தையை ஒருவாறு திடப்படுத்திவிடும்.

'இளமையில் விளையாட்டில் பிடிப்பு; யௌவனத்தில் பெண்மணிகளிடம் பிடிப்பு; முதுமையில் ஆகாயக் கோட்டை கட்டுவதில் பிடிப்பு; பரம்பொருளிடம் பிடிப்பு எப்பருவத்தில்தான் ஏற்படுமோ?' என்றார் ஸ்ரீமத் சங்கராசாரிய ஸ்வாமிகள். இவைகளுள் யௌவனம், முதுமை இவைகளில் மனம் கிளம்பி வாஸனைவசமாக ஆடுவதும் அகங்காரம் கடித்து நிற்பதுமாக விருக்கும். இந்த ஸமயங்களில் நல்வழிப்படுவது கடினம். இளமையிலோ விளையாட்டாக விருப்பதால் அவ்வளவு அகங்காரமும் வாஸனைத்தடிப்பும் இரா. அப்பொழுது விளையாட்டாக அரியவிஷயங்களை ஏற்றிவிடலாம். நல்லஞாபக சக்தி இப்பருவத்தில் இருப்பதால் பின்னர் தகுந்த ஸமயங்களில் இவைகள் அவனுக்கு வந்து உதவும். இந்த விளையாட்டுப் பருவத்தில் நல்லவிஷயங்களைக் கேட்டு விட்டால் வ்யவஹார அனுபவம் இல்லாததால் 'மேல் நாம் தவறாது நல்வழியிலேயே இருக்க வேண்டும்' என்ற தீர்மானம் பிறந்துவிடும். வயதாகி வ்யவஹாரங்களில் அடிபடும் பொழுதல்லவா, 'இப்பாழுலகில் நல்லவழியில் நிற்பது எவ்வளவு கடினம்; அறியாமையால் அல்லவா அப்படி இருக்கவேண்டும் என்று முன் தீர்மானம் செய்துவிட்டேன்' என்ற அனுபவ உணர்ச்சி ஏற்படும். இதுபற்றியே ஒரு கவியும் 'வயது ஏற ஏற மனம் உறைத்து, இளமையில் ஆகாயப் பந்தலாகச் செய்த ஸத்ஸங்கல்பங்களை நினைத்து அவைகளை அலக்ஷ்யமாக உதறிவிடும்' என்று கூறுகிறார். இந்த அபாய நிலைவரும்முன் ஆகாயப்பந்தல் திடமாக நடத்தையில் வரும்படி ஆழ்ந்தகல்வி இளமையில் ஏற்படுத்தவேண்டியது அவசியமல்லவா?

> கற்கக்கசடற, கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத்தக.

என்றார் திருவள்ளுவ நாயனாரும். இதில் இரண்டு விஷயம் கூறப்பட்டிருக்கிறது கல்விகற்கவேண்டும் நன்றாக: பின்னர் அதன்படி நிற்கவேண்டும். முன்னர் கூறியவைகளிலிருந்து இளமையில் கற்றால் நன்றாகப்பதியும் என்றும், யௌவனகாலத்தில் இளமையில் நல்ல எண்ணங்களிடம் ஒருவித அனுதாபவு ஏற்படும் என்றும் விளங்கியிருக்கிறது. இந்த இரு விஷயங்களை இந்தக்குறளின் இருபாகங்களோடு பொருத்திப்பார்ப்போம். இளமையில் கற்கவேண்டும் ஸந்தேஹ விபரீதங்களற: இதனால் ஏற்படும் உணர்ச்சியைக்கொண்டு இதற்கு ஒருவித அனுதாவைக் கிளப்பிவிடும் யௌவனப் பருவத்தில் அதைத் தகைந்து கற்றவாறு நிற்கப்பழகி நிலைபெற முயலவேண்டும் என்பதாயிற்று. இப்படிச் செய்து ஒழுங்காக வந்தால் முதுமையில் ஆசைக்கு யௌவனம் வந்து மீளாக்கஷ்டம் ஏற்படாது, கசடறக் கற்றதனாலாயபயனாகி அதன்படி நிற்றலால் வாலறிவுநற்றாள் பற்றி நிலைத்துவிடும் பரமநிலை உண்டாக இடம் ஏற்படும். இந்தக் கருத்தை ஒருவர்,

> முப்பதா மாண்டளவின் மூன்றற் றொருபொருளை
> தப்பாமல் தன்னுள் பெறானேல்—செப்பும்
> கலையளவே யாகுமாம் காரிகையார் தங்கள்
> நிலையளவே யாகுமாம் மூப்பு.

என்று கூறியிருக்கிறார்.



இங்கு காட்டப்பட்டிருக்கும் இந்தப் பாட்டிலிருந்து இளமையிற் கல்லாதவன் நிலை வெளிப்படும். இளமையில் கல்லா ஒருவன் யௌவனப் பருவத்தில் தீயவை, மனச்சஞ்சலம் அதிகரிப்பவை, வாழ்நாளை வீணாக்குபவை ஆகிய இவைகள் நிறைந்த இந்த உலகில், சுக்கானற்ற கப்பல் புயலடிக்கும் நடு ஸமுத்திரத்தில் அகப்பட்டு விடுவதுபோல, கிடந்துழல அகப்பட்டுவிடுவான். புத்தியால் உணர்ந்து ஒதுங்கி அதிக வருத்தமின்றி எளிதில் ஸஹிக்கக்கூடிய கஷ்ட காலங்களில் எல்லாம் இளமையில் கல்லாதவன் மூழ்கி அடிபட்டுத் தத்தளித்து வெகுகாலத் திண்டாட்டத்தின்பேரில் அப்படிப்பட்ட விஷயங்களை விட்டு ஒதுங்கினால் நலமாக விருக்கும் என்று தெரிந்துகொள்ள வேண்டும். இம்மாதிரி இவனிடம் ஒவ்வொரு விஷயத்திலும் அனுபவித்து வெகுநாளுக்குப் பின்னர் ஸூக்ஷ்மம் விளங்குமே ஒழிய அவனுக்கு வாழ்க்கையில் ஒருவித ஸுகமும் ஏற்பட இடமிராது. இப்படித் தெரிந்துகொண்டு முடிவதற்கு முன் இறவாமலிருந்தால் அவனுக்கு மூப்புவரும். அப்பொழுது சாகுங்கால் சங்கரா! சங்கரா!! என்று கதறும் அறிவிலிபோல, இளமையில் செய்யவேண்டியதான கல்விகற்கும் விஷயம் வரும். மறுபடி அவன் சிறுபிள்ளைநிலைக்கு வரவேண்டியது தான். சிறுபிள்ளைகளுக்கு ஸத்ஸங்கல்பம் விஷயம்எப்படிவெறும் ஆகாயப்பந்தலாகவிருந்ததோ அதுபோல இவன்ஞானமெல்லாம் வெறும வாசாஞானம்வெட்டுச் சுரைக்காயாகமாத்திரம் தானிருக்கும். சிறுவன்நிலையிலுள்ள ஸஹாயம் இந்தவயதிலிருக்குமா? சிறுவனுக்குப் புத்தி முதலியவைகள் எல்லாம் வளர்ந்து வரும் பருவம். ஆகாயப் பந்தலாக ஸத்ஸங்கல்பம் அவனிடமிருந்தபோதிலும், அவைகளின் பதிவின் திடத்தாலும் இந்திரியாதிகள்சுறுசுறுப்பாலும் எந்தக் கொடிய நிலை வந்தாலும் வரட்டும் ஒருகை பார்த்துத் தான் விடுவது அதைத்தடுக்க என்ற தீரம் அவன் மனதைவிட்டகலாது எப்பொழுதும் இருக்கும். மனம் இந்த ரூபமாக இருக்கையில் ஒரு ஆபத்து வந்துவிட்டால் இந்த மூச்சிலேயே அவன் கெட்ட மார்க்கங்களில் இறங்காது முதல்தரம் மிகுந்த கஷ்டத்தின்பேரில் நின்றும் விடுவான். தீரம் அதிகமாகிவிடும். வரவரப் பழக்கபலமும் ஏற்பட்டுவிடும். முப்பதாமாண்டளவில் மூன்றற்றொரு பொருளைத் தப்பாமல் தன்னுள் பெற்றும் விடுவான். கிழட்டுச் சிறுவன் கதியைச் சற்று நிதானித்துப் பார்ப்போம். அந்தவயதில் ஸன்மார்க்க ஞானம் ஸம்பாதிக்கத் தொடங்கியிருப்பதால் நல்ல விஷயங்கள் அவன் புத்தியில் உலகானுபவ விசேஷத்தால் நன்றாக விளங்குமாயினும், சிறுவனுக்கேற்படும் தீரம் மாத்திரம் உண்டாக இடமிராது. இவன் தேஹாதிகள் தளர்ந்து கொண்டு வருகின்றன. ஒருவித அதைர்யமும் துக்கமுமே இவன் மனதில் ஏற்பட்டு, ஞானம் விளங்க விளங்க நல்ல விஷயங்களை உணரும் பொழுதெல்லாம், அவைகளில் நிலை நின்று ஒதுங்கவேண்டிய அபாயஸமயங்கள் தனக்குமுன்னே ஏற்பட்டதும், அவைகளில் தான்கேடுகெட்ட கழுதைபோல நடந்து கொண்டதும் நன்றாக ஞாபகம் வர 'ஐயோ! நமதுவாணாளை வீணாக்கினேமே' என்ற துக்கம் வந்து தாக்கும். கல்வி ஏறஏற தன் கையற்ற நிலை வெளிப்படுமே ஒழிய வேறொன்றும் வாராது. சிற்சில ஸமயங்களில் தான்கற்ற வித்தையைக்காட்ட வேண்டிய நிலைகள் ஏற்பட்டாலும், நல்ல வழியில் நடக்க வேண்டும் என்ற எண்ணம் மனதிலிருந்தாலும், பூர்வாப்யாஸபலம், தன்கையாலாகாத நிலை இவைகள் வசமாகி தன் எண்ணத்திற்கு விரோதமாகவே நடந்து விடுவான். துக்கம் அதிகரித்து அதைர்யம் ஓங்கிவிடும். இப்படி அவன் அந்த ஜன்மத்தைத் தள்ளிட்டால் அடுத்த ஜன்மத்தில் இளமையில் கற்று யௌவனத்தில் ஸித்திபெறுவன், ஆகவே முதுமைக் கல்வி இப்படி இருப்பினும் அப்பொழுதும் கற்காது மிருகங்கள் போல வாயைப் பிளப்பதைவிட இது எவ்வளவோ மேல்.

லௌகிக விஷயத்திலும் இளமையில் கற்க வேண்டியது அவசியம். யௌவனத்தில் குடும்பபாரமும், முதுமையில் ஓய்வும் வந்து விடுமாதலால், ஸம்பாதித்து இவ்விருபருவத்திலும் கஷ்டமில்லாது காலத்தைக் கடத்த இளமைக் கல்வி வேண்டியது அவசியம். லௌகிகக் கல்வி யௌவன ஆவேச அவஸரங்களுக்கு இடையில் வேரூன்றாதலால், இளமையே அதற்குத் தகுந்தது. மேலும் பகவான் கீதையில் 'அற்புதமாம் என்றன் விபூதிக்கோரந்தமிலை' என்று கூறுவதுபோல இந்த உலக விஷயத்தை உணரப் புகுந்து விட்டால்; அந்தக் காரியத்திற்கு முடிவே ஏற்படாது. அநேக புருஷ ஆயுஸ் இருந்தாலும் போதாது. இப்படி இருப்பதால் ப்ரகிருதி சாஸ்திரக்கல்வியை இளமையிலேயே ஆரம்பித்துவிட வேண்டியது அவசியம்தான்.

> கல்வியிளமைக் குளிலாக்காளி தாஸன் மனையாள்
> வல்வசையால் பொல்லா மரணமுற்றுச்— செல்வத
> நற்றமா புன்னைவனநாதா விதையறிந்து [றல்
> கற்றுவிளமையிற்கல்.

என்ற ஆத்திசூடி வெண்பாவில் காளிதாஸனைப் பற்றி ஸாதாரணமாக வழங்கிவருவதும் பொய்க்கதையுமான விஷயம் குறிக்கப் பட்டிருக்கிறது. காளிதாஸன் பிராஹ்மணனாகப் பிறந்து அவன் மூடத்தனத்தால் மாடு மேய்ப்பவனாகிவிட, அவனது முழுமூடத்தனத்தை, ஒரு தேசமந்திரி நுனிமரத்திலிருந்து கொண்டு அவன் அடிமரத்தை வெட்டும் பொழுது கண்டு, வித்யாகர்விஷ்டையாகி வந்தவரை எல்லாம் தடுத்துவிட்ட தன் ராஜகுமாரிக்கு மணம் புரிவிக்க, அவள் மூலமாக இந்த இடைப் பார்ப்பான் காளிகோயிலுக்குப்போய் அவள்பிரஸாதம் பெற்று வரகவியாகி வந்து, தனக்கு இப்பேருதவி புரிந்த பெண்மணியை நமஸ்கரிக்க அவள் காமவேகத்தில் அவனை 'பெண்கையில்மரணமுனக்குஉண்டாகுக' என்று சபித்துவிட்டிறந்தாள், என்றது எல்லோரும்

அறிந்ததே. இது போலவே ஒருசிறுவன் பள்ளியிலிருந்து ஒருஅற்பவஸ்துவொன்றைத் திருடிவர, அவன் தாய் தகப்பன் அப்பொழுதே அவனைக் கண்டித்து அடக்காமல் விட்டுவிட்டனர். வர வர அவன் விலையுயர்ந்த வஸ்துக்களைத் திருடிவந்து, முடிவில் ஒரு திருடைத்துகையில் பிடிக்கவந்தவருள் ஒருவனைக் கொல்ல அவனுக்குத் தூக்குதண்டனை பிறந்தது. தூக்குமரத்தில் நிற்கையில் சுற்றியிருந்த தாய் தந்தையரைக்கண்டு தாயுடன் ஒரு ரஹஸ்யம் கூற வேண்டு மென்கிற எண்ணத்தை வெளியிட, அப்படியே செய்ய அனுமதி பெற்றான். தாய் அருகில் வந்ததும் காதோடு ஏதோ சொல்வதுபோலக்குனிந்து அவள் காதைக் கடித்து எறிந்து விட்டான். என்ன ஸமாசாரம் என்று எல்லோரும் விசாரிக்கத் தான் ஆதியில் பள்ளியிலிருந்து அற்பவஸ்துவைத் திருடிவந்த பொழுது நற்புத்தி கூறித்தண்டியாது தாய் குசால்படுத்திவிட்டதால் தான் இப்பொழுது தூக்குமரமேற வேண்டிவந்ததென்றுகூறி துள்ளிக் குதிக்கும் இளமையில் என் துடுக்கடக்கிப் பள்ளிக்கு வைத்திலனே, தந்தையாகிய பாதகனே என்று கூறி உபந்யஸித்தான் என்று ஒரு கதைகூட உண்டு. நமது புராணங்களில் உள்ளபெரியோர்கள் எல்லோரும் இளமையிற்கற்று, யௌவனத்தில் அதன்படி நின்று முதுமையில் ஸித்திபெற்றவர்களே.

## II மொழிபெயர்ப்பு விளக்கம்

### TRANSLATION MODELS

These monsters of ingratitude, who had been so false to their old father, could not be excepted to prove more faithful to their own husbands. They grew soon tired of paying even the appearance of duty and affection, and in an open way showed that they had fixed their loves upon another. It happened that the object of their guilty loves was the same. It was Edmund, a natural son, of the late Earl of Gloucester, who had succeed the Earldom by his wicked practices; a wicked man, and a fit object for the love of such wicked creatures as Goneril and Regan. It falling about this time that Regan's husband died, Regan immediately declared her intention of wedding Edmund, which arousing the jealousy of her sister, to whom as well as to Regan, this wicked Earl had at sundry times professed love, Goneril found means to make away with her sister by poison. But being detected in her practices, she in a fit of dis-appointed love and rage, shortly put an end to her own life. Thus the Justice of Heaven at last over took these wicked daughters.

வயது முதிர்ந்த தமது தகப்பன் விஷயத்தில் நெறி தவறின நன்றிகெட்ட குரூபிகளிருவரும் தமது கணவர் விஷயத்தில் இதைவிட ஒழுங்காக விருந்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்க இடமே இல்லை. அவர்கள் தோற்றமாத்திரத்தில் உரிமையையும், காதலையும் பாராட்டிவந்து சீக்கிரத்தில் சலித்தும் போய்விட்டனர்: பின்னர் தாம் வேறொருவனிடம் காதல் கொண்டு விட்டதாக வெளிப்படையாகக் காட்டவும் தொடங்கிவிட்டனர். அவர்கள் இருவர் கொடுங்காதலுக்கும் இலக்கு ஒருவனாகவே ஏற்பட்டான் அவன் காலம் சென்ற க்ளாஸ்டர் பிரபுவின் வைப்பாட்டி மகனை கொடிய எட்மண்டே. இவன் சதியாலோசனைகளால் ப்ரபுத்வத்தைக் கைபற்றிக் கொண்டதால், கானரில், ரீகன் என்ற இருகொடும்பாவிகள் காதலுக்கேற்ற இலக்கான படுபாவி. அந்த ஸமயத்தில் ரீகன் கணவன் இறந்துவிட, எட்மண்டைத் தான் மணக்கப் போவதாக அவள் தன் எண்ணத்தை வெளியிட்டுவிட்டாள். படுபாவியான பிரபு கானரிலுக்கும் ரீகனுக்கும் அநேக ஸமயங்களில் தனித்தனி அவர்கள்மேலிருந்த தன் காதல்பெருக்கை வெளியிட்டிருந்தான். ஆதலால் இந்தஸமயம் கானரிலுக்கு அடங்காப்பொறாமை வர விஷம் வைத்துத் தன் தங்கையைக் கொல்ல உபாயம் செய்துமுடித்து விட்டாள். இந்தச் சூழ்ச்சிக்கிடையில் அவள் கண்டுபிடித்து வெளியிலிழுக்கப்பட, கைகண்டு பலிக்காக்காதல் கோபம் இவைகள் நிறைந்த ஆவேசஸமயத்தில் தன்னுயிரை திடீரென்று மாய்த்துக்கொண்டுவிட்டாள். இவ்வாறு முடிவில் ஈசாஞ்ஞை இப்படுபாவிப் பெண்களை வந்து தாக்கியது.

---

**நியாயமாக நிறுத்தெடுத்து வை.**—நம்மைச்சுற்றியிருப்பவர்களையும் நம்முடன் இடைவிடாது பழகுகின்றவர்களையும் பற்றி நாம் நன்றாகப் பரிசோதித்து நியாயமாக அவர்களுடைய குணதுணங்களை அறிந்தெடுத்துவைக்க வேண்டும். இதுதான் நமது நல்நடத்தையின் பெரிய அத்தாட்சி. இதற்கு முக்கிய ஆதாரம் நாம் யாருடன் பழகுகின்றோமோ அவர்களுடன் நாம் பழகுங் காலமெல்லாம் அன்பும் ஆதரவு மாக விருந்து அவர்களுக்கு வேண்டிய உதவிநம்மாலியன்ற மட்டும் செய்து வரவேண்டும். நம்மைச்சுற்றி யிருப்பவர்களுடைய குணதுணங்களை நிதானிப்பதில் நாம் நமது ஞானக்குறைவாலும், புத்திகுறைவாலும் மோசம் போகாமலும் அவர்களிருப்பதற்கு நேர் விரோதமாக எண்ணுமலும் அபிப்பிராயங் கொள்ள வேண்டும். மேல்பகட்டால் மோசம் போகலாகாது; உள்புகுந்து பார்க்கவேண்டும். மேல் உடுப்பாலும் ஆபரணங்களாலும் மயங்கலாகாது; ஏனெனில் அவைகளல்ல நற்குணங்களும் நடத்தைகளும்: அவைகளை அணியப்பட்டவன் குணங்களைக் கருதவல்லவோ நாம் நமது புத்தியைத் தீரமாகவைக்க வேண்டும்.



# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### நந்தன் சரித்திரம்

### 6. சிதம்பரச்சருக்கம்

அல்லது

### நந்தன் பக்தி நிலைபெற்றது

இவ்வாறு ஆடிப்பாடி ஆனந்த பரவசராகி மஹா பரிசுத்தமான சிதம்பரத்தைச்சுற்றி யுள்ள ப்ரதேசம் வந்ததும் வலம்சுற்றிவரத் தொடங்கினார்கள் அந்த பஜனைக்கூட்டத்தார். தாமரைப் பூமலரும் தருணமாக இருக்கையில் தேனீக்கள் எல்லாம் ரீங்காரம் செய்து கொண்டு அதைச்சுற்றிப்பறந்து வலம் வருவதுபோலத் தோற்றியது அந்த ஸமயத்தில். ஸம்ஸ்கிருதம் தமிழ் முதலிய பாஷைகளில் தேர்ச்சியடைந்துமன உருக்கம் பக்தி இவைகளில் கரைகண்டவராய் சபாநாயகரான ஸபாபதிக்கு நிகராகி அவரோடு தில்லை மூவாயிரவர் என்று இணைத்துக் கூறப்படும் தீக்ஷிதர்கள் தம்தம் இருப்பிடங்களிலிருந்தபடியே நந்தனை நோக்கினர். எப்படி நம் பரதகண்டத்தில் ஸூர்ய சந்திரர்களைத் தவிர மற்றையவெல்லாம்தாழ்ந்தநிலைக்கு வந்துவிட்டனவோ அப்படியே நந்தன் காலத்தில் சிதம்பர தீக்ஷிதர்களுக்கிருந்த மஹிமை இப்பொழுது இல்லை. முன்காலத்தில் பக்தி நேர்மையாகிய இரண்டும் எப்படி அவர்களுக்கு அறிகுறிகளாக விருந்தனவோ அதுபோல இப்பொழுது உச்சிக்குடுமியும், சாஸ்திரபரிசய மின்மையுந் தான் முக்ய அடையாளங்களாக அமைந்துகிடக்கின்றன. நடராஜருக்கே நிகரான அக்காலத்திய தீக்ஷிதர்கள் பஜனைக் கூட்டத்தைக் கண்ணுற்றனர். அங்கிருந்த எல்லோரும் நந்தனைவிட மேல் ஜாதியார்களாக விருந்தாலும் அவனைவிடத் தாழ்ந்தவர்களென மன உருக்கத்தில் மதித்து, சிதம்பர எல்லைக்குள் அடியெடுத்து வைக்க மனம் வராது அவனோடு நிற்பதைக் கண்டு வியந்து உருகினர். கடவுள் முக்ய பக்தன் என்று விளக்கி எழும் நந்தன் திவ்யதேஜஸ்ஸை உற்று நோக்கினர். தூரத்திலிருந்து இளந்தென்றல் ஏற்று வந்த அவன் அருட்பாடல்களை மனமுவந்து காதால் பருகினர்.

**நந்தன்:—**

கண்டவரெல்லாம் பழிக்கப் பாங்கிமாரே—என்னைக்
கை நழுவவிடுவாரோ பாங்கிமாரே.
காமனைக் கண்ணலெரித்தார் பாங்கியாரே—என்றன்
காதலைக்கண்டறிவாரோ பாங்கிமாரே.
காண விழைந்தேனவரைப் பாங்கிமாரே—
என்றன்
காதற் கண்ணுக்கொளித்து விட்டார் பாங்கிமாரே
குஞ்சிதபொற் பாதங் கண்டால்—பாங்கிமாரே
உள்ளக்குறை எல்லாம் தீரும் கண்டீர் பாங்கிமாரே..
கூற்றுதைத்த பாதங்கண்டீர் பாங்கிமாரே—நங்கள்
குடிக்கெல்லாம் குலதெய்வம் பாங்கிமாரே

**எல்லோரும்:—**

தருவளர் நிழலேநிழல் வளர்ஸுகமே
தடம்வளர் புனலே புனல்வளர்நலனே
திருவளருருவே வுருவளருயிரே
திருநடமணியே திருநடமணியே
உயிருறுமுணர்வே யுணர்வுறுமொளியே
ஒளியுறுவெளியே வெளியுறுவெளியே
செயிரறுபதியே சிவநிறைநிதியே
திருநடமணியே திருநடமணியே
கலைநிறைமதியே மதிநிறையமுதே
கதிர்நிறை கதிரே கதிர்நிறை சுடரே
சிலைநிறைநிலையே நிலைநிறைசிவமே
திருநடமணியே திருநடமணியே
மிகவுயர்நெறியே நெறியுயர்விளைவே
விளைவுயர்ஸுகமே ஸுகமுயர்பதமே
திகழுயருயர்வே வுயருயருயர்வே
திருநடமணியே திருநடமணியே.

இம்மாதிரி பாடிக்கொண்டே அந்த பஜனைக்கூட்டம் சிதம்பர எல்லைக்குள் சென்று அணுகியது. வர வர நந்தனுக்குப் பக்தி கரைபுரண்டு ஓடத்தொடங்கி விட்டது. அவன் முகதேஜஸ் வரவர அதிகரித்தது. இதற்குள் சாத்கால த்வாதசி சந்திரன் வெருகம்பீரமாக மேகத்திவலையேயின்றி ஓய்ந்திருக்கும் ஆகாயத்தில் கிளம்பியது. இப்படி இது நீலத்தடத்தில் தோன்றிய வெண்டாமரைபோல விளங்குவதுதான் நம் பரதகண்டச் சிறப்புள் மிகமுக்யமானது. சந்திரன் அப்பொழுது காதல்நிறைந்த ஸங்கீதம்போல மனதை உருக்கும் தன் அமிருத கிரணங்களைமேல் கீழ்நாற்புறமும் எங்கும் பரப்பியது. நந்தன்பக்திமன உருக்கம் எல்லாவற்றையும் கிளறிவிட்டன இந்த ஆனந்தகிரணங்கள்.

**நந்தன்:—**

தன்னையறிந்தின்ப முறவெண்ணிலாவே—ஒரு
தந்திரம் நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே.
நாதன்முடிமேலிருந்த வெண்ணிலாவே—அங்கே
நானும் வரவேண்டுகின்றேன் வெண்ணிலாவே.

எல்லோரும்:—நடராஜா நடராஜா * * *

**நந்தன்:—**

இராப்பகலில்லாவிடத்தே வெண்ணிலாவே—நானும்
இருக்க எண்ணிவாடுகின்றேன் வெண்ணிலாவே
ஞானமயமாய் விளங்கும் வெண்ணிலாவே—என்னை
நானறியச் சொல்லுகண்டாய் வெண்ணிலாவே.
ஆருமறியாமலிங்கே வெண்ணிலாவே —அரு
ளாளர்வருவாரோ சொல்லாய் வெண்ணிலாவே
அந்தரங்கஸேவை செய்ய வெண்ணிலாவே—யெங்க
ளையர்வருவாரோ சொல்லாய் வெண்ணிலாவே.

எல்லோரும்:—நடராஜா நடராஜா * * *

**நந்தன்:—**

நாணது வாய்நிற்கும் வண்ணம் வெண்ணிலாவே—
ஞானநெறி சொல்லுகண்டாய் வெண்ணிலாவே [ஒரு
ஐந்தலைப்பாம் பாட்டுகின்றார் வெண்ணிலாவே—
அம்பலத்தினின்ற தென்ன வெண்ணிலாவே [அவர்
அம்பலத்தி லாடுகின்றார் வெண்ணிலாவே—அவர்
ஆடுகின்ற வண்ணமென்ன வெண்ணிலாவே.
அந்தரத்தி லாடுகின்றார் வெண்ணிலாவே—அவர்
ஆடும்வகை எப்படியோ வெண்ணிலாவே.
அண்டபகிரண்டமெல்லாம் வெண்ணிலாவே—ஐயர்
ஆட்டமென்று சொல்லுவதென்ன வெண்ணிலாவே.
தேசுநிறமாய் நிறைந்த வெண்ணிலாவே—நானுஞ்
சிவமதாக விழைந்தேன் வெண்ணிலாவே
அம்பலத்தில் ஆடுகின்றார் வெண்ணிலாவே—என்னை
ஆட்டுகின்றார் இம்பரத்தே வெண்ணிலாவே.

**எல்லோரும்:—**

நடராஜர் நல்நட மம்பலத்தே.
எமது மருள்நட மிம்பரத்தே.

சிதம்பரத்தை அனுபவமாவர நந்தன் பக்தி திடப்பட்டு நிலைத்துக்கொண்டே வந்து சிறந்த முமுக்ஷுத்வ நிலைக்கு வந்துவிட்டது. இந்தப் பக்தியின் முதிர்ந்த நிலையைத்தான் வ்ரஜயிலுள்ள கோபிகள் காதல் என்று விஷ்ணுபுராணத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது:—

கிருஷ்ணனைச் சென்றணையப் புறப்பட்ட கோபி ஒருத்தி வாயிலில் வீட்டுப் பெரியோர்களிருக்கக் கண்டு அவர்களைத் தாண்டிப்போக மனந்துணியாது திகைத்து நின்றாள். உடனே உள்ளே சென்று தனிமையாக உட்கார்ந்துகொண்டு 'என் கண்மணியை நேராகத்தான்சென்று காணக்கொடுத்து வைக்கவில்லையே! அவரைத்தான் பரபக்தியோடு கண்மூடி த்யானிப்போம்' என்று மனதை ஒருவாறு திருப்தி செய்துகொண்டு த்யானம் செய்தாள். அப்பொழுது உண்டான கரையிலா ஆனந்தத்தால் அவள் புண்ணியங்கள் எல்லாம் அவளை விட்டுநழுவிப் போய்விட்டன. 'ஐயோ அவரை நேரிடக்காணக் கொடுத்து வைக்காத பாபியானேனே! என்று இடைஇடையே கதித்தெழுந்த துக்கத்தின் பரிசுத்தத்தால் அவள் பாபங்கள் இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடிப்போயின. இப்படி இவள் மோக்ஷம் பெற்றாள். வேறு சிலர் ஆதிகாரண வஸ்துபரப்ரஹ்மமே என்று மதித்து நிலைபெற்று பெருமூச்செறிந் துருகியேதான் மோக்ஷம் எய்தினர்.

நந்தனுக்கு இந்த ஸமயத்திலிருந்த ஆவலைப்போன்றதுதான்

ஆதியனாதியுமாகி—எனக்
கானந்தமாயறி வாய்நின்றி லங்குஞ்
சோதிமௌனியாய்த்தோன்றி—அவன்
சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி
சங்கர சங்கர சம்போ—சிவ [தோழி
சங்கர சங்கர சங்கர சம்போ
சங்கர சங்கர சம்போ.

என்று தாயுமானவர் தமது ஆனந்தக்களிப்பில் வர்ணித்த நிலையும்.

**நந்தன்:—** பல்லவி.

கொம்மியடிப் பெண்கள்—கொம்மியடி
அம்பலக்கூத்தன் விளங்கவே—கொம்மியடி.

அநுபல்லவி.

நம்மையாளும் பொன்னம்பலவாணனை
நாடிக்கொம்மியடியுங்கடி
பதம் பாடிக் கொம்மி யடியுங்கடி.

சரணங்கள்.

காமமகற்றிய தூயனடி—சிவ
காமஸௌந்தர நேயனடி

**எல்லோரும்:—** பல்லவி.

**நந்தன்:—**

ஆனந்தத் தாண்டவராயனடி—நம்மை
யாட்கொண்டருளிய தேஜனடி
அம்பலத்தாடல் செய்வனடி—யன்ப
ரன்புக்கொளிதரு மெய்யனடி.
தில்லைச்சிதம்பர வித்தனடி—சுயஞ்
சோதியடி பரஞ்சோதியடி
நம்மையாளும் பொன்னம் பலவாணனை
நாடிக்கொம்மியடியுங்கடி

**எல்லோரும்:—** பல்லவி.

இம்மாதிரி ஆனந்தபரவசமாக மூன்று நாளிராப் பகலோயாது ஆடிப்பாடினான் நந்தன். இப்படி இருக்கையில் நந்தனுக்கு சிற்சில ஸமயங்களில் மனக்கிளர்ச்சியும், மனத்தளர்ச்சியும் மாறிமாறிவந்து பக்திநிலைத்துவந்தது. சிலஸமயங்களில் சிதம்பரம் அர்த்தஜாம மணியோசை அவன் காதில்விழும்; உத்ஸாஹம் கிளம்பி விடும்:

கெண்டாமணியாடுது—கண்டுபிணிவாடுது

என்று ஆடிக்குதிப்பான்.

சிலஸமயங்களில் ஆனந்த அதிகத்தால் கொண்டாடிப்பான் நந்தன்—சிலஸமயங்களில் சிதம்பர தரிசனம் கண்டதில்லையே அதன் சிறப்பை என்னென்று கூறுவது.

கனகஸபேசன் சேவடி நான்கண்டதில்லை—தில்லை
கனகஸபேசன் சேவடி.

ஐயோ!

கனகஸபாபதி தரிசனம்—ஒருநாள்
கண்டால் கலிதீரும்.

என்று மனங்கரைந்து பரவசமாவர். இப்படி இருக்கும் பொழுதே 'எப்பொழுது தரிசனம் கிடைக்கும் எனக்கு' என்ற ஏக்கம் வந்துவிடும். அப்பொழுது,



எப்போவருவாரோ—எந்தன் கலிதீர
எப்போவருவாரோ
வாராமலிருப்பாரோ—ஒருக்கால்
வருவாரோ அறியேன்

என்று ஏங்கித்தவிப்பார்.

இன்னம் வரக்காணிலேன்—என்னசெய்குவேனவர்
இன்னம் வரக்காணிலேன்

என்று பரபரப்புடன் துடிப்பார்.

உடனே தன் பாபப் பறைய ஜன்மமல்லவா இங்கு தடையாக நிற்கிறது என்ற எண்ணம் கொதித்தெழுந்துவிடும். அப்பொழுது:—

போதும்போதுமையே—எடுத்தஜன்மம்
போதும் போதுமையே
இந்தஜன்மம் வேண்டாம்—இனி
எந்தஜன்மம் வந்தாலும் வரட்டும்
இந்தஜன்மம் வேண்டாம்
எப்போதொலையுமிந்தத்துன்பம்—ஜகதீசன்
கருணையிருந்தாலன்றோ—இன்பம்

என்று பலவாறாகப்பாடி வருந்துவார்.

உடனே சற்று உத்ஸாஹம் கிளம்பும்

வருவார் வருவார் மனமே—
நீ மயங்காதிரு சொன்னேன் சொன்னேன்

என்று தன்னைத் தேற்றிக்கொண்டு தில்லையை வலம் சுற்றிவருவார்.

ஸந்நிதிக் கெதிரே வந்து நின்று கொண்டு

இது நல்ல ஸமயமய்யா—இரட்சிக்க
இது நல்ல ஸமயமய்யா

என்று உருகிப்ரார்த்திப்பார்.

வருகலாமோ—வையா—உன்ற
னருகில் நின்று கொண்டாடவும் பாடவும்

என்று அனுமதி கேட்பார்.

ஸந்நிதி வரலாமோ—ஸ்வாமி
தரிசனம் தரலாமோ.

என்று நெருங்கப்பார்ப்பார்.

இவ்வளவு மனங்கனிந்துருகியும் கடவுள் கருணை வாராதது கண்டு

விருதா ஜென்மமாச்சே—வந்தும்
விருதா ஜென்மமாச்சே.

இரக்கம் வாராமல் போனதென்ன காரணம் ஸ்வாமி என்று திண்டாடித்துடிப்பார்—ஒருவேளை—

பார்க்கப் பார்க்கத் தெவிட்டுமோ
உன் பாததரிசனம்

என்று வியந்து கூறுவார் ஒருவேளை. இப்படி மூன்று நாள் கழிந்து வருகையில் மூன்றாம் நாள் நடுநிசியில் ஒரு கனவுகண்டு திடுக்கிட்டு எழுந்து அதைநினைத்து ஆனந்த பரவசராகி:—

ஸொப்பனம் கண்டு கொண்டேன்—அதிசய
ஸொப்பனம் கண்டு கொண்டேன்.

என்று வியந்து கூறி நடராஜர் கனவில் தரிசனம் கொடுத்ததைப் பாராட்டி ஆனந்தித்தார்.

பின்னர் இந்தக் கனவால் ஏதாவது பயனுண்டோ என்ற ஸந்தேஹத்துடன்

கனவோ நினைவோ கண்டதும் வீணோ
வருவாரோ வரந் தருவாரோ—எந்தன்
மனது சலிக்குதையோ யெப்போது

என்று சித்தங்கலங்கினார்.

இவ்வாறு அனலிலிட்ட மெழுகுபோல நடராஜர் எப்படித் தன்னைத் தம் ஸந்நிதானத்திற் கிழுத்து கதிதரப்போகிறாரோ என்று ஆவலுடன் உருகி எதிர்பார்த்து, ஸதா கடவுள் பரமாகவே மாறாதிருக்கும் நிலையாகி முமுக்ஷுத்வ நிலை நந்தனாருக்கு வர அவருக்கு பக்தி நிலைத்துவிட்டது. மேல் நடந்ததை பின்னர் எடுத்து விவரிப்போம்.

---

**பரிசுத்தம்.**—ஒவ்வொரு மனிதனும் மிகவும் பரிசுத்தமாய் இருக்கவேண்டும்; கைகள் நகக்கண்கள் முதலான இடங்களில் அழுக்கே இருக்கக்கூடாது. பற்களில் எப்பொழுதும் ஊத்தையும், சதா நாறும் வாயும் எப்பொழுதும் ஒரு மனிதனிட மிருக்குமேயானால் ஜனங்கள் அவனிடத்தில் எவ்வளவுக்கெவ்வளவு பிரியமற்றிருப்பார்களோ அவ்வளவுக்கவ்வளவு கொடிய நோய்களும் அவனை வருத்தும். நகக்கண்களெல்லாம் அழுக்கடைந்தும், நகங்கள் முழுநீளம் வளர்ந்தும் வரட்டுவரட்டென்று எப்பொழுதும் சொரிந்துகொண்டும் ஒருமனிதன் இருப்பானேயானால் அவனைக் கண்டால் யாருக்குத்தான் அஸங்கியம் வரமாட்டாது. ஆகையால் நீ யாரிடமாவது போகுமுன் கை கால்களை நன்றாய்ச் சுத்திசெய்துகொள்வதுடன் நகக்கண்களில் அழுக்குகளில்லாமல் நன்றாய்க் கழுவவேண்டும். அடிக்கடி க்ஷவரம் பண்ணுவித்துக் கொள்ளும்பொழுது நகங்களை அதிகமாக வளரவிடாமல் நறுக்கிக்கொண்டு வரவேண்டும். காதுகளிலும் மூக்குத் துவாரங்களிலும் அடிக்கடி விரலைவிட்டுக் குடைந்துகொண்டே இருக்கக்கூடாது. காலையில் எழுந்து முகத்தைக் கழுவும்பொழுதே காது மூக்குகளையும் கழுவவேண்டும். அடிக்கடி மூக்கை சிந்திக்கொண்டிருப்பது அவலக்ஷணமானது. சிலர் தலையை அல்லது தேகத்தில் ஏதாவது ஒருபாகத்தைச் சொரிந்துவிட்டுப் பிறகு மோந்து பார்ப்பது விகாரமானவழக்கம். இவைகளன்றியில் இன்னும்அநேகம் அவலக்ஷணமான குணங்களுண்டு. அவைகளை எல்லாம் நீ கவனிக்கும் பக்ஷத்தில் தானாகவே அறிந்துகொள்வாய். அப்படியன்றி எப்பொழுதும் பரிசுத்தமின்றி இருப்பாயாகில் 20,30 வயதுக்குள்ளே எல்லாரும் இகழும்படியாகி, 40,50 வயதுக்கெல்லாம் உடல் மெலிந்து தளர்ந்துபோவாய்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### 4. ஸிப்ரமடைந்த காதை

*“பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ?”*

ஸிப்ரத்தீவில் துருக்கிகளுக்கும் விநீசியர்களுக்கும் பெரும் கொடிய யுத்தம் நடந்தது. அதன் அதிகாரியாக இருந்த மண்டனனும் உத்தல்லனது வரவை எதிர்பார்த்துக்கொண்டு ஓர் துறைமுகத்தில் காத்துக்கொண்டிருந்தான். தனக்கு மேலதிகாரியாக வரும் உத்தல்லனது புகழையும் பெருமையையும் வீரத்தையும் பாராட்டிக்கொண்டவன் அங்கு இருந்தான்.

நிற்க, கடலில் பெரும் யுத்தம் நடந்தது. காச்யபனுடன் உத்தல்லனுமாக அத்துருக்கிப் படையின் ஒழுங்கை உடைத்து, முனையைப் பிரித்தொதுக்கி, சுற்றுப்படையைத் தாக்கி அவரது கப்பல்களையுந் தாக்கி அப்பகைவரது படைமுழுவதையுஞ்சின்னபின்னஞ் செய்தார்கள். இதற்குள் பெரும்புயல் காற்று கனமாக வீச ஆரம்பித்தது. ஸமுத்திரம் முழுதும் அல்லோலகல்லோலப்பட்டு அலைத்துக் கொண்டிருந்தது.

இந்த நிலையைக்கண்ட மண்டனன், உத்தல்லனது பெருமையை அவன் கீழிருந்து பழகி இருந்தவனாகையால், அவனுடைய க்ஷேமத்தைப்பற்றிக் கவலைகொண்டான். ஆயினும் கடல் ததும்பித் ததும்பி வெள்ளிமலைகள் உருகி வழிந்ததென்னும்படி அலைத்து, கோபத்துடன் தம்மைத்தொந்தரை செய்யும் அவ்வாயுவின்மேல் நீர்ப்படையை ஏவிக்கொண்டிருந்தது. மற்றந்தஸ்ப்தரிஷி மண்டலத்தில் நீரைஇறைத்து அதன் துருவத்தின் அடங்காத் தாபத்தையுந் சழிக்க வெண்ணும். இவ்வாறு நிலைகுலைந்து அச்சமுத்திரம் நொய்யும் நுரையுங் கக்கிக்கொண்டு பெருமாரவாரத்துடன் இரைச்சலிட்டுக்கொண்டிருந்தது. இதைக் கண்ட மண்டனன் உத்தல்லனுக்காக மேலுங் கவலைப்பட்டான். அதிலிருந்தவன் “உத்தல்லன் துருக்கிப்படையை நாசஞ் செய்துவிட்டான். ஆனால் புயல் காற்றால் காச்யபனைப் பிரிந்து வேறெங்கேயோ ஒதுக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டேன்” என்று சொன்னான். இதைக்கேட்ட மண்டனன் “கடவுள் அவ்வீரனைக் காக்கட்டும்” என்று கூறிக்கொண்டு கடற்கரையை அடைய நடக்கலானான். வழியிலவன் காச்யபனைக் கண்டான். உத்தல்லனைப்பற்றி அவனிடம் விசாரித்தான். “அவன் இருக்கும் கப்பல் வலிவுடையதா? தக்க மாலுமி யுடையதா?” எனவுங் கேட்டான். “உத்தலனுக்கோர் பயமும் கிடையாது. அவன் மாலுமி வெகு கெட்டிக்காரன்; அனுபவசாலி. கப்பலுங்கெட்டி. என்மனம் அதனால்தான் திடங்கொண்டிருக்கிறது” என்று பதில் சொன்னான்.

இதற்குள் ‘கப்பல்! கப்பல்!’ என்று எங்கும் பேரிரைச்சல் உண்டாகியது. அதைக்காண ஊர்முழுதும் கரையிலே விளங்கின. அப்பொழுது வெடிகள் தீர்க்கப்பட்டன. ‘அக்கப்பலில் யார் வந்தது’ என்று பார்த்துவா ஓர் ஆளை அனுப்பிவிட்டு மண்டனன் “உமது வீரர்க்கு வாழ்க்கைத்துணையாகத் தக்கமனைவியுண்டோ?” என்று காச்யபனைக் கேட்டான். அவனும் “அவனுக்கோர் மனைவி; அவள் கல்லும் புல்லுங் கண்டுருகும்படியான பெண்கனி. சொல்லாலும் பொருளாலும் கற்பனை மதியாலும் அளக்கமுடியா அழகுடையவள்” என்று பதில் சொல்லும்பொழுது அங்கு அத்தூதன் வந்து “கப்பலில் அயோக்ய புஞ்சன் என்பவர் ஒருவர் வந்திருக்கிறார்; அவர் உத்தல்லரது ஆளாம்” என்றான்.

**காச்யபன்.**—என்னக் கடுவேகமாக இந்தக் கப்பல் வந்திருக்கிறது. அவளது தெய்வீக வடிவத்தைக் கண்டு அவ்வெருண்டகடலும், அரற்றுங் காற்றும், இடைஇடை விளங்குங் கூரியகற்களும், ஆகிய சுக்கானைத் தொலைக்கும் துரோஹிகளாகிய பிறவும், அவள் அழகில் ஈடுபட்டுத் தமது இயற்கை சுபாவத்தை இழந்து, அக்கற்பே உருவெடுத்த சாந்தைக்கு வழி கொடுத்திருக்கின்றன வல்லவா?

**மண்டனன்.**—யார் அவள்?

**காச்யபன்.**—நான் முன்கூறியவன்; எங்கள் தலைவரின் தலைவி. அயோக்ய புஞ்சனை அவளை இங்கு அழைத்து வரும்படி ஆணையிட்டிருந்தபடியால் இங்குவருகிறாள். வெகு உத்தமியாகிய அச்சாந்தையின் ஸந்நிதியால் உத்தல்லர் ஸுகப்பேறடைந்து, கலையற்ற எங்களுக்கு ஸந்தோஷ முண்டாக்கட்டும்! இதற்குக் கடவுள் துணைபுரிவாராக!

இவ்வாறு காச்யபன் கூறுஞ்சமயத்தில் அயோக்யனும், ருத்ரகாமனும், அமலையும், மற்றும் ஸேவகரும் சூழ்ந்துவர சாந்தை அங்குவந்தாள். அவளைக் கண்டதும் காச்யபன் “இதோ பாரும்! கப்பலின் செல்வமுழுது மிதோ கரைமேல் வந்திருக்கிறது. ஹே ஸிப்ரத்து ஜனங்களா! நீங்கள் முடியை அவர் காலிற்சர்ப்பணஞ்செய்யும்.—அம்மணீ! நீர் நெடுநாள்வாழ்க! கடவுளின் கருணைகடாக்ஷ நோக்கம் உமக்கு முன்னும் பின்னும் எங்குமாக உம்மைக் கவிந்து அருள் புரியுமாக!” என்று வாழ்த்தினான்.

**சாந்தை.**—காச்யபரே! உமக்கு வந்தனம்.—என் நாதனுடைய விஷயத்தைப்பற்றிச் சமாசாரமேதேனுமுண்டோ?

**காச்யபன்.**—அவர் இன்னு மிங்கு வந்திறங்கவில்லை; சீக்கிரத்தில் வந்துவிடுவர். அவர் ஸுகமாகத்தான் இருக்கிறார்.

**சாந்தை.**—எனக்கென்னமோ பயமாகத்தான் இருக்கிறது.—நீங்கள் எப்படி அவரை விட்டுப் பிரிந்தீர்?



**காச்யபன்.**—இக்கடலுங் காற்றுங் கலந்துசெய்த அவதியால் நாங்கள் பிரிந்தோம்.—அதோ ஒரு கப்பல் தெரிகிறது.

அதே ஸமயத்தில் யாவரும் ‘கப்பல்! கப்பல்! என்று இரைய வெடிகுண்டுகள் தீர்க்கப்பட்டன. இதற்குள் சாந்தை அமலை அயோக்யன் இவருடன் பேசிக்கொண்டிருக்க காச்யபன், வந்தது யார் என்றறிய ஓர் ஆளை ஏவினான்.

அயோக்யன் தனது மனைவியாகிய அமலையை வர்ணித்தான்; வெகு குயுக்தியாகவும் அவளுக்குக் கோபமுண்டாகும்படியும் வர்ணித்தான். அதைக் கேட்ட சாந்தை “என்னை வர்ணித்தால் எவ்வாறு செய்வாய்” என்றாள்.

**அயோக்யன்.**—எனக் கவ்வேலை இடாதிரும்; குறை சொல்வதே என்குணம்.

**சாந்தை.**—வாரும்; ஆரம்பியும்.—ஒரு ஆள் கப்பலிறங்குந் துறைக்கனுப்பப்பட்டான் அல்லவா?

**அயோக்யன்.**—அனுப்பப்பட்டிருக்கிறான்.

**சாந்தை.**—எனக்கு மகிழ்ச்சி என்பதில்லை; என் கவலையை மாறுவேஷங்கொண்டு கடந்துகொண்டிருக்கிறேன் வாரும். என்னை எப்படிப் புகழ்வீர்? சொல்லும்.

**அயோக்யன்.**—அதே கவலையாய்த்தான் இருக்கிறேன்; ஆனால் பறவையைப் பிடிக்க வைத்திருந்த பிசின் துணியில் பிடித்துக் கொண்டாற்போல என் மண்டையில் இருந்து கற்பனை வருகிறது; ஆனாலும் என் கற்பனாதேவி பிரஸூதி வேதனை அடைகிறாள். இவ்வாறவள் பாவப் பிரசவஞ் செய்வள்.—

*அவள் அழகும்புத்தியும் அடைந்தவளானால் அழகும் புத்தியுமா?—ஒன்று உபயோகத்திற்கு, மற்றொன்றதை யுபயோகிக்கும்.*

**சாந்தை.**—நன்றாகச் சொன்னாய்! கறுப்பாய் புத்தியுள்ளவளானால் எப்படி?

**அயோக்யன்.**—அழகற்று புத்தியுடையவளானால் அவள் தன் அறிவால் அழகுள்ள கணவனை அடைவள்.

**சாந்தை.**—மேலுங்கெட்டது!

**அமலை.**—ஆமாம் அழகும் முட்டாளும் ஆனால்?

**அயோக்யன்.**—அழகாயிருந்தவர் இது வரைக்கும் முட்டாள்களாக இருக்கவில்லை.

**சாந்தை.**—இம்மொழிகள் எல்லாம் கள்குடியிற் பேசும் பழமொழிகள். இருக்கட்டும் அழகற்ற முட்டாள்களுக்கு என்ன பாழுங்கதை நீ பாடப் போகிறாய்?

**அயோக்யன்.**—அழகும் புத்தியு முடையவர்களாய்ப் பிதற்றுபவரல்லாமல் அழகற்று புத்தியற்று விளங்குபவர் வேறுயார்?

**சாந்தை.**—என்ன பாழும் மடைமை! நீ கொடுமையை உயர்வாக வர்ணிக்கிறாய்; ஆனால் நீ உண்மையில் சிறப்புக்குத்தகுந்தவளை எப்படிப் பேசுவாய்? குணத்திற் சிறந்து, புத்தி மிகுந்து, அறிவினுயர்ந்து தன் பெருமைக்குகந்தவிதம் இருப்பவளை எப்படித் துதிப்பாய்?

**அயோக்யன்.**—அழகே உருவெடுத்தவளும் ஆனால் கர்வமென்பதைக் காணாதவளும்; விரும்பிய பொழுதில் பேசக்கூடியவளும் ஆனால் குரலை எடுத்துக் காட்டாதிருப்பவளும்; பொன்னால் குறையாதவளும் ஆனால் டம்பங்கொள்ளாதவளும்; தன் விருப்பத்தினை வழி செல்லாதவளானாலும் ‘இப்பொழுதடைவேன், என்று சொல்லக்கூடியவளும்; தன் கோபத்தை வளர்த்து வஞ்சங்கொள்ளும்படிச் செய்தாலும் தனக்குச் செய்த தீங்கை எண்ணாது பகை பாராட்டாது இருக்கக்கூடியவளும் புத்திமயங்கி கரும்பை வெறுத்து வேம்பை யுண்ணக்கூடியவளும்; எண்ணித் தன் மனதை வெளியிடாதவளும்; காதலால் தன்னைக் கொள்ள கவிந்துவருபவர் யாரையும் பார்த்தும் பின் நோக்காதிருக்கக் கூடியவளும்;—அவள் தான் பெண், அத்தகைய பெண் இருக்குமானால்.

**சாந்தை.**—என்ன செய்வதற்கு?

**அயோக்யன்.**—முட்டாள் பின் போகவும் முட்டைக்கணக்கு எழுதவும்.

**சாந்தை.**—அமலை! அவர் உன்கணவராலும் இதை எல்லாம் அவரிடம் கற்றுக்கொள்ளாதிரு. என்ன காச்யபரே! அவர் தவறானவழியிற் போகச் சொல்லும் போதனா மூர்த்தியல்லவா?

**காச்யபன்.**—அவர் நாட்டுப்புறம்போல்பேசுகிறார். படித்தவர்போலவர் பேசுவதைக்காட்டிலும் ரணரங்க வீரன்போலப் பேசினால் உமக்குப்பிடிக்கும்.

இவ்வாறு காச்யபன்சொல்லும்பொழுது தாரைசின்னம் முதலிய வாத்தியங்களின் ஓசை உத்தல்லனது வரவை தெரிவித்தன. இவற்றைக்கேட்டதும் சாந்தை “வாரும்” நாம் அவரைப் போய் அழைத்து வருவோம்” என்றாள். அப்பொழுது காச்யபன் “அதோ வருகிறாரே’ என்று சொல்லும் பொழுதே உத்தல்லன் அங்கு வந்து அடங்கா ஆனந்தத்துடன் சாந்தையை இறுகத் தழுவினான்.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**கவர்னர்ஜெனரல் வருகை.**—கனந்தங்கிய நமது கவர்னர் ஜெனரல் அவர்கள் நமக்கெல்லாம் நன்மையைச்செய்ய நவம்பர்மாதத்தில் சென்னைக்கு விஜயஞ்செய்யப்போகிறார். உபசாரப்பத்திரிகை (Address) வாசிக்கவிரும்புகிறவர்கள் அதன் நகலை (Draft) ஆகஸ்டுமாதம் 15ம் தேதிக்குள் சென்னை கவர்ன்மெண்டின் பிரைவேட்செக்ரிடேரியார் அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

***

**உத்தியோகஸ்தர்க்குப் பத்திரமான ஓர்புத்தி.**—இந்தியாவிலே நெடுங்காலமாய்விசேஷபொறுப்புள்ள உத்தியோகங்களிலமர்ந்திருந்து,சமீபகாலத்தில்இளைப்பாறினவராகிய சேர்கைவினீற்றுவுட்உவில்சனவர்கள் உத்தியோகஸ்தரனைவரும் விசேஷ மதிப்புக்குந் துதிப்புக்குமுரிய நன்னிலையெய்திச் சிறத்தற்குத் தமது அனுபவத்தைக் கொண்டு பத்திரமான ஓர் புத்திமதி கூறினர். "இந்தியாவுக்கு இப்போது பெரிய மாறுதலான காலம். நாம் அதற் கூடாகச் செல்கின்றோம். ஆகவே காலத்துக்கேற்ற கோலமாய்த் தேசத்தில் நன்னீதி யோங்கிச் செழிக்கவேண்டில், இராசசேவைசெய்ய அழைக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்கள் திருவாக்கிற் சங்கீதக்காரன் கூறும் பத்திரமான புத்திமதிகளைத் தழுவி நடப்பது மிக நல்லது. "கைகளிற் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புகொடாமலும் கபடாய் ஆணையிடாமலுமிருப்பவனே. கர்த்தரால் ஆசீர்வாதத்தையும் தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான்" என்பதே அந்தப் புத்திமதிகள் என்று கூறினர்.

***

**பிச்சைக்காரர்களுக்கு ஒரு பத்திரிகை.**—பிரான்சு தேசத்துள்ள பாரிஸ் நகரத்தில் பிச்சைக்காரர்களுக் கென்று ஒரு பத்திரிகை பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றது. அதில் பிறர் தருமஞ் செய்யும் தேதி, இடம் முதலியவை கூறப்பட்டுள்ளன.

***

**கலியாண வரி.**—பிரான்சு தேசத்துக் கவர்ன்மெண்டார் 30 வயதாகியும் விவாகஞ் செய்து கொள்ளா திருப்பவர் தமக்கு விதித்துள்ள வரியுள் ஐந்திலொருபாகத்தை யதிகமாகச் சேர்த்து வரி செலுத்த வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர்.

***

**துறவிகள்.**—இடாலி தேசத்திலும் இன்னும் மலைக் குகைகளில் வசித்து பழங்களையும் சாகுகளையும் புசித்து வரும் துறவிகள் 930 பேர்கள் இருக்கிறார்களாம். இவர்களில் மூவர் நூறுவயதுக்கு மேற்பட்டவர்கள், 16 பேர்கள் 95 வயதுக்கு அதிகப்பட்டவர்கள். பாக்கியானவர்களெல்லாம் 57 வயதுக்கு மேலானவர்கள்.

***

**தற்செயலாய்க் கண்டுபிடிக்கப்பட்ட எண்ணெய்க்கிணறுகள்.**—பசிபிக்மகாசமுத்திரத்துள் பாபுவா என்னுந் தீவில் ஒருவன் தன் யஜமானனுக்குத் தேயிலை கொண்டு வந்துகொடுத்த போது அதில் மண்ணெண்ணெய் கலப்பு இருக்க யஜமானன் அவனைச் சவுக்கெடுத்து வீசினான். அச்சுதேசியஜமானனைத்தான் நீர் எடுத்த கிணற்றண்டைகொண்டுபோய்க்காட்டவே அது கிரோஸின் எண்ணெய்க் கிணறாக இருக்க அது முதல் அத்தீவில் மண்ணெண்ணெய்க் கிணறுகள் ஏராளமாக வெட்டப்பட்டுத் தொழில் விருத்தியடைகிறது.

***

**ஒன்பது வருஷம் விடாமல் எரியக்கூடிய ஒரு மெழுகுவர்த்தி.**—மிஸ்டர் பீர்பாண்ட் மார்க்கன் அவர்களின் ஞாபகார்த்தமாக ரோமாபுரியில் வடிகானில் உற்சவ தினங்களில் ஏற்றி வைப்பதற்காக ஹார்லப் கம்பெனியார் செய்துவருகிறார்கள். இதன் உயரம் 26 அடி, கனம் 400 பவுன், விலை 4, 500 ரூபா, அடிவாரம் 18 அங்குலம், சதுரம் வாய்ந்தது. ஒருபக்கத்தில் மிஸ்டர் மார்க்கலின் எண்ணெய்ச் சிலை அமைக்கப்பட்டிருக்கும். மெழுகுவர்த்தியை அலங்கரிக்கும் சுவர்ணபாத்திரம் மாத்திரம் ரூபா 750 ஆகிறது. இவ்வர்த்தி விடாமல் எரிந்துகொண்டிருந்தால் ஒன்பது வருஷகாலம் நிற்குமாம். வருஷத்திற்கு ஒரு நாள் மாத்திரம் எரிந்தால் 3,000 வருஷம் வரும்.

***

**ஒரு விசித்திர ஏரி.**—லோயார்க் என்னுமிடத்தில் ஒரு விசித்திர ஏரி இருக்கிறதாம். அது பத்து வருஷ முதல் பதின்மூன்று வருஷம் வரையில் ஜலமில்லாமலே வற்றியிருக்குமாம். இவ்வருஷங்களிலெல்லாம் ஜனங்கள் அவ்வேரியை உழுது பயிர் செய்து மாசூல்செய்து வருவார்களாம், ஆனால் திடீரென்று பதின்மூன்று வருஷத்துக்கப்புறம் ஜலம்சுரந்து 12அடிமுதல் 15அடிஆழம்வரை ஆகிவிடுகிறதாம்.

***

**சில வேடிக்கையான விவாகங்கள்.**—1775-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் 6 அடி 2 அங்குல உயரமுள்ள தாமஸ் என்பவன் யார்க் என்னுமூரில் 3 அடி 2 அங்குல உயரம் வாய்ந்த ஹனடெனிக் என்பவளை மணந்து கொண்டான். 1769-ம் வருஷம் பிப்ரவரியீ 95 வயதான ராபர்ட்ஜட்ஜ் என்பவன் 18 வயதான ஆனிஜாஜண்ட் என்பவளை பாணிக்கிரகணஞ் செய்தான். 1751-ம் வருஷம் ஆகஸ்டுமீ ஜேஜு என்பவன் தனது நான்காவது மனைவியையே திரும்பவும் மணந்துகொண்டான். அவனது ஐந்தாவது மனைவியையும் மூன்றாவது மனைவியையும் அடுத்த வீட்டுக்காரர்கள் மணஞ்செய்து வாழ்ந்து வந்தார்கள்.



**விநோத பத்திரிகைகள்.**—சில வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் "பித்த தூதன்" என்னும் பத்திரிகை பைத்தியக்காரர்களுக்கென்றே இயற்றப்பட்டு வந்தது. பாரிஸ் நகரத்தில் பிச்சைக்காரர் பத்திரிகை ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. இப்பத்திரிகையில் எவ்வெவ்விடங்களில் தர்மம் நடத்தப்பட்டு வருகிறதென்பதும், சீக்கிரத்தில் நடக்கவிருக்கும்கலியாணங்கள், விருந்துகள், உத்தரகிரியைகள் முதலியவும் குறிக்கப்பட்டிருக்கும். இந்தச் சமாசாரத்தைக் கொண்டு பிச்சைக்காரர்கள் அவ்விடங்களுக்குச் சென்று சம்பாதிப்பார்கள். ஸ்விட்ஸர்லாண்டு நாட்டில் ஸூரிச் என்னுமூரில் "புதுமணத் தம்பதி விளம்பரம்" என்று பத்திரிகை நடத்தப்படுகிறது. இதில் புதிதாக மணக்கவிருக்கும் காதலர்களின் பெயரும் விலாசமும் அச்சிடப்பட்டிருக்கும். வியாபாரிகள் இப்பத்திரிகையை வாங்கிப் படித்து தங்கள் சாமான்களை தம்பதிகளிடம் விலைப்படுத்த முயலுவார்களாம். அனைத்திலும் விநோத வர்த்தமான பத்திரிகை பூடாபஸ்த் என்னுமூரிலுள்ள ஹிர்மகண்டோ என்பதாம். இது அச்சடித்துவீட்டில் தருவிக்கப்படும் பத்திரிகையல்ல. மாதம் 2½ ஷிலிங் அதாவது ரூபா 2 கொடுத்தால் சந்தாதாரர்களுக்கு உலகவர்த்தமானங்களெல்லாம் டெலிபோனில் தினம் குறித்த நேரங்களில் விவரிக்கப்படும். நடுப்பகலில் சந்தாதாரர் டெலிபோன்குழலையெடுத்துகாதில் வைத்துக்கொண்டால் வர்த்தமான ஆபிசிலிருந்து ஒரு விநோதக் கதை சொல்லப்படும். சாயந்தரவேளையில் சொகுசான பாட்டுகளும் வாத்தியங்களும் காதில்படும்.

***

**ஒரு போஸ்டேஜ் ஸ்டாம்பு யந்திரம்.**—கொழும்பிலுள்ள தபாலாபீசில் ஒரு புது யந்திரம் தருவித்து வைக்கப்பட்டிருக்கின்றது. அது பிறருடைய உதவியின்றித் தபால் ஸ்டாம்புவிற்கின்றதாம்; இப்போது அந்த யந்திரம் சுமார் 1¼-ரூபாய் விலையுள்ள ஸ்டாம்புகளை விற்கின்றதாம். அந்த ரூபாயை அந்த யந்திரத்தின் ஒருபக்கத்திற் போட்டால், அதன் மற்றொருபக்கத்திலிருந்து, அந்த ரூபாய் விலையுள்ள ஸ்டாம்பு வெளியே வருகின்றதாம்; போடும் ரூபாய் தவறுடையதாகவிருந்தால் அதனை வெளியே தள்ளிவிடுகின்றதாம்.

***

**கனடா கவர்மெண்டுக்கும் கைநு கவர்மெண்டுக்கும் உடன்படிக்கை.**—அமெரிக்காவிலுள்ள கனடாவில் குடியேறும் சைனாக்காரர்க்கு வருஷத்தில் தலைவரி 100 பவுண்டு விதிக்கப்பட்டிருக்கின்றது. அப்படியிருந்தும் அவர்கள் அங்கு விசேஷமாகக் குடியேறுகின்றனர். இனிவருஷத்தில் 450 பேருக்கு மேலாகக் குடியேறுதல் கூடாதென்று கனடா கவர்ன்மெண்டார் சைனாக்கவர்ன்மெண்டாரோடு உடன்படிக்கை செய்துகொள்ள முயன்று வருகின்றனர்.

**ஒரு குருடனது விசேஷபுத்தி.**—இங்கிலாந்து தேசத்துள்ள காரன்வாலில் வசிக்கும் ஜேம்ஸ்கிம் என்னும் ஒரு பிறவிக்குருடன் ஒவ்வொரு நாளும் பிறருதவியின்றி 17-மைல் தூரம் புதியவிடங்களுக்குச் சென்று தேயிலை விற்றுப் பிழைக்கின்றான்! அவன் வழி தப்பிப் போனதே யில்லையாம். அவன் எந்தப் பொருளையும் தொட்டுப் பார்த்து இஃது இந்த நிறமுடையதென்று கூறுவானும்.

***

**சீன பாஷையும் அட்சரங்களும்.**—சீனர்களுடைய பாஷை மிகக் கடினமானது. அதை எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வது அதிலும் மிகக்கஷ்டம். அப்பியாசஞ் செய்ய அட்சரங்கள் மாத்திரமே 8,900 இருக்கின்றன. இவ்வளவு அட்சரங்களையும் சந்தேகமின்றி தெரிந்துகொண்ட பிறகு, மேலே கற்கத் தொடங்க வேண்டும். ஒவ்வொரு புள்ளியும் கோணல் வரியும் புதுப் பதங்களைத் தெரிவிக்கும். ஆகவே இவ்வித அசௌகரியங்களை சீனர்களே யுணர்ந்து முற்றும் புதிதாக எழுத்துகளை ஏற்படுத்தும்படி சில நிபுணர்களை நியமித்திருக்கின்றார்கள். அவர்கள் 8,000 அட்சரங்களையும் 42 எழுத்துக்குள்ளடக்கிச் சுருக்கினார்கள். இந்த 42எழுத்துகளில் 23உயிரெழுத்துக்களும் 19 மெய்யெழுத்துக்களுமாம்.

***

**உலகத்தில்மகா உயர்ந்த கட்டடம்.**—நியூ யார்க் என்கிற பட்டணத்தில் "வுல்ஸ் வொர்த் பில்டிங்" என்று பெயர்கொண்டகட்டடம் கட்டப்பட்டு சென்ற மாதத்தில் திறக்கப்பட்டது இது உலகத்தில் மற்ற கட்டடங்களைப் பார்க்கிலும் உயரத்தில் சிறந்தது. 56 மெத்தைகளிருக்கின்றன. உச்சியிலிருக்கும் 56வது மெத்தையைக் கவிராயர்கள், சித்திரைவேலைக்காரர்கள், நூதனம் கண்டுபிடிப்பவர்கள் விளம்பர ஏஜண்டுகள் முதலாயினோர் வாடகைக்குக் கேட்டார்கள், கொடுக்கப்படவில்லை. தேத்தண்ணீர் சாப்பாடும் உல்லாச அறைக்காக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. கோபுரம் அடிதளத்திருந்து 780 அடி உயரமுள்ள இக்கட்டடம் 206,000,00 ராத்தல் பளுவுடையது.

***

**ஒரு நூதன சிறைச்சாலை.**—நியூயார்க் மாகாணத்தில் சுவர்களில்லாத ஒரு சிறைச்சாலை யிருக்கிறது. அதில் ஆயிரத்திருநூறு கைதிகள் இருக்க இடமுண்டு. இதன் பெயர் "க்ரேட்மெடோ சிறைச்சாலை" இதில் வரும் கைதிகள் தப்பித்தோடுவதில்லையென்று வாக்குக் கொடுக்கவேண்டியது. பின் அவர்கள் சுற்றுப்பக்கங்களிலெல்லாம் தடையில்லாமல் திரிந்து வரலாம். கைதிகள் பந்து முதலியவை விளையாடலாம். அவர்களுக்குப் புகையிலை முதற்கொண்டு கொடுக்கப்படுகிறது. சிறை காவலன் கைதிகளால் மிகவும் விரும்பப்படுகிறான். ஆனால் கைதிகள் சோம்பேறித்தனமாய்க் காலங்கழிக்க விடுகிறதில்லை.

பயிரிடுந் தொழிலிலும் காடுகளில் மரம் வெட்டி வேட்டையாடுவதிலும் கோழிகள் வாத்துகள் பன்றிகள் வளர்ப்பதிலும் வேலையிடப்படுவார்கள். நகரங்களிலுள்ள துர்வாடிக்கைகள் அங்கு அணுகவிடுகிறதில்லை.

***

**கும்பகோணத்தில் காவிரி நதிக்கு இன்னொரு பாலம்.**—சென்ற மாதத்தில் நடந்த கும்பகோணம் முனிஸிபல் கவுன்ஸல் மீட்டிங்கில் மேல்காவேரி என்ற டவுனின் வடபாகத்துக்கும் டவுனுக்கும் இடையிலுள்ள தோணித்துறையில் அடிக்கடி படகு கவிழ்ந்து உயிர்ச்சேத முண்டாவதைத் தடுக்க இன்னொருபாலம் கட்டவேண்டிய தென்று தீர்மானிக்கப்பட்டது. பாலம் கட்ட 46-ஆயிரம் ரூபாய் செல்லுமென்று உத்தேசிக்கப்படுகிறது. வேண்டிய பணத்தை எப்படி சேகரிப்பதென்ற விஷயமாகப் பிரேரபணைசெய்யும்படி சேர்மன் ஆனரபில் ராவ்பகதூர் V. K. ராமானுஜச்சாரியார் கேட்டுக்கொள்ளப்பட்டார். பாலங் கட்டப் பண உதவி செய்யும்படி டிஸ்டிரிக்ட் போர்டையும், பாக்கித் தொகையைக் கடன் கொடுக்கும்படி கவர்ன் மெண்டையும் கேட்டுக்கொள்ள வேண்டு மென்று பிரஸ்தாபிக்கப்பட்டது.

***

**இந்தியாவில் குஷ்டரோக நிவாரணச் சாலைகள்.**—இந்தியா முழுவதிலும் மிஷனரிசங்கத்தார் 40 குஷ்டரோக நிவாரணச் சாலைகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அவைகளிலேயே இருந்து சிகிச்சை பெறுகிறவர்களின் தொகை 3537. இந்த குஷ்டரோகிகள் அனாதைகள். 1912 ம் வருஷத்தில் இந்தச் சங்கங்களின் மொத்த வரும்படி 35847 பவுன். இத் தொகையில் குஷ்டரோக நிவாரண வேலைகளுக்குச் செலவாகும் மொத்தம் 22,788 பவுன். குஷ்டரோக சிகிச்சையிலிருந்து குஷ்டரோகிகளின் குழந்தைகளுக்குக் குஷ்டரோகம் வாராமல் தடுக்கும் முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அவ்விதத்தில் 500 குழந்தைகளை இச்சங்கத்தார் காப்பாற்றி அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்து வருகிறார்கள்.

***

**இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் இருப்புப் பாதை.**—இந்தியாவையும் பர்மாவையும் இருப்புப் பாதையால் பிணைத்து விடுவதைப்பற்றியும், அந்தப் பாதையை ஹூகொங் (Hukong) பள்ளத்தாக்கின் வழியாய்க் கொண்டு போவதைப் பற்றியும், அபிப்பிராயந் தெரிவிக்கும்படி சாகியங்க் டிவிஷன் கமிஷனர் பர்மா வியாபார சபையாரைக் கேட்டு விட, அவர்கள் ஹூகொங்க் (Hukong) பள்ளத்தாக்குப் பாதையானாலும் சரி, மணிப்பூர் (Manipur) பாதையானாலும் சரி, இச்சமயம் சில வர்த்தக காரணங்கள் பற்றி அப்பாதையைக் கொண்டுபோகலாமெனச் சொல்ல முடியாதென்று பதில் தெரிவித்திருக்கிறார்கள்.

**புதிய டெல்லி நகரில் ஒரு ரெயில்வே ஸ்டேஷன்.**— புதிய டெல்லி நகரில் ரெயில்வே ஸ்டேஷன் வசதி சரியானபடி யிருக்கவேண்டு மென்பதை அப்புதிய நகர் நிர்மாண கமிட்டியார் மறந்துபோய் விடவில்லை. அவர்கள் அந்தவிஷயத்தை வற்புறுத்தித் தங்கள் ரிபோர்ட்டில் பேசியிருக்கிறார்கள். பழைய டெல்லி வாசிகளுக்கும், புதிய டெல்லி வாசிகளுக்கும் சௌகரியமா யிருக்கக்கூடிய நடுவிடமொன்றில் ஒரு ஸ்டேஷனிருக்க வேண்டுமென்று அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறபடியே, ரெயில்வே போர்டாரும் புதிய நகரத்திலுள்ள ஆஜ்மீர் கேட்டுக்குத்(Ajmere Gate) தெற்கே முக்கால் மைல் தூரத்திலுள்ள ஜெயசிங்க்புராவில் ஒரு டர்மினல் ஸ்டேஷன் (Terminal Station) ஏற்படுத்தப் படவேண்டு மென்று சொல்லி யிருக்கிறார்கள். அந்த ஸ்டேஷன் இம்மா மகுதிக்கும் கவர்ன்மெண்ட் ஹவுஸுக்கும் மத்தியிலிருக்குமெனப்படுகிறது. அந்த ஸ்டேஷனுக்கு எல்லாப் பிரயாணி வண்டித் தொடர்களும் அவைகள் எந்தப்பக்கத்திலிருந்து வந்தாலும் கொண்டுபோய் நிறுத்தப்படுமாம்.

***

**மின்சாரசக்தியால் தோல்பதஞ் செய்தல்.**—ஸ்வீடன்தேசத்துள்ள ஒரு ரசாயனசாஸ்திரியார் மின்சாரசக்தியால் தோல்பதஞ் செய்யுமுறையைக் கண்டுபிடித்து, இங்கிலாந்திலுள்ள மீட்டாண்ட் என்னுமிடத்தில் மின்சாரசக்தியால் தோல்பதஞ் செய்யும் சாலை யொன்று ஸ்தாபித்திருக்கின்றார்.

***

**பாதரட்சைக்கு 735 ரூபா விலை.**—மிஸஹில்டா கில்பர்ட் என்பவள் ஒரு பெயர்போன சங்கீதவித்பன்னி. அவள் பாரிஸ் நகரத்தில் இனிய குரலெடுத்துப் பாடியபோது ஒரு பிரபு அவளது சங்கீதத்தில் வசீகரப்பட்டு அவளைத் தங்கும்படி வெகுதூரம் சொல்லியும் கேளாதபடியால் அவளது செருப்பையேனும் ஞாபகார்த்தமாகக் கொடுத்துவிட்டுப்போகும்படிக் கேட்டானும். அவள் ஆயிரம் பிராங்கு பெற்றுக் கொண்டு செருப்பைக் கொடுத்தாளாம்.

***

**பிள்ளைகளுக்கு சிக்கனம் கற்பித்தல்.**—பிள்ளைகளுக்கு சிக்கனம் கற்பிக்க ஐக்கிய மாகாணங்களிலுள்ள 1149 பாடசாலைகளில் ஸேவிங்ஸ் பாங்கிகளிருக்கின்றன. அவைகளில் சேர்ந்திருக்கும் தொகை 1,000,000 டாலர். ஒருடாலர் ரூ 3-2-0

***

**ப்ரஷ்யாவில் படிப்பு.**—ப்ரஷியாவில் படிப்பின்மை என்பதேஇல்லை 1911 ஆல் சேனையில்சேர்ந்த 1,65,841 பேரில் எழுதவும், படிக்கவும் தெரியாதவர்கள் 24 பேர்தான்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS ... 1913 MAD...





[ "Supplement to the "Viveka Bodhini." ]


# விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி VI } பிரமாதீச௵ ஆவணிமீ = 1913-௵ செப்டம்பர்மீ { பகுதி 3


## எழு ஞான பூமிகள் I.

### SEVEN STEPS IN ASCENT

முன்னர் கூறியுள்ள அஞ்ஞான பூமியின் முதல் இரண்டு பூமிகளிலிருந்து கீழ்நோக்கி மனம் இறங்கித் தடிக்க விடாது தகைய எத்தனிக்கையில் ஊர்த்வ (மேலே போகும்) வழி சற்று வெளியாகி வரும். இவ்வழியிலும் எழு படிகள் உண்டு. நல்ல கர்மானுஷ்டானம் முதலிய நற் பழக்கத்தால், 'இப்படி எல்லாம் ஸூக்ஷ்மமாயுள்ள நிலைகளி லிருந்து மனம் தடித்துவிடக் காரணம் என்ன? இதன் ரஹஸ்யத்தை உள்ளபடி உணர வேண்டும்' என்ற பேராவல் கொண்டு குருவைத் தேடி சுருதிகளை உணர எழும் ஆசையே முதல்படியாகிய சுபேச்சை.

(2) இம்மாதிரி தேடுகையில் ஏற்படும்ஸாதுஸங்கம் ஸத்குரு சேவை முதலியவைகளால் உண்டாகும் ஞானவைராக்ய ஸஹாயத்தால் 'அகண்டத்து மூளைத் தெழும் நான் யாது? எனது என்னும் ஸங்கல்பம் எப்படி வந்தது? சித் எது? ஜடமெது? இரண்டும் ஒன்றுக் கூடும் பந்த மேது? முத்தி எது? என்று தனித்திருந்து மனனம் செய்து இவைகளது ரஹஸ்யத்தை உணர அப்யாஸ பூர்வமாக முயலுதலே விசாரணை என்ற இரண்டாம் பூமி.

(3) இம்மாதிரி விசாரணை செய்து பழகிவருங்கால் சுத்தப்பட்டு வரும் நல்ல மனம் விஷயப் பற்றுக் குறைந்து முடிவில் அந்தப் பசைமுற்றிலும் ஒழிந்து அடங்கி விடுவதே தனுமானஸி என்ற மூன்றாம் பூமி.

(4) மூன்றாம் பூமியில் புருஷ தந்திரத்தை முன்னிட்டுக் கொண்டு மனம் அடங்க அம்மாதிரி அடக்குவது நாம் என்ற உணர்ச்சியும் அடங்க தன்னுணர்ச்சியிழந்து வஸ்து தந்திர வசப்பட்டு அகண்டாகார விருத்தி உதயமாய் ஆத்மாவின் ஸத்ரூப அனுபவம் நன்றாக ஏற்படுவதே ஸத்வா பத்தி என்ற நான்காம் பூமி.

(5) இதன் பழக்க பலத்தால் ஆத்மாவின் சித்ரூபம் அனுபவத்தில் இழுக்கப்பட்டு முழுக்கி வெளிவிஷயத் தோற்றம் மறைந்துவிடத் தொடங்குவதே அஸம்ஸக்தி என்ற ஐந்தாம் பூமி.

(6) இம்மாதிரி தோற்றங்கள் முதலியவைகளுக்கு ஆதிகாரணமாக உள்ள வாஸனைகள் முற்றிலும் ஒய்ந்துஅடிக்கடி வெளிமுகப்படாது ஸமாதியிலேயே ஆத்மாவின் ஆனந்தரூபானுபவத்துள் அழுந்திஇருப்பதுவே பதார்த்தா பாவனை என்ற ஆறாம் பூமி.

(7) இந்தஅனுபவங்களது உணர்ச்சி இழந்து இடைவிடாது ஆத்மாகாரமாகவே ஆகி பரமாத்வைதமாக விருத்தலே துரியம் என்ற ஏழாம் பூமி.

இந்த எழு ஞான பூமிகளின் விஷயத்தை ஐந்து பரமா வஸ்தைகளாகப் பிரித்தும் காட்டுவதுண்டு சாஸ்திரங்களில்.

(1) ஜாக்ரத் அவஸ்தை:—முதல் மூன்று பூமிகளுக்கும் இந்தப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த பூமியிலிருக்கும் வரையில் ப்ரபஞ்சம் அனுபவம் தோற்றம் எல்லாம் உண்டு. ஸுக துக்கானுபவம் உண்டு. ஆனால் எல்லாம் தன்னைத்தவிர இல்லை என்ற திடநிச்சயம் சாஸ்திரவாக்கிய வாயிலாக மனதில் திடப்பட்டிருக்கும்-இவைகளி லிருப்பவனுக்கு அப்யாஸி என்று பெயர். இவைகளைப் பொதுவாக ஸ்தூல, அல்லது ஸச்சிதானந்தம் என்ற அவாந்தர வாக்கிய சிரவண மனன, நிதித்யாஸன நிலை என்றும் கூறலாம். இந்த நிலைகளை எவ்வளவோ ஸத்கர்மானுஷ்டானத்தால் பாபஸங்கல்பங்களால் கலக்கப்படும் மனம் சுத்தமானால்தான் ஏற்படும்-இதன் முடிவுவரையில் சுத்த அகங்காரம் பலமாக இருக்கும்.

# விவேக போதினி

தொ. 6.] பிரமாதீச௵ : ஆவணிமீ [பகுதி 3


## அவதாரங்கள்—ஞானவழி

### AVATARS—REALIZATION VIEW—I

இதுவரையிலும் எடுத்து விஸ்தரித்துவந்த புராண உபாஸனா ஸம்பந்தமான அவதார விஷயங்களுக்கு வேதத்தில் ஆதாரம் இல்லாமல் போகவில்லை. தற்காலத்தில் மதவிஷய ஆராய்ச்சி செய்யும் படிப்பேறிய நம் நாட்டவரும், மேனாட்டவரும், ஸாதாரணப் பழக்கத்திலிருக்கும் மதவிஷயங்கள் வேதத்தில் இல்லை என்று பொதுக் கக்ஷி பேசத் தொடங்கி விட்டனர். விக்ரஹாராதனா விஷயத்தில் இவர்கள் கொள்கை ஆதார மற்ற குதர்க்கம் என்பதை முன்னரே விஸ்தாரமாக விவேக போதினி தொகுதி(4) பகுதி (3,4) (98,146) பக்கங்களில் எடுத்துவிளக்கிக் காட்டிவிட்டோம். இந்த விஷயத்தைஇங்கு எடுத்துவிஸ்தரித்து இவ்விஷயத்தில்தற்கால மத ஆராய்ச்சிசெய்பவர்கொள்ளும் நிராதாரக்கொள்கை தவறு என்பதைக் காட்டுவோம். இங்கு வேதத்திலிருந்து இரண்டு உதாரணங்கள்காட்டி, அவதாரவிஷயங்கள் வேதத்தில்பொருந்து நிற்பனவே: இவைகளை விஸ்தாரப்படுத்தி, விக்ரஹ ஆராதனா விஷயத்தில் நம் முன்னோர் செய்தது போல, பலருக்கும் பயன்படி புராணங்கள் வரையில் கொண்டு வந்து விட்டனர் என்பதை விளக்குவோம். இவைகளுள் ஒருகதை கர்ம காண்டத்திலிருந்தும் மற்றொன்று ஞான காண்டத்திலிருந்தும் எடுக்கப் பட்டுள்ளன.

சதபதப்ராஹ்மணத்தில் காணப்படும்கதை:— முன்னொரு காலத்தில் தேவாஸுரருக்குச் சண்டை உண்டாயிற்று. தேவர்களுக்கு, ஜயம் அஸுரர்கள் பக்கம் போய்விடுமோ என்ற ஏக்கம் உண்டாய் விட்டது: அஸுரர்களுக்கு உலகமெல்லாம் நம்மதாகி விடும் என்ற இறுமாப்பு உண்டாகி விட்டது. உடனே அஸுரர்கள் உலகத்தைக் கைப்பற்றிக்கொண்டு அதைத் தம்முள் பங்குபோட்டுக்கொள்ளத் தொடங்கி விட்டனர். இதைக் கண்ட தேவர்கள் தமது சக்திக்குக் குறைவு வந்துவிடுமே என்று பயந்து வாமன ரூபியான விஷ்ணுவை முன்னிட்டுக் கொண்டு அஸுரர்களிடம் சென்று தமக்கும் ஒருபாகம் கொடுக்க வேண்டும் என்று கேட்டனர். என்ன மன்றாடியும் அஸுரர்கள் மறுத்து விட, 'இக்குள்ளன் குப்பாப் படுத்து கொள்ளுவதற்குப் போதுமான இடமாவது தரவேண்டும்' என்று கெஞ்சிக் கேட்டார்கள், தேவர்கள். ஸரி என்று ஒப்புக் கொண்டார்கள் அஸுரர்கள், குள்ளன் ரூபத்தைக் கண்டு தேறி. உடனே விஷ்ணு தமது விச்வ ரூபத்தை எடுத்து விட்டார்: தேஹத்தை நீட்டிப் படுத்து உலகம் முழுமையும் மூடிக் கொண்டு விட்டார். தேவர்கள் இவரை யஞ்ஞ ரூபமாக ஆராதித்தனர். மந்திரத்தால் இவரைக்கட்டி, தலைப்புறத்தில் ஆஹவனீயாக்னியை ஸ்தாபித்தனர். அஸுரர்கள் தமக்கு ஒரு பங்கும் இல்லாமல் போனதைக் கண்டு குழம்பினர். தேவர்கள் சிரமபரிஹாரம் செய்யப் போய் விஷ்ணுவை மறந்து விட்டனர். அவரை வெளிவிடாது போய் விட, மந்திரத்திற்குவிரோதமாகவெளிவர இசையாதவிஷ்ணு சிறு ரூபம் தரித்து பூமியுள் மறைந்து மூலிகைகள் வேரில் சென்று ஒளித்துவிட்டனர். கொஞ்சகாலம் கழித்து விஷ்ணு ஞாபகம் வர, தேவர்கள் தமது அனாதரவை எண்ணி மனம்நொந்து அவரை வெகு காலம் தேடிக்கண்டு யஞ்ஞத்தால் ஆராதித்தனர்.



இதற்கும் வாமன வாராஹாவதார கதைகளுக்கும் உள்ள பொருத்தம் கூறாமலே விளங்கும்.

கேனோபநிஷத்தில் காணப்படும் கதை:— முன்னொருகாலத்தில் நடந்த தேவாஸுர யுத்தத்தில் தேவர்களுக்கு ஜயம்வர அவர்கள் மிகுந்தசக்திமான்களாக விளங்கினர். உடனே 'ஜயம் எங்களதே, சீரும்சிறப்பும் எங்களதே' என்ற இறுமாப்பு வந்து விட்டது. எல்லாம் பரம்பொருளிடமிருந்து வருவதல்லவா என்ற உணர்ச்சியை அவர்கள் இழந்து விட்டனர். இதை நீக்க பிரஹ்மமே ஒருவிசித்ர உருவுடன் அவர்கள் முன் தோன்றினார். அப்பொழுதுங் கூடப் பரம்பொருள் உணர்ச்சி அவர்களுக்கு வரவில்லை. 'இது ஆராதனா யோக்யமா?' என்ற ஸந்தேஹம் தான் அவர்களுக்குத் தோற்றியது. இப்படி இருக்கையில் இந்தத் தோற்றத்தின் ஸ்வரூபத்தை உணர்ந்து வரும்படி தேவதைகள் முதலில் அக்னியை அனுப்பினர். பரம்பொருள் தோற்றத்தை அணுகித் தன் எரிக்கும் சக்தியைப்பற்றிப் புகழ்ந்து கூறத் தொடங்கினான் அக்னி. அப்பொழுது அந்தத் தோற்றம் ஒருதுரும்பை எடுத்துப் போட்டு இதைக்கொளுத்துபார்ப்போம்என்றது. அக்னி ஆனமட்டும் பார்த்தும் அதைஎரிக்கவும் முடியவில்லை: இப்படித்தன் சக்தியை வீணாக்கின தோற்றம் இத்தன்மையது என்று உணரவும் முடியவில்லை. வாயு பின்னர் அனுப்பப்பட்டு எல்லாவற்றையும் பறக்க அடிக்கும் சக்தியைக் கூறிக்கொண்டு இத்தோற்றத்தை அணுகிச் சென்றான். அது இட்ட துரும்பை அசைக்க முடியாது மயங்கித் திரும்பிவிடும்படி யாயிற்று வாயுவுக்கு. மூன்றாவது இந்திரன் அணுகிவர இத்தோற்றம் மறைந்தது. இது என்னமாக விருக்கலாம் என்று யோசிக்கத் தொடங்கி யோசனையில் ஆழ்ந்து விட்டான் இந்திரன். அதில் உமையாகிய பார்வதி தோன்றிவர அவள் மூலமாகத் தோற்றிய வஸ்து பரம்பொருள் என்றும், அதனால் தான் எல்லாம் சேஷ்டிக்கிறது என்றும் உணர்ந்து ஈடேறினான்.

இதற்கும் நரஸிஹ்மாவதார கிருஷ்ண கதைகளுக்கும் உள்ள பொருத்தத்திற்கு என்ன குறைவு?

இம்மாதிரியான கதைகளின் ரஹஸ்யத்தை உணர்த்த நமது பெரியோர்கள் தேவர்கள் என்றால் மனிதன்சுத்தவாஸனைகள்என்றும் அஸுரர்கள் என்றால் அசுத்தவாஸனைகள் என்றும் நமது அனுபத்தில் தேவாஸுரயுத்தம் நடந்தேறுவதை விளக்கிக் காட்டியிருக்கின்றனர். இதைக்கொண்டு முன்னுள்ள கதைகளை ஆராய்ந்துபார்த்தால் அவைகளின்உட்பொருள்கள் நன்கு விளங்கும். இப்படி அவதார விஷயத்திற்கு வேதங்களில் ஆதாரங்கள் உள்ளன என்று விளங்கிவிட, வேதமுடிவாகிய பரம்பொருள் அனுபவத்திற்குப் பொருத்தமாக அவதார விஷயங்களையும் அவர்கள் கதைகளையும் எப்படி ஆராய்ந்து ஈடுபடுவன் ஞானிஎன்ற கேள்வி பிறக்கும். அதை எடுத்து விஸ்தரிக்கப் புகுவோம்.

உலகத்தில் உள்ளது என்று தோற்றுவதெல்லாம் பரம்பொருளில் நிலைபெற்று அதிலேயே இருக்கின்றன. ப்ரபஞ்சம் எல்லாம் மாயா ஸம்பந்தப்பட்டுத் தோற்றும் பரம்பொருளே என்பது ஒரு தத்வக்கொள்கை. இதன்படி

நோக்குங்கால் வால்மீகி, சுகர் முதலிய மஹான்கள் எப்படிப் பரம்பொருள் அவதாரங்களோ அதுபோலவேதான் ஒரு எறும்புங்கூட. 'நீயே தான் ஆண், பெண், யுவா, யுவதீ, கோலூன்றித் தள்ளாடும் கிழவன், கருவண்டு, பச்சைக்கிளி, மின்னல்ஒளிரும் மழை மேகம், ருதுக்கள், மஹா ஸமுத்திரங்கள் எல்லாம்' என்று கோஷிக்கிறது ச்வேதாச்வேதர உபநிஷத்து. இதிலிருந்து முற்கூறியவை எல்லாம் ஒன்று என்று வாசா குதர்க்கம்பேசத் தொடங்கிவிடலாகாது. இவைகளின் ஸாராம்சத்தை நோக்கில் அதிஷ்டானமாக இவைகளுள் உண்மையில் ஒன்றுதான் உள்ளது. தோற்றமாகப்பார்க்கில் இவைகள் பலவிதமாக வேறுபட்டிருப்பவைகள்தான். வ்யவஹாரத்தில் இவைகளை ஒன்றென எண்ணி நடப்பது மூடத்தனமே ஒழிய வேறொன்றுமன்று. இவைகள் தேஹங்கள் அல்லது உருவங்கள் எல்லாம் பலவகைப்பட்டு அனந்தமாக ஏற்பட்டுள்ள உபாதிகள். இவைகள் மூலமாகத் தோற்றுவது பரம்பொருளே. பரம்பொருளை வெளிப்படுத்தும் அளவில்தான் இவைகளுள் பேதம் ஏற்பட்டுள்ளது. கல், தண்ணீர், கண்ணாடி ஆகிய எல்லாவற்றிற்கும் ஸூர்யன் ஒளியை ப்ரதிபலனம் செய்யும் திறன் உண்டு. இவைகளுள் கண்ணாடியைப்போல மற்றவைகள் தெளிவாக ப்ரதிபலிக்கும்படி செய்யுமா? இதுபோல மஹானிடம் பரம்பொருள் விளங்குவதுபோல கவியிடம் விளங்குமா? இவரிடம் விளங்குவதுபோல லோபியிடம்தான் விளங்குமா? இதனால்தான் மாறுபாடு வ்யவஹாரத்தில் உண்டு, பாரமார்த்திகத்தில் இல்லவே இல்லை என்பது ஒருசிறந்த ரஹஸ்யம் என்று கூறப்படுகிறது.

எல்லாம் உண்மையில் பரம்பொருள் அவதாரமாயினும், முற்கூறிய விளக்க வித்யாஸம் இருப்பதால், வ்யவஹாரத்தில் இயல்பிற்கு விரோதமில்லாத அஸாதாரண குணங்கள் அமைந்து காணப்படும் சில பிறவிகளை அவதாரங்கள் என்று சிறப்பித்துக் கூறப்படும். இதற்கு ஆதாரம்: 'இவை எல்லாம் வாஸுதேவன்: வ்யக்தாவ்யக்தம் இரண்டும் நான்' என்று தமது உண்மை நிலையை உள்ளவாறு வெளியிட்ட ஸ்ரீ கிருஷ்ணனே,

திருவுடைய தாய்வளரும் தேஜஸுடையதாகி
மருவும் குணாதிசயம் வாய்த்த—பொருவில்பொருள்
என்னுளவோ அன்னவெலாம் என்தேஜின் ஓர்கூற்
மன்னுலகில் தோன்றும் மதி. [றால்

என்று கூறியிருக்கிறார். இம்மாதிரியான 'திருவுடையதாய் வளரும் தேஜஸுடையதாகி மருவும் குணாதிசயம் வாய்த்த பொருவில் பொருள்களையே' அவதாரங்கள் என்று மதிக்க வேண்டும். இவைகளுள் பரம்பொருள் சிறப்பாக விளங்குவதே இந்த மதிப்பிற்குத் தகுந்த முகாந்திரம்.

இம்மாதிரி கருதுவதுதான் நேரான ஞான வழி என்பதற்கு அநேகவித ஆதாரங்கள் காட்டலாம். அற்புத சக்தி வாய்ந்த ஜனங்களை நோக்கி மற்றையோர் பொதுவாக 'இவன் ஒரு அவதார புருஷனடா' என்று கூறுவதுண்டு. பிறவியில் ஒரு அவதாரமும் அவ்வாறு பொதுவாக மதிக்கப்படவில்லை என்பதற்கு புராணங்களே ஸாக்ஷி. இப்பொழுது அவதாரமென மதிக்கப்பட்டுவரும் மஹான்கள் அவர் பிறந்த உடன் இவ்வாறு பொதுவாக மதிக்கப்படாது, பின்னர் அவர்கள் நிறைவேற்றிய அரிய விஷயங்களால்தான் இவ்வாறு பொதுவாக மதிக்கப்பட்டனர் என்று வெளியாகிறது. ஸ்ரீமத் பாகவதம் எவ்வளவுதான் அழகாக அற்புத கற்பனைகளைக்கொண்டு நமது கண்ணுக்குக் கண்ணான ஜாரசோர சிகாமணியான கண்ணன் சரிதத்தை வர்ணித்திருந்தபோதிலும், அவரைச் சுற்றியிருந்த ஸாதாரண ஜனங்கள் எவரும்



அவர் பிறப்பு இளமை முதலியவைகளில் அவரைக் கடவுளென மதிக்கவில்லை என்பது விளங்கவில்லையா? ஆனால் அவர் செய்த அற்புதச் செயல்கள் அவர்கள் மனதில் ப்ரீதி, மர்யாதை பயம் இவைகளைத் தூண்டிமாத்திரம் விட்டதே ஒழிய வேறொன்றையும் ஏற்படுத்திவிடவில்லை. ஸ்ரீமத்சங்கர பகவத் பாதாசார்யர் திக்விஜயம் செய்து உலாவிவந்த காலத்தில் பரமசிவன் அவதாரம் என்று இப்பொழுது மதிக்கப்படுவது போல மதிக்கபடவில்லை. கௌதவ புத்தரும் விஷ்ணுவின் அவதாரமென்று முன்னர் கருதப்படவில்லை. வால்மீகி வர்ணித்த ராமருக்கும், துளஸீதாஸர், கம்பர் வர்ணித்த ராமருக்கும் வேற்றுமை விளங்காமல் எப்படிப்போகும்? வால்மீகிக்கு ராமர் நரச்ரேஷ்டர், பகவத் அவதாரம், மற்றவர்களுக்கோ அவர் பகவானே. இதனால் இவர்களெல்வாம் அவதாரங்களல்ல மனிதரே என்று கூறவரவில்லை. இவர்கள் கடவுள் அவதாரமல்ல, கடவுளே. திருவு தேஜஸ் குணாதிசயம் வாய்ந்த பகவான் ஒரு கூறு என்ற பொருளில் இவர்கள் எல்லாம் கடவுளே என்றுதான் கூறவந்தது. இதைத்தவிர வேறு ஏதாவது ஒருவிதத்தில் இவர்களை அவதாரங்கள் எனக்கொண்டால் ஞான ஒழுங்கிற்கு இசையாது. ராமகிருஷ்ணாதிகளது, நடத்தைச் சிறப்பு, வாழ்க்கை நோக்கம், உலகிற்கு உபகரித்தவிதம் இவைகளைக்கருதில் கடவுள் என்று இவர்களைக் கருதி வழிபடாமலிருக்க முடியுமா யாருக்காவது? நமது பெரியோர்கள் நமக்குச் செய்துள்ள பேருதவிகளுள் இந்த அவதார விஷயப் பேருதவி ஒன்று. அதாவது அவர்கள் சிறப்பு முற்றிலும் வெளிப்படாதிருந்த இந்த அவதாரங்கள் வாழ்ந்த காலங்களிலேயே இவர்கள் சிறப்பு தெய்வத்தன்மை இவைகளை தெளிவாகக் காட்டிவிட்டனரே நமது பெரியோர்கள்! இதைவிட உலகிற்குச் சிறந்த உபகாரம் ஏதாவது உண்டா?

# சிவ புராண சரிதங்கள்

## STORIES FROM SIVA PURANAS

### கோலாகலன் கதை

### STORY OF KOLAKALAN

சாகலம்புரம் என்னும் ஊரில், வேளாளர் குலத்தில், மன்மதனுக்கிணையான வடிவழகுடன் கூடிய கோலாகலன் என்பவன் ஒருவன் இருந்தான். அவ்வூர் அரசன் இக்கோலாகலனைத் தன்மைந்தனுக்குக் காப்புத்துணைவனாக நியமித்தான். அதனால் கோலாகலன் மிக்க செருக்குற்றவனானான். அவன் நடக்கையும் இழிவடைந்தது. பெருங்காமுகனாய் வேசியர் கூட்டத்தில் உழன்றும் மது உண்டும், மாபாதகங்கள் பல செய்தும், நாடோறும் காலங்கழிப்பதானான். தாய்தந்தையர், ஏனைய உறவினர் பெரியோர் ஆகிய இவர்கள் என்ன நல்வழி போதித்தும் "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" என்னும் பழமொழிக் கிலக்காகித் தீநெறியையே கைப்பற்றித் தனக்கிருந்த பொருள் எல்லாம் அழித்தான். அழித்தும் காமநோய் விடாது வருத்திய காரணத்தால் ஒரு நாள் இரவு களவு செய்தேனும் பொருள் கவர வேண்டும் என்னும் விருப்பால் களவாடுந்தருணத்தில் அவ்வூர்க் காவலாளியர் கையிற்பட்டனன். அவர் இவனை நல்ல நிலையிலிருந்தவன் என்னும் காரணத்தாற் கொலை செய்யாது விட்டனர். களவு செய்து காமந்தணிர்க்க எண்ணின எண்ணம் முடியாது போகவே, அவன் வேறு வழியில்லை எனத்துணிந்து, தான் புன்னெறிப் பட்டதையே நினைந்து வீட்டிற் புலம்புறும் தனது தாயை அணுகி அவள் கையைப் பற்றியிழுத்து அவளைத் தழுவினன். அவள் அஞ்சி "மைந்தா பெற்றதாய் நான்" என்ற அறிவுகூட உனக்கு இல்லையா? உன்னை ஏதேனும் பிசாசம் பிடித்துக் கொண்டிருக்கிறதா? அல்லது உன்சிந்தையை யாரோ இவ்வாறு கலக்கியுள்ளார்? இப்படியும் உன்மத்தனாகுவையோ? ஐயோ! யாருடைய சூழ்ச்சியிற் பட்டாய்?" என்று பலவாறு கூறித்தடுக்க முயன்றும் அவன் விடாது வருத்தப் பின்னும் அஞ்சி "அப்பா, குழந்தாய்! இப்பாவத்துக்குச் சாந்தியே கிடையாது, என்றும் நரகக்குழியினின்றும் மீளாய், இச்செயலை விட்டுவிடு; உனக்கு

அயல் மாதரார் யார் வேண்டும் என்றாலும் வரவழைத்துத் தருகிறேன், இம்மாபாதகச் செயலை மாத்திரம் செய்யாதே" எனச்சொல்லிப் புலம்பினாள். காமத்துக்குக் கண்ணில்லை அல்லவா? அவன் பிடித்ததையே நிறைவேற்றினான். இச்செயல் தன் தந்தைக்குத் தெரிந்துவிட்டது என உணர்ந்த கோலாகலன் தந்தையால் தனக்கு இடையூறு நேரிடும் என நினைத்து உடனே அவனைக் கொன்று விட்டான். தந்தையைக் கொன்று தாயை மனையாளாக்கின மாபாவி இவ்வூரில் இருத்தல் அடாது என்று அவனை அவ்வூரினின்றும் ஊரார் துரத்தினர். அப்போது அவன் தன்னையீன்றாளை உடன் அழைத்துச் சென்று தேச சஞ்சாரம் செய்தான். அவன் தாயும் விதிவசத்தால் அவன் கொள்கைக்குடன்பட்டவளாய் அவனோடிணங்கி இரண்டு குழந்தைகள் யீன்றனள். பிறகு ஒரு தினம் ஒரு காட்டின் வழியாக இவர்கள் செல்ல நேரிட்டது. அங்கு ஒருதக்க இடம் இருக்கக்கண்டு அதில் குடிசை ஒன்று அமைத்து அவ்விடத்திலேயே தங்கினார்கள். காட்டிற் கிடைக்கக்கூடிய மாமிசங்களைப் புசித்தும், வழிப்போக்கரைப் பறித்தும், நாளைக் கழித்தும் பாவத்தை வளர்த்தும் வந்தான் கோலாகலன். பிறகு அக்காட்டை விட்டகன்று புண்ணிய வசத்தால் திருமறைக்காட்டை வந்தடைந்தான். அடைந்த இரண்டு மாதத்துக்குள் வேத நதிக்கரையிற் கோலாகலன் இறந்தான். தெய்வச் செயலால் கோலாகலன் தாயையும் அவன் இரண்டு குழந்தைகளையும் அன்றே புலி அடித்துக் கொன்றது. நால்வரும் இவ்வாறு உயிர் இழக்க யமதர்மராஜர் தமது தூதரைச் சடுதியில் ஏவினார். அவர்கள் அதிவேகமாக வந்து பாசக்கயிற்றை வீசி அதனால் நோவுண்டாகும்படிக் கட்டித் தென்றிசை நோக்கி இழுத்துக் கொண்டு சென்றார்கள். வழியில் யமபடர்கள் "இவனை வெட்டு, குத்து, கொல்லு, அறை" என வைதுப் புடைத்து இழுத்துக் கொண்டு போகுந்தருணத்தில் திருமறைக்காட்டு முழுமுதற் கடவுள் இதனை உணர்ந்து உடனே அருகிருந்த நந்தி தேவரை அழைத்து—"நமது வேதாரணியத்தில் இருந்தவர் இறந்தவர் இவர்களுடைய தீவினையாவும் அவர்களை விட்டுப் பறந்துபோம். அங்ஙனமிருக்க இன்று அத்தலத்தில் இறந்த கோலாகலன் என்பவனை யமதூதர்கள் இழுத்துக் கொண்டு செல்கின்றார்கள். உடனே நமது கணநாதரை ஏவிட்டு யமபடர்கள் யமலோகம் வரையும் சென்றிருப்பினும் விடாது, அவர்கள் கையினின்றும் மீட்டுக் கோலாகலனை இங்கு அழைத்து வரும்படி செய்க" எனக்கட்டளையிட்டனர். நந்தி தேவரும் அவ்வாறே வெல்லுதற் கரிய சிவகணங்களைத் தென்றிசை நோக்கிச் செல்ல ஆக்ஞாபித்தார். சிவகணங்களும் உடனே புறப்பட்டுப் போந்தன. கோலாகலனும் அவன் தாயும் மைந்தரும் யமபடர் வசமுற்று அவர் செய்யும் வாதையிற்றுயருறுவதைக் கண்டன. கண்டதும் காலதூதரை வழிமறித்து "கொடியன் என்று நீர் கொண்டு போம் கோலாகலனை விடுமின்" என்றன. இதுகேட்ட யமபடர் சினந்து "தந்தையைக் கொன்று, மதுஉண்டு, தாயின் தோளைப் புணர்ந்ததுவுமன்றி கொடிய பாவச்செயலே தினந்தோறும் இயற்றி நின்ற இப்பாதகனை நீங்கள் சிவபுரிக்கு அழைத்துச் செல்ல வந்த காரணம் ஏது?" என வினவினர். சிவகணங்கள் "என்ன பாவம் செய்திருந்தாலும், வேதாரணிய எல்லைக்குள் வந்து இறந்தானாதலின் இவன் யமலோகம் புகும்படியான காரணமில்லாதவனாயினான். ஆதலால் இவனை விடுமின்" என உரைத்தன. இவ்வுரையைக் கேட்டும் யமகிங்கரர்கள் கோலாகலனை விடாது செல்ல முயலுவதைக்கண்ட சிவகணங்கள் தண்டு கொண்டெதிர்த்து வேல் ஏவியும், வாளிசெலுத்தியும், சூல மேவியும் யமபடர்களைச் சால வதைத்துக் கோலாகலனைக் கட்டியுள்ள பாசங்களை நீக்கி, அவனைச் சிறந்த விமானத்தில் ஏற்றுவித்து, அரம்பையர்கள் வாழ்த்தவும் இமையவர் தொழவும் கயிலைவாழும் கடவுளின் முன்னர்க் கொண்டுபோய் விட்டன.

இஃதிவ்வாறாக, யமபடர்கள் நாணமும் சினமும் கொண்டவர்களாய் யமபுரம் சென்றடைந்தார்கள். அடைந்து யமதர்ம ராஜனுடைய காலில் வீழ்ந்து தர்மராஜரே! நடுநிலை தவறா நாயகமே! தங்களுடைய ஏவலைச் சிரமேற்கொண்டு வேதாரணிய மடைந்து அங்கிருந்த கோலாகலன், அவன் தாய், அவன் மைந்தர்கள் இந்நால்வரையும் கொன்று, பாசக் கயிற்றாற் கட்டி, நாங்கள் தென்றிசை நோக்கி வரும்



வழியில் சிவகணங்கள் குறுக்கிட்டு, எங்களோடு கலகம் விளைத்து அந்த மகாபாவியாகிய கோலாகலனைத் தேசு வீசும் தேரில் ஏற்றிச் சிவபிரான் வாழும் திருக்கயிலை மலைக்குச் சென்றன. அதைக் கண்டிருந்த நாங்கள் தங்களிடம் இவ்விஷயங்களைச் சொல்ல வந்தோம். அவர்கள் ஏன் இவ்வாறு தடுத்தனரென்பது, அரசனே, நீங்கள் அல்லாது வேறு யார் அறிகுவார்? எனச் சொல்லி நின்றனர். இது கேட்ட இயமன் கண்களில் நெருப்புப் பொறி சிதற அருகிலிருந்த சித்திரகுத்தனை நோக்கி "உன் கணக்குப் புத்தகங்களை எல்லாம் சடுதியிற் கொண்டுவா" என்றனன். சித்திரகுத்தனும் அவ்வாறே கணக்கெலாம் கொணர்ந்து ஆராய்ந்து பார்த்து "செய்த செயலெலாம் பாபச் செயல்களே ஒழிய, ஒரு நல் வினையும் செய்திலன்" என்றான். இதனைக் கேட்ட இயமன் "நன்று- நன்று. இத்தகைய மாபாவி சிவலோகம் அடைவதென்றால் பின்னை நான் இங்கிருந்து அரசு செலுத்துவானேன்?" எனச் சொல்லி எழுந்து, தனது தண்டத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, எருமைக்கடாவின் மீது ஏறி, மனம் நொந்தவனாய், சித்திர குத்தன் முதலிய பரிவாரங்கள் சூழ்ந்து வர, வெள்ளி மலைக்குப் பயணம் புறப்பட்டான். வெள்ளி மலையை அடைதலும், தேவர், முநிவர், சித்தர் முதலியோர் தொழவும், தும்புரு, நாரதர் முதலியோர் நாத கீதம் செயவும், பார்வதி சமேதராய் திருவோலக்கங் கொண்டருளும் சந்திர சேகர மூர்த்தியைக் கண்டனன். கண்டதும் தொழுது நிற்க, நந்திதேவர் சுவாமி முன்னர்க் கொண்டு போய் விட்டனர்.

இயமன் சுவாமியின் சந்நிதானத்தில் தனது தண்டத்தையும் முத்திரையையும் வைத்து, "சங்கரா போற்றி, இறைவனே போற்றி, சதாசிவா போற்றி, அமலா போற்றி, அடியருக் கெளியாய் போற்றி" எனத் தோத்திரஞ் செய்து பணிந்தெழுந்து நின்றான். ஈசன் இயமராசனை நோக்கி "என்ன, வாட்டமுள்ள முகத்துடன் தண்டத்தையும் முத்திரையையும் இங்கு கொண்டு வந்து வைத்தாய்?" என, இயமன் "பராபர மூர்த்தியே! உனது கணங்கள் எனது படர்களை அடித்துத் தண்டித்துத் ஈன்றாளைக் கூடிய கொடும் பாவியைக் கயிலைக்கும் கொண்டு வந்தன. இத்தகைய மாபாவி சிவலோகம் ஏறுவதென்றால் எனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது. இயம தண்டத்தை உலகில் இவன் அன்றி வேறு யார் பெறுதற்குரியவர்? ஆதலின் எனக்கு இவ்வதிகாரம் வேண்டாம். உனது திருவடியை நீங்காதிருக்கக் கூடிய ஏதேனும் ஒரு பணிவிடையை எனக்குத் தந்து இங்கேயே இருக்க அருள் புரிதி என்று சொல்லி சுவாமியின் திருவடியில் வீழ்ந்தான்.

அப்போது சுவாமியும் அவனைக் கருணைவாக்கால் அருகு வா அழைத்து அவன் கோபம் நீங்குமாறு புன்முறுவல் செய்து "அந்தகா— உனது தண்டாயுதத்துக்கு என்றும் குறைவு வாராது. பெற்ற தாயின் தோளைப் புணர்ந்த மாபாவிதான் கோலாகலன். எல்லா நரகத்துக்கும் ஆளாகக் கூடியவன் தான். ஆயினும், அவன் வேதாரணியத்தில் சிலநாள் இருந்து இறந்தானாதலின் தாயின் தோளைப் புணர்ந்த மாபாவம் நீங்கி, மெய்ஞ்ஞானம் எய்தினவனாய்த் தாயோடும் மைந்தரோடும் திருக்கயிலையை அடைந்தான். திருமறைக்காடு என்னும் ஸ்தலத்தின் விசேஷத்தை இவ்வளவினதென்று கூறுவது எமக்கே அரிது. மட்டிலா மாபாதகராயினும் மறைசையம்பதியில் ஒரு க்ஷண நேரம் இருப்பாரேனும் அத்தலத்தில் இறப்பாரேனும் வினையெல்லாம் ஒழிந்து எம்மையடைவரே அன்றி உன் வசப்படார்கள். ஆதலின் இன்று தொட்டு மறைவனத்திருந்தோர் மாட்டும் இறந்தோர் மாட்டும்—அவர் யாவரே ஆயினும் அவர் வழிப் போகாதே. மற்றவர் மீது உன் அதிகாரத்தை முன்போலச் செலுத்தி வருவாயாக" எனத் திருவாய்மலர்ந்தருளினார். இறைவன் இவ்வாறு அருள இயமன் மறுபடியும் தெண்டனிட்டுத் தண்டத்தையும் முத்திரையையும் தன் கையிலெடுத்துக் கொண்டு நெஞ்சகத்துக்கோபத்தோடு "இறைவனே! இம்மகாபாபி சிவலோகம் ஏறுவதென்றால் இனி உனக்குப் பூவுலகத்தில் யாவரே பூஜை செய்வார்? தவம் ஏது? ஜெபம் ஏது? தானம் ஏது? சாந்தி ஏது? புண்ணியச் செயல் யாவர் தான் செய்குவர்? எல்லா பாபச் செயலையும் செய்து விட்டு ஒரு க்ஷணநேரம் வேதாரணியத்தில் தங்கி விடுவார்களே ஆயின் சிவபதத்தை

அடைந்து விடுவார்களன்றோ! சொல்லப் போனால் இனி நரகத்தை யார் தான் அடைவர்?"

இவையெல்லாம் உன் அடியவர்க்கடியனாகிய நான் உன் முன்பு சொல்லல் தகாது. ஆயினும் நீ எனக்கு அளித்துள்ள அதிகாரத்தின் பெருமையைக் காப்பாற்றும் பொருட்டுச் சொன்னேன். கடவுளாக்ஞையைக் கடப்பாருண்டோ? யான் கூறியவற்றைப் பொறுத்தருள வேண்டும்! உன் திருவுளம் போலச் செய்வன்" எனக்கூறி உத்தரவு பெற்றுக் கொண்டு தனதுலகத்துக்குத் திரும்பினன். அந்தகன் போன பின்பு சிவபிரான் கோலாகலனுக்கும் அவன் தாய்க்கும் மக்களுக்கும் சாயுச்சிய பதவியைத் தந்தருளினர்.

தன்னை யீன்ற தாயென்றுணர்ந்தும் அவளோடு புணர்ந்த மாபாவம் இவ்வாறு நீங்கும் என்றால் வேறு வல்வினைகள் வேதாரணிய வாசிகள் மாட்டு எவ்வாறு நசிந்து போம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இக்கோலாகலனுடைய கதையைச் சொல்லுபவரும், கேட்பவரும் தாம் செய்த பாபமெலாம் ஒழிந்து சிவபதம் நிச்சயம் அடைவர்.

V. S. செங்கல்வராயன், M. A.

---

**உலக வாஞ்சைகளிற் பற்றுள்ள பக்தன்:—** ஓர் உழவன் நாள் முழுவதும், கரும்பந் தோட்டத்துக்கு நீர் இறைத்துக்கொண்டிருந்தான். அவன் வேலை முடிந்தபிறகு தோட்டத்துக்கு எவ்வளவு நீர் வந்திருக்கிறதென்று பார்க்கையில் ஒரு துளி ஜலமாவது தோட்டத்திற்போய் பாயவில்லையெனக் கண்டான்; அவன் இறைத்த நீரெல்லாம் வெவ்வேறு பெரிய எலி வளைகளின் வழியாய் பூமிக்குள் போய்விட்டது. புகழ், இன்பம், சுகாநுபவம்முதலிய உலக வாஞ்சைகளை யிரகசியமாய் மனத்தில் விரும்பிக் கடவுளை வழிபடுகின்றவன் நிலையும் அவ்வாறே. அவன் தினந்தோறும் ஜபதபங்கள் செய்தபோதிலும், அவனது நியமாசாரங்களெல்லாம் வாஞ்சையெனும் எலி வளைகளின் வழியேசென்று வீணாய்ப்போவதால் அவன் யாதொரு பலனையும் அடைவதில்லை. அவன் இவ்வாறு ஆயுள் முழுவதும் கடவுளை வழிப்பட்டும் கடைசியில் பார்க்கும்பொழுது, சிறிதேனும் அபிவிர்த்தியடையானாகி, முன்னிருந்த நிலைமையிலேயே இருக்கிறான்.

## விவேக விளக்க

# வியாசத்திரட்டு

## ESSAYS FROM THE SPECTATOR

## II ஆத்மா

## THE SOUL

"கனவு" என்பதைப்பற்றி எழுதியிருக்கும் நூலாசிரியர்கள் பலர் இருப்பினும், அவர்கள் அதைப்பற்றிப் பொதுவாய் எவ்விதம் கருதியிருக்கின்றார்களென்றால்,— ஏற்கனவே சம்பவித்திருக்கும் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பால் உணர்த்துவதும், வருங்காலத்தில் நிகழக்கூடிய ஒரு சம்பவத்தை முன்னதாக அறிவிப்பதுமே "கனவு" என்று கருதியிருக்கின்றார்கள்.

ஆனால், "சொப்பனம்" என்பது ஜீவாத்மாவின் சிறப்பையும் உயர்வையும் ஒருவாறு விளக்கி, ஜடப்பொருளான பிரகிருதியின் (Matter) சம்பந்தமில்லாமலே தனித்தியங்கக் கூடிய சுதந்தரமுடையதாய் அது இருக்கிறதென்னும் உண்மையைப் புலப்படுத்துவதாயிருப்பதால், அதை வேறோர் முறையில் நான் கருதுகின்றேன். முதலாவதாக மிகுந்த சக்தியும் இடையறு இயக்கமும் வாய்ந்ததாக மனிதனுடைய ஆத்மா இருக்கின்றதென்பதற்கு, நாம் காண்கின்றகனவுகள்சிறந்தஉதாரணங்களாயிருக்கின்றன. ஆத்மசக்தியை அழிக்கவாவது ஆன்ம இயக்கத்தை அடக்கவாவது நித்திரைக்கு அதிகாரமில்லை என்பதைச் சொப்பனம் இனிது விளக்குகிறது. மனிதன் பகற்காலத்தில் ஜீவனோபாயத்திற்காக உழைப்பதால், அவனுடைய சரீரம் சலிப்புற்றுத் தளர் வெய்திய போதிலும், அதனுள் வசிக்கும் ஆத்மா சிறிதும் சலிப்புறாமலும் தளர்வடையாமலும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இளைப்பாறுதலையும் புதிய சக்தியை மீண்டும் சேகரிப்பதற்கு அவசியமான ஓய்வு காலத்தையும் இந்திரியங்கள் வேண்டி நிற்கும்போதும், சரீரம் எந்தத் தெய்விகப் பொருளோடு (ஜீவாத்மா) சம்பந்த முற்றிருக்கிறதோ அந்தத் தெய்விகப் பொருளோடு சேர்ந்தியங்கச் சக்தியற்றதாய் அயர்ந்து கிடக்கும்போதும், தனக்குரிய பலவகையான சக்தியையும் செலுத்தி,—தன்னோடு சேர்ந்தியங்கும் சரீரம் அயர்வு நீங்கி, மீண்டும் தன் சுபாவ நிலையை அடைகிற வரையில்,—தானே தனியாகத் தன்வேலையை ஆன்மா செய்து கொண்டிருக்கிறது. சரீரமாகிய இயந்திரத்தை விட்டுச் சிறிதுநேரம் பிரிந்து இயங்கும் போது, ஆன்மா அடைகின்ற விடுதலையையும் விரிவையும் கனவு சூசிப்பித்தலால், "ஆன்மா வினோதார்த்தமாய்ப் புரிகின்ற லீலையே கனவு" என்று உருவகப்படுத்திக் கூறுதல் இழுக்காகாது. உடம்பினுள் உறையும் உயிர், அதனோடு சேர்ந்து இயங்காமல் சிறிதுநேரம் உடம்பினுள்ளே தனித்தியங்குவது, ஒரு விளையாட்டுப்போலும் இளைப்பாறுதல் போலும் உயிருக்கு இருக்கிறது.

இரண்டாவதாக: மனம் சரீரத்திலிருந்து தன்னைத்தானே பிரித்துக்கொண்டு நிற்கும் போது, மனத்தின் சக்திகள் இயற்கையாகவே எவ்வளவு முதிர்ச்சியையும் தெளிவையும் அடைகின்றன என்பதையும் அப்போது மனம் எவ்வளவு வேகமாயும் விரைவாயும் இயங்குகிறது என்பதையும் விளக்குவதற்குக் கனவுகள் சிறந்த உதாரணங்களாய் இருக்கின்றன.

திட்பமானதும் பளுவானதுமான தன் தோழனாகிய சரீரத்தோடு சேர்ந்து ஆன்மா வேலை செய்யும்போது, அதனுடைய தொழில் தடையுறுகின்றது; அதனுடைய ஆற்றல் குறைகின்றது. ஆனால், கனவு நிலையில் ஆன்மா எவ்வளவு உற்சாகத்தோடும் வேகத்தோடும் தன்னைத்தானே தொழிற்படுத்திக் கொள்ளுகிறதென்பதை ஆழ்ந்து சிந்திக்கும்போது, அதனுடைய ஆற்றலும் செயலும் நமக்குப் பெரும் வியப்பினையே விளைவிக்கிறது. ஏற்கனவே சிந்திக்கப்படாத விஷயங்களைக் குறித்துத் திடீரென்று பிரசங்கம் புரிவதைப்போல் கனவில் மனிதர்கள் தங்குதடையின்றிப் பேசுவதையும் முன்பின்னறியாத அந்நிய பாஷைகளில் குற்றமின்றியும் ஆலசியமின்றியும் மனிதர்கள் கனவு நிலையில் சம்பாஷிப்பதையும் நாம் சிற்சில சமயங்களில் காண்கின்றோம். புதிதாக ஒரு விஷயத்தைக் கண்டுபிடிப்பதைப் போல் மனதிற்குக் கடினமான தொழில் வேறின்று. அவ்விதமிருந்தும், சொப்பனத்தில் எவ்வளவோ சுலபமாயும் உற்சாகமாயும் ஆன்மா புதுவிஷயங்களைக் கண்டு பிடிப்பதிலும் நவீன ஆராய்ச்சிகளைப் புரிவதிலும் தன்னுடைய முயற்சியைச் செலுத்துகிறது. இவைகளை விழிப்பு நிலையில் ஞாபகத்திற்குக் கொண்டு வருவதற்குக்கூட நாம் சிற்சில சமயங்களில் முடியாதவர்களாகிறோம். காரணம் யாதெனின்:— கனவு நிலையில் ஆன்மாவுக்கு எவ்வளவு தெளிவும் ஆற்றலும் இருந்ததோ அவ்வளவு ஆற்றலும் தெளிவும் நனவு நிலையில் இல்லாமற்போவதேயாம். ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்நாளில் எப்போதாவது பத்திரிகை படிப்பது போலும், புஸ்தகங்கள் வாசிப்பது போலும், கடிதங்கள் பார்வையிடுவது போலும் சொப்பனங் கண்டிருக்கக் கூடுமென்றே நான் நம்புகிறேன். கனவு நிலையில் இவர்கள் படித்த போது எவ்வளவு தெளிவாய் அவைகளிற் காணப்பட்ட விஷயங்களைக் கிரகித்தார்களோ அவ்வளவு தெளிவாய் விழிப்புநிலையில் பெரும்பாலும் அவைகளைக் கிரகிக்க அசக்தர்களாகின்றார்கள்.

இத்தலைப்பின் கீழ் (Religio Medici) என்னும் நூலிலிருந்து, அதன் ஆசிரியர் தம்முடைய கனவு நிலையிலும் நனவு நிலையிலும் தம்முடைய எண்ணங்கள் எவ்விதமிருந்தன என்பதைப்பற்றிக் கூறுகிற பகுதியில், சிலவாக்கியங்களை மேற்கோளாக நான் மொழி பெயர்த்து எழுதுகின்றேன்.

"சரீரத்தின் தூக்கம் ஆத்மாவின் விழிப்புநிலையாக இருக்கிறதே தவிர வேறில்லை. நித்திரை புலனறிவைப் பந்தப்படுத்துவதாயிருந்தபோதிலும் ஆன்ம இயற்கையறிவை விகாசப்படுத்துவதாயிருக்கிறது. நித்திரையில் நாம் செய்கின்ற மனோபாவங்களுக்கு இணையாக நாம் சாக்கிராவஸ்தையில் கொள்ளுகின்ற எண்ணங்கள் இல்லை.........நித்திரையில் என்னுடைய ஆத்ம அறிவு எவ்வளவு பலமாயிருக்கிறதோ, அவ்வளவு பலமாய் என்னுடைய ஞாபக சக்தியும் இருக்குமானால், கனவில் நூல்களை நான் படிக்க விரும்புவேனே தவிர மற்றக்காலங்களில் படிக்க விரும்பேன். ஆனால் ஸ்தூலமான ஞாபக சக்திக்கு ஆன்மாவின் சூக்குமமான செயல்களை முற்றும் கிரகிக்கக் கூடிய ஆற்றல் இல்லாமற் போகிறது.

ஆகவே, கண்ட கனவின் பெரும்பகுதியை விழித்தவுடன் நாம் மறந்து போகின்றோம்.”

மூன்றாவதாக: நாம் ஜாக்கிராவஸ்தையில் இருக்கும்போது சுகதுக்கங்கள் எவ்வளவு மாறுதலை நம்மனத்தில் உண்டாக்குகின்றனவோ, அதைவிட அதிகமாயும் ஆழமாயும் சொப்பனாவஸ்தையில் உண்டாக்குகின்றன.

சந்தோஷமான கனவு காணும்போது மனம் எவ்வளவு அதிகமான சந்தோஷத்தை அடைகிறதோ அவ்வளவு சந்தோஷத்தை விழிப்பு நிலையில் அது அடைகிறதில்லை. இப்படியே துக்கமான கனவு காணும்போது மனம் எவ்வளவு ஆழ்ந்த துயரத்தை அடைகிறதோ அவ்வளவு துயரம் விழிப்பு நிலையில் உண்டாவதில்லை. இம்மாதிரியாகவே சரீரம் அயர்ந்து கிடக்கும்போது ஆன்மா மாத்திரம் தனியாகக் கடவுளிடத்தில் செலுத்தும் பக்தி வரையறையின்றி முதிர்ந்துவிடுகிறது. ஒவ்வொரு மனிதனும் இவ்வுண்மைகளை அனுபவத்தில் அறிந்திருக்கக்கூடும். மனிதர்களுடைய பலவகைப்பட்ட சரீர அமைதிக்கு ஏற்றபடி அவர்கள் காணும் கனவு பலதிறப்பட்டிருந்த போதிலும், ஒரு உண்மை மாத்திரம் அவர்களுக்கு இனிது புலப்படாமலிராது,—அதாவது, கனவு நிலையில் நிகழும் நிகழ்ச்சிகள் நனவுநிலையில் நிகழும்நிகழ்ச்சிகளைவிட ஆழமாயும் வேகமாயும் மனதில் பதிகின்றன என்பதே. இரண்டு கேள்விகளை மாத்திரம் கேட்டுவிட்டு இத்தலைப்பை முடிக்கின்றேன். அவைகளை வாசகர்களே ஆழ்ந்து ஆலோசித்து ஒருவிதமான முடிவுசெய்யட்டும். ஒரு மனிதன் கனவு காணும்போதெல்லாம் அந்த நிலையில் சுகமாயும் சந்தோஷமாயும் இருக்கின்றானென்றும், நித்திரை நீங்கி ஜாக்கிராவஸ்தையில் இருக்கும்போதெல்லாம் துன்பத்தை அனுபவித்துத் துயருறுகிறானென்றும், அவனுடைய வாழ்நாளில் சரிபாதி கனவு நிலையிலும் மற்றொருபாதி சாக்கிர நிலையிலும் கழிகிறதென்றும் நாம் நினைத்துக்கொள்ளுவோம். அவன் எந்த நிலையில் இருக்க விரும்புவான்? கனவு நிலையிலேயே இருந்து சுகமனுபவிப்பதை விரும்புவானா அல்லது நனவு நிலையிலேயே இருந்து துன்பப் படுவதை விரும்புவானா? ஒரு மனிதன் தன்னுடைய கனவு நிலையில் அரசனாயும், நனவு நிலையில் பிச்சைக்காரனாயுமிருக்கின்றானென்றும், எத்தனை முறை எவ்வளவு காலம் நனவுநிலையில் பிச்சை எடுக்கிறானோ அத்தனை முறை அவ்வளவு காலம் கனவு நிலையில் அரசனாயிருந்து அதிகாரம் செலுத்துகிறானென்றும் வைத்துக்கொள்ளுவோம். அவனைப் புரவலனென்று சொல்லுவதா; அல்லது இரவலனென்று கூறுவதா? அவன் அரசனுமல்லன், பிச்சைக்காரனுமல்லன் என்று நினைப்பதா? அல்லது அரசனுமாவன்; பிச்சைக்காரனுமாவன் என்று கருதுவதா?

நான்காவதாக: எண்ணிறந்தவையும், பலதிறப்பட்டவையுமான எண்ணங்கள் ஏககாலத்தில் ஒன்றன்பின்னொன்றாய்க் கனவு நிலையில் கலந்து தோன்றுகின்றன. அவ்வளவு எண்ணங்களையும் ஒரே சமயத்தில் மிகுந்த வேகத்துடன் ஆத்மா அறிகின்றது. இதனால் ஆத்மாவின் அளவற்ற சக்தி இனிது புலப்படுகிறது. ஆன்மா புலன்களையும் பொறிகளையும் பற்றாமல் தனித்துக் கனவு நிலையில் இயங்கியபோதிலும், தான் அவ்விதம் தனித்து இயங்குகிற உணர்ச்சி, அதற்குச் சிறிதும் ஏற்படுகிறதில்லை.—சரீரத்தோடும் சரீரத்தின் அகக்கருவி புறக்கருவிகளோடும் சேர்ந்து இயங்குவதாக அது நினைத்துக்கொண்டிருக்கிறது. ஆத்மா, அச்சமயம் தான் தனித்தியங்குவதாயும் ஏகாந்தமாயிருப்பதாயும் மாத்திரம் அறிந்து கொள்ளுமானால், ஆ! நித்திரை நேரம் அதற்கு எவ்வளவு பயங்கரமாயும் தனிமையாயும் தோன்றும்? ஆனால் ஆத்மாவிற்கு வாய்ந்துள்ள ஆச்சரியகரமான சக்தியானது, அத்தனிமையை அது உணராதிருக்கும்படியும், தானே தன்னுடைய மனோபாவகத்தால் எண்ணிறந்த தோழர்களாகிய எண்ணங்களைச் சிருஷ்டி செய்துகொள்ளும்படியும், அவற்றோடு சேர்ந்து இயங்கும்படியும் செய்துவிடுகிறது. கனவுநிலையில், ஆத்மாவே நாடகமேடையாயும், அதுவே நடிக்கும் வேடதாரிகளாயும், அதுவே வேடிக்கை பார்க்கும் ஜனங்களாயும் இருக்கின்றது. இது ப்ளூடார்ச் (Plutarch) என்பவர் கூறிய ஒரு உண்மையை எனக்கு ஞாபகப்படுத்துகிறது. அவர் பின்வருமாறு சொல்கின்றார்,—“ மனிதர்கள் எல்லோரும் விழிப்புநிலையில் இருக்கும்போது



பொதுவான ஒரே உலகத்தில் வசிக்கிறார்கள்; ஆனால் தூங்கும்போது ஒவ்வொருவரும் தத்தமக்குச் சொந்தமான வெவ்வேறு உலகத்தில் வசிக்கிறார்கள்.” மனிதன் விழித்திருக்கும்போது இயற்கையான இந்த மண்ணுலகத்தில் நடமாடுகின்றான்; தூங்கும்போது அவன் தனக்கென்றே உரித்தான வேறு சூக்கும உலகத்திற்குப் போய்விடுகின்றான். இந்த உண்மையை விளக்கி உரைப்பது முடியாது; ஒவ்வொருவரும் தாமே மனமொருங்கி ஆழ்ந்து சிந்தித்து ஆனந்திக்கவேண்டும்.

ஐந்தாவதாக: கனவு நிலையில் ஆன்மாவிற்கு ஒருவிதமான தெய்வீகசக்தி ஏற்படுகிறது. ஆன்மாவிற்கு வாய்ந்துள்ள இந்த அருமையான சக்தியைக் குறித்து நான் இரண்டொரு வார்த்தைகளாவது கூறவேண்டுவது அவசியமாகிறது. மகாத்மாக்களுடைய உபதேசங்களிலும், வேதங்களின் போதனைகளிலும் நம்பிக்கையுள்ள ஆஸ்திகர்கள் தெய்வீக சக்தியையும் தெய்வீக வாக்கினையும் சந்தேகிக்கமாட்டார்கள். பண்டைக்காலத்திலும் சரியே, தற்காலத்திலும் சரியே, எத்தனையோ நூலாசிரியர்கள் கனவு நிலையில்ஆன்மா தெய்வீக சக்தியினால் தூண்டப்பெற்று அநேக உண்மைகளை வெளியிட்டிருப்பதைப்பற்றி எழுதியிருக்கின்றார்கள். இம்மாதிரியான தெய்வீகசக்தி ஆன்மாவுக்கு இயற்கையாகவே இருந்து கனவு நிலையில் வெளிப்பட்டு விரிகின்றதா? அல்லது ஆன்மா கனவு நிலையில் கடவுளோடு சம்பாஷிப்பதால் இப்படிப்பட்ட சக்தியை அடைகின்றதா? அல்லது கீழ்ப்பட்ட பேய் பைசாசங்களினுடைய உதவியால் இந்த ஆற்றலைப் பெறுகின்றதா? என்னும் பலவகையான ஆசங்கைகளைக் கற்றோர்கள் எழுப்பி, விவாதித்து வந்திருக்கிறார்கள்—வருகிறார்கள். ஆனாலும் ஆன்மா கனவு நிலையில் தன்னுடைய சக்தியைத் தவிர வேறொரு தெய்வீக சக்தியையும் அடைகிறதென்னும் உண்மையில் மாத்திரம் இவர்கள் அபிப்பிராய பேதம் கொண்டார்களில்லை.

இத்தகைய சந்தர்ப்பங்களில் ஆத்மா சரீரத்திலிருந்து அறவே நீங்கி விட்டதென்றாவது அல்லது முற்றும் விடுதலையடைந்ததென்றாவது நான் கருதுவதாக நீங்கள் நினையாதீர்கள். விழிப்பு நிலையில் சரீரமாகிய இயந்திரத்தினால் இயக்கப்பட்டு இரத்தத்தோடும் ஜீவஅணுக்களோடும் கலந்துவேலைசெய்யும்போதுஆன்மா பிரகிருதியாகிய ஜடப்பொருளில் எவ்வளவு தூரம் அழுந்துகிறதோ, அவ்வளவு தூரம் கனவு நிலையில் அழுந்துகிறதில்லை என்றும், விழிப்பு நிலையில் இவைகளால் எவ்வளவு தூரம் தடைப் படுகிறதோ அவ்வளவு தூரம் கனவு நிலையில் தடையுறுவதில்லை என்றும் நாம் கொள்ளுவதே போதுமானது. மனம் நன்றாயும் விசாலமாயும் இயங்குவதற்கு ஆன்மாவினின்றும் சரீரம் எவ்வளவு தளர்த்தப்படுதல் வேண்டுமோ அவ்வளவு, கனவு நிலையில் அது தளர்த்தப்படுகின்றது. சரீரத்தோடு சேர்ந்து இயங்கும்போது துண்டு துண்டாய் முறிக்கப்பட்டும், அதனால் பலவீன முற்றும் போனது போற் காணப்படும் ஆன்மா கனவு நிலையில் ஒன்று சேர்ந்தும் அதனால் பூரணமான சக்தியைப்பெற்றும் இயங்குவதுபோல் தோன்றுகிறது.

இங்கே சொல்லப்பட்ட விஷயங்கள் விவாதத்திற்கு இணங்கி நிற்காவிட்டாலும், ஜீவாத்மாவின் சிறப்பையும் உயர்வையும் விளக்குவதற்கும் சரீரத்தின் சம்பந்தமில்லாமலே தனித்தியங்கும் சுதந்தரம் அதற்கு இருக்கின்றது என்னும் உண்மையை வலியுறுத்துவதற்கும் இவ்விஷயங்கள் போதிய ஆதாரங்களாயிருக்கின்றன. இந்த இரண்டு உண்மைகளை வற்புறுத்துவதே இவ்வியாசத்தின் நோக்கமாதலாலும் அந்நோக்கம் இதுவரை கூறப்பட்ட விஷயங்களினால் ஒருவாறு நிறைவேறியிருக்கக் கூடுமென்று நான் கருதுகின்றேனாதலாலும், மேற்கொண்டு எதும் சொல்லாமல் இம்மட்டோடு இவ்வியாசத்தை முடிக்கின்றேன்.

நாகை—ஸி. கோபாலகிருஷ்ணன்

## நமது சந்தா நேயர்களுக்கு

சந்தாநேயர்கள் கடிதம் எழுதும்போதும், சந்தாத்தொகை அனுப்பும்போதும், புத்தகங்கள் ஆர்டர் செய்யும்போதும், தமது விலாஸத்துக் கெதிரேயிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டே எழுதக் கேட்டுக் கொள்ளுகிறோம். நம்பரைக் குறிப்பிடாத பக்ஷத்தில் வீண் காலதாமதமாகும்.

மானேஜர்

# திவ்யப் பிரமாணங்கள்

## ORDEALS

ஜலதிவ்வியம் :—முற்கூறிய திவ்வியங்களில் சொல்லிய பிரகாரம் வருணபூஜை முதலான பொதுவிதிக் காரியங்களைச் செய்துகொண்டு, சோத்தியனை அதிக ஆழமில்லாமல் நீர் நிறைந்திருக்கின்ற ஒரு தடாகத்தில் அவன் நாபிவரையில் அமிழ்த்தி, அத்தடாகத்தில் மீன், அட்டை, பாசி, புல்லு, சேறு, அலை முதலியவைகளில்லாமலிருக்கவேண்டுமென்றும், தடாகத்தின் கரையில் சமமான பூமியில் ஒரு தோரணமும், அந்தத் தோரணத்திற்கு நூற்றைம்பது முழ தூரத்தில் ஒரு தோரணமும் நிறுத்தி, அத்தடாகத்தில் அரையளவு ஜலத்தில் ஒரு பரிசுத்தமான தூண் ஒன்று நிறுத்தவேண்டுமென்றும், அத்தூணைப் பிடித்துக்கொண்டு, சோத்தியன் தன் முகத்தைக் கிழக்கு முகமாக வைத்துக்கொண்டு, தேகத்தில் வலிமையும் விரைவுமுடைய ஒரு மனிதன் அந்தக் கரைத் தோரணத்தடியிலும் அதேகுணங்கள் பொருந்திய மற்றொருவன் நூற்றைம்பது முழ தூரத்துத் தோரணத்தடியிலும் நிற்கும்படி செய்து கரைத்தோரணத்தடியில் நின்றவன் மூங்கிலால் அமைக்கப்பட்ட மூன்று பாணங்களை விடும்படி செய்யவேண்டியது என்றும்—பாணங்கள் விடுகிறவன் சாந்தகுணமும் நிஷ்பக்ஷபாதமும் பொருந்திய க்ஷத்திரிய அல்லது பிராமண வில்லாளியாகவிருக்கவேண்டும்; அவன் உபவாசமும் சுசியுமுடையவனாயிருக்கவேண்டும்—இந்தப் பாணங்களில் இரண்டாம் தரம் விடப்பட்ட பாணத்தைத் தூரத்துத் தோரணத்தடியில் நிற்கிறவன் எடுத்துக்கொண்டுபோய்த் தன்னிலையில் நிற்கும்படி செய்யவேண்டுமென்றும், இப்படிச் செய்த பின்னர், பிரதான நியாயாதிபதி கையை மூன்றுதடவை தட்டினவுடன் சோத்தியனை ஜலத்திலே முழுகும்படி செய்யவேண்டுமென்றும் கரைத்தோரணத்தடியில் நின்றவன் ஓடிப் பாணத்தையெடுத்துத் தூரத்தில் நிற்கின்றவனிடத்தைச் சேர்ந்தும் அங்கே நின்றவன் ஓடிவந்து கரைத் தோரணத்தடியைச் சேர்ந்தும் பார்க்குமளவு அப்படி மூழ்கியிருக்கின்றவன் சிரசு முதலான அவயவங்கள் காணப்படாமலமிழ்ந்தியிருந்தால் அச்சோத்தியன் பேரில் குற்றமில்லையென்று தீர்மானம் செய்யப்படும் என்றும் ஏற்பட்டிருந்தது.

விடதிவ்வியம் :—தேவ சந்நிதியில் உபவாசமும் சுசியுமுடைய பிரதான நியாயாதிபதி முற்கூறிய விதிகளின்படி தரும தேவதையின் பூஜை முதலானவைகளைச் செய்வித்து, சுசியுடைய சோத்தியனைத் தெற்கு முகமாக நிறுத்திப் பிரதிக்கினைப் பத்திரத்தை அவன் சிரசில் வைத்து இமயமலையிலும் மிருகத்தின் கொம்புகளிலும் பிறந்த விடத்தையேனும் வற்சநாபியாகிய விடத்தையேனும் ஏழு யவப்பிரமாணமெடுத்து அதையதற்கு முப்பது பங்கான நெய்யிற் கலந்து மந்திரித்துச் சோத்தியன், மகாதேவனைப் பிரார்த்தித்து, பிராமண சந்நிதியில், குளிர்ந்தவேளையில் பானம் பண்ணும்படி செய்விக்கவேண்டியது. சோத்தியன் விடபானம் பண்ணினது முதற்கொண்டு ஐந்நூறு தடவை கையைத்தட்டுகிற காலமளவும் மயிர்ப்புளகம், வியர்வை, முகவீக்கம், நிறமாறல், நடுக்கம், கண் சொருகுதல், நெஞ்சடைப்பு, மேல்மூச்சு, மரணம், இக்குணங்களில் ஒன்றேனும் இல்லாவிடில், அவன் நிரபராதி என்று ஸ்தாபிக்கப்படும். இதற்கப்பால் வைத்தியன் சோத்தியனுக்கு மருந்து கொடுத்து விடத்தை முறிக்கும்படி செய்து ஐந்து நாள் பரியந்தம் அவ்விடத்திலிருந்து அவனைக் காப்பாற்றும்படி செய்விக்க வேண்டியதென்றும் ஏற்பட்டிருந்தது.

கோச திவ்வியம்:—சோத்தியன் தெய்வ உபாஸ்தையுள்ளவனானால் அவனுடைய இஷ்ட தேவதைக் கபிஷேக முதலான பூஜை செய்வித்து அவ்வபிஷேக ஜலத்தையும், திருடர்களாலும் ஆயுதத்தினால் சீவனம் பண்ணுகிறவனாலும் துர்க்கை முதலான உக்கிர தேவதைகளின் அபிஷேக தீர்த்தத்தையும் இராஜசபையில் கொண்டுவந்து வைத்து மேற்கூறியபடி தருமதேவதை ஆவாகனம் முதலிய பொதுவிதிக் காரியத்தைச் செய்து அந்தத் தீர்த்தத்தைச் சோத்தியன் கிழக்கு முகமாக நின்று மூன்று சேரங்கை பானம்பண்ணும்படி செய்விக்க வேண்டியது. இந்தப்பானம் பண்ணி பதினான்கு நாட்களுக்குள் இந்தச் சோத்தியனுக்காவது அவனுடைய மைந்தருக்காவது இராஜீக தெய்வீக துன்பங்கள் உண்டாகா



விடில் சோத்தியன்பேரில் யாதொரு குற்றமுமில்லை யென்றே தீர்மானம் செய்யவேண்டியது என்றும், குறிப்பிட்ட நாட்களுக்குப் பிந்தி ஏதாவது துன்பங்கள் நேரிட்டால், அதைக் கணக்கில் சேர்த்துக் கொள்ளுகிறதில்லை யென்றும் நிஷ்கரிஷிக்கப்பட்டிருந்தது.

மற்ற திவ்விய பிரமாணங்களெல்லாம் அற்ப அபியோகங்களில் பிரயோகிக்கத் தக்கனவென்று ஏற்பட்டிருக்கின்றமையால், அவைகளைப்பற்றிச் சுருக்கிச்சொன்னால் போதுமென்ற எண்ணத்துடன் பின் வருமாறு சங்கிரகமாக விளக்கப்பட்டிருக்கிறது.

தண்டுல திவ்யம். சூரியபிப்ப அபிஷேக ஜலத்தை மட்பாத்திரத்தில் வார்த்து அதிலே சம்பாநெல்லரிசியை முதல்நாளே ஊறவைத்து தருமதேவதை ஆவாகனம் முதலான பொதுவாகச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்துகொண்டு மறுநாள் சுசியுடைய சோத்தியனுக்கு அந்தத் தண்டுலத்தில் மூன்றுபிடி கொடுக்க சோத்தியன் அதனைமென்று அரசிலையிலே உமிழும்படி செய்யவேண்டும்; இவ்விதம் மென்று உமிழ்ந்த அரிசி இரத்தத்தோடு கலந்திருந்தாலும், சோத்தியனுடைய அலகு மேல் வாய்வறண்டு அவன்தேகம் நடுங்கினாலும் அவன் குற்றவாளியென்று தீர்மானம் செய்யப்பட்டு வந்தது.

தப்தமாட திவ்வியம்:—பிரதான நியாயாதிபதி இராஜசபையிலே பதினாறங்குல அகலமும் நாலங்குல ஆழமும் வட்டவடிவு முடையதாக தங்கம், வெள்ளி, தாம்பிரம், மண் இவற்றுள் ஒன்றினால் செய்யப்பட்ட பாத்திரத்தில், இருபது பல நெய்யைவார்த்து, நன்றாய்க்காய்ச்சி, ஒருமாடப்பிரமாணம் தங்கம், வெள்ளி, தாம்பிரம், இரும்பு இவைகளில் ஏதாவது ஒருஉலோகத்தை அதில் போட்டு, தருமதேவதை ஆவாகனம் முதலான பொதுவில் செய்யவேண்டியவைகளைச் செய்து முடித்தபிறகு, மறுபடியும் நன்றாய்க் காய்ச்சிக் காய்ந்திருக்கும் சமயத்தில் அந்தத்தப்தமாடத்தை சோத்தியன் உபவாஸமிருந்து ஸ்நானம் செய்து ஈரவஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு கையாலெடுக்கும்படி செய்தால் அப்போது அந்தச் சோத்தியன் கையில் கொப்புளங்களில்லாவிடில் அவன் குற்றம் செய்தவனில்லை யென்று தீர்மானிக்கப்பட்டு வந்தது.

தருமசதிவ்வியம் (தர்ம, அதர்ம திவ்வியம்):—தர்மப்பிரதிமையை வெள்ளியினாலும், அதர்மப் பிரதிமையை ஈயம், இரும்பு, இவற்றுள் ஏதனாலேனும் செய்து, அந்தப் பிரதிமைகளிரண்டையும் கோமயத்தினாலேனும், மண்ணினாலேனும் அமைக்கப்பட்ட உருண்டைகளுக்குள் வைத்து, அவைகளைப் பாண்டத்துள் மறைவாக வைத்து, தருமதேவதை யாவாகனம் முதலிய பொதுவில் அப்பியசிக்கவேண்டிய காரியங்களை அப்பியசித்து, அந்தப் பிரதிமைகளை ஆராதித்தபின்பு, சோத்தியன் அவ்விரண்டிலொன்றை எடுக்கும்படி செய்வது. அப்போது சோத்தியன் தருமப் பிரதிமையை எடுப்பானாகில் அவன்பேரில் யாதொரு குற்றமுமில்லை யென்று நிஷ்கரிஷிக்கப்பட்டு வந்தது. சண்டாளர்களுக்கு ஒரு சர்ப்பமடங்கிய மட்குடத்தில் போடப்பட்ட மோதிரத்தையெடுக்கும்படி செய்தல் ஏற்பட்டிருந்ததாம்.

முடிவுரை:—இந்தியாவில் கி, பி, 1813-ம் வருஷம்வரை இப்பிரமாணங்கள் அனுஷ்டானத்திலிருந்ததாகத் தெரியவருகிறது. 1805-ம் வருஷத்தில் புதுக்கோட்டை இராச்சியத்தில் மரவனேந்தல் என்ற ஊரில் வில்வநாதபிள்ளை என்ற அதிகாரி ஒருகால்வாயைப்பற்றிய வழக்கை வேறுவிதமாய்த் தீர்க்க முடியாமல் அக்கினிப்பிரமாணத்தைக் கொண்டு தீர்த்துவைத்தாரென்று இராங்கியர் என்ற கிராமத்துக் கல்வெட்டு ஒன்றில் கண்டிருக்கிறது. 1813-ம் வருஷத்தில் காய்ச்சின நெய்யில் கையைவிடச் செய்து மதுரையில் ஒருவழக்குத்தீர்க்கப்பட்டதென்றும் அறிகிறோம்.

ஐரோப்பிய யாத்திரைக்காரர்கள் எழுதியிருப்பதிலிருந்து. இப்பிரமாணங்கள் பதினைந்தாவது, பதினாறாவது நூற்றாண்டில் இத்தேசத்தில் அனுஷ்டானத்திலிருந்தனவென்று தெரியவருகிறது. நிகோலோ காண்டி (Nicolo Conti) என்பவர், வியவகாரங்களை வேறுவிதமாகத் தீர்க்கமுடியாத பிரமயங்களில் காய்ச்சின இருப்புப் பாளத்தை நாக்கினால் நக்குகிறது என்றும் செக்கச்செவேரென்று நன்றாய்க் காய்ச்சிய

இருப்புத்தட்டை ஒரு விக்கிரகத்தினின்று கொஞ்சதூரம் தூக்கிக்கொண்டு போகிறதென்றும் காய்ச்சின நெய்யில் கையைவிடுவதென்றும் இம்மூன்று பிரமாணங்கள் பதினைந்தாவது நூற்றாண்டில் வழங்கிவந்தன வென்று எழுதியிருக்கிறார். பார்போஸா (Barbosa) என்பவர் காய்ச்சின நெய்ப்பிரமாணத்தைப்பற்றியெழுதி யிருக்கிறதைத் தவிர பதினாறாவது நூற்றாண்டில் மகம்மதிய குற்றவாளிகள் கூட பழுக்கக்காய்ச்சிய கோடாலியை நக்கும்படி செய்யப்பட்டார்களென்றும் எழுதியிருக்கிறார்.

சோடாநாகப்பூர் காடுகளில் இவ்வப்பிரமாணங்கள் இன்னும் அனுஷ்டானத்தி லிருக்கின்றன வென்று அறிகிறோம். ஒரு குலஸ்திரீயின்பேரில் வியபசாரம் என்ற குற்றம் ஏற்படும் பட்சத்தில் கன்றுக்குட்டியின் சாணியைக்கொண்டு ஒரு பிராமணன் இரண்டு உருண்டைகள் செய்து ஒன்றில் வெள்ளி நாணயமும் மற்றொன்றில் ஒரு துண்டுகரியும் போட்டு அக்கிராமத்தில் மிகுந்த பரிசுத்தமானது என்று ஸ்தாபிதமாயிருக்கும் ஒருமரத்தண்டை அவைகளை வைத்து அவைகளில் ஒன்றை அந்த ஸ்திரீயைக்கொண்டு எடுக்கும்படி செய்கிறதென்றும் அந்த ஸ்திரீ வெள்ளிநாணயமடங்கிய சாணி உருண்டையை யெடுத்துவிட்டால் அவள்பேரில் யாதொரு விதமான தோஷமுமில்லை யென்றும் ஏற்பட்டு வருகிறது.

பர்மாவில் இரண்டு கட்சிக்காரர்களையும் இரண்டு மெழுகு வத்திகளைக் கொளுத்திக்கொண்டு போகும்படி செய்து, யார் மெழுகுவத்தி முதலில் அணைகிறதோ அவர் கட்சி தோல்வி யென்று தீர்மானம்செய்யப்படுகிறது.

பஞ்சாபில் மகம்மதியர்களுக்குள் குருஸ்தானத்துக்குவர அபீஷ்டமுள்ளவர்கள் பெயர்களைத் துண்டுக்கடிதங்களில் பிரத்தியேகமாக எழுதி, ஜலத்திற்குள் அத்துண்டுகளை எறிந்துவிட, முதலில் எந்தத்துண்டுக்கடிதம் உள் அமுங்குகிறதோ அதில் எழுதியிருக்கப்பட்டவரைத் தங்களுக்குக் குருவாக ஸ்தாபிக்கிறது என்று ஏற்பாடாம்.

மேற்கூறிய திவ்வியப் பிரமாணங்களை இந்தியாவில் மட்டுமில்லாமல் இதரதேசங்களிலும் முற்காலங்களில் ஜனங்கள் அனுஷ்டித்து வந்தார்களென்று நாம் அறிகிறோம். க்ரேக்கர்களுக்குள்ளும் யூதர்களுக்குள்ளும் இப்பிரமாணங்களில் சில அனுஷ்டானத்தி லிருந்தன வென்று தெரியவருகிறது. சியம் தேசத்தில் இப்பிரமாணங்களில் சிலவற்றை அப்பியசித்து வந்ததாகவும் இத்துடன் இருகட்சிக்காரர்களையும் ஒரு புலி வீராவேசத்துடனிருக்கையில் அதனிடம் ஒப்புவிக்கச்செய்து அப்புலி ஒருவரை மாய்த்து மற்றொருவரைத் தீங்கில்லாமல் விட்டுவிட்டால், விடப்பட்டவர் குற்றமற்றவரென்றும், இருவர்களையும் மாய்த்துவிட்டால், இருவர்களும் குற்றவாளிகளென்றும் தீர்மானித்து வந்ததாகவும் அறிகிறோம். இங்கிலாந்து தேசத்தில் ஸாக்ஸன் ஜாதியாரால் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் கி.பி. 1218-ல் இப்பரிசோதனை எடுபட்டுப் போயிற்றென்றும் புலப்படுகிறது.

---

**காமத்தை வெல்லும்வழி.**—ஒரு ஸிஷ்யன் ஒரு ஸமயத்தில் பகவானைப் பார்த்து, "ஸ்வாமீ, காமத்தை வெல்வதெப்படி? ஜபதபங்களிலேயே நான் காலத்தைக் கழித்துவந்தபோதிலும், பாபசிந்தைகள் அடிக்கடி மனத்தில் ஜநிக்கின்றனவே" என்று கேட்கப் பகவான் சொல்லலுற்றார். ஒருவன் ஒருநாயை ஆசையாய் வளர்த்துவந்தான். அவன் அதைக்கொஞ்சிச் சீராட்டி, மடியில்வைத்து விளையாடி முத்தமிடுவான். ஒரு ஞானி அவனுடைய அஞ்ஞான கார்யத்தைக்கண்டு, நாய் பகுத்தறிவில்லா மிருகமானதால் என்றைக்காவது ஒருநாள் கடித்துவிடும், ஆகையால் அதற்கு அவ்வளவுஇடங்கொடுக்கவேண்டாமென்றுசொன்னார். அந்தப் புத்திமதியைக் கேட்டு அந்த ஸிஷ்யன் அன்றுமுதல் நாயைத் தூரத்தள்ளிவிட்டு, இனி எப்பொழுதும் அதைக் கொஞ்சிச் சீராட்டுவதில்லை யென்று நிச்சயம் பண்ணிக்கொண்டான். நாய்க்குத் தன் எஜமானன் எண்ணம் மாறிப்போய் விட்டதென்று தெரியாதாகையால், முன்போலவே எஜமானன் தன்னைக் கொஞ்சிச் சீராட்டுவானென்று அவனிடம் அடிக்கடி ஓடும். ஆனால், அவன் அதைப் பலமுறையும் அடித்தபடியால், அவனைப்போய்த் தொந்தரவு செய்வதை அது நிறுத்திவிட்டது. உன் நிலைமையும் அவ்வாறுதான். நீ இதுகாறும் சீராட்டி வந்த காமமென்னும் நாயை நீ ஒழித்துவிட விரும்பினால், அது உன்னை எளிதில் விட்டுச் செல்லாது. ஆயினும் அதில் பாதகம் ஒன்றுமில்லை. நீ சீராட்ட வேண்டுமென்னும் எண்ணத்துடன் அந் நாய் உன்னிடம் வந்தபோதிலும், நீ அதற்கிடங்கொடாமல் அஃது உன்னை நெருங்கும்போதெல்லாம் நன்றாய்த் தவடை சுத்திசெய்து வருவாயாகில், நாளாவட்டத்தில் அதன் தொந்திரவு ஒழிந்துபோகும்,



# மாயக்கண்ணாடி

## THE MYSTERIOUS MIRROR

"இவ்வரண்மனைகளுள் இவ்வறையொன்றே மிக நேர்த்தியானது என்று உறுதியாய்ச் சொல்லுவேன்" என்றார் வீரவனத்தேவர்.

"தம்பி! அதைப்பற்றி அதிகம் சொல்லாதே. நான் மெத்தையின் மேலறையில் சயனித்துக் கொள்வதாகவே தீர்மானித்துவிட்டேன்" என்றார் காட்டுக்குறிச்சி ஜமீன்தார்.

மெத்தையின் மேலறையும் வெகு அழகாகச் சிங்காரிக்கப்பட்டுள்ளது. நாற்புறமும் ரவிவர்மா படங்களும், ஜர்மன் படங்களும் தொங்கவிடப் பட்டிருந்தன. படுதாக்களும், வெல்வெட்டினாலும், மகமல்லினாலும் தைக்கப்பட்டு, நடுவில் அநேக விசித்ர வர்ணமுள்ள சித்திரத் தையல் வேலை செய்யப்பட்டிருந்தன. அறையின் ஓர் புறத்தில் சந்தனப் பலகையில் விசித்திர வேலைப் பாடமைத்த மேஜைகளும், ஸோபாக்களும், பீரோக்களும், கட்டில்களும் போடப் பட்டிருந்தன. மற்றோர் புறத்தில் தேவதாரு மரத்தாற் செய்த மேஜையின்மேல் தந்தச் சட்டம் போடப்பட்ட தீர்க்க கோளவடிவமான நிலைக்கண்ணாடி யொன்றும், அதற்கெதிரில் இரண்டு மெழுகு வர்த்திகளும் வைக்கப்பட்டிருந்தன.

இரவு சுமார் மணி பத்திருக்கும். மேற்கூறிய அறையில் காட்டுக்குறிச்சி ஜமீன்தாரும், அவர் மனைவி கநகவல்லியம்மாளும், பங்காளி வீரவனத் தேவரும் பிரவேசித்தனர். வீரவனத் தேவர் சற்றுப் பெருத்த சரீர முள்ளவராய், வேட்டை யாடுவதில் அபரிமிதமான ஆசையுள்ளவரா யிருந்தார். ஜமீன்தாரோ ஒற்றை நாடியாய் வெடவெட வென்றிருந்ததுமன்றி, பேசும் பொழுது மூக்கின் உதவியை அதிகமாய் வேண்டினவராய்த் தோற்றினார். கநகவல்லியம்மாளும் பாலைப் பருவம் நீங்கி மடந்தைப் பருவம் அடைந்தவளாய், ரதியைத் தோல்வியுறச் செய்யும்படி அவ்வளவு அழகு பொருந்தியவளாய், மின்னற் கொடி போல் ஜமீன்தாரைப் பற்றி நின்றாள்.

வீரவனத் தேவர், "அண்ணா! நீங்கள் இவ்வறையிற் சயனிப்ப தென்பது எனக்கு எள்ளளவேனும் விருப்பமில்லை. எனக்கு ரூபாய் ஆயிரம் கொடுத்தாலும் நான் இவ்வறையில் அரை நாழிகை கூடப் படுக்க மாட்டேன்" என்றார்.

இவ்வசனம் செவியிற் புகவும் கநகவல்லியம்மாள் ஜமீன்தார் முகத்தை ஒரு தடவை உற்று நோக்கினாள். அவர் முகம் ஆச்சரியத்தை விளக்கிற்று.

ஜமீன்தார்:—"தம்பி! இவ்வறையில் இரவில் நீ கண்ட அதிசய விசேஷம் என்ன?"

வீரவன:—"அண்ணா! நான் ஒன்றுங் காணவில்லை. நமது வீட்டு வேலைக்காரி கமலம் எதையோ கண்டு பயந்தாளாம்."

ஜமீன்தார்:—"அவள் கண்டது என்னவாம்?"

வீரவன:—"அவளை நான் பலதடவை வற்புறுத்தியும், அவள் சொல்லமாட்டேன் என்று சொன்னதுந்தவிர, மறுநாளே என் வீட்டை விட்டுப் போய் விட்டாள்"

ஜமீன்தார்:—"அவளுக்குப் பிரமைப் பைத்தியம் கொஞ்சம் உண்டோ என்னவோ!"

கநகவல்லி:—"ஒருக்கால் அவளுக்கு ஏதாவது வலிப்பு வந்திருக்கலாம்."

வீரவன:—"வேலைக்காரி கமலம் வீட்டை விட்டுச் சென்றது வீட்டிலிருந்த மற்றவேலைக்காரர்களுக்கு பயத்தை யுண்டாக்க, அவர்களுள் ஒவ்வொருவரும் ஏதோ சாக்குப் போக்குகளைச் சொல்லிக் கொண்டு மெதுவாக நழுவவாரம்பித்து விட்டனர்."

ஜமீன்:—"அது எல்லாருக்கும் ஸகஜம் தானே!"

வீரவன:—"மறுபடி ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு நமது சோமாசிக் குருக்கள் வந்து அவ்வறையிற் படுத்துக் கொண்டார். அவரும்

எதையோ கண்டாராம். ஆனால் ஒன்றும் சொல்ல மாட்டேன் என்று மறுத்து விட்டார்”

ஜமீன்தாருக்கு எண்ணம் பலதிசைகளில் பரவ வாரம்பித்தது. பேயுலாவும் அறைகள் அநேகங்களில் அவர் பலதடவை இராக்காலங்களில் சயனித்துக் கொண்டிருக்கிறார். ஒரு தடவையாவது விசேஷம் ஒன்றையும் அவர் கண்டிலர். இப்படி ஜனங்கள் சொல்வது வீண்பிரமையென்றே அவர் நிர்யாணித்தார்.

வீரவன:—“ கொஞ்சகாலத்துக்குப் பிறகு நமது குடும்ப வைத்தியரான தன்வந்திரியும் வந்து அவ்வறையிலேயே சயனித்துக் கொண்டார். நான் வேண்டாமென்று எவ்வளவு தடவை தடுத்துச் சொல்லியுங் கேளாமல், தான் பேய் பிசாசுகளுக்குப் பயப்படுவதில்லையென்று தைரியம் சொல்லிப் போனார். ஆனால் மறுநாட் காலையில் பார்க்கும் பொழுது அவர் முகம் வெளுத்திருந்தது. என்ன ஸமாசாரமென்று கேட்டதற்கு அவர் ஒன்றையும் விஸ்தரிக்காது, “தாமதம் செய்யாதே. இக்கண்ணாடியை இக்கணமே உடைத்தெறிந்து விட்டு மறுவேலைபார்” என்று சொல்லிப் போனார்.

கண்ணாடியின் பிரஸ்தாபம் வரவே மூவரும் அது வைக்கப்பட்டிருக்கும் திசையை நோக்கினர். கண்ணாடியும் பார்வைக்கு வெகு ரமணீயமா யிருந்தது.

வீரவன:—“ கண்ணாடியை உடைத்துவிடுவதென்றால் எனக்கு மனது வரவில்லை. அதை நான் ஆயிரம் ரூபாய் கொடுத்து போட்டியில் வாங்கினேன். துருக்கி தேசத்தரசன் அரண்மனையிலிருந்து அது கொள்ளையடிக்கப்பட்டு, இங்குவியாபாரத்துக்கு வந்தது. தன்வந்திரியும் அதைப்பற்றிய விசேஷ விபரங்கள் ஏதாவது எனக்குத் தெரியுமாவென்று கேட்டார். எனக்குத் தெரிந்தது இவ்வளவுதான் என்றுசொல்லிவிட்டேன். அக்கண்ணாடியில் அவர் எதையோ கண்டாராம். எதையென்றுமட்டும் சொல்ல மறுத்துவிட்டார்...........”

வீரவனத்தேவர் இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது ஜமீன்தார் கைகடியாரத்தைப் பார்தார். மணி பதினொன்றரையாய்விட்டது. உடனே அவர், “தம்பி! நான் நிர்மானித்துவிட்டேன். இவ்வறையிற்றான் சயனித்துக் கொள்ளப்போகிறேன்” என்று உறுதியாய்ச் சொல்லிவிட்டார். வீரவனத்தேவர் மறுத்துப் பேசமுடியாத ஸ்திதியில் இருந்துவிட்டார்.

கடைசியில், “ அண்ணா! அதோ அறையின் வடவண்டைப் புறத்தே தொங்குகிற கயிற்றை யிழுத்தால் என் படுக்கையறையிலுள்ள மணியடிக்கும். மேல்புறத்துள்ள கயிற்றை யிழுத்தால் வேலைக்காரர்கள் தூங்கும் அறையிலுள்ள மணியடிக்க அவர்கள் எழுந்திருப்பார்கள். எது யுக்தமென்று தோன்றுகிறதோ அது போல் செய்யுங்கள்” என்றார்.

ஜமீன்தார்:—“ தம்பி! ஏதாவது விபத்து நேருமாயின் நீ சொல்லியவண்ணஞ் செய்கிறேன்” என்னலும், வீரவனத்தேவர், கநகவல்லியம்மாளைப் பார்த்து, “ அண்ணி! மேலண்டையறையில் படுக்கை போடப்பட்டிருக்கிறது. உங்களுக்கு இங்கு படுக்க பயமாயிருந்தால் அடுத்தவறையிற் படுத்து சுகமாக நித்திரை செய்யலாம். மணியடித்தால் வேலைக்காரி சுவர்ணம் துணைக்கு வருவாள்” என்று சொல்லிவிட்டு, அறையின் கதவை வெளிப்புறம் சாத்திக்கொண்டு, தன் படுக்கையறை நோக்கி நடந்து விட்டார்.

வீரவனத்தேவர் வெளியே போகலும் சதிபதிகளிருவரும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தனர். பார்த்துப் புன்முறுவலுங்கொண்டனர். ஜமீன்தாரும், “கண்ணே! வேண்டுமானால் நீ அடுத்தவறையிற் படுத்துக் கொள்ளலாம்” என்றார். கநகவல்லியம்மாளும், “நாதா! தாங்கள் இங்கிருக்கும்போது, எனக்கு என்ன பயம். சற்று இருங்கள். என்னுடைய போர்வையை எடுத்து வந்து விடுகிறேன்” என்று பதிலுரைத்தாள். ஜமீன்தாரும், “ வேண்டாம் கண்ணே! நானே போய் எடுத்து வருகிறேன்” என்று சொல்லிவிட்டு, கநகவல்லி சோபாவிலிருந்து எழுந்திருக்குமுன் தான் அறையை விட்டு வெளியே சென்றார்.



ஜமீன்தார் வெளியே சென்றதும் கநகவல்லி தன் நகைகளை ஒன்றொன்றாகக் கழட்டலாரம்பித்தாள். முக்தாஹாரம், மோஹனமாலை, ரத்னப் பதக்கம், பவன்மாலை, ரத்னகண்டி முதலிய எல்லாவற்றையும் ஒவ்வொன்றாய்க்கழற்றி மேஜையின்மீது வைத்தாள். பிறகு நிலைக்கண்ணாடியில் தன் உருவம் எவ்வாறு விளங்குகிறதென்று பார்க்கும்பொருட்டு, கண்ணாடிக்கெதிரில் நின்றாள். ஏனெனில், அழகான தன்மேனிக்கு நகைகள் அதிக அழகு தராவென்பது அவளுடைய உண்மையான கொள்கை. ஆனால் கண்ணாடி மங்கலாயிருந்தபடியால் அவளுடைய உருவம் அதில் சரியாய்த் தெரியவில்லை. உடனே அங்கு கிடந்த துணியினால் அக்கண்ணாடியை விளங்கத் துடைத்தாள். அப்படியும் அதுமங்கலாகவே யிருந்தது. உடனே ஒரு தீக்குச்சியைக் கிழித்து, கண்ணாடிக் கெதிரிலிருந்த இரு மெழுகுவர்த்திகளையும் கொளுத்தினாள். பிறகு சோபாவிற்குச் சமீபமாகச் சென்று திரும்பிப்பார்ப்பதற்குள் மெழுகுவர்த்திகள் திடீரென்று அணைந்து போய்விட்டன. அது அவ்வாறு அணைவதற்குக்காரணம்என்னவென்றுஆச்சரியமுற்று நிற்கையில் ஜமீன்தார் உள்ளே பிரவேசித்தார். ஜமீன்தார், “ காக்கு! ஏதாவது அதிசயம் நேர்ந்ததா என்ன? கூச்சலிட்டாயே!”

கநகவல்லி: “ நான்கூச்சலிட்டேனா! எனக்கு ஞாபகமில்லையே! ஒருக்கால் இட்டிருந்தாலும் இருக்கலாம்”

ஜமீன்தார்: “ என்ன விசேஷம் நடந்தது?”

கநகவல்லி : “ இந்த மெழுகுவர்த்திகளைக் கொளுத்தினேன். அவை திடீரென்று அணைந்துபோய் விட்டன.”

ஜமீன்தார்: “ ஜன்னல்கதவுகள் திறக்கப்பட்டிருக்கிறபடியால்ஒருக்கால்காற்றடித்து அவை அணைந்துபோயிருக்கலாம். எங்கே! தீப்பெட்டியைக் கொடு; மெழுகுவர்த்திகளை நான் கொளுத்துகிறேன் ”

கநகவல்லி: தீப்பெட்டியைக் கொடுக்கலும், ஜமீன்தார் ஒரு குச்சியைக் கிழித்து வர்த்திகளைக் கொளுத்தினார். வர்த்திகளும் வெகு பிரகாசமாய் எரிந்தன. “ அதோ பார்! வர்த்திகள் எவ்வளவு தாவள்யமாய்ப்பிரகாசிக்கின்றன!” என்று ஜமீன்தார் கூறலும் கநகவல்லியும் கண்ணாடிக்கருகிற் சென்று, அதில் தன் ஆள்காட்டி விரலை வைத்துக்கொண்டு, “சற்றுமுன்னால் கண்ணாடி ஈரமாயிருந்தது. துடைத்தேன். மறுபடியும் மங்கிப்போய்விட்டது” என்றாள். ஜமீன்தாரும் அருகிற்கிடந்த குட்டையை எடுத்து அதைத் துடைத்து விட்டுத் திரும்புமுன் மெழுகுவர்த்திகள் அணைந்து போய் விட்டன. உடனே கநகவல்லியின் முகம் வெளுத்தது. ஜமீன்தார், “ ஜன்னல் கதவுகள் திறக்கப்பட்டிருக்கின்றனவா ?”

கநகவல்லி : “இல்லை.—எனக்கு ரொம்ப பயமாயிருக்கிறது. மறுபடியும் கண்ணாடி மங்கலாய்ப் போய்விட்டது பாருங்கள். இங்குநிற்க எனக்கு பயமாயிருக்கிறது ” என்றாள்.

உடனே ஜமீன்தார் அங்கு ஸோபாவில் கிடந்த போர்வையை எடுத்து அவள் தோளின் மீது போட்டு, “ கண்ணே! மேலண்டையறைக்குப் படுக்கப்போ” என்று சொல்லிவிட்டு, அவளைக் கையைப் பிடித்தழைத்துக் கொண்டே போய்க் கதவிற்குச் சமீபத்தில் விட்டார். கநகவல்லியும் போக மனமில்லாதவளாய், “ ஏதாவது நேரும் பக்ஷத்தில் உடனே என்னைக் கூப்பிடுங்கள் ” என்றாள். ஜமீன்தாரும், “அவ்விதமே செய்கிறேன்” என்று பதிற் கூறிய பிறகே அவள் அறையை விட்டு வெளியே சென்றாள்.

கநகவல்லி வெளியே சென்ற பிறகு ஜமீன்தார் அறையின் கதவைச் சாத்திவிட்டு, அதன் மத்தியில் நின்றுகொண்டு, சுற்றிலுமிருக்கும் ஒவ்வொரு வஸ்துவையும் கவனமாய்ப் பார்த்தார். கணப்பு இன்னம் ஜ்வலித்துக்கொண்டு தானிருந்தது. உடனே விளக்கை நிறுத்திவிட்டுக்கண்ணாடிக் கெதிரிலுள்ள ஸோபாவில் உட்கார்ந்தார். அறையில் அந்தகாரம் சூழ்ந்து கொண்ட போதிலும், ஜன்னல் வழியாய்த் தோன்றும் வெளிச்சத்தினாலும், கணப்பின் நெருப்பினுடைய ஜ்வாலையிலிருந்து வரும் வெளிச்சத்தினாலும், கண்ணாடியில் பிம்பம் காணக்கூடியதாயிருந்தது. உடனே “டிக்” “டிக்” என்று கடியாரம் அடிக்கும் சப்தம் கேட்டது. சற்று நேரத்திற்கெல்லாம் ஆஸ்பத்திரிமருந்து நாற்றமும் அடித்தது.

இவ்வாறு சில நிமிஷங்கள் சென்றன. கடியாரம் அடிக்கும் சப்தமும் வரவர உரக்க

கேட்கவாரம்பித்தது. ஜமீன்தாரும் உடனே தன்னுடைய சட்டைப்பையைத்தடவினர். கைகடியாரம் அங்கில்லை. கநகவல்லிக்காகப் போர்வை எடுக்கப் போனபொழுது, அங்கு அதை வைத்துவிட்டது உடனே அவர் ஞாபகத்துக்கு வந்தது. ஆனால் "டிக்" சப்தமோ ஒரு கடியாரத்தினுடையதாயிருக்கிறது. அறையிலோ கடியாரம் இல்லை. உடனே மருந்தின் நாற்றமும் வரவர அதிகமாயிற்று. இதென்ன மாயமோவென்று எண்ணிக் கொண்டிருக்கையில் அவர் எதிரில் மரணப்படுக்கை போல் ஒன்று தோன்றியது. அதில் தனக்கு மிகவும் அன்பார்ந்த பந்து ஒருவர் மயக்கங்கொண்டு படுத்திருப்பதாயும் தென்பட்டது. இவ்விதம் காட்சிகளைக் கண்டு கொண்டே ஜமீன்தார் பித்துப் பிடித்தவர் போல் வீற்றிருந்தார். அவர் காதுகளில் கடியாரத்தின் "டிக்" சப்தம் விழுந்து கொண்டேயிருந்தது. அவருடைய நாசிகையும் மருந்தின் நாற்றத்தை முகர்ந்தது.

உடனே திடீரென்று வேறொரு காட்சி தென்பட்டது. கண்ணாடியின் பிரதேசம் நிர்மலமாய்ப் பிரகாசித்தது. அதில் இன்னதுதானென்று நிச்சயிக்கக் கூடாத பல உருவங்கள் குறுக்கும் நெடுக்குமாய்ப் போய்க் கொண்டிருந்தன. ஜமீன்தார் உற்றுப்பார்த்தார். உருவங்களைக் கண்டதும் அவருக்கு முறையே ஆச்சரியமும், துக்கமும், பயமும் உண்டாயிற்று. தன்னை யறியாமலே அவர் ஒரு பெருங்கூச்சலிட்டார்.

தக்ஷணம் அவருடைய படுக்கையறைக்கதவு திறக்கப்பட கநகவல்லி உட்பிரவேசித்தாள். படுக்கையடியிலுள்ள சார்மணையில் தன் கணவன் சுருட்டி மடக்கிக் கொண்டு வீற்றிருப்பதைக் கண்டாள். அவர் தன் கைகளால் முகத்தை மூடிக்கொண்டிருந்தார். அவர் பயத்தினாலும், வேதனையினாலும் தேம்பித் தேம்பி அழுவதைக் கண்டு, தான் அங்கு நிற்பதைக் கூட அவர் கவனிக்கவில்லை யென்று அறிந்தாள். உடனே நிலைக்கண்ணாடியை நோக்கினாள். அதில் களங்கம் ஒன்றும் தெரியவில்லை. வெளியே தொங்கவிடப்பட்டுள்ள விளக்கின் வெளிச்சம் மட்டும்தான் அக்கண்ணாடியில் பிரதிபலித்தது. கநகவல்லி ஜமீன்தாரின் தோளைத் தொட்டு, "நாதா!" என்று பரிவுடன் கூப்பிட்டாள்.

அவள்கரம் தன்மீது பட்டவுடன் ஜமீன்தார் திடுக்கிட்டார். அவள் குரலைக்கேட்டவுடன் அவர் எழுந்துநின்றார். அவர் சரீரம் நடுங்கிற்று.

கநகவல்லி.—"பிராணேசா! நீங்கள் என்னத்தைக் கண்டீர்கள்?"

ஜமீன்தார்.—"நான்—நான்—" என்று சொல்லி மென்று விழுங்கினர்.

கநகவல்லி.—"சொல்லுங்கள்! சீக்கிரம் சொல்லுங்கள்!! எனக்கு என்னவோ வேதனை பண்ணுகிறது"

ஜமீன்தாருக்குப் பாதிப்பிராணன் வந்தது. தழதழத்த வார்த்தையால் "நா-ன்-சொ-ல்-ல முடி-யா-து" என்றார்.

கநகவல்லி.—"சொல்லித்தான் ஆகவேண்டும்" என்று பதிலுரைத்தாள்.

ஜமீன்தார்.—"ஏதோ என்னுடைய புத்திப்பிரமையைத் தவிர வேறொன்றையும் நான் காணவில்லை. நாளைக்கு வைத்தியனிடத்தில் என் கையைக் காண்பிக்க வேண்டும் என்று உத்தேசிக்கிறேன்."

கநகவல்லி.—"நாதா! பொய் சொல்ல வேண்டாம்; நீங்கள் எதையோ கண்டு பயந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் கூறாவிட்டாலும் வெளுத்திருக்கிற உங்கள் முகம் கூறுகின்றதே!"

ஜமீன்தார்.—"கநகம்! என்னைத் தொந்திரவு செய்யாதே புண்ணியமுண்டு"

கநகவல்லி.—"பிராணேசா! இப்படி நீங்கள் என்னிடம் அவநம்பிக்கைப்பட்டால் நமது பிரியம் நாளுக்குநாள் வளர்வதென்பது எவ்விதம்? ஆதலால் தயவுசெய்து தாங்கள் கண்டதை எனக்குச் சொல்லுங்கள். உங்கள் கஷ்டத்தையோ, சுகத்தையோ அனுபவிக்க நான் பாதிக் கடமைப்பட்டவள் அல்லவா?"

ஜமீன்தார்.—"நான் கண்டது ஒன்றுமல்ல. ஏதோ பழைய ஞாபகம் இப்பொழுது என் மனக்கண்ணுக்குத் தோன்றிற்று"

கநகவல்லி.—"அப்பழைய ஞாபகம்யாதென அறியக் கூடாதோ"

ஜமீன்தார்.—"அது இப்பொழுது ஸரிப்படாது"

கநகவல்லி.—"பிராணகாந்தா! தாங்கள் கூறுவதைப் பார்த்தால் எனக்கு ஸந்தேகமாகவே இருக்கிறது. ஏதோ பழைய ஞாபகம் உங்களுடைய மனக்கண்ணுக்குத் தோன்றியதாக நீங்கள் சொல்லுகிறீர்கள். அதை நான் எவ்வளவும் நம்பவில்லை. அக்கண்ணாடியில் சோமாசிக்குருக்கள், தன்வந்திரி முதலோர் கண்டதை நீங்களும் கண்டிருக்கிறீர்கள். அது பயங்கரமான வஸ்துவாய்த் தோற்றியபடியால் நீங்கள் பயந்து கொண்டீர்கள்."

ஜமீன்தார்.—"நான் கண்டதை சோமாசிக் குருக்களும், தன்வந்திரியும் கண்டிருக்கமாட்டார்கள். நான் கண்டது வேறு; அவர்கள் கண்டது வேறு."

கநகவல்லி.—"நான் நேரில் பரீக்ஷித்துப் பார்த்தாலொழிய நீங்கள் சொல்வதில் எனக்கு நம்பிக்கை கொடுக்காது. இந்த ஸோபாவில் உங்களுக்கருகாமையில் உட்கார்ந்துகொண்டு, இருட்டில் தாங்கள் பார்ப்பதைப்போல் நானும் அக்கண்ணாடியைப் பார்க்கிறேன். அதில் தாங்கள் காணுவதைப்போல் ஏதேனும் நான் காணவிடில், நிச்சயம் உங்களுடைய புத்திப்பிரமை யென்றே எண்ணிக் கொள்ளுகிறேன்."

ஜமீன்தார்.—"இஷ்டம்போல் செய்."

கநகவல்லியும் ஸோபாவில் ஜமீன்தாருக்கருகில் உட்கார்ந்து கொண்டாள். ஜமீன்தாருக்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது. உடனே கநகவல்லி, "நாதா! விளக்கை நிறுத்தி விடுங்கள்" என்றாள்.

ஜமீன்தார்.—"கண்ணே! இப்பொழுது நான் உன்னுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள எண்ணுகிறேன். அது என்னவெனில், நான் காண்பதுபோல் நீயும் அக்கண்ணாடியில் ஏதேனும் காணும் பக்ஷத்தில் நாளைக்காலை நாமிருவரும் கண்டதை வீரவனத்தேவனிடம் சொல்லி அதற்குத் தகுந்தபரிகாரம் செய்யச்சொல்வோம். அன்றி, நீ ஒன்றையும் காணாதிருக்க நான் எதையேனும் காணும் பக்ஷத்தில் நான் என்ன கண்டேன் என்று நீ என்னைக் கேட்கக்கூடாது. தவிர, நான் ஏதோ கண்டதாக வெளியில் ஒருவரிடமும் சொல்லக் கூடாது. இதுதான் என்னுடைய நிபந்தனை" என்றார்.

கநகவல்லியும் "ஆகா! அவ்விதமே செய்கிறேன்" என்று பதிலளிக்கவும் ஜமீன்தார் தீபத்தை நிறுத்தினர்.



# திராவிடக் கதைகள்

## SOUTH INDIAN FOLKLORE

### 6. கழுதைக்காது

மணிமந்தபுரம் என்பது வடநாட்டில் ஒரு முக்கியபட்டணம். அவ்வூர் கொங்கண நாட்டின் தலைநகராக அப்பொழுதிருந்தது. அந்நாட்டை அப்போது ஸ்ரீமந்தன் என்னுமரசன் ஆண்டுவந்தான். அவன் பெரும் அப்பாவி. கொடுமை என்பதே அவனுக்குத் தெரியாது. அழகிற் சிறந்தவனாதலால் அவன் உருவைக் கண்டுமயங்கிப் பல்லைத் திறவாதவர் ஒருவருங் கிடையாது. அவனை ஆஜானுபாஹு என்று எல்லாருஞ் சொல்வார்கள்; அவன்வாக்கு வெகு நயம்என்று எல்லாரும் கொண்டாடுவார்கள்—விநயம் என்பதவனிடம் இல்லாமையால் ஸபைக்கு வருபவரில் அவனைக்கண்டஞ்சாதவர் இல்லை—நியாயம் அவனால் நடத்த முடியாதென்று தெரிந்தமையால், பிரஜைகளுக்கெல்லா மவனிடங் கொண்டாட்டம்; அவன் அறியாமையைக் கண்டு தாங்கள் அடித்தது கொண்டாட்டம் என்பதே அவர்களுடைய சந்தோஷத்திற்குக் காரணம். மேலுமவன் பெரும் தருமதாதா; அவன் தனது தேசமுழுவதையும், தனக்கப் பொழுதிருந்த பாகத்தைத் தவிர பாக்கியெல்லாம் தனது பகைவர்களுக்கே தானஞ் செய்துவிட்டான்; இருப்பதையும் அவர்க்குத் தானஞ்செய்யக் காத்திருந்தான்; அவன் பெரியவள்ளல்தான். அவன் பெருமைக்கு அளவேது? அவன் வீரத்திற்கு வரம்பேது? அவன் கத்திக்கிரையான பொருளுக்குக் கணக்கேது? வெண்ணெயைக்கூட அது நயமாக வெட்டிவிடும். ஆசாரத்திலுஞ் சிறந்தது; செத்தவன் கழுத்தைத் தொடவே தொடாது. கருணையிருந்தது; ஜீவஹிம்ஸையே அதற்குத் தெரியாது. இச்சிறந்த வாளை ஏந்தி நமதரசன் தர்மராஜாங்கம் நடத்திவந்தார்.

இவ்வற்புத குணங்களன்றி ஸ்ரீமந்தருக்கு வேறொரு மஹிமையும் இருந்தது. அதனால் ஸபையிலிருப்பவர் அவரைப்பற்றிப்பேசவும் பயப்படுவர். அவர்க்கு எங்கு கொசுகொசு என்று பேசினும் நன்றாகக் கேட்கும். இதனால் ராஜ

ஸபையில் நிச்சப்தம் கஷ்டமில்லாமலே குடியிருந்தது. இவ்வாறு அரசனுக்கு காது கேட்பதற்குக் காரணம் யாருக்குந்தெரியாது. ஆனால் அதை அறியவேண்டுமென்ற அவா மாத்திரம் எல்லார்க்கு மிருந்தது.

இவர்கள் இவ்வாறு மனோதர்மப்பட்டிருக்கும்போது ஒருநாள் அரசனுடைய நாவிதன் ஓர் அதிசயங்கண்டான். அவன் அவர்க்கு க்ஷௌரஞ்செய்துகொண்டிருக்கும்போது அவர் காதைக்கண்டான். அக்காதுகளை வேறெங்கோ கண்டதாக எண்ணி யோசித்துப் பார்த்தான். அந்நினைப்பில் புத்தி போனதும் கத்தியை மடித்துவிட்டு அரசனுக்குச்செய்த அரைக்ஷௌரத்தை நிறுத்திவிட்டு புத்திமயங்கி அப்படியே சும்மா நின்று யோசித்தான்; மேலும் மேலும்யோசித்தான்; தான் இன்னது எண்ணுவது என்றுந் தோன்றாது மயங்கிக்கிடந்தான். அத் திருப்பதி அம்பட்டன் ஸமாசாரத்தைக் கண்ட அரசன் அவனை அதட்டினான்; வெருட்டினான். இவைகளாலென்ன பிரயோஜனம்? பதிலென்பதோ கிடையாது. இது ஏதடா கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே என்று எண்ணினான். பின் எழுந்துநோக்கியதும் "என்னடா!" என்று அம்பட்டனை உக்ரமாக அதட்டினான். "ஹா!" என்று அவன் அலண்டு விழித்து மறுபடியுஞ் சிந்திக்கலானான். அவன் சிந்தனையை யாரால் தடுக்க முடியும்? அரசன் தான் தடுத்தானே? அது நின்றதா? அது ஏன் நிற்கும்? நிற்காமலே அது வேலை செய்துகொண்டிருந்தது. மெல்லவு முடியாது தின்னவு முடியாது அரசன் மறுபடியும் நாவிதனை அதட்டினான். அவன் கண்களை மலமல வென விழித்து "ஹா! கழுதையிடங் கண்டேன்! கழுதையிடங் கண்டேன்!!" என்றுஉரத்துக்கூவினான். "என்னடா! என்னடா!!" என்றரசன் அவனை அதட்டிக்கேட்டான். அவன் "ஒன்றுமில்லை" என்று நடுங்கிப் பதில் சொன்னான். அரசன் மேலும் உறுத்துக் கேட்டான். என்ன செய்வான் நாவிதன்? நடுங்கிப் பயந்து "ஐயோ! உங்—கள்—கா—து—தான்—" என்று வாய் குழறி அழவாரம்பித்தான். "என் காதுக்காக நீ யேனடா அழுகிறாய்?" என்று மஹா புத்திசாலியாகிய அரசன் கேட்டான். அம் முட்டாள் மடசாம்பிராணியும், 'மலையில் விளைந்தாலும் உரலில்தான் இடிபடவேண்டும்' என்று நிச்சயித்துக்கொண்டு "உங்கள் காதுபோல் கழுதையிடங் கண்டேன்" என்று சொல்லிவிட்டான்.

அரசனுக்கு வந்த கோபத்திற் களவேது? அந்நாவிதனைக் கால்பிடிக்காததோஷம். என்ன செய்வான்? அன்றைக்கு எழுதினவன் அழித்து எழுதுவானா என்ன? ஆகையால் மனந்தேறி அந்நாவிதனை அவன் கண்ட ஸமாசாரத்தை வெளியிடாதிருக்கும்படி திட்டஞ் செய்தான். அவன் வெளியிட்டால் தலையை வாங்கிவிடுவதாக மிறட்டினான். இதுவும் தலைவிதிதான் என்று நாவிதன் ஒப்புக்கொண்டு புனஃச க்ஷௌரம் ஆரம்பித்து முழுதும் செய்து ஒருவாறு முடித்தான். அரசனும் அம்பட்டனை வாய்மூடியிருக்க ஒரு பெரும் பொன் முடிச்சுக் கொடுத்தான். எடுக்க முடியாமல் அவன் எடுத்துக்கொண்டு தன் வீட்டிற்கொருவரையும் பாராது ஓடிப்போனான்.

வீட்டிற்குப்போகும்வழியிலெல்லாம் அவன் தனது முப்பத்திரண்டு பற்களையும் பரக்கக்காட்டிக் கனைத்துக்கொண்டே போனான். பார்த்தவர் எல்லாம் அவனுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென் றெண்ணினார்கள். சிறிது எலிமிச்சம்பழ ரசத்திற்கு அது இறங்கிவிடும் என்பதவர் எண்ணம். வீட்டையவன் அடைந்து தன் தாயைப் பார்த்ததும் மீண்டும் பகபகவென்று சிரிக்க ஆரம்பித்தான். தன்னைக் காரணமில்லாமல் பிள்ளை பார்த்துச் சிரிக்கக் காரணமென்னவென்று யோசித்தாள். பின் அவன் மனைவி அவனைப் பார்த்தாள். அப்போதும் அவன் சிரிப்பை அடக்க முடியாமல் வாயைக் கொட்டாமல் பல்லிளித்து ஸ்வரபேதஞ் செய்துகொண்டிருந்தான். அவள் எத்தனையோ கேள்விகள் கேட்டாள். எல்லாவற்றிற்கும் அந்தச் சிரிப்பன்றி வேறு பதிலே கிடையாது. கோபங்கொண்டு அவள் எள்ளுங் கொள்ளும் வெடித்தாள். அதற்கு மந்தச் சிரிப்பே அவனிடம் குடி கொண்டது. மேலும் அந்தச்சிரிப்பில் வரவர கதிபேதித்து விக்கிவிக்கி யவன் சிரித்தான். அவனுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென் றெண்ணி யவள் தலையிலறைந்து கொண்டப்புறம் போனாள். எல்லாரும் சற்று அகன்றுபோனதும் அவன் சிரிப்புச் சற்றடங்



கியது. பின் அவன் ஸ்நானம் செய்யப்போனான். அங்கும் தன்னையறியாமலவனுக்குக் கழுதையின் காதைப்பற்றிய ஞாபகம் வந்தது. என்னசெய்வான்? அந்தச்சிரிப்பு மந்திரத்தால் நீரை மந்திரித்துக் குளித்தான். அவன் தலை சற்றுக் குளிர்ந்ததும் அவன் சிரிப்புச்சற்றடங்கியது. நோயடைந்த அவன் விலாவும் மார்பும் சிறிது இளைப்பாறின.

ஸ்நானத்திற்குப் போனவன் நேரமாகியும் வாராமையைக் கண்ட தாய் தன் மகனைத் தேடி வந்தாள். தன் தாயைப் பார்த்ததும் அவனுக்கு மீண்டுஞ் சிரிப்புண்டாகியது. அடக்க முடியாமலவன் திண்டாடினான். அவனது உண்மைநிலையை அறிந்து அவன் தாய் மெதுவாய் அவனைக் கிளப்பிச் சாப்பிட அழைத்துப்போனாள். இலையில் உட்கார்ந்தவன் ஒரு பிடி சோற்றை வாயில் வைத்திருப்பான். அவனுக்கு முன்விஷயம் ஞாபகம் வந்துவிட்டது. சிரிப்பும் மூண்டுவிட்டது. விக்கி விக்கிச் சிரித்து அவன் வயிறு புண்ணாய்விட்டது. விலாநோகச் சிரித்தும் அவன் சிரிப்பொழிந்தபாடில்லை. சோற்றையுமுண்டபாடில்லை. ஆனால் பலமாகச் சிரித்ததால் மூக்கும் வாயுமாகச் சோற்றுப்பருக்கைகள் ஏற தும்மத் தலைப்பட்டான். ஓயாது தும்மியதால் அவன் அசைவற்று விழுந்தான். சற்றுத்தேறி எழுந்ததும் மற்றொரு பிடியுண்டு மீண்டுஞ் சிரிக்கத் தலைப்பட்டான். கடைசியில் அவன் சாப்பிடுவது பகீரதப் பிரயத்தனமாய்விட்டது.

இவ்வாறு தன்மகன் கஷ்டப்படுவதைக் கண்ட தாய் வருந்தி "என்னடா உனக்குடம்பு?" என்று ஏங்கிக்கேட்டாள். அவன் எப்படிச்சொல்வான்? அரசன் ஆணையல்லவா தடை செய்கிறது. தலைபோய்விடுமென்று பயந்து அவன் ஒன்றுஞ்சொல்லமுடியாது திகைத்தான். வயிறுவீங்கச் சிரிப்பதல்லாமல் அவன் வேறு என்ன பலன் கண்டான். தாய் மீண்டும் "ஏனப்பா அவ்வாறு சிரிக்கிறாய்" என்று கேட்டாள். முக்கி முறுகிக்கொண்டு அவன் "நான் எப்படிச் சொல்வேன்?" என்றழுதான். தாயுமழுதுகொண்டு "ஏன் அப்பா சொல்லக்கூடாது?" என்று கேட்டாள். அப்பொழுதும் அவன் "நான் எப்படிச் சொல்வேன்?" என்றே மறுபடியுங் கேட்டான். "அப்பா வாயாலேசொல்லு" [illegible] என்று அவன்பக்கத்திலிருந்த குழந்தைசொல்ல [illegible] அவனுடன் சிரித்தார்கள். "வாயா[illegible] சொல்வது?" என்று அம்பட்டன் குழந்தையைக் கேட்டான். "பின்னை எத்தாலே சொல்வது?" என்று அக்குழந்தை தகப்பனைக் கேட்க எல்லாரும் மறுபடியும் வயிறு வெடிக்கச்சிரித்தார்கள்.

நிற்க, அம்பட்டன் சிரிப்பு நிற்காமையைக் கண்ட அவன் தாய் "எதைக்கண்டு இவ்வாறு வயிறு வீங்கச்சிரிக்கிறாய்? உன்கண்கள் சிவந்துவிட்டன. முகம் தும்தும் என்று ஊதி யிருக்கிறது. ஏனடா சொல்லமாட்டேன் என்று ஹிம்ஸை செய்கிறாய்?" என்று ஹீனஸ்வரத்தோடு கேட்டாள்.

"நான் எவ்வாறு சொல்ல முடியும்? அரசனாணையைக் கடக்க முடியுமா? நான் என்ன செய்வேன்?"

"என்ன செய்வேன் என்கிறாயே? பெற்ற தாயோடு சொல்லாத ரஹஸியங்கூட உண்டா?"

"அரசனாணையை எப்படிக்கடக்கமுடியும்?" என்று சொல்லிக்கொண்டு அவன் மறுபடியுஞ் சிரிக்க ஆரம்பித்தான்.

"ஐயோ மகனே! என்னடா இது விபரீதம். என்னோடு சொல்லாவிட்டாலும் ஏதாவது மரத்தோடாவது சொல்லக்கூடாதா? அது யாருடன் சொல்லப்போகிறது?" என்றாள் தாய்.

அதுதான் ஸரியென்று "பட்ட கஷ்டம் சொல்லத் தீரும்" என்று நிச்சயித்து மனதுக்குள் அடக்கமுடியாது திண்டாடும்விஷயத்தை மரங்களிடம் வெளியிடப்போனான். தாயாரும் "உனக்கு நன்மையுண்டாகட்டும்" என்றாசீர்வதித்தனுப்பினாள்.

காததூரங்கடந்துவந்து அவன் ஒருகாட்டை அடைந்தான். அங்கு மரங்களைப்பார்த்துக் கூத்தாடிக்கொண்டு,

மாமே மாமே சொல்லாதே—நான்
சொல்வதை எங்குஞ் சொல்லாதே.
புங்க மாமே சொல்லாதே—என்
புதுமையை எங்குஞ் சொல்லாதே.
பாதிரி மாமே சொல்லாதே—நான்
பார்த்ததை எங்குஞ் சொல்லாதே.
இலுப்பை மாமே சொல்லாதே—என்
அலுப்பை எங்குஞ் சொல்லாதே.

162048
JL
3m211, NO8 V13
NO8.6

காட்டு மரங்கள் நான் சொல்லக்கேளும்—நம்ம
நாட்டை யடங்கவே நன்காளும்
மாட்சி மிகுந்த ஸ்ரீமந்த துரைக்கெங்கும்
காட்டுங் கழுதைச் செவியாமே!
மரமே மரமே சொல்லாதே—நான்
சொல்வதை எங்குஞ் சொல்லாதே
சொன்னே னென்று சொல்லாதே—என்
சிரிப்படங்கவே சொன்னேனான்.
மன்ன னாணையைக் காத்தேனான்—என்
அன்னை யாணையுங் காத்தேனான்
கொல்லுஞ் சிரிப்பைக் கொன்றேனான்—இனி
அல்லும் பகலுஞ் சிரியேனான்.

இவ்வாறவன் பாடிப்பாடி அவன் தன் வயிறு வெடிக்க அடக்கி வைத்திருந்த ஸமாசாரத்தை வெளிக்கொட்டிவிட்டு வீட்டுக்குத் திரும்பினான்.

நிற்க, அவ்வூரிலிருந்த டமருகநாதன் என்னும் ஸங்கீத தாள ஞான ஸம்பன்னன் ஓர் மிருதங்கஞ் செய்யத் தகுந்தமரம் வேண்டுமென்று அதே காட்டில் நமது நாவித கேசஹாரிப்பாட்டைக் கேட்டிருந்த மரங்களில்லொன்றை வெட்டிவந்து நல்ல மிருதங்கம் புதிதாகச்செய்து தனது வித்வத் ஸாமர்த்தியத்தைக் காட்ட ராஜஸபையை அடைந்தான். அங்கு சுருதி கூட்டி பாடகன் ராகஆலாபனஞ் செய்து, கனமாகப் பின் பல்லவி பிடித்து, மிருதங்கம் கொட்டும்படி அவனுக்கு ஸமயங்கொடுத்தான். டமருகநாதனும் வெகு நயமாக கமகம் பேசும் படியாக வாசித்தபொழுது, அம்மிருதங்கம் கதிபேதிக்காது

*தளாங்கு தாக்ருதக் தகதகத் தாக்ருதகத்*
*'தளாங்கு தாங்ங் தளாங்க்ரு தாங்ங்*
*தக்ருதக தக்ருதக தளாங்க்ரு தாங்ங்*
*ராஜாங்கக் காதது கழுதையின் காதறி—(தளா)*

என்று தாளவின்யாஸப்படுத்தி விநோதநாதஞ் செய்தது.

இதைக்கேட்டதும் எல்லாரும் ஆச்சரியமடைந்து அரசனைப் பார்த்தார்கள். அரசனுக்குக் காது நன்றாகக் கேட்கக் காரணம் அப்பொழுதுதான் அவர்க்கு விளங்கியது. மற்ற கதையை வழியாய் முடித்துக்கொள்ளும். நமக்குப் பாடஞ் சொல்லிக்கொடுத்ததுபோல்தான் எமக்குச்சொல்லத் தெரியும். கிளிபோல் சொன்னால் நீங்கள் பசுப்போல் படித்தது போராது; ஆனால் சிலந்தியைப்போல நூற்றுக் கதையை முடித்து அறிந்துகொள்ளும்.

# ஸோமா என்ற ரஜகஸ்திரீயின் கதை

## SOMA—THE WASHER-WOMAN.

தக்ஷிண தேசத்தில் அத்பத் என்னும் ஒரு ஊரில் அந்தணரொருவர் தமது ஏழு நாட்டுப்பெண்களோடும் ஏழு புத்திரர்களும், ஒரு அருமைப் புதல்வியும் தன் நாயகியுமமைந்த பெருங்குடும்பத்தின் போஷகராய் ஏழைக்குடித்தனம் நடத்திவந்தார்.

நாயகியின் பெயர் தனவந்தி; புதல்வியின் பெயர் குணவந்தி; செல்வப்புதல்வி ஏழு ஆண்குழந்தைகளினிடையே தனிப்பேறானது பற்றித் தன் பெற்றோர்களின் வாஞ்சையை தனிச்சுதந்தரம் அடைந்தவளாக சோம்பற் சாவடியில் சோம்பேறிகள் உழலுவதுபோல் படுக்கையை விட்டு அதிகாலையில் எழுந்திராமலும் பெண்களுக்கான நித்திய விதிகளைச் சரிவரக் கவனிக்காமலும் வந்தாள்.

இஃது இவ்வாறிருக்கையில் குணவந்தி சகல சௌந்திரியத்துடனும் வளர்ந்து மணப்பருவமடைந்தாள். ஒருநாள் அந்தணர் வீட்டின் எதிரில் கதிரவன் போலும் கலைகளமைந்த ஒரு பிரஹ்மயோகி எழுந்தருள, நாட்டுப் பெண்கள் எழுவரும் தனித்தனியே யோகீசுவரரை வணங்கி முஷ்டியளிக்க, யோகியும் அவரவரைத் தனித்தனியே ஆசீர்வதித்து அந்தணர் வீடுவிட்டுச் செல்லத் தொடங்குகையில், தனவந்தி உள்ளே விரைவிற் சென்று தன் பெண்படுக்கையில் தலையணைகளின் மீது துருப்பிடித்த கதவுகள் கீல்களைச் சுற்றிக் கர்ண கடோரமான தொனியுடன் சுழலுவன போல், தன் தலையை உழற்றிக் கொண்டு அரைத்தூக்கம் தூங்குவதைப் பார்த்து "குணவந்தி குணவந்தி! சேதி கேட்டாயா? யோகியாம் ஒருவர்! உன்மதனிகளிடம் பிக்ஷை வாங்கிக்கொண்டு அவர்களுக்கு வரமளிக்கிறாரே! நீ இவ்வாறு தூங்கிக்கொண்டிருக்கலாமா? சடிதில் சென்று யோகிக்கு பிக்ஷையளித்து வணங்கி நமஸ்கரி" என்று வெகு ஆவலுடன் சொல்ல குணவந்தியும் சோம்பலையுதறி முகங்கழுவி, தன் நித்தியவிதிகளை விரைவில் முடித்துக்கொண்டு, யோகிக்கு முஷ்டியளித்து வணங்க எதிர் நின்றாள்.



நிற்கவும்யோகீசுவரர் குணவந்தியைநோக்கி "பெண்ணே! நமது ஆசாரங்களை சாஸ்திர முறைப்படி அணுவேனும் தவறின்றி அநுஸரி" எனப் பேரிடியொன்று கோடை காலத்தில் இடித்தது போல குணவந்தியின் எதிர் நிலையில் வாக்களித்தார். குணவந்தி அழுத கண்களும் சிந்திய மூக்குமாக வீட்டினுள்ளே சென்று தன் அன்னையினிடம் முறையிட, தனவந்தி, யோகியைக் கெஞ்சி அவ்வாறு யாவர்க்கும் பொருள் விளங்காமல் சுருங்கச் சொன்ன ஆசியின் காரணம் யாதென்று வினவ அவர் "அம்மா! உன்பெண் நான் சொல்லியவாறு செய்யாவிடில் மணக்கோலம் நீங்கு முன்னரே விதவையாவள்" என்று கோட் பொருந்திய மாத்ஸல்யத்துடன் தனவந்தியிடம் சொல்ல, வீட்டில் உண்டான மனக்குழப்பத்தையும் கண்ணீரருவிகளின் பிரவாஹத்தையும் சகிக்காதவரானார். ஆகவே மனமசைவுமற்று "ஆனால் எவ்வருத்தத்துக்கும் ஒரு வைரி உண்டு! அது போல், ஏழு கடலுக்குமப்பால் ஸோமா, ஸோமா என்றோர் வண்ணாத்தி தன் குழந்தை குஞ்சுகளுடன் காலக்ஷேபம் செய்து வருகிறாள். அவளை உன் பெண் குணவந்தியின் விவாகத்துக்கு விருந்தாக அழைத்துவா. அவள் நின் பெண்ணை வைதவ்யத் துயரத்தினின்றும் நீக்கும் வல்லமையுடையவள்" என்று சொல்லி யோகி மறைந்து விட்டார். அந்தணர் தம் புத்திரர்களைநோக்கி வண்ணாத்தி ஸோமாவை விவாஹ காலத்துக்குக் கொண்டு வரச் சொல்லிக் கட்டளையிட, புத்திரர்கள் "இது ஏதடா? ஸோமாவாவது! வண்ணாத்தியாவது! ஏழு ஸமுத்திரமாவது! நன்றாய்க் கிழவனும் கிழவியும் பெண் பைத்தியமும் மாப்பிள்ளைப் பைத்தியமும் பிடித்து அலைகிறார்கள்! நம்மையும் ஒழித்துவிட எண்ணமா?" என்று, என்னால் முடியாது உன்னால் முடியாது என்று மறுதளித்தார். அந்தணர் வெகுண்டு பிடிவாதம் பிடித்ததின்பேரில் எழுவர்க்கும் இளையவனும் புதல்வன் தன் தங்கையையும் அழைத்துக்கொண்டு பெற்றோர் விருப்பத்திற் கேற்ப (தன் பிதாவின் சாபத்தையும் அஞ்சி) கடலோரஞ் சென்றான்.

செல்லவே, கடற்கரையில் காற்றும் புயலும் சண்டமாருதமாக அடிக்க, தங்கள் உணவொழிந்து, களைப்புற்று மூர்ச்சையடைந்து பூமியில் கிடக்க இதைக் கண்ணுற்ற, கழுகுக்குஞ்சுகள் அருகிலுள்ள தம்கூட்டினின்றும் இச்சிறு சகோதரர்களுக்கு உணவளித்தும் தாம்தம்மாலியன்ற மட்டும் உதவிபுரிவதாகக் களைப்பு நீங்கிய குணவந்தியின் சகோதரனிடம் சொல்லியும் துயரமாற்றின.

தாய்க்கழுகும் சூரியாஸ்தமன காலத்தில் தன் கூட்டிற்குத் திரும்பி, தன் குஞ்சுகளிடமிருந்தும், குணவந்தியின் சகோதரனிடமிருந்தும் நடந்த வரலாற்றின் பூர்வோத்தரம் அனைத்தையும் அறிந்துகொண்டு, உடனே தன் வலிமை பொருந்திய இறகுகளில் பேருக்கொரு பக்கமாகச் சோதரிருவரையும் தூக்கிக்கொண்டு ஏழு கடலையும் தாண்டி ஸோமாவின் வீட்டின் எதிரே இறக்கிவிட்டு மீண்டும் தன் குஞ்சுகளிடம் சென்றது.

குணவந்திக்கு வீடும் வாசலும் படுக்கைச் சௌகரியங்களும் இல்லாததினாலேயோ, அல்லது யாதுகாரணம் பற்றியோ தினந்தோறும் அதிகாலையில் நித்திரை நீங்கித்தன் சகோதரனுடன் நித்திய விதிகளை முடித்துக்கொண்டு ஸோமாவின் வீட்டில் ஒருவரும் எழுந்திருக்கு முன்னரே, அவள் வீட்டு வாயிற் புறத்தில் தண்ணீர் தெளித்து துடைப்பங்கொண்டு சுத்தம் செய்து மாக்கோலமிட்டுத் தினந்தோறும் சென்றாள். அது ஏனென்றால், ஸோமாவின் வீட்டுப் பெண்கள் பிரதிதினமும் சுக்கிரோதய காலத்திலேயே தங்கள் நித்தியவிதிகளை முடித்துக் கொண்டு யாவர் கண்ணிலும் அகப்படாமல் தங்கள் தங்கள் கணவரை வணங்கி மாமன் மாமியிடத்தில் ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டபிறகு தான் தெருவில் ஏனையர் எதிரில் புலப்படுவார்கள்.

தன் வீட்டு வாயிற்புறம் இங்ஙனம் தான் எழுந்திருக்கும் முன்னரே, தினந்தோறும் தவறின்றி சுத்திசெய்து வைத்திருக்கக்கண்ணுற்ற ஸோமா வியப்புற்றுதன்வீட்டுப் பெண்களைக்கேட்க அவர்கள் 'எனக்குத்தெரியாது; உனக்குத் தெரியாது' என்றார்கள். இந்த விஷயத்தின் உண்மையை யறிய விருப்பமுற்ற ஸோமா

ஒருநாள் இரவு முழுதும் தன் வீட்டு வாயிலில் காவலிருந்து சகோதரர்களிருவரும் தன் வாயிலில் சுத்தம் செய்யும் காரியத்தையும் அதன் காரணத்தையும் பிராமணப் பையனிடமிருந்து அறிந்து, வரலாற்றை உற்று யோஜித்து மனமிரங்கி இருவர் விருப்பத்துக்கேற்ப அவர்களைத் தன்னிருபுறத்திலுமணைத்துக்கொண்டு ஏழுகடலையும் கடந்து அந்தணர்வீடுவந்து சேர்ந்தாள். ஆனால் தன் வீட்டைவிட்டுச் செல்லு முன்னர் தன் பெண்களையும் நாட்டுப்பெண்களையும் கூப்பிட்டு ஆசீர்வதித்து, "பெண்களே! நான் திரும்பிவருமுன்னர் நம்வீட்டுப்புருஷர்கள் எவரேனு மிறந்து போனால், அவர்களுடைய பிரேதத்தை அவ்வாறே வைத்திருங்கள். கொண்டு போய் தகன பூமியில் கொளுத்தாதேயுங்கள்" என்று சொன்னாள்.

அத்பத் நகரத்தைமூவருமடைந்ததும், விவாகத்துக்கு வேண்டிய ஏற்பாடு செய்து மாளவ தேசத்துத் தலைமைப் பட்டணமாகிய உஜீன் நகரத்திலிருந்து ஒரு மாப்பிள்ளையையும் குணவந்திக்கு நிச்சயம்செய்தார்கள். அந்தணர் வீட்டில் பகவத் அனுக்கிரகத்தையும் பெரியோர் அனுக்கிரகத்தையும் முன்னிட்டு, ஓர் முகூர்த்தம் நிச்சயித்துக் குணவந்திக்கும் மாளவ தேசத்து அந்தணவாலிபனுக்கும் சர்வமங்களத்துடனும் சாஸ்திர முறைப்படியும் பாணிக்கிரஹணம் நடத்தி மங்களாக்ஷதை கொடுத்ததும் மாப்பிள்ளை திடீரென்று பூமியில்விழுந்து இறந்தான். ஸோமா இதைக்கண்ணுற்று, விஷயத்தின்காரணமறிந்தவளாய் அருகிலிருந்த ஒருபாத்திரத்திலிருந்த தீர்த்தத்தில் கொஞ்சம் எடுத்துத் தன்மீதே தெளித்துக் கொண்டாள்.

உடனே குணவந்தியின் நாயகன் எழுந்து நின்று, மூர்ச்சை தெளிந்தான்.

ஸோமா விவாஹமுகூர்த்தமாகி அந்தணர் மனங்களிப்புற விடைபெற்றுச் சென்றாள். கடலோரம் சென்றவுடன், தன்சக்தியனைத்தையும் குணவந்திக்குக் கைம்மாறு செய்ததினாலே, ஸோமா அக்கரை சேர வல்லமையற்றுத் திகைத்துச் சற்று நின்று, பிறகு ஸ்நானம் செய்து கடவுள் வணக்கம் ஆனதும் தன் கையில் 108 கற்சுள்ளிகளை எடுத்துக்கொண்டு அருகிலிருந்த அரசமரம் ஒன்றை 108 தடவை பிரதக்ஷணம் செய்து மரத்தினடியிலுள்ள நாகரையும் மற்றும் பிராமணர்களையும் வணங்கி நமஸ்கரிக்க (தடவைக் கொருகல்லாக கணக்கின் ஒழுங்கு) தன் சக்தியை மீண்டும் பெற்று ஏழு கடலையும் கடந்து வீடு சென்றாள்.

இவள் சொல்லியவாறே தன் வீட்டுப் புருஷர்கள் அனைவரும் அதே முகூர்த்தத்தில் தன் சக்தியழிந்த க்ஷணமே இறந்து போக, வீட்டுப் பெண்கள் அனைவரும் காரணம் அறிவாரன்றிப் புரண்டழுது தன்மாமி ஸோமாசொல்லியவாறு மட்டும் பிரேதங்களைத் தஹனம் செய்யாமல் வைத்திருந்தார்கள். ஸோமாவுக்கு சக்தி மீண்டக்ஷணமே புருஷர்கள் அனைவரும் மூர்ச்சை தெளியவியப்புற்ற ஸோமாவின் வீட்டுநாட்டுப் பெண்கள் மாமியினிடம் நடந்த வரலாற்றைச் சொன்னார்கள். ஸோமாவும் புருஷர்கள் மறுபடி உயிர்த்ததின் காரணத்தை எடுத்துச் சொல்லும் போது, பெண்கள் தினந்தோறும் அதிகாலையில் எழுந்து செய்யவேண்டிய நித்திய விதிகள் இன்னின்னவென்றும் ஸோமவாரம் தோறும் அந்தணர்க்கு பிக்ஷையளித்து, அன்றே விடியற் காலையில் சரீரசுத்தம், கடவுள் வணக்கம், முதலியவற்றை முடித்துக் கொண்டு விவாஹமான அரசமரத்தினடியிலுள்ள நாகரையும் விருட்சத்தையும் பயபக்தியுடன் 108 பிரதக்ஷணங்கள் செய்யும் போது தங்கள் சக்திக்கியன்றமட்டும் ஏதோ ஒரு நிவேதனம் பண்டத்தில் 108 ஐக் கையிற் கொண்டு ஒவ்வொரு சுற்றுவரும்போது ஒவ்வொன்று நாகருக்கு நிவேதனம்செய்து பிராமணர்களுக்கு சக்தியுடன் வினியோகம் செய்யும் பலன் இன்னதென்றும் தெளிவாகத் தன் வீட்டுப் பெண்களுக்கு எடுத்துச் சொன்னாள்.

அதன்வழியே, நமக்கு ஏற்படும் பலனை சேதுக்கரையிலும் மற்றுமுள்ள இடங்களிலும் நாகப்பிரதிஷ்டை செய்து தங்கள் பாப நிவாரணம் செய்துகொள்ளும் கோடிக் கணக்கான இந்துக்களினிடமிருந்தும் அறிந்துகொள்ளுகிறோம்.

V. நாராயணசாமி ஐயர்



# ஹிந்து நாகரிகத்தின் மேனோக்கம்

## A GLIMPSE INTO THE HINDU CIVILISATION

இக்காலத்தில் ஆங்கில பாஷையில் பயிற்சியடைந்த அநேகர்களுக்கு ஹிந்து நாகரிகத்தைப்பற்றி சரியான அபிப்பிராயம் கிடையாது. ஏனெனில் நமது தேசத்தின் பூர்வ சரித்திரத்தை நன்றாகச் சிந்தனை செய்யாததினாலோ அல்லது இதரதேசத்து நாகரிகத்தைப் புகழும் சார்பினாலோ நமது தேசத்தில் அநேகர் நம் நாகரிகத்தைத் தூஷிக்கிறார்கள். ஆனால் சற்று கவனித்து யோசிக்குமிடத்து அப்படிப் பட்ட எண்ணம் நம்மை அணுகுவதற்குக்கூட யோசனை செய்யும்.

2. இப்படி அநேகர்களுக்கு நமது பூர்வ நிலைமை தெரியாம லிருப்பதற்குக் காரணம் யாது? நமது முன்னோர்கள் அவர்களுடைய சரித்திரத்தை பின்வரப்போகிறவர்களுடைய நன்மைக்காகவும் ஞாபகத்திற்காகவும் ஒரு புஸ்தகத்திலாவது குறித்து வைக்கவில்லை. ஆகையால் முற்காலத்தைப்பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் புராணங்களிலிருந்தும், கட்டுக் கதைகளிலிருந்தும், இதர தேசத்துப் பிரயாணிகள் இத்தேசத்தைப் பார்வையிட்டுப் போகுங்கால் எழுதி வைத்த புஸ்தகங்களிலிருந்தும், ஸ்தம்பங்களிலுள்ள சித்திரவேலைகளி லிருந்தும், புராதன கட்டடங்களிலிருந்தும், நாணயங்களி லிருந்தும், நாம் அக்காலத்துப் பிரஜைகளின் நடையுடை பாவனைகளையும் அக்காலத்து ராஜரீகம் ராஜ்யதந்திர முதலியவைகளையும் தெரிந்து கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

3. இந்துதேசத்தைக்காட்டிலும் இன்னும் பழமையான நாகரிகமுள்ள தேசங்களிருக்கின்றன. ஈஜிப்டு (Egypt) தேசத்தவர்கள் கி.மு. அனேக ஆயிர வருஷங்களுக்கு முற்செல்லும் கிரந்தத்தை வைத்திருக்கிறார்கள். அஸ்ஸிரியா (Assyria) தேசத்துப் பண்டிதர்களோ இன்னும் புராதனமான நாகரிகத்துக்குப் பாத்யதை கொண்டாடுகிறார்கள். இதேமாதிரியே சீன தேசத்தவர்களும் கி.மு. 2400 வருஷங்களுக்கு முந்தின கிரந்தங்களை வைத்திருக்கிறார்கள். நம்மிந்து தேசத்திய சரித்திரக்காரர்கள் கி.மு. 2000 வருஷங்களிலிருந்து தான் கிரந்தங்களைத் தொடர்கிறார்கள்.

புராதன கிரந்தங்களைப் பரிசோதிக்கின், ஆதிகாலத்து இந்துக்களின் கிராஹ்யசக்தி அபாரமாகத் தோன்றுகின்றது. அவர்களுடைய தெய்வபக்தியோ நாவினால் சொல்ல முடியாது. இப்படிப்பட்ட இந்துக்களின் வினோத சரித்திரத்தை ஐந்து பாகங்களாகப் பிரிக்கலாம்.

இந்து சரித்திரமே ஆரியர்கள் பஞ்சாப் தேசத்தில் வந்ததுமுதல்தான் ஆரம்பிக்கிறது. ஆரியர்கள் முதலில் ஸிந்து நதிக்கரையில் வந்து குடியேறி ஆதிமுதலுள்ள காட்டுஜனங்களை வென்று அவர்களைத் தங்களுக்கு தாஸ்யர்களாகச் செய்துவிட்டார்கள். ஸட்லெஜ் நதிக்கப்பாலுள்ள தேசங்களைப்பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. நன்றாக நிலங்களைப் பயிரிட்டு ஆடுமாடுகளைக் காப்பாற்றியும், காட்டுஜனங்களைத் துரத்தியடித்தும், மிகச் சுகமாகத் தங்களுடைய காலங்களைச் செலவழித்துக்கொண்டிருந்தார்கள். காட்டு ஜனங்களின் மேல் வெற்றியடைந்ததைப்பற்றி அனேக பாசுரங்களினால் அவர்களுடைய சந்தோஷத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அக்காலத்தில் ஆரியர்களெல்லாரும் ஒன்றுகூடியிருந்தார்கள். அவர்களுக்குள் ஜாதிபேதம் கிடையாது. ஆனால் ஆரியர்களுக்கும், தாஸ்யர்களுக்கும் மட்டும் பேதமிருந்தது. அக்காலத்தில் தொழில் வித்யாசம் மிகுதியாக இல்லை. மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், யாத்திரை ஸ்தலங்களுமில்லை. அவர்களுடைய குடும்ப வாழ்க்கை யாதொரு சிக்கும் இல்லாதது. குடும்பத்தின் தலைவன் தகப்பன்தான்.

அக்குடும்பத்துக்கு அவன் சிறிய ராஜா. அவனுடைய அதிகாரமோ அளவற்றிருந்தது. இப்படி அநேக குடும்பத் தலைவர்களுக்குள் சிறந்த தலைவனொருவனிருந்தான். இப்படி அநேக சிறந்த தலைவர்களுக்கு முக்கியமானவன் ராஜா. அக்காலத்தில் ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமான சொத்துக் கிடையாது. நிலங்கள்

எல்லாருக்கும் பொதுவில் அநுபவிக்கப்பட்டிருந்தன. பழைய கிரந்தங்களை வாசிக்குங்கால், புராதன இந்து ஸ்திரீகள், மிக்க கௌரவத்தை அடைந்திருந்தார்கள் என்பதற்கு ஐயமில்லை. அக்காலத்துப் பெண்குழந்தைகளுக்கும் தங்கள் தகப்பனாருடைய சொத்தில், எப்படித் தங்கள் சகோதரர்களுக்கு அந்த சொத்தில் பாத்தியம் இருந்ததோ அதேமாதிரியாக, பாத்தியம் இருந்ததென்று தெரியவருகிறது. விசேஷமாக ஒவ்வொருவரும் ஒரு பெண்டிரைத் தான் மணம் கொண்டார்கள். ஆனால் சில பணக்காரர்கள் பல பெண்டிரைக் கொண்டார்கள்,

அக்காலத்தில் க்ஷத்திரியஜாதி என்றாவது புரோகிதஜாதி என்றாவது தனியாகக் கிடையாது. ப்ரும்ம க்ஷத்திரிய வைசிய சூத்ர வருணாசிரமதர்மம் அப்பொழுது கிடையாது. கி.மு. 2000௵முதல் கி.மு. 1400௵வரையில் உள்ள இக்காலத்தை வேதகாலம் அல்லது வைதீககாலமென்று சொல்லலாம். ஆரியர்கள் முதலில் எங்கிருந்து வந்தார்கள் என்பது மிகவும் விவாதாஸ்பதமாக இருக்கிறது. அநேகர் அவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்தார்கள் என்று சொல்லுகிறார்கள். இன்னும் சில பண்டிதர்கள், அவர்கள் ஐரோப்பாவின் வடகிழக்கிலிருக்கும் ஸைபேரியாபக்கத்திலிருந்து வந்தார்கள் என்று சொல்லுகிறார்கள். பின் சொன்னதுதான், சரித்திரம் எழுதுகிறவர்களுக்கு அநுகூலமான ஊகை. ஆதியில் அவர்கள் ஒரே இடத்தில் நிலைக்காமல் ஊரூராய்த் திரிந்து, தங்களுடைய ஆடுமாடுகளையும் மேய்த்து வந்தார்கள். அவர்கள் கொஞ்சகாலம் சென்றபின் சிறுசிறு இனங்களாகக்கூடினர். அப்படிக் கூடினதற்குக் காரணம், நமக்கு இப்பொழுது நன்றாக விளங்கவில்லை. ஒவ்வொரு இனமும் தனித்தனியே பலதேசங்களுக்குச் சென்று அங்கே புராதன ஜனங்களை ஜெயித்துக் குடியேறிப் புதிதான நாகரிகத்தை அநுஸரித்து வெவ்வேறு பாஷைகளைப் பேசினபடியினாலே, இக்காலத்தில் அவர்களெல்லாம் ஒரே ஜாதியார் என்று சொல்வதானது மிகக் கடினமாயிருக்கிறது.

ஆரியர்களுடைய சரித்திரம் நமக்கு நன்றாக விளங்காததற்குக் காரணம் யாதெனில், எவரும் அவர்களுடைய சரித்திரத்தை முன்சொன்னமாதிரி தனியாக எழுதிவைக்கவில்லை என்பதே. ஆனால் அவர்கள் எழுதிவைத்திருக்கும் ரிக்வேதத்தால் நமக்கு அநேக சங்கதிகள் தெரியவருகின்றன. அவர்களுக்கு ஆடுமாடுகளும் எருதுகளும் மிக்க உபயோகமுள்ளதாக இருந்தன. இப்பொழுது நாம் கண்டமாத்திரத்தில் மிகப் பயப்படுகிற குரூரமான சர்ப்பங்களும் அக்காலத்தில் இருந்ததாகத் தெரியவருகிறது.

இந்த ரிக்வேதத்தை மிகவும் பழமையாகவும் பெரிதாகவும்சொல்லுகிறார்கள். இப்புஸ்தகத்திலிருந்து இன்னும் அநேக சங்கதிகள் புலப்படுகின்றன. ஆரியர்களுக்கு அநேக கைத்தொழில்கள் தெரிந்திருந்தன. ஆனால் அவைகளெல்லாம் ஆரம்ப திசையில் இருந்தன. இந்த ஆரியர்கள் கிராமமென்ன, நகரமென்ன, சிறந்த மாளிகையென்ன, இவைகளையெல்லாம் நன்றாகக்கட்டியிருந்தார்கள். திருடர் பயமில்லாமலிருக்க, நல்ல ரஸ்தாக்களையும், வேறுதேசத்திலிருந்து ஒரு அரசன் படையெடுத்துவந்தால், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் நிமித்தம் கப்பற் சைன்யத்தையும் வைத்திருந்தார்கள்.

மிக்க அழகு வாய்ந்தவும் அதிதேகபலமுடையவும் மிக்க தைர்ய சாலியும் ஸத்தியத்தையே கங்கணமாகவுடையவர்களுமான ஆரியர்கள், நிலம்பயிரிடுவதில் மிக்க சந்தோஷமுடையவர்களாகஇருந்தார்கள். அவர்களுக்கும் நாகரிகமற்றஜாதியார்களுக்கும்யுத்தம் நடந்துகொண்டிருந்தது. அவர்களுடைய ஆயுதங்களெல்லாம், இரும்பாலும், மரத்தாலும் இன்னும் பல உலோகங்களாலும் செய்யப்பட்டிருந்தன. வில், அம்பு, வாள், கேடயம், ஈட்டி இவைகளெல்லாம் அவர்களுடைய முக்கிய யுத்த ஆயுதம். அவர்களுக்கு தங்கம் வெள்ளி முதலிய உலோகங்களும் அவைகளின் பிரயோஜனமும் நன்றாகத் தெரியும். அவர்களுடைய மதம், பிரகிருதிதான். ஆகாசத்தைக் கண்டு அவர்கள் ஆச்சரியமடைந்ததல்லாமலும் பயபக்தியுடன் பூஜித்தும்வந்தார்கள். அதேமாதிரியாகவே இந்திரன், சந்திரன், வருணன், அக்னி வாயு, பூமி, ஸவிதா, மேகம், சமுத்திரம், முதலிய, தேவதைகளுக்கும் பூஜை செய்தார்கள். அந்த ரிக்வேதத்திலுள்ள பலஸ்தோத்ரங்களைப்படித்துப்பார்த்தால் உலகிலுள்ள, எல்லாப்பொருள்களும் அவர்களுடைய பிரதிரூபம் (பிம்பம்)



என்று ஆரியர்கள் கொண்டிருந்ததாக நமக்குத் தெரியவருகிறது. அக்காலத்தில் அவர்களுடைய மதம் மிகச் சுலபமானது; மிகுதியான சடங்குகளும், ஆடம்பரமான ஆசார தர்மங்களும் ஏற்படவில்லை. இந்த ரிக்வேதத்தைப்போல் வேறு கிரந்தம் இவ்வுலகத்தில் கிடையாது. ஏனெனில், இவ்வேதம் காதிற்கு மிக்க இனிமையாக இருப்பதுமல்லாமல் இதிலிருக்கிற மாதிரி உத்தமமான உபதேசங்கள் மற்ற கிரந்தங்களில் கண்டுபிடிக்க முடியாது. ஆகையாற்றான், பெரியோர்கள் இவ்வேதத்தை விந்தையானதாயும் அத்விதீய மானதாயும், மதிக்கிறார்கள்.

N. கஸ்தூரி ரங்கன், பீ. ஏ.

---

**ஒற்றுமையின் இலட்சணம்.**—ஒற்றுமை என்பது ஒன்று கூடியிருத்தலாம். ஆனால் ஒன்றுகூடியிருத்தல் மாத்திரம் ஒற்றுமையாகாது. ஓர் பொதுப்பிரயோஜனத்தைக் கருதி தம் தம் சக்திக்கேற்றதைச்செய்து ஐக்கியமாய் தாழ்ந்திருப்பதே உண்மையான ஒற்றுமையின் குணமாகும். வீட்டிலும், கிராமத்திலும், தொழிலிலும், பொது வாழ்க்கையிலும், பொதுஸ்தாபனங்களை நடத்துவதிலும் ஒற்றுமை வேண்டும். ஒற்றுமையின் முக்கிய விஷயங்களில் ஐக்கியமும், முக்கியமில்லாத விஷயங்களில் சுயேச்சையும், எல்லா விஷயங்களிலும் சுயநலமின்றி தர்ம சுபாவமும் பொருந்தியிருத்தல் வேண்டும். ஒருவரை நம்பி சுயநலத்தை அடக்கிப் பொது நலத்தைக்கருதவேண்டும். ஒற்றுமையால் கொஞ்சசிரமத்தோடு கஷ்டமான காரியத்தை சுலபமாய் முடித்துவிடலாம்.

ஏககுடும்பத்தில் தலைவனுடையசொற்கேட்டு யாவரும் ஒற்றுமையாயிருக்க வேண்டியதுதான். ஆனால் குடும்பத்தின் பொது நன்மைக்கு அவசியமில்லாத சிறு விஷயங்களில் தலைவன் அனாவசியமாய் பிரவேசிக்கக்கூடாது. எல்லாமெம்பர்களையும் சமமாய்ப் பாராட்டவேண்டும். ஒரு கண்ணுக்கு வெண்ணெயும் இன்னொரு கண்ணுக்கு சுண்ணாம்பும் போடக்கூடாது. அவரவர்களுக்குத் தனியாய் வேலை இருக்கவேண்டும். வீட்டில் பெண் சொல்கேட்டு நடப்பதால் கலகமும் விரோதமும் ஏற்படுகின்றன, ஆகையால் பெண்களின் குறுகிய மனதிற்கும், வல்லடி வழக்குக்கும் இடங்கொடுக்கக் கூடாது.

# மூளையும் அதன் சுபாவமும்

## BRAIN—ITS NATURE

மூளையே புத்திக்கு இருப்பிடமென்றும் நம் செய்கைகளுக்கு அதுதான் காரணமென்றும் அறிந்துளோம். ஒருவனுடைய குணமும் நடத்தையும் அவன் மூளையின் பக்குவத்திற்குத் தகுந்ததாயிருக்குமென்றும் அறிவோம். அதுபற்றி நற்குண நற்செய்கைகள் தன் மாணாக்கர்களிடத்து நிலைபெற்றிருக்க விரும்பும் நல் உபாத்தியாயர்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள் சில உள.

டாக்டர் பின்னெட் நடத்திய பரீக்ஷைகள் பலவற்றால் புத்திசாலித்தனம் விர்த்தியடையும் விதத்தையும், ஒவ்வொரு வயதிலும் காணப்படும் முக்கிய குணங்களையும் கண்டுபிடித்தார். இயற்கையை அநுசரித்து போதிப்பதே சிறந்த முறையாகும் என்பதை இக்காலத்து உபாத்தியாயர்கள் நன்குணர்க்திருக்கின்றனர். வாசிப்பதில் அபேக்ஷை உண்டாகுங்காலம் 6 அல்லது 7 வது வயதென்றும் கணிதத்திற்கு ஏற்பட்டகாலம் ஒன்பதாவது வயது என்றும் கூறுகின்றனர். குழந்தைப் பருவத்தில் பிறர் சொல்வதைச்சொல்லும் சுபாவமும், அப்படிச்செய்வதற்குக்காரணமாக யோசிக்காமலிருப்பதும் பெரும்பான்மை காணப்படுமென்றார். வயதேறவேற தன்செய்கைகளுக்குக் காரணம் கண்டு பிடிக்கவேண்டுமென்ற ஆவலும், பிறர் ஏதேனும் ஒன்று செய்யச்சொன்னால் ஏன் அப்படி நடக்கவேண்டும் என்று யோசிக்கும் தன்மையும் மேலிடுகிறதென்றும் கூறுகின்றனர்.

பிறர் சொன்னவண்ணம் செய்தல் (Suggestibility) மூளையின் சுபாவங்களிலொன்று என்பதைரூபிக்க பல உதாரணங்கள்கூறப்பட்டன. மூளையை பிரதான தந்தி ஆபீசென்றும் அதினின்று இந்திரியங்களுக்குப்போகும் கம்பிகளைத் தந்திக்கம்பிகளென்றும் ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. அந்நரம்புக்கம்பிகள் வியாபிக்காத இடமே இல்லை. இந்திரியங்களால் மூளைக்குக் கொண்டுபோகப்பட்ட உணர்ச்சிகள் யோசனையினால் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டாலொழிய செய்கைகளாக மாறி வெளித்தோன்றும்,

சிரிக்கும் சித்திரத்தைக் கண்டவுடன் நாமும் சிரிப்பதில்லையா? கிராமபோனில் சிரிக்கும் பாட்டை ஒலித்தவுடன் எல்லோரும் இரட்டிப்பாகச் சிரிப்பதில்லையா? சிப்பாயை நடக்கக் கண்ட குழந்தை உடனே தானும் அவ்விதமாக விரைவாய் நடக்கப் பார்த்திருக்கிறோமல்லவா? “ஏது, உன்முகம் வாடியிருக்கிறது.” என்று சொன்னவுடன் தன்னுடம்பில் ஜாட்டியமிருப்பதாக நினைத்து வைத்தியனைத் தேடுபவர் எத்தனையோ?

பாட்டுக்கச்சேரியில் ஒருவன் தலையாட்ட மற்றவர்களும் அப்படியே செய்ய ஆரம்பிப்பதில்லையா? கண்டுபிடித்துக் கேட்டால், காரணம் சொல்லத் தெரியாது தலைகுனிவார். இவ்விதமாக பிறர் எண்ணங்களுக்கிசைய நடத்தலும், பசிஞுணர்ச்சிகளுக் கிணங்க நடந்துகொள்ளுதலும், குழந்தைகளிடத்தும் கூட்டங்களிலும் பைத்தியக்காரனிடத்திலும் அதிகமாகக் காணலாம். பிறருடைய மனதைக் கலைப்பதற்கு ஏற்றகாலங்கள் மாலையும் இரவுமே. ஆதலாலன்றோ நாடகங்களும், பாட்டுக்கச்சேரிகளும் அச்சமயங்களில் நடைபெறுகின்றன. சமாசாரப் பத்திரிகைகளிலுள்ள விளம்பரங்கள் இரண்டு வகைப்படும். சிலவற்றை வாசித்தவுடன் மனக்கலற்சியை உண்டுபண்ணமாட்டா. வேறு சில மனதைக் கவர்ந்து உடனே அச்சாமான்களை வரவழைக்கும்படியான ஏற்பாட்டை செய்யச்சொல்லும். ஸ்திரீகளும், பெண்களும் பிறருடைய எண்ணங்களுக்கு உடனே ஈடுபடுவார்களென்றும் நாம் காண்கிறோம்.

ஆதலால், விஷயங்களை அடிக்கடி சொல்வதாலும் தகுந்த காரணங்களுடன் போதிப்பதாலும், “நீ நல்ல பையனாக இருப்பாயாக” “அரிச்சந்திரனைப்போல் நடந்து கொள்வாயாக” என்று அடிக்கடி சொல்வதாலும், சாயந்திரம் பாடசாலை கலையுமுன் பிள்ளைகளை ஒன்றுசேர்த்து குணப்பயிற்சிக்குத் தகுந்த கதைகள் சொல்வதாலும், பிள்ளைகளின் மனதைக் கவர்ந்து நல்வழிப்படுத்தத் தகுந்த பருவம் இளமையே என்று தெரிந்துகொள்வதாலும், நம்மிடத்தில் ஒப்பிக்கப்பட்ட வாலிபர்களின் புத்தியையும் குணத்தையும் விர்த்தி செய்ய சாஸ்திர அனுமதிபெற்ற வழியை அநுசரிக்கின்றவர்களாகின்றோம்.

# உபநிஷத் ரத்தினமாலை

## THE SUMMARY OF THE MINOR UPANISHADS

### 14. மண்டல ப்ராஹ்மணோபநிஷத் (48).

யாக்ஞவல்க்யர் ஸூர்யலோகம் சென்று ஸூர்யனை நமஸ்கரித்து ஆத்மதத்வத்தைச் சொல்லும் என்றார்: அந்த நாராயணன் சொல்லுகிறார். யமம் என்பது துவந்தங்கள் ஆஹார நித்திரை இவைகளை ஜெயித்து மாறாதசாந்தி, திடம், விஷய இந்திரிய அடக்கம் ஆகிய இவைகளே. நியமம் என்பது குருபக்தி, ஸத்யமார்க்க ஆவல், தானே வந்ததைக் கொண்டு திருப்திஅடைதல், நிஸ்ஸங்கத்வம், தனிமையாயிருப்பதால் மனம் ஓய்ந்து வருதல், பலத்தில் இச்சையில்லாமை, வைராக்யபாவம் ஆகிய இவைகளே. ஸுகமாயும் வெகுகாலம் மாற்றவேண்டாமலும் இருக்கத்தகுந்த ஆஸனமே ஆஸனம் எனப்படுவது. ரேசகபூரக கும்பங்களை, 16,64,32 தடைவைகளில் பழகி (பிராணன்களை அடக்குதல்) ப்ராணாயாமம். இந்திரியம் விஷயங்களில் பாய்ந்தோடாமல் தடுக்கும்படி மனதை அடக்குவது ப்ரத்யாஹாரம். எல்லாத் தேகங்களிலும் உள்ள அறிவு ஒன்றே என்ற பாவனை த்யானம். விஷயங்களை விலக்கி மனம் இந்த அறிவில் ஊறும்படி செய்வது தாரணம். த்யான அறிவில் நிலைத்தல். இந்த பாவம் நழுவுவது ஸமாதி. இவைஞானத்தோடுகூடின ஸூக்ஷ்ம அஷ்டாங்கங்களையுடைய யோகம்.

தேகத்தில் காமம், கோபம், அதிமூச்சுவிடுதல், பயம், உறக்கம் என்ற ஐந்து தோஷங்கள் உண்டு; இவைகளைமுறையே எண்ணமாகிற விசித்ரத்தைஅடக்குதல், பொறுமை, மிதஆஹாரம், நேர்மை ஆத்மநாட்டம் இவைகளால் நீக்கவேண்டும். ஸம்ஸாரம் என்ற ஸமுத்திரத்தில் தூக்கம், பயம் என்ற பாம்பு, ஹிம்ஸை என்றஅலை, ஆசை என்ற சுழல், ஸ்திரீ என்ற சேறு ஆகிய இவைகள் உண்டு. இதைத்தாண்ட ஸூக்ஷ்ம வழியைக் கடைப்பிடித்து ஸத்வாதி குணத்ரயங்களுக்கு அப்பாற்பட்டு தாரகத்தைப்பார்க்கவேண்டும். இது புருவமத்திய இடத்தில் ஸச்சிதானந்த விளக்கமாக ஏற்படும். இதை அடைய மூன்று லக்ஷ்யங்கள் உபயோகப்படும். (1) அந்தர் லக்ஷ்யம்:—மூலாதாரம் முதல் பிரஹ்மரந்திரம் வரையில் ஸுஷும்ஞநாடி ஸூர்ய ஒளியுடன்



விளங்கும். இதன் மத்தியில் தாமரைத் தண்டுள்ளிருக்கும் நூலைப்போல் அநேக மின்னல் ஒளியுடன் அதிஸூக்ஷ்மமான குண்டலினி சக்தி தோற்றும். இதைக் கண்டுவிட்டால் அஞ்ஞானம் ஸர்வமனோபாவம் எல்லாம் நீங்கிவிடும். காதை ஆட்காட்டி விரல்களால் அடைத்துக்கொண்டு விட்டால் ஒருசப்தம் உண்டாகும். அதில் மனதை நிறுத்திப்பார்த்தால் கண்மத்தியில் நீல ஒளிதோற்றும். ஹிருதயத்திலும் தோற்றும். (2) பஹிர்லக்ஷ்யம்:—மூக்கு நுனிக்கு 4 முதல் 12 அங்குலம் வரையில் ஒழுங்காக நீலம், கறுப்பு, சிவப்பு, வெள்ளை, மஞ்சள், ஆகிய இவ்வர்ணமுடைய ஆகாசம் தோற்றும். இதிலிருந்து ஒளியின்டால் வீசும். உள்நாட்டம் திடப்படும். தலைக்குமேல் 12 அங்குல நீளமுள்ள ஜ்யோதி விளங்கும். இந்நிலை வந்துவிட்டால் மரணத்தைத் தாண்டிவிடலாம்.

(3) மத்யமலக்ஷ்யம்:—தனக்குள் அநேக வர்ண ஒளிபொருந்திய ஸூர்யன், சந்திரன் அக்னிபோலவும் இவைகள் மறைந்தபின் தோற்றும் வெளிபோலவும் தோற்றுவது. இந்த லக்ஷ்யாகாரமாகிவிடுவன் அப்யாஸி. இப்படிப்பட்ட இடைவிடாப் பழக்கத்தால் நிர்க்குண ஆகாசங்கள் தோற்றும். அவையாவன:—இருளில் நட்சத்திர ப்ரகாசம்போலத்தோற்றும்வெளி ப்ராகாசம், காலாக்னி ஒளியுடன் விளங்கும் வெளி மஹாகாசம், மேலான பரம் ப்ரகாசத்தோடு கூடியது தத்வாகாசம், கோடி ஸூர்யனொளி நிறைந்த வெளி ஸூர்யாகாசம் என்பவைகளே.

தாரகயோகம் பூர்வம் உத்தரம் எனஇருவகைப்படும். பூர்வபாகத்திற்கு தாரகயோகம் என்றும் உத்தர பாகத்திற்கு அமனஸ்கயோகம் என்றும் பெயர். தாரகபாகம் மூர்த்திதாரகம் என்றும் அமூர்த்திதாரகம் என்றும் இருவகைப்படும். இந்திரியாதீதயோகம் மூர்த்திதாரகம், கர்த்திருத்வ போக்த்ருத்வ மனதிற்கு அப்பாற்பட்டது அமூர்த்திதாரகம். மனதுடன் சேர்ந்த உள்நாட்டம்தான் இவைகளை அப்யஸிக்கும்வழி: இதனால் தாரகவிளக்கம் புருவ மத்தியில் ஏற்படும். இனி அமனஸ்க விஷயம் பின்வருவன. அடிநாக்கு மேல்பாகத்தில் மஹாஜ்யோதி ஒன்றுண்டு. இதை உணர்ந்துவிட்டால் அணிமாதி அஷ்டஸித்திகள் உண்டாகும். உள்ளே லக்ஷ்யத்தில் மனம்போக இந்திரியங்களை வெளி விஷயங்களில் விடாமலும், அவைகளிலிருந்து அடக்காமலும் விட்டுவிடுவதே ஸாம்பவீ முத்திரை என்னப்படும். இந்த ரஹஸ்ய வித்தையை உணர்ந்தால் ஸம்ஸார நீக்கம்: அப்யஸித்தால் மோக்ஷப்ராப்தி.

அந்தர் லக்ஷ்யம் அபோஜ்யோதி ரூபமானது இது ப்ரஹ்மரந்திரத்திற்கருகில் ஸஹஸ்ராரத்திலிருப்பது. இது ஒருகருவிக்கும் விஷயமாகாது, இந்த அந்தர் ஜ்யோதி விஷயத்தில் அபிப்ராயபேதம் அநேகம் உண்டு. புத்திநிவாஸன், சிரோநிவாஸன், அங்குஷ்டமாத்திரமானவன் இவைகளை அந்தர் லக்ஷ்யம் என்பர் பலதிறத்தார். இவைகள் எல்லாம் ஆத்மரூபம் தான். இதைச் சுத்தாத்மாவாக உணருபவனே ப்ரஹ்மநிஷ்டன். ஜீவன் தனது திருச்யங்கள் 24-ஐம்விட்டு 26-வதான பரமாத்மாவே நான் என்ற மாறா உணர்ச்சியால் ஜீவன் முக்தனாவன்.

பிறகு யாக்ஞவல்கியர் ஸூர்யமண்டல புருஷனை நோக்கி ‘இந்த அந்தர் லக்ஷ்யத்தை இன்னும் விளக்கிக் கூறவேண்டும்’ என ஸூர்யன் கூறுகிறார்:—பஞ்சமஹா பூதங்களுக்குக் காரணமான தேஜஸேபீடம் இதனிடையில் ஆத்மா விளங்கும். இது வெளிப்படையாயுள்ளதல்ல. இது ஞானமெனும் தோணியால் அடையப்படுவது. இதுதான் வெளிஉள்லக்ஷ்யம். இதனுள் ப்ரபஞ்சங்கள் முழுகிக்கிடக்கும். இது நாத(பிரகிருதி) பிந்து (ஸச்சிதானந்தலக்ஷணம்) கலை (அபின்னசக்தி) இவைகளுக்கு அப்பாற்பட்ட அகண்டநிலை. நிர்க்குண ஸகுண ரூபமாகவும் இருக்கும். அக்னி, ஸூர்யன் சந்திரன் அகண்ட பிரஹ்மம் இவைகளின் மண்டலங்கள் முன்னதுள் பின்னதாக மறைந்து ஸூக்ஷ்மமாகவிருக்கும். கடைசி மண்டலம் வெள்ளை ஒளியுடனிருக்கும். இது தான்ஸாம்பவீ லக்ஷணம்.

இந்த விஷயமாக மூன்றுவித திருஷ்டிகள் கூறப்படும். அவைகள் **அமாதிருஷ்டி**:—கண் முழுதும் மூடினநிலை: **பிரதிபத்திருஷ்டி**:—பாதிதிறந்த திருஷ்டி:—**பூர்ணிமாதிருஷ்டி**:—முழுமையும் திறந்த திருஷ்டி:—ஆகிய இவைகளே, இதில் பூர்ணிமாவை அப்யாஸம் செய்யவேண்டும். லக்ஷ்யம் மூக்கு நுனி. முதலில் அடி நாக்கில் இருள்தோன்றிப் பின்னர் அப்யாஸத்தால் ஒளிப்பிழம்பு வெளிப்படும். இது தான் ஸச்சிதானந்த பிரஹ்மம். இதில் லயமடைவது தான் ஸாம்பவீ முத்திரை. இதைக் கேசரீ முத்திரை என்றும் கூறுவார். இதனால் மனம் ஒடுங்க வாயுவும் ஒடுங்கும். இதற்கு அடையாளம், நக்ஷத்ரம், வஜ்ரக் கண்ணாடி, பூர்ண சந்திரன், நவரத்ன ஒளி, மத்யான்ன ஸூர்யன், அக்னிசிகை முதலிய அநேகந்தோற்றங்கள் உண்டாகும். இது ப்ரணவ ஸ்வரூபம். கண்காது மூக்கு இவைகளை ஆறு விரல்களால் மூடிக்கொண்டு ஏற்படும் பிரணவத்வனியில்மனம் லயிக்குமாயின் ஷண்முகீ முத்திரையாகும். இவனைக் கர்மங்கள் ஒட்டா. இவனுக்கு-சிதாதித்யன் உதயாஸ்தமனமின்றிப் ப்ரகாசிப்பதால் கர்மம் யாதொன்றும் வேண்டுவதில்லை. சப்தமும், காலமும்ஒடுங்கிவிட்ட படியால் இராப்பகலற்றொளிரும் பரம்பொருளின் ஞானத்தால் உன்மனீ நிலையை அடைந்து ஒன்றுபடுவன். இதனால் அவனுக்கு அமனஸ்க யோகம் ஸித்தியாகும்.

இவனுக்கு மனம் அலையாமையே த்யானம். வியவஹார ஒடுக்கமே ஆவாஹனம். ப்ரஞானமே ஆஸனம்; உன்மனீபாவமே (பரிசுத்த பரமானந்தம்) பாத்யம்; அமனஸ்கநிலையே (மனமற்ற பரிசுத்தநிலையே) அர்க்யம்; ஸதாப்ரகாசமே ஆசமனீ

யம் ; மனதில் சிதானந்தாம்ருதப் பெருக்கே அபிஷேகம் ; ஸர்வாத்மபாவனே சந்தனம் ; ஆத்மஞானமே அக்ஷதை ; சித்தை (அறிவை) உணர்ந்த திருப்தியே புஷ்பம் ; சிதாகாச அக்னியே தூபம் ; சிதாகாச ஸூர்யனே தீபம்; அமிருததாரையான சந்திர ப்ரவாஹத்துடன்கலப்பதே நைவேத்யம்; நிச்சலமே ப்ரதக்ஷிணம்; ஸோஹம் (அவனே நான்)என்ற உணர்ச்சியே நமஸ்காரம்: மௌனமே ஸ்தோத்திரம்;ஸர்வ ஸந்தோஷமே விஸர்ஜனம் (பூஜை முடிவு).

அறிவு ஸம்பந்தப்பட்ட திரிபுடி(மூன்றும் தன்மை) நீங்க, அலையற்ற கடல் போலவும் காற்றில்லா விடத்திய தீபத்தைப் போலவும் ஒருவித அசைவுமில்லாமல் பூர்ணமான பாவாபாவங்களுக்குஅப்பாற்பட்டுவிழிப்புத்தூக்கம் இவைகளது முடிவிலிருக்கும் ஜ்யோதியேயாகி பிரஹ்மவித்தாகிறான். ஸுஷுப்தியிலும்ஸமாதியைப் போலவே மனோலயம் ஏற்படுமானாலும் இரண்டிற்கும்பேதம்உண்டு. தூக்கத்தில் மனம்தமஸில் லயப்பட்டு மோக்ஷகாரணமாகாது; ஸமாதியிலோ மனம் தன் நிஜரூபமாகியஅகண்டவிருத்தியில் லயமடைந்துவிட பிரபஞ்சம் எல்லாம் ஸர்வஸாக்ஷியில் அடங்கிவிடும். வெளிமுகப்படுங்காலத்தும் பிரபஞ்சம் மித்யாபாவனையில் லயித்தேதான் தோற்றும். ஒருமுறை இந்த ஸமாதியாகிற ஸதானந்த அனுபவம் விளங்கிவிட்டால் அதுவேயாகிவிடுவன் முக்தன். ஸங்கல்பநாசமே முக்தி காரணம். பாவபாவனைகள் நீங்கப்பரம்பொருள் த்யானத்தால் முக்தி ஏற்படும். இவனுக்கு ஸகலவித ஸூக்ஷ்ம துவந்துவங்களும் நீங்கிவிடும்.

ஜாக்ரத் ஸவப்ன ஸுஷுப்தி துரியம்துரியாதீதம் ஆகிய ஐந்திற்கும் பஞ்சாவஸ்தைகள் என்றுபெயர், ஜாக்ரத்தில் ஜீவன் பாபப்பலனான நரகம் வேண்டாம் புண்யபலனான ஸ்வர்க்கம் வேண்டும் என்றுமுயலும் பிரவர்த்தனாகிறான். வைராக்யம் வந்துவிட்டால் கர்மபலனானஜன்மம், ஸம்ஸாரஸுகம் முதலியனபோதும் என்று முக்திவழியில் பிரவர்த்திக்கும் நிவர்த்தனாகிறான். உடனே குருவையடைந்து ஸத்குணஸம்பூர்ணனாகி ஸ்வதர்மாசரணத்தை விடாது ஹ்ருதயத்தில் ஸத்தாமாத்திர பகவானை அந்தர் லக்ஷ்யமாக எண்ணி ஸுஷுப்தியில் ஆனந்தஸ்மரணை நீங்காது, கால அஞ்ஞானங்களால் ஜாக்ரத்தில் விச்வனாகவும் ஸ்வப்னத்தில் தைஜஸனாகவும் இருந்து ஸுஷுப்தியில் ப்ராஞ்ஞனாகவிருக்கிறான். அவஸ்தை பேதத்தால் மாறுபட்டவனாகத் தோற்றுகிறேனே ஒழிய உண்மையில் நான் இவைகளுக்கு அப்பாற்பட்ட ஏகன் என்று மதித்து, அத்வயப்ரஹ்மம் நான்என்று பேதபாவனையை நீக்கித்தன்னுள் தோன்றும் தேஜோமயமான ஸூர்யமண்டல த்யானத்தால் இதை ஸாதித்துப் பக்குவனாவான். ஸங்கல்பரூபமனம் பந்தகாரணம்: ஸங்கல்பரஹிதமனம் மோக்ஷ காரணம், ஆகையால் இவன் வெளிமுகப்பட விடாத உபாதியை அடைந்து எல்லாவற்றையும் ஆத்மாவாகக் கண்டு பிரஹ்மமே நான் என்ற மாறாஉணர்ச்சியுடன் செய்ய வேண்டியவைகளை யெல்லாம் செய்து முடித்தவனாகிறான் : ஸர்வபரிபூர்ண துரியாதீத ப்ரஹ்மமானயோகியாகிறான். இவன் எங்கும் திரிவன் : பிரஹ்மமெனத் துதிக்கத்தகுந்தவன். இவன் நிலைக்கு சுத்தாத்வைதம், அஜாட்டிய நித்திரை, ஸஹஜம்,அமனஸ்கம், யோக நித்ரை, அகண்டாநந்த மென்றும் பெயர். இந்திராதி தேவதைகளின் ஆனந்தம் எல்லாம் இதன் லேசாலேசமே.

அமனஸ்க விஷயத்தை மறுபடி விஸ்தரித்து வற்புறுத்திக் கூறவேண்டு மென்று யாக்ஞவல்க்யர் கேட்க ஸூர்யமண்டல புருஷன் கூறலுற்றான். முன்னர் கூறப்பட்ட ஸாம்பவீமுத்திரை, லக்ஷ்யவிஷயம், மனோன்மனீயனுபவம், இந்திரியநாசம் அசைவின்மை, துவந்துவாதீதம் இவைகளைச்சுருக்கிக்கூறிவிட்டு, பால்கறந்தபின் பசுவின்மடி எப்படி வெறும் மடியாகிவிடுமோ அதுபோல இந்திரிய நாசமானால் மனோநாசமாகிய அமனஸ்கமேற்படும். பிறகு தத்வமஸிவாக்கிய உபதேசம்பெற்று தாரக யோகமூலமாக உன்மனீயவஸ்தையை அடைந்து ஸகலதோஷங்களும் நீங்கப்பெற்று, அஹம் பிரஹ்மாஸ்மி, என்றுதேறித்தெளிவன், என்று சொல்லி ஒரு குரு தன் சிஷ்யனை ஆவிசேர்த்துக்கட்டிக் கொண்டு ஞானம் புகட்டினார் என்று கூறிமுடித்தார்.

பின்னர் ஆகாசபஞ்சகம், மனதின்ஸ்வரூபம், அதை வெளி ஆச்ரயமின்றி நிறுத்துவதால்ஏற்படும் மனோன்மனீ அவஸ்தையால் உண்டாகும் ஜ்யோதிலயமாகிய விஷ்ணுவின்பரமபதம், இவைகள் கூறப்படுகின்றன. இந்த அமனஸ்கபலன் பாலர், பித்தர் உன்மத்தரைப் போலிருத்தல், நித்யதிருப்தி,அதிக மலம்வெளிப்படாமை, மிதாஹாரம், தேஹதிடம், குற்றமற்ற அறிதுயில், ஸுகப் பிராப்தி கண்மூச்சு அசையாமை, ப்ரஹ்மானந்தஆவல், ஆகியஇவைகளே. இவனைத் தரிசித்தாலும் இவன் பார்வை பட்டாலும் அஞ்ஞானி கூட முக்தனாவன்: நூறுதலைமுறைவரை கரையேறிவிடும் இவனால். இவன்உறவினர்கள் எல்லோரும் முக்தராவர்.

## 45. ஆருணி கோப நிஷத் (16).

ஆருணி என்பவர் பிரஜாபதிலோகம் சென்று தன்பிதாவான ப்ரஹ்மாவைநோக்கி, 'கர்மங்கள் முழுவதையும் விடுவது எப்படி.?' என்று கேட்டார். அதற்கு பிரஜாபதி கூறலுற்றார். 'உமது புத்ர மித்ர களத்திரமுதலிய எல்லாஉறவினர்கள், சிகை,பூணூல், யாகம்,வேதாத்யயனம், மேலேழ் கீழேழ்லோகங்கள், முதலியவைகளை முதலில் விடவேண்டும். முதல் மூன்று ஆச்ரமங்களில் எதிலிருந்தாலும் ஸரி பூணூலை பூமியிலாவது ஜலத்திலாவது எறிந்து விடவேண்டும். லௌகிகாக்னிகளை ஜீர்ணம் செய்யும் ஜாடராக்னியில் ஏற்றிக்கொண்டு , காயத்ரீயை அக்னியில் ஏற்றிவிடவேண்டும். பின்னர் (பாலசம், பில்வம், அச்வத்தம், உதும்பரம் ஆகிய மரங்களாலாகிய தண்டம், சுற்றிக்

Supplement to the "Viveka Bodhini"] ["விவேக போதினி" அனுபந்தம்]



விக்டோரியா பப்ளிக் ஹால்



THE REGISTRAR OF BOOKS 1913 MADRAS.

கொள்ளும் துணி, கௌபீநம் இவைகளை மாத்திரம் எடுத்துக்கொள்ளலாம். ஸந்யாஸியாகி விட்டால் பாத்திரம், பவித்திரம், தண்டம், லோகம் எல்லாவற்றையும் விடவேண்டும். மந்திரத்தோடு சிலவைகளைச் செய்ய வேண்டும். பின்னர் ஊர்த்தகவனம் (மலை ஏறுதல் முதலியவற்றை) விடவேண்டும். கையையாவது வயிற்றையாவது தான் பாத்திரமாக உபயோகிக்கவேண்டும். கிராமத்தில் பிக்ஷைக்குப் போகும்பொழுது, ஆஹாரத்தை மருந்து சாப்பிடுவதுபோல ருசியைக் கவனியாது சாப்பிட்டுத் தீர்க்க வேண்டும். மூன்று ஸந்திகளிலும் ஸ்நாநம்செய்து ஆத்மஸமாதியில்தான் ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டும். வேதங்களில் எல்லாம் ஆரண்யக, உபநிஷத்பாகங்களை மாத்திரம் விடாது அத்யயனம் செய்யவேண்டும். 'நானே பிரஹ்மம் என்பதைக் காண்பிப்பதால் ஸூத்ரம் பிரஹ்ம ஸூத்ரத்தை நானே உணர்ந்து விட்டேன்' என்று தெளிந்தவன் உபவீதத்தை விட்டுவிட்டு 'ஸ்ந்யாஸம் செய்து கொள்ளுகிறேன்' என்று பொருள் படும் மந்திரத்தை மூன்றுதரம் கூறி, எல்லாப் பிராணிகளுக்கும் அபயம் தந்து, எல்லாம் என்னிடமிருந்தே வெளிப்படுகின்றன என்ற மந்திரமூலமாக மூங்கில் தண்டம் கௌபீனம் முதலிய ஏற்றுக் கொள்ளத்தக்கவைகளை ஒழுங்காக ஏற்றுக்கொள்ள வேண்டும், பிரஹ்மசரியம், அஹிம்ஸை, வாங்காமை, ஸத்யம் இவைகளைப்புருஷமுயற்சியால் திடப்படுத்தி விடவேண்டும். இப்படிச்செய்து தேறிய பரமஹம்ஸ பரிவ்ராஜகர்கள், பூமியிலேயே ஆஸனம், சயனம் செய்து கொள்ளவேண்டும். மண், சுரைக்காய், மரம் இவைகளாலாகிய பாத்திரங்களை ஏற்கலாம். பிரஹ்மசரியத்தை விடவே கூடாது. காமம், கோபம், ஹர்ஷம், ரோஷம், லோபம், மோஹம், டம்பம், கொழுப்பு, இச்சை, அஸூயை, அகங்காரம், ஆகிய இவைகளை விட்டு விடவேண்டும். மழைக்காலங்களில் ஓரிடத்தில் நிலைத்திருப்பதற்கு வேண்டிய குணங்களுடனிருந்து, மற்றை எட்டுமாஸம் தனிமையாக ஸஞ்சரிக்க வேண்டும். அடிக்கடி ஸஞ்சரித்துக் கொண்டேயிருக்க வேண்டும். இம்மாதிரி எல்லாவற்றையும் விடுவது என்பதைத்தெரிந்தவர்கள் உபநயநத்திற்குமுன்னாவது பின்னாவது செய்வர். இப்படி உணர்ந்தவன் தண்டம் முஞ்சி, மேகலை, உபவீதம் இவைகளை விட்டு சூரனாவான். (தத்விஷ்ணோ: பரமம்பதம் என்று ஸ்கந்தோபநிஷத்தில்முடியும் ச்லோகம்இங்குமிருக்கிறது). இது நிர்வாணுனுசாஸனம், வேதானுசாஸனம்.

நீல உப்பு.—பயிர் செய்யும் நிலத்தில் உப்பிருப்பதால் நன்மையுமுண்டு, கெடுதலுமுண்டு. உப்பு அதிலுள்ள ஸோடா, பொடாஷ் இவைகளுக்குப் பதிலாக உபயோகப்படுகிறது. பொடாஷ் நிலத்திற்கு நன்மையைச் செய்வதால் அதை உடைய உப்பும் நலமே. ஆனல் நிரம்ப கடினமான பூமியா யிருந்தால் சாணி யெருவும் போட்டு ஸோடா நைட்ரேட் உப்பையும் போடுவது நலம்.

# கமலரேகை

அல்லது

"இந்திரபுரி" இரகசியம்

## KAMALAREKA

OR

## THE SECRET OF "INDRAPURI"

### இரண்டாம் அத்தியாயம்

### எதிர்பாராத சந்திப்பும் பிரிவும்

"ஆ! கடைசியாக நீ வந்துவிட்டாயா? இனி நீ வரமாட்டாய் என்றும், உன்னை இனிச் சந்திக்க முடியாதென்றும் நான் நினைத்துக்கொண்டிருந்தேனே?" என்று சித்திரவர்மன் அதிசயத்தோடு வினவினன். "அப்படியா? மிகவும் சந்தோஷம்! இருக்கட்டும்; இன்றிரவு சென்னை நகருக்குப் போகப்போகிறேன். விக்டோரியா சபாமண்டபத்தில் 'சுகீர்தவிலாஸ' சபையார் இன்றிரவு 'லீலாவதி சுலோசனு' என்னும் நாடகத்தை மிகுந்த விமரிசையுடன் நடத்தப் போகிறார்களாம்!" என்று அந்த ஸ்திரீ சித்திரவர்மனிடம் சொன்னாள்.

"இன்னமும் சென்னைக்குப் பிரயாணப்படும் நோக்கத்துடன்தான் இருக்கின்றாயோ?" என்று சித்திரவர்மன் சிறிது கோபத்துடன் கேட்டான்.

"ஏன்? ஆம்; நான்தான் ஏற்கனவே உமக்கு இவ்விஷயத்தைக் கூறி, உம்மையும் பிரயாணத்துக்குத் தயாராயிருக்கும்படி சொன்னேனே? நீர் பிரயாணப்படுவதற்குத் தயாராயிருப்பீர் என்று நினைத்தன்றோ நான் இவ்வளவு அவசரத்துடன் இங்கு வந்தேன்" என்று அந்த ஸ்திரீ சொன்னாள்.

ஒருவிதமான கொடூரப்பார்வையுடன் சித்திரவர்மன் அவளை நோக்கினன். அவர்கள் இருவருடைய கண்களும் சந்தித்தன. நெடுநேரம் வரையில் ஒரு தட்டியின் பின்புறத்தில் கிடந்த நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த கமலநாதன், அந்த ஸ்திரீயும் சித்திரவர்மனும் ஒருவருக்கொருவர் கண்ணினல் பேசிக்கொள்வதைப் பார்த்துத் தன்னையறியாமலே வாய்விட்டுச் சிரித்தான். அவ்வோசையைக்கேட்ட அந்தஸ்திரீ "ஐயையோ! இங்கே மூன்றாவது மனிதர் ஒருவரா இருக்கின்றார்? எனக்குத் தெரிந்திருந்தால் நான் இங்கே வந்திருக்கமாட்டேனே?" என்று அச்சத்துடன் கூறி "இருக்கட்டும்; நான் போய் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே மெதுவாக அவ்விடம் விட்டு நீங்குவதற்குப் பிரயத்தனப்பட்டாள்.

"அவர் இங்கு இருப்பதற்காக நீ இவ்விடம் விட்டுப் போகவேண்டியதில்லை. அவர் என்னுடைய ஆருயிர்

நண்பர் ; என்னிடம் உனக்கு எவ்வளவு நம்பிக்கை உண்டோ அதைவிடப் பன்மடங்கு அதிகமான நம்பிக்கையை நீ அவர் விஷயத்திற் கொள்ளலாம்.'' என்று சித்திரவர்மன் அந்த ஸ்திரீக்குச் சமாதானம் சொல்லி அவளை இருக்கும்படி சொல்லிவிட்டுக் கமலநாதனை "சத்தியசந்தரே!'' என்று புனைபெயரால் அழைத்தான். தன்னைத்தான் அவர் அழைக்கின்றார் என்பதையும், அந்த ஸ்திரீக்குத் தன்னுடைய பெயர், ஊர் முதலியன தெரியாதிருக்கவேண்டியே அவ்விதம் புனைப்பெயரிட்டு அழைக்கின்றார் என்பதையும் இனிதறிந்துகொண்ட கமலநாதன் "ஏன்; இதோ வருகிறேன்!'' என்று சொல்லிக்கொண்டே தான் உட்கார்ந்திருந்த நாற்காலியை விட்டெழுந்து சித்திரவர்மனும் அந்த ஸ்திரீயும் இருந்த இடத்துக்கு வந்தான். வந்ததும், அவனை ஒரு ஆசனத்தில் அமரும்படி சித்திரவர்னன் சொன்னான்.

"இவர்தான் என்னுடைய பழைய நண்பராகிய திவான்பகதூர் சத்தியசந்தர் என்பவர்! இவரைப் பார்த்து நெடுநாள் ஆகிவிட்டது. வெளியூரிலிருந்து இன்றுதான்,—இப்போதுதான் வந்தார்'' என்று சித்திரவர்மன் அந்த ஸ்திரீக்குச் சொல்லிக் கமலநாதனையும் அவளுக்குச் சுட்டிக்காட்டினான்.

அந்தஸ்திரீ நடுத்தரமான உயரமும், அந்த உயரத்துக்குத் தகுந்த பருமனும் உடையவளாய் இருந்தாள். ஆனல், கோஷாஸ்திரீகளும், இராஜகுடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரீகளும் வெளியில் புறப்படும்போது அணிந்துகொள்ளும் அங்கியைப்போன்றதோர் அங்கி அணிந்திருந்தாள். அந்த அங்கி உயர்ந்த வெண்பட்டினால் தைக்கப்பட்டிருந்தது. அவளுடைய இரண்டு கண்களும், முன்கைகளும் தவிர ஏனைய அவயவங்களெல்லாம் அந்த அங்கியினால் மறைக்கப்பட்டிருந்தனவாதலால், அவளுடைய முகத்தைப் பார்க்கக் கமலநாதனால் முடியவில்லை. ஆனாலும் அவளுடைய கைவிரல்களின் நிறத்தைக்கொண்டும் அழகைக்கொண்டும் அவள் நல்லழகு வாய்ந்தவள் என்றும், அவளுடைய நிறம் சந்தனநிறம் என்றும், அவளுக்கு வயது இருபத்தைந்து அல்லது இருபத்தாறுக்குமேல் இராதென்றும் கமலநாதன் அனுமானித்தறிந்தான்.

"அம்மா! நீங்கள் நெடு அங்கி போர்த்திருப்பதைப் பார்த்தால், நாடகம் பார்க்கச் செல்லுகிறீர்கள் போல் தோன்றுகிறது. நான் சொல்லுவது உண்மைதானோ?'' என்று கமலநாதன் அந்த ஸ்திரீயைக் கேட்டான்.

"ஆம்; வாஸ்தவமே! சித்திரவர்மரையும் அழைத்துப்போகவந்தேன்! அவர் வரமுடியாதென்று சொல்லுகிறார். நீங்கள் வந்திருப்பதைக் கருதியே அவர் எனக்கு வீண் முகாந்தரங்கள் கூறுகின்றார். நீங்கள் பிரயாணப்பட்டால், அவர் கட்டாயம் வருவார். ஆதலால் எனக்காக நீங்கள் வரவேண்டும். மேலும் இன்று நாடகம் மிக நன்றாயிருக்குமாம்'' என்று அந்த ஸ்திரீ கமலநாதனை நோக்கிக் கூறினாள்.

"அவர் வந்திருக்கின்றாரே என்று கருதி நான் மறுக்கவில்லை. நாடகத்திற்குப் போவதில் எனக்கு இஷ்டமே இல்லை'' என்று சித்திரவர்மன் சொன்னான்.

"ஏன்? இவ்வளவு பிடிவாதத்துடன் நீர் மறுப்பதற்குக் காரணம் என்ன?'' என்று அந்தஸ்திரீ சித்திரவர்மனைக் கேட்டாள்.

"காரணம் உனக்கு ஏற்கெனவே தெரிந்திருக்கிறது! மறுபடியும் நான் சொல்லுவானேன்?'' என்றான் சித்திரவர்மன்.

"ஆ! நீர் மிகவும் அஞ்சுகின்றீரே? ஆண்மக்கள் இவ்விதம் பயந்தால் என்னைப்போன்ற பெண்மக்கள் என்செய்வது!'' என்று அந்த ஸ்திரீ ஏளனமாய்க் கூறி நகைத்தாள்.

சித்திரவர்மன் ஏதும் பதில் கூறாமல் தலையசைத்தான்.

"பயப்படுவது வெட்கமன்றோ? கண்டோர் சிரிப்பார்களே? மேலும், நான் நெடு அங்கியினால் சரீரம் முழுவதையும் மறைத்திருக்கும்போது என்னை அடையாளம் கண்டுபிடிக்க யாரால் முடியும்? என்னுடைய தாயாராலேயே,—அவள்மாத்திரம் இப்போது உயிருடன் இருப்பாளானால்,—கண்டுபிடிக்க முடியாதே?'' என்று அந்த ஸ்திரீ சொன்னாள்.

அந்த ஸ்திரீக்கு ஏதாவது அபாயம் விளையுமென்று அஞ்சியே சித்திரவர்மன் மறுத்துரைத்தான். ஆனால் 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்பது போல் அந்தஸ்திரீ ஒரே பிடிவாதமாய் நாடகத்துக்குப் போகத்தான் வேண்டுமென வற்புறுத்தியபடியால் சித்திரவர்மன் இறுதியில் அவள் இஷ்டத்திற்கு இணங்கவேண்டியவனானான். அவன் அந்தஸ்திரீயையும் கமலநாதனையும் அழைத்துக்கொண்டு காஞ்சீபுரத்தில் இரயில் ஏறி இரவு எட்டுமணி சுமாருக்குச் சென்னை நகர்வந்து சேர்ந்தான்.

கமலநாதன், சித்திரவர்மன் வீட்டில் அந்தஸ்திரீ போன சமயத்தில் இருந்ததற்குக் காரணம், முதல் நாள் முதல்முதல் 'அரக்குமாளிகை' என்னும் பெயருடைய சூதுமண்டபத்தில் கமலநாதனும் சித்திரவர்மனும் ஒருவரையொருவர் சந்தித்துப் புதிதாய் நட்புரிமை கொண்டு ஒரு பரம இரகசியத்தைக் கண்டுபிடிப்பதைக்குறித்து உரையாடிவிட்டுப் பிறகு ஏகம்பநாதர் வடக்குவீதி இருபதாம் எண்ணுள்ள கிருகத்திற்கு வரும்படி சித்திரவர்மன், கமலநாதனுக்கு வற்புறுத்தியதேயாம். சித்திரவர்மன் சொன்னபடியே மறுநாள்மாலை மூன்றுமணிக்குக் கமலநாதன் அவனை அவன் வீட்டுக்குச் சென்று சந்தித்தான். அந்தப்



பரம இரகசியத்தை வெளிப்படுத்தும் விஷயமாய் இருவரும் நெடுநேரம் வார்த்தையாடினார்கள். இறுதியில் சித்திரவர்மனுடன் கலந்து வேலை செய்யவும், அவ்விரகசிய சம்பந்தமாய்த் தன் வாயைக் கட்டி வைக்கவும் கமலநாதன் இணங்கிச் சத்தியமும்செய்து கொடுத்தான். அதன் பிறகு சிறிது இளைப்பாறுதற்கு அவன் தட்டிமறைவிலிருந்த நாற்காலியில் சாய்ந்தான். இச்சமயத்திற்றான் அந்த ஸ்திரீ சித்திரவர்மனைக் காண்பதற்கு வந்தாள்.

சென்னைக்குப் போய்ச் சேர்ந்த சித்திரவர்மன், சத்தியசந்தர்—இவருடைய உண்மைப் பெயர் 'கமலநாதன்' என்பதாயினும் சித்திரவர்மன் அந்த ஸ்திரீக்குச் 'சத்தியசந்தர்' என்று கூறியதால் நாமும் இப்பெயரே கொடுத்து வழங்குவோம்,—அந்த ஸ்திரீ மூவரும் 'இராஜா சர் சவலை இராமசாமி முதலியார்' சத்திரத்திற்குச் சென்று இராப்போஜனத்தை முடித்துக்கொண்டு, கடைக்குச்சென்று புது உடுப்புகளை வாங்கி அணிந்துகொண்டு (அந்த ஸ்திரீ மாத்திரம் புதிய உடை வாங்கித் தரித்துக்கொள்ளவில்லை; ஆனால் அவள் தன் பொருளைக்கொடுத்து மற்ற இருவருக்கும் உடை வாங்கிக்கொடுத்தாள்) விக்டோரியா சபாமண்டபம் வந்து சேர்ந்தார்கள். அங்கே ஜனக்கூட்டம் அதிகமிருந்தது. பலவகைப்பட்ட ஜாதியாரும், தேசத்தாரும், வெவ்வேறு வகைப்பட்ட அந்தஸ்துடையவர்களும், இயல்புடையவர்களும், ஆண்மக்களும், பெண்மக்களும், சிறுவர்களும், சிறுமிகளும், அக்கூட்டத்தில் காணப்பட்டார்கள். ஸ்திரீகள் அநேகர் கோஷாக்களைப்போல் நெடு அங்கி போர்த்திருந்தார்கள். புருஷர்களில் பலர் ஆங்கிலேயர்களைப்போல் உயர்ந்த உடை அணிந்திருந்தார்கள். இவர்களில் பலர் அணிந்திருந்த உடைகள் ஒரே மாதிரியாய்க் காணப்பட்டன. ஸ்திரீகள் அணிந்திருந்த அங்கிகளும் பெரும்பாலும் ஒரேமாதிரியாய் இருந்தன. திருட்டுத்தனமாய் நாடகம் பார்க்க வந்திருந்த புருஷர்களும் ஸ்திரீகளும் தங்களுடைய வருகையைப் பிறருக்குப் புலப்படுத்தாமல் மறைக்கும்பொருட்டு மெல்லிய சல்லாத்துணியால் தைக்கப்பட்ட முகவுறையினால் தங்கள் முகத்தை மறைத்திருந்தார்கள். ஆகவே, அக்கூட்டத்தில் ஒருவரையொருவர் அறிந்துகொள்வதாவது, அடையாளங்கண்டுபிடிப்பதாவது கஷ்டசாத்தியமான விஷயமாயிருந்தது. சித்திரவர்மன், சத்தியசந்தர் இவர்கள் இருவரும் முகவுறை அணிந்திருந்தார்கள். அந்த ஸ்திரீயோ ஏற்கனவே, கண்களையும் கரங்களையும் தவிர மற்றை உறுப்புக்களை நெடு அங்கியினால் மறைத்திருக்கிறாள். இம்மூவரும் சபாமண்டபத்தின் வாயிற்படியை நெருங்குகிறவரையிலும் சேர்ந்தே சென்றார்கள். ஆனால் பெருங்கூட்டத்தின் நடுவே போக நேரிட்டபோது, ஒருவரையொருவர் விட்டு எவ்விதமாகவோ பிரிந்துவிட்டார்கள். சத்தியசந்தன் மற்றை இருவர்களையும் நெடுநேரம் தேடிப்பார்த்தான். ஆனால் அவர்கள் இருவர்களும் அகப்பட்டிலர். பிரவேசச்சீட்டுப் பெற்றுக்கொண்டு ஸபாமண்டபத்தின் மேல்நிலைக்குச்சென்று நாடகம் பார்ப்பதற்கோ,' சத்தியசந்தரிடம் பணம் இல்லை. அவரிடம் ஒருரூபாய் பருமனுள்ள இரண்டு செம்பு நாணயங்களைத்தவிர வேறு நாணயம் இல்லை. என்செய்வார் பாவம்! மிகுந்த வருத்தத்துடன் சபைக் கட்டிடத்தின் பின்புறமுள்ள தோட்டத்திற்குச் சென்று, அங்கே போடப்பட்டிருந்த ஒரு பலகையின் மேல் உட்கார்ந்து தம் மனம் இழுத்துச்சென்ற வழியெல்லாம் சென்று மிகுந்த யோசனையில் ஆழ்ந்திருந்தார். சந்திரன் சிறிதும் களங்கமில்லாமல் ஆகாயத்திற்றோன்றி அமிர்தமயமான தன் நிலவொளியை உலகமெங்கும் பரவச்செய்தான். சத்தியசந்தர் தனியாக ஆழ்ந்த யோசனையுடன் உட்கார்ந்திருந்த சமயத்தில், தன்னை நோக்கி நெடு அங்கி போர்த்தபடியே ஒரு ஸ்திரீ நெருங்கி வருவதைக் கண்டார். அவள் சத்தியசந்தருக்குச் சமீபத்தில் வந்து சிறிது நேரம் ஏதும் பேசாமல் மௌனமாயிருந்தாள். அவள் முகத்தையும், சரீரத்தையும் சத்தியசந்தர் பார்க்க முடியாவிட்டாலும், அவளுடைய கண்ணொளியைக் கொண்டும் நடையின் ஒயிலைக்கொண்டும், கரங்களின் அமைதியைக்கொண்டும், அவள் அணிந்திருந்த விலையுயர்ந்ததும், பொற்சரிகை விளிம்புடையதும், கண்டார் கண்களைக் கவரத்தக்கதுமான நெடு அங்கியைக் கொண்டும், அவள் ஒரு பெரிய தனவந்தர் வீட்டுப் பெண்ணாக இருக்கவேண்டுமென்றும், சிறுவயதும் பேரழகும் வாய்ந்தவளாக இருக்கவேண்டுமென்றும் அவர் அனுமானித்தறிந்தார். இந்த ஸ்திரீயின் அழகை அவர் இவ்விதம் கவனித்துக்கொண்டிருந்தபோது காஞ்சிபுரத்தில் அந்தஸ்திரீ சித்திரவர்மனைப் பார்க்கவந்ததும், அவனை நாடகத்துக்கு வரும்படி அவள் வற்புறுத்தியதும், தன்னையும் அவள் உடன்கூட்டி வந்ததும், திடீரென்று கூட்டத்தில் அவளும் சித்திரவர்மனும் மறைந்துபோனதுமான விஷயங்கள் இடையிலேயே அவர் மனத்திற்றோன்றி பலவகையான சந்தேகத்தையும் ஆச்சரியத்தையும் விளைவித்தன. அந்த ஸ்திரீ முகத்தை மறைத்துக்கொண்டு வந்ததற்கும், சித்திரவர்மன் அவளுடைய பெயரையும் ஊரையும் தனக்குச்சொல்லாமல் மறைத்ததற்கும், தன்னுடைய உண்மைப்பெயரைக்கூறாமல் 'சத்திய சந்தர்' என்னும் புனைபெயர் ஒன்றை அந்த ஸ்திரீக்குச் சித்திரவர்மன் சொல்லி அவளை ஏமாற்றியதற்கும் அந்தரங்கத்தில் ஏதாவது ஒரு காரணம் இருக்கவேண்டுமென்று சத்தியசந்தர் என்னும் புனைபெயர் பூண்ட கமலநாதன் நினைத்தான். அந்த ஸ்திரீ யார் என்றும், அவளுடைய பெயர் யாதென்றும், அவளுடைய ஊர் எதுவென்றும், அவள் சித்திரவர்மனை நாடகத்திற்கு வரும்படி வற்புறுத்தியது எதற்காக வென்றும், அவன் பிடிவாதமாய் மறுத்ததற்குக் காரணம் என்னவென்றும், சித்திரவர்மனும் அவளும் கூட்டத்தில் தற்செயலாகத் தன்னை விட்டுப் பிரிந்து போனார்களா, அல்லது வேண்டுமென்றே பிரிந்து

போய்விட்டார்களா என்றும் நிச்சயித்தறிந்துகொள்ள கமலநாதன் முயன்றான். ஆனால் எவ்வளவுக்கெவ்வளவு அவன் முயன்றானோ அவ்வளவுக்கவ்வளவு இவ்விஷயங்களில் அவனுக்கு ஏற்பட்ட சந்தேகங்கள் அதிகமாயின. ஆனால் ஒருவிஷயம் அவனுக்குத் தெளிவாய்த் தோன்றியது—அதாவது, அந்த ஸ்திரீ பெரும் சதியாலோசனைக்காரியாயும் கொடியவளாயும் இருக்கவேண்டுமென்பதுதான்! ஆகவே, பொதுவாய் அவளிடத்தில் ஒருவிதமான அருவருப்பும் அலட்சியமும் கமலநாதனுக்குத் தோன்றின. அவள் தனக்கு விரோதியாக இருக்கக்கூடுமோ—அல்லது ஒரு சமயம் ஆகக்கூடுமோ—என்று கமலநாதன் சந்தேகித்தான்.

சிற்சில சமயங்களில் மனிதன் தன்னுடைய செயற்கை அறிவினாலும் பிறருடைய போதனையாலும் அறிய முடியாத விஷயங்களை மிக எளிதில் முன்னதாகவே அறிந்துகொள்ளுகிறான். பின்னால் நேரப்போகும் ஒரு நல்ல சம்பவத்தையோ அல்லது கெட்ட சம்பவத்தையோ மனிதர்கள் முன்னதாகவே குறிப்பாலறிந்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களுமுண்டு.

சிலரைக் கண்டவுடனேயே ஒருவிதமான வெறுப்பும் பகைமையும் நமக்கு உண்டாகின்றன. அவர்களோடு நட்புரிமை பாராட்ட நாம் அஞ்சுகின்றோம். அவர்களுடைய கூட்டுறவிலிருந்து நீக்கிக்கொள்ள முயல்கின்றோம்; சிலரை முதல்முதல் பார்த்தவுடனேயே அவர்களிடத்தில் ஒருவிதமான பற்றுதலும் அன்பும் நம்மையறியாமலே நமக்கு உண்டாகின்றன, எவ்விதமாகவாவது அவர்களுடைய சிநேகத்தைப் பெறவேண்டுமென்று நாம் விரும்புகின்றோம். பார்வைக்கு நல்ல தோற்றமுடையவர்களாயும், சிறந்த அழகு வாய்ந்தவர்களாயும், இனிமையாய்ப் பேசும் திறமையுடையவர்களாயும் இருக்கின்றவர்களைக் கண்டாலும் சிற்சில சமயங்களில் ஒருவிதமான அருவருப்பும் பகைமையும் அவர்களை ஆரம்பத்தில் பார்க்கும்போதே நமக்கு உண்டாகின்றன. அவர்களுடைய இனிமையான வெளித்தோற்றத்தையும் ஊடுருவிக்கொண்டு அவர்களுடைய கொடுமையான எண்ணங்களும் செயல்களும் வெளிவருகின்றன. வேறு சிலர் பார்வைக்குக் குரூரமான தோற்றமுடையவர்களாயும் கொடுமை யுடையவர்களாயும் காணப்பட்டாலும் அவர்களிடம் ஏதோ ஒருவிதமான பற்றுதல் எக்காரணம்பற்றியோ நமக்கு உண்டாகிறது. இவைகளைக் கூர்ந்து கவனிக்கும்போது உண்மையான காரணம் நமக்குப் புலப்படாவிட்டாலும்,—நன்மை தீமை; நல்லவர்கள் தீயவர்கள் என்று முதலிலேயே கண்டுபிடிக்கக்கூடிய ஒருவிதமான இயற்கைப் பகுத்தறிவு ஒவ்வொரு மனிதனிடத்திலும் அமைந்திருக்கிறதென்பது இனிது புலப்படுகிறதன்றோ? ஆகவே, கமலநாதன் அந்தஸ்திரீ தன் விரோதியாக இருக்கக்கூடுமோ என்று சந்தேகித்தது ஆச்சரியமன்று. அவன் தன் எரிதில் நிற்கும் ஸ்திரீயையும் கவனியாமல் அந்தஸ்திரீயைப்பற்றிப் பற்பல விதமாய் ஆலோசனை செய்தபடியே தன்னையும் மறந்திருந்த சமயத்தில் அவன் எதிரில் நின்ற ஸ்திரீ அவனை நெருங்கி வந்து, "ஐயா, தாங்கள் இங்கே வாடிய முகத்துடன் தனியாய் உட்கார்ந்திருக்கக் காரணம் யாது? தாங்கள் யார்?" என்று இனிய குரலோடு அன்புததும்ப வினவினாள்.

"அம்மா! நான் நாடகம் பார்ப்பதற்காக வந்தவன் தான்! என்னுடன் வந்த நண்பர்கள் இருவர் கூட்டத்தில் என்னைவிட்டுப் பிரிந்துபோனார்களானதாலும் என்னிடம் பிரவேசச்சீட்டு வாங்குவதற்குப் பணம் இல்லையாதலாலும் நான் இங்கே உட்கார்ந்திருக்கின்றேனே தவிர வேறில்லை" என்று கமலநாதன் கூறி "அம்மா! தாங்கள் யார்? நீங்களும் நாடகம் பார்க்கத்தான் வந்தீர்களோ? உங்களுடன் வேறு ஒருவரும் வரவில்லையோ?" என்று மீண்டும் வினவினான்.

"ஐயா! நானும் நாடகம் பார்க்கத்தான் வந்தேன்! என்னுடைய வீட்டிலிருந்து உறவினர்கள் நால்வர் வந்திருக்கின்றார்கள்! ஆனால் அவர்கள் என்னை வரக்கூடாதென்று தடுத்தபடியால், அவர்களால் கண்டுபிடிக்க முடியாதிருக்கவேண்டி நான் இந்த நெடு அங்கி அணிந்து வந்திருக்கின்றேன்! நான் தங்களை நாடக சாலைக்குள் அழைத்துப்போகிறேன்! என்னுடன் வாருங்கள்" என்று அன்புடனும் மரியாதையுடனும் அந்த ஸ்திரீ சொன்னாள்.

நாடகசாலைக்குள் சென்றால் ஒருகால் சித்திரவர்மனையும் அவனுடன் வந்த, பெயர் தெரியாத ஸ்திரீயையும் காணக்கூடும் என்று நினைத்தும், ஒரு ஸ்திரீ வலிய வந்து அன்புடன் அழைக்கும்போது அவளுடைய வேண்டுகோளை மறுப்பது தருமமன்று என்று கருதியும் கமலநாதன் அவளுடன் நாடகசாலைக்குப் போக இசைந்தான். அந்தஸ்திரீ முதல்வகுப்புப் பிரவேசச் சீட்டு இரண்டு, பணங்கொடுத்து வாங்கிக் கமலநாதனையும் அழைத்துக்கொண்டு நாடகசாலைக்குள் சென்றாள். சபையின் தென்புறத்தின் ஒரு பகுதியில் ஸ்திரீகளுக்காகப் பிரத்தியேகமாய் இடம் அமைக்கப்பட்டிருந்தது. அவ்விடத்திற்குச் சென்று மூன்றாவது வரிசையில் வடக்குக்கோடியில் இருந்த நாற்காலியில் அந்தஸ்திரீ உட்கார்ந்தாள். கமலநாதன் புருஷர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த இடத்தில் மூன்றாம் வரிசையில் தெற்குக்கோடியில் கிடந்த நாற்காலியில் அமர்ந்தான். அதாவது கமலநாதனும் அந்த ஸ்திரீயும் ஒருவர் பக்கத்தில் ஒருவராய் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் இருவருடைய நாற்காலிகளையும் பிரித்துக் காட்டியது, சபையின் கிழக்கு மேற்கில் சென்ற ஒரு தடிப்பான வெள்ளை நூல் கயிறுதான்! இவர்கள் இருவரும் சென்றபோது அரங்கத்தில் சுலோசனைவருகிற சமயமாயிருந்தது! பெயர் தெரியாத ஸ்திரீயின் எதிர்பாராத சந்திப்பும் பிரிவும் கமலநாதனுக்குப் பலவகையான சந்தேகங்களைக் கொடுத்தன.



# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### I. ஆத்திசூடி விளக்கம்

#### 30. அறனை மறவேல்

தர்மத்தைஎன்றும் மறவாமலிருக்கவேண்டும் என்பது இதன் பொருள். தர்மாதர்யப் பகுத்தறிவு தர்ம உணர்ச்சி ஏற்றம் முதலியவைகளை மறவாது ஒருவன் இருந்தால் அவனுக்கு உடனே தர்மத்தில் முயன்று நிற்கப் பூர்வப்பழக்கங்கள் எவ்வளவு தடையாகஇருந்தபோதிலும் அறனைச் செய்தால் நலமாகவிருக்குமே என்ற விருப்பம் நாளுக்கு நாள் ஓங்கிக்கொண்டே வரும். இப்படி வருவதால் தர்மத்தில் பழகும்படி வந்து நாளடைவில் தர்மத்தை விடாது அனுஷ்டித்து அதர்மத்தை முற்றிலும் விட்டு நீங்கியிருக்கும் நிலை தானே வந்தெய்தும். இதுபற்றியேதான் அறஞ்செய விரும்புவதற்கு அறனைமறவாமை முக்யஸாதனம். உலகில் ஜனங்களிடம் அறனை மறத்தலாகிய கொடுமை ஏற்பட்டு தர்மம் தாழ்ந்து அதர்மம் தலைதூக்கி நிற்குங்காலத்தில் பரம்பொருள் அவதாரம் எடுத்து, அதர்மவான்களை நிக்ரஹித்து தர்மவான்களை பரிபாலிப்பதோடு நிறுத்திவிடாது, இவ்வாறு தலைகீழாகக் குழம்புவதன் காரணமாகிய அறனைமறத்தல் என்ற கொடுமை நிலை போய்க் கொடியவர்களும் அறஞ்செய விரும்புவதற்காக தர்ம ஸம்ஸ்தாபனம் (அறனை நிலைநிறுத்தல்) என்ற மூன்றாம் அரிய செயலையும் செய்து முடிக்கிறார். இதுதான் தர்மாதர்மக் குழப்பத்தை நீக்கும் முக்கிய முகாந்திரம்.

அறம் இன்னது என்ற உணர்ச்சி நீங்கிவிட்டால் பின்னர் மறமே மனதில் குடிகொண்டுவிடும். பாழ்மனம் பாபநிலயம்; அதாவது, தர்ம சிந்தையின்றி அதை மறந்து சும்மாவிருக்கும் மனதில்தான் பாப எண்ணங்கள் ஓங்கித்தழைக்கும். நமது மனம் எல்லாம் இந்திரியவசப்பட்டு விஷயங்களில் புகுந்து உழலுவதும், இதனால் ஏற்படும் உட்பதிவுகள் எண்ணரூபமாகக் கிளம்புங்கால் அவைகளின் வசப்பட்டு நிற்பதுமே தொழிலாக உள்ளது. இப்படிப்பட்ட மனம் அறனை மறந்து விடுமாகில் அடக்குவார் அற்ற குதிரை முதலியவைகள் போல அதர்ம மார்க்கத்திலேயே பாய்ந்தோடி விடும். வீட்டிலுள்ள ஸாமான்களைத் தூசி தட்டிச் சுத்தமாக வைத்துக்கொள்ளாவிடில் நாளடைவில்தூசிபடிந்து அழுக்கடைவது எப்படி இயற்கையோ, அப்படி தர்மவிஷயத்தில் தொழில்படுவது மூலமாக மனதை நல்ல வழியில் செலுத்தி அதை நல்ல சுத்தமாக வைத்திராவிடில் அதன் ஸாதாரண இயற்கைக்கேற்ப பாப அழுக்குகள் படிந்துவிட அதர்ம வழிகளிலேயே மனம் பாய்ந்தோடத்தொடங்கி விடும். நற்கதியை அடைய வேண்டும் என்ற உண்மை ஆவலுடையவர்கள் மனதைப் பாப வழிகளில் செல்லவே ஒட்டாது தகைய வேண்டும். அதற்கு முதல்படி அறனைமறவாதிருத்தலே. இதுபற்றியே பகவான் கீதையில் உயிருள்ள வரையில் காம கோபங்களின்வேகத்தைத்தகைய வல்லோனே சிறந்தவன் என்று கூறியுள்ளார். இதுஏற்படுவதற்கு முதல்படி அறனை மறவாதிருத்தல்.

அறனை மறந்து சும்மாவிருப்பவர்கள் அதர்மத்தில் புகுந்து விடுவார்கள் என்பதற்கு இக்காலத்திய கிராமவாஸிகளேநல்லதிருஷ்டாந்தம். அவர்களுக்கு,முக்கியமாக நதீதீரத்திருக்கும் தஞ்சாவூரார் முதலியவர்களைப் போன்றவர்களுக்கு, நிலம் எளிதில் பலனைக்கொடுத்துவிடுவதால் க்ருஹஸ்தர்களது முதல் தர்மமாகிய குடும்பபாரணம் ஒருவாறு எளிதில் நடந்தேறிவிடுகிறது. அதிகமாக உழைக்காமல் மிகுந்த காலங்களை எல்லாம் க்ருஹஸ்தன் தர்மவழிகளிலும் தர்மம் இன்னதுஎன்பதை மறவாமலிருப்பதிலும் செலவிட வேண்டியது. கிராமவாஸிகள் அவ்வாறு செலவிடாமற் போய்விட அவர்களுக்குப் பொழுதே போவதில்லை. பலர் கூடி வம்பளக்கின்றனர். க்ராமக்கக்ஷி ப்ரதிகக்ஷி வியாஜ்யங்கள்: பொய்க் குற்றம் சாட்டி எதிரிகளை வருத்துவது முதலிய கெட்டவழிகளில் முயன்று கச்சேரியும், வ்யவஹாரமும், வம்பளப்புமாக இருந்து விடுகின்றனர். பட்டணவாஸங்களிலோ குடும்ப பாரணத்திற்கு நாள்முழுவதும் உழைக்கவேண்டியிருப்பதாலும் மிகுந்த சிறுகாலத்தை அவர்களுக்கு ஸத்கர்மானுஷ்டான முதலிய நல்லவழிகளில் செலவிட எண்ணமிருப்பதாலும் பொழுது போய்விட அதர்மத்தில் புக இடமில்லாமலிருக்கிறது. இந்த அறனை மறந்து கெட்ட வழிகளில் பாய்ந்தோடும் தன்மை கிராமங்களில் ஏற்பட்டு விட்டபடியால் நல்ல புத்தியுடைய ஒருவரும் க்ராமவாஸத்தை விரும்பாமல் கிராமங்கள் பாழ்த்துக்கொண்டே வருகின்றன. அங்கு விதவைகளும் கிழவர்களுமே அதிகப்பட்டு வருகின்றனர், படித்த யௌவனபுருஷர்கள் பட்டண வாஸத்தைத் தேடி வந்து விடுகின்றனர். சும்மா விருந்தாலோ ஸ்வரூபத்தைக் காட்டிவிடும் மனது. ஆதலால் அதற்குத் தகுந்த வேலையை ஸத்கர்ம மூலமாகவாவது அல்லது ஸத்விஷய ஆராய்ச்சி மூலமாகவாவது கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும்.

இதுவரையில் கூறிவந்ததிலிருந்து, அலையும் மனதையுடைய நம்போன்றவர்கள் தான் அறனை மறவாதிருக்க வேண்டும்: இப்படி இருந்து தேறியவர்களாகிய மஹான்கள் இதைக் கவனியாது இருந்துவிடலாம், என்று குதர்க்கம் பண்ணத்தொடங்கி சில ஆபாஸவேதாந்திகள் தர்மானுஷ்டானம் அனாவசியம் ஞானமே மோக்ஷ ஸாதனம் என்றுகூறி, எல்லா ஸத்கர்மங்களையும் விட்டுவிடலாம் என்பர். இவர்கள் பழக்கத்தில் ஸத்கர்மங்கள் செய்ய வேண்டிய புண்ய காலங்களிலும் தருணங்களிலும் விடாது துஷ்கர்மங்களிலேயே முயன்று பாழும் மனம் பாப நிலயம் என்பதை விளக்கி விடுகின்றனர். இப்படிக் குதர்க்கம்

பண்ணி அதோகதி யடையாது பிழைப்பதற்காகவே ஒளவையார் அறனை மறவேல் என்று பொதுவாகக் கூறிவிட்டாள். இதன் ஆற்றலைப் பின்வருமாறு விவரிக்கலாம். தர்மம் இன்னது என்று உணர்ந்து அது மோக்ஷ வழியில் பயனற்றது என்று அதை மனப்பூர்வமாக ஒருநாளும் மறக்கவே கூடாது! இந்த உணர்ச்சி ஏற்படுமாகில் அறனை விலக்காது அதிலேயே முயல வேண்டும் என்பது தான் மறவேல் என்பதன் கருத்து. நாமாக தர்மத்தை விடலாகாது, மனப்பூர்வமாக தர்மானுஷ்டான மூலமாக முயற்சித்துவிட வேண்டியது அதர்மத்தை. தர்மத்தை மோக்ஷ ஸாதனமல்ல என்று மனப்பூர்வமாக விடவே கூடாது. மனது பக்குவமடைய, தர்மத்தில் எவ்வளவு பற்று ஏற்பட்டிருந்தபோதிலும் அந்தத்தர்மம், சவம்சுடும் தடி போலும், தூங்குகிறவன் கைப்புஷ்பம் போலும், புளியம்பழம் கொப்பரைத்தேங்காய் தோடுகள் போலவும், தானே நழுவிவிடும். இப்படி அறன் ஒருவனை விட்டு நீங்கவேண்டுமே யொழிய அறனை ஒருவன் வேண்டுமென்று மறந்து நீக்கவே கூடாது. அது பாபத்திலேயே ஒருவனைக் கொண்டு சேர்த்து விடும்.

அப்படியானால் கர்மத்தை விட்டு விடுவதாகிய ஸந்யாஸம் என்ற ஆச்ரமமும் தவறாக முடிந்து விடுமே என்ற சங்கை உண்டாகலாம். இது வீண் குதர்க்கம் தான். ஸந்யாஸி ஆச்ரமத்தில் மற்றைய ஆச்ரம தர்மத்தையும் விரிந்து கிடப்பதாகிய கர்மங்களையும் விட்டுவிட வேண்டும் என்ற நிபந்தனையே ஒழிய வேறல்ல. ஆதலால் ஸந்யாஸிக்கு தர்மமே இல்லையென்று கூறிவிடலாமா? அவனுக்கும் சில தர்மங்கள் உண்டு. அவைகளை அவன் மனப்பூர்வமாக மறந்து நீக்கலாகாது. அவனுக்கு அவன் தர்மானுஷ்டானவரையில் 'அறனை மறவேல்' என்று ஒளவை அருள்வாக்குப் பொருந்தும். இந்த தர்மங்கள் இன்னவை, அவை இவ்வாறு தாமே நழுவும், அப்படி நழுவிவிடுவதற்கு வேண்டிய ஸஹாய சாஸ்திரங்கள் ஸந்யாஸிக்கு இவ்வாறு செய்திருக்கின்றன என்பதை நாரத பரிவ்ராஜகம் முதலிய ஸந்யாஸ உபநிஷத்துக்களில் விஸ்தாரமாகக் காணலாம். இப்படிப்பட்ட ஆச்ரமத்திலிருப்பவர்கள் தான் ஸந்தியாவந்தனமே உனக்கு நமஸ்காரம், தர்ப்பணாதி கர்மங்களே உங்களை அனுஷ்டிக்க என்னால் முடியாது. ப்ரபஞ்ச வசீகர ஸகலமனோஹரனை க்ருஷ்ண பரமாத்மாவிடம் இடைவிடாது மனதைச் செலவிட்டுக் கொண்டிருப்பதே போதும், என்று க்ருஷ்ண கர்ணாம்ருதம் பாடிய லீலாசுகரும், 'மோஹமாகிய தாய் இறந்தாள், ஞானமாகிய பிள்ளை பிறந்தான். இந்த இருவித ஸூதகத்தில் நான் ஸந்த்யாவந்தனாதி கர்மங்களை எப்படி அனுஷ்டிப்பது' என மைத்ரேய உபநிஷத்தும் கூறுவது போலக் கூறி, தமது ஆச்ரமத்திற்குக் கீழ்ப்பட்டிருக்கும் கர்மங்களை விடலாம்: ஆனால் ஸந்யாஸிகளுக்கு ஏற்பட்ட கர்மங்கள் தாமே தான் நழுவவேண்டும், ஸாக்ஷாத்கார அவஸரத்தில் மேலான நிலைமை அடைந்த பெரியோர்கள் ஸாக்ஷாத்கார நிலையிலிருந்து வெளிப்படும்பொழுது பூர்வப்பழக்கத்தால் விதி நிஷேதங்களில் கட்டுப்படாது தாமே ஸத் வழியில் தான் ப்ரவர்த்திப்பார்கள். அவர்கள் மனம் நல்ல நிலையே தான் பாய்ந்தோடும்: வேறு வழியே அவர்களுக்குத் தோற்றாது. இப்படி இருப்பவர்களா 'நாம் போவது ஸன்மார்க்கம், இது நமது மேலான நிலைக்கு அவசியமன்று, மேலும் துன்மார்க்கத்தில் முயன்றால் நம்மை அது என்ன செய்துவிடும்' என்று மனது கவலை பாய்ந்தோட நல்லது கெட்டது என்ற பகுத்தறிவின்றி நல்ல வழிகளை நீக்கிக் கெட்ட வழிகளில் முயல்வர்! இத்தகைய மஹான் உலகில் இல்லவே இல்லை. இப்படி குதர்க்கம் செய்பவர்கள் மனதில் ஸங்கல்ப ரூபமாகத்தான் இருக்கிறான். அதன்படி அந்தக்குதர்க்கியாலும் நடத்த முடியாது. ஸாதாரண நிலையில் அவன் அப்படி இருக்கமுயன்றால் கெட்ட வழிகளில் கிடந்து தத்தளிப்பன். மேலான நிலையை அமைந்து விட்டால் கெட்ட வழிகளில் மனமே செல்லாது. ஆகவே உலகில் தர்ம விஷயமாக அதர்மத்தை விலக்க தர்மத்தில் முயலுவதும், பின்னர் தர்மத்தில் பழகுவதும்; தர்ம உணர்ச்சி ஸமாதி அனுபவத்தால் தானே நழுவிவிடுவதும், ஸமாதியிலிருந்து வெளிவருங்கால் இயற்கையாகவே தர்ம வழியில் நடப்பதுமே ஆகிய நான்கு நிலைதான் உண்டு. தர்மம் பயனற்றது என்று விலக்கி அதை மறந்துவிடும் நிலை இல்லவே இல்லை. ஆதலால் மனப்பூர்வமாக அறனை மறந்து விலக்கேல் என்பதே அறனை மறவேல் என்பதன் கருத்து. இம்மாதிரி நிலையிலிருந்து தான் ஜனகாதிகள் ஜீவன் முக்தர்களாயினும் தர்மானுஷ்டானத்தை விடாதிருந்தனர். ஆத்திசூடி வெண்பாவிலும்:—

> பத்தாகிரி ராஜன் பகர்ஜனகன் மெய்விதுரன்
> சித்தபரி சுத்தம் செலுத்துதலால்—இத்தரையில்
> மன்னனெனும் புன்னைவன நாதா யாவுறினும்
> இந்நிலைவால் அறனை மறவேல்

என்று காணப்படுகிறது,

மாட்டுத்தீவனம் (சோளம்):—சோளத்தட்டையை மாட்டுக்கு ஆகாரமாக உபயோகப்படுத்துவது ஸகஜம். ஆனால், சோளத்தையே முழுமையும் ஆகாரமாய்க் கொடுக்கக்கூடாது. ஏனெனில் பசுக்கள் பால் நன்றாய்க் கரக்குமாறு அவைகளுக்கு "ப்ரோட்டீட்" என்ற வஸ்து நிறைந்தவைகளையே தீவனமாகக் கொடுக்கவேண்டும். சோளம் "கார்போ ஹைட்ரேட் "என்னும் வஸ்துவை ஜாஸ்தியாயுடையதேயொழிய "ப்ரோட்டீட்" நிரம்பவும் குறைச்சல். ஆனதால், ஒரு பசுவுக்குக் கொடுக்கும் தீனியில் ½-பங்கு அல்லது 5-ல் 3-பங்குக்கு மேல்படக்கூடாது. தென் ஆபிரிக்காவில் பின் வருபவை ஒரு பசுவுக்குத் தினசரி ஆகாரம்:—பச்சை சோளத்தட்டை 17½ சேர்; சோளம், 1½ சேர்; வைக்கோல புல், 5 சேர்; தவுடு, 1½ சேர்; பருத்திக் கொட்டை, 1-சேர்; சிக்காகோ க்ளூடின் ஆகாரம் 1-சேராகும்.



# மொழி பெயர்ப்பு விளக்கம்

## TRANSLATION MODELS

Scarcely was the war in Greece concluded, when Darius II died and his eldest son Artaxerxes, was chosen King in his stead. Defeated in his conspiracy by this unexpected event Cyrus determined to get by force what he could not do by cunning. As his official command extended over the whole of Asia minor he was able to raise large levies of native troops to accompany him. His main hope, however, rested on his ability to collect an army of Greek mercineries. He had seen them fight and knew their worth, as he recognized the weakness of his own soldiers. His winning personality, his close friendship with many Spartan princes, and the attractive pay he offered easily secured him all the troops he desired. Some 13000 Spartans, under the supreme command of one Clearchus, gathered together under his banner; and in 401 B. C. the historic march began.

க்ரீஸ்தேசத்திய யுத்தம் முடிந்ததும் இரண்டாம் டெரயஸ் இறந்தான். அவன் முதற்பிள்ளை ஆர்டாஸெர்க்ஸஸ் அவனுக்குப் பின் அரசனாக்கப்பட்டான். திடீரென்று ஏற்பட்ட இந்த முடிவால் ஸைரஸ் சதியாலோசனை முறிவுபட்டுப்போக, சூதால் கிடைக்காததை சண்டையிட்டுக் கைப்பற்றத் தீர்மானித்தான். அவனது உத்யோக அதிகாரம் சிறிய ஆசியா முழுவதும் சென்று வந்தமையால் தன்னைப் பின் தொடர்ந்து உதவியாகவர அந்நாட்டுப் பெரியபடைக் கூட்டம் ஒன்றைச் சேர்க்கும் திறனிருந்தது. ஸைரஸுக்கு க்ரீஸ் தேசத்திய கூலிவீரர்களாலாகிய படை ஒன்றைச் சேர்க்கும் திறன் இருந்ததே அவனுடைய நம்பிக்கைக்கு முக்ய ஆதாரமாகவிருந்தது. சண்டையிடுங்கால் அவர்களையும் பார்த்திருக்கிறானதலால், தன் வீரர்களது பலக்குறைவை எப்படி உணர்ந்திருந்தானோ, அதுபோல அவர்களது சிறப்பையும் அறிந்தவனாகவிருந்தான். பார்ப்போர் உள்ளங்கவரும் அவனது தன்மை, ஸ்பார்டன் இளவரசர்களுடன் அவனுக்கிருந்த நெருங்கிய நட்பு, அவன் கொடுப்பதாகத் தீர்மானித்த ஆவல் உண்டாக்கும் சம்பளம் ஆகிய இவைகள் எல்லாம் அவன் விரும்பிய அளவு படைகளையும் கொண்டு சேர்த்துவிட்டன. ஸுமார் 13000 ஸ்பார்டர்கள் கிளியார்க்கஸ் என்ற தீரனால் நடத்தப்பட்டு ஸைரஸின் தலைமைக்கு உட்பட்டு நிற்க, தேசசரித்திரங்களில் பெயர்போன போர்ப்பயணம் கி. மு. 401ம் வருஷத்தில் தொடங்கியது.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### நந்தன் சரித்திரம்

### 7. சித்ஸபைச் சருக்கம்

*அல்லது*

### நந்தன் ஸித்தி பெற்றது

திருநாளைப்போவார் புராணம் இந்த ஸமயத்தில் ஒரு அத்புதஸம்பவம் நடந்தேறியதாக ஆனந்தபரவசப்பட்டுக் கூறும். ஒரு பரிசுத்த தினத்தில், எல்லா தீக்ஷிதர்களின் ஸ்வப்நத்திலும் நடராஜப் பெருமான் தோன்றி தமது பக்த சிகாமணியான நந்தனாரைத் தமது ப்ராஹ்மணக் கூட்டத்தில் சேர்த்துவிடவேண்டும் என்று உத்தரவளித்தார். மறுநாளுதயத்தில் ஸூர்யன் ஜகஜ்ஜ்யோதியாய் விளங்கிநிற்கையில் ப்ராதஸ்நாநம் செய்து விபூதிருத்ராக்ஷம் அணிந்து அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு தீக்ஷிதர்கள் சித்ஸபையில் ஒரு பொதுக்கூட்டம்கூடித் தமக்குஏற்பட்ட அற்புதக்கனவைப்பற்றியவைகளை ஆராய்ந்து பார்க்கத்தொடங்கினர். அவர்களுள் பெரியவரான அப்பைய தீக்ஷிதர் முதலில் எழுந்து நடராஜர் தம் கனவில் உதித்ததையும், உத்தரவளித்ததையும், அக்னி ப்ரவேச மூலமாக நந்தனைச் சுத்தப்படுத்தி எம்பெருமான் கட்டளையை நிறைவேற்றலாம் என்பதையும் தெரிவித்தார். அவருக்கடுத்த வயதுடைய குப்பண்ண தீக்ஷிதர் எழுந்து தம் கனவின் அனுபவத்தை வெளியிட்டு முற்கூறியதை வற்புறுத்தினர். உடனே ஸுப்பா தீக்ஷிதர் எழுந்து முன்னர் பேசிய இருவருக்கும் தண்டம் ஸமர்ப்பித்து, 'என்ன ஆச்சர்யம்! என் ஸ்வப்நம் போலவே இருக்கிறதே இவர்கள் வெளியிட்டது!' என்று வியந்து வார்த்தையாடினர். பிறகு நடராஜ தீக்ஷிதரும் இப்படியே செய்ய, எல்லோரும் ஒரே அடியாக எழுந்து, 'நாங்கள் எல்லோரும் இப்படியே கனவுகண்டோம்' என்று கோலாஹல கோஷம் செய்தனர். உடனே காற்று வீசி அடித்துக்கொண்டிருக்கையில், ஸூர்ய வெப்பத்திற்கு எதிரே ஒருஅக்னி வளர்க்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இதற்குள் நந்தன்பக்தி பரவசநிலைகலந்து எழுந்து,

> தெண்டனிட்டேன் என்று சொல்லடி—என்ஸ்வாமி
> அண்ட முகட்டாடும் பொற்பாதத்திற்கு—நான் (மின்
> தெண்டனிட்டேனென்று சொல்லடி

என்று பாடிக்கொண்டிருக்க,

எல்லோரும்:—நடராஜா நடராஜா

என்று நாமஸங்கீர்த்தனம் செய்தனர். நந்தனார் மறுபடியும் பாடத்தொடங்கயத்தனிக்கையில் தன்வேண்டுகோள்கள் வீணான விஷயமான துக்கம் வந்து அடைத்துக் கொண்டு விட்டது. 'இன்னும் ஸந்நிதானம்

நெருங்க விடமில்லாதிருக்கிறதே' என்று ஏங்கிப் பரிதவித்துக் கொண்டிருந்தார்.

இங்கு இப்படி இருக்கையில் தீக்ஷிதர்கள் எல்லோரும்,

*தொண்டரைக் காண்கிலமே—தில்லையில் வந்த*
*தொண்டரைக் காண்கிலமே*

என்று பரபரப்புடன் நந்தனாரைத் தேடிக்கொண்டு வந்தார்கள். எங்குமே தேடியும் காணாமல் போக ஓரிடத்தில் உட்கார்ந்து நடராஜப் பெருமானை

உனது மஹிமையை யொருவரறிவார்களோ
உலகிலுள்ளோர்; ஐயனே
ஓது நந்தனார் தம்மை வரச் செய்யும்
ஊழின்வினை தவிர்த்தவர்க்கு அருள் செய்யும்.

என்று மனப்பூர்வமாகத் துதித்தனர்:—பின்னர் தேடத் தொடங்கி நந்தனாரைக் கண்டு நெருங்கி ஆவலுடன் வந்தனர். அப்பொழுது நந்தனார்:—
கிட்ட நெருங்கி வரவேண்டாம் ஸ்வாமிகாள்—காதில்
கேட்ட பேர்க்குப் பாபம் தரும் எனது ஜன்மம்
என்று தமது பிறவியை இகழ்ந்து உருகினார். அதற்கு வேதியர்:—

ஜாதியிலுயர்ந்தாலென்ன—இந்தப் பேறும் பெருமையுமில்லையே

என்று நந்தனார் சிறப்பை எடுத்துப் பாராட்டிப் பரவசராகி, தாம் கண்ட அத்புதக் கனவை அவருக்கு எடுத்துரைத்து சித்ஸபைக்கு எதிரில் தெற்கு மாடவீதி மூலையில் தீவளர்த்திருந்த விடத்திற்கு அழைத்தனர். 'நையுமனத்திருத் தொண்டர்' நானுய்ந்தேன் என தொழுது கிளம்பி அவர்கள் பின்னே சென்றனர். நெருப்பைக் கண்டதும்:—

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடி நிழலே

என்று ஆனந்த பரவசமாகப் பாடிக்கொண்டு உடனே குதித்து விட்டார் அந்த திவ்யாக்னியில் நையுமனத் திரு நாளைப்போவார். ஆஹா நந்தா! பக்தசிகாமணே!! என்ன பக்தி பரவசம்!!! குதி நெருப்பில்! உன்விஷயத்தில் தான்

பாயா இதன்மீது பற்றிவிடும் பல்படைகள்,
தீயாது செந்தழலும், சேர்ந்திதனைத்—தோயம்
நனையாது, வாயுவிதை நண்ணியுலத்தாதால்
நினையாய் மற்றித்தகைமை நேர்ந்து

என்பது நன்றாகப் பொருந்தும். நீ ப்ராஹ்மணனே. உன் பறையத்தனம் எரிந்து போய் விட்டது. இந்த ஸமயத்தில் உன்னைப் பற்றி:—

"அருவாகி உருவங்களனைத்துமாகி, உள் வெளியின்றி குறை நிறைவிற்கப்பாற் பட்டு, குணங்குறியின்றி ஒன்றென வேதங்களுன்னைக் கூற, மலையின் உயர்ந்தும், ஆகாயத்தின் அகன்றும், முடிந்த ஞானானந்தம் அநுபவிக்கும் ஞானியர்கள் திருவுந்தியில் அவன் அவள் அதுவாக இன்றித்தனியழகுவாய்ந்தவனே! யாருன்னை அறிகிற்பாரோ" என்றுதான் கூற வேண்டும்.

உட்கருத்தை ஒட்டிநோக்கில் எல்லா அத்புதக்கதைகளும் உண்மை தான் எனபதற்கு ஸந்தேஹமே இல்லை. வெளிப்படையாக உள்ளவிஷயங்களை ஒட்டி நோக்கினும் அவைகளுக்கு ஒரு சிறந்த பொருளும் உண்டு. இந்த விஷயமாக ரேனன் என்ற குணதோஷ நிரூபகர் பின்வருமாறு கூறுகிறார். "அஸாத்ய காரியங்களே பக்தியை உண்டாக்கி நிலைபெறச் செய்பவை இவைகளைவிடச் சற்றுத்தாழ்ந்த ஸாதாரண விஷயங்கள் பக்தர்களுக்குத் திருப்தியை உண்டாக்க மாட்டா.

இன்றைக்கும் நாளைக்கும் திரௌபதி ஐந்துகணவருக்கு வாழ்க்கைப்பட்டவளாயினும் பதிவிருதை தான் என்று ஸ்திரப்படுத்த சிலஹிந்துக்கள் தீமிதிக்கின்றனர். இதுவுமன்றி, நேரான உண்மையைவிட கட்டுக்கதையைப்போல விளங்கும் ஒருகதை இவ்வாறு சிறந்தஉண்மையாகவே இருக்கும்: இவ்வாறு அத்புதக்கதைகள் அவைகளைவர்ணிக்கும் கதாநாயகன் மஹிமையாலேயே உண்டாவன: அவனில்லாவிடில் இத்தகைய அத்புத விஷயங்களை ஒருவராலேயும் ஸ்மரிக்கக்கூட முடியாது: அவனுடைய மஹிமை தான் அவனுடன் ஸம்பந்தப்படும் ஒவ்வொருவரையும் இவ்வாறு மேன்மைப் படுத்துவது என்பதை நன்றாக உணரவேண்டும். அடிக்கடி மஹான்களே அவர்களை ஸம்பந்தப்படுத்தி ஏற்படும் புராணகதைகளுக்கு ஆதாரம்."

நந்தனைப்பற்றி இவ்வளவுகூறும் இந்தப் புராணம் அவனுடனிருந்தவரைப்பற்றிஒன்றும்கூற வாயெடுப்பதில்லை பாருங்கள். வருஷம்தோறும் தென்னிந்தியா இருப்புப்பாதை மூலமாக எத்தனையோபேர்கள் நடராஜர் ஸபைக்குச் செல்கின்றனர். இவர்களுள் யாருக்காவது இம்மாதிரியான கற்பனைச் சிறப்பும் அழகும் வாய்ந்த புராணம் ஏற்பட இடமுண்டா?

நந்தனார் தீக்குழியிலிருந்து யாதொரு கஷ்டமும் இன்றி வெளியேறினார். இதுமாத்திரமா, தீக்குளித்ததால் மிகப்பரிசுத்தருமானார். சுட்டுக் கொதித்துக் கொண்டிருந்தது இப்பொழுது குளிர்ந்து ஆரோக்யமாக விருந்தது, குறை யிருந்த விடத்தில் நிறைவேறி விட்டு விட்டது: ஆசை இருந்த விடத்தில் ஆனந்தம் குடிகொண்டு விட்டது: பறைய ஜாதியிருந்த விடத்தில் உண்மையானபிராஹ்மணஜாதி காணப்பட்டது. நந்தனார் இவ்வாறு வெளிப்பட்டதை ஸ்ரீமான் கோபால கிருஷ்ணபாரதிகள்.

யாகோற்பவமானார்—நந்தனார்—ஹரனருளால்
யாகோற் பவமானார்.

***



ஓதுஞ்சடைகள் துலங்க—அவரை விட்டு
ஓடியேவினை கலங்க
ஏக மற்றசதுர் வேதமோதிவரும்,
நீதி வேதியர்கள் பேதமின்றித் தொழ (யாகோ)

என்று ஆனந்த பரவசமாக வர்ணித்திருக்கிறார்.

பேதமின்றி மனமுருகி தொழுது தீக்ஷிதர்கள் தெற்கு மாடவீதி வழியாக வலம்சுற்றி நந்தனாரை வேதங்கள்போல அகன்றுகிடந்த கீழக்கோபுரவாயில் வழியாகஅழைத்துச்சென்று சீக்கிரம் ஸப்ரஹ்மண்யர் கோயிலாகிய கம்பத்தடி மண்டபம் திருக்குளம் தேவசபை முதலியவைகள் வழியாகக் கொண்டு போய் கோவிந்தராஜ பெருமானையும் நடராஜப் பெருமானையும் ஏககாலத்தில் கண்டுகளி கூற இடையிலிருந்த உயர்ந்த பாகத்தில் நிறுத்தி விட்டனர். ஸர்வாபாண பூஷிதையாகக் கணவனிடம் புதுமணம்புரியப் பள்ளி யறைக்குப்போகும் பெண்ணுக்கும், தேன் நிறைந்து சுற்றுமுள்ள காற்றைத் தன் வசப்படுத்தி நிற்கும் பூர்ண புஷ்பத்திடம் ரீங்காரம் செய்து கொண்டு போகும் தேனீக்கும் கூட; இந்த ஸமயத்தில் நந்தனாருக்கிருந்த அடங்கா ஆவல் இருந்திராது. பக்திபரவசத்தால் வேதத்திற்கு நிகரான பாடல்களை ஓயாது வாரிச் சொரிந்து கொண்டிருந்தார் நந்தனார் அப்பர் ஸ்வாமிகளும் தமது அத்புதப்பாடல்களாகிய:—

"அரியானை யந்தணர்தம் சிந்தையானை யருமறையின் அகத்தானை அணுவையார்க்கும், தெரியாத தத்துவனைத் தேனைப்பாலைத் திகழொளியைத் தேவர்கள் தங்கோனைமற்றைக், கரியானை நான் முகனைக் கனலைக் காற்றைக் கனைகடலைக் குலவரையைக் கலந்துநின்ற, பெரியானைப் பெரும் பெற்றபுலி யூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே."

என்பவைகள் போன்ற அருள்வாக்குக்களையும், மாணிக்க வாசகரும் பக்திமேலீட்டால் சொக்கி உபநிஷத்துகள் போன்ற தமது ஸ்துதிகளையும், ஆனந்தக்கண்ணீர் ஆறாக ஓட மனமுருகி மஹாத்மாக்களுள் மஹானான தாயுமானவரும் வேதாந்தம் போன்ற தமது அருட்பாடல்களையும், எங்கிருந்து சொரிந்தார்களோ: எந்தவிடத்தில் பின்வரும் பக்தர்கள் ஈடுபாட்டிற்கு உதவியாக விருக்கும்படி பெரியோர்களின் பாததூளிகள் படிந்திருந்தனவோ அந்த பரிசுத்த விடத்தில் நின்றார் நந்தனார். அந்தஸமயத்தில் கனகஸபை இருபுறத்திலிருந்தும் கடலோசையன்ன கம்பீரத்வனிகளுடன் கண்டா மணிகள் ஆனந்த நாதம் உண்டாக்கின. மூலஸ்தானத்துள் புகுந்து நடராஜப்பெருமானுக்கு புதிதாக ப்ராஹ்மணருள் சேர்ந்திருக்கும் நந்தனார் விஷயமாகப் பூஜைகள் நடத்தி தீபாராதனைகள் நடத்தப்பட்டன. ராக்ஷஸிகளிடமிருந்து விடுபட்ட ஸீதை, யமுனைக்கரையில் காத்துக்கிடந்த ராதை இவர்களுக்குக்கூட தமதுநாதர்களைச்சென்றணைய, இப்பொழுது நந்தனுக்கிருந்த ஆவலிருந்திராது. தனது அத்புதவிக்ரஹமாயும்தன்எண்ணங்களின் முடிவாயும், தன் பக்தியின் இலக்காயும், தமது மௌனப்ரஸங்கத்தில் உண்மையை உறுதிப்படுத்த ஆத்மஜ்யோதியை ஒரு கையிலும், ப்ரபஞ்ச தூக்கத் தோற்றத்தின் மேல் வைத்தழுந்திய வலது காலையும், ஸம்ஸார வெப்பத்தைத் தணிக்கவல்ல எண்திசை ஓடிப்பரந்து தண்ணிழல் பரப்பும் ஆலமரம் போலவும், பக்தர்களைத் தேடிச் சேர்த்துக்கொள்ள எத்தனிப்பதுபோலவும் உயரத்தூக்கி நிறுத்தப்பட்ட இடது குஞ்சித பாதமும் ஆகிய இவைகளை எல்லாமுடைய அத்புத ஆனந்த நடேசரைச் சென்றணைய விரைந்தோடினார் நந்தனார். அப்பொழுது கரைபுரண்டோடும் ஆவலுடன் நந்தன் என்ற பறையன் நந்தனார் என்ற ப்ராஹ்மணோத்தமருள் மறைந்துவிட, அவர் ஒரேஅடியில் மீளாநெறிவழியாக அனந்தஆனந்தநடேசருள் மறைந்தே போய்விட்டார்! இப்படிக் கரைந்துருகி ஒன்று படும்பொழுது

நடராஜா என்நாதா! நடராஜா, என்னன்பே!
என்நாதா வந்தேன் வந்தேன் என்னன்பே!
நாமிருவரும் ஒன்றே ஒன்றே இன்று முதல்
நீயே நான் நானே தான் நீயும்

என்று பாடிமூழ்கி விட்டனர்.

'இம்மாதிரியான மனோநிலை இம்மாதிரி அனுபவரூபமான பரம்பொருள் விளக்கியகாலம் ஆகிய இந்த அத்புத ஸமயத்தில், எண்ணங்கள் கழன்றன, அனுபவத்துள் அழுந்திப் போயின, ஒருவித நன்றியும் அவன் பாராட்டவில்லை. வேண்டுகோள் ஒன்றும் செய்து கொள்ளவில்லை. குறைவுகள் நிறைந்த பிரார்த்தனை ஸ்தோத்திரம் ஆகிய இவைகளுக்கு அப்பாற்பட்டு சாந்த ஏகாந்த அனுபவத்தில் மூழ்கிவிட, அவன்மனம் நன்றிபாராட்டும் சக்திரூபகமாக அமர்ந்து விட்டது. அது அனந்த ஆனந்த மாகவே இருந்தது.

நந்தனிடம் ஈடுபட்டவர்களும் தீக்ஷிதர்களும் அசைவற்றுத் தூண்போல நின்று விட்டனர்; கொஞ்சம் தேஹ உணர்ச்சிவர:—

துள்ளுமறியாமனது பலிகொடுத்தார், கர்ம
துஷ்ட தேவதைகளில்லை!
துரிய நிறை சாந்த தேவதையாம் உனக்கே
தொழும் பரன் அபிஷேக நீர்,
உள்ளுறையில் தம்மாவினை வேத்யம் ப்ராண
ஞேங்குமதி தூபதீபம்.
ஒருகால மன்றிது ஸதாகால பூஜையா
வொப்புவித்தார், கருணை கூர்
தெள்ளிமறை வடியிட்ட வமுதப் பிழம்பே!

தெளிந்த தேனே ! சீனியே !
திவ்யரஸம்யாவுந் திரண்டொழுகு பாகே!
தெவிட்டாத ஆனந்தமே !
கள்ளவறி வூடுமே மெள்ள மௌ
கலக்க வரும் நல்ல உறவே !
கருதரிய சித்ஸபையில் ஆனந்த நிருத்தமிடும்
கருணாகரக் கடவுளே !

என்றுவாயாரப்பாடி நடராஜரது அன்பு கருணை இவை களை வியந்து கூத்தாடினர். எல்லோரும் கூட்டமாகச் சேர்ந்து கொண்டு:—

நடராஜா நடராஜா நர்த்தன ஸுந்தர நடராஜா
ஸாம்ப ஸதாசிவ ஸாம்ப ஸதாசிவ ஸாம்ப ஸதா
சிவ ஸாம்ப சிவ
ஸாம்ப ஸதாசிவ ஸாம்ப ஸதாசிவ சாந்தானந்த
மஹேச சிவ

என்று நாமாவளிபாடி நடராஜனைப்போல ஒருகாலைத் தூக்கியாடி அவருக்கும் தமக்கும் பேதமே மனத்தில் கிளம்பாதபடி ஈடுபட்டு ஆனந்தத்தாண்டவமாடி வெகு காலம் கழித்தனர்.

ஓம்தத்ஸத்.

---

**சச்சிதாநந்த சாகரம்.**—ஒருஸமயம் பரமஹம்ஸர் தமக்கு அன்பனான ஒரு விஷயனை நோக்கி, "ஒரு பெரிய பாத்திரத்தில் பாகத்தை வைத்திருந்தால் எல்லா பக்கங்களி னின்றும் ஈக்கள் பாத்திரத்தின் விளிம்பில் உட்கார்ந்து அவ்வுருசியான பாகத்தைப் பருகியும், சில அதற்குள் விழுந்து முழுகிப் புரண்டும் ஆநந்திக்கின்றன. அதுபோல, நீ ஸச்சிதாநந்தமெனும் தேவாம்ருதத்தை ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு ஸாவகாசமாய் உருசிபார்த்து விட்டு ஓடிப்போவையோ? அல்லது, அதன் ருசியைக் கண்டவுடனே அதில் முழுகி ஆநந்தம் அநுபவிப்பையோ?" என்று கேட்டதற்கு, அவன் "நான் ஓரத்திலிருந்து பருகிப் பிறகு பறந்துவந்து உயிருடனிருப்பனேயன்றி, அதிலேயே விழுந்து புரண்டு ப்ராணனை விடமாட்டேன்" என்றான். அதைக் கேட்டதும் பகவான் 'அடேமுட்டாள் ! அம்ருதஸாகரத்தில் மூழ்குபவன் எக்காலமும் சாதலேயின்றி இறவாமையை யல்லவோ எய்துகின்றான்" என்றார்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்
## LADIES' PAGES

சாந்தை அல்லது பொறுமையினிலை

### 5. வினைவிதி காதை

உத்தல்லன் சாந்தையைத் தழுவினான்; ஆனந்தக் கண்ணீர் வடித்தான்; மகிழ்ந்தான். "என்பெருந்திருப்திபோல் ஆச்சரியமும். உன்னை என்முன் இப்போதே காண, எனக்கு உதிக்கின்றது. என் உயிர்க்குயிரளிக்கும் இன்ப வெள்ளமே! இவ்வாறே எப்பொழுதும் இடியிடித்து அடிக்கும்புயற்காற்றின் பின்னரே அமைதிகள் தோன்றுமானால் யமனையுங்கலக்குங் கொடுங்காற்று எழும்பி வீசட்டும்; குமுறி மலைபோல் எழும்புங்கடல்மீது கப்பல்கள் அலைமலையேறி பாதாளத்திற் குதித்துக் குளித்துக் கிளம்பட்டும். இறக்கவேண்டிய திப்பொழுதாயின் அதுவே எனக்குப் பேரின்பம். ஏனெனில் இப்பேர்ப்பட்ட பேரின்ப முடிவு இனி கிட்டும் என்று எண்ணுவது அஸாத்யம்!" என்று சொன்னான். "நமது போகமும் யோகமும்நாள்போல் வளர்வதல்லாத மற்றதெல்லாவற்றையுங் கடவுள் தடுக்கட்டும்" என்று சாந்தை இனிக்க மறுத்தாள். "ததாஸ்து! இனிய தெய்வங்காள்! இந்த ஆனந்தத்தைப்பற்றி நான்பேசுந் தரனற்றவன்; என் நாஎழாமல் தடைபடுகிறது; ஆனந்த மிகையே அது" என்று சொல்லிக்கொண்டு மெய்ப் பரவசனாகி எதிரிலிருப்பவரையும் பாராது, சாந்தையை இறுகத்தழுவி அணைந்து "இதுவே!—இதுவே!—எங்கள் ஹிருதயத்துள் உண்டாகுங் கொடுந்துன்பமாகுக!" என்று அவளது உதட்டைக் காங்களாற்றடவித் தன் வாயோடணைத்துப் பலமுறை முத்தமிட்டான்.

அப்பொழுதங்கிருந்த அயோக்யபுஞ்சன் "இப்பொழுது ச்ருதி ஒத்திருக்கிறது. இந்த ச்ருதி லயத்தைக் கலைத்து வேறுபட்ட ராகத்திலேற சீக்ரத்தில் முடுக்கி விடுகிறேன்" என்றெண்ணிக்கொண்டு தன் கைகளைப் பிசைந் தாலோசித்துக்கொண்டிருந்தான். அதேஸமயத்தில் உத்தல்லன் "வாரும்; அரண்மனையை அடைவோம்:—என் நண்பர்களே ! நல்ல ஸமாசாரம்! நமதுயுத்தம் முடிந்தது; துருக்கிகள் அழிந்தனர். இத்தீவின் என் பழைய நேசர்கள் எல்லாம் ஸௌக்யமா ?" என்று ஜனங்களைப் பார்த்துக் கேட்டான். பின் தன் மனைவியைப்பார்த்து "தேனே! இந்தஸிபரத்தீவில்உன்னை எல்லாரும் விரும்புவார்கள் ; பக்ஷமாயிருப்பார்கள் ; அவர்களுடைய பேரன்பை நான் கண்டிருக்கிறேன். எனக்கினிய வளே! அநாகரிகமாக நான் ஏதோ பிதற்றுகிறேன் ; என் ஸுகானுபவங்களால் மதிமயங்கித் தாறுமாறு கப்பிதற்றுகிறேன்" என்று சொன்னான். அயோக்ய



புஞ்சனைப் பிறகு துறைமுகத்திற்குப்போய்த் தன் ஸாமான்களைக் கரையேற்றி, பெருந்தன்மை மிக்க மாலுமியைக் கோட்டைக்கழைத்துவரும்படிசொல்லி விட்டுத் தன் மனைவியுடன் "மற்றும் ஸிபிரத்தில் இன்பமுடன் சேர்ந்தோம்" என்று சொல்லிக்கொண்டு அரண்மனைக்குப் போனான்.

இயற்கையில் புகைந்து வேலைசெய்து கொண்டிருந்த அயோக்யனுடைய கொடுமை என்னும்நெருப்பை ஜ்வாலிக்கச் செய்ய நல்ல காற்று ஒன்றடித்தது; அது காச்யபனுடைய பெருமையை எண்ணி உத்தல்லன் அவனைத்தனக்கடுத்தபடியிலிருக்கும் உபஸேநாபதியாக ஆக்கியதுதான். சும்மா இருக்கும் பாட்டிக்கு பொறிஅகப்பட்டாற்போல அயோக்யனுக்கிவை உபயோகத்திற்கு உதவாதிருக்குமா? உத்தல்லன் போனதும்அயோக்ய னங்கு இருந்த ருத்ரகாமனைப்பார்த்து "கிட்டிவா ; ஒரு ஸமாசாரம். காமவலையிலகப்பட்ட முட்டாள்களும் பெருந்தன்மை கொண்டவர்போல் நடந்துகொள்வர் என்பது வழக்கம். நீ வீரனாக இருந்தால் என் வார்த்தைகளைச் செவிகொடுத்துக் கேள். உபஸேனபதி இன்றிரவு கோட்டையைக் காவல் செய்வார்—முதலில் ஒரு ஸமாசாரம்—சாந்தை காச்யபன்மேல் காதல்கொண்டிருக்கிறாள்" என்று அவனைத்தன் வினைக்கு வரத் தூண்டினான். "அது நம்ப முடியாத ஸமாசாரம்" என்றவன் தடுத்தான். அயோக்யன் அவன் வாயைத் தன் கையால் மூடி "இவ்வாறே வாயை மூடிக்கொள்; நான் சொல்லுகிறபடி நட." என்று திட்டஞ் செய்தான்.

பின்னும் ருத்ரகாமனை நோக்கி "பொய்யும் புளுகுந் தொடுத்திட்ட மாலைக்கு மயங்கி யவள் அம்மௌரியனை அவ்வளவு ஆத்திரத்துடன் மாலையிட்டாள். அம்மாலைக் கின்னும் கட்டுப்படுவாளா? இதை உன் நெஞ்சு மொன்றி யறியாதா? அவள் கண்களுக்கின்பம் வேண்டாமா. அக்கறும் பேயைப் பார்த்தவள் மனம் எத்தனைநாள் மோஹிக்கும்? கொதித்த ரத்தம் மந்தமடைந்தால் அதுகொதிக்க மீண்டும் எத்தனஞ் செய்யுமல்லவா? அதற்குப் புதிய உணவு ருசி எல்லாம் வேண்டாவா? ஒத்த அழகு, ஒத்த நலன், ஒத்தபண்பு, ஒத்தகுணம், ஒத்தவயது இவற்றை எல்லாமது தேடாதா? இவைஎல்லாம் அம்மௌரியனிடத்தில் குறைவாகவே குடிகொண்டிருக்கின்றன அல்லவா? இந்தவிதம் வேண்டிய ஸுகங்களில் மனம் செல்லாதா? வெறுப்படையத் தலைப்படாளா? அம்மௌர்யனைக் கண்டால் ஏள்ளுங் கொள்ளும் வெடிக்காளா? அவனைக்கண்டால் விஷம்போல நடுங்காளா? இயற்கையே அவளை வெறுக்கச்செய்து மாற்றானை அடையச் செய்யுமே! என்ஐயா; இதுஎல்லாம் வெளிப்படை—இதன்பின் அவள் கண்ணை மயக்க அவ்வளவு நெருக்கமும் உயர்ந்த நிலையையும் உடையவர் யார்? அந்த காச்யபன்தான்; பூனைபோல் பதுங்கி ஸாதுத் தவஞ்செய்கிறானே அவன்தான், பாலைக் குடிக்கத்தானே பதுங்கிக்கிடப்பது? என்னவேஷம்? என்ன நல்ல ஸ்வபாவம்? எல்லாம் மோசம்? முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க வழி. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளக் காத்திருக்கிறவன் அவனே ; வேறெவருமில்லை. மாயாவி ; வேஷக்காரன் ; விடன் ; அவனுக்குக் காலம் வாய்க்கவில்லை; காலத்திற்கே காத்திருக்கிறான். அதுமாத்திரமன்று ;—வடிவழகன் ; யுவாபுருஷன் ; இளம்பெண்களை மயக்குங் குணபுஞ்சன் ; பெரும் அயோக்யன்; கொள்ளைக்காரன். அவன்மேல் அவளும் கண்போட்டு விட்டாள்" என்று உபந்நியசித்தான்.

"அவள் அப்பேர்ப்பட்டவள் அல்ல; எல்லாராலும் பெருமை பாராட்டத் தக்கவள்; மஹா உத்தமி; தெய்வமென்றே சொல்லலாம்" என்று ருத்ரகாமன் தடுத்தான். "உன் பைத்தியம் பாழாய்ப்போக! கள்ளே அவள்குடி. எல்லாராலும் பெருமை பாராட்டத் தகுந்தவளானால் கரித்தடியனைக் கல்யாணஞ்செய்துகொள்வளா? மௌர்யன்மேல் மோஹங்கொள்வளா? எல்லாம் வண்டைக்காய்க் குழம்பு!—அவனோடு அப்பொழுது எவ்வளவு நெருக்கமாக கைலாகவங் கொடுப்பது போல் பேசினாள்! நீ பார்க்கவில்லையா?" என்று ருத்ரகாமனுடைய மூளைத்திருகாணியை முடுக்கினான். ஆயினும் அவன் "மரியாதை செய்தாள். நான் பார்த்தேன். அதிலென்ன தவறு?" என்று தடுத்தான்.

"என் கண்ணனே! இக்கையை வேண்டுமானாலும் போட்டுத்தருகிறேன் ; அது ஆசைநோய் ; காமலோலம். வரும்வஸந்தபோகக்கதைக்கு அதுமுதற்பாயிரம். அவர் தமது உதடுகளைச் சேர்க்காத தோஷம்தான்; உள்ளூறி எழுந்த நெடுமூச்சுகளாலே அணைந்தாய்விட்டது. என்ன கொலைபாதக எண்ணம் ; அவரது பரஸ்பரநேசம் தடைகளை எல்லாமுடைத்து உண்மைபுரத்திற்கு வழியைச்சீர்படுத்த இதோ பெரியவர், அவர் அப்யாசம், பயிற்சி, முடிவான அபிப்ராயத்துடன்! சீயா? இருமையா! கொஞ்சம் நான் சொன்னபடி நடவும் ; நான்தான் உம்மை விஞ்சைய நகரத்து லிருந்து இங்கு அழைத்துவந்தேன். இன்று ராத்திரி ஜாக்ரதையாகக் காவல் செய்யும்; அக்கட்டளையை நானே உமக்கு இடுகிறேன். காச்யபன் உன்னை அறியான்.—நான் உன்னை விட்டு ரொம்பதூரத்திலிருக்கமாட்டேன். எப்படியாவது காச்யபனுக்குக் கோபமுண்டாகும்படி செய்யப்பார்—உரக்கக் கத்தியாவது அல்லது அவன் ஒழுக்கத்தைப் பழித்தாவது அதை நீ செய். வேறெந்தவழியிற் செய்யமுடியுமானாலும் ஸம்மதம்; காலத்திற்குக்கந்த விதம் செய்" என்று ருத்ரகாமனைத் தூண்டினான்.

ருத்ரகாமன் ஒப்பவே "ஐயா! அவன் முன்கோபி வெகு கண்டிப்பானவன்; அப்படி நீ செய்தால் உன்னை ஒருவேளை அவன் அடித்தாலும் அடிக்கலாம்; அவனை அப்படியே செய்யத் தூண்டு ; அச்சிறு செய்தியைக் கொண்டு மதிபிறந்து கலஹஞ் செய்துவிடுகிறேன் ;

இந்த விபிரமே குழம்பச் செய்துவிடுகிறேன். அப்பொழுது காச்யபனைத் தொலைத்தாலன்றி இவ்வூர் அமைதிபெறாது. அதன் பின் நான் மூட்டும் வினைகளால் உன் காமயாத்ரை கடிதுமுடியும்; நமது ஸுகஸாதனத்திற்கிருக்கும் பெருந்தடையை, லாபத்துடன் ஒழித்துவிடலாம்" என்று மேலுமவனை அயோக்யன் தட்டிக்கொடுத்தான். "அப்படி லாபத்தைக் கொடுப்பதானால் நான் வித்தமாய்த் தயாராக இருக்கிறேன்" என்றான் ருத்ரகாமன்.

அயோக்கியனும் அவனுக்கு நம்பிக்கையுண்டாகும்படிப் பலமுறை உதவி செய்வதாக உறுதிமொழி சொன்னான். பின் ருத்ரகாமன் போனான். அயோக்யன் தன் கொடுமை வலையை நெய்யச் சிந்தனை செய்துகொண்டிருந்தான். தலையைக் கிறிக்கொண்டவன் உலாவியுலாவி யோசித்துக்கொண்டிருந்தான். அயோக்யன் பெருங்காரியவாதி; உலகத்தை நன்றாக உணர்ந்தவன்; தனக்காகாதவரிடம் க்ஷாத்ரங்கொண்டால் அவரை வேரோடு கல்ல வழிதேடுபவன். மனோராஜ்யக்கடலில் தன் மாயவலையைவீசி எளியவர்களைப் பிடித்துக் கஷ்டக்கரையில் எறிந்து அவரை உயிரிழக்கச் செய்யக்கூடியவன்; கொடுமை சிருஷ்டிப்பதில் பிரஹ்மா; மனக்கொலைசெய்வதில் கருணையற்றவன்; சிறிதுங்காரணமில்லாமலே கொடுமைக்கானந்தப் பட்டுச் செய்பவன். அதிலும் அவனுக்குக்காரணமும் அகப்பட்டால் கொடுமைக்கு அளவிருக்குமா? தன்னைக் கவனிக்காது தனக்குக் கீழ் இருந்த காச்யபனை உயர்த்தி உபசேனாபதியாக்கினான் என்னும் எண்ணம் வேறு அவன் மனத்தில் குத்திக்கொண்டிருந்தது. அவனுக்கு உத்துல்லன்மேல் ஏன்கோபமுண்டாகாது? தான் பரிகாசஞ் செய்துகொண்டிருந்த அந்த காச்யபன்மேல் தான் ஏன் கோபம் வராது? அவன் மனம் ஏன் வேலைசெய்யாது? புதிய வலை நெய்து மானிடப் பறவைகளை ஏன் மாய்க்காது? ஆகையினாலேதான் பின்வருமாறு யோசித்தான்:—

"காச்யபன் அவள்மேல் ஆசைகொண்டிருக்கிறான் என்று என் எண்ணம். ஏன் அப்படி இருக்கக் கூடாது? சாந்தையும் அவனிடம் காதல் கொண்டிருக்கிறாள் என்றால் ஏன் பொருந்தாது? எல்லாரும் நம்பக் கூடியதுதான். மௌர்யனோ—அவன் என்வெறுப்பிற்குப் பாத்திரனா யிருந்தாலும் வெகு உத்தமன்; தர்மாத்மன்; மாறாதமனத்தன்; பக்ஷமுடையன்; நல்ல ஸ்வபாவமுடையவன்; சாந்தைக்குப் பிரேமை மிகுந்த இனிய கணவனாக இருப்பான் என்றே நான்முழுதும் எண்ணுகிறேன். நானும் அவளிடம் விருப்பங் கொண்டிருக்கிறேன்;—ஆனால் காமத்தாலன்று; அப்பாபத்தில் வீழக்கூடாதவன் அல்ல நான். ஆனாலும், அது ஒருவேளை கருமத்தால் இருக்கலாம்; பழிவாங்கும் பசியே அதற்குக்காரணமாயிருக்கலாம். இவ்விஷயத்தில் இம்மௌரியனே ஸ்தான பேதப்பட்டிருக்கிறான் என்று நான்ஸந்தேஹப்படுகிறேன். அந்தப் பாழான எண்ணமே பாஷாணம் போல என் உள்ள முழுதும் குடைந்து, பிச்சிப் பிச்சித் தின்கிறது. எப்பொழுதது அடங்கும்? மனைவிக்கு மானந்தொலைந்து அவன் என்போலானா லொழிய என்மனந் திருப்தியடையாது; என்உயிர் ஸுகம் பெறாது. அதுவும் தவறினால் ஸந்தேஹத்தை அவன் மனத்தில் விதைத்து, என்வினைகளால், நியாய மென்னுங்கத்திக்கும் கோடாலிக்கும் பிளவாது கப்புங் கிளையுமாகக் கவடு விட்டு அவலஞ் செய்யும்படி வலியவளர்த்து விடுகிறேன். அதைச்செய்வதற்கிந்த விஞ்சையநாட்டு இழிந்த துறும்பைப் பின்பற்றுகிறேன்;வேட்டையாட அவன் தயாராகக் காத்திருக்கிறான்! இக்கடும் வேட்டையில் காச்யபனை அந்நாய் கௌவிக் கொணரும், காச்யபன் குடுமி என்னிடம் சிக்கிக்கொள்ளும்—அவன் என் படுக்கையறையைக் கொள்ளைகொண்டான் என்ற ஸந்தேஹம் எனக்குண்டு! பின் அவனைப்பற்றிப் பச்சை பச்சையாய் மௌர்யனிடம் சொல்வேன்; வேறென்னகுறை? தன்மூளையைமுறித்து, அமைதியைக் கலைத்து, பித்தமுண்டாக்கி, தன்னைக் கழுதையாக்கினால் மௌர்யன் நம்மை வந்திப்பான்; வாழ்த்துவான்; நயப்பான்; கௌரவிப்பான். எல்லாமிங்கே இருக்கிறது. செட்டியார் வாழ்வு செத்தால் தெரியும். முடிவின்றி கொடுமை பிரகாசமடையாது" என்று தீர்க்காலோனை செய்தான்.

காலமென்னும் ஸூத்ரதாரன் கையிற்பட்ட இவ்வுயிர்கள் எவ்வாறு இழுக்கப் படுமென்பதும், அவன் ஆட்டும் ஆட்டமும், அதில்விளையும் தோஷநிமித்தங்களும், நன்மைப்பலன்களும் அல்ப மானுஷரால் அறிய முடியுமா? காலமே! உனக்கு அநந்த கோடி நமஸ்காரம். உன் அவதாரமாகிய அயோக்யன் என்றும் வாழச்செய்து சிரஞ்சீவிப் பட்டங் கொடுத்த உன் பெருமையே பெருமை! அப்பெருமையை ஏழை மாந்தர் அறிந்தும் அறியாதிருப்பது நீ வீசும் மாய நோக்கமே அல்லவா? உன் வலையை நெய்து என்ன பிரயோஜன மடையப் போகிறாய் என்பதையே கவனிப்போம் : உனக்கு நமஸ்காரம்! நீ நீடூழி வாழி!

---

## சந்தாதார்க்கு அறிவிப்பு

அச்சாபீஸ் மாறுதலால், நமது 'விவேக போதினி' ஆபீஸையும், திருவல்லிக்கேணிக்கே மாற்றி யிருக்கிறோம். சந்தா நேயர்கள், இனி எழுதும் கடிதங்களையும், புஸ்தக ஆர்டர்களையும், மானேஜர், "விவேக போதினி" திருவல்லிக்கேணி, மதராஸ், என்று எழுதக் கோருகிறோம். சந்தாதார்களுக்கு புத்தகங்கள் குறைந்த விலைக்குக் கொடுப்பதுடன், ஆர்டர்கள் காலதாமதப்படாமல் அனுப்பவும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

மானேஜர்



# விசேஷக் குறிப்புகள்

## NEWS & NOTES

**டாக்டர் ராஷ்பிஹாரி கோஷின் சிறந்த நன்கொடை.**—கல்கத்தா ஐகோர்ட்டில் பிரசித்திபெற்ற வக்கீலாகிய டாக்டர் ராஷ்பிஹாரி கோஷ் அவர்கள் கல்கத்தா யுனிவர்ஸிட்டிக்கு 10 லக்ஷரூபாய் நன்கொடை யளித்திருக்கிறார். இப்பெருந் தொகை சாஸ்திர யூனிவர்ஸிட்டி காலேஜில் மாணவர்களின் ஸ்காலர்ஷிப்புக்காக விநியோகப்படுமாம். இத்தொகையை சீக்கிரம் இருமடங்காக்கப்போகிறாரென்றும் தெரிகிறது.

***

**இந்தியாவில் காகித மில்லுகள்.**—1911-ம் வருஷத்தில் இந்தியாவிலுள்ள காகிதமில்லுகளின் தொகை 9. அவைகள் வங்காளத்தில் மூன்று; பம்பாய் ராஜதானியில் நான்கு; ஐக்கிய மாகாணங்களில் ஒன்று; குவாலியர் சமஸ்தானத்தில் ஒன்று; ஆக இவ்விதம் விதிக்கப்பட் டிருக்கின்றன. மேற்கண்ட மில்லுகளின் மூலதனம் 54-லட்சம் ரூபாய். 1910-ம் வருஷத்தில் அந்த மில்லுகளில் செய்யப்பட்ட காகிதங்களின் மதிப்பு 81½ லட்ச ரூபாய். 1911-ம் வருஷத்தில் 80-லட்சம் ரூபாய். பிரஸ்தாப வருஷத்தில் மேற்கண்ட மில்லுகளில் இரண்டில் வேலை நடந்தேறவில்லை. மரக்கூழினால் செயயப்படும் காகிதம் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவில் அதிகமாய் இறக்குமதி யாகிறபடியால், மேற்கண்ட மில்லுகளின் வேலை கொஞ்சம் குறைவடைந்து வருகிறது. கவர்ன்மெண்டாரிடம் கண்டிராக்ட் பேசி பூல்ஸ்காப் காகிதங்கள், மை யொத்துங் கடிதங்கள், கவர்கள் முதலியவைகளைச் செய்து சப்ளை செய்யும் மில்லுகள் பிரபலமாயிருக்கின்றன. 1907-ம் வருஷத்தில் இந்தியாவில் செய்யப்பட்ட காகிதங்களின் மொத்தம் மதிப்பு 73-லட்சம் ரூபாய். இந்தியாவில் இறக்குமதியான காகிதங்களின் மொத்த மதிப்பு 94 லட்சம் ரூபாய். 1911 வருஷத்தில் இந்தியாவில் செய்யப்பட்ட காகிதங்களின் மொத்த மதிப்பு 80-லட்சம் ரூபாய். இறக்குமதியான காகிதங்களின் மொத்த மதிப்பு 101½ லட்சம் ரூபாய்.

***

**கீழறைப் புதையல்கள்.**—ஹைத் என்னும் ஊர்க் கோவிலில் ஓர் கீழறையில் 2,000 கபாலங்களும், 8,000 தொடை எலும்புகளும் சேர்த்து வைக்கப் பட்டிருக்கின்றனவாம். இவற்றை வருஷா வருஷம் பதினையாயிரம் ஜனங்கள் போய்ப் பார்த்து வருகிறார்களாம். ரோத்வெல் என்னு மிடத்திலுள்ள கோவிலில்இன்னும் அதிகமாக எலும்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றனவாம். அவ்வறை 30 அடிநீளமும் 15 அடிஅகலமும் வாய்ந்தது.

***

**வாலிப போலீஸ்கள்.**—பத்து வயது முதல் பதினைந்து வயதுக்குட்பட்ட 200 சிறுவர்களை போர்ட்லாண்டில் போலீசாக நியமித்திருக்கிறார்கள். பாடசாலை செல்லாது ஒளிந்து திரியும வாலிபர்களையும், சிகரெட் பிடிக்கிறவர்களையும், கல்லெறிபவர்களையும் கண்டு பிடிக்கும் தொழில்கள் இவர்களுடையதாகும்

***

**காட்டெலிகளும் வியாபாரமும்:**—ஹாலந்து தேசத்து ஜனங்கள் காட்டெலிகளின் தோலால் திவ்விய உடை தயாரிக்கிறார்கள். இதனால் ஒவ்வொரு குடியானவனும் மிகுந்த திரவியம் சம்பதிக்க இடமேற்பட்டிருக்கிறது. இத்தொழிலால் ஒருகுடியானவன் 15,000 பவுன் சென்ற வருஷம் சம்பாதித்திருக்கிறானும். இக்காட்டெலியின்தோல் வெகுவாய் இப்போது அமெரிக்காவிற் கனுப்பப் படுவதைப்பார்த்தால் கூடிய சீக்கிரத்தில் இவ்வெலியின் பூண்டே ஹாலந்தில் முற்றிலு மற்றுப்போகுமெனக் கருதப்படுகிறது.

***

**ஓர் அதிசய மோடார் ரதம்.**—சமீபத்தில் இங்கிலாந்தில் ஒரு பெரிய மோடார் ரதம் வெகு அழகாய் நூதன கருவிகள் யாவும் அமைக்கப்பட்டுத் தயாராகி மாக்ஷிமை தங்கிய நம் சக்ரவர்த்தி அவர்களது திவ்விய திருப்பார்வைக் கனுப்பப் பட்டிருக்கிறது. இந்த ரதம் இவ்விதம் செய்யப்பட்டதன் முக்கிய காரணம் ஆபிரிகாவின் உட்பாகங்களைத் தெற்குக்கோடி முதல் வடக்குக் கோடி வரையில் செவ்வையாய்ச் சுற்றிப்பார்க்கவே. இந்த ரதத்தைப் பிரித்து இலகுவில் திரும்பப்பூட்டலாம். இதற்குள் இதை ஏரிகளிலும் நதிகளிலும் சுமந்து செல்லும்படியான படகுகளும் அநேக கருவிகளும் அநேக விளக்குகளும் அடங்கியிருக்கின்றன.

***

**அடுப்பூத வேண்டியதில்லை.**—ஜப்பான் தேசத்தில் ஒவ்வொரு தெருவிலும் ஒவ்வொரு பெரிய அடுப்பு கட்டப்பட்டு எரிந்துகொண்டிருக்குமாம். அத்தெருக்காரர்கள் சொற்பசார்ஜ் கொடுத்துவிட்டுஅவ்வடுப்பில் தமது சமையல்களைச் செய்துகொண்டு செல்லலாமாம்.

***

**கனமுள்ள ஸ்திரீ.**—லீஸ்டரில் மிஸ் லாம்பாட் என்று ஒரு மடந்தையுண்டு. அவளுக்கு வயது இருபத்தொன்றே யானாலும் 560பவுன் நிறையிருக்கிறாளாம்.

***

**ஒரு கப்பலின் நாசம்:**—"ஸ்டேட் ஆப் கலிபோர்னியா" என்ற கப்பல் காம்பீர்பே என்ற கடலில் மிக விரைவாகப் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில், ஒரு கற்பாறையின்மேல் மோதி 3 நிமிஷத்துக்குள் முழுகிப் போய்விட்டதாம். அப்பொழுது பிரயாணிகளெல்லாம் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.. 25 பிரயாணிகளும் கப்பலோட்டிகளில் 27 பெயர்களும் மூழ்கி இறந்தனர், கப்பலில் ஏற்றப்பட்டிருந்த சாமான்களும் தபால்வகைராவும் போய்விட்டன. கப்பல் 5 லட்சம் டாலர் பெறுமாம். கப்பல் காப்டனும் 40 கப்ப

லோட்டிகளும் தெப்பங்களி லேறிக்கொண்டு தப்பிப் போயினர்.

***

**இந்திய இருப்புப்பாதைகள்:**—10 வருஷங்களுக்கு முந்தி இந்தியாவின் இருப்புப்பாதைகளின் நீளம் 25930 மைல். சென்ற வருஷம் 33484 மைல். அதாவது வருஷம் ஒன்றுக்கு இருப்புப்பாதை 775 மைல் வீதம் அதிகரித்து வருகிறது. வரும்படி 336 லட்சம் ரூபாயிலிருந்து 616½ லட்சம் ரூபாயாக அதிகரித்திருக்கிறது. செலவும் 157½ லட்சம் ரூபாயிலிருந்து 301½ லட்சமாக அதிகரித்திருக்கிறது. ரயிலில் பிரயாணஞ் செய்தவர்களின் தொகை 4170 லட்சம். அதாவது 1911-ம் வருஷத்தைக் காட்டிலும் 270-லட்சம்பேர் அதிகம். 3-வது வகுப்புப் பிரயாணிகளின் தொகைதான் அதிகம்.

***

**பம்பாயில் ஒரு பிரபலமான முத்து:**—பிரபலமான முத்துக்களுள் ஒன்று பம்பாயில் இருக்கிறது. அதன் மதிப்பு 15000 பவுன். அது யார்க் கட்டடத்திலிருக்கும் மிஸ்டர் N. கூட்டின் வசத்திலிருக்கிறது.

***

**போர்ட் முனிஸிபல் ஸ்கூல்களுக்கு கிராண்டுகள்.**—போர்ட் முனிஸிபல் ஸ்கூல்களில் வாசிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு புஸ்தகம், சிலேட்டு முதலியவைகள் வாங்கி சப்ளை செய்வதற்காக 69,700 ரூபாய் சாங்கிஷன் செய்யப்பட்டிருக்கிறது. அத்தொகை அடியிற்கண்டபடி ஸ்கூல்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படும். போர்ட் எலிமெண்டரி ஸ்கூல்கள்.—கஞ்சம் 2500, விசாகப்பட்டணம் 3100, சோரபட் 100, கோதாவரி 4700, கிருஷ்ணா 5900, குண்டூர் 3100, கர்னூல் 3000, பல்லாரி 1700, அனந்தபுரம் 2000, கடப்பை 1800, நெல்லூர் 3200, செங்கல்பட்டு 1300, சித்தூர் 1900, வட ஆற்காடு 2100, தென் ஆற்காடு 3300, தஞ்சாவூர் 4000, திருச்சி 2500, மதுரை 2200, ராமனாதபுரம் 1100, திருநெல்வேலி 1800, கோயமுத்தூர் 2800, சேலம் 3100, நீலகிரி 300, மலையாளம் 3500, தென்கன்னடம் 2600, முனிஸிபல் எலிமெண்டரி ஸ்கூல்கள்.—பெர்ஹாம்பூர் 160; சிக்காகோல் 50; பர்லாகிமிடி 100, விசாகப்பட்டணம் 60, பிமிலிபட்டணம் 40, அனகபல்லி 30, விஜயநகரம் 80; காகிநாடா 230, ராஜமகேந்திரபுரம் 200, எல்லூர் 150, மசூலிப்பட்டணம் 140, பெஜவாடா 200, குண்டூர் 70, ஓங்கோல் 40, தெனாலி 20, கர்னூல் 150, நந்தியால் 80, பல்லாரி 100, செங்கல்பட்டு 40, காஞ்சிபுரம் 120, வேலூர் 300, குடியாத்தம் 130, திருப்பதி 110, வாலாஜபேட்டை 80, கடலூர் 150, சிதம்பரம் 30, திருவண்ணாமலை 40, தஞ்சாவூர் 80, கும்பகோணம் 140 மன்னார்குடி 20, நாகப்பட்டணம் 90, மாயவரம் 120, திருச்சி 160, ஸ்ரீரங்கம் 60, மதுரை 110, திண்டுக்கல் 60, பழனி 70, திருநெல்வேலி 30, பாளையங்கோட்டை 70, தூத்துக்குடி 60, ஸ்ரீவில்லிபுத்தூர் 40, கோயமுத்தூர் 140; ஈரோடு 60, சேலம் 200, வாணியம்பாடி 90, திருப்பத்தூர் 100, உதகமண்டலம் 30; குன்னூர் 10, கள்ளிக்கோட்டை 270, கொச்சி 70, பாலக்காடு 240, தலைச்சேரி 120, கன்னனூர் 270, மங்களூர் 100, ஆதவானி 80, அனந்தபுரம் 50, கடப்பை 100, நெல்லூர் 100, கரூர் 60.

***

**ஒருபசுவின் விசேஷம்,**—அமெரிக்காவிலுள்ள கனடாவைச் சேர்ந்த ரெட்டீர் என்னுமூரில் வசிக்கும் மிஸ்டர் ஜூலியன் ஷர்மன் என்பவருடைய ஒரு பசு மூன்று வருஷத்தில் 37,847 ராத்தல்பாலும், 25043[9] ராத்தல் வெண்ணெயும் கொடுத்ததாம்.

***

**நாயின் சாமர்த்தியம்.**—ஸர்பீடன் என்னுமிடத்தில் டோபி என்று பெயருள்ள ஒருநாய் இருக்கிறது. அது நெருப்பவிக்கும் தொழிலாளிகளால் வளர்க்கப்பட்டு வருகிறது. நெருப்பு அவிக்கும் எஞ்சின் தயாரானதும் அந்த நாய் ஏணிவழியாக ஏறி நெருப்பாளுக் கருகாமையில் சென்று உட்காரும். தீப்பற்றி யெரியும் வீட்டில் சிறிதும் அச்சமின்றி ஒவ்வொரு இடமாகச் சென்று அகப்பட்ட விலையுயர்ந்த சாமான்களைக் கௌவி கீழேயெறியும். கீழேதுணியை விரித்துப் பிடித்தால் அதின் மேலிருந்து தாவிக் குதிக்கும். வர்த்தமானப் பத்திரிகைகளில தீப்பற்றிக்கொண்டால் ஜ்வாலையைத்தனது வாலாலும்காலாலும் அணைக்கும். அடியில் கிடக்கும் பதார்த்தங்களை எடுக்கும் பொருட்டு ஒரு தடாகமத்தியில் முழுகும்.

***

**குருடனுக்கு காட்சிகிடைத்தல்.**—ஒருவன் ஐந்து வருஷகாலம் அந்தகனாயிருந்து பல்வலியால் அவஸ்தைப்பட்டு ஒரு பல்லைப்பிடுங்குகையில் கண்ணும்திறந்தது. மற்றொருவன் முப்பது வருஷம் முழுக்க குருடாயிருந்து கண்ணில விழுந்த தூசியைத் துடைத்துக்கொண்டதும் கணதெரிந்தது. மான்செஸ்டரில் மிஸ் காத்லீன் வெல்ஸ் ஒரு வருஷகாலமாகப் பொட்டையாயிருந்து தன் பாட்டி யிறந்த துக்கஞ் சகியாது அவஸ்தைப்படுகையில் பார்வையுண்டாயிற்றாம்.

***

**இழந்தோரைக் கண்டுபிடிக்கும் புதுவிதம்.**—நியூகாஸில் என்னும் ஊரில் பிரபல வைத்தியர் ஒருவரின் 9 வயதான காஸின் விண்டர்ஸ் என்னும் மகள் சில காலத்திற்கு முன் காணாமற்போய் எங்குந் தேடியுங் கிடைக்கவில்லை. இப்பொழுது அப்பெண்ணின் புகைபடத்தை ஒவ்வொரு பயாஸ்கோப் கம்பெனியாருக்குமனுப்பி அதைத்தினந்தோறும் பயாஸ்கோப்பில் விருத்தாந்தத்துடன் காண்பித்து அப்பெண்ணைக் கண்டுபிடித்து பெற்றோரிடம் சேர்ப்பிப்பவருக்கு இனாம்கொடுப்பதாக அறிக்கையிடப்பட்டிருக்கிறதாம்.

Supplement to the "Viveka Bodhini"

[ "விவேக போதினி" அனுபந்தம் ]



# விவேக போதினி

" எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." —— திருவள்ளுவர்


தொகுதி VI } பிரமாதீச ஹு புரட்டாசிமீ —1913- ஹு அக்டோபர்மீ { பகுதி 4


## எழு ஞான பூமிகள் II

## SEVEN STEPS IN ASCENT

(2). ஸ்வப்ந அவஸ்தை:—நான்காம் பூமிதான். இதில் உலகம் ஸ்வப்னவத்தாகவும், அதனாலும் தன் தேஹத்தாலும் எற்படும் ஸுக துக்கம் எல்லாம் வெறும் திருஷ்டமாகவும் இருக்குமே ஒழிய அனுபவ ரூபமாகவிராது. ப்ரபஞ்சமெல்லாம் ஸ்வப்ந உலகம் போலத் தோற்றும். ஆதலால்தான் இந்நிலைக்கு ஸ்வப்நம் என்றுபெயர். இதற்கு ஜீவன்முக்தி: பிரஹ்ம வித்நிலை என்ற மறுபெயர்களும் உண்டு. இந்நிலை யிலிருப்பவனுக்கு அனுபவி என்று பெயர், புருஷதந் திரம் நீங்கி வஸ்து தந்திர வசமாகி விடுவன் இவன். இவன் தான் விடுபட்டவன், மறுபடி ஸம்ஸாரத்திற் குத் திரும்பான், தன்நிலை யிழக்கா உலக உபகாரி. இந்நிலையைத்தான் வேதாந்தங்களில் ப்ரதிபாதிப்பது. இது ஸூக்ஷ்ம மஹா வாக்ய ச்ரவணாவஸ்தை.

(3). ஸுஷுப்தி:—ஐந்தாம்பூமி, இதில் நல்ல தூக்கத்திலிருப்பவனுக்கு ப்ரபஞ்சமிருப்பது போல உலகம், விழித்து தேஹதாரணத்திற்காக வ்யவஹரித் தால் உண்டு, இல்லாவிடில் இல்லை. இது ஸூக்ஷ்ம மனனாவஸ்தை என்னலாம்: ப்ரஹ்மவரன்நிலை. உப தேசமாத்திரம் அதிகாரம் இவனுக்கு உண்டு.

(4). துரியம்:—ஆறாம் பூமி: பிறர்கலைக்க தேஹ தாரண நிமித்தம் வெளிப்படுவன் இந்நிலையிலிருக்கும் பிரஹ்மவரீயான். இது ஸூக்ஷ்ம நிதித்யாஸனம் என்னலாம்; கடாக்ஷமாத்திர அனுக்ரஹசக்தி உண்டு. (2,3,4,) ம் நிலைகளை அபரோக்ஷ அப்யாஸநிலைகள் என்று கூறலாம். இவைபுருஷதந்திரமில்லாது வஸ்து தந்திர வசப்பட்டு எற்படும் நிலைகளே. வெளிப் பார் வையாகக் கூறி ப்ராரப்தபேதம் ஒப்புக்கொண்டு தீர வேண்டிவரும்.

(5). துரியா தீதம்:—எழாம்பூமி. தன்னாலும் பிற ராலும் நிலையிற் பிரியாத நிலையிது. இதற்கு ஆரூட நிலை, பிரஹ்மவரிஷ்டநிலை, விதேஹமுக்தி என்ற பெயர்களும் உண்டு. பரம்பொருள்தான் விளங்கும் (2)-ம் நிலைவந்த பின்னர் (3) (4) வாராமலே தேஹம் நழுவும் காலம் வந்தால் இந்தநிலை எற்பட்டுவிடும் வஸ்து தந்திர பலத்தால். சிலருக்கு தேஹம் நழுவும் முன்னரே இந்தநிலை 3, 4 மூலமாக வந்துவிடலாம். இத்தகைய மஹான் அரிது! அரிது! இவனும் ஸந்நி தானமாத்திர உபகாரம் செய்வன்; இந்நிலையைக் காட் டவே ஆலய விக்ரஹங்கள் அமைந்து கிடக்கின்றன.

இப்பூமிகளின் சிறப்பை உத்தேசித்தே கைவல்ய நூலாசிரியர், 'முதல்பூமி கைவந்தால் மைந்தா! முத் தியும் கைவந்ததாமே,' என்றார்.

இந்தஞானபூமிகளையே மூன்று நிலைகளாகப்பிரித் தும் கூறுவதுண்டு. அவையாவன, முமுக்ஷு, அனு பவி, ஆரூடன் நிலைகள் என்பவைகளே.

(1) முமுக்ஷு:—முதல்மூன்று பூமிகளிலிருப்பவன் இவனுக்கு வாததிருஷ்டிதானிருக்கும். சாஸ்திரவிஷ யங்கள் கற்று அதில் கூறப்பட்டிருக்கும் 'ப்ரபஞ்சம் பொய் பரம்பொருள் ஒன்றுதான் உள்ளது,' என்ற வாக்கியங்களில் திடமான நம்பிக்கை அப்யாஸ மூல மாகஇருக்கும் இந்தநிலை 'சுருதியின் துணிவால்நினைவு கொண்டு லகம்துச்சம் என்றுணர்தல் நிச்சயம்' என்று வர்ணிக்கப்பட் டிருக்கிறது. ஆகவே முதல் மூன்று பூமிக்கும் ஒன்றுசேர்ந்து நிச்சயநிலை, வாத திருஷ்டிநிலை, அப்யாஸநிலை என்றும் பெயர்களிடப் பட்டிருக்கிறது.

(2) அனுபவி:—நான்காவது பூமியிலிருப்பவனுக்கு இந்தப் பெயரிடப்பட்டிருக்கிறது. இவனுக்கு மித்யா திருஷ்டிதா னிருக்கும். இந்த உலகம் கானலில் காணப்படும்தண்ணீர்போல தன்னிடம் அத்யஸ்தமாக விருப்பதுதான் என்று துணிந்து, தேஹமுள்பட்ட ப்ரபஞ்சமெல்லாம் தானாகிய துணியில் எற்பட் டிருக்கும் சித்திரங்கள்' என்று நேரான அனுபவ மிருக்கும். அவனுக்குள்ள இந்தநிலை, ' கருதுறுநினை வையடக்கி இவ்வுலகம் கானலென்றுணர்தல் ஸமாதி என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நான்காம் பூமிக்கு ஸமாதி, மித்யா திருஷ்டிநிலை என்றும் பெயர்.

# விவேக போதினி

தொ.6.] பிரமாதீசவஸு : புரட்டாசிமீ [பகுதி 4

## அவதாரங்கள்—ஞானவழி

### AVATARS—REALIZATION VIEW II

இம்மாதிரி அவதாரஸ்வரூபத்தை நிர்ணயம் பண்ணிய பிறகு அவதாரவிஷயமாக உபாஸனை வழியில் எடுத்தாண்ட பகவத்கீதை நான்காம் அத்யாய அவதார ச்லோகங்களை எடுத்தாராய்வோம். முதலில் பகவான்,

என்பிறப்பும் போரில் இலங்கும் பரந்தபநின் [ றை
தன்பிறப்பும் எத்தனையோ தாம்சென்ற—முன்பவற்
எல்லாம் அறிந்திடுவேன் ஈங்கவற்றை நீ அறியாய்
புல்லாருக் கேறனையாய் பேர்ந்து.

என்று கூறியிருக்கிறார். அவித்தையில் கட்டுண்டு தத்தளிக்கும் ஜீவனுக்கு முன்பிறப்பு உணர்ச்சி இராது. பிறப்புபோன்ற தோற்றம் மாத்திரமாகக் காணப்படும் பிறவிகளையுடைய கடவுளுக்கு தமது அந்தர்யாமித் தன்மையால் எல்லாப் பிறப்பும் விளங்கும் என்பதுதான் இதன் கருத்து. இதனால் பரம்பொருளுக்கு நம்மைப்போல ஜனனாதிகள் உண்டென்றுகருதிவிட இடங் கொடுக்காமலே பகவான்மேல்,

பிறப்பிலனாய் தேய்தலறு பெற்றியனாய் யார்க்கும்
சிறப்புமலி ஈசனாய்ச் சீர்மை—உறப்பெறினும்
என் பகுதிதன்னை வசப்படுத்தென் மாயையினால்
ஸம்பவிப்பேன் தானீதுணர்.

என்றும் கூறுகிறார். இதற்கு வ்யாக்யானம் செய்யப் புகும் ஆதிசங்கராசாரியாள், ப்ரபஞ்ச முழுவதையும் அடக்கித்தமது ஆதாரமான வாசுதேவனை ஜாரவொட்டாது மயக்கி ஆட்டிவைக்கும் ப்ரக்ருதியைத் தன் வசப்படுத்தி ஆட்டிவைத்துக் கொண்டு, தமது மாயா வல்லமையால் தானே பிறக்கிறார் பகவான். அவருக்குத் தேஹம் பிறப்பு எல்லாம் உண்டு, மற்றவர்களுக்கு உள்ளதுபோல் ஸத்தியமாக உள்ளவையல்ல' என்று ஆணி யறைந்ததுபோல திடமாக விசேஷஉரை செய்திருக்கிறார்கள். இதைச் சரியாக பொருள்படுத்தாவிடில் யுக்தி விரோதமாயும் அசாஸ்திரீயமாயும் உள்ள விளங்காகுட்டிச்சாத்தான்வித்தைகளைப்போன்ற கொள்கைகளுக்கு இடங் கொடுத்துவிடும். இங்கு ஆசாரியாள் கூறியதை அநேக பண்டிதர்கள், 'கடவுள் பிறப்பு உண்மைதான், அவர் தேஹம் மாத்திரம் மற்றவர்களதுபோல உண்மையானதல்ல, அப்ராக்ருத திவ்ய மங்கள சரீரம்' என்று பொருள்படுத்தி விட்டனர். சங்கராசார்யாளோ 'பரம்பொருள் தேஹம் பிறப்பு இரண்டும் உண்மையல்ல, தோற்றம் மாத்திரமே, நாம் மாயையில் கட்டுப்பட்டிருக்கும் வரையில் உண்மைதான்.' என்று ஸ்பஷ்டமாகக் கூறுகிறார்களே. சிற்சில பிரமாண க்ரந்தங்களிலும் 'ராமகிருஷ்ணாத்யவதாரங்கள் நம்மிடையில் வாழ்ந்து, உலாவி, உலகில் லீலைய வந்தும், நமது தேஹங்களைப் போன்ற தேஹம் அவர்களுக்கில்லை' என்று காணப்படுகிறதே! என்ன ஆச்சரியம்! மாண்டூக்ய உபநிஷத்திற்கு சங்கராசார்யாள் செய்த வ்யாக்யானத்திற்கு, டீகா ஒன்று எழுதப்புகுந்த ஆனந்தகிரி பரமஹம்ஸர் நேராக ராமகிருஷ்ணாத்யவதாரங்கள் தேஹம் பாஞ்ச பௌதிகம் ஆதலால் ஸ்தூலமும் திரிச்யமு மானவைகளே! என்று எழுதிவைத் திருப்பதற்கு விரோதமாக முற்கூறிய வாக்கியங்கள் பிரமாணக்ரந்தங்களில் இருப்பது ஆச்சர்யமே! இந்தச் ச்லோகத்திற்கு ஆசாரியாள் செய்திருக்கும் வ்யாக்யானத்திற்கு வேறு விளக்கம் வேண்டியதில்லை. இதன்படி பகவான் 'எனக்கு தேஹமும் பிறப்பும் உண்டு: ஆனால் உண்மையில் உள்ளவைகளல்ல' என்று கூறுகிறார். பகவான் அழியாதவர், பிறப்பற்றவர். ஜீவர்களுக்கு ஜீவபாவம் நீங்காதிருக்கும் வரையில் ஏற்படும் தேஹம் பிறவி எல்லாம் உண்மையே. அதாவது ஜீவர்களது தேஹம் பிறவி எல்லாம் அவர்கள் எவ்வளவு ஸத்பவஸ்துக்களோ அவ்வளவு ஸத்ய வஸ்துக்கள்தான் (இந்தத் தோற்றமயக்கம் இருக்கும்வரையில் இவைகளும் உண்மைதான்). பரம்பொருள் தேஹமும் பிறப்பும் அவரைப் போன்ற ஸத்ய வஸ்துவாகுமா? ஆதலால் வெறும் தோற்றம்தான். நாம் அவித்தைக் குட்பட்டிருப்பதால் நமது தேஹம் பிறவியெல்லாம் ஸத்யமே; மாயா நியாமகரான பரம்பொருளுக்கு இவைகள் அஸத்யமே.



இந்த ஆராய்ச்சியி லிருந்து அவதாரங்கள் வ்யாவஹாரிக ஸத்தைகளே ஒழிய, தமது லோகத்தைக் காலியாக விட்டு உலகில் இறங்கி வந்து அப்ராகிருத திவ்யமங்கள சரீரத்தைக் கைப்பற்றுவதை யாவது அல்லது புண்யாத்மாக்களை, பிசாசுகள் பிடிப்பதுபோலப் பிடித்துக்கலந்து ஆட்டிவைப்பதையாவது ஸ்வரூபமாக உடைய பாரமார்த்திக ஸத்தையல்ல. அவதாரங்கள் ஆவசிய காலங்களில் கடவுள் ஸர்வாந்தர் யாமித்வத்தை நன்றாக வெளிக்காட்டும்இயற்கைக்கு விரோதமில்லாத அஸாதாரண தோற்றத்தைக்காட்டும்அற்புததோற்றங்களே. இதைத்தான் பகவான் கீதையில்,

என்றென்று தர்மம்இளைப்படையும் இப்புவியில்
என்றென்றதர்மம் எழுச்சிபெறும்—அன்றன்று
பண்பாலே என்னைப் படைத்தருளாற் போதருவேன்
திண்பாரில் நீயதனைத்தேறு.

என்று எடுத்துவிளக்குகிறார். ஒவ்வொருவர் வாழ்க்கையிலும், திடீரென்று எதிர்பாராததும் தாங்குவதற்கு முடியாததுமான கொடிய ஆபத்துகள், அல்லது 'வெளியேறவே முடியாது இதோடு அழுந்திப் போய் விடத்தான் வேண்டும்' என்று மனம் தளர்ந்து தள்ளாடும்படியான அவஸரஸமயங்கள் வந்து தாக்குங்கால், இதுபோலவே, எதிர்பாராத இடத்திலிருந்து திடீரென்று ஸஹாயம் ஏற்பட்டு ஒருவாறு தேறிக்கொள்ள இடமுண்டாவதுபோல, ஜாதியார்கள் விஷயத்திலும்ஸமூகவிஷயம், ராஜாங்க விஷயம், மதவிஷயம் இவைகளில் ஆபத்துகள் ஏற்படலாம்: அப்பொழுது அமானுஷத் தன்மை வாய்ந்த சிலமானிடச்ரேஷ்டர்கள் குழப்பத்திற் கிடையில் ஒழுங்கேற்படுத்தும்வரை அவர்கள் அமானுஷசக்தி, முதலியவைகளால் மற்றவர்கள் மனதில் தமது தெய்வத் தன்மையைப்புகட்டும் திறனை அடைந்து விடுகின்றனர். இப்படிப்பட்ட சிறப்புற்ற தெய்வீகத் தோற்றங்களுக்கே சிறந்ததும் பொருத்தமுமான அவதாரங்கள் என்றபெயர் கொடுக்கப்பட்டு, கடவுளெனக்கருதி ஆராதிக்கப்பட்டு வருவதுதான் ஒழுங்கான வழி.

இப்படி விமர்சித்திருப்பதால் ராமகிருஷ்ணாத்யவதாரங்களைத் தாழ்த்திவிட வேண்டும் என்ற கருத்து உண்டு என்று வாசிப்போர் அவஸரப்பட்டு எண்ணி விடலாகாது. இவர்கள் கடவுள் அவதாரம் மாத்திரமல்ல கடவுளே என்றுதான் வற்புறுத்த வந்தது. சாஸ்திரீய நடவடிக்கைகளுக்கு தாரணமாயும்; மிருதுத் தன்மை, நன்மை, வீரம் இவைகள் நிறைந்த அத்புதமாயும்; அடக்கம் கலந்த தீரம், சாந்தம் கலந்தசக்திமுதலியவை அத்புதமாய் அமைந்ததாயும்; பார்த்தால் பசு பாய்ந்தால் புலிபோலுள்ளதாயும்; ஸீதையைப் பிரிந்து கண்ணீராறுகப்பெருக்கிய காதலருக்குள்மன்மதனையும், தேவதைகள் ஸாக்ஷியாக விருந்து, அவன்

கற்பைநிலைநிறுத்தினால் அல்லது, ஸீதையை அங்கீகரிக்கமாட்டேன் என்று நிலைத்திருக்கத் தகுந்த காதற்சிறப்பு உடையவராயும்; லக்ஷ்மணருக்காகக் கதறியழுதஅத்புதத் தமையனாயும்;கொடுங்கோன்மன்னனாராவணனைக்கொஞ்சநாளுக்குள் ஒரேபாணத்தில் உயிரற்று விழும்படி செய்தவீரராயும், ஸூர்யோதயகாலத்தில் பனிபோலவும்கறைந்துமறையும்பிசாசங்கள் போலவும்ப்ரபஞ்சமெல்லாம் இருந்தவிடம்தெரியாது கரைந்துருகிப் பறந்துவிடும் சுத்தப்ரஹ்மபராத்பராமாகியும்; ஹிமஸேது பரியந்தம் ஒவ்வொரு ஹிந்து ஹிருதயத்திலும் தாரக மந்திரமாகவிளங்கி வருவதுமான இனிமையான ராமமூர்த்தியும்: ப்ரபஞ்சமாகிய நாடகத்தில் இருக்கும் வெளிப் படையான விரோதாம்சங்கள், தோஷங்கள், முதலியவற்றையும் விடாது நடித்து யாரும் மறவாத வண்ணம்காட்டி, அவைகளின் பின் தாமே கபட நாடகஸூத்ரதாரியாக விருப்பதை வெளிப்படுத்தியவராயும்; தாமே தஸ்கராணும்பதியாக (கள்வர் தலைவனாக) இருப்பவராயும்; ப்ரேமை கருணை முதலியவைகளுக்கு நிலயமாகவிருந்த போதிலும் தாமே ஸகல விரோதம் சண்டை முதலியவைகளுக்கு இவ்வாறு காரணமாக விருப்பது என்பதை வெளியிடு பவராயும், ஸகல வேதாந்தங்களையும் வெளிப்படுத்தும் திறனுடையவராயும்ஸகல ஸ்திரீகளும் மிகுந்த ஆனந்தத்துடன் கூறத்தக்கதாயும் உள்ளபால்ய லீலைகளையுடைய அத்புதக் குழந்தையாயும்; உபநிஷத்துக்கள் வெளியிடும் அத்புதவிஷயங்களைவிட அத்தியத்புத விஷயங்களைத் தெரிவிக்கும் சேஷ்டைகளைக் கோபிகள், ராதை முதலியவர்களோடு செய்த அத்புதச் சிறுவனாயும்; உலகத்தையே நிலைநிறுத்தும்படியான சட்டங்களை வெளியிட்ட அமைச்சராயும்; ஸந்நிதான மாத்திரத்தால் எல்லாவிஷயங்களையும் நியாயப்படி நடக்கும்படி செய்யும் அத்புத வீரராயும், உலகத்திலுள்ள ஸகலவேதங்களது ஸாரத்தையும் சுருக்கமாகக்கொஞ்ச நாழிகையில் பாண்டு மைந்தனுய்ந்திடப்புகன்ற பரமகுருவாகியும்; 16000ஸ்திரீகளோடு கூடியிருந்த நித்யப்ரஹ்மசாரியாயும்; நாரதரை ஒருநொடிப் பொழுதில் மாயையில் கட்டுப்படுத்த தவிக்கும்படி செய்த தந்திரஸ்நேஹிதராயும்; ஸதாவேணுகானம் நடனம், விளையாட்டு ஆகிய இவைகளையே நிச்சிந்தையாகச் செய்துகொண்டிருக்கும்கோபாலனாயும்; கற்பனுரஸம், ஸம்பவ விசித்ரங்கள், ஆழ்ந்த உட்கருத்துக்கள் ஆகிய இவைகள் விஷயத்தில் தனக்குத்தானே நிகர் என்று சொல்லும்படியான திவ்யசரித்திரத்தை உடையவராயும்; பூர்ணாவதாரமாயும் உள்ள கிருஷ்ணமூர்த்தியும் கடவுளாக மதிக்கப்படாவிடில் கடவுள்தான் எப்படி இருப்பாரோ? இவர்களைக் கடவுளென மதியா முழுமூடனுக்குக் கடவுளே இல்லை தான். இதுபற்றியே லீலாசுகரும்,

கலைக்கான் உழல்பெரியீர் காருபநிடத்தின்
தலைக்கான அர்த்தமிதிற் சாரீர்—மலைக்காதே
கண்ணுமிடச் சேரியுரல் கட்டுண்டுறு பொருளை
என்னுமிதிற் சார்வீர் இனிது.

என்று கூறுகிறார்! இதனோடு நாமும்

மேலையன்பால் ஒட்டம்பிவேடற்றழீஇக் கைகை
வேலை நிற்பாற்சாருமடைவீர்.

என்று முன்பாட்டில் பின் இரண்டு அடியை மாற்றிச் சேர்த்துக் கூறுவதற்கு என்னதடை?

ஞானவழியாக இந்த அவதாரவிஷயம் ஆராயப்பட்டதன் கருத்தை மறக்கலாகாது. ராமகிருஷ்ணாதி அவதாரங்கள் வெறும் மனிதர்கள் தான் என்றுஸ்தாபிக்க வரவில்லை: மற்றையகொள்கைகள் கூறுவதுபோல எங்கும் பரவியிருக்கும் கடவுளுக்கு ஏற்ற இறக்கம் கூறலாகாது என்பதை வற்புறுத்தத்தான் வந்தது. இந்தஸர்வாந்தர்யாமித்வத்தை எல்லோரும் புத்திபூர்வ



மாக அங்கீகரிக்கலாம்: ஆனால்வேதாந்தத்திற்கு இம்மாதிரி கௌரவ அங்கீகாரம் மாத்திரம் போதாது. இந்தஅங்கீகாரத்தை அனுபவமாக்கிவிட வேண்டும் என்பதே வேதாந்தத்தின் துணிபு. இந்தஅனுபவம்வரப்பண்ணும்வழியில்.

'திருவுடைய தாய் வளரும் தேஜஸுடையதாகி
மருவும்ஞானதிசயம் வாய்த்த—பொருவில் பொருள்
என்னுளவோ அன்னவெலாம்,

கடவுளெனக் கருதப்பட்டு மனம் நிலைபெற்றால்தான் எங்கும் கடவுளைக்காணும் மாறாநிலை வரும். இவைகள் தான் நமது மனத்தை நமது யத்தனமன்றியிலேயே கவர்ந்திழுக்கும் இந்த பாவனைவழியில் உதவியாகவிருக்க இந்த ச்லோகம் வரும் விபூதி யோகமாகிய பத்தாம் அத்தியாயத்தில் தமது தோற்றச் சிறப்புக்களை முதலில் வெளிப்படையாகக் கூறுகிறார் பகவான்! பின்னர்தான் 13-ம் அத்தியாயத்தில் 'க்ஷேத்திரங்கள் தோறும் எனை க்ஷேத்ரஜ்ஞன் என்றறிக' என்றுகூறி முடிக்கிறார்.

ஆதலால் இந்த அவதாரங்கள் எல்லாம் பூஜார்ஹங்களே. ஆனால் இவைகளைக் கடவுளே (ப்ரஹ்மமே) என்று கருதி த்யானித்து வழிபடுவது முமுக்ஷுவுக்குச் சிறந்தவழி. இந்த விஷயத்தைப் புகட்டத்தான், ராமதபனி, ராமரஹஸ்யம், கோபாலதாபனி, கிருஷ்ணோபநிஷத் முதலிய அவதார ஸம்பந்த உபநிஷத்துகள் பிறந்திருக்கின்றன. மற்றைய முற்கூறிய வழியாக அவதாரங்களைக்கருதி ஈடுபடுவது ஸாதாரண ஜனங்களுக்கு எவ்வளவு சாந்திப்ரதமாக விருப்பினும் முமுக்ஷுத்வம் வாய்ந்த பரிபாகிக்கு ஏற்படும் ஆவலைத் தணிக்குந்திறம் அவைகளுக்கு இல்லவே இல்லை. இந்த முழு அவதாரங்களை மதித்துக் கடைத்தேற உபயோகப்படுத்தும் வழிதான் ஞானவழி எனப்படும். அம்மாதிரிதான் இங்கு அவதார விஷயம் எடுத்தாராயப்பட்டது.

# ஷ்வேஸட்டா ஸ்தலம்

## SHWEZETTAW—A PLACE OF PILGRIMAGE

தென்னிந்தியாவில் பாடல்பெற்றதும்பாடல் பெறாததுமாய் நூற்றுக் கணக்கான திவ்ய க்ஷேத்திரங்கள் மாத உற்சவங்களையும் வருஷ உற்சவங்களையும் விமரிசையாகக் கொண்டாடுகின்றன. ஒவ்வொரு ஸ்தலத்தைப் பற்றியும் புராணங்களும் விசேஷங்களும் கூறப்பட்டிருக்கின்றன. கணக்கிறந்த பக்தர்கள் யாத்திரை செய்து ஒவ்வொரு ஸ்தலமாக தரிசித்தும் புண்ணிய தீர்த்தங்களில் நீராடியும் வருகிறார்கள். இந்துக்களுக்குக் காசியும் ராமேசுவரமும், மகமதியர்களுக்கு மெக்காவும் மெடீனாவும், கிறிஸ்தவர்களுக்கு நாஸரத்தும்,ஜெருஸலமும், பௌத்தர்களுக்கு கயையும், கண்டியும் அதிசிரேஷ்டமான ஸ்தலங்களென்று கருதப்படுகின்றன. அதிக தூரம் யாத்திரை செய்து மேற்சொன்ன விடங்களைக் காண வியலாத எளியோர்க்கும் பிணியோர்க்கும் உண்ணாட்டிலேயே சில ஸ்தலங்களை ஏற்படுத்தி அவற்றிற்கு மகாத்மியங்களும் கற்பனை செய்துள்ளார். உதாரணமாக ஸ்ரீவாஞ்சியம் என்னும் சிற்றூரைக் காசியிலும் வீசமடங்கதிக மென்று சொல்லிச் சுற்றுப்பக்கங்களிலுள்ளவர்களெல்லாம் அவ்விடத்தை தரிசனஞ் செய்து வருவதுமன்றி அவ்வாலயத்தில் தோண்டப்பட்டுள்ள குளத்தில் கங்கையிலும் விசேஷமான புண்ணியதீர்த்தமென்று நீராடுகிறார்கள். இவ்வாறே ஒவ்வொரு ஊரும் சிறப்பித்துக்கூறப்பட்டு தேசசஞ்சாரிகளாலும் ஆஸ்திக ஜனங்களாலும் கௌரவிக்கப்பட்டு வருகிறது.

பர்மாவில் பௌத்தர்களால் மிக்க சிலாக்கியமானதென்று யாத்திரை செய்யப்பட்டு வரும் ஷ்வேஸட்டா என்று ஒரு இடமுண்டு. பர்மாவில் ஷ்வே என்றால் பொன்னுக்கும் ஸெட்டா என்றால் பாதத்துக்கும் பெயர். கௌதமபுத்தருடைய பாதம் இந்த ஸ்தலத்தில் படிந்திருப்பதுபற்றி இதற்கு ஷ்வேஸட்டா என்று பெயர் வந்தது. இது மின்பு ஜில்லாவில் மான் என்ற நதிதீரத்தில் ஐராவதிநதிக்கு நேர்மேற்கே 25-வது மைலிலும் ரஸ்தா வழியாக மின்புவிலிருந்து 31 மைல் தூரத்திலும் உள்ளது.

பௌத்தர்களைத் தவிர அயல்மதத்தார்கள் இதில் இல்லை. நூற்றேழு வீடுகளேயுள. அவற்றில் 288 ஆண்களும் 249 பெண்களுமாக 537 பேர் வசித்து வருகிறார்கள். இங்குவருஷாவருஷம் பங்குனி மாதத்தில் பெருந் திருவிழா ஒன்று பத்துதினம் நடந்தேறி பௌர்ணமியன்று பூர்த்தியாகிறது. ஆனால் அவ்வுற்சவத்தைக் கண்காணிக்கவும் பிரபலப்படுத்தவும் வரும் ஜனங்களும், கடைகளும், சந்தைகளும், கூத்துகளும், வேடிக்கைகளும் ஒருமாதம் வரையில் கலைவதில்லை. அறுபதினாயிரம் முதல், லட்சம் ஜனங்கள் வரையில் பிரதி வருஷமும் அங்கு கூடுவார்கள். பர்மா, தலாயிங், கரீன், கச்சின், சின் முதலிய சுதேசிகளும், பஞ்சாபி, வங்காளி, சென்னைவாசி முதலிய இந்தியர்களும், சீனர்கள், சீயர்கள் முதலிய அயல் நாட்டாரும் பெண்டுகள் குழந்தைகள் சகிதம் அச்சமயம் வந்து சேருவார்கள். நல்ல கோடைகாலத்தில் இவ்வுற்சவம் நடந்தேறுவதால் இவ்வளவு ஜனங்களுக்கும் அவ்வூரிலோடும் மான் என்னும் ஆற்றின் ஓரத்திலும் மணற்பாங்கிலும் வரிசையாக இரண்டு மைல் நீளம் சிறு குடிசைகள் கட்டப்பட்டிருக்கும். அன்றியும் இரண்டு பெரிய சாவடிகளும் பல தங்கிடங்களும் சில தர்மவான்களால் பிரயாணிகளுக்கென்று கட்டிவிடப்பட்டிருக்கின்றன. ஆனால் இச்சாவடிகளை அநேகமாய் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களே உபயோகித்துக் கொள்ளுகிறார்கள்.

உற்சவத்தைச் சிறப்பாய் நடத்த தேவஸ்தான கமிட்டியார் தகுந்த ஏற்பாடுகள் செய்யக் கடமைப்பட்டவர்களான போதிலும், அக்கூட்டத்தில் சண்டை, குழப்பம், களவு முதலிய நேரிடா வண்ணம் ஒரு ஐரோப்பிய உத்தியோகஸ்தரின் கீழ் ராணுவப்போலீஸும் சாதாரண போலீசும் கவர்ன்மெண்டாரால் அனுப்பப்படும். அன்றியும் வழக்குகளை அப்பப்பொழுதே தீர்க்கவும் தண்டனைகள் விதிக்கவும் ஒரு பர்ம நியாயாதிபதியும் அப்பொழுது அதிகாரஞ் செலுத்துவார். சுகாதாரத்தைக் கவனிக்க வைத்தியர்களும் இனஸ்பெக்டர்களும் அங்கு அனுப்பப்படுவார்கள்.

பிரார்த்தனை செலுத்தும் பொருட்டு விலைமிக்க பண்டங்களை பக்தர்கள் எடுத்து வருவதுண்டு. புற்றிலிருந்து ஈசல்கிளம்பினாற்போலப் பாதைகள் முழுதும் இடைவிடாமல் மாட்டு வண்டிகள் ஷ்வேஸட்டாவை நோக்கி வந்து கொண்டேயிருக்கும். இவற்றில் ஆடவரும் பெண்டிரும் தமமக்களுடன் ஆடையாபரணாலங்கிருதராகி மிக்க ஆவலுடனும் மகிழ்ச்சியுடனும் திருவிழா வைபவம் கொண்டாட வருவார்கள். தீயவர்களும் வறுமையால்காய்ந்தவர்களும் பொருள் சேகரிக்க இதுவேசமயமென்று காத்திருப்பார்களாதலால் அவர்களினின்றும் பிரயாணிகளைக் காக்கும்பொருட்டுப் பாதைகளில் சேவகர்கள் காவல் செய்து வருவார்கள். அன்றியும் தீயோர் மனதில் அச்சமுண்டாக்க அவ்வூரார் மரங்களில் இடையிடையே பாதகர்களைப் போல் பதுமைகள்செய்து அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டாற் போல் கழுத்தில் கயிறு மாட்டித் தூக்கிட்டிருப்பார்கள். சில உருவங்களைச் சிலுவையில் அறைந்திருப்பது போல் காட்டியுமிருப்பார்கள்.

இந்த ஸ்தலத்தைப் பற்றிய ஐதிகம் பின்வருமாறு:—

கி. பி. 750-ல் மின்புவுக்கு 22 மைல் தூரத்திலிருந்த வணிகா என்னுமூரில் வசித்த மகா பொன்னன் என்னும் வர்த்தகன் 500 வண்டிகளில் சரக்கேற்றிக்கொண்டு வியாபாரஞ் செய்து சம்பாதிக்கஇந்தியாவிற்குச் சென்றான். அங்கு சஞ்சாரஞ்செய்து வருகையில் ஒருநாள் திரளான ஜனங்கள் சமாதியை நோக்கி வேகமாகப் போய்க்கொண்டிருப்பதைக் கண்டு தானும் அவர்களுடன் கலந்து அங்கு சென்றான். கௌதமபுத்தர் மனங்கவருமாறு உபதேசங்கள் செய்து வருவதைக் கேட்டுப் பரவசனாகி இல்லறத்திலும் செல்வத்திலும் வெறுப்புற்றுத் தன் சரக்குகளையெல்லாம் தன் தம்பிக்கு அனுப்பிவிட்டு அப்பொழுதே கௌதமபுத்தரின் சீடனாகி விட்டான். இவ்வாறு மூன்று வருஷங்கழிந்ததும் ஒருநாள் மகா பொன்னன் கௌதமரை நோக்கித் தான் திரும்பவும் தன் தேசம் சென்று தன் ஜனங்களுக்கு சத்திய தர்மத்தை உபதேசஞ் செய்து அவர்களையும் உய்யுமாறு செய்விக்கத் தனக்கு உத்தரவுகொடுக்க வேண்டுமென்று கெஞ்சினான். மகா பொன்னனின் உறுதி நிலைமையையும் சத்துவ குணத்தையும் புத்தர் பரீட்சித்தறிந்து திருப்தி



யடைந்து அப்படியே செய்வாய் என்று அனுக்ரகித்து உத்தரவு கொடுத்தார். மகா பொன்னன் கௌதமரை மூன்றுதரம் வலம் வந்து அடிபணிந்து அவரது கிருபையால் ஒருமாதம் நடந்து வந்த வழியைக் ககனமார்க்கமாய் ஒரே இரவில் கடந்து தன் தேசம் வந்து பௌத்த தர்மத்தைப்பற்றி உபந்நியாசங்கள் செய்துகொண்டிருந்தான்.

சிறிது காலத்துக்கெல்லாம் மகா பொன்னனுடைய தம்பி ஏராளமான சரக்குகளை ஏற்றிக்கொண்டு 500 பேர்களுடன் வியாபார விஷயமாய்க் கடல்மார்க்கமாய் இந்தியாவுக்குப் புறப்பட்டான். கடலினிடையே மலையா என்னுந் தீவொன்றைக் கண்டு அதிலிறங்கிப் பார்க்க சந்தகு என்னும் அதி விலையுயர்ந்த செடிகள் அங்குக் காடாக வளர்ந்திருப்பதை யுணர்ந்து தமது சரக்குகளை யெல்லாம் அத்தீவிலேயே இறக்கிப் போட்டுப் படகுகளில் அச்செடிகளின் கட்டைகளை யடுக்கிக் கொண்டு பிரயாணப்பட்டார்கள். ஆனால் அத்தீவிலிருந்த வனதேவதை மனம் பொறாமல் பெரும்புயலும் மலை போன்ற அலைகளும் உண்டாகச் செய்து அவ்வியாபாரிகளைத் தத்தளிக்கச் செய்தது. கடலிலேயே மரணமடைய வேண்டியது தான் என்று எல்லோரும் நம்பிக்கையிழந்து நிற்கையில் மகாபொன்னன் திடீரென்று அவர்கள்முன் தோன்றி புயலையும் அலையையும் நிற்கும்படி ஆணையிட்டான். உடனே கடலின் கொந்தளிப்பும் அடங்கிற்று. அனைவரும் ஊர்வந்து சேர்ந்தார்கள். மகாபொன்னன் செய்த உபகாரத்துக்காகத் தாங்கள் கொண்டு வந்த சரக்கில் ஒரு பாகத்தை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டியும் மகாபொன்னன் சிறிதும் அதற்குடன்படாமல் அப்பாகத்தின் ஊதியத்தைக்கொண்டு கௌதம புத்தருக்குப் பெரிய மடம் ஒன்று கட்டி வைக்கும்படி ஆக்ஞாபித்தார். மலையாத்தீவின் மரத்துண்டுகளில் மூன்று அங்குல நீளம் வாய்ந்ததுண்டு பதினாயிரம் ரூபாய் வீதம் விலைப்பட்டதால் அவ்வியாபாரிகள் மகாபொன்னன் இஷ்டப்படியே 800 அறைகளுடன் கூடிய விசாலமான மடம் ஒன்று கட்டிமுடித்தார்கள். உடனே மகா பொன்னன் இந்தியாவுக்குத் திரும்பவும் பறந்து சென்று கௌதமரை வணங்கிச் சில நாட்கள் பர்மாவில் வந்திருக்கும்படி வேண்டினான். கௌதமரும் மனதிரங்கித்தனது சீடன் வேண்டுகோளுக்கிணங்கி ஆநந்தரை நோக்கித் தனக்கொரு விமானமும் 499 துறவிகளுக்கு விமானங்களும் பிரத்தியேகமாக இன்னொரு விமானமும் சித்திசெய்யக் கட்டளையிட்டார். விமானங்கள் தயாரானதும் அனைவரும் அவற்றிலேறிக்கொண்டு ஆகாயமார்க்கமாக வணிகா கிராமம் நோக்கிப் புறப்பட்டார்கள். பர்மாவின் கரை வந்ததும் வழியில் ஒரு துறவியைக் கண்டு அவரைப் பிரத்தியேக விமானத்தில் வைத்துக்கொண்டு விடியற்காலத்துக்குள் மகா பொன்னன் கட்டுவித்த மடம் வந்து சேர்ந்தார்கள்.

வழியில் தென்பட்ட துறவிக்கு சித்ஸபந்தரென்று பெயர். அவர் ஒரு சமயம் வேடனாயிருந்தார். ஒருநாள் ஒரு தேவதை அவ்வேடன்முன் தோன்றி ஒருசிறு வில்லையும் அம்புகளையும் கொடுத்து ஒரு நாளில் ஆண்மான்களை மாத்திரமும் மறுநாள் பெண்மான்களை மாத்திரமும் இவ்விதமே மாறி மாறி வேட்டையாடி வரும்படிக்குச் சொல்லி அதற்குச் சம்மதித்ததாக வாக்குத்தத்தமும் பெற்றார். வேடன் கண்ணியெடுத்துப் புறப்பட்ட பொழுதெல்லாம் ஆண்மான் பிடிக்கவேண்டிய நாளில் பெண்மானும், பெண்மான் பிடிக்கவேண்டிய தினத்தில் ஆண்மானும் அகப்படக்கண்டு இது நாம் ஜீவ வதை செய்யாதிருக்கும் பொருட்டு தேவதை செய்த யுக்தி யென்றறிந்து வேட்டைத் தொழிலை அன்றுடன் விட்டுத் துறவு பூண்டார். இவரே சித்ஸபந்தர்.

வணிகா கிராமத்திலிருந்த ஏழுநாள்களிலும் புத்தர் ஆயிரக் கணக்கான ஜனங்களுக்கு ஜீவன், மரணம், பிறவி, முக்தி இவ்விஷயங்களைப் பற்றி மிக்க சாமர்த்தியமான உபந்நியாசங்களைச்செய்து 5,88,000 பேர்களை பௌத்த தர்மத்தை யனுசரிக்கும்படி செய்துவிட்டார். எட்டாவது தினம் விமானங்கள் திரும்பவும் அவர்கள்முன் தோன்றவும் கௌதமரும் அவர் தம் சீடர்களும் அவற்றிலேறி இந்தியா மார்க்கமாகப் புறப்பட்டார்கள். மான்நதியைத்தாண்டுகையில் அந்நதிதேவதை கௌதமரை நோக்கி "பிற்காலத்தார் கௌதம புத்தர் இந்நாட்டிற்கு விஜயஞ்செய்தார் என்பதை நம்பி ஆராதனை செய்வதற்காக ஏதாவது அடையாளம்

"விட்டுச் செல்லவேண்டு" மென்று வேண்ட, புத்தர் அந்நதியில் கிளம்பியிருந்த பாறையில் தன் இடது பாதத்தை யழுத்த, சுவடு அதில் நன்றாகப் படிந்தது. அங்கு சித்ஸபந்தனை இறக்கிவிட்டு "இதுவரையில் உனக்கு ஞானம் உதிக்காமலிருந்தது. தவறான கொள்கைகளை அனுசரித்து வந்தாய். இனி நான் உபதேசித்த சன்மார்க்கத்தைப் பிரபலஞ்செய்" என்று புத்திமதி கூறினார். அதற்குச் சித்ஸபந்தன் "பிரபுவே தாங்கள் இத்தேசத்திற்கு வந்து சென்றதைப் பின்னோருணருமாறு இங்கும் ஓர் அறிகுறி அமைக்கவேண்டு" மென்று கெஞ்ச திருபாவள்ளல் திரும்பவும் தமது இடதுகாலால் அக்குன்றில் அழுத்தினார். வலதுகாலை உபயோகித்திருந்தால் அவரது மகிமையால் இவ்வுலகு நாம் வசிக்கத் தகாததாகிவிடும்.

ஒரு சுவடு முட்டை வடிவமைந்ததாகக் காணப்படுகிறது. இதில் குதிகாலாவது கால்விரல்களாவது காணப்படவில்லை. பாத உருவே தெரியவில்லை. 5 அடி 9 அங்குல நீளமும், 4 அடி 2 அங்குல அகலமும், 9 அங்குல ஆழமும் வாய்ந்தது. சுவர்ணபத்திரத்தால் அலங்கரிக்கப்பட்டும் காஷாயத்தால் மூடப்பட்டும் உள்ளது. பித்தளையாற் செய்த இரு போராவுகள் காவல் காப்பனபோல் அமைக்கப்பட்டுள்ளன. கண்டவர் உட்புகாவண்ணம் இரும்புக் கிராதிகளால் சூழப்பட்டுள்ளது. இச்சுவட்டின்மேல் அடிவாரத்தில் 20 அடி சதுரமுள்ள ஒரு கோபுரம் 50 அடி உயரமுள்ளதாகக் கட்டப்பட்டிருக்கிறது.

உண்மைச்சுவடு அக்குன்றின் ஒரு சாய்ப்பில் இருந்தது. அதைத் தரிசிக்கவரும் ஜனங்கள் தவறிச் சரிந்து விழுந்துவிடுவார்களென்ற பயத்தாலும் அவ்வோரம் வெள்ளத்தின் உக்கிரத்தில் நிலைபெயர்ந்து விடுமோவென்ற ஐயத்தாலும் ஒரு பக்த துறவி அச்சுவடு பதிந்த பாகத்தைப் பெயர்த்து வேறிடத்தில் ஸ்தாபனஞ் செய்ய முயன்றார். ஆனால் அப்பாகம் இடையில்பிளவுபட்டதுமன்றித்துறவியின் கண்களும் அவிந்தன. திரும்பவும் அப்பாகத்தைப் பழைய விடத்திற் கொணர்ந்து வைக்கவே துறவியின் கண்கள் திறந்தனவாம். இப்பொழுது ஜனங்களுக்கு அபாயம் நேரிடாதபடி அப்பாறையைச்சுற்றி மதிற்சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அச்சுவட்டின் மீது கோபுரங்களும் எழுப்பப்பட்டிருக்கின்றன.

இவையன்றி போலிச்சுவடு ஒன்று அக்குன்றில் இவைகளுக்குச்சிறிது தூரத்திலிருக்கிறது. அது 9½ அடி சதுரமும் 1½ அடி உயரமுமுள்ள ஒரு மேடைமேல் 5 அடி 2 அங்குல நீளம், 3 அடி அகலம், 3 அங்குல கனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதுவும் மற்றச் சுவடுகளைப்போல் அலங்காரஞ் செய்யப்பட்டும் காவல் காக்கப்பட்டும் வருகிறது.

தொண்டர்கள் இச்சுவடுகளில் தங்கரேகைகளைக் கொணர்ந்து ஒட்டிப் போவது வழக்கம். இவைகளை முற்காலத்தில் கோவிலடிமைகள் சாமர்த்தியமாய்த் திருடி அபகரித்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அவ்விதம் நடவாவண்ணம் தேவஸ்தானக் கமிட்டியார் தகுந்த ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

இப்பாறைகளைக் கொண்ட குன்று 350 அடி உயரம் பொருந்தியது. அது கோபுரங்களாலும் மண்டபங்களாலும், துவஜ ஸ்தம்பங்களாலும் செறிந்துள்ளது. சித்ஸபந்தனை முதலில் புத்தர் பார்த்த விடத்திலும் அவனைப் புதைத்த விடத்திலும் அவனுக்கு தேவதை வில்லம்புகொடுத்தவிடத்திலும், கோவில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. நின்று கொண்டிருக்கும் கௌதமரின் உருவம் ஒன்று இக்குன்றில் வைக்கப்பட்டுள்ளது. அது 20 அல்லது 30 அடி உயரம் வாய்ந்தது. மற்றொரு இடத்தில் வேடனுக்கு வில்லம்புகொடுத்த தேவதையின் உரு ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு இடத்தில் சித்ஸபந்தன் முழந்தாளிட்டு வேட்டையாடியபோது பதிந்த பள்ளங்கள் இரண்டு காட்டப்படுகின்றன. இவை 16 அடி தூரத்துக்கப்பால் 10 அங்குல குறுக்களவு வாய்ந்து வட்டவடிவமாயிருப்பவை. இவனது நாயின் பாதச்சுவடுகளென்று சில குழிகளும் காண்பிக்கப்படுகின்றன.

இக்குன்று மூன்று புறமும் மான் நதியால் சூழப்பட்டுள்ளது. மேலேறுவதற்கு நான்கு பாதைகள் வெட்டிவிடப்பட்டிருக்கின்றன. இவைகளில் படிக்கட்டுகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பாதையில்மாத்திரம் 600 படிக்கட்டுகள் இருக்கின்றன. மழை வெய்யிலினின்றும்



பாதுகாப்புக்காக இப்பாதைகளில் தலைக்கு மேல் தேக்குமரத்தால் சார்புகள் போடப்பட்டிருக்கின்றன. இக்கூரைகளில் விசித்திர வேலைகள் செய்யப்பட்டும் சித்திரங்கள் தீட்டப்பட்டும் உள. குன்றின் சிகரத்தில் நின்று பார்த்தால் வெகுதூரம் வரையில் பிரதேசங்கள் கண்ணுக்குப் புலப்படும்.

விசேஷங்கள்.—சுவட்டின் அருகாமையில் ஒரு முழ நீளமும் 8 அங்குல அகலமும் 3 அங்குல கனமும் வாய்ந்த ஒரு கருங்கல் மற்றொரு பெரிய பாராங்கல்லின் மேல் வைக்கப்பட்டிருக்கிறது. இது இஷ்டம் காமியமாகுமா ஆகாதா என்பதைத் தெரிவிக்கக்கூடுமாம். எப்படியெனில் புருஷனைவிட்டுப்பிரிந்த ஸ்திரீ ஒருத்தி திரும்பவும் கணவன் தன்னை வந்துசேருவானா என்றறிய வேண்டி இக்கல்லைத் தூக்கினால் அது இலேசாக விருந்தால் வந்து சேருவான் என்பதையும் பளுவாக இருந்தால் வரமாட்டான் என்பதையும் உணரலாம். நோயாளிகள் தமக்கு எந்தப்பாகம் நொந்தபோதிலும் வேடனுக்கு வில்லம்புதந்த தேவதை யுருவில் அந்தப் பாகத்தைத் தடவிப்பிடித்தால் நோய் தீர்ந்து விடுமென்று நம்புகிறார்கள். அங்கு கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும் பெரிய வெண்கல மணியைக் கீழே வைத்திருக்கும் மான் கொம்பினால் தட்டி நாதஞ் செய்தால் தூய்மை யுண்டாகு மென்று ஜனங்கள் கருதுகிறார்கள்.

இக் கோவிலுக்கு இராஜாங்க அதிகாரிகள் ஏராளமான நிலங்களை மான்யம் விட்டிருக்கிறார்கள். அவற்றின் வரும்படியைக்கொண்டு கோவில் நடத்தப்பட்டும் உற்சவ ஏற்பாடுகள் செய்யப்பட்டும் வருகின்றன. கோவில் ஊழியத்திற்காகப் பரம்பரையாகச் சிலர் அடிமைத் தொழில் செய்து வருகிறார்கள். பர்ம ராஜாக்கள் காலத்தில் யுத்தத்தில் பிடிபட்டவர்களும் மரண தண்டனையி னின்றும் மன்னிப்புப் பெற்றவர்களும் பாரம்பரியமாய் கோவிலுக்கு ஊழியஞ் செய்யக் கட்டளை இடப்பட்டார்கள். பர்மாவிலுள்ள ஒவ்வொரு ஆலயத்திலும் இவ்வித அடிமைகள் இப்போதும் இருந்து வருகிறார்கள்.

புத்தமதம் எல்லாம்வல்ல இறைவனொருவனுளான் என்று ஒத்துக் கொள்ளாததால் ஆலயங்களிலெல்லாம் பூஜைகளாவது நைவேத்தியங்களாவது கிடையாது. புத்தன் தூய்மைபெற்ற மனிதனே யென்பதும் மற்ற ஜனங்களும் முயன்றால் புத்தனைப்போல் தூய்மை பெறலாமென்பதும் அம்மதத்தின் கொள்கை. ஆனால் புத்தர் ஏனையோர் அடையாத மேன்மை தனது ஊக்கத்தினால் பெற்றதுபற்றி அவருடைய சிலைகள் ஒவ்வொரு ஆலயத்திலும் அமைக்கப்பட்டன. அவரது பிறப்பு வளர்ப்புச் சரிதைகள் சித்திரங்களாக வரையப்பட்டன. ஆனால் அவ்விக்கிரகங்களுக்குப் பூஜைகளாவது புறப்பாடு செய்யும் உற்சவங்களாவது நடப்பதில்லை. கற்றோரையும் உயர்ந்தோரையும் மதித்து வினயத்துடன் வணங்குவதுபோல் புத்தரையும் பெரியோர் என்று ஜனங்கள் வணங்குகிறார்கள். பெரியோரின் ஜன்மத்திதியைக் கொண்டாடுவதுபோல் புத்தருடைய விசேஷ தினங்களைக் கொண்டாடுகிறார்கள்.

---

நன்மதிப்பு.—அயலாரால் நன்கு மதிக்கப்பட விரும்பாத மனிதர் இது வரையிலுங் கிடையாது. உயிர் வாழ்க்கையைச் சிறப்புறச் செய்வது நன் மதிப்பே. செல்வம் ஒருவனுக்குப் பல சௌகரியங்களையுண்டுபண்ணலாம். ஆனால் செல்வமுடையவரெல்லாம் நன்கு மதிக்கப்படுவாரென் றெண்ணுவது சரியல்ல. புகழும் பெருமையும் படைத்தவொருவன் தன் சுஜனங்களினால் நன்கு மதிக்கப்பட்டவனென்று சொல்லுவதும் இயையாது. தனது ஏதோவொரு அசாதாரண சாமர்த்தியத்தால்ஒருவன்புகழ்பெறலாம். ஆனால் அச்சாமர்த்தியம் அவனுக்கு நன் மதிப்பை விளைவிக்கு மென்பது திண்ணமன்று. பொறாமையும், அசூயையும் புகழைத்தாக்குகின்றன. முகஸ்துதியும் வஞ்சக நெஞ்சமுஞ் செல்வத்தைச் சூழ்கின்றன.

நன்மதிப்புப் பெற்றவனோ எவ்விடத்திலும் யாவராலும் வரவேற்கப்படுகிறான். அவன் செல்லுமிடமெல்லாம் ஜனங்கள் அவனைக்கொண்டாடுகிறார்கள்: அவனை விரும்பாதவர் இடையாது, இப்படிப் பலருக்கு அனுசரணையாயிருப்பதால் ஒருவனடையுந்திருப்திக்கு ஒருவனிடமிருக்கும் விலையிலாமாணிக்கங்கள் தாமெம்மாத்திரம் மதிப்புடைத்து; நன்மதிப்பைப் பெறுமொருவன் சுயநலம் பாராட்டான்; தண்மையும் வண்மையும் வாய்ந்திருப்பான்; முறுவல் பூத்த முகத்தினையுடையவன்; ஏனையோர் கஷ்டநஷ்டங்களைத் தனதாகப் பாவித்துப் பரிபவன்; தாரதம்மியமின்றி எவரையும் சமானமாய் அனுகூலிப்பவன்; இறுமாப்பாவது கடுஞ்சொல்லாவது கண்டறியாதவன்; குதூகலமுள்ள சுபாவம் வாய்ந்தவன்; இனிமையும் கருணையும் மனத்திற் குடிகொண்டவன்; ஆலோசித்து நிதானித்துப் பேசுபவன். அன்புமடக்கமுங் கூடியவன்.

## மாட்சிமைதங்கிய அலெக்ஸாண்ட்ரா மஹாராணியும் தயையும்

## QUEEN ALEXANDRA—HER HUMANITY

அலெக்ஸாண்ட்ரா மஹாராணியின் குணப் பெருமையை விளக்க இரண்டு கதைகள் கீழே கூறுகின்றனன்.

அவர் இளவரசியாயிருந்த காலத்தில் தன் அரண்மனையை விட்டுச் சென்று பாதை ஒன்றைக் கடக்கையில் களைப்பாலும் துக்கத்தாலும் வாடியிருந்த ஒரு சிறுபெண்ணை நோக்கினார். அந் நிலைமைக்குக் காரணம் யாதென்று கேட்ட இனிமையான வார்த்தைகள் செவியுட் புகுந்தவுடன், கேட்பவர் இன்னாரென்று அறியாத அக்குழந்தை தன் கஷ்டங்களை யெல்லாம் விரித்துரைத்தனள். தாயார் வியாதியால் பீடிக்கப்பட்டு இருந்து வருவதையும், தன் உடுப்பைத் தானே தைத்துக்கொள்ளவேண்டியிருப்பதையும், அதுநிமித்தம் வெகுதூரம் சென்று கூலிக்குத் தையல்மிஷினை வாங்கித் தன்வேலையைமுடித்துக்கொண்டு இல்லம்போவதையும் அப்போப்பட்ட யந்திரம் ஒன்றை வாங்கிக் குடித்தனத்தின் ஏழ்மையைத்தன்னாலியன்ற அளவு தணிக்க தனக்கிருக்கும் அவாவையும் தெளிவாக்கினாள். பிறகு விடைபெற்றுத் தன் வீடுநோக்கி விரைவிற்சென்றாள். சிலநாட்களுக்குப் பிறகு, விஷயங்களினுண்மையை விசாரித்தறிந்த இளவரசி தன் கைப்பணத்தின் ஒரு பகுதியைச் செலவழித்து யந்திரம் ஒன்று வாங்கி அப்பெண்மணிக்குப் பரிசாக அளித்து அவளுடைய அபீஷ்டத்தைப் பூர்த்திசெய்து குடும்பத்தாரின் மனோ நன்றியறிதலைக் கைப்பற்றினார்.

கிளாரன்ஸ் பிரபுவின் மரணத்திற்குப் பிறகு சாந்திரிங்ஹாம் என்னும் ஊரின் சந்துகளின் வழியாக நடந்து செல்லுகையில் தலையின் மீதுள்ள பாரத்தின் மிகுதியால் தட்டித்தடுமாறி நடந்துகொண்டு தண்ணீர் சொரிந்த வண்ணமாய் வரும் வயதுசென்ற ஸ்திரீ ஒருத்தியைக் கண்டனர். தூரத்திலுள்ள கடைகளில் வாங்கப்பட்ட சாமான்களைச் சொந்தக்காரர்களுக்குக் கொண்டு போய்ச் சேர்த்துக் கூலிக்கு வேலைசெய்து பிழைப்பவர்களில் அவள் ஒருத்தி. அவளுடன் பேசஆரம்பித்து மூட்டையின் பாரத்தைப்பற்றி ஹிதமான வார்த்தைகள் இரண்டொன்று சொல்லிவே உள்ளடங்கி நின்ற துக்கம் சந்திரனைக்கண்ட சமுத்திரம் போல் பொங்கிப் பெருகிற்று.

"ஐயகோ! என் அதிர்ஷ்டத்தை என்னவென்றுரைப்பேன். ஜாக் என்னும் என் குமாரன் இவ்வேலையைச் செய்து என்னைக்காப்பாற்றி வந்தான். நான் இவ்வேலையைச் செய்யாவிட்டால் பட்டினியாயிருந்து மரிக்க வேண்டியதுதான்" என்றாள். அவனெங்கே என்று இளவரசி வினவ கண்ணீர் ஆறுகப்பெருக "அவ்வருமையான குழந்தையைப்பறிகொடுத்த பாவியானேனே" என்றாள். இதைச் செவியுற்ற இளவரசி, பேசவும் நாவெழாமல் துயரத்திலாழ்ந்தனள். சிலநாள் கழிந்தபிறகு மூட்டைஎற்றும் வண்டி ஒன்றும் கழுதைஒன்றும் இனாமாகப் பெற்ற கிழவியின் சந்தோஷமும் நன்றியறிதலும் இவ்வளவு தானென்று வகுத்துக்கூறலும் முடியுமா? நிரந்தரமான புத்திர சோகத்தின் கொடுமையும் சற்றுத் தணிந்தது.

மன்னுயிரைத் தன்னுயிராகப் பாவிக்கும் குணம்படைத்த மாது சிரோமணியைப் பின்பற்றப் பிரயத்தனப்படுவோமாக. உன்னதபதவியில் அமர்ந்திருப்பவர்களுக்கு இந்த குணங்கள் வாய்ப்பது துர்லபம். அவைகளைத் தவறவிடாது தம் இனத்தாரின் துக்கங்களை நிவர்த்திக்கும் குணசீலர்கள் உன்னதமான கோபுரத்தின்மேல் பிரகாசிக்கும் மின்சார விளக்கைப் போல் விளங்கிக் கொந்தளிக்கும் பரவையிலகப்பட்டுத் திகைக்கும் மரக்கலத்தைப் போன்ற ஆன்மாக்களைக் கரைசேர்க்கும் சிறப்பை அடைகின்றனர். சாதாரண ஜனங்களுக்கு இச்சமயங்கள் பலநேரிடும். ஆனால் அவர்கள் சகோதரர்களுடைய சுக துக்கங்களைப்பார்த்துக்கொண்டிருந்தும் தன் இனத்தையே பாராட்டிச்சிறிதும் ஜீவகாருண்யம் காட்டாது இந்திரியங்களால் கட்டப்பட்டு நீர்வழிப்பட்ட புணைபோல் ஓடி அலைந்து கர்மத்தை விர்த்தி செய்துகொண்டு ஈசுவர ஆக்ஞைக்கு விரோதமாக நடக்கின்றவர்களாகின்றனர்.



## ஆமணக்குநெய் பிதிலியும் மண்ணெண்ணெய் டின்னும்

## CASTOR OIL CASK AND KEROSINE OIL TIN

என் வீட்டிலுள்ள அறை ஒன்றில் ஆமணக்கு நெய் பிதிலி ஒன்றும் கெரோஸின் எண்ணெய் டின் ஒன்றும் நிரம்ப சரக்கடைத்துவைத்திருந்தேன். ஒருநாள் இரவில் தடபுடல் சத்தம் ஒன்று கேட்டது. எலியோ, பெருச்சாளியோ உள்ளிருந்த ஸாமான்களைக் கீழேதள்ளிப்போட்டதென்று நினைத்து சிம்னி எண்ணெய்க்காய் ஒன்றை ஏற்றினேன். கதவண்டை போனவுடன் ஒருகாற்று வீசவே சிம்னிஎண்ணெய்க்காய் அணைந்து போயிற்று. மெழுகுவர்த்தி விளக்கு ஒன்றை ஏற்றிக்கொண்டு போனேன். சுரையிலிருந்த வில் பிடுங்கிக்கொண்டு வர்த்தி ஒரு புறத்திலும் சிம்னி சின்னாபின்னமாயுடைந்தும் வீழ்ந்தது. இரண்டு முறை விளக்கேற்றியும் கதவு திறக்க முடியாமல் நான் திரும்பி வந்துவிட்டதைக்கண்ட வயதுசென்ற என் பாட்டி ஆமணக்கு நெய் விட்டிருந்த கல்விளக்கைக் கொணர்ந்து என்னை ஏற்றச் சொன்னாள். அதில் கனமான துணித்திரி ஒன்று போட்டிருந்தது. ஏற்றுவதற்கு இரண்டு நிமிஷமாயிற்று: ஆயினும் திறக்க வேண்டிய கதவண்டை எடுத்துப் போகிறவரையில் தீபம் அணைந்து போகவில்லை. "பிழைத்தேன்" என்று எண்ணிக்கொண்டு சாவியைப் பூட்டில் மாட்டித் திறக்கப் பார்த்தேன். பூட்டு திறக்கப்படவில்லை. என் பாட்டி சாவியை விளக்கில் தோய்த்துக் கொண்டு திறக்கச் சொன்னாள். "பழங்கம்பளி" என்று நான் எப்போதும் உதாஸீனமாய்ப் பேசுகிற பாட்டியின் புத்தி என் புத்தியைவிட மேலானதென்று இப்போது எனக்கு நன்றாய்ப் புலப்பட்டது. விளக்கில் தோய்த்த சாவியைப் பூட்டில் மாட்டித் திறந்தேன். வெகுசுளுவாய்த் திறக்கப்பட்டது. கைவிளக்கோடு உள்ளே போய்ப் பார்த்தால், என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்! ஆமணக்கு நெய்பிதிலி கெரோஸின் எண்ணெய் டின்மேல் சாய்ந்து டின்னை அப்பளமாக நசுக்கினதுடன் அதிலிருந்த சரக்கெல்லாம் வெளியில் வந்து தரையில் சுவறியிருந்தது. இரண்டு பாத்திரங்களும் ஸமீபத்தில் வைக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வகையாக ஆமணக்குப் பிதிலி கெரோஸின் டின்மேல் விழுந்து எனக்குப் பெரிய நஷ்டத்தை உண்டாக்கிற்றென்று மாத்திரம் ஒருவருக்கும் தெரியவில்லை. பெருச்சாளி இழுத்துத் தள்ளியிருக்கலாமென்றெண்ணவும் இடமில்லை. ஆமணக்குப் பிதிலியின் சரக்கு ஒரு திவலைகூடக் கீழே சிந்தாமலிருந்தது. நான் திகைத்து நின்றுகொண்டு காரணம் ஒன்றும் புலப்படாமல் வருந்தினேன். பிள்ளையாரை வேண்டிக்கொண்டேன்: மாரியம்மனுக்கும் ஐயனாருக்கும் தேங்காய் உடைக்கிறதாகவும் சொன்னேன். இப்படி என்மனம் பலவாறாகக் கலக்கமுற்றிருக்கும்போது படுக்கையிலிருந்த பிதிலி கொஞ்சங் கொஞ்சமாய் நிமிர ஆரம்பித்தது. என் உடல் நடுங்கிற்று. பேயோ, பிசாசோ பிதிலிக்குள் புகுந்திருக்கிறதென்று நினைத்தேன். ஜடப்பொருள் போட்டவிடத்திற் கிடக்காமல் தானே நிமிருகிறதென்றால் எவனுக்குத்தான் திகில்பிறக்காது; பயத்தினால் பிதிலி நின்ற இடத்திலிருந்து சிறிது தூரம் விலகினேன். உடனே காடிராமஸ்மரணை பண்ணுகிறது போல் ஒரு சத்தம் காதில் பட்டது. எனக்கோ முன்னிலும் காபரா அதிகமாயிற்று. சுற்றுமுற்றும் பார்த்தேன். மனிதர் ஒருவரையும் பார்த்தேனில்லை. புத்தி மாத்திரம் கலங்கியே யிருந்தது. துணை ஒருவருமில்லாமல் உள்ளேயிருக்க என்மனம் துணியவில்லை. படுத்திருந்த பாட்டியைக் கூவினேன். எழுபத்தி ஐந்து வயதிற்கு மேற்பட்ட கிழவி என்பாட்டி. அவளுக்குக் காது சிறிது மந்தம். கண்ணும் அப்படி இப்படித்தான். என்னிடத்திலுள்ள அன்பினால் தள்ளாடிப்பிள்ளாடிக்கொண்டு உள்ளே வந்தாள். நடந்திருந்த சமாசாரத்தை அவளிடத்தில் சொன்னேன். அவள் மூக்கின் மேல் விரலை வைத்துக் கொண்டு வாய் திறவாமல் சற்றுநேரம் இருந்துவிட்டுக் கையிலிருந்த விபூதி ஸம்படத்தைத் திறந்து விபூதியை எடுத்து என் நெற்றியிலிட்டாள்; குலதெய்வங்களுக்கு மாவிளக்குப் போட வேண்டுமென்றாள். பாட்டி பேசிக்கொண்டிருக்கையிலேயே பிதிலிவாயில் அடைத்திருந்த கார்க்குப்போ

ன்றகட்டை வெளியில் வந்து விழுந்தது. திடுக்கிட்டு நான் பாட்டிமேல் விழுந்தேன். கிழவி கீழே விழுந்து மூர்ச்சையாய்ப் பிணம் போலானாள். கிழப்பிராணம் லேசாகப் போகவில்லை. அவள் எழுந்து வெளியே போய்க் குளிர்ந்த ஜலம் கொணர்ந்து என் முகத்திலடித்தாள். நான் அதற்குப் பிறகுதான் கண்ணை விழித்துப் பார்த்தேன். என்னுடைய நெஞ்சழுத்தத்தைக் கண்டு எந்தப் பெண்பிள்ளை தான் இகழாள்? கிழவிக்கிருந்த தைரியத்தில் ஆயிரத்திலொரு பங்கு கூட வயதுவந்த புருஷனாகிய எனக்கு இல்லையே. என் கதையை இதனுடன் நிறுத்திப் பிதிலியின் சமாசாரத்தைச் சொல்லுகிறேன்.

வாயிலடைத்திருந்த கட்டை பிடுங்கிக் கொண்டு வெளியில் வந்தவுடனே பிதிலியிலிருந்து கறுத்த மேனியுடன் ஒரு புருஷ ரூபம் வெளிப்பட்டது. நான் குழறிக் கொண்டதை இனிச் சொல்லமாட்டேன். மேற்கூறிய ரூபம் என்னைப் பார்த்து:—

எஜமானே! உங்களுக்குத் தண்டனிடுகிறேன். நான் பேயுமல்ல: பிசாசுமல்ல: புராதன திரவியத்தைக் காவல் செய்யும் உங்கள் குலதெய்வத்தின் சேவகர்களில் நானொருவன். நவீன நாகரீகம் அதிகப்பட பழைய ஆசாரங்கள் எல்லாம் ஒவ்வொன்றாய் மறைந்து வருகிறது எனக்குத் தெரியும். புதியஸாமான்கள் தம்முடைய பெருமையை மாத்திரம் பாராட்டிக்கொண்டு என்னைப்போல பழைய ஸாமான் காக்கின்றவனை நிந்திக்காமல் இருந்தால் எனக்குக் கோபம் எள்ளளவேனும் வந்திராது. "சிம்ணி எண்ணெய்" நேற்றைய பயல்; அவன் அடை பட்டிருக்கும் இடமோ உள்ளித்தோல் போன்ற தகரக்குழாய். அவனுக்கு வந்திருக்கிற திமிரோ அளவு சங்கையில்லை. எஜமானன் படுத்தான பிறகு சிம்ணிப்பயல் அடே எருமை மாடே அநாதைப் பிணமே அடாஓட்டகமே கழுதை நாயே பேயே என்று திட்டினான். எனக்கும் கோபம் பிறந்தது, போட்டிக்காரன் வைதால் நானும் வையவேண்டியதுண்டோ இல்லையோ, எஜமானே சொல்லவேணும்" என்று பிதிலி புருஷன் சொன்னான். எனக்கு ஒரு பக்கத்தில் உதைப்பும் ஒருபக்கத்தில் நகைப்பும் பிறந்தது. நெஞ்சைத் திடஞ்செய்துகொண்டு பிதிலியைப் பார்த்து "நடந்த காரியத்தை ஸாங்கோபாங்கமாய்ச் சொல்லு; குற்றஞ் செய்தவனைத் தண்டிக்கிறேன்" என்றேன். பிதிலியான் முப்பத்திரண்டு பற்களையும் திறந்து கொண்டு திருப்திப்பட்டவனாய்ப் பேச மறுபடியும் தொடங்கினான். "எஜமானே! நீங்கள் பிறக்கிறதற்கு ஆறுமாதத்திற்கு முன்னமே மண்ணச்சநல்லூரிலிருந்து தங்கள் மாமா என்னை இங்கே அனுப்பினார். அப்போது இரண்டு வீசைக்கலயம் என்னிடத்திலிருந்து எடுக்கப்பட்டது. அப்போதே சிம்ணி எண்ணெய் உபயோகத்திற்கு வந்துவிட்டது. நான் போட்ட இடத்திலேயே கிடந்து வருகிறேன். என்னை ஏனென்று கேட்பாருமில்லை, எடுத்து விழிப்பாருமில்லை. உலகத்தின் மாறுதல்களை மாத்திரம் கவனித்துக் கொண்டிருக்கிறேன். என்னால் ஒருவருக்கும் உபகாரமில்லாவிடினும், துன்பம் ஒன்றுமில்லை யென்பது நிச்சயம். அப்படியிருக்க, சிம்ணிப்பயல் என்னைப்பார்த்து 'நாயே, பேயே, நாளையே உன்னைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிடச் சொல்லுகிறேன்' என்று திட்டிப் பேசலாமா? "பொறுத்தார் பூமியாள்வார்" என்ற பழமொழி "ஒறுத்தார் உலகமாள்வார்" என்றிருக்க வேண்டியது. "அல்பனுக்குப் பவுஷு வந்தால் அர்த்த ராத்திரியில் குடைபிடிப்பான்" என்பதை மனதில் வைத்துக்கொண்டு சும்மா இருந்தேன். பேச்சு வரவரத் தடித்தது. சும்மா இராமல் சொரூபத்தைக்காட்டவேண்டுமென்று தோன்றிற்று. என்னுடைய பெரிய உடம்பு நகருகிறதென்றால் எவ்வளவு கஷ்டம், சாமி, உங்களுக்குத் தெரியாதா? மானம் பெரிதா, பிராணன் பெரிதா? வந்தது வரட்டுமென்று ஒரு புரளல் புரண்டு டின்னின்மேல் விழுந்தேன். அது நசுங்கி ரூபமில்லாமல் மண்ணைக்கவ்விக்கொண்டு கிடக்கிறது. மூச்சு இருக்கிறதோ, இல்லையோ தெரியவில்லை. தங்கள் தூக்கம் கலையக்கூடாதென்று மெள்ளத்தான் வீழ்ந்தேன். ஆயினும் கல்லடிபட்ட நாயைப்போல் ஊளையிட்டுக் கொண்டு சிம்ணிப்பயல் விழுந்தான். அந்தச் சத்தந்தான் தங்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பி உள்ளேவரும்படி செய்தது. என்றால் தங்கள் தூக்கம் கெட்டுப்போனதற்கு என்னை மன்னித்தல் வேண்டும். தண்டமிடுகிறேன் என்னிடத்தில் தங்களுக்குப் பிரியமில்லா



விடின் மண்ணச்சநல்லூருக்கே என்னை ஒரு வண்டியிற்போட்டு அனுப்பிவிடுங்கள். இங்கிருந்து தினமானம் அவமானப்பட என்னால் இனி முடியாது, முடியாது" என்று பிதிலி புருஷன் சொன்னான்.

இந்தப்புதுமையைப் பார்த்த எனக்கு உண்டான ஆச்சரியத்தை என்னென்று சொல்வேன்! பயமென்பது முற்றிலும் போய்விட்டது; பிதிலியிடத்தில் அனுதாபம் பிறந்தது. பிதிலிக்கும் டின்னுக்கும் ஸம்வாதம் பிறந்ததற்குக் காரணங்கேட்டேன். பிதிலி சொன்னதாவது:—எஜமானே, என் உடல் கரடுமுரடாய்த்தானிருக்கிறது: பதமிட்டதோல் அல்லதான்: பித்தளை மூடி இல்லை: இங்கிலீஷ் எழுத்துக்கள் பதிக்கப்படவில்லை: எனக்கு வயது ஜாஸ்திதானாய்விட்டது: இது எல்லாம் பரிகாசம் செய்வதற்குப் போதுமான காரணங்களாகுமா? நான் அனாதைபோலத்தான் இப்போதிருக்கிறேன். நானும் வாழ்ந்த காலமுண்டு. கலியாணங்களில் நான் இல்லாவிட்டால் எங்கும் அந்தகாரமாய்த்தானிருக்கும். ஊர்கோலங்களில் நான் நின்று எரிகிறதுபோல் எந்தத் தைலமும் எரிவதில்லை. உள்ளே உண்டான சத்தம் என்னவென்று பார்ப்பதற்கு விளக்கை ஏற்றினீர்களே, சிம்ணிப்பயல்தான் என்ன செய்தான்? தங்களைச் சமயத்தில் மோசம் பண்ணிவிட்டானல்லவா? தங்கள் ருதுசாந்தி காலத்தில் எல்லாரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ஒரு காற்றடிக்க "பவர்லைட்" களெல்லாம் அணைந்து போய்விட்டன. "மூத்தாளும் முட்டுக்குதவுவாள்" என்றபடி பழைய குத்து விளக்குகளில் திரிகளைப் போட்டு என்னைத் தேடினார்கள். சண்டமாருதம் வீசினாலும் நான் அணையாமலிருந்தேன். அன்று முதற்கொண்டு கலியாணக் குத்துவிளக்குக்கு நானே பிரயோஜனப் பட்டு வருகிறேன். மினுக்கு மினுக்கென்று எரிகிற வர்த்தி விளக்கு ஸமயத்தில் தங்களுக்கு உதவாமல் போனதைச் சற்றுநேரத்துக்குமுன் தாங்களே பார்த்தீர்கள். சேஷையர் வீட்டில் கலியாணம் நடந்தபோது பந்தலில் கட்டியிருந்த பவர்லைட்பற்றிப் பந்தலெல்லாம் எரிந்து கலியாணத்தைக் கெடுத்தது. வாழைமரம் ஒன்றை நட்டுக் கொஞ்சம் சாணியை வைத்து அதன்மேல் அகலில் திரிபோட்டு என்னை உபயோகித்திருந்தால் பந்தல் தான் போயிருக்குமா, கலியாணம் பார்க்க வந்தவர்களுக்கு மனக்கிலேசந்தான் உண்டாயிருக்கக் கூடுமா? புதிதாய் வந்த சிம்ணிப் பயலாலல்லவோ எல்லோரும் ஏமாறுகிறார்கள்? ஏழைப்பேச்சு அம்பலம் ஏறுகிறதில்லை. ஆயினும் தங்கள் ஊழியனாயிருக்கிற மட்டில் தங்களுக்கு ஹிதத்தைத் தேடுவதும் சொல்வதும் என்னுடைய கடமை என்றெண்ணி இவ்வளவு பேசத் துணிகிறேன். சிம்ணிப்பயல் பற்றிக் கொண்டால் அவன் தலையில் மண்ணை வாரிப் போட்டாலொழிய அவன் சமனப்படுவதில்லை: இல்லாவிட்டால் மனிதர் மூத்திரத்தையாவது தெளிக்க வேண்டும். இந்த ஈனசாதிப் பயல் இப்போது பெரிய மனிதர்களுக்குள் வெல்லம் பட்ட பாடாயிருக்கிறான். யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கும் ஒருகாலம் வருமன்றோ? சிம்ணிக்கழுதை, கையில் ஒருபொட்டுபட்டுவிட்டால் பிணநாற்றம் நாறுவான். எவ்வளவுமுறை தண்ணீரைவிட்டு அலம்பினாலும் நாற்றம் போகிறதில்லை. சாணியைக் கரைத்து அவன் தலையில் கொட்டினால் தான் தொலைகிறான். அது நிற்க, சிம்ணிப்பயல் எரிகிற வீடெல்லாம் கரி, வெள்ளைத் துணிகளெல்லாம் கரி: ஒட்டடை நூல் நூலாய் எங்கும் தொங்க ஆரம்பித்து வீட்டை அவலக்ஷணமாக்குகிறான். இவனுக்குக் கண்ணாடியால் வீடு: கண்ணாடிச் சட்டை: பித்தளைப் பிடி: நாகப்பெட்டி: இவ்வளவு பந்தோபஸ்து பண்ணியும் ஸமயத்தில் காரியம் மாத்திரம் முழுமோசம். கண்ணுள்ளவர்கள் இவனை எடுத்துப் பார்ப்பார்களா? அதைப்பற்றிப் பேசிப்பயனில்லை. சிம்ணிப்பயல் ஒரு துளி வாயில் பட்டுவிட்டால் செவ்வெண்ணெய் முதற்கொண்டு வாந்தி எடுத்து ஆளைக்கொன்றாலும் கொன்றுவிடும். எனக்கோ "பிள்ளை வளர்க்கிறவன்" என்று உலகப்பிரஸித்தமான பெயர். சரீரத்திலுள்ள வாயுக்களைப் போக்கி மலப்பையை நான் சுத்தமாய் வைப்பது போல எந்த ஔஷதமும் செய்யச் சக்தியுடையதல்ல. கால் பிடிப்பிருந்தால் என்னைத் தேய்த்து வெந்நீரை விட்டால் வலிபோன இடந்தெரியாமற்போய்விடும். என் பெருமையைப் பற்றி அதிகமாய்ப் பேசுவதில் பிரயோஜனமென்ன? நான் உயர்ந்தவன் என்பதற்கு ஒரு விஷயமே போதும். ஸ்வாமி ஸந்நிதிகளில் என்னைக் கொண்டு பிரகாசம்

பிறப்பிக்கலாமே யல்லாமல் சிம்னிப்பயல் அங்கே தலை நீட்டக் கூடாது. ஸ்வாமி என் கக்ஷியில் இருக்கிறார் என்பதற்கு வேறு சாக்ஷியம் தேவையில்லை.

தங்களுக்கு இன்னும் இருபது வயதாகவில்லை. அப்படி யிருந்தும் மூக்குக் கண்ணாடியில்லாமல் பகலிலேயே பசுமாடு தெரிகிறதில்லை; இரவில் எருமை மாடு எப்படித் தெரியும்? குழந்தை முதற்கொண்டு சிம்னிவிளக்கில் படித்துக் கண் பொட்டையாய்ப் போய் விட்டது. உங்கள் தாயைப்பெற்ற பாட்டனாரும் தகப்பனைப்பெற்ற பாட்டனாரும் நூறு வயதிருந்தார்கள். அவர்கள் மூக்குக் கண்ணாடி போட்டு நான் பார்த்திலேன். அமாவாசை ராத்திரி 12-மணிக்குக் கூப்பிடு தூரத்தில் வருகிறவர்கள் யாரென்று சொல்லக்கூடிய கூர்மையான திருஷ்டியுடையவர்களா யிருந்தார்கள். 'லாரென்ஸ் அண்டு மேயோ'வுக்கு வியாபாரம் பூஜ்யம். அறைக்குழந்தைகள் முதற்கொண்டு கண்ணாடி யில்லாமல் தமது தாய்மாரையும் தெரிந்து கொள்ளாதவர்களாய் விட்டார்கள். இது எவ்வளவு துக்கமான காரியம்? கலியாணக் கோலத்தைச் சவக்கோலமாக்கியும் வீட்டைக் கரியாக்கியும் துர்நாற்றத்தை விருத்திபண்ணியும் வருகிற சிம்னி எண்ணெய்க் கழுதையிடத்தில் உங்களுக்கேன் அபிமானம்? சிம்னிப்பயலாலே ஆஸ்டிரியா, ஜர்மனி தேசங்கள் நம் மூர்ப்பணத்தைக் கண்ணாடிப் பாத்திரங்கள் மூலமாய்க் கொள்ளையிட்டுப் போகிறார்கள். மூன்றும்நாள் நாடா வறாமல் பவர்லைட்கள் மூலையில் போடப்படுகின்றன. மூன்றுநாளைக் கொரு சிம்னி உடைந்து புது சிம்னி வாங்கி ஐவேஜி யழிந்துபோகிறது. உள்ளூரிலேயே செய்யக்கூடிய ஸாமான்களா யிருந்தாலும் போனாற் போகிறதென்னலாம். யானை தன் தலையில் மண்ணைவாரிப் போட்டுக்கொள்ளுகிற வியாபாரம்போலிருக்கிறது. கண்ணாடி விளக்கு வந்தபிறகு குத்து விளக்குச் செய்யும் கம்மாளர்களுக்குப் பிழைப்பே குறைந்துபோயிற்று. ஆமணக்குப் பயிரிடுவதும் நின்றுபோயிற்று. பலபேர்களுடைய பிழைப்புக்கு ஹானி வந்துவிட்டது. எந்தநாளும் சிம்னி எண்ணெய் கிடைக்குமா என்று பார்ப்போமாயின் ஊற்றுக்கள் சில நாட்களில் அடைபட்டுப் போகக்கூடியன. சிம்னிப்பயல் புகைக்கப்பலுக்கும் புகை வண்டிக்கும் நிலக்கரிக்குப்பதிலாக உபயோகிக்கப்படப் போகிறானும். அப்போது ஒன்றிற்குப் பத்தாக விலையாகும். எஜமான் குடித்தனம் அந்தரத்திலேதான் நிற்கும். இதை எல்லாம் யோசித்துச் சிம்னிப்பயல் இந்த வீட்டில் நாடாமல் செய்தீர்களானால் உங்கள் முன்னோர்கள்போல நீங்களும் நீடூழி காலம் வாழ்ந்து பெருமையை அடைவீர்கள். தங்கள் க்ஷேமத்தை நாடினவனானதால் இவ்வளவுதூரம் சொன்னேன். அதிகமாகப் பேசினதற்கு என்னை மன்னித்து க்ஷமிக்க வேண்டும்.

இம்மென்னு முன்னே மேற்படி ரூபம் பிதிலிக்குள் புகுந்தது. பிதிலி அடைப்பானும் தானே கிளம்பி வாயைக் கெட்டியாய் மூடிக்கொண்டது.

பாட்டியும் தூக்கந்தெளிந்து எழுந்தாள். பொழுதும் விடிந்தது; பிதிலியும் டின்னும் போட்டுக் கொண்ட சண்டையால் இரண்டே காலே வீசு ரூபா நஷ்டமும் அறைமுற்றிலும் நாற்றமுந்தான் மிகுந்தது. அன்றுமுதல் அஸ்தமித்த வுடனே என் பாட்டி ஆமணக்கு நெய் பிதிலிக்கு தூபம்தீபம் நிவேதனம் முதலியவைகளைச் செய்துவருகிறாள். கலகமும் நின்றது. ஹிட்ச் காக் பேடெண்டு லேட்டுக்கு மாத்திரம் சிம்னி எண்ணெய் உபயோகித்து வருகிறேன்.

---

## சந்தாதார்க்கு அறிவிப்பு

அச்சாபீஸ் மாறுதலால், நமது **'விவேக போதினி'** ஆபீஸையும், **திருவல்லிக்கேணி**க்கே மாற்றி யிருக்கிறோம். சந்தா நேயர்கள், இனி எழுதும் கடிதங்களையும், புஸ்தக ஆர்டர்களையும், **மானேஜர், "விவேக போதினி" திருவல்லிக்கேணி**, மதராஸ், என்று எழுதக் கோருகிறோம். சந்தாதார்களுக்கு புத்தகங்கள் குறைந்த விலைக்குக் கொடுப்பதுடன், ஆர்டர்கள் காலதாமதப்படாமல் அனுப்பவும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

மானேஜர்



# மாயக்கண்ணாடி
## THE MYSTERIOUS MIRROR
(தொடர்ச்சி)

ஜமீன்தார் விளக்கையணைத்ததும் திரும்பி வந்து ஸோபாவில் தன் மனைவிக்கருகில் உட்கார்ந்தார். ஏதோகொஞ்சம் தைரியம் உண்டாயிற்றென்றாலும் முழுவதும் அவருக்கு தைரியம் வரவில்லை. இப்படி யிருக்கையில் திடீரென்று ஜமீன்தார் கநகவல்லியின் கையைப் பிடித்து, "கண்ணே! உனக்கு ஏதாவது காதில் சப்தம் விழுகிறதா?" என்றார். ஆம், ஏதோ முனகுவது போன்ற சப்தம் கநகவல்லி காதுக்குக் கேட்டது.

ஜமீன்தார்:—"கடியாரம் அடிக்கும் ஓசை உனக்குக் கேட்கிறதா?"

கநகவல்லி:—"இல்லையில்லை. தேன்வண்டுகள் செய்யும் ரீங்காரம் போன்ற சப்தம் என் காதில் விழுகின்றது."

ஜமீன்தார்:—"ஏதாவது வாஸனை உனக்கு உண்டாகிறதா?"

கநகவல்லி, "ஆகா உண்டாகிறது. ஸுகந்த பரிமளமணம்."

ஜமீன்தார்:—"ஸுகந்த பரிமளமணமா? இல்லவேயில்லை. ஏதோ மருந்தின் நாற்றம் வீசுகின்றது."

கநகவல்லி:—"இல்லையில்லை. ஜாதிப்புஷ்பத்தின் மணம் வீசுகின்றது."

திடீரென்று கண்ணாடியின் பிரதேசம் பிரகாசமாயிற்று. கநகவல்லி உற்றுநோக்கினாள்.

ஜமீன்தார்:—"கண்ணே! நீ ஏதாவது காண்கிறாயா?"

கநகவல்லி:—"ஆம், காண்கிறேன். என் தாயார் அரண்மனையின் புறத்தேயுள்ள சிங்காரவனத்தைக் காண்கிறேன்"

ஜமீன்தார்:—"நான் ஒரு படுக்கையறையைக் காண்கிறேன்."

கநகவல்லி:—"ஆனால் நான் காணுவதை நீங்கள் காணவில்லையா?"

ஜமீன்தார் பதிலுரைக்கவில்லை. கண்ணாடியையே அதிகவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தார். கநகவல்லி பெருமூச்சு விட்டாள்.

ஜமீன்தார்:—"கநகம்! நீ இப்பொழுது என்ன பார்க்கிறாய்?"

கநகவல்லி:—"ஒரு புருஷனுடைய முகம் எனக்குத் தோன்றுகிறது"

ஜமீன்தார்:—"ஒரு ஸ்திரீயின் முகம் அல்லவா அது?"

கநகவல்லி:—"இல்லவேயில்லை. ஒரு புருஷனுடைய முகந்தான் அது."

ஜமீன்தார்:—"எனக்கு ஒரு ஸ்திரீயின்முகம் தெரிகிறது. அவள் என்னை ஸமிக்ஞை செய்து அழைக்கிறாள்" என்று சொல்லிவிட்டு, எழுந்து நின்று இரண்டு கைகளையும் விரித்துக்கொண்டு கண்ணாடியை நோக்கிச் சென்றுகொண்டே "நான் பிரதிக்ஞை செய்தது வாஸ்தவம் வாஸ்தவமே" என்று உரத்துக் கூவினார்.

அவருடைய குரல் காதில் விழலும் கநகவல்லி ஸ்தம்பித்துப் போய்விட்டாள். பேசவாயெடுத்தாள். நாவெழும்ப வில்லை. இவ்வித அவஸ்தையில் சற்றுநேரம் இருந்தாள்.

ஜமீன்தாரும் கண்ணாடிக்குச் சமீபமாகச் சென்று கொண்டே யிருந்தார் அவர் என்ன சொல்லிக் கொண்டிருந்தார் என்று மட்டும் கநகவல்லிக்குச்சரியாக விளங்கவில்லை. தவிரவும், அவளுடைய கண்ணுக்கு மறுபடியும் அக்கண்ணாடி மங்கலாயிற்று. அதில் தோன்றிய உருவமும் உடனே மறைந்தது. ஆனாலும் ஜமீன்தார்மட்டும் கண்ணாடிக்கெதிரில் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்தாள். அவளுக்குத்தன்னைப் பற்றிய பயமெல்லாம் போய்விட்டது. தன் கணவனுக்கு என்ன விபத்து நேருமோவென்று நடுங்கிக் கொண்டிருந்தாள். உடனே இன்னங்கொஞ்சம் தைரியம் விருத்தியாகவே எழுந்துசென்று தீபத்தைக் கொளுத்தினாள்.

ஜமீன்தார்:—"அக்கண்ணாடியில்நீ என்ன கண்டாய்?" கநகவல்லி, "நான் கண்டதை முழுதிலும் சொல்லி விடுகிறேன்" ஜமீன்தார்:—"நீ ஒரு மனிதனுடைய உருவத்தைக் கண்டதாகச் சொன்னாயல்லவா?" கநகவல்லி "ஆம்" என்றாள்.

ஜமீன்தார் உடனே கநகவல்லியின் கையை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, உக்கிரமான துவனியுடன், சிங்கம்போல் கர்ச்சித்துக் கொண்டு, கண்களிரண்டிலும் தீப்பொறி பறக்க, "நீ கண்டது இன்னதென்று நான் சொல்லி விடுகிறேன். நமது விவாக காலத்தில் நான் உன்னை முத்தமிட்ட பொழுது, முதன் முதலில் உன்னை முத்தமிடும் ஆடவன் நான்தான் என்று சொன்னாயல்லவா? நான் தானா உன்னை முதன் முதல் முத்தமிட்டவன்? நான்தானா?" என்று கேட்டார்.

கநகவல்லி.—"இ—ல்—லை" என்று தழதழத்த குரலுடன் பதிலளித்தாள்.

ஜமீன்தார்.—"ஆனால் நீ என்னிடம் பொய் சொன்னாயல்லவா?"

கநகவல்லி.—"ஆ—ம். எனக்கு உங்கள் மீதிருக்கும் ஆசை அவ்விதம் பொய் புகலும்படி செய்தது"

ஜமீன்தார்.—"இன்னம் நீ அதிற்கண்ட விசேஷங்கள் யாவை? சொல்!"

கநகவல்லி.—"இரண்டு வருஷங்களுக்கு முந்தி ஓர் சம்பவம் நடந்தது. அது யாதெனில், ஒருநாள் என் தகப்பனாருடைய அரண்மனைக்குப் புறத்தேயுள்ள பூஞ்சோலையில், புஷ்பங் கொய்வதற்காக நான் சென்றிருந்த பொழுது, அப்பொழுது என் தகப்பனார் வீட்டுக்கு விருந்தாளியாய் வந்திருந்த ஓர் மனிதன் என்னிடம் வந்து தான் என்னை விரும்புவதாகச் சொன்னான். நான் மறுத்ததின்பேரில் என்னை பலாத்காரமாய் முத்தமிட்டான்."

ஜமீன்தார்.—"பிறகு என்ன நடந்தது?"

கநகவல்லி.—உடனே நான் திமிறிக்கொண்டு வீடுவந்து சேர்ந்தேன். எங்கள் வீட்டுக்கு விருந்தாளியாய் வந்த துரோகி அன்னமிட்ட வீட்டில் கன்னமிட எத்தனித்தானே என்று, ஆற்றொணாத் துயரமும் வருத்தமுமுற்று, படுக்கையிற் படுத்துத் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தேன்........"

ஜமீன்தார்.—"நடந்த விஷயம் அவ்வளவு தானா?"

கநகவல்லி.—"ஆம். அவ்வளவுதான்."

ஜமீன்தார்.—"உன்னை ஒரு மனிதன் முத்தமிட்டானா?"

கநகவல்லி.—"மனிதனா அவன்! மிருகமல்லவா! காண்டாமிருகம்! எருமைமாடு!! ஞானமென்பதே லவலேசமும் இல்லாத வோர் மூர்க்கப் பன்றி!!!"

ஜமீன்தார் கலகலவென்று சிரித்தார். கநகவல்லிக்குப் பயம் சற்று நீங்கிற்று.

கநகவல்லி.—நான் கலியாணகாலத்தில் ஒருவரும் என்னை முத்தமிட்டதில்லையென்று பொய் சொன்னேன். என் அவ்விதம் சொன்னேனென்று பிறகு என் மனச்சாக்ஷி என்னை நிந்தித்தது. உண்மையைச் சொல்லிவிட்டுத் தங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாமோவென்று பலதடவைகளில் எண்ணினேன். ஆனபோதிலும் ஸ்திரீ ஜாதிகளுக்கே உடன்பிறப்பாயுள்ள மௌட்யம் என்னும் குணத்தினால் இதுகாறும் சொல்லாம லிருந்தேன். அதற்கு விமோசனகாலம் இப்பொழுதுதான் பிறந்தது போலும்."

ஜமீன்தார்.—"நீ அறியாத்தனத்தாற் செய்த குற்றத்தை மன்னித்துவிட்டேன். மேலும் நீ என்னிடத்தில் உண்மையைக்கூறின விஷயத்தில் உன்மீது எனக்கு இரட்டைச்சந்தோஷம்."

கநகவல்லிக்கு வரவர தைரியம் விருத்தியாய்க்கொண்டே வந்தது. இனிக் கணவனைத் தன்னிஷ்டம்போல் ஆட்டிவைக்கலாமென்றெண்ணினாள்.

கநகவல்லி.—"என் ஆருயிர்க் காதல! என்னுடைய வெட்கம், மானம், எல்லாவற்றையும் துறந்து, என் யோக்கியதையை உங்களிடம் கூறிவிட்டேன். இனி உங்களுடைய முறை. கண்ணாடியில் நீங்கள் கண்டது யாது கூறுங்கள்"

ஜமீன்தார்.—"கண்ணே, கநகம்! அதைப் பற்றி ஒன்றும் என்னைக் கேட்காதே! உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்!"

கநகவல்லி.—"சொல்வதாய் என்னிடம் பிரதிக்ஞை செய்தீர்களே!"

ஜமீன்தார்.—"அந்தப் பிரதிக்ஞையை மறந்துவிடு" என்று தேனொழுகும் வார்த்தையால் பதில் சொன்னார்.



கநகவல்லி கேட்பதாயில்லை, சொல்லித்தான் ஆகவேண்டுமென்று முரண்டினாள்.

ஜமீன்தார்.—"பெண்ணே! நமது ஆயுளின் ஒருகாலத்தில்நாம்செய்த காரியம் நாளடைவில் நாம் மறந்துவிட்டதாக எண்ணிவிடுகிறோம். காலக்கிரமத்தில் அவையெல்லாம் நமது மனதைவிட்டு மறைந்துபோய் விடுகின்றன. மேன்மேலும் நாமனுபவிக்கிற இன்பப்பெருக்கினாலோ, அல்லது துன்பப் பெருக்கினாலோ, முன்னடி நேர்ந்த சம்பவங்களை கனவோ அல்லது கனவுதானோ என்றுநாம் ஐயுறுகின்றோம். கண்ணாடியிற்கண்ட மாயம் நம்மிருவருக்குள் மட்டும் இருக்கட்டும். யோஜித்துப்பார்க்கப் புகின், இதுகாறும் நமது மனம் என்னும் காராக்கிரகத்தில் அடைபட்டுக் கிடந்த பழைய சம்பவங்கள் இப்பொழுது வெளியாயிருக்கின்றன."

கநகவல்லி.—"நீங்கள் இதுவரையில் செய்த பிரசங்கத்தைக் கேள்வியுற்றமட்டில், கண்ணாடியிற் கண்ட சங்கதிகளை என்னிடம் சொல்ல உங்களுக்கு விருப்பமில்லைபோல் தோன்றுகிறது. இதுமுதல் என் ஆனந்தத்துக்கும் ஓர் பங்கம் நேர்ந்துவிட்டது. எவ்வாறு திவ்யமாய்ச் செழித்து வளரும் விருக்ஷத்தின்மீது இடி விழுந்தால் அது தன்சோபையையிழந்து குன்றிப்போய் நாளடைவில் பட்டுப்போய் விடுமோ, அதுபோல் நான் இன்றுமுதல் திரஸ்கரிக்கப்பட்ட ஸ்திரீயாய் ஆனேன். இனி எனக்கு ஸுகம் என்பது எள்ளளவும் கிடையாது."

ஜமீன்தார்.—"கநகவல்லி! நீ சொல்லும் வார்த்தை என் இதயத்தை இருபிளவாகப் பிளக்கிறது. நீ சொல்வதன் அர்த்தம் எனக்கு நன்கு விளங்கவில்லை. கொஞ்சம் விவரித்துரைத்தல் நலம்."

கநகவல்லி.—"கண்ணாடியில் ஒருஸ்திரீயின் உருவத்தைக் கண்டதாகச் சொன்னீர்களே! அவளுடன் தேவபாஷை போன்ற பாஷையில் ஏதேதோ பேசினீர்களே!"

ஜமீன்தார்.—"நான் பேசினேனா? பேசினதாக எனக்கு ஞாபகமில்லையே!"

கநகவல்லி—."என் மனதுக்குத் திருப்திகரமில்லாத என் விஷயங்களை உங்களிடம் சொன்னேன். நீங்களோ சொல்லமாட்டேன் என்கிறீர்கள்."



ஜமீன்தார் சொல்வதற்கு வாயெடுத்தார். நாவெழவில்லை.

கநகவல்லி.—"அந்த ஸ்திரீ உமக்குப் பிரியமானவளா?"

ஜமீன்தார்.—"ஆம்"

கநகவல்லி—."அந்த ஸ்திரீ யார்?"

ஜமீன்தார்—."அவள் இப்பொழுது இல்லை. இறந்துபோய் விட்டாள். தவிர, அவளைப் பற்றிய இரகசியம் நீ எண்ணியவாறல்ல. வேறுவிதமானது."

கநகவல்லி.—"இந்த இரகசியம் என்னைப் பற்றியதல்லவென்று நீங்கள் சத்தியஞ் செய்வீர்களா?"

ஜமீன்தார் பதில்சொல்ல முடியவில்லை. திகைத்து நின்றார்.

கநகவல்லி.—"பார்த்தீர்களா! நீங்கள் ஸத்தியஞ்செய்ய முடியாமற் போனதினின்றும், அவ்விரகசியம் என்னைப் பற்றியது தானென்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன்."

ஜமீன்தார்.—தீர்க்கமாய்ப் பெருமூச்சு விட்டுக்கொண்டு "அவ்விரகசியம் உன்னையும் கொஞ்சம் பற்றியதுதான்" என்றார்.

கநகவல்லி.—"அப்படியானால் அதை நீங்கள் என்னிடம் சொல்லுவதுதான் நியாயம்."

ஜமீன்தார்.—"இவ்விரகசியம் ஒரு பெருத்த சுமைபோன்று என்தலையில் ஏறி நிற்கிறது. நானும் என் மனோபலத்தினால் அச்சுமையைத் தாங்கிக் கொண்டிருக்கிறேன். இப்பொழுது இதை நான் வெளியிடும் பக்ஷத்தில் நிச்சயமாய் உன் இதயம் பிளந்துபோய்விடும்."

கநகவல்லி.—"எது எப்படியிருந்தபோதிலுஞ்சரி. நீங்கள் அவ்விரகசியத்தைச் சொல்லித்தான் ஆகவேண்டும். தங்களுடைய சுகத்தையோ துக்கத்தையோ அனுபவிக்க நானும் பாத்தியப்பட்டவளன்றோ!"

ஜமீன்தார் மெதுவாகக் கநகவல்லிக்குச் சமீபத்தில் நகர்ந்தார்.

அவள் காதுக்கருகில் தன் வாயை வைத்துக் கொண்டு வெகு இரகசியமாக, "கண்ணாடியில் கண்ட உருவம் என் தாயாருடையது" என்றார்.

கநகவல்லி.—"உங்கள் தாயாரா?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

ஜமீன்தார்.—"ஆம் என் தாயார்தான். அவளைப் பற்றி இதுகாறும் உன்னிடம் சொல்லாமலிருந்தது என்பெரும் பிழையே!"

கநகவல்லி.—"அவர் பெரிய பதிவிரதா சிரோன்மணியென்றும், கற்பிற்சிறந்த காரிகையென்றும், சீலமின்னதென அருந்ததிக்கே போதிப்பவள்போன்று சிறந்துவிளங்கிய உத்தமியென்றும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்."

ஜமீன்தார்.—"நான் இப்பொழுது சொல்லப் புகுவது பரம ரகசியம். தேவரகசியம் போன்றுமுள்ளது. நான் சென்னையில் படித்துக்கொண்டிருக்கும்பொழுது ஒருநாள் என்தாயார் மரணதசையி லிருப்பதாய் எனக்குத் தந்திவந்தது. உடனே நான் விழுந் தடித்துக்கொண்டு ஓடினேன். என்னைக்கண்டதும் என்தாயார் மலமலவென்று கண்ணீருதிர்த்தார். சில ரகசியங்களையும் வெளியிட்டார். அதையெல்லாம் இங்கு சொல்வானேன். காட்டுக்குரிச்சி ஜமீன் நியாயமாய் எனக்குரித்தான தல்லவென்று சொன்னார்."

கநகவல்லி.—"என்ன என்ன!!" என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

ஜமீன்தார்.—"காட்டுக்குரிச்சி ஜமீனுக்கு உண்மையான சுதந்தரவாளி வீரவனத்தேவனேயாவான். வீரவனத்தேவனின் தகப்பனாகிய விஜயமார்த்தாண்ட தேவரும் என்தகப்பனாரும் இரட்டைப்பிள்ளைகள். எங்களுடைய பாட்டனார் சாகுந்தருவாயில், விஜயமார்த்தாண்ட தேவர் அருகிலில்லாத படியால், என் தகப்பனாரை யழைத்து, விஜயமார்த்தாண்ட தேவர்தான் இரட்டையர்களுள் மூத்தவர், அவருக்குத்தான் ஜமீன் ஸொந்தம் என்று சொல்லிப்போனார். ஆயினும் என் தகப்பனார் தமயனை வஞ்சித்து ஜமீனையபகரித்து ஆண்டு வந்தார். விஜயமார்த்தாண்ட தேவரும் மகனை வீரவனத்தேவன் பிறந்தவுடன் இறந்துவிட்டார். என் தகப்பனாருக்கும் என் தாயாருக்கும் மட்டும்தான் இவ்விஷயம் தெரியும். வீரவனத்தேவன் நம் வீட்டிலேயே வளர்ந்து வந்தவன். என் தகப்பனார் இறந்துபோய் பத்து வருஷமாயிற்று. அதுமுதல் ஜமீனை நானே ஆண்டுவந்தேன். என் தாயார் சாகுந்தருவாயில் என்னையழைத்து மேற்கூறிய விஷயங்களெல்லாவற்றையும் என்னிடம் புகன்றதுந்தவிர, வீரவனத்தேவனுக்கே ஜமீன் உரித்தானதென்றும், ஆகலால் நான் ராஜ்யத்தை உடனே வீரவனத்தேவன் வசம் ஒப்புவிக்க வேண்டுமென்றும் சொல்லி என்னிடம் பிரதிக்ஞையும்வாங்கிக் கொண்டார்."

கநகவல்லி.—"அப்படியானால் நீங்கள் அந்தப்பிரதிக்ஞையைத் தட்டுவானேன்?"

ஜமீன்தார்.—"எங்கு ஒருக்கால் ஏழையாய்ப் போய்விடும் என்னை மணக்க நீ விரும்பமாட்டாயோ வென்று அஞ்சினேன்."

கநகவல்லி.—"ஆனாலும் பாதகமில்லை. எது எப்படியிருந்த போதிலும் தங்கள்மீது எனக்கிருக்கும் அன்புமட்டும், எவ்விதத்தாலும், கொஞ்சங்கூடக் குறையாது" என்று வெகு அழுத்தத்துடனும் அமைதியுடனும் பதில் சொன்னாள்.

ஜமீன்தார் ஆச்சர்யமுற்றார். தான் எதிர்பார்த்திருந்ததற்கு விரோதமாய், விஷயம் முடிவு பெற்றது. தன் கண்ணியம், மானம், பதவி எல்லாம் கநகவல்லியின் காலின்கீழ் வீழ்ந்து கிடக்க எங்கு, "இவ்வளவு அற்ப ஸ்வபாவமுள்ள மனிதனா நீ?" என்று ஒருக்கால் அவள் தன்னைத் திரஸ்காரம் பண்ணிவிடுவளோ வென்று பயந்து கொண்டிருந்தவர், கநகவல்லி இவ்வளவு அமைதியுடனும் கருணையுடனும் பதில் சொல்வதைப் பார்த்து மனம் பரவசமானார். தான் கநகவல்லிக்கு எவ்விதத்தில் வந்தனத்தைச் செலுத்துவது என்று எண்ணி ஆலோசித்துக் கொண்டிருக்கும் பொழுது, கநகவல்லி கம்பீரமான ஸ்வரத்துடன் காதுக்கினிமையான வசனங்களால் பின்வருமாறு உபன்யாஸம் செய்தாள்.

நாதா, பத்தினிக்குத்தெய்வம்பதியேயென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ஸம்பிரதாயத்திலும் அவ்விதமே நடந்தேறி வருகின்றது. கணவன் ஏழையாயிருந்தாலும், பணக்காரனாயிருந்தாலும், குரூபியாயிருந்தாலும், நவமன்மத ஸ்வரூபனாயிருந்தாலும், நோயாளியாயிருந்தாலும், அரோகதிடகாத்ரனாயிருந்தாலும், வித்யாஸம் பாராட்டாது, எந்த ஸ்திரீயானவள் அவனிடத்து ஒரேவித பக்தியுடனும், விசுவாஸத்துடனும் நடந்துவருகிறாளோ அவளே பத்தினியெனப்படுவாள். மற்றையோர் அவன் கழுத்துக்குக் கயிறு கொண்டுவரும் எமனெனவே கருதப்படுவர். அவ்விதம் பத்தினியான ஸ்திரீயின் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு மொழியும் வையம் பெறுமென்றே உறுதியாய்ச் சொல்லுவேன். அவ்வுத்தமி மழைபெய்யென்றால் பெய்யும். பெய்யாதொழி யென்றால் அவ்விதமே ஒழியும். பத்தினிப் பெண்டிரின் மகத்துவம் சிலப்பதிகாரத்தில் நன்கு விளக்கப் பட்டிருப்பதை நீங்கள் வாசித்தேயிருப்பீர்கள். ஆதல்பற்றியே, கற்றறிந்தபெரியோர் பாதிவ்ரத்திய லக்ஷணத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறியுள்ளார்:

கொழுநன் உண்டபின் தானுணுங் கொள்கையும்
விழித்து யின்றபின் துஞ்சலும் மென்துயில்
எழுதல் முன்னம் எழுதலுமே யன்றோ
பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையே ௧.

அன்பர் துஞ்சிடில் துஞ்சுத லாங்கவர்
துன்பம் எய்திடில் தாழுமத் துன்புறல்
இன்பம் உற்றிடில் இன்புற் றிருத்தலே
மன்பெ ருந்தவம் கற்புடை மாதர்க்கே ௨

கொழுநன் சொற்கட வாதுரை கொள்கையே
வழுவில் நல்லறம் வான்தவம் ஆற்றுதல்
தொழுது தெய்வம் பராய்மலர் தூவுதல்
பழுதில் கற்புடைப் பத்தினிக் கென்பவே ௩

எய்தும் இல்துறந்து எகலர் இல்லகல்
தையலார் முகம் காணினும் சாம்புவர்
மையில் காதலர் வந்தெவை யாயினும்
செய்திர் என்றலும் செய்தன மென்பரால் ௪

இனிய கேள்வர் முனியின் எதிர்நின்று
துனிகொள் நெஞ்சோ டெதிர்மொழி சொல்கிலார்
அனைய கேள்வர் எறியினும் அன்பொடும்
கனிவர் நெஞ்சகம் கற்புடை மாதரே ௫

இதுமட்டுமல்ல, சாதாரணமாய் உலகத்தில் ஸ்திரீகள் நடக்கவேண்டிய முறைகளில் இரண்டொன்றை எடுத்துச்சொல்கிறேன். குலஸ்திரீயானவள் வீட்டுவேலைகளைத் திறமையுடன் ஒழுங்காக நடத்திக் கொண்டும், சுற்றங்களுக்கும் நட்பினர்களுக்கும் நன்றாக விருந்தளித்துக்கொண்டும், கற்புடையவளாக இருந்துகொண்டும், வீட்டுக்குரிய செலவை மிதமாகச் செய்துகொண்டும், தான் செய்யும் வேலைகளிலெல்லாம் மறவாமையும், திறமையும் உள்ளவளாய்க் காணப்பட்டுக் கொண்டும் இருப்பாளேயானால் அவளே உத்தமஸ்திரீ! அவளே அருந்ததி!! அவளே நளாயினி!!! மேலும் சதிகளுக்குப் பதியைத்தவிர வேறு தெய்வம் குறிப்பிடவில்லை. அது பற்றியே

தேவருங் குருவுந்தான தீர்த்தமும் நோன்புமெல்லாம்
ஆவது கணவனேயா மறிவுளச திகட்கென்றும்
தேவருங் குருவுந்தான தீர்த்தமும் நோன்புமெல்லாம்
பாவமே யாக்கற்காகும் பதியினைப் பற்றிலாட்கே

என்று சான்றோர் கூறியிருக்கின்றனர். ஆகையால், நீங்கள் எவ்வித ஸ்திதியை யடைந்த போதிலும், ஏழையாயிருந்தபோதிலும் குபேர ஸம்பத்துடையவராயிருந்த போதிலும், இந்தச் சரீரம் உள்ளவரையில், ஒருக்காலும் தங்கள்மீது நான் வைத்திருக்கும் அன்பு எள்ளளவும் குறையாது. இது சத்தியம்! சத்தியம்!! முக்காலும் சத்தியம்!!! இந்த ஜன்மத்தில் மாத்திரம் அல்ல. இனிவரப்போகிற ஜன்மங்களிலும் தங்களையே கணவனாகவடைந்து நான் ஊழியஞ் செய்யுமாறு அனுக்கிரகிக்கும்படி அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்கி நிற்கும் ஆநந்த மூர்த்தியாகிய பராபரக் கடவுளை மனம் மொழி மெய் மூன்றாலும் வணங்குகிறேன்."

கநகவல்லியின் உபந்யாஸம் முடிந்ததும் மழைபெய்ந்து ஓய்ந்தது போல் இருந்தது. ஜமீன்தார் பரவசமானார். எழுந்து அவளைப் புளகாலிங்கனம் பண்ணிக்கொண்டார். தேகமாத்யந்தம் முத்தமிட்டார். "என் கண்ணே! என் கண்ணின் மணியே! கட்டணிமுத்தமே! பொன்னே! என் பூஷணமே! ஆருயிரமுதமே!" என்று பலவாறு ஸ்தோத்திரஞ்செய்தார். கடைசியில், "கநகம்! நீ இவ்வளவு புத்திசாலியென்று நான் இதுகாறும் எண்ணவேயில்லை. நீ நீறுபூத்த நெருப்புப்போல் இருந்து வந்தனையே யொழிய இவ்வளவு இரகசியங்கள் உன்னிடம் அடங்கியிருக்கின்றன வென்று எனக்குத் தெரிவிக்காமற் போனாயே! இன்றுமுதல் நீ தான் என் தெய்வம்" என்றார்.

கநகவல்லி.—"கேவலம் பேதமையென்னும் மாயையிலேயே அழுந்திக்கிடக்கும் இந்த ஸ்திரீயின் அறிவு எவ்வளவு! ஸாக்ஷாத் புத்திசாதுர்யத்தில் ஆதிசேஷனை நிகர்த்துநிற்கும் தங்களுடைய ஞானமெவ்வளவு! எல்லாம்போனது போகட்டும். நான் உங்களை ஒருவான் கேட்கிறேன். தட்டாது தால் வேண்டும்."

ஜமீன்தார்.—"கண்ணே! யாது வேண்டும்? உடனே புகல். என் உயிரைக் கேட்டாலும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேனே! வேண்டியதைக் கேள். உடனே தருகிறேன்."

கநகவல்லி.—"வேறொன்றும் வேண்டுவதில்லை. தங்கள் தாயாருடைய விருப்பத்தை நிறைவேற்றுங்கள். காட்டுக்குறிச்சி ஜமீனை வீரவனத் தேவரிடம் ஒப்பித்து விடுங்கள். நமக்கு ஏராளமான ஐவேஜி யிருக்கிறது. எனக்கு ஸகோதரன் இல்லை யென்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். என் தகப்பனார் ஆண்டுவரும் புலிமலை ஜமீனுக்கு நானே சுதந்தரவாளி. ஆதலால் காட்டுக்குறிச்சி ஜமீனை வீரவனத் தேவரிடம் தக்ஷணமே ஒப்பித்து விடுங்கள்."

உடனே வீரவனத்தேவர் படுத்திருந்த அறையிலுள்ள மணியடித்தது. தேவர் திடீரென்று விழித்துக்கொண்டு எழுந்து குளிரையும் லக்ஷியம் செய்யாது, ஜமீன்தார் துயிலும் அறையை நோக்கி விரைந்தோடினார். அங்கு ஜமீன்தாரையும், கநகவல்லியம்மாளையுங்கண்டு "விசேஷம் ஏதேனும் நடந்ததோ" என்று ஆவலான முகத்துடன் கேட்டார். ஜமீன்தாரும் "ஆம் நடந்தது. இங்கு ஸோபாவில் உட்கார். சொல்லுகிறேன்" என்னலும் வீரவனத்தேவர் ஸோபாவில் உட்கார்ந்தார். ஜமீன்தார் நடந்த வர்த்தமானத்தைச் சொன்னார்.

## நமது சந்தா நேயர்களுக்கு

சந்தாநேயர்கள் கடிதம் எழுதும்போதும், சந்தாத்தொகை அனுப்பும்போதும், புத்தகங்கள் ஆர்டர் செய்யும்போதும், தமது விலாஸத்துக் கெதிரேயிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதக் கேட்டுக்கொள்ளுகிறோம். நம்பரைக் குறிப்பிடாத பக்ஷத்தில் வண் காலதாமதமாகும்.

மானேஜர்

# திராவிடக் கதைகள்

## SOUTH INDIAN FOLKLORE

### 7. அப்பக்கதை

ஸ்ரீவைகுண்டம் என்பது திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு ஊர். அங்கு யதிராமானுஜ தாஸன் என்றொரு சாத்தானி இருந்தான். அவன் வெகு நல்லவன். நாள்தோறும் வெளிச்சென்று பிக்ஷை எடுத்து வாழ்ந்துவந்தான். தனது அட்சய பாத்திரத்தில் அமுதுபடி நிறைந்ததும் வீட்டிற்குத் திரும்பிவிடுவான்; அதற்குமேல் அவனுக்கு ஆசை கிடையாது. கொண்டுவந்த அரிசியைக் குத்தி உலையிட்டு அவன்மனைவி தினமும் சமைத்துத் தானுந்தன் கணவனுடன் உண்பாள். அவள் வெகு சீலை. ஆனால் அவள் வாய்மாத்திரம் பெரும் வாய்க்கால்தான்; அதில் தடதடவென்று பதப்பிரவாஹம் மரியாதை வணக்கமென்னு மிரண்டு கரைகளையும் உடைத்துக்கொண்டு வெளியே ஓடும். அதற்குத் தங்கு தடை என்பதே கிடையாது. அவள் நாக்கும் வெகுநீளம்; சொற்களை அளப்பதில் அதற்கு சாமர்த்திய மிருப்பதுபோலவே ருசியையும் அளக்க அது ஆசைகொள்ளும். ஆனால் இல்லாததோஷத்திற் கென்னச்செய்வது? பிறர் ருசியான பதார்த்தங்களைச் செய்யும்போது வரும் புகையை நாக்கால் நுணுகினால் ஆசை தீருமோ? மூக்கால் மோர்ந்தால் வாய் இனிக்குமோ? வாயஸஹ்யம் வாயஸஹ்யம் என்று எத்தனைநாள் ஏக்கங்கொள்வது? பொறுமைக்கும் அளவில்லையா? என்ன செய்வாள்? எத்தனையோ நாள்கள் சும்மாவிருந்தவள் ஒருநாள் தன் கணவனைப்பார்த்துத் தன் எண்ணத்தை வெளியிட அவாக் கொண்டாள்.

"அண்டையகத்தில் அயலகத்தில் நடப்பதைப்பார்த்தாலாவது உமக்குத்தெரியாதா? நானே எல்லா அவதியுஞ் சொல்லித்தொலைக்க வேண்டுமென்றால் அது எப்படி முடியும்? உங்களுக்காத் தெரியவேண்டியது. தெரியாதவர்களுக்குச் சொல்லித்தான் தொலைக்கவேண்டும். நான் சொன்னால் கோபிப்பதில் பிரயோஜனமில்லை; எனக்கு எவ்வளவு நாள் மனதில் அஸமாதானமிருந்தால் இப்படிப் பேசுவேன் என்பதை நீங்களே எண்ணிப்பாரும். என்னை வலியக்



கோபிக்கவேண்டாம். எனக்கு யார் இருக்கிறார்கள். தாய் இல்லை; தகப்பனோ அப்பொழுதே தொலைந்தான்; போகவர இடமாவது உண்டா? உங்களைவிட்டால் எனக்கார் கதி. நான் பரதேசிபோல் தவிக்கின்றேன். ஐயோ என்று அவ்வளவுஇடுவார் யார்இருக்கிறார். பார்த்துப் பார்த்து நல்ல இடத்தில் கொடுத்தாரே அதுவே என் பாக்கியம். அரிசிப்பாலல்லாமல் பசுவின்பால் கண்ணிலும் பார்த்தது கிடையாது. வேறு சிற்றுண்டிகளைப்பற்றிக் கவலையே இல்லை. உமக்கோ ஒன்றும் வேண்டியதில்லை; மஹாவேதாந்தியாய் இருக்கின்றீர். எனக்கோ வாய் ஊறாமலிருக்கிறதில்லை. நான் என்ன செய்வேன்? என் குறையை யாரிடஞ் சொல்லியழுவேன்? எனக்காரிருக்கிறார் இந்த உலகத்தில் ஐயோ என்று சொல்ல"—என்று இடிமுழக்கினாற்போல ஓயாது வார்த்தைகளைக் கொட்டிக்கொண்டிருந்தாள்.

தாஸர்வாள் என்ன செய்வார்? பெண்டாட்டியாத்தாள் போராத்தாள் என்றவாறு அவளுக்குக் கும்பிட்டுத் தாஸம் போட்டாலன்றி பிழைக்கமுடியுமா? ஆனாலும் அவ்வளவு மதிகேடர் அல்ல. என்னமோ தனது மனைவி திக்கற்றுத்தன்னையடைந்தாள் என்று அனுதாபத்துடன், அவள் சொல்வதை எல்லாம் தவறாக எண்ணுவதில்லை. அதனால்தான் தாயாரம்மாளை "என்ன உனக்குக் குறை" என்று அவளிடம் இரக்கங்கொண்டு கேட்டார்.

"என்ன குறை என்கிறீர்? வெறும் பிரஸாதமல்லாமல் வேறு நாம் கண்டதுண்டா; நீர்தான் சொல்லும்? பக்கத்தாத்துக் குமுதவல்லி வீட்டில் நேற்று அப்பஞ் செய்தார். 'இந்தாடி' என்று அதில் ஒருதுண்டு உடைத்துக்கொடுத்தார். வாயில் போட்டுப் பார்த்தேன். அந்தருசி எவ்வாறிருந்தது என்று சொல்வது? நம்மாத்தில் அந்த அப்பஞ் செய்யக் கூடாதா?"

"அப்பஞ் செய்வதென்றால் அதற்கென்னென்னவேண்டும்?"

"என்னவேண்டும்? கொஞ்சம் அமுதுபடிதான் வேண்டும். உமக்கு அட்சய பாத்திரத்திற்குமேல் கொண்டுவருவதென்றால் வயிறெரிகிறதே. கொஞ்சம் நடந்தால் கால் வலிக்கும். பண்ணி வைத்தால் நன்றாகத் தின்பீர்; இன்னும் வேண்டும் என்று கேட்பீர். கொஞ்சம் அரிசி அதிகம் வேண்டுமென்றால் பெரும் அழுகைதானே. இன்னம் என்ன ரோதனஞ் செய்யப் போகிறீரோ?—"

"என்னடி சும்மா பேசுகிறாய்? உனக்கரிசிதானே வேண்டும்?"

"ஆமாம் அரிசி தான்! அரிசிதான்! கொஞ்சமரிசிதான்! அட்சய பாத்திரத்திற்கு மேல் கொஞ்சமரிசிதான். ஒருசின்னபடி அமுதுபடிதான். கொண்டுவர முடியாதோ? கால் நடப்பது கஷ்டமாக்கும்?—"

"ஏனடி வீணில் வார்த்தைகளைக் கொட்டுகிறாய்? அமுதுபடிதான் வேண்டுமென்றாயே; கொண்டு வருகிறேன். சற்று உன் வாயை மூடு."

"என்வாய் மூடிவிட்டால் நீர் சௌக்யமாயிருப்பீர். அந்தப் பாழுந் தெய்வத்திற் கேன் கண்ணில்லை? என்னை அன்றைக்கே கொண்டு போய் இருக்கலாம். என்ன எளிமை! ஹா! அவன் கோயிலிடிய!—" என்று சொல்லிக்கொண்டு அவள் கண்களில் நீர்களை வழியவிட்டாள்.

பெண்களது கண்களிற் கருகு வேலைசெய்யும் நேத்ர திசிரி நாளங்கள் வெகு சீக்கிரமாக வேலைசெய்யும் என்று சாஸ்திரிகர்கள் சொல்லுவார்கள். அது எண்ணுவதற்கு முன்னமே நீரையுண்டாக்கிக் கண்ணில்ததும்பி கீழே மழைபோல் விழச்செய்யுமாம் தாயாரம்மாள் கண்களே அதற்குத் திருஷ்டாந்தம். நிற்க, தனது கணவனுடைய ஏவலின்பேரில் பாத்திரத்தை வெளுக்கத் தேய்த்துக்கொடுத்தாள். தாஸரும் செம்பைக் கையிலெடுத்துக்கொண்டார்; வேறு ஓர் பையையும் தோள்மேல் போட்டுக்கொண்டார். பட்டைநாமஞ் சாத்திக்கொண்டு வெளியே புறப்பட்டார். தம்பூரை மீட்டிக்கொண்டு அவர் ஹரிநாமஸ்மரணை செய்துகொண்டு பிக்ஷை எடுக்கப்போனார்.

"பாண்டுரங்க விடலே! ஹரிநாராயணா!
பாண்டுரங்க விடலே! ஹரிநாராயணா!"

என்று பாடிக்கொண்டு அவர் வீடுவீடாக நுழைந்து நுழைந்து பிக்ஷை கேட்டார். மறுத்

துச் சொன்னவர் ஒருவராவது கிடையாது. ஆனாலும் தனது அட்சய பாத்திரம் நிறையாததைக் கண்டு அவர் கவலை கொண்டார். மேலும்

"ராம நாமமே கற்கண்டு — அதைச்
சொல்லாத வாயில் கற்தண்டு"

என்று பாடிப் பரவசராகி அவர் அலையாத தெருவில்லை. ஆனாலும் அவர் பாத்திரம் நிறைந்தபாடில்லை.

"வெள்ளக் கொள்ளிட விரிதரங்கம்
பள்ளிக் கொள்ளிடந் திருவரங்கம்"

என்று கூத்தாடிக் கூத்தாடியவர் ஊரெல்லாமோடினார். அவர் பின்னாலே போனவர்களுக்குக் கணக்கேயில்லை. அப்பொழுது மெய்ம்மறந்தவர்

"நாராயணா வென்னா நாவென்ன நாவே
நாராயணா வென்னா நாவென்ன நாவே"

என்று இரைந்து கூச்சலிடுவார்; கொக்கரிப்பார்; கூத்தாடுவார். எல்லாருமவருடன் கலந்து கூத்தாடுவார்கள். வரவரக் கூட்டம் பெருத்தது. தாஸருக்கும் பக்தி மிகுந்தது.

"ஹரிநாராயண ஹரிநாராயண
பாண்டுரங்க விடலே ஹரிநாராயண"

என்று உச்சம்பெறக் கூவிக் கொண்டு செய்வார். உடனே கூட்டமும்

"ஹரிநாராயண ஹரிநாராயண
பாண்டுரங்க விடலே ஹரிநாராயண"

என்று தாமும் ஒத்துப்பாடுவர். அக்கூட்டத்திலிருந்துகொண்டு அவர் தமது செயலையே மறந்துவிட்டார். கவலையைத் துறந்துவிட்டார். எல்லாருமந்த சாத்தானிபோல் ஆடலும் பாடலும் கொண்டாடலானார்.

நாராயணா வென்று நாவிற்சொன்னாலது
நாடரியாப்பதந் தேடித்தரு—மதை
பாராயணஞ் செய்து பத்திசெய்தா லென்றும்
பாழாம் பிறவியை மாய்த்திடுமாம்"

என்று கூத்தாடிக் கூத்தாடி தாஸர் பாடும் போதெல்லாங் கூட்டமும் கூடவே கூத்தாடும். கூடவந்த கன்று முதலிய ஜீவன்களும் கூத்தாடும். வீட்டுத் திண்ணைகள்மேல் உட்கார்ந்திருக்கும் கிழவர் மனமும் கூத்தாடும். வீட்டில் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் அனர்த்தஞ் செய்வாருர்பரவசராகித்தமக்குத்தெரியாமலே கூத்தாடுவார். தெருவில் போகும் வைபோகமென்னவென்று காணவந்தவரெவரும் தாம்கண்டதின்னது செய்வதின்னதென்று அறியாமல் அக்கூட்டத்துள் நுழைந்துதமக்குந் தெரியாமல் கூத்தாடுவார். அப்பொழுது அங்கு ஆணவது பெண்ணவது பேதம் ஏது? அவ்வானந்தக் கூத்தில் அவ்வூரே கூத்தாடியது. தன்வழிப்பட்ட அந்த நாற்றும் கூத்தாடியது. மாங்களும் தான் ஏன் கூத்தாடாது? இவ்வாறு பக்தி பண்ணிக்கொண்டிருக்கும் தாஸர்வாள்

" நாவாயி லுண்டே நமோநாராயணாவென்று
ஓவா துரைக்கு முரையுண்டே—மூவாத
மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டே என்னொரு
தீக்கதிக்கண் செல்லுந் திறம்?" [வர்

என்று எல்லாரையுங் கேட்பார். கடவுளைத்தியானிக்குமாறு கெஞ்சுவர்; எல்லாரையுங்கெஞ்சி மோவாக் கட்டையைப் பிடித்துப் பிடித்து "எதோ நமோநாராயணவென்று சொல்லுபார்ப்போம்" என்று கேட்பார். அப்போதெங்கும் நாராயண கோஷமே மிகுந்திருக்கும். பெரியவர்பெருமைபட்டு வருவதைப் பற்றிப் பேசுந் திறமை நமக்குண்டா?

இவ்வாறு ராமனுஜதாஸர் எல்லாப்பற்றையும் ஒழித்தவர் போல லோக வியவஹாரத்தையே மறந்துவிடாங்கினார். ஸூரிய னுஷ்ணத்வ முகமாக உச்சிநிலையடைந்தான். வெயில்கூட அவர்க்கு உறைக்கிறது. ஆனால் கூடவந்தஜனங்கள் உள்ளுறும் பக்தி யில்லாமையால் அவ்வெயிலைத் தாங்கமுடியாது மெல்லமெல்ல ஒவ்வொருவராக மறையத் தலைப்பட்டார். கடைசியில் தாஸர் மாத்திரம் தனித்திருந்தார். அப்பொழுது அவர் தன்கையிலிருந்த செம்புப்பாத்திரத்தைப் பார்த்து அதில் பிரதிபலித்த ஸூரியபிம்பத்தைப் பார்த்து " இது நித்திய ஸூர்யக்கூட்டத்திலொன்றோ " என்று மயங்கிக் கிடந்தார். ஆனால் ஸூரியனை ஓர் மேகம் மறைக்க தாஸர் மயக்கமும் ஒழிந்தது. அப்பொழுது செம்பு பாத்திரம் செம்புப் பாத்திரமாக அவருக்குப் பட்டது, உடனே அவருக்குந்தெரியாது ஆத்திரமுண்டாகியது. "என்ன எண்ணி என்னசெய்துவிட்டேன்" என்று அவர் ஆயாசப்பட்டுச் செம்பைப்பார்த்தார்! அதில்நிறைய அமுதுபடி அளந்திருந்தது. என்றைக்கும் போகாதவிட



மெல்லாம்போயும் அதுதான் கிடைத்ததென்று அவர்க்குச் சற்று கவலையுண்டாகியது. ஆனால் சிறிதுநேரத்திற்குள் "இன்று கிடைத்த திவ்வளவே" என்றெண்ணி மன அமைதியடைந்தார். ஆனாலும் தனது மனைவி அட்சய பாத்திரத்தின் அளவிற்குமேல் அரிசி வேண்டுமென்று சொன்னது அவர்க்கு அப்பொழுது ஞாபகம்வந்தது. என்னசெய்வார்? பாவம்! வீணாய்க்காலங்கழித்தேனே என்று கருத்தழிவார். "அப்படி எண்ணியது தவறு; நான்போக்கியது நல்லகாலந்தான்" என்று தன்னைத்தானே தேற்றிக் கொள்வார். கடைசியில் ஒருவாறு தீர்மானித்துத் தனக்கு வந்த அரிசியையெல்லாம் கொண்டுவந்த பையுள் கொட்டித் தோள் மேல் அப்பையைப் போட்டுக்கொண்டு பிக்ஷை எடுக்க வேறு கிராமம் போகலானார்.

போகும்வழி யெல்லாம் " இது துளபக் காடோ! அரவிந்த தடமோ! கண்ணன் உருவோ!" என்று மொண மொணத்துக்கொண்டு பித்தம் பிடித்தவன் போல் தன் கையிலிருந்த பாத்திரத்தைக்கைவிரல்களால் சுழற்றிக்கொண்டு எண்ணமிட்டுக்கொண்டு தடதட வென்று நடந்தோடலானார். என்ன பரீக்ஷை! என்னதுரதிர்ஷ்டம்! போனவிடத்தில் ஒருமணியரிசி தாஸர்வாளுக்குக் கிடைத்திருக்க வேண்டுமே; மணிஅரிசி என்றால் ஒருமணி அரிசி கூட அவருக்குக் கிடைக்கவில்லை. சோர்ந்த முகத்துடன் " வீட்டிற்குப் போனால் அவள் என்ன இரைவாளோ " என்று சிந்தித்துக் கொண்டு அவர் " இனி நம்மால் ஒன்றுமில்லை; அவன் விட்ட வழியாகட்டும் " என்று நிச்சயித்துக்கொண்டு வீட்டிற்குப்போகத் திரும்பினார்.

வரும் வழியில் அவர்க்குப் பல சகுனங்கள் நன்மையைக் குறித்தன. யார்க்குங்கிடைக்காத பாக்கியம் அவர்க்குக் கிடைக்குமென்று அவை தெரிவித்தன. அப்பொழுதங்கு தோல் சுருங்கி எலும்புப்பை என்று சொல்லும்படியான பழுத்த பழமாகி தொண்டுகிழவரான பிராஹ்மணர் ஒருவர் அங்குவந்தார். வயதுமுதிர்ந்தாலும் கோபம் வெறுப்பு முதலிய குணங்கள் இல்லாமல், இளஞ்சிரிப்பையே அணியாகக்கொண்டு அவர் இருப்பதைக்கண்ட தாஸர் அவரிடம்தமது குறையைச்சொல்லிக்கொண்டார். "அரிசியா? இதோ பை நிறைய வைத்துக்கொண்டிருக்கிறீரே; உமக்கென்ன குறை" என்றுசொல்லிக் கொண்டு தாஸரது பையைக் கையால் தடவிக் கொடுத்தார். தாஸரும் தனது மனதை அமைதியடையும்படிச் செய்துகொண்டு கிழவனாரிடம் செலவு பெற்றுக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டார்.

தாஸர்வாள் வீட்டை அடைந்தார். பையைக் கீழேவைத்து விட்டுச் சரேலென்றுஅவர்வெளியே வந்துவிட்டார். அவருக்கு அங்கு இருந்தால் தன்மனைவி எங்கு அரிசியைப் பற்றிக் கேட்பாளோ என்ற பயம். ஐயோ! பாவம்; அவர்என்ன செய்வார்? தாயாரம்மாள் அரிசியைக் கீழே கொட்டினாள். ஆனால் பையில் அரிசி மாத்திரம் இருந்து கொண்டே இருந்தது. மேலும் கொட்டினாள். அப்பொழுதும் பையில் அரிசி அப்படியே இருந்தது. மறுபடியுங்கொட்டினாள். அப்பொழுதும் பையில்அரிசி அப்படியே இருந்தது. மற்றொரு முறை கொட்டினாள். அப்பொழுதும் பையில் அரிசி அப்படியே இருந்தது. எத்தனைமுறை கொட்டுவது? என்னசெய்தாலும் பையில் அரிசி குறையவே இல்லை. அது அட்சயமாக வளர்ந்து வந்தது. கீழே கொட்டின அரிசியோ அம்பாராசியாக வளர்ந்து விட்டது. தாயாரம்மாள் கையும் வலித்தது; எடுக்கவுங்கொட்டவும் முடியாமல் திண்டாடினாள்; ஆனாலுமவள் பெண்தானே; அபலைதானே. அவளால் என்ன முடியும்? கணவனை ஏன் வெறுத்துப் பேசினோம் என்று ஏங்கினாள். தவறாக அவரிடம் ஏன் நடந்து கொண்டோம் என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

பையை ஒருபக்கம் வைத்துவிட்டுத் தாழ்வாரத்தில் வீழ்ந்திருந்த அரிசிக் குவியலில் ஓர்படி அமுதுபடி எடுத்து நீரில் ஊறப்போட்டாள். அவ்வரிசியை எடுத்து அலகுபுட்டுக் கூடைஒன்றில் வடியவைத்தாள். வைத்த அரிசியை எடுத்து ஓர் துணியைப் போட்டு உலரக் கொட்டிப் பரப்பினாள். அவளுக்கு இப்பிரமை யுண்டாகியது. ஊறவைத்த பாத்திரத்தில் அரிசியெல்லாம் எடுத்ததாக அவள் அறிவள்; ஆனால் அதில் மறுபடியும் அரிசி ஊறிக் கொண்டிருந்தது. புட்டுக்கூடையில் இன்னும் அரிசிகுறையாமல் நீரை வடித்துக்கொண்டிருந்தது. உலரவைத்த அரிசியைக் கூட்டி முறத்

தில் வாரினாலும் கீழே அரிசி பரந்து உலர்ந்து கொண்டே யிருந்தது. ஆச்சரிய மடைந்தாலும் தாயாரம்மாளுக்கு அப்பத்தின்மேலாசை ஒழியவில்லை. மெல்ல அரைப்படி அரிசியை உரலில் இட்டுக்குத்தினாள். தன்முழுபலத்தைக் கொண்டுங் குத்தினாள். எங்கு பார்த்தாலும் "டங் டங் டங்" என்று குத்துமோசையே குடிகொண்டது.

இவ் வோசையைக்கேட்ட தாஸர் "இது என்ன, யாராவது வீட்டை யிடிக்கிறார்களா என்ன" வென்று கவலைகொண்டார். பிச்சுக் குடிமையில் சனீசுவரன் குடிகொண்டதாக எண்ணி அவர் சிந்தித்து ஓசைகேட்குமிடம் வந்தார். வந்தவர் தாழ்வாரத்தில் அரிசி குவிந்திருப்பதைக் கண்குளிரக் கண்டார். பிச்சைக்காரனுக் கைச்வர்யங் கிடைத்தால் அவனுக்கெவ்வளவு ஆனந்தம் உண்டாகாது? ஆனாலும் நமது தாஸர் பரமபக்த சிகாமணியாதலால் அல்ப ஸந்தோஷத்தி லீடுபடுபவரல்ல. அங்கு பக்கத்திலிருந்த பையைப்பார்த்து அதிலிருந்த அரிசியை அரிசியுடன் கொட்டினார். ஆனால் அதில் மறுபடியும் அப்படியே அரிசி விளங்கக் கண்டு அவர் ஆச்சரியத்துடன் தன் மூக்கின் மேல் கையைவைத்து

"எல்லா மவன்செயலே என்றிருக்கும்வல்லார்க்
கில்லைகா ணாகாத திறையே பராபரமே"

என்றுப் பாடிக் கூத்தாடினார். அதே ஸமயத்தில் அவர் மனைவி தடதடவென்று குத்தினாள். இதை எல்லாம் கண்டதும் அவர்க்கு எம்பெருமான் சங்கசக்ரதாரியிடம் அன்பு அதிகரித்தது. ஊறுமரிசியையும், வடியுமரிசியையுங் கண்டவர் பக்தி மேலும் அதிகரித்தது. இதை யெல்லாம் பார்த்துக்கொண்டே யவர் குத்துமிடத்தை அடைந்தார்.

அவரைக் கண்டதும் அவர் மனைவி உலக்கையை எறிந்துவிட்டு "ஹா" என்றலறிக்கொண்டு அவர் காலில் விழுந்தாள். "நான் செய்த தப்பை மன்னிக்கவேண்டும்" என்று கெஞ்சினாள்." உமது பெருமை தெரியாமல் நான் தவறாகப் பேசினேன். பெண்புத்தி பின் புத்திதானே" என்று மேலுஞ்சொன்னாள். இதை எல்லாங் கேட்ட தாஸர் புன்சிரிப்பு சிரித்தார். "எல்லா மவன்செயல்" என்று கொண்டாடினார். பின் இருவரும் நடந்ததை யுணர்ந்து ஸந்தோஷ மடைந்தார்கள்.

உரலில் இடிபட்ட அரிசியைத் தாயாரம்மாள் எடுத்தாள். ஆனால் உரலில்இடிபட்ட அரிசி என் குறையும்? அது அட்சயமாகவே வளர்ந்தது. முறத்திலெடுத்த அரிசியைப் புடைத்தாள்; முறத்திலும் இடிபட்ட அரிசி குறைந்தபாடில்லை. அதை வைத்துவிட்டுப் புடைத்துவந்த மாவைத் திரட்டிக் கூட்டி வேறொரு முறத்திலெடுத்தாள். கீழ்புடைத்த மா குறையாமல் விளங்கிக்கொண்டிருந்தது. தான் எடுத்த மாவை ஒரு பாத்திரத்தில் போட்டு வெல்லங் கலந்து பிசைந்தாள்.

பிறகு அடுப்பை மூட்டி அதன்மேல் கடாய் போட்டு எண்ணெய் வைத்தாள். எண்ணெயும் பதமாகக் காய்ந்தபின் ஓர் அப்பத்தை இலையில் பதமாகத் தட்டி எண்ணெயிற் போட்டாள். இதற்குள் யாராவது பங்குக்கு வந்து விடுவார்களோ என்று போய் வாசற்கதவைத் தாழிட்டு வந்தாள். அப்பொழுது அவ்வப்பம் பதமாக வெந்திருந்தது. கீழ் இலையில் தட்டிய அப்பம் விளங்கிக்கொண்டிருந்தது. எண்ணெயிலிருந்து வெந்த அப்பத்தை எடுத்தாள். அங்கு மறுபடியும் வேறொரு அப்பம் மிதந்துகொண்டிருந்தது. நிற்க, எடுத்த அப்பத்தை இரண்டாகச் செய்து ஒன்றைத் தன் கணவனுக்குக் கொடுத்து மற்றொன்றைத் தான் எடுத்துக்கொண்டாள். இருவரும் வாயுள்போட்டுத் தின்ன வாரம்பித்தார்கள். மெல்லுவது விழுங்குவது, மெல்லுவது விருங்குவது தவிர வேறொன்றும் அவர் அறியார். வாயில் எப்பொழுதும் அப்பம் இருந்துகொண்டே இருந்தது. இருந்தால் துப்பிவிடலாமே, துப்பினாலும் வாயில் ஒன்று இருந்துகொண்டிருக்கிறது. என்ன செய்வார்கள்? எப்படித்தான் தின்ன முடியும்? வாயிலிருந்தால் அசைக்கச் செய்கிறது; விழுங்கினால் வாயிலப்பம் வளர்ந்து கொண்டிருக்கிறது. வரவர அவர்களிருவர் வயிறும் ஊதவாரம்பித்தது. அது ஒரு பெருஞ் சால்போலெழும்பியது. ஆனாலும் வாய் மாத்திரம் ஓயாது மென்று கொண்டே யிருந்தது. எழுந்திருக்க முடியாமலவர்கள் திண்டாடினார்கள். "விநாயகனை வைதேனே; இந்த கதி எனக்குக் கிடைத்ததே



அப்பா! உன்னைப் பெருவயிறன் என்று பரிஹாசம் செய்தது தவறு! உன்மகிமை இப்பவல்லவா எனக்குத் தெரிகிறது!" என்றிரண்டு பேரும் ஏக்கங்கொண்டு வாயை அசைத்துக் கொண்டே இருந்தார்கள். வரவர அவர் வயிறு பெருத்து மார்பின்மேல் தாக்க ஆரம்பித்தது. அவர் கைக்குள் அடங்காமல் அது பெருத்தது. அவர் மூச்சு திண்டாடும்படி அது செய்தது. அவர்க்கு இளைப்பு மேலிட்டது. ஆனாலும் வாய் மாத்திரம் வேலைசெய்துகொண்டே இருந்தது. அங்கு அப்பம் குறைந்தபாடில்லை. விழிபிதுங்கித் தலைநிமிர்ந் திருவரும் "ஹா! கஷ்டம்" என்றலறினார்கள். "ஆசையால் வருங்கேடு" என்று அழுதார்கள். "என்னப்பனே! கண்ணா! என்னைக் காப்பாற்று" என்று கூக்குரலிட்டார்கள். அவர்கள் அழுகை சற்றுக் குறைந்தது; அவர் மூச்சும் வரவரக் குறைந்தது; புத்தியும் வரவரக் குறைந்தது; மயக்கமேலிட்டது; கண்கள் பஞ்சடைந்தன; உயிரும் உடலைவிட்டு வெளி யேறியது. ஆனால் அடுப்பு மாத்திரம் எரிந்து கொண்டு தான் இருந்தது; உறலில் அரிசி யிருந்துகொண்டே இருந்தது; புடைத்த இடத்தில் மா இருந்து கொண்டே யிருந்தது; பிசைந்தமா அப்படியே இருந்தது; தட்டிய அப்ப மப்படியேயிருந்தது; எண்ணெயி லப்பம் மிதந்துகொண்டுதான் இருந்தது; வாசற்கதவும் தாழிட்டுத்தான் இருந்தது.

காலைப்பொழுது புலர்ந்து நெடுநேரமாய் எப்பொழுதும் திறந்திருக்கும் கதவு திறவா திருப்பதைக் கண்ட ஊர் ஜனங்கள் தமக்குள் தாம் பேசிக்கொண்டார்கள். வரவரக் கூட்டம் அதிகரித்தது. எல்லாருமாகச் சேர்ந்து உள்ளே இருப்பவர் இறந்து விட்டார்களோ என்று காண அக்கதவை உடைப்பதாக நிச்சயித்தார்கள். ஆனால் ஒருவரும் கதவைத்தொடவில்லை. இதற்குள் பத்துநாழிகைப் பொழுதிருக்கும். அப்பொழுதங்கு இருந்த சோம்பேறிகள் சிலர் அக்கதவை யுடைத்து உள்சென்றார்கள். இரண்டு பிணத்தையும் மற்றைய விநோதத்தையுங் கண்டார்கள். மிதக்கும் அப்பத்தைக் கண்டதும் அவர்க்கு வாயூறத் தலைபட்டு விட்டது. அதற்காகவவர் பிணமிரண்டையும் எடுத்துபோய் எறிந்தபிறகு அப்பம் தின்பதாக நிச்சயித்துக்கொண்டு இரண்டுபேர் இரண்டு பிணத்தையும் தூக்கிக்கொண்டு போனார்கள்.

அங்கு பிணத்தைப் போட்டுவிட்டு வீட்டிற்குத் திரும்பி அதை அடைந்தார்கள். ஆனால் அப்பொழுதங்கு மறுபடியும் இரண்டு பிணங்கள் தமது தோள்மே லிருக்கக்கண்டார். அதையும் எடுத் தெறிந்துவிட்டு வந்தார். மறுபடியும் பிணங்கள் தோள்மேல் வளரப்பார்த்தார்கள். அவர் போய் வந்ததற்கு அளவே கிடையாது. அவர் கால்களும் ஒடிந்துபோயிருக்கும். "சாத்தானிப் பிணம் என்னபாடு படுத்துகிறது" என்று அவர்கள் குய்யோ முறையோ என்று கூச்சலிட்டார்கள்; அலறினார்கள்.

அப்பொழு தங்கொரு பிராமணர் வந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்து அந்தச் சோம்பேறிகள் தமது கஷ்டத்தைச் சொன்னார்கள். "என்ன அப்பா! கஷ்டம்; உன் தோள் மேல் எங்கு பிணம் காட்டுப் பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டு அவரது தோளைக் கையால் தடவினார். மேலும் " பிணமாவது எங்கேயிருக்கிறது?" என்றுகேட்டார். சோம்பேறிகள் பிணங்கள் தம்மைத் தொந்தரைசெய்யா திருப்பதாகக் கண்டார். அதே ஸமயத்தில் சாத்தானி கண்கள் பிரகாசமடைந்து உயிர் பெற்றது. தான்முன்கண்ட பிராஹ்மணனை மீண்டுங்கண்டது. உடனே அச்சாத்தானி உயிர் பெற்றெழுந்தான்; கையைக் குவித்தான்." ஹா! என் நாதா!" என்றலறினான். பிறகு,

"மாலுங் கருங்கடலே என்நோற்றாய் வையகமுண்
டாலி னிலைத்துயின்ற வாழியான்—கோலக்
கருமேனிச் செங்கண்மால் கண்படையுள் என்றும்
திருமேனி நீ தீண்டப் பெற்று".

என்றாழ்வார்கள் பணிந்த வாக்கின் பயனை இன்றே அனுபவித்தேன். உமது கிருபைக்குப் பாத்திரனானேன். நீரே வைகுண்டநாதன்; பரந்தாமன்" என்று பிராமணன்போல் முன்னால் வந்து தன் கவலையைத் தீர்த்ததல்லாமல் இப்பொழுதும் தீர்த்தப்பெருமானைத் துதித்தான். பின் எம்பெருமானார் அவனை "உனக்கென்ன வேண்டும்?" என்று கேட்டார். "எல்லா மட்சயமாகட்டும்; வாயில்மாத்திரம் அட்சயமாக வேண்டாம்" என்றுகேட்டான். "அப்படியே" என்று வரமளித்தார் ஈஸ்வரனார்.

சாத்தானியாரும் தன் தாயாரம்மாளோடு வெகு கௌரமாக நிதிநிக்ஷேபத்துடன் வாழ்ந்து ஹரிநாம ஸங்கீர்த்தனஞ் செய்துவருகிறார். அவரைக்காண விரும்புபவர் வைகுண்ட நகரத்திற்குப் போனால் இப்பொழுதும்பார்க்கலாம்.

# கமலரேகை

அல்லது

"இந்திரபுரி" இரகசியம்

# KAMALAREKA

OR

# THE SECRET OF "INDRAPURI"

## மூன்றாம் அத்தியாயம்

### பயங்கரமும் பரிதாபமுமான படுகொலை

இடவேறுபாட்டினாலும், காலவேறுபாட்டினாலும் இந்த நிலவுலகத்திலே பற்பல மாறுதல்கள் அடிக்கடித்தோன்றி சிறிதுகாலம்நின்று நிலவுவதும், பிறகு அழிந்து ஒழிவதும் இயல்பாயிருத்தலை நாம் அனுபவத்தில் அறிந்துவருகிறோம். ஒவ்வொரு காலத்தில் ஒவ்வோரிடத்தில் சில விஷயங்களே ஏனைய விஷயங்களைக் காட்டினும், பொது ஜனங்களின் மனத்தையும் கவனத்தையும் கவர்ந்து வருகின்றன. அத்தகைய விஷயங்களுள் தற்காலத்தில் தமிழ்நாட்டினரை— அதிலும் முக்கியமாய்ச் சென்னைவாசிகளை—தம் வலையிற்சிக்கச்செய்து அவர்களுடைய கவனத்தையும், பொருளையும், ஒழுக்கத்தையும், சரீர சுகத்தையும், கல்வியின் நலத்தையும், அறிவின் திறத்தையும் ஒருங்கே அபகரித்து நிலைகுலையச் செய்யும் விஷயங்கள் இரண்டாகும். அவையாவன—நாடகமும், காலக்ஷேபமும்! சென்னைவாசிகள்,—அவர்கள் உயர்ந்தோராயிருப்பினும் தாழ்ந்தோராயிருப்பினும், செல்வந்தர்களா யிருப்பினும் தரித்திரர்களா யிருப்பினும், கற்றோரா யிருப்பினும், கல்லாதாராயிருப்பினும், ஆண்மக்களாயிருப்பினும், பெண்மக்களாயிருப்பினும், மற்றெவரா யிருப்பினும், சரியே,—நாடகங்களுக்கும் காலக்ஷேபங்களுக்கும் தங்களை முற்றும் அடிமைகளாக்கி இருக்கிறார்கள் என்பதை அந்நகரில் சேர்ந்தாப்போல் சில மாதங்கட்கு வசிக்கும் எந்த மனிதரும் அறிந்துகொள்ளுவார்கள். சென்னையிலுள்ள வக்கீல்கள் நியாயசாலையைவிட நாடகசாலை சிறந்ததென்றும், நியாயாதிபதியிடம் பேசுவதைவிட நாடகம் பார்க்க வந்துள்ள சபையார்முன் பேசுவது நலமென்றும், நியாயவாத பாத்திரங்களாய் நடிப்பதைவிட நாடகபாத்திரங்களாய் நடிப்பது மேலானதென்றும் கருதுகிறார்கள்! போதகாசிரியர்களோ கலாசாலைகளில் மாணவர்களுக்கு முன்னிருந்து போதிப்பதைவிட நாடகசாலைகளில் பாத்திரங்களுக்கு முன்னிருந்து போதனை பெறுவது நலமென்று நினைக்கிறார்கள்! மாணாக்கர்களோ போதனாசாலையில் ஆசிரியர்கள் முன்னிலையில் உட்கார்ந்து பாடங்கேட்பதைவிட நாடகசாலையில் வேடதாரிகளின் முன்னிலையில் உட்கார்ந்து பாடங்கேட்டால்சிறந்ததென்று எண்ணுகிறார்கள் ஏழை எளியவர்களும் கூலிக்காரர்களும் பொருளில்லாமல் வயிற்றைப் பட்டினிபோடச் சம்மதிப்பினும், கண்களையும் காதுகளையும் பட்டினிபோடச் சம்மதியாமல் கடன் வாங்கியாவது முறைதவறாமல் நாடகம் பார்க்கச் செல்லுகிறார்கள்! வைதீகப்பிராமணர்களோ வேதமந்திர கோஷத்தால் பெறப்படும் 'பக்திச் சுவையைவிட' நாடகதாரிகளின் கோஷத்தால் பெறப்படும் 'காமச்சுவை' நலமுடையதென்று கருதுகிறார்கள்! ஸ்திரீகளோ பலபேரறியாமல் அட்டிற்சாலையிலும், தங்கள் கிருகத்தில் ஏனைய சாலைகளிலும் தாங்கள் செய்யவேண்டிய கடமையை விடப் பலபேரறிய நாடகசாலைக்குப் போகவேண்டுவதும், அங்கே சொல்லப்படும் இன்பச் சொற்களையும், நடிக்கப்படும் காமாந்தகாரமான நடைநொடி பாவனைகளையும் கேட்கவேண்டுவதும், பார்க்கவேண்டுவதும் அவசியமான கடமை என்று நினைக்கிறார்கள்! கட்குடியால் பயங்கினவர்கள் பெருஞ்சண்டையிட்டுக் கலகம் செய்வதற்கும், வேறு தொழில் அகப்படாமல் நாலாபுறமும் சுற்றிப்பார்த்துவிட்டுச் சமயமறிந்து கழுத்து மணி அறுப்பவர்கள் தங்கள் தொழிலைச் சாவதானமாய்ச் செய்வதற்கும், பரபுருஷர்களின் கூட்டுறவை வகித்திருக்கும் ஸ்திரீகள் அவர்களைக் கண்டு சம்பாஷிப்பதற்கும், மேனாட்டாரைப்போல் நாரியர் சகிதம் உல்லாசமாய் வெளிப்புறப்படவேண்டுமென்னும் பிரியமுடைய புருஷர்கள் தங்கள் அபேட்சையை நிறைவேற்றிக் கொள்வதற்கும், பொருள் வருவாயில்லாத தாசிகளும், வேசிகளும், பொருள்சம்பாதித்துக் கொள்வதற்கும், நாடகசாலை இக்காலத்தில் சிறந்ததும், சௌகரியமானதுமான இடமாக இருந்து, பலருக்கும் பலவகையில் பயன்படுகிறது! அதிகம் சொல்லுவானேன்? சிறுவர்களின் மனதை நிலைபிறழச்செய்து அவர்களைச் சிறுவயதிலேயே கெட்டவழிகளிற் செலுத்தித் தாசிகள் வீடே 'கதி' என்று நினைக்கும்படியும், அவர்களைப் பலவியாதிகளுக்கு உட்படும்படியும் செய்வது நாடகமே! இல்லறத்தில் கணவனுடனும், மக்களுடனும் இன்புற்று வரும் ஸ்திரீகளிற் பலர் ஒழுக்கங்கெட்டு பரபுருஷர்களின் மாயாவலையிற் சிக்கி அவர்களுடைய தூண்டுதலினால் தங்கள்குடும்பத்தையும் மானத்தையும் ஒருங்கே துறந்து ஓடுவதற்கு நாடகமே காரணம்! நாடகம் பார்க்கச் சென்று ஒழுக்கந் துறந்த பெண்களையும், வாலிபர்களையும் கணக்கெடுப்ப தென்றால்,—அது சாத்தியமாகாத விஷயம்! ஆகவே, இக்காலத்தில் நாடகங்களால் தீமையே விளைகிற தென்பது ஒருதலை!

இவ்விதம் கூறுவதால் நாடகங்களும், காலட்சேபங்களும் தாமே தீங்கு விளைவிப்பனவாகும் என்பது கருத்தன்று, அவை இரண்டும் பொதுஜனங்களை நல்வழியிற் செலுத்துதற்கு இன்றியமையாதவைகளான சிறந்த கருவிகளாகும் என்பதும், அவைகளால் உலகத்திற்கு நன்மை பெரிதும் உண்டு என்பதும், மறுக்க முடியாத உண்மைகளாகும். ஆனால் நாடகம் நடத்து



கிறவர்களும் காலட்சேபம் புரிபவர்களும் அவைகளின் பெருமையையும், அவைகளால் விளையக்கூடிய பயனையும் ஒரு சிறிதும் உணராதவர்களாய்த் தங்கள் மனம் போனபடி நடப்பதனாற்றான் இவ்வளவு தீங்குகளும் விளைகின்றன. காலட்சேபக்காரர்கள் திவ்விய வஸ்திரங்களை உடுத்துக்கொண்டும், களப கஸ்தூரிகளை அணிந்துகொண்டும், புஷ்பமாலைகளைச் சூடிக்கொண்டும், கண்ணுக்கு மையிட்டுக்கொண்டும் செய்கின்ற அட்டகாசத்தைப் பார்த்தால், யாருக்காவது பக்தி பிறக்குமா? இவர்களுடைய வேஷமும் பேச்சும் நடையும் பாட்டும் பேதையர்களாகிய பெண்களின் மனதை நிலைகுலையச் செய்யும் இயல்புடையனவா யிருக்கின்றன. காலட்சேபம் செய்வதற்குப், பக்திச்சுவை நிரம்பிய ஒரு சரித்திரத்தை எடுத்துக்கொண்ட போதிலும், அதில் 'காமச்சுவை' யை இவர்கள் கொண்டுவந்து கலவாமல் இருப்பதில்லை, நாடகக்காரர்களும் இப்படியே! இவர்களிற் பெரும்பாலாருடைய ஒழுக்கமோ, அருவருக்கத் தக்கதாயும் வெளியிடுதற்கு முடியாததாயும், மனம் கூசத்தக்கதாயுமிருக்கின்றது! கட்குடி, விபசாரம், சூதாடல், முதலான சிறந்த குணங்களுக்கு இவர்கள் உறைவிடமாயிருக்கின்றார்கள்! இத்தகையோரால் தேசத்திற்கு நன்மை விளையுமோ? ஜனங்களைச் சீர்திருத்த இவர்கள் தகுதியுடையோர் ஆவார்களா? இவர்களுடைய போலிவார்த்தைகளால் ஏதாவது பயன் விளையுமா? கடவுள் பக்தியையும், சன்மார்க்க முறையையும், போதிப்பதற்கு இவர்களா அருகராவார்கள்? இத்தகையோரால் நாடகங்களும் காலக்ஷேபங்களும் இழிவுடையன என்று கருதப்பட வேண்டியிருக்கின்றதேதவிர, அவை உண்மையில் இழிவுடையன வாகா என்பதையும், இவர்கள் தங்கள்தொழில்களை முறைப்படிசெய்தால் இவர்களால் நன்மைவிளையும் என்பதில் ஐயமில்லை என்பதையும், வற்புறுத்திவிட்டு நம் கதையினைத் தொடர்ந்து செல்லுவாம்.

நாடகத்திற்குச் சென்ற கமலநாதனும் அந்த ஸ்திரீயும் அரங்கத்தில் நடிக்கும் நாடகபாத்திரங்களைக் கவனியாமல் வேறு விஷயங்களில் தங்கள் கவனத்தைச் செலுத்திக்கொண் டிருந்தார்கள். அதாவது, சபையின் முதல்வரிசையில் தனக்கு நேராயும், முன்னையும் அரங்கத்தைநோக்கி உட்கார்ந்திருந்த வேறொரு ஸ்திரீயை அந்த ஸ்திரீ கவனித்துக் கொண்டிருந்தாள். அந்த ஸ்திரீ அவ்விதம் முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த மற்றொரு ஸ்திரீயைக் கவனித்து நோக்குவதைக் கமலநாதன் கவனித்துக் கொண்டிருந்தான். முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த ஸ்திரீயின் இடக்கைப்புறத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியில் ஒருமனிதன் உட்கார்ந்திருந்தான். முதல்வரிசையில் இருந்த அந்தஸ்திரீயும், மூன்றாவது வரிசையில் கமலநாதனுக்கு வலக்கைப்புறத்தில் உட்கார்ந்திருந்தஸ்திரீயைப்போலவே கண்களையும், முன்கைகளையும் தவிர ஏனைய அவயவங்களை மறைத்து ஒரு நெடு அங்கி போட்டிருந்தாள் மூன்றாம் வரிசையில் இருந்த கமலநாதனும் அவன் பக்கத்திலிருந்த ஸ்திரீயும் ஒருவரோடொருவர் பேசாமல் தனித்தனி ஆழ்ந்த யோசனையில் அமிழ்ந்திருந்ததைப்போலில்லாமல் முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த ஸ்திரீயும் அவள்பக்கத்திலிருந்த புருஷனும் ஒருவரோடொருவர் உல்லாசமாயும் சந்தோஷமாயும் வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முகக்குறிப்பையும், சம்பாஷணையையும் கவனித்தவர்கள் அவர்கள் இருவரும் காதலனும் காதலியுமாக இருக்கவேண்டுமென்றே நினைப்பார்கள். அவர்கள் இருவரையும் கமலநாதனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஸ்திரீ மிகக் கூர்ந்து கவனித்தாள். அவள் அவ்விதம் கவனிப்பதைக் கமலநாதன் கூர்ந்து கவனித்தான். சிறுது நேரம் வரையில் கமலநாதன் மௌனமாயிருந்துவிட்டுப் பிறகு தன் பக்கத்தில் இருந்த ஸ்திரீயை நோக்கிப் பின்வருமாறு உசாவினான்.

"அம்மா! நாடகத்தைக் கவனியாமல், வேறு எங்கோ கவனம் செலுத்துகிறீர்களே? என்ன காரணம்?"

கமலநாதன் கேட்ட இந்தக் கேள்விக்கு அவள் ஏதும் பதில்கூறாமல் மௌனமாயிருந்தால் அவனுக்குச் சந்தேகம் உண்டாகாமற்போகுமா?

"அம்மா! தற்சமயம் தங்கள் மனத்தில் பொறாமை என்னும் சுடர் கொழுந்துவிட்டு எரிகிறதுபோல் எனக்குத் தோன்றுகிறது" என்று மறுபடியும் கமலநாதன் அவளை நோக்கிக் கேட்டான்.

அவன் அனுமானத்தினால் கேட்ட இந்தக்கேள்வி அந்த ஸ்திரீயை திடுக்கிடச்செய்தது. அவள் முகம்ஒருவகையான அச்சக்குறிப்புடனும் வெட்கக்குறிப்புடனும் பிரதிபலித்தது. ஒருவர் மனத்தில் நினைத்திருக்கும் எண்ணத்தைப் பிறர்கண்டு கூறினால் அவ்விதம் நினைத்திருந்தவருக்கு எவ்விதம் ஆச்சரியம் உண்டாகுமோ அவ்விதமே அந்த ஸ்திரீயும் ஆச்சரியப்பட்டாள்.

"ஏன் அவ்விதம் கேட்கின்றீர்கள்?" என்று அந்த ஸ்திரீ கமலநாதனை அவமானத்தால் உண்டான ஒருவகையான புன்சிரிப்புடன் வினவினாள்.

"ஏனெனில் உங்களுடைய காதலன் வேறொரு ஸ்திரீயுடன் சம்பாஷித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால் உங்கட்குப் பொறாமை யுண்டாகாதா?" என்று புன்சிரிப்புடன் கமலநாதன் பதில்சொன்னான்.

"என்னுடைய காதலனா!" என்று அதிசயக் குறிப்புடன் அந்த ஸ்திரீ கூவி "உங்களுக்கு, ஐயா, எப்படித்தெரியும்" எனக் கேட்டாள்.

"ஓ! எனக்குத்தெரியும்" என்று சிரித்துக்கொண்டே கமலநாதன் கூறி "அந்த மனிதனுக்கு,—அதாவது முதல்வரிசையில் எனக்கு நேராக உட்கார்ந்திரு

க்கும் உங்களுடைய காதலனுக்கு—பொறாமையை உண்டாக்கக் கருதியே நீங்கள் என்னை உங்களுடன் நாடகத்திற்கு அழைத்து வந்திருக்கிறீர்கள்" என்று மொழிந்தான்.

"ஐயா, தாங்கள் யார்? எனக்குத் தெரியவில்லையே? என்னுடைய அந்தரங்க விஷயங்களை நீங்கள் அறிந்திருப்பது எவ்விதம்? தாங்கள் சொன்னது வாஸ்தவமே! அந்த மனிதர் என்மனம் புண்ணாகும்படி வேறொரு ஸ்திரீயைத் தம்முடன் அழைத்து வந்திருக்கிறார்! நான் அவருடைய மனதில் பொறாமை கிளம்ப வேண்டுமென்று கருதியே உங்களை அழைத்து வந்தேன்" என்று அந்த ஸ்திரீ பதில் சொன்னாள்.

"என்பெயர் திவான்பகதூர் சத்தியசந்தன்" என்று கமலநாதன்கூறி "நான் உத்தேசமாய் நினைத்துச் சொன்னது உண்மையாகவே இருக்கிறதுபோல் தோன்றுகிறது! அம்மா! பொறாமையை அடியோடு ஒழிமின்கள்! பொறாமை மனிதர்களுக்கு இருக்கவே கூடாது—அதிலும் முக்கியமாய் ஸ்திரீகளுக்கு அந்தத் தீயகுணம் இருத்தல் முற்றும்கூடாது" என்று மீண்டும் கிளந்து தன் பேச்சை முடித்தான்.

"பொறாமை கூடாது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்! ஆனால் அந்த ஒரு காரணம் பற்றி மாத்திரம் நான் இங்கு வரவில்லை! அவருக்கு இந்த இடத்தில் ஏதோ அபாயம் நேரிடப்போகிறது! ஆனால் அந்தஅபாயம் யாதெனவும், எவ்விதம் நேருமெனவும் என்னால்அறியக்கூடவில்லை! அதனால்என்மனம் தத்தளிக்கிறது" என்று அந்த ஸ்திரீ கண்ணீர் ததும்பக் கூறினாள்.

"அம்மா! நீங்கள்அவரை உள்ளன்புடன்நேசிக்கிறீர்கள்! உண்மையுடன் காதலித்திருக்கின்றீர்கள்! அதனால்தான் உங்கள் மனம் அலைகடலில் அகப்பட்ட ஓடம்போல் தத்தளிக்கிறது" என்று கமலநாதன் கூறினான்.

இவ்விதம் கூறியபோது அந்த ஸ்திரீ கமலநாதனை ஒருவகையான வருத்தப்பார்வையுடன் நோக்கினாள், கருமையும் பிரகாசமும் ஒருங்கமைந்த அவளுடைய விசாலமான கண்களிலிருந்து நீர்த்திவலைகள் முத்து முத்தாய் உதிர்ந்தன. வருத்தம், துன்பம், துக்கம், துயரம், நம்பிக்கையின்மை, உலகவாழ்க்கையில் வெறுப்பு, அதிருப்தி, முதலானவைகளால் அவளுடைய மனம் பீடிக்கப்பட்டிருக்கிறதென்பதை அவளுடைய கண்கள், பலவகையான நிறங்களைச் சூரியனுடைய கதிர்கள் புலப்படுத்தல்போல் புலப்படுத்திக் காட்டின. நாடகப் பந்தலில் உட்கார்ந்திருந்த எண்ணிறந்த ஜனங்கள் சந்தோஷத்துடனும் குதூகலத்துடனும் வேடிக்கைபார்த்துக் கொண்டும், இனிய சம்பாஷணை புரிந்துகொண்டும், உல்லாசமாய்ப் பொழுதுபோக்க, இந்த ஸ்திரீ மாத்திரம் ஒன்றையும் கவனியாதவளாய்த் தன்னையும் மறந்து வருத்தத்தில் ஆழ்ந்திருந்ததைக் கண்டவுடன் கமலநாதனுக்கு இரக்கமுண்டாயிற்று. ஸ்திரீகள் வருத்தப்படுவதைக் கண்டால் ஆண்மக்கள் சகிப்பார்களோ? அதிலும் பேரழகும், நல்லியல்பும், சற்குணமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற மங்கையர்கள் கண்ணீர் உதிர்ப்பதைக் கண்டால் எத்தகைய வன்னெஞ்சரும் அனல்வாய்ப்பட்ட மெழுகென உருகி அவர்களின் வருத்தத்தை எவ்வகையிலும் தீர்த்திடமுயல்வர். இவ்விதம் நிகழ்வது உலக வியற்கை! ஆகவே, கமலநாதனுக்கு அந்த ஸ்திரீயினிடத்தில் அன்பும், இரக்கமும் அவனையறியாமலே உண்டாயின. எவ்விதத்திலாயினும் அவளுடைய கவலையைத் தீர்க்க வேண்டுமென்றும், தன் உயிரைக் கொடுத்தாவது அவளைக் காப்பாற்ற வேண்டுமென்றும் அவளுக்குத் தன்னாலான உதவியைச் செய்யவேண்டுமென்றும் அவன் கருதினான்.

"ஐயா, உங்களுடைய உதவி எனக்குப் பயன்படாது! நான் கண்டுபிடித்த சிற்சில விஷயங்களினால் அந்தமனிதர் என்னை நட்டாற்றில் விட்டுவிடப் போகிறார் என்று அறிந்தேன். அதாவது அந்த ஸ்திரீயின் வஞ்சனையில் அகப்பட்டிருக்கும் அவர் அவளால் பெரிய ஆபத்துக்கு உள்ளாகப் போகிறார்! நாடகத்திற்குப் போக வேண்டாமென்று நான் முதலிலேயே எச்சரித்தேன்! என்னுடைய சொல்லைக் கேளாமல் அவர் அவளுடன் வந்திருக்கிறார்! நாடகம் முடிவதற்குள் அவருக்கு என்ன தீங்கு விளையப்போகிறதோ; யார் அறிவார்?" என்று அந்த ஸ்திரீ கமலநாதனிடம் கூறிப் பிரலாபித்தாள்.

இத்தருணத்தில் நாடக மேடையில் சுலோசனை, லீலாவதியால் விஷங்கலந்து வைக்கப்பட்ட பாலை உண்மையறியாது எடுத்துக் குடித்து விட்டுத் தலைமயக்கத்தால் சுழன்று சுழன்று விழுகின்ற காட்சி நடந்து கொண்டிருந்தது. சுலோசனை வேடம் பூண்டவர் மயங்கி மயங்கி விழுந்தும், புலம்பியும் செய்த அபிநயங்களை ஜனங்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள். அவ்விதம் இருக்கும் சமயத்தில் திடீரென்று நாற்காலி விழுந்த ஓசை கேட்டது. ஜனங்கள் எல்லோரும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள்! முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த மனிதர்— அதாவது கமலநாதனிடத்தில் எந்த மனிதரைப் பற்றிப் புதிதாக நட்புரிமை கொண்ட ஸ்திரீ வருத்தத்துடன் பேசிக்கொண்டிருந்தாளோ அந்த மனிதர்— கீழே விழுந்து கிடப்பதையும், அவர் உட்கார்ந்திருந்த நாற்காலி சாய்ந்துகிடப்பதையும் ஜனங்கள் கண்டார்கள். உடனே எல்லோரும் அந்த மனிதர் விழுந்து கிடக்கும் இடத்திற்கு ஓடினார்கள். அவரைச் சுற்றிலும் ஜனங்கள் சூழ்ந்துகொண்டார்கள். கமலநாதனுடன் பேசிக்கொண்டிருந்த ஸ்திரீயும் திடுக்கிட்டுக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு மிகுந்த பரபரப்புடன் அந்த மனிதர் விழுந்துகிடக்கும் இடத்துக்கு ஓடினாள்! "ஆ! அவளே அவரைக் கொன்று விட்டாள் சற்று முன்பு அவர் அவளிடமிருந்து ஏதோ பானகம் வாங்கி அருந்தினார்! அவளைப் பிடியுங்கள்! அவளை விட்டு விடாதீர்கள்!" என்று அவள் வாய்விட்டுக் கதறினாள்! ஆனால் நாற்காலியிலிருந்து விழுந்த மனிதனுக்குப் பக்கத்தில் வீற்றிருந்த ஸ்திரீ திடீரென்று ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் மறைந்து போனாள்! விழுந்த மனிதரோ பிணமாய்க்கிடந்தார்!

ஆ! மரணம் என்பது எவ்வளவு பயங்கரமாயும் கொடூரமாயுமிருக்கின்றது! அதன் முன்னிலையில் எல்லாம் அமைதியுற்றிருக்கின்றன! நாடகமேடையில் நடித்துக்கொண்டிருந்தவர்கள் அப்படி அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார்கள். ஆட்டங்கள் ஒழிந்தன; பாட்டுக்கள் மறைந்தன; வாத்தியங்கள் நின்று போயின! ஜனங்களுடைய ஆரவாரமான சம்பாஷணைகளும், அளவுகடந்த சந்தோஷமும், சுழலிலகப்பட்டு இமைப்போதில் சமுத்திரத்தினுள் ஆழ்ந்துபோகும் மரக்கலத்தைப்போல்'மரணம்'என்னும் சுழலில்அகப்பட்டு 'துயரம்'என்னும் சாகரத்தில் ஆழ்ந்து மறைந்தன. நாடகப்பந்தல் முழுமையும் நிசப்தமான அமைதியோடு விளங்கிற்று. அர்த்தராத்திரியில் ஒருவர் வீட்டில் மரணம் நேர்ந்து, அவ்வீட்டிலுள்ளார் அழுது ஓய்ந்த பிறகு அவ்வீடு எவ்வளவு நிசப்தமாயும் பயங்கரமாயும் காணப்படுமோ அவ்விதமே 'விக்டோரியா சபாமண்டபம்' காணப்பட்டது. மரணத்தைக் கண்டவுடன் மனிதனுடைய அகங்காரமும் அகந்தையும் இருந்த இடம் தெரியாமல் பறந்து விடுகின்றன. மனிதனுடைய தற்பெருமை, டம்பம், அழகு, செல்வம், புகழ்முதலியவைகள் 'மரணம்' என்னும் ஒப்புயர்வற்ற பெரிய சக்தியினால் ஆன்மா சரீரத்திலிருந்து பிரிக்கப்படும்போது பெட்டிக்குள் அடங்கிக் கிடக்கும்சர்ப்பத்தைப்போல் அடங்கிவிடுகின்றன. "தனக்கு மிஞ்சின கோடீசுரனில்லை; தன்னினும் மேம்பட்ட கல்விமானில்லை; தனக்கு நிகரான சுத்தவீரனில்லை; தனக்கு இணையான அழகுடையவன் இல்லை; என்று மனிதர்கள் அறியாமையாற் கூறிமகிழும் தற்புகழ்ச்சியை 'மரணம்' ஒருநிமிஷத்தில் அழித்து விடுகிறதென்றால்,—அதன் சக்தியையும் வன்மையையும் என்னென்று கூறுவது?

நாற்காலியிலிருந்த மனிதர் கீழே விழுந்து இறந்து போனதைக் கண்டவுடன் கமலநாதனுடன் வந்திருந்த ஸ்திரீ அந்த இறந்த சரீரத்தின் மீது விழுந்து புலம்பினாள். அடக்கமுடையாத துயரத்தினால் அவள் தன்னையும் தெய்வத்தையும் நொந்து கொண்டாள் "அநுவிந்தா! அநுவிந்தா!" என்று அவள் வாய்விட்டுக் கதறினாள். இந்தப் பயங்கரமும் பரிதாபமுமான படுகொலை அவளுடைய மூளையைக்கலக்கி விட்டது; மனதை உருக்கிவிட்டது. கமலநாதன் அவளுக்குத் தேறுதல் கூறினான். அவள் தன்னையும் மறந்து தரையில் விழுந்து புரண்டழுததால் அவளுடைய முகவுறை கழன்று விலகியது. அவள் யார் என்பதைக் கமலநாதன் அப்போது அறிந்து கொண்டான்; திகைத்து நின்றான். அவள் யார்?— அவளேகமலரேகை!



# வஸந்தமாலிகை

## VASANTHAMALIKAI

### அத்தியாயம் 14

### சிறுபாளையம்

### Chirupalayam

நமது பிரயாணிகள் துரகாரூடராய் அக்கடும் வெயிலில் வெகுதூரம் பிரயாணஞ்செய்து கடைசியாய், சிறுபாளையம் ஜமீன் நகரத்துக்கடுத்த ஓர் குக்கிராமம் வந்து சேர்ந்து இக்கிராமத்துக்கடுத்த ஓர் ஆலமரத்தடியில் குதிரைகளை மேயவிட்டுத், தாங்கள் கொண்டுவந்த சிற்றுணவை உண்டார்கள். சிறிது நேரம் களைப்பாறினார்கள். சுமார் மாலை 4 மணியிருக்கலாம். இனிச்செய்ய வேண்டியவைகளைப் பற்றி அவர்கள் ஆலோசித்தார்கள். தர்மராஜன் மாயனை ஏற இறங்க இரண்டு மூன்று தடவை பார்த்துவிட்டு, "மாயனுசாரி! நாம் இப்பொழுது ஓர் நகரத்துக்குள் செல்லப் போகின்றோம். நீர் இப்படி மீசையும் தாடியும், சடை பிடித்தலையும், கந்தையும், அழுக்குமாயிருந்தால், நமது வரவை எல்லா ஜனங்களும் வினோதத்துடன் கவனிப்பார்கள். நீரோ, இன்னும் கொஞ்சகாலம், வேஷம் மாறாடி இருக்கவேண்டுமென்கிறாள்" என்று சொல்ல,

**மாயன்:**—மஹாராஜ், தாங்கள் சொல்லுகிறபடி செய்கிறேன். இந்தக்கோலத்தோடு போனால், வஞ்சன் கையிலகப்பட்டு வருந்த வேண்டியதாய்த்தான் நேரிடும். அவனும் வேஷம் மாறாடித்தான் திரிவதாய்க் கேள்வி. அவனுக்குத் தெரியாத தொழில் கிடையாது," என்றான்.

உடனே அவர்கள் ஒருவிதமா யாலோசித்துவிட்டு, அருகிலிருந்த ஓர் அம்பட்டன் சாவடி சொல்லவே அங்கே மாயன், க்ஷவரம் செய்துகொண்டான். இதுவரை காட்டு மராண்டி மாதிரியிருந்த மாயன் சிறிது நேரத்துக்கெல்லாம், 30 வயதுள்ள அழகிய யௌவன புருஷன் போலாய் விட்டான். இத்தருணத்தில், இரண்டு கழுதைகளின் பேரில் வெளுத்த துணி மூட்டைகளை ஏற்றிக்கொண்டு ஓர் வண்ணான், நகர் நோக்கிச்சென்று கொண்டிருந்தான். அவனை அதிகார தோரணையுடன், தர்மராஜனழைக்கவே, ராணுவ உடைதரித்திருந்த அவரைப்பார்த்து நடு நடுங்கிக் கொண்டு, வண்ணான் வந்து சேர்ந்தான். உடனே மூட்டைகளை யவிழ்க்கும்படி, தர்மராஜன் கட்டளையிட பாவம், வண்ணான் யாதொரு பதிலு முரைக்கத் தைரியமற்றவனாய் மூட்டைகளை யவிழ்த்தான். அதனின்றும், குறிப்பாய், இரண்டு மூன்று உடைகளை எடுத்துக்கொண்டு, இதாருடையதடா? என்று தர்மராஜன் வினவ,

வண்ணான்,—மஹாராஜா! அரமனை திவான் மஹா ராஜா அவுக, ராசர் யெஜமாங்களது."

**தர்மராஜன்.**—இவைகள் விலை என்ன இருக்கலாம்?

**வண்ணான்.**—மஹாராஜா! நாக்குட்டிக்கு என்ன தெரியும் ஆண்டவனே. உருப்படி போயிட்டா, என் புழைப்புப் பொயிருஞ்சாமி!

**தர்மராஜன்.**—என்ன செய்வாக?

**வண்ணான்.**—தவறிப்போச்சில்லே, பத்து வராகன் அவதாரம் போட்டிடுவாங்க சாமி.

**தர்மராஜன்.**—அவ்வளவு தானே! இந்தா 20 வராகனென்று வண்ணானிடம் எறிய, உடனே வண்ணான் அவைகளைப் பொறுக்கிக் கொண்டு, மூட்டைகளை மறுபடியும் கட்டிக்கொண்டு தன் வழியே சென்றான்.

சிறிது நேரத்துக்குள், மாயனாசாரி புது உடைகளையணிந்து கொண்டான். உடனே, அவனும் ஓர் ராணுவக் குதிரை வீரன் போல் விளங்கினான். அவன் பெயரும், கெங்கராஜு என்று மாற்றப் பட்டது.

மாலைப்பொழுதாய் விட்டது. இதுகாறும் உலகத்தில் நடந்த அதிசயங்களெல்லாம் கவனித்துக் கொண்டு விண்ணுலகில் வஞ்சார்த்துக் கொண்டிருந்த திவாகரன், களைப்பாறும் பொருட்டு, மேல் மலைத் தொடருக்குப்பின் மறைந்தான்.

நமது பிராயணிகளும், வீர கோலத்துடன், சிறு பாளையத்தில் ப்ரவேசித்துக் கடைசியாய் அரண்மனை ஆசாரவாசல் வந்து சேர்ந்தார்கள். யாதொரு தடையுமில்லமல் அரண்மனைக்குள் பிரவேசித்தார்கள்.

நமது ப்ரயாணிகள் சற்று நேரத்தில் முன் மண்டபம் வந்து சேர்ந்தார்கள். அங்கே அவ்வரண்மனை ஸம்ப்ரதி, "அதிக மனக்கவலையுடன், கைகளைப் பிசைந்து கொண்டும் முகத்தில் கைவைத்துக் கொண்டும் ப்ரமைகொண்டவன்போல ஆலோசித்துக்கொண்டிருந்தான். தர்மராஜன் நுழைந்ததும், "தர்மராஜ்! இப்பொழுதாவது வந்தீரே! உம்முடைய மாமாவும் நீரும் இருந்த பிரியத்துக்குக் கடைசி காலத்துக்காவது உதவிக் கொண்டீரே" என,

**தர்மராஜன்.**—"ஸம்ப்ரதி, அப்பொழுது. காரியம் முந்திவிட்டதா?

**ஸம்ப்ரதி.**—"என்ன சொல்லப்போகிறேன் தர்ம வைத்யர் கை விட்டுவிட்டார். ஏதோ தன் கைக்கு அடங்காத வியாதியாம். ஏதோ மாரகதசை யென்று அரண்மனை ஜோஸ்யரும் சொல்லுகிறார்" என்று சொல்லிக்கொண்டு, மேலே ஒன்றும் சொல்ல நாவெழாமல், விம்மி விம்மியழ ஆரம்பித்தார்.

இந்நிலைமையில், வைத்தியரும் உள்ளேயிருந்து அவ்விடம் வந்து சேர்ந்தார்,

**தர்மராஜன்:**—"வைத்யரே, எப்படி இருக்கிறது மாமா தேக நிலைமை?" என்று வினவ,

**வைத்யர்.**—நான் என்ன சொல்வேன். எனக்கு அதிருஷ்டமில்லை. இப்படிப்போன்ற பெரிய அரண்மனையில் நல்ல பேரெடுக்க? என்ன ஐயா, மஹாராணியவங்க, தங்கை பேரப்பிள்ளை தலையிடியாலே துடிச்சிக்கிட்டிருந்தது. அடியேன் போனேன். ஒருதைலம் தடவினேன். நிமிஷத்தில் நீங்கிவிட்டது. எனக்கதிருஷ்டமில்லை—"

**தர்மார்ஜன்.**—அப்போ எப்படியிருக்கிறது?

**வைத்யர்.**—வாகடம், அஷ்டாங்கஸித்தி, சுச்ருதம், சரகம், பதினெண் சித்தர், அகஸ்தியம், என்னெல்லாம் போட்டுப் புலட்டினேன். ஒன்றுக்கு மடங்கவில்லையே இந்த மாய வியாதி, என்று கைகளைப் பிசைந்தோன்.

**தர்மராஜன்.**—அதிக மனவருத்தத்துடன் 'அதிக வார்த்தை வளர்க்காமல், மாயனை வாசலில் நிறுத்தி விட்டுச் சரேலென்று உள்ளே சென்று, ஓர் அறைக்குள் நுழைந்தான்.

ஆங்கோர் கட்டிலில் ஓர் கிழவர் வயதாலும், விசேஷமாய் வியாதியாலும் பீடிக்கப்பட்டவராய், ஊர்த்வ சுவாஸம் விட்டுக்கொண்டு படுத்திருந்தார். அருகில், இரண்டு வேலைக்காரர், விசிறியால் வீசிக் கொண்டிருக்கின்றார்கள். ஜாதஸ்ய மரணம் த்ருவம், என்னும் ஸாங்யாயப்படி, இம்மண்ணுலகி லிதுகாறுமிருந்து நீர் பாகித்தது போதும், இனி என்னுலகு வாரும் என்று யமன் அழைப்பது போலும், இருத்தலோ, இறத்தலோ என்று, யமனுடன் அவர் போரடிக் கொண்டிருப்பது போலும் தோன்றும். அவ்வரண்மனைமுழுதும் விசேஷமாய் அவ்வறைமுழுதும் சாவுகோலமாய் விட்டது ஆங்குள்ளோர்யாவரும் சோக பாரத்தால் வாட்ட முற்று, இழவு கோலங் கொண்டிருந்தார்கள். வியாதியஸ்தரின் கன்னங்கள் சுருங்கிக் கண்கள் குழிந்து ஒளியற்று உதடுகள் பிளந்து, அங்க சேஷ்டைகள் யாதொன்றுமில்லாமல் கண்களைத் திறுதிறு என்று விழிப்பதும் மூடுவதுமாய்த் தலையணையில் கூடத் தலைதரியாமல் மேல் சுவாஸம் கீழ் சுவாஸம் விட்டுக்கொண்டிருந்தார்.

இந்நிலைமையில் நமது தர்மராஜன் பிரவேசித்து, அடிமேலடிவைத்து, அரவமில்லாமல் அதிக பயபக்தியுடன், வியாதியஸ்தர் அருகிற் சென்று மௌனமாய் நின்றான். வியாதியஸ்தர், சற்று நேரத்திற்குப் பிறகு கண்களை விழித்துப் பார்த்து, அப்பா தர்மராஜ! என்னப்பா! கண்டாயோ என்று வினவ,

**தர்மராஜன்:**—'மாமா!' என்று மேலொன்றும் சொல்ல முடியாமல் விம்மியழுதான்.



**வியாதியஸ்தர்:**—"அப்பா! என் அழுகிறாய் பாவி பெண், என் தலத்தையும் கெடுத்து பெரும் அபகீர்த்தியும் உண்டு பண்ணி, அப்பாவி மஹாவீர—"என்று விம்மி விம்மியழுதார்.

"மாமா! இந்த நிலைமையில் தாங்கள் இவ்வளவு கவலை கொள்ளலாகாது."

"அப்பா! தர்மா! என் அந்தியகாலத்தில் எனக்கிந்த அவமானமுமா நேரிடவேணும்" என்று அழுதார். உடனே, அவரது வாயடைத்து விட்டது. பற்கள் கிட்டிவிட்டன; 'திறுதிறு,' என்று வெட்ட வெளியை நோக்கினார், உடனே கண்களும் மூடிவிட்டன. "ஐயோ! ஐயோ!" என்று அரண்மனை முழுதும் அழுகைக்குரல்கள் பரவின. இந்த நிலைமையில், அரண்மனைவாசலில் நின்ற நமது மாயனும் அவ்வறையில் அழைக்காமலே தானாகவே பிரவேசமானான். தர்மராஜனை நோக்கி, மஹாராஜா! அடியேன் ஒருவிண்ணப்பம், மஹாராஜா! உடம்பு நிலைமையை அடியேன் சற்றுப்பார்க்கும்படி உத்தரவளிக்க வேண்டு" மென.

மற்றவர்கள் ஆட்சேபிக்காமல் ஸ்தம்பமாய் நின்றார்கள். மாயன், அருகிற்சென்று வியாதியஸ்தர் நாடிகளை ஸ்பர்சித்துத் தனக்குக் கொஞ்சம் ஸமாதானமடைந்து, தன் உடைப்பையினின்றும், ஓர் சிமிழைத்திறந்து அதை வியாதியஸ்தர் மூக்கில் பிடித்தார். சிறிது நேரத்துக்கெல்லாம் வியாதியஸ்தர் கண் விழித்தார், மாயன் மற்றவர்களை நோக்கி எஜமான்களே! அடியேன் மேல் தயை செய்யவேண்டும். எல்லோரும் அறையை விட்டு வெளியே செல்லவேண்டும். ஒரு ஜாமப்பொழுது ஒருவரும் இங்கே வரலாகாது. அதற்குள்சௌக்கியமாகா விட்டால், நீங்களென்னை என்ன வேண்டு மானாலும்செய்யலாம்" என்றான்.

உடனே தர்மராஜனுடைய உத்தரவு பிரகாரம் எல்லோரும் வெளியேறினார்கள். மாயனும் வெளியே சென்று அவ்வறைக் கதவை மூடிக்கொண்டு, அதன் வாயிலில், உட்கார்ந்து காத்துக்கொண்டிருந்தான்.

**தர்மராஜன்:**—ரகஸ்யமாய் "மாய! என்னவியாதி என்று நிதானித்தாயா!"

**மாயன்:**— மஹாராஜ் என்ன சொல்லப்போகிறேன். இது '**கார்க்கோடகம்** என்ற விஷம் தாங்கள் உள்ளே நுழைந்ததும், அங்கேயிருந்த ஸம்ப்ரதியிடம் வியாதியின் குணங்களையும், அதன் காலவரையறையையும் அறிந்து கொண்டேன். மற்ற விஷங்களைப்போல இது உடனே கொன்று, சந்தேகத்தை உண்டு பண்ணாது. மேலும் உங்கள் அரண்மனையிலுள்ள உண்மையாயிருந்த ஓர் பரிசாரகன் தீடீரென்று ஓடிப்போய்விட்டதாகவும் அறிந்து கொண்டேன். நான் என் குருவினிட மிருக்கும்பொழுது இவ்விஷத்தின் லக்ஷணங்களைப்பற்றி யறிந்திருக்கிறேன். இவ்வரண்மனை ஸம்ப்ரதி இவ்விவரங்களெல்லாம் எனக்குச் சொன்னதும், இவைகளைக் கொண்டு இவ்வியாதியையும் ஒருவாறு நிதானித்துக் கொண்டேன். இந்நிலைமையில், ஜமீன்தாரவர்களுக்கு எவ்விதத்தாலும், உள்ளுக்கு மருந்து செலுத்துவது அசாத்தியம். அபாயமாய் முடிந்தாலும் முடியும். ஆதலால், 'அமிருதசஞ்சீவி' என்னும் இம்மஹா ஔஷதத்தை மூக்கில் பிடித்தேன். ஈசன்கிருபையால் இன்னும் ஒரு ஜாமப்பொழுதில் குணத்துக்கு வரலாமென்று தோன்றுகிறது.

... ... ... ...

அவ்வரண்மனை முழுதும் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

... ... ... ...

ஒரு ஜாமப் பொழுதானதும் மாயன் உள்ளே பிரவேசித்து, படுத்திருப்பவ ரருகிற் சென்று தாதுவை நிதானித்துக் கொண்டு, மலர்ந்த முகத்துடன், 'மஹாராஜ்,' என்று மெதுவாயழைக்க, ஜமீன்தார் நித்திரையினின்று விழித்தாற் போல் கண் விழித்தார். முன்போலக் கண் இமைகள் பாரமாய்த் தோன்றவில்லை. உடம்பெல்லாம் இலகுவாயும், உளைச்சல் யாதொன்று மில்லாமல் ஸ்வாதீனமாயும் இருப்பதாய் உணர்ந்தார்.

அதிகமாய் வளர்ப்பதேன். மறுநாள் மாலைக்குள் அநேகமாய் வியாதியும் சௌக்கியமாய் விட்டது.

மறுநாள் மாலை ஓர் தூதன் அதிவேகமாய் அரண்மனையில் பிரவேசித்து ஓர் கடிதத்தைக் கொடுக்க அதைப்பார்த்து விட்டு, ஆங்குள்ளோர் யாவரும் மிக்க மனக்கவலை யிலாழ்ந்தார்கள்.

அன்றுஇரவு சுமார் 9 மணிக் கெல்லாம் தர்மராஜனும் மாயனும் துரகாரூடராய் 10 குதிரை வீருடன் சிறுபாளையத்தினின்றும் அவசரமாய் வெளியேறிச் சென்றார்கள்.

---

**மாமரத்தைப்பயிர்செய்யும் வகை:**—மா எவ்வித நிலத்திலும் வளரும். ஆனல் நிலம்மட்டும் ஆழமாயும் நன்றாய் நீர்வடியக்கூடிதாயுமிருக்கவேண்டும். ஒட்டுமரங்களை 35 அடிக்கப்பால் நடுவதுவழக்கம், 20 அடியில் கூட நட்டு லாபமடைந்திருக்கிறார்கள். அநேகம்பேர் 4 அடி ஆழமும் 4 அடி சுற்றளவுமுள்ள ஒரு குழி தோண்டி மேல் மண்ணில் கொஞ்சம் குழிக்குள் தள்ளி மாட்டுச் சாணியும் கொஞ்சம் போடுவதுண்டு. உஷ்ண பூமிகளில் மழைக் காலங்களில்தான் மா நன்றாய்ப் பயிராகும். சீதோஷ்ண ஸ்திதி ஜாஸ்தியுள்ள விடத்து வருஷ முழுமையும மா நன்றாய் வளரும். இப்பேர்பட்ட இடங்களில் 5-சேர் உப்பை மரத்துக் கடியில் பேட்டால், பின் 2-மாதங்களுக்கு மரம் உலராமல் பூப்பூக்க ஆரம்பிக்கும். இப்படியும் பம்பாயில் சிலர் செய்கிறார்களாம்.

# மாணவர் பக்கங்கள்
## STUDENTS' PAGES

### 1. ஆத்திசூடி விளக்கம்

#### 31. அனந்தலாடேல்

இந்தவாக்கியம் அல்நந்தல் ஆடேல் எனப் பிரிந்து இருட்டு அதிகப்படும் விஷயத்தில் நெருங்கிப் பழகாதே என்ற பொருளைத்தரும்.

இதற்கு இருட்டான தமோகுணம் அதிகப்பட்டிருக்கும் தூக்கத்தில்அதிகமாகப் பழகிவாராதே' என்று பொருள் கூறலாம். தூக்கம் தேஹேந்திரியாதி விஷயங்கள் ப்ரபஞ்சத்தில் கலந்து தொழிற்பட்டு வருகையில் அவைகளுக்கு உண்டாகும் ஓய்வால் ஏற்படுவது. மறு படி அவைகள் தேறி உலகவிஷயங்களில் பாய்ந்தோடி வ்யவஹரிப்பதற்கு இந்த விளக்கமில்லா ஓய்வு ரூபமான தூக்கம் அவசியமே. பெரும்பாலார்க்கும் இப்படி ஸுககரமான இந்த தூக்கத்தில் அதிகமாகப் பழகிவந்தால் மனதில் வரவர தமோகுணமும் அதன் காரியங்களான சேம்பல் ஒன்றும்தோன்ருமை, மந்தம் முதலியவைகள் அதிகரித்துவிட மனிதன் பயனற்ற வஞகி விடுவன். ஒழுங்கு தவறிவிடும். விவேகம் வரவரமங்கிக் கொண்டுவர, இது இல்லாத மிருகநிலைக்கு வந்துவிடுவன். அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சு என்றபடி இவனுக்கு அதிகத்தூக்கத்தால் 'சேம்பலுக்கு வாழைப்பழம் தோலோடே' என்றதற்கு ஏற்ற மந்த நிலை வந்துவிட தன் காரியத்தைக் கூடககவனித்து ஸரிவர நடத்தும் திறன் போய்விடும். பின்னர் அல்லவா இவன் ஸந்மார்க்க வழி. நடக்க முயலவேண்டியது? கால், அரை, முக்கால், முழுச்சேம்பேரிக் கனதயை நாம் கேட்டிருக்கிறோம் இவர்கள் சென்று படுத்திருந்த சாவடி தீப்பற்றி விட அங்கிருந்த மற்றையோர் ஓடிப்போய் விட்டனர். போகும்கால் உண்டான சப்தத்தால் சற்று விழித்த கால் சேம்பேரி தீப்பிடித்து விட்டது என்று தூங்கத் தொடங்கி விட்டான். அரைச்சேம்பேரி கண்ணை விழிக்காமலே ' இதென்ன இரைச்சல்' என்று உளறி விட்டுக் கண்ணைக் கூடத்திறக்காமலேயிருந்து விட்டான் முக்கால்சேம்பேரி 'இதைத்தான் சொல்வானேன் வாயைத்தான் நோவானேன்' என்றுகூறி ஒருதரம் புரண்டுகொடுத்தான் முழுச்சேம்பேரியோ சந்தை இரைச்சலில் குடியிருந்து கெட்டேனே' என்று நொந்துகொண்டு அசையக்கூட இல்லை, இவர்கள் கதிதான் தூக்கத்தில் அதிகம் பழகுவோருக்கு வரும் மனிதத்தன்மையே வரவரக், குறைந்துகொண்டுவந்து முடிவில் தேவாங்கு என்ற சேம்பேரி மிருகத்தின் நிலை வந்துவிடும். இந்த ஜன்மம் வீணுவதுமன்றி அடுத்த ஜன்மத்தில் புல் புழுவாகவும் பிறக்கவேண்டி வரும். அதிகத்தூக்கத்தால வருங் கெடுதிகளை ஆத்திசூடி வெண்பாவில்.

காலைத்துயில் சீலம் போம் கண்டபகல் ஆக்கம்போம்,
மாலை துயில் நோயாம் வகையறிந்து—ஞாலமதில்
புண்ணிய காலம் தெரிந்தே புன்னேயன நாதா
எண்ணி அனந்தலாடேல்.

என்று கூறப்பட்டுள்ளது. தூக்கம் என்பது உலக வ்யவஹாரத்தால் வரும் ஓய்வு நீக்கத்திற்காக ஏற்பட்டுள்ளது வயோதிகர், ஞானிகள் இவர்களுக்குத் தூக்கம் அதிகமாகவே வாராது. ஒருவனுக்கு மனக்கவலை அதிகரிப்பதால் தூக்கம் பிடிக்காது. மற்றவனுக்கு மனம் சற்றேரக்குறை எப்பொழுதும் ஓய்ந்து சாந்தமாக உண்மை வஸ்துவைப் பற்றி யிருப்பதால் தூக்கம்அவசியமாக விராது.எப்பொழுதும் அவன்தன்னிலையிலேயே நிலைத்திருக்கமுயன்று கொண்டிருப்பன். ஞானி நிலை இப்படி இருப்பதால் தான் ஏகாதசி, சிவ ராத்திரி, கோகுலாஷ்டமி முதலிய தினங்களில் உலகவ்யவஹாரத்தை ஊண் உள்பட ஒதுக்கி இரவில் தூக்கத்தையும் ஒதுக்கி ஸத்வஸ்து விஷயத்திலேயே பொழுது போக்கி ஞானியாக வேண்டும் என்று பெரியோர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

ஆகவே தூக்கம் அவசியமாக விருக்குங்கால் மாத்திரமே அதற்கு இடங்கொடுக்க வேண்டும். விழிப்பு வந்து விட்டால் உடனே படுக்கை விட்டெழுந்து நல் வழிகளில் மனதைச்செலுத்தவேண்டும். படுக்கையில் புரண்டு கொண்டிருக்கலாகாது. இம்மாதிரி தூக்கம் வாராதகாலத்தில் படுக்கையில் புரண்டுகொண்டு ஸுகம் கொடுத்து தூக்கத்தை வரவழைக்க முயலவே கூடாது. தூக்கம் வந்து சொக்கினுல் தான் படுக்கையில் சென்று படுக்கவேண்டும். இம்மாதிரி விழிப்பு வந்த பின்னும், தூக்கம் வருவதன்முன்னும் படுக்கையில் படுத்துப்புரண்டு தூக்கத்துடன் பழகுவதே அனந்தலாடல் என்பதாம்இதை ஒரு பொழுதும் செய்யலாகாது செய்தால் முன்னர் எடுத்து விஸ்தரிக்கப் பட்ட கெடுதிகள் எல்லாம் வந்து மனிதனைக் கழுதை யாக்கி விடும்.

இதற்கே வேறு ஒரு உட்பொருளும் உண்டு. இருட்டு என்று பொருள் படும் அல் என்ற சொல்லுக்கு அஞ்ஞானம் என்று பொருள் கொண்டு இந்த வாக்கியத்திற்கு அஞ்ஞானம் அதிகரிக்கும்படி விஷயங்களில் மனதைத்திண்டாட விடாதே என்று பொருள் படுத்தலாம். இந்த பொருள் முன்கூறிய பொருளுக்கு முரணுனதல்ல. முற்கூறியது தமோகுணத்திற்கு இடங்கொடாது அதை சுருசுருப்பால் மாற்றி விட வேண்டும் என்று தெரிவித்தது. இதோ அப்படிப்பழகப்படும் ரஜோகுணமாகிய சுருசுருப்பில் இருக்கும் கெடுதலான பாகத்திற்கு இடங்கொடாது மேலான ஸத்வ (அமைதி) குணத்திற்கு உட்பட வேண்டும் என்று தெரிவிக்கிறது. ஆகவே முதல் பொருள் அபிவிருத்தியில் முதல்படி, இது இரண்டாவது படி அவ்வளவு தான்.



ராஜஸநிலையில் உள்ள கெடுதிகள் யாவை என்ற சங்கை பிறக்கும். ராஜஸகுணமாகிய சுருசுருப்பு மேலிடுங்கால் மனதில் தேஹவாஸனை லோகவாஸனை சாஸ்திரவாஸனை ஆகிய மூன்றும் அதன் காரியமான பரபரப்பான விருத்திகளும் உண்டாகும். இவை தாமஸத்தை விட மேலாயினும் இவைகளிலேயே நிலைத்து விடுவது மனிதர்களுக்கு அழகல்ல. தேஹவாஸனை என்பது தேஹஸௌக்கியம் முதலியவைகள்: விஷய தேஹஸம்பந்தமாக ஏற்படும் முயற்சிகளுக்கு பீஜம். இதுதான் வரவர தத்கால நாகரிகத்தால் புதிதாகக் கண்டு பிடிக்கப்படும்யந்திரங்கள் மூலமாக நம் விஷயத்தை அதிகப்படுத்துவது. இது தடித்திருக்கும் வரையில் மனம் தேஹ ஸுகங்களைத் தேடுவதில் சென்று அவைகள் கிடைத்ததும் அவைகளில் மூழ்கியும் சொக்குவதான தமோ விருத்தி வந்து மூடிக்கொள்ள கீழ்ப்படிக்கு இறங்கி விடும். ஆதலால் இதை வரவரக் குறைக்கவேண்டும். லோகவாஸனை என்பது பொதுவாக எல்லோராலும் எப்பொழுதும் நன்கு மதிக்கப்படவேண்டும் என்ற பேராவல். ஒருவன் எல்லோரையும் எப்பொழுதும் திருப்திப்படுத்த முடியாது என்பது உண்மை வாக்கியம் இந்த ஆவலால் வீண் மனச்சஞ்சலமும் கஷ்டமுமே தவிர வேறொன்றும் ஏற்படாது. இதை உணர்ந்து இதைக் குறைத்துக்கொண்டு ஸன்மார்க்கத்தை விடாதிருக்கவேண்டும். சாஸ்திர வாஸனை என்பது கல்விகற்றுக்கூறவேண்டும் என்ற பேராவல். 'கற்றது கையளவு கல்லாதது கடலளவு' என்பதைக் கொண்டு இதைத்தடுத்து அவசியம் மனதைச் சுத்தப்படுத்த வேண்டிய கல்விகளைக் கற்க முயலுவதில் காலத்தைப் போக்கவேண்டும். ஆகவே தமோகுணம் நீக்கராஜஸகுணத்தைப் பற்றிப்பழகினுல்அப்பொழுது மனம் அந்த குணத்தின் வசமாகி முற்கூறிய மூன்று வாஸனைகளால் பற்றி இழுக்கப்பட்டுத் திண்டாடும். அவைகளில் வசமாகி ஓய்வு ஏற்பட்டு மூடம் அதிகரித்து மறுபடி தமோகுண விஷயத்திற்கோ அல்லது ராஜஸத்தை விட்டு வெளியேற முடியாத் தீராச் சஞ்சல நிலைக்கோ போக இடந்தரலாகாது. மனம் போன போக்கே விடாமை என்பதுதான் அனந்தலாடேல் என்பதன் கருத்து.

> இசற் கேற்பவே தாயுமானவரும்,
> எல்லாம் யோசிக்கும் வேளையில்,
> பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்,
> உள்ளதே போதும் நான் நானெனக்குளறியே,
> ஒன்றைவிட்டொன்று பற்றிப்பாசாட,
> விக்குள்ளே வீழாத பரிசுத்த நிலையை அருள்வாய்,

என்று பிரார்த்திக்கிறார்.

இன்னமும் உட்புகுந்து நோக்கில் வேறொரு கருத்தும் இந்த வாக்கியத்திலிருந்து வெளியாகும். ராஜஸகுணத்தை ஸஹாயமாகக்கொண்டு தமோகுணத்தை விட்டு வெளியேறி மேல் விருத்தியாகி ராஜஸத்தின் வசம் முற்றிலுமாகாது ஸத்வம் மேலிட்டு வருங்கால் அஞ்ஞானத்தை விருத்திபண்ணும் விஷயத்தில் மனதை ஆடவிடாதே ; 'பேராபத்து ஏற்படும் என்பதும் இதில் அடங்கியுள்ளது. இந்த விஷயத்தில் 'அஸத் விஷயத்தில் மனதை விடாதே ; பாதர் விஷயத்தைப்போல பந்தகாரணமாகுமது' என்று ஸாங்கிய ஸூத்ரத்தில் கூறப்பட்டுள்ளது. இதில் குறிக்கப்பட்டிருக்கிறது ஸ்ரீமத் பாகவதம் ஐந்தாம் ஸ்கந்தத்தில் வரும் ஜடபரதர் உபாக்யானமே. (பாகவத வினுவிடை முதல் பாகத்தையாவது, விவேகபோதினி3ம்தொகுதி 382,383ம்பக்கங்களையாவது பார்க்க). உயரப்போகப் போககீழேவிழும்வேகம் அதிகமாகுமல்லவா;அதுபோல,அபிவிருத்தியாகவாக கீழ்விஷயங்களை ஒருபொருட்டாக மதித்துப் பற்றுதல் பேராபத்திற்குத்தான் இடமாகும்.

ஆகவே இந்த வாக்கியத்திற்குப் பொருளுரைக்கின் (எந்த நிலையிலிருப்பினும் அதிற் தாழ்ந்த நிலையை ஒரு பொருட்டாக எண்ணித், தன் நிலைச்சிறப்பை மறைக்கும்படியான) அஞ்ஞானம் விருத்தியாகும்படி (அந்த தாழ்ந்தவைகளில்) நெருங்கிப் பழகாதே என்று பொதுப்பட. முற்கூறிய மூன்று விதப் பொருளும் பொருந்தத்தான் கூறவேண்டும். இவ்வாறு நிலைக்கேற்றபடிப் பொருள் படுத்தி நாம் கடைத்தேறும்படி அமைந்துள்ளது, மூதாட்டியான ஔவையின் அருள்வாக்கு.

---

## மொழி பெயர்ப்பு விளக்கம்

### TRANSLATION MODELS

#### WHAT KEEPS THE SUN ALIGHT?

You would think that the Sun is alight because it is burning; for it is generally spoken of as enormous fire ball. But when a thing burns, the stuff of which it is made joins with the oxygen of the air in which it burns. The Sun however is actually so hot that nothing can join with anything else in it; nothing could burn in the Sun There are plenty of burnable things there, and plenty of oxygen to burn them with, but they are kept apart by heat. Also even if things could burn in the Sun, that would not keep it alight, but it would have burnt out ages ago and we should not be here.

The heat and light of the Sun come mainly because the Sun is shrinking by gravitation, the power which makes every piece of stuff in the world to attract all other stuff to

itself. As it shrinks, its parts strike each other and their motion is stopped and heat and light are produced, just as when one piece of flint is struck by another. Probably the Sun is also kept warm by having in it some of the wonderful element radium, which produces heat from within itself.

### ஸூர்யனை எப்பொழுதும் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும்படி செய்வதெது?

ஸூர்யன் ஒரு பெரிய நெருப்புக் கோளம் என்று பொதுவாக மதிக்கப்பட்டிருப்பதால், அது எரிந்து கொண்டே இருக்கும்; அதனால் ஸூர்யன் எப்பொழுதும் ஒளிவிட்டுக்கொண்டிருக்கிறது என்று உங்களுக்குத் தோற்றலாம். ஏதாவது ஒன்று எரியுங்கால் அது எவைகளால் ஆக்கப்பட்டிருக்கின்றதோ அப்பொருள்கள் அவைகளைச் சுற்றியுள்ள வாயு மண்டலத்திலிருக்கும் பிராணவாயுவுடன் சேரவேண்டுவது அவசியம். ஸூர்யன் வெகு சூடாக விருப்பதால் அதனுள் ஒரு பொருள் வேறொன்றோடும் சேரவே முடியாது, அதாவது ஸூர்யனுள் ஒரு பொருள் எரிந்து போய்விடமுடியாது. எரிந்து போகக் கூடிய பொருள்களும் எரிப்பதற்கு வேண்டிய பிராணவாயுவும் அங்கு ஏராளமாக இருக்கின்றன. ஆயினும் இவைகள் அதிகச்சூட்டால் விலக்கி நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஸூர்யனுள் ஏதாவது எரிந்து போய்விடமுடியுமாயின், அது ஸூர்யனை விளங்கும்படி செய்யமுடியாது. மேலும் வெகு காலத்திற்கு முன்னரே இவைகள் எரிந்து போய் விட்டிருக்கும். ஸூர்யன் ஒளி இல்லாமல் போக, நாமும் இருப்பதற்கே இடமில்லாமல் போயிருக்கும்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் மற்றொன்றைப்பற்றித் தன்னிடம் இழுக்கும்படி செய்யும் தன்மை தரும் ஆகர்ஷண சக்தியால் ஸூர்யன் அளவில் குறைந்துகொண்டுவர அதனால்தான் ஸூர்யன் ஒளியும் வெப்பமும் முக்யமாக உண்டாகின்றன. இப்படிக் குறுகி வருகையில் அதன் பாகங்கள் ஒன்றோடொன்று மோத, மேல் போக வொட்டாமல் தடைபடுகின்றன; ஒரு சிக்கி முக்கிக் கல்லை மற்றொரு சிக்குமுக்கியின்மேல் அடித்தால் நெருப்பு உண்டாவதுபோல இங்கும் வெப்பமும் ஒளியும் உண்டாகின்றன. தன்னிடமிருந்தே சூட்டை வெளிப்படுத்தும் அத்புத மூலப்பொருளாகிய ரேடியம் என்பது ஸூர்யனுள் இருக்கலாம். அதனால் ஸூர்யன் எப்பொழுதும் சூடாகவே இருந்தாலும் இருக்கலாம்.

---

**ஆமணக்கின் மணத்தைப் போக்க வழி.**—ஒரு கோப்பையிலே வெந்நீரிட்டு அதிலே ஒரு அவுன்ஸ் ஆமணக்கெண்ணெயும் ஒரு ஸ்பூன் கொண்ட தேனும் ஊற்றி இவை மூன்றையும் நன்றாகக் கலக்கித் தெளியவிட்டுப் பின்னர் எண்ணெயைமேலால் வடித்தெடுக்க துர்நாற்றம் சிறிது மிராதாம்.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### நந்தன் சரித்திரம்

#### 8. உட்பொருள்

இதுகாறும் நந்தன் சரித்திரத்தை வாசித்துவந்த நண்பர்களே! இதைக் குற்றங்கூறத் தொடங்கி விடாதேயுங்கள். ஜலத்தில் பிரதிபலித்திருந்த சந்திரபிம்பத்தைக் கண்டு ஆனந்த பரவசராகி கிருஷ்ண சைதன்யர் ஓடி யணையச்சென்றதை ஞாபகத்திற்குக் கொண்டுவந்து கொள்ளுங்கள். பித்தன் பக்தன், வித்தன் எல்லோரும் ஒரே மாதிரிதான் தோற்றுவார்கள். இவர்கள் மனப்பற்று மிகச் சிறந்ததாக இல்லாமலிருக்கலாம். பக்தி ஞானத்தைக் கடந்து நிற்பதல்ல: அம்மாதிரியே ஞானமும், நிஜமான பக்தி ஸ்வரூபத்திற்கு அப்பாற் பட்டதுமல்ல. ஞானமோ பக்தியோ அது போக்குவரத்தாகவும், வெளி ஆவேச ரூபமாகவும் இராது நிலைத்ததாயும், சாந்தமாயும் இருத்தல் வேண்டும்: அது எரிமலைகள் போல விட்டுவிட்டு ஆவேச ரூபமாக கதித் தெழவே கூடாது: ஹிமயமலைபோல அசையாமல் நிலைத்ததும், கங்கையைப் போல ஓயாது பெருகுவதும், நடராஜரைப்போல சலிப்பின்றித் தாண்டவமாடி நிற்பதுமாகவே இருத்தல்வேண்டும்.

நந்தன் சரித்திரம் இதோடு முடிந்தது. இதனால் நம்மனதில் அழகிய இருப்பு கற்பிக்கப்பட்டிருக்கும் நந்தனார், நடராஜர் இவர்கள் அநேக இரவு நமது ஸ்வப்னத்தில் வரட்டும், அவர்கள் எண்ணம் மனதைக் கொள்ளை கொள்ளும் வரை வந்துகொண்டே இருக்கட்டும், இதனால் ஓயாது உபதேசிக்கும் ஆசார்யனுடன் நமது சித்தம் தானே சென்று பொருந்தி நிலைக்கும்படியான தன்மை உண்டாகட்டும்.

ஞானபரமாக எல்லாவற்றையும் நோக்கும் தன்மையுடைய ஞானிக்கு ஸாதாரணமான தன்மையுடைய விஷயங்கள் கூட உண்மைவிஷயத்தைக் குறிப்பதாகக் கொள்ளும் திறன் உண்டு. தன் மனதி லிருக்கும் மாறுநிலையை அநித்ய வஸ்துக்களிடம் புகட்டியும் ஆனந்திப்பன். அவன் திருஷ்டியில் அடிமை நந்தன் ஆதனூர் பறையனல்ல: அவன் கதை வெறும் புராண கதையுமல்ல. நந்தன் ஆத்மாவே, கடவுள்ரூபமான ஆனந்தமே. 'ஆனந்தமே பிரஹ்மம்என்று அவன் உணர்ந்தான். ஆனந்தத்தி லிருந்துதான் ஜீவராசிகள் எல்லாம் தோன்றி நிலைத்து, அதனுள்ளேயே அடங்கி விடுகின்றன' என்பது தைத்திரீயச்சுருதி (III—6)

தேஹத்துள் வரை யறுக்கப்பட்டுஇந்த ஆனந்தம் நான்வ்யவஹார விளையாட்டில் ஈடுபடும் ஜீவனாகி, சந்திர ஸூர்ய நக்ஷத்திராதி ப்ரபஞ்சங்களைத் தோற்றுவித்து



ராகத்வேஷாதி பந்தங்களை ஏற்படுத்துவது. நந்தன் பறச்சேரியில்பிறந்தான் என்பது நாம் மாம்ஸ ரக்தாதிகளிலேயே வ்யவஹரிக்கும் கசாப்புக் கடைக்காரர்கள் என்பதைக் குறிக்கும். தேஹம் நான் என்று வரும் எண்ணமே பறையத் தன்மை: உபனிஷத்துக்களாகிய புண்யதீர்த்தஸ்நானம்தான் இந்த இழிவை நீக்கும் ப்ராயச்சித்தம். நந்தனைப்போல் நாமெல்லோரும் பண்ணையாரான வயிற்றுக்கும் நம்முடன் ஸதா இருக்கும் உறவினரும் அயலாருமான கொடியவிருத்திகளுக்கும் அடிமைகளல்லவா! நந்தனுக்கிருந்ததுபோல தேக ஸுகம், மூட நம்பிக்கை, பெயர், கீர்த்தி, அதிகாரம், முதலிய அநேகக்ஷுத்ரதேவதைகளை நாமும் ஆராதிக்கும்படி ஏற்பட்டிருக்கிறதல்லவா?

பறச்சேரி ப்ராஹ்மணர் அக்கிரகாரத்தை விட்டு ஒதுங்கியே இருக்கும், இந்த ப்ரபஞ்ச ஆதிகாரணமான அஞ்ஞானம் பரமாத்மாவின் ஒருபாகம். மிகுந்த பாகங்களெல்லாம் அழிவற்று தேஜோமயமாக விருப்பன (தைத்ரீயம் ப்ரஹ்மமேத 2). ஸ்ரீகிருஷ்ணர் (கீதை X—42 இல்) 'எப்புவியும்; என்னுடைய கூறொன்றால் யானெளிது தாங்கிடுவேன்' என்று கூறியுள்ளார். ஒங்கித் தழைக்குங் காலத்தும் அஞ்ஞானம், அதை எரிக்கும் திறனுடைய ஞானத்திற்கு ஒரு பொருட்டாகவே இராது. தூர இருப்பினும் கோயில் கொஞ்சம் தெரிகிறது, ஆதலால் மனிதன் கடைத்தேற ஒரு மார்க்கம் உண்டு. திருப்புன்கூர் சென்று, நாமரூபம் நீக்கியபின் சேஷிக்கும் முடிவான குறியாகிய சிவலிங்கத்தை நாமெல்லோரும் தரிசிக்கத்தான் வேண்டும், அப்பொழுது நந்திதான் நமக்குத்தடையாக ஏற்பட்டு நிற்கும். நந்தி என்பது மோக்ஷவாயில் காவலாளர் என்று வர்ணிக்கப்படும், சமம், விசாரம், ஸந்தோஷம், ஸாது ஸங்கமாகிய இவைகளின் கூட்டமே. இவைகள்மூலமாகத்தான் பரம்பொருளை அணுகிச் செல்லவேண்டும், நெருங்கிவிட்டால் இவைகளும் முடிவான நிலைக்குத் தடையாகிவிடும்; பரம்பொருளாகி நிற்பதற்கு இவைகளும் ஒதுங்கவேண்டு மல்லவா? ஈச்வர கிருபையால் இவைகளும் நீங்கக்ஷண தர்சனம் கிடைக்கிறது. இது ஒருதரம் ஏற்பட்டதும் ஸ்திரீ விஷய பிரஞ்ஞை மழுங்கிவிடுகிறது, ஸம்பத்து துச்சமாக ஒதுக்கப்படுகிறது. ஈச்வர பக்தி விஷயங்களாலும் நிலைகளாலும் வர வர வலுத்துக்கொண்டு வரும்.

நந்தன் சரித்திரத்தில் ஆராதிக்கப்படும் மண்பொம்மைகளே நமது ஆராதனவிக்கிரஹங்கள், இந்த ஆராதனத்தில் பக்தி தான் மனதைக்கொள்ளை கொண்டு ஆராதிக்கும்படித் தூண்டுவது. பிரம்மஞானி யொருவனாகி ப்ராஹ்மணன் தான் சிதம்பர நடராஜர் இவைகளைப்பற்றி வசனிப்பது. இவை இரண்டும் முறையே ஆத்மா என்றும் சித் ஆகாசம் என்றும் நமக்குத் தெரிந்ததுதான். இவைகளைச் சென்றடைய குருவாகிய ப்ராஹ்மணர் அநுமதியும் அநுக்ரஹமும்தான் வேண்டும். குரு பக்தியின் திடத்தைப் பரிசோதிப்பார் பக்திதேறி பலத்துவிடும். இப்படி நிலைத்ததும் பெரியோர் யார்? சிறியோர் யார்? குரு யார்? சிஷ்யன்யார்? இந்த ஸமரஸ உணர்ச்சி ஏற்படுபவனது தர்சன மாத்திரத்திலேயே ப்ரபஞ்சம் எல்லாம் ஆனந்த பரவசமாகிவிடும். சிதம்பரத்தில் ஆத்ம ஸந்நிதானத்தை நோக்கி உள்ளம்பூரித்தணுகுவன் நந்தன். கோட் சொல்லும் உறவினர்கள் அடங்கி விடுவர்: முகத்தில் திவ்ய தேஜஸ் ஜ்வலிக்கத் தொடங்கி விடும். க்ஷுத்ரதேவதைகளால் குறிக்கப்படும் ராகத்வேஷாதி கொடுங்குணங்கள், விஷயப்போராட்டம், ப்ரபஞ்ச ஸம்பந்தம் எல்லாம் இருந்த விடம் தெரியாமல் பறந்தோடிவிடும். இந்நிலையில் தான் மரங்கள் நாவால் பேசியும், சிற்றோடைகள் தம்முருவங்களால் காட்டியும், கற்கள் தமது உருவ முதலிய நிலைகளால் ப்ரஸங்கித்தும், உண்மையைப்புகட்டுவதாகத்தோன்ற எப்பொருளிலும் மெய்ப்பொருள் காணும்திறன் ஏற்பட்டு விடும்: மௌனம் ஸாதிக்கும் கோபுரம், உயர்ந்தமதில், திறந்த கோபுர வாயில், கோயில், நடராஜா எல்லாவற்றிலிருந்தும் தத்துவப்பொருள்கள்வெளிப்படும், தீக்ஷிதர்கள் தான் மோக்ஷ காவலாளர்கள் : ஸந்நிதானம் சேருவதற்கு வேண்டிய சாஸ்திர ஆதாரம் சிரத்தை, ப்ரஹதாரண்யக உபநிஷத்து விஷயங்களுக்கேற்ப இவர்கள் நந்தனை நெருப்பாறு மேலிட்டிருக்கும் மயிர்ப்பாலத்தின் வழியாக வரும்படி செய்து பரிசுத்தப்படுத்துவதைக் குறிக்கும் அக்னி ப்ரவேசச்சடங்கு. இதைத்தாயுமானவர்.

ஏறுமயிர்ப் பாலம் உணர் விந்தவிடயங்கள் நெருப்
பாறெனவும் நன்றாக அறிந்தேன் பராபரமே,

என்று வர்ணித்து விளக்கி இருக்கிறார். இந்த ஞானநெருப்பிலிருந்து நந்தன் கிளம்பியதும் கோயிலுள் அழைத்துப் போகப்பட்டு ஸந்நிதானம் சேருகிறான். கற்பூரம் தீபத்துள்ளும், உப்பு தண்ணீருள்ளும், ஸத்குருசாந்தானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் அடிக்கடி கூறுவது போல, பனிக்குன்று மஹா ஸமுத்திரத்துள்ளும் தோற்றமாறிக் கரைந்து விடுவது போல பொய் வளரும் நெஞ்சினர் காணாதகாட்சியாகிய இந்த ஸந்நிதானச் சிறப்புள் கரைந்துமறைந்து ஒன்று பட்டு விட்டான் நந்தன், குமிழிகளும், ஆடிப்பாடி அமர்ந்த அலைகளும் ஸமுத்திரத்தில் ஓய்ந்துஒடுங்கியே எப்படிப்போய் விடுமோ அப்படி மீளாநெறி வழியாக ஓரே போக்காய்ப் போய் விடுவன் நந்தன்.

நந்தன் இறந்தே போய் விட்டான் என்றுமாத்திரம் எண்ணி விடாதேயுங்கள். நந்தன் போன்ற மஹாத்மாக்களுக்கு மரணமே இல்லை. அவன் எங்கும் அழிவற்றே நிறைகின்ற பொருள். ஆதனூர்ப் பறையன் ஆண்டவனாகியமர்ந்து இன்றைக்கு ஸுமார் 500அல்லது 600வருஷமா யிருக்கும், இன்றும் அவன்சிறப்பை எடுத்துப் பாராட்டாதார் இல்லை, கார்த்திகை மாஸம் பஸுவன் வைத்து நந்தி பூஜை செய்யும் ஜனங்களை

என்ற பெண்மணிகள் உத்ஸவத்தில் சிறுபெண்கள் ஆடையாபரணாலங்கிருதர்களாகி, மயில்போன்ற அழகிய சாயலுடன் ஸந்தோஷமாகக் கோலாட்டம் போட்டு பறையன் பார்ப்பானானதைக் கும்மியாகப் பாடி நடராஜர் ஆனந்தத்தாண்டவம் போன்ற ஆட்டத்தை ஆடுவர். அருமை நண்பர்களே! பக்திபுரிய நாமெல்லாரும் பரபரப்புடன் தொடங்குவோமாக! நந்தன் நின்ற நிலையில் நிலைக்க முயற்சிப்போமாக. ஸந்நிதான விசேஷத்துட்பட்டு நிற்க ஆவல் கொள்வோமாக. அதனுள் நமதுணர்ச்சி இழந்து தேவர்கள் கொண்டாடிப் பூமாரி பொழியும் முடிவாகிய இதில் ஆனந்தமான அமைதியுடன் கூடிய மௌனமாயும் ஈடுபடுவோமாக.

ஆய்ந்தோய்ந்து நோக்கில் நந்தன் சரித்திரம் 'தன்னை ஒரு பொருட்டாக மதித்து நிலைக்கப் புகுவோன் தன்னுதாரம் இழந்து தத்தளிப்பன் தன்னை ஒரு பொருட்டாக மதியாது கரைந்துவிடுவோன் தன் ஆதாரம் கண்டு ஆனந்தமாயமர்ந்துவிடுவன்' அல்லது இங்கற்றவர்க்கங்குண்டு என்று வழங்கி வரும்கருத்தை உள்ளடக்கியுள்ளது.'

---

**நூறுவயசுக்குச் சீவிப்பதெப்படி?** யாப்பான் தேசத்திலுள்ள புதினப்பத்திரிகைகளுள் அதிகமாய்ச் சன்மானிக்கப்படும் ஓர் விசேஷ பத்திரிகை பின்வரும் சில பிரமாணங்களையுஞ் சரியாய்க் கைக்கொள்பவர் நூறு வயசுக்கு இருத்தல் கூடுமெனக் கூறுகின்றதாம்.

கூடியளவு அதிகநேரத்தை வெளியான இடங்களில் (சுத்த ஆகாயத்தைச் சுவாசிக்கத்தக்கதாய்) வசித்தலிற் செலவிடு.

வெள்ளென நித்திரைக்குப்போய் வெள்ளென எழும்பு.

ஆறுமணி காலத்துக்குக் குறையாமல் 7½ மணிகாலத்துக் கூடாமல் இருட்டறையிற் பலகணிகளைத்திறந்துவிட்டு நித்திரைசெய்.

தேயிலை காப்பிப்பானங்களை மட்டாய்ப்பாவி,

புகையிலைக்குடியையும் மதுபானம் பாவித்தலையும் முற்றாய்த் தவிர்த்துவிடு.

எப்பொழுதும் வெந்நீரில் ஸ்நானஞ்செய்

பருக்கன்வஸ்திரங்களை உடு,

ஒவ்வொருவாரத்திலும் ஓர்நாளில் இளைப்பாறிரு

ஒருக்காலுங் கோபியாதே; மூளைக்கு அதிக வேலை கொடாதே.

அதிக சூடான அறைகளில் வசியாதே.

விரும்புவோர் இவைகளைக் கைக்கொண்டு இவற்றின் பலனைச் சோதித்தறிவாராக

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### சாந்தை அல்லது பொறுமையினிலை

### 6. வினைமுளை காதை

அயோக்யபுஞ்சன் தன் காரியங்களைச் செய்யப் போனான். இதற்குள் கட்டடியக்காரன் ஒருவன் வந்து இராஜ கட்டளையைப் பறையடித்து வெளிப்படுத்தினான். அதாவது: "துருக்கிகள் கடலில் தெய்வ ஸங்கல்பத்தால் மூழ்கினார்கள்; நமது சேனை ஜயமடைந்தது என்னும் சமாசாரம் கிட்டியது. ஆதலால் எங்கும் கொண்டாட்டம் கொண்டாடவேண்டுமென்பது ருத்ரவீரபிரதாப மௌர்யகுலதிலக சிபிர ராஜப்ரதிநிதியாகிய ராஜ ஸ்ரீ உத்புல்ல பிரபுராஜரின் கட்டளை. ஜனங்கள் அவ்வாறே செய்வாராக! சிலர் கூத்துங்குரவையும் கொண்டாடுவாராக! சுவர்க்கஸோபானங்கள்* கொளுத்தி சிலர் குதூஹலிப்பாராக! அவரவர்க்கு எது இஷ்டமோ அப்படியே விருப்பத்தின்படிக் கொண்டாடுவாராக! உள்ளம் களிப்பாராக! உங்களுடைய சௌக்கியத்திற்கு உகந்த இந்த ஸமாசாரத்துடன் வேறொன்றுண்டு: அதாவது நமது உத்புல்ல பிரபுவின் விவாஹமஹோத்ஸவம் இன்றே நடக்கப் போகிறது. அவரது மனமகிழ்ச்சிப் பெருக்கே இவ்வாறு எல்லாம் விளம்பரப்படுத்தச் செய்தது. அரசவிடுதிகள் எல்லாம் வருவார்போவாரிருக்கத் திறந்து வைக்கப்படும். சாப்பாட்டு விஷயத்தில் தடையே கிடையாது; போஜனசாலைகளில் எங்கும் இப்பொழுதிதோ அடிக்கின்றதே ஐந்து, இந்தமணிமுதல் மணி பதினொன்று அடிக்கும் வரையும் புஜிக்கலாம்; களிக்கலாம்; பண்டிகை கொண்டாடலாம். இது கணம் பொருந்திய நமது உத்புல்ல பிரபுவின் விருப்பம். அவரையும் இந்த சிபிரத்தையுங் கடவுள் காப்பாராக!" என்பதே.

அப்பொழுது ஊரெங்கும் திருவிழாக் கொண்டாடப்பட்டது. ஜனங்கள் எப்படி எப்படி தமது இஷ்டத்தைச் சேனுபதிக்குக் காட்டலாமோ அவ்வாறெல்லாம் செய்து குதூஹலித்தார்கள். காமன் பண்டிகை போல் அன்று கொண்டாடப்பட்டது. ஒருவர்மேல் ஒருவர் வஸந்த நீர்விட்டு விளையாடுவார். சிறு பறை முழங்கி உத்புல்லனது பெருமையைப் பாடுவர். சிறுமிகள் எல்லாங் கூடிக் கைகோர்த்துக் கொம்மியடிப்பார்கள். ஊரெங்கும்பெரியோர் உத்புல்லனுக்கு நன்மையுண்டாக வேண்டுமென்று பஜனை செய்வார்கள். சிறு குடியரும் தீங்கள் குடித்து வெறியுடன் குதூஹலிப்பார்கள்.

இவ்வாறு கோலாஹலமாக மணவிழாக்கொண்டாட்டம் கொண்டாடப்பட்டு வரும்போது ஸூர்யன்

* ஸ்வர்க்க ஸோபானம்=சொக்கப்பானை



மேற்கு சாய்ந்து அஸ்தமித்தான். சிறிது நேரம் செவ்வானம் விளங்கி நீங்கியது. கொடுமைக்குத் துணையாகிய இருள் வந்து உலகத்தை மூடிக்கொண்டது. ஊரில் காலையிருந்த இரைச்சலும் கூட்டமும் எல்லாம் அடங்கி நிச்சப்தங் குடி கொண்டிருந்தது. கல கல வென்று நிறைந்திருந்த வீதிகளில் எல்லாம் ஜனக்கூட்டம் இல்லாது காலியாகவேயிருந்தது. காடாந்தகாரம் கண்ணெட்டாத்தூரமெங்கும் கவிந்து கொண்டிருந்தது. இடையே அங்கங்கு தெருக்களில் நிறுத்தப்பட்டிருக்கும் விளக்கும் மின்மினிப் பூச்சி போல் அசைந்துகொண்டிருந்தது. ஆகாசத்தில் இருந்து விளங்கும் நட்சத்திரங்களும் அந்நள்ளிரவில் விளங்கிய சிபிரத்தைக் காணவிரும்பாது மேகத்தில் மறையத்தலைப்பட்டன. பெருங்காற்று இடையில்வீசி சிறிதாசப் புலப்பட்டுக்கொண்டிருந்தத் தெரு விளக்குகளையும் அவித்து விட்டது.

இவ்வாறு இருளே குடிகொண்டிருந்த இரவில் காச்யபன் தனது தலைவனது உத்தரவைத் தலைமேற்கொண்டு ஊரைக்காவல் செய்து வந்தான். எங்கும் சிறிதும் சப்தமில்லாதிருக்க அங்கோர் மது சாலையில் பெருஞ்சத்தம் அவன் காதில் பட்டது. அது என்னவென்றவன் நோக்கப்போனான். காச்யபனை இரவில் மது மயக்கம் ஊரில் அதிமாகாதிருக்கும்படிப் பார்த்துக்கொள்ள உத்புல்லன் ஏற்படுத்தியிருந்தான். ஆகையால் அவன் வெகு ஜாக்ரதையாக மது சாலையைக் கவனித்து வந்தான். யுத்த வீரர்கள் குடி வெறிமிகுந்து சண்டை செய்யாமலவன் பார்த்து வந்தபோது இப்பெரும் சப்தம் அவன் காதில் விழுந்தது.

இரைச்சல் உண்டாகக் காரணமென்ன வென்றந்த சாலை வழியாக நடந்து வந்தான். அங்கு அவன் அயோக்யபுஞ்சனைக் கண்டு "நாம் காவலிற்குப் போகலாம் வா" என்றழைத்தான். சிறிதிருவரும் சாந்தையின் அழகை வர்ணித்துக்கொண்டு அங்கோர் மண்டபத்தில் இருந்தார்கள். அப்பொழுது அயோக்ய புஞ்சன் "ஒரு ஜாடிக்கள் என்னிடம் இருக்கு; வா. நாம் குடித்து நமது சேனாதிபதியின் ஸுகத்திற்காகக் கூத்தாடுவோம்" என்றான்.

காச்யபன் "எனக்குக் குடி என்றால் பிடியாது. அதற்குப் பதிலாக வேறு எதாவது இருந்தால் நலமாயிருக்கும். அதுவும் இன்றைக்கிரவு வேண்டாம்" என்று தடுத்தான். ஆனால் அயோக்யன் விடவில்லை. அவன் ஏன் விடுவான்? அவனைத் தட்டிக்கொடுத்து, மௌர்யனிடம் ஆசைப்பெருக்கை வழியவிட்டு, நீங்கள்ளை அளவிற்கு மேலுங் குடிக்கும்படி ஆவலூட்டினான். இதற்குள் காச்யபன் குடிக்க உள் சென்றான்.

அப்போது அயோக்யன் வெகு தீவிரமாக யோசித்தான்: 'இந்தகாச்யபன்மாத்திரம் ஒருபுட்டி அடித்தால் போதும்; அதுவே அவன் மதியை மயக்கும். வேட்டைநாய்போல் அவன் பிடுங்குவான்; சண்டை சச்சரவு செய்வான். இப்பொழு தந்த நோய் பிடித்த ருத்ரகாமனும் காமத்தால் குடிகெட்டு குப்புற விழுந்து கிடக்கிறான்; தலை கால் தெரியாமல் சாந்தையின் பொருட்டு அவள் பெயரைச்சொல்லும்பொழுதெல்லாம் குடங் குடமாய்க்குடித்துக் கிடக்கிறான்; மிடா விழுங்கியாய் விளங்குகிறான்; அவனுங் கண் மூடாதிருக்கவேண்டும். இந்த சிபிரத்து மூன்று காளையரை குடியால் கலக்கி மதி மயங்கி கோபத்திலபாயச்செய்கிறேன்; அவர் மூவரும் உத்தமர்; கவரிமான்போல் மானமே உயிராக வாழ்பவர்; இவ்வரண் போன்ற தீவிற்கு ஜீவபூதங்களாக விளங்குகின்றவர். அவர்களும் காவல் செய்யப்போகிறார். இக்குடியர் கூட்டத்தில் இந்த நகரத்திற் காகாத காரியத்தை காச்யபன் செய்யத் தூண்டி விடுகிறேன்—அதோ அவரும் எதிரில்வருகிறார் நான் கண்ட கனவு போல் காரியங்களும் பலிகுமானால், என் மனோதர்மக் கப்பல், நீரோட்டமும் காற்றும் உதவி செய்யத் தடையில்லாமல் ஓடும்" என்று யோசித்துக்கொண்டு இருக்கும்பொழுது மண்டனனுங் காச்யபனு மங்கு வந்தார்கள். பல பிரபுக்களும் மது பாத்திரம் தாங்கி வரும் வேலைக்காரர்களும் வந்தார்கள்.

காச்யபனுங்குடித்தான்; மண்டனனுங் குடித்தான். அயோக்யனும்,

> நீரிற் குமிழியிக் காயம் போரில்
> நின்று வேலைசெய்யும் வீரனு மனிதன்
> ஆரென் றுறைப்ப தவனை? கள்ளை
> அருந்தி அவனென்று மானந்தம் பெருக!
> குவளையுங் கிலுங்கிக் கிலுங்க—மதுக்
> குவளையுங் கிலுங்கிக் கிலுங்க!

என்று ஸௌராஷ்ட்ர ராகத்தில் பாடிக்கொண்டு ஒரு குவளைக் கள்குடித்தான். காச்யபனும் அயோக்யனுடைய பாட்டைக் கொண்டாடினான். அப்பொழுது அயோக்யன் "இப்பாட்டை ஓட்ரசீமையில் கற்றுக்கொண்டேன். அங்கு இருக்கும் ஆஸாமிகள் மிடா விழுங்கிகள். அவர் குடித்துவைத்த மிச்சந்தான் மற்றவர்க்கு" என்று கள்ளைக் கொண்டாடினான். காச்யபன் "ஆனால் உமது ஓட்ர நாட்டார் குடியில் பெரிய ஆஸாமிகளா?" என்று கேட்டான். "என்ன? மொந்தைக் குடியர் ஒரு சாரார்; அவரிலும் பெரியர் அண்டா உருட்டிகள்; அவரிலும்பெரியர் மிடாவிழுங்கிகள். அதுவும் போதாதென்றலையும் மரமேறு மாப்பிள்ளையர் அங்கதிகம். என்னாற் சொல்லத்தரமா?" என்று அயோக்யன் கள்குடியாது பெருமையைப் பாராட்டிக் கொண்டிருக்கும்போது காச்யபன் மேலுங் குடித்தான். "நானுங் குடிப்பேன்" என்று மண்டனனும் மேலுங் குடித்தான். அயோக்யனும்,

> அரசனுய்ப் பிறந்தது முண்டு—அவன்
> ஆண்மை மிகுந்து விளங்கியதுண்டு.

வரிசைகள் இல்லாத வாழ்வு—அவன்
வாழ்ந்தநல் வெற்றிலைக் கலைந்ததுமுண்டு
உடுத்த பீதாம்பர மோட்டை—அது
ஒட்டியே தைத்திட்ட நூல்சரக் கோட்டை
படித்த பெரும் புகழ்ச் சீமான்—அவன்
பாராத எழ்மையைப் பார்த்ததுமுண்டே
மானிட வாழ்விது மாயம்—மற்று
மண்விழு வதெல்லாங் கர்வக்கலக்கால்
எனிந்த போர்வையும் வேண்டும்—அதை
எடுத்துத் தலையுங் கொடுத்து துலையும்
—தின தின்ன தின தின தானு"

என்று முன் குமுணராஜன் காட்டிலிருந்து எழ்மைக் கொண்டாடியப் பெருமையை வர்ணித்துப்பாடினன். அது முன்னிலும் நயமாக இருப்பதாகக் காச்யபன் கொண்டாடினன். "என் மறுமடியும் கேட்கிறீரா?" என்று அயோக்யன் கேட்டான். "அது தகாது" என்று தடுத்துவிட்டு தன்மனம் தன்னைத் தூண்ட "நான் குடியனல்ல பெரியோர்களே! நான் குடியனல்ல" என்று சொல்லிக்கொண்டு குடி மயக்கந் தலைக்கேற வேறெங்கோ காச்யபன் போனன்.

மண்டனன் "காவல் எல்லாம் ஏற்படுத்தலாம்; போவோம்; வாரும்" என்று அயோக்யனைக் கூப்பிட்டான். அப்பொழுது அயோக்யன் காச்யபனைப் பற்றி மண்டனனிடம் சொல்லுகிறன்; "அதோ போகிறனே அந்த ஆஸாமி தெரியுமா? அவன் பெரும் வீரன்; வீமன் னுடநின்று அதிகாரஞ் செலுத்தக்கூடிய வலிமையுடையவன்; அவனுடைய துர்குணத்தையும் பாரும், அது விசுவசங்காரந்தி தினத்தன்று பகலுமிரவும் ஒரே அளவுகொண்டவாறு விளங்குகிறது. எவ்வளவு நல்ல குணம் நிறைந்திருக்கிறதோ அவ்வளவவுன் தூர்குணமும் வளர்ந்திருக்கிறது; என்ன பாபம்! பரிதாபம்! உத்துல்லர் அவடரிம்கொண்டிருக்கும் நம்பிக்கை விஷயத்தில் எனக்குப் பயமாயிருக்கிறது. ஏனென்றல் அவருடைய மதிமயக்கத்தின் உச்சவேளையில் இந்த சிபிரத்தைக் கலக்கினுலும் அவர் கலக்கக்கூடும்." இவ்வாறு சொல்லி மண்டனனுடைய மனத்தில் காச்யபனிடம் வெறுப்பென்னும் வித்தை விதித்தான். தன் வினைக்கு வேண்டிய எருவையுஞ் சேர்த்தான்.

மண்டனன் மேலும் "அவர் எப்பொழுதும் இப்படிச் செய்வதுண்டா?" என்றுகேட்டான். அயோக்யனும் "என்றைக்குமவர் தூக்கப்பாட்டிற்குப் பல்லவி இதுதான்; மதுமயக்கம் அவர் மதுயைத் தாலாட்டாவிட்டால் இரவும்பகலுமென்றுலும் கண்கொட்டாது காப்பார்" என்று சொன்னன். இதைக் கேட்டமண்டனன் அயோக்யனுடைய உள் எண்ணத்தைக கண்டுணராது "ஒருவேளை உத்துல்லர் அவரைப்பற்றி நன்கு அறியார் பொலும். அவரிடம்இவ்விஷயத்தைப் பற்றிச் சொல்வது நலமாயிருக்கும். அவரதைக் காணுதிருக்கலாம். அல்லது அவருடைய நல்லசுபாவம் காச்யபனுடைய உத்தமகுணங்களைக்கண்டு மற்றவைகளைக் காணுதிருக்கவுங் கூடும். இது உண்மையல்லவா?" என்று கேட்டுக் கொண்டிருக்கும்போது ருத்ரகாமன் வரவை அயோக்யன் கண்டான்.

உடனே அவனை மறைவாய் அழைத்து "இப்பொழுதென்ன! ருத்ரகாமா! நான் வேண்டிக் கொள்கிறேன்; உபஸேனுபதியிடம் தயவு செய்யும் போம்" என்று சொல்லியவனை யனுப்பினன். அப்பொழுது மண்டனன் "இவ்வாறு கொலைப்பாதகக் குடியில் விழுந்து கிடக்கும் ஒருவனுக்கு தனக்கடுத்த பதவியில் வருங்கஷ்டத்தை அறியாது மேன்மை மிகுந்த மௌர்யர்கொடுத்ததுபரிதாபமானவிஷயமே. அவ்வுண்மையையெடுத்து அவருக்குச் சொல்வதுவாஸ்தவத்தில் நலமாயிருக்கும்" எனறு சொல்ல "இந்த சிபிரத்தையே கொடுத்தாலும் நான் செய்யேன்; எனக்குக் காச்யபனிடம் பேரன்பு; என்றல் கூடியவரையும் அவனுடைய துர்குணத்தை ஒழிக்க முயல்வேன்.—அஹோ! இதென்ன பெரு மிரைச்சல்" என்று அவன் கூக்குரலிட்டான்.

அங்கருகாமையில் "காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்" என்ற பெருஞ் சப்தம் காதில் விழுந்தது. அப்பொழுது அங்கு காச்யபர் ருத்ரகாமனைத் துரத்திக்கொண்டு வந்தான். உருவிய கத்தியுடன் வெகு கோபத்துடன் அவனைத் துரத்திக்கொண்டு வந்தான். தனது கோபம் பொங்க "அடே மடையா! அடா போக்கிரி!" என்று ருத்ரகாமனைவிளித்துக் கொண்டு காசயபன் வருவதை மண்டனன் கண்டான்; "உபஸேனுபதி! நடந்த ஸமாசாரமென்ன?" என்று கேட்டான்.

**காச்யபன்:**—ஒரு முட்டாள் மடையன் எனக்கென் வேலையைச் சொல்லிக்கொடுப்பதா! அவனைப் புடைத் தென்ன செய்கிறேன் பார்! அத்திருட்டுக் கழுதையின் மண்டையை யுடைத்து மாவிளக்கேற்றுகிறேன் பாரும! அவனைச் சும்மா விட்டேனு? படுபாவியைப் பொத்திப் பாடை கட்டி விடுகிறேன்; பிணம்போ லடித்து விடுகிறேன்.

**ருத்ரகாமன்:**—என்னையா புடைக்கப்போகிறய்? பாடை கட்டப்போகிறய்? பிணம்போலடிக்கிறயா?

**காச்யபன்:**—திருட்டுப்பயலே! உளறுகிறய்?

இவ்வாறு சொல்லிக்கொண்டே காசயபன் ருத்ரகாமனை அடித்தான். மண்டனன் காச்யபரைத் தடுத்து "காச்யபரே! நீர் நல்லவராச்சுதே! வேண்டாம். நான் வேண்டிக்கொள்கிறேன்; நிதானியுமய்யா! கையை எடும்" என்று சொன்னன்.

**காச்யபன்:**—என்னை விடும் ஐயா! இல்லாவிடில் உமது மண்டையையும் உடைத்து உருட்டித் தள்ளுவேன்.



**மண்டனன்:**—வாரும், வாரும் உமது குடியல்லவா அது?

காச்யபன் "ஹா! குடியா?" என்றுகத்திக்கொண்டு தன் கத்தியை மண்டனன்மேல் வீசினன். காச்யபர்க்கும் மண்டனர்க்கும் வாளால் யுத்த மாரம்பித்துவிட்டது. தான் விரும்பிய காரியம் முடிந்ததாக எண்ணிய அயோக்யன் ருத்ரகாமனை நோக்கி மெதுவாக "ஓடு! சீக்ரம்! நான் சொல்கின்றேனே! போ! இரைச்சலிடு! குழப்பம் குழப்பம் என்று கூக்குரலிடு; அரசாட்சிமணியை அடி; ஊரைக்கலக்கு" என்றவனை ஓட்டினன். பின் சிறிதும் காலதாமஸம் செய்யாமல் அவரிருவரையும் ஸமாதானப்படுத்துபவன் போல சில வார்த்தைகள் சொல்ல ஆரம்பித்தான். "இது நன்றகவே யில்லையே! உபசேனுபதியவர்களே! வேண்டாம்;—பெரியோர்களே இவர்களை வந்து காப்பாற்றும்;—உபஸேனுபதி, ஐயா! பெருமை பெற்ற மண்டனரே!—ஐயா—; ஹா! பெரியோர்களே! பிரபுக்களே! வந்திவர்களை விலக்குமே!—; அஹோ! என்ன காவல் இங்கு, பலே வெகு நல்ல காவல்;—நன்று நன்று" என்று அயோக்யன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே அரசாட்சிமணி 'டங் டங்' என்று அலமர ஆரம்பித்தது.

இம்மணியை அயோக்யனே அடிக்கச் செய்தது. குடிச்சண்டையைப் பெருஞ்சண்டையாய் விளக்க என்ன என்ன செய்யவேண்டுமோ அவை யெல்லாம் ருத்ரகாமனைக்கொண்டு செய்தான். ஊரெங்கும் குழம்ப ஆரம்பித்துவிட்டது. கலக்கம் எங்கும் பரவும்படியே என்றைக்குமடிக்காத அரசாட்சிமணியை வேண்டுமென்றே நடுராத்ரியில் அடிக்கச்செய்தது. தான் செய்த வினையை முற்றும் அறிந்தவனுனுலும் அறியாதவன்போல "யார் அங்கு அரசாட்சிமணியை அடிப்பது! இது ஏது நாசகாலம் வந்துவிட்டாற்போல விருக்கிறது; என்ன மதிக்கேடான வேலை!—ஐயோ! இனி இந்த ஊர் குழம்பிவிடுமே! நிச்சயமாக ஊர் குழம்பிவிடும். போதும் போதும் நிறுத்தும் ஐயா! இது நன்றகவே இல்லை; உபசேனுபதி! உமது வேலையை நிறுத்தும்; இல்லாவிடில், அழியாத அவமானத்திற்கு ஆளாய்விடுவீர்" என்று கனிந்து பேசுபவன்போலப் பேசினன். அயோக்ய சிகாமணி இவனைக்காட்டிலும் வேறு யார் உண்டு. தொடையையுங் கிள்ளி தொட்டிலையு மாட்டும் பேர்வழிகளில் பெரியவன் இவன்தான். அவன் சூழ்வினையின் மஹிமை இன்னுந்தானே விளங்கும்.

நிற்க, அரசாட்சிமணியை அடித்ததும் அவ்வோசை படுக்கையில் படுத்துத் தூங்கிக்கிடந்த உத்துல்லனை எழுப்பியது. என்றும் ஓசைபடாத மணியோசையைக் கேட்டதும் ஏதோவிபரீதம் ஊரில் நடந்துவிட்டது என்று, உடனே தீவர்த்திகளைக் கொளுத்திக்கொண்டு பல ஊழியருடனும் பரிஜனங்களுடனும் வெளிப்புறப்பட்டு, மண்டனரும்காச்யபரும் சண்டை செய்யுமிடத்தில் அயோக்யன் ஸமாதானங் கூறும் ஸமயத்தில் வந்தான்.

உத்துல்லனது வரவைக்கண்ட அயோக்யன் யோசித்தான். 'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும்' என்று எண்ணினன். உத்துல்லன் "ஸமாசாரம் என்ன?" என்று மண்டனனைக் கேட்க "இன்னும் ரத்தம்கொட்டுகிறதே! நான் மாணகாய மடைந்துவிட்டேனே!" என்று சொல்ல "உயிர்மே லாசையிருந்தால் நிறுத்தும்" என்று உத்புல்லன் சொன்னன்; அப்பொழுது "நிறுத்தும் ஐயா!—உபசேனுபதியாரே,—ஐயா! மண்டனரே,—பெரியோர்களே! உமது பதவி கடமை இவற்றைப்பற்றி அடியோடே மறந்துவிட்டீர்களா என்ன? நிறுத்தும்!நிறுத்தும்! உம்மோடு யார் பேசுவதென்றும் தெரியவில்லையா? சேனுபதியவர்கள் தான் தங்களிடம் பேசுவது; என்ன வெட்கக்கேடு;—நிறுத்துமையா உமது காரியத்தை" என்று மேலும் உத்புல்லரோடு கலந்து பேசுபவன்போலப் பேசினன்.

"இது என்ன மிகவும் நன்றகவேயில்லை. நமது அந்தஸ்திற்கடுக்குமா? பேயும் நம்மைக்கண்டு வெட்கங்கொண்டதன் செயலை விட்டுவிடும். தன்கோபந் தன்னையே குழப்பச்செய்பவன் தன் உயிர்மேல் ஆசை கொண்டவன் ஆகமாட்டான்; அவன் தன் செயலாலே தான் நாசமடைகிறன்" என்று உத்துல்லன் சொல்லிக்கொண்டிருக்கும்போது அந்த அரசாட்சிமணி கனமாக ஓசைபட வாரம்பித்தது. "உடனே அந்தப் பாழும் மணியை நிறுத்தும்; அது இவ்வூரை கலக்கிப் பயப்படுத்துகிறது" என்று சொல்லிவிட்டு மேலும் "பிரபுக்களே!— நடந்த சேதிஎன்ன? பொய்யுரையாத அயோக்யரே! உமது முகம் வாட்டமடைந்து கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கிறதே; சற்றுப் பேசும்; வாய்திறந்திதற்குக் காரணம் யார் என்று [illegible]ம்லிருக்குமாசைமேலாணை! சொல்லும்" என்று அயோக்யனைக் கேட்டான்.

நல்ல ஸமயம் கிட்டுமா என்றிருந்த அயோக்யனுக்கு உள்ளே கொண்டாட்டந்தான். ஆனல் சொல்ல இஷ்டப்படாதவன்போல் பாராட்டிக்கொண்டு, உத்புல்லனது வார்த்தையை மதிப்பதற்குக் கூறுகிறவன்போல, தன் உள் எண்ணத்தை விருத்தி செய்யத் தகுந்தவிதம் சொல்வதானன்.

"எனக் கொன்றும் தெரியாது! இதுவரைக்கும் நேசர்கள்தான்; இப்பவும் இந்த நிமிஷத்திற்குமுன் புதிதாய் மணந்த வதூவரர்போல அன்யோன்யமாகத்தான் இருந்தார்கள். அப்புறம் ஆனல் இப்பொழுதோ!—ஏதாவது கிறஹசார வசமோ! என்னவோ! புதாங்காரகர்கள் போல வக்ரித்து உருவிய கத்தியுடன் ஒருவர் நெஞ்சை யொருவர் குத்திக்கொண்டு மண்டையுடைத்துக் கொள்வதென்றல் என்ன ரணகளம்?

என்ன பணைமை? இந்தக் கோபக் கொடுமையின் எந்த ஆரம்பத்தையும் என்னுற் சொல்ல முடியாது. பரபாக்க இந்த ஓடி வரும்படிச் செய்த என்கால்கள் போர்க்களத்தில் பெரும் புகழுடன் முறிந் தொழிந்திருந்தால் எனக்கெவ்வளவு ஆனந்தமாயிருக்கும்!"

இதைக்கேட்ட உத்துல்லன் "உன்னையுமறக்கும்" மதிமயக்கம் உனக்கெப்படி வந்ததென்று காசயபனைக் கேட்டான். "என்னைக் காப்பாற்றும்; நான் வேண்டிக் கொள்கிறேன்; என்னுல் பேசமுடியவில்லை" என்றவன் பதில் சொன்னுன். பின் உத்துல்லன் மண்டனனை நடுச்சந்தியில் வரும்படி நேர்ந்த காரணமென்ன வென்று வெகுநயமாகக் கேட்டான்.

மண்டனன் "நான் படுகாயமடைந் திருக்கிறேன். அயோக்யர் எல்லாம் அறிவர்; அவரைக் கேட்டால் எல்லாஞ் சொல்வார். என்னுல் பேசமுடியவில்லை; என்னவோ தடுக்கின்றது. எனக்குத் தெரிந்த மட்டில் நான் இன்று இரவு பேசியதிலாவது செய்ததிலாவது, யார் எப்படி எண்ணிக் கொண்டாலும், தவருக நான் நடந்துகொள்ளவில்லை. தன்னைக் காப்பாற்ற முயல்வது தப்பாகும் பக்ஷத்தில் தவறுகலாம்; ஒருவேளை தன்னை எதிர்த்துக்கொல்ல வரும்போது உயிரைக் காப்பாற்றும் பொருட்டு தன்னைக் காத்துக் கொள்வது பெரும்பாவமானுல் தவருக இருந்தால் இருக்கலாம்" என்று சொன்னுன்.

உத்புல்லனுக்குக் கோபம் வந்துவிட்டது; அது வரவர வளரவும் ஆரம்பித்து விட்டது. அவன் ரத்தங் கொதித்து அவன் கண்களைச் சிவக்கச் செய்தன. உதடுகள் துடிக்க அவன் படபடப்புடன் யாவரும் நடுங்க வீராவேசத்துடன் பேசி "இந்நள்ளிரவில் கோட்டைகாவல்செய்யும்போது குடிச்சண்டையிட்டு ஊரைக் கலக்குவதா? ஜனங்கள் மனதை வெருட்டுவதா? வீட்டுச் சண்டையை நடுசந்திக் கிழுத்து நாட்டு ஸமாதத்தை நாசஞ் செய்வதா?" என்று கர்ஜித்துக் கொண்டு "அது பெருங்கொடுமை யாரிதற்கு மூல காரணம்? சொல்" என்று அதட்டினுன்.

---

**சென்னைக்கல்வி இலாகா இன்ஸ்பெக்ஷன் சர்க்கில்கள்.**—சென்னைக் கல்வியிலாகாயில் இப்போது 8, ஸ்கூல் இன்ஸ்பெக்டர்கள் தானிருக்கிருர்களாதலால் இப்போதுள்ள இன்ஸ்பெக்ஷன் சர்க்கில்களின் மொத்தத்தொகையும் 8தான். இப்போது கவர்ன்மெண்டார் பங்களூர், குடகு, தென்கன்னடம் இவைகளை ஒருதனி ஸர்க்கிளாக்கி இதுவரையிலிருந்துவந்த 8 சர்க்கில்களையும் 9 சர்க்கில்களாய்ப் பிரித்திருக்கிருர்கள். 9-வது சர்க்கில் இன்ஸ்பெக்டர் பங்களூரிலும் குடகிலுமுள்ள ஆண் பள்ளிக்கூடங்கள், பெண்பள்ளிக்கூடங்கள், ஐரோப்பிய ஸ்கூல்கள், எல்லாவற்றையும் சுற்றிப்பார்க்கும் அதிகாரம் கொடுக்கப்படுவார்.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**தக்காளி விதை எண்ணெய்:**—இத்தாலி தேசத்தில் சீமைத் தக்காளிப்பழங்களை டப்பியிலடைக்கும் சாலைகளில் அவற்றின் விதைகளை வெகு காலமாக உபயோகமற்றதென்றெண்ணி எறிந்துவந்தார்கள். இப்பொழுதோ அவ்விதையிலிருந்து அதிசீக்கிரத்தில் உலர்ந்துபோகக் கூடிய ஒருவித எண்ணெய் எடுக்கப்படுகிறது. இதை வார்னிஷுகளில் கலந்து உபயோகிக்கிறார்கள். இத்தாலிதேசத்தில் தக்காளியை டப்பிகளிலடைத்து வேறு தேசங்களுக்கு அனுப்பும் சாலைகள் அநேகம் இருக்கின்றன. அவைகளில் தக்காளிப்பழங்களை டப்பிகளில் அடைப்பதற்கு முந்தி விதைகளை வெகு ஜாக்கிரதையாய் எடுத்து விடுவது வழக்கம். அங்கே பாமா மாகாணத்தில் மாத்திரம் 51,000 டன் தக்காளிப்பழம் டப்பிகளில் அடைக்கப்படுகிறது, இப்பொழுது அவற்றின் விதையிலிருந்து 600 டன் எண்ணெய் தயார் செய்யப்படுகிறதாம்.

***

**அடியில் கண்ணுடியுள்ள கப்பல்:**—சமுத்திரத்திலுள்ள ஜீவராசிகளையும், ஸமுத்திரத்தில் அதிக ஆழமான இடங்களையும் ஆராய்ச்சி செய்வதற்கு உபயோகப் படக்கூடியதாய் நூதன கப்பலொன்று செய்திருக்கிருர்களாம். அந்தக் கப்பல் 60 அடி நீளமுள்ளது. அதன் அடிப்புறம் அதிக தெளிவான கண்ணுடித்தட்டால் செய்யப்பட்டிருக்கின்றது. ஜலத்தில் அமிழ்ந்தும் வெளிச்சம் கொடுக்ககூடியதான விளக்குகள் அந்தக் கப்பலில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த விளக்குகளைக் கொண்டு ஜலத்திலுள்ள ஜீவராசிகளின் தன்மைகளையும், சமுத்திரத்தில் உடைந்து அல்லது அமிழ்ந்திப்போன கப்பல்களின் நிலைமையையும் சோதிப்பார்களாம்.

***

**ஒரு பெரிய மரம்.**—இங்கிலாந்து தேசத்துள்ள ஸப்பக் என்னு மூரில் ஒரு கருங்காலி மரமிருக்கிறது. அதற்கு வயதிப்போது 2000 ஆம். அதன் அடிமரம் 36 அடி சுற்றளவுடையதாம்.

***

**தும்மல்மரம்:**—தென் ஆப்பிரிக்காவில் தும்மல் மரமென்று ஒருமரமிருக்கிறது. அதை வாளால் அறுக்கும்போது அதிலிருந்து விழுந்தூள் மூக்குத்தூள்போலக் காரமுடையதாகவிருப்பதால், அதை அறுப்பவர் தும்மிக்கொண்டேயிருப்பாராம்; அதையிழைக்கும்போதும் இழைப்பவருக்குத் தும்மலுண்டாகுமாம்.

Supplement to the "Viveka Bodhini" ["விவேக போதினி" அனுபந்தம்]



மாட்சிமைதங்கிய லேடி ஹார்டிஞ்ச்
Her Excellency Lady Hardinge



மாட்சிமைதங்கிய லார்ட் ஹார்டிஞ்ச்
His Excellency Lord Hardinge

MADRAS

# Welcome to His Excellency
## The Right Hon'ble Lord Hardinge of Penhurst
**P. C., G. C. M. G., G. C. V. O., G. C. B., G. M. S. I., G. M. I. E.**

## மஹாகனம்பொருந்திய இராஜப்பிரதிநிதியாரின் சென்னை விஜய வரவேற்கை

பங்க மற்றநம் பார்த்திபர்க் காயிங்கு
நங்க ணயக மான நயத்தினன்
பொங்கு மோகையோ டிங்கு புகுந்திட
மங்க ளம்பெற வாழ்த்துதும் வாரிரே!

வேறு

மங்குன் மதியைப் பந்த டிக்கும் வாணு தற்கொண் மெல்லிர்நீர்
அங்க மூற டைந்த ஞான்று மன்ப தூற டைந்திடாத்
தங்கு மோகை நெஞ்சி னன்றன் றண்மை வீசிப் பாரிப்பான்
இங்கு வந்தி லங்க வாவென் றேத்தி பந்த டித்திரால்!

கங்கு லற்ற நாட்டின் வேந்து கந்த வாழ்க்கை யான்புகழ்
பொங்க ருற்றக் கிஞ்சு கங்கள் பொங்கி வாஹார் டிஞ்செனுந்
தங்க மன்ன நன்மை யானற் சந்தங் கொண்ட நெஞ்சினன்
இங்கு வந்தி லங்க வாவென் றேத்தி பந்த டித்திரால்!

வேறு

மிசைச்சிறுர் வந்திடும்;—"மிகுகுணன் வந்தனன்; நயம்பொழி முகில்வந்தான்
அசைவிலன் புந்தரு எமுதம் பொழிந்திடத் தடந்துரை வந்தனனென்"
றிசையினன் பொன்றிட சயசய வென்றிடச் சிறுபறை கொட்டாமோ!
திசைகண்மு ழங்கிட சிறுகாங் கொண்டுநஞ் சிறுபறை கொட்டாமோ!

வேறு

நன்போங்கிந் தியநாட்டி னன்மைசெழித் துயர்ந்தோங்க
அன்போங்கு நெறியன்ஹார் டிஞ்சேதா னம்மானய்!
அன்போங்கு நெறியன்ஹார் டிஞ்சேதா னமாயின்
துன்போங்கு வார்க்கின்பஞ் சுரந்தானென் அம்மானய்?
சுரக்காதோ வருட்கேணி தொட்டணைத்து மம்மானய்!

வேறு

மன்ன னணை வழியினன்
சென்னை மேவச் செழுமன்பின்
முன்னீர் மூழ்கி வாழையின்
மன்னி வாழ்க வையத்தே.

## H. E. The Viceroy's Visit to Madras

### கனம் கவர்னர் ஜனரல் அவர்களின் சென்னை விஜயம்

"இனிய சொல்லினன் ஈகையன் எண்ணினன்
வினையன் தூயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதி நெறிகட வானெனின்
அனைய மன்னற் கழிவுமுண் டாங்கொலோ?"

என்று கவிச்சக்கிரவர்த்தி யாகிய கம்பநாட்டாழ்வார் வெளியிட்ட அரசர் பெரு
மையை நம் கண்ணுறக்காணச் செய்ற 1911ஆ மாட்சிமைதங்கிய அரசர் அவர்களை
டெல்ஹியில் கோலாஹலமாக ராஜ வைபோகங்கள் நடக்கும்படிச்செய்தார். அவரது
பிரதிநிதியாராகிய ஹார்டிஞ்சு பிரபுவும் அவர் மனோபாவத்தையும் பெருமையையு
மே கைப்பிடித்து இவ்விந்திய ஸமூஹத்திற்கு நன்மையே செய்யாநிற்கின்றனர்.
அவர் இயற்கையிலேயே வெகுநல்லவர்; படிப்பிலும் பூர்ணபாண்டித்தியமுடையவர்;
மற்றுத் தந்திரத்திலோ வெகு வல்லவர். ஒருவர்க்குந் தீமை எண்ணாத நல்லெண்ண
முடையவர்; பூமிபோல் பொறையாளர். அன்று இந்திய ராஜாங்கஸ்தானம் காளிகட்
டத்திலிருந்து டெல்ஹிக்குமாற்றப்பட்டு, டெல்ஹியில் ராஜப்பிரதிநிதியார் பிரவேசஞ்
செய்யப் பவனிவருங்காலத்து, சண்டினி சௌக்கில் மாடியிலிருந்து போடப்பட்ட
வெடிகுண்டு அவர்க்கு எவ்வளவு துன்பத்தைக் கொடுக்கவில்லை? எத்தனை நாள் அவ்
விபத்து அவரைப் படுத்த படுக்கையில் வைத்தது? அப்பொழுதிவ் விந்திய நாடு
என்ன கவலையுற்றது?

இவ்விதம் அவர் பெருந்துன்பத்திற்களானாலும், இந்தியரைப்பற்றித் தவறான
எண்ணங் கொள்ளவில்லை. அக்கொலைபாதகமான வேலை செய்தவனைப் பிடித்துத்
தண்டிக்க வேண்டுமென்று அவாக்கொண்டு எத்தனைப்பேர் கணக்கற்ற இனம்,
பிடிக்கத்தகுந்த விஷயஞ்சொல்வார்க்குக் கொடுத்தற்கா உதவினர்கள். ஆனால் ஹாா
டிஞ்சுப் பிரபுவின் பெருந்தன்மை எவர்க்கிருக்கும்? எங்கு பணத்திற்காசைப்பட்டு
தவறான விஷயத்தைச் சொல்லிக் குற்றமில்லாதவன்மேல் குற்றஞ் சாட்டப்படுமோ,
அல்லது தனக்குத் தீங்குசெய்தவனைக் கண்டுபிடிக்காவிட்டால் போலீஸார்



தமக்குப் பெருமைக்குறைவென்றெண்ணிநிறைந்த உத்ஸாகத்தால் எங்கு தவறிவிட
லாகுமோ என்று நன்றாகயோசித்து யாரைப்பிடித்துத் தண்டிப்பதானாலும் தன்முன்
கொணர்ந்து தன் இஷ்டத்தைக் கேட்டுத்தான் செய்யவேண்டும் என்றவர் கட்டளை
யிட்டது, அவர் உண்மையிடம் வைத்திருக்கும் பக்தியைக் காட்டவில்லையா? ஜனங்க
ளிடம்கொண்ட அன்பைக் காட்டவில்லையா? கண்ணுக்குக்கண், பழிக்குப்பழி, ஒன்
றுக்கு மற்றொன்று, என்று குரோதம்கொண்டு வெறுப்படையுங் குணமவரிடமேது?
அவரை தருமநிலைக்குழைப்பவ ரென்றால் யாராவது நாவெடுத்து உண்மையாக இல்லை
என்று சொல்லமுடியுமா? அவரை மஹான்தான் என்று நாம் சொல்வதில் என்ன
தவர்?

இவரைப்போன்ற பிரதிநிதியார் இந்தியா நாட்டில் வெகுநாள்களாய் ரிப்பன்
மஹானுபாவருக்குப் பின் இருந்ததாகத் தெரியவில்லை. இவருடைய இந்திய ஆட்சி
சரித்திரப் பிரஸித்தமாயிருக்கும். ரிப்பன் மஹாப்பிரபு முனிஸிபல் கவர்ன்மெண்டின்
பெருமையை இந்தியர்க்குச் சொந்தமாக்கினார். மிண்டோபிரபுவும் இராஜாங்க ஆட்
சியில் இந்தியரை மேம்படுத்தத்தக்க பிரேரேபணைகளை ஏற்படுத்தி இந்திய ஸுதந்த
ரத்திற்கு முளையிட்டார். மஹானுபாவர் மார்லி பிரபுவின் பெருமையால் விதித்த
முளைக்கு அன்பு நீர்வார்த்து தழைக்கச் செய்தவர் இம்மஹானுபாவரே. வெறுப்
பென்பது குடிகொள்ளா மனத்துடன் இவர் மேன்மேலும் நமக்கு நன்மையே செய்ய
விரும்புகிறவர். இவர் தமது மனமாற இத் தென்னிந்தியா நாட்டு விஷயங்களை அறி
யும்படி இந்த ராஜதானியின் தென்பாகங்களில் சென்று காண வருகின்றனர். இப்
போது இந்த நவம்பர் மாதம் இருபத்தி நான்காவது தேதி அவர் சென்னையில் விஜ
யஞ் செய்யப்போகிறார்; இருப்பத்தைந்து இருபத்தாறும் தேதிகளில் இங்கிருப்பார்.

பிரபு ஹார்டிஞ்சு துரையவர்களை வரவேற்க இந்நகரம் இருகரங்களும்விரித்துக்
காத்துக்கொண்டிருப்பது யாவரும் அறிந்தவிஷயம். டெல்ஹியில் துன்பமடைந்து
கடவுள் கிருபையாலும் நமது புண்ய விசேஷத்தாலும் நீங்கி அவர் நமது ஸுகங்
களையும் கஷ்டங்களையும் அறிய வருகிறார். அது அவர் கடமையே. நமக்கும் பெரி
யோர் வழிபாடு, அதிதிஸத்காரம் என்பனவுங் கடமையே. ஆகையால் அவர் வரும்

போது அவரது ஸௌகத்திற்கேற்ப எங்கும் குதூஹலமும் வைபோகமும் நிறைவதல்லாமல் கொடுமை முதலிய தீயகுணங்களுமில்லாமல் இவ்விராஜதானி விளங்கக் கடவுளைப் பிரார்த்திக்கிறோம். இந்த இராஜதானியின் ஆண்பெண்பாலார், குழந்தை சிறியர் பெரியோர், அறிந்தவர் அறியாதவர், கீழோர் மேலோர் ஆகிய பொதுஜனங்கள் மஹாகனம்பொருந்திய வைஸிராய் அவர்களை தங்களது ஆசைக்கரங்களைக் குவித்து, ஆனந்தக் கண்ணீர்வடித்து வரவேற்கக் காத்திருப்பதை இந்தப்பத்திரிகை வாயிலாக வெளியிடுகிறோம்! ஆனந்த எழுச்சியோடவர் பிரபு அவர்களை வரவேற்பதையுந் தெரிவிக்கிறோம். அவரது தேஹஸௌகத்திற்கும் மனோஸௌகத்திற்கும் அவர் ஸதா கடவுளைத் தியானிப்பதையும் வெளிப்படுத்துகிறோம். இச் சென்னைமாநகரம் தனது ஜனப்பிரவாஹம் சந்திரனைக்கண்டு பொங்குங் கடல்போல் ஆனந்தமிகையால் அன்பலைவீசி ராஜவிசுவாஸமென்னும் முத்தைக்கொழித்து ஹார்டிஞ்சு பிரபு அவர்களுக்கு பக்தி நிதியைக் காணிக்கையாய்க் கொடுக்கும் என்பதற்கு ஏதேனும் ஐயமுண்டோ? டெல்ஹியில் கொடியோனொருவன் அன்று செய்த செய்கையால் இந்தியர்க்குண்டான புண்ணைச் சென்னை வாஸிகள் தமது ஒழுக்கமருந்தால் ஆற்றுவார் என்பதற்கும் ஐயமில்லை.

ஆகையால் நமது பொது ஜனங்களிற்காக யாம் இப்பத்திரிகை வாயிலாக அன்புமிக்க ஆவலோடு ஆசைவாய்திறந்து ஆனந்தக்கைகளைநீட்டி மனம்மெழுச்சியின் பொங்கிவிம்ம "வாரும்!" என்றெமதுராஜப்பிரதிநிதியாராகியமஹாகனம்பொருந்திய ஹார்டிஞ்சுப்பிரபு அவர்களுக்கு நல்வரவுகூறுகின்றோம்; அவர்க்கு வந்தனம்பாராட்டுகின்றோம். நமது ஆசையோடு கடவுளாசியுங் கலந்தவர்க்கு மங்களம் உண்டாகவென்று மூவாமுதல்வனை முழு உள்ளத்துடன் வேண்டுகிறோம். அவன் அதற்குத் துணையாவானாக! சுபம்.

# விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—— திருவள்ளுவர்

தொகுதி VI } பிரமாதீசஹு அர்ப்பிசிமீ =1913-ஹு நவம்பர்மீ { பகுதி 5

## எழுஞான பூமிகள்—III

### SEVEN STEPS IN ASCENT

ஆரூடன்:-எழாம் பூமியி லிருப்பவனுக்கு இந்தப் பெயரிடப்பட்டிருக்கிறது. இவனுக்கு ப்ரவிலாபதிருஷ்டி இருக்கும். 'உலகமெல்லாம் தோன்றாது ப்ரஹ்மமாகக் கறைந்து தோன்றுவதே இந்த திருஷ்டியின் லக்ஷணம். 'இந்தநிலை, இருவகையாய் முன்னுரைத் தவையின்றி யிலங்கரி வுருவமாயிருந்தால் பொறுவரு ஸ்ஹஜஞானம்' என்று வர்ணிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே இந்த எழாம்பூமிக்கு ப்ரவிலாப திருஷ்டிநிலை, ஸஹஜநிலை என்றும் பெயர். 5-6-ம் பூமிகள் இந்த ஸஹஜ அப்யாஸநிலைகளே. இந்த அப்யாஸம் வஸ்து தந்திரத்தால்தான் ஏற்படுவது.

இது வரையில் எடுத்துக்கூறி வந்த விஷயங்களுக்கு ஆதாரமாக உள்ள செய்யுள்கள் சில வற்றை இங்கு எடுத்துக்காட்டுவோம்,

வாதத்ருஷ்டி—(சாஸ்திர வாக்ய திட நம்பிக்கை ரூபம்) மருவிய ஸௌஷுப்திபோலும் மகத்தான தாணுபோலும், பிரமாம் என்னிடத்தில் பிரிது போல் காண்பதெல்லாம், ஒருவனுமேவனுமில்லை உள்ளவனே என்று, நிருமலப்பார்வைதானே நிகழ்த்திய வாததிருஷ்டி (விவேக சூடாமணி—540)

ஸங்கல்பம் வேட்கை அநுஸந்தானம் கணந்தோறும் தவிர்தி என்னின், மங்குற்றமனோலயம் தானதுவாகும். மனோலயத்தை மருவுபோதம், பங்கற்ற பிரத்யக சேதனமாகும் அதற்கு மனோபாவமென்ப தங்குத்தானிலா வியல்பாமாதலினால் மனோவிகற்பமின்றிப்போமே.

(வாசிஷ்டம் உத்தாலகன் கதை)

மித்யாதிருஷ்டி—(பொய் என்ற அநுபவரூபம்) இருமைசேர் கனவுபோலும் மிந்திரஜாலம் போலும், பிரமமா மென்னிடத்தில் பிரிதுபோல் காணப்பட்ட, ஸருவமும் மித்தையாகும் ஸத்தியம் நானே என்று, விரிவுரும் பார்வைதானே மித்தியாதிருஷ்டியாகும்.

(விவே—541)

பல கலையும் உணர்ந்த குரு மொழிந்தபடி இவனும் அநுபவம் விடாமல், பலமரின் மதுப்போல ஸச்சிதானந்தமொன்றாம் பரமார்த்தத்தைப், பல பொழுதும் கண் மூடி. ஸமாதியிருந்தான் விழித்துப் பார்த்தபோது, பலவடிவாம் சராசரச் சித்திரங்கள் தோன்றுமோர் படமானனே,

(கைவல்யநவநீதம்)

பிரவிலாபதிருஷ்டி (கறைக்கும்திருஷ்டி) பரவிய ஆழிபோலும் பார்த்திடும் கனவு போலும், ஒரு சிதாகாசமான உருவமாம் என்னிடத்தில், பிரிவுபோற் காண்ப வெல்லாம் பிரம்மமாம் நானே என்று, பிரிவிலாப் பார்வைதானே பிரவிலாபதிருஷ்டியாகும்.

(விவேக—542.)

இந்த நிச்சயம் முத்தருள் அநுபவமிருப்ப தெப்படி என்றால், சிந்தையற்ற பூமண்டல ராஜனும், சிசுவும் போற் ஸௌகமாவர், பந்த முத்திகள் மறந்துபோம் உண்டென்று பலர் சொலின் நகையாவர், அந்த ரத்தை உண்டு மிழ்ந்ததோர் கொசு கெனுமவர்களை நகையாரோ. (கைவல்யநவநீதம்)

## மூன்று நிலையின் சுருக்கம்

சுருதியின் துணிவால் நினைவுகொண்டுலகம் துச்சம் என்றுணர்தல் நிச்சயமாம், கருதுறு நினைவை அடக்கியிவ்வுலகம் கானலென் றுணர்ந்திடல்ஸமாதி, யிருவகையாய்முன்னருரைத் தவையின்றி யிலங்கறிவுருவமாயிருத்தல், பொறுவறு ஸகஜஞானம், என்றிசைத்தான் போரிவாழாருமா முகனே (சிதம்பர ஸ்வாமிகள் திருப்போரூர்ஸந்நிதி முறை,)

இதில் காணப்படும் இறுதி இரண்டும் நிலைகளாகிய ஸமாதி ஸஹஜம் என்பவைகளின் வித்யாஸத்தை மாணிக்கவாசகஸ்வாமிகள் 'இன்றெனக்கருளி'என்று தொடங்கும் திருவாசகத்தில் முறையே ஒன்றும் நீ யல்லை' என்றும் 'அன்றியொன்றில்லை' என்றும் கூறி நன்கு விளக்கியிருக்கிறார்.

விவேக போதினி

தொ.6.] பிரமாதிச வருஷம் : அர்ப்பிசிமீ [பகுதி.5.

# மோக்ஷ ஸோபானம்

## STEPS TO THE GOAL

### 1. பீடிகை

இதுவரையில் கூறிவந்த உபநிஷத் சுருக்கம் விக்ரஹாராதன விஷயம், மூர்த்தி ஆராதனம், அவதாரச் சிறப்புக்கள் எல்லாவற்றிற்கும் நோக்கம் ஒன்றுதான். அலைந்து திரியும் மனதை நிலை நிறுத்தி அதன் ஸூக்ஷ்ம சக்தியான அறியும் தன்மையை முன்னிட்டு, அது வெளி எழாது தன்னிலையிலேயே இருந்து, அது சிந்தித்து வரும் ஸகுணப்ரஹ்மமாகிய ஈசன் மாத்திரமாக நின்று அவர் கருணையால் அஞ்ஞானம் முற்றிலும் நீங்க, ஸகுண பிரஹ்மத்தையும் தன்னையும் காணாது, தாம் இருவரும் கறைந்து போய்விடும் மனோவாக்கெட்டா மனதற்ற பரிசுத்த நிலையிற்பிரியாது நம்மை இருத்துவதே எல்லா வேத சாஸ்திராதிகளின் உட்கருத்து. எல்லோருக்கும் பொதுவில் பயன் படுவதற்காக சாஸ்திரங்களில் விக்ரஹாராதனாதிகள் அவதாராதிகள் வழிபாடு எல்லாம் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இவைகளில் தேறிவருங்கால், மலையின்மேல் ஏற ஏற முன் தெரிந்தவைகளுள் பட அதிகம் சுற்றிலும், மேல் கொடிமுடிகள் புதிதாகவும் தெரிவதுபோல, நமதுபெரியோர்களால் மோக்ஷவழியில் ஏற்படுத்தப்பட்ட பாகுபாடுகள் நன்கு வெளியாகும். இம்மாதிரியான பாகுபாடுகளை ஏற்படுத்தி, மேல்வரும் அதிகாரி ஜீவர்களை நல்வழிப்படுத்தித், தடையின்றி அபிவிருத்தியாக்கி வரும்பொருட்டே ஜீவன் முக்தராய நமது ரிஷிகள் இந்த பாகங்களை ஸரிவர அனுஷ்டித்துக் காட்டுவதிலேயே முக்யமாக தமது வாழ்நாட்களைச் செலவிட்டு உண்மையான பரோபகாரிக ளாகிவிட்டனர். இந்த மோக்ஷ ஸோபான விஷயம் ஸாதாரண ஜனங்களுக்கும் ஞாபகம்வருவதற்காகவே, மாறுபாடுகள் துக்கங்கள் நிறைந்த சிறைச்சாலையாம் இவ்வுலகைவிட மேல் ஏதோ ஒன்று இருக்கிறதென்பதை நமது நித்ய வ்யவஹாரங்களிலும், கல்யாணம், கல்லெடுப்பு, நித்யகர்மானுஷ்டானம் ஆகிய இவைகளிலும் அமைத்துள்ளார் நமது பெரியோர்கள். ச்ராத்தங்களும் ஸாதாரண போஜனமும் கூட ஆத்மாராதனமாகவே கருதப்படவேண்டும் என்பதே வராஹோபநிஷத்தின் கருத்து.

உலகத்திலுள்ள மற்றையமதங்களில்மோக்ஷ ஸோபானம் ஸம்பூர்ணமாகவும் தெளிவாகவும் நமது ஸனாதன தர்மத்திலுள்ளதுபோலக் காணப்படவில்லை. மோக்ஷஸோபானம் நான்கு பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவையாவன: கர்மயோகம், பக்தியோகம், ராஜயோகம், ஞானயோகம் என்பவைகளே. இங்கு யோகம் என்றால் ஆத்மாவைப் பரம்பொருளுடன் சேர்த்து அதுவாகும்படி விடும் மார்க்கம் என்று பொருள். இவைகளையே நமது சாஸ்திரங்களின் நான்கு பாதங்கள் என்று கூறுவர் பெரியோர். இந்த ஸோபானக் கிரமத்தில் கர்மயோகம்தான் முதல்படி: அடிப்படி: மோக்ஷத்திலிருந்து மிக விலகியிருக்கும்படி: மோக்ஷம் என்பது த்வைதபாவமே நீங்கிவிட்டபின் ஏற்படுவதுபோலத் தோற்றுவதாயும் எப்பொழுதும் ஒரு படித்தாயும் உள்ள மாறா நிலையாதலால்; கர்த்தா, கர்மம், கிரியை ஆகிய திரிபுடியை (மூன்றாகும் தன்மையை) ஆதாரமாக உடைய கர்மயோகம் அடிப்படி என்பதற்கு என்ன தடை? இந்த கர்மயோகத்தை ஒழுங்காகச் செய்து நமது அவசியக் கடமைகளைப் பலத்தில் இச்சைப்பட்டு தவியாது, ஈசாஞ்ஞைக்குட்பட்டே நடக்கிறோம் என்ற உணர்ச்சியுடன் மாத்திரம் செய்துவந்தால், வரவர ஈசன் விஷயத்தில், மிகுந்த நேரத்திலும், பழக்கத்தின்மேல் கர்மம் செய்யுங்காலத்தும், மனம் பாய்ந்தோடத்தொடங்கும். இதுதான் அடுத்த படியாகிய பக்தி யோகாரம்பம். இதிலும் த்வைதபாவம் இல்லாமல் போகாது; ஆனால் கர்மயோகத்தைவிட இதில் அந்தபாவத்திற்குப் பலம் சற்றுக் குறைந்துவிடும். உலகம் விசித்ரமாகத் தோன்றியதால் அலைந்து திரிந்துகொண்டிருந்த மனம் கர்மயோகத்தால் இந்திரிய வழி போனபோக்கே செல்லாது தடைப்பட, பக்தி யோகத்தில் உட்சஞ்சலங் குறைந்து சாந்தமாகிக்கொண்டே வரும். இதற்கு முக்ய ஸாதகம் பக்தன் தனது பக்தியின் விசேஷத்தால் எங்கும் எப்பொழுதும் தன் ஈசனையே காண முயலுவன் என்பதே. மிகுந்த ப்ரயத்னத்தின் பேரில் கடவுளிடம் சேர்க்கப்படும் மனது கலைந்து போவதன் காரணம் உணர்ந்துமனதுள்ளிருக்கும் பூர்வவாஸனைகளை உள்ளேயே தகைந்து தான் நினைக்கும் ஈசன் மாத்திரமாக நின்று வரவரத் தன் நினைவும் இழந்து உறுதிப்பட மனப்பூர்வமாக முயன்று, இந்த முயற்சி வேக பலத்திலேயே ஸாதாரண வ்யவஹாரகாலத்தும் இருக்க உதவியாகவிருக்கும் அங்கங்கள் மூலமாக முயலுவதே அடுத்த படியாகிய ராஜயோகத்தின் லக்ஷணம். நாம் நமது என்றபாவனை நமதுப்ரயத்னபூர்வமாக ஒதுங்கிக்கத்தப்பட்டுவரும்மனத்தை பக்தியால் வழிபட்டுவரும் கடவுளிடம் ஸமர்ப்பித்து மேல் வருவதைப் பற்றிய சிந்தனைகளால் மனதை சலிக்கும்படிச்செய்யாது காத்துக்கிடப்பதே இந்தயோகத்தின்ஸாரம். இந்தக்காத்துக்கிடக்கும் ஆவல் ரூபமானகுணமே இவனை விஷயங்களில் சென்று உழலவொட்டாது காப்பாற்றும். இப்படி இருக்கையில் மேல் ஏற்படப்போகும் தற்போத இழப்புஅகண்டாகாரவிருத்தி இவைகளில்மனம் ஸாவதானமாக ஈடுபட்டுநின்றுநிர்ப்பயமாய்கலக்கவேண்டிய நிதானமும், தைர்யமும் தர ஸச்சிதானந்தோஹம் என்ற அவாந்தர வாக்கியத்தையும், அதுவே மஹா வாக்கியமாகி விடும் வழியையும் குருமூலமாகஉணர்ந்து அதற்கு அனுகூலமாக அவர் குறிக்கும் மனோநிலையோடு இருந்து பழகி வருவதே ஞானயோகம். இதன் முடிவே ஆத்ம ஸாக்ஷாத்காரம்: அதாவது உண்மைப் பொருளாகி விடுதல் என்ற மோக்ஷம்.

இதற்கு ஏற்பவே வேதாந்த சாஸ்திரத்தில் மோக்ஷம் ஸித்திக்க நான்கு அப்யாஸங்கள் வேண்டும் என்று கூறப்படும். அவையாவன: இந்திரிய நிரோதம், மனோநாசம், வாஸனாக்ஷயம், தத்துவஞானம் ஆகிய இவைகளே. இவைகளுக்கு ஜீவகாருண்யம், ஈசுவரபக்தி பாசவைவராக்யம், தத்துவஞானம் என்றும் பெயர். இவைகளுள் காம்யோகம் இந்திரிய நிரோத ஸஹாயம்; பக்தியோகம் மனோநாசத்திற்கும், ராஜயோகம் வாஸனாக்ஷயத்திற்கும் ஞானயோகம் தத்துவஞானத்திற்கும் பொருத்தமாக உடையது. மேலும் ஞானத்திற்கு நான்குஸாதனங்கள் அவசியம். அவைகளை உடையவனுக்குத்தான் ஞானம்பலித்து ஸாக்ஷாத்காரம் உண்டாகும்என்று கூறப்படும். இந்தநான்கு ஸாதனமாகிய விவேகம், வைராக்யம், சமதமாதி குணங்கள், மோக்ஷ இச்சை இவைகளுள் கர்மயோகத்தால் முதல் மூன்றும், பக்தியால் இடை இரண்டும், ராஜயோகத்தால் நான்கும், முக்ய

மாக கடை இரண்டும் ஏற்பட்டுவிட ஞானயோகம் திடப்படும்.

இதுவரையில் கூறி வந்ததிலிருந்து இந்த நான்கு பாகங்களும் வேறு வேறாகப் பிரிந்திருப்பன; ஒன்றை விட்டே ஒன்றுக்குப் போகவேண்டும் என்று கருதிவிட லாகாது. உலகில் மானஸிகமாக லக்ஷணம் கண்டு பிரித்தறியும் வஸ்துக்கள்எல்லாம் பலலக்ஷணங்கள் கலந்தனவாகவே இருக்கும். தானம் செய்வது ஸத்வகுண கர்மம்தான்; அது செய்யுங்கால் அதன் மூலமாக கோபம், அல்லது எவ்வளவு பெயர்கள் நம்மால் ஸுகப்படுகின்றனர் என்ற எண்ண விசேஷங்கள் வந்து கலந்து விடலாம். ஆதலால் நாம் செய்யும் ஸாத்விக கர்மங்கள் நமது பிரயத்தனத்தால்எப்போதும் ஸாத்வீகம்அதிகமுள்ளனவாயும், ராஜஸ தாமஸ பாகம் குறைந்தும்உள்ளனவாக விருக்கலாம்: இவ்வளவுதான். இதுபோல முற்கூறிய நான்கு யோகங்களிலும் நான்குயோக லக்ஷணமும் கலந்திருக்கும். ஆனால் ஒன்று ஏற்றமாயும் மற்ற மூன்றும் அடக்கமாயும் இருக்கும். ஏற்றமாகவிருக்கும் பாகத்தைக்கொண்டு அந்தயோகத்திற்கு அதன் பெயர் கொடுத்திருக்கிறது. கர்மயோகத்தில் கர்மம் செய்வது, ஈசனுக்கு அர்ப்பணம் பண்ணுவது, மனோ திடத்தோடு தொழிற்படுவது, குணதோஷ விவேகம் எல்லாம் இருந்தும் எல்லாம் கர்மானுஷ்டானத்தையே முக்கியமாகக் கொண்டுள்ளன. பக்தியோகத்திலோ, ஆராதனை ஸஹாய ஆசார கர்மங்கள், பக்தி வழிபாடு, உறுதி, ஈசவிஷய சிறப்பின் உணர்ச்சி ஆகிய இவைகள் இருப்பினும் எல்லாம் ஆராதனையையே நோக்கமாக உடையன. ராஜயோகத்திலும், ஸன்மார்க்க அப்பியாஸம், ஈசனிடம் ஈடுபடுவது, மனஉறுதியுடன் எண்ணங்களை நீக்கி யேகவஸ்துவாக மாத்திரம் நிற்பது, விவேகவிசாரம் ஆகிய இவைகள் எல்லாம் த்யானத்தையே நோக்கி நிற்பன. இம்மாதிரியே சிரவணத்தையே செய்வது, மனன விஷயத்தில் ஈடுபடுவது, நிதித்யாஸனத்தில் மனதை நிறுத்தல், சிரவணப் பொருளாகி நிராதாரமாக நிற்பது ஆகிய ஞானயோகபாகமான இவைகள் எல்லாம் பரம்பொருளாகி விடுதலையே முடிவாக உடையன. இப்படி நான்கின் கலப்பும் ஒவ்வொன்றிலும் இருப்பதால்தான் ஒன்று மற்றொன்றாக முதிர இடம் ஏற்படுகிறது. மேலும் இந்த ஸோபானக்கிரமத்தில் மேற்படியிலிருப்பவனுக்கு கீழ்ப்படிலக்ஷணம் திடப்பட்டுக் கொண்டே வரும். ஒருபடியின் முடிவும் பூர்ண ப்ரயோஜனமும் மேல்படி போனால்தான் வரும்: அதிலேயே நின்று விடவும்முடியாது: அப்படி அஜாக்ரதையாக நின்றுவிட்டால் கீழ்படிகளில் நழுவி விடவேண்டியதுதான். இதனால் பக்தன் கர்மயோகத்தையும், யோகி பக்தி கர்மங்களையும், ஞானி கர்ம, பக்தியோகங்களை அந்தந்த நிலையிலுள்ளோர் செய்வதை விட ஒழுங்காகவும் அதிகப்ரயத்ன மன்றியில் இயற்கையாகவும் செய்து நிறைவேற்றுவன், என்பது வெளிவரும். ஞானி ஒருவனுக்கே கிருதகிருத்யன் என்றும், பகவத்பக்தன் என்றும், யோகி என்றும் ஸ்திதப்ரஞ்ஞன் என்றும் பெயரிட்டு சற்றேறக்குறைய ஒரே மாதிரியாகவே ஸ்ரீமத்பகவத்கீதை III, XIII, VI,II என்ற அத்யாயங்களில் கிருஷ்ணபரமாத்மாவால் வர்ணிக்கப் பட்டிருப்பதே இதற்குப் போதுமான ஆதாரம். ஆதலால் மேல் போகப்போக கீழ்நிலை திடப்பட்டுக் கொண்டு வருவதால் ஞானி கண்டதை எல்லாம் செய்து விடுவன் என்று ஆபாஸ வேதாந்தம் ஸாதிக்க இடமே இல்லை. இது பற்றியே சங்கராசாரியரும் தமது விவேகசூடாமணியில்:—

பிரிந்திலாப் பிரமரூபம் பிரிவறத்தெரிந்தோனுக்குத்,
திரும்பவும் முன் போலிந்த திருசியப்பாவமே இல்லை,



இருந்த தேல் பிரமம் தன்னையிவனறிந்தவனே யன்று, விரிந்துள பாகியத்தை வேண்டிய பகிர் முகன்றான்

ஆதலால் அமலபோதானந்தமா முன்னை நீயே, ஸாதுவே பற்றி இந்த ஜடமல உபாதிகன்னைத், தீதறத்தூரத்தள்ளித் திரும்பவும் நினைத்திடாதே, கோததாம் வாந்தியன்னம் குறிப்பது மலமுமையன்றே.

இக்காரணம் பற்றியே ஒரு பெரியவர் 'தேறித்தெளிந்த ஞானிக்கும், கண்ட படி நடத்தல் விஷய உழற்சி இரண்டும் இருக்குமாயின் ஞானியும் நாயும் ஸரிதான்' என்று வற்புறுத்திக் கூறியிருக்கிறார்.

ஆகவே ஞானிக்கு ஸத்கர்மானுஷ்டானம் அனுவசியம், விதிநிஷேதமில்லாததால்; ஈச்வர பக்திவேண்டாம், அது அவிவேகிக்கு ஆதலால், த்யானம் வேண்டாம் அப்யாஸிக்காதலால்: என்று ஆபாஸ வேதாந்தம் கூறிக் குடியைக் கெடுக்க, நமது ரிஷிகள் இடமே கொடுக்கவில்லை. ஞானி எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவனாயினும், பூர்வாப்யாஸபலத்தால் ஒரு முயற்சியுமின்றி இயற்கையாக கீழ்படியார்கள் முயலும் விஷயங்களில் ஈடுபட்டு நிற்பன் கூர்மவிருத்தியை அனுஸரித்து: அமார்க்கத் தொழிலே இவனிடமிராது என்பதே இந்த நான்கு யோக அமைப்பிலிருந்தும் நாம் கண்டு தேறித் தெளியவேண்டிய விஷயம்.

இந்தயோகங்களுக்கு எல்லாம் முக்கிய ஆதாரம் அந்தர்முக நாட்டமே. இந்த யோகங்களை அனுஷ்டித்து நமக்கு விளக்கிய பீஷ்ம, ஹநுமத், பகீரத, விதுராதி மஹான்களிடம், இந்த ஸ்வயநயமும் த்வேஷமும் நிறைந்துள்ள உலகிற்குஅப்பாற்பட்ட நிலையில் திடநம்பிக்கையும், இஹ லோகாதி ஸுகங்களில் ஒருவித துச்சபுத்தியும், இழிவானவைகளைச் சென்றணுகா மனக்கூச்சமுமே குடிகொண்டிருந்தன. இவை மூன்றும் தான் ஸாதாரணவழிபாடு, வாழ்க்கை, அனுஷ்டானம் இவைகளால் ஏற்படவேண்டிய உள்நாட்டத்தின் ஸ்வரூபம். இந்த நம்பிக்கையும், துச்சபுத்தியும், மனக்கிளர்ச்சியும் ஏற்பட்டு திடப்பட்டு விட்டால்தான் நாம் செய்யும் கர்மங்கள் எல்லாம் கர்ம யோகங்களாகும், ஆராதனைகள் எல்லாம் பக்தியோகமாகும், ஜபங்கள் எல்லாம் ராஜயோகமாகும், விசாரணைகள் எல்லாம் ஞானயோகமாகும். இந்த நல்ல வாஸனையாகிய உள்நாட்டம் திடப்படும் வரையில் நாம் என்ன செய்தும் மோக்ஷ ஸோபானத்தில் அடி எடுத்து வைக்க முடியாது, அப்படிச் செய்ய முயன்றுகொண்டு தான் இருக்கலாம். இந்த முயற்சியில் நம்மை ஸரிவரத் தூண்டுவது பாப புண்ய விவேகமும், ஸ்வர்க்கநரக விவேகமும், நமது மரண லோகாந்தரகதி நிச்சயமும் இவைகளை முன்னிட்டுமுயலப்படும் ஸத்கர்மங்களுமே. இவைகளைவிடாது முற்கூறிய யோகலக்ஷணங்களை உணர்ந்து நிலைத்து வந்தால் ஈசன் கருணையால் மோக்ஷ ஸோபானத்தில் அடி எடுத்து வைத்து ஏற முயலலாம். இவைகளைக் கவனியாது மோக்ஷஸோபான விஷயத்தில் பழக முயன்றால் வாசாஞானம், ஆபாஸ வேதாந்தம், அசாஸ்திரீய ப்ரவிருத்தி, உலகைக் கெடுத்தல் முதலிய கொடிய நிலைகள்தான் உண்டாகிவிடும். இக்காலத்தில் இந்த எச்சரிக்கைவிஷய திருஷ்டாந்தத்திற்குக் கணக்கேயில்லை: எல்லோரும் அவரவர்கள் அனுபவத்திலேயே அநேகங்களைக் கண்டுகொள்ளலாம்.

---

**மாதை வேங்கடேசுரன்.**—இந்தப் பிரபு தமிழ்ப் புலவர்களுக்குப் பரமோபகாரியாயிருந்து தமிழை வளர்த்த அவதார புருஷன். ஒரு கவிக்கு ஆயிரம் பொன்னாகத் தொன்னூற்றென்பது கவிக்குக் கொடுத்து நூறாவது கவிக்கு நூறாயிரம் பொன் கொடுத்து ஒரு பிரபந்தங் கொண்ட பிரபு சிகாமணியிவனே. இது நோக்கியே படிக்காசுப்புலவர், தமது தொண்டைமண்டல சதகத்தில், "எல்லப்பன் என்னும் செய்யுளிலே," மாதை வேங்கடேசுரன்போல வரிசை செய்தான் என்று புகழ்ந்திருக்கின்றனர்.—தமிழ்ப் பெயரகராதி.

விவேகவிளக்க

# வியாசத்திரட்டு

## ESSAYS FROM THE SPECTATOR

### இருதுக்கள்

### The Seasons

மக்களுக்கு, வெப்பமும் புழுக்கமும் மிகுந்து தோன்றும் பகற்காலத்தில், ஏற்படுகின்ற அயர்வையும் ஆயாசத்தையும் அறவே அகற்றி அவர்கட்கு உவப்பையும் உள்ளக் கிளர்ச்சியையும் அளிக்க வல்லது, அமைதியும் குளிர்ச்சியும் ஒருங்கமைந்த மாலைக் காலமாம் என்க. இயற்கைப் பெருந்தோட்டத்திற்குச் செல்லும் பன்னிரண்டு படிக்கட்டுகளின் வழியாய்க் கீழ் இறங்கி, நான்கு பிரிவாகப் பகுக்கப்பட்டிருக்கும் அத்தோட்டத்தின் வனப்பைக் கூர்ந்து நோக்கி வியப்பதைவிடக் கழிபேரின்பம் பயக்கக்கூடியது, மக்கட்குப் பிறிதொன்று மின்றாம். மாலைப் பொழுதினால் பெறப்படும் இன்பத்தினை, அழகிய தோட்டங்களில் பன்முறை சென்று, அனுபவிக்கும் இயல்பு என்னிடம் இயல்பாகவே அமைந்திருந்தது. ஒருநாள் மாலையில், நான் சரேலென்று என் இருக்கையிலிருந்து எழுந்து, வழக்கமாகச் செல்லும் ஒரு தோட்டத்திற்குச் சென்றேன். சந்திரன் மிகுந்த ஒளியுடன் பிரகாசித்துக்கொண்டிருந்தது. "ஞாயிறு சென்ற பின்னர் திங்கள் வர வேண்டுவது பொருத்தமேயாம்" என்று பலரும் கூறி வியக்கும்படி, அவ்வமயம் விண்மீதூர்ந்த தண்மதி தோன்றிற்று. கண்கவர் வனப்பினையுடைய எண்ணிறந்த பொருட்களைக் கண்டு மகிழ்தற்கு எவ்வளவு வெளிச்சம் வேண்டுமோ, அவ்வளவு வெளிச்சத்தை அது, ஆதித்தனைப் போலவே, அளித்தது,—ஆனால் சூரியனைப்போல், வெப்பத்தை வீசாமல் தட்பமே தந்தது. தண்ணீரிற் றோன்றிய வெண்மதியின் பிரதிபலனமும், மென்காற்றின் அசைவினால் அசையும் இலைகளும் தளிர்களும் தம்முள் உராய்வதாலுண்டான மெல்லோசையும், வானம்பாடியின் தீங்குரலொலியும், பைம்புற்றரையின் குளிர்ச்சியும் ஒருங்குசேர்ந்து என்னை ஆநந்த ஆழியில் அமிழ்த்தவே, நான் என்னையும் மறந்து, பட்டினும் மேன்மையான பசிய புற்றரையில் படுத்துக் கண்ணயர்ந்தேன். சிறிது நேரத்திற்குள் என் ஆத்மா சொப்பனப் பிரபஞ்சத்திற்குச் சென்றது. அச்சமயம் நான் கண்ட கனவு மிக விசித்திர முடையதாதலின், அதனை இங்கு வரைகின்றேன்.

என்னை நோக்கி வருவதாக முதன்முதல் எனக்குத் தோன்றிய மனிதன், மிக அழகிய தோற்றமும் உருவமும் வாய்ந்த ஒரு வாலிபனைப்போல் காணப்பட்டான். ஆனால், இன்னும் சிறிதுகாலம் சென்றால் அவனுடைய அவயவங்கள் எவ்வளவு முதிர்ச்சியும் காத்திரமும் அடைதல்கூடுமோ அவ்வளவுமுதிர்ச்சியையும் காத்திரத்தையும் இப்போது அடைந்தில. இருந்தபோதிலும், அவனுடைய தோற்றத்தில் காணப்பட்ட ஒருவகையான வசீகரத்தன்மையும், அவனுடைய முகத்தில் காணப்பட்ட திருப்தியோடு கூடிய சந்தோஷக் குறிப்பும், "இதுவரையில் கண்ட மனிதர்களுள் அவனே அழகிற் சிறந்தவன்" என்று என்னை நினைக்கும்படி செய்தன. கீழேவிழுந்து புரளும்படி ஒரு மேற்போர்வையை அவன் அணிந்திருந்தான். அது பசுமை நிறமுடையதாயும், இடையிடையே பூத்தொழில் செய்யப் பெற்றதாயுமிருந்தது. ரோஜா மலரினால் தொடுக்கப்பட்ட தலைமாலையை அவன் தன்னுடைய சிரசிலும், இளந்தளிரும் நறுமலரும் ஒருங்கமைந்த ஒரு புஷ்பக் கொத்தினைத் தன்னுடைய கரத்திலும் முறையே அணிந்தும் வைத்தும் இருந்தான். தாதவிழ் கொன்றைகளும் கண்கவர் நீலோற்பலங்களும் அவனுடைய கால்களின் கீழ்ப் பரவிக் கிடந்தன. அவனது வரவினால் இயற்கை முழுதுமே மிக உற்சாக மடைந்ததுபோல், தோன்றியது. சிறிது நேரங் கழிந்ததும், கையில் உருவிய கத்தியுடன் போர்க்கவசம் பூண்டு ஒரு மனிதன் நெருங்கி வருவதைக் கண்டேன். அவன் யுத்ததேவதை என்றும், வசந்தனின் மெய்காப்பாளருள் அவன் முதன்மை ஸ்தானத்தை நீடித்த காலமாய் வகித்து வருபவன் என்றும் நான் அறிந்தேன். அவன் சிறிது நேரத்திற்குள் மறைந்துபோனான். பின்னர், அழகிற்கும் அன்பிற்கும் அதிதேவதையான இரதிதேவி தோன்றினாள். அவள் தன் இயற்கை அழகைத் தவிர வேறு ஆபரணம் ஏதும் அணிந்திலள். ஆனால், மையலூட்டும் இயல்



பினதாகிய பாசக் கயிற்றினைத் தன்னுடைய வலக் கரத்திலும், "காதற் பிரபஞ்ச"த்திற்குத் தானே அரசி என்பதைப் புலப்படுத்துவதற்கு அறிகுறியாக, ஒரு பொற்றண்டத்தைத் தன்னுடைய இடக்கையிலும் அவள் பிடித்திருந்தாள். அவள் சென்றபின்னர், கீதகன்னிகைகள் பலர் ஒருவர் பின்னொருவராய் வந்து கைகோத்துக்கொண்டு வாயாற் பாடியும் காலால் மாறிமாறித் தரையிற் றாளம்போட்டும் நடித்தார்கள். அதன் பிறகு இப்பருவத்திற்குரிய மூன்று மாதங்களும் ஒன்றன்பின் ஒன்றாய் வந்தன.

மார்ச் என்பவன் வேகமாக என்னை நோக்கி வந்தபோது, அவனுடைய பார்வையில் ஒருவகையான வெறுப்பு, எக்காரணம் பற்றியோ, தோன்றுவதுபோல் எனக்குப் புலப்பட்டது. ஆனால், என்னை நெருங்கிவந்தவுடன் அவனுடைய தோற்றமும் உருவமும் சாந்தமாயும் அமைதியாயும் தோன்றின. அவன் தன்னுடைய முகத்தைத் துடைத்துக்கொண்டு இனிமையோடு நோக்கினான். அவனைவிட்டுப்பிரிவதற்கு எனக்கு மனமில்லை யாயினும், ஏப்ரலுக்கு இடங்கொடுத்து அவன் விடை பெற்றுச் சென்றான்.

ஏப்ரல் மிகுந்த சல்லாபத்தோடும், இன்பத்தோடும் மெல்ல நுழைந்தான். அவனுடைய பார்வை இடையிடையே சிறிது மழுங்கிற்றாயினும் மீண்டும் முன்னிருந்த பிரகாசத்தை அடைந்தது. கருப்பு வில்லை வளைத்து மலர்க்கணையைத் தொடுத்தபடியே காமன் தன் பின்னால் வர, மே என்னும் மன்னன் முன்னால் வந்தான். இன்பகரமான ஊடலினாலும், மென்மையான துறைமொழிகளாலும், அன்பின் பெருக்கினாலும் காதலர்கள் பெருமூச்செறியும் ஓசையும், முணுமுணுக்கும் சத்தமும் இச்சமயம் என் காதில் இலேசாயும் அரைகுறையாயும் விழுந்தன. அதன் பிறகு தகுந்த வயதும் வன்மையும் ஒருங்கமைந்த ஒரு மனிதனுடைய உருவம் தோன்றிற்று. அவனுடைய நிறம் சிவப்பாயும் தோற்றம் கம்பீரமாயும் இருந்தன. அவனுடைய தலைமயிர் மிகக் குறுகலாயும் கருமையாயு மிருந்தது. கருமையான பட்டு அங்கி அணிந்து, வசந்தனுக்குப் பிறகு வந்த இவன், மரநிழலையும் குளிர்ந்த ஊற்றையும் நாடிச் சென்றான். மேலைக்காற்று என்னும் தோழன் இவனுக்கு விசிறி வீசினான். ரோஜாவிரல்களும் பனிக்கால்களுமுடைய காலைவெள்ளி வெண்பட்டணிந்து இவனுடைய ஒருகையைப் பிடித்திருந்தான். இவனுடைய மற்றொரு தோழனாகிய மாலைவெள்ளி நீலநிறப்பட்டாடை தரித்தபடியே இவனது மற்றொரு கரத்தைப் பற்றி யிருந்தான். ஆநிரைக்கடவுளும் தானியலட்சுமியும் கதிரறுக்கும் நான்கு அரிவாளைக் கையிற் பிடித்தபடியே இவனைப் பின்தொடர்ந்தார்கள். இவனுக்குரிய மாதங்களும் இவனைத் தொடர்ந்து வந்தன.

ஜூன் என்பவன் வசந்தனின்தோற்றத்தை முற்றும் இழந்துவிடாமல், சிறிது வகித்திருந்தான். ஆனால், ஜூலை என்பவன் அவ்விதமின்றி வாடியமுகத்துடன் மெதுவாக நடந்து வந்தான். ஆகஸ்டும் இவனைப்போலவே வந்து சென்றான். இவர்கட்குப்பின், வயது முதிர்ச்சியால் கூன் விழுந்தவனைப்போல் காணப்பட்ட ஒரு மனிதன் தோன்றினான். நன்றாய் வளர்ந்திருந்த அவனுடைய தலை மயிரும், தாடி மயிரும் அழகுடையனவாய்க் காணப்பட்டபோதிலும், ஒரு பகுதி கருத்தும் மற்றொரு பகுதி நரைத்தும் கலந்து கலந்து தோன்றின. பழுப்பு நிறமான கச்சு ஒன்று அவன் தரித்திருந்தான். அவன் தன் கைகளில் பழங்களை நிறைய வைத்திருந்தான். மாசூல் மங்கை தன் மடி நிரம்ப வெவ்வேறு வகையான தானியங்களை வைத்துக்கொண்டு இரண்டு கைகளினாலும் எல்லோருக்கும் அள்ளிக்கொடுத்தபடியே அவனைப் பின்தொடர்ந்தாள். கனி என்னும் கன்னி, தன் கையில் பழங்கள் நிறைந்த தங்கத் தாம்பாளத்தை ஏந்தியபடியே அவளைப் பின்பற்றினாள். செப்டம்பர் வந்தபோது அவனுடைய பார்வையில் தோன்றிய வசீகரத்தன்மையானது, சென்ற வசந்தனை மீண்டும் அழைப்பதுபோ லிருந்தது. அவனுடைய அடுத்த சகோதரனான அக்டோபர் திராட்சைரசக் கடலில் மூழ்கி வெளிவந்தவனைப்போல், சரீரம் முழுதும் நனைந்தபடியே நடந்துவந்தான். நவம்பர் என்பவன் இவர்கள் வகுப்பைச் சேர்ந்தவனாயினும், மன்னன் மாரியோடு சேரவிரும்பினவனைப்போல், தன்னைப் பின் தொடர்ந்து வரும் மாரியைத் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டே வந்தான். அவன் முதிர்ச்சியும்

தளர்ச்சியும் ஒருங்குவாய்ந்த வயோதிகனைப் போற்காணப்பட்டான். உறைபனியோ என்று உரைக்கும்படி அவனுடைய தலைமயிர் அவ்வளவு வெண்மையாயிருந்தது. அவனுடைய கண்கள் கோபமெனச் சிவந்து கோபக்குறி காட்டின; பார்வை அழகாயும் கூர்மையாயுமிருந்தது. அவனுடைய சரீரம் முழுமையும் (காடியைப்போல்) மயிரடர்ந்திருந்ததாயினும், குளிரின் மிகுதியால் அவனுடைய அவயவங்கள் சுருங்கியிருந்தன; தலை, நிலத்தினைத் தொடும்படி அவனது முதுகு அவ்வளவு வளைந்திருந்தது. களியாட்டயரும் குடிகாரர்களுக்கு அதிதேவதை போன்ற ஒருவன், நவம்பரின் ஒரு கரத்தைக் கெட்டியாய்ப் பிடித்திருந்தான். இவனணிந்திருந்த உடையும் இவனுடைய உருவமும் எனக்கு ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் விளைவித்தன. இவனைத் தூரத்தில் பார்த்தபோது, இவனுடைய தோற்றம் மிக அழகாயும், சிறந்த தாயும் காணப்பட்டது. இவனணிந்திருந்த உடையின் முன் புறத்தில் "சந்தோஷம்," "உற்சாகம்" "திருப்தி" இவைகள் பொன்னெழுத்தில் எழுதப்பட்டிருந்தன. ஆனால், இவன் என்னை நெருங்கி வரவே, இவனிடம் காணப்பட்டமாறுதல், எனக்கு மிகுந்த அச்சத்தை விளைவித்தது. இவனுடைய தலை மொட்டையாயும் வழுக்கை விழுந்துமிருந்தது. இவனுடைய அவயவங்கள் உருவழிந்தும், வயோதிகத்தால் சுருங்கியும் இருந்தன. பார்ப்பதற்கு இவன் பயங்கர முடையவனாகவே காணப்பட்டான்.

அவிழ்ந்து தொங்கும் தலைமயிரோடும், இரத்தம் தோய்ந்த கட்டாரியோடும், கோலை என்னும் இராக்கதன் உருவம், அவனணிந்திருந்த உடையின் பின்புறத்தில் எழுதப்பட்டிருந்தது. அவ்வுருவத்திற்குப் பக்கத்தில், சிவப்புடை அணிந்தவனும், இரண்டு கண்களிலும் சந்தேகம் பிரதிபலிக்கும் பார்வையுடையவனுமான கோபம் என்பவனின் உருவம் வரையப்பட்டிருந்தது. இவனுடைய உருவத்தைப் பார்ப்பதற்கு அச்சமும் அருவருப்பும் நான் கொண்டேன். இவன் மறைந்தபின் ஒரு கையில் அரிவாளுடனும் மற்றொரு காத்தில் பொழுதளக்கும் கருவியுடனும் சனி என்பான் வந்தான். இவர்கள் சென்ற பின்னர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி என்னும் மூவரும் ஒருவர்பின் ஒருவராய் முறையே வந்தார்கள். இவர்களுடைய உருவமும் தோற்றமும் பெரும்பாலும் ஒரே தன்மையாயும், காண்போர்க்கு வெறுப்பைத் தரக்கூடியனவாயுமே இருந்தன. ஆனால், ஆதியிலே வந்துசென்ற வசந்தனுக்கு மறுபடியும் இடந்தரவேண்டி, இவர்கள் மிக விரைந்து சென்றுகொண்டிருந்தார்கள்.

இச்சமயத்தில், என்னுடைய சொப்பனங் கலைந்தது,—நான் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்தேன்.

நாகை—ஸி. கோபாலகிருஷ்ணன்.

[குறிப்பு:—இப் பருவகாலங்கள் இங்கிலாந்தின் பருவகாலங்கள் என்பதையும், ஆதலால் இந்திய இருதுக்களோடு இவை இணங்கா என்பதையும் வாசகர்கள் ஞாபகத்திற்கு கொண்டு இதனைப் படித்தல் வேண்டும். ப-ர்]

வேதவதி:—ஓர் நதி, குசவத்ஜராஜ புத்திரி. சீதையின் பூர்வநாமம், இவள் குசத்வஜன் என்னு முனிக்கு மானஸ புத்திரியாகப் பிறந்து விஷ்ணுவுக்குத் தேவியாக வேண்டுமென்னும் விருப்பத்தோடிருக்குங் காலத்திலே, தம்பன் என்னும் ராக்ஷசன், இவளைத் தனக்கு மனைவியாகத் தருமாறு குசத்வஜனை வேண்ட, அவன் அதற்கு உடன்படாது மறுத்தான். அதற்குத் தம்பன் கோபங்கொண்டு குசத்வஜனைக் கொன்று அந்தக் கொலைகாரணமாக நேர்ந்த பிரமஹத்தியால் தானும் இறந்தான். அப்பால் இவளை ராவணன் கண்டு மோகித்து பலாத்காரம் பண்ண, அவள் கோபித்து, அடா-பாவி, நீ என்னை அவமானஞ்செய்ய எத்தனித்தமையால் நான் உன் வமிசத்துக்கு நாசகாரணமாக, உலகத்திலே யோனிவாய்ப்படாது பிறந்து இப்பழி தீர்ப்பேனெனக் கூறித் தீப்பாய்ந்து அந்தச் சரீரத்தை யொழித்தாள். அதன்பிறகு அவள் இலங்கையில் ஒரு தடாகத்தில் தாமரைப்பூவிற் பிறந்து அழகாகிய சிசுவாய் விளங்க, அச்சிசுவை ஏவலாளர் கண்டு எடுத்துப்போய் ராவணன் கையிற் கொடுத்தார்கள். அவன் இந்தச் சிசுவினால் இலங்கை யழியுமென்று சோதிடர் கூறக்கேட்டு, சிசுவை ஒரு பொற்பேழையில் அடக்கஞ்செய்து கடலிலிட்டான். அந்தப் பேழை மிதந்துபோய் மிதிலை நாட்டுத் துறையிற் சேர்ந்து மண்ணிற் புதைந்து கிடந்து ஜனகமஹாராஜன் புத்ரகாமேஷ்டி யாகஞ் செய்ய வுழுதபோது அவன் கையிலகப்பட்டது. அந்தச் சிசுவே சீதை.

தமிழ்ப்பெயரகராதி.



# திராவிடக் கதைகள்

## SOUTH INDIAN FOLKLORE

### 8. ஓரகப்பைச்சாறு ஓர் உண்டைக்களி

மகத தேசத்தில் மானவபுரம் என்பது ஒரு பட்டணம். அதற்கு அருகாமையில் ஆகத கிருகம் என்று ஒருசிறுபாக்கம் உண்டு. அங்கு குடியானவர் வீடுகள் அதிகம். அவ்வீடுகளுக்கு எஜமானன் நாராயணஜீ கோஸாயி. அவன்மனைவி க்ஷாத்ரமதி. அவளுக்குச் சமையல் என்றால் இன்னது என்று தெரியாது. அடுப்பைப் பார்த்தால் இது என்ன முக்குடிமிச் சாமியாரா என்று கேட்பது வழக்கம். வெட்டிய விறகைப் பார்த்தால் வீடு கட்டுஞ் சட்டங்களா என்று கேட்பாள். நெருப்பைக் கண்டால் அவள் நடுங்குவாள்; அதை அவள் எரியுஞ் சாலக்ராமம் என்றும், தீர்த்தம் விரும்பும் தாபஸ மூர்த்தி என்றும், அழைப்பாள். அவளுக்குப் பக்தி அதிகம். எங்கவள் கண்டாலும் எரியுஞ் சாலக்ராமத்திற் கபிஷேகஞ் செய்யாமல் போகாள். அவளுடைய அன்பைக்கண்டதன் அதிஷ்டான தேவதையும் சிறு சிறுத்து வாய்திறந்து சொர சொரவெனப் பாடும்.

நிற்க, ஆகத கிருஹமே ஓர் அதிசயமான இடம். அங்கு சாப்பாட்டிற்காக அலைந்தவர் கிடையாது; அலைந்தாலுங்கிடைக்காது. காலை எழுந்ததும் ஆள்களுக்குத் தருந்தவாறு சாப்பிடுமிடத்தில் கணக்காக அத்தனை உண்டைக் களியும் அதற்கிசைய அத்தனை அகப்பைச் சாறும் இருக்கும். அதை, ஒவ்வொருவரும் ஓர் அகப்பைச் சாறும் ஒருண்டைக் களியுஞ் சாப்பிட்டுத் தேக்கிக்கிடப்பார். அவ்வாறே நாராயணஜீ கோஸாயி வீட்டிலுஞ் சாப்பாடு நடந்துவந்தது. கடவுள் தயவால் அவர்க்கு வீடு நிறைய ஆனந்த மிக ஏழு பெண்களிருந்தார்கள். அவர்களைச் சப்த கன்னிகள் என்றே சொல்லலாம். வெகு அழகிகள். இவ்வேழுபேரும் தாயும் தந்தையுமாகிய இவர் ஒன்பது பேர்களுக்கும் வழக்கமாக ஒன்பது அகப்பைச் சாறும் ஒன்பதுண்டைக்களியுமிருப்பது வழக்கம். அதில் ஒவ்வொருவரும் ஓர் அகப்பைச் சாற்றையும் ஒருண்டைக் களியுஞ் சாப்பிட்டு காலந்தள்ளி வந்தார்கள்.

க்ஷாத்ரமதியின் கடைசி மகள் வெகு அழகு; அழகிற்கிசைந்தவணக்கமும் குணமும்பொருந்தியவள். ஸுகுணாங்கி என்றவளை யாருங்களி கொண்டழைப்பார்கள். அவள் பேசுவது கூட பிறர் காதில் விழாது. பெண் குணமென்னும் வேர் விட்ட மரத்தில் பூத்து அதில் தோன்றிய இனிய பெண்கனி யென்றே அவளைச் சொல்லலாம். ஆயினும் சிறுகுழந்தை; எட்டல்லது ஒன்பது வயதிருக்கும். இளங்குழந்தைத் தன்மையாய் சில காரியங்கள் செய்து விடுவாள். அதுதானே மனித ஜன்மத்தைக்காட்டுமோதது! அது வில்லாவிடில் உயிர்க்குச் சுவையேது?

ஒருநாள் விளையாடிக் கொண்டிருக்கும் போதவளுக்கு பசி மிக எடுத்தது. பிள்ளை நோய் கள்ளனறியா தென்றபடி யவள் உடனே தாயிடம் வந்து "பசிக்கிறது! பசிக்கிறது!" என்று அழுதாள். "பசித்தால் உன் பங்கைச் சாப்பிடு" என்று தாயார் உத்தரவளித்தாள். ஆனால் ஸுகுணாங்கி பசிப்பெருக்கால் இரண்டு பேர் பங்கை யுண்டுவிட்டாள். ஆனால் சொல்லவில்லை.

பின் எல்லாரும் சாப்பிடப் போனபோது ஒருவர்க்கு வேண்டிய பங்கு குறைந்திருந்தது. க்ஷாத்ரமதி அதற்குக் காரணம் ஸுகுணாங்கி தான் என்றறிந்து அவளைப் புடைத்து "அடி பாவி! உனக்கென்ன அவ்வளவு வயிறுபெரிதா? பாழு முண்டை! உனக்கவ்வளவு பசியா! பட்டி முண்டை! போவீட்டைவிட்டு! சீ! ஓடு" என்று ஸுகுணாங்கியை வைது புடைத்து வீட்டைவிட்டு துரத்திக் காட்டிற் கோட்டி விட்டாள்.

ஸுகுணாங்கியும் வீட்டை விட்டு வந்தது முதல் அக்காட்டில் விளங்கிய ஒரு சண்பக மரத்தின் கீழிருந்து விளையாடிக்கொண்டிருந்தாள். அவளுக்கென்ன அது காடாயிற்றே என்றபயமிருந்ததா? சிறு பிள்ளைத்தனம்; அவளுக்கெப்படியது தோன்றும்? ஆனால் ஸூரியன் வரவர மேற்கு சாயச்சாய வானஞ் சிவந்து கொண்டே வந்தது. காடெங்கும் செகப்பு வர்ணம் வீச ஆரம்பித்தது. இதற்குள் ஸூரியன் அஸ்தமித்தான். செவ்வானமும் ஒழிந்தது. காடாந்தகாரம் காட்டைக் கவிந்துகொண்டது. ஸுகுணாங்கியும் தான் வந்த சிரமத்தால் அப்பொழுதயர்ந்து தூங்கி விட்டாள். ஆனால் இடையே நடு இரவில் கண்விழித்துக் கொண்

டாள்; காடாந்தகாரம் அவள்கண்களைவெருட்டியது. மிருகங்களிடம்ஒலம் அவள் காதை அடைத்தது. அவள் மனம் பயத்தை அறிய ஆரம்பித்து விட்டது. எங்கு திரும்பிப் பார்த்தாலும் அவளுக்கு மனித வுருவம் மருந்திற்கு மில்லை. என்ன செய்வாள்? திகிலடைந்தாள். அவள் சிறிய உடல் முழுதும் வெயர்த்துத் துடித்தது; மறுபடியுஞ் சோர்ந்து புத்தி மயங்கிக் கீழே விழுந்தாள்.

கண்ணைத் திறந்தால் எங்கு எதைப்பார்த்தால் பயமுண்டாகுமோ என்று தனது இரண்டு கைகளாலும் கண்களைக் கெட்டியாக மூடிக்கொண்டாள். இதற்குள் பொழுது புலருஞ் சமயம். அப்பொழுதவ் வனத்தைக் காக்கும் வனதேவதை அங்கு வந்து கொண்டிருந்தாள். அவள் ஸுகுணாங்கியைக் கண்டதும் "இக்கோடி ஸூர்யனுதயமானாற் போல இருக்கும் இப்பெண் இங்கெப்படி வந்தது?" என்று யோசித்துத் தன் மனத்தின் பரப்பால் நடந்ததை உணர்ந்தாள். பின்பு கண் மூடிக்கிடந்த பெண்ணைத் தட்டி எழுப்பி "ஏன் அம்மா! இங்கு இருக்கிறாய்? எழுந்திரு; என்னுடன் வா" என்றழைத்தாள்.

அப்பெண்ணும் வாய் பேசாது அவளைப் பின்பற்றலானாள். இதற்குள் அத்தேவதை தனதிடத்தை அடைந்து ஸுகுணாங்கியைக் கீழ் வருமாறு கேட்டாள்.

"ஏண்டியம்மா! உனக்குச் சாணத்துணியுடுத்தி, சாணம்பூசிக் குளிப்பாட்டிக் கந்தைத் துணிகொடுக்கட்டுமா? இல்லாவிட்டால் உனக்கு புனுகுத் துணியுடுத்தி பன்னீரில் குளிப்பாட்டிப் பட்டுப் புடவைத் தரட்டுமா?"

"எனக்குப் பட்டும் வேண்டாம் பீதாம்பரமும் வேண்டாம்;
புனுகும் வேண்டாம் பூச்சும் வேண்டாம்
சாணத் துணிக்கட்டித் தானே குளிப்பாட்டி
கந்தைத் துணிக்கொடுத்தாக் கட்டிக்கப் போறாதா?
இந்த இரக்குமுண்டைக் கதுவுமொரு கேடா?"

என்று பதில் ஸுகுணாங்கி சொல்லக் கேட்ட வனதேவதை ஆச்சரியமடைந்து "இப்பெண் நல்ல பெண்" என்றெண்ணிக்கொண்டு அவளை நல்ல வாசனை நீரில் குளிப்பாட்டி, கஸ்தூரிப் பொட்டிட்டு, ஜவ்வாது மைதீட்டி பீதாம்பர முடித்தினாள். மேலும் அவளிடம் கவலை கொண்டு "ஏனடி குழந்தாய்! உனக்கு

நல்லக்கெம் போலையும் நாகரத்ன ஜிமிக்கையும்
வைரப் பதக்கமும் வைத்துத் தரட்டுமா?—அல்லது
ஒட்டொட்டா புல்லோலையும் களாக்கொத்து ஜிமிக்கையும்
தட்டோட்டில் செதுக்கின பதக்கமுந் தரட்டுமா?"

என்று கேட்டாள். உடனே பெண்ணும்

"நல்லக்கெம்பெனக்கேனோ நாகரத்ன மெனக்கேனோ
கல்லுப் பதக்கமும் கழுத்துக் கேனோ—இந்த
பிச்சைக்காரமுண்டைக்குப் பித்தலாட்டநகையேனோ
ஒட்டொட்டாம்புல்லோலை ஒடிக்குங் களாச்சிமிக்கை
தட்டோட்டுப்பதக்கமும் தானேயேன் போதாதோ?"

என்று சொன்னாள். இதைக் கேட்ட வனதேவதை அவளுக்கு உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை வைரமிழைத்த நகைகளால் அலங்கரித்தாள். மேலும் நாளுக் கொருவிதமாக நகைகள் ஜோடித்துத் தந்தாள். மேலும் "என்னடி பெண்ணே! எனக்கொரு ஸந்தேஹம். உன் தலைக்கு

வாசனை எண்ணெய் பூசட்டுமா?
களிமண் எண்ணெய் காட்டட்டுமா?"

என்று கேட்டாள். ஸுகுணாங்கியும் சிறிதும் தயங்காது, "எனக்கு

"வாசனைப் பூச்செண்ணைப்பரிமளங்களெனக்கேனோ?
பேசுமிந்த வனாதைக்கி தில்லாதொரு கேடாக்கும்!
களிமண் ணறைத்தெனக்குப் பூசினால் ஏறாதோ?"

என்று சொன்னாள். அந்தக் காட்டுத் தெய்வமும் உள்ள மகிழ்ந்தவள் தலைக்கு வாசனை எண்ணெய்த்தடவி நன்றாக வாரிப்பின்னலிட்டு பூவால் அலங்கரித்தாள். பின் மேலும் "அடி! உனக்குப் பசிக்குமே,

கூழு வார்க்கட்டுமா கும்பம் போடட்டுமா?
நாழி யன்னம் நகர்த்திக் கொட்டட்டுமா?"

என்று கேட்டாள். சிறு பெண்ணும்,

"களியுண்ட முண்டைக்குக் கூழுமொரு கேடாக்கும்!
படியன்னம் இல்லாவிட்டால் பாழுமுயிர் பறந்திடுமோ?"

என்று பதில் சொல்லக் கேட்ட அந்தத் தெய்வம் அவளுக்கு அறுசுவை பொருந்திய அன்னமூட்டி,

"என்னோடே இங்கிருக்க இஷ்டமா?
உன்வீடு போகிறதே இஷ்டமா?"

என்று கேட்டாள். அதற்கு ஸுகுணாங்கி "என்பெருமைக்கென்னக் குறைச்சல்! எனக்கு



வீடு மொருகேடா
நாடு மொருகேடா?
கூடு முங்களோடே
வீடு மிந்தகாடே"

என்று பதில் சொன்னாள். அப்பொழுது வனத் தெய்வம் உளமகிழ்ந்து "நான் உன்னை உன் அகத்திற் கனுப்புகிறேன்! உன் மடி நிரப்பி வரிசையுடன் அனுப்பவேண்டும் என்று எனக்காசை; ஆனால் முதலில் நல்லவரத்தைத் தேடிக் கல்யாணஞ் செய்வித்துப் பின்தான் மடிநிறப்ப வேண்டும் ஆகையால் உனக்கு

காட்டை யாளுங் காய்கிழங்கு தின்பவன்வேண்டுமோ?
நாட்டை யாளும் மஹாராஜ ராஜன் வேண்டுமோ?"

என்று கேட்டது. இதைக் கேட்ட பெண் சொல்வ தின்னதென் றறியாமல் சற்றுயோசித்து,

"நாட்டையாளும் பதவி நமக்கேனோ
காட்டையாளும் பதவி போதாதோ?"

என்று சொன்னாள். இதைக்கேட்ட தெய்வம் மேலும் "உனக்கு மடி நிறைய

கல்லும் மணலும் கட்டட்டுமா?
பொன்னும் பொருளும் கொட்டட்டுமா!"

என்று கேட்டது. பெண்ணும்

"காட்டிலிருப்பவளுக்குப் பொன்னேனோ
கல்லு மணலும் பொன்னன்றோ"

என்று பதில்சொல்லக் கேட்ட தெய்வம் வெகு ஸந்தோஷமடைந்து அப்பொழுதே தனது மஹிமையின் பெருக்கால் பாஞ்சால தேசத் தரசனை அங்கு தருவித்து அவனுக்கவளை மணஞ் செய்வித்து "இவளை நீ நான்கு நாள் கடந்தவள் தாய்வீட்டிற்கு வந்து அழைத்து போ" என் றவனுக்குத்தரவிட்டது. இதற்குள் பொழுதுவிடியும் ஸமயம் நெருங்கி விட்டது. ஸுகுணாங்கி அமைதியாகச் சற்றே கண்ணயர்ந்து நித்திரை செய்தாள்.

காலை ஸூர்யன் கிழக்குத் திக்கில் உதித்தான். ஸுகுணாங்கியும் அயர்ந்து கண்விழித்தாள். என்ன ஆச்சரியம்! அவளுக்குக் கனவு கண்டாற்போலத் தோன்றியது. தனக்குக் கல்யாணமானது, தான் காட்டிலிருந்த தெல்லாம் நன்றாக ஞாபக மிருந்தது. ஆனாலும் எப்படி தாயார் வீட்டை யடைந்தாளென்பது தான் அவளுக்குத் தெரியவில்லை. கனவு கண்டாற் போல விருந்தாலும், தன்னுடம்பில் பூசிய வாசனை, கட்டியபட்டு, போட்டநகைகள் எல்லாமிருக்கப் பார்த்தவள் பிரமை அடைந்தாள். இதற்குள் ஸுகுணாங்கியின் ஸகோதரிகளில் பெரியவள் மூக்கின்மேல் கைவைத்துக்கொண்டு தன்னுடன் பிறந்தவர்களையும், தாயையையுந் தந்தையுங் கூவியழைத்து "அடியம்மா! காட்டுக்குப் போனாளே! மொட்டு போல் இங்கே முளைத்திருக்காளே! இவளுக்கென்னவைபோகம்? மொட்டு சொல்லுகிறேன்" என்றவள் தலைமேல் ஓர் குட்டுவைத்தாள். அதுவும் படவேண்டியதுதான் என்றவள் சும்மா இருந்தாள்.

நிற்க. தன்பெண் வெகுகோலாஹலமாக வந்த விதத்தைத் தாய் கேட்டாள். க்ஷுத்ர மதியிடம் அவள் தான் அடைந்த கதையைச் சொல்லிக் கொண்டிருக்கும் போது அவள் பெரியபெண் குரோதகாந்தி வயற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்தது. "பைத்யம்! பேசவாவதுதெரியுமா? அல்லதுஸரியாகவாவது கேட்கத்தெரியுமா?" என்று சொல்லிச்சின்னப் பெண்ணை யேசினாள். இதை எல்லாம் ஸுகுணாங்கி கவனிக்கவேயில்லை. அவளுக்குக் காட்டில் நடந்தவற்றைப் பற்றியே ஞாபகமுண்டு கொண்டிருந்தது.

குரோதகாந்திக்கு அந்தக் காட்டில் நடந்தவற்றைப்பற்றியே ஞாபக மிருந்தது. தானும் காட்டிற்குப் போய் ஸுகுணாங்கி பெற்ற நிலைமைய அடைய வேண்டு மென்றவளுக்காவலுண்டாகியது. பொறாமையே அதற்குக்காரணம். ஆனால் காட்டிற் கெப்படிச் செல்வது; சென்றால் எப்படி அங்கே தனியாக இருப்பது; என்ற பயமவள் மனதை வெருட்டியது. ஆனாலும் நாள் செல்லச் செல்லக் காட்டுக்குப் போவது தான் ஸரி என்றவளுக்குப் பட்டது. அவ்வாறே அவள் எண்ணிக் கொண்டொரு நாள் இரவு தூங்கினாள். மறுநாளுதயம் எழுந்ததும் தான் ஸுகுணாங்கியின்நிலையை அடைந்ததாகக் கனவுகண்டதாக சொல்லிக்கொண்டிருக்கும்போது தெருவில் பெரிய அமளி குமளி நடப்பதாகத் தெரிந்தது.

உடனே தெருவிலோடி ஸங்கதி என்னவென்று பார்க்கப் போனாள். என்ன கண்கொள்ளாக்காட்சியைக் கண்டாள்! பெருங் கூட்ட மத்தியில் ஆனை சேனை பரிவாரஞ்சூழ தேர்

ஒன்று வருவதாகப் பார்த்தாள். மேலும் சேனையெல்லாந் தனது வீட்டைக் கடந்துசெல்லத் தேர் அங்குவந்து நின்றது. அப்பொழுது ஸுகுணாங்கியுந் தனக்குத் தெரியாது குதூஹலத்துடன் உள்ளே உட்கார்ந்திருந்தாள். சில க்ஷணங்களிருக்கும்; அதற்குள் தேரிலிருந்த மஹாராஜன் இறங்கி "ஸுகுணாங்கி இருக்கிறாளா?" என்று கேட்டான். "ஏன் என் பிராணநாதா! நான்தான் ஸுகுணாங்கி உமக்குத் தெரியவில்லையா?" என்று கேட்டாள் குரோதகாந்தி.

இம்மொழிகளைக்கேட்ட பாஞ்சால தேசாதிபதி "சீ! சீ! நீயெங்கே! ஸுகுணாங்கி எங்கே!" என்று சொல்லிக்கொண்டு உள்ளே நுழைந்து போனான். அங்கு ஒரு மூலையில் ஒடுங்கி நின்றுகொண்டிருந்த ஸுகுணாங்கியைக் கண்டான்; அவளுங்கண்டாள். ஆனால் கூச்சத்துடன் பதுங்கிக்கிடந்தாள். அவளை அவன் ஏற எடுத்துப்பார்த்தான்; அவள் நிமிர்ந்த முகத்தைத் தாழ்த்தி கடைக்கண்ணால் அவனைநோக்கிக்கொண்டு நிலத்தை நோக்கினாள். அரசனும் அவளது உள்ளத்தை உணர்ந்து அவளை அழைத்துக் கொண்டு தேர்மேல் ஏறி தனது மாமி மாமன்மாரிடம் செலவுபெற்றுக்கொண்டு போனான். ஒருவராவது ஸுகுணாங்கியை யழைத்துப் போக வேண்டாமென்று தடுக்கவில்லை. எல்லாம் அவ்வளவு சீக்கிரத்தில் நடந்தது.

நிற்க, ஸுகுணாங்கி பாஞ்சாலாதிபதியுடன் போனதைக் கண்ட குரோதகாந்திக்கு வயிற்றில் புளிகரைக்க ஆரம்பித்து விட்டது. அவள் காடு போக நிச்சயித்தாள். தன் தாயுடைய ஆசீர்வாதத்தைப்பெற்று ஸுகுணாங்கி உண்டபடி ஒருருண்டைக்களியும் ஓரகப்பைச் சாற்றையும் அதிகமாக உண்டு விட்டுக்காட்டிற்குப் போய் அந்த சம்பகமரத்தின்கீழ் தூங்க ஆரம்பித்தாள். ஆனால் அவளுக்குத் தூக்கம் வரவில்லை; காட்டிற்கு வந்த பயத்தால்இருட்டில் கண் மூடிக்கொண்டிருந்தாள். கொஞ்சநாழி கழித்து நடுநிசி வேளையில் சற்றே அயர்ந்து நித்திரை செய்தாள். பின் விழித்துத் தன்னெதிரில் வனதேவதை நிற்பதைப் பார்த்து பிரமித்து நின்றாள்.

வனதேவதையுங்கனிந்து "நீயார்? ஏன் இங்கு வந்தாய்?—" என்று கேட்டது. குரோதகாந்தியும் ஸுகுணாங்கி பாடத்தையே படித்தாள். அத்தெய்வமும் குரோதகாந்தியைத் தனதிடத்திற் கழைத்துப்போய் "ஏண்டியம்மா, உனக்கு

சாணத் துணியுடுத்தி சாணத்தில் குளிப்பாட்டி [டில்
கந்தைத் துணிக்கொசுவிக் கட்டட்டுமோ?—இல்லாவி
புனுகுத் துணியுடுத்திப் புதுப்பன்னீர்குளிப்பாட்டி
பீதாம் பரங்கொசுவிப் பூட்டட்டுமோ?"

என்று கேட்டது. அதற்குக் குரோதகாந்தி

சாணத்துணியெனக்கேனோசட்டிஜலம்எனக்கேனோ?
பூணுப்பீதாம்பரந்தான்பூட்டிக்கொண்டால்போதாதா?

என்று சொன்னாள். இதைக்கேட்டக் காட்டுத் தெய்வம் அவளை நையப்புடைத்து "இவ்வளவு கர்வமா!" என்றுசொல்லிச் சாண நீரில் குளிப்பாட்டி கந்தைத் துணியுடுத்தினாள். இதனாலாவது அப்பெண்ணுக்குக் கர்வம் குறைந்திருக்குமென்று

"நல்லக்கெம் போலையும் நாகரத்ன ஜிமிக்கையும்
வைரப்பதக்கமும் வைத்துத்தாட்டுமோ?—அல்லது [ம்,
ஒட்டொட்டாம்புல்ஓலையும்களாக்கொத்துஜிமிக்கையு
தட்டோட்டில் செதுக்கினப் பதக்கமுந் தாட்டுமோ?"

என்று கேட்டது. அப்பொழுதும் அப்பெண் சிறிதுங் கர்வங்குறையாது

"ஒட்டொட்டாம்புல்லுங் களாக்கொத்துஜிமிக்கையும்,
தட்டோட்டுப் பில்லையும் தந்தா விடுவாரார்?
நல்லக்கெம் போலையும் நாகரத்ன ஜிமிக்கையும்
வைரப் பதக்கமும் வாங்காத குறை போமோ?"

என்று கேட்டாள். இதைக் கேட்டதும் அக்காட்டுத் தெய்வத்திற்குக் கடுங்கோபம் வந்து விட்டது. அவளுக்குடனே தரப்புக் கல்லிழைத்த ஓலையும் மட்ட நகையுமிட்டு அவள் வீட்டில் பூண்டிருந்த நல்ல நகைகளையும் எடுத்துக் கொண்டது. "இனியாவது இந்தப்பெண்ணுக்கு வணக்கம் வந்திருக்காதா?" என்று நினைத்த தெய்வம் மேலும்

"வாசனை எண்ணெய் பூசட்டுமோ?
களிமண் எண்ணெய் காட்டட்டுமோ?"

என்று கேட்டது. குரோத காந்தியும் "களிமண்ணெண்ணெயா? அதை எந்த மனுஷன்



தலையிலிடுவாள்? நன்றாயிருக்கு! எனக்கு வாசனை எண்ணெயே பூசும்" என்று சொன்னாள். காட்டுத் தெய்வமும் கடுங்கோபங்கொண்டு அவள்தலைக்கு அத்திப்பாலும் ஆலம்பாலுமடித்து ஜடையாக்கி மயிரைத் திரியாக்கியது. பின் சற்று நேரங்கடந்ததும் "ஐயோ! எங்காவதிந்தப் பெண்ணைப் போல உண்டா? இப்பொழுது வணக்கம் வந்திருக்கும்" என்று எண்ணிக் கொண்டு "ஏனடியம்மா உனக்கு

கூழு வார்க்கட்டுமோ? கும்பம் போடட்டுமோ?
நாழி யன்னம் நகர்த்திக் கொட்டட்டுமோ?"

என்று கேட்டது. பெண்ணுங் "கூழா? கும்பமா? அதற்கென்னகுறைச்சல்! எல்லாம் அந்த நாழியன்னத்தையும் நகர்த்தித் தள்ளுமே" என்று பதில் சொன்னாள். வனதேவதை தனக்குண்டான இரக்கத்தை யொழித்து, கோபமிகுந்து அவளுக்கு ஓர் அகப்பைச் சாறும் ஓர் உண்டைக் களியுந் தந்தது. பசி பொறுக்க முடியாத அப்பெண் அவற்றை உண்டது. பின் தேவதையும் "என்னோடிருக்க இஷ்டமா! இல்லா விட்டால் உன் வீடு போக இஷ்டமா?" என்று அவளை அணைத்துக் கொண்டு அன்போடு கேட்டது. அப்பொழுதும் தன் இயற்கை ஸ்வபாவத்திலேயே

"இந்த சுடுகாடு வீட்டிலேயும் - இந்த அந்தகாரக்
காட்டிலேயும்—யாரிருப்பார்? யாரிருப்பார்?
சொந்தமான வீட்டிலேயும் - இந்தா மாடிமேட்டி
லேயும்—நானிருப்பேன்; நானிருப்பேன்."

என்று குரோதகாந்தி பதில் சொன்னாள். இதைக் கேட்ட அந்தத் தெய்வம் "ஸரிதான்.

காட்டு முருண்டியை நீகட்டிக் கொள்வாயோ?
நாட்டையாளும் ராஜனை நீவேட்டுக் கொள்வாயோ?"

என்றுமேலுங்கேட்டதுபெண்ணுஞ்சளைக்காது

"காட்டு முருண்டியையார் கட்டிக் கொள்வார்?
நாட்டு மஹாராஜனை நான் வேட்டுக் கொள்வேன்?"

என்று சந்தோஷத்துடன் சிரித்துக்கொண்டு சொன்னாள். காட்டுத் தெய்வமும் "ஏண்டியம்மா! உனக்கு கல்யாணமானால் மடிநிறையக்

"கல்லும் மணலும் கட்டட்டுமோ?
பொன்னும் பொருளுங் கொட்டட்டுமோ?"

என்று கேட்டது. சிறிதும் யோசியாது "பொன்னும் பொருளுந்தான் கொட்டித் தாரும்" என்று குரோதகாந்தி சொன்னாள்.

இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கும்போது அங்கிருந்த வனதேவதை இருந்தாற்போல இருந்து மறைந்துவிட்டது. பெண்ணும் காடாந்தகாரமாக இருந்தபடியால்பயத்தால் கண்மூடிக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்திற்கெல்லாம் விடியும் ஸமயமாய்விட்டது. பெண் கண் திறந்து "என்னகனவு கண்டேன்" என்று கூக்குரலிட்டாள். ஆனால் உண்மையிலேயே ஓர் கழுதைமேல்தான்உட்கார்ந்திருக்கக்கண்டாள். அக்கழுதைமேல் கந்தைத்துணியும் கரிவேஷமுமாகத்தான் இருப்பதையுங்கண்டாள். ஸூர்யன் உதித்ததும் அக்கழுதை எழுந்து நடக்க ஆரம்பித்தது. அதைவிட்டு இறங்கப் பார்த்தாள் குரோதகாந்தி; ஆனால் அது முடியவில்லை.

அக்கழுதை நடந்து குரோதகாந்தியின் வீடெதிரே போக ஆரம்பித்தது. தெருவிலிருந்தவர் எல்லாம் குவியல் குவியலாக வந்து அவளுடைய பவனிப் பெருமையைப் பார்க்கவந்தார்கள். க்ஷுத்ரமதியும் வெளியே வந்தாள்; பெண் நிலைமையைப் பார்த்தாள். "என்னடி இது? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே' என்று சொல்லிக்கொண்டப் பெண்ணைக் கீழிறக்கப்பார்த்தாள். ஆனால் அக்கழுதை மேலிருந்த பெண்ணைத் தொட்டதும் அவளும் அக்கழுதையை விட்டு விலகமுடியாமல் அதன்பின்னாலேயே ஓடினாள். பின் அவள் பெண்கள் ஆறு பேர்களும் அப்படியே செய்து அக்கழுதையின் பின்னாலேயே ஓடத் தலைப்பட்டார்கள். க்ஷுத்ரமதியின் கணவனும் அவர்களை விடுவிக்க வந்து அதேகதிக்கு ஆளானான். கழுதையோ நிற்காமலே நடந்துகொண்டிருந்தது.

கடைசியாகக் கழுதை ஓயாது நடந்து பின்வருங் கூட்டத்துடன் பாஞ்சால தேசத்துத் தலைநகரத்தில் ராஜமந்திரத்திற் கெதிரில் போய்க்கொண்டிருக்க மேல்மாடியில் சாளரத்தின் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த ஸுகுணாங்கி சரேலென்று கீழிறங்கிவந்து "என்ன கோலமிது?" வென்று சொல்லிக்கொண்டு குரோதகாந்தியைக் கீழிறக்கினாள். அதேஸமயத்தில் கழுதையிருந்த இடம் தெரியாது மறைந்தது. ஸுகுணாங்கியும் தனது தாய் தந்தை தமக்கைகளையும் அழைத்துப்போய் செய்ய வேண்டிய தெல்லாஞ்செய்து நல்ல பதவியில் வைத்தாள்.

வணக்கமில்லாமைப் பிணக்கந்தரும் என்பதை அனுபவத்தி லறிந்த குரோதகாந்தியும் தனக்கு நல்லபுத்தியூட்டிய ஸுகுணாங்கியுடன் அன்பு விளங்கி வாழ்ந்தாள்.

# ஹிந்து நாகரிக ஆதர்சம்

## A GLIMPSE INTO THE HINDU CIVILISATION

ஸிந்து ஸட்லெஜ்நதி தீரங்களிலிருந்து இவ்வாரியர்கள் கீழ்ப்புறமாக நோக்கிச்சென்று நாம் இப்பொழுது வங்காளமென்று சொல்லும் மத்திய தேசத்தை யடைந்தார்கள். இக்காலத்தில் ஆர்யர்கள் அனேக ஜாதியார்களாகப் பிரிந்துவிட்டார்கள். அந்தந்த தேசத்தவர்கள் மிக ஸ்வதேசாபிமானர்களாகி தங்கள் தேச அரசர்களைக் கொண்டாடினார்கள். இப்பொழுதுதான் வர்ணாசிரமதர்மங்கள் உண்டாயின. இதரவேதங்களும் இக்காலத்திற்றான் இயற்றப்பட்டன.

ஆர்யர்கள் பஞ்சாபிலிருக்கும் காலத்திலேயே சில புரோஹிதர்களிருந்தார்களென்று நாம் சொல்லியிருக்கிறோம். அக்காலத்தில் எழுதப்படிக்கத் தெரியாததனால் ஸகலமும் வாயினால் உருப்போடப்பட்டு ஞாபகத்தில் வைக்கப்பட்டிருந்தன. கீர்த்தனை த்யான சுலோகங்களும் ஸ்தோத்திரங்களும் நியமங்களும் பலன் கொடுக்கத் தக்கனவாயும் ஸார்த்தகமுள்ளதாயும் நினைக்கப்பட்டிருந்தன. ஆகையாற்றான் இக்காலத்தில் புரோஹிதர்கள் மிக்க கனம் பொருந்தினவர்களாகக் கொண்டாடப்பட்டார்கள். புரோஹிதர்களோ தங்கள் அருமையை அறிந்தவுடன் நியமங்களையும், ஆசாராதி முதலியவைகளையும், சடங்குகளையும் மிகுதியாக்கினார்கள்.

கங்கைக்கும், யமுனா தீரத்திற்கும் நடுவில் இருக்கும் ஸ்தானத்தில், சூரஸேநர்கள், வத்ஸர்கள், யாதவர்கள் முதலிய வம்சத்தார்கள் ஸ்தாபித்துக்கொண்டார்கள். இக்காலத்து அரசர்கள் தங்கள் கடமைகளைப் பற்றி மிகச்சிறந்த எண்ணங்கொண்டு, எப்பொழுதும் ஜனங்களுடைய நன்மையையும், சுகத்தையும்பாதுகாப்பதே தங்களுடைய முக்கிய கங்கணமென்னும் எண்ணங்கொண்டிருந்தார்கள்.

இக்காலத்தில் சில புதிய தேவதைகள் உண்டாயின. யஜுர்வேதகாலத்தில்முக்கியமானதேவதைபிரஹஸ்பதிதான். விஷ்ணுவும் சிவனும் யக்ஞாதிபதிகளாக அடிக்கடித் தொழப்பட்டார்கள். துர்த்தேவதைகளுக்கும் தேவர்களுக்கும் அடிக்கடி சண்டைகள் உண்டாயின வென்று இவ்வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் அறிந்து கொள்ளவேண்டியது யாதெனில் ஆர்யர்களுக்கும் காட்டு ஜனங்களுக்கும் அடிக்கடி யுத்தம் நடந்ததென்பதுதான்.

மேலும் இக்காலத்தில் சில புதியமதாசாரங்களும் சடங்குகளும் ஏற்பட்டன. முதல்முதலில், கல்நாகத்துக்கு ஜனங்கள் பூஜைசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இப்பொழுதிருக்கும் மாதிரியே மதாசாரங்கள் சரியாக ஏற்பட்டுவிட்டன. இப்பொழுது ஆர்யர்கள் காட்டு ஜனங்களோடு அடிக்கடி சண்டை செய்ய வேண்டியிருந்தபடியால், இந்த ஆர்யர்களிற் சிலர் ஸதா யுத்தம் செய்வதற்காகவென்றே அலாதியாக ஏற்பட்டு க்ஷத்திரியர்களானார்கள். மற்றும் சில ஆர்யர்கள் நிலத்தை ஸாகுபடி செய்யத் தலைப்பட்டார்கள். இவர்களுக்கெல்லாம் பணிவிடை செய்ய, நான்காவது ஜாதியான சூத்திரர்கள் ஏற்பட்டார்கள். ஆர்யர்கள் சண்டையில் ஜயித்துக் கைப்பற்றின அநாகரீக ஜனங்களுக்கு சூத்ரர் என்று பெயர். மேற்சொன்ன மூன்றுஜாதியார்களுக்கும் ஸதா ஊழியம் செய்வதே சூத்ரர்களுக்கு உரிய தொழிலாம்.

இந்நால்வரையும் தவிர அனேக அடிமைக் கூட்டங்கள் அக்காலத்தில் இருந்ததாகத் தெரியவருகிறது. அக்காலத்தில் கீழ் ஜாதியார், மேல் ஜாதியாராகச் சுலபமாகப் போகலாம். மேல் ஜாதியாரும் கீழ் ஜாதியில் பிறந்த ஸ்திரீகளை விவாஹம் பண்ணிக் கொள்வதும் இயல்பாக இருந்தது. அக்காலத்தில், ஆயுர் வேதங்களும், தநுர் வேதங்களும், ஸங்கீத வேதங்களும் செழித்தோங்கின.

வேதகாலங்களை விட்டு ராமாயண மஹாபாரதங்களாகிய வீரகாவ்ய ஸமயத்துக்கு வருங்கால், நாம் அனேக வேறுபாடுகளைக் காணவேண்டியதாயிருக்கின்றது. இக்காலத்தில் ஆர்யர்கள் வடஇந்தியாமுழுதும்தங்கள் வசமாக்கிவிட்டார்கள். கௌரவர்களுக்கும் பாஞ்சாலர்களுக்கும் இப்பொழுதுதான் மிகப் பிரஸித்தமான யுத்தம் நடந்தது. இந்த யுத்தத்திலே பாண்டவர்கள் வெற்றி யடைந்தார்கள்.

இக்காலத்தில் சிறந்த அரசர்கள் ராஜதர்மத்தை ஸரிவர நடத்திவந்தார்கள். திவ்யமான



சபாமண்டபத்தோடுகூடிய உத்தமமான சிங்காஸனத்தில் வீற்றிருந்து ஸத்திய முறையைத் தவறாமல், நெறி தப்பிய மூடரைத் தண்டித்தும், தர்மாத்மாக்களை வணங்கிக் கும்பிட்டும் எல்லா வுலகும் நன்மை யடைய வேண்டும் ஸமஸ்தலோகா ஸுகினோபவந்து, என்று மனதால் கோரி ஆண்மையுடன் ஆண்டுவந்தார்கள். பிராஹ்மணர்கள் அரசர்களுக்கு ஆறிலொருகடமைவாங்கவும், உலகத்தைக்காத்து இரக்ஷிக்கவும், இப்படிக்குச்சிலநிபந்தனைகளை ஏற்படுத்திவிட்டார்கள். இவர்கள் அரசர்களுக்குச் சொன்ன தென்னவெனில் “நாங்களேற்படுத்தின தர்மத்தின்படி நடந்தாற்றான் உங்களுக்கு ஸத்தியமுண்டு, ஜயமுண்டு, நிதிசேரும்” என்றும் ஸத்தியம் தப்பி அஸத்யத்திற் பிரவேசித்தால் துராசை பிடித்தவராகி விடுவீர்கள். தரித்திரமும் ஆயுஸுக்குறைவும் அபஜயமும்நேரிடும்” என்றார்கள். மற்றும் சத்ரு ஜயமேசெய்து பகையாளி தன்னை வணங்கவும் கப்பம்கட்டவும் இவைகளில் ஓர் அரசன் ஸதா கண்வைக்க வேண்டும். சினேகிதர்களிடத்திலேயும் சத்துருக்களிடத்திலேயும், அரசன் நடந்து கொள்ள வேண்டிய மாதிரி, பாரதத்தில் நன்றாய் சொல்லப்பட்டிருக்கின்றது. அரசன், மஹாவிஷ்ணுவின் அம்சமென்று அக்காலத்துப் பெரியோர்கள் உரைத்திருக்கிறார்கள்.

அரசனில்லாத நாட்டை மிருகமுலாவுங்காட்டுக்குச் சமானமாகவும், தலைவனில்லாத ஸைந்யத்திற்கும் ஒப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நாட்டில், ஸகலமும் அனாதராவாய்ப் போம்; தர்மம்நடவாது. வர்ணாசிரமநித்தியாசாரங்களும் கெட்டுப்போம். இவைகளெல்லாம் ஒழுங்கான ராஜாங்கத்தினால் அழியாமலிருக்க வேண்டும்.

வர்ணாசிரம தர்மத்தைப்பற்றி மஹாபாரதத்தில் பீஷ்மர் தர்மராஜனுக்கு விரித்துச் சொல்லியிருக்கிறார். உத்தமமான குலத்தில் பிறந்த வேதிய ரென்று சொல்லப்படும், பிராமணர்களென்போர் குற்றஞ் செய்யாமலும், கோபங்கொள்ளாமலும் ஸத்யம் தவறாமலும் இருக்க வேண்டியதுமல்லாமல், ஆசையில்லாமலும், தர்மம் தவறாமலும், பூததயையுடன் கூடியும், நற்பெண்டிரை மணந்து ஆசார நித்ய ஜெபக்கிரமங்களோடு பழியில்லாமல் வழியாய் நடந்து கொள்வது தான் வேதியர்களுடைய விதி.

# கமலரேகை

அல்லது

“இந்திரபுரி” இரகசியம்

## KAMALAREKA OR THE SECRET OF “INDRAPURI”

MADRAS 1913

### நான்காம் அத்தியாயம்

#### உபாயங்கூறி உவப்பித்தது

இன்பமாயும் சந்தோஷமாயும் காலங்கழிக்கப்படுதற்கு ஏற்ற இடமாயிருந்த நாடகசாலை, மறு நிமிஷத்தில், ஒருவரும் எதிர்பாராத விதமாய்த் திடீரென்று பயங்கரமாயும், துக்ககரமாயும் மாறிவிட்டது. சிரித்தோரெல்லாரும் அழலாயினர்; சல்லாபமாய்ப் பேசியவர்கள் எல்லோரும் மௌனம் சாதிக்கலாயினர்; ஆனந்தபாஷ்பம் வடிந்த கண்களிலிருந்து துன்பக் கண்ணீர் பெருகிற்று! கமலரேகை, இறந்து கிடந்த சரீரத்தின் மீது வீழ்ந்து கதறினாள்; மீண்டும் எழுந்தாள்; ஏக்கமுற்றாள்; பின்னும் வீழ்ந்து அழுதாள்; துக்கப்பட்டாள்; பெருமூச்செறிந்தாள்; செயல் மறந்தாள்; தன்னையும் மறந்தாள்; தன்முன் நிற்பவர்களையும் ஒருங்கே மறந்தாள்..

அவள் படும் துயரத்தைக்கண்டு மனம் சகியாத கமலநாதன், அவள் சமீபத்திற்சென்று, அவளைத் தன் இரு கரங்களாலும் பிடித்து அப்பிரேதத்தை விட்டு அப்புறம் இழுத்துவந்து, “ஆ! அம்மா, அழுவதனாற் பயனில்லை! இனி, நீங்கள் இங்கிருப்பது தகுதியன்று! வீட்டுக்குப் போகலாம்!” என்று கூறித் தேறுதல் செய்வித்தான்!

“ஆ! இவரை விட்டு நான் நீங்கமாட்டேன்” என்று கமலரேகை பிடிவாதமாய்க் கூறி அப்பிணத்தினடியிலேயே கிடந்தாள்.

“அம்மா! நீங்கள் இவ்விதம் பிடிவாதம் செய்யக்கூடாது. இறந்தவர் மீண்டும் பிழைக்கப்போகிறதில்லை! எந்த ஸ்திரீயால் அவருக்கு இந்தக்கதி வந்ததென்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவளைக் கண்டுபிடித்துப் போலீஸார் வசம் ஒப்புவிக்கவேண்டுவது நம்முடைய கட

மையன்றோ? எழுந்திருங்கள்" என்று கமலநாதன் மீண்டும் கூறினான்.

"ஆம்! நீர் சொல்லுவது வாஸ்தவமே. போலீஸாரைக்கொண்டு அந்தக் கொலைபாதகியைக் கண்டுபிடிக்க வேண்டும்! என்னாலான உதவியை நான் அவர்களுக்குச் செய்கிறேன்! அவளே அநுவிந்தனை,—என்னுடைய அநுவிந்தனை,—கொன்றாள்!" என்று ஆத்திரத்தோடு சொல்லிக்கொண்டே கமலரேகை அவ்விடம் விட்டு எழுந்தாள்.

கமலநாதன் அவளை அழைத்துக்கொண்டு நாடக சாலையை விட்டு வெளியே வந்தான். நாடகம் பார்க்க வந்திருந்த ஜனங்கள் எல்லோரும் இறந்து கிடக்கும் மனிதன்மீது, தங்கள் கவனத்தைச் செலுத்தி இருந்தார்களாதலால், கமலநாதனும் அந்த ஸ்திரீயும் வெளியே போனதை அவர்கள் பார்க்கவில்லை. வெளியே வந்த கமலநாதன் ஒரு ஜட்காவண்டியை வாடகைக்குப் பிடித்துக் கமலரேகையை அதில் ஏறிக்கொள்ளும்படி சொல்லித் தானும் அதில் ஏறி உட்கார்ந்துகொண்டான்.

"அம்மா! வண்டியை எவ்விடத்திற்கு ஓட்ட வேண்டும்?" என்று வண்டிக்காரன் கமலரேகையைக் கேட்டான்.

"புரசைவாக்கம் வேளாளர் வீதிக்குப் போகவேண்டும்" என்று கமலரேகை பதில் சொன்னாள்.

"அங்கே ஏன் போக வேண்டும்?" என்று கமலநாதன் இடைமறித்து வினவினான்.

கமலநாதனுடைய உண்மைப்பெயரைக் கமலரேகை அறியாளாதலால், அவன் கூறிய புனைபெயரிட்டே "சத்தியசந்தரே!" என்று விளித்து "புரசைவாக்கத்தில் என்னுடைய பிதாவுக்குச் சொந்தமான விசித்திர மாளிகை ஒன்று இருக்கிறது. அந்த மாளிகையிலேயே நான் பெரும்பாலும் வசிப்பதுவழக்கம். அங்கிருந்தே நான் நாடகம் பார்க்கப் புறப்பட்டு வந்தேன். ஆதலால் மறுபடியும் அங்கேயே போக வேண்டும்" என்று சொல்லிமுடித்தாள்.

"ஆனால் சரி; நான் ஒற்றை வாடையில் இறங்கிவிடுகிறேன், தாங்கள் சென்று வரலாம்" என்று சத்தியசந்தன் கூறினான்.

"நண்பரே! நான் பெண்பாலாதலால் தனித்துச் செல்லுவது உசிதமன்று; எனக்காகத் தாமும் புரசைவாக்கம் வரையில் வந்து திரும்பினால் நலமாயிருக்கும்" என்று கமலரேகை கூறி முடித்தாள்.

"நல்லது; உங்களுடைய விருப்பப்படியே ஆகட்டும்" என்று சத்தியசந்தன் சொன்னான்.

இவர்கள் இவ்விதம் பேசிக்கொண்டிருக்கும் போதே வண்டி விக்டோரியா சபாமண்டபத்திலிருந்து புறப்பட்டு விட்டது. அரை மணி நேரங் கழிக்கவே, வண்டிக்காரன் குறித்தபடியே புரசை வேளாளர் வீதியில் வண்டியைக் கொண்டுபோய் நிறுத்தினான்; கமலரேகையும், சத்தியசந்தரும் வண்டியிலிருந்து இறங்கி வண்டிக்காரனுக்குக் கொடுக்கப்படவேண்டிய வாடகையைக் கொடுத்துவிட்டுச் சிறிது தூரம் நடந்து சென்றார்கள். அந்த வீதியிலேயே ஒரு பெரிய மாளிகைக்கு நேரே போய்க் கமலரேகை நின்றுகொண்டு "சத்தியசந்தரே! இதுதான் என்னுடைய வீடு. 'பத்ம விலாஸம்' என்று இந்த மாளிகைக்குப் பெயர்" என்று கூறினாள்.

"சரி; நீங்கள் போய் வாருங்கள்" என்று சத்தியசந்தன் இளைத்த குரலுடன் துயரம் அதிகரித்தவனைப்போல் சொன்னான்.

கமலரேகை ஏதும் பதில் சொல்லாமல் பூமியை நோக்கியபடியே நின்றாள். அவளுடைய கண்களிலிருந்து நீர்த்துளிகள் பூமியில் வீழ்ந்தன. அவளுடைய ஆற்றாமையைக் கண்டு மனம் பொறாத சத்திய சந்தன் "அம்மா! இவ்விதம் மனம்வருந்திக் கண்ணீர் உகுப்பதால் யாது பயன்? கொலைசெய்தவளைக் கண்டுபிடிக்க முயலுங்கள். நான் தங்களுடைய உண்மை நண்பனாயிருந்து என்னாலான உதவியை மனப்பூர்வமாயும், சந்தோஷமாயும் செய்கிறேன்" என்று தேறுதல் சொன்னான்.

"சத்தியசந்தரே! நீர் என்னுடைய உண்மை நண்பராயிருந்து எனக்கு உதவிபுரிவது உண்மையானால், தயை செய்து இப்போது என் வீட்டுக்குள் வாரும்; உம்முடன் தனித்துச் சில விஷயங்கள் பேசுதற்கு நான் விரும்புகிறேன்" என்று கமலரேகை கூறினாள். "அம்மா! அப்படியே வருகிறேன்" என்று சத்திய



சந்தன் உடன்பட்டுக் கூறவே, கமலரேகை அவனை அழைத்துக்கொண்டு மாளிகைக்குள் சென்று, தன்வசமிருந்த திறவுகோலால் மாளிகையின் மேன்மாடிக் கதவைத் திறந்து, அவனையும் அழைத்துக்கொண்டு உட்சென்றாள். மேன்மாடியில் விளக்கு இன்மையால் எங்கும் ஒரே இருள் சூழ்ந்திருந்தது. சத்தியசந்தனை ஒரு சோபாவின்மீது அமரும்படி சொல்லிவிட்டு விளக்கு ஏற்றுவதற்காகத் தீக்குச்சி கொண்டுவரும் பொருட்டுக் கமலரேகை மீண்டும் கீழே இறங்கிச் சென்றாள். ஆனால் மாடியின் கதவைச் சாத்தி முன்புறம் பூட்டிக் கொண்டே அவள் சென்றாள்.

சத்தியசந்தன் என்னும் புனைபெயர்கொண்ட கமலநாதன் கமலரேகை சென்றபின்பு பற்பல விதமாய் ஆலோசிக்கலானான். தன்னை இருளில் மாடியின்மேல் தனியாக விட்டுவிட்டுக் கதவை முன்புறம் பூட்டிக்கொண்டு கமலரேகை போனதற்குக் காரணம் யாதென அவனுக்குப் புலப்படவில்லை. மேலும், இன்னொருவிஷயம் அவனுக்கு அச்சத்தையும், ஆச்சரியத்தையும் விளைவித்தது. அதாவது அவள் அவ்விதம் பூட்டிக்கொண்டு வெளியே சென்றபின்பு தான் மாத்திரம் தனியாகயில்லை என்பதுதான். யாரோ அங்கு நடமாடுவதைப்போல் அவனுக்குத் தோன்றிற்று. புதுப்புடைவை உடுத்துக்கொண்டு நடந்தால் "மொடமொட" வென்று கேட்கும் சத்தத்தைப் போன்ற சத்தம் அவன் காதில் விழுந்தது. ஒரே இருளாயிருந்தபடியால் அவன் ஏதும் அறிந்துகொள்ளச் சக்தியற்றவனானான். தவிர, இருளில் உட்கார்ந்திருப்பவர்கட்குப் பற்பலவிதமான எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றுவதுபோலவே கமலநாதனுக்கும் எண்ணங்கள்,—பயங்கரமானவையும், உடல் நடுங்கத் தக்கவையுமான எண்ணங்கள்,—ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றலாயின. சித்திரவர்மன் எந்தப்பெண்ணுக்கு விரோதமாய்ச் சதியாலோசனைசெய்து அச்சதியாலோசனையை நிறைவேற்றுவதற்குத் தனக்கு உதவியாயிருக்கும்படி வற்புறுத்தினானோ, அந்தப் பெண்,—அதாவது கமலரேகை,—தற்செயலாய்த் தனக்கு மிக வேண்டிய சிநேகிதியாக வாய்த்தது கமலநாதனுக்குப் பேராச்சரியத்தை விளைவித்தது. 'மனிதன் நினைப்பது ஒன்று; கடவுள் செய்வது மற்றொன்று,' என்னும் பழமொழியின் உண்மையை அவன் அச்சமயத்தில் இனிதறிந்து கொண்டான். ஏனெனில் கமலநாதன் சித்திரவர்மனோடு சேர்ந்துகொண்டு கமலரேகைக்கு விரோதமாய்ச் சதியாலோசனை செய்துவந்தான். ஆனால் கடவுளோ கமலரேகைக்குச் சாதகமாய் வேலை செய்யும்படியும் அவளுக்கு உதவிபுரியும்படியும் கமலநாதனை,--எக்காரணத்தை முன்னிட்டோ,—ஏற்படுத்திவிட்டார். வெளியே சென்ற கமலரேகை தீக்குச்சியுடன் திரும்பவும் மாடி மேல்வந்து விளக்கு ஏற்றினாள்.

"அம்மா! நீங்கள் சென்றபிறகு இங்கே யாரோ நடமாடியதைப்போல் சத்தங் கேட்டது" என்று சத்தியசந்தன் அச்சத்தோடு கூறினான்.

"இங்கே ஒருவரும் இருந்திருக்கவும் முடியாது,—வந்திருக்கவும் முடியாது. நான்தான் வெளியே போகும் போது கதவைப்பூட்டிக் கொண்டு சென்றேனே? வேலைக்காரர்களாவது, அல்லது என்னுடைய தந்தையாராவது இங்கே வரக்கூடுமென்பதை அறிந்தே, நான் அவ்விதம், கதவைப் பூட்டிக்கொண்டு போனேனாதலால், நீங்கள் பயப்படுதல் வேண்டாம்" என்று கமலரேகை கூறினாள்.

"சரி; இருக்கட்டும்! அந்த மனிதர் இறந்து போனார். இனி நம்மாலாவது என்ன இருக்கின்றது? சகிக்க முடியாத துக்கத்தை நீங்கள் சகிக்கத்தான் வேண்டும்" என்று சத்தியசந்தன் தேறுதல் சொன்னான்.

"அந்த ஸ்திரீதான் அவரைக் கொன்றாள்" என்று கமலரேகை ஆத்திரத்தோடும் துயரத்தோடும் கூவினாள்

"அந்த ஸ்திரீயை நீங்கள் அறிவீர்களோ?" என்று சத்திய சந்தன் இடைமறித்து வினவினான்.

"ஆம்; நான் அவளை அறிவேன்,—அல்லது அவள் எனக்குத் தெரிந்தவளாகத்தான் இருக்கவேண்டுமென்று நம்புகிறேன்" என்று கமலரேகை மறுமொழி பகர்ந்தாள்.

"அப்படியானால் நிச்சயமாக அவள் யார் என்பது உங்களுக்குத் தெரியாதா, என்ன?" என்று சத்தியசந்தன் மிகுந்த பரபரப்போடு கேட்டான்.

"தெரியாது! ஆனால் அவர் கொலை செய்யப்படுவார் என்பதை நான் முன்னதாகவே அறிந்து, அவரை நாடகத்திற்குப் போகவேண்டாமென்று எச்சரித்தேன். ஆனால் அவர் கவனிக்கவில்லை" என்று கமலரேகை உரைத்தாள்.

"இருந்த போதிலும் உண்மையைக் கண்டுபிடிக்க நம்மால் முடியாதோ?" என்று சத்தியசந்தன் வினவினான்.

"முடியாது! அவரைக் கொலைசெய்வதற்காகச் சிலர் ஒன்றுகூடிச் சதியாலோசனை செய்திருக்கிறார்கள். அச்சதியாலோசனையின் பயனாகவே இன்று இரவு அவர் உயிர் துறந்தார். மிகுந்த சாமர்த்தியத்துடனும், ஆழ்ந்த யோசனையுடனும் செய்யப்பட்டது அச்சதியாலோசனையாதலால், உண்மையைக் கண்டுபிடிப்பது அசாத்தியம்" என்று கமலரேகை கூறினாள்.

"அவருக்கு விரோதிகள் உண்டோ?" என்று கமலரேகையைச் சத்தியசந்தன் கேட்டான்.

இந்தக்கேள்விக்குக் கமலரேகை வாய் திறந்து பதில் ஒன்றும் கூறினாள் இல்லை; ஆனாலும் 'உண்டு' என்று பொருள் படும்படியான விதமாய்த் தலையை அசைத்தாள்.

"அம்மா; இருக்கட்டும்! உங்களுடைய அந்தரங்க விஷயத்தில் நான் பிரவேசிக்கின்றேன் என்று நினையாதீர்கள்! உண்மையை வெளியாக்குவதற்கு இக்கேள்வி அவசியமாகிறது. அந்த மனிதரை நீங்கள் காதலித்து வருவது,—வந்தது,—உங்கள் தகப்பனாருக்குத் தெரியுமோ?" என்று சத்தியசந்தன் மிக இணக்கமாயும், நயமாயும் கேட்டான்.

ஆனாலும் இந்தக் கேள்வி மிக அசம்பாவிதமானதென்றும், மரியாதை யற்றதென்றும் கமலரேகை கருதினாள் என்பதையும், இக்கேள்வியினால் அவள் சிறிது கோபமும், மிக நாணமும் அடைந்தாள் என்பதையும் அவளுடைய முகக்குறிப்பு குறிப்பித்தது; சிறிது நேரம் அவள் மௌனமாயிருந்தாள்.

"என்னுடைய தந்தைக்குத் தெரியாது" என்று இறுதியில் அவள் பதில் சிறிது தயங்கிக் கூறினாள்.

"அப்படியிருக்கும் பட்சத்தில் நீங்கள் எவ்விதம் ஒருவரையொருவர் சந்திப்பது?" என்று சத்தியசந்தன் கேட்டான்.

"இவ்விஷயங்களை நீங்கள் ஏன் கேட்கின்றீர்கள்?" என்று கமலரேகை சிறிது அருவருப்புடன் வினவினாள்.

"போலீஸார் இத்தகைய விஷயங்களை விசாரிப்பார்கள். அதற்காகவே நான் கேட்கிறேன்" என்று சத்தியசந்தன் சொன்னான்.

"ஆனால்,—ஆனாலும் என்னை யார் என்று போலீஸாராவது, மற்றவர்களாவது அறிந்துகொள்ளக்கூடாது! நான் இவ்விஷயத்தில் சம்பந்தப்பட்டவள் என்பதை உலகம் அறியாதிருக்க வேண்டும்" என்று கமலரேகை அனுதாபக் குரலுடன் சொன்னாள்.

"நாடகப் பந்தலில் உங்களுடைய முகமூடி கழன்று விழுந்து விட்டது,—பிறகு நான் எடுத்து மாட்டினேன். அப்போதே நீங்கள் யார் என்பதைச் சிலராவது அறிந்து கொண்டிருக்கக் கூடுமே?" என்று சத்தியசந்தன் சொன்னான்.

"என்ன! முகமூடி விலகிவிழுந்துவிட்டதா?" என்ன என்று மிகுந்த அச்சத்துடன் கமலரேகை கேட்டாள்.

"ஆம்; அது விழுந்துவிட்டது" என்று சத்தியசந்தன் மீண்டும் கூறினான்.

இவ் வார்த்தைகளைக் கேட்டவுடன் தீயில் விழுந்த புழுவைப்போல் கமலரேகை துடித்தாள். ஏனெனில், ஒரு அரச குடும்பத்தைச் சேர்ந்தவளாகிய தான், நாடகத்திற்கு வந்ததையும், சாமானியமான ஒருவனைக் காதலித்து அவன் இறந்து போனதற்காக வருந்தியதையும் ஜனங்கள் அறிந்துகொண்டிருப்பார்களோ என்று அவள் அஞ்சினாள்.

"சத்தியசந்தரே! யாராவது என்னை அச்சமயம் கூர்ந்து கவனித்து என்னை இன்னாளென்று கண்டு கொண்டிருப்பார்களோ?" என்று அச்சத்துடனும், சந்தேகத்துடனும் கமலரேகை வினவினாள்.

"இரண்டொருவர் கவனித்திருப்பினும் இருக்கலாம்! நிச்சயமாக என்ன சொல்ல முடியும்?" என்று சத்தியசந்தன் பதில்சொன்னான்.

"ஆனாலும் சத்தியசந்தரே, என் தகப்பனாருக்கு இவ்விஷயம் தெரியவேகூடாது! அநுவிந்தன் என்னுடைய காதலன் என்பதை அவர் அறிந்துகொள்ளவே கூடாது!" என்று கமலரேகை வற்புறுத்தி உரைத்தாள்.

"ஏன்? இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் உண்மையை மறைக்காமல் இருப்பதுநலமன்றோ? மகள்செய்த குற்றத்தைத் தந்தை மன்னிப்பது இயல்புதானே? அவருக்குத் தெரிவதால் குற்றமென்ன?" என்று சத்தியசந்தன் வினவினான்.

"கூடவே கூடாது! அவர் என்னை ஒருகாலும் மன்னித்திடவே மாட்டார். அநுவிந்தன் அவருக்குப் பரமவிரோதி,—அவனை அவர் எப்போதும் பகைத்துவந்திருக்கின்றார்!" என்று கமலரேகை விடை இறுத்தாள்.

"அநுவிந்தன் நாடகத்திற்கு வந்திருந்ததை அவர் அறியாரா? நீங்கள் நாடகத்திற்கு வந்திருந்ததை அவர் அறியாரா?" என்று சத்தியசந்தன் மறித்துக் கேட்டான்.

"என்னுடைய தந்தை நாடகம்பார்க்கச் செல்லும் வழக்கம் இல்லை, நான் வந்தது அவருக்குத் தெரியாது!" என்று கமலரேகை மறுமொழி பகர்ந்தாள்.

"போலிஸார் இக்கொலை சம்பந்தமாய் விசாரித்தறிவதற்காக உங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன செய்வீர்கள்? அப்போது உங்கள் தகப்பனாருக்கு உண்மை புலப்பட்டுவிடுமே?" என்று சத்தியசந்தன் கேட்டான்.

"என்ன செய்வதென எனக்குத் தோன்றவில்லையே!" என்று கமலரேகை பரிதபித்துக் கூறினாள்.

"நாமே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று உறுதிமொழி எழுதிவைத்து விடுவது நலமென்று எனக்குத்தோன்றுகிறது. அவ்விதம் செய்துவிட்டால் போலிஸார் உங்கள் வீட்டுக்கு வருவதற்கு ஏது இராது" என்று சத்தியசந்தன் சொன்னான்.

"ஆம்; நீர் சொல்வது மிகவும் நல்ல ஒரு யோசனைதான்!" என்று கமலரேகையும் தழுவி உரைத்தாள்.

பொழுது புலர்ந்ததும் போலீஸ் ஸ்டேஷனில் எழுதிவைப்பதாக இருவரும் தீர்மானித்தார்கள். இவ்விதம் தீர்மானித்த பிறகு வேறு பல விஷயங்களைக்குறித்து இருவரும் அளவளாவிக் கொண்டிருந்தார்கள்; அவ்விதம் இருக்கும் தறுவாயில் சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு உருவப்படம் தற்செலாய்ச் சத்தியசந்தன் கண்ணிற் பட்டது. அவன் அதை எடுத்துக் கூர்ந்து கவனித்துப்பார்த்து விட்டு, மிகுந்த ஆச்சரியத்துடன், "இந்தப் படம் யாருடையது?" என்று கமலரேகையைக் கேட்டான்.

"எனக்குத் தெரியாது! அவர்,—அதாவது இப்படத்திலுள்ள உருவத்தையுடையவர்,—என்னுடைய தகப்பனாருக்கு நண்பராயிருந்தல் கூடும். நான் அவரைப் பார்த்ததில்லை, நீர் ஏன் இவ்வளவு சிரத்தையோடு விசாரிக்கின்றீர்? அவரை உமக்குத்தெரியுமோ?" என்று கமலரேகை வினவினாள்.

"அவரை இரண்டொரு முறை சந்தித்திருக்கிறேன்! ஆனால் அவரோடு நான் பேசினதில்லை" என்று சத்தியசந்தன் பதில் சொல்லிவிட்டு, அப்படம் சம்பந்தமான பேச்சை நழுவினாற்போல் விட்டுவிட்டான்.

ஏனெனில், அது விஷயமாய் இனிப்பேசினால், அபாயம் நேரும் என்பதை அவன் அறிந்துகொண்டான். அந்தப் படம் கமலரேகையின் அறையில் இருந்ததுதான் அவனுக்கு ஆச்சரியத்தை விளைவித்தது, ஏனெனில், கமலரேகைக்கு, விரோதமாய் எவன் சதியாலோசனை செய்தானோ,—அவளுக்குத் துன்பத்தை விளைவித்தாவது பெரும் பொருளைக் கைப்பற்ற எவன் சூழ்ச்சி செய்தானோ,—அவனுடைய உருவப்படமாக அது இருந்தது. அதாவது, சித்திரவர்மனுடைய உருவப்படம்!

"சத்திய சந்தரே! அநுவிந்தனோ இறந்து போனான். இப்போது நான் அநாதையாயும் உதவியற்றவளாயு மிருக்கிறேன்" என்று கமலரேகை மறுபடியும் ஆற்றாது கூறிக் கண்ணீர் சொரிந்தாள்.

"அம்மா! நான் தங்களுக்கு உண்மைத் தோழனாயிருந்து உதவி புரிகின்றேன். நீங்கள் அஞ்சவேண்டாம்; என்னை நம்புங்கள் என்று சத்தியசந்தன் உறுதிகூறினான். சத்தியசந்தன் இவ்விதமாய் உபாயங்கூறி உவப்பித்தது கமலரேகைக்கு ஒருவிதமான ஆறுதல் கொடுத்தது.

# இராமாயண அகவல்

## RAMAYANA AGAVAL

### (மயிலோன்துதி)

மலைமகளாம் மங்கையவள் மாதவத் தேதோற்றி
மலைநாட்டிற் றங்கும் மயிலோய்-மலைமகளின்
முன்னே பிறந்த முகுந்தனவன் காதைசொல
என்னுடனே நீயிருந்து கா

### (விண்ணுதுதி)

படியார் மடியுடைய பண்புடையாய் கேகை
மடிமே லிராவணனை மாயப்படிமேய
கங்கையொரு வேணிக் கருணீசன் மைத்துனனே
சங்கையின்றி யேயென்னைக் கா

### (ஸ்ரீராமன் உற்பவச்சுருக்கம்)

வரையிற் றோன்றிப் படியைக் காக்கும்
திரைநதி பலவுள் திலகமே யென்னத்
தேவர் மூழ்கி ஞானம் பெறவும்
மூவர் போற்றிப் புகழ்வே பெற்றும்
அருகே வாழும் மாந்தர் பலர்க்கும்

தருவே யன்ன நன்மை தரலால்
அன்னை யென்று யாவரு மேற்றும்
பொன்னியின் மிக்க சரயுமா நதிதான்
தன்னைச் சூழப்பெற்றநற் றேயமாய்ப்
பொன்னை விளக்கும் பொற்புறு கோசலம்.

அதனின் தலைநக ரயோத்தியா மென்ப
அதனை ஆண்டனர் ஆதவன் குலத்தினர்.
அயனென் பானின் அரிதவச் சிறுவன்
தயரத னாண்டனன் எதிரிக ளின்றி.
மனைவியர் மூவர் அவர்க்கே யுண்டாம்.

மனையாள் மூத்தாள் கோசலை யென்பாள்;
அவளின் தங்கை கைகேசியா மென்பவள்;
அவளுக் கிளையாள் சுபத்திரை யென்பாள்.
மூவரோ டலவி லின்பந் துய்த்து
பாவம் போக்கிப் பரிதியை யொத்து

தானம் செய்து தவம்பல வியற்றி
கானம் கேட்டு வாழுநன் னாளில்
புத்திரன் காணு தயர்ந்தே தவித்து
மித்திர ருடனே மிகவிதைக் கூறி
அவருடன் குருவாம் வசிட்டரின் பக்கல்

கவலையே கொண்டு ஏகினன் தயரதன்.
"ஐயகோ குருவே! என்னயான் செய்வேன்!
பைய னில்லா மலடே யாயினேன்!
இரவியின் குலத்திற் கிவ்வித இழுக்கு
பாவியே வந்ததால் பாவியென் செய்வேன்?

எந்தன் குருவே! இனியான் பொறுக்கேன்.
செந்தா மரைப்பதம் தொழுதேன், செய்வதை
உரைப்பீர் கடுகி லுரைப்பீர் " என்றே

இறைஞ்சினன் வேந்தன் தயரதப் பெயரோன்
"மானின் கோட்டு மாமுனி தன்னுன்
மாமக மியற்றின் மகவைப் பெறுவாய்"
என்றே வசிட்ட ரிசைத்தனர் மாதோ.
மன்னனும் போற்றிக் குருவைத் தொழுது
அவரின் அருளா லம்முனி யழைத்து
நவமணி யாதனத் தவரையு மிருத்தி

யாகம் செய்தனன் புத்திரற் காக.
ஆகுதி யீயு மமயந் தன்னில்
பூதம் ஒன்று பொற்கிண் ணத்தே
சாதம் பாலது கொண்டெ ழெழுந்தது.
அத்தை வாங்கி யிரண்டா வாக்கி

பத்தினி கோசலைக் கொன்று மீந்தான்;
மற்றை ஒன்றை ஈராய் வகுத்து
பற்றுடை கேசிக் கொன்று மீந்தனன்;
மீந்ததை யெடுத்து இரண்டா வாக்கி
சாந்த குணமுடை சுபத்திரைக் கீந்தான்.

உண்ட தேவியர் வயிறே வாய்ந்தனர்,
தொண்டர்க் கருளும் ஈசன தருளால்.
ஒன்றும் திங்களும் இரண்டும் மூன்றும்
நன்மைதந் தேகு நாலு மைந்தும்
ஆறு மேழு மெட்டுஞ் செல்ல
சோற்றூண் செல்லா ஒன்பதும் செல்ல
பத்தா மாதம் பரமனி னருளால்
சித்தர் களிக்க அரக்கர் கொதிக்கத்
தேவர் ஏற்றத் தவத்தினர் போற்றத்
தேவர் களாச னாசு நிலைக்க

உலகிற் சத்தியம் ஓங்கவே பொய்மை
தலத்தி லழிந்து தோன்று தொழிய
கோசலை யுந்தியிற் கோலமா யிராமன்
கோசலை களிக்கத் தோற்றினன் வந்தான்.
கேசியின் வயிற்றே பரதன் தோன்றினன்

மாசில் மனத்தினள் சுபத்திரை யுந்தியில்
லக்குண னும் சத்துருக்கனு முதித்தனர்.
சக்கரம் விரைவாய்க் களிப்பாற் சுழன்றது;
துந்துபி முழங்கிய; தேவ ரார்த்தனர்;
சந்திரன் வளர்ந்தான்; பரிதியும் விளங்கினன்;

மரங்கள் கிளைத்தன; புற்கள் தழைத்தன;
கானின் அரக்கர் இடக்கரம் துடித்தன;
திண்டோ ளிராவணன் தேகம் சிலிர்த்தது,
மண்டோ தரியின் வலக்கண் துடித்தது;
கோகிலம் பாடின ; மயிலின மாடின;
கோகில மொத்த குதலையர் பாடினர்;
சக்கரன் பூமழை சங்கையில் பெய்தனன் ;
நாகத் தலையெலாம் நன்மை ஓங்கிய.
இவ்விதம் நற்பிர பஞ்சம் களிக்க
பவ்விய மோடு அந்தண ரேடன்

அரண்மனை வந்து ஜாதகம் கணித்தனர்.
அரையனு நோக்கி அகமகிழ்ந் தனனே.
வளர்பிறை யன்ன சிசுக்கள் வளர்ந்தனர்



தளர்பிறை யொத்தது அரக்கரின் புகழும்
ஆரிய நாட்டே அருமைப் பொருளாய்

காரிரு ளகற்றிக் களிப்பையு மூட்டி
ஈரிரு வுலகும் உய்யவே விளங்கும்
ஈச்வரன் வாயாற் பரவிய வேதம்
நாற்றலைப் பிரமன் நாவினி லுள்ளது
நாற்றலை போலும் நாலா யுள்ளது

யாவும் குழந்தைய ரெளிதே கற்றனர்;
நாவும் பரமன் நாமம் நவிற்றிய;
தனுர்முறை யாவும் தவறுற் கற்றனர்,
மனுமுறை யறிந்தனர் மன்னர் நால்வரும்.
யானையி னேற்றமும் குதிரையி னேற்றமும்

தானை நடத்தும் அரியநற் பயிற்சியும்
இரதம் செலுத்தலும் இனிதிற் பயின்றனர்.
பரம னருளாற் பலபல தேர்ந்தனர்.
தவத்தினர் நாடிடு பொறுமையும் தயையும்
சிவத்தின் நற்குணம் தருமம் யாவும்

வீரருக் குரிய வீரப் பிரதாபமும்
தீரர் போற்ற யாவும் பூண்ட
புத்திரர் விளக்கங் கண்ட தயரதன்
தத்திதா னந்தக் கூத்தன் கூத்தைக்
கண்டோ ரடையும் இன்பம் பெற்று

எண்டிசை போற்ற ஆண்டனன் நாட்டை.
அவ்வித காலத் தோர்நா ளந்தோ!
எவ்வித இடையூ றுற்றதாம் போதும்
தன்வலி யூக்கம் தளரா துடைத்துப்
பொன்முடி யீச னருளைப் பெற்று

'இராஜ ரிஷியுட்' பட்டம் கொண்டு
பராபர னுைத்துக் கோசிகன் வந்தனன்
தசரத னெழுந்து கோசிகன் வணங்கி
தசதிசை விளங்கிய ஆசனத் திருத்தி
'என்ன காரிய' மென்றே வினவினன்

சொன்ன போழ்தினி லிரப்பவ ரொப்ப
கையை யேந்திக் கருப்பனை யிரந்தனன்,
செய்கை யிழந்தான் தயரத வேந்தன்.
"தவத்திற் பெரிய சிகாமணி வேந்தே!
சிவத்திட மன்பைச் சேர்த்திய வள்ளா அல்!

ஒன்றும் அறியாப் பாலனை யிரந்தீர்.
என்னை யழைக்கில் யான்வரு கேனே?
சிசுவை யழைத்தீர்; சீர்தவு தவத்தீர்!
பசுக்கன் றனைய என்னருந் தவத்தை
ஆசையைத் தீர்த்த அர்னவ முதத்தை

தாசன் பெற்றத்தவக்கொழுந் ததனை
இரந்தீர் இரந்தீர் என்மனம் வருந்த!
அரக்கர் மாயை யறியார் பாலர்;
தனுர்நல் வேதம் மந்திரம் வாராது;
தனுசால் யானே யாகம் காப்பேன்;

வாய்திறந் தருளும், அன்பர்க் கெளியோய்!
நாயேன் தாசன் காப்பே னருளும், "
என்றே கூறி இறைஞ்சினன் வேந்தன்.
சொன்ன சொலேற் றலும் மீசை துடித்திட
கண்கள் தீப்பொறி கடிதினிற் கக்கிட

எண்டிசை கலங்கிட ஈசனும் வருந்திட
செஞ்சடை தீயைக் குபீலெனக் கக்கி
அஞ்சா துலகை யழிப்பே னென்றிட
ரோமம் யாவும் புகையை வெளிவிட
தாமம் ருத்ரம் அணிந்த தோளினன்

நசித்திடு தவக்குலம் உயர்பத மேற்றிய
வசிட்டரிற் றோற்றக் கோசிக முனிவனும்,
சாக்கா லத்தின் கூற்றெனத் தோற்றி
தீக்கோபத் துட னெழுந்து நகைத்தான்.
அக்கோலம் பார்த்தரு கிருந்தான் முனி

எக்கா லத்து மீச்வரற் றொழுபவன்
வசிட்டப் பெயரின னெழுந்தே அரையனை
நசித்திடல் காக்கவா மெண்ணித் தேற்றி
"உனக்குநல் காலம் வந்த தய்யனே
உன்மக னனுப்புதி நன்மையே வந்திடும்"

எனவே கூறலும் கோவு மிசைந்து
மனத்திற் றயிரியம் வசிட்டாற் பூண்டு
இராமனை யனுப்புதற் குடன்பட் டானரோ;
சராசரம் தாங்கு மிலக்குண னிளையோன்
இராமனைப் பிரிய மனம தொவ்வாது

இராமனைத் தொடரத் தந்தையை வேண்டினன்,
தந்தையு மிசைந்தான் புத்திர ரனுப்ப.
கந்தத் தொடையைக் கண்டத் தணிந்த
முனிவனும் புகழ்ந்தான் தசரத மன்னனை ;
தனிமுத லிராமன் இலக்குண வேந்தன்

இருபுறஞ் சூழ நடந்தனன் கானகம்,
திரிபுரந் தோன்றினர் மாயையைப் புகன்று
மந்திரம் யாவும் விடலிலா துரைத்து
மந்திரக் குருவாய் மகிபனுக் கமைந்தனன்,
தவத்தின் மிக்க கோசிக வேந்தனும்

சிவப்பிர காசனின் வன்மை பெற்றவன்
'பரமன் குருவாய் ஏதிலன் முனிவன்,
பிரம னறிந்த வசிட்டனே வமைவது'
என்றே நினைந்து குருவானன் கொலோ.
சொன்ன தாடகை தோற்றி முனிந்து

உரையும் மண்ணும் மணலும் காற்றாய்
பறைபோல் நாத மளித்திட ஏவினள்.
பெண்ணென வெண்ணினன் பெரியோ னிரா
பெண்பால் பாகனின் முத்தலைச் சூலதை மன்
எடுத்தே விடுத்தாள் எமனை நிகர்த்தாள்.

தடுத்தான் வாளியால் விண்ணுவாம் தலைவன்.
முனிவன் நோக்கினன் முகுந்த னிராமனை;

முனிந்தே விடுத்தான் வாளியா மொன்றை.
தீயைக் கக்கித் தாடகைக் கொன்றது
நாயை யொத்துக் கீழ்வீழ்ந் திறந்தாள்.

மூவரும் நடந்தனர் யாக சாலைக்கே
காவலா யிருவரை யிருபுறத் திருத்தி
யாகம் செய்தனன் கோசிக முனிவன்
தாகம் தீர்த்து வார்த்தைப் பெற்றவன்.
தாடகா புத்திரர் சுவாகு மாரீசர்

தாடகை கொன்றதாற் பழிக்கா யுற்றனர்.
அவர்த மரக்கர் யாவரு மழித்து
சவமாக் கினனே சுவாகுவை யிராமன்.
ஓர்கணை மாரீசனை வேலையிற் றள்ளி
மார்பது கிழிய அமுக்கியே வந்தது;

ஆயினு மரக்கன் சென்றனன் பிழைத்தே.
மாயிரு ளகல முடிந்தது யாகமும்.
மூவருந் திரும்பினர் அயோத்தியை நோக்கி
பாவ கன்னிகை கருங்க லொன்றை
வழியிற் கண்டனன் தயரத புத்திரன்.

வழிசெலும் பாதம் தன்மேற் படலும்
கன்னிகை யாயது கருங்கற் பாறையும்;
கன்னல் மொழியா ளாயது கல்லும்.
"இருடியர் கௌதமர் இன்பப் பாரியை
திருவடி தொழுது வாழுநல் நாளில்

இந்திரன் கூடிட இக்கதி யுற்றனள்;
இந்திரன் ஆயிரம் யோனியைப் பெற்றான்,
என்மணி!! சீடா! ஆலிலை துயில் வோய்!!!
உன்னடி படலும் புனிதளா யினளே"
இவ்விதம் குருசொல மூவரு நடந்தனர்
எவ்விதம் சொல்வே னிராமப் பெருமையை!

---

## சந்தாதார்க்கு அறிவிப்பு

அச்சாபீஸ் மாறுதலால், நமது விவேக போதினி' ஆபீஸையும், திருவல்லிக்கேணிக்கே மாற்றி யிருக்கிறோம். சந்தாநேயர்கள், இனி எழுதும் கடிதங்களையும், புஸ்தக ஆர்டர்களையும், மானேஜர், "விவேக போதினி" திருவல்லிக்கேணி, மதராஸ், என்று எழுதக் கோருகிறோம். சந்தாதார்களுக்கு புத்தகங்கள் குறைந்த விலைக்குக் கொடுப்பதுடன், ஆர்டர்கள் கால தாமதப்படாமல் அனுப்பவும் ஏற்பாடுசெய்திருக்கிறோம்.

மானேஜர்

# வஸந்த மாளிகை

# VASANTHA MALIKAI

## அத்தியாயம் 15

### ராஜ்ய நிலை

### Political Condition

இனி இச்சரித்திரத்தை நமது நண்பர்கள் எளிதில் அனுஸரிக்குமாறு, அக்காலத்தில் மதுரை ஸமஸ்தானத்தின் ராஜ நிலையைப்பற்றிச் சற்று விவரிப்போம்.

மங்கம்மாள் அரசாண்டது தனக்கு வாரிஸ் க்ரமமாய்க் கிடைத்ததல்ல வென்றும், தனது பௌத்ரனை சொக்கநாத நாயக்கன் இளவரசாயிருக்குங்கால், அவனுக்கு ப்ரதி நிதியாய்த்தான் Prince Regent) அரசாண்டா ளென்றும் முன்கூறி யிருக்கின்றோம்.

மங்கம்மாள் தனக்கு இயற்கையா யமைந்துள்ள உதாரம், பெருந்தன்மை, தயை, ஈகை முதலான தர்ம குணங்களாலும், சத்திரங்கள், சாலைகள், கூபங்கள், தடாகங்கள், க்ராமங்கள், முதலானவைகளைப் புதிது புதிதாப் ஸ்தாபனஞ்செய்து, அவை மூலமாய் ஏற்பட்ட பொதுநன்மைகளாலும், தனது பெயரை என்றென்றைக்கும், அழியாதபடி ஸ்தாபித்துவிட்டாள். அவ்வுத்தம குணங்களால், சாதாரண ஜனங்கள் அவள் அரசாட்சியில் அதிக த்ருப்தி யடைந்திருந்தார்கள்.

இப்படியிருக்க, அவள் ராஜதந்திரங்கள் நன்றாயறிந்தவள். ராஜ்யத்தைக் கைக்கொண்ட காலம் முதலே அது தன்னைவிட்டு விலகாது காப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவந்தாள். தன்னிஷ்ட விரோதமாய்த் தோன்றுபவர்களின் பலத்தையும் அதிகாரத்தையும் நாளடைவில் குறைத்துவிட்டாள். இத்தந்திரத்துக் கிரையானவர்களில், பழைய மந்திரி கிருஷ்ணராஜ் என்பவரும், சிறுபாளையம் ஜமீன்தாரும் இருவர். ஆனால் பகிரங்கமாய் ஒருவரையும் விரோதித்துக் கொள்ளுவதில்லை.

பொறுப்பான உத்யோகங்கள் முழுமையும் தன்னிடத்தில் அதிக விசுவாசமும் பக்தியு முள்ளவர்களால் நிர்வஹிக்கப்பட்டு வந்தன. நமது கதாபுருஷனை நரசிம்ம ராஜாவும் அவருடைய பரிவாரங்களும் இத்தந்திரத்தால் தான் உயர்பதவியடைந்தனர். நரசிம்மராஜா இட்டதே மங்கம்மாளின சட்டம்.

மங்கம்மாளுக்கு மீனாக்ஷியென்ற ஓர் தௌஹித்ரியுண்டு. அவள் நல்ல லக்ஷணமும் குணமும் வாய்ந்த 16-வயது யுவதி. அவளை நரசிம்மராஜனுக்கு விவாஹம் செய்விப்பதாயும், அதன் மூலமாய், தனக்குப் பிறகு, மீனாட்சியே அரசாளவேண்டிய பலம் சேகரிப்பதாகவும், உயர்பதவி ராஜபுருஷர்களால் ஓர் இரகஸ்ய வதந்தி பரவியிருந்தது.



தன்பேரனும்,கிரமப்படி ஸ்வான்தாருமான சொக்கநாதன், யௌவன (Major) பருவமடைந்தும், ராஜ்யத்தை அவன் வசம் ஒப்புவிக்காமல் வீண் முகாந்திரங்கள் கூறிவருகின்றார்கள். இந்நிலைமையில் ராஜ்யம் மங்கம்மாள் கட்சியென்றும், சொக்கநாதன் கட்சியென்றும், இரு கட்சியாய்ப் பிரிந்துவிட்டது. அந்நேரத்தில் ராஜகலகம் நேரிடுமோவென்று யாவராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

நாம் முன் அத்யாயத்தில் கூறியபடி நமது கதாபுருஷர்களாகிய, தர்மராஜனும், மாயனும், துரகாரூடராய், அதிவேகமாய், மதுரை நகருக்குச் சமீபத்தில் வைகையாற்றின் வடகரையில் ஓர் அரண்மனை வந்து சேர்ந்தார்கள். விடிய ஜாமப்பொழுதிருக்கலாம். அப்பொழுதுதான் சந்திரன் மேற்றிசையிலஸ்தமிக்க, வஞ்சகரின் நெஞ்சம்போன்ற காரிருள் உலகமுழுமையும் கவர்ந்துகொண்டது.

அவ்வரண்மனைக்கு வெளியே சிறிது தூரத்தில் மஹாராணியாரின் சாரணர்கள், அவ்வரண்மனை வருவோர் போவோர்களையும், அவ்வரண்மனை ரகஸ்யங்களையும் அறிந்து தெரிவிக்குமாறு ஆக்ஞாபிக்கப்பட்டு, வேஷதாரிகளாய், மறைந்து ஸஞ்சரித்துக் கொண்டிருக்கின்றனர். அரண்மனையோ, கிருஷ்ணராஜனுக்குரிய உரித்தான வேலைக்காரர்களால், பாராகாக்கப்பட்டிருக்கிறது.

நமது துரகாரூடர்கள் ஆசாரவாசல் வந்ததும், பாராக்காரன் உருவினகத்தியும் கையுமாய்,எச்சரித்து 'யாரங்கே?' என்று கம்பீரமாய் வினவ,

**தர்மராஜன்:**—'நான்தான் தர்மராஜன்' என்று மறுமொழி கூறினன்.

**பாராக்காரர்கள்:**—"ஐயா! உங்களை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் அரண்மனையில், தாங்கள் வந்ததும் தடையில்லாமல் விடும்படி அரண்மனை உத்தரவு. ஆனால் உங்கள் கூட யார்—?"

**தர்மராஜன்:**—அவர் ஓர் மஹாவைத்யர்.

**பாராக்காரர்கள்:**—'சரி உள்ளே சீக்ரம் செல்லுங்கள். மஹாராஜ்—'

இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

... ... ...

மறுநாட்காலை சுமார் ஆறுமணியிருக்கும். நமது தர்மராஜனும், மாயனும், அரண்மனையருகிலுள்ள உத்யான வனத்திலோர் பன்னீர் மரத்தடியிலுள்ள ஓர் சலவைக்கல் மீது உட்கார்ந்து, கீழ்திசையில் அப்பொழுதுதான் கதிரவன் தன் பொற்கதிர்களை விரித்துக்கொண்டு, பிரகாசிக்கு மழகைப் பார்த்து ஆனந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

அத்தருணத்தில், தர்மராஜன் மாயனை நோக்கி, "என் மாயா! இதன் அதிசயந்தான் என்ன என்று ஊஹிக்கின்றாய்?" என்று வினவ,

**மாயன்:**—மஹாராஜ்! என்ன அதிசயத்தைச் சொல்லப்போகிறேன்! சிறுபாளையம் ஜமீன்தாருக்கு நேர்ந்த வியாதியே மந்திரியாருக்கும். ஒரே காலத்திலாரம்பம், அதன் கடுபிடியும் ஒரே தருணத்தில் அதன் லக்ஷணங்களும் ஒரே மாதிரி. அது குணத்துக்கு வந்ததும் ஒரேமாற்றால். அதற்கு வைத்யனும் ஒருவனே—"

**தர்மராஜன்:**—இதனால் என்ன உனக்குத் தோன்றுகின்றது?

**மாயன் :**—விதையும் ஒரே விஷம்—அதாவது கார்க்கோடகம், அதைச் செய்தவனும் ஒரேமனிதன் தான், மஹாராஜ்! இனி என் மனதிருப்பதைச் சொல்லாது மறைப்பது அவ்வளவு நலமன்று. இவ்விஷமானது, நாளடைவில் உண்டவன் சரீரத்தைக்கெடுக்குமே யொழிய திடீரென்று ஆளைக்கொன்று சந்தேகத்துக்கிட முண்டு பண்ணிவிடாது. இது உலகத்திலேயே தனக்குத்தான் செய்யத்தெரியுமென்று எனக்கு என்னிடம்பலதடவைசொல்லியிருக்கின்றார். நல்ல வேளை கள்ளத்தனமாய் அதன் மாற்றை நான் அறிந்துகொண்டேன், அவ்வறிவை நல் வழியிலுபயோகிக்க நேர்ந்தது என் பாக்யமே—"

**தர்மராஜன்:**—சரி! இருக்கட்டும், மந்திரியின் தேகம் முழுமையும் சௌக்யமாய்விட்டதா?

**மாயன்:**—மஹாராஜ்! ஏதோ இந்த மீனாட்சி கிருபையால், வியாதி முழுமையும் தீர்ந்து விட்டது. இன்னும் இரண்டு மூன்று தினங்களில், அடியேன் கொடுக்கும் கஷாயங்களாலும் சுவர்ண பஸ்பங்களாலும், மந்திரியாரின் தேகம் பூர்வ நிலைமைக்கு வந்துவிடும். ஏதோ ஈசன் செயல். ஆனால்—"

**தர்மராஜன்:**—சும்மா சொல்! பயப்படாதே!"

**மாயன்:**—இவ்விஷம் ஊட்டின என் குரு சமீபத்தில் மாறு வேடம் பூண்டு ஸஞ்சரித்துக் கொண்டிருப்பார். குகை வெடித்த விஷயமும் அதனின்று ஏதோ பூதம் கிளம்பிற்றென்ற கல்பனையும் நமக்கு முன்னதாகவே இவ்விடமெல்லாம் பரவியிருக்கின்றது. இத்துடன், சிறுபாளையம் ஜமீன்தாரும், பழைய மந்திரியும் கார்க்கோடக மஹா விஷத்தினின்றும் தப்பித்த ஸமாசாரமறிந்ததும், நிச்சயம் நானிவ்விடம் வந்திருப்பதை என் குரு வஞ்சன் அறிந்துவிடுவார். அவர் என்னை நேரே ஒன்றும் எதிர்த்து, தன்னைவெளியிட்டுக்கொள்ளமாட்டார், ஆயினும்—"

இதற்குள், திடீரென்று இரண்டு குதிரைவீரர்கள் ப்ரவேசமாய், இவர்களை நோக்கி, 'யாரையா நீங்கள்?' என்று பரபரப்புடன் வினவ,

**தர்மராஜன்:**—என்ன விசேஷம்?

**குதிரைவீரர்கள் :**—மஹாராணியார் இன்னும் ஜாமப்பொழுதில் இவ்விடம் விஜயஞ்செய்கின்றார்களாம். இதோ ராஜசாஸனம். இதை மந்திரியாரிடம் கொடுத்துத் தயாராயிருக்கச் சொல்லுங்கள் என்று கம்பீரமாய் எச்சரித்துவிட்டு, ஒரு பத்திரிகையை தர்மராஜன்கையில் அலட்சியமாய்க் கொடுத்துவிட்டு திரும்பச் சென்றார்கள். தர்மராஜனும் மாயனும் அப்பத்திரிகையுடன் அவஸரமாய் அரண்மனை நுழைந்தார்கள்.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

## I. ஆத்திசூடி விளக்கம்

### 32. கடிவதுமற

மனதை வருத்திக்கொள்வதை (கடிந்துகொள்வதை) மறந்துவிடு என்பது இதன் பொருள். மனது வருந்துவதற்கு அநேக காரணங்கள் ஏற்படலாம், நமது கர்மபலனை அனுபவித்து மனம்தேறி ஈடேற வந்த அப்யாஸ பூமியாகிய இவ்வுலகில் அந்த ஸமயங்களில் எல்லாம் கூட கடிந்துகொள்வதை மறந்துவிட வேண்டும் என்பது இந்த ஸூத்திரத்தின் கருத்து.

பொதுவாகக் கடிந்துகொள்வதனால் ஏற்படும் கேடென்ன என்பதை முதலில் விசாரிக்கவேண்டும். கடிந்துகொள்வதனால் கோபம் மூண்டெழும்; அதனால் வரும் கேடுகளையும் அதிலிருந்து தப்பும் விதத்தையும் ஆறுவது சினம் என்ற ஸூத்திரவிளக்கத்திலும் சினம் என்ற முதற்குறிப்பிலும் விஸ்தரித்தாய் விட்டது. கோபமாக வெளிக்கிளம்பி வாராதபோது மனதை இது வருத்திக் குழம்பும்படி செய்யும். ஆதலால் எவ்விதத்திலும் கடிவதை விட முயலவேண்டும். கடிந்து கொள்வதால் ஏற்படும் புத்திமயக்கத்தில் தர்மாதர்ம விவேகம் மழுங்கிவிடும். ஆதலால் ஸத்துக்கள் அஸத்துகள் எல்லோரும் அதர்ம கார்யங்களிலேயே முனைந்து விடுவர். கடிவது மறவாததனால்தான் சண்டேசநாயனார் தகப்பனை அவமதித்து வருத்தவேண்டி வந்தது. ஹிரண்யன் தன் பிள்ளை ப்ரஹ்லாதனையும் கொல்லத் துணியும்படி நேர்ந்தது. இதுபற்றியே ஆத்திசூடி வெண்பாவிலும்:

ஹிரணியனும் ஆங்காரத் தெண்ணு துரைத்து
கர்வரியாலிற்றான் முன்னாளில். சுரதருவை, போலே
கொடுக்கின்றபுன்னை வணாதா, மாலேகடிவது மற.

என்று அமைக்கப் பட்டிருக்கிறது. இது வரை கடிந்து கொள்வதால் ஏற்படக் கூடும் வெளிப்படையான கேடுகள் எடுத்து விளக்கப்பட்டன.

ஆழ்ந்து விசாரிக்கில் கடிவது என்பது ஒருவித மனச்சஞ்சலம். இது பெரும்பாலும் புண்யவான்களும் ஸன்மார்க்கிகளும் கவனித்து அடக்கி விடவேண்டிய விஷயம். இவர்களிடம் தான் இது விளங்கா ஸூக்ஷ்மரூபங்களில் புகுந்து நிற்கும். அந்த ரூபங்களை எடுத்து வெளிப்படுத்தினால் தான் நமக்கு நன்மை ஏற்பட இடமுண்டு. புண்யவான்கள் நல்வழி நடப்பவரே, அவர்களுக்கு கெட்டவழிகளில் நடப்பவர்களிடம் ஒருவித த்வேஷ புத்தி இருக்கும். இது சுத்த அகங்காரத்தால் ஏற்படுவது. இதை எல்லை மீறிவளரும்படி விட்டு விட்டால் நல்வழிநடப்பதற்கு உபயோகப்பட வேண்டிய முயற்சிகள் எல்லாம் தீயவழி தூஷணத்தில் உபயோகப்பட்டு வீணாகி விடும், இம்மாதிரி செய்யும்படி தூண்டுவதில் கெட்ட விஷயங்களைக் கடிந்து கொள்வதே முக்கியகாரணம். ஆகலால் இந்த சுத்த அகங்காரத் தடிப்பை தடுத்து நிறுத்த வேண்டும். காலக்கிரமத்தில் அகங்காரம் இப்படித் தடிக்கும் வழியையே மறந்து முற்றிலும் நல்வழி நடப்பதே கண்ணாயிருக்கவேண்டும், இந்நிலையைத் தாண்டி விட்டால் கடிவது வேறு வேஷத்தோடு உள்ளே தோன்றும். நாம் ஒரு தீயவழி நடப்போனுக்கு புத்திமதி சாந்தமாகக் கூறத் தொடங்கும்படி நேரும். அப்பொழுது, சாந்தமாகவே தொடங்குவோம். அவன் நம்மிடம் சற்று மரியாதையுடையவனாகவும் இருக்கலாம்; அதனால் நாம் அவனைப் புத்தி கூறித் திருப்பிவிடலாம் என்ற எண்ணத்தையும் வளர விட்டிருக்கலாம். ஆனால் நமது புத்திமதிபயன்படாமலும் போய்விடலாம். அப்பொழுது 'இப்படி இவன் மோசம் செய்துவிட்டானே! நம் புத்திமதியையும் ஒதுக்கிவிட்டானே!' என்ற எண்ணத்தால் மனம் குழம்பத் தொடங்கிவிடும். தேஹப்பதட்டம் மனப்பதட்டம் கொஞ்சநாழிகை வரையில் அடங்காது. இதுதான் கடிவதன் மாறுவேஷம். இதற்கும் இடங்கொடுக்கலாகாது. 'நாம் புத்திமதி கூறினோம். எடுத்துக்கொண்டு அதைக் கடைப்பிடித்து நடப்பது கேட்பவனையல்லவோ சேர்ந்தது. அவன் தன்கடமையைச் செய்யவில்லை, நாம் கடிந்துகொள்வதில் பயன் என்ன? நாம் சொல்லவேண்டிய கடமைப்படிச் சொல்லியாகிவிட்டது. இனிமேல் அவன்பாடு' என்ற எண்ணங்கள் மூலமாக இந்த ரூபமான கடிந்துகொள்வதை அடக்கிக்கொண்டு வரவேண்டும். நமது மனம் ஸம்பந்தப்பட்ட வரையில் இப்படி ஒதுங்கிக்கொண்டே வந்துவிடலாம். ஸாதாரண ஜனங்களுக்கும் இந்த வழி மிக லேசானது. இல்லறத்தானுக்குக் குடும்பவிஷயத்திலும் பொது நன்மை விஷயத்திலும் கடிவதை அடக்குவது மிகக் கடினமாகிவிடும். அவனும் இதை அடக்கப் பழகினால்தான் நற்கதியடையலாம். அநேகருக்கு மேலதிகாரியாக இருக்கவேண்டிய நிலை இல்லறத்தானுக்கு வந்துவிடும். கீழுள்ளவர்கள் சிலர் நல்லவராயும் பெரும்பாலார் கெட்டவர்களாயும் இருக்கலாம். அப்பொழுது அவர்களைக் கட்டி யாளுங்கால் கடிந்துகொள்ளாது அல்லது கடிந்துகொண்டதாகக் காட்டிக்கொள்ளாது நல்ல வழிப்படுத்த முடியாது. ஆகவே இல்லறத்தானுக்குக் கடிந்துகொள்ளும் ஸமயங்கள் அடிக்கடி வரும், அவன் கடிந்துகொள்ளவும் வேண்டும், கடிவதையும் மறக்கவேண்டும். இது எப்படி முடியும் என்ற சங்கை பிறக்கும். இது நடந்தேறுவது மிகக் கடினம். இந்த ஸந்தர்ப்பங்களை விட்டு ஒதுங்கப் பழகுவதே முக்கியமானவழி. ஆயினும் சிற்சில சமயங்களில் ஒதுங்க முடியாமலும் போய் விடும், அப்பொழுதுவேண்டிய அளவுகடிந்துகொண்டு விட்டு உடனே தனித்திருந்து அதனால் ஏற்படும் மனச்சஞ்சல வேகத்தை முற்கூறிய எண்ணங்களால் கூடிய சீக்கிரத்தில் அடக்கிவிடப் பழகவேண்டும். இதனால் வரவர ஒதுங்கியும், ஒதுக்க முடியாது கடி



ந்துகொள்ளவேண்டிய ஸமயங்களில் இந்த எண்ணத்தாரை கடிவதோடுகூடவே ஏற்பட்டு அதன் சஞ்சலம் செய்யும் சக்தியைக் குறைத்துவிடும். ஆனால் வெளித்தோற்றத்தில் மாத்திரம் ஸாதாரணமாகக் கடிந்து கொள்வது போன்றிருக்கும். உள்ளபடி இப்படி இருக்கிறதா இல்லையா என்பது இந்தசமயம் நீங்கினதும் உடனே மனம் சாந்தப்பட்டு கடிவதற்கேற்பட்ட காரணத்தை நாடிப்பாயாது முன்னர் இருந்ததுபோல ஸாவதானமாக இருப்பதால் விளங்கும். வேண்டுமென்றே விஷய வ்யவஹாரங்களை இழுத்துவிட்டுக்கொண்டு கடிந்து கொள்வதாகப் பயமுறுத்துகிறேன் என்று சில ஆபாஸ வேதாந்திகள் விஷயலோலராய்த் திரிவர். அவர் முற்கூறிய மனதின் பின்னிலையைக் கவனித்தால் தமது குதர்க்கத்தை எளிதில் உணர்வர். தெரிந்தும் நான் கடிவதை மறந்தவன் என்று பிதற்றுபவர் அதோகதி அடைந்த பின்னர் தான் பச்சாத்தாபப் படுவர். பட்டால் தெரியும் பார்ப்பானுக்கு பட்டாலும் தெரியாது மற்றையோருக்கு என்ற வசனத்திற்கு இலக்காவர்.

ஆகலால் வ்யவஹாரத்தில் கடிவது மறப்பதற்கு வழி பின்வரும் பாகங்களை உடையது. (1) கடிந்து கொள்ளவேண்டிய தருணங்கள் வரவொட்டாது முன் ஜாக்ரதையுடன் முயற்சிக்க வேண்டும் (2) எக்காரணத்தாலும் கடிந்து கொள்ளும் ஸமயங்களை எதிர்பார்த்து வருந்தி யழைக்கவே கூடாது (3) தன் முயற்சியும் மீறிக் கடிந்து கொள்ளும் தருணம் வந்துவிட்டால் நியாயமாக எவ்வளவு தூரம் கடிந்து கொள்ள வேண்டுமோ அவ்வளவோடு நிறுத்திவிடவேண்டும் (4) தகுந்த ஸத்விருத்திகளால் கடிவதால் ஏற்படும் வேகத்தை சீக்கிரத்தில தடுத்து சாந்த நிலைக்கு வந்துவிடவேண்டும். இதில் ஏதாவது ஒன்று தவறினால் கடிவதை மறக்கவே முடியாது.

ஸன்மார்க்கத்திற்கு வ்யவஹாரம் பெருந்தொல்லை என்று வெளியேறும் ஸந்யாஸிகளையும் இந்தக் கடிவது முற்றும் விடுவதில்லை. அவர்களும் மிகுந்த ஜாக்ரதையாக ஒளவை ஸூத்திரப்படி நடத்தல் வேண்டும். உண்மையான ஸந்யாஸிகளுக்கு முற்கூறிய ரூபமாக இந்தக் கடிவது முன் தோன்றாது. ஒருவன் அவர்களை அவமதித்தான் அல்லது அவர் சொற்படி நடக்கவில்லை என்றால் அவர்களுக்கு ப்ரமாதமாகக் கோபம் வந்துவிடாது. 'ஐயோ பாவம்! என்ன இவன் நிலை! பெரியோரைப் பழிக்கலாகாது என்பது சாஸ்திரம். எனக்கொன்றும் இல்லை அவனுக்குத்தான் கெடுதி. நாம் கோபித்துப் பயன் என்ன? ஈச்வரன் அவனைப் பார்த்துக்கொள்வாரே' என்று பிறரிடமாவது அவனிடம் நேரவாவது கூறுவதுதான் கடிந்துகொள்வதன் கடைசிரூபம். இதைக் கவனித்து வெளிக்கிளம்பாது இதற்குக்காரணமாகிய சித்தவிருத்தியைநசுக்கிவிட்டானானால் பிழைப்பன். இல்லாவிடில் ஸமயங்களுக்கேற்ப மற்றைய தாழ்ந்ததும் வெளிப்படையானதுமான நிலைகளுக்கு அவனை இழுத்து இது அலங்கோலப்படுத்திவிடும். கடிந்துகொள்வதை இந்த நிலைக்குவரும்படி கரைத்தபின்பு தான் கடிவது அடக்குவதைவிட்டு கடிவது மறக்கத்தொடங்கவேண்டும். இது வரையில் கூறிவந்ததெல்லாம் கடிவது மறப்பதற் கங்கமாகிய கடிவது குறுக்கவே.

இந்த நிலையில்தான் மற என்ற பதத்தின் உண்மைப்பொருள் வெளியாகும். என்ன முயன்றபோதிலும் கடிவது குறையுமே ஒழிய முற்றிலும் வேரற்றுவிடாது. சற்று ஏமாந்தால் கப்புங்கிளையாகவும் வளர்ந்துவிடும். அதை மறந்தால்தான் முற்றிலும் நீங்கும் அது, ஆனால் அதை அடக்கிக்கொண்டுவராமல் அதைமறக்க நினைக்கவே முடியாது. ஒன்றை மறப்பது என்றால் திடீரென்று முடியாது அதைவிடச் சிறந்ததை நினைத்துக்கொண்டு அதை நழுவவிடலாம். கடிவது மறப்பதற்கு முடிவதை நினைத்தே யாகவேண்டும். அதாவது ஆத்மஞானத்தைப் பின்பற்றி அதிலேயே மனம் ஊறிப் பழகுவதால் அடங்கிவரும் கடிவது மறக்கப்படவேண்டும். ஆகவே ஞானவழியில் முனைந்து மேல்நோக்காக விருந்து மனம் தானே கடிந்து கொள்ளுவதன் வேரை விட்டுவிடும்படி செய்யவேண்டும். இதற்குவழி கடிவது மற என்ற ஸூத்திரத்திலேயே அமைந்துள்ளது. இதற்கு மனதைச் சஞ்சலப் படுத்துவதாகிய விசித்திர விஷயங்களில் பாய்ந்தோடாது மனதை அடக்கி விஷயங்களை மறக்க முயலவேண்டும் என்று இந்த ஸூத்திரம் தரும் பொருளே இந்த முடிவிற்குத் தகுந்த ஸாதனம்.

## II மொழிபெயர்ப்பு விளக்கம்

### TRANSLATION MODELS

We have called the age between 800 and 315 B. C. the age of law and philosophy, because in this age were framed those systems of law and philosophy which are still revered in India. The voluminous rules for the performance of sacrifices, of which we have spoken in the last chapter, were condensed into concise rules, which are known as *Srauta Sutras* : rules of domestic rites and festivals were condensed into handy manuals known as *Grihya Sutras,* and bodies of Civil and Criminal Laws were compiled under the name of *Dharma Sutras.* It was expected that every Aryan boy should learn these three fold laws before he left his school, so that he might remember ever after his duties as a worshipper, as a family man and as a citizen. No nation on earth devised a more efficacious method of impressing on every individual member of the state his duties of life.

We have curious glimpses of ancient Hindu domestic life in the rules embodied in the *Grihya Sutras.* We have the rules of the marriage ceremony, of the initiation, when a boy was handed over by his parents to his teacher, under whom he lived for years as the attendant and menial. We have also the accounts of the completion of the student's life, when the educated youth returns to his home, married, lighted the sacred fire in his home, and settled down as a house-holder. Five duties are specially enjoined on house holders, namely, sacrifices to gods, and to departed fathers, hospitality to men, honour to spirits and devotion to God.

Even more important and interesting than these rules are the civil and the criminal laws which we find in the *Dharma Sutras.* The laws of property and inheritance laid down in these codes are the basis of the Hindu Law as it is at present administered in India. The law of evidence is clearly set forth, and false evidence is made punishable by the severest penalties. The criminal laws of the Hindus were milder than the laws of most ancient nations; but as in other countries, different punishments were prescribed for different classes of people.

Such is the three-fold system of laws which every pious Aryan boy had to learn in order to acquaint himself with his duties as a worshipper, as a family man and as a citizen. But higher than all these rites, the Hindus valued a virtuous, pure and holy life, which these are expected to lead to.

800 கி.மு. முதல் 315 கி.மு. வரையில் உள்ள காலத்தில், இப்பொழுதும் வணக்கத்துடன் ஏற்றுவரப்படும் சட்டங்களும், சாஸ்திரங்களும், ஒழுங்காக அமைக்கப்பட்டு வந்தமையால், இந்தக் காலத்தை சட்ட சாஸ்திரகாலம் என்று பெயரிட்டழைத்திருக்கிறோம். முன் அத்யாயத்தில் கூறப்பட்ட, யாகம் நடந்தேறவேண்டியதற்கு ஏற்பட்டுள்ள விரிந்தகோட்பாடுகள் எல்லாம் ச்ரௌதஸூத்திரம் என்ற சிறு விதிகள் உருவமாகச் சுருக்கப்பட்டன: வீட்டுக் கர்மங்கள், பண்டிகைகள் விஷயமான விதிகள் எல்லாம் க்ருஹ்யஸூத்ரங்கள் என்ற சிறுநூலாகச் சுருக்கப்பட்டன: நடவடிக்கை, குற்றம் இவைகள் விஷயமான சட்டங்கள் தர்மஸூத்ரங்கள் என்ற பெயரிடப்பட்டுத் தொகுக்கப்பட்டன. பக்தன், இல்லறத்தான், நகரத்தான் என்ற மூன்று நிலைகளில் ஏற்படும் கடமைகளை தடையின்றி ஞாபகத்தில் வைத்திருப்பதற்காக ஒவ்வொரு ஆரியசிறுவனும் அவன் கல்வி பயிற்சிமுடியும் முன்னர் இம்முப்பாகமாகப் பிரித்திருக்கும் சட்டங்களை கற்றிருக்க வேண்டும். தனித் தனியாக ஒவ்வொருவனுக்கும் வாழ்க்கைக் கடமைகளை இதை விட திருத்தமாகப் புகட்டும் வழியை இவ் வுலகிலுள்ள ஒரு ஜாதியாரும் ஏற்படுத்தவில்லை.

க்ருஹ்ய ஸூத்திரங்களில் முன்னோர் ஹிந்துக்களது இல்லற விஷயமான சிறுவிளக்கங்கள் காணப்படுகின்றன. மணவினைச் சடங்கின் விதிகளும், சிலவருஷம் ஊழியனாகத் தொண்டு செய்து வழிபட வேண்டிய ஆசாரியனிடம் பிதாவால் ஒப்படைக்கப்படுங்கால் சிறுவனுக்குச் செய்யவேண்டிய உபநயன விதிகளும், இங்கு இருக்கக்காணலாம். இதோடுங் கூட கற்றபின் வீடுவந்து மணம்முடிந்து ஔபாஸனாக்கினி வளர்த்து கிருஹஸ்தனாவதான பிரஹ்மசரிய முடிவு விஷயமான வர்ணனங்களும் இங்கு உண்டு. இல்லறத்தானுக்கு இங்கு ஐந்து கடமைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன தேவயஞ்ஞம், பித்ர்யஞ்ஞம், மனுஷ்யயஞ்ஞம், பூதயஞ்ஞம், ஈச்வர உபாஸனை ஆகிய இவைகளே.

தர்ம ஸூத்திரங்களில் காணப்படுவனவான நடவடிக்கைகள் குற்றங்கள் விஷயமான சட்டங்கள், முற்கூறிய விதிகளைவிட மிக முக்கியமும், இனிமையுமாகவிருக்கும். ஸொத்து, அதன் உரிமை இவைகள் விஷயமாயும், இக்காலத்தில் இந்தியாவில் செலுத்திவரும் ஹிந்து சட்டத்திற்கு ஆதாரமாயும் உள்ள சட்டங்கள் இந்தத் தொகுதியில் காணப்படும். ஸாக்ஷி விஷய சட்டம் பொய் ஸாக்ஷிக்கு ஏற்பட்டுள்ள கொடிய தண்டனைகள் எல்லாம் வெகு தெளிவாக இங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்றைய ஜாதியார்களது குற்றச்சட்டங்களைவிட ஹிந்துக்களது குற்றச்சட்டங்கள் மெத்தனமாகவே உள்ளன. மற்றைய தேசங்களில் உள்ளதுபோல இதிலும் கூட்டத்தார்களுக்கு ஏற்றபடி வேற்றுமையான தண்டனைகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு மதப்பற்றுடைய ஆரியச்சிறுவனும் பக்தன் இல்லறத்தான், நகரத்தானாகிய நிலைகளில் ஏற்படக்கூடும் கடமைகளை உணருவதற்காக மூவாறாகப் பிரிந்திருக்கும் சட்ட ஒழுங்குகள் இத்தன்மையாகத்தான் இருக்கின்றன. இவைகளால் ஏற்படக்கூடியதாயுள்ள சிஷ்ட குற்றமற்ற சுத்தவாழ்க்கையே முன்னவைகளைவிட மேற்பட்டதாக ஹிந்துக்களால் மதிக்கப்பட்டு வந்தது.



# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### மாயக் கொடைகள்

### Magic Gifts

"கறறவ றறறட் றறகட் றறகட்
கறறவறட் கறறவறட் றறகட் றறகட்
றறவ றறவ றறகட் றறகட்"

என்று தவளைகள் பெருமழை பெய்ததென்னுங் கொண்டாட்டத்தால் பொழுது விடிவதற்கு முன் உதயராகம் பாடிக்கொண்டிருந்தன. அப்பொழுது மழையும் "ஜோய்" என்று பெய்துகொண்டிருந்தது. இதே ஸமயத்தில் தடபுடலாக ஒருவீடு அச்சுவேறு ஆணிவேறாக விழுந்துகொண்டிருந்தது. உள்ளிருந்தவர்கள் குய்யோ முறையோ என்று ஓலமிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த ஸமயத்திற் சேவலும் தலை நிமிர்ந்து, அசைந்தசைந்து "ககாதரோய்! ககாருரோய்!" என்று ஸூர்யனது வரவை எச்சரித்தது. ஸூர்யனும் இருட்டைக்கிழித்து இரத்தந்தெறிக்க வெளியே கிளம்பினான்.

இதற்குள் வீடு முழுதும் விழுந்துவிட்டது. குடியானவன் தலைமேல் கைவைத்துச் சிந்தித்துக்கொண்டிருந்தான். பின் தன் பிள்ளைகளைக்கூவி "அடாப் பயல்களா! நீங்கள் இருந்து என்ன லாபம்? என்னப் பிரயோஜனம்? உங்களால் ஒருகாசுக்கு வழியுண்டா? உங்களைக் கட்டிக்கொண்டு மாரடிப்பது கஷ்டமாயிருக்கிறது. பிச்சைக்குடியில் சனீச்வரன் புகுந்தாற்போல வீடும் விழுந்துவிட்டது. வேறு வழியில்லை. நம்மிடம் ஒரு பசு இருக்கிறது. அதை நீங்கள் போய் மேய்த்துக்கொண்டு வாரும். அதன் பாலை விற்று வந்த பணத்தைக் கொண்டாவது வாழலாம். நான் சொல்லியபடி நீங்கள் நடந்துகொண்டால் நன்றாக இருக்கும்" என்று உபதேசஞ்செய்துவிட்டு மூத்தமகனைப்பார்த்து "நீ இன்றைக்கு இந்தப் பசுவை அழைத்துப்போய் நல்ல நீரும் புல்லும் உள்ள இடத்தில்மேயவிட்டுஅழைத்துவா?" என்றுஏவினான்.

பெரிய குமாரனும் பசுவைக் கையால் தடவிக்கொடுத்துத் தன்னுடனே அழைத்துப்போனான். அப்பசுவும் நன்றாக ஓடோடியலைந்து தனக்கு வேண்டிய பச்சைகளைத்தின்று பசியாறமேய்ந்தது. பின்மூத்தகுமாரன் இருக்குமிடம் அடைந்தது; ஸூர்யனும் மேற்குப்பக்கம் அடைந்தான்.

ஒன்றுந் தெரியாப் பெரியகுமாரன் பசுவைத் தடவிக்கொடுத்து "நன்றாக மேய்ந்தாயா? வயிறு நிறைந்ததா?" என்று வெகு விநயமாகக்கேட்டான். அப்பசுவும் வெகு விநயமாக எல்லாரும் ஆச்சரியப்படும்படி

"வயிறு நிறைந்தது மூத்தண்ணா
பசியு மறைந்தது மூத்தண்ணா
வயிற்றி லிடமில்லை மூத்தண்ணா
இலைக்கு மிடமில்லை மூத்தண்ணா
அம்மே! அம்மே!!"

என்று கனைத்தது. இதைக்கேட்டவன் "ஸரிதான்" என்றுகொண்டு வெகு பக்ஷத்துடன் வீட்டிற்கோட்டிக்கொண்டு வந்தான்.

வந்ததும் குடியானவன் பசுவைத் தட்டிக்கொடுத்து, "பசு நன்றாகப் பச்சை மேய்ந்ததா?" என்று மகனைக் கேட்டான்.

"ஆகா! வயிறு நிறைந்தது இலைக்கு மிடமில்லை என்றதுவே சொல்லியது" என்று பெரிய குமாரன் சொன்னான்.

இதைக்கேட்ட குடியானவன் தன் மன ஸமாதானத்திற்காக அப்பசுவைத் தட்டிக்கொடுத்து "பசியாற மேய்ந்தாயா?" என்று கேட்டான்.

அந்தப் பசுவும் வெகு கஷ்டமடைந்ததுபோலக் காட்டிக்கொண்டு

"கல்லு மேலே ஓட்டி
முள்ளு மேலே மாட்டி
காலெல்லாம் ஒடிஞ்சு
வாலெல்லாம் மடிஞ்சு
சேறையெல்லாங் குடித்தால்
சோறை யெல்லாங் கடித்தால்
வயிறெப்படி நிறையும்? வயிறெப்படி நிறையும்?
அம்மே! அம்மே!"

என்று பதில் சொல்லியது.

இதைக் கேட்டதும் குடியானவனுக்குக் கோபம் வந்து விட்டது. பற்களைக் கடித்துத் தன் மகனைச் சிடுசிடுத்தான். மேலுங்கோபம் மூளக்கேற பக்கத்திலிருந்த சுக்குமாந்தடிக் கொண்டவனைப் பொத்தினான். வீட்டை விட்டும் ஓட்டி விட்டான்.

இரண்டாவது தினம் நடு மகன் முறையானது. அவன் வெகு பயத்துடன் அப்பசுவைத் தோட்டத்தின் வேலி பக்கம் ஓடும் தண்ணீர்க்கால்வாய் ஓரம் மேயவிட்டான். ஸாயங்காலமானதும் பசுவை "வயிறு நிறைந்ததா?" என்று கேட்டான்,

பசுவும் வெகு விநயத்துடன்,

"வயிறு நிறைந்தது மூத்தண்ணா
பசியு மறைந்தது மூத்தண்ணா
வயிற்றி லிடமில்லை மூத்தண்ணா
இலைக்கு மிடமில்லை மூத்தண்ணா
அம்மே! அம்மே!!"

என்று பதில் சொல்லியது. அதை அவன் அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.

தகப்பனும் முன் போலவே "வயிறார மேய்ந்ததா பசு?" என்றான். மகனும் "ஆகா! வயிறு நிறைந்தது இலைக்கு மிடமில்லை என்றதுவே சொல்லியது" என்று பதில்சொன்னான். நம்பாத தகப்பன் பசுவைப் போய் "வயிறாறத்தின்றாயா?" என்று கேட்டான்.

அப்பசுவும்

"கல்லு மேலே ஓட்டி
முள்ளு மேலே மாட்டி
காலெல்லாம் ஒடிஞ்சு
வாலெல்லாம் மடிஞ்சு

சேறை யெல்லாங்குடித்தால்
கோறை யெல்லாங் கடித்தால்
வயிறெப்படி நிறையும்? வயிறெப்படி நிறையும்?
அம்மேய! அம்மேய! ! ''

என்று சொல்லியதும் குடியானவனுக்கதிக கோபம் வந்து விட்டது. அவன் உடனே தனது இரண்டாவது மகனைப் புடைத்து வீட்டை விட்டு ஓட்டிவிட்டான்.

மூன்றாவது நாள் கடைசி மகனைப் பசுவை மேய்த்து வரும்படி ஏவினான். அவனுந்தந்தை சொற்றலை மேற்கொண்டு பசுவைப் பச்சென்றிருக்கும் இடத்திற் கழைத்துப்போய் நல்ல புற்களையும் தழைகளையும் தானாகவே சேகரித்து அதற்குக் கொடுத்தான். பசுவும் கரையோரம் வளர்ந்த பசும்புல்லை மேய்ந்து கொண்டே இருந்தது. ஸூர்யன் அஸ்தமிக்கும் ஸமயம். அப்பொழுதுசிறுவன் பசுவைத்தட்டிக்கொடுத்து "உன் வயிறு நிறைந்ததா? பசியடங்கியதா?" என்று கேட்டான்.

அப்பசுவும் முன் போலவே
"வயிறு நிறைந்தது முத்தண்ணா
பசியு மறைந்தது முத்தண்ணா
வயிற்றி லிடமில்லை முத்தண்ணா
இலைக்கு மிடமில்லை முத்தண்ணா
அம்மேய! அம்மேய !!''

என்று பதில் சொல்லியது. சிறியவனும் பசுவை வீட்டிற் கோட்டி வந்து கொட்டிலில் கட்டினான். தகப்பன் மகனைப்பார்த்து "பசு நன்றாக மேய்ந்ததா?" என்று கேட்டான். "ஆகா வயிறு நிறைந்தது, இலைக்கு மிடமில்லை என்றதுவே சொல்லியதே" என்று பதில் சொன்னான்.

நம்பாத தகப்பன் தன்பசுவிடம்போய்தடவிக்கொடுத்து "வயிறு நிறைந்ததா?" என்று கேட்டான். அந்தப்பொல்லாத பசுவும்

"கல்லு மேலே ஓட்டி
முள்ளுமேலே மாட்டி
காலெல்லாம் ஒடிஞ்சு
வாலெல்லாம் மடிஞ்சு
சேறையெல்லாங் குடித்தால்
கோறையெல்லாங் கடித்தால்
வயிறெப்படி நிறையும்? வயிறெப்படி நிறையும்?
அம்மேய! அம்மேய!! ''

என்று பதில் சொல்லியது. தகப்பனுக்குக் கோபம் தலைக்குமேல் வந்துவிட்டது. சிறுவனை அடித்து ஊரைவிட்டோட்டி விட்டான்.

அடுத்த நாள் குடியானவன் தானே அந்தப்பசுவை அவிழ்த்துத் தட்டிக் கொடுத்து மேய்க்க அழைத்துப் போனான். ஸாயங்காலம் வரையும்மேயவிட்டு,ஸந்திவேளையில் பசுவைத் தடவிக்கொடுத்து "வயிறு நிறைந்ததா?" என்று கேட்டான். பசுவும்,

"வயிறு நிறைந்தது முத்தண்ணா
பசியுமொழிந்தது முத்தண்ணா
வயிற்றிலிடமில்லை முத்தண்ணா
இலைக்கு மிடமில்லை முத்தண்ணா
அம்மேய! அம்மேய!! ''

என்று பதில் சொல்லியது. உடனே அவன் அதை வீட்டிற்கழைத்து வந்துகொட்டிலிற் கட்டினான். மறுபடியவனுக்கு அதற்குத்தீனி போதுமோ போதாதோ என்று ஸந்தேகம் உண்டாக கொட்டிலிற்குப் போய் "வயிறு நிறைந்ததா?" என்று பசுவைக் கேட்டான் அதுவும் தாமதியாமல்,

"கல்லு மேலே ஓட்டி
முள்ளுமேலே மாட்டி
காலெல்லாம் ஒடிஞ்சு
வாலெல்லாம் மடிஞ்சு
சேறையெல்லாங் குடித்தால்
கோறை யெல்லாங் கடித்தால்
வயிறெப்படி நிறையும்? வயிறெப்படி நிறையும்"
அம்மேய! அம்மேய! "

என்று பதில் சொல்லியது. இதைக் கேட்டதுங் குடியானவன் தான் தன் மக்களை வீட்டைவிட்டோடிய அநீதியை அறிந்தான். கோபமும் அவனுக்குண்டாக "கொள்ளிப்பசு சற்று இரு! உன்னைத்துரத்தி அடிப்பது ஒருதண்டனை யாகாது! உனக்கு நன்றாக சூடுகிறேன், புளுகன் பொய்யன் என்று சூடுகிறேன் அவமானப்படுத்துகிறேன். பின் யார் முன்னும் வரமாட்டாய்" என்று சொல்லிக் கொண்டு உள்ளே நெடுநாளாய் வைத்திருந்த முள் தடியைக் கொண்டதை நொறுக்கினான். அது அடி பொறுக்காது, பெரும் பயமடைந் தோட ஆரம்பித்தது.

பசுவும் ஓடிவிட்டது. குடியானவன் தனியாய் மனவருத்தத்துடன் இருந்தான். அவன் மக்கள் அவனிடம் வந்தால் அவனுக்குப் பேரானந்தந்தான். ஆனால் எங்கவர் இருக்கிறார்கள் எப்படியவர் வரமுடியும் என்றவனுக்குச் சந்தேகம்.

நிற்க பெரியமகன் ஓர் தச்சனிடம் அமர்ந்து அவனிடம் வேலைகற்று வேலைசெய்து கொண்டிருந்தான். தச்சன் அவனுடைய நல்ல குணத்தையும் கெட்டிக்காரத்தனத்தையுங் கண்டு மெச்சி ஒரு கிண்ணியைக் கொடுத்தான். அது ஸாதாரணமாகத்தான் இருந்தது ஆனால் அதை வைத்துக் கவிழ்த்தால் எத்தனைப்பேர்க் கானாலும் பஞ்ச பக்ஷபரமான்னங்களுடன் அன்னம் வடிக்கும். இதைப் பெற்றுக்கொண்டதும் "நமக்கினிக் குறையில்லை" என்று எண்ணிக்கொண்டு கவலையில்லாமல் தேசஸஞ்சாரம் செய்துகொண்டிருந்தான். கொஞ்ச நாளானதும் அவனுக்குத் தன் தகப்பனைக் காணவேண்டுமென்ற ஆவலுண்டாகியது. கோபமடங்கி யவர் தன்னை வரவேற்பார் என்றவன் எண்ணினான். உடனே தனது கிண்ணியைப் பத்திரப்படுத்திக்கொண்டு ஊருக்குத் திரும்பினான்.



வரும் வழியில் ஓர் ஸத்திரத்தை அடைந்தான். அங்கு கணக்கற்ற விருந்துகள் சாப்பிடவந்திருப்பதைக்கண்டான். அவர்கள் எல்லாரும் "சீக்கிரம் வாரும்! இல்லாவிட்டால் உமக்குச் சோறு கிடையாது; கிடைக்காது" என்று சொன்னார். இதைக் கேட்ட குடியானவன் மகன் "உங்கள் சோற்றை நான் திருடவரவில்லை. அதில் ஒரு பருக்கையும் எனக்கு வேண்டாம், உங்களுக்கு விருந்து செய்யவேண்டுமென்றெனக்கு ஆவலிருக்கிறது. வாரும் உட்காருங்கள்" என்று சொன்னான்.

இதைக்கேட்டதும் எல்லாருஞ் சிரித்து அவன் பரிகாசம் செய்கிறான் என்று எண்ணினார்கள். ஆனால் குடியானவன் மகன் தனது கிண்ணியைக் கவிழ்த்தான். உடனே கணக்கற்ற ஆள்கள் வந்து உயர்ந்த பாத்திரங்களில் அன்னம் முதலியவையெடுத்து வந்து வெகு சுத்தமாக யாவரும் வியக்கும்படி இலை போட்டன்னமிட்டார்கள்.

அப்போது குடியானவன் மகன் எல்லாரையுமழைத்து "சாப்பிடுங்கள்; சாப்பிடுங்கள்" என்று வருத்தினான், இதைக் கேட்டதும் எல்லாரும் "அன்னதாதாஸுகீபவ!" என்றுசொல்லிக்கொண்டு கைக்கும் வாய்க்குமாகச் சண்டை இடலானார்கள். இதை எல்லாம் மூலையிலிருந்து ஸத்திரக்காரன் மூக்கின்மேல் கைவைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

உண்டானதும் எல்லாரும் களித்துக் கூத்தாடி ஆடிப்பாடி ஓய்ந்து தூங்கலானார்கள். குடியானவன் மகனும் கிண்ணியைத் தலைக்குக் கீழ் வைத்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தான். ஸத்திரக்காரன் கவலையுடன் தன்னிடமிருந்த ஒரு கிண்ணியை அவன் தலைக்கீழ்வைத்துவிட்டு அன்னம் வடிக்கும் மாயக்கிண்ணியைத் தானெடுத்துச் சேகரித்துக் கொண்டான்.

காலை புலர்ந்ததும் குடியானவன் கிண்ணியை எடுத்துக்கொண்டு தகப்பனிடம் போகப் புறப்பட்டான். மத்தியானம் பதினைந்து நாழிகை வேளைக்கவன் தன் தகப்பனைக்கண்டு வந்தனஞ்செய்தான். தன் மகனைக் கண்டதும் ஸந்தோஷத்துடன் தகப்பன் மகனுடைய க்ஷேமலாபங்களைக் கேட்டான். அவனும் தான் தச்சனாக ஆனதைப்பற்றிச் சொன்னான். தனக்குத் தன் உபாத்தியாயர் கொடுத்த மாயக்கிண்ணியின் மகிமையைச்சொன்னான். பின் ஊரை எல்லாம் விருந்துக்கு அழைக்கும்படிச் சொன்னான். அவனும் அப்படியே செய்ய குடியானவன் வீட்டிற்குச்சாப்பிட எல்லாரும் வந்தார்கள். குடியானவன் மகனும் கிண்ணியைக் கவிழ்த்தான். ஆனால் ஒன்றும் புறப்படவில்லை. சோறுமில்லை; சோறிடுவாருமில்லை. எல்லாரும் அன்று ஏகாதசி கொண்டாடி வீட்டிற்குப்போனார்கள். தந்தையும் தலை கவிழ்ந்திருந்த மகனை வைதான்.

பின்தான் நிலத்தை உழவாரம்பித்தான். மகனும் வெளியில் தச்சவேலையி லமர்ந்து வேலைசெய்து வந்தான்.

நிற்க. இரண்டாவதுமகன் ஒருயந்திரசாலையிலமர்ந்து வேலைசெய்தான். சிறிதும் சோம்பலில்லாமல் ஸத்தியம் தவறாமல் அவன்செய்த வேலைக்கு மெச்சி யந்திரத்தலைவன் ஒரு கழுதையை இனாமாக அவனுக்குக் கொடுத்தான். அதன்கீழ் ஓர் பட்டுத்துணியைவிரித்து "சரிவேசரிவே" என்றுசொன்னால் அதுபொன்னாகவே துப்பும். அந்தக் கழுதையை அழைத்துக்கொண்டவன் சிலநாள் தேசஸஞ்சாரஞ்செய்து பின் தன் தந்தையிடம் போக எண்ணிப் புறப்பட்டான். வரும்வழியில் தன் தமையன் இறங்கிய ஸத்திரத்திலேயே இறங்கினான். கழுதையை லாயத்தில் விடத் தானே போனான். இதைக்கண்ட ஸத்திரக்காரன் "நான் போய் கட்டிவருகிறேன்" என்று சொன்னான். "என்னத்திற்கு? வேண்டாம். நானே போய்கட்டிவிடுகிறேன். உங்களுக்கேன் அவ்வளவு கஷ்டம்?" என்று லாயத்திற்கட்டிக் கதவைத்தாளிட்டுப் பூட்டிவந்தான்.

ஸத்திரக்காரனுக்குக்கொஞ்சம் ஸந்தேஹம். தன்கழுதையைத் தானே அழைத்துப் போனவனுக்குக் கையிற்காசியில்லாமலிருக்குமென்றெண்ணினான். ஆனால் அவன் கையில் இரண்டு வராஹனைக் கொடுத்து "அன்னமிடு" என்று சொன்னதும் அவனுக்கு ஆச்சர்யம் உண்டாயிற்று. அதிருசியான போஜனத்தை அவனுக்குச்செய்வித்தான். உண்டானதும் குடியானவன் மகன் "உமக்கென்ன இன்னும் சேரவேண்டும்?" என்று கேட்டான். அவனும் வந்த வரையும் லாபமென்றுஎண்ணிக்கொண்டு "இரண்டுவராகன்" என்றான். தன்னிடமிருந்த பையில் கையைப் போட்டதில் பணமில்லாமையைப் பார்த்து "இரும் இதோ பணம் கொண்டுவந்து தருகிறேன்" என்று சொல்லி கழுதை கட்டிய லாயத்துடம்போய் கதவைத்திறந்து உள்ளேபோய் தாளிட்டுக் கொண்டான். ஸத்திரக்காரனும் ஆச்சர்யத்துடன் குடியானவன் மகன்பின்னேயே வந்தான். கதவைத் தாழிட்டுக்கொண்டு பட்டைவிரித்து "சரிவேசரிவே" என்று அவன்சொல்வதைக் கதவின் ஓட்டைவழியாகப் பார்த்தான். பொன்னை அக்கழுதை துப்புவதையுங் கண்ணுறக் கண்டான்; "ஆஹா! பொன் நாணயமிடும் தங்கசாலையோயிது! இது நமக்கிருந்தால் நலமாயிருக்கும்" என்று எண்ணிக் கொண்டான்.

இராத்திரியானதும் எல்லாரும் தூங்கிய பின்பு மனோவேதனை பிடித்த சத்திரக்காரன் ஸாதாரணகழுதை ஒன்றைமாற்றி தங்ககாலைத்தலைவனைத் தனதாக்கிக் கொண்டான். காலையானதும் சிறுவன் கழுதையை அழைத்துக் கொண்டு தகப்பனிடம் போகப்புறப்பட்டான். மத்தியானம் பன்னிரண்டு மணிவேளைக்குத் தந்தையிடம்வந்து வந்தித்தான். தகப்பனும் சிறுவனை வாழ்த்தி க்ஷேமலாபங்கள் விசாரித்தான். அவன்

தன் கதை எல்லாம் சொல்லி கழுதையின் பெருமையையும் சொன்னான். பின் தன் உறவினரை எல்லாங் கூப்பிட்டு ஸமாவர்த்தனம் செய்யும்படி தந்தைக்குச் சொன்னான். அவனும் அவ்வாறே செய்து முன்போலவே முகங்கோணி நின்றான். பின்னென்ன வெட்கக்கேடான காரியஞ் செய்தோம் என்று ஏங்கித் தன் வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தான். இரண்டாவது மகனும் ஒரு யந்திரசாலையில் வேலைக் கமர்ந்து ஊழியஞ் செய்தான்.

நிற்க. குடியானவனது மூன்றாவது மகன் கடைசல் வேலை செய்பவனிடம் வேலைக்கமர்ந்து அவ்வேலையைக் கற்றுக்கொண்டான். அவனும் சிறுவனது வேலைக்கு மெச்சி ஒருபையைக் கொடுத்தான். அந்தப் பையில் சிறு தண்டம் ஒன்றிருந்தது. "இந்தப்பை எனக்குதவும்; இத்தண்டம் எனக்கேன்?" என்று சிறுவன் தன் தலைவனைக் கேட்டான். அதற்கவன் "உன்னை யாராவது தொந்தரை செய்தால் "தண்டமே கோணிவிட்டு வா" என்றால் வந்து எல்லாரையும் புடைக்கும். நீயாக "தண்டமே கோணிக்குள் போ" என்றுமொழிய அவரை அது விடாது என்று சொன்னான். அதன் உதவியைக்கொண்டு சிறுவன் தேசஸஞ்சாரம் செய்து தன் முன்னோர்கள் இறங்கிய ஸத்திரத்தில் தன் தகப்பனிடம் போக எண்ணி வரும்பொழுதிறங்கினான்.

அங்கு சாப்பிட்டானதும் ஸத்திரக்காரன் தான் கண்ட புதுமைகளை எல்லாம் சொன்னான். சிறுவனும் தான் கண்டவற்றை எல்லாம் சொன்னான், மேலும் "கவிழ்த்தால் அன்னமிடுங் கிண்ணி; பொன் நாணயமிடுங்கழுதை;—இவைகளைப்பற்றி பேசுவதில் என்னப் பிரயோஜனம்? என்னிடம் ஒன்றிருக்கிறது. அது இவை எல்லாவற்றையும் தோற்க அடிக்கும்" என்று சொன்னான்.

பேராசைப் பேயாலாடும் ஸத்திரக்காரன் அதையுங் கொள்ளையடிக்க வேண்டுமென்று எக்கங் கொண்டான். தூக்கமில்லாமல் அவன் நடுராத்திரியில் விழித்திருந்தான். சிறுவனும் இவனுடைய விழிப்பையறியாதவன்போலத் தன் பையைத் தலைக்கணையாக வைத்துக்கொண்டு தூங்குபவன்போல விருந்தான். ஸத்திரக்காரனும் நித்திரை சோதித்து சிறுவன் தலைக்கீழ் இருக்கும் பையை எடுத்து ஒரு தலையணையை வைத்தான். அதுவரையும் சிறுவன் சும்மா விருந்தான்.

தன் பையை எடுத்ததுதான்; "தண்டமே கோணிவிட்டு வா" என்றான். உள்ளிருந்த சுக்குமாந்தடி மெதுவாக ஸத்திரக்காரனைத் தடவிக்கொடுத்து பின் விலாமுறிய அடிக்க ஆரம்பித்தது. "ஹா! ஹா!" என்றவன் அலறினான். ஆயினுமவனை அது விடவில்லை. அடிமேல் அடி ஓயாமல் விழுந்துகொண்டேயிருந்தது. உடம்பெல்லாந் தழும்பேறி ஸத்திரக்காரன், குடியானவன் மகன் காலில்விழுந்து கும்பிட்டான்; அழுதான்; காப்பாற்றும் என்று வேண்டினான். சிறுவனும் "அந்தக் கிண்ணியையும் கழுதையுங் கொடுத்தால் விடுவேன்" என்று அந்தப்பையைக் கையிலெடுத்தான். பின் ஸத்திரக்காரன், அதற்கொப்பி அவற்றைக்கொண்டுவந்து சேர்ப்பித்தபிறகு "தண்டமே கோணிக்குள் போ" என்றுசொன்னான். பின் எல்லா சாமான்களையும் எடுத்துக்கொண்டு குடியானவன் தந்தையிடம் புறப்பட்டான். தந்தையைக் கண்டு ஸந்தோஷத்துடன் வணங்கினான். வணங்கினவனை வாழ்த்தி க்ஷேமலாபங்களை விசாரித்தான். பின் தனது ஸமாசாரங்களைச் சொல்லி சுக்குமாந்தடியின் பெருமையைச் சொல்லப்போனான்.

"தடியா! எந்த மரத்தில் வேண்டுமென்றாலும் உடைத்துக்கொள்ளலாம்" என்று தந்தை தடுத்தான். மேலும் "நீ என்ன கற்றுவந்தாய்?" என்று கேட்டான். "கடைசல்வேலை கற்றுவந்தேன்" என்று பதில் சொன்னான். பதில் சொல்லிவிட்டு அவன் "இந்தப் பையில் ஒரு கழி யிருக்கிறது. அதைக் கொண்டு நமது பகைவர்களை எல்லாம் நமது காலில் வந்துவிழ நாட்டியஞ் செய்விக்கலாம்" என்று சொன்னான். மேலும் "அது மாத்திரமில்லை, என்னண்ணன்மாரை ஏமாற்றிய ஸத்திரக்காரனிடமிருந்த கிண்ணத்தையுங் கழுதையையுங் கொண்டுவந்திருக்கிறேன். உமது உறவினரை எல்லாம் அழைத்துவாரும். விருந்திடுவோம்; பூரிகொடுப்போம்" என்றான்.

குடியானவன் நம்பவில்லை; ஆனாலும் எல்லாரையும் அழைத்தான். எல்லாரும் வந்தார்கள்.

குடியானவனுடைய கடைசி மகன் தன் முதல் அண்ணனைக்கூவி கிண்ணியைக் கவிழ்க்கச் சொன்னான். அது விமரிசையாக எல்லார்க்கும் அன்னமிட்டது. மற்றோர் அண்ணனைக் கூப்பிட்டு பட்டை விரித்துக் கழுதைக்குக்காதில் "ஸரிவேஸரிவே" என்றுபதேசஞ் செய்யச் செய்தான். தூக்க முடியாப் பணத்தை அது துப்பியது.

எல்லாரும் வயிறு நிறைய உண்டு கை நிறைய வராஹன் கொண்டு குடியானவனை வாழ்த்தி விட்டு வீட்டிற்குப் போனார்கள். பின் குடியானவன் தன் சிறு தொழிலை விட்டு மேடைமாளிகைகட்டி பெரிய சவுகாராக விளங்கினான். அவனுக்கென்ன குறை?

அந்தப் பசுவின் பாடு என்னவாயிற்று தெரியுமா? சூடிட்டதனால் தன்னைக்கண்டு தன் இனத்தார் பரிஹாசஞ் செய்வாரென்று அது ஓர் நண்டு வளையில் ஒளித்துக் கொண்டது. ஆனால் நண்டு கடிக்கவே பயந்து வெளி வந்து நரியின் பொந்தொன்றில் ஒளிந்து கொண்டது.

நரி மீண்டு வந்து தன்னிருப்பிடம் வந்தபோது அதில் இரண்டு நெருப்புக் கோளங்கள் பிரகாசிக்கப் பயந்தோடியது. வழியில் ஓர் கரடியைப் பார்த்தது.



"என்ன அண்ணா! ஜம்புகரே! முகத்தில் கவலை விளங்குகிறதே" என்று ஜாம்பவான் கேட்டார்.

"என்னவா? ஜாம்பவந்தரே! என் வீட்டில் நெருப்புக்கண் பிராணி குடி கொண்டிருக்கிறது. என்ன செய்வேன்? நிற்க நிழலில்லை" என்றது.

"நாம் இருவருமாக சென்றதை ஓட்டிவிடுவோம்" என்று சொல்லிக்கொண்டு நரியின் பொந்தண்டை வந்து எட்டிப்பார்த்தது. ஆனால் அந்தப் பொல்லாப் பசுவின் கண்கள் அந்த இருட்டுப் பொந்தில் நெருப்புபோல் ஜ்வலித்தது. அக்கண்களைக் கண்டதும் ஜாம்பவான் உடல் முழுதும் நடுங்க வாரம்பித்து விட்டது. பின் தன்னால் ஒன்றுஞ்செய்ய முடியாதென்று ஓடி வந்தது.

ஆனால் வரும் வழியில் மதுகரம் என்னும் தேனீயைக் கண்டது. அது "மித்ரா! ஜாம்பவா! என்ன முகங்கோணி இருக்கின்றது? என்ன கஷ்டம் வந்துவிட்டது?" என்று கேட்டது.

"நண்பனே! நன்று கேட்டாய். என் நேசன் ஜம்புகன் வீட்டில் தீக்கண்ணன் குடியேறி இருக்கிறான்; நேசன் இடமில்லாமல் தவிக்கிறான். எனக்கு அதை ஓட்ட பயமாயிருக்கிறது. அதுதான் அலைகிறேன்" என்று ஜாம்பவான் பதில் சொல்லும்போதே மதுகரன் பசுவின் கண்மேல் பாய்ந்து கொட்டினான்.

வலி பொறுக்க முடியாது அப்பசு "அம்மே! அம்மே!!" என்று கத்திக் கொண்டு எடுத்தது ஓட்டம். தலைகால் தெரியாமல் அது ஓடிப்போகும்போது வழியில் பாழ்ங்கிணற்றில் விழுந்து ஆகாரமில்லாமல்வாடி வதங்கி யமனூரைக்காணப் பிராயணம் போயிற்று. காக்கைகளுங் கழுகுகளும் தமக்குத் தக்க விருந்து கிடைத்ததென்று கூட்டங்கூடிக் குலாவி பண்டிகை கொண்டாடின.

---

**நெல்லுக்கு உரம்.**—எந்த வயல்களுக்கு லாரல் பிண்ணாக்கு, எலும்புரம், வெடியுப்பு இம்மூன்று எருக்களும் போடப்பட்டதோ அவைகள் நன்றாய்ப் பலித்து அபரிமிதமான அறுவடையைத் தரும். லாரல் பிண்ணாக்கைப் போட்ட வயலின் வருமானம் மாட்டுச்சாணி எரு போடப்பட்ட வயலைக் காட்டிலும் ஜாஸ்தி. இதனால் லாரல் பிண்ணாக்கு சாணி எருவைக் காட்டிலும் மேல் என்று ஏற்படுகிறது. வெடியுப்பை ஒரு எகருக்கு 100-ராத்தலுக்கு மேல் படாமல் போட்டு, கூட எலும்புரமும் சாணி அல்லது பிண்ணாக்கு எருவும் போட நல்ல அறுவடை கொடுக்கும். அபரிமிதமான வருமானம் ஏற்பட பின் சொல்லப்படும் உரம் நல்லது. (i) லாரல் பிண்ணாக்கு 1 கண்டி, (ii) எலும்புரம் 240-ராத்தல், (iii) வெடியுப்பு 100-ராத்தல் இவற்றின் மொத்தம் விலை ரூபா 280-க்கு மேலாகாது.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### சாந்தை அல்லது பொறுமையினிலை

### 6. வினைமுளை காதை

அதே ஸமயத்தில் மண்டனன் "ஏதோ நேசத்தைக் கொண்டாவது, உன்னுடைய உத்யோகநிலையின் பொருத்தத்திற்காவது பயந்து ஏறக்குறைய உண்மையை மூடி மறைத்துப் பேசினால் நீ வீரனாக மாட்டாய்" என்று படும்படி அயோக்யனைப்பார்த்துச் சொன்னான்.

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்றபடி அயோக்கியனுக்கு இம்மொழிகள் வெகு உபயோகமாயின. அவனுக்குக் காச்யபனைத் தனது பகைமையைக் காட்டாமலே தொலைக்க வேண்டும் என்றஎண்ணம் உண்டு. நயமொழிகள் பேசுவது போலவே நஞ்சிடுவ தவன் ஸ்வபாவம். அதற்குத் தகுந்த கருவிகள் கிடைத்தால் வேலைசெய்யு மூளை சும்மா இருக்குமா? வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல யாருமறியாத படிக் காரியங்களைச் செய்யாதா? அதுவும் எவ்வளவு நயமாக ஏறுமோ அதேவிதமாக யாவருங் கொண்டாடும்படி மண்டனைப்பார்த்துச் சொல்லுகிறான்:—

"தாங்கள் அவ்வாறு சொல்லி என்மனதைப் புண்படுத்துவது தகாது! காச்யபர்மேல் வீண்பழி சுமத்த நான் ஒருநாளும் ஸம்மதியேன்; அவ்வாறு செய்வதைக் காட்டிலும் என் நாக்கை என் வாயினின்றும் அறுத்தெறியச் சம்மதிப்பேன். அப்படி இருந்தாலும் நான் உண்மையைச் சொன்னால் அவருக்குச் சிறிதுங் கெடுதி உண்டாகாதென்று என்னைத்திடப் படுத்திக் கொண்டு சொல்வேன். சேனாபதி! இது தான் நடந்தது; கேளும். நானும் மண்டனரும் பேசிக்கொண்டிருந்தோம். எவனோ ஒருவன் "காப்பாற்றும் காப்பாற்றும்" என்று கூவிக்கொண்டு ஓடிவந்தான். உருவிய கத்தியுடன் அவன் உயிரை வாங்குந் தீர்மானத்துடன் அவனைப் பின்பற்றிக் கொண்டு காச்யபர் வந்தார். இந்தப் பிரபு காச்யபரிடம்போய் அவரைத்தடுத்துச்சமாதானப்படுத்தினார்; வேண்டினார். நான் கத்திக்கொண்டிருந்தவனைப் பின்பற்றப்போனேன். ஏனென்பீர்களோ? அவன் எங்கு அவனுடைய கூச்சலால் ஊரைக் கலக்கி விடுவானோ என்று பயந்தேன்; — அது அப்படியே தான் கடைசியாக நடந்து விட்டது — ஊரொங்கு பயந்து நிலைகுலைந்து விடுமோ என்று நடுங்கினேன்; ஆனால் அவன் கால் நீளம் எனக்கேது? அவன் என் கைப்பிடியில் அகப்படாமலே போய்விட்டான்; நான் நினைத்த எண்ணமுங் கெட்டுவிட்டது. இதற்குள் கத்திமேல்கத்தி உராய்ந்து செய்த ஓசை காதிற்பட்டதும் பரபரப்புடன் ஓடி வந்தேன். என்னவென்று

சொல்வது! நான் என்றுங்கண்டதில்லை, என்ன கூச்சல்! என்ன ஸத்யம்! என்ன ஆவேசம்! இன்று இராத்திரிதான் காச்யபர் அவ்வாறு எல்லாம் செய்யப் பார்த்தேன். இதற்குமுன் நான் கண்டதே இல்லை. நான் திரும்பி வந்ததும்—இதுதான் கண்டது; நான் சுருக்கமாகவே சொல்லுவேன். இவர் இருவரும் கைக்குள் கைகலந்து அடியுங் குத்தும் வெட்டுமாக நெருங்கிப் புடைத்துக் கொண்டிருந்தார்கள். தாங்கள் வந்து தடுக்கும்வரை அப்படித்தான் அவரிருந்தார்கள். இதற்கு மேல் நான் என்ன சொல்லமுடியும்,—எப்படியிருந்தாலும்மனிதஸ்வபாவந்தானே! யானைக்கும் அடி சறுக்கும். அது என்ன ஆச்சரியம்! தமக்கு நன்மை செய்பவர்களையே கோபத்திற்காளானவர் புடைப்பதுபோலக் காச்யபர் ஒடியஅவனுக்குச்செய்ததீங்கு சிறிதுதான்; அதுவும் அவன் பொறுமையைக் கடந்து கோபங்கொள்ளும் படியான பெரும் அவமரியாதையை அவருக்குச் செய்திருக்கவேண்டும் என்று நம்புகிறேன்."

இவ்வாறு அயோக்யன் பாலுக்குங்காவல் பூனைக்குந் தோழன் என்னும்படி இரண்டுபடப்பேசினான். கேட்டதும் உத்துல்லனுக்கு அடங்காக் கோபம் வந்தது. அவனுக்கு அயோக்யன் சொன்னது நியாயமாகப்பட அயோக்யனைப்பார்த்து "உன் அன்பும் உண்மையும் நடந்ததைக்கூடமாகச் சொல்லச் செய்கிறது" என்று கொண்டாடிக் காச்யபனைநோக்கி "காச்யபா! உன்னை நான் நேசிக்கிறேன்; உன்னிடம்பேரன்புதான்; ஆனால் என்னிடம் உத்தியோகம் மாத்திரம் உனக்கு வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது அங்கு சாந்தை கண்ணை நிமிண்டிக் கொண்டு வந்தாள். அதைக்கண்ட உத்துல்லன் "பார்த்தையா! உங்கள் கூச்சல் அவளையும் எழுப்பிவிட்டது! ஆகட்டும் உனக்குத்தகுந்தபுத்தி செய்விக்கிறேன்" என்று காச்யபனிடம் தன் வெறுப்பைக் காட்டினான்.

அப்பொழுது சாந்தை ஸமாசாரம் என்னவென்று கேட்டாள். "இப்பொழுதெல்லாம் நல்லதாய் விட்டது; வா, போகலாம்; படுக்கப்போகலாம்வா" என்று உத்புல்லன்சொல்லிஸமாதானப்படுத்தி மண்டனனுக்குத் தகுந்த சிகிச்சை செய்யும்படித் திட்டஞ்செய்து விட்டுப் போனான்.

யாவரும்போனார்கள்; ஆனால் காச்யபனும் அயோக்யனும் அங்கேயே இருந்தார்கள்.

## 7. வினை தழை காதை

உத்புல்லன் அயோக்யனை ஊரின் அமைதியைக்காக்கச் சொல்லிப்போனான். நடந்த குடிச்சண்டையால் அலண்டவரை அடக்கும்படியுஞ் சொல்லிப்போனான். அயோக்யன் மனஞ் சிந்தித்துக் கொண்டே இருந்தது. அவன் வினையின் முதலஸ்திரவாரங்கள் நன்றாகப்போடப்பட்டன என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். காச்யபனிடம் உத்துல்லன் கொண்ட அன்பை அறுக்க முதல் வேலை செய்தாகி விட்டது. உத்தம காச்யபன் அயோக்யனுடைய வஞ்சனையால் பதவியிழந்த பரிபவமடைந்து விளங்கினான். மேலுமவன் மூலமாகவே உத்துல்லனையும் அவன் மனைவியையும் கெடுக்க எண்ணமிட்டான் அயோக்யன். ஆகையால் அயோக்யன் ஒட்டைச் சட்டியானாலும் பணியாரஞ் சுடுவதென்றெதான் என்ற ஆத்திரங்கொண்டவனைப் காலதாமஸஞ்செய்ய இஷ்டமில்லாமையால் காச்யபனிடம் அத்யந்தப்பிரியங்காட்டிக் கொண்டான். அவ்வாத்ஸல்யத்தை உண்மை என்று நம்பி அக்காச்யபன் தனக்குந் தெரியாமல் விரித்துவைத்திருந்த வலையில் விளக்கைப் பழமென்று அண்டி யுயிர் விடும் விட்டிற்பூச்சிபோல் விழுந்தான்.

வரவர காச்யபனது புத்திமயக்கம் நீங்கியது. அவனுக்குத் தான் செய்தகாரியந் தவறானது என்று நன்றாகத் தெரிந்தது. என்ன செய்வான்?

"ஐயோ! என் மானம் போய் விட்டதே! ஐயோ! என் மானம் போய் விட்டதே!" என்றலறினான். மேலும் "என்ன ஊறு அடைந்து விட்டேன்" என்று சொல்லி துக்கிக்கலானான். "உங்களுக்குடம்பிலெங்காவது ஊறுபட்டதா?" என்று அயோக்யன் வெகு இங்கிதத்துடன் கேட்டான். "ஆமாம்! மருந்துக்கு மாறாத காயம்" என்று காச்யபன் சொல்ல "அப்படியில்லாதிருக்கக் கடவுள்காக்கட்டும்" என்று அயோக்யன் ஆசீர்வதித்தான்.

ஆனால் காச்யபனுக்குத் தன்வினை தன்னைச்சுடமனம் நொந்தான், "புகழ்! பெருமை! கௌரவம்!—ஹா! என் கௌரவமே தொலைந்துவிட்டதே! என் அழியா உடம்பை அழித்துவிட்டேன். இனி என்னிடமிருப்பது என்ன? மிருகங்களுங் கொண்டாடும் வெற்றுடம்புதான்! என்ன மானபங்கம்! அயோக்யா! என்கௌரவம் என்னவாயிற்று!" என்று தனது துன்பத்தை வெளியிட்டான்.

இதைக் கேட்டதும் அயோக்யன் "நான் என்ன? வெளுத்ததெல்லாம் பால் கறுத்ததெல்லாம் நீர் என்றிருப்பவன், உண்மையாக உமக்கு உடம்பில்தான் காயம் ஏதோபட்டதென்று எண்ணினேன். மானத்திற்கு ஹானியைக்காட்டிலும் தேஹஹானி என்றால் பொறுக்க முடியாது; பெருந்துன்பத்தைத்தரும். மானம் என்பதெல்லாம் வெளித்தோற்றம்; தாமாகவே மேற்கொள்ளும் மாயவேஷம். தகுதியில்லாமலே பொதுவிலது உண்டாயது; நியாயமற்றே பலமுறையு நாசமடைவது. உனக்கொரு மான பங்கமும் நேரவில்லை; தாங்களவ்வாறு உமது மானத்தை கெட்டுப்போக்கிவிட்டதாக எண்ணினால்தான் அப்படி இருக்கும். எல்லாவற்றிற்கும் மனது தான் காரணம். மனத்தின்விசாலத்தால் நரகமும் ஸ்வர்க்கமாய்விடும்; அதன் குறுக்கத்தால் ஸ்வர்க்கமும் நரகமாகக்குன்றிவிடும். எல்லாம் மனத்தின் சேஷ்டை. அப்படித்தான் இருக்கட்டும். போனமானம் மீண்டும் வாராதா?



[stamp]

தாங்கள் என்ன? மனுஷ்யர்தானே? ஏன் இந்த அதைர்யம்? போனமானத்தை மீண்டும் உங்களால் ஸம்பாதிக்க முடியாதா? நீர் சேனாதிபதியின் பிரீதிக்குப்பாத்திரனாக எத்தனையோவழிகள் இருக்கின்றன. உம்மையவர் விலக்கியது கோபத்தின் கோளாற்றால் இருந்தாலும் வெறுப்பு கொண்டன்று; இராஜதந்திரத்தை யுத்தேசித்துத்தான். "நோகாது அடித்தேன்! ஓயாது அழுதேன்!" என்ற கதைத்தான். அவரை அண்டி மன்றாடினால் அவர் மனம் இளகும்; பின் அவர் உமக்கே சொந்தம்" என்று உபாயசித்தான்.

இதைக்கேட்டதும் காச்யபன் தன் கண்களில் நீர்ததும்ப "வெகுஅழகிது! குடிப்பது, வெறிகொள்வது, கூத்தாடுவது, மதிமயங்கி வாய்க்கு வந்ததெல்லாம் பிதற்றுவது, இவை எல்லாஞ்செய்த அற்பன், நான், அந்த உயர்ந்த குணம் வாய்ந்த சேனாபதி முன்போய் என்னைக்காப்பாற்றுஎன்று மாயஞ்செய்வதைக் காட்டிலும் வெறுக்கும்படி வேண்டிக்கொள்ளலாம். குடிப்பது மாத்திரமா? சொன்னதைச் சொல்லுங் கிளிப்பிள்ளைபோல் காதில் விழுந்ததை எல்லாங் கலந்து மயங்கிக் கூச்சலிடுவதுமா? அதற்குமேல் நடுச்சந்தியில் சந்தடிச் சண்டையா? அதற்குமேல் வீண்பெருமை, ஸத்யம். அதோடு நிற்காமல் மயக்கந் தலைக்கேறத் தன்னிழலைத்தானே கண்டு அதனுடன் தாறுமாறாகச் சம்பாஷித்தல்!—வேறென்ன குறைச்சல்?—கள்ளில் கண்களுக்குத் தெரியாமல் விளங்கும் பூதமே! உன்னை நாமமிட்டழைக்க பெயரொன்றுமில்லாவிட்டால் பாழும் பேயே! பாரிடமே! என்றுனக்கு நாமகரணஞ்செய்வேன்" என்று தன் கோபத்தை அக்கள்ளின்மேல் செலுத்தினான்.

அயோக்யனுக்குக் கொண்டாட்டம். காச்யபன் மனதைக் கலக்கி துன்பமுண்டாக்க வேண்டுமென்பதவன் எண்ணம். என்னமோ விசாரிப்பவன்போல் விசாரித்து, வாயால் வெளியிடும் தனது மொழிகளாக காச்யபன் தான் செய்தது பெருந்தவறு என்றறியும்படிசெய்து, அவ்வெண்ணங் காச்யபனைத் தூண்டி வேலை செய்யவேண்டும் என்பதேஅவன் அபீஷ்டம். அதற்குஇணங்க அயோக்யனும் "யாரையோ தாக்கிக் கொண்டு கத்திக் கொண்டு போனீர்களே. அவன் உமக்கு என்ன தீங்கு செய்தான்?" என்று கேட்டான். இந்த ஸமாசாரத்தை அயோக்யன் அறியாதவனா? அவன் தானே ருத்ரகாமனை அழைத்து தகுந்த விதம் வேலை செய்யும்படி அதிகாரம் கொடுத்தது? ஆயினும் காச்யபன் மனதைப் புண்படுத்தவேண்டுமென்றே ஒன்றும் அறியாதவன்போலக் கேட்டான்.

அயோக்யனுடைய உள் எண்ணத்தை உணராது தன்னிடம் அனுதாபங்கொண்டு கேட்கிறான் என்றெண்ணி "அது எனக்கொன்றுந் தெரியாதே" என்றுகாச்யபன்பதில்சொன்னான். "அப்படி இருப்பது முடியுமா?" என்று அயோக்யன் மேலுந்தடுத்துக் கேட்டான். "எல்லாங்கலவரமாக எனக்குத் தோன்றுகிறது; கனவு கண்டாற்போல இருக்கிறது; ஆனால் எதுவும் தெளிவாக ஞாபகமில்லை. வீதி, ஒரு சண்டை; அதற்குமேல் என்னென்னமோ தெரியாது. பாழுந்தெய்வமே! தமது சித்தஸ்வாதீனத்தையே யழிக்கும் பகையை ஜனங்கள் வாய்க்குள்ளும் கொள்ளும்படிச் செய்வதா! என்ன மதிகேடு! கேளிக்கை, கூத்து, ஆசையோட்டம், கொண்டாட்டம் மதுவெறி இப்பஞ்சபூதங்களால் ஆட்டப்பட்டும், விவேகசூனியராய் கேவலம் மிருகங்களாக நாம் மாறிவிடுவதா?" என்று மேலுங்குடியின் கொடுமையைப் பற்றியே நொடித்தான். ஆயினும் அயோக்யன் "ஏன் இப்பொழுது தாங்கள் தெளிவாகத்தானே பேசுகிறீர்; நீர் எப்படி தெளிவடைந்தீர்" என்று மேலுங் கேட்டான். "கள்பேய் ஓடி கோபப்பேய்க்கிடங்கொடுக்க இஷ்டங்கொண்டது. துர்க்குணம் ஒன்று மாறி மற்றொன்றைக் காட்டுகிறது; உண்மையில் என்னை நானே வெறுக்கத்தான் செய்கிறது" என்றுமேலுங் காச்யபன் தன்னைத்தானே நிந்தித்துக் கொண்டான்.

காச்யபனது பச்சாத்தாபத்தைக்கண்ட அயோக்யன் வெகு கவலை கொண்டவன்போலக் காட்டிக் கொண்டு "இடம் பொருள் காலம் இவற்றைநினைக்குமிடத்தில் இந்த ஸம்பவம் நடவாதிருந்திருந்தால் நலமாயிருந்திருக்கும்; வந்தது வந்தாய்விட்டது. வீணே வருந்துவதில் என்னப் பிரயோஜனம்? இனி உமக்கு நன்மை உண்டாகும் வழியைத்தேடும்" என்று இங்கித மொழிகள் கூறுபவன் போலச் சொன்னான். காச்யபனும் "ஆமாம் அவரை அண்டி என் பதவியை மறுபடியுங் கொடுக்கும்படிக் கேட்கிறேன்; அவர் நீ குடிகாரன் என்று பதில் சொல்வார். ஆதிசேஷன் போலாயிரம் வாயிருந்தால் அவர் வார்த்தைகளை என் வாய் மொழிகளால் அடக்கிவிடலாம். ஒருவேளை நல்ல புத்திசாலி! அடுத்த ஸமயம் பெருமடையன்; க்ஷணத்திற்கப்புறம் கேவலம் மிருகப்பிராயம்! என்ன ஆச்சரியம்! மதுவிடும் பாத்திரம் ஒவ்வொன்றும் அருளற்றது; அதனுள் விழும்பொருளோ மாயாப் பிசாசின் அவதாரமே!" என்று மேலுமக்கள்ளையே பழிக்கலானான்.

இதைக்கண்ட அயோக்யன் "இவனுடைய மனதை வேறு விதத்தில் ஓட்டவேண்டும். நமது காரியத்திற்குத்தடையில்லாமல் சீக்கிரமுடிக்கவழி அதுதான். ஆகையால் இவ்விதம் பேசுவேன்" என்று நினைத்து "வாரும்; வாரும்; பணங்கள்ளறியாத பாமரன் யார்? எல்லா மிதத்திலிருந்தால் நல்லது; அளவுக்கு மிஞ்சினால் அம்ருதமும்விஷந்தான். அதை வீணில் மேலும் பழியாதீர். எனக்குமிடம் இருக்கும் அளவற்ற அன்பைத் தாங்கள் அறிவீர் என்று நம்புகிறேன்" என்று நயமாகக் கேட்டான்.

காச்யபனும் "உமதன்பில் எனக்குச் சிறிதும் ஸந்தேஹமில்லையாதய்யா. நான்குடியன் என்று நினைப்ப

தென்றால்! ஹே ஈசா!!'' என்று முன்போல் சிந்திக்கலானான். ஆனால் அயோக்யன் "என் ஐயா! நீங்கள் தான் என்று சொல்வான் என்? மனிதனாய்ப் பிறந்தவன் யாராயிருந்தாலும் அவன் சிலவேளை குடிக்க நேர்ந்தாலும் நேரலாம். அதிலென்ன குடியா கெட்டுப்போயிற்று. நீ செய்யவேண்டிய தென்னவென்று நான்சொல்லுகிறேன் கேள். ஸேனாபதியின் மனைவியே இப்பொழுது ஸேனாபதியாகி விளங்குகிறாள். ஆம். அவள் இட்டதுதான் சட்டம். எப்படிச்சொல்லுகிறேன் என்கிறாயோ? அவள் அங்க அமைப்பு, வனப்பின் திரட்சி, மனதின் பெருமை, குணத்தின் நிலைமை இவைகளைக்கண்டு மயங்கியவன் தன்னையே அவளுக்கே அற்பணஞ்செய்துவிட்டான்; ஆகையால்தான் நான் சொன்னேன். நீங்கள் இங்கிருந்து அவளிடம் போம். ஒளியாது நடந்ததை எல்லாம் சொல்லும்; காலில் விழுந்து கெஞ்சும், உம்மையவள் முன்பதவியில் எப்படியாவது வைத்துவிடுவாள். அவள் கபடமற்றவள்! வெகு நல்லவள்; இங்கிதமொழியும் நல்ல ஸ்வபாவமு முடையவள் பிறர் தன்னைச் செய்யும்படிக் கேட்ட உதவியைக் காட்டிலும் அதிகமாகச் செய்யாவிடில் அது பாபமென்றே எண்ணுகிறவள். உத்துலனுக்கும் உனக்குமிருந்த நேசச்சங்கலியின் பிளவைச் சேர்க்கும்படி அவளை வேண்டிக்கொள். அவள் சேர்த்து வைக்காவிடில் என் முழு சொத்தும் பந்தயம் வைக்கிறேன். அவள்செய்யாமலிராள். பின் உடைந்து ஒன்றிய எலும்புபோல உமக்கும் அவர்க்கும் இடையே சிறிது தடைபட்டு ஒன்றிய நேசமும் பிரியமும் அபார விருத்தியடையும் பலமும் அடையும்'' என்று சொல்லிக் காச்யபனைச் சாந்தையிடம் போய் வேண்டும்படித் தூண்டினான்.

அயோக்யன் கூறிய புத்திமதிகளைக்கேட்டு "நன்றாகச் சொன்னீர். தாங்கள் சொன்னதுதான் ஸரி'' என்று காச்யபன் கொண்டாடினான். 'உம்மிடங் கொண்ட அன்புமபிமானமுந்தான் என்னை இவ்வாறு சொல்லத் தூண்டுகின்றன'' என்று அயோக்யன் ஸத்யஞ்செய்தான். காச்யபனும் "நான் வேறு தவறாக எண்ணவில்லை. காலையில் கற்பிற் சிறந்த சாந்தையைக் காண்பேன்; கைகொடுத் தென்னை யாளும்படிக் கேட்பேன். இங்கே யான் பரிபவமடையும்படியானால் பின் என்கதி யதோகதிதான்.'' என்று சொன்னான், "தாங்கள் சொல்வதுதான் ஸரி. காவலிற்குப் போகவேண்டும் போய்வருகிறேன்'' என்றான் அயோக்யன், "அப்படியே செய்யும், ஸத்திய ஸந்தா யோக்யா!'' என்று சொல்லிவிட்டுக் காச்யபன் போனான்.

---

**சுவாசாசய சம்பந்தமான வியாதிகளுக்கு மருந்து.**—பூசினிக்காயின் கஷாயத்தை ஒவ்வொரு நாளும் அதிகாலையில் விடாமல் பருகிவந்தால் சுவாசாசய சம்பந்தமான வியாதிகள் க்ஷயம் உள்பட அனைவற்றும் நிவர்த்தியாகுமென்றும் வைத்தியர் ஒருவர் உறுதியாய்க் கூறுகின்றனர்.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**ஒரு விநோதமான மிருகத்தின் எலும்புக் கூடு.**—ஜெர்மன் கிழ் ஆப்பிரிக்காவில் டென்டாகும் என்னுமிடத்தில் உத்தேசமாக 160 அடி நீளத்திற்கும் 22 அடி உயரத்திற்கும் குறையாமலிருந்திருக்கவேண்டிய மிருகத்தின் எலும்புக்கூடு கண்டெடுக்கப் பட்டது. அம்மிருகம் மனிதன் பூவுலகில் தோன்றுவதற்குப் பலகோடி வருஷங்களுக்கு முன் இருந்திருக்கலாமென்றும், தவளையைப்போல் நீரிலும் நிலத்திலும் வசித்துவந்த ஜெந்துவென்றும் பற்கள் அது காக பக்ஷணி என்று காட்டுகின்றன வென்றும், அதன் மூளை மனிதனுடைய முஷ்டியளவு தானுள்ள தென்றும் கூறுகின்றனர். அதற்கு (Giantasauras Africanus) என்று பெயரிட்டிருக்கிறார்கள். இவ்வினத்தைச் சேர்ந்த மிருகத்தின் எலும்புக் கூடு ஒன்று அமெரிக்காவிலும் சிலகாலங்களுக்கு முந்தி கண்டெடுக்கப் பட்டதாம், ஆனால் அதன் உயரம் 11 அடிதான். இவைகளின் படத்தை ஆகஸ்டு மாதத்திய லண்டன் இல்லஸ்ட்ரேடட் சமசாரப் பத்திரிகையில் காணலாம்.

***

**மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கம்.**—இச்சங்கத்தின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவுக்கொண்டாட்டமும், நச்சினார்க்கினியர் ஞாபகச்சின்ன மஹோற்சவமும், இச்சங்கத்தார் நடத்திய பரிக்ஷையில்தேறினவர்களுக்குப் பரிசு யோக்கியதா பத்திரம் முதலியன அளித்தலும், சென்ற புரட்டாசி மீ விஜயதசமியன்று வழக்கம்போல சேதுபதி உயர்தர கலாசாலையில் மதுரைப் பிரபல உயர்தர நியாயவாதியும் மதுரைத் தமிழ்ச்சங்க காரியதரிசியுமான ஸ்ரீமான் T.C. ஸ்ரீநிவாஸஐயங்கார், பி. ஏ., பி. எல்., அவர்களின் தலைமையின் கீழ் செவ்வனே நடந்தேறியது. வருடாந்த அறிக்கை வாசித்தானதும், அலெக்ஸாண்டரும் கள்வனும் என்பது மூன்று சின்னஞ் சிறிய சிறுவர்களால் நன்கு நடத்தப்பட்டது. பிறகு ஸ்ரீ. ம. கோபாலகிருஷ்ண ஐயர் அவர்களால் ஸ்ரீமான். பொ பாண்டித்துரைத்தேவர் அவர்களின் ஜீவிய சரிதை உபந்யசிக்கப்பட்டது. பின்னர் தென்னாலிராமன் என்பதை மாணவர்கள் நடித்தவுடன் ம-ா-ா-ஸ்ரீ, கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள் தம் ஆங்கில கருத்துகட்கு அமை தமிழ்ப்பாத்தொகை என்பதில் சில பாகத்தை அரங்கேற்றினர். அப்பால் மகிபாலன் பட்டி ம-ா-ா-ஸ்ரீ, சின்னய்யா செட்டியார் அவர்கள் சங்கங்களால் ஆகும் நன்மைகள் என்பதைப் பற்றியும், ம-ா-ா-ஸ்ரீ, M. S. இராமனுதையர் அவர்கள் கடவுளை நம்பினோர் கைவிடப் படார் என்பதைப் பற்றியும் உபந்யாசித்தார்கள் பிறகு நச்சினார்க்கினியர் ஞாபகச்சின்னத் தமிழ்ப்பரீக்ஷையில்



தேறியோர்களுக்குப் பரிசும் யோக்கியதா பத்திரமும் அக்ராசனாதிபதி மூலமாக அளிக்கப்பட்டன—சுபம்.

***

**விஷப்பாம்பு கடிக்குப் புது மருந்து.**—பனை என்னும் வாழைமரத்தின் ரஸம் நல்லபாம்பு, விரியன் முதலிய விஷப்பாம்புகளின் கடிக்கு தகுந்த கைகண்ட மருந்தென்றும் நாகம் தீண்டிய தன் நாய்க்கு அச்சிகிச்சையால் குணம் உண்டாயிற்றென்றும் ஐரோப்பியர் ஒருவர் மெயில் பத்திரிகையில் எழுதியிருந்தார். சாதாரண வாழைக்கும் அக்குணம் இருக்குமா என்று பரிக்ஷித்தறியலாம்.

***

**நூதன டெலிபூன் யந்திரம்.**—பாரிஸ் நகரில் டெலிபூன் என்னொரு யந்திரசக்தியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். டெலிபூனில் பேச ஒருவரைக் கூப்பிட்டால் கூப்பிட்டவர் வீட்டிலில்லாமற்போனால் திரும்பவும் மெனக்கிடவேண்டியிருக்கிறதல்லவா? ஒருகாகிதத் துண்டில் சொல்லவேண்டிய சங்கதியையெழுதி டெலிபூனில் வைத்துவிட்டால் அதேகையெழுத்துப் பிழையின்றி மறுபக்கத்திலும் பதியுமாம். வெளியிற் போயிருந்தவர் திரும்பிவந்ததும் விஷயத்தை யறிந்துகொள்ள இலகுவாயிருக்கும். வேறொருவரிடம் விஷயத்தைச் சொல்லி யனுப்பி அவர் சரியாக அதைச் சொல்லுவார்களோவென்று சந்தேகப் பட்டுக்கொண்டிருப்பதைவிட தன் விஷயத்தைத் தான் நினைக்கும்வாறே டெலிபூனில் வரைந்து வெகுதூரத்திலும் மறு நிமிஷமே தெரிவிக்க ஏதுவாயிருக்கிறது.

***

**ஜப்பானில் கற்பூரம்.**—ஜப்பானில் சென்ற வருஷம் உண்டான கற்பூரம் மொத்தம் 20,00,000-கின் நிறையுள்ளது. (ஒரு கின் என்பது $1\frac{1}{3}$-ராத்தல்) இதுவரை இவ்வளவு ஜாஸ்தியாக உண்டானதேயில்லை. இதற்கு அதிகமாக இனிமேல் உண்டாவது சாத்தியமல்ல வெனப்படுகின்றது. இத்தனையும் மரத்திலிருந்து இயற்கையாய் உண்டானது. இது தவிர வேறு வகையினால் ஜப்பானியர் புதிதாய் கற்பூரம் செய்து பார்த்ததில் அப்படிச்செய்வதற்குப்பிடிக்கும் செலவு அது விற்பனையாகும் விலைக்கு அதிகமாகின்றது. போன வருஷம் உண்டானகற்பூரத்தில் வெளிதேசங்களுக்கு ஏற்றுமதியானது மொத்தம்6,50,000 கின்; ஜப்பானியத் தொழிற்சாலைகள் (Refiner) சுத்தப்படுத்துவதற்காக எடுத்துக்கொண்டது 9,50,000 கின்; செலுலாய்ட் தொழிற் சாலைகளில் 3,50,000 கின், உபயோகிக்கப்பட்டது; பாக்கி சில்லரையாக செலவாயிற்று.

***

**ஹெல்லியோடோர்.**—ஹெல்லியோடோர் என்பது ஒருவித ரத்தினக்கல். அது சமீபத்தில் ஜெர்மன் தென்மேற்கு ஆப்பிரிக்காவில் கண்டெடுக்கப்பட்டது. ஜெர்மன் சக்ரவர்த்தியான கெய்ஸருக்கு அதன்பேரில் நிரம்பப் பிரியம். அதனால் ரத்தினக்கல்களில் ஒழுக்கங்களை யெடுத்து சிலையின் உருவம்போலச் செதுக்கிக் கட்டடம் கட்டிவைத்து வைடூரியம், முத்துகளுடன் அதை சக்ரவர்த்தினிக்கு வெகுமதியாகக்கொடுத்தார். இந்த ரத்தினக்கல்லைப் பகலில் பார்த்தால் தங்கத்தைப்போல் மஞ்சள் நிறமுள்ளதாக காணப்படுகிறது. இரவில் விளக்கு வெளிச்சத்தில் பார்த்தால் பச்சை நிறமாகக் காணப்படுகிறது. இந்தக் கல்லைப்போல் விசேஷ குணமுடைய மற்றொரு வகைக் கல் எது வென்றால் ஸிபேரியாவில் கண்டெடுக்கப்பட்ட அலக்சாண்டரா என்பதேயாம், ருஷியா தேசத்து ஸார் பெயரால் அது வழங்கிவருகிறது, அது பகலில் பச்சையாகவும் இரவில் விளக்கு வெளிச்சத்தில் சிவப்பாகவும் காணப்படும்.

***

**ஜெயில் கைதிகளுக்குக் கல்வி கற்பித்தல்.**—சென்னைக் கவர்ன்மெண்டார் சென்னை, ராஜமகேந்திரவரம், கண்ணனூர்களிலிருக்கும் ஜெயில் கைதிகளுக்கும், சென்னை ராஜதானியிலுள்ள பாக்கி முதல் வகுப்பு ஜெயில் கைதிகளுக்கும் எலிமெண்டரிக் கல்வியைப் போதிக்கு முறையை யனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்றும், அந்தந்த ஜில்லாக்களிலுள்ள ஜெயில்களைப் பரிசோதனை செய்தல் வேண்டுமென்று முத்தரவு செய்திருக்கின்றனர்.

***

**தென்னை மிகுதியுள்ள தேசம்.**—அமெரிக்காவிலுள்ள பிரேஸிலில் இப்போது 10 கோடிக்கு மேற்பட்ட தென்னை மரங்களிருக்கின்றனவாம். அங்கு அம்மரங்கள் வைத்த மூன்றாவது வருஷத்தில் காய்க்கின்றனவாம். ஒவ்வொரு மரமும் வருஷத்தில் 3,00,400 காய்கள் காய்க்குமாம்.

***

**காட்டு மிருகங்களால் மரணம்.**—1912ம்வருஷத்தில் பிரிடிஷ் இந்தியாவில் 2,066 ஜனங்கள் காட்டு மிருகங்களால் கொல்லப்பட்டார்கள். 1911ம் வருஷத்தைவிட 1912-ம் வருஷத்தின் தொகை அதிகம். புலிகளால் மரணமடைந்தவர்களின் தொகைதான் அதிகம். 1911-ம் வருஷத்தில் புலிகளால் இறந்தவர்களின் தொகை 762. 1912-ம் வருஷத்தில் 885. பேஹார் ஒரிஸ்ஸாவில்398பேர் புலிக்கு இரையானார்கள். ஐக்கிய மாகாணங்களில் புலிகளால் நேர்ந்த மரணம் 1910-ல் 18. 1911-ல் 36 1912-ல் 71. சென்னை ராஜதானியில் புலியால் கொல்லப்பட்டவர்களின் தொகை 164, வங்காளத்தில் 117, பர்மாவில் 44, அஸ்ஸாமில் 45, மத்திய மாகாணங்களிலும் பேஹாரிலும் 40, நெய்னிடாலில் மனிதனைத் தின்று வழக்கப்பட்ட புலி யொன்று 41 மனிதர்களைக் கொன்றது, அதைக் கொல்லுகிறவர்களுக்கு 500 ரூபாய் இனாம் கொடுப்பதாகப் பிரசுரஞ் செய்யப்பட்டிருந்தது. சிறுத்தைப் புலிகளால் 1911-ம் வருஷத்தில் 253 பேர்களும், 1912-ம் வருஷத்தில் 261 பேர்களும் கொல்லப்பட்டார்கள். ஓனாய்களால் 255பேர்கள் கொல்லப்பட்டார்கள். வேறு சில மிருகங்களால் கொல்லப்பட்டவர்களின் தொகை 468.

பாம்புகடியால் இறந்தவர்களின் தொகை, 1911 வருஷத்தில் 25,312; 1912-ம் வருஷத்தில் 21,416.

***

**புது மாதிரி உருக்கு.**—இப்போது புதிய தினுசு உருக்கு செய்யப்படுகின்றது. இதை எஃகு என்றும் சொல்லலாம். இதைச் சோதனைசெய்து பார்த்ததில், சில விசேஷ குணங்கள் இருப்பதாகத் தெரிகின்றது. இது எளிதில் ஒடிந்துபோகக் கூடாததாய் உரப்புள்ளதாயும் கடினமாயும் இருக்கின்றது. இதைச் சொற்பமாய்க் காயவைத்து தகடுகளாகவும் சுருள்களாகவும் செய்யலாம் என்று சொல்லப்படுகிறது. இழுக்கப்படக்கூடிய சக்தி அதிகம். சாமான்கள் நிறுக்கும்போது இது ஒடியாமல் அதிக உரப்புள்ளதாயிருப்பதால் அக்காரியத்திற்கு அதிக உபயோகமுள்ளது. இதன் பலம் இது செய்வதில் கலக்கப்படும் சாமான்களைப் பொறுத்திருக்கின்றது. கந்தகம், நிபாக்கினி, மணல், கரி, இரும்பு, முதலிய பல உலோகங்களையும் குறித்த அளவுப்படி உலையில் வைத்து நன்றாய் உருகிப்போகும்படி காய்ச்சி பாளங்களாகக் கீழே ஊற்றப்படும். பிறகு இவை குளிர்ந்த காற்றினால் இறுகிக் கட்டியாய்ப் போய்விடுகிறது. இதுவே உருக்கு என்று சொல்லப்படுகிறது.

***

**மணிலாக் கொட்டை சாகுபடி.**— சென்ற செப்டம்பர் மாதம் முடிய சென்னை மாகாணத்தில் 7,74,400 ஏகர் நிலம் மணிலாக்கொட்டை சாகுபடியாயிருக்கிறது. சென்ற வருஷத்தைக் காட்டிலும் 26,500 ஏகர் ஜாஸ்தி சாகுபடியாயிருக்கிறது. பர்மா உள்பட இந்த தேசத்தில் மணிலாக்கொட்டை சாகுபடி செய்யப்படுகிற பூமியில் 100-க்கு 70 பங்கு சென்னை மாகாணத்தில் வழக்கமாய் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட விஸ்தீரணத்தில் 7,51,200 ஏகர் ரயத்துவாரி கிராமங்களிலும், 23,200 ஏகர் மற்ற கிராமங்களிலும், சாகுபடியாயிருக்கிறது.

***

**எள் சாகுபடி.**—பர்மா உள்பட இந்தியாவில் எள் சாகுபடி செய்யப்படும் பூமியில் 100-க்கு $17\frac{1}{2}$ பங்கு விஸ்தீரணம் சென்னை மாகாணத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. சென்னை மாகாணத்தில் அக்டோபர் மாதம் வரையில் 2,85,600 ஏகர், எள்சாகுபடிசெய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. சென்றவருஷத்தைக் காட்டிலும் 3,600 ஏகர் அதிக சாகுபடி. இந்தியா முழுமையுமே எள் பயிர் சுமாராக நன்றாயிருந்த போதிலும், வட இந்தியாவிலும், மேல் இந்தியாவிலும் ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் மழை பெய்யாமல் பூமி வறண்டுபோய் விட்டபடியால், அவ்விடங்களில் எள் பயிர் ஒருவாறு கெட்டுப் போய்விட்டதென்றே சொல்ல வேண்டும். சென்னை மாகாணத்தில் பயிர் நன்றாயிருப்பதாகவே தெரிகிறது.

**எலுமிச்சை சாகுபடி.**—எலுமிச்சை நடுவதற்கு தகுந்த நிலமும் காலமும் முறையே மேட்டுத்தரையும் ஆடி, ஆவணி மாஸங்களுமேயாம். ஒரு முழ நீளம் 1 முழ அகலம், $1\frac{1}{2}$ முழத்தாழமுள்ள பள்ளம் வெட்டி, அப்பள்ளத்திலே மாடு, ஆடு அடைக்கப்படுமிடங்களில் உள்ள எரு, குப்பை, கூளம் முதலியவைகளையும் வீடுகளிலே நாள்தோறும் கழிக்கப்படும் குப்பை, சாம்பல் முதலியவைகளையும் போட்டு நிரப்பி மாடு, ஆடு அடைக்கப்பட்ட இடங்களிலுள்ள ஊத்தை மணலால் மூடி அதற்குமேல் செம்மண் இட்டு அதன்மேல் ஆட்டுப் புழுக்கை எருவையும் மண்ணையுங் கலந்து பள்ளத்தை நிரப்பி மத்தியிலே எலுமிச்சங்கன்றை நட்டு மண்ணால் மூடி, பாத்தியாக்கி, நிழல்விட்டு, தழைக்கும்வரையும் காலையும் மாலையும் ஒழுங்காய் நீர்பாய்ச்சி வரவேண்டும்.

***

**பட்சிகளின் மல எரு.**—பட்சிகளில் கோழி, வான்கோழி, புறா, வௌவால் முதலிய பலபட்சிகளின் மலங்கள் மிக அருமையான பயிருணவு. பிரயாசை எடுத்து இவைகளைச் சேகரித்து தானியப் பயிர்களுக்கும் கனி மரங்களுக்கும் காய்கறித் தோட்டங்களுக்கும் பூந்தோட்டங்களிலுள்ள பூச்சட்டிகளுக்கும் போட்டால் மிக நயத்தை அடையலாம்.

***

**ஆமணக்கு.**—இச்செடி ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும், பெர்ஷியாவிலும் அரேபியாவிலும் சைனாவிலும் ஜப்பானிலும், அமெரிக்காவை ஒட்டினாற்போலுள்ள மேற்குஇந்தியத் தீவுகளிலும் அமெரிக்காவின் சூடான பகுதிகளிலும் இடாலியிலும் வளருகின்றது. இச்செடியில் இரண்டுவகை யுண்டு, ஒன்று ஒரு வருடமே இருக்க, மற்றது பல வருடகாலம் செழித்து வளரும். ஒரு வருடச்செடி சிறிது. மற்ற ஜாதியோ மிக ஓங்கிவளர்ந்து ஒரோவருஷத்தில் 15 அல்லது 30 அடி எட்டிவிடும். பலவருடச்சீவியான செடிகள் ஒரு முறை வேலியில் நடப்பட்டால் வேலி உறுதிப்படும். பம்பாய் ராஜதானியில் இது "ஸோர்கம்," மணிலாக்கொட்டை முதலிய பயிர்களுடன் சேர்த்து விதைக்கப் படுகிறது. காய்கறித் தோட்டங்களில் நிழலுக்காகவும் மற்றும் பிரயோசனங்களுக்காகவும் நாட்டப்படுகின்றது. ஓர்வருட ஆமணக்கை நெல் வயல்களில் பயறு முதலிய தானியங்களுடன் நெல் அறுவடையானஉடன் விதைக்கலாம். விதைகள் 1 அடி தூரத்தில் இடை வெளிவிட்டு விதைக்கப்படும். பிற்பாடு நாற்றுகளைப் பிடுங்கி 2அல்லது 3 அடி இடைவெளியிருக்க ஒழுங்கு படுத்திக் கொள்ளலாம். தரை தண்ணீர்ப் பிடிப்புள்ளதாகில் 4 அல்லது 5 அடி இடைவெளியிருக்கலாம். குறைவாகில் $\frac{1}{2}$ அடிக்கும் 2 அடிக்கும் இடையில் இடைவெளியிருக்கலாம். பழக்குலைகளை வெட்டிக் காயவைப்பதினால் வித்துக்களை எடுக்கலாம். தடியாலடிக்க வித்துக்கள் உதிரும். தட்டைகள் விறகாக உபயோகிக்கப்படும். இலைகள், ஆடுமாடுகளுக்குத் தீனியாகும்.

[ "விவேக போதினி" அனுபந்தம் ]

Supplement to the "Viveka Bodhini"



முதலை குரங்கை, ஈரல் எடுத்துவரக் கொண்டுவருவது



குரங்கு ஆப்பைப் பிடுங்குவது

# விவேக போதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
24 DEC 1913
MADRAS.

தொகுதி VI { பிரமாதீச௵ கார்த்திகைமீ =1913-௵ டிஸம்பர்மீ { பகுதி 6

## வேதாந்தத் திரட்டு

## VEDANTIC SELECTIONS

### 1. தெய்வ வணக்கம்

பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புதமலர் தலைக்கணி வோமே. 1

ஈன்றளித் தழிக்கும் செய்கைக் கேதுவாம் அயனாய் மாலாய்
ஆன்ற ஈசனுமாய்த்தானே அனந்தமூர்த்தியுமாய் நிற்கும்
மூன்றமுத்தனுமாய் இன்பப் புணரியாதபனாய் நாளும்
தோன்றிய விமலபோத ஸ்வரூபத்தைப் பணிகின்றேனே. 2

(கைவல்யநவநீதம்)

ஒலிமுதற் புலன்களின்றி உரையிறந்துணர்வுக் கெட்டா
தலகில் பேரொளியாய் ஒன்றாய் அருவமாய் அமலமாகி
மலைவுருத்துணங் களோடு வண்ணமற்றறி விலாது
நிலைபெறு சிவமென்றேக நிற்பதேலிங் கமாமால். 3

(லிங்கபுராணம்)

மார்க்கண்டர்க்காக மறலிபட்ட பாட்டையுன்னில்
பார்க்கின் அன்பர்க்கு என்னபயம் காண் பராபரமே 4

(தாயுமானவர்)

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்க
முதல் கற்ற கேள்வி, வல்லார்கள் நால்வருக்கும் வாக்
கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய், எல்லாமாய் அல்
லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்தும்
காட்டிச், சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத்தொடக்கை வெல்வாம் 5

(திருவிளையாடல் புராணம்)

ஒன்றாகி யைந்தாய் ஐயைந்துருவாகி வருவாய்போற்றி
இன்றாகிச் சென்ற நாளாகி எதிர்நாளாய் எழுவாய் போற்றி
நன்றாகித் தீயதாகி நடுவாகி முடிவாய் மன்றுள்
நின்றாடும் பரமானந்த நிருத்தனே போற்றி போற்றி 6

(திருவிளையாடல் புராணம்)

பேசாவனு பூதியை யடியேன் பெற்றுப் பிழைக்கப் பேரருளால், தேஜோ மயந்தந்தினி யொருகாற் சித்தத் திருளும் தீர்ப்பாயோ, பாசாடவியைக் கடந்த வன்பர் பற்றுமகண்டப் பரப்பான, வீசாவொதுவினடமாடு மிறைவாகுறை யாவின்னமுதே 7

(தாயுமானவர்)

ஏகமூர்த்தி, இருமூர்த்தி மூன்றுமூர்த்தி பல மூர்த்தி
யாகி ஐந்துபூதமாய் இரண்டுசுடராய் அருவாகி
நாகமேறி நடுக்கடலுள் துயின்ற நாராயணனே, உன்
ஆகமுற்றும் அகத்தடக்கி யாவியல்லல் மாய்த்ததே 8

(திருவாய்மொழி)

எந்த எந்த யோனி பேதம் எங்குமெங்கு முள்ளன
அந்த அந்தயோனி தோறும் ஆவியான தன்மையை
சிந்தையின் கண் ஒருகணத்தில்நிகழுமாறுதேவர்கோன்
மைந்தனுய்ந்திடப் புகன்றவன்னல்தாள் வணங்குவாம்.

(வில்லிபாரதம்)

தந்தை தாயாவானும் சார்கதியங்காவானும்
அந்த மிலா இன்பமக்காவானும்—எந்தமுயிர்
தானாகுவானும் சரணாகுவனும் அருள்
கோனாகுவானும் குரு 10

(தத்வராயர்)

விவேக போதினி

தொ.6.] பிரமாதீச஁ ஃ கார்த்திகைமீ [பகுதி.6.

# மோக்ஷ ஸோபானம்

## THE STEPS TO THE GOAL

### (2) கர்மயோகம்

முன்னர் நான்கு யோகங்களைப்பற்றிப் பொதுவாகக் கூறியவைகளிலிருந்து நான்கு யோகங்களிலும் நான்கு யோக அம்சங்களும் இருந்தபோதிலும் ஒவ்வொரு அம்சம் ஒவ்வொன்றில் ஏற்றமாக இருக்கும் என்றும், அதனால் அதன் பெயரையே அந்த யோகத்திற்கு இடப்பட்டுள்ளது என்றும் விளங்கி இருக்கும். மேலும் இப்படி நால்வகைப்பட்ட ஸோபானம் அதிகாரிபேதத்திற்கு ஏற்ப ஒவ்வொருவரையும் கவர்ந்து ஸன்மார்க்கத்திற்குக் கொண்டு வந்து முடிவில் மோக்ஷம் சேர்க்க, கருணை நற்றுயான வேதம் ஏற்படுத்தியது என்றும் விளங்கியிருக்கும். இனி முறையே இந்த யோக லக்ஷணங்கள் விஷயங்கள் முதலியவைகளை இங்கு எடுத்து விஸ்தரிக்கத் தொடங்கி, முதலில் கர்ம யோகத்தைப் பற்றி விசாரிக்கத் தொடங்குவோம்.

உலகில் பரிபாகிகள் இருவிதமாக இருப்பர்: உத்தமரென்றும் மத்யமர் என்றும் அவர்களுக்குப்பெயர். உத்தமர்கள் மனம் நன்றாக சுத்தப்பட்டு அசுத்தவாஸனைகளின் தடைமிகக்குறைந்திருக்கும்: உலக விஷயங்களில் ஒரு வித துச்ச புத்தியும், அஸத்விஷயங்களில் மனம் செல்லாமையும், இவ்வுலகைவிட சிறந்த லோகாந்தரங்கள் நிலைகள் உண்டென்ற நம்பிக்கையும் அவர்கள் மனதில் மாறாது குடிகொண்டிருக்கும். இவர்களுக்கு நன்னடக்கைக் கோட்பாட்டின்படி நடப்பது சற்றேறக்குறைய இயற்கைபோலவே இருக்கும். மோக்ஷ இச்சை தீவரமாக இருக்கும். இவர்களுக்கு ராஜயோகமும் ஞானயோகமும் முக்கியமாக ஏற்பட்டுள்ள வழிகள். மத்யம அதிகாரிகளுக்கோ மனம் சுத்தப்பட்டிராது: மோக்ஷ இச்சை மாத்திரம் இருக்கும்: உலக விஷயங்களிலும் மனம் பாய்ந்தோடும். ‘மனம் நல்வழி நிற்கவேண்டும்’ என்று தான் கருதுகிறது; ஆனால் அப்படி நிலைத்து நிற்க முடியவில்லையே: பாழ்த்த கர்மங்கள் போராடுதே! என் செய்வோம்? என்று மனமழிந்து பரிதவிக்க வண்ணமாக இருப்பர் இம்மத்யம பரிபாகிகள் அடிக்கடி. இவர்களுக்கு முக்யமாக ஏற்பட்டவை கர்ம பக்தி யோகங்களும் இடையே செய்யப்படும் ஞான விசாரமுமே. அதம அதிகாரிகளாக உலக விஷயங்களிலேயே கண் மூடித்தனமாய் உழன்றுகொண்டு அசாஸ்திரீய வழியாக ஸுகம் அனுபவிக்க மனம் கொள்ளாது தவிக்கும் ஆஸ்திகர்களுக்கு வேதம் கர்மயோகத்தின் கீழ்ப்படியாகிய கர்ம மார்க்கத்தை எடுத்துக்காட்டி, கர்மகாண்டத்தில் அநேகவித கர்மங்களான யாகாதி க்ரதுக்களை விதிக்கின்றது ஆகவே இப்பொழுது நாம் எடுத்து விஸ்தரிக்கப்போகும் கர்மயோகம் வைதீக கர்ம மார்க்கத்தை ஆதாரமாகக்கொண்டு அதற்கும் வைதீகஞான யோகமாகிய ஞான காண்டத்திற்கும் இடையே ஏற்பட்டிருக்கும் ஸோபானம். இந்த இடை ஸோபானம் மோக்ஷ மார்க்கத்தின் முதல் படி.



வேதங்களில் ஞானகாண்ட பாகங்களாகிய உபநிஷதங்களில் இக்கர்மயோக ஆதாரங்கள், இலைமறைவு காய்மறைவாகவும், அங்கு எடுத்து விஸ்தரிக்கும் சிற்சில விஷயங்களால் அனுமானிக்கக் கூடியதாகவும், அமைந்து கிடப்பினும், காம்ய கர்ம பாகமான கர்மகாண்ட விஷயத்தை எடுத்து, அதைச்செய்யும் விதத்தால் இவ்வாறு அவைகளே கர்மயோகமாகி மோக்ஷ ஸோபானத்தில் முதல்படியாகும் என்று ஒழுங்காக வெளிப்படுத்தியது கீதாசார்யரான கிருஷ்ண பரமாத்மாவே. கர்மங்களை எவ்விதத்திலாகிலும் செய்துகொண்டிருப்பதே மானிடர் இயற்கையாயினும் அதை இவ்வாறு ஒழுங்காகச் செய்தால் அவைகளால் ஏற்படக்கூடிய பந்தத்திற்கு உட்படாமல் தப்பி மாயைக்கு அப்பாற்படுவதாகிய மோக்ஷ நிலையை நோக்கிப்போக முயலலாம் என்று வெகு தெளிவாக ஸ்ரீமத்பகவத்கீதையில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்துடன் ஸர்வ ஸாதாரணமான கர்ம விஷயத்தை சிறப்பாகக் காட்டி அதையும் மோக்ஷ ஸோபானத்தில் ஒருபடியான யோகமாக்குவதற்கு வேண்டிய விஷயங்களை இக்கீதையில் பொதுவாக அடங்கியிருப்பதால், ஸ்ரீமத் பகவத்கீதையை கர்மயோக சாஸ்திரம் என்றே கூறிவிடலாம். பகவான் கர்மயோக லக்ஷணத்தை இரண்டாம் அத்யாயத்தில் 39-ச்லோகம் முதல், 53-ம் ச்லோகம் வரையில் சுருக்கமாகக் காட்டியும், மூன்றாம் அத்யாயத்தில் இந்த விஷயத்தை தகுந்த யுக்திகள் மூலமாக நன்றாக விளக்கி ஸ்தாபித்தும், மற்றைய அத்யாயங்களில் இடையிடையே, இந்த கர்மயோகம் எல்லாவற்றிற்கும் ஆதியானபடி ஒருவித மேல் படிக்கும் தகுந்த வனாக இல்லாத மத்யமாதிகாரி இந்தயோகத்தை அனுஷ்டிக்கலாம் என்று கூறிக்கொண்டும் வந்து, 18-ம் அத்யாயத்தில் தம்முடைய முக்ய மதமாக யக்ஞ தான தபஸ் ஆகிய கர்மங்களை எப்பொழுதும் விடவே கூடாது, இவைகளை பலத்தில் இச்சைவிட்டுச் செய்தே தீரவேண்டும்’ என்று பகவான் வற்புறுத்துகிறார். இப்படி இருப்பதால் இந்த யோக விஷய ரஹஸ்யம் கீதையிலிருந்துதான் வெளியாகவேண்டும்.

கர்மயோகத்தின் லக்ஷணம் என்ன என்ற கேள்வி பிறக்கும். இதை பகவான் அர்ச்சுனனை நோக்கி ‘உனக்கு (உன்னைப்போன்ற மத்யம அதிகாரிகளுக்கு) கர்மத்தில் தான் அதிகாரம். ஒருக்காலும் பல ஸம்பந்தமே ஏற்படலாகாது. அகர்ம பலனை வரவழைத்துக் கொள்ளாதே. அகர்ம விஷய அபிமானமும் வேண்டாம். யோகத்தில் நிலைபெற்று பற்றுக்களைவிட்டு, கைகூடல் கூடாமை இவைகளில் ஸம புத்தியுடன் கர்மங்களைச்செய், யோகம் என்பது ஸமத்தன்மையே’ என்று கூறிவிளக்கியுள்ளார். இந்த பகவான் வாக்கியத்தில் கர்ம யோகத்தின் ஐந்துமுக்ய அங்கங்கள் அமைந்துகிடக்கின்றன. அதைக்கவனித்துப் பாராவிடில் இதில் கூறியது கூறல் இருப்பது போலக் காணப்படும். அவ்வைந்து அங்கங்களாவன :—(1) பலத்தில் இச்சை எப்பொழுதும் ஏற்படாமை. (2) பாப ஸம்பந்தம் எப்பொழுதும் ஏற்பட வொட்டாது நிற்பது. (3) எப்பொழுதும் கர்மம் செய்யாமையில் ஆசைகொள்ளாமை. (4) நான் செய்கிறேன் என்றபற்றும், இதனால் ஈசன் திருப்தியடையட்டும் என்றபற்றும் இன்றி ஈசுவரார்ப்பணமாக ஈசன் கட்டளைப்படி நடக்கிறோம் என்ற நினைவுடன் கர்மங்களைச் செய்தல். (5) கர்மயோக முடிவான சித்த சுத்தியாதி மேலான நிலைகள் இன்னும் வரவில்லையே என்று வரும் ஏக்கம், சிற்சில ஸமயங்களில் ஏற்படும் சாந்த நிலை அடையாளங்களைக்கண்டு ‘ஏது நமக்கு யோகம்பலிக்கும் தருணம் வந்துவிட்டது’ என்ற ஸந்தோஷம், பரபரப்பு முதலியவைகளுக்கு இடங்கொடாது ஈசாஞ்ஞைப்படி ஒருவனு

வரும் என்று ஒப்ந்திருத்தல்: ஆகிய இவைகளே. இந்த ஐந்து அங்கங்களை எடுத்து விளக்க வந்த முற்கூறிய ii-47-48-ம் கீதா ச்லோகங்களில் முதலில் மத்யம அதிகாரிகளுக்கு இந்த கர்மயோகம் தான் தகுந்தது: இதில் யோகம் என்ற பதத்திற்கு ஸமநிலை என்பது தான் பொருள் என்றுள்ள மேல் இரண்டு விஷயங்கள் தான் உள்ளன. இந்த ஐந்து அங்கங்களையும் எடுத்து விளக்கி விட்டால் கர்மயோக விஷயம் நன்கு விளங்கிவிடும்.

(1) பலத்தில் இச்சை எப்போழுதும் ஏற்படாமை:—இதனுல் துக்கம் பயம் இரண்டும் நீங்கிவிடும். மாயையின் முக்ய பரிணமம் இந்த பலஇச்சைதான்: உலகில் உள்ள எல்லா கஷ்டத்திற்கும் இந்தஅபிமானம்தான்காரணம். இந்த பல விஷய வைராக்யம் நிர்பயநிலையைத் தானே கொடுத்துவிடும்.' உலகில் வித்யை, ரூபம், தனம், கீர்த்தி, முதலிய மிகச்சிறந்தவை என்று கருதப்படுபவை எல்லாம் முறையே, அதிகன், ஸ்திரீ, ராஜன், துஷ்டர் முதலியவைகள் மூலமான பயத்திற்கு இடங்கொடுத்தே உள்ளவை: வைராக்யம் ஒன்றுதான் நிர்ப்பய விஷயம்; என்று பர்த்ருஹரி கூறுகிறார். ஆதலால் பலத்திலிச்சையின்மை, இந்தபயமின்மை துக்கமின்மை இவைகளைப்பயக்கும். எப்பொழுதும் இந்த இச்சைக்கு இடங்கொடுக்கலாகாது. வெகு நாள் காம்யகர்மங்களில்பல இச்சைவிட்டு முயன்று சித்தசுத்தி கைகூடும் முன்னர் இவைகளைக் காம்யமாகச் செய்திருந்தால் எவ்வளவு பலன் வந்திருக்கும்' என்ற ப்ரமாதத்திற்கும் இடங்கொடுக்கலாகாது என்பதுகூட இந்த அங்கத்தில் அடங்கியுள்ள கருத்து.

(2) பாப ஸம்பந்தம் ஏற்படவொட்டாது நிற்பது:—கீதா ச்லோகத்தில் இந்த பாகத்திற்கு நேரான மொழி பெயர்ப்பு அகர்ம (கர்மம் செய்யாமையின்) பலனுக்குக் காரணமாகாதே. கர்மம் செய்யாமையின் பலன் பாபமே, ஒன்றும் செய்யாமலிருப்பவர் மனம் பாப நிலயமே. மத்யம அதிகாரிகள் மனதில் அசுத்த வாஸனைகள் இருக்கும்: சிற்சில ஸமயங்களில் அவை பலத்து அவர்களை சந்தியிலிழுத்து அலங்கோலப்படுத்திவிடும். ஆதலால் அவர்கள் மனம்வாஸனை வசப்பட்டு வலுவிலேயே அவர்களுக்கு அடங்காது தொழிற்படாமல் ஒருக்ஷணங்கூடயிராது. இப்படியிருக்க கர்ம இந்திரியங்களைச் சேஷ்டிக்காது நிறுத்தி ஸத்கர்மங்களைக் கூடச் செய்யாமலிருந்துவிட்டால் துர்வாஸனை உள்ளே பலப்பட்டு அவர்களை துர்விஷயங்களைச் சிந்திக்கும்படி செய்யும். சிற்சில அஜாக்ரதை ஸமயங்களில் வெளிப்பட்டும் விடும். வெளிப்பட்டு விட்டால் ஐயர் சாயம் வெளுத்துவிடும். இல்லாவிடில் இவன் ஆசாரக்கள்ளனுகி பொது நன்மைக்கு விரோதியாகி அநேகஸத்துக்களை மோசம் செய்யும் பாசாங்குக்காரனுவன்.

இப்படி கெட்டவழியில் முயலாது, 'செய்கை யடங்கியும் நம்மனம் நிலைக்காது இருக்கும்படி செய்யும் துர்வாஸனைகள் பலம் ஸத்கர்மங்களால் ஏற்படும் ஸுவாஸனைகளால்தான் குறையவேண்டும்' என்று எண்ணி மனம் ஞானேந்திரியங்களை அசாஸ்திரீய அசுத்த விஷயங்களில் பாய்ந்தோட வொட்டாது தடுத்தும், ஸத்கர்மப்ருவிருத்தியால் அவகாசம்கொடுக்காது தடுத்தும், வந்தால், மத்யம பரிபாகிகள் வரவா உத்தம பரிபாகி நிலையை அடைந்துவருவர். மேலும் எக்காரணம் பற்றியும் அசாஸ்திரீய வழிகளில் முயலவேண்டும் என்று ஒருக்காலத்திலும் தோன்ற இடங்கொடுக்கலாகாது. இதுபாபத்திலே கொண்டு சேர்க்கும் பரதகண்ட வாஸிகளாகிய நமக்கு பாபம்தரும் கருமம் இருவிதம்: பொதுக் கர்மம் பொய் கொலை முதலியன: விசேஷ கர்மம் ஜாதி வர்ணச்ரம தர்ம விரோதச் செயல் ஆகிய இவைகளே. இவ்விரு விதங்



களால் ஏற்படும் பாபங்களுக்கு இடங்கொடுக்கலாகாது.

இந்தவிடத்தில் பாபகர்மங்களையும் பலத்தில் இச்சைவிட்டு கர்மயோகமாகச் செய்ய முடியாதோ என்ற குதர்க்க சங்கை பிறக்கும் தத்காலத்தவர்களுக்கு; நமது சாஸ்திர விஷயங்களில் புண்யம் பாபம் என்பவைகளை எப்படி நிர்ணயம் செய்திருக்கின்றது என்பதை உணர்ந்தால் இந்த குதர்க்கம் வர இடமேஇல்லை. எந்த கர்மத்தைச் செய்தால் மனதில் பின்னர் ஏற்படும் வாஸனைவழியே விவேகமின்றிப் போய் தொழிற்படும் படியான நிலை ஏற்படுமோ, எதற்கு உடனேயாவது வெகுகாலம் கழித்தாவது துக்கமே பலனே அதுவே பாபம். இதற்கு விரோதமானது புண்யம். இந்த விஷயம் அதிக ஸூக்ஷமமாதலால் இந்த பாப புண்ய விவேகத்திற்கு சாஸ்திரமே பிரமாணம் என்று கூறுகிறார் பகவான் கீதை 16-ம் அத்தியாயம் முடிவில். உடனே பலிக்கும் பாப கர்மங்கள் நமக்கு விளங்கி விடுமாயினும், நாள் கழித்துப் பலிப்பவைகளாகவே பெரும்பாலும் இருப்பதால் அவைகளை சாஸ்திரத்தைக்கொண்டே நிர்ணயிக்கவேண்டும். ஆகவே பாபபலன் துக்கம். இதில் யாருக்காவது இச்சையிருக்குமா? பலஇச்சை ஏற்பட்டால்அல்லவோ, அதை மனோபலத்தால் ஒதுக்கிவைப்பதால் மனதிற்கு ஒருவித உறுதியின் அப்யாஸம் ஏற்படும். ஆதலால் பாப கர்மங்கள் செய்பவர்கள் எல்லோரும் பலத்தில் இச்சையின்றியே, மிகுந்த வெறுப்புடன் செய்கிறார். ஆதலால்கர்மயோக லக்ஷணம் பாபகர்மங்களுக்குப் பொருந்தவே மாட்டாது. மேலும் பாபகர்மங்கள் நம்மை விவேக சூன்யராக்கி வாஸனு வசத்தராக்கி விடுவதால், விவேகம் குறைந்த ஜந்துக்கள், அது இல்லா புற்பூண்டுகள் முதலிய தாழ்ந்த ஜன்மமே ஈசானுளைப்படி நமக்கு ஏற்பட்டுவிடும். அங்கெல்லாம் அடிபட்டுக் காலக்கிரமத்தில் தான் நாம் தேறவேண்டும். தேறிய பின்பு தான் கெட்ட கர்மங்களை பலத்தில் இச்சைவிட்டு செய்வது கர்மயோகமாகாது என்ற உணர்ச்சி குதர்க்க ஸம்பந்தமின்றி நமக்கு ஸ்புரிக்கும்.

இந்த ஸ்புரிப்புதான் பாபஸம்பந்தம் ஏற்படாமை என்பது: எந்த சிறந்த உலக விஷயம் வந்து தாக்குங்காலும் ஸித்திக்கும். ஆதலால் பாபம் வர இடங்கொடாமைக்கு துஷ்கர்ம நீக்கமும் ஸத்கர்ம தீவ்ரப்ரவிருத்தியுமே காரணம். இவை இந்த அங்கத்தின் லக்ஷணம். பொது கர்ம விஷயம் ஸர்வ ஸாமாந்யமாதலால், எல்லோருக்கும் பொது பாபகர்மங்களாகிய திருடு பிறர்களுக்குத் தீங்குசெய்தல் முதலியவைகளை விட்டு விலகி, இதற்கு மாருன ஸத்கர்மங்களை அநுஷ்டிக்கவேண்டும் என்பது நன்கு விளங்கும். இதற்கு சாஸ்திரப் பிரமாணம் அவ்வளவு வேண்டியதில்லை. ஆனல் சாஸ்திர ரஹஸ்யமாகிய ஜாதி வர்ணச்ரம தர்ம விஷய பாபகர்மங்களை நீக்கி, புண்யகர்மங்களில் முயலுவது இவ்வாறு என்பதை நம் பரதகண்ட வாஸிகளுக்கு விளக்க சாஸ்திரப் பிரமாணத்தைத் தவிர வேறு ஒன்றும் கிடையாது. அதன்படி என்ன வெளிப்படுமோ அதற்கு ஏற்ப ஒழுகுவதே இங்கு பாப ஸம்பந்தம் ஏற்படாது நிற்பது என்பதன் பொருள்.

ஆகவே கர்மயோகத்தின் இரண்டாம் அங்கம் நன்கு விளங்க நமது சாஸ்திரங்களில் எடுத்துக் காட்டப் பட்டுள்ள ஜாதிவர்ணச்ரம தர்ம ஞானம் அவசியம். இந்த விஷய ஞானம் இக்காலத்தில் குன்றியும், அநேகவித குதர்க்க ஞானங்களால் விபரீதமாகவும், இருப்பதால்; இதைப் பற்றி விரிவான விசாரம் செய்ய வேண்டியது அவசியம். இந்த விஷயத்தில் தெளிவான

ஞானமிருந்தால் தான் கர்மம் என்றால் என்ன: மத்தியம அதிகாரிகள் மனதில் இயற்கையாகக் கிளம்பும் கர்ம பீஜத்தை அது எப்படி தலை எடுக்க வெட்டாது அடிப்பதாகிய கர்ம யோகமாகும் என்பவை தெரியவரும். இந்த ஞானமில்லாது கர்மயோகானுஷ்டானத்திற் காரம்பித்தால் பௌத்த மதம் முதலிய மதாந்தரத்திலுள்ள சாஸ்திரப்பிரமாணம் அனுவசியமான லௌகிக கர்மமாகிவிடுமே ஒழிய வைதிக கர்ம யோகமாகிய சாஸ்திரீய அனுஷ்டானமாகாது. இந்தவர்ணாச்ரமதர்மவிஷயத்தை உணர வேண்டுமாகில் பராசர ஸ்ம்ருதியைத் தான் பார்க்கவேண்டும். இந்த விஷயத்தை பின்னர் விஸ்தரிக்கவேண்டி வருமாதலால் இங்கு இதை இதோடு நிறுத்தி விடுவோம். மேலுள்ள மூன்று கர்மயோக அங்கங்களைப்பற்றிப் பின்னர் எடுத்து விஸ்தரிப்போம்.

---

ஒழுங்கு.—வேலைசெய்யும் போதாகட்டும், படிக்கும் போதாகட்டும், கருவிகளையும் புத்தகங்களையும் சரியாக வைத்திருந்து பழுதுசொல்ல வியலாதபடி நேர்த்தியாகவும் நன்றாகவும் எடுத்துக்கொண்டதை கவனத்துடன் முடிக்குந்தன்மையே ஒழுங்காம். தையல் வேலைசெய்பவன் கத்தரியையும், நூல்கட்டையையும் கண்டவிடத்தில் மறதியால் போட்டுவிட்டு தேடிக் காலத்தைப்போக்குவதும், மாணாக்கன் புத்தகங்களையும் கற்பலகையையும் கருத்தின்றி வைத்திருந்து வேண்டிய சமயத்தில் அவையிருக்குமிடந் தெரியாமல் ஒன்றுக்குப் பதிலாக ஒன்றைத் தவறியெடுத்துத் தடுமாறுவதும் ஒழுங்கினத்தால் நேரும் தொந்தரைகளாம். எந்தக்காரியம் செய்யத்தொடங்கினாலும் முதலில் உபகரணங்களைக் குறித்தவிடங்களில் சரியாய வைத்து எச்சமயத்திலும் தவறாமல் அவற்றையெடுத்துபயோகிக்கப் பழக்கிக்கொள்ளவேண்டும். சாமக்கிரியைகளை அலங்கோலமாகவுந் தாறுமாறாகவும் வைத்திருப்பதும், வரம்பின்றி நினைத்த வேளைகளில் உண்ணுவதும் உறங்குவதும், பிரயோஜனத்தை யெண்ணாமல் பொருளற்ற காரியத்தைச் செய்வதும் ஒழுங்கற்றவனுடைய நடக்கையாம், ஒழுங்கில்லாவிடத்தில் வெற்றியிராது என்பதை நிச்சயமாய் உணரலாம். விளையாட்டிலும், யுத்தகளத்திலும் ஒழுங்கும் நிதானமுமுள்ள சிலர்கள் வெற்றிகொள்வதும், கலவரமும் படபடப்புமுள்ள பலர்கள் தோல்வியடைவதும் சகஜம்; அதனாற்றான் பாடசாலைகளிலும், ராணுவத்திலும் கல்வியும் போர்த்தொழிலும் பயிற்றுவதுடன் ஒழுங்கைப் பிரதானமாக வற்புறுத்துகிறார்கள். விவசாயத்திலும், வியாபாரத்திலும், உத்தியோகத்திலும், கைத்தொழிலிலும் ஒழுங்கு அவசியம் அனுசரிக்கப் படவேண்டும். திரவியவிரயம், காலவிரயம், தேகசிரமம் முதலியவை எடுத்துக்கொண்டதொழிலைஒழுங்காகப்புரிவதால்குறையும்.

## பிரஸிடண்ட் கார்பீல்ட்

## PRESIDENT GARFIELD

ஜேம்ஸ் கார்பீல்ட் 1831௵ நவம்பர்௴ 19௳ அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் ஓகியோ (Ohio) சமஸ்தானத்தில் ஒரு ஏழைக் குடிசையில் பிறந்தவர். அவரது தந்தை அபிராம் கார்பீல்டு, ஜேம்ஸ் ஒன்றரைவயதுக் குழந்தையாயிருக்கும் போதே பரகதியடைந்தார். அப்போது அவர் மூத்த பெண்ணாகிய மகதபலுக்கு வயது பன்னிரண்டு தான்; இரண்டாவது தனயன் தாமஸ் ஒன்றுமறியாப் பத்து வயதுச் சிறுவன். ஆனால் பர்த்தாவிடம் பரம விசுவாசமும் சிறந்த பக்தியுங் கொண்டிருந்த எலிஸா அவரது ஞாபகார்த்தமாக ஜனித்த குழந்தைகளை மிக்க கனிவுடன் சம்ரட்சித்து தன் கணவன் சம்பாதித்து வைத்திருந்த நிலத்தில் கடனுக்கு விற்றதுபோக மிகுந்ததை தன் மக்களின் உதவியால் சாகுபடிசெய்து ஜீவனஞ் செய்துவந்தாள். தாமஸ் அதிபாலியனாயிருந்த போதிலும் தன் ஊக்கத்தினாலும் உழைப்பினாலும் தன் பருவத்துச் சிறுவர்களாலாகாத அருஞ் செயல்களையும் அலட்சியமாகப் புரிந்து தன் மாதாவைச் சந்தோஷிப்பித்து வந்தான். அத்தாயோ பயிர் விளைந்து பலன் வீடு வந்து சேருமுன் தன் குடிசையிற் குவித்து வைத்திருந்த தானியம் தீர்ந்துவிடுமென்று கணக்கிட்டு அப்படிச்செலவாகாதிருக்கும்பொருட்டுத்தன் மூன்று வேளை யுணவை தன் மைந்தரறியாது இரண்டு வேளையாகக் குறைத்து அதிலும் கணக்குத் தப்பிப்போகவே ஒருவேளையாகாரத்தை மாத்திரமுட்கொண்டு உழைத்துவந்தாள். அன்றியும் அருகாமையிலிருந்த ஒரு குடும்பத்துக்குத் தையல் வேலை செய்துகொடுத்தும் தாமஸ் அவர்கள் நிலத்தை யுழுது சாகுபடி செய்தும் பொருள் சேர்ப்பதுண்டு. இப்படிச் சேகரித்த ரொக்கத்தை ஒரு நாள் தாமஸ் தன் தாயாரிடங் கொடுத்து "அம்மா இதைக்கொண்டு தம்பி ஜேம்ஸுக்குக் காலுக்கு செருப்பு வாங்கிப் போடு" என்றான். எலிஸா தாமஸின் சகோதர வாத்சல்யத்தைக் கண்டு உடல் பூரித்து "குழந்தாய், ஜேம்ஸ் முதல் முதல் தரித்துக் கொள்ளுஞ் செருப்பு உன்னால் கிடைத்ததால் அவன் உனக்கு என்றும் நன்றியுள்ளவனாயிருப்பான். நீ எப்பொழுதும் துக்கப்படமாட்



டாய்" என்று மனப்பூர்வமாய் ஆசீர்வதித்தாள். அச்செருப்பை மூன்று வயதில் அவர் தரித்துக் கொண்ட போது அடைந்த சந்தோஷம் முப்பது வருஷத்துக்குப் பின்பு அவர் ஐக்கிய மாகாணங்களுக்குப் பிரஸிடெண்ட் ஆன போதும் அடையவில்லை.

குடிசைக்கு $1\frac{1}{2}$-மைல் தூரத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தியுள்ளாரென்றறிந்த தாமஸ் தன் தாயிடமோடி வந்து சங்கதியை யறிவித்து தம்பி ஜேம்ஸையும் இரு சகோதரிகளையும் உடனே பாடசாலைக்கு அனுப்பும்படிக்கும் தான் ஒருவனே குடும்பத்துக்கு வேண்டிய உணவையும் உடையையும் ஈட்டுவதாகவும் சொன்னான். பாலன் கூறியதைச் செவியுற்று மகிழ்ந்த எலிஸா நான்கு வயதுமாகாத சிசு ஜேம்ஸ் தினம் ஒன்றரைமைல் தூரம் பாடசாலைக்கு எப்படி நடந்து போய்வரக்கூடுமென்றாள். ஆனால் அவளது மூத்த தனய மகதபல் தம்பியை முதுகில் தூக்கிப்போய் வருவதாக உற்சாகப்படுத்தினாள். சில நாள் கழிந்ததும் எலிஸாவின் முயற்சியால் பாடசாலைக்காக அவளது நிலத்திலேயே ஒரு கட்டடம் கட்டப்பட்டு அதில் சிறுவர்கள் போய்ப் படித்து வந்தார்கள். ஜேம்ஸுக்கு அசாதாரணமான சக்தியொன்று இருந்தது. அவன் ஒவ்வொரு விஷயத்தையும் தீட்சண்யமாகக் கவனித்து பகுத்தறிவான். பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் தங்கள் புஸ்தகங்களைத் தவிர வேறெதையும் பிள்ளைகள் கவனிக்கக் கூடாதென்று ஏற்படுத்தியிருந்த சட்டம் ஜேம்ஸ் ஒருவரால் மாத்திரம் தன்னறிவின்றி உபேட்சிக்கப்பட்டது. குருவின் முயற்சி வியர்த்தமாகவே அவர் ஜேம்ஸை அவரிஷ்டப்படி விட்டு விட்டார். அதனால் ஜேம்ஸ் மற்ற பிள்ளைகள் படிப்பதையுஞ் சொல்வதையுங் கவனித்து சிரமமில்லாமலே பாடங்களைச் சரிவர ஒப்புவித்து வந்தார். பள்ளிக்கூடத்தில் நிபுணன் ஜேம்ஸே என்று யாவருமுணர உபாத்தியாயர் அவருக்கு ஒரு புஸ்தகம் பரிசளித்தார்.

ஜேம்ஸுக்கு வயது எட்டு ஆவதற்குள்ளேயே அவர் நிலத்தை சாகுபடி செய்வதில் தன் தமையனுக்கு உதவி செய்துவந்தார். அவருக்கு வயது 12 ஆனதும் தாமஸ் அவரிடம் குடும்பாட்சணையை ஒப்புவித்துவிட்டு திரவியம் சம்பாதிப்பதற்காக அயல் சமஸ்தானத்துக்குச் சென்றான். தன் தமையன் தொழிலைச்சாமர்த்தியமாகக் குற்றங்குறையின்றி தன் அன்னை மனம் பூரிக்க ஜேம்ஸ் செய்து வந்தார். ஏழு மாதம் வெளிச்சென்றிருந்துக் காடுவெட்டிக் கரம்படித்து 75 டாலர் மிகுத்து தாமஸ் அத்தொகையைத் தன் தாயிடங்கொணர்ந்து தந்து ஒரு புதிய மர வீடு கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்ததைப்பார்த்திருந்த ஜேம்ஸ் பரம சந்தோஷமடைந்து தானும் சுயமாகச் சம்பாதித்துத் தன் தாயிடங்கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்தார். தன் புதிய வீடு கட்ட தச்சன் வந்து வேலை செய்யும்போது ஜேம்ஸ் மரங்களைச் செதுக்கியும் இழைத்தும் தச்சனுக்குப் பலவிதமாக ஒத்தாசை செய்து தச்சு வேலையைக் கற்றுக்கொண்டார். அத்தச்சன் ஜேம்ஸின் அறிவையும் ஒழுங்கான வேலைத்திறத்தையுங்கண்டு மெச்சி அடிக்கடி சில்லரை வேலைகளைச்செய்ய ஜேம்ஸைத் தருவித்துக் கூலியுங்கொடுத்து வந்தான். இளைஞன் ஜேம்ஸின் ஊக்கத்தையும் பொறுமையையுங்கண்டு வியப்படையாதார் கிடையாது. ஆரம்பத்தில் ஒரு நாள் ஒரே மூச்சாக நூறு பலகைகளை இழைத்துக் கூலியாக நூறு செண்டு அதாவது ஒரு டாலர் தன் தாயிடங்கொடுத்து தாமஸ் ஏழு மாதத்தில் சம்பாதித்த 75 டாலரை தான் இவ்வாறு வேலை செய்து 75 நாளில் ஈட்டக்கூடுமென்று தெரிவித்தார். வேலையில் எவ்வளவு தேர்ச்சிபெற்றிருந்தாரோ அவ்வளவு விருத்தி கல்வியிலும் ஜேம்ஸ் அடைந்திருந்தார். உபாத்தியாயர் அறியாக்கணக்குகளையும் ஜேம்ஸ் சுலபத்தில் தெளியச்செய்வார் ஜேம்ஸினால் முடியாத காரியங்கிடையாது. எதையும் அவர் "என்னால் அதைச்செய்யக் கூடுமென்று அதிமனோதைரியத்துட னுரைப்பார்." கபடம், பொய், சூது முதலிய துர்க்குணங்களை அவர் ஆதிமுதல் வெறுத்து வந்தார். மறைத்துச்செய்யும் வழக்கம் அவரிடங்கிடையாது. ஜீவஹிம்சை செய்ய அவர் ஒருபோதும் மனங்கொள்ளார். எளியாரை வலியார் துன்புறுத்தினால் அவர் அதைப் பொறுக்கமாட்டார்.

ஜேம்ஸ் தச்சு வேலை செய்து வருங்கால், பார்க்கர் என்னும் உப்புக்காய்ச்சுபவன் ஜேம்ஸைத் தன்னிடம் கூலிக்கு வேலைசெய்யும்படி

கேட்டுக்கொண்டான். ஜேம்ஸுக்கு வேலை மனதுக்கியைந்ததாயிராவிட்டாலும் சம்பளம் விரும்பத்தக்கதாயிருந்தபடியாலும் எஜமானன் அன்புடையவனாயிருந்தபடியாலும் தாயின் சம்மதம் பெற்று வேலையிலமர்ந்தார் : ஒழிந்த நேரங்களில் வீண்போக்காமல் அங்கிருந்த புத்தகங்களையெடுத்துப்படித்து வந்தார். அந்நூல்களில் சிந்துபாத்து என்னும் மாலுமியின் கதை, ஜாக்ஹாலியார் முதலிய கடல் வீரம் கடல் கொள்ளைகளைப்பற்றிய சரித்திரங்கள் இருந்தன. இவற்றைப் படித்தது முதல் ஜேம்ஸுக்குக் கப்பலில் பயணஞ் செய்து புது புது தேசங்களைப் போய்ப்பார்த்து வரவேண்டுமென்கிற பேராவலுண்டாயிற்று. பார்க்கரின் மகள் ஒரு சமயம் அலட்சியமாக "கூலிவேலையாள்" என்று தன்னைச் சொன்ன வார்த்தையைப் பொறாமல், பார்க்கர் எவ்வளவு வேண்டியும் அவனிடம் வேலைசெய்ய சம்மதிக்காமல் தன் அன்னையிடம் வந்து தனக்குக் கப்பலேறி அயல் நாடுகள் சென்றுவர ஆவலிருப்பதாகவும் அதற்கு தாய் சம்மதிக்க வேண்டுமென்றும் வேண்டினார். இதைக்கேட்ட எலிஸாவுக்கு இடிவிழுந்தாற் போலாயிற்று. அவள் ஒரே உறுதியாக எக்காரணத்தாலும் கடலில் செல்லக் கூடாதென்று மறுத்துவிட்டாள். அதனால் ஜேம்ஸ் அயலூரில் சிலநாள் போயிருந்து ஒரு கட்டை வெட்டியிடம் கூலி வேலை செய்து பிறகு ஈரி என்ற ஏரிக்கும் ஒகியோ என்ற ஆற்றுக்கும் இடையிலுள்ள கால்வாய்ப் படகொன்றில் இழிந்த வேலையிலமர்ந்து அதிலிருந்த 2,3 மாதத்துக்குள் 12,13 தடவை நீரில் மூழ்கி மயிரிழையில் உயிர்தப்பிக் கடைசியில் ஜுரத்தினாலடிபட்டுத் திரும்பவும் தாயிடம் வந்துசேர்ந்தான். ஜ்வரம்விட்டதும் அவர்செஸ்டர் என்னுமூர்சென்று க்யூகா கலாசாலையில் வித்தை கற்கத்தொடங்கினார். பாடசாலை விட்ட நேரங்களில் ஒரு தச்சனுக்கு உதவி வேலை செய்தும் ஒரு குடியானவனுக்கு அறுப்பறுத்தும் திரவியஞ் சம்பாதித்து அதனால் ஜீவனஞ் செய்து கலாசாலையில் புஸ்தகம் சம்பளங்களுக்கும் கொடுத்து வந்தார். மாரி காலத்தில் கலாசாலை மூடியிருக்கும்போது ஜேம்ஸ் சிற்றூர்கள் சென்று திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்து பிரக்யாதிபெற்றுக் சம்பாத்தியமுஞ் செய்வார். எந்தவேலை யேற்றுக்கொண்டபோதிலும் பழுதறச் செய்யுந்திறனுடையவராதலால் ஜேம்ஸை எவ்விடத்திலும், எவரும் விரும்பிச் சிலாகித்தார்கள். க்யூகாவில் திரும்பவும் கலாசாலை திறந்ததும் ஜேம்ஸ் பழைய வழக்கப்படி ஒழிவு வேளைகளில் உழைத்துச் சம்பாதித்துக் கல்விக்குக் கொடுத்து வகுப்பில் அனைவரிலும் முதல்வனென்றுபெயரெடுத்ததுமன்றி சாதுர்யவாக்குக்காகவும் மேலான கொள்கைகளுக்காகவும் யாவராலும் அபிமானிக்கப்பட்டு வந்தார். அடிமைகளை விடுவித்து அடிமைத்தனத்தை முற்றும் அகற்ற வேண்டுமென்ற பிடிவாத அபிப்பிராயம் அவருக்கிருந்தது. இந்த விஷயத்தைப்பற்றி அவர் கலாசாலையில் கேட்டோர் மெச்சிய பிரசங்கம் ஒன்று செய்தார். இக்கலாசாலையில்தான் லூக்ரீஷியா ருடோல் என்பவளுக்கும் ஜேம்ஸுக்கும் நட்புண்டாயிற்று. க்யூகா கலாசாலையில் வித்தையை முடித்துக்கொண்டு மேலே கற்பதற்காக ஜேம்ஸ், நியூ இங்கிலாந்திலுள்ள காலேஜ்களில் ஒன்றுக்குப் போவதாக ஒரு நண்பன் புத்திமதியின்படி உத்தேசித்திருந்தார். ஆனால் ஹிராம் என்னுமிடத்தில் புதிதாக எச்லக்டிக் இன்ஸ்டிடூட் என்று ஒரு வித்தியா சாலை ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறதென்றும் அங்கு அதிக செலவின்றி கல்வி கற்கக்கூடுமென்றறிந்து ஜேம்ஸ் சிலமாத காலம் தன் தாயுடன் வேறூரிலுள்ள ஒரு பந்துவுடன் வசித்திருந்துவிட்டு நேரே ஹிராம் சென்று அங்கு வித்யாசாலையினதிகாரிகளைக் கண்டு தான் பரம ஏழையென்றும் தனக்கு வித்யாசாலையை தினம் பெருக்கித் துலக்கும் வேலையையும் காலாகாலத்தில் மணியடிக்கும் வேலையையுந் தந்தால் அதைக்கொண்டு கல்விகற்குஞ் சம்பளத்தைக் கொடுத்து வித்தையை அப்பியசிப்பதாக வேண்டிக்கொண்டான். அதிகாரிகள் அவ்வேலைகளை "நீ செவ்வனே புரிவாயென்று நாங்கள் எப்படி நம்புவது" என்று வினவ ஜேம்ஸ் "இரண்டு வாரம் அவ்வேலையில் என்னை வைத்துப் பரிசோதியுங்கள், உங்களுக்குத் திருப்தியாக வேலை செய்தால் வைத்துக்கொள்ளுங்கள், இல்லாவிடில் நானே விட்டுப்போகிறேன்" என்றார். அதிகாரிகள் அப்படியே செய்து ஜேம்ஸின் வேலையில் முழுதுந் திருப்தியாகி அத்தொழிலில் அவரை ஊர்ஜிதப்படுத்தினார்கள். அவ்வேலைகள் மிக்க இழிவுங் கடினமு



மானவை. அனைவரும் படுக்கையிலிருக்குஞ் சமயத்தில் விடியற்காலம் ஒரு நிமிஷம் முன்னமும் ஒரு நிமிஷம் பின்னுமிராமல் சரியாக ஐந்து மணிக்கு மணியடிக்கவேண்டும். உடனே கலாசாலையைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தஞ் செய்ய வேண்டும். குறித்த நேரங்களில் தவறாமல் மணியடிக்கவேண்டும். இத்தொழில்களாலேற்பட்ட சம்பாத்தியம் ஜேம்ஸின் உணவுக்கும் போதாமலிருந்ததால் அவர் அவ்வூரில் ஒரு தச்சனிடம் கூலிக்குச் சுற்று வேலை செய்து திரவியம் சம்பாதிப்பார். பாடசாலை விட்ட நேரங்களில் அடிக்கடி வீட்டுக் கூரைகளின்மேல் தச்சுவேலை செய்து வருவதைப் பார்க்கலாம். இவ்வளவு தாழ்ந்த வேலைகளைச் செய்தும் யாரும் அவரை அலட்சியஞ் செய்வது கிடையாது. எல்லோருக்கும் அவரிடம் மதிப்பும் வியப்பும் நாளுக்குநாள் அதிகரித்துவந்தது. வேலையில் எப்படி உழைப்பையும் ஊக்கத்தையுங் காட்டினாரோ அப்படியே படிப்பிலும் கவனத்தையும் புத்தியையும் செலுத்திவந்தார். "செய்வன திருந்தச் செய்" என்னும் முதுமொழிக்கு அவ்வூரார் ஜேம்ஸையே உபமானமாகக் காட்டி வருவார்கள். இரண்டாவது வருஷத்தில் ஜேம்ஸ் அக்கலாசாலையில் மாணாக்கராயிருந்து படித்ததோடு சம்பளத்துக்கு உதவி உபாத்தியாயராக விருந்து கற்பித்தும் வந்தார். இதனுடன் அவருக்கு கலாசாலை துலக்குந் தொழிலும் மணியடிக்கும் வேலையு மகன்றன. ஆனால் தச்சு வேலையை மாத்திரம் அவர் விடவில்லை. இவரிடம் கல்வி கற்க வந்தவர்களில் லூக்ரீஷியா ரோடோல்பும் ஒருத்தி. இவளுக்கும் ஜேம்ஸுக்கும் இச்சமயத்தில் ஒற்றுமை மிகுந்து ஜேம்ஸ் கல்வியைப் பூர்த்தி செய்ததும் லூக்ரீஷியாவை மணந்து கொள்வதாக ஏற்பாடாயிற்று. ஆறு வருடத்தில் பூரணமாகக் கற்கவேண்டிய கல்வியை ஜேம்ஸ், ஹிராம் கலாசாலையில் மூன்றே வருஷத்தில் முடித்து மேல்படிப்புக்காக தன் தமையன் தாமஸின் ஒத்தாசையை நம்பி வில்லியம்ஸ் காலேஜில் போய்ச் சேர்ந்தார். அவ்வித்யாலயத்தின் தலைமை உபாத்தியாயர் டாக்டர் ஹாட்கின்ஸ் ஜேம்ஸை மிக்க அன்புடன் வரவேற்று வேண்டிய தைரியங்களைச் சொல்லி வித்தை கற்பித்தார். தாமஸ் திரவிய சகாயஞ் செய்து வந்தமையால் ஜேம்ஸ் வெளி வேலையொன்றுமே செய்யாமல் படிப்பிலும் விளையாட்டிலும் அதிகமாகக் கவனத்தைச் செலுத்தி இரண்டிலும் முதலவர் அவரேயென்று பெயரெடுத்தார். தாமஸுக்கு சில அசௌகர்யங்களினால் பணமனுப்ப சரிப்படாமற் போகவே ஜேம்ஸுக்குங் கஷ்டங்களுண்டாயின. விடுமுறை நாள்களில் அயலூர் சென்று, பள்ளிக்கூடம் வைத்துக் கொஞ்சம் சம்பாதித்தார். ஆனால் சம்பளத்துக்கும் உணவுக்கும் கொடுக்க வேண்டிய கடன் ஏராளமாயிருந்தது. இடையிலிருந்த ஒரே உடை நைந்து கிழிந்து புத்துடை வாங்கப் பொருளின்றி துயர்ப்பட்டிருக்குங்கால் ஒரு ஸ்கூல் அதிகாரி ஜேம்ஸிடம் வந்து வருடத்துக்கு, 200 டாலர் சம்பளம் தருவதாகவும் தனது ஸ்கூலில் உபாத்தியாயராகவிருந்து மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பிக்கும்படிக்கும் வேண்டிக் கொண்டார். ஜேம்ஸ் அவ்வளவு வறுமைஸ்திதியிலிருந்தும் வித்யாலயத்தில் டிக்ரி (Degree) பெறவேண்டுமென்ற அவாக் கொண்டிருந்தபடியாலும் வில்லியம்ஸ் காலேஜில் கல்வி பூர்த்திசெய்ததும் ஹிராம் கலாசாலையில் உழைக்க ஒத்துக் கொண்டிருந்தாலும் மேற்கூறிய அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்காதிருந்தார். ஜேம்ஸின் கந்தையுடையைக் கண்டிரங்கிய அவர் நண்பரொருவன் தானறிந்திருந்த ஒரு தையற்காரனிடஞ் சென்று ஜேம்ஸின் நிலைமையையும், வறுமையையும் சக்தியையுந் தெரிவித்துக் கடனாக ஒரு உடுப்பு எடுத்துக் கொடுத்தான் : சில நண்பரின் உதவியால் ஜேம்ஸ் கல்வியை நிறுத்தாமல் முடித்து 1856 வருடத்தில் டிக்ரியும் பெற்றார். வித்யாலயத்தில் தர்க்க சங்கத்தில் அவரினுஞ் சிறந்த வாக்தாட்டியுள்ளவர் கிடையாது. எடுத்துக் கொண்ட விஷயத்தை தெளிவாகவும் விசதமாகவும் ஆட்சேபிக்க வழியில்லாதபடியும், திடமாய் விவகரிப்பார்.

(இப்பெருமான் ஜீவ்ய சரிதை அடுத்த சஞ்சிகையில் முடிவாகும்.)

---

**மறைஞான சம்பந்தர்.**—திருக்களாச் சேரியிலே விளங்கிய சைவசமயாசாரியராகிய இவர் உமாபதிசிவாசாரியருக்குக் குருமூர்த்தியான். இவர் சற்றேறக்குறைய அறுநூறு வருஷங்களுக்கு முன்னேயுள்ளவர். இவர் மெய்கண்டதேவருக்கு மாணாக்கர். சிவதருமோத்திரத்தை வடமொழியிலிருந்து தமிழான்மொழி பெயர்த்துப்பாடியவர் இவரே—தமிழ்ப்பெயரகராதி

# இந்தியாவும் தேசாபிமானமும்
## INDIA AND PATRIOTISM

"அரிது அரிது மானிடராதலரிது" என்னும் முதுமொழிக்கேற்ப, மிகவருமையாய்க் கிடைக்கப்பெற்ற மானிடப்பிறவிக்குரிய அரிய குணங்களில் தேசாபிமானமும் ஒன்று. எக்காலத்திலும், எந்நாட்டினும், எல்லா ஜாதியாரும், செல்வவான்களா யிருப்பினும், வறியோரா யிருப்பினும், பண்டிதர்களா யிருப்பினும், பாமரர்களா யிருப்பினும், நாட்டுப்புறவாசி முதல் பட்டணத்தானீறாக இத்தேசாபிமானமெனும் திவ்ய குணத்தைச் சிறிதேனும் மேற்கொள்ளாமலிருப்பதை நாம் காண்கிறோமில்லை. இந்நிலவுலகத்தில் மிக்க இன்ப நுகர்தற்குரிய இடம் யாதென விசாரிக்கப் புகுவோமாயின் பற்பல நாட்டாரிடமிருந்தும் தத்தம் நாடே ஏனைய எல்லாவற்றினும் சிறந்தது என்று அறியப்பெறுவோம். மிக்க சீத மண்டலங்களில் வசித்து மகா வருத்தத்துடன் வேட்டையாடி தன்உணவுப்பொருள்களைச் சேகரித்து பெருங்குளிரில் நடுக்கமுறும் லாப்லாண்டியனும் மிக்க உஷ்ணப்பிரதேசங்களைத் தம் வாசஸ்தானமாகக்கொண்டு கடும் வெயிலில் தேகம் வியர்க்க உழைத்துத் தன்காலங் கழித்துவரும் நீக்கிரோ ஜாதியானும் யாதொரு ஏற்றத் தாழ்ச்சியுமின்றி முறையே தத்தம் நாட்டின் சிறப்பு வளப்பங்களை எடுத்துக் கூறுகின்றனர். இது பற்றியன்றோ ஆங்கிலப்புலவராம் ஸர் வால்டர் ஸ்காட் என்பவரும், "(இதுவே என் ஜன்மபூமி; இதுவே என் தாயகம்)" என்று தனக்குத்தான் எடுத்துரையா மனனிலை குன்றிய மாண்பினனும் இம்மண்மீது உயிர்த்துளனோ?" என்று அதிசயித்து விளக்கமாகக் கூறினர்! உதாரணங்களுக்காக நாம் மிகவும் சிரமப்பட வேண்டியதில்லை. ஓர் கிராமவாசி மற்றோர் ஊரானுடன் ஏதாவது தன் கிராமத்தைப்பற்றிப் பேசநேரிடின், தன் கிராமம் எவ்வளவு கேவல நிலைமையிலிருந்தபோதிலும் ஏதாவது ஓர் விஷயத்திலேனும் மிக்க சிறப்புற்றது என்று புகழ்ந்து பேசுவதை நம்மவர் பலர் கேட்டிருக்கலாம். தம்மூர்க் குளத்துநீர் மிக்கருசியுள்ளது என்று ஒருவரும், தம்மூர் ஜல சவுக்கியத்திற்குப் பேர்போனது என்று மற்றொருவரும் தம்மூரில் விளையும் கரும்பைப்போல வேறெங்கும் கிடையாது என்று மூன்றுவது ஒருவரும் தம்மூரின் சில வளப்பத்தைப் பற்றிப் புகழ்வோர் ஏனையொருவருமாக இங்ஙனம் தம்மூரே சிறந்தது என்று பேசுவோரை நாம் காணாத இடமில்லை. ஆகவே இவ்வபிமானமானது எத்தகையோரிடத்தும் குடி கொண்டுள்ளது என்பது விசதமாகின்றது.

ஆயினும் எல்லா ஜனங்களிடத்தும், ஜாதியாரிடத்தும், நாட்டாரிடத்தும் ஒரே விதமாய் ஏற்றத்தாழ்ச்சிச் சிறிதேனுமின்றியுள்ளதோவென்று சற்று நிதானிப்பின், இவ்வரிய குணம் ஆங்காங்கே கால தேச வர்த்தமானங்களையொட்டியே யுள்ளதென்று தெளிவாகின்றது. உலக சரித்திரத்தைச் சற்று ஆராய்வோமாயின் தேசாபிமானம் எல்லா நாடுகளிலும் எல்லா ஜாதியாருள்ளும் உறைந்திருந்ததாக அறிகிறோமாயினும் சில நாட்டாரிடத்தில் இது சிறிது குறைந்திருந்ததாகவே தெரியவருகிறது. ஆதி காலங்களில் ஜனங்கள் இன்னும் நாகரிக நிலைமையை யடையாமலும், தம் பந்து வர்க்கங்களுடனும் ஆடுமாடு முதலிய செல்வப்பொருள்களுடனும் ஒரே இடத்தில் நிலைத்து குடியேறாமலும், தம் ஆடுமாடுகளின் மேய்ச்சல் நிமித்தமும், பிரஜைகள் பலுகிப் பெருகியதினால் இடவசதியினிமித்தமும், நாடு நாடாய்த் திரிந்து வந்தபொழுது இத்தீங்குணம் மேம்பாடடைந்து அபிவிருத்தியடைவதற்கு யாதொரு சந்தர்ப்பமும் ஏற்படாமற்போய்விட்டது. ஒருவன் நாடோடியாய்த் திரியுங்காலத்து அவனுக்கு ஒரே இடத்தில் பற்றுண்டாக யாதொரு காரணமுமில்லை. இன்றைக்கு இவ்விடத்தில் பிழைப்பு ஏற்பட்டால் நாளையதினம் வேறேரிடத்தில் கிடைக்கும் என்ற ஓர் எண்ணத்தால் எல்லா மனப்பற்றுக்களும்ஒழிந்துவிடுகின்றன. ஆனால் ஓரிடத்தைப் பற்றியோ, அவ்விடத்திலுள்ள பொருள்களைப் பற்றியோ, ஜனங்களைப் பற்றியோயுள்ள அபிமானமெல்லாம் முற்றிலும் ஒழிந்து விடுகின்றது என்றும் நாம் கருதுதல் ஒண்ணாது. ஏனெனில் இங்ஙனம் நிலையில்லாமல் அவர்கள் வாழ்ந்த நாட்களே அவர்கள் மிக்க சிறப்புடன் கழிந்தனவாகக் கருதப்பட்டு வருகின்றன என்பதை நாம் சரித்திர வாயிலாக அறிகிறோம்.

நாகரிகம், கல்வித்தேர்ச்சி, அந்நிய நாட்டுக் கூட்டுறவு இவைகள் முதிர்ந்த இக்காலங்களிலோ தேசாபிமானக் கிளர்ச்சிக்கு வரையறை



யின்னதென்றறிவதும் துர்லபமாயிருக்கின்றது. தேச நன்மையைப் பாராட்டி, தேச சம்பந்தமான எல்லாவற்றிற்கும் சீருஞ்சிறப்புமமைப்பதுமன்றி, மற்றேனைய நாட்டாரை இகழ்ந்து அவர்களைப் பலவிதத்திலும் துன்புறுத்தலுமே தேசாபிமானத்தின் அறிகுறி என்று கருதவும் தலைப்பட்டார்கள். ஆனால் தற்காலத்தில் வெளிப்படையாகும் தேசாபிமானத்தில் அனேக இனிய விசேஷங்கள் உள்ளனவென்று உலக நடவடிக்கைகளைக் கவனித்து வருவோர்க்கு நன்கு விளங்கும். தேசாபிமானம் என்பது கேவலம் நாட்டின் மீதுள்ள நாட்டத்தைக் குறிப்பது ஒழிந்துபோக, தேசத்தின் நன்மையைப்பெருக்கும் பலவித சாதனங்களின் மீதும் நாட்டார் கொண்டுள்ள ஓர் அரிய அபிமானத்தைக் குறிக்கின்றது. நாட்டிலுள்ளார் எச்சாதியராயிருப்பினும் அவர்களின் மீது செலுத்தும் அபிமானமும், தம் தாய் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கியுள்ள பாஷைகளின் மீதும் மதங்களின் மீதும் அந்நாட்டார் செலுத்தும் அபிமானமும், அந்நாட்டு விளைபொருள் கைத்தொழில்களின் மீதுள்ள அபிமானமும், ஆக இவைகளின் மீது தாம் செலுத்தும் அபிமானத்தைத் தம்மனத்தளவே நிறுத்தாது, வெளியில் அவ்வபிமானத்திற்கேற்ப ஒழுகி நடத்தலாம் பெருங்கடைமையும் தேசாபிமானமேயாகும். இங்ஙனம் சொன்னதனால் தேசத்தின் நன்மையைக்கோரி செங்கோலோச்சும் மன்னவரிடத்துச் செலுத்தும் ராஜபக்தியும் தேசபக்தியேயாகும். இத்தகைய தேசாபிமானம் பூர்வகாலத்து ரீதியைப் போலிராது, மிக உறுதியாய் எல்லாத்தேசங்களிலும் வேருன்றி, கிளைத்துத் தழைத்து நாடோறும் விருத்தியாகி வருகின்றது. உலக சரித்திரத்தைச் சற்றுக் கவனித்த எம்மனிதனும் ஆங்காங்கு சிறந்து விளங்கின தேச பக்தர்களின் வீரச்செயல்களைப் புகழ்ந்துரையாமலிருக்கான்.

க்ரீஸ் தேசத்தில் ஜனங்கள் பொது நன்மையை நாடி தம் உயிரை ஒரு பொருட்டாக மதியாமல் தங்கள் நாட்டின் சிறப்பையே மேலானதாகக் கருதி வந்தனர். 'லியானிடஸும் அவனுடனிருந்த முந்நூறு வீரர்களும்' என்னும் சரித்திரத்தையும், தெமிஸ்டக்ளீஸ், பெரிக்ளீஸ், டெமாஸ்தினீஸ் என்பவர்களின் வாழ்நாட் போக்கையும் கேட்டுப் புகழாதவரும் உண்டோ? ஹொரேஷியஸ், ரெகுலஸ், கிராக்கி, ஸிஸரோ இவர்களின் தேசாபிமான ஒழுக்கங்களையும், உவில்லியம் டெல், ஜோன் ஆப் ஆர்க், ஹாம்ப்டன், நெல்ஸன், உவெல்லிங்டன் இவர்களின் வீரச்செயல்களையும், இன்னும் ஜெர்மனி, ஜப்பான் முதலிய தேசத்திலுள்ளோர் உலகமே வியத்தற்குரிய அரிய காரியங்களைத் தம் தாய் நாட்டின் பொருட்டுச் செய்து கொண்டு வரும் முயற்சிகளையும் அறிபவர் எவராயினும் தாமும் அத்தகைய வழியைப் பின்பற்றிப் புகழடைய விரும்பாதிருப்பரோ? இவ்வண்ணம்தேசாபிமானம் உலகெங்கும் எல்லாத் தேசங்களிலும் பரவியிருத்தலைக் கண்ணுறும் நம்மிந்திய நாட்டார் தாமும் இப்பேரொழுக்கத்தைக் கடைப்பிடிக்கவேண்டுமென்னும் அவாவுறுதல் பொருத்தமேயன்றோ? மேலும் நம் நன்னாட்டில் நம்முன்னோர் இத்தேசாபிமானத்தைக் கைக்கொண்டிருந்திருக்கிறார்களா? அவ்வித மாண்பினைப்பெற்ற நம்மவர்கள் இன்னும் அதை நழுவவிடாமல் தம்முள் இருத்திவைத்திருக்கின்றனரா? என்பதை விசாரித்தலும் தகுதியாமன்றோ?

ஆரியர்கள் இந்தியாவில் கால்வைத்த நாள் முதற்கொண்டு அவர்கள் தேசாபிமானத்தை மேற்கொண்டிருப்பதாகக் காண்கிறோம். அவர்கள் வசித்தற்கென்றமைந்த நாட்டின்மீதும் அந்நாட்டில் அமைந்துள்ள இயற்கைப் பொருள்களின்மீதும், ஆறு, ஏரி, குளங்கள், வரைகளின் மீதும்அவர்கள்செலுத்திய அபிமானத்திற் களவேயில்லை. இந்தியாவில் குடியேறுதற்கு முன்னரே அவர்கள் வாழ்ந்துவந்த தேசத்தின் மீதும், குடிநிலை, வாழ்க்கைநிலைகளின் மீதும் மொழிதற்கரிய பிரேமையுடையவரா யிருந்தார்கள் என்பது வேத சாஸ்திரங்களை நுண்ணறிவுடன் ஆராய்ச்சி செய்தவர்களுக்கு விசதமாகின்றது. தவிர, ஆரியர்கள் குடியேற வந்த பாரத பூமியே தேசாபிமான மென்னும் சிறந்த கொடியை தழைத்து வளரச்செய்வதற்குக் காரணமாயிருந்தது. பண்டைக்கால ஆரியரை மாத்திரமோ? இத்தேசத்திலேயே எவ்வெக்காலத்தும் நிலைத்திருக்க விரும்பின எல்லா ஜாதியாரையும், சிறிதுகாலம்தங்கியிருந்து தக்கவூதியம் கிடைத்தவுடன் தம் நாட்டிற்குத் திரும்ப எண்ணங்கொண்ட தீரர்களையும் தன் இயற்கை வளத்தாலும் செயற்கை வளத்தாலும் மகா

ஆர்வத்துடன் அழைக்குதாகக் கொள்ளல் வேண்டும். இயற்கையிலேயே மானிடப் பிறவிக்கு இன்றியமையாத வஸ்துக்களை தன்னகத்துக் கொண்டதனால் தன் குழந்தைகளை யாதொரு வருத்தமுமின்றி அருமை பெருமையுடன் சீராட்டிப் பாவித்து வந்து அவ்விளஞ்சிறார்கள் தக்கவயதையடையவும் அவர்களால் எங்கணும் தன் புகழ் பரவவும் தன் சக்தி பன்மடங்கதிகரிக்கவும் இனிது விளங்கும் பாரத மாதாவின் சிறப்பினைக் கூறுதலுங்கூடுமோ ?

தேவதைகளின் இருப்பிடமாயும், புண்ய புருஷ சித்தாதிகளின் வாசஸ்தானமாயும் எங்கும் வெண்பட்டு விரித்தாற்போல் நிர்மலமாய் பனிப்பாளங்கள் ஒளி வீசவும் இவ்வுலகில் தனக்கிணை எவருமிலை யென தன் கொடு முடிகளை வானுற ஓங்கி நிற்கப்பெற்ற பனிவரையும், இப்பனிவரையினின்றும் வெளியேறும் கங்கை, யமுனை, ஸிந்து, பிரம்ஹபுத்ரா முதலிய புண்ய தீர்த்தங்களும், இவை பாயப் பெற்ற சகல வளங்களும் நிறைந்த சிறந்த நாடுகளும், அந்நாட்டிலுள்ளோரின், கல்வி, கேள்வி, ஒழுக்கம், நடையுடைபாவனைகளும், அவ்வள நாடுகளுக்கப்பாலுள்ள மலை செறிந்த நாடாம் தக்ஷிண தேசமும், ஆங்குள்ள பண்டை நாகரிகமும் ஆகிய இவையெல்லாம் எவர் மனதைத் தான் கொள்ளை கொள்ளா? ஆதலின் ஆரிய தேசாபிமானம் ஒரு துறையிலேயே நின்று விடாது,பற்பல வழிகளில் மேற் கிளம்பியிருக்கின்றது. ஒருபுறம் உயரிய பர்வதங்களாலும், மற்ற மூன்று பக்கங்களிலும் கடலகழியாலும் சூழப்பட்டுள்ள பாரதமாதாவையடைந்துள்ளவர்களுக்கு எக்காலத்திலும் புகலிடம் பிறிதுமுண்டோ? நம் நாட்டாரிடம் மாத்ரு பக்தி விசேஷமாய் உண்டென்பது வெளிப்படையாயிருக்கவும், தம் தாய் நாட்டின் மீது மாத்திரம் அபிமானம் குறைந்திருக்கிறது என்னும் குறை கூறுபவர் அனேகம் இருப்பதற்குக் காரணமென்னோ அறிகிலேம்.

சரித்திர காலவரையறை இன்னதென்று நிதானித்தற்கரிய காலத்திற்கு முன்னரே ஆரியர்கள் தேசாபிமானிகளாய் விளங்கினார்கள் என்று கூறியுள்ளோம். நாம் சரித்திர வாயிலாய் அறிந்தவரையில் இவ்விஷயத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். உலகத்தையே கட்டியாள விருப்பி, தேசந்தேசமாய்ச் சென்று அவற்றை ஜயித்து எங்கணும் திக்விஜயம் செய்து கொண்டு தன் பெருந் சேனையுடன் ஓர் கிரேக்க வீரன் பாரத வர்ஷத்தின் எல்லையை மிதித்து, ஸிந்து நதியைக்கடந்து ஜீலம் நதிக்கரையை அடைந்துவிட்டான். அவ்வீரனை யெதிர்த்தடக்குவார் யாருங்காணப் படவில்லை. ஜீலம் நதிக்கரைக்கிப்பால் அரசு செலுத்தும் புருஷோத்தமனொருவனே தன் சேனையுடன் அந்நிய வீரனை எதிர்க்கிறான். கொடும்போர் நிகழாநின்றது; புருஷோத்தமன் தோல்வியடைகிறான். கிரேக்க வீரன் முன்னிலையில் கைதியாக நிறுத்தப்படுகிறான்.

"நான் உம்மை எவ்விதம் நடத்த வேண்டும் என்கிறீர் ?"

"அரசனை நடத்த வேண்டியது போல நடத்துவீர்" என்று மறுமொழி பகர்ந்தான் புருஷோத்தம வீரன். அங்ஙனமே நடத்தப்பட்டு தன் ராஜ்யத்தையும் மறுபடி அடைந்தான். பிறகு இந்தியாவில் சந்திரகுப்தன், அசோகவர்த்தனன், விக்ரமாதித்யன், ஹர்ஷன் முதலாயினோர் தோன்றி தம் குண ஒழுக்கங்களாலும் செங்கோன் முறைமையாலும் தம் தாய் நாட்டின் மீது அளவிலா அபிமானத்தைச் செலுத்தினர். புருஷோத்தமர் காலத்திற்குச் சுமார் 1500 ஆண்டுகள் கழித்து ஓர் மஹம்மதிய வீரன் இந்தியாவின் மீது படையெடுக்கவும், ஓர் இந்திய அரசிளங்குமாரன் தன்னாட்டை அந்நியரினின்றும் பாதுகாத்தற் பொருட்டு திரண்டபடையுடன் அவர்களை யெதிர்த்துப் போர்க்களத்தில் உயிரை நீத்தான். ப்ரிதிவி ராஜனின் கீர்த்தியைப்பற்றி ப்ரிதிவியில் அறியாதவரும் உண்டோ? மறுபடியும் இந்திய சரித்திரப்போக்கைக் கவனிக்குங்கால் பிரோஸ், ஆக்பர், ஷர்ஷா, ஷாஜிஹான் ஆகிய இவர் போன்ற மஹம்மதிய அரசரும் கூட இந்தியாவின் பொருட்டு உழைத்து வந்தார்கள் என்று அறிகிறோம். இந்தியா மஹம்மதிய ஆட்சியின் கீழிருந்தகாலத்து தேசாபிமானம் தழைத்திருந்ததென்பதற்கு அனேக அத்தாட்சிகள் உண்டு. ஆக்பர் ஆளுகைக்குட்படாது தம் ராஜ்யத்தின் பொருட்டே போராடிப் புகழ் பெற்றவர்களில் பிரதாபஸிம்ஹனும், சந்த்பீபியும் முதன்மையானவர்கள்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS 1913 MADRAS.

இம்மஹம்மதிய ஆட்சியிலேயே தம் தாய் நாட்டினிடம் அன்பு செலுத்துதற்கென்றே அவதரித்த வீர புருஷர்கள் அனந்தம். இவர்கள் தம்மளவு மாத்திரமே தேசாபிமானிகளாய் நிற்காமல் தம் நாட்டார் ஒவ்வொருவரையும் தம்மையே பின்பற்றும்படித் தூண்டுதல் செய்யும் வன்மையையும்பெற்றிருந்தார்கள். ஸிவாஜியின் வீரச் செயல்களையும் மஹாராஷ்ட்ர நாட்டாரின் அரிய குணங்களையும் இக்காலத்தும் அறியாதார் உண்டோ? தேசத்தில் அந்நியரின் கொடுமை நாளாவட்டத்தில் அதிகரிக்கவே, இதுவரையும் காணப்படாத வீராவேசம் கிளம்பிப் பெருகத் தலைப்பட்டது. தேசாபிமான மதாபிமானங்களே உருவெடுத்தாற்போல் மஹாராஷ்ட்ர ஸீக்கிய ஜனங்கள் தோன்றினார்கள். இந்திய சரித்திரத்தில் அஹல்யாபாய், கிருஷ்ணகுமாரி, பத்மினி, ஜான்ஸிராணி முதலியவர்களைப்போல் சிறப்புற்றவர்கள் பெயரை வேறெங்குங்காண்பதரிது. இன்னும், தாதாபாய் நொரோஜீ, சுரேந்த்ரநாத் பானர்ஜி, கோகலே, காந்தி, முதலிய தேசபக்தர்களின் சரித்திரத்தைக் கவனிப்போமாயின் இந்தியாவில் தேசாபிமானம் எவ்வெக்காலத்தும் நீடித்துநின்று பின் வருபவர்களுக்கும் ஓர் சிறந்த ஆபரணமாய் விளங்கும் என்பதற்கு யாதொரு ஐயமுமில்லை.

இந்தியசரித்திர விஷயம் இங்ஙனமாக, இந்திய இலக்கிய இலக்கணங்களைச் சற்று ஆராய்வோமாயின் தேசபக்தி, மதாபிமானம்,இவைகளைப்பற்றி ஏராளமாய்ப் புலவர்கள் கூறுவதைக் காணலாம். இந்தியாவில் வழங்கிவரும் பாஷைகளின்சங்க்யையைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஒவ்வொரு பாஷையிலும் உள்ள நூல்கள் எல்லாம் நேராகவாயினும்மறைபொருளாகவாயினும் தேசபக்தி, பாஷாபிமானம், மதாபிமானம் இவ்வரிய விஷயங்களைப்பற்றியே கூறுகின்றன. காளிதாஸன், பவபூதி, ஸ்ரீ ஹர்ஷன், இன்னமனேக வடமொழிப் புலவர்களும், தென்மொழியில் பழைய சங்கப்புலவர்களும் கம்பன், ஒட்டக்கூத்தன், புகழேந்தி முதலியவர்களும் தேசபக்தியைப்பற்றிக் கூறுவதுமாத்திரமே யன்றி தம் வாழ்நாட்களில் தேசபக்தி பூண்டொழுகியும் வந்தார்கள். பாரியின் மகளிர் தம்தந்தையின் நாடு வேற்றரசனால் கவரப்பட்ட காலத்து அந்நாடடைந்த கோலத்தையும் தம் தந்தையின் கீழ் இருந்தபொழுது இருந்த சிறப்பையும் கூறி பிரலாபிக்கும்போது யார் மனந்தான் உருகி நிற்காது? கம்பர் இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் நாடவிட்ட படலத்தில் ஸ்ரீ ராமபிரான் அனுமாருக்கு ஸீதையின் அடையாளங்களைக் கூறித் தேடவிடும்போது பிராட்டியாரின் நடையழகைக் கூறவேண்டி, பெருமான் திருவாக்கால் 'அவள் நடை உலகப் பிரசித்தமான அன்னம், அழகிய பெண்யானை ஆகிய இவைகளின் நடை என்றாலும் சரியன்று; பாக்களில் வல்ல பழைமையான புலவர்கள் தொடுத்த பக்திபொருந்திய வாக்கின் நடையையுடையவள்' என்று பொருள் படும்படி,

பூவருமழலையன்னம்புனைமடப்பிடியென்றின்ன
தேவருமருளத்தக்கசெலவினளெனவுந்தேறேன்
பாவருகிழமைத்தொன்மைப் பருணிதர்தொடுத்தபத்தி
நாவருகிளவிச்செவ்வி நடைவருநடையணல்லோய்,

என்று கூறியுள்ளார். இங்கு கம்பர் கூறவந்த பொது விஷயம் ஒன்றாயிருக்க, இச்சந்தர்ப்பத்தையொட்டியே தமது நாட்டின் மீதும் அதில் தோன்றியுள்ள பெரியோர்கள் மீதும் அவர் காட்டியுள்ள அபிமானம் பாராட்டற் பாலது. இவ்வண்ணம் சிறிது ஊன்றி பார்ப்போமாயின் நம்மனோரிடம் குடிகொண்டிருந்த நற்குணங்களும், நல்லொழுக்கங்களும் செவ்வனே வெளிப்படும். இவை மாத்திரமா? இவர்களைப் போல் தம்மால் தம் கருத்துக்களை வெளிக்காட்டாமல் மௌனமாய் தம்மாலியன்றவளவு தம் தேச நன்மையின் பொருட்டு உழைத்தவர்களின்தொகையைக் கணக்கிடவும் முடியுமோ?

நம் நாட்டின் மற்றொரு விசேஷச் சிறப்பு என்னவெனில்: ஏனையநாடுகளைப்போல், தம் தேச நன்மையையே நன்றாய்க் கவனித்து மற்றைய நாடுகளை அலட்சியம் செய்வதுமன்றி அவற்றிற்குத் தீங்கிழைக்கவும் முயல்கின்ற தற்கால நாகரிகத்தை மேற்கொண்ட சில நாடுகளைப் போலல்லாமல், தம் நாடு செழிப்புடன் உலகத்திலுள்ள மற்ற நாடுகளும் ஜனங்களும் சகல வழிகளிலும் அபிவிருத்தியாக வேண்டுமென்னும் நல்லெண்ணத்தைக்கொண்ட உண்மையபிமானிகள் அவதரித்து விளங்கும் புண்ய பூமியாகவே இருந்து வருகின்றது:

"ஸர்வேஜநா: ஸுகிநோ பவந்து."

## துரதிர்ஷ்டங்கள்

## MISFORTUNES

இவ்வுலகில் ஒரு மனிதனுக்காவது துரதிர்ஷ்டத்தினால் கஷ்டப்பட நியாயமில்லை என்று சொல்வது இதற்குமுன் உரைக்கப்படாத புத்திமதியாகவும் அதிக தத்துவ ஞானம் புகட்டுவதாயும் ஆகும். தனது ஒரே பிள்ளை இறக்கும் தருணத் திருக்கும்போது, தாயின் மனத் தத்தளிப்பும், மருந்து என்றறியாத ஒரு ஊரில் காலரா அல்லது வேறு ஒட்டு வியாதி பரவுதலும், நீடித்து நடந்துவரும் சண்டையினால் ஜனங்களுக்கு பின் சம்பவிக்கும் கெடுதலான தொல்லைகளும் சீக்கிரத்தில் நிறுத்தக்கூடாத துரதிர்ஷ்டங்களாகும். இவைகள் அதிக துயரத்தை உண்டுபண்ணி தங்கள் உக்கிரத்தைத் தணித்துக்கொள்வது நாளடைவிலே தான் ஆகவேண்டும். அப்பொழுதும், மற்றெல்லா வஸ்துக்களினிடத்திற் காட்டிலும் ஒன்றினிடத்திலேயே அதிகப் பிரேமை வைத்திருந்தவர்களுக்கு அவ்வஸ்துவை இழந்தவுடன் அவர்கள் மனம் எக்காலத்திலும் சொஸ்தத்தையே அடையாது. தன் தாய் இறந்த அறுபது வருஷம் கழித்து அவளுடைய படம் கண்ணில் தென்பட தாயை நினைத்து நினைத்து உருகினார் 'கௌபர்' என்னும் கவி.

துரதிர்ஷ்டம் ஒன்றாய் வருவதில்லை யென்று பலர் சொல்லுகிறார்கள். அதிர்ஷ்டமும் ஒன்றாய் வருவதில்லையென்றும் மற்றும் பலருடைய அபிப்பிராயம். நாம் நினைப்பது போல் ஒவ்வொன்றும் அநேகங்களால் பின் தொடரப்பட்டுவருவது உண்மையாயிருக்கும் பக்ஷத்தில் அவை எப்படி மனிதர்களால் எடுத்துக்கொள்ளப்படுகிறதென்பதையும் எப்படி எடுத்துகொள்ளலாகு மென்பதையும் சற்று கவனிப்போம்.

தங்களுக்குச் சம்பவிக்கும் கஷ்டங்களை சகிப்பவர் ஆயிரம்பேர் இருந்தால், தான் பெற்றிருக்கும் நல்ல தசையை 'சகிப்பவர்' ஒருவரிருப்பதும் துர்லபம் என்று ஒரு மகான் எழுதுகிறார். ஒருவர் கூச்சலில்லாத விடத்தில் படிப்பதற்காக வீட்டின் மாடியில் ஒருவேளை ஏறி புஸ்தகத்தைப் பிரித்தார். அப்பொழுது ஒரு குழந்தையின் அழுகைச்சத்தம் கேட்கச் சினங்கொண்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் வீதியில் இரண்டு நாய்கள் ஒன்றின்மேலொன்று பார்த்து குலைக்க ஆரம்பித்தன. தவிர பாடகர்களில் ஒரு கூட்டம் பெரிய கோஷஞ் செய்துகொண்டு அவ்வழியே சென்றது. மாடியிலிருப்பவர்க்கு வந்த கோபம் இவ்வளவென்று சொல்லி முடியாது. அடுத்த நிமிஷம் விகாரமான குரலுடன் ஒரு கிழவி தன் மருமகளை வாயில் வந்தபடி திட்டுவதைக் காதில் கேட்டு அவர் தன் புஸ்தகத்தை மூடிவிட்டு பத்து நிமிஷம் வரையில் சிரித்தாராம். சாமர்த்தியமாய் எழுதும் ஒருவர், "ஒருவருடைய புத்தியும் தைர்யமும், பொறுமையும் அவருடைய கஷ்டதசையில் தான் வெளிப்படுகிறதென்றும், அப்படியில்லாவிட்டால் இம்மாதிரியான குணங்கள் எளிதில் உண்டாகிறதில்லை யென்றும், அத்தசையின் முக்கிய உபயோகம், சத்துருக்களை சேர்த்து வைப்பதும், போன அன்பை புதுப்பித்துக் கொடுப்பதும், சண்டையில் பல்லைப் பிடுங்கினதுபோல், சமீபத்தில் உண்டாகித் துவேஷத்தை மாற்றி முதலிலிருந்த சிநேகத்தை நினைத்துக் கஷ்டத்தில் கைகொடுக்கச்செய்யும். ஆனால் தன் நல்ல தசையைத் தானே 'சகிக்க' முடியாவிட்டால் சிநேகிதர்கள் சகிப்பது மிகவும் அரிது, சிநேகிதர்களே ஒரு வேளையில்லாமல் போகலாம்" என்றும் சொல்லுகிறார்.—

அனுபவத்தில் பார்க்கையில் துரதிர்ஷ்டத்தின் கஷ்டங்கள் முடிவில் நமது சுகத்திற்காகவே யிருப்பதென்று அறிவதோடு, சமீபத்தில் உண்டாகும் நன்மைகளையும் அறியவேண்டும். விடாமுயற்சியைபழக்கிப் பொறுமையை உண்டுபண்ணுகிறது. அதிலிருந்து விளையும் நன்மைகளைக் கவனியாமல் நம்பிக்கையை இழப்பது மூடத்தனம். நம்பிக்கையைக் கைவிடுவது சோம்பலையும், மனதில் அதைர்யத்தையும், புல்லறிவையும் காட்டும். அநேகருக்கு அநேகவித கஷ்டங்கள் மூட்டைமூட்டையாக விருந்து இவைகளைப் பொருட்டாய் எண்ணாமல் பொறுமையுடன் தம் காரியங்களைப் பார்த்ததினால், அனுபவம் மிகுந்து கஷ்டங்கள் கழிந்து சௌக்கியமடைந்திருக்கிறார்கள். இருபது வருஷம் எழுதிவைத்திருந்த கையெழுத்துக் கடிதங்களை, விளக்கைத் தள்ளி எரித்த நாயை 'ஸர் ஐஸக் நியூடன்' என்பவர் தடவிக் கொடுத்து



"நீ என்ன கெடுதல் செய்தாய் என்று உனக்குத் தெரியாது" என்று மாத்திரம் சொல்ல அவருக்கு எவ்வளவு பொறுமையிருக்க வேண்டும்!

சிலர், துக்க சமாசாரம் கேட்டவுடன் ஒருவரோடும் பேசுகிறதில்லை. சிலர் உள்ளே போய் உட்கார்ந்து கொண்டு உரக்கக் கத்துகிறார்கள். இப்படி ஒருநாள் இரண்டுநாள் அன்னாகாரமில்லாமல் மன வியாதியோடு தேகவியாதியையும் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். சிலர் இரவில் வெளியில் வந்து சமீபத்திலிருக்கும் ஆறுகுளங்களில் விழுகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். அநேகர் ஒருவருடனும் சொல்லாமல் ஊரை விட்டு அடுத்த வண்டியில் தூர தேசம் போய்மாதக்கணக்காய் கடிதங்கூட எழுதுவதில்லை. பாவம்! அவர்கள் இப்படிப்பட்ட விஷயங்களில் சில வேஷம் பூண்டுவந்த அநுகூலங்கள் என்றும், சிலவைகளைப்பற்றி வருத்தப்படாமல் பால் கொட்டிய பிறகு அழுவது பிரயோஜனமில்லை, அப்படிச் செய்வதால் பாலும் கிடைக்காது தன்னையும் கெடுத்துக் கொள்ளுகிறார்களென்றும், அடுத்த சமயத்தில்இதைவிட நல்ல அதிர்ஷ்டம் உண்டு (Better luck next time) என்றுணர்ந்தால் வருத்தப்படுவதற்கே நியாயமில்லை என்றும் தோன்றுகிறது—உதாரணமாக: இரண்டுடையன்களில் ஒருவன் மிகவும் கெட்டிக்காரன். ஒரு வருஷமாகிலும் பரீக்ஷைகளில் தவறினதில்லை. இதனால் அகம்பாவம் கொஞ்சம் உண்டு. ஈச்வர சம்மதத்தால் பி. ஏ. கிளாஸில் ஒரு வருஷம் தவறிற்று. மற்றவன் சுறுசுறுப் புள்ளவன்--புத்தியுள்ளவன் தான். இரண்டுமுறை பரிட்சையில் தவறினவன் அதே ஈச்வர சம்மதத்தால் பி. ஏ. கிளாஸில் தவறி விட்டான். இப்பொழுது அவர்கள் மனநிலையை கவனியுங்கள். முன் சொல்லப்பட்டவன் மற்றவனைவிட மனக்கூடம் குறைந்து தீராவருத்தமடைந்து 'ஏமாந்து' நிற்கிறான். இனிப் படிப்பதில்லை என்கிறான். தெய்வத்தைத் திட்டுகிறான். இதனால் நான் தவறத்தான் வேண்டுமென்ற அபிப்பிராயங் கொண்டவனென்று எண்ணலாகாது. பிசகு நேராமலிருப்பது ஐயமல்ல. பிசகிப் போனதை சரியான மனதோடு எடுத்துக் கொள்ளத் தெரிவதே ஐயமாகும். இப்பாடம் துரதிர்ஷ்டத்தின் முக்கிய சிட்சை. உயர்ந்த இலந்தைமரத்தில் ஆயிரம்கல்விட்டெறிந்து விழும் ஒரு பழத்தின் ருசியாமோ அரிசியெடுத்துப் போய் வாங்கும் நூறு பழத்தின் ருசி?

காலத்தின் அநேக மாறுபாடுகளில் பாலியத்தில் பொன்னில் உருண்ட விநோதங்களில் ரமித்தவன் கிழவயதில் அநேகமாய் சகிக்க முடியாத கஷ்டத்தை யனுபவிப்பதும் இளமையில் வறுமைத் தசையில் கஷ்டப்பட்டு உயிருக்கும்தனக்கும் சண்டைசெய்து விடாமுயற்சியோடு கூடினவன் கடைசியில் சௌக்கியத்தை யடைவதும் நாம் கண்டிருக்கிறோம். யோசித்துப் பார்க்கில் பணத்தாசையிலிருந்து பேராசை கொண்டு ஜாஸ்தியடைய எண்ணி இருப்பதையும் இழப்பவன் ஒருவன். மற்றவன் துரதிர்ஷ்டம் என்கிற தாயின் பள்ளிக்கூடத்தில் படித்து அவளுடையபுத்திமதிகளை வயிறாமட்டும் உண்டு தன் நாட்களை விடைநாட்களாய் தன் சிநேகிதர்களோடு கழிக்கிறான்.

துரதிர்ஷ்டம் எவருக்கும் வருவது நிச்சயமாதலால் அதன் சாணைக்கல்லில் மூளையாகிற கத்தியை தீட்டித் தீட்டிக் கூராக்கவேணும். வெய்யில் எவ்வளவு அவசியமுண்டோ அவ்வளவு அவசியமுண்டு நிழலும். வெய்யிலில்போகும் கஷ்டத்தை நிழலில் தீர்த்துக்கொள்ள வேண்டும். எவனொருவன் எந்த சந்தர்ப்பங்களிலேயும்திருப்திபடைந்து சம்பத்திலும் விபத்திலும் அநேகமாய் ஒருமாதிரியாகமனதை அடக்கியாள்கிறானோ அவனே சௌக்கிய முள்ளவன் சந்தோஷமுள்ளவன் என்பதில் ஐயமேயில்லை.

---

### சந்தாதாரர்க்கு அறிவிப்பு

அச்சாபீஸ் மாறுதலால், நமது விவேக போதினி' ஆபீஸையும், திருவல்லிக்கேணிக்கே மாற்றி யிருக்கிறோம். சந்தாநேயர்கள், இனி எழுதும் கடிதங்களையும், புஸ்தக ஆர்டர்களையும், மானேஜர், "விவேக போதினி" திருவல்லிக்கேணி, மதராஸ், என்று எழுதக் கோருகிறோம். சந்தாதார்களுக்கு புத்தகங்கள் குறைந்த விலைக்குக் கொடுப்பதுடன், ஆர்டர்கள் கால தாமதப்படாமல் அனுப்பவும் ஏற்பாடுசெய்திருக்கிறோம்.

மானேஜர்

## ஹுஸேன் நூரி
### பன்னிரண்டு வயதுள்ள வாலிபன்
## HUSEIN NAURI-A BOY HERO OF TWELVE

சில வருஷகாலமாய் ஐரோப்பிய துருக்கி தேசத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் நடந்து வரும் யுத்தங்களின் தினசரி வரலாற்றை சமாசாரப் பத்திரிகைகளினின்றும் நாம் தெரிந்து கொள்ளுகிறோம்.

ஆயினும் இவ்யுத்தங்களின் ஜயாபஜயங்கள், யுத்தத்தின் மத்தியில் நடக்கும் இரு திறத்தாரிடத்து முள்ள நியாயாந்நியாய விஷயங்களைப் பலர் பலவாறு எடுத்துக் சொல்லுகிறார்கள்.

சொல்லியும், சிற்சில விஷயங்கள் மாத்திரம் எம்மனதையும், மதத்துவேஷம், வர்ணத்துவேஷம் முதலான துவேஷங்களை அப்பாலெறிந்துவிட்டு தம்மையே வியப்பின் பொருள்களாக கைப்பற்றுகின்றன.

முற்காலம் பிரான்சு தேசத்தில் நடந்த நூறு வருஷ யுத்தத்தில் எட்வர்ட் (கருமன்னன்) என்று பெயர்பெற்று மூன்றும் உவேல்ஸ் இளவரசனுடைய அஸஹாய தைரியத்தை யாவருமறிந்துள்ளார்.

அது போலவே நமது இந்துதேச சரித்திரத்திலும் அக்பர் சக்ரவர்த்தி தம் தைரியத்தை அவருடைய இளமைப்பருவத்திலிருந்தே விருத்தி செய்து கொண்டதாகவும் நம்மவர்யாவருக்கும் தெரியும். அவ்விதமே ஸிவாஜி மஹாராஜாவும் தம்முடைய தாயின் சொல் சுவையினின்றும், குருவினிடத்து வித்தை பயிலும் போதும் நந்தேச இராமாயண முதலிய இதிஹாஸங்களின் நாயகர்களாகிய வீரர்களின் நடத்தையினின்றும் ஓர் வித மனோல்லாச தைரியமடைந்து அவுரங்கஸீபின் மதத்துவேஷ அரசாட்சியை ஒருவாறு கலக்கினாரல்லவா?

அங்ஙனே, இச்சிறு சரித்திரத்தின் நாயகனாகிய ஹுஸேன் நூரி என்னும் பன்னிருவயசுள்ள வாலிபனின் கைவிடா முயற்சியும் மனோதைரியமுமே தற்கால சரித்திரங்களின் வரலாற்றில் மிகுந்த தொனியுடன் பிரதி பலிக்கிறது.

பல்கேரியர்களுக்கும் துருக்கர்களுக்கும் நடந்த லூலிபூர்ஷாஸ் (Lule Burgas) களத்தில் மாண்ட ஓர் சாதாரண சிப்பாயின் குமாரனும், ஹுஸேன் தன் தாயின் கஷ்டத்தைப் பொறுக்காதவனாகி துயரத்தில் மூழ்கினான். வீடற்று வாசலற்று தன் அன்னையும் தன் சகோதரனும் அலைவதைப் பார்த்து ஹுஸேனுக்கு வந்த கோபத்தையும், துக்கத்தையும் யார் தான் ஆற்றுவார்கள்? அல்லது யார் தான் மாற்றுவார்கள்?

தன் தகப்பனின் மரணமே இதற்கெல்லாம் காரணமென்றெண்ணி ஹுஸேன் தன் தகப்பனின் சத்துருக்களை வதம் செய்ய ஓர் பிரதிஜ்ஞைசெய்து கொண்டான். சடால்ட்ஜாவிலிருந்த ஓர் சேனைத்தலைவரிடம் சென்று தனக்கு ஒரு துப்பாக்கியும் மருந்து முதலிய சாமக்கிரியைகளும் கொடுக்கச்சொல்லி பலவாறு கெஞ்சிக்கேட்டான். அவனுடைய விண்ணப்பத்தின் ஊக்கத்தைக் கண்ணுற்ற துருக்க உத்தியோகஸ்தர் அனைவரும் அவனை வெகுவாய் மெச்சியும் அவன் வயசை யுத்தேசித்து பதில் சரிவர சொல்ல முடியாதவரானார்.

சிறுவன் ஹுஸேனின் பிடிவாதத்தை மாற்ற வேண்டி சேனைத்தலைவர் அவனை வெகு பிரியத்துடன் உபசரித்தும் ஹுஸேன் ‘தன் கருமமே கண்ணாயினவனாகி ‘மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும்மேற்கொள்ளார், செவ்வியருமையும் பாரார், அவமதிப்பும்மேற்கொள்ளார், கருமமே கண்ணாயினார்’ என்ற வாக்கியத்துக்கேற்ப, குழந்தையாயினும் தன் மேனோக்கே மேனோக்காகி யாவரும் அறியாவண்ணம் பட்டாள முஸாபுரியினின்றும் ஓடிச் சென்றுச் சடால்ட்ஜாவின் அருகாமையிலுள்ள யுத்தாங்கங்களின் தாறுமாற்றினின்றும் ஓர் துப்பாக்கி முதலானவற்றை தற்செயலாய்க் கைப்பற்றினான்.

மறுநாள் நடந்த யுத்தத்தில் துப்பாக்கிகுழற் சத்தத்தினிடையே ஓர் சிறு துருக்க வாலிபன் எதிர்த்து பல்கேரிய சேனை வரிசையை நோக்கித் தன் துப்பாக்கியினின்றும் சுட எத்தனித்து தன் மனோ விரதத்தை நிறைவேற்றிக் கொண்டிருப்பதைப் பார்த்த ஒரு பட்டாள சில்லரை உத்தியோகஸ்தர் ஹுஸேனின் நிர்பயமான தைரியத்தையும் மனம் கலங்காத தீர்மானத்தையும் வியந்து தம்முடைய வியப்பு மிகுதியின் காரணத்தினாலே ஹுஸேனைத்தழுவியணைத்துக்கொண்டு துருக்கி சேனாதிபதி இஸ்ஸட் பாஷாவிடம் கொணர்ந்துவிட்டார்.



பையன் வரலாற்றைக் கேட்டு மனங்களிப்படைந்த இஸ்ஸட் பாஷாவும் ஹுஸேனின் துப்பாக்கி குறித்திறமையைப் பரீட்சித்ததின் பேரில் அவனிடம் மிகுந்த திருப்தியடைந்து தம்முடைய சேனையில் யுத்த வீரரில் ஒருவனாகச் சேர்த்துக்கொண்டார்.

ஹுஸேனும் துருக்கிச் சேனை உத்தியோகஸ்தர்களிடத்திலும் சிப்பாய்களிடத்திலும் அதிக விசுவாசத்தை யடைந்தவனாய் நடந்து கொண்டு வந்தான்.

ஒருக்கால், ஹுஸேன் ஒரு பல்கேரிய துப்புக்சிப்பாயின் (வேவுகாரன்) தலையைச் சேதம் பண்ணித் தன் வெற்றிச்சின்னத்தை வெகு குதூஹலத்துடன் இஸ்ஸட் பாஷாவிடம் கொண்டுவந்தான்.

அவன் விஷயமாய் இஸ்ஸட் பாஷாவுக்கும் துருக்கி ஸுல்தானுக்கு மிடையே நடந்த வர்த்தமானக் கடிதங்களிலும் ரவானாக்களிலும் அடிக்கடி தகவல்கள் வர, நாற்பது வீரர்களின் ஆதிபத்தியமாகிய சாவுஷ் என்ற பட்டம் ஹுஸேனுக்கு ஸுல்தான் அவர்கள் கொடுக்கும் களிப்பையடைந்தார்.

யுத்த களத்தில் தனக்கு ஓர் காயம் நேரிட அதைச் சிகிச்சை செய்யும் போதெல்லாம் அடிக்கடி ஸுல்தான் அவர்களே நேரிடவைத்திய சாலைக்குச்சென்று ஹுஸேனின் க்ஷேமாதிவிஷயங்களை விசாரித்து தம்மிடம் கான்ஸ்டான்டிநோபிளுக்கு நேரில் பேட்டியளித்தது மன்றியில் தம்மாண்மனையில் விருந்து மளித்தார்.

ஹுஸேனும் தற்காலம்நடக்கும் யுத்தத்தில் தன்னைக் கௌரவப்படுத்திய ஸுல்தானுடைய முகம்மதிய அரசாட்சியின் மேன்மையை விருத்தி செய்யும் சரித்திரத்தை நாம் யாவரும் ஆவலுடன்பரிசோதித்து சமாசாரப்பத்திரிகைகளிலோ சரித்திரங்களிலோ இருந்துதெரிந்து கொண்டு வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# தரணீபதி அல்லது தந்திரபாலன்
## DHARANIPATHI or THE BOY DETECTIVE
### முதல் அத்தியாயம்
#### நன்மை கடைப்பிடி

தரணீபதி கதவைத் திறந்து உள்ளே நுழைந்து தாழ்வாரத்தின் கொடியில் மழையில் நனைந்த ஈரவேஷ்டியை உலர்த்தி விட்டு கூடத்திற்குள் சென்றான். இரவு சுமார் ஏழரை மணி இருக்கும். கூடத்திலுள்ள தீபத்தண்டின்மேல் ஓர் விளக்கெண்ணெய் தீபம் மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. ஆகாயமெங்கும் மேகங்கள் பாவி, அந்தகாரத்தை அதிகரித்தன. மழையும் விடவில்லை கூடத்தில் ஓர் விசுப்பலகையின் மீது ஸ்திரீ யொருத்தி கம்பளியைப் போர்த்துக்கொண்டு படுத்திருந்தாள். அவள் ஒட்டின தாடையும், பஞ்சடைந்த கண்களும், வெளுத்தஉதடும், எலும்பே என்று சொல்லும் படியான கைகளும் அவளது நோயின் கொடுமையை நன்றாய்க்காட்டின. வயது சுமார் முப்பத்திரண்டிருக்கலாம். அவளருகே சிறு‘குமுட்டி’ ஒன்றில் நெருப்பு கணகணவென்று இருந்த போதிலும் அவளுடம்பு குளிரினால் நடுங்கிக் கொண்டிருந்தது.

கதவு திறக்கப்பட்ட ஓசையைக்கேட்டு நன்றாக உடம்பை மூடிப்போர்த்துக் கொள்ள முயன்றாள். அதைக்கண்ட தரணீபதி, சந்தடி செய்யாமல் விசனமும் கோபமும் கலந்த முகத்தை யுடையவனாய் அவளிடம் வந்தான். அவனுக்கு வயது பதினாறு; ஆனாலும் வளர்ச்சி போதாது; பார்ப்பவர்கள் அவனுக்குப் பன்னிரண்டு வயதென்றே சொல்லுவார்கள். அவன் குள்ளனுமல்ல. நல்ல தேக அமைப்பும், முகக்காந்தியும், கிராஹ்யசக்தி பொருந்திய கண்களும், அவனது மனோதிடத்தையும் விடாமுயற்சியையும் நன்று விளக்கின. அவன் சாதாரண உடைதரித்திருந்த போதிலும், இடையில் ஒரு கந்தலுங்கிடையாது. நோயாளியா யிருந்தாலும் மிக்க சுசிலையாதலின் அவன் தாய் அவனைக் கண்ணும் கருத்துமாய்க் காப்பாற்றிவந்தாள்.

தரணீபதி தன்கையில் கொண்டு வந்த ஒரு காலி புட்டியை அங்கிருந்த ஒரு அலமாரியின் மீது வைத்தான்.

“தரணீ, மருந்து புட்டியையும் அவுன்ஸ் கிளாஸையும் இப்படிக் கொண்டுவா” என்று ஈனஸ்வரத்தில் சொல்லி கையை நீட்டினாள் அவன் தாய்.

மிக்க வருத்தத்துடன் தலைகவிழ்ந்து கொண்டிருந்து சற்று நேரம் கழித்து தன் தாயைப் பார்த்தான்.

“அம்மா, நான்மருந்து கொண்டுவரவில்லை.”

“ஏண்டா, அப்பா?”

“மருந்துகடைக்காரன் நம்பமாட்டேனென்கிறான், அம்மா! அப்படி கொடுத்ததெல்லாம் போதும் போதும் என்றான்.”

“அப்படியா!” என்று பெருமூச்செறிந்தாள் அவன் தாயார்.

“தரித்திரம் பிடித்தவன்! அப்படியே அவன் மண்டையை உடைத்து விடலாமா என்றிருந்தேன்” என்று அடக்கமுடியாக் கோபத்துடன் கூறினான் தரணீ.

“அப்பா, நாம் அவனுக்குக் கொடுக்கவேண்டிய பாக்கி நிற்கிறது. அதை எப்படி தருவோமோ பகவானுக்குத்தான் தெரியும். இதுவரையில் வேண்டிய மருந்துகளைக் கொடுத்து உதவினானே, அதுவே எவ்வளவோ மேலாச்சே!” என்று தரணீபதியைச் சாந்தப்படுத்தினாள்.

“போ, அம்மா, இன்னம் கொஞ்சம் மருந்து கொடுத்தால் அவன் பாக்கியம் என்ன குறைந்து விடும்? நல்ல மருந்தாச்சே அம்மா!” என்று முணுமுணுத்தான் தரணீ.

“ஆமாம், அந்த மருந்தினால் குணம் தான். நீ வேறெங்கேயாவது போயிருந்தாயோ?” என்று அவன் முகத்தை நோக்கிக் கொண்டே கேட்டாள்.

“எங்கபோறது, அம்மா, மருந்து சீட்டு கூட இல்லையே!”

தன் மனக்கவலையை மறக்க முயன்றவளாய், “அப்பா, இன்னொரு சீட்டு வேண்டுமானால் வைத்தியர் வெங்கடாசல சாஸ்திரிகளிடமிருந்து எழுதி வாங்கிக்கொள்ளலாம்.”

சற்றுநேரம் இருவரும் மௌனமாயிருந்தார்கள். பிறகு தரணீபதி “இரண்டுபடி கடலைப் போட்டால் மருந்துக்குப்போதும்” என்றான்.

“என்ன? கடலையா?”

“ஆமாம் அம்மா, கைச்செலவுக்கு எதாவது சில்லரைவேண்டுமானால் அடுத்தவீதி சங்கரன் அப்படித்தான் செய்கிறான். வழியிலே காலிவீடு ஒன்றிருக்கிறது. நான்வரச்சே உள் கதவுகூட திறந்திருந்தது. அவ்வளவு தான்——முடிஞ்சது காரியம்” என்று கைகளால் அள்ளுவதைப் போல் சைகை செய்தான்.

அவன் சொன்னதைவிட அவன்செய்கையை சுலபமாய் அறிந்துகொண்டாள் அவன் தாயார். அவள் முகம் உடனே விசனத்தைக் காட்டிற்று.

மிக்க தழுதழுக்க குரலில், “அப்பா, தரணீ, நீ எனக்குத் திருடி போடுவதைக் காட்டிலும் நான் பட்டினி கிடக்கலாம். அப்படிப்பட்ட காரியம் ஒன்றும் நீ செய்ய வேண்டாம்.”

“பிச்சை எடுப்பது இதைவிட ஈனம்தானே அம்மா? எப்படியும் கஷ்டம்தான். நீ பட்டினியாயுமிருந்து மருந்தில்லாமலும் இருந்தால் எனக்கு மனசு தாளவில்லை. எப்படியாவது இரண்டில் ஒன்று சீக்கிரம் செய்யலாமென்றிருக்கிறேன்.”

நடுநடுங்கி “அப்பா, வேண்டவே வேண்டாம் நீ எப்பொழுதும் திருடவேண்டாமடா!”

தரணீபதி மறுபடியும் சற்றுநேரம் மௌனம் சாதித்தான். பிறகு கணீரென்று “அப்படியே ஆகட்டும், அம்மா, நான் இனிமேல் அந்தவேலைக்குப் போகிறதில்லை” என்று சொன்னான்.

“பார்த்தாயா, தரணீ: அதுதான் நல்லபிள்ளைக்கு அடையாளம். எப்பொழுதும் தரணீ வார்த்தை தவறுகிறதில்லையே” என்று தாயார் சொல்வதைக் கேட்டு மிக்க ஆனந்தமடைந்தான். சற்று நேரம் ஆன பிறகு” அம்மா, எனக்கு இன்றைக்கு என்னமோ பைத்தியம் பிடித்ததுபோல் இருக்கிறது. மனதில் ஏதோ சங்கடம் செய்து கொண்டிருக்கிறது. எல்லாம் நம் அதிர்ஷ்டம்தான். அப்பா மாத்திரம் இப்படிப்பட்ட——” என்று வெகு ஆக்ரோஷத்துடன் பேச ஆரம்பிப்பதை அவன் தாயார் தடுத்துவிட்டாள்.



“——தரணீ, வேண்டாமப்பா, நீ இப்படி ஆவேசம் வந்தவனைப்போல் பேசுவது எனக்கே வருத்தமாயிருக்கிறது. நீ எனக்கு வேண்டுமென்று எப்பொழுதும் கஷ்டம் கொடுக்கமாட்டாயே! அப்பா, உன்னிடம் பொறுமை, சாந்தம், பக்திஇவைகள் குடிகொண்டிருக்க வேண்டும்.”

“அம்மா, நீ அப்படி இருக்கலாம்; என்னால்முடியவே முடியாது. நான் என்ன, ஸ்வாமியாரா? நான் நாலு பேருக்கு நல்லவனாயிருக்கிறவனல்ல. அங்கங்கே அப்படிப்படியே தீர்த்து விடவேண்டும்.” என்று மறுபடியும் ரௌத்ராகாரமாய்க் கூறினான்.

“அப்பா, நான் எந்த கஷ்டத்திற்கும் எப்படி பொறுத்துக் கொள்ளுகிறேன், பாரேன். நீயும் அப்படி ஏன் பொறுத்துக்கொள்ளக்கூடாது?” என்றாள் அவன் தாயார்.

“ஆம், அம்மா, நீ சாகிறவரையிலும் இப்படித்தான் இருப்பாய். நீ இப்படி எதற்கும் பொறுத்துக்கொண்டு வருவது எனக்கு கொஞ்சமாவது பிடிக்கவில்லை. உன்னைப்போல் பொறுத்திருக்க எனக்குக் கொஞ்சமாவது முடியாது. நான் அப்படி அடக்கிப்பார்க்கிறதில்லை என்பாய். நான் அப்படியிருந்தால் என் கதி அதோகதிதான். இந்தகாலத்தில் வாயும் கையும் இருந்தால்தான் ஒருவன் பிழைப்பான். இப்பொழுதென்ன ராமனுட்சியா? எங்கு கண்டாலும் துஷ்டர்கள் தானே நிறைந்திருக்கிறார்கள். பணக்காரர்களுக்குத் தானே இது காலம்? ஏழைகள் வயிற்றின்மேல் ஈரத்துணியைப் போட்டுக்கொண்டு ‘சிவசிவா!’ என்றுதான் இருக்கவேண்டும்.”

அவன் இப்படி சரமாரியாய்ப் பொழிவதைச் சற்றும் கவனியாமல் அவன் தாயார் “நான் மாத்திரம் ஏன் இப்படி எதற்கும் பொறுத்துக் கொள்கிறேன்.” என்றாள்.

“ஆமாம், அம்மா, உனக்கு ஆதி முதல் கொண்டு பொறுத்துப் பொறுத்து வழக்கம்” என்று தலையை யாட்டிக்கொண்டே சொன்னான்.

“தரணீ, அப்படித்தான் அப்பா, இப்படி இங்குவா, வந்து இந்த மணையில் உட்கார்ந்து கொள், ஒன்று சொல்லுகிறேன், கேள். கேட்ட பிறகு உனக்கு உண்டாகிற சக்தியைப்பார். பிறகு கஷ்டம் வந்தாலும் அப்பொழுது அதை சிறிதேனும் மதிக்கமாட்டாய். உனக்கே ஒரு திருப்தியும் உண்டாகும். எனக்கும் கீர்த்தி உண்டு. பகவானது உள்ளத்திற்கும் உகந்ததாயுமிருக்கும்.” என்று இனியமொழிகளால் ஒருவாறு அவனைச் சாந்தப்படுத்தினாள்.

அப்படியே பக்கத்தில் இருந்தமணையில் வந்து உட்கார்ந்தான் நம் தரணீபதி. என்னதான் சொல்லப்போகிறாளோ என்று மகா கவனத்துடனிருந்தான்.

இவ்வுலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றியும், அவர்களுக்குப் பகவான் அளித்துள்ள கொடைகளைப்பற்றியும், இகபரங்களுக்கு இதமுறல் வேண்டி எப்பொழுதும் நன்மைக் கடைப்பிடிக்கவேண்டியதைப்பற்றியும் என்றிவ்விதமான விஷயங்களைப்பற்றி தரணீபதிக்கு விளக்கமாய் எடுத்துரைத்து அவனுக்கு நற்செயல்களைச் செய்வதில் ஓர் உற்சாகம் உண்டாகும்படி செய்துவிட்டாள். அவனை யறியாமலே ஓர் மனோதைரியம்அவனுக்கு உண்டாயிற்று.

இவர்கள் இருந்த வீடோ தாராபுரம்...... வீதியில் உள்ள ஓர் அங்கமற்ற சிறு கட்டிடம். அது வண்டிமேட்டிற்கு வெகு சமீபத்தி லிருந்ததினால் வண்டிக்காரர்கள் போடும் கூச்சலும், மாடுகளின் ஹுங்காரமும் எப்பொழுதும் கேட்டுக் கொண்டேயிருக்கும். வீட்டில் அதிகமாகச் சாமான்கள் ஒன்றையும் காணோம். ஆனால் இருந்தவைகள் வெகு விமரிசையாக வைக்கப்பட்டிருந்தன.

இப்படி வெகுநேரம் பேசிவந்ததினால் தரணீபதியின் தாயாருக்கு களைப்பு மேலிட்டு விட்டது. காற்றும் வெகு மெதுவாய் வீசிக்கொண்டிருந்தது. பக்கத்திலிருந்த குமுட்டியின் நெருப்பு கணகணவென்றிருந்தது. ஆகவே அப்படியே அவ்வம்மணி கண்ணயர்ந்துவிட்டாள்.

தரணீபதியோ மணையில் உட்கார்ந்து கன்னத்தில் கையை ஊன்றினவனாய் தாங்கள்

இதுவரையில் பட்டகஷ்டங்களையும், இனிமேல் வரக்கூடிய சுக துக்கங்களையும் நினைத்து நினைத்து மனமுருகினவனுய்க் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தான். ஆனுலும் அவன் அதைரியமடைந்தவனுய்க் காணப்படவில்லை. அவன் சிந்தாக்கிராந்தனுய் இருந்து கொண்டிருக்கையிலும் அவன்முகக்களை மாருமல் இரண்டொருதரம் ஒளி வீசிற்று.

இப்படி இவன் உட்கார்ந்திருக்கையில் யாரோ வாசற்படியேறி வருவது காதில் விழுந்தது. ஒரு காலடியின் சப்தம் மாத்திரம் வெகு தெளிவாகப் படவே இன்னுரென்பதை தாணி வெகு நுட்பமாக அறிந்துகொண்டு "அம்மா, நோண்டிக்கிட்டு அதோ வந்துகொண்டிருக்கிருன்." என்று சொன்னுன். "அவன் திடீரென்று நம் வீட்டிற்கு வருவானேன் ?" என்று அவன் தாயார் மெள்ள எழுந்து உட்கார்ந்து கொண்டே கேட்டாள்.

இதற்குள் நொண்டிக்கிட்டு வாசற் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்து சேர்ந்தான். அவனுக்கு ஒரு கால் நொண்டியாயிருந்ததினுல் கையில் ஊன்றுகோல் ஒன்றை வைத்துக் கொண்டிருந்தான். தலையில் சிறிது உச்சிக் குடுமியும் முகத்தில் கன்னங்கரேலென்று மீசையும் விளங்கின. கண்கள் ஆந்தைக்கண்கள். முகம் தட்டை. மூக்கோ சப்பை. உதடு பிதுங்கிக் கொண்டிருந்தது. எங்கிருந்தோ காட்டிலிருந்து பிடித்துக்கொண்டு வந்தவனைப் போலிருந்தான். இந்த லக்ஷணங்களெல்லாம் போததுபோல வாயின் ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறத்திற்கு தான் மென்றுகொண்டிருந்த புகையிலையை ஒதுக்கிக் கொண்டு வந்தான். அது கன்னத்தில் சற்று நேரத்திற்கொருதரம் ஏதோகட்டிபுறப்பட்டதோ என்று சந்தேகிக்கும்படி செய்தது.

"கோபுவெ இன்னுக்கி காலமெ பாத்தேன். என்னடா சமாசாரம் என்னதுகு நான் நெட்டாளம் போப் போறேன்று சொன்னுன். ஆத்திலே இதெ சொல்லச்சொன்னுன்." என்று அழுத்தமும் திருத்தமுமாகச் சொல்லலானுன். தாணீபதி வெகு கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான். நெட்டாளம் என்னும் வார்த்தையைக் கேட்டதும் அவன் தாயார் திடுக்கிட்டாள்.

"இதைப்பற்றி விசாரமென்ன? சனியன் தொலைந்தது என்று எண்ணிக்கொள்ளலாமே! இங்கிருக்கும்போது உங்களுக்கு அவனுல் தம்பிடிக்கு வழி உண்டா? இருப்பதை அழித்துக் கொண்டுதானே இருந்தான்."

தாணீபதியின் தாய் துக்கத்தைப் பொறுக்க முடியாமல் தேம்பத் தலைப்பட்டாள்; தாணீ கண்டான். தகப்பனுர் எவ்வளவு துர்நடத்தையுள்ளவராயிருந்தபோதிலும், அவரைப் பிறர் தூஷிப்பதைக் கேட்கச் சகிக்கமுடியவில்லை. கோபத்தை அடக்கமுடியாமல் மணையிலிருந்து எழுந்து நின்முன்.

"எங்கப்பாவைப்பற்றி இப்படியெல்லாம் எங்களிடத்தில் பிதற்றுதேயுங்காணும். காலில்லையே என்று ஐயோபாவம்னுவிட்டுட்டேன்! ஜாக்ரதை! இல்லாவிட்டால் ஒரு கல்தாதான்" என்று பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டே பேசினுன்.

"இந்தப் பயல் பேசுவதைப் பாத்தையா? நொண்டியானுலும் உன்னுலே அப்படித் தள்ள முடியுமா?"

தாணீ கையை நீட்டி அவனைத் தள்ளப் போனுன். நொண்டிக்கிட்டுவும் அவனை அணுகவொட்டாமலிருக்கும்படி தன் கோலால் தடுத்தான்.

"தாணீ!" என்று மாத்திரமே கூப்பிட்டாள் அவன் தாயார். அவள் குரல் மிக மிருதுவாயிருந்தபோதிலும், தாணீ என்றதும் அவன் திடீரென்று தன்னிலைமையை அறிந்துகொண்டான். தீப்பொறி பறந்த கண்கள் சிறிது சாந்தமடையவும், அடக்கமுடியாத கோபத்தைச் சிறிதடக்கி, மறுபடியும் மணைமீது அமர்ந்தான்.

"அப்பா, நமக்கு இப்படி எல்லாரும் சொல்லுவதைக் கேட்க வருத்தமாயிருக்கும். உன்னண்ணுவைப்பற்றி கிட்டு சொல்வதில் யாதொரு பிசகுமில்லை."

அம்மா, உங்களுக்கு வருத்தம் வரவேண்டும் என்று நான் சொல்லவந்தவனல்ல; உங்கள் பளுவு நீங்கிவிட்டது என்று எண்ணினேன். அவன் உங்களுக்காக ஒரு காசு சம்



பாதித்தானு? நீங்களும்தாணியும் உழைத்து அவனைக் காப்பாற்றவேண்டியிருந்தது. நான் இந்த சுப சமாசாரத்தைச் சொல்லுவதற்கு எனக்குக்கொஞ்சமாவது இஷ்டமில்லை. கோபு, வீட்டில் சமாசாரத்தைச்சொல்லிவிடு என்றுசொன்னதினுல் வந்தேன்." என்று அவன் அழகிய பாஷையில் சொல்லிவிட்டு உடனேபுறப்பட்டுப் போய்விட்டான். தாணீபதியின்தாயாரோ வெகு நடுக்கமடைந்து சால்வையை உடம்பு முழுமையும் நன்முய்ப் போர்த்துக்கொண்டாள்.

தாணீபதியின் கண்களில் நீர் ததும்பின. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு "அம்மா, நீ பயப்படவேண்டாம். பகவானிருக்கிருர். கடைசி வரையில் உழைத்து பாடுபடுகிறேன்." என்முன்.

தாயாரும் "தாணீ, நீயாவது இங்கிருக்கிருயேடா, சமர்த்தனுகயிரு அப்பா" என்று தழதழத்துச் சொன்னுள்.

"அம்மா, நான் சமுத்தாயிருக்கிறேன்."

"ஆனுல், அந்த கோபம் இருக்கிறதே—"

"அதை மெள்ள அடக்கி விடுகிறேன். யாராவது என்னமாவதுசொன்னுல் தான் எனக்குக் கோபம் வந்துவிடுகிறது. சரியாய் அடக்கினுல் நல்லது அம்மா."

"அதுதான்சரி, அடக்கியாண்டால் அதே தான் பலம். கோபம் இருக்கவேண்டியதுதான். ஆனுல் அதை அடக்கவேண்டும். கோபமில்லாமலிருந்தால் ஒருவனை எல்லாரும் ஏய்த்து விடுவார்கள். தனக்கும் பிரயோசனமில்லை. மற்றவர்களுக்கும் உதவமாட்டான்."

---

**மதுரையாசிரியர்:**—இவரே பேராசிரியர் எனப்படுவர். இவர் இளம்பூரணருக்கு வித்தியாகுரு. நச்சினுர்க்கினியர்க்கு இளம்பூரணர் வித்தியாகுரு. நச்சினுர்க்கினியார் தமது குருவாகிய இளம்பூரணரை ஆசிரியர் என்றும் தமது குருவுக்குக் குருவாகிய மதுரையாசிரியரைப் பேராசிரிய ரென்றும் வழங்குவாராயினர். அவ்வழக்குப் பற்றி இவர்க்குப் பேராசிரியர் என்னும் பெயர் நிலைப்பதாயிற்று. இவரது இயற்பெயர் புலப்படவில்லை. இவரே குருந்தொயிலேயுள்ள நானூற்றிரண்டு செய்யுளுள்ளே முன்னூற்றெண்பத்திரண்டு செய்யுட்களுக்கு முரைசெய்தவர். எஞ்சிய இருபதுக்கு முரைசெய்யுமுன்னே இவர் தென்புலஞ் சென்றனர். அவ் விருபதுக்கும் நச்சினுர்க்கினியர் உரைசெய்தனர். இப்பேராசிரியரே திருக்கோவையாருக்கு முரைசெய்தா ரென்பாருஞ் சிலருளர். **தமிழ்ப் பேயாகராதி.**

# திராவிடக் கதைகள்

## SOUTH INDIAN FOLKLORE

### 9. ஐந்து வாக்கியக்கதை

முன்காலத்தில் விஜயநகரம் பெரும்பட்டணமாகி விளங்கிய பொழுது திருமல்ராயர் என்றேர் அரசரிருந்தார். அவருடைய இளம்பருவமே, விளையும் பயிர் முளையிலே என்ற வாக்கியத்திற்கு இணையாயிருந்தது. சிறுநாளிலேயே லோக வியவஹாரங்களை எல்லாம் சங்கையற உணரவேண்டும் என்ற அவாக்கொண்டு அவர் உழைத்தவர். அவரது பெருமையைப்பற்றிய கதைகள் அநேகமுண்டு. லோகானுபவத்தை எவ்வளவு நன்முக அறியவேண்டுமோ அவ்வளவும் உணர்ந்து அவர் நல்ல இடத்தில் ஸம்பந்தம் செய்துகொண்டு காளைப் பருவமுழுதுங் காவியஞ் சிருங்கார முதலிய ரஸமான விஷயங்களில் செலுத்திக்கொண்டிருந்தார். ஒருநாள் தனது மனைவியுடன் உப்பரிகைமேல் அவர் ஆசைமொழி பேசிக்கொண்டுலாவிக் கொண்டிருந்தார். அவர் மனைவியும் கொஞ்சுங்கிளி போல் அவரோடு இனிக்கப் பேசிக்கொண்டிருக்கும் போது அவர் மனத்திலெதையோ எண்ணிக்கொண்டு திடீர் என்று கீழே இறங்கி வந்தார்.

வந்ததும் வாயிற் காப்போனைக் கூப்பிட்டு யாரையோ ஒருவனை அழைத்து வரும்படி ஏவிவிட்டு கவலையுடன் எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். அவரை அப்பொழுது பார்த்திருந்தால் அவ்வளவு கவலை யுண்டாகப் பெருங் காரணமிருக்கும் என்று எண்ணுவார்கள். ராயர் அவர்களுக்கு அப்பொழுது இருபது வயது தான் இருக்கும். ஆனுல் வித்தொன்று போட்டால் முளைவேறு முளைக்குமோ என்றபடி தகப்பனுருடைய உத்தம குணங்களையும் வீரத்தையும் தனக்கே சொந்தமாக அடைந்து பிறந்தவர். இவர் முன் ஒரு பண்டாரம் வந்தான். அவன் ஓர் கப்பரையுங் கையுமா யங்குவந்தான். அவனுடைய காவித் துணியுங் கப்பரையுங் கையுங்கண்டால் யாவருநகையா திருக்க் முடியாது. ஆனுல் ராயர் சிரிக்கவேயில்லை. அவர் தனது கைகளைக்குவித்து "பெரியவரே! நீங்கள் சற்று முன்பு பாடினீரே அதைப்பாடும்; எனக்குக்

கேட்க ஆவலாயிருக்கிறது" என்று வெகு வணக்கமாகக் கேட்டார். இராஜகுமாரனுடைய வணக்கத்தைக்கண்ட அப்பண்டாரம் ஆச்சரியத்துடன் "ஐயனே! தங்களிடம் நான் சொல்லாமலிருப்பேனே. அந்தப் பாடலெனக்கு என் தகப்பனார் மரணமடையும் போது கூறிய உபதேசமொழி. அதைநான் ஜாக்ரதையாகக் காப்பாற்றி வந்தேன். இன்று இப்பொழுது சொல்லுகிறேன்; கேளும்:—

ஆசைக்குத் தாயும் நிராசைக்குத் தந்தை
நேச னுபத்தி லுதவ—ஆசைப்
பெண்டுகள் செல்வத்திற்குடன் பிறந்தார்கள்
பதத்தி லிருந்தால் மதிக்க விதன்றே
—ஏற்பட்ட திவ்வுலகய்யா—நான்
சொல்வதிலே தேனும் பொய்யா?"

இந்தப் பாட்டைக் கேட்டதும் திருமல்ராயர் வெகு கவலையாக எழுதிக்கொண்டார். இளவரசாகையால் ராஜ்யகவலையில்லாமையால் பண்டாரப் பாட்டின் உண்மையை அறியவேண்டும் என்று ஒருஅவாக்கொண்டார். அன்றிரவு முழுதுங்கவலைகொண்டிருந்தார். படுக்கையில்படுத்த வண்ணமாக ஆலோசித்துக் கொண்டிருந்தார்.

அடுத்த நாள் காலையில் கஜானாவில் திருடு நடந்ததாக ஊரெங்கும் வதந்தி உண்டாயிற்று. அதின் துப்ப விசாரித்ததில் இளவரசே கஜனாத்தொகை நஷ்டத்திற்குக் காரணம் என்று ஏற்பட்டது. பல ஸாக்ஷியங்களும் அவர் மேலே குற்றத்தை நிலை நாட்டியது. அரசன் தன்மகன் களவுக்குக் காரணம் என்றுணர்ந்ததும் மகனைக்காட்டில் கொண்டுபோய் கொன்று விடும்படித் தலையாரிகளுக்கு உத்தரவு கொடுத்தான். இராஜாக்கினைக்கு பயந்தவராகி அவர் உருவிய கத்தியுடன் திருமலராயரைக் காட்டிற் கழைத்துக்கொண்டு போனார்கள்.

காட்டை அடையும் வழியில் இருட்டு நெருங்கிவிட்டது. அவ்விரவில் கடுவேகமாக ஒரு குதிரைமேல் வெகுவேகத்துடன் மெய்ம் மறந்தொரு புருஷன் வந்து தலையாரிகளைக் கூவியழைத்தான். உடனே தலையாரிகள் திரும்பி வந்து என்னவென்று கேட்டார்கள். அவரோடு வந்த திருமல்ராயரைக் கண்டதும் அப்புருஷன் அணிந்திருந்த மகுடம் கீழ் வீழ்ந்து விட்டது. என்ன ஆச்சரியம்! அப்புருஷ வுருவமாகியிருந்த ஒரு பெரியவள் இளவரசைக் கட்டிக்கொண்டு "ஆ! என் கண்மணியே" என்றலற ஆரம்பித்தாள். தலையாரிகள் நடுங்கி அவ்வரசியை வணங்கி "அம்மணீ! தாங்கள் இங்கு வருவது தகுமா? அரசர் கோபியாரோ" என்று கேட்டார்கள். "நான் சொல்வதைக்கேளும், இதோ இரண்டு பெரிய பைகள் நிறைய பொன்னிருக்கின்றன. ஒவ்வொருவரும் ஒன்றை எடுத்துக்கொள்ளும். என் குழந்தையைக் கொல்லாதீர்கள். என் வார்த்தையைக்கேளும்; என்னைக் காப்பாற்றும்; அரசர் நீர விசாரியாது விட்டாற் போலத்தோன்றுகிறது. ஆகையால் தயவு செய்து என் செல்வக் குழந்தையைக் கொல்லாதிரும். அவனை விட்டுவிடும்; உங்கள் காலைப் பிடித்துக் கொள்கிறேன். தயவு செய்தென்னைக்காப்பாற்றும்" என்று சொல்லிவிட்டு மகனை நோக்கி "அப்பா நான் அந்த ஆயிரம் வராஹனைக்கொடுத்துவிடுகிறேன் என்றேனே! என் வார்த்தையைக் கொஞ்சமாவது அவர்காதில் போட்டுக்கொண்டிருக்க வேண்டுமே! அவர்க்குத் தெரியாமல் ஓடி வந்தேனடா! கண்மணீ! என் வயிற்றில் கல நெருப்பிட்டாற் போல சங்கடம்; என்னால் பொறுக்கமுடியவில்லை. இனி உனக்குத் தாய் தந்தையில்லை என்று எண்ணிக்கொள். நான்உன்னை அநாதையாக்கிவிட்டேன். இந்ததுரதிருஷ்டசாலியின் வயிற்றில் தங்கியபாவமப்பா அது. இனி இந்த தேசத்தெல்லையைத் தாண்டி விடு. க்ஷண நேரமுந் தங்காதே. இந்த தலையாரிகளைக் கண்டால் காலனைக் கண்டாற் போல நெஞ்சங் கலங்குகிறதே" என்று ஓவென்றலறி அழுதாள். அவளுடைய ஆசைப்பெருக்கையும் பெருமையையுங் கண்ட தலையாரிகள் "அம்மணீ! தாங்கள் அப்படி சொல்லாதிரும். எங்களுக்கெங்கள் ஐயனைக் கொல்ல மனமிசையுமா? அந்தப்பழி எமக்கு வேண்டாம். நாங்கள் கொலைகார பாவிகள் தான். எங்களுக்கதுவே தர்மமாகிவிட்டது. ஆனால் நீங்கள் கேட்டும் நாங்கள் இளவரசைக் கொல்வோமா? எங்களுக்குமவர் மகன்போலத்தானே. சிறுநாள் முதல் அவர் எங்களுடன் விளையாடவில்லையா? விளையாடவரும் ஆட்டைவெட்டும் புலாலரைப் போல நாங்கள் ஒருநாளுஞ் செய்யமாட்டோம். நாங்கள் எண்ணியபடியே ஐயனை அப்புறம் அனுப்பிவிட்டு ஏதேனு மிருகத்தைக் கொன்று அதன் ஹ்ருதயத்தையும் ரத்தத்தையும் அரசனுக்குக் காட்டுகிறோம்; நீங்கள் பயப்படவேண்



டாம்" என்று சொல்லிக்கொண்டு தங்கள் கையிலிருந்த கத்திகளை ஒடித்தெறிந்தார்கள். "இப்பொழுதுதான் என்வயிற்றில் பால்வார்த்தீர்கள்; நீங்கள் தான் என் புத்திரபாக்கியத்தை காப்பாற்றிய தேவதைகள்" என்று சொல்லிக்கொண்டவரிடந் தான் கொண்டு வந்த பணப் பைகளைக் கொடுத்து விட்டு புருஷ வேஷத்துடன் குதிரை மேல் ஏறி ஊருக்குப் போனாள்.

பின் காட்டைத்தாண்டியதும் தலையாரிகள் இளவரசிடம் உத்திரவு பெற்றுக் கொண்டு திரும்பினார்கள். திருமல்ராயர் சந்திரகிரிக் கோட்டையிலிருக்குந்தங்கையிடம்போக இஷ்டங்கொண்டு செங்கற்பட்டு நகரத்தை நாடிவந்தார். இப்பொழுதிடிந்து காணப்படும் சந்திரகிரிக்கோட்டை அப்பொழுது வெகு அழகாக இருந்தது. சிவாஜிராயருடைய காலத்தில் அக்கோட்டை நன்றாகச்செப்பஞ்செய்யப் பட்டது. பின் மைசூர் யுத்தங்களில் துவம்சமாய் போய் இங்கிலீஷ் அரசாட்சியின் பெருமையால் பூர்வசின்னங்களைக் காப்பாற்றுஞ்சட்டத்தின் கீழ் செம்மையாகக் காப்பாற்றப்படுகிறது. அக்கோட்டைக்குப் பின் இருக்கும் புழல் ஏரியின் மேல்பாகம் வெகு ரமணீயமான ப்ரதேசம். அங்கு திருமல்ராயர் கந்தைத் துணியும் கரிவேஷமும் காஷாய பத்தமான ஆண்டிக்கோலத்துடன் கப்பரையுங் கையுமாய் பாடிக்கொண்டு, இயற்கை அழகைப்பார்த்துக் கொண்டு, செவ்வானத்தின் விசித்ர முகபடத்தையும் அதை பிரதிபலனஞ் செய்துக்கொண்டு கீழ் பரந்து கிடந்த நீர்ப்பரப்பையும் எதிரில் விளங்கிய கோட்டையின் அமைப்பையும், சுற்றும் பசேல் என்று படர்ந்து கிடந்த மரக்கூட்டத்தையும் இடைஉயர்ந்து சிறுகுன்றுகளாய்த் தோன்றும்கிழக்குத் தொடர்ச்சி மலையின் மேற் பூண்டு கவிந்திருப்பதையும் ஏற இரங்கிப்பார்த்துக்கொண்டு நல்ல ஸமயத்திற்காகக் காத்திருந்தார். அப்பொழுதெதிரிலிருந்த உப்பரிகை மேல் தன் தங்கைகேளிக்கையுடன் தன் தோழிகளுடன்உல்லாஸமாகபேசிக்கொண்டிருப்பதையுங்கண்டார். மலைமேல் நாடும் மேகங்களிடைத் தோன்று மின்னற்கொடிகள் போல அந்தமாடி மேல் தலைமயிர் விரித்துத்தன்கையாற் கோதிக் கொண்டிருந்த தங்கையைக் கண்டதும் ராயருக் கடங்கா ஸந்தோஷமுண்டாகி விட்டது. சிறுநாளில் இருவருங்கூடிக்குலாவி ஓடி விளையாடிக் குதித்த நாட்கள் எல்லாம் அவர்க்கு ஞாபகத்திற்கு வந்துவிட்டது. அதனோடு தான் அப்பொழுதிருக்குங்கோலத்தையும் அவளிருக்குங் கோலத்தையும் எண்ணி சற்றே மயங்கிய பொழுது சந்திரன் உதயமாகி செவ்வந்திக் கொடியில் பூத்த பூவென்றெண்ணும்படிப் பிரகாசித்தான்.

இரவுமுந்தி இருள் செய்யாதபடி சந்திரன் ஆகாயவீதியில் காவலிருந்தான். திருமல்ராயர் எண்ணமிட்டுக்கொண்டு தன்கப்பரையைஅடித்துக் கொண்டு கோட்டைக்குள் நுழைந்தார். என்ன விதியின் கொடுமை! அவ்விளவரசு,

"தந்தைதலம் விட்டோட்டத் தன்னையுயிர் மீட்டளிக்
கந்தையுடையோடு காம்விரித்துச்—சிந்தைநொந்
திச்சித் தெடுத்தான் விஜயத் திளவரசு
பிச்சையோ பிச்சையோ பிச்சை"

என்று கூவிக்கொண்டு கப்பரையைத் தட்டிக் கொடுத்துக் கொண்டு சந்திப் பிச்சை எடுப்பவன்போல வேஷங் கொண்டு நடித்தார். இந்தச்சப்தம் அவருடன் பிறந்தவள் காதில் விழுந்தது. விஜயத்திளவரசு தன் தமையன் தானோ என்று ஸந்தேஹித்தாள். அதே ஸமயத்தில்.

"கலியான் மிகமெலிந்து காந்துபசி கொல்லும்
வலியாற்ற தங்கையகம் வந்தடைந்து—சிந்தைநொந்
திச்சித் தெடுத்தான் விஜயத் திளவரசு
பிச்சையோ பிச்சையோ பிச்சை"

என்று மேலும் பெருங்குரலோடு சொன்னார். இதைக்கேட்ட அவர் தங்கைக்கு ஸந்தேஹம் மேலுமதிகரித்தது. உடனே ஒரு ஆளை அனுப்பி அப்பிச்சைக்காரனை அழைத்துவரும்படி ஏவினாள். அவனை அழைத்துக் கொண்டுவந்தார்கள். வந்ததும் தன் தங்கையைக் கண்டதும் திருமல்ராயருக்குத் தனக்குந் தெரியாமல் அழுகை வந்துவிட்டது. ஒருவாறு தங்கைக்கு ஆள் இன்னார் என்று தெரிந்துவிட்டது. திருடு போனதுமுதல் கப்பரை கையில்ஏறியது வரைக்குங் கேட்டு அறிந்துக் கொண்டாள். ஆனால் அவளுக்கவரை வீட்டில் வைத்துக்கொண்டாற் கணவன் என்ன சொல்வனோ என்று எண்ணினாள். பின் தகப்பன் என்ன செய்வனோ என்றும் பயந்தாள். பெரியோர் பகையைத் தேடிக் கொள்ளக் கூடாது என்று சிந்தித்தாள். என்னசெய்வது? போகச் சொல்லாமலே

போகசெய்ய வேண்டும் என்று எண்ணி அவரை அங்கேயே நிறுத்தி ஓர் பல்லாயைக் கொடுத்து அதுநிறைய கஞ்சிவார்க்கும்படி திட்டஞ் செய்தாள். அக்கஞ்சியைக் குடித்துவிட்டு மறுபடியு மதனிறைய கஞ்சிவாங்கிக் கொண்டு வெகு ஸந்தோஷத்துடன் ஊர்க்கு வெளிவந்துவிட்டான். கொண்டுவந்த சட்டியை ஓர் மரத்தடியில் பள்ளந்தோண்டியதில் குறிப்பாக முன் காலத்தில் மலையாள தேசத்தில் கல்லறையில் இடுவதுபோல பந்தோபஸ்தாக புதைத்து குறிவைத்துப்போனான்.

வாட்டமென்பது சிறிதும் அறியாதவன் போல ராயர் தனது குதிரைமேலேறி காஞ்சிபுரத்தை அடைந்தார். அவர் தகப்பனார் ஆணையால் கொல்லப் பட்டதாகக் கேள்விப்பட்டத் தனது பிரிய நேசனை அன்று கண்டதும் இருவரும் கடாலிங்கனஞ் செய்துகொண்டு வைபோகமாக இருந்தார். பின் தனது விருத்தாந்தங்களை எல்லாம் தனது நண்பனிடம்சொன்னார். அவன் அவருடைய கஷ்டதசைக்கு நொந்து தன் வீட்டிலேயே இருக்கும்படி வேண்டினான். ஆனால் இராயர் அது முடியாதென்று தடுத்துவிட்டார்.பின் அவன், “உனது வழிக்கிந்த பணம் உதவிபடும்”என்று ஒரு மூட்டை வராஹனைத் தந்தான். அதையுமிராயர் மறுத்துவிட்டார். பின் அவன் கட்டாயப்படுத்த வழிப் பிராயாணத்திற் குதவ சில பக்ஷணங்கள் கொடுக்க அந்த மூட்டையை எடுத்துக் கொண்டு மீண்டுந் தன் குதிரைமேலேறி தன் மனைவியிருக்குமிடத்தை அடைய வந்தார்.

வரும் வழி மிக அடர்ந்த வனாந்தரம். நல்ல மத்யானவேளை. அந்த சமையம் அவர்க்குப்பசி நன்றாக எடுத்தது. அப்பொழுது தனது நண்பன்கொடுத்தபக்ஷணத்தைச்சாப்பிடவேண்டும் என்ற அவா உண்டாக, பொட்டளத்திலிருந்த ஒரு பதிர்ப்பேணியை எடுத்து உடைத்தார். அதின் நடுவிலிருந்து கணக்கற்ற வராஹன்கள் விழுந்தன. உடனே ராயர் ஆச்சரியமடைந்து தனது நேசனுடைய நல்லெண்ணத்தை நினைத்து நினைத்துக் கொண்டாடி மற்றைய பதிர்ப்பேணிகளையும் பக்ஷணங்களையும் அம்மரத்தின் கீழ் கெடாதிருக்கச் செய்யவேண்டிய வெல்லாஞ் செய்து குறிப்புவைத்து விட்டுத் தன் ஊரை அடைந்தார்.

விஜயநகரம் அவர்க்குப் புதிதாக இருக்கவில்லை; அவர் மாத்திரம் ஊர்க்கெல்லாம் புதிதாய் இருந்தார். அவரை யாராலுங் கண்டு பிடிக்க முடியவில்லை. தன் மனைவி உயிரோடு இருப்பதாக உணர்ந்து அவளைப்பற்றிய விஷயங்களை எல்லாம் விசாரித்தார். தனது தாயின் வேண்டுகோளால் அவள் முன் வேஷங் கோணாதிருப்பதாகவுந் தெரிந்துகொண்டார்.மெதுவாக அவர் வீட்டு வேலையாட்களை ஸ்நேஹஞ் செய்துக் கொண்டார். ஆனால் அப்பொழுதவரிருந்த கோலத்தில் அவரை யாராலுமறிய முடியவில்லை. அலைந்ததால் உடல் கெட்டதல்லாமல் அவராக வேஷங்கொண்டது முக்காலே மூன்றுவீசம்; யாரால்தான் கண்டு பிடிக்கமுடியும்?அம்மட்டோடு நிற்கவில்லை.மௌன வேஷமும் மேற்கொண்டார்.எல்லாரும்அவரைஊமை என்றழைப்பது வழக்கமாய் விட்டது. இவ்வாறு அவரிருந்த நிலைமையை அவர்மனைவிஒரு நாள் கண்டாள்.ஊமையுஞ் செவிடுமாகிய அவர்தான் தனக்குகந்த சேவகனவன் என்று நினைத்து அவரைத்தனது வீட்டைக் காக்குந் சேவகனாக்கிக் கொண்டாள். நாலைந்து நாள் கடந்ததும் அவனிடம் ஒரு கடிதம் கொடுத்து தான் இரண்டு நாள் முன் காட்டிய வீட்டிலிருப்பவனுக்குக்காட்டும்படி இரவுபத்துநாழிகைக்குமேல்கொடுத்தாள். இராயர் ஒன்று மறியார்போல் அதை யெடுத்துக்கொண்டு தலை தெரிக்க ஓடிப்போவார் போல காட்டிக் கொண்டுஇடையே வெளிச்சமொன்றாக்கிக் கொண்டு அதைத் திறந்து படித்தார். ஸமாசாரத்தை யறிந்துகொண்டு தலையசைத்த விதமாக அதைக் கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுத்தார். அங்கதை வாங்கினவன் மற்றொருகடிதமெழுதி அதையும் கொண்டுவந்த கடிதத்தையுங் கொடுத்தான். மௌன மூர்த்தியாகிய ராயர் தன் மனைவி முன்கொடுத்த கடிதத்தைநல்ல இடமொன்றில் மறைத்துவிட்டு தான் பதிலாகக்கொண்டுவந்த கடிதத்தின் விஷயங்களையும் அறிந்துகொண்டு பின் அதை நன்றாக மூடி, நெடுமூச்சு வாங்க ஓடிவந்து தன்மனைவியிடம் கொடுத்தார். அவள் முதல் கடித மெங்கென்று கேட்டாள்; மௌனந்தவிர பதில் கிடைக்கவே இல்லை; பின் ஒரு



கழியைக் கொண்டவரைப் புடைக்க வந்தாள். அவளுக்கு வந்த கோபத்தில் கையிலிருந்த கடிதத்தை நெகிழவிட்டுவிட்டு, பள்ளியறை ஜோடித்து சிங்காரஞ் செய்யப் போய்விட்டாள். ராயர் மெல்ல கடிதத்தை எடுத்து பத்திரப்படுத்திவிட்டார். சோரநாயகனும் உள் வந்து பள்ளியறையுள் நுழைந்தார். ராயர் வேடிக்கை பார்ப்பவர் போல் மனந்துடிக்க நின்றார். ஆனாலும் பொறுமையை விட்டுவிடாமல் இந்தக் கதைக்கு முடிவு வரும் என்று எண்ணினார். ஆக்கப் பொறுத்தவை ஆறப்பொறுக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்த சோரநாயகன் வெளிவந்ததும் அவன் காலைக் கையைப் பிடித்தவராது மோதிரத்தை இனாமாக அடைந்தார். அவர் மனைவி இரவு பதினெட்டு நாழிகைக்கு மேல் தூங்கிவிட்டாள். அடுத்த நாள் பொழுது புலரு முன் ராயர் ஊரைவிட்டு வெளிவந்து தனது நேசனுடன் போய் யோசிக்கலானார். அவனது உதவியால் யானை சேனை சூழத் தனது தகப்பனது இராஜ்பத்திற்குள் நுழைந்தார். அரசனும் யாரோ தன்னைக் காண ஓர் அரசன் வருகிறான் என்று எண்ணி வரவேற்கும்படித் தனது மந்திரியை அனுப்பித்தான். இளவரசைக் கண்டதும் ஆச்சரிய மடைந்தவன் அன்புடன் தழுவினான். பின் தந்தை சபையை அடைந்து தான் யார் என்று தெரிவித்துக் கொண்டு ஒரு மனு செய்தான். “என்னைத்தாங்கள் ஏன்இப்படிசெய்கிறாய் என்று கேட்கக்கூடாது; நான் செய்வதை ஒப்புக்கொள்ளவேண்டும். பின் எல்லாம் தானே வெளிபாகும்” என்று சொல்லித்தனது தகப்பனது அனுமதியை விரும்பினான். பிள்ளையைக் கண்டால் போதுமென்று காத்திருந்த அரசன் அதற்கிசைந்தான்.

அரசன் மகனும் தான் புதைத்து வைத்த கஞ்சிச் சட்டி, பதிர்ப்பேணி, இரண்டு கடிதங்களையுந் தருவித்து தன்னேசனையுந் தங்கையையும் மனைவியையும், அவள் சோர புருஷனையுந் தருவிக்கும்படி திட்டஞ்செய்தான். எல்லாரும் வந்தார்கள்.

அவர்கள் எல்லாரையும் ஸபையிலிருக்கும்படிச் சொல்லித் தகப்பனைப் பார்த்து “என் ஐயனே! கேளும்! ஒருநாள் ஒரு ஆண்டி பாடிய பாட்டே யான் பட்ட கஷ்டத்திற் கெல்லாம் மூல காரணம்” என்று சொல்லித் தன்னேசனிடம் பெற்ற பதிர்ப்பேணி மஹிமையை எல்லாம் எடுத்துரைத்து விட்டு “மெதுவாக அந்த இரண்டு கடிதங்களையும் பாரும் நான் இங்கு வந்ததும் மாறுவேஷமாக என் மனைவி அந்தப்புரத்திலேயே வேலைக்கமர்ந்தேன். ஊமை செவிடு போல் பாசாங்கு செய்தேன். என்னிடம் நம்பிக்கை கொண்ட மனைவி முதலில் கொடுத்த கடிதம் இது. இதை நான் வாசித்துத்தான் கொடுத்தேன். அதில் அவள் தனது சோரபுருஷனை அந்தப்புரத்திற்கு வரும்படி எழுதியதல்லாமல் அக்கடிதத்தையுந் திருப்பிக் கொடுத்து விடும்படி எழுதியிருந்தாள். அவர் ஸத்தியஸந்தர்—உடனே கொடுத்து விட்டார். நான் அதைப் பத்திரப்படுத்திவிட்டு மற்றொன்றை மாத்திரம் என் மனைவியிடம் கொடுத்தேன். அவளுக்கு முதலில் வந்த கோபத்தில், கொண்டு வந்த கடிதத்தை கீழே எறிந்து விட்டாள். நல்ல ஸமயம் பார்த்ததைப் பத்திரப்படுத்திவிட்டு மீண்டும் என் சிநேகிதனை அடைந்தேன். இன்றைக்கென்னுடன் வந்த பெருமைக்கெல்லாம் அவர்தான் காரணம். இப்பொழுது நான் திரும்பி வந்ததும் என்மனைவி எனக்கு செய்யாத மரியாதையே கிடையாது. இருவர் கடிதமுமிதோ பாரும்” என்று சொல்லி அவ்விரண்டு கடிதங்களையுந் தகப்பனிடந் தந்தான்.

இதைக் கேட்ட அரசன் ஆச்சரியமடைந்து “உன்னையா நான் கொல்லும்படி ஏவினவன். என்ன அவஸரம்? அவஸரக்காரனுக்குப் புத்தி மட்டென்று ஏசும்படி யாய்விட்டேன்” என்று சொல்லிக்கொண்டு தன் மருமகளையுஞ் சோரநாயகனையுங் காட்டிலோட்டி விடும்படி உத்திரவிட்டான். பின் தனது மனைவியையுங் கலியாணியையுந் தன் மகனது நேசனையுங்கொண்டாடிவிட்டு ராயருக்கிளவரசு பட்டத்தைக் கட்டிவைத்தான்.ராயரும் தனது புஜபராக்ரமத்தால் மாத்திரமன்றி புத்திபராக்ரமத்தாலும் மிக ஓங்கிவிளங்கி விஜயநகரத்து அரசாட்சியை ஓங்கும்படி விளங்கினார். அவர்க்கென்ன குறைவு?

---

மத்தியதேசம்.—வியாசைக்குக்கிழக்கேயும் பிரயாகைக்கு மேற்கேயும் இமயத்துக்குத் தெற்கேயும், விந்தியத்துக்கு வடக்கேயு முள்ள தேசம். இங்கே வசிப்போர் மாத்தியமிகரெனப் படுவர்—குருக்ஷேத்திரத்திற்குத் தெற்கும் அளகபாத்திற்கு வடக்கும் இமயத்திற்கு மேற்கும் விந்தத்திற்குக் கிழக்குமாகவுள்ள பூமி என்றுங் கூறலாம்.—தமிழ்ப்பெயரகராதி.

# தென் ஆபிரிக்கா இந்தியர்களின் நிலைமை

## THE POSITION OF INDIANS IN SOUTH AFRICA

*தென் ஆபிரிக்காவில் தற்காலம் 1½ லக்ஷம் இந்தியர்கள் வசித்து வருகிறார்கள். அவர்களில் ஒருலக்ஷம் பெயர்களுக்குமேல் நேடாலிலும் (Natal), 10,000 பெயர்கள் டிரான்ஸ்வாலிலும், (Transval) 25,000 பெயர்கள் கேப் காலனியிலும் (Cape Colony) ஆரஞ்சு காலனியிலும் (Orange Colony) மிகவும் ஸ்வல்பமாயுமிருந்துவருகிறார்கள். இவர்கள் நம் தேசத்திலிருந்து அங்கே சென்றது பின்வருமாறு.*

1859ம் வருத்தில் நேடாலிலிருக்கும் ஐரோப்பிய தோட்டக்காரர்கள்(European Planters Community இம்பீரியல் கவர்ன்மெண்டாரை இந்தியாவிலிருந்து கூலிகளைத் தங்கள் தோட்டங்களில் வேலை செய்யத் தருவித்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டதின் பேரில் இம்பீரியல் கவர்ன்மெண்டார் இந்தியா கவர்ன்மெண்டாரைக் கேட்க, அவர்கள் சம்மதித்து சில கூலிகளை மூன்று வருஷ ஒப்பந்தத்தின் கீழ் அனுப்பினார்கள். இந்தக்கூலிகள் செய்த வேலையைப்பார்த்து அவர்கள் தங்களுக்கு மிகவும் பிரயோஜனமுள்ளவர்களாயிருப்பார்களென்று அறிந்து, தென் ஆபிரிக்காவிலிருந்த ஐரோப்பியர்கள் இவர்களுக்குக் கூடிய உதவி செய்து வந்தார்கள். இவர்களின் வம்சஸ்தர்களுக்குப் படிப்புக்குமிட மேற்பட்டது. அதனால் அநேகம் பெயர்கள் பிரிடிஷ் பிரஜைகளைப் போலவே ஸ்வதந்திரமுடையவர்களானார்கள். மூன்று வருஷ ஒப்பந்தத்திற்குப்பிறகு ஸௌகர்யமாய்த் தாங்களிருக்கலாமென்ற எண்ணத்தின் பேரில் ஒப்பந்தத்திற்குட்பட்டு அநேகம் கூலிகள் போகத் தொடங்கினார்கள்.

இந்தியக் கூலிகளின் வேலையின் கீழ் தங்கள் நாடு செழித்து வளர்ந்ததைப் பார்த்து ஐரோப்பியர் அவர்களுக்கு அதிகமான தொந்தரவொன்றும் ஏற்படுத்தவில்லை. இந்தியர்களும் ஒப்பந்தம் முடிந்த பிறகு தாங்கள் சில்லரை வியாபாரம் முதலியன செய்து பிழைத்து வந்தார்கள். இந்தமாதிரி 1895ம் வருஷம் வரையில் நடந்துவந்தது.

இந்தியர்கள் ஐரோப்பியர்களைப் போல ஸ்வதந்திரமுடையவர்களாய் தங்கள் நாட்டில் வசித்து வருவதைப் பார்த்துப் பொறாமை கொண்டு நேடால் கவர்ன்மெண்டார் ஒப்பந்தத்திற்குள்படாத ஒவ்வொரு இந்தியருக்கும் வருஷத்திற்கு 3-பவுன் வீதம்வரி விதித்தார்கள், அவர்களுடைய ஸந்ததிகளுக்கும் ஆணாயிருந்தால் 16-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் பெண்ணாயிருந்தால் 13-வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் இந்த மூன்று பவுன் வரி விதிக்கப்பட்டது. இவ்வரியை விதித்ததில் அவர்களுடைய எண்ணமென்னவென்றால் இந்தியக்கூலிகள், ஒப்பந்தத்தின் கீழ் வேலை செய்தால் மாத்திரம் நேடாலில் வசிக்க இயலுமேயொழிய மற்றப்படி ஒப்பந்தமில்லாமல் வசிக்கமுடியாமலிருக்க வேண்டுமென்பதே. ஒப்பந்தத்தின் கீழ் வேலை செய்வதென்றால் அடிமையாயிருப்பதற்கும் அதற்கும் அதிக வித்தியாசமில்லையென்றே சொல்லலாம். ஒப்பந்தத்தின் கீழ் வேலைசெய்யும் கூலிகள் வேலை நிறுத்தம்செய்தால்அவர்களை கசையாலடிக்கவும், ஜயிலிலடைக்கவும் இன்னும்அனேகவித தொந்திரவுகளையும் கொடுக்கிறார்களாம், இப்படிப்பட்ட ஒப்பந்தத்தின்கீழ் யார்தான் ஆயுள் முழுவதும் வேலை செய்யப் பிரியப்படுவார்? ஒப்பந்தமில்லாமல் போனால் 3-பவுன் வரிகொடுக்க வேண்டிவருகிறது. இந்த வரியினால் அநேகம் மனிதர்கள் கெட்ட வழிகளில் செல்லவும் ஸ்திரீகள் மானமிழக்கவும் நேரிடக்கூடும். முதலில்கூலிகள் நேடாலுக்குச் சென்றபொழுது ஒப்பந்தத்திற்குட்பட்டிருந்தால் மாத்திரம் வேலை செய்யலாம், இல்லாவிட்டால் தங்கள் தேசத்திற்குத் திரும்பிவிடவேண்டுமென்று அவர்களுக்கு நேடால் அதிகாரிகள் சொல்லியிருப்பார்களேயானால், நம்மிந்தியர்கள் அங்கே சென்றிருக்கமாட்டார்கள்: இந்தியா கவர்ன்மெண்டாரும் அவர்களை அனுப்ப சம்மதித்திருக்கமாட்டார்கள். தங்களுக்கு சௌகர்ய மேற்படும் வரையில் இந்தியர்களுக்கு மிகவும் உதவி புரிபவர்கள் போல் பாராட்டித் தங்கள் நாடு செழிப்போங்கியிருக்குங் காலத்தில், செழிப்பானதற்குக் காரணமாயிருந்த இந்தியர்களுக்குஉபத்திரவம் செய்ய ஏற்பட்ட நேடாலதிகாரிகளின் குணாதிசயத்தை எடுத்துரைக்க யாரால் தான் முடியும்! இந்த அக்கிரம வரியானது ஏற்பட்டகால முதல் அநேகம் பெயர்கள் அதனால் கஷ்டத்திற்குள்ளாகியும் ஜயிலுக்குப் போகும்படிக்கும் ஏற்பட்டிருக்கிறது. இந்த வரியை எடுத்துவிடும்படி இந்தியர்கள் அநேக மனுக்கள் செய்து கொண்டும், பெருந்தன்மையுள்ள அநேக ஐரோப்பியர்களும், ஐரோப்பியப் பத்திரிகைகளும் அந்த வரியைப் பற்றிக் கண்டித்துப் பேசியும், எழுதியும் கூட, இன்னும் ரத்து செய்யப்படாமலேயிருந்து வருகின்றது.

நேடாலில் இந்தியர்களுடைய கஷ்டங்களிப்படியிருக்க, டிரான்ஸ்வாலில் போயர் சண்டை நடந்தபிறகு அந்த கவர்ன்மெண்டார் இந்தியர்கள் விஷயமாய் ஒரு சட்டம் ஏற்படுத்தினார்கள். அந்தச்சட்டப்படி இந்தியர்கள் அதற்குப் பிறகு அத்தேசத்தில் பிரவேசிக்கக் கூடாதென்றும், ஏற்கனவே இருப்பவர்கள் தங்களை ரெஜிஸ்டர் செய்து கொள்ளவேண்டுமென்றும் அவர்கள் ரெஜிஸ்டர் செய்து கொள்ளும்பொழுது தங்கள் பத்துவிரலடையாளங்களையும் கொடுக்க வேண்டுமென்றும் ஏற்படுத்தப்பட்டது. சாதாரணமாய்க் குற்றவாளிகளுக்குவிரலடையாளங்கள்கொடுப்பதுவழக்கம். இந்த மாதிரி அவமானமேற்படக்கூடிய சட்டத்தை ஏற்க மிகவும் ஆத்திரப்பட்டு டிரான்ஸ்வாலிலிருக்கு



மிந்தியர் அந்தசட்டத்தின் கீழ் நடப்பதைவிட நடவாமலென்ன கஷ்டம் வந்தபோதிலும் அனுபவிப்பதாய்த் தீர்மானித்து எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்தார்கள். இப்படி எதிர்க்காமலெதிர்க்கும் உபாயத்தைக் கைக்கொண்டு தென் ஆபிரிக்காவில் இந்தியர்களின் மானத்தையும் கௌரவத்தையும் காப்பாற்றினவர் தான், மிஸ்டர் காந்தி. இவருடைய தலைமையின் கீழ் இந்தியர்கள் 1906ம் வருஷம் முதல் நான்கு வருஷம் எதிர்க்காமலெதிர்க்கும் உபாயத்தைக் கொண்டு தங்கள் கௌரவத்தைக் காப்பாற்றி வந்தார்கள்.

பிறகு மிஸ்டர் காந்திக்கும் ஜெனரல் ஸ்மட்ஸ் என்பவருக்கும் ஒருவிதமான ராஜி ஏற்பட்டு இந்தியர்களின் கஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்கு ஒரு சட்டமேற்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது அந்தசட்டம் டிரான்ஸ்வாலுக்கு மாத்திரம் ஸம்பந்தப்பட்டதாயிருந்தது. இப்படியிருக்கும் சமயத்தில் தென் ஆபிரிக்காவிலுள்ள பிரிடிஷ்காலனிகள் நான்கும் ஒன்றாய் சேர்க்கப்படவே இந்த நான்கு நாட்டிலுமுள்ள இந்தியர்களுடைய குறைகளைத் தீர்த்துச் சட்டமேற்படுத்த வேண்டுமென்று மிஸ்டர் காந்தி, ஜெனரல் ஸ்மட்ஸைக் கேட்டுக்கொண்டார். மேலே சொன்ன ராஜியை முன்னிட்டு சென்ற வருஷம் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது. தென்ஆபிரிக்கா கவர்ன்மெண்டாரால் அது ஏற்கமுடியாதென்று தள்ளப்பட்டு விட்டது.

இப்படி இந்தியர்களுக்கு ஒருவித ஸௌகர்யமுமேற்படாமல் பழைய கஷ்டங்கள் திரும்பிவிட்டன. பழைய சட்டங்களொன்றும் ரத்து செய்யப்படவில்லை. நேடால் கோர்ட்டில் இந்து மகம்மதியஸ்திரீகள் தென் ஆபிரிக்காவின் சட்டப்படி தங்கள் புருஷர்களுக்கு மனைவிகளென்று ஏற்றுக்கொள்ள முடியாதென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. இந்தத் தீர்மானம் அங்கேயுள்ள இந்திய புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் ஆத்திரத்தை உண்டாக்கிவிட்டது. இப்பொழுது மூன்று பவுன் வரி முதலான அக்கிரமச் சட்டங்கள் ரத்து செய்யப்படும் வரையில் எதிர்க்காமலெதிர்க்கும் உபாயத்தைக் கைக்கொள்வதென்று தீர்மானித்து தென் ஆபிரிக்காவிலுள்ள நம்மிந்திய சகோதரர்களும், சகோதரிகளும் தங்கள் மானத்தையும் நம் தேசத்து கௌரவத்தையும் காப்பாற்றப் பலவிதமான கஷ்டங்களுக்குள்ளாகிறார்கள்.

இப்பொழுது யூனியன் கவர்ன்மெண்டார், எதிர்க்காமலெதிர்க்கும் கட்சியை மேற்கொண்டு வேலைக்கும் போக மறுத்துரைக்கும் இந்துக்களைக் கைதிகளாக்கி அவர்களை ஜெயிலில் வைக்காது, அவர்கள் முன் வேலை செய்துகொண்டிருந்த சுரங்கங்களிலேயே கைதிகளாக வைத்து சுரங்கவேலையை செய்யும்படியாய் கட்டாயப்படுத்தி அவ்வேலையை செய்யாமல் போனால் அவர்களை கசையாலடித்து அவர்களுக்கு உணவு கொடுக்காமலும் இன்னும் பலவிதமான இம்சையை செய்கின்றாராம்.

இவ்வளவு கஷ்டங்களையும் நம்மிந்தியர் இப்பொழுது தென் ஆபிரிக்காவிலனுபவித்து வருகிறார்கள். இந்தக் கஷ்ட தசையானது இந்தியர்களுக்கு வெகு காலம் நிற்காதென்று தோன்றுகிறது. இந்தியாவில் அநேக விடங்களில் கூட்டங்கள் கூடி இந்த அக்கிரமச் செயல்களைக் கண்டித்துப் பேசியும், இந்தியா கவர்ன்மெண்டாருக்கு அவர்களாலாகக் கூடிய பரிகாரம்செய்ய விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் பிரிடிஷ் கவர்ன்மெண்டாருக்குஇந்த அக்கிரமங்களை அடக்கும்படி தந்தி கொடுத்திருக்கிறார்கள். அவர்களும் தகுந்த முயற்சி யெடுத்துக்கொள்வார்களென்று தோன்றுகிறது. ஏனெனில் இந்த அக்கிரமங்களை இந்தியாவிலும் சீமையிலுமுள்ள அநேக ஆங்கிலேய கனவான்களும் ஆங்கிலேயப் பத்திரிகைகளும் மிகவும் கண்டித்துவருகிறார்கள்.

மகா கனம்பொருந்திய நம் ராஜப்பிரதிநிதியவர்கள் சென்னைக்கு விஜயம் செய்த பொழுது, இவ்விஷயத்தில் நம்மிந்தியர்களுடன் அனுதாபங்காட்டிப் பேசியது அவருடைய பெருந் தன்மையையும், இந்தியர்களிடத்திலுள்ள அபிமானத்தையும், அவருக்குள்ள மேலான ராஜ நிர்வாகத் திறமையையும் விளக்குவதுடன், நம்மிந்தியர்களுக்குத் தங்கள் கவர்ன்மெண்டார் தங்கள் பக்கத்தி லிருக்கிறார்களென்கிற நம்பிக்கையேற்பட்டு ஒரு பெருங் கவலையை நீக்கிற்று. தான் ஒரு இந்தியனாயில்லாமலிருந்த போதிலும் இவ்விஷயத்தில் இந்திய ஜனங்களோடு அனுதாபப்படுகிறதாகவும், தென் ஆபிரிக்கா கவர்ன்மெண்டார் எதிர்க்காமலெதிர்க்கும் கட்சிக்காரர்களை யடக்கும் விதமானது எந்த நாகரீக கவர்ன்மெண்டாலும் ஒரு நிமிஷம்கூட ஒப்புக்கொள்ளப் படமாட்டாதென்றும், இந்தியர்களுடைய குறைகளை நீக்க பிரிடிஷ் கவர்ன்மெண்டாருக்கு தான் எடுத்துரைப்பதில் பின் வாங்கமாட்டாரென்றும் சொன்னார்.

தென் ஆபிரிக்கா அரசாங்கத்தாரால் இந்தியர்களுக்கு நன்மை ஏற்படும் வரையில் அவர்கள் தங்கள் மானத்தையும் நம் தேசத்து கௌரவத்தையும் காப்பாற்றவேண்டுமானால், எதிர்க்காமலெதிர்க்கும் உபாயத்தைக் கைக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு இந்த சங்கட சமயத்தில் பொருளுதவி செய்தும் இன்னும் என்ன உதவிசெய்ய முடியுமோ அவைகளைச் செய்ய பாத்தியப் பட்டவர்களும் நம்மிந்தியா தேசத்தவர்களே. ஏற்கனவே அநேகவிடங்களில் பொருள் சேர்த்துக் கொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு இந்தியரும் தம்மாலான உதவியைச் செய்து நம்தேசத்தின் பெருமையையும் கௌரவத்தையும் நிலைநாட்டுவாராக.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

## I. ஆத்திசூடி விளக்கம்

### 33. காப்பது விரதம்

இந்த ஸூத்திரம் மூன்று விதமான பொருளை உள்ளடக்கியுள்ளது. அவைகளை முதலில் சுருக்கமாகக்கூறிப் பின்னர் விஸ்தரிப்போம். (1) பிறஉயிரைக்காப்பதே மிகச்சிறந்த விரதம், (2) உண்ணல் கடைப்பிடித்து விடாது எப்பொழுதும் அனுஷ்டிக்கத் தக்கது விரதமே, (3) உண்மை நிலையிலிருந்து நழுவாது காப்பது விரதமேயாம்.

**(1) பிற உயிரைக் காப்பதே விரதங்களுள் சிறந்தது:**—என்ற இந்தப் பொருள் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை உள்ளடக்கியுள்ளது. எவ்வளவு கஷ்டம் வந்தபோதிலும் பிற உயிரை வாங்கி அதைத் தீர்த்துக்கொள்ள முயலாதிருப்பதே இந்த ஒழுக்கத்தின் முக்ய அனுஷ்டானம். 'எல்லாப் பிராணிகளுக்கும் ஜீவன் உண்டு: அது, மானிட சரீரத்தில் பாபம் செய்வதால் தாழ்ந்த சரீரங்களை அடைந்துள்ளது. இப்படி இருந்தும் அததற்கு ஏற்ற ஸுகதுக்கங்கள், அபிமானங்கள் அததற்கு உண்டு: நாம் எப்படி நமது தேஹம், ஸுகதுக்க விஷயம் இவைகளில் பற்றுடன் மூழ்கி அடிபட்டுத் தேறுகிறோமோ அதுபோலவே தான் அவைகளுக்கும். ஆகலால் தாழ்ந்த ஜன்மத்தை அடைந்திருக்கும் ஜீவனது ஆயுள் காலத்தை எக்காரணத்தாலும் நாம் குறைக்கவே கூடாது' என்ற பகுத்தறிவோடு மானிடர்களாகிய நாம் கூடியவரையில் பழகி வரவேண்டும். இதனால் வரவர மாம்ஸபக்ஷணம், கொடிய ஜந்துக்களையும் கொல்லல் முதலிய கொலை ஸம்பந்தமான தொழில்களில் ஒருவித வெறுப்பு அதிகரித்துக் கொண்டே வரவேண்டும். இப்படிப்பட்ட நிலையை நம் பரதகண்ட வாஸிகளில் பிராஹ்மணர்களும், சைவர்களும் முற்றிலும் அடைந்துவிட்டனர். மற்றவர்களும் பிரயத்தனம் செய்தால் இது கைகூடாமற் போகாது. இந்தக் கொல்லாமையாகிய ஜீவகாருண்யத்தின் முக்ய ஸ்வரூபம் தான் ஸகல விரதங்களிலும் மிகச் சிறந்த விரதம்.

நாம் ஸம்பந்தப்பட்ட வரையில் ஒரு ஜந்துவையும் கொல்லாது விலக்கியே வரலாம். நமக்குக் கொல்ல மனம்வாராது, எப்பொழுதும் ஒதுங்கும்படியான நிலையிலும், திடமாக நின்றுவிடலாம். ஆனால் ஜீவகாருண்ய விஷயத்தில் தர்மஸங்கடஸமயங்கள் ஏராளமாக வந்துவிடும். நாம் குளக்கரை வழியாகப் போவதாக வைத்துக்கொள்ளுவோம். அங்கு ஒரு பாம்பு தவளையைப் பிடித்து விட்டது என்போம். தவளையை விடுவிக்கப்போனால் பாம்புக்கு அகப்பட்ட ஆஹாரத்தைக்கெடுத்து அதைப் பட்டினி போட்ட தான பாபம் வரும். ஒருபிராணி உயிரைக் கவனித்துத்தொழிற்பட்டால் மற்ற உயிருக்குக் கெடுதி வருகிறது. இப்பொழுது என்ன செய்வது? மேலும் தவளையை விடுவித்து விட்டுப்போனால் அப்புறம் பாம்பு வந்து அதைப் பிடித்துக்கொண்டு விடாதா? இதுவுமன்றி தவளையோ பிடிபட்டு அங்கமிழந்துவிட்டது: அதை விடுவித்தாலும் அது தவித்து இறக்கும் சீக்கிரம் இறப்பதை வெகு நாழிகை தவித்து இறக்கும்படி செய்வது கொடிய பாபமாகாதா? பாம்பின் வாயிலிறந்திருந்தால் பாம்பின் வயிறாவது நிரம்பி இருக்கும். இப்பொழுது தவளை தவித்திறந்த பாபத்தோடு பாம்பைப் பட்டினி போட்ட பாபமும் வாராதா, பாம்பிற்கு அந்த இறந்த தவளை கிடைக்காவிட்டால்? ஆகலால் இந்த மாதிரி இரண்டுயிர்கள் ஸம்பந்தப்பட்ட விஷயத்தில் எது செய்தாலும் பாபம் வருவதே திண்ணம். என்ன செய்வது என்ற சங்கை எல்லோருக்கும் உண்டாகலாம் உயிரைக் காக்கும் விரதத்தை எப்படி அனுஷ்டிப்பது?

எந்த விரதத்தை அனுஷ்டிக்க வேண்டுமாகிலும் அனுஷ்டிப்பவன் நிலைக்கேற்ப அனுஷ்டான ஒழுங்கு மாறுவதுண்டு. இதை மறந்து மேல்நிலை விஷயங்களை கீழ்நிலையிலிருப்பவன் கவனிக்கத் தொடங்குவது என்றால் வீண் மனச் சஞ்சலமும், தன்னால் கூடியவரையில் அனுஷ்டியாதுவிடுவதுமாகிய கொடிய நிலையும்தான் வரும். இந்த பாம்பு தவளை விஷயமே இதற்கு திருஷ்டாந்தம். பெரிய மஹாநுபாவனது அனுஷ்டான விஷய சங்கையை ஸாதாரணராகிய நாம் எடுத்துக்கொண்டு வீண் குழப்பத்தை அடைகிறோம். முதலில் மஹானுபாவர் அனுஷ்டானத்தைக் காட்டிப் பின்னர் நாம் எங்குள்ளோம் என்பதை உணர்வோம். மஹாநுபாவன் முற்கூறியபடி பாம்பையும் தேரையையும் கண்டால் தேரையையும் விடுவித்து பாம்பிற்கு ஆஹாரமும் போட்டுவிடுவன். தன் தேஹத்திலிருந்து மாம்ஸத்தையும் வெட்டிப் போட்டாலும் போடுவன். சிபி சக்ரவர்த்தி ஒருபுறாவை வல்லூறினிடமிருந்து ரக்ஷிக்க தன் மாம்ஸத்தை கொஞ்சம் கொஞ்சமாக அறுத்திட்டு முடிவில் தன் தேஹம் முழுவதையும் தத்தம் செய்யவில்லையா வல்லூற்றிற்கு? இப்படிப்பட்ட ஜீவகாருண்ய விஷயத்தில் ஈசர்களாகிய பெரியோர்களை வைத்திருக்கும் நமது தேசத்தார்களுக்கு இத்தகைய ஜீவகாருண்ய விஷய மோஹம் வரவே கூடாது. நம் நிலை என்ன? நாம் எப்படிச் செய்வது? சிபியைப் போல செய்யமுடியுமா நமக்கு? ஆயினும் நமது உயிர் நமக்கு எப்படி வெல்லமோ அதுபோலத் தானே எல்லாப் பிராணிகளுக்கும் என்று தவளையை விடுவிக்க வேண்டியது. பின்னர் பாம்பு பிடிக்குமே அதை என்றால், அப்படிப்பிடிக்க இடமில்லாதபடி அவைகளைப் பிரித்துவைக்க வேண்டியது தான் நமதுகடன். நம்முயற்சியின் பின் நமது மறைவில் எது நடந்தாலும் நமக்கென்ன என்று சாந்தமாக விருக்கவேண்டியது தான். பாம்பின் ஆஹாரம் போய்விட்டதே என்றால், ஊரிலிருக்கும் பாம்பிற்கெல்லாம் ஆஹாரமிடுவது நாம் தானா? பாம்பு இதனால் இறந்துவிடாது: தவளைகதியோ அப்படியல்ல. மேலும் பாம்பு தவளையைச் கொன்று தின்பது ஆதலால் 'பாம்பு தவளையைப் பிடிக்கும் இடம் எல்லாம் நாம், தேடிச்சென்று தவளைகளை எல்லாம் பாம்பின் வாயிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற த்யானத்துடன் இருக்கவேண்டும் என்று ஜீவகாருண்ய ஒழுக்கம் கூறவில்லையே! ஏதோ தற்செயலாய் ஒரு பிராணி மரணமடையும் தருணத்திலிருப்பதைப் பார்த்தால் அதை கருணையுடன் விடுவிக்க வேண்டியதே ஒழிய, அந்த மரணத்திற்கு காரணமாக விருக்கும் மற்றைய தாழ்ந்தப் பிராணியைக் கூட வெறுக்கலாகாது. நமக்கிருக்கும் நிலையில் ஒரு பிராணியை விடுவிக்க மாத்திரம் முடிகிறதே ஒழிய மற்றைய பிராணியை திருப்தி செய்ய முடியவில்லையே என்று மனஸ்தாபம் இருப்பது ஜீவகாருண்யத்தின் முக்ய லக்ஷணம். தவளையை விடுவித்தால் அது கஷ்டபட்டுத்தான் இறந்து விடுமே: ஆதலால் பாம்பின் வாயில் தான் அது இறக்கட்டுமென்பது வீண் குதர்க்கமே. நமது வீட்டில் பாட்டி ஒருத்தி மிகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தால், அவள் கஷ்டப்பட்டிறப்பதைவிட சீக்கிரம் அவளைக்கொன்று விடுவதே மேல் என்றும் குதர்க்கம் செய்யத்தொடங்கிவிடலாம் முற்கூறிய குதர்க்கிகள். இரண்டிற்கு அதிக பேதம் ஒன்றுமில்லையே. ஆதலால் எப்படியாயினும் நம்மாலியன்ற வரையில் ஒரு பிராணி உயிருக்கு அஞ்சும்படியான காரியத்தைச் செய்யாமலிருப்பதே விரதங்களுள் மிக முக்கியமானது.

**(2) விடாது அனுஷ்டிக்க வேண்டியது விரதம்:**—முதலில் விரதம் என்றால் என்ன என்பதைச் சற்று ஆராய்வோம். 'வினையாசு தீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற்பொருட்டு (ஸன்மார்க்கிகளால்) காக்கப்படுவது விரதங்கள். இன்ன அறஞ் செய்வல் எனவும், இன்ன பாவமொழிவல் எனவும், தம்மாற்றலுக்கேற்ப வரைந்து கொள்வன விரதங்களே.' என்று பரிமேலழகர் கூறுகிறார். திருக்குறளாசிரியரும் விரதங்களையெல்லாம், அருளுடைமை, புலான்மறுத்தல், தவம், கூடாவொழுக்கம் விலக்கல், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை, என்ற ஒன்பதனுள்ளடக்கிவிட்டார். இவைகள் எல்லாம் மனதை இந்திரிய வழிச்சென்று விஷயங்களில் உழலவொட்டாது தடுத்து தன் உண்மை உருவமாகும்படி செய்யும் திறனுடையன. இந்த ஒன்பது விரதங்களையும் கிருஷ்ண பரமாத்மா யஞ்ஞ தானம் தபஸ் ஆகிய மூன்றுள்ளடக்கி, காப்பது விரதம் என்னும் ஸூத்திரத்தின் கருத்தை 'இம்மூன்று கர்மங்களையும் விடாமல் அனுஷ்டிக்க வேண்டியது: இவை மூன்றும் மனிதனை சுத்தப்படுத்துவன. இவைகள் விஷயமான துறவு என்பதற்கு, இவைகளுக்கு வேதங்களில் எடுத்துக் காட்டப்படும் பலன்களில் இச்சைவிட்டு, நாம் இவைகளைச் செய்து புனிதனாகிறோம் என்ற பற்றையும் விட்டுவிடுவது தான். ஈசாஞ்ஞைக்கு உட்பட்டு நடக்கிறோம், இவைகளை அனுஷ்டிப்பதில், என்று இவைகளைச் செய்தே தீரவேண்டும். இப்படிச் செய்து வந்தால் ஸுகம், துக்கம் கலப்பு ஆகிய இந்த ரூபமான எந்தக் கர்மபலன் வந்தபோதிலும் மனிதர் மனம் சலிக்காது ஒரு படித்தாயிருக்கும்படியான சாந்தி தானே வந்து அவரை உத்தம அதிகாரிகளாக்கும்' என்று விஸ்தரித்திருக்கிறார். ஆகவே விரதங்களை எப்பொழுதும் மனப்பூர்வமாக மறந்துவிடவே கூடாது. நமது தேஹ உணர்ச்சி முதலியன இருக்கும்வரையில் இவைகளைமிகுந்த ச்ரத்தையுடன் அனுஷ்டித்தே தீர்க்கவேண்டும். இதனால் ஒரு கெடுதியும் ஏற்படாது. விட்டால் பெரும் பாபம் தான் ஏற்படும். வெளி யுணர்ச்சி நீங்கி இருக்கும் ஆற்றல் ஏற்பட்டு விட்டாலும் மனிதனாக அவைகளை விடுகிறான் என்ற வ்யவஹாரத்திற்கும் இடமேயில்லை. தூங்குகிறவன் கை புஷ்பம் போல அவை தாமே நழுவிவிடும். ஆகவே விரதங்கள் காக்கப்பட வேண்டியவை : அவைகள் தாமே நழுவவேண்டுமே ஒழிய நாமாக நழுவ விடக்கூடாது என்பதே இந்த ஸூத்திரத்தின் இரண்டாவது பொருள். ஜடபரதர், சுகர் வாமதேவர் முதலியவரிஷ்ட பதம் பெற்ற (ஸமாதியில் மூழ்கியிருக்கும் திறனுடைய) ஜீவன் முக்தர்கள், விரதங்கள் நழுவிவிட தனிப்பதற்கும் மற்றைய ஜீவன் முக்தர்களாகிய கிருஷ்ணர், ஜனகர், யாஞ்ஞவல்கயர் முதலியோர் தமது அனுஷ்டானங்களைவிடாது நிற்பதற்கும், தகுந்த உதாரணங்கள்.—

**(3) மனிதனை நழுவாது காப்பது விரதமேயாம்:**—என் விரதங்களை விடாது அனுஷ்டிக்க வேண்டும் என்ற கேள்விக்கு விடைரூபமாக உள்ளது இந்தஸூத்திரம் என்றும் கொள்ளலாம். மனம் சுத்தப்பட்டு வருகையில் கீழ்நிலைகளுக்கு மனத்தை நழுவ விடாது தடுப்பன விரதங்கள் என்று இந்தஸூத்திரம் பொருள்பட்டு, அவைகளை விடாமலிருப்பதன் காரணத்தை விளக்குகின்றது. பொதுவாக விரதங்கள் எல்லாம் ஜீவன் முக்தரான பெரியோர்களிடம் இயற்கையாக அமைந்துள்ள பெருங் குணங்களே. தாழ்ந்த நிலையிலுள்ள நாம் அவைகளை நம்மேல் ஏற்றிக்கொண்டு அனுஷ்டித்து நமது இயற்கையாக்கிக் கொள்ள முயலுவதே விரதங்கள் எனப்படும். இந்த முயற்சியால் மனது மெதுவாக சுத்தமாகிக் கொண்டு வருவதோடும், கீழ்நிலைக்கப்போகும் மனதின் கொடுமையும் தடுக்கப்பட்டே வரும். இதனால் விரதமொன்றே மனத்தூய்மையாகிய பயிருக்கு வளர்க்கும் ஆற்றலால் எருபோலவும், காக்கும் தன்மையால் வேலிபோலவும் ஆகிறது. முதல் முதலில் விரதத்தின் வேலித்தன்மை விளங்கித்தான், பின்னர் அப்பியாஸ பலத்தால் அதன் எருத்தன்மை நன்கு வெளியாகும்.

ஆதலால் இந்த ஸூத்திரம் அந்த வேலித்தன்மையைத்தான் வற்புறுத்துகிறது. விரதங்களை அனுஷ்டித்து வருங்கால் நமது மனதில் கிளம்பும் துர்வாஸனைகள் வெளியாகாமல் போகா. ஆனால் விரதானுஷ்டான பலத்தால் முதலில் துர்வாஸனைகளோடு கூடவே அதற்குமாறான ஸுவாஸனைகளும் கிளைத்து விடும்: இதனால் மனம் இரண்டுபட்டு நிற்க விவேகம் வேலைசெய்ய மனதில் இடம் ஏற்படும். இதனால் துர்வாஸனை கிளம்பியதும் அதன்படி ஒழுகுவது தடைபடும். விரதானுஷ்டானம் பலத்து ஸுவாஸனை ப்ரவிருத்தி அதிகப்பட்டு, கிளம்பும் துர்வாஸனைகள் தகையப்படும்: தொழிற்பட இடம் ஏற்படாமல் போய்விட அவைகள் பட்டினி போட்டு மாய்க்கப்படும். ஆகவே முதலில் துர்வாஸனைத் தடையும், பின்னர் துர்வாஸனாக்ஷயமும் ஏற்படுத்துவது தான் விரதத்தின் ஆற்றல். மனம் நன்றாக சாந்தப்பட்டு ஸுகாகாரமாக விருப்பதற்கு சாஸ்திரங்களில் மூன்றுவிரதம் ஏற்படுத்தப்பட்டுள்ளன: அவையாவன மகாகர்த்த, மகாபோகி, மகாத்யாகி விரதங்களே. இவைகள் மூன்றும் ஜீவன் முக்தரிடமிருப்பினும் சிலரிடம் ஒரு விரதமே ஓங்கி நிற்கும். அதன்படி ஜனக கிருஷ்ணர் யாஞ்ஞவல்கயர், மஹாகர்த்தர்கள்: கிருஷ்ணர், துர்வாஸர் மஹாபோகிகள்: சுகர், வாமதேவர் மஹாத்யாகிகள். காந்தச்சிலைமுன் ஊசிகள் அசைந்தாடுவது போல உலகமெல்லாம், ஸூர்யன் போல எல்லாமனோ வ்யாபார ஸாக்ஷியாகிய, என்முன் சேஷ்டிக்கின்றன என்ற எண்ணம் மாறாது ஸத்கர்மங்களில் இயற்கையாக ப்ரவிருத்திப்பது மஹாகர்த்தன் லக்ஷணம். கிடைத்த சாஸ்திரீய விஷயானுபவங்களின் ஏற்றத்தாழ்வைக் கவனியாது பொறுமையுடன் காட்டுத் தீப் போல நுகருபவன் மஹாபோகி. சிறிது பெரிது தனது பிறரது முதலிய த்வந்த்வ விஷயங்களில் பழக சாஸ்திரீயமாக ஏற்படுங்கால் பூவின் வர்ணம் காட்டும் ஸ்படிகம்போல மாசற்றமனத்துடனிருப்பது மஹாத்யாகி லக்ஷணம். இவ்வாறு கூறிவந்த கைவல்லிய நூலாசிரியர் இம்மூன்று விரதங்களை ஸமமாக அனுஷ்டிப்பவரே மோக்ஷத்தை எட்டிப்பிடிக்கும் ஆற்றலுடையவராவர் என்று கூறி, கிட்டும் மோக்ஷத்தில் நழுவுதலின்றி நிலைபொருத்துவது இவ்விரதங்களே என்ற இந்த காப்பது விரதம் என்ற ஸூத்திரத்தின் உட்பொருளை நன்கு விளக்குகிறார்.

---

# மொழிபெயர்ப்பு விளக்கம்

## TRANSLATION MODELS

### The Nature of Hindus

A long time ago there lived in the Country of the Brahmins a man named Indur, who was distinguished, not only for that gentleness of disposition and humanity towards all living creatures, which are so much cultivated among those people, but for a great curiosity respecting the nature and way of life of all animals. In pursuit of knowledge of this kind he would frequently spend the night among lonely rocks, or in the midst of thick forests, and there under the shelter of some hanging cliff; or mounted upon a high tree, he would watch the motions and actions of all the animals that seek their prey in the night; and remaining in the spot till the break of day, he would observe this tribe of creatures retiring to their dens, and others coming forth to enjoy the beams of the rising sun. On these occasions, if he saw any opportunity of exercising his benevolence towards animals in distress, he never failed to make use of it; and many times rescued the small birds from the pitiless hawk, and the lamb or kid from the gripe of the wolf and lynx.

### ஹிந்துக்கள் இயற்கை

வெகுகாலத்திற்கு முன்னர் ப்ராஹ்மணர்வாழும் நாட்டில் இந்தூர் என்றபெயருள்ள ஒருவனிருந்தான். அந்த ஜாதியார்களுள் மிக அதிகமாக விருத்தி பண்ணிவந்த மனக்கனிவு ஜீவகாருண்யம் ஆகிய இவைகள் இவனிடம் நன்றாக அமைந்திருந்ததோடுங் கூட, எல்லா ப்ராணிகளின் இயற்கை, பழக்கம், ஆகிய இவைகளைக் கண்டறியவேண்டும் என்ற அடங்கா ஆவலும் குடிகொண்டிருந்தது. இந்த அறிவைப் பெறத்தேடிச் செல்லுங்கால், ஒருவரும் அணுகாப் பாறைகளிலும்; அடர்ந்த காடுகளுக் கிடையிலும் அடிக்கடி இவன் சில இரவு முழுதும் கழித்துவருவான்.

இவ்விடங்களில் தழைந்த பாறைகளின் மறைவிலாவது, உயர்ந்த மரங்களின் மேலாவது இருந்துக்கொண்டு, இரவில் இரை தேடிவரும் ஜந்துக்களது போக்குகளையும் செய்கைகளையும் உற்று நோக்குவான்; அவ்விடத்திலேயே பொழுது புலரும் வரையில் இருந்து, இவ்வினத்திய ஜந்துக்கள் தமது குகைகளுள் மறைவதையும், வேறினத்தவைகள், கிளம்பும் ஸூர்யன் ஒளியால்களிக்க, வெளியேறுவதையும் கண்ணுற்றுநிற்பன். இந்தக் காலங்களில், திண்டாடும் ஜந்துக்கள் விஷயமாகத் தனது ஜீவகாருண்யத்தை வெளிக்காட்டும் தருணம் வாய்த்தால், அவைகளை இவன் உபயோகப்படுத்தாது வீண் போக்குவதில்லை. அநேகம் தடவைகளில் ஈவு இரக்க மற்ற வல்லூறுகள் வாயிலிருந்து சிறு பறவைகளை தப்புவிப்பான். ஆட்டுக் குட்டிகளையும் ஓநாய் காட்டுப்பூனை இவைகள் பிடியிலிருந்து விடுவிப்பான்.



# சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S & LADIES' PAGES

### நல்ல வியாபாரம்

### Good Business

ஒரு குடியானவன் தனது பசுவைச் சந்தைக்குக் கொண்டு போய் ஏழு வராஹனுக்கு விற்று கையில் பணத்தை எண்ணிக்கொண்டு வந்தான். வரும் வழியில் அவன் ஒரு சிறு ஏரியைத் தாண்ட வேண்டி வந்தது. அவன் அவ்வேரிக்கு அருகாமையில் வந்து கொண்டிருக்கும்பொழுது மழைக்காலமானதால் ஏரியிலிருந்த தவளைகள் உள்ள மகிழ்ச்சியால் கத்திக் கொண்டிருந்தன. அவை இடைவிடாமல்,

"கறறற வரவெட் கறறற வரவெட்
வரவெட் வரவெட் வரவெட் வரவெட்
கறறற வரவெட் கறறற வரவெட்
வரவெட் வரவெட் வரவெட் வரவெட்"

என்று கத்திக்கொண்டிருந்தன. அந்த ஏரியண்டை வந்ததும் குடியானவன் தவளைகளை நோக்கி "முட்டாள்களா! உங்களுக்கென்ன புத்தி கித்திகிடையாதா என்ன? என்னிடம் வரவு ஏழுதான்; வரவேழுதான் வரவெட்டில்லை" என்றான்.

ஆனால் தவளைகள் அவன் மொழிகளைக் கவனிக்காமலே

"கறறற வரவெட் கறறற வரவெட்
வரவெட் வரவெட் வரவெட் வரவெட்
கறறற வரவெட் கறறற வரவெட்
வரவெட் வரவெட் வரவெட் வரவெட்"

என்று கத்திக்கொண்டிருந்தன.

இதைக்கண்ட குடியானவன் "உங்களுக்காக நானெப்படி எண்ணமுடியும்? அது முடியாது. ஒரு வேளை நான் சொல்வதை நம்பாவிட்டால் உங்களுக்காக எண்ணுகிறேன் கேளும்" என்று சொல்லிக்கொண்டு "ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு" என்று எண்ணினான். ஆனால் அந்த தவளைகள் அவன் எண்ணுவதை லக்ஷ்யஞ்செய்யாமலே,

"கறறற வரவெட் கறறற வரவெட்
வரவெட் வரவெட் வரவெட் வரவெட்
கறறற வரவெட் கறறற வரவெட்
வரவெட் வரவெட் வரவெட் வரவெட்"

என்று, மேலுஞ்சொல்லிக்கொண்டே இருந்தன. இதைக்கேட்டதும் குடியானவனுக்குக் கோபம்வந்து விட்டது. "மடையர்களா! எல்லாம் ஸம்பூர்ண வித்வான் போலக் கூச்சலிடுகிறீர்கள்? என்னைவிட உங்களுக்கு எண்ணத்திறமிருந்தால் நீங்கள் தான் எண்ணுங்களேன். பொய் ஏன் சொல்லுகிறீர்கள்?" என்று சொல்லிக்கொண்டு கையிலிருந்த பணத்தை எல்லாம் ஏரியில் வீசி எறிந்தான். பின் அங்கு சற்று நேரம் நின்றுகொண்டிருந்தான்; தன் பணத்தைத் தவளைகள் எண்ணிய பிறகு கையிற் கொண்டுவந்து கொடுக்கும் என்றுகாத்துக்கொண்டிருந்தான். ஆனால் தவளைகள் அபிப்ராயத்தை மாற்றாமல்,

"கறறற வரவெட் கறறற வரவெட்
வரவெட் வரவெட் வரவெட் வரவெட்
கறறற வரவெட் கறறற வரவெட்
வரவெட் வரவெட் வரவெட் வரவெட்"

என்று மேலுஞ்சொல்ல ஆரம்பித்தன. பணத்தை யாவது திருப்பிக்கொடுத்தனவா? அதுவுமில்லை. குடியானவன் நெடுநேரங் காத்தான். ஸூர்யாஸ்தமன வேளை நெருங்கிவிட்டது. என்ன செய்வான்? வெறுங்கையை வீசிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினான். மண்டூகங்கள்! பெருமண்டைப்பேகங்கள்! தொண்டை கிழித்துக்கொள்ளும் முட்டைக்கண் தேரைகள்!—கோட்டு வாயைக் கிழித்துக்கொண்டு தொண்டைத்தண்ணீ வற்றக் கூக்குரலிட்டு போவார் வருவார் காதை ஓட்டை செய்வதென்றால் வெகு கெட்டிக்கார ஆசாமிகள். ஒன்று இரண்டு என்று ஏழுவரையும் எண்ணத்தெரியுமா உங்களுக்கு? மௌட்யசிகாமணிகள்! கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுக்கத் தெரியாத மூட்டாள்களா! நான் உங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டு காதடைக்கப் பட்டினியாக இங்கு வற்றல் போல் இருப்பேன் என்று நினைத்தீர்களா?" என்று சொல்லிக்கொண்டவன் வீட்டிற்குப் புறப்பட்டான். அப்பொழுதாவது அந்தத் தவளைகள் சும்மா இருக்கலாகாதா? மேலும்,

"கறறற வரவெட் கறறற வரவெட்
வரவெட் வரவெட் வரவெட் வரவெட்
கறறற வரவெட் கறறற வரவெட்
வரவெட் வரவெட் வரவெட் வரவெட்"

என்றவை பயப்படாமல் சித்தாந்தஞ் செய்துகொண்டிருந்தன. குடியானவன் கோவப்பழஞ் சாப்பிட்டு எள்ளுங்கொள்ளும் வெடித்துக்கொண்டு தன் வீட்டிற்குப்போனான்.

மற்றொரு முறையவன் சந்தைக்கு வர எண்ணினான். இந்த முறையவன் கிழ மாட்டொன்றைக் கொன்றதன் மாமிசத்தை விற்க எடுத்து வந்தான். அவனோடு நாய்க் கூட்டங்களும் தொடர்ந்து ஒன்றன் முன் ஒன்றாக முந்திமுந்தி ஓடி வந்து கொண்டிருந்தன.

அவ்வளவோடு அவை நிற்கவில்லை. ஒன்றோடொன்று செய்த லல்லாபத்தில் குடியானவனைக்

சுற்றிக்கொண்டு ஸுகம் விசாரித்துக்கொண்டிருந்தன. அவன் கையில் வைத்திருந்தது என்னவென்று நாக்கை நீட்டிக்கொண்டவை,

“ ளொளொள்ள் ளொள்ள் ளொள்ள்
கொள்கொள் ழொழ்ழொள் ழொழ்கொள்கொள் [கொள்
ளொளொள்ள் ழொழொ ழொளொள்ள்
ழொழ்கொள் ழொழ்கொள் கொள்கொள் கொள் [கொள்
—(ளொளொள்ள்)”

என்றுகொண்டவை வாலைக் குழைத்துக்கொண்டு கேட்டன.

குடியானவனுக்கு அந்நாய்பாஷை நன்றாய் தெரியவில்லை; ஆனால் ஒருவாறு அவற்றின் எண்ணத்தை அறிந்து “ எனக்கிப்பொழுதுதான் தெரிந்தது. நீங்கள் ‘ கொள் ! கொள் !’ என்றது ஸரிதான் உங்களுக்கிதைக்கொள்ள வேண்டுமென்றாசையிருக்கிறது. கொள்ளுங்கள்; உங்களுக்கிட்டால் எனக்கு நிரம்ப ஸந்தோஷந்தான் ” என்றவன் பதில் சொன்னான்.

நாய்கூட்டமுழுதும் அப்பொழுது “ளொளொள்ள்” பல்லவியைக் கனமாக ஸ்வரபேதப் படுத்தி சீக்ரகதியிற்பாடலான.

குடியானவன் “கொள்ளுங்கள்; நீங்கள் வஞ்சனை செய்யமாட்டீர்கள் என்று எனக்குத்தெரியும். மற்றவர்களைஎல்லாரையும் ஸரியாய் நீபார்த்துக்கொள்வாய் எனக்குத் தெரியும் ” என்று அக்கூட்டத்துள் மிகக் கிழ நாயைப்பார்த்துச் சொன்னான், அதுவும்

“ளொளொள்ள் ழொழொ ழொளொள்ள்
ழொழ்கொள் ழொழ்கொள் கொள்கொள்
கொள்கொள்”

என்று பதில் சொல்லியது.

“ உங்களுக்குக் கொள்ளவேண்டுமென்றிருந்தால் கொள்ளுங்கள். நீ யாரிடம் வேலை செய்கிறாயென்பது எனக்கு நன்றாகத்தெரியும். எடுத்துக்கொள்ளும்; ஆனால் என் பணத்தை மாத்திரம் வாங்கி என்னிடம் சேர்ப்பித்துவிடும். என் வீட்டிற்கு நீங்கள் கொண்டு வந்து கொடுத்தாற் போதும்” என்று குடியானவன் சொல்லி பணத்திற்கு மூன்று நாள் தவணை வைத்தான். பின் தான்கொண்டு வந்த மூட்டையை அவிழ்த்து நாய்கள் முன் அதிலிருந்த ஸாமானை எடுத்து வைத்தான், அவைகளுந் தங்கள் பல்லவியைப் பாடிக்கொண்டு விருந்துண்ண ஆரம்பித்தன. அதைக் கண்ட குடியானவன் “இப்பொழுது உங்களுக்கெல்லாம் கொள்ளவேண்டுமென்று ஆசை இருக்கிறது. அதனால் தான் முந்திக்கொள்கிறீர்கள். யார் கொண்டால் என்ன? கிழ நாய்தான் பணத்துக் குத்தரவாதம்” என்று சொல்லிவிட்டு வெகு ஸந்தோஷத்துடன் வீடு சென்றான்.

மூன்று நாளுங்கடந்தது. இனித்தான் பையெல்லாம் பணங்குலுங்கும் என்று எண்ணிக்கொண்டிருந்தான். ஆனால் யாரும் அவனுக்குப்பணம் கொண்டு வந்து கொடுக்கவில்லை, “இந்தக் கலிகாலத்தில் யாரையும் நம்பக்கூடாது” என்று சொல்லிக்கொண்டவன் சந்தைக்குப் புறப்பட்டான். எத்தனையோ நாழியங்கு பணம் வரும் என்று நின்றுகொண்டிருந்தான். யார் கொண்டுவந்து கொடுப்பார்? அவன் பொறுமை எல்லாம் பறந்தோடிவிட்டது. நாய்களோ அவன் கண் முன் ஒன்றாவது கிடையாது. கடையில் கிழநாயின் தலைவனாகிய கசாப்புக் கடைக்காரனைத் பணத்தைக் கொடுக்கும்படிக் கேட்டான். அவன் “பணமா? எது?” என்று கேட்டான். “ஏன்? உமது நாய் அன்று இறைச்சித்துண்டமுழுதும் பெற்றும்மிடம் வந்ததே மூன்று நாளைக்கு முன் நடந்ததை அதற்குள் மறந்து விட்டீர்களோ. பணத்தைக்கொடும் என்றால் என்னவென்னவோ சொல்லுகிறீரே” என்று குடியானவன் சொன்னான். கசாப்புக்காரன் “என்ன இங்கு வேடிக்கை செய்ய வந்தீரா என்ன ? பகல் வேஷமோ? ” என்று கேட்டான். குடியானவன் மேலுங்கோபங்கொண்டு பேசினான். கசாப்புக்காரன் கோவப்பழஞ்சாப்பிட்டு கையிலிருந்த துடைப்பக்கட்டால் குடியானவன் உடம்பில் இரத்தந் தெரிக்கத் தடவிக்கொடுத்தான்.

குடியானவன் குய்யோ முறையோ என்று கூவிக்கொண்டு “இது என்ன அநீதி ! நிதானியும் ! உலகத்தில் நியாயம் என்று ஒன்றுண்டு; உமக்கு நல்ல பூஜை செய்விக்கிறேன்” என்று சொல்லிக்கொண்டு அரசன் அரண்மனையின் முன் கட்டில் காட்டியிருந்த அரசாட்சி மணியை ஓயாமலடித்தான்.

ஓசையைக்கேட்ட அரசன் அலறிவிழுந்து குடியானவனை உள்ளே வரவழைத்து “என்ன ஸமாசாரம்?” என்று கேட்டான். குடியானவனும் ஒன்று மொளிக்காமல் ஆதியோடந்தமாகநடந்ததைச் சொன்னான். இதைக்கேட்ட அரசன் மகள் இடியிடி என்று சிரித்தாள். அவன் மறுபடியும் “தவளைகள் என் சொத்தைக்கொள்ளை கொண்டன; நாய்கள் என் ஆஸ்தியை நடுத்தெருவிலிழுத்து நாசஞ் செய்தன; கசாப்புக்காரன் கொடுக்கவேண்டிய பணத்தைத் துடைப்பக்கட்டையைக் கொண்டு என் முதுகு தழும்பேற அளந்து கொட்டிக்கொடுத்து விட்டான்” என்று மனு செய்தான். இதைக் கேட்கக் கேட்க அரசன் மகள் இடியிடி என்றோயாமல் சிரித்தாள்; வரவர விக்கிவிக்கியவள் சிரிப்பதைக் கண்ட அரசன் குடியானவனைப்பார்த்து “அது எல்லாம் அவ்வளவு ஸரியாகத்தோன்ற வில்லை. அது போகட்டும். உனக்கென் மகளைக்கொடுத்துக் கல்யாணம் செய்விக்கிறேன்; செய்துகொள். அவள் இதுவரையுஞ் சிரித்ததேகிடையாது. அவளைச் சிரிக்கச் செய்பவர்க்கவளைக் கல்யாணஞ் செய்விக்கப் பிரதிக்ஞைசெய்திருந்தேன். ஆகையால் வலியவந்த ஸ்ரீதேவியை வேண்டாமென்று



கள்ளாதே. இவளையுன் மனைவியாக்கிக்கொள்” என்று சொன்னான்.

அதைக்கேட்டதுங் குடியானவன் “ மனைவியா ? எனக்கு வேண்டாமையா! உங்களுக்குக் கோடி நமஸ்காரம். அதை மாத்திரம் சொல்லாதிரும். எனக்கு ஒரு மனைவி இருக்கிறாள். அவள் ஒருத்தியே இந்த உலகத்திற்கெல்லாம் போதும், மனைவியா? வீட்டிற்குப் போனால் எந்த மூலையிற்பார்த்தாலும் அவள் இருப்பதாகவே நான் நினைத்துக்கொள்ளுகிறேன்” என்றான். அரசனுக்குக் கோபம் வந்து விட்டது “ என்னடா! நீ வெறு மூர்க்கனாக இருக்கிறாய்?” என்று கேட்டான்.

‘ஐயா ஸமுத்திர நீர் உப்பில்லாமல் எப்படி இருக்க முடியும் ? நான் மனிதன் தானே.”

“ இரு ; இரு—உனக்குத் தகுந்த மரியாதை செய்விக்கிறேன். இன்றைக்கு மூன்று நாள் இங்குவா. உனக்கு ஐந்நூறு எண்ணித்தரச் செய்கிறேன்” என்றரசன் சொன்னான்.

குடியானவன் வீட்டிற்குப்போக அரண்மனை வாசற்படியில் வரும்போது வாயிற்காப்போன் “ அரசன் மகளைச் சிரிக்கச் செய்தாயே ; உனக்கு நல்ல பஹுமானஞ் செய்திருப்பார் ராஜா என்று எண்ணுகிறேன்” என்றான்.

“நீ சொன்னது ஸரி; நிரம்பஸரி. எனக்கு ஐந்நூறு எண்ணிக் கொடுப்பதாகச் சொன்னார்.”

“அப்படியா? நீ எல்லாப் பணத்தையுங்கொண்டு போய் என்ன ஊறுகாயாபோடப் போகிறாய்? எனக்குக் கொஞ்சங் கொடுக்கக்கூடாதா?”

“ஆஹா! உனக்கில்லாமலா ? நீ நல்லவன் ; உனக்கிருநூறு தரச்செய்கிறேன், இன்றைக்கு மூன்றா நாள் வருவேன். அப்போதென்னோடு வா.”

இந்தப் பித்துக்குளிக் குடியானவன் பேசியதைக் கேட்டிருந்த மார்வாடி ஒருவன் அவனண்டை ஓடி வந்து அவன் கையைப்பிடித்துக்கொண்டு “ஹா ! என்ன அத்ருஷ்டசாலியப்பா நீ. நான் உனக்கந்தப் பணத்திற்குச் சில்லரை தருகிறேன். அத்தனை வராஹனையும் வைத்துக்கொண்டு நீ எங்கு கொட்டிக் கொள்ளப்போகிறாய்?” என்று கேட்டான்.

“என் ஐயா ? உமக்கு நான் முந்நூறையுந் தருகிறேன் ; இப்பொழுது ஏதாவது கொஞ்சம் பணந் தாரும். உமக்கு இன்றைக்கு மூன்றாம் நாள் தருகிறேன்”

இதைக்கேட்டதும் மார்வாடிக்கு வெகு கொண்டாட்டம். அவன் செல்லாக்காசு இரண்டைக் குடியானவன் கையில் கொடுத்துவிட்டு “ இன்றைக்கு மூன்றா நாள் வருகிறேன்” என்றான். “ ஆஹா ! அப்படியே செய்யும், தயவுசெய்து ராஜ அரண்மனைக்கு வாரும். அங்கேயே வாங்கிக் கொள்ளலாம்” என்று குடியானவன் உத்தரவு செய்தான்.

மூன்று நாள் கடந்ததும் குடியானவன் ராஜ ஆணையைத் தலைமேற்கொண்டு ராஜ சபைக்குவந்தான். வந்ததும் அரசன் “ அவன் மேல் அங்கவஸ்திரத்தை எடும் ; அவனுக்குக் கொடுக்கவேண்டிய ஐந்நூற்றைக் கொடுக்கலாம் ” என்றான்.

“இல்லை எனக்கவை சொந்தமல்ல. இருநூற்றைக் காவற் காரனுக்குத் தத்தஞ் செய்தேன். பாக்கி மூந்நூறை மார்வாடிக்குத் தானம் செய்து விட்டேன். சொந்தக்காரர்கள் அதோ வந்திருக்கிறார்கள் ; தயவு செய்து அவர்க்குக்கொடும். என் முழுமனத்தோடு அவர்க்குக் கொடுத்துவிட்டேன். அவர்தான் சொந்தக்காரர்கள். எனக்கதில் ஒன்றும் வேண்டாம்” என்று குடியானவன் பதில்சொன்னான்.

இதற்குள் காவற்காரனும் மார்வாடியும் தமக்குக் கொடுக்க வேண்டியதைக் கேட்டார்கள். குடியானவனுக் கென்றேற்பட்ட அடிகள் அவர்க்கு பங்கு போல் கொடுக்கப்பட்டன. காவற்காரன் பொறுமையாக அடிகளைப் பட்டுக்கொண்டான். மார்வாடி மாத்திரம் “ஐயையோ! ஐயையோ! இதுதானா கெட்டிவாராஹன்கள்” என்று கூவிக்கொண்டேயிருந்தான்.

இந்த வேடிக்கையைப் பார்க்க அரசனுக்குச் சிரிப்புண்டாகி விட்டது ; குடியானவனிடமிருந்த கோபமும் போய்விட்டது. குடியானவனைப் பார்த்து “உனக்கு வந்ததை எல்லாம் வருவதற்கு முன்னமே செலவு செய்து விட்டபடியால் நீ சும்மா வெறுங்கையனாகப்போக எனக்கு மனமிசையவில்லை. என்னுடைய கஜானாவில்போய் உனக்கெவ்வளவு பணம் வேண்டுமோ அவ்வளவெடுத்துக்கொள் ” என்றுத்தரவிட்டான்.

இதற்குக் குடியானவன் “முடியாது” என்று பதில் சொல்லவில்லை. தன்னால் தூக்க முடியுமான அளவுக்குமேலும் பணத்தை முடிந்துகொண்டவன் கள்ளுக்கடையை அடைந்து பணத்தை எண்ணலானான். அதைப் பின்னாலே பார்த்துக்கொண்டிருந்த மார்வாடி பொறாமை கொண்டு “ ஆ! அந்தப் பொல்லாத ராஜன் என்னை ஏய்த்துவிட்டான். எனக்கவன் பணத்தைக் கொடுத்திருந்தால் அவன் குடி என்ன கெட்டுவிடுமோ ” என்று பின் மொணமொணத்தான்.

குடியானவனும் “ அந்தப் பாழாய்ப்போன ராஜன், என் தானே கொடுத்திருந்தால் ஸுகமாயிருந்திருக்குமே. இது ஸரியான பணமென்றறிந்தவன் கொடுத்திருப்பானே; என்னை அந்தப் போக்கிரிராஜா ஏமாற்றி விட்டானே” என்று சொல்லிக் கொண்டிருந்தான். இதைக் கேட்டதும் வானத்தை வில்லாய்த் திரிக்கும் மார்வாடி எண்ணினான் ; “ இவன் நமது அரசனை நிந்திக்கிறான். இவன்மேல் கோள்சொல்லி இப்பொழுது பணஞ் சம்பாதிக்கிறேன். இவனை அடிக்காளாக்குகிறேன்” என்று சொல்லிக்கொண்டு, அரசனிடம் என்ன “குடியானவன், கண்டதும் போனதும் வாயில் வந்தபடியெல்லாஞ் சொன்னான்.”

அரசன் "குடியானவனை அழைத்துவா" என்று மார்வாடிக்குக் குத்தரவிட்டான். மார்வாடி குடியானவனிடம் ஓடிவந்து "வாரும் ஐயா, வாரும்; நேராக இப்படியே வாரும்; அரசனிடம் வாரும்" என்று கையைப் பிடித்திழுத்தான்.

"இருமையா! என் வேலை எனக்குத் தெரியாதா? இவ்வளவு பணத்தைவைத்துக்கொண்டு ஒரு நல்ல உடுப்பில்லாமல் இருக்கமுடியுமா? இந்த வேஷத்துடன் அரசன்முன்வந்தால்தான் நன்ருயிருக்குமா?" என்று குடியானவனை மறுத்தான்.

குடியானவன் பிடிவாதத்துடன் இருப்பதாக மார்வாடிக்குப்பட்டது. என்ன செய்வான்? எங்குத் தனக்கு வரக்கூடிய பஹுமானம் போய்விடுமோ என்று கவலை கொண்டான். மேலும் ஆலஸ்யஞ்செய்தால் குடியானவனுக்குத் தண்டனையில்லாமற்போய் விடுமோ என்று எண்ணி "உடுப்பிற்காக என் அலைகிறீர்? உமது நேசன் நானிருக்க உமக்கென்ன குறைச்சல்? எனக்குமிடம் அன்பில்லையா? மனுஷனுக்கு மனுஷனுடன் வாழ்வதென்ருல் ஒருவருக்கு ஒருவர் உதவாமலிருக்க முடியுமா? உமக்கு நான் ஒரு நல்ல உடுப்புதருகிறேன், காரியமானதும்என்னிடம் கொடுத்துவிடும்" என்று குடியாவனிடஞ் சொன்ஞன். அவனுந் தடை செய்யாமல் உடுப்பை வாங்கியணிந்து கொண்டு ராஜசபைக்கு மார்வாடியுடன் போஞன்.

ராஜசபையை அடைந்ததும் அரசன் மார்வாடி சொல்லியவிஷயங்களை எல்லாஞ் சொல்லி குடியானவனைக் கோபித்துக் கொண்டான்.

"அப்படி சொல்லாதிரும்; சொல்லாதிரும்; தர்மாவதாரமே! இந்த மார்வாடி சொல்வதெல்லாம் கட்டுக்கதை; பொய்; பித்தலாட்டம். அவன் சொன்னதில் மருந்துக்கும் மெய் கிடையாது. அவன் வாயில் ஒரு நாளாவது மெய் பிறந்ததே கிடையாது. இப்பொழுதே நீங்கள் காணலாம். நான் போட்டுக்கொண்டிருக்கும் இந்த உடுப்பு தனதென்று கூட அவன் சாதிப்பான். அவன் எதுவேண்டுமென்ருலுஞ் செய்வான்" என்று குடியானவன் தன்கட்சியைப் பேசிஞன்.

"என்ன சொல்லுகிருய்? அந்த உடுப்பென்னதல்லவா? நான் உனக்கு அதைக் கடன் கொடுக்கவில்லை? இங்கு நீ அணிந்து வாவென்று நான்கொடுக்கவில்லையா? ஹா!" என்று மார்வாடி தொண்டைகிழித்துக்கொண்டு கூவிஞன்.

இதைக்கேட்டதும் அரசன் "இந்த மார்வாடிநிச்சயமாகவே நம்மில் ஒருவரை வஞ்சித்திருக்கிருன். உன்னையோ, அல்லது என்னையோ—அது எப்படியிருந்தால் என்ன?" என்றுசொல்லி மார்வாடிக்கு முன்னடைந்த கெட்டிவாஹன்களை மறுபடியும்அவன்முதுகில் அளக்கும்படி உத்தரவிட்டான். குடியானவன் தான் இந்தமுறை செய்த வியாபாரத்தில் நஷ்டமில்லை என்று எண்ணிக்கொண்டு வீட்டை யடைந்தான்.

## ராஜப்பிரதிநிதியவர்களின் சென்னை விஜயம்

## H. E. THE VICETROY AT MADRAS

இந்த நவம்பர்மாதம் 24-ம் தேதி, சென்னை வாசிகளால் மறவாதினமாக என்றைக்கும் இருக்கும். கனம் பத்னி ஸமேதராய் ஸ்ரீகனம் பொருந்திய வைசிராய் அவர்கள் அன்று மாலை 12-30 மணிக்கு எல்லாருந்தெய்விகங்கொண்டாடும்படியாக சென்னையுள் பிரவேசஞ்செய்தார். அவர் வரவு பொது ஜனங்களால் தெய்விகமாகவே கொண்டாடப்படும், அவரது மஹத்வத்தை பிரக்ருதியும் கொண்டாடியது போல, வருவதற்கு சற்றுமுன் மேகங்கவிந்துயாவரும் எதிர்பாராதபடி பெருமாணந்த மாரி பெய்தது, வந்து இறங்கியதும் மழைதணிந்ததில்லாமல் மேகமுழுதும் விலகி சூரியகிரணங்களை எங்கும் பரப்பி விளங்கியது. மேலும் வைசிராய் அவர்கள் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து பாங்க்வெடிங்ஹாலை அடைந்ததும் பெருமழை மறுபடியும் பெய்ய வாரம்பித்தது. இந்த மாதிரி இருந்தாற்போல பெருமழை, மஹான்கள் வருமுன்னே தாம் வருமென்று இந்தியரது கொள்கை. அது சித்தாந்தப்படுத்தக்கூடிய விஷயமாக இல்லாவிடினும் உண்மையான களங்கமற்ற ஹிருதயமும் மஹிமையுமுடையவர் வருவதைக்காட்டும் நல்ல சகுனமாக நமது ஜனங்களால் கொண்டாடப்படுகின்றது: அது அநுபவத்தில் வந்தது ஹார்டிஞ் பிரபு அவர்களிடம் ஜனங்கொண்ட அன்பையும் அவர் ஜனங்களிடங்கொண்ட ஆசைப்பெருக்கையுந் தெரிவிக்குமென்று வழியே போகுங் கூலிக்காரர் முதல் மோடார் வண்டியிற்செல்லும் பிரபுக்களுங்கூறுவார்கள். எப்படியிருப்பினும்அந்த ஸம்பவம் ஜனங்கள் வைசிராய் அவர்களிடங்கொண்ட அன்பை விருத்திசெய்தவரைக்கொண்டாடச்செய்யும் என்பதற்கு ஸந்தேஹமே கிடையாது.

இத்தெய்விகத்துடன்வந்த பிரபு அவர்கள்திருவாங்கூர் முதலிய அரசர்களுக்கு பேட்டிகொடுத்தும்அவர்களிடம்மறு பேட்டியு மடைந்தார்கள், இது முதலிய வழக்கங்கள் ராஜஸம்பந்தமானவை; அவை செவ்வனே நடந்தன, மேலும் இங்கிருந்த இரண்டு மூன்று நாட்களுள் எவ்வளவு சென்னையைப்பற்றி அறியவேண்டுமோ அவ்வளவுஞ் செய்தார். ஹாரபரைப் பார்க்கப்போய்த் திரும்பிவரும் வழியில் ரயில் வருதலால் ரயில் கேட் மூடப்பட்டபடியால் அவர் உடனே மோடார் வண்டியைத் திருப்பி, ஏற்பட்ட வழியில்லாமல் பக்கத்து சாலை வழியாக மோடார்வண்டியை விட்டபொழுது போலிஸாரது கட்டுக்கடங்காமல் ஜனங்கள் தம்மைத்தரிசிக்கும்படியான நிலையை ஏற்படுத்திக்கொண்டதன்றி, போலீஸார்கள் பயந்தபடி தமக்கு ஜனங்களிடம் அவநம்பிக்கை இல்லை என்பதைச்சித்தாந்தப்படுத்திஞர். கான்பூரில் ஜனங்களை



பார்த்து "நீங்கள் என் குழந்தைகள்" என்றுசொல்லியவரிடம் குலாவியவர் வேறெப்படி இருக்க முடியும்?

25-ம் தேதி சென்னை யூனிவர்ஸிடி லைப்ரரியின் அஸ்திவாரக்கல்லையிட்டபோது திராவிடபாஷையை விருத்தி செய்யும்படியாக நமது இந்தியரை யுற்சாகப்படுத்தியது மல்லாமல் தாம், என்றும் வித்யாவிஷயத்தில் வெகு சிரத்தையுடன் விளங்குவதைக் காட்டிக்கொண்டார், மற்றும் சென்னை முனிஸிபாலிடியின் ஆபீஸைத்திறந்தபோது சென்னை ஜனவாசிகளின் வரவேற்புக்குப் பதில்சொல்லியபோது "வைசிராயாய் வருபவர்கள் இச்சென்னைராஜதானியில் முகாம் செய்வதும் மிகவும் குறைச்சலான நாட்கள்; அதிலும் வருபவர்கள் தமது ஆட்சிக்காலத்தின் முடிவிலேயே பார்க்க நேருகின்றது, அது தகாது, அவர்கள் இனி இந்த இடத்தில் முதலிலேயே முகாங்கள் செய்து ஜனங்களின் நடை நொடிபாவனுவிஷயங்களை அறிய வேண்டிய தவச்யம்" என்று சொல்லி முனிசிபாலிடியார் கவர்ன்மெண்டார்க்கு வருஷந்தோறும் செலுத்த வேண்டியிருக்கும் 30000 ரூபாயை இனி கட்ட வேண்டியதில்லை என்று தான் ஆலோசித்துக்கொண்டிருப்பதாகவுந் தெரிவித்ததும் அவரது உண்மை ஸ்வபாவத்தையே வெளியிடுகிறது.

இவை எல்லாம் கிடக்க, தென் ஆப்பிரிக்காவில் நமது ஜனங்கள் படும் நாய்படாத பாட்டைப்பற்றி அவர்பேசிய மொழிகள் அவர் அன்று கான்பூரில் "நான் உமக்குத் தந்தை" என்று கூறிய மொழிகளை ஸ்தாபிக்கின்றன. தாம் அச்சனங்களின் கஷ்டங்களைத் தொலைக்க என்ன வென்ன செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்வதாயும், அது அவர் பொறுப்பென்றும் வற்புறுத்திக்கூறிஞர். அவரது ஒவ்வொருசெயலும் அவர் மனோகதியின்பெருமையையே காட்டுகின்றது, அவர் இருநாளிருந்தும் காணவேண்டிய தெல்லாம் தண்டலபதகியாயத்திலுணர்ந்து, தமது அநுபவ வழியால் நமது ஜனங்களின் நிலையை மேம்படுத்த முயற்சிப்பார் என்பதற்கு ஸந்தேஹமே கிடையாது. அவர் என்றும் ஸுகமாக தீர்காயுஸுடன் மேன் மேலோங்கி நமது அதிகாரியாயிருக்க ஈசன்திருவருள் புரியாதிருர் என்பது ஸத்தியம்.

---

உப்பின் குணம்.—வியாதியுடையவர்கள் தாமுண்ணுமுணவை உப்புக் குறைவாக விருக்க வுண்டால் வியாதி சீக்கிரமாக இலகுவாகும்; கரப்பான் கண்டு அவஸ்தைப்படுங் குழந்தைகளுக்கு உப்பை யுணவில் போடவேண்டிய அளவில் நாலிலொருபாகமாகப் போட்டு, உணவைக் கொடுத்துவந்தால் கரப்பான் வெகுசீக்கிரமாக இலகுவாய்விடும் என்று ஐரோப்பிய டாக்டர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இந்து வைத்தியர்கள் நாட்பட்டுத் தீராதநோயாளிகளுக்கு மருந்து கொடுக்கும்போது உப்பில்லாப் பத்தியம் வைப்பது உப்பின் குணத்தை யறிந்தேயாமென்று தெரிகின்றது.

# இராமாயண அகவல்

## RAMAYANA AGAVAL

(முன்மாதத் தொடர்ச்சி)

வனப்பின் மிக்க வனிதையின் தந்தை
கனமுடை யரயன் ஜனக னிடத்திருந்
தோலையா னத்தது ரிஷியிடத் துற்றது.
காலையிலெழுந்து மிதிலையைக் கிட்டினர்.

நோக்கினள் சீதையு மாடத்திருந்து
நோக்கின னிராமனும் சீதையென் மாதை,
இராமன் மனமது சீதையைச் சேர்ந்தது
இராமற் சேர்ந்தது சீதையின் மனமும்.
மன்னவர் குழாத்துள் மன்னவர் சபையுள்.

மன்மிகக் கொண்ட மூவரும் புக்கனர்.
இராமப் பெருமையை யிருடியுங் கூறினர்.
மராமரம் துளைத்த மன்னன் நோக்கினன்
சபையிடத் திருந்த சாபந் தன்னை.
சபையினர் கண்டார் இராமன் நோக்கம்.

எடுத்தான் கையில் எம்பிரான் வில்லைத்
தொடுக்குமுன் சரத்தை ஒடிந்தது சாபமும்.
சீதையும் களித்தாள் ஜனக னுடினுன்
தாதைக் கெழுதினர் மணத்தின் ஓலை,
தந்தையர் அன்னையர் வந்தனர் கடிதினில்

எந்தையு மணந்தான் சீதையை அன்னையை;
அன்னையின் தங்கையர் தம்பியர் மணந்தார்,
மண்ணுளோர் களித்தனர்; மங்கைய ராடினர்;
தேவர் ஆர்த்தனர் துந்துமி முழங்கிய
காவலர் களித்தனர் அரக்கரும் அலறினர்;

இராவணன் பெருமை மிகவே குன்றிய
பராபர மன்னன் மணத்தின் அமயம்,
மணத்தின் மக்களும் மற்றுளோர் யாவரும்
ரணத்தின் வீரரும் நடத்தன ரயோத்தி.
வழியில் வீரன் பரசுர விராமன்,

பழியே வாங்க வந்தே தோன்றினன்,
அவன் மத மடக்கி அவன்விற் கொண்டு
தவத்தின் மிக்க வருணனைக் கூவி,
சாபந் தந்து, 'சமயத் தழைப்பேன்'
கோபம் போக்கியோய் கொடுத்திடல் வேண்டும்

எனவே பணித்துத் தலைநகர் நோக்கினன்,
மனம் கொண் டோர்க்கருள் பங்கயக் கண்ணன்
'தஞ்சமென் றிறைஞ்சிய கைம்மலைக் கருளிய
மஞ்சின் நிறத்தான் மலைமகள் மூத்தோன்
அறத்தினர் வாழும் அயோத்தி சேர்ந்தபின்

சரத்தை நாடிக் கோசிகன் சென்றனன்.
பரதனும் துணைவனும் மாமன் அகத்தை
பரமன் நாடுவோர் ஆசைபோற் றேன்றிடும்
ஆசையால் நாடி அடைந்தனர் கொல்லோ,
ஆசை மனைவியர் அன்போடே கூட்டி

மயனு மிராமன் வன்மையை நோக்கி
தயரதன் அரசை அளித்திட நாடினன்
யாவரும் ஒப்பி நாளும் கணித்தனர்.
பாவம் போக்கிடு பரமன் களித்தனன் ;
சீதையும் மனத்தே பூரிப் பெய்தினள்.

மாதவள் கோசலை மனமும் மலர்ந்தது,
கேசியின் களிப்பிற் களவே யிலையாம்,
மாசில் சுமித்திரை ஆனந் தித்தனள்
ஊரெலாம் பாடின சிசுக்க ளாடினர்,
பாரெலாம் களித்தல் பூரிப் பெய்திய ;

இராவும் பகலும் இடைவிடா தேதான்
சராசரம்காக்கு மிளையோன் களித்தனன்;
தேவரும் தங்கள் துந்துமி முழங்கினர்,
தேவரின் அரசன் பூமழை பெய்தனன்.
விண்ணு ஆடிய ஆட்டி லோர்கால்.

மண்ணைக் கவ்விய கூனியென் மாது
கேசியின் தாதியள் அரசியை நாடி
கோசிகன் ஒத்து வந்தாள் சேர்ந்தனள்
அரசியும் களிப்பாளுற மளித்தாள்
மறத்தின் வழிச்செலுங் கூனியென் பாவி,

அரசியின் களிப்பை கொடியளின் மாற்றி
'பரதனுக் கரசை யளித்திட அரசனை
வரத்தாற் பணித்து வனம்செல விராமனை
வரத்தாற் செய்தி யெனவே பணித்தனள்,
அரசன் வாலும் வரமும் கேட்டாள்.

மாமே ஒத்து, மன்னனும் சாய்ந்தனன்
மல்லன் மாஞாலத்து மக்கள் வாஞ்சை
கல்லினு ரில்லையால் மகிபனென் செய்வான்
மூத்தோ னிருக்க இளையோன் ஆள்வது
பார்த்தோ ரிகழும் பழிமொழி யன்றோ ?

கேசியு மறியளோ நீதியா மிதனை ?
மாசில் அரசியும் மயக்கமி லறிவள்
பின்னையே னிவ்வணம் பிழையி லிரங்கினள் ?
அன்னையைக் கொன்றிடத் தூண்டிடு மாசை
தாக்கிடில் ஞானியர் தவறிடு கின்றார்.

பூக்குடை யிருந்து இன்பம் துய்த்திடும்
அரசியோ ஆசையை அறவொழித் திடுபவள்
காம்பன் னிரண்டுடை கந்தனும் ஆசையான்
தன்தாரம் விடுத் தாரணியம் சென்று
பொன்கர வள்ளியை மணந்தன னன்றோ ?

இந்திர பத்தினி யிளங்கொடி யிருக்க
இந்திர னகலிகை நாடின னன்றோ ?
சொந்தக் கன்னிய ரிருவ ரிருக்க
தந்திர மாகக் கோபிகா மாதரைக்
கூடின னன்றோ கண்ண பிரானும் ?

நாடிடு மங்கை துரோபதை யிருக்க
சுபத்திரை பங்குனன் நாடின னன்றோ?
அபய மேற்றிடு மறிநுயி லமர்ந்தோன்
நமகை ளேற்ற தாசையா னன்றோ,
செம்மை நெறியை நீத்த தரியன்.

நாட்டை நாடிய தாசையா னல்லவோ?
பாட்டனு மாசையைத் தவிர்த்தய னல்லனே!
ஆகலின் ஆசையைத் தவிர்த்தய ரில்லையால்,
நாகம் அணிந்திடு கேசியென் செய்வள்!
போதிலும் ஆசையைப் போக்கியோர் தானே.

ஆதி முதல்வன் அடியிணை யடைவார்,
"ஆசை யறுமின் ஆசைய றுமின்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்,"
என்றே முதியோ ரியம்பின ராகலான்
நன்று யாசை நசித்திடல் நாடுவீர்.

'இதுதான் நல்வழி இதுதான் நல்வழி
இதுவே ஈசனை எட்டிட நல்வழி. நிற்க.
ஓர்முறை ஈந்த வாக்கின் நீங்கிடில்
காரிருள் நிறைந்த நரகிற் சேர்த்திடும்.
நீதியி தறிந்த நின்மல நெஞ்சினன்.

ஆசியை நான்செல விடுத்து மரம்போல்
பூமிமேற் சாய்ந்து புந்தியு மிழந்து
காமிபோல் வாடிக் கலங்கினன் மாதோ.
தந்தை வாக்கியம் கைப்பிடித் தொழுகல்
மைந்தர் கடமையால் கானகம் சென்றான்.

உலகை மடியிற் கொண்டிடு மீசன்,
திலகம் போல்பவர் லக்குனன் சீதையும்
அண்ணல் பற்றினர் அருங்கா னகத்தே !
எண்ணம் கேசியின் கைகூ டியதாம்.
பத்தும் நாலும் வருடம் கழிக்கச்.

சித்தம் வந்து செப்பின ளாகலான்
ஈரேழாண்டு இன்பமாய்ப் போக்க
பாரேழ் காக்கும் பராபரன் சென்றான்
அரசை யிழந்து அன்னையைப் பிரிந்து
பரதன் நீத்துத் தந்தையைப் பிரிந்து,

லக்குனனோடும் லக்ஷிமியோடும்
திக்கே தெரியாத் தண்டகா ரண்யம்
செய்தியைக் கேட்ட நகரச் செல்வரும்
மெய்யே வாடிடக் காலும் சோர
கன்றினைப் பிரிந்த கோவினை யொத்து.

குன்றின ரநிவும் கன்றிய கன்னமும்;
ஓடினர் வாடினர் தேடினரி ராமனை
கோடி மாந்தரும் இலக்குனன் நாடினர்,
இராமன் காண்டலு மின்ப மெய்தினர்,
மராமரம் துளைத்த மகிபனச் செல்வரை.

அயோத்தியே யமைத்து அரணியம் புக்கனன்.
அயொத்தியு மொளியை யிழந்து காடாயது;
இடையனை யிழந்த ஆனினம் போல



இடையனை யிழந்தனர் அயோத்தியின் மாந்தர்.
நாகம் அணிந்த நம்பியி னருளால்

சாவோர் தன்னிடம் காக்கு கங்கையை
குகப்பிரான் படகில் குந்தியே தாண்டி
பகவா னடைந்தனன் சித்திர கூடம்
திருமால் பத்தரும் பிரமனின் பத்தரும்
இருவரின் மிக்க ஈச்வர பத்தரும்.

ஈச்வரன் தொழுதார் சீதையைத் தொழுதார்
பாஸ்கரன் ஒளியின் மிக்க காந்திகொள்
ஞானக் காந்தியர் வந்தவர் தொழுதார்.
ஞானச்செல்வனும் இன்போடிருந்தனன். நிற்க.
மூவர் பிரிவை மந்திரி சொல்லலும்

பாவ பூமியின் தயரதன் நீங்கினன்
சக்கிர வர்த்தியாய் ஜகத்தில் வாழ்ந்தும்
சக்கரக் கையானி ராமனைப் பெற்றும்
எல்லையில் தவத்தை யியற்றியே யிருந்தும்
தொல்லையின் மீட்கும் தனையர் நால்வரும்

அருகி லிலாது உயிரினை நீத்ததேன்?
அருவுரு வடியான் சாபமொன் றுளதாம்.
ஓர்கால் கானில் வேந்தன் தயரதன்
பாரினர் சூழ வேட்டை யாடையில்
ரிஷிமகன் ஒருவன் ஆற்றரு கடைந்து

ரிஷிக்காத் தண்ணீர் மொண்டிடும் போழ்து
தயரதன் எய்த அம்பால் மாண்டனன்.
ஐயம்கொள் தசரதன் முனியிடம் சென்று
தப்பிதம் காத்து ஆண்டிட வேண்டினன்
தப்பிதம் காரா தன்னவன் அரசனை

'எனைப்போல் பிள்ளையை நீத்துச் சாதி'
எனவோர் சாபமும் ஈந்தனன் மாதோ.
பெரியோன் சாபமும் பலித்தது பலித்தது
பெரியான் மனத்தை வருத்தா திருமின்
போதிலும்,
விதிவந் திழுக்கின் வெல்பவர் யாவரே.

மதியால் விதிவெல லசாத்திய மசாத்தியம்
இராமன் பிரியலும் இலக்குனன் பிரியலும்
மராமரம் துளைத்தான் தம்பியர் பிரியலும்
நாரளை யாண்ட நாதிபன் தயரதன்
சுரர்வாழ் சுவர்க்கம் சென்றனன் மாதோ.

செய்தியைப் பரத னறிதலும் தம்பியோ
டெய்தின னயோத்தி எழிலில் மாநகர்
தந்தையின் கடனைச் செய்தாயின பின்
தன்னனை கிட்டித் தாக்கினன் வசையால்,
அண்ணனை யழைக்க நாடினன் பின்னர்;

அண்ணனைக் காண ஓடின ருரினர்.
குகனி னருளாற் கங்கையைத் தாண்டி
பகவான் வாழும் கூட மடைந்தனர்
பகவான் நோக்கினன் தம்பியர் மாந்தரும்.
தகப்பன் பிரிதலைக் கேட்டனன் வாடினன்

தகப்பனின் கருமம் செய்தாயின பின்
தகப்பனே யாய தயாபர னெழுந்து
தம்பியை நோக்கித் தயையே கூர்ந்து
எம்பிநீ இங்கு எகிடலென்' னென
'நகர்க்குத் திருமி நகரையு மாள்வீர்

குகனுக் கருளிய சீதை மணாளா !
அல்லையேல் மாய்வேன் அடியினை யருகே,
கல்லை மாதாக்கிய காற்கீழ் மாய்வேன்
என்றனன் வேந்தன் பாதப் பெயரினன்.
கொன்றையின் மாலை கண்டத் தணிந்த

எம்பிரான் கேட்டுத் தம்பியை நோக்கி,
" தம்பி ! தந்தையின் வாக்கைத் தாண்டின்
நம்குல மிழுக்கைத் திண்ணமா யடையும்
நம்பெய ரிழக்க இட்டமோ நினக்கு ?
திருமிப் போய் நீ திருநக ரடைந்து

தருமம் தவறு தரசையு மாள்வாய்—"
எனலும் பரதன் என்பு நெக்குருக
மனத்தின் பத்தியால் மகிபனைப் பணிந்து,
" நீவரா திருப்பினும் நின் பாதத்தை
காவல் அளிப்பீ ரடியனே னுய்ய "

என்றே கூறி எம்பிரான் பாதம்
தன்னை நம்பியோர்க் கருள்வது மோக்ஷம்
வாங்கிப் பணிந்தான் மீண்டா னயோத்தி
தாங்கிடு பட்டம் பாதுகைக் களித்து
பாடிப் பணிந்து புரந்தனன் நாட்டை

நாடியோர்க் கருளு நம்பியின் தம்பி, நிற்க.
முழுநிலம் காக்கு முகுந்தன் முன்னும்
கழுவெனத் தூர்ச்சனர் காயு லக்குனனும்
சீதையும் பின்னுமா சிங்கம் யானை
பாதையிற் றிரியா பயங்கர காடி

கூறியதற் கிரையாகு மானும்
காரிருள் கனத்து வாழும் கானில்
நடந்தனர் களைத்தனர் களைதெளிந் தேகினர்
வடலை வாழும் மாயிரு கண்களும்,
அதன் கொழுந்தனைய படர்ந்ததாம் சடையும்,

மதம்சொரி யானைவாழ் மலையெனு நடையும்,
மேகம் மேவிடு தலையதன் முடியும்,
மேகம் முழக்கம் மானும் குரலும்,
வேலையை யுரிஞ்சிடு விரிந்த வாயும்,
பாலையை யொத்துப் படர்ந்த மார்பும்,

சராசரம் அழிக்கு யமன்போன் றவனும்
விராடன் வந்தனன், சீதையைத் தூக்கினன்,
சென்றனன் வானில், சீதையு மலறினள்.

மன்மிகக் கொண்டான் எடுத்தான் சாபம்,
தொடுத்தான் வாளியைத் திடுக்கிட அரக்கன்!

விடுத்தான் சென்றது அரக்கன் துளைத்தது.
சீதையை விடுத்து எடுத்தான் சூலத்தை
மாதின் மணாளனைக் கொல்லவே விட்டான்
அக்கினி கக்கியே வந்தது சூலும்;
பக்கத் துற்றது இராமனும் பார்த்தான்,

வாளியை விடுத்தான் சூலைக் கொன்று
காளியை யொத்த கருப்பனை யடைந்தது.
பார்த்தான் அரக்கன், இருவரைத் தூக்கி
ஆர்த்தான் இடியென சீதையு மஞ்சினள்.
வாளுரை நீத்துக் காத்தினிற் கொண்டு

பாழரக் கன்றோள் பாழ்பட வெட்டினர்.
அரக்கனும் சென்றான் அரியின் உலகம்
அரனும் நடந்தா னரக்கரின் கானில்.
ஓமம் விரதம் தவம்சை வந்து
காமம் நீத்த சரபங்க மாரிஷி

குடிசையைக் கிட்டி அவரையு மோக்ஷம்
குடிபுகழ் செய்து அபயமு மளித்து
பஞ்சவடியடைந் தாச்சிரம மியற்றி
தஞ்சமென் றோர்க்கருள் தயாபரன் வாழ்ந்தான்.

(ஸ்ரீராம னுற்பவச் சருக்கம் முற்றிற்று.)

---

## (இராவணனுற்பவச் சருக்கம்)

தூணில் வெடித்தானைத் தொண்டர்க் கடியானை
வீணிற் றிரிவோரை வீட்பானைப் பேணிக்
கரியழைக்கச்சென்றானைக்கார் முகிலோன் றன்னை
பரிவுடனே பாடிப் பணி.

பாற்கடல் துயிலும் பராபரன் றந்த

நாற்றலைப் பிரமனின் தனையன் புலத்தியன்
தவம் பல வியற்றி தானஞ் செய்து
சிவத்தின் அன்பன் குபேரனை யீன்றனன்.
அளவிலாத் தவத்தை யன்னவ னியற்றி
அளகையம் பதியும் அளவிலா நிதியும்

உலகெலாம் நொடிதா னொன்றிலே சுற்றும்
பலபுகட் புட்பக மோடெலாம் கொண்டு
இலங்கையில்வாழ்ந்தான் இணையொன்றின்றியே
திலகம் போல்பவன் குபேரன் மீதினில்
தந்தை விருப்பை யோற வொழித்து

புந்தியில் லாதவர் போற்றுடு கோபம்
மனத்தினுட் கொண்டு மதத்துட னிடப்புறம்
தனையன் புகழ்கெடத் தான் நோக்கினனே
பார்த்தலும்நொடியினிற்புத்திரன்தோன்றினன்
தீர்த்தான் புலத்தியன் தீரொருக் கோபமும்

மகிபன் புலத்தியன் மகிழ்ந் துளமாகி
மகிமை நாமமாம் விச்சிர வாகுவென்
றிட்டனன் பெயர்தான் இளங்கு ழவிக்கே.
திட்டமாய்ச் சகல நன்மையு மீந்து
போக்கினன் மைந்தனைப் புகழ்தவ மியற்ற,

சாக்கா லத்தருள் தயாபரன் றன்னைப்
போற்றி யிருந்தனன் விச்சிர வாகுவும்.
நாற்றிசை போற்றும் குபேரனீ தறிந்து
'தந்தையிற் றோற்றியோன் றந்தையே' யென்று
சிந்தையுற் கொண்டு செல்வனு மாய்ந்து

விச்சிர வாகுவின் விடுதியிற் சேர்ந்து
உச்சியிற் கரத்தை யேற்றி வணங்கி
"ஐயனே! அடியனைக் காப்பீ ரன்புடன்
செய்ய வாய்திறந்து செம்மொழி செப்பீர்",
எனலும், முனிவனும் இன்பமாய் நோக்கி,

"தனையனே! வாழ்தி தயாபர னருளுடன்"
எனவே வாழ்த்தினன் சாந்த தயையுடன்.
தினம்தினம் வந்து குபேரன் வணங்குவன்
பேர்பல படைத்த பிரமனின் தாஸனை.
ஓர்நாள் தனிகனும் ஒப்பிலா வனப்பினர்

மூவரக்க மாதரை முனிமுன் கொண்டுபோய்,
'தெய்வமே! இவரை யேற்றரு' ளென்றான்.
முனியு மேற்றன னரக்க மாதரை;
தனிமுதல் தாசனும் சென்ற னிலங்கை
கணிகையர் மூவரும் முனியிடத் தன்பாய்

பணிவிடை யியற்றி பத்தியின் முதிர்ந்து
உத்தமர்க் குகந்த வுபசாரமும் செய்து
சித்தமும்மன்னவ ரடிக்கே செலுத்தி
வாழ்ந்து வந்தனர். வாழும் நாளில்
ஆழ்த்தும் சிந்தையை அறமே வொழித்து

உலகப் பற்றை உதறி யெறிந்து
கலக மாதரைக் கனவிலு நினையா
தீச்வரன் நாடியே விருந்த தவத்தினர்
ஈச்வரன் கண்டபின் மாதரைக் கூயி
'தினம்தினம் பணிவிடை தவறு தியற்றிய

கனமுடைக் கணிகைகாள்! மனம்பூரித்தேன்
விரும்பும் வரத்தை விரையிற் கேண்மினோ.
கரும்புவிற் கொண்ட மன்மதன் படைகாள்!
கேண்மினோ சடுதியில் விரும்பும் வரத்தை.
மாண்மிகக் கொண்ட நங்கை மார்களே!"

எனவே இசைத்தலும், மாதரா ரெழுந்து
மனம்கொண் டிட்ட மகிபனைப் பணிந்து
எங்குல மேற்றிய ஈச்வர னனையாய்!
சங்கை யில்லாது கர்ப்பமும் தருவீர்.
ஐயனே! முனியே! அன்பனே!" எனலும்



செய்யவாய் திறந்து 'தந்தே' னென்றான்.
மூத்தவள் புற்கடை முனியுடன் கலந்து
பார்த்தவர் பயப்படும் தசக்கிரீ வனையும்
கும்பகர் ணனையும் கருவுயிர்த் தனளே,
கும்பத் தனமுடை மாலினி யென்பாள்

ரிஷியுடன் கூடி நற்சகு னத்தில்
ரிஷிகள் போற்றும் விபீஷணன் பெற்றாள்
கடைசி மகளிராம் வாகை யென்பவள்
கடைசியில் முனிவை அன்புடன் புல்லி
கடைகெட்ட வளாம் சூர்ப்ப நகையையும்

மடையனும் கரனையும் சீர்கெடப் பெற்றாள்.
பிள்ளைகள் நான்கு பெண்சூர்ப் பநகையாம்
பள்ளிக் கனுப்பி படிப்பும் போதித்
தாறு கலைகளும் நான்கு வேதமும்
காரின் நிறத்தான் மைந்தனின் பெருமையும்

யாவும் கற்பித் தந்தவிச் ரவாகும்
சாவின் கூற்றாம் பிரமனைக் குறித்து
தவம்பல வியற்ற தனயரை யனுப்பினான்.
தவம்பல வியற்றினர் தனயர் நால்வரும்.
ஆயிரம் ஆண்டு இனிதிற் செல்லவும்

மாயிரு ளகற்றும் பிரமன் தோற்றிலன்
ஆற்றொணாக் கோபம் அண்ணனும் கொண்டு
ஆற்றவோ ரோர்தலை அடியுடன் கொய்து
தீயினி லிட்டு ஆகுதி யீந்தான்.
மாயிரு ளகன்றில தய்யனும் தோற்றிலன்

ஆயிர மாண்டிற் கோர்சிர மாக
மாயிரு ளகல மன்னனும் கொய்தான்
மீந்தவோர் தலையைக் காய்ந்திடச் செல்லையில்
சாந்தன் பிரமனும் சடுதியிற் றோற்றினன்
கன்னல் மொழியாள் கவியர சுடன்வர

அன்னவா கனத்தி லமர்ந்து பிரமன்
நன்னய மாக பிரசன்ன மாகலும்
மன்ன னிராவணன் மாண்புட னெழுந்து
கைசிரங் கூப்பி மூவ்வலம் வந்து
மைநிறம் படைத்த மால்மக னடியில்

மரமென விழுந்து தன் மணிமுடி தாழ்த்தி
சரமாரி யென்னத் துதிமழை பொழிந்தான்
அன்னவா கன்னும் அன்பர்க் கெளியனாய்,
"சொன்னமுடியறத் தருந்தவம் புரிந்தனை
மய்ய லுடையாய் மனமு முவந்தேன்

கொய்யக் கொய்ய முளைத்திட தலைகள்
மற்று நீ
வேண்டும் வரத்தை விளம்புதி மன்னவ
ஈண்டுனக் கேயான் ஈந்திடுவே" னென்
றறைதலும் வேந்தனடியிணை தொழுது,
"திரை கட லுடுத்த வித்தேவி பூமியும்

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**கார்பொரேஷன் புதிய கட்டடத்தின் வரலாறு.**—ரிப்பன்பில்டிங்க்ஸ் என்று பெயரிடப்பட்டிருக்கும் புதிய கட்டடம், சென்னை கார்பொரேஷனுக்காகக் கட்டப்பட்டதாகும். இக்கட்டிடத்திற்கு அஸ்திவாரக்கல் 1909-ம் வருஷம் டிஸம்பர் மாதம் 11-ந் தேதி யன்று அப்போது இந்தியாவில் கவர்னர் ஜனரலாயிருந்த லார்டுமிண்டோ அவர்களால் நாட்டப்பட்டது. இக்கட்டடமானது, சென்னைபீபிள்ஸ்பார்க்கின்தென்மேற்குமூலையில் நகரத்தின் மத்தியில்கிழக்குமேற்கில் 252 நீளமும், தெற்குவடக்கில் 126 அடி நீளமும், மூன்று தளங்கள் உள்ளதுமாய் இருந்து வருகின்றது. பூமிமட்டத்திற்கு 132 அடி உயரத்தில் மணிக்கூண்டு ஒன்றும் அக்கட்டடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. 8-அடிச்சுற்றளவுள்ள கடியாரமொன்றும் அந்த சிகரத்தில் வைக்கப்படும். முதல் தளத்தில் 16 அறைகள் இருக்கின்றன. அவற்றின் மொத்த விஸ்தீரணம் 25,500-சதுர அடி. இரண்டாவது தளத்தில் 22 அறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மூன்றாவது தளத்திலும் 20 அறைகள் இருக்கின்றன. கௌன்ஸில் மீட்டிங் கூடுவதற்கான ஸ்தலம் மூன்றாம் தளத்திலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த கட்டடத்திற்குப் பிடித்திருக்கும் செலவு மொத்தம் 6,47,000 ரூபாய். இன்னும் ஒரு லக்ஷம் ரூபாய் செலவில், "முனிஸிபல் சோதனைச் சாலை"யொன்று இக்கட்டடத்தையொட்டி அமைக்க வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. நமது மாக்ஷிமைதங்கிய வைஸ்ராய், லார்டுஹார்டிஞ்சு அவர்களால் நவம்பர்மீ 26உ திறந்துவைக்கப்பட்ட இக்கட்டடத்தின்போட்டோகிராப் படம்கூடிய சீக்கிரம்நமது போதினியில் வரும்.

***

**பெரும் பணக்காரி.**—இப்போது ஆஸ்டிரியாவில் அமெரிக்கப் பிரதிநிதியா யிருப்பவரது மனைவியான மிஸஸ் பிரடெரிக் கோர்ட் லாண்ட் பென்பீல்ட் என்பவரோ மிகுதியாக இன்கம்டாக்ஸ் வரி கட்டுகின்றவராம். இவரது சொத்தின் மதிப்பு ஒரு கோடியே நாற்பது லட்சம் பவுண்டாம். இவர்க்கு அச்சொத்திலிருந்து வருஷந்தோறும் எழு லட்சம் பவுண்டு வருகின்றனவாம். இவர் செலுத்தும் வரியின் தொகையோ 49,000 பவுண்டாம்.

***

**ஒருபுதுவகைத் தந்தம்.**—பிரான்சு தேசத்திலுள்ள கவுடான் காட்டில் ஹயபீனு என்னுமொரு வகைச் செடியிருக்கின்றது; அச்செடியினது பழத்தின் சத்தைக் காற்றில் உலரச்செய்தால், அஃதிறுகி இயற்கைத் தந்தம் போலிருக்கின்றதாம்.

**மதுரைத் தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதி காலஞ்சென்றார்:**—மதுரைத் தமிழ்ச் சங்கத்து நிரந்தர அக்கிராசனாதிபதியாய் காலஞ்சென்ற ஸ்ரீமான் பொ. பாண்டித் துரைசாமித் தேவரவர்களுக்குப் பின் இருந்து வந்த மிஸ்டர் P. S சுப்பிரமணிய ஐயர் கடந்த திங்கட்கிழமை (24-11-13) மதுரையில் இறந்துபோனார் என்று அறிந்து மிகவிசனிக்கிறோம்.

***

**தென் இந்திய ரெயில்வே.**—கொள்ளிடம் முதலிய இடங்களில் உடைப்புகள் சரியாகச் சீர்திருத்தப் பட்டன. நாளது மீ 12உ முதல் போட்மெயில் முதலான வண்டிகள் நேராகவே தூத்துக்குடிக்கிச் செல்லும்.

***

**விலையுள்ள குள்ளநரிகள்.**—அமெரிக்காவிலுள்ள கானடா தேசத்துக் கிழ்ப்பகுதியில் 125 குள்ளநரிகள் அலாஸ்காவிலிருந்தும், லகாக்வேயிலிருந்தும் தருவிக்கப்பட்டிருக்கின்றன; அவற்றின் மதிப்பு 20,000 பவுண்டாம்; அவற்றுள் ஒரு ஜதைக் குள்ள நரிகளின் மதிப்பு 2010 பவுண்டாம்.

***

**பெருவில் பூகம்பம்.**—நியூயார்க் தென் அமெரிக்காவிலுள்ள பெரு என்ற நாட்டில் பூகம்பமுண்டாகி ஒரு மாகாணம் சேதமாய் விட்டது. 120 பெயர்கள் இறந்துவிட்டதாகத் தெரிகிறது. இன்னும் நூற்றுக் கணக்கானவர்கள் இறந்திருக்கலாமென்று பயமாயிருக்கிறது. 10 சிறிய பட்டணங்கள் நாசமாய் விட்டன.

***

**ஒரு நிலக்கரிச் சுரங்கவிபத்து.**—இங்கிலாந்திலுள்ள கார்ன்வால் ஜில்லாவிலிருக்கும் கார்டிப் என்னும் நகரத்துநிலக்கரிச்சுரங்கத்தில் நிடைசென்று சென்றமாதத்தில் ஒரு தீவிபத்துண்டாயது. அப்போது அதில் 981-பேர் வேலைசெய்து கொண்டிருந்தனர். அவர்களுள் 417-பேரிறந்துபோயினர். இவ்வளவு பெரிய விபத்து சுரங்கங்களில் 70-வருஷ காலமாகவுண்டானதேயில்லையாம்.

***

**ஸ்டீமர் "டுவின்கான்" எரிந்துபோய் விட்டது.**—பெட்ரோலியம் எண்ணெய் ஏற்றிக்கொண்டு தூத்துக்குடிக்குப் போன "டுவின்கான்" என்னும் ஸ்டீமர் தூத்துக்குடி துறைமுகத்தில் சென்றமீ 5உ தீப்பிடித்து எரிந்து போய்விட்டது! சீப் இன்ஜினீர் இரண்டாவது இன்ஜினீர், காப்டினுடைய பெண்சிசு, ஆயாள், இரண்டு வேலைக் காரர்கள்—ஆகிய இவர்கள் எல்லாம் தீக்குப் பயந்து சமுத்திரத்தில் விழுந்து இறந்தனர்கள். அங்கிருந்த பெட்ரோலியம் எண்ணெய் பர்மா ஆயில் கம்பேனியாரைச் சேர்ந்தது. ஸ்டீமரும் ஷை கம்பெனியாருக்குச் சொந்தம். போர்ட் ஆபீசா நடைய குமாரனும் மாண்டுபோயினன். பர்மா ஆயில் கம்பெனிக்கு 2 லக்ஷம் ரூபாய் நஷ்டம் என்றும் அறிகிறோம்.

***

**ஓர் நூதன கட்டடப்பிரவேசச் சிறப்பு.**—பழைய தமிழ் நூல்களில் சிறப்பிக்கப்பட்டுள்ள நன்னன் என்னும் வேளிர் தலைவன் ஆட்சிசெய்த நகரமாம் செங்கண்மா என்னும் செங்கத்தில், டெபுடிதாசில்தார் ஆபீஸ் வெகுகாலமாக ஒரு சிறிய கட்டடத்திலிருந்து நவம்பர்மீ 5உ புதிய கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. இப்புதுக் கட்டடவேலை அனேக இடையூறுகளால் தடைபட்டு 6 வருஷ காலத்தில் நடந்தேறியிருப்பதை நோக்கி, நூதன ப்ரவேசம் வெகு சிறப்பினதாக நடத்தப்பட்டது என்று தெரியவருகிறது. அன்றையதினம் அச்சங்கயாவில் உள்ள இந்து மஹமதிய ஆலயங்களுக்கு அபிஷேகம் செய்வித்தும், ஏழைகள் சுமார் மூவாயிரம் பேருக்கு உணவும் உடையும் கொடுத்தது மன்றி, பாடசாலைச் சிறுவர் சிறுமியர்களுக்கும் சிற்றுண்டி, பரிசு முதலானவைகள் அளித்தார்கள் என்பது மிகவும் மனச்சந்தோஷத்தை உண்டுபண்ணுகிறது.

***

**இறந்தந்தவன் பிழைத்தான்.**—காலரா வியாதியால் பீடிக்கப்பட்ட நடுத்தர வயதுள்ள ஒருவன் சென்றமாதத்தில் கல்கட்டாவில்காசிகட்டத்திலுள்ள மயானத்திற்குக் கொண்டுபோகப்பட்டு, அவனுடைய தேகத்தில் அக்கினியை வைத்துக்கொளுத்தத் தயாராக இருந்தார்கள். அச்சமயம் அந்த மதனின் கண்ணைத் திறந்து "தாகமெடுக்கிறது. கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்" என்று கேட்டான். அவனை அங்கிருந்து உடனே வீட்டிற்குக் கொண்டு வந்தார்கள். அவன் இப்பொழுது சிகிச்சையிலிருக்கிறான்.

***

**பஞ்சாப் ஐக்கியநாணயச் சங்கங்கள்.**—பஞ்சாப்பிலுள்ள விவசாயச் சங்கங்களின் நடைமுதல் பணம் 80 லட்சம் ரூபாய். ஸெண்ட்ரல் பாங்கிகள் யூனியன்கள் இவைகளின் மொத்தநடை முதல் பணம் 28 லட்சம் ரூபாய். சென்ற வருஷத்தில் மெம்பர்கள் 100-க்கு 45 ஆக அதிகமானார்கள். மூலதனம் மொத்தத் தொகை 100-க்கு 72 ஆக அதிகரித்தது. மற்ற இந்திய மாகாணங்களைவிட பஞ்சாப்பில் இப்பொழுது அதிக சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வட்டிக்குக் கடன் கொடுப்பவர்களின் சங்கியை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வட்டிக்குக் கடன் கொடுப்பவர்களை மேற்கண்ட சங்கங்களில் அவர்களுடைய பணத்தைப்போடச் சொல்லி அவர்களுக்குத் தக்கபடி வட்டி கொடுத்து வரும்படியான பிரயத்தனங்கள் செய்யப்படுமென்று காண்கிறது.

Supplement to the "Viveka Bodhini"

["விவேக போதினி" அனுபந்தம்]





# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VI { பிரமாதீச ஸு மார்கழிமீ =1914-ஸு ஜனவரிமீ } பகுதி 7

## வேதாந்தத்திரட்டு

## VEDANTIC SELECTIONS

### 2. குஹ்யம்: ஸ்வதர்மாசரணம்

சாதியொருநான்கினையும் சார்குணத்தைக்கன்மத்தை
யேதமறப்பாகித்தியற்றினன்யான்—ஓதுமுதல்
ஆயினுமிங் கென்னை அகர்த்தன் அவிகாரியென
நீயுணர்க மற்றிதுவே நேர். 1
(பகவத்கீதை iv—13.முத்துவையர்மொழிபெயர்ப்பு)

நற்குணமொன்றில்லெனினும் தன்கருமம் நன்குபுரி
கிற்பதுமற் றோர்தொழிலிற்கேடறவே—நிற்பதினும்
மேலாமே தன்தொழிலை மேவிப்புரிந்திடுவோன்
ஏலானோர் வெம்பவமும் ஈங்கு. 2
(கீதை xviii—47)

செய்கருமத் தேயன்றிச் சேரும் பயன்தன்னில்
ஐயவுனக்கில்லை அதிகாரம்—பெய்யும்
பயனைவிழைந் தோர் வினையும் பண்ணற்க என்றும்
செயலொருவ வும்விழைதல் தீர். 3
(கீதை ii—47)

யோகத்திருந்துபயன் உற்றாலும் ஓர்பயனை
யகித்தூறுவிடினும் ஓர்நிலையாய்—மோகம்
தவிர்ந்துன்து கன்மத்தைத் தப்பாமற் செய்தி
நிவந்தசமம் யோகமெனநேர். 4
(கீதை ii—48)

விடற்பால அல்லகாண் வேள்விதவம் தானம்
அடுத்தவற்றையாக்கல் கடனே—திடப்படுமத்
தானம் தவம்வேள்விசாற்றும் விவேகிகளுக்
கூனம் அறுத்துள் விளங்கும் ஓர். 5
(கீதை xviii—5)

செயற்பாலதோர் கருமம் செய்தல்கடன் என்று
மயக்கொழியமல்கும் அபிமானம்—பயக்கும் நலன்
இவ்விரண்டும் விட்டங்கியற்றுவதே ஸத்துவமாம்
செவ்விதிகழ் த்யாகம் தெரி. 6
(கீதை xviii—9)

ஒண்பயனை இச்சித்து ஆற்றுநர்க்குக் கன்மபலன்
துன்பம் சுகம் கலப்பாய் முத்திறமாய்ச்—சம்பவிக்கும்
அப்பயனை வேண்டாமல் ஆக்குநருக்கோர் பொழுதும்
செப்பினதுண்டாதலில்லை தேர். 7
(கீதை xviii—12)

ஞானேந்தியங்கள் தமைநன்று எவன்மனத்தால்
ஆறுதடக்கிவினை ஆர்பயனைத்—தாறுர
ஒண்ணாது கன்மேந்தியங்களினாலே யிழைப்பான்
தண்ணினவன் மேலாவன்காண். 8
(கீதை iii—7)

யாதொன் றியற்றிடினும், யாது நுகர்ந்திடினும்
யாதொன்றை ஓமித்தங்கீந்திடினும்—யாதோர்
தவம்செயினும் குந்திதவப்புதல்வ செய்வாய்
உவந்தெனக்கிங் கர்ப்பணமா ஓர்ந்து. 9
(கீதை ix—27)

கன்மத் தகன்மத்தைக் காண்போனும் அவ்வாற
கன்மத்தில் கன்மத்தைக் காண்போனும்—கன்மங்கள்
எல்லாம்புரிந்தோனும் எண்ணும் அறிவுள்ளவனும்
வல்லவொரு யோகியுமாம் மற்று. 10
(கீதை iv—18)

விவேக போதினி

தொ.6.] பிரமாதீச ஸு மார்கழிமீ [பகுதி.7.

# மோக்ஷ ஸோபானம்

## THE STEPS TO THE GOAL

### (2) கர்மயோகம் (தொடர்ச்சி)

(3) கர்மம் செய்யாமையில் ஆசை கொள்ளாமை:—இது கர்மயோகத்தின் மூன்றும் அங்கம். இரண்டாவது அங்கத்தில் கர்மம் செய்யாமையால் பரம்பரையாக ஏற்படக்கூடிய பாபத்தின் ஸம்பந்தம் வருவதற்குக் காரணமான கெட்ட ப்ரவ்ருத்திகளுடன் எக்காலத்தும் வசப்பட்டு நிற்காமை என்பது நன்ருக விளக்கப்பட்டது. இந்த அங்கத்தில் கர்மம் செய்யாமையினிடமே எக்காலும் ஆசைகொள்ளாமலிருப்பதாகிய, இந்தப் பாப பலனுக்கு அதிஸூக்ஷ்ம காரணத்தைக் கெடுப்பது குறிக்கப்படுகிறது. பாபத்தின் ஸ்தூலகாரணமாகிய கெட்ட காரிய ப்ரவ்ருத்தி யடக்கப்பட்டால்தான், அதன் காரணமான ஸூக்ஷ்ம ஆதிகாரணமாகிய கர்மம் செய்யாமையில் ஆசைகொள்வது வெளியாக, அதையும் நாசம் செய்ய முயற்சிக்க இடம்உண்டாகும். ஆகவே, இந்த அங்கம் இரண்டாவதன் பின் வைக்கப்பட்டது பகவானுல்.

தற்கால வேதாந்திக ளிடத்தில் பெருங்குதர்க்கம் ஒன்று குடி கொண்டுள்ளது. இந்த அங்கத்தைத் தீர விசாரித்தால், அதற்கு இடமே இல்லாமற்போகும். குதர்க்கிகள் சஞ்சல மனதைத்தவிர வேறுஒருஆதாரமும்இல்லை அந்தக்கொடியநிலைக்கு என்பது நன்ருகவிளங்கும். இந்தக்குதர்க்கம், 'ஸத்கர்மங்களால் நமக்குஆக வேண்டியது ஒன்றுமில்லை. ஆதலால் அவைகளை விட்டுவிடலாம். அவைகள் அஞ்ஞானிகளுக்கு ஏற்பட்டுள்ளன; நமக்கல்ல' என்று அனுஷ்டான காலங்களை வீணுகப் போக்குவதே. இதைக்கண்டு பலர் கெடுவதை இங்கு எடுத்து விஸ்தரிக்க வேண்டியது அனுவசியம். இதனுல் இத்தகைய குதர்க்க ஞானியர் மனக்கொடுமையை மாத்திரம் வெளியிடுவோம். இப்படி ஒருவனுக்குத் தோன்றிவிட்டால் பாழ் மனம் பாப நிலயம் என்ற ஒழுங்குப்படி நாளடைவில் 'கெட்டகாரியங்கள் நம்மை என்ன செய்துவிடும்' என்ற எண்ணம் தோன்ற, தன்னிலைச்சிறப்பு கெட்ட காரியத்தால் வெளியாகும் என்று அதில் முயற்சியும் ஏற்படும். பிறரைக் கெடுத்த பாபமும் தான் கெட்ட பாபமும் கூடி அவனை அதோகதிக்கு இழுத்துவிடும். ஆதலால் கர்ம யோகத்தின் இரண்டாம் அங்கத்தைக்கூட ஸாதிக்க முடியாத கொடிய நிலை இந்தக் குதர்க்கிக்கு வந்துவிடும். முதலங்கமும் நிலை பெருது என்று கூறவும் வேண்டுமோ? ஆகவே இவன் பாமரர் நிலைக்கே போய்விடுவன் சீக்கிரத்தில்.

ஸத்கர்மங்களைச் செய்யாமையில் ஏன் ஆசையுண்டாகக் கூடாது என்ற கேள்வி பிறக்கலாம். அதற்கு பகவான் கீதையில் சிலவிதமாக விடையளித்திருக்கிருர். (1) மத்யம பரிபாகிகளுக்கு மனதில் பாப அழுக்கு ப்ராரப்த கர்மத்தால் இருப்பதால் அது நீங்க அவர்கள் ஸத்கர்மங்களைச் செய்தே தீரவேண்டும். இதனுல் மனம் சுத்தப்பட்டால்தான், வாஸனைகளால் சலிக்கும் மனம், சஞ்சலமற்ற நிலையைநோக்கிப் பாய



இடம் ஏற்படும். (2) ஸத்கர்மங்களைச் செய்து வந்தால்தான் பாபம் அணுகாது புண்யலோக வாஸமாவது கிடைக்கும். அங்கிருந்து புண்ய க்ஷீணகாலத்தில் நழுவி பூமிக்கு வருங்கால் ஏற்படும் தேஹப்பிரிவு, ஸுகம் முடிந்துவிட்டதே என்ற ஏக்கம் முதலியவற்ருல் உண்டாகும் வைராக்யத்தால், உலகில் புண்யவானும் ஸ்வல்ப வைராக்யவானும் உள்ள ஜன்மம் கிடைக்கும். இப்படி ஸத்கர்மத்தால் ஸ்வர்க்கம் போய், வாவர வைராக்யம் அகன்றுகொண்டும் கிடப்பட்டுக் கொண்டும் வரும். வைராக்ய முற்றினுல் ஸாதன சதுஷ்டயம், ஞானம், ஸாக்ஷாத்காரம் இவைகள் முறையே நிகழ இடமுண்டாகும். இப்படிப்பட்ட நிலைத்த ஸுகத்திற்குப் பரம்பரையாக ஸாதனமாகும் ஸத்கர்மத்தை விட்டு விட்டால், மேல் கிளம்ப ஆதார மில்லாமலே போவதோடுங் கூட இம்முறையை ஏற்படுத்திய ஈசன் ஆஞ்ஞையைக் கடந்த பாபமும் வரும். (3) ஸத்கர்மானுஷ்டானத்தால் ஸ்வர்க்கத்தி லிருந்து நழுவி உலகில் வந்து புண்யவான்களாக அவதரித்து உலகை க்ஷேமப்படுத்தும் ஜீவர்கள் வந்து இங்கு பிறக்க ஒருவழி ஏற்படும். இப்படிப்பட்ட ஜீவர்கள் ஸத்கர்மாக்கள் நடந்தேறும் இடத்தையே விரும்ப அங்கேயே அவர்கள் வந்திறங்கும்படி இக்கார்யாதிபதியாகிய இந்திரன் செய்வன் என்பதற்கு என்ன ஸந்தேஹம். யயாதி ஸ்வர்க்கத்திலிருந்து நழுவிய கதையை இங்கு ஞாபகப்படுத்திக் கொள்ளலாம். (4) உலகப்ரஞ்ஞையே முற்றிலும் மறந்து, ஆத்ம வஸ்துவிலேயே ஆவல், திருப்தி, ஸந்தோஷம் எல்லாம் நிலைக்கப்பெற்ற அதிவர்ணாச்ரமி, வரிஷ்டன் என்பவன் நீங்கலாக மற்றவர்களுக்குக் கர்மம் உண்டு. ஞானி, கர்ம மோக்ஷ பரம்பரா ஸம்பந்தத்தை உணர்ந்தவனுய், தான் செய்வதைக் கண்டு பிறர் அதன்படிநடந்து முறையே மோக்ஷம் அடைவதைத் தவிர, உலகத்தவருக்குத் தன்னிலையடைய வேறு வழியில்லை என்று கண்டு, இவ்வாறு லோகத்தை நல்வழிப்படுத்த ஒரு ப்ரயத்தனமும் இன்றி இயற்கையாகவே தானே ஸத்கர்மங்களில் அவன் அங்கங்கள் பாய்ந்தோட, ஸத்கர்மங்களும் தனக்கு ஏற்பட்ட வர்ணாச்ரமகர்மங்களும் அவனுல் நடைபெற்றுக்கொண்டுதான் வரும். இப்படி இல்லாத குதர்க்கி எவ்வளவு சிறந்தவனுயினும், எவ்வளவு சிறந்த ஆச்ரமியாயினும் பாமரன் என அறிவுடையோரால் விலக்கப்படுவன். கர்மிகளோ முமுக்ஷுக்களோ கர்மங்கள் செய்தே தீர வேண்டும். ஆகவே ஸத்கர்மானுஷ்டானம் எல்லோருக்கும் உண்டு. அதை மனப்பூர்வமாக விடவே கூடாது; அது தாங்குபவன் கைப் புஷ்பம்போல அதிவர்ணாச்ரமி நிலையில் தானே நழுவ வேண்டும். இது பற்றியே ஒளவையும், 'அறனை மறவேல்' என்ருள்; 'அறஞ்செய விரும்பு,' என்பது போதாதென்று. இப்படி நான்கு முக்ய காரணங்கள் காட்டி ஸத்கர்மானுஷ்டானம் செய்யாமையில் ஆசை புத்திமானுக்கு போகவே கூடாது என்று பகவான் வற்புறுத்துகிருர்.

இவைகள் எல்லாவற்றையும் விட பகவான் IV-ம் அத்யாயம் 18-ம் ச்லோகத்தில் இந்த அங்கத்தின் சிறப்பினது காரணத்தை நன்கு விளக்குகிருர். அந்த ச்லோக மொழிபெயர்ப்பு பின் வருவது.

கன்மத்த கன்மத்தைக் காண்போனும், அவ்வாற
கன்மத்திற் கன்மத்தைக் காண்போனும்—கன்மங்கள்
எல்லாம் புரிந்தோனும் எண்ணும் அறிவுள்ளவனும்
வல்லவொரு யோகியுமாம் மற்று.

இந்தப் பாட்டில் செய்கை செய்யாமை இவைகளின் ஸ்வரூபம் விளக்கப்படுகிறது. ஸாதாரணமாகக் கர்மம் அல்லது தொழில் என்று சொல்லப்படுவது உண்மையில் ஆத்மாவுக்

இல்லை. ஆதலால் எந்தக் கர்மங்களும் ஆத்மாவைநோக்க அகர்மமே. ஸாதாரணமாகத் தொழில் செய்யாமையாகிய அகர்மமும் ஸூக்ஷ்மமாக விசாரிக்குங்கால் அதை உணர்ந்துகொண்டு, கர்மங்களுக்கு ஸாக்ஷியாகவிருப்பதுபோல, அகர்மத்திற்கும் ஸாக்ஷியாக விருக்கும் ஆத்மாவுடன் ஸம்பந்தமுடையதல்ல: அகர்மமும் கர்மத்தைப்போல ஆத்மாவை விட வேறானதே: அதாவது அகர்மமும் கர்மப்ரயமான உணரப்படும் பொருளே ஆதலால், கர்மமே என்றாச்சுது. ஆதலால் உண்மைவஸ்து கர்மம் அகர்மம் இரண்டிற்கும் அப்பாற்பட்ட ஸாக்ஷி. இதை உணர, கர்மத்தில் ஏதோ சுறுசுறுப்பு முதலிய வஸ்துத்தன்மையும், அகர்மத்தில் ஒருவிதசூன்யத்தன்மையும் உள்ளதே: இவ்விரண்டும் ஆத்மவஸ்துவை நோக்க ஒருபடித்தாகி அதனோடு ஸம்பந்தப்படா ஜடங்களே என்று உணரவேண்டும். இது உண்மையாக இருப்பதால் கர்மத்தைவிட அகர்மத்தில் ஒருவிசேஷப்பற்றும் ஏற்படவேகூடாது. இந்த மாதிரியான ஆத்மாவின் உண்மை நிலை நன்கு அனுபவத்தில் காட்ட ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸாதனமாகிய ஸத்கர்மங்களை விட்டு ஒய்ந்திருப்பதில் ஒருவிதப்பற்றும் உண்டாகவே கூடாது என்று கூறவும் வேண்டுமா! இத்தருணத்தில்குதர்க்கிகிளம்பி‘பகவான் கர்மம் அகர்மம் இரண்டிலும் ஸம்பந்தப்படாதது ஆத்மா என்றல்லவா கூறியுள்ளார்? ஆதலால் அகர்மத்தைவிட ஸத்கர்மாநுஷ்டானத்தில் அதிகப்பற்று இருக்கக்கூடாதே! அதையும் அகர்மத்தைப்போல விலக்கவேண்டியது அவசியமில்லையே’ என்று ஆக்ஷேபிக்கலாம். ஸத்கர்மங்கள் இங்கு எடுத்துக்காட்டப்பட்ட முடிவான நிலைக்குப் பாம்பராஸாதனமாதலாலும், அகர்மத்தைப்போல மிகுந்த ஆவலுடன் பார்ப்போர் பற்றக்கூடிய தல்லாததாலும்,அதைவிட முயற்சிக்கவேண்டாம். ஸத்கர்மம் உண்மை ஞானத்தில் ‘சவம் சூடும்தடி’ போல நழுவிவிடும். அதை விடுவதற்கு முயற்சிவேண்டாம், அகர்மத்தை நீக்குவதற்கு வேண்டியதுபோல. அகர்மம் தாமஸஸ்வபாவகமாதலால் ஸாதாரண பாமரர்களை வலுவிலிழுக்கும்: ஆதலால் அதன் வசமாகாமலிருக்கவேண்டும். புத்திமான்களையும் அகர்மம் ஸாத்வீக ஒழிவுபோன்ற வேஷத்துடன் அஜாக்ரதையான ஸமயங்களில் இழுத்துவிடும். ஆதலால் மத்யம பரிபாகிகள் இந்த அகர்ம ஆசையை முற்கூறிய யுக்திகளால் வெகு ஜாக்ரதையாக விருந்து விலக்கிக்கொண்டே இருத்தல் வேண்டும். எந்த உத்ஸாஹ ஸமயம் வந்தாலும், ‘ஸத்கர்மம் இனி நமக்கு வேண்டாம், போதும், ஒய்ந்திருப்போம்’ என்ற அபிவிருத்திக்கு விரோதமான பாழும் திருப்திக்கு இடமே கொடுக்ககூடாது ஸந்மார்க்கிகள். இதற்கு இடங்கொடுத்து விட்டால் அதோகதிதான் வந்துவிடும்.

ஸத்கர்மாநுஷ்டானம் எக்காலத்தும் மனப்பூர்வமாகப் போதும் என்று ஒதுக்கக் கூடிய விஷயமல்ல: அதுவே நழுவவேண்டும். இந்தச் சிறந்த கருத்தை யடக்கியுள்ளது ‘அகர்மத்தில் ஆசை கொள்ளாமை’ என்ற இந்த கர்மயோக மூன்றும் அங்கம். இந்த அங்கத்தின் உணர்ச்சி யில்லாததால்தான் இக்காலத்தில் அநேக ஆபாஸ வேதாந்திகள், நாம் செய்யுங் கர்மங்கள் எதுவாயினும், (பணம் ஸம்பாதித்தல், வீடுகட்டல், கார்யஸ்தராயிருத்தல், உலக நன்மைக்குப் பாடுபடுதல் முதலியவைபோன்ற லௌகிகத் தொழில்கள் எதுவாயினும்) பலத்தில் இச்சை விட்டுச் செய்துவிட்டால் கர்மயோகமாகிவிடும் என்று குதர்க்கம் பேசி யலைகின்றனர். கீதையில் கூறிய கர்மயோகம் அதிர்ஷ்டபலனாகி ஸ்வர்காதிகளைக் கொடுக்கும் வைதிக வர்ணாச்ரமதர்ம கர்மாநுஷ்டானங்களைப் பற்றியதே. அவைகளை அநுஷ்டியாமையில் எக் காலத்திலும் ஆசை வாராமலிருக்க வேண்டும் என்று வற்புறுத்த வந்தது இந்த மூன்றும் அங்கம்.



## பிரஸிடண்ட் கார்பீல்ட்

## PRESIDENT GARFIELD

(தொடர்ச்சி)

வில்லியம்ஸ் காலேஜில் வித்தை பூர்த்திபெற்றதும் ஜேம்ஸ், ஹிராம் கலாசாலை சென்று, வருஷத்துக்கு 800 டாலர் சம்பளத்தில் உபாத்தியாயராய் அமர்ந்தார். அவர் அங்கிருந்த நான்குவருஷகாலமும், அதாவது 1857-வது வருஷமுதல் 1861-வது வருஷம்வரையில் மாணவர்களால் குதூகலத்துடன் போற்றப்பட்டும் உபாத்தியாயர்களாலும் பிள்ளைகளின் பெற்றோர்களாலும் மிகவும் நன்கு மதிக்கப்பட்டும் வித்தையை ஊட்டிவந்தார். அக்கலாசாலையில் படிக்கும் பிள்ளைகளெல்லாம் குடியானவர் குலத்தவ ராதலால், கொஞ்சங்கற்றதும், அப்பிள்ளைகளின் பெற்றோர்கள் அவர்களைத் தங்களுக்கு நிலத்தைச் சாகுபடி செய்வதற்கு உதவி செய்யும் பொருட்டு வீட்டிலேயே நிறுத்திக் கொள்வார்கள். ஜேம்ஸ்,புத்தி தீட்சண்யமுள்ள சிறுவர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களின் பெற்றோரிடஞ் சென்று மன்றாடி, அப்பிள்ளைகளுக்கு உயர்தரக் கல்வியளிக்க பெற்றோர்களைச் சம்மதிக்கச் செய்வார். அவர் தலைமை பூண்டிருந்தபொழுது, அக்கலாசாலை யாவராலும் நாடப்பட்டு அப்பக்கங்களில் மிகவும் பிரக்கியாதி பெற்றது. இதற்குக் காரணம் ஜேம்ஸ் அக்கலாசாலைக்குத் திரிகரண சுத்தமாய் உழைத்ததாலும் மாணாக்கர்களுக்கு அடிக்கடி ‘நன்னடக்கை’ ‘வெற்றிக்குவழி’ முதலிய விஷயங்களைப்பற்றி வகுப்பிலும் வெளியிலும் உபந்நியசித்ததாலும்தான். எப்பொழுதுங்குறித்தநேரந் தவறாமல் யாவரும் வரவேண்டும், எடுத்த விஷயத்தைச் சிதைவின்றி விரைவில் முடிக்கவேண்டும் என்று வற்புறுத்துவார். தான் சொல்லும் நற்போதனைக்குத் தானே உதாரணமாகும்படி நடந்து கொள்வார். எவ்விஷயத்தையும் முன்னால் சரிவரக் கற்காமல் உபந்நியசிக்க ஆரம்பிக்கமாட்டார்.

1855ஸு நவம்பர்மீ, அவர் லூக்ரீஷியா ரோடால்பை மணந்துகொண்டார். கல்வி கேள்விகளிற் சிறப்புற்றிருந்த அப்பெருமாட்டி, ஜேம்ஸுக்குப் பலவிதத்திலும் அநுகூலமாயிருந்து வந்தாள். ஜேம்ஸ் இரவில் வெகுநேரம் வரைக்கும் அந்நாட்டுச் சட்ட புத்தகங்களைப் படித்து நியாய சாஸ்திரத்திலும் பரிபூர்ணரானார். இச்சமயம் கலாசாலையில் வித்தை பயிற்றுவிப்பதுடன் ஜேம்ஸுக்கு அடிக்கடி அயலூர்களிற் சென்று ராஜ்ய விவகாரங்களைப் பற்றிப் பிரசங்கஞ்செய்வதும் தொழிலாயிற்று. நீகிரோ அடிமைகளுக்கு சுதந்தரங் கொடுக்க வேண்டுமென்றும், அடிமைகள் என்னும் பேச்சே ஐக்கிய மாகாணங்களில் இருக்கக் கூடாதென்றும் ஜேம்ஸ் வற்புறுத்தி ஜனங்களுக்கு உபதேசஞ் செய்து வந்தார். அடிமைத் தொழிலை நிலைநிறுத்த வேண்டுமென்று கங்கணங்கட்டிக் கொண்டு ஜனங்களை அவ்வபிப்பிராயத்துக்கு மாற்றப் பிரசங்கஞ்செய்து வந்தவர்களில் ஹார்ட்டு என்பவன் ஒருவன். அவனுடைய உபந்நியாசத்தைக் கேட்ட ஹிராம் ஜனங்கள் ஹார்ட்டின் தவறுகளை எடுத்துக் காட்டி அடிமைத்தனங்கூடாதென்பதை நிரூபிக்கும்படி ஜேம்ஸை வேண்டிக்கொள்ள அதன்படி ஜேம்ஸ் செய்த பிரசங்கத்தாலும் ஹார்ட்டுடன் செய்த தர்க்கத்தில் ஜேம்ஸ் அடைந்த வெற்றியாலும் ஜேம்ஸின் பெயருங்கீர்த்தியும் வெகு தூரம் பரவி அவரை ஜனங்கள் காங்கிரஸ் மெம்பராக நியமிக்கத் தீர்மானித்தார்கள். ஆனால் ஜேம்ஸுக்கு ஹிராம் பாடசாலையைவிட்டுச் செல்லக் கொஞ்சமும் சம்மதமில்லை. ஆனால் ஜனங்களின் பெரும்பிடிவாதத்தால் ஒஹியோ சமஸ்தானத்தில் ஒரு ஸெனடராக விருக்க சம்மதித்தார். 1860ஸு ஜனவரி மாதம், அவர் ஸெனடராயினார். ஆனால் எக்லக்டிக் கலாசாலையின் சம்பந்தத்தை விடவில்லை. அடிக்கடி அங்கு சென்று கல்வி கற்பித்தும் வந்தார்.

அடிமை நிவாரணத்தைப்பற்றி வட சமஸ்தானங்களுக்கும் தென் சமஸ்தானங்களுக்கும் யுத்தம் நேரிட்டபோது, ஜேம்ஸ் கார்பீல்டு சைனியத்திற் சேர்ந்து வடசமஸ்தானங்களுக்காகச் சண்டையிட்டார். அவருடைய வீரச் செய்கைகளாலும் சாமர்த்தியத்தாலும் அநேக போர்களில் வெற்றி பெற்று, படைக்கு ஜெனராலாக உயர்த்தப்பட்டார். அவர் ராணுவத்திலிருந்த 2-வருஷம் 3-மாத காலத்தில், அவர் யுத்த வீரர்களாலும் இதர தளகர்த்தர்களாலும் மிகவும் விரும்பப்பட்டார்.

ஒஹியோ சமஸ்தானத்தின் ஜனங்களின் கோரிக்கையாலும் பிரஸிடெண்டு லிங்கோனின் விருப்பத்தாலும், 1863௵ டிஸம்பர் மாதத்தில் காங்கிரஸ் மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வாஷிங்டன் சென்று 17-வருஷ காலம் காங்கிரஸில் பலசீர்திருத்தங்களுக்குக் காரணபூதராயிருந்து வந்தார். 1880௵ ஜனவரி௴ ஜேம்ஸ், பிரஜைகளின் ஒற்றுமை யபிப்பிராயத்தால் ஐக்கிய மாகாணங்களுக்கெல்லாம் ஸெனடராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இது காங்கிரஸ் பிரஸிடெண்டு ஸ்தானத்துக்கு அடுத்த பதவி. இப்பதவியை யடைய அவர் ஒருவித முயற்சியுஞ் செய்யவில்லை. பாடசாலை இலக்கும் வேலை யொன்றுக்கு மாத்திரம், தான் முயற்சி செய்ததாகவும் மற்ற பதவியெல்லாந் தன் முயற்சியல்லாமலே கிடைத்ததாகவும் ஜேம்ஸ் கார்பீல்டு சொல்வதுண்டு. மாகாண ஸெனடர் ஸ்தானம் நியமனம் பெற்று அவ்வுத்தியோகத்தை வகிப்பதன் முன்னேயே ஜேம்ஸுக்கு அதினுமுயர்ந்தபதவி காத்திருந்தது. ஐக்கிய மாகாணங்களிலெல்லாம் முதன்மை ஸ்தானம் காங்கிரஸ்பிரஸிடெண்டு ஒருவருக்கே. அந்த ஸ்தானம் இச்சமயம் காலியாயிருந்தபடியால் பெரும்பாலரால் அவ்வுன்னத பதவிக்கு ஜேம்ஸ் கார்பீல்டு ஒருவரே தகுந்தவரென்று அனுமானிக்கப்பட்டு, அவர் கொஞ்சமும் எதிர்பாராதிருக்கும்போதே காங்கிரஸ் பிரஸிடெண்டாக நியமிக்கப்பட்டார்.

கார்பீல்டு பிரஸிடெண்டானார் என்ற சங்கதியைக் கேள்விப்பட்டதும், சந்தோஷித்து அத்தினத்தை உற்சவமாகக் கொண்டாடாதவர் கிடையாது. அவர்கள் செய்த ஆர்கலிப்பும் கொக்கரிப்பும் வானத்தைப் பிளந்து அப்பாற் சென்றிருக்கும். பதினையாயிரம் பேர்கள்வாழ்த்துக்கள் கூறி வாத்தியங்கள் முழக்கிக் குதூகலித்தார்கள். நூற்றுக்கணக்கான பீரங்கிகள் இடைவிடாது வெடிதீர்த்து அந்நாட்டாரின் சந்தோஷத்தைத் தெரிவித்தன. ஜேம்ஸ் கார்பீல்டு பிரஸிடெண்டாக நியமிக்கப்பட்டபோது உண்டான ஆரவாரமும் களிப்பும் அதற்கு முன் எப்பொழுதும் நிகழ்ந்ததுமில்லை. பின் நிகழப்போகிறதுமில்லை யென்னலாம். 1880ம் ௵ நவம்பர்௴ 2௳, அவர் பிரஸிடெண்டாக நியமனம் பெற்று 1881 ௵ மார்ச்சு௴ 4௳ ஒயிட் ஹௌஸில் பிரஸிடெண்டு ஸ்தானம்வகித்தார்.

அவர் பிரஸிடெண்டாக விருந்தகாலம் நான்குமாதந்தான். அவர் தனக்கு மந்திரிகளாக எக்கொள்கைகளுடையவரா யிருப்பினும் உன்னதமான சக்தியுடையவர்களையும் சமாதானமாகப் போகக்கூடியவர்களையும் மாத்திரமே தெரிந்தெடுத்தார். இதனாற்றான் அவருக்கு விரோதிகள் கிளம்பி அவருயிருக்கே ஹானி ஏற்பட்டது. தனக்கு கௌரவமான உத்தியோகங் கிடைக்குமென்று ஏமாந்து போன சார்லஸ் கிடே என்பவன் அவரை ஒரு ரயில் ஸ்டேஷனில் ஜுலை௴ 2௳ காலை 9-20 மணிக்கு துப்பாக்கியாற்சுட்டு வீழ்த்தினான். ஆனால் இவர் உடனே மரணமடையவில்லை. அவர் உயிர் மீள கடவுளுக்குப் பிரார்த்தனை செய்துகொண்டகுடிகள் எத்தனையோ லட்சம். சில சமயம் அனுகூலம் போல காணப்பட்டு, அவர் தேகஸ்திதி ஜனங்களுக்குக் குதூகலத்தை விளைவித்தது. ஆனால் ஜனங்களெல்லாந் துக்க சாகரத்திலமிழ செப்டம்பர்௴ 19௳ அவர் உயிர் நீங்கிற்று.

சாவதற்குச் சில வாரங்கள் முன்தான் அவர் உயிரை இன்ஷூர் செய்தார். அவர் இறந்த பிறகு ஜனங்கள் ஜேம்ஸ் கார்பீல்டிடம் தாங்கள் வைத்திருந்த ஆர்வத்துக்கும் மதிப்புக்கும் அறிகுறியாக 70, 000 பவுன் சேகரித்து அவர் மனைவியிடம் ஈந்தார்கள்.

வி. சுப்பிரமணிய ஐயர், பீ.ஏ.

---

**பூங்கோதை.**—மதுரையிலே இற்றைக்கு இருநூற்றெழுபத்தைந்து வருஷங்களுக்கு முன்னேயிருந்த வொரு தாசி. இவள் சீதக்காதியென்னும் சோனகப் பிரபுவுக்குக் காமக்கிழத்தியானமையால் தன்னினத்தாராலே நீக்கப்பட்டவள். இவள் காயற்பட்டினத்திலே சீதக்காதிகொடுத்த பெருநிதியைக் கொண்டு தன்னூருக்குப் போகும்வழியிலே கள்ளர் அப்பொருளைப் பறித்துக்கொள்ள, கதியற்றவளாய் நின்று "தினங்கொடுக்குங் கொடையானே" என்னு முதற்குறிப்புள்ள பாட்டுப்பாடி மீட்டும் அவனிடத்திற் பெரும்பொருள் பெற்றுப் போனாளென்பர். இவள் தமிழ்ப்புலமையிற் சிறந்தவளென்பதற்கு இப்பாட்டே போதுமான சாட்சியாகும்.

—**தமிழ்ப் பேரகராதி.**



## டைபாய்ட்சுரம், ஜன்னிசுரம், பித்தவாத ஜன்னி

## ENTERIC FEVER, TYPHOID FEVER

தற்காலத்திய நாகரிகத்துக்கு ஏற்றபடி பட்டணங்கள் அதிகரித்து அதில் வசிப்பவர்கள் விசேஷமாய் சுத்த காற்றுக் குறைவினாலும், சுத்தஜல கஷ்டத்தினாலும், சாக்கடை குப்பை இதுகளினின்று உண்டாகும் அசுத்தங்களினாலும் அநேக கொடிய வியாதிகளுக்குள்ளாகிறார்கள். இதில் அதிக ஆபத்தானவைகள் தொத்து வியாதிகள். இவை காலரா (வாந்திபேதி), பெரிய அம்மை, பிளேக், டைபாய்ட் சுரம், மலேரியா சுரம். மேலே சொல்லப்பட்டவைகளில் டைபாய்ட் தவிர, மற்றவைகளெல்லாம் சாதாரண ஜனங்கள் அறியும்படியாக கவர்ன்மெண்டார் பண்டிதர் மூலமாக பிரசுரம் செய்வித்திருக் கிறார்கள். ஆனதுபற்றி டைபாய்ட் சுரத்தைப் பற்றி நம்மவர் எளிதில் அறியும்படியாய் சுருக்கி இங்கு எழுதலாயிற்று.

சுரங்களின் வகை சங்கையற்றது. சில வியாதிகளோடு சுரமும் கூடவரும். அப்படிக்கில்லாமல் தொத்து வியாதிகளாய்ப் பீடிக்கிற சுரங்கள் அநேகம். அவைகளில் சில சுரங்கள் பரவும் காரணம் இன்னதென்று இன்னும் ஏற்படவில்லை. அம்மை, ஒரு அணுவுக்குக் கூட சிறியதான ஒரு பூச்சியினால் உண்டாக வேண்டுமென்று அனுமானிக்கப் பட்டாலும், அது இன்ன விதமென்று இன்னும் கண்டுபிடிக்கப்பெறவில்லை. மேலும் இன்புளுயன்ஸா என்கிற சுரமும், டெங்கு என்கிற சுரமும் தொத்து வியாதிகள்தான். அவைகள் பரவும் காரணமும் உண்டாகும் காரணமும் இன்னும் கண்டுபிடிக்கப்பெறவில்லை.

பிளேக் என்பது அணுதரிசினிக் கண்ணாடியால் (Microscope) காணக்கூடிய ஒரு சிறு பூச்சியால் உண்டாகிறதென்றும், அந்தப் பூச்சிகளை தெள்ளு பூச்சிகள் (Fleas) மனிதனுடைய இரத்தத்தில் உட் செலுத்துகின்றனவென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மலேரியா சுரமானது ஒருஜாதி கொசுவினால் கொண்டுவரப்பட்டு, மனிதன் இரத்தத்தில் கலக்கிற ஒரு சிறு பூச்சியால் உண்டாகிறதென்றும் நிர்ணயித்திருக்கிறார்கள். இந்தப் பூச்சி இரத்தத்தில் பரவி இரத்தாணுக்களைப் பீடித்திருப்பதை, மைகிருஸ்கோபில் பார்க்கலாம்.

டைபாய்ட் சுரமானது நம் நாட்டிற்கு புதியது என்று சொல்ல முடியாது. இது முன்னமே யிருந்திருக்கவேண்டும். நம்ம ஆயுர்வேத பண்டிதர்கள் இதை விஷ சுரமென்றும், ஜன்னிசுரம் என்றும், பித்தவாத ஜன்னி யென்றும் பலவாறாகச் சொல்லுகிறார்கள்.

இது சாதாரணமாக பட்டணங்களில் வசிப்பவரை பீடிப்பதல்லாமல் அங்கங்கே கிராமவாசிகளையும் பீடிக்கும். இது அதிகமாய்ப் புருஷர்களையும், அவர்களிலும் 5 வயதுக்கு மேற்பட்டு 50 வயதுக்குள்ளானவர்களை விசேஷமாயும் பீடிப்பதாகத் தெரியவருகிறது. 5 வயதுக்குட்பட்ட பாலர்களையும் விருத்தர்களையும் பீடிப்பது கொஞ்சம். ஸ்திரீகளைவிட புருஷர்களையே ஜாஸ்தி பீடிக்கிறது. இது இங்கிலாந்து முதலான தேசங்களில் குளிர் காலத்துக்கு முந்திதான் பீடிக்கிறது. ஆனால் நம்ம தேசத்திலேயோ இதற்கு விசேஷித்த காலம் ஒன்றும் இல்லை. வருஷம்முழுமையும் ஏறக்குறையக் காணலாம்.

இந்த சுரமானது அணுதரிசினிக்கண்ணாடியினால் (Microscope) காணக்கூடிய சிறு பூச்சிகளினால் உண்டாகிறதென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். மனிதன் மலத்தில் ஏராளமான சிறு பூச்சிகள் உண்டு. அவைகளில் கோலை என்ற பூச்சிதான் முக்கியமானது. வியாதியற்ற சுகசரீரத்தோடு கூடியவர்களின் மலத்திலும் கூட அது காணக்கூடியதே. டைபாய்ட் பூச்சியானது அந்த கோலை பூச்சி மாதிரியாகவே யிருக்கும். டைபாய்ட் பூச்சியானது இரு நுனியிலும் உருண்டும், இங்கும் அங்கும் நகரக்கூடிய சக்தியுடைத்தாயுமிருக்கும். இந்தப் பூச்சிகள் ஜலம், பால், மற்று முட்கொள்கிற ஆகாரத்தோடு கலந்து உட் சென்றவுடன் குடலில் போய்ச் சேர்ந்து அவ்விடத்தில் ஏராளமாய் விருத்தியாகின்றன.

இப்பூச்சியானது முற்சொல்லிய ஆகாரங்களின் வழியாய் உட் சென்றவுடன் அங்கே

விருத்தியாகி சுரத்தைஉண்டுபண்ணுகிற காலம் சாதாரணமாய் 10 நாள் முதல் 15 நாள் என்று சொல்லலாம். சில சமயங்களில் இவை 3 நாள் முதல் 30 நாள் ஆனாலும் ஆகும். ஒரு சிறு பூச்சி உட்சென்றால் 10 நாளைக்குள் அது கோடான கோடியாய் விருத்தியாய்விடும்.

வியாதியின் குறிகள்.—இந்த வியாதி ஆரம்பத்தில் அதிக மோசடியுள்ளது. வியாதியென்று வியாதிஸ்தனுக்கே தெரியாது. சாதாரணமாய் அலுவல் பார்த்துக்கொண்டேயிருப்பான். ஆனால் ஒரு மாதிரி அசங்கியமும், பசி அடைப்பும், கொஞ்சம் தலை நோவுமிருக்கும். சிறு பிள்ளைகள் கூட இச்சிறு அவஸ்தைகளை இலட்சியம் செய்யாமல் விளையாடிக்கொண்டிருப்பார்கள். பார்ப்பவர்களுக்கும் அவர்களுக்கும் வியாதியென்று தோன்றாது. இருக்க இருக்க பசியில்லாமையும், கால் கைகளில் நோவும், தலை வலியும், குளிரும் உண்டாகும். சில கேசுகளில் ஆரம்பத்திலேயே பேதி இருக்கும். இது சாதாரண மந்தபேதியென்று எண்ணக்கூடியதாயிருக்கும். சிலருக்கு வயிற்று சங்கடமும் வாந்தியுமிருக்கும் வயித்தியர்கள் கூட, அது இன்ன காரணத்தாலென்றறியாமல் வயிறு கெட்டிருக்குமென்று அதற்கு சிகிச்சை செய்வார்கள்.

சுரம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வரும். 5 அல்லது 6 நாளைக்குப் பின்பு நாடி துடிப்பாயும், உடம்பு உஷ்ணமாயும் ஆகும். இப்பொழுது தான் வியாதிஸ்தனுக்கு படுத்துக் கொள்ளவேண்டுமென்கிற கவலை தோன்றும். வீட்டிலிருப்பவர்களுக்கும் இவனுக்கு ஏதோ வியாதி இருக்கிறதென்று தெரியும். டைபாய்ட் கேசுகளில் சதாரணமாய் 6, 7 நாளைக்குப் பிறகு தான் தக்க சிகிச்சைக்கு ஆரம்பிக்கிறோம்.

நம் வைத்தியர்களுக்கு இந்த சுரத்தைக் கண்டு பிடித்து, மருந்து கொடுப்பதில், பழக்கம் உண்டு இல்லையென்பதைப்பற்றி நம்மால் சொல்ல சாத்தியமில்லை. ஆனால் இங்கிலீஷ் வைத்தியம் கற்றவர்கள், இருக்கும் சூசனைகளால் இது டைபாய்ட் என்று சாதாரணமாய் அறியக்கூடும். ஆனால் ஒரு வாரம் விடாசுரமிருந்து வேறெந்தவிதத்தாலும் இன்ன சுரமென்று அவர்கள் அறிவது கஷ்டமானால், உடனே வியாதியஸ்தன் இரத்தத்தை எடுத்துத் தங்களால் முடியுமானால் பரீக்ஷை செய்வார்கள்: அல்லது, அதை கிண்டியிலிருக்கிற கிங்கு இன்ஸ்டிடேட்டுக்கு அனுப்புவார்கள். இந்த கிங்கு இன்ஸ்டிடேட்டில் என்னவிதமான சுரம் என்று கண்டுபிடிக்க ஸாதனங்கள் இருக்கிறபடியால் இவ்விடத்துக்கு அனுப்பி அது டைபாய்ட்தான் என்று தீர்மானம் செய்துகொண்டு அதற்கு வேண்டிய சிகிச்சை செய்வார்கள்.

இரத்தம் எடுத்து பரீக்ஷைக்கு அனுப்பும் விதம் அதை எடுத்து அனுப்ப யோக்யதையுள்ள இங்கிலீஷ் டாக்டர்களுக்குத் தெரியும். ஆதலால் இங்கு அதை விவரித்தெழுதுவது அநாவசியம்.

இப்படி ஒரு வாரமானவுடன் சுரம்விடாமல் அடிப்பது தெரியவரும். சாயங்கால வேளைகளில் சுரம் ஜாஸ்தியாயும் காலைவேளைகளில் குறைந்து மிருக்கும். நாக்கு அசுத்தமாயும், ஜலம் மட்டுப்பட்டு மிருக்கும். ஜலம் சிவந்த வர்ண மாயுமிருக்கும். இரவில் ஆராட்டம் அதிகரிக்கும். இச்சமயத்தில் வியாதிஸ்தனுடைய வலது பக்கத்து அடிவயிற்றை அமுக்கினால் அவனுக்கு அதனால் ஒரு நோவுண்டாவதுடன் கலகலவென்ற இரைச்சலும் கேட்கும். பேதியிருந்தால் அது மஞ்சள் வர்ணமாயுமிருக்கும். (pea-soup colour). இச்சுரத்தில் நம்மவர்களுக்கு பேதியிருக்கிற கேசுகள் அதிக கொஞ்சம். வாந்திபேதியால் உண்டாகும்பேதி வடித்தகஞ்சிபோலவும், மந்தத்தினால் உண்டாகும் பேதி மாக்கரைத்ததுபோலு மிருக்கும். மஞ்சள் நிறமாய் சுரத்தோடு பேதிகண்டால் அது டைபாய்ட் என்று சந்தேகிக்க வேண்டியதுதான்.

7 முதல் 12நாளைக்குள்ளாக மார்பில் அம்மை போன்ற செங்குறுவுகள் புறப்படும். அது இரண்டு மூன்று நாளிருந்து மறைந்து, மறுபடியும் புதிதாய்க் கிளம்பும். இக்குறு சிகப்புடம்பு உள்ளவர்களன்றி நம்போன்ற மானிறமுடையவர்களுக்குத் தோன்றினாலும்கண்டறிவது கஷ்டம்.

இரண்டாவது வாரத்தில் சுரம் அதிகரித்து சாயங்கால வேளைகளில் 105 டிக்கிரியும், காலை வேளைகளில் 103 அல்லது 102மாய் இருக்கும்



இப்பொழுது தலைவலி அவ்வளவு கடினமாய் இல்லாமற்போனாலும் சுரம் அதிகமாயும்பேதியுமிருந்தால், சாயங்கால வேளைகளில் வெறி, மயக்கம், பேத்தல், நினைவழிவு, இதுகள் உண்டாகி, வியாதிஸ்தன் படுக்கை போர்வைகளில் கைசேஷ்டை முதலாகிய துர்க்குணங்கள் உண்டாகும். இப்பொழுதுதான் தலைக்கு பனிக்கட்டி கட்டுவதும், பனிக்கட்டி மீது படுக்க வைப்பதும், முதலிய சிகித்சைகள் செய்வது.

அதிக பிடிப்பில்லாத வியாதியாயிருந்தால் இரண்டு வாரம் ஆனவுடனே, சுரம் கொஞ்சம் கொஞ்சமாகத் தணியும். இல்லாவிட்டால் மூன்றும் வாரமும் இரண்டாம் வாரத்திலுண்டாகிய துர்க்குணங்களெல்லாம் காட்டும். இப்பொழுது நோயாளி அதிக பலஹீனமாயிருப்பான். அவனுடைய நாடியும் கெட்டுப்போகும். தக்க வைத்தியர்கள், நாடி சுத்தமாவதற்கும் பலமுண்டாவதற்கும் மருந்துகொடுப்பார்கள்.

மூன்றும் வாரத்தில் நிற்காமல் மேலே 4-அல்லது 5-வாரங்கள் பிடிக்கிற கேசுகளும் உண்டு. சாதாரணமாய் மூன்று வாரமட்டில் வேறே துர்க்குணங்களில்லாமலிருந்தால் சுரம் கொஞ்சம் கொஞ்சமாகத்தணிந்து நின்றுவிடும். இந்தவியாதியால் பேதி எடுத்திருக்கிற கேசுகளில் சிலவற்றில் இரண்டாம் வாரத்திலேயோ அல்லது மூன்றும் வாரத்திலேயோ இரத்தம் இரத்தமாய் பேதி ஆகும். இது கெட்டகுறி; இதற்கு உடனே தக்க சிகித்சை செய்யவேண்டும்.

இந்த வியாதி கண்டநாள்முதல் வியாதிஸ்தனை படுக்கைவிட்டு எழுந்திருக்க விடக்கூடாது. மலஜலங்கள் படுத்துக்கொண்டே போக, ஏற்பாடு செய்யவேண்டும். சாதம் முதலிய கெட்டிபோஜனங்கள் ஆரம்பத்திலிருந்தே தள்ளிவிடவேண்டும். ஏனென்றால் இது குடலொத்தவியாதி; குடல்களெல்லாம் இந்த பூச்சிகள் சஞ்சாரத்தால்புண்ணாயிருக்கும். ஆதலால் கெட்டி உணவு ஜீர்ணம் ஆகவே ஆகாது. இக்கெட்டி உணவினால் பேதி, வயிற்றுநோவு பாதை, நோயாளிக்கு ஏற்படும். ஆதலால் அதை முக்கியம் தள்ளிவிட வேண்டியது.

பார்லிகஞ்சி, ஜவ்வரிசிகஞ்சி, பால், இது ஜீர்ணமாகாவிட்டால், காய்ச்சினபாலில் ஒரு எலுமிச்சம் பழத்தைப் பிழிந்தால் அது உடைந்து போய்விடும். உடனே அதை ஒரு நல்ல துணியில் வடிகட்டி, அந்த வடிகட்டின ஜலம் இவைகளைக் கொடுக்கலாம். நாடி சுத்தமில்லாமலும் துர்ப்பலமாயுமிருந்தால் அடிக்கடி கொஞ்சம் பிராண்டி கொடுக்கலாம். வடிக்கட்டி காய்ச்சி குளிர்ந்த ஜலம் ஏராளமாய்க் கொடுக்கலாம்.

மூன்று வாரத்தில் சுரம் நின்று விட்டாலும் வியாதிஸ்தன் பின்பு இரண்டு வாரத்துக்குக் குறையாமல் படுக்கையிலேயே படுத்திருக்க வேண்டும். நாள்பட நாள்பட, கஞ்சியை விட்டு விட்டு பிஸ்கோத்து ரொட்டி இவைகளை கொஞ்சம் கொஞ்சமாய் சாப்பிட்டு ஜீர்ணமானால் பின்பு சாதாரண ஆகாரங்கள் மிதமாய் காரமில்லாமல் சேர்த்துக்கொள்ளலாம். தேகத்துக்கு பலம் வந்து கொஞ்சம் நடமாட சக்தி வந்தபிறகுதான் எண்ணெய்தேய்த்துக்கொள்ள வேண்டும். சுரம் நின்று மூன்று வாரம் வரையில் இச்சுரம் மறுபடி திரும்புவது சகஜமானபடியால் சாதம் போடுவதும், எண்ணெய்தேய்ப்பதும் வைத்தியர்கள் அனுமதியின்றி செய்யக் கூடாது.

தடுக்கும் முறை:—இந்த வியாதி சாதாரணமாய் சாக்கடை நீர், குப்பை, மல மூத்திரங்களினின்று உண்டாகும் அசுத்த காற்று அதிகமாய் இருக்கிற இடத்தில் ஜாஸ்தி உண்டாகிப் பரவுகிறதென்று நிர்ணயித்திருப்பதால், நம்முடைய வாசஸ்தலங்களை அதிக சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டுவது அவசியம். பட்டணங்களில் இவைகளைச் சேரவொட்டாமல் தடுப்பது பட்டணங்களின் சுகத்தைப் பாதுகாக்க ஏற்பட்ட அதிகாரிகளின் கடமை.

இந்த வியாதியானது ஒரு சிறு பூச்சியால் உண்டாகிறதென்றும், அது நாம் உட்கொள்ளும் ஆகாரங்களின் வழியாய் குடலில்சென்று அங்கே கோடானு கோடியாய்ப் பெருகுகிறதென்றும் சொன்னேம்.

அது மாத்திரமல்ல, அவை கொஞ்ச காலத்துக்குள் வியாதிஸ்தனுடைய மலம், மூத்திரங்களிலும் இரத்தத்திலும் பரவுகின்றன. ஆகையால் நோயாளியின் மல மூத்திரங்களில் இப்பூச்சிகள் ஏராளமாய் இருக்கின்றன. அவன் படுக்கும் படுக்கையும் அசுத்தமாகத்தான் இருக்கும். அவன் குடிக்கும் பாத்திரங்களிலேயும் அந்த அசுத்தம் கலந்திருப்பது சர்தாரணம். நோயாளியின் மல மூத்திரங்களை, அதனாலுண்டாகும் கெடுதியை அறியாமல், வெளியே கொண்டுபோய் போட்டு விடுகிறார்கள். இதி

னால் உண்டாகும் கெடுதி ஒன்று இரண்டல்ல. இதை சகலரும் நடக்கிற பாதையில்போட்டால் இதைத் தொட்டவனை யெல்லாம் ஒட்டிக்கொள்ளும். குழந்தைகள் மண்ணெடுத்து விளையாடுவார்கள். அவர்கள் கையில் பட்டால் அவர்களையும் பிடிக்கும்; அல்லது வெளியில் போடாமல் வீட்டிற்குப் புறக்கடையிலுள்ள சாக்கடையில் போட்டாலோ இன்னும் கொடுமை.

இச்சாக்கடை ஜலத்தில் இப்பூச்சி இன்னும் அதிகம் விருத்தியாகி வெளியில் வருவதுடன் மேலே யிருக்கிற ஊற்றுகளோடு கலந்து கிணறுகளிலும் போய்ச்சேரும். ஆகையால் இதை எங்கேயும் கொட்டக்கூடாது. மேலும் இந்த மல ஜலத்தை எடுப்பவர்கள் எப்படி கை சுத்தி செய்கிறார்கள். வெறும் ஜலம்விட்டுக் கழுவினால் இப்பூச்சிகள் சாகா. நோயாளி குடித்த பாத்திரங்களிலுமிருக்கும். ஆகையால் இந்த நோய் வீட்டிலிருப்பவரையும், ஊராரையும் பிடிக்கக்கூடாது என்று எண்ணும் புண்ணியவான்களெல்லாம் பின்வருமாறு செய்ய வேண்டியது.

ஒரு வீட்டில், டைபாய்ட் வந்தவுடன், அந்த நோயாளியை தனியாக காற்று ஓட்டமுள்ள சுத்தமான ஒரு அரையில் படுக்கவைக்க வேண்டும். அவனிடத்தில் யாராவது ஒருவர் தானிருக்கவேண்டும்.

குழந்தைகளையும், இவ்வியாதி கொடுமை அறியாதவரையும் அங்கு அனுப்பக் கூடாது. அவன் சாப்பிடும் பாத்திரம் படுக்கும் படுக்கை சாமான் இவையெல்லாம் வேறாகவே இருக்க வேண்டும். நோயாளியை, மலமூத்திரங்கள் தரையில் போகாமல்பார்க்கவேண்டும். ஒரு பாத்திரமோ அல்லது சட்டியோ வைத்து அதில் போகும்படி செய்யவேண்டும். அப்படி சட்டியில் போனவுடன், அம்மல மூத்திரங்களின் பேரில் புதியாய்த் தாளித்த சுண்ணாம்பை குழம்பாய்க்கரைத்து அறைப்படி அளவு கொட்டி அறைமணி சாவகாசம் வைத்திருக்க வேண்டும். அப்படி அறைமணி ஆன பிற்பாடு அவைகளை வீட்டுக்குப் பின்புறத்தில் 3 அடி ஆழம் குழிவெட்டி அதில் போடவேண்டும். இப்படிச்செய்தால் இப்பூச்சிகள் இறந்துவிடுகின்றன. மேலும் பீனெயில் (Phenyle)என்று ஒருதிராவகம் கடையில் விற்கிறது. அது புட்டி 5 அணா விலை. அதைவாங்கி ஒரு புட்டி திராவகத்தோடு 20 புட்டி ஜலம் சேர்த்து ஒரு தொட்டியில் வைத்துக்கொண்டு, இந்த ஜலம் கலந்த திராவகத்தை மலமூத்திரங்களின் மேல் போட்டு அறைமணி வைத்திருந்தால் இப்பூச்சிகள் சாகும். பின்பு இதை முன் சொன்ன மாதிரி அடக்கம் செய்யலாம். மலம் எடுப்பவர் கையையும், பாண்டங்களையும் திராவக ஜலம் விட்டுக்கழுவி கொஞ்சம் ஊரவைத்து பின்பு சுத்த ஜலம்விட்டுக் கழுவினால் சுத்தியாகும். நோயாளியின் படுக்கை பாய்களைக்கொண்டு போய், ஆறு குளங்களில் சுத்தம் செய்யக் கூடாது. அல்லது வீட்டிலேயும்கிணற்றண்டை சுத்திசெய்யக்கூடாது. அவைகளை சுத்தி செய்யக்கொண்டுபோவதற்கு முன், ஒரு வண்ணான் தாழியில் ஜலம் வைத்துக்காய்ச்சி அச்சலம் கொதித்துக் கொண்டிருக்கும்போது இத்துணிகளைப்போட்டு $\frac{1}{2}$ மணி நேரம் வேக வைத்துப் பின்பு எங்கே வேண்டுமென்றாலும் சுத்திசெய்யலாம். முன் சொன்னவை எல்லாருக்கும் பொது.

நகரவாசிகள் கவனிக்கவேண்டியவை இன்னும் சிலஉண்டு. இவ்வியாதியானது நாம் உட்கொள்ளும் ஜலம், பால்முதலிய ஆகாராதிகளின் மூலமாய் வருகிறபடியால் இவைகளைப் பற்றி நகரவாசிகள் கவனிப்பது அவசியம்.

ஜலம்.—சாதாரணமாய் பட்டணங்களிலிருப்பவர்களுக்கு குழாய்மூலமாய் சுத்தஜலம் கொடுக்கப்படுகிறது. அது சுத்தமா அசுத்தமா என்றுகவனித்து நல்ல சுத்த ஜலத்தையே கொடுப்பதற்காக கவர்ன்மெண்டார் தக்க அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள்.

பட்டணங்களிலுள்ள கிணறுகளோ அவ்வளவு சுத்தமா யிராது. சாக்கடை நீர் சம்பந்தப்பட்டதாகவே யிருக்கும். குழாய் ஜலம் அநாசாரமென்றும்,கிணற்று ஜலம் ஆசாரமென்றும் எண்ணி பட்டணங்களில் கிணற்று ஜலம் சாப்பிடுவது சரியல்ல. கிணற்று ஜலம் ஒருசமயம்நன்றாயிருப்பினும் ஊற்று அதிகரிக்க, கெட்டுப்போய்விடும். கிராமங்களில் சாக்கடை ஜலமாவது மலமூத்திரம் கலந்த ஜலமாவது கிணற்றுக்குப் போக ஹேது இல்லை. பட்டணங்களில் இவைகளில் கலக்காமலிருப்பதற்கு சாத்தியமில்லை. ஆதலால் பட்டணவாசிகள் குழாய் ஜலம்தான் சாப்பிடவேண்டும். பின்னும்அதிக ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமானால், அக்



குழாய் ஜலத்தை வடிகட்டிக் காய்ச்சி சாப்பிடலாம்.

பால்.—பட்டணங்களில் பால், கைப்பாலென்றும், கறந்த பாலென்றும் இருவகைப்படும். கைப்பாலென்பது, பால்காரன் வீட்டில் கறந்து தனக்கு இஷ்டமான அளவு அகப்பட்ட தண்ணீரை சேர்த்துக் கொடுப்பது. பால் எருமைப்பாலானாலும் தோஷமில்லை. அவன் சேர்க்கும் ஜலத்தைப்பற்றித்தான் பயப்படவேண்டும். இந்தப் பால் வாங்குகிறவர்கள் அதைத் தாங்கள் பால் காய்ச்சுகிற பாத்திரத்திலேயே வாங்கவேண்டும். பால் வாங்கின வுடன் அதே பாத்திரத்தை வைத்து காய்ச்சிவிட்டால் யாதொரு பயமுமில்லை. அப்படிச் செய்யாமல் வேறு பாத்திரத்தில் போட்டுக் காய்ச்சினால் பால்வாங்கின பாத்திரத்தையும் கூட நெருப்பில் போட்டுக் காய்ச்சவேண்டும்.

அப்படி காய்ச்சாவிட்டால் அதில் ஏதேனும் பூச்சிகள் இருந்தால் சாகமாட்டா.

கறந்த பாலிலேயும் கஷ்டம் உண்டு. மாடு எதிரில்கறந்தபோதிலும், பால்காரன் கைசுத்தமில்லை, அவன் தகர போகணி சுத்தமில்லை. மாட்டின் மடி சுத்தமில்லை. ஆகையால் கறந்த பால் வாங்குகிறோம் என்று கவுரவப்படாமல் அதையும் கைப்பால்போல பால்காய்ச்சுகிற பாத்திரத்தில் வாங்கி உடனே காய்ச்சவும்.

ஆகாராதிகள்.—பட்டணங்களில், மிடாய்க்கடை காபிஹோடல் என்கிற பலகார விற்பனைக்கடைகள் உண்டு. நம்மவரில் பெரியமனிதர்களும் ஆசாரம்உள்ளவர்களும் அங்கேபோவதில்லை. ஆனபடியால் அவர்கள், க்ஷேமம். ஆனால் அவர்கள் வீட்டுக்குழந்தைகள் சாயங்கால வேளைகளில் ஓமப்பொடிப் பொட்டலம் வாங்கிக்கொண்டுபோவதைப் பார்க்கலாம். இக்கடையில், எங்கேயோ நூற்றிலொன்று சுத்தமான வீட்டிற்கு உட்புறத்திலிருக்கிறது. ஆனால் இதிலும்கூட ஆசாரம் மட்டுத்தான். ஒருவன் குடித்த கப்பிலேயே மற்றொருவன் குடிப்பதும், ஒருவன் சாப்பிட்ட பிளேட்டிலேயே மற்றொருவன் சாப்பிடுவதுமா யிருக்கிறது. இந்த கப்புகளும் பிளேட்டுகளும் அடிக்கடி கழுவப்பட்டாலும், டைபாய்ட் மாதிரியான பூச்சிகள் இருந்துவிட்டால் அவை சாவது எப்படி? அது சாப்பிடுகிறவன் வயற்றுக்குள் போகும் என்பதற்கு சந்தேகமுண்டா?

சில ஆசாரமும், சுத்தியும், உள்ள பெரியவர்கள் வீட்டிலும் சிறுபிள்ளைகளுக்கு காலரா, டைபாய்ட் வருகிறதற்குக் காரணம் அப்பிள்ளைகள் வீட்டில் தெரியாமல்போய்க் கண்டதை வாங்கித் தின்பதினாலேதான்.

மிடாய்க்கடைகளோ ரோட்டுக்குப் பக்கத்திலிருப்பதால் ரோட்டு மண் பலகாரங்களில் கொஞ்சம் கலக்காமல் இருக்காது. மண்மாத்திரமா? இக்கடைகளின்கீழே அநேகமாய் சாக்கடையிருக்கும். சாக்கடையிலிருந்து, ஈ ஏராளமாய் வெல்ல பதார்த்தத்தைத் தின்ன வரும். இந்த சாக்கடையிலிருந்து வந்து உட்காருகிற ஈ மார்பில் என்னஎன்னபூச்சிகள் இருக்கின்றனவோ, டைபாய்ட் இருக்கலாம். காலரா பூச்சி யிருக்கலாம். இப்பூச்சிகள் இத்தின்பண்டத்தில் கலந்தால் அதைத் தின்பவர்களின் கதியை நீங்களே அறிந்துகொள்ளலாம். ஆகையால் பலபேர் கூடி சாப்பிடுகிற கப்பு, பிளேட் இருக்கிற காபி ஹோட்டல்களுக்கும், சாக்கடைமீதும் ரோட்ஓரமாயுமிருக்கிற மிட்டாய்க்கடைகளுக்கும் நம்ம சிறுவர்களைப் போகாமல் தடுக்கவும்.

முற்கூறிய ஜாக்கிரதைகளால் வாந்திபேதி டைபாய்ட் என்கிற இரண்டு விஷநோய்களைத் தடுப்பது மிகவும் சுலபம்.

டைபாய்ட் சுரம் வீட்டிலிருந்தாலும் அல்லது ஊரில் அதிகரித்து இருந்தாலும், எல்லாரும் இனாகுலேஷன் பண்ணிக்கொள்வது உத்தமம். இந்த இனாகுலேஷன், பிளேக் இனாகுலேஷன் மாதிரிதான். இதனால் தொந்தரவு ஒன்றுமில்லை. இது செய்துகொண்டால் ஒரு வருஷத்துக்கு டைபாய்ட்வாராது என்கிறார்கள். இது செய்துகொள்ள விரும்புவோர்கள் இங்கிலீஷ் டாக்டர்களைக் கேட்டால் விவரம் தெரியவரும்.

**எம். பரமேசுவரய்யர்.**

---

ஜாதிக்காய்:—இது உஷ்ணகாரி, கருப்பவாதஹாரி; அதிகமானால்—நித்திரையை யுண்டாக்கும் இதை அதிசாரபேதி, வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, அக்கினிமந்தம் ஆகிய இவைகளுக்குக் கொடுத்து குணம் கண்டதுண்டு. ஆனால் முக்கியமாய்க் கூட்டுமருந்து செய்முறைகளில் சேர்க்கப்படுகின்றது. கறிமசாலையோடும், தாம்பூலத்துடனும் சேர்ப்பது வழக்கம். போர்ட் ஒயினோடு சேர்த்துக் கொடுத்தால், உஷ்ணம் செய்து வாயுவைக் கண்டிக்கும்.

**இங்கிலீஷ் வைத்திய சங்கிரஹம்.**

# வெளிப்பிரயாணம்

## EXCURSION

நோக்கம்:—வெளிப்பிரயாணம் என்ற பதம், அர்த்தத்தை விளக்குகின்றதாயிருந்தபோதிலும், அப்பதம் பாடசாலையிலுள்ள சிறுவர்களை கட்டிடத்தைவிட்டு அதன் பிறகுள்ள இடங்களைக் கவனித்து வர அழைத்துப்போவதற்கு தற்காலத்தில் வழங்கிவருகிறது. பாடசாலையின் சம்பந்தமாக நடத்தப்படுமென்றும் உபாத்தியாயர்கூடச் செல்லவேண்டியிருக்குமென்றும் விளங்கும். ஆகவே இது வெளிப்பாடம் என்றசொல்லினும் பெயர் பொருந்தும். பாடசாலைக் கட்டிடத்தில் போதிக்கமுடியாதவற்றையும், அப்படி போதித்து வரப்பட்ட விஷயங்களை நிதர்சனமாகக் காட்டி மனதில் பதியச்செய்வதற்கும், உலக சிருஷ்டியைக் கவனித்து உற்று நோக்கும் சக்தியை விருத்தி செய்வதற்கும், ஏற்பட்ட முறையென்றால் சாலப் பொருந்தும்.

வகை:—இப்பிரயாணம் இருவகைப்படும். ஒன்று பாடசாலை நேரங்களில் நடத்தப்படும் பாடங்களை வற்புறுத்த வேண்டியபோது பிள்ளைகளை அழைத்துச் செல்லுதல்—உதாரணமாக தபாலாபீஸ்ப் பாடம் நடத்தும்போது தபாலாபீஸுக்குப் போவதும், பூகோளப் பெயர்களைப் போதிக்கும்போது ஆற்றிற்குச்சென்று மணலில் அவ்வுருவங்கள் செய்வதும், நெசவுப் பாடம் படிக்கும்போது பஞ்சு நூற்கும் யந்திரசாலைக்கும், தறிசாலைக்கும்போவதுமாம்.

இரண்டாவது:—பாடசாலையிலிருந்து வெளியே போவதற்கு இஷ்டப்படும் குழந்தைகள் எல்லாரும் பாடசாலையிலுள்ள உபாத்தியாயர்கள் பின்தொடர்ந்து, முன்னால் தெரிந்தெடுக்கப்பட்ட இடத்தைச் சேர்ந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டநாட்களைக் கழித்து பாடங்களை அறிதல். இவ்விரண்டும் சரியானபடி ஆசரணையிலிருப்பதாகத் தோன்றவில்லை. முதல் வகை மட்டும் சிற்சில இடங்களில் அநுசரிக்கப்பட்டு வருகின்றது. ஆனால், பிள்ளைகளுடைய பாட சம்பந்தமாயில்லாமலும் பிள்ளைகளுடைய அநுபவத்தை ஒட்டாதபடியும் இருக்கும் இடங்களைக்காட்டுவதும் சரியென்று கருதுபவருமுளர். இரண்டாவது வகை, சிற்சில இடங்களில்மட்டும் நடைபெறுவதாகத் தோன்றுகிறது.

நடத்தும்விதம், பிரயோஜனம்:—பாடசாலைக் கட்டிடத்திற்குள் போதிக்கப்படும்பாடத்திற்கு நோக்கம் ஒன்று எப்படி உண்டோ அப்படியே வெளிப்பிரயாணத்திற்கும் நோக்கம் உண்டு. அழைத்துப் போகப்படும் இடத்தைப் பற்றியும் பிள்ளைகளைக் கவனிக்கச்செய்ய வேண்டிய வஸ்துவைப் பற்றியும் உபாத்தியாயருக்குக் கூடியவரையிலும் பூர்ண அறிவு இருக்கவேண்டும். சாதாரண பாடத்தைத் தயார் செய்வது போலவே அவ்விடங்களுக்குச் சென்று பிள்ளைகளைக் கவனிக்கச்செய்ய வேண்டிய விஷயங்களைக் கவனித்திருத்தல் அவசியம். விஷயங்களைப் பாடங்களுக்குத் தகுந்தபடி தெரிந்தெடுத்தல் போலவே இடங்களையும் அவைகளிலுள்ள விஷயங்களையும் பொறுக்குதல் அவசியமாம். பிறகு உபாத்தியாயருடைய நோக்கம் முடிவு பெற்ற பிறகு அடக்கப்பட்டிருந்த அவர்களுடைய சுறுசுறுப்புக்கு இடம்கொடுத்து அவரவர்களுடைய மனோநோக்கப்படி அலைந்து திரிந்து புதிய விஷயங்களைக்கிரகித்து வரலும், அப்படிக் கிரகித்ததை சொல்லும்படி செய்தலும்காலம் கொஞ்சம் கொடுக்கவேண்டும். பாடசாலை அடைந்த பின்னர் வெளிப்பிரயாணத்தைப்பற்றி வியாஸம் எழுதச்செய்து திருத்தப்பட்டதை, பிறகு புத்தகத்தில் குறித்துவைக்க வேண்டும். கவனிக்கும் சக்தி விருத்தி அடைவதற்கும் விஷயஞானத்தின் அபிவிருத்திக்கும் ஏற்றவழியை ஆராய்ந்தால் குறித்தஇடத்தைப் பலதரம் சென்றுபார்த்தல் ஒருவகையென்று அறியலாம். தோட்டம், குளம், மரம், ஆறு இவைகளைப் பலருதுக்களில் கவனித்தல் தபாலாபிஸ் ரயில்வேஸ்டேஷன் முதலியனவற்றை ஒருநாளில் பல காலங்களில் போய்ப்பார்த்தல், கோர்ட்டுகள், யந்திரசாலைகள், கைத்தொழிற்சாலைகள், பாடசாலைகள் முதலியவற்றை வேலை நடக்கும்போது போய்ப்பார்த்தல், ம்யூஸியம், பார்க், முதலியவைகளை சமயம் நேர்ந்தபோதெல்லாம் கவனித்தல், மேற்சொல்லப்பட்டவைகளை இதர பாடங்களுக்கு சம்பந்தப்படுமாறு நடத்துவதே புத்திசாலித்தனமாம்.

இரண்டாவது வகையைப்பற்றி கூறுவோம். இவ்வகை இங்கிலாந்தில் அதிகமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. பெற்றோர்களின் அநுமதியின்மேல் உபாத்தியாயர்கள் சிலர் கூடி ஓரிடத்திற்குச் சென்று கூடாரங்களில் சில நாட்கள் வசித்து அவ்விடத்திலுள்ள இயற்கைப் பொருள்கள், பூகோளவிஷயங்கள், கணித சம்பந்தமாக நிலத்தை அளத்தல் முதலியவற்றைப் போதிப்பார்கள். அந்த நாட்களில் விளையாட்டுகளும், விருந்துகளும் வேடிக்கைகளும் நடைபெறுமென்று சொல்ல வேண்டியதில்லை. தனிமையான இடத்தில் கொண்டுபோகப்பட்ட வாலிபர்களின் சுபாவங்கள் வெளிப்படுவதற்கும் அவர்களுக்குள்ள சிநேகம் முதிர்வதற்கும் துர் அப்பியாஸங்கள் துர்க்குணங்கள் முதலியவை வெளிப்படுவதற்கும், வெளிப்பட்டவற்றைக் கண்டிப்பதற்கும் தருணம் பல நேரிடும். அன்றியும், ஐக்கிய பாவம் நன்கு விருத்தியடையலும், பலமுள்ளவர்கள் பலஹீனர்களுக்கு உதவிசெய்தலும்வியாதியஸ்தர்களுக்கு வேண்டிய உதவி மற்றவர்கள் புரிதலும், தந்நயம் பாராட்டாது சமுகத்தின் நன்மையைக்கருதலும், ஏற்படும் சமயங்கள் அநந்தம். யோசிக்குமிடத்து இவ்வகையினால் மனோவாக்குக் காயம் ஆகிய இம்மூன்றும் அபிவிர்த்தியடையுமென்று ஏற்படும். இந்நன்மைகளில் பலவற்றை குழந்தைகள் அடையும் பொருட்டு உபாத்தியாயர் பல விஷயங்களிலும் பின்பற்றத் தகுந்தவராக இருக்கக்கடவர் என்றும், அவரிடத்தில் வாலிபர்களுக்கு பூர்ண நம்பிக்கையும் பயபக்தியும் பிரியமும் இருக்கவேண்டுமென்றும் தெளிவாகும்.



இவ்வகை 15-வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத்தான் ஏற்றதென்று சொல்லலாம். இவ்வெளிப்பிரயாணங்கள் நடத்தப்படும்போது அவைகளை ஞாபகப்படுத்தும் ம்யூஸியத்திற்கு வேண்டிய சாமான்களைச் சேகரம் செய்யலாம்.

மேற்கூறப்பட்டவற்றால் வெளிப்பிரயாணம் என்பது ஒருவகை முறையென்றும், பாடமல்லவென்றும் தெளிவாகும். நவீனமுறையின் ஒரு ஏற்பாடு என்றுசிலர் நினைக்கின்றனர். முற்காலத்தில் குருகுலவாஸாதிகளின் சுபாவத்தையும் சிறப்பையும் அறிந்தவர்கள், இதை அவ்வண்ணம் கருதாமல் பழையது என்றுகருதி காலத்திற்கும் தேசவர்த்தமானங்களுக்கும் தகுந்தபடி மாற்றிப்புதுப்பித்துக்கொள்வார்கள்.

எம்மட்டில் அநுசரிக்கலாம்:—மேற்சொன்னபடி நடத்தி வருவதற்கு இடையூறுகளும் கஷ்டங்களும் பல உண்டாகும். முதலாவது இப்படிப்பட்ட வெளிப்பிரயாணத்தை நடத்தத் தகுந்த உபாத்தியாயர்கள் வேண்டுமென்பார்கள். பெற்றோர்கள் இங்ஙனம் அழைத்துச் செல்ல அநுமதி கொடுக்கும் நிலைமை தற்காலத்தில் ஏற்படவில்லை என்பார்கள். இவை இரண்டும் சௌகரியமானாலுங் கூட பணத்தின் கஷ்டம் வெகு அதிகம். அன்றியும் முன்யோசனையும் உத்தியோகஸ்தர்களின் உதவியும் அதிகம் வேண்டும். தேசத்தின் அபிவிருத்தியையும் தன் மாணாக்கர்களின் நன்மையையும் சதாகருத்துள்ளமைத்த உபாத்தியாயர்கள் ஏற்படும்கஷ்டங்களை அதனால் உண்டாகும் நன்மையின் பரிமாணத்திற்கு ஒரு பொருட்டாகாதென்று நினைப்பார்கள் என்று நம்பலாம்.

குணநாடிக் குற்றமுநாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல் —திருவள்ளுவர்.

என். கிருஷ்ணராவ், பி. ஏ., எல், டி.

---

உன்னைப்போலப் பிறரையும் நினை.—பிறர் உள்ளத்தை அறிய நீ உன் உள்ளத்தையே சோதித்துப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஏனெனில், எங்கும் மனுஷ சுபாவமொன்றே. சிலரிடம் சில குறைகுணங்கள் சிறப்பாய் இருப்பினும் பொதுக் குணங்களில் மனிதர்கள் ஒத்தே இருப்பார்கள். ஆகையால் எது உனக்குப் பிடிக்குமோ, அது இதரர்களுக்கும் பிடிக்குமென்றும், எது உனக்குப் பிடிக்காதோ அது அவர்களுக்கும் அப்படியேயென்றும் நம்பு. ஒரு மனிதன் உன்னைப்பற்றி இகழ்ச்சியாய் ஒரு சபையில் பேசும்பொழுது உன் மனதில் உண்டாகும் வருத்தத்தைப் பரிசோதித்திருப்பாயாகில் உன்வாழ்நாள் முழுதும் நீ ஒருவரையும் இகழவே மாட்டாய். ஒருவன் உன்னை இகழும்பொழுதும் தாழ்த்தும்பொழுதும் உனக்குண்டாகும் கோபம் துயரம் துக்கம் இவைகளை மனதில் வைத்துக்கொண்டிருப்பாயாகில் நீ ஏன் மற்றவர்களை இகழப்போகிறாய். ஒரு பரிகாசத்தால் சிநேகிதன் ஒருவனை இழந்துவிடுவது எவ்வளவு பெரிய நஷ்டம். ஆனால் அப்படி ஒரு சிநேகிதனைப் பரிகாசத்தால் இழந்தாலும் இழந்துவிடலாம்; பழித்து பகைத்துக் கொள்ளக் கூடாது. ஒருவன் உன்னை ஒருசபையில் இகழ்ந்து பேசினால் உன் மனதில் எவ்வளவு வருத்தம் இருந்தபோதிலும், முதலில் கொஞ்சமேனும் காட்டிக் கொள்ளாமல் அது உன்னைப்பற்றிச் சொல்லப்படாததுபோல நீ நடந்து கொள்ளவேண்டும். கொஞ்சமேனும் மறைவில்லாமல் உன்னைப்பற்றி நோகவே சொல்லப்பட்டு எல்லாரும் உன்னைப் பார்த்துச் சிரிப்பார்களாகில் நீயும் அவர்களுடன் சேர்ந்து சிரித்துச் சொன்னவைகளெல்லாம் வெகு சரியென்று சந்தோஷமாகக் காட்டிக்கொள்ளவேண்டும்.

# தஞ்சாவூர் ஜில்லா சரித்திரம்

## THE HISTORY OF TANJORE DISTRICT

### அத்தியாயம். I.

### இயற்கைத் தோற்றங்கள்

*பொது விவரம் வடிவும் எல்லையும்.*

தஞ்சாவூர் ஜில்லா, சென்னை ராஜதானியின் தென் கீழ்பாகத்தில் கடற் கரையை யடுத்ததோர் ஜில்லாவாகும். அதன் பரப்பளவு 3727-சதுரமைல். இந்த ஜில்லாவுக்கு வடக்கே போடும் கொள்ளிட நதி, தஞ்சை ஜில்லாவுக்கும் தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களுக்கும் இடையிட்ட எல்லையாகவமைந்துள்ளது. மேற்கே, புதுக்கோட்டை ராஜ்யமும் திருச்சிராப்பள்ளி ஜில்லாவும் எல்லைகள். கிழக்கே கடல். தெற்கே கடலும், ராமநாதபுரம் ஜில்லாவும் எல்லைகளாம். பொதுவாக, இந்த ஜில்லா ஒரு முக்கோண வடிவமாக விருக்கிறதென்று சொல்லலாம். ஒரு பக்கத்தில் மேற்கூறிய கொள்ளிடமும், மற்றைய இருபக்கங்களிலும் கடற்கரையும் இம்முக்கோண வடிவுக்கு எல்லைகளாகின்றன.

*தாலூகாவும் முக்கிய பட்டணங்களும்.*

இந்த ஜில்லாவில் இப்போது பதினொரு தாலூகாக்கள் உள்ளன. அவையாவன:—அறந்தாங்கி, கும்பகோணம், சீர்காழி, தஞ்சாவூர், திருத்தருப்பூண்டி, நன்னிலம், நாகபட்டணம், பட்டுக்கோட்டை, பாபவிநாசம், மன்னார்குடி, மாயவரம் என்பனவாம். அவைகளின் விஸ்தீர்ணமும் நிலவளம் முதலிய விவரங்களும் பின்னர்க் கூறப்பட்டுள்ளன. மேலே கூறிய எல்லைக்குள் பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமாகிய காரைக்கால்மாகாணமும் அடங்கியிருக்கின்றது. ஜில்லாவின் தலைநகர் தஞ்சாவூரே. தாலுகாக்களின் தலைநகர் இருக்குமிடத்திலிருந்தே அவ்வத் தாலுகாக்களுக்குப் பெயர்களுமேற்பட்டுள்ளன. இவைகளைத்தவிர, இந்த ஜில்லாவில் செல்வத்தாலும் வேறு காரணங்களாலும் பேர்பெற்ற விடங்கள் சிலவுள்ளன. அவைகளைப் பற்றிய விவரங்கள் 'ஸ்தலவிவரம்' என்ற அத்தியாயத்தில் கூறப்பட்டிருக்கின்றன.

*பெயர்வரலாறு.*

தலைநகரின் பெயரே இந்த ஜில்லாவுக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் அந்தப் பெயர் வந்த காரணம்மட்டும்தெளிவாய்த்தெரியவில்லை. முன்னொரு காலத்தில் 'தஞ்சன்' என்ற பேருள்ள ராக்ஷதன் ஒருவன் இங்கு வாழ்ந்து ஜனங்களை இம்சைப்படுத்தினனும். அவனை மஹாவிஷ்ணு சம்ஹாரம் செய்துவிட்டார். அவரால் கொல்லப்படும் காலத்தில் இவ்வசுரன் தான் வாழ்ந்து வந்த பிரதேசத்துக்குத் தன் பெயரையே இடவேண்டுமென்று வேண்டிக்கொண்டதாகவும், அவ்வேண்டுகோளின் படியே 'தஞ்சாவூர்' என்ற பேர் இந்த நாட்டுக்கு வந்ததாகவும் ஒரு கதையுண்டு. அடைக்கலம் என்று பொருள் படும் 'தஞ்சம்' என்ற பதத்திலிருந்து இந்நகரத்தின் பெயர் வந்திருக்கலாமென்று ஊகிக்க இடமுண்டு. தஞ்சமாக வந்து அடையப்படும் நகரம் என்பது பொருளாம்.

*இயற்கைப்பிரிவுகள்*
*1. காவிரிப் பிரதேசம்.*

தஞ்சாவூர் ஜில்லாவின் இயற்கை வளம் இரு பிரிவினதாகவுள்ளது. காவிரி நதி பாயப்பெற்ற பிரதேசமும் அதில்லாத மேட்டுப்பாங்கான விடமுமென. காவிரிப் பிரதேசம் ஜில்லாவில் பாதிக்கு மேற்பட்ட விஸ்தீர்ணமுள்ளது. அதற்கு வடக்கெல்லை கொள்ளிடநதி; கிழக்கில் கொள்ளிடம் சங்கமமாகுமிடத்திலிருந்து கோடியக்கரை முனை வரையில் நேர் தெற்காகவரும் கீழ் சமுத்திரக்கரை எல்லையாம். தஞ்சாவூர்த் தாலூகாவின் வடமேற்கு மூலையிலிருந்து தஞ்சை, மன்னார்குடி தாலூகாக்களினூடே வந்து, திருத்தருப்பூண்டித் தாலூகாவுக்கு மேற்கே கடற்கரையைச் சந்திக்கும்படி ஓர் கோடு இழுத்தால் அதுவே காவிரிப் பிரதேசத்தின் தெற்கெல்லையாகும். இதற்குள் கும்பகோணம், சீர்காழி, நன்னிலம், நாகப்பட்டணம், பாபவிநாசம்மாயவரம்தாலுக்காக்கள்முழுமையும்திருத்தருப்பூண்டித்தாலூகாவின்பெரும்பாகமும்தஞ்சாவூர் மன்னார்குடித் தாலூகாக்களின் ஓர் பாகமும் அடங்கியுள்ளன. வண்டல் படிந்ததும் மேடு பள்ளமில்லாத நெல்வயல்கள் நிரம்பியதும், ஆங்காங்கு தென்னை, மா, முதலிய பல விருக்ஷங்களடங்கிய சோலைகளால் அணிவகுக்கப் பட்டதும் கடற்கரையை நோக்கிச் சற்றுச் சரிவாகவிருப்பதுமான இந்த விசாலமானபிரதேசத்தில் கடற்கரையோரத்தில்காணப்படும் மணல் மேடுகளைத் தவிர வேறு குன்றுகளாவது மலைகளாவது கிடையாது. கடலும் மணல் தரையிலேயே அலைமோதுகின்றது. ஆகவே கடற்கரை ஒரேதோற்றத்தினதாகவே இருக்கும்.

*மேட்டுப் பிரதேசம்.*

ஜில்லாவின் மற்றைப் பாகங்கள் இரண்டாவதாகக் கூறிய மேட்டுப் பிரதேசத்திலடங்கும். காவிரிப்பிரதேசத்தைக் காட்டிலும் இது சற்று பேடானது. அதைப்போலவே கீழ்த்திசையை நோக்கிச் சரியும் சுபாவமுடையது. இங்கும் குன்றுகள் இல்லை. தஞ்சாவூருக்குத் தெற்கிலும் தென்மேற்கிலும் ஒரு சிறிய பீட பூமியுண்டு. அதற்கு 'வல்லம் பீட பூமி' என்று பேர் வழங்குகின்றது.

*வேதாரண்யம் உப்புச் சதுப்பு நிலம்.*

இவ்விரண்டு பிரிவுகளையுந் தவிர, இந்த ஜில்லாவில் கோடியக்கரை முனை தொடங்கி, அதிவீரராமன் பட்டணம் வரையில் 30 மைல் தூரம் பரவிய ஒரு பிரதேசம் உண்டு. இதற்கு வேதாரண்யம் உப்புச் சதுப்பு நிலம் என்றுபேர். சாதாரணமாக 4 அல்லது 5 மைல் அகலமுள்ளது. இந்த ராஜதானியில் உள்ள இவ்வகை நிலங்களைக் காட்டிலும் பெரியது. சித்திராபர்வத்திலும் வைசாக வெள்ளத்திலும் கடல் பொங்கும்போது இதில் நீர்நிரம்பும். இதனால் அங்கு உப்பு தானகவே உண்டாகின்றது.

*மலைகள்.*

இந்த ஜில்லாவில் மலைகளே இல்லை. கடல் மட்டத்திற்குமேல் 160 அடி உயரமுள்ள பிரதேசம் எங்குமேயில்லை. வல்லம் பீடபூமி தான் இந்த ஜில்லாவில் வெகு உன்னதமான பாகம்.

*ஆறுகள்: காவிரி, கொள்ளிடம்.*

காவிரியும் அதன் கிளை நதிகளுமே இந்த ஜில்லாவில் ஓடும் முக்கிய நதிகள். காவிரிநதி, குடகு மலையில் உற்பத்தியாகி கிழக்கு நோக்கி யோடிவந்து, திருச்சிராப்பள்ளிக்கு ஒன்பது மைல் மேற்கில் இரு பிரிவாகின்றது. இவ்விடத்துக்கு 17 மைல் கிழக்கில் இவ்விரண்டும் ஒன்று சேருவதுபோல நெருங்கி, மறுபடியும் பிரிகின்றன. வடக்கிலுள்ளது கொள்ளிடம் என்ற பேருடன் வடகிழக்கு மூலையாய் ஓடி, தஞ்சை ஜில்லா முழுவதற்குமே வடக்கெல்லையாயமைந்து ஜலம் குறைவுபடாமல் கடலில் விழுகின்றது. தெற்கிலுள்ளது காவிரி யென்ற பெயருடன் தெற்கே திரும்பி, தஞ்சை ஜில்லாவில் பெரும்பாகத்தில் வலைப்பின்னல் போல பற்பல கிளை நதிகளாகப் பிரிந்து பிரிந்தோடி கடைசியாய்க் காவிரிப்பட்டணத்தில் ஒருசிறு கால்வாயாகக் குறுகிக் கடலில் விழுகின்றது.

காவிரியின் கிளை நதிகளாவன:—வெண்ணாறு, குடமுருட்டி, வெட்டாறு, அரசலாறு, திருமலைராஜன், முடிகொண்டான், வீரசோழன், கோரையாறு, பாமணியாறு முதலியனவாம். ஒவ்வொன்றினின்றும் பிரியும் சிறு நதிகள் பலவுள. பட்டுக்கோட்டைத் தாலூகாவில் சில காட்டாறுகள் உண்டு. ஜலத்தைத் தேக்கிக்கொள்வதற்காக அவைகளின் குறுக்கே அணைகள் கட்டப்பட்டிருக்கின்றன. காவிரிப் பிரதேசத்து நதிகளெல்லாம் மணல் தரையை யுடையன.

இவ்வாறுகளில் பெரும்பாலன முகத்துவாரத்திலிருந்து சில மைல் தூரம் வரையில் சிறிய படகுகள் வரக்கூடிய ஆழமுள்ளவை. என்றாலும் அவற்றுள் மூன்றின் முகத்தில் மட்டுந்தான் துறைமுகங்கள் உபயோகப்படுகின்றன. அவை, தோப்புத்துறை துறைமுகத்தில் விழுகிற அடைப்பாறு, திருமுலவாசல் துறைமுகமிருக்கும் உப்பனாறு, முத்துப் பேட்டைத் துறை முகத்தையும் கடலையும் இணைக்கும் கோரையாறு என்பனவாம். மற்றைய நதிகளும் முன்னளில் படகுகள் போகக்கூடிய ஆழமுள்ளனவாக இருந்திருக்கவேண்டும். கடற்கரையோரமாகவே, நாகபட்டணத்திலிருந்து வேதாரண்யத்திற்கும், தரங்கம்பாடியிலிருந்து திருமுலவாசலுக்கும் போக்கு வரவுக்கு லாயக்கான கால்கள் வெட்டப்பட்டிருக்கின்றன.

*தீவுகள், பாலங்கள்.*

கொள்ளிட நதியில் சில தீவுகள் இருக்கின்றன. அவைகளுள் ஒன்றான 'விநாயகத் தெரு' கும்பகோணம் தாலூகாவைச் சேர்ந்தது. அங்கு ஜனங்கள் குடியேறி யிருக்கின்றனர். இவ்வாற்றுக்கும் காவிரிக்கும் அதன் கிளை நதிகளுக்கும் ஆங்காங்கு பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

தஞ்சை ஜில்லாவுக்கு மேற்கே, காவிரி நதி

மைல் ஒன்றுக்கு $3\frac{1}{2}$ அடிவீதம் பள்ளத்தில் விழுகின்றது. ஜில்லாவுக்குள் வீழ்ச்சி 2·7 அடி. கொள்ளிடநதி விநாயகத் தெருவரையில் 2·8 அடி வீழ்ச்சியுடன் வருகிறது. அங்குள்ள 'லோயர் அணைக்கட்டு' க்குக் கீழே 3·3 அடி வீழ்ச்சியுடன் கடலில் கலக்கின்றது.

**துறைமுகம்.** தஞ்சை ஜில்லாவில் 11 துறைமுகப் பட்டணங்கள் உள்ளன. அவைகளில் திருமுலவாசல், தரங்கம்பாடி, நாகபட்டணம், வேளாங்கண்ணி, தோப்புத்துறை, கோடியக்கரை, முத்துப்பேட்டை, அதிவீராமன் பட்டணம் என்பவை அந்நியதேச வியாபாரம் செய்யலாம். கொள்ளிட முகத்தினருகிலுள்ள கொடியம்பாளையம், பட்டுக்கோட்டைக்கரையிலுள்ள கட்டுமாவடி, நாகபட்டணத்துக்குச் சமீபமான நாகூர் ஆகிய மூன்றும் கடற்கரை யோரமாகச் செய்யும் வியாபாரத்துக்கு மட்டும் உபயோகப்படவேண்டியவை. சிறிய படகுகள் இத்துறைமுகங்களில் வந்து நிற்கலாம். பெரிய கப்பல்கள் 2 அல்லது 3 மைல் தூரத்துக்கப்பால் கடலில்தான் நிற்கவேண்டும். கோடியக்கரை முனைக்கருகில் $\frac{3}{4}$ மைல் தூரத்தும், தரங்கம்பாடிக்கெதிரே $1\frac{1}{2}$ மைல் தூரத்தும் கப்பல் நிற்கக்கூடும். அதற்கு இப்பால் மண் மேடுகளிருப்பதால், கப்பல்கள் வருவதற்கில்லை. சாமான்கள் படகுகள் மூலமாகத்தான் கரைக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

**தோற்றம்.** தஞ்சாவூர் ஜில்லாவில் பார்வைக்கு அழகாய் இயற்கைத் தோற்றம் இல்லையென்று குறை கூறுவது ஸகஜம். மலைவளமில்லாதது, ஓர் பெருங்குறையேயென்றாலும், நிலவளன் எல்லாராலும் வியக்கக்கூடியதா யிருக்கின்றது. கண்ணுக்கெட்டிய தூரம்வரையிலும் பசுமையான நெற்கதிர்கள் தழைத்தோங்குவதையும், இடையிடையே தென்னை முதலிய பலனளிக்கும் மரச்சோலைகள் தலை யெடுத்து நிற்பதையும், இருகரையும் ஒரு கரையாகப் பெருகிய ஆறுகள் அடுத்தடுத்து ஓடுவதையும் கண் குளிரப் பார்ப்போர் இவ்விதம் குறை கூறத் துணியார். வருஷத்தில் நான்கு மாதங்கள் இவ்வாறுகளில் ஜலமிராதென்றாலும், மற்றைய ஜில்லாக்களில் அதிக காலம் இருப்பதைப்போன்ற மணற்றரைகள் இரா. மேட்டுப் பிரதேசங்கள் அவ்வளவு சிலாக்கியமல்லவாயினும் காடுகள் ஏராளமுடையன.

**நிலவளம்.** இந்த ஜில்லாவின் நிலவளம், வண்டல், செம்மண், மணற்பாங்கு, கரிசல் என நால்வகையாக வுள்ளது. கரிசல் நிலம் தான் மிகுதி. அதிற்பாதி வண்டல் நிலம். மணற்பாங்கு அற்பம். இரும்பு சம்பந்தமான செம்மண் நிலம் தஞ்சை, திருத்தருப்பூண்டி, பட்டுக்கோட்டை, மன்னார்குடித் தாலூகாக்களில் விசேஷம். மணற்பாங்கு நிலம் தஞ்சாவூர், மன்னார்குடி, கும்பகோணம் தாலூகாக்களில் காணப்படுவதில்லை. கடலையடுத்த பிரதேசம் பொதுவாக மணற்பாங்காகவிருக்கின்றது. பாசன மிராவிட்டால், வனாந்தரமாய்ப் போய்விடும். கரிசல் எங்கும் காணப்படும்; என்றாலும் ஜில்லாவின் இருகோடிகளில் அபூர்வம். வண்டல் நிலம் காவிரிப் பிரதேசத்தில் மட்டுமே காணப்படுகிறது. எருவே உபயோகிக்காது போனாலும் இதன் வளம் குறைவடைவதே யில்லை. ஆற்று ஜலம் பாய்வதால் 15 வருஷத்தில் ஆறங்குலம் வண்டல் படிகின்றதெனக் கணக்கிட்டிருக்கின்றனர். சீர்காழித் தாலூக்காவிலும் கொள்ளிடத்திலிருந்து பிரியும் வாய்க்கால்களின் வண்டல் படிந்த பிரதேசம் கொஞ்சம் உண்டு.

**பூதத்வம்.** பொதுப்படக் கூறுமிடத்து, ஜில்லாவின் பெரும் பாகம் பாறையற்ற மணற்றரையில் வண்டல் கலந்ததாகவே யிருக்கிறது. மேற்குப் பாகத்தில் வண்டல் ஜாஸ்தியாயும் கடற்கரையைச் சமீபிக்கச் சமீபிக்க வண்டல் குறைவாயும் காணப்படுகின்றது. அலைமோதுவதால் வண்டற்றரை வரவரக் குறைந்துபோகின்றதெனக் கூறப்படுகின்றது. பட்டுக்கோட்டையைச் சுற்றியுள்ள இடந்தவிர, மற்றைய மேட்டுப் பிரதேசங்களில் செம்பாறுங்கல் காணப்படுகின்றது. கந்தர்வகோட்டைக்குச் சமீபத்தில் கற்பாறைகள் உள்ளன. அவை கனமுள்ளவையாயும் உறுதியாயும் மஞ்சள், சிவப்பு முதலிய நிறமுள்ள வேறு பாறைகளால் மூடப்பட்டவையாயுமிருக்கின்றன.

**உலோக வர்க்கம்.** தஞ்சாவூர் ஜில்லாவில் உலோகங்கள் அபூர்வம். மேட்டுப் பிரதேசத்திலுள்ள செம்பாறுங் கற்றரையில் இரும்பு காணப்படுகின்றது. என்றாலும் அதை வெட்டியெடுக்கும் முயற்சியில்லை.

வல்லத்துக்குச் சமீபத்தில் ஒருவிதமான கூழாங்கற்கள் அகப்படுகின்றன. ஸ்படிகம், புகை வர்ணக்கல், வட்டமான மஞ்சள் வர்ணக்கல், செவ்வந்திக்கல் ஆகியவைகளே முக்கிய தினுசுகள். தஞ்சையிலுள்ள ரத்ன வியாபாரிகள் இவைகளைச் செதுக்கி அழகுக்கும் உபயோகத்துக்கு மேற்ற வஸ்துக்களாகச் செய்கின்றனர்.

செம்பாறுங்கல் அகப்படுமிடங்களில் அது வீடு கட்டுவதற்கும் பாதை போடுவதற்கும் உபயோகப்படுகிறது. முக்கியமாக அப்பொருள் தஞ்சாவூர்த் தாலூகாவில் வல்லத்திலும் கந்தர்வ கோட்டையிலுமே அகப்படுகின்றது. வெட்டியெடுக்கப்படும்போது, அது எளிதில் பொடியாகப் போய்விடும் தன்மையதாயினும், கொஞ்ச நாள்களுக்கு வெயிலிலும் மழையிலும் போட்டுவைத்தால் உறுதியாகிவிடுகிறது.

சுண்ணாம்புக்கல் எங்கும் ஏராளமாகக் காணப்படுகின்றது. பூச்சுச் சுண்ணாம்பு செய்வதற்கு மிகுதியாக உபயோகிக்கப்படுகின்றது. வல்லத்துக்கு மேற்கில் சிறிது சிறிது மஞ்சள் காவியும், திருச்சிராப்பள்ளி ஜில்லா ஓரமாக, காவிரியின் தென்கரையில் 'சோடா' மண்ணும் காணப்படுகின்றன. நாகூருக்குச் சமீபத்தில் மட்டமான சிலாசத்து அகப்படும்.

**சீதோஷ்ணம், பருவம்.** இந்த ஜில்லாவில் வருஷமொன்றுக்குச் சராசரி 44·23 அங்குல மழை பெய்கின்றது. கடலையடுத்த தாலூகாக்களில் ஜாஸ்தியாயும் உள்நாட்டுத் தாலூகாக்களில் குறைவாகவும் பெய்யும். பக்கத்திலுள்ள இதர ஜில்லாக்களில் காட்டிலும் இங்கு அதிக மழை பெய்கிறது*. மே, ஜூன் மாதங்களில் அதிக கோடை. ஆறுகளில் ஜலமில்லாமலிருப்பதும், உஷ்ணக்காற்று வீசுவதுமான ஜூன் மாதத்தில் கோடைப்பருவம் தாங்கமுடியாமலிருக்கும். அப்பால் ஆற்று வெள்ளமும், தென்மேற்குப் பருவக்காற்றால் ஓரோர் வேளையில் பெய்யும் மழையும் உஷ்ணத்தைத் தணிக்கும். அக்டோபர் மாதத்திலிருந்து குளிர்காலம் தொடங்கி ஜனவரி முடிவுவரையி லிருக்கும். பெப்ருவரி, மார்ச்சு மாதங்களில் பகலில் உஷ்ணம் சுமாராகவும் இரவில் குளிராகவும் இருக்கும். அப்போது பனி மிகுதியாகப் பெய்யும். மார்ச்சு மாதத்தின் பிற்பாதியில் கோடையாரம்பமாகிவிடுகின்றது. பொதுவாகவே கடற்கரையை நெருங்க நெருங்க குளிர்ச்சியதிகமாகும். வல்லத்துக்குச் சமீபமான இடம் தேகாரோக்கியத்துக்கு ஏற்றதாம். ஈரமில்லாத காற்றும் மேட்டுப்பாங்கும் இந்த குணத்தைக் கொடுக்கின்றன. பட்டுக்கோட்டைத் தாலூகாவில் கடற்கரையோரத்தில் உஷ்ணம் அதிகமாயும் உட்பிரதேசத்தில் சற்று குறைவாயும் காணப்படுவது விபரீதம்.

ஏப்ரல் மாதத்தில் தொடங்கும் தென் மேற்குக் காற்று ஜூன் மாதத்தில் கடுமையாக வடிக்கும். செப்டம்பர் மாதத்தில் மிருதுவாயடித்து, அக்டோபரில் நின்றொழியும். நவம்பர் ஆரம்பத்தில், வட கீழ்காற்று தொடங்கி மிருதுவாக ஜனவரி மாதம் முடிவு வரையிலடிக்கும். அப்பால் நின்று போய், மார்ச்சு மாத முடிவில் தென் கீழ்த்திசை வழியாகத் தென் மேற்குத் திசைக்கு மாறி அங்கிருந்து அடிக்கத் தொடங்கும்.

**விருக்ஷ வர்க்கம்.** தஞ்சை ஜில்லாவில் காணப்படும் விருக்ஷவர்க்கம் சாதாரணமானதே. பழந்தரும் மரங்கள் ஏராளம். மா, தென்னை, புளி விசேஷித்துக் காண்கின்றன. நாட்டு மா, நாரும் புளிப்புமுள்ளது. செல்வவான்கள் நல்ல ஒட்டு மாங்கன்றுகளைப்பயிரிட்டிருக்கின்றனர். தஞ்சாவூர், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கித் தாலுகாக்களில் பலா மரம் மிகுதி. பனையும், சவுக்கும் தஞ்சைத் தாலுகாவில் சாதாரணம். நாகைமரம் வல்லம் பீட பூமியில் மட்டும் காணப்படுகிறது. சாலைகளின் இருமருங்கும் ஆல், புளி, மா, வேம்பு, பூவரசு முதலிய விருக்ஷங்கள் வைத்து விருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ஜில்லாவில் தோப்புக்கள் மிகுதி. அவைகளில் மேலே கூறிய மரங்களும் இலுப்பையும் மூங்கிலும் பயிராகின்றன. நன்னிலம், கும்பகோணம் தாலுகாக்களில் மூங்கில் அபரிமிதம்.

**ஜீவவர்க்கம்: கால் நடை.** இங்கு நாட்டு ஜாதியும் கோயம்புத்தூரிலிருந்து கொணரப்பட்ட ஆலம்பாடி ஜாதியுமென இரண்டு தினுசு மாடுகள் உண்டு. நாட்டு மாடுகள் சிறியவை; உழவுக்கு மட்டும் வரும்.

* திருச்சிராப்பள்ளி 32·29 அங்குலம்; மதுரை 30·71; திருநெல்வேலி 27·25; ராமநாதபுரம் 28·91.

பின்னவை இழுப்புவேலைக்கு உபயோகப்படுகின்றன. அதிக கனத்தால் இவை சேற்றில் அமிழ்ந்து போகின்றன வாதலால் உழவுக்கு உபயோகமில்லை. ஆகவே 'ஆலம்பாடி அழகெருது உழவுக்குதவாத இழவெருது' என்ற பழமொழியும் உண்டாயிற்று. நெல்லூர், மைசூர் தினுசு மாடுகளும் பம்பாய் தினுசு களெனப்படும் மோழைக்காளைகளும் சிற்சில விடங்களிலுள்ளன. இவை, திருவண்ணுமலை அரியலூர், சமயபுரம், கும்பகோணம், திருவாரூர் ஆகியவிடங்களில் நடக்கும் சந்தைகளுக்குக் கொண்டுவரப்படும். நாட்டு தினுசை விருத்தி செய்யமுயற்சிப்பதில்லை. தஞ்சாவூரிலும், திருவாவடுதுரையிலும் உயர்ந்த ஜாதிக் காளைகளிருக்கின்றன. அவ்விடங்களிலுள்ளவர்கள் அவைகளைத் தங்களுடைய பசுக்களுடன் சேரும்படி செய்து, ஏதோ ஒருவாறு கால்நடைவிருத்தியாகும்படி பிரயத்தனப்படுகின்றனர். நாட்டு தினுசான எருமைக்கடா உழுவதற்கும், மணல் வண்டி யிழுப்பதற்குமே உபயோகப்படுகின்றது.

மேய்ச்சல் தரை இல்லாததனுல்தான் கால்நடைகள் விருத்தியாவதில்லை. ஆகவே மாடுகள் கொட்டில் தீனி தின்பவையாக விருக்கின்றன. வைக்கோல் தினுசுகள் பலவும் முக்கியமாக நெல் வைக்கோலுமே கால் நடைக்குச் சாதாரணமாகக் கொடுக்கப்படும் உணவாம். பருத்திக்கொட்டை, தவிடு, கொள்ளு, பலவகைப் பிண்ணுக்கு முதலியனவும் உணவுப் பொருள்களாம். வண்டி மாடுகள், பால் பசு, பால் எருமை ஆகியவைகள் உழவுமாட்டைக் காட்டிலும் கொஞ்சம் நன்ருகப் போஷிக்கப் படுகின்றன. உழவு மாடுகளுக்குப் பெரும்பாலும் வைக்கோலும் சிறுபான்மை பருத்தி விதையும் பிண்ணுக்கும் கிடைக்கும். எருமைக் கடா, மலட்டுப்பசு, பால் எருமைகள் உழவு மாட்டைப்போலத்தான் கவனிக்கப்படுகின்றன. பசு புண்ணியப்பிராணியாதலால் மலடாகவிருந்த போதிலும் வேலைக்கு ஏவப்படுவதில்லை. மலட்டைப் போக்குவதற்கு தவிடு நல்லதென்று சிலர் சொல்கின்றனர்.

கால் நடைக்கு வருகிற வியாதிகள், கோமாரி, வெக்கை, அடப்பன் அல்லது வர வெக்கை என்பனவாம். வெக்கை கோடையிலும், அடப்பன் மாரி காலத்திலும் வரும். மாரிகாலத்தில் பொசிக்கை அல்லது வரைக்குன்னல் என்ற மலைஜாரம் மாடுகளுக்கு வருவதுண்டு. அழல் வெக்கை, கந்தடைப்பு, மென்னடைப்பு முதலிய வியாதிகள் அருமையாயினும் உயிரைக் கொண்டு போகும் தன்மையனவாம்.

வெள்ளாடும் செம்மறியாடும் சாதாரணமாக எங்கும் காணப்படும் தினுசுகள்தாம். மேய்ச்சல் தரை இல்லாதபடியால் அவை விசேஷித்திருப்பனவல்ல.

கோடியக்கரைக்கு அருகில் சில குடியானவர்கள் சிறியவையும் பலமுள்ளவையுமான நாட்டுக்குதிரைகளை வளர்க்கின்றனர். சொந்தக்காரர்கள் அவைகளின் மீது அடையாளங்கள் போட்டு, சமீபத்திலுள்ள காடுகளில் ஓட்டிவிடுவார்கள். வேண்டும்போது பிடித்துக்கொள்வார்கள்.

நரியும் குள்ள நரியும் எங்கும் காணப்படுகின்றன. காட்டுப்பூனைகள் ஏராளம். புனுகு பூனை சிற்சில விடங்களில் மட்டும் உண்டு. பன்றி, கலைமான், புள்ளிமான் ஆகியவை, கோடியக்கரையிலும், சீர்காழியைச் சுற்றிலும் மதுக்கூர்ப் பக்கத்திலும் உள்ளன. வேட்டையாடுவதற்குத் தகுந்தவிடம் கோடியக்கரைக்குச் சமீபத்திலுள்ள காடுதான். அங்குள்ள மான் குட்டிகளைக் குள்ளநரியும் நரியும் கொன்றுவிடுகின்றனவாம்.

தாரா, வாத்து, காடை, கௌதாரி முதலியவைகள் உளவாயினும் விசேஷமாகவில்லை. நீர்வள மிகுந்துள்ள விடத்தில் நீர்க்கோழி அதிகமாக விராதது ஆச்சரியமே. வல்லம், திருத்தருப்பூண்டி, மன்னார்குடிப் பக்கங்களில் கௌதாரி சாதாரணம். திருத்தருப்பூண்டியின் தென்பாகத்தில் தாரா அடிக்கடி வரும். மீன்களும் விசேஷம். ஆறுகளில் மீன் பிடிப்போர்க்கு நல்ல லாபமுண்டு.

கள்ளர், படையாச்சி, வலையர், துருக்கர், தொம்பர், மூப்பர் ஆகியவர்கள் வேட்டைத் தொழிலை மேற்கொண்டிருக்கின்றனர். திருத்தருப்பூண்டித் தாலூகாவில் தொம்பர்கள் நரியைப் பிடிப்பதற்காக ஒரு எருமை மாட்டைச் செத்ததுபோல் படுக்கவைத்து அதனருகில் நரிபோல் ஊளையிடுவார்களாம். சப்தத்தைக் கேட்டு நரிகள் கிட்ட வந்தவுடன், அவைகளை வலைபோட்டோ, தடியினு லடித்தோ பிடித்துத் தின்பார்கள்.



# தேகதத்துவ சாஸ்திரம்

## PHYSIOLOGY & THE LAWS OF HEALTH

இந்தப் பதத்தின் அர்த்தம் தேகத்தைப் பற்றிய தத்துவங்களை யுள்ளடக்கிய சாஸ்திரங்கள் என்பதல்ல. தேக தத்துவங்களைப்பற்றி விவரிக்கும் நூல் என்ருகும். அதாவது தேகத்திலுள்ள அங்கங்களையும், அவைகளின் கூறுகளையும், அவைகள் அமைக்கப்பட்டிருக்குமிடங்களையும், விதங்களையும், அவைகளின் பிரயோசனங்களையும், அவைகளிடம் வேலை வாங்குவதற்குள்ளக் கிரமங்களையும் அவைகளின் வியாதி லக்ஷணங்களையும் விவரித்து கூறும் நூலாம். ஆகவே, இந்த சாஸ்திரத்தின் மேன்மையும், மனிதனுக்கு இந்த சாஸ்திர ஞானத்தின் அவசியத்தையும் ஒருவாறு நன்கறியலாம். சாதாரணமாய் சரீர சுகத்தைப் பேணிவைத்து, வியாதிகள் அணுகாமல் அரோகதிட சரீரிகளாய் மனிதர்களிருப்பதற்கு இந்த சாஸ்திரத்தின் அதிநுட்பமான விஷயங்களின் ஆராய்ச்சி யில்லாமல் ஸாதாரணமான பரிசயத்தைக் கொண்டு ஸாத்தியமாகுமாதலால், இந்த சாஸ்திரத்தைக் கூலங்கஷமாய்படித்தறிய சாவகாசமற்றவற்கு, தேகதத்துவங்களைப் பற்றிய சாதாரணமான ஞானமாவது அவசியமென்ருயிற்று.

மேலும் நம் நாட்டு வைத்தியர்களில் பெரும்பாலர், வியாதிகளுடைய கூறுகளை நன்கறியாமலும், எந்த ஸ்தானங்களில், அல்லது எந்த அங்கவமைப்புகளில் குறைவினுல் வியாதி உற்பத்தியானது என்பதை யறியாமலும், வைத்திய சாஸ்திரத்திற்கு முக்கிய ஆதாரமாயுள்ள தேக தத்துவ சாஸ்திரத்தின் காப்பேட்டைக்கூடக் கேட்டறியாதவர்களாய், சரீரத்துக்கு அவ்வச் சமயங்களுக் கேலாத அல்லது முற்றும் மாருன மருந்துகளைக் கொடுத்து, சரீரத்தைக் கெடுத்து விடுகிருர்களென்பது உண்மை. இவ்விஷயம் நாமனுபவ சித்தமாய் காணலாம். ஆதலால் அவ்வித தீங்குகள் நேரா திருக்கும் வண்ணம் வியாதிகளின் கூறுகளை ஸாமானியமாய் நாமாய் அறிந்துகொள்ளக் கூடியதற்கு வேண்டிய விஷயங்களை நாம் கற்றுக்கொள்வோமாகுல் பல தீங்குகளை நாம் விலக்கிக்கொள்வதுடன், உலகத்திற்கும் மிகுந்த நன்மை செய்யலாம்.

ஆதலால், அடியில் வரும் பக்கங்களில் தேக தத்துவ சாஸ்திரமும், நம்முடைய சரீர சௌக்யத்தைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய சில விதிகளும் நம்மைச் சுற்றிலுமுள்ள சில அசுத்தங்களால் நமக்கு வியாதிகள் உண்டாகாதிருக்கவேண்டியதற்காக, நாம் வீடுகளைச் சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டிய விஷயமான சில விதிகளும் கூறப்படும்.

### அத்தியாயம் 1.

#### எலும்புக்கூடு

அதோ பக்கத்திலுள்ள படத்தில் காட்டியிருப்பதுதான் எலும்புக்கூடு. அது மனிதனுடைய சரீரத்தை தாங்குவதற்காக ஏற்பட்ட கூடென்று நன்ருய் விளங்குகிறதல்லவா? மற்ற மிருகங்களுடையவும், பட்சி முதலிய பிராணிகளுடையவுமான கூடுகள் எவ்விதமாக விருக்குமென்று இந்தப் படத்தைக்கொண்டு நீங்கள் ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம். உண்மையான ஒரு மனித சரீரத்தின் எலும்புக்கூடு நீங்கள் சம்பாதிக்கக்கூடுமானுல், அது நிரம்ப கெட்டியான பல எலும்புகளால் செய்யப்பட்டிருக்கிற விஷயத்தை யன்றியும், அவைகளொன்ருேடொன்று வெகு கெட்டியாக இணைக்கப்பட்டிருக்கின்றன என்கிற விஷயத்தையு மறிவீர்கள். இவ்வளவு கெட்டியாக இக்கூடு அமைக்கப்பட்டிருப்பதற்கு காரணம் ஆங்காங்குள்ள வெகு மிருதுவான சில அங்கங்களையும், சில மிருதுவான தசைகளையும் காப்பாற்றுவதற்காக வென்றும், அவ்வவைகளை காப்பாற்றுவதற்கு எவ்வளவு பலம் வேண்டுமோ அதற்கதிகமும் குறைவுமில்லாமல் கணக்காக அமைத்திருக்கும் கடவுளின் அத்யத்புதமான ஸர்வஞ்ஞ சக்தியும் உங்களுக்கு விளங்கும்.

இவ்விதம் ஆச்சரியமாய் அமைக்கப்பட்டிருக்கிற எலும்புக் கூடானது சற்றேறக்குறைய 200 தனித்தனி எலும்புகளாலாகி யிருக்கிறது. இவ்வத்தியாயத்தில், அவ்வெலும்புகள் சரீரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இடங்களையும் விதங்களையும் பற்றிப் படித்து அடுத்த அத்யாயத்தில் அவைகள் இணைக்கப்பட்டிருக்கிற மாதிரியையும், அவைகளவ்விதம் அமைக்கப் பட்டிருக்க வேண்டிய காரணங்களையும் பற்றி வாசிப்போம்.

ஒரு சவத்தை கவனியாமல் மழையிலும் வெயிலிலும் கிடக்கும்படிப் போட்டு விடுவோமானல், அப்பொழுது, அதிலுள்ளமிருதுவான பாகங்களாகிய தசைகள், நரம்புகள், இரத்தக் குழாய்கள் முதலியவைகளெல்லாம் அழுகி அல்லது பொடியாகி, மண்ணேடுமண்ணகக் கலந்து போய் விடும். அப்பொழுது மிச்சப்படுவது தான் நாம் மேற்கூறியுள்ள எலும்புக்கூடு என்பது. இதனல் இன்னெரு விஷயமும் புலப்படும். அதாவது மற்ற சரீரபாகங்களை விட, இந்த எலும்புக்கூடு அதிகபலம் பெற்றதென்பதே.

மனித சரீரத்தில் தலையையும், கை கால்களையும் வெட்டி விட்டால் மீதப்படுகிறபாகத்திற்கு முண்டம் (Trunk) என்று பெயர். ஆகவே சரீரமும் மூன்று பிரிவினைகளை யுடையதாக எண்ணப்படுகிறது; அதாவது (1; தலை (2) முண்டம் (3) கைகால்கள்.

முதலில் தலையிலுள்ள எலும்புகளை கவனிப்போம். மூளை யென்ற வெகு மிருதுவான பாகத்தைப் பாதுகாப்பதற்காகச் செய்யப்பட்ட வோர் பெட்டிபோல் தலையெலும்புகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. மூளையின் மேற்புறத்தில் ஓர்வகை வெண்ணெய்போன்ற பதார்த்தம் பூசப்பட்டிருக்கிறது. இந்த பதார்த்தத்துக்கு ஸ்வல்பசலனமும் நேருமானல் அதனல் பைத்தியம் முதலிய கெடுதிகள் விளையக்கூடும். ஆகையால் இவ்வெலும்புகள் கெட்டியாயும் உருதியாயும் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இவைகளின் வேலை மூளையை பாதுகாப்பதன்றி வேறொன்றுமில்லாமையால் இவைகளில் சலனம் வேண்டியதவசியமில்லை. ஆதலால் அசைவதற்கும் ஓர்வித ஏற்பாடுமிங்கு காணப்படவில்லை. இவைகள் ஒன்றேடொன்று ஓரங்களில் (Sutures) என்ற பல்லுகள் போல் ஒன்றினுள்ளொன்ருக பொருத்தப் பட்டிருக்கின்றன. கன்னர்கள் தவலைகளின் அடிப்புறத்தகட்டையும் மேற்புறத்தையும் பொருத்துவது ஒருவாறு இப்பொருத்தத்திற்கு உபமானமாகும். தலையில் இவ்விதம் பொருத்தப்பட்ட எலும்புகளில் சுமார் 8 உண்டு.

அதன் பிறகு முகத்தில் இவ்விதமே சுமார் 14 எலும்புகள் வரை இருக்கின்றன. ஆனல் அவைகளின் பெயர்களை நாம் அறிந்துகொள்ள வேண்டுவதனவசியம். மேல் மண்டை அல்லது தலையைச் சேர்ந்ததான நெற்றி யெலும்பும் கீழ்ப்புறம் மூக்கையும், கன்னங்களையும் சேர்ந்ததான எலும்புகளுமிருந்து ஓர் பள்ளத்தையுண்டு பண்ணுகின்றன. இந்தப் பள்ளத்தினிடையில் தான் அதிசூட்சுமமும், மிருதுவும் ஆச்சரியப்படத்தக்கதான அமைப்புமுள்ள கண்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் கண்களிருக்குமிடத்திற்கு சற்று வெளியே நீட்டிக்கொண்டிருப்பதாலும் மிகுந்த உறுதியுள்ளவைகளாயிருப்பதனலும் கண்ணிற்கு ஒருவித அபாயமுமில்லாமற் காத்துக் கொடுக்கிறது.

இந்தச் சுமார் 14 எலும்புகளும் தலை எலும்புகளைப் போல் சலனத்திற்கு ஹேதுவில்லாமலே தான் அமைக்கப்பட்டிருக்கின்றன வென்றலும் அவைகளிலொன்று அதாவது கீழ்தாடை எலும்பு அசையக்கூடியதாயிருக்கிறது. இவ்வெலும்பு மற்றமண்டை எலும்புகளுடன் கீல் பொருத்தாக (அடுத்த அத்தியாயம் பார்க்க) பொருத்தப்பட்டிருக்கிறது. அதனல், அந்த எலும்பை கீழே தாழ்த்தவும் மேலேதூக்கவும் சாத்தியமாகிறது. அதுதான் நாம் வாயைத் திறப்பதும் மூடுவதும். இன்னும் இதனல் நாம் வாய் மூடித்திறக்கும் காலங்களில் மேல்தாடை எலும்பு அசைவதில்லை என்பது விளங்கும்.

மேல்தாடை, கீழ்தாடை ஆகிய இவ்விரண்டிலும் பற்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நாம் சாப்பிடும் ஆகாரத்தை நன்ருகமென்று உள்ளே இறக்க வேண்டியதற்காகவே இத்தாடைகள் ஏற்பட்டிருப்பதால், அவைகளில் இப்பற்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

மனிதனுக்கு ஆயுள் காலத்திற்குள் இரண்டு விதமான பற்கள் உண்டாகின்றன. நாம் சிறு குழந்தைகளாக விருக்கும் பொழுது உண்டாகின்ற பற்களுக்கு பால் பற்கள் என்று பெயர். அவைகள் 20 தான். நம்முடைய 7 அல்லது 8-ம் பிராயம் தொடங்கி 16-17-ம் பிராயத்திற்குள் அவைகள் விழுந்து விடுகின்றன. அதன் பிறகு தான் நமக்கு நிஜப்பற்கள் உண்டாகின்றன. அதாவது நிஜப்பற்கள் நம்முடைய ஈறுகளில் உற்பத்தியாகி, பக்குவமாகி வெளியே வரும் பொழுதுதான், அவ்வவ்விடங்களிலுள்ள பாற்பற்கள் உதிருகின்றன. ஆதலால், ஒடி பால்பற்கள் விழ விழ, நிஜப்பற்கள் அவைகளின் கீழிருந்து வளர்ந்துகொண்டே வருகின்றன. இப்படி இரண்டாந்தடவை உண்டாகிற பற்கள் தாம் 32. அவைகள் முன்னிருந்தவைகளைப்பார்க்கிலும் கெட்டியாயும் உறுதியாயும், பெரிதாகவுமிருக்கின்றன.



## முண்டத்தின் எலும்புகள்

முண்டமென்பது இன்னதென்று தான் முன்னமேயே சொல்லியிருக்கிறேமே. நம்முடைய சரீரம் முழுவதையும் நேராக நின்று வேலை செய்யும்படி காப்பாற்றி, ஆதாரமாயிருப்பது முதுகெலும்பு தான். இந்த முதுகெலும்பென்பது உண்மையில் ஒரு எலும்பல்ல.பல எலும்புகள் ஒன்ருய்ச்சேர்க்கப்பட்டு, ஒரு ஸ்தம்பாகாரமாய் நிற்கின்றன. இவ்வெலும்புகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வர்டிப்பிரா (Vertebra) வென்று பெயர் ; ஆதலால் முதுகெலும்புகளின் ஸமூகத்திற்கு வர்டிப்ரா ஸ்தம்பமென்று பெயரிடலாம்.

இவைகள் ஒன்றேடொன்று எப்படி இணைக்கப்பட்டிருக்கின்றனவென்றுபார்ப்போம். உதாரணமாக, இவ்வெலும்புகளெல்லாம் அசைவதற்கில்லாமல், ஒன்றேடொன்று மேல் வைக்கப்பட்டு, கெட்டியாக பொருத்தப்பட்டிருந்தால் இந்தவர்டிப்ராஸ்தம்பமானது நேராக நிற்கும் ; வளைவதற்கு இடங்கொடாது. நாம் தினந்தோறும் பார்க்கிற, தம்மன் கூத்தாடிகள் சரீரத்தைப் பலமாதிரிகளாக வளைக்கிருர்களே, அதுவும் ஸாத்தியமாகாது. ஆகவே, இப்படி நமக்கு சௌகர்யார்த்தமாய் சரீரத்தை நாலா பக்கங்களிலும் வளைப்பதற்கு அனுகூலமாயிருக்கும்படி, எவ்வித அங்கவமைப்பு, ஏற்பட்டிருக்கிறதென்று சற்று நிதானிப்போம்.

எலும்புகள் அல்லாமலும் தசை மாம்சம் முதலியவற்றின் இனத்தைச்சேராமலும், எலும்புகளைப்போல் அவ்வளவு கெட்டியாக இல்லாமலும்,மாம்சங்களைப்போலஅத்துணைமிருதுவாக வில்லாமலும், சுலபமாய் வளைக்கக்கூடியதாயிருந்தாலும், சீக்கிரத்தில் ஒடியக்கூடாததாயும், இந்தியாரப்பர் முதலியவஸ்துகளைப் போல் பெரிதாக்கவும் சிறிதாக்கவும் கூடிய குணமுடையதாயும் உள்ள 'கார்டிலேஜ்'(Cartiloge) என்ற ஒருவகை வஸ்து நம்முடைய சரீர அமைப்பில் ஏற்பட்டிருக்கிறது. இதையொருவாறு இளம் எலும்பு என்று சொல்லலாகும். நம்முடைய காதின் தோலின் கீழ் உள்ள எலும்பைத் தொட்டுப் பார்த்தால் இந்த 'கார்டிலேஜ்' இன் குணங்கள் சுமாராகவெளியாகும். இவ்வித 'கார்டிலேஜ்' களாலாகிய சிறுமெத்தைகள், ஒவ்வொரு இரண்டுவர்டிப்ராக்களுக்கும் நடுவேவைத்து பொருத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஏற்பாட்டினல் தான் முதுகெலும்பு நாலாபுறங்களிலும் சாய்வதற்கு சாத்தியமாகிறது.

இந்த ஸ்தம்பாகாரத்தில் மேலாக இருக்கும் 7வர்டிப்ராக்கள் சிறியவைகளாகவிருக்கின்றன. கழுத்திற்குக் கூடாக நின்று, தலையின் அங்கங்களை தாங்குவதற்கும் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கடுத்தபடி கீழிருக்கும் வர்டிப்ராக்கள் பன்னிரெண்டு. இப்பன்னிரெண்டும் பக்கங்களிலுள்ள 12 விலா வெலும்புகளைத் தாங்குகின்றன. இவ்விலாவெலும்புகள் பக்கத்திற்கு 12 ஆக, முதுகெலும்பின் வர்டிப்ராக்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் கீழ் 5 வர்டிப்ராக்களிருக்கின்றன. இவைகள் இடுப்பிற்கு ஆதாரமாயிருக்கின்றன. இவ்வர்டிப்ராக்களில், மேலே யுள்ளவை வரவர விருத்தியாகும், பாரத்தைத் தாங்கவேண்டியிருப்பதால், மேலிருந்து கீழே ஒன்றைவிட ஒன்று பெரிதாகிக்கொண்டே வருகின்றன. இவைகளின் கீழுள்ள வர்டிப்ராக்கள் எல்லாம் ஒன்ருகவும், கெட்டியாக சேர்க்கப்பட்டு உறுதியாகவும், கூடில்லாமல் பெரிதாகவும், கனமாகவுமிருக்கின்றன.

இப்படி வர்ட்டிப்ராக்கள் 33 தனி எலும்புகளாலாகிறது. குழந்தைப் பருவத்திலிருந்துமனிதன் முதிர்ச்சியடைய அடைய இடுப்பின் வர்டிப்ராவுக்குக் கீழிருக்கும் 5 எலும்புகளும் ஒன்ருகச்சேர்ந்து, தனித்தனியே சலனமற்றவைகளாய், வளருவதற்காரம்பிக்கின்றன. அதற்குக் கீழுள்ள 4 எலும்புகளும் அப்படியே ஒன்ருகச்சேர்ந்து வளருகின்றன. ஆகவே மனிதப்பருவமடைந்த காலத்தில் முதுகெலும்பில் தனித்தனியாயிருக்கும் எலும்புகள் 26 தான்.

இடுப்பெலும்புகள் பக்கத்திற்கொன்ருக, இடுப்பின் பக்கங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் உருவம் தனிமாதிரியாகவிருக்கின்றது. அந்த இரண்டு எலும்புகளுமாக, முன்பக்கத்தில் வந்து சந்தித்து ஓர்வித இடை வெளியை யுண்டுபண்ணுகிறது.

பிறகு விலாவெலும்புகளை நோக்குங்கள். அவைகள் முன்புறமும் பின்புறமும் இணைக்கப்பட்டு, தங்களுக்கிடையே ஒரு கூடு உண்டாகும்படி நிற்கின்றன. இந்த கூட்டிற்குத்தான் மார்பகம் என்று பெயர். இதற்குள் அமைக்கப்பட்டிருக்கிற சுவாசாசயம் என்ற ஒரு அவயவத்தை காப்பாற்றவேண்டியதற்காக இந்தக் கூடு ஏற்பட்டிருக்கிறது. இந்த எலும்புகளில் பலம் அதிகம். பீப்பாய்களைச்சுற்றிலும் இரும்புக்கட்டுகள் இருப்பதை பார்த்திருக்கின்றீர்களல்லவா? அந்தப்பீப்பாயின் மரங்களைக் காப்பாற்ற வேண்டியதற்காகவல்லவா அந்தக் கட்டுகள்? அதே விதந்தான் தசைகளாலாகிய மார்பகப் பெட்டகத்தை கெட்டி செய்யவேண்டியதற்காக இந்த விலா எலும்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்த விலாவெலும்புகள் 12 என்றும், அவைகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு வர்டிப்ராவில் பொருத்தப்பட்டிருக்கிறதென்றும் நாம் முன்னமேயே சொல்லியிருக்கிறோமல்லவா? அவைகள் மேலும் கீழும் அசைப்பதற்குச் சாத்தியமாகும்படி முதுகெலும்போடு சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவ்வெலும்புகள் அவ்விதமே, முன்புறத்திலிருக்கிற மார்பெலும்பில் கொண்டுவந்து பொருத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை பூமியின் பரப்புடன் சமாந்தரமான பரப்பாயில்லாமல் சாய்வாய் வைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் இவ்வெலும்புக்கூடு சற்று மேலெழுமானால் இக்கூட்டின் அகலம் கொஞ்சம் அதிகப்படுமல்லவா?

## கைகால் எலும்புகள்

கைகள் முண்டத்தோடு இரண்டு விதமான எலும்புகளால் சேர்க்கப்படுகின்றன. அவை, பின்புறத்தில் நாம் தொட்டுப் பார்த்தறிந்து கொள்ளக்கூடிய தட்டையான (Blade) எலும்பென்பதொன்றும் முன்புறத்தில் காலர் எலும்பு என்று கழுத்தின் வெளிப்புறத்தில் கண்ணுக்குப் புலப்படுகிற எலும்பொன்றுமே. ஆக இவ்வெலும்புகளில் இரண்டு ஜோடியிருக்கின்றன.

கைகளை, மேற்கை, முற்கை, கை, என மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். இவைகளில் சுமார் 32 எலும்புகள்வரை யிருக்கின்றன. அப்படியே கால்களும் மேற்கால், முற்கால், கால் அல்லது பாதம் என மூன்று வகைப்படும். இவைகளொவ்வொன்றிலும் 30 தனித்தனி எலும்புத் துண்டுகளிருக்கின்றன.

மேற்கையும், தொடை என்று நாம்வழங்குகிற மேற் காலும், ஒவ்வொன்றும் ஒவ்வொரு எலும்பை யுடையது. இவைமுறையே (Blade) எலும்போடும் இடுப்பெலும்போடும் பொருத்தப்பட்டிருக்கின்றனவென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். முற்கை அல்லது கையின் பின்பாகத்தில் ஒவ்வொன்றிலும் இவ்விரண்டு எலும்புகளிருக்கின்றன. இவைகள் மேற்கையிலுள்ள எலும்புடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதேமாதிரி காலின் கீழ்பாகத்திலும் அதாவது முழங்காலிலும் இவ்விரண்டு எலும்புகள் மேலிருக்கும் தொடை எலும்புகளுடன் பொருத்தப்பட்டிருக்கின்றன.

கையின் இருபாகங்களினுடைய ஸந்தியாகிய முழங்கைக்கும் காலின் இருபாகங்களினுடைய சந்தியாகிய முழங்காலிற்கும் ஒரு வித்யாஸமுண்டு. அதாவது முழங்காலின்மேற்புறத்தில் ஒருதட்டையான அநேகமாய் சக்ராகாரமானவொரு எலும்பு இருக்கிறது. இவ்வித எலும்பு முழங்கையில் கிடையாது. இதற்கு முழங்காற்சில் என்றுபெயர்.

கைகளும் பாதங்களும் அநேகமாய் ஒரேவிதமான அமைப்புள்ளனவாகச் செய்யப்பட்டிருக்கின்றன. புஜம், தாள், இவைகளின் இரண்டு எலும்புகளுக்குப் பிறகு புஜத்தில் மணிக்கட்டுகளும் காலில் கணுக்கால்களு மமைக்கப்பட்டிருக்கின்றன. மணிக்கட்டில் 8 எலும்புகளும் கணுக்களில் ஏழு எலும்புகளும் காணப்படுகின்றன. உள்ளங்கைகளுக்கு அஸ்திவாரக்கூடாக ஐந்து எலும்புகள் இருக்கின்றன. அப்படியே பாதங்களுக்கும் ஐந்து எலும்புகள் உண்டு: இவைகள் முறையே மணிக்கட்டிலும் கணுக்காலிலுமுள்ள எலும்புகளில் பொருத்தப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு கையிலும் அவ்வைந்து விரல்களிருக்கின்றனவல்லவா? ஒவ்வொரு விரலிலும் மும்மூன்று எலும்புத்துண்டுகளிருக்கின்றன. ஆனால் கட்டை விரலில்மட்டும் இரண்டே

குறிப்பு:—இந்தப் பாடத்தைக் குறித்த படங்கள் அடுத்த சஞ்சிகையில் வெளியாகும்.



துண்டுகள்தா னிருக்கின்றன. இதே விதந்தான் கால்விரல்களின் அமைப்பும்.

கால் கட்டைவிரலுக்கு அநேகமாய் சலநம் இல்லையென்றே சொல்லலாம். கைக்கட்டை விரல்களோ நாலா பக்கங்களிலும் அசையும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய பழக்க வழக்கங்களுக்கு ஏற்றபடி இவ்வமைப்பிருக்கிறதென்பதை நாம் கவனிக்க வேண்டும். கால் கட்டைவிரல் கால்களை ஸ்திரமாய்க் கீழே ஊன்றவும் உறுதியாய் நிற்கவும் மட்டுமே உபயோகப்படுகின்றது. ஆகையால் அவைகளுக்கு அதிக சலனம் வைக்கவேண்டியதில்லை.

ஆனால் நம்முடைய கைகளும் விரல்களுமோ அப்படியல்ல. அவைகளை நாம் உபயோகப்படுத்தும் வழியை உத்தேசிக்க, அவை நன்றாய் வளையக் கூடியவையாகவும் வேகமாய் நகரக் கூடியவையாகவும், காடின்யம், மார்தவம் முதலிய குணங்களை ஸ்பரிசவுணர்ச்சியால் அறியக் கூடியதாகவும் வஸ்துக்களை வலுவாகவும் உறுதியாகவும் பிடிக்கவேண்டியதாகவுமிருக்கின்றது. அதற்குத் தகுந்தபடி சலனமுடையதாகவும் பலமுடையதாகவும்வளையக்கூடியதாயிருக்கும்படி பல எலும்புகளின் பொருத்துக்களாலானதாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இப்படி நாம் சரீரத்தின் கூட்டிலுள்ள முக்கியமான எலும்புகளைப்பற்றிப் படித்துவிட்டு இப்பொழுது அவ்வெலும்புகள், அவ்வவைகளின் இடத்திற்கும் காரியத்திற்கும் தகுந்தபடி எவ்விதப் பொருத்துக்களை யுடையனவென்பதை அடுத்த வத்தியாயத்திற் படிப்போம்.

டி. ஆர். எஸ். சாஸ்திரி.

**பெருங்காயம்:**—பெர்ஷியா தேசத்தில் விளைகிற செடியிலிருந்து எடுக்கிற பாலாகிய பெருங்காயம், கட்டிகளாய், மஞ்சள் நிறமாய் இருக்கும். அதிக வாசனையுண்டு. வெள்ளுள்ளி வாடை வீசும். காரசப்புடன் மெத்தக் கசக்கும். சாராயத்தில் கரையும். ஜலம் விட்டுஅரைத்தால்பால்போலாகும். மாஉப்புசேர்த்தால் சூரணமாகும். இது அங்காகர்ஷண நாசகாரி, உஷ்ணகாரி, கிருமிக்கினி, சூதகசன்னி, காசம், மாரடைப்பு, வயிற்றுவலி இவைகளுக்குக் கொடுக்க நல்ல மருந்து. குழந்தைகளுக்குக் காணுகிற இருமலைத் தணிக்கும்; கிருமிகளையும் போக்கும்.

# வஸந்த மாளிகை

## VASANTHA MALIKAI

### அத்தியாயம்-17

### தர்பார்

### Durbar

**நரசிம்மராஜன்:**— "மாஹாவீர! இன்று காலை நான் தர்பாருக்கு வரவேண்டுமென மஹாராணியார் ஆக்ஞாபித்திருக்கின்றார்கள். கிருஷ்ணராஜனும் வருகின்றாராம். இதெல்லாம், அவர் அரண்மனைக்கு ராணி விஜயம் செய்தபிறகு செய்யப்பட்ட ஏற்பாடு—"

**மஹாவீரன்:**— மஹராஜ்! ஒன்றும் இல்லை, நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். அங்கே செய்த விஜயத்தால் கிருஷ்ணராஜன்மேலுள்ள அதிருப்தி அதிகரிக்க இடமாயிற்றே யொழிய, வேறு ஒன்றுமில்லை. 'என்ன இது! ராணுவசாலை மாதிரியும் போர்க்களம் மாதிரியும், மருந்துக்கிட்டங்கி மாதிரியுமிருக்கின்றதே யொழிய, அரண்மனையா, லட்சணமா' என்று சொல்லி அதிருப்திப்பட்டுச் சென்றாளாம்.

**நரசிம்மராஜன்** — மஹாவீர! இச்செய்தி கேட்க நமக்கு ரொம்ப சந்தோஷம். நமது எதிரியின் பலம் குறையக் குறைய, நமது பலம் அதிகரித்தது மாதிரி தானே!

இவர்கள் இவ்வாறு ஸம்பாஷித்துக்கொண்டு மங்கம்மாள் அரண்மனைத் தர்பார் வாசல் வந்துசேர்ந்தார்கள். ஆசாரவாசலில் கதையும் கையுமாய் நின்ற துவாரபாலன் நரசிம்மராஜனைமாத்திரம் உட்புகவிட்டு மஹாவீரனைத் தடுத்துவிட்டான்.

இதையறிந்த நரசிம்மராஜன் கோபாவேசத்துடன், மீசைகள் படபடவென்று துடிக்க, 'அடே! காவல்காரப்பயலே! நான்யாரென்று எண்ணினாய். என் கூட வருபவன் இவன் என்று நீ அறியவில்லையா' என்று வினவ,

**துவாரபாலன்:**—"மஹராஜ்! மன்னிக்கவேண்டும். மஹாராணி யாரவர்கள் கட்டளை வெகு கண்டிப்பா யிருக்கிறது. தங்களைத் தவிர வேறொருவரையும் உள்ளே விடக்கூடாதென்று—"

**நரசிம்மராஜன்:**— 'அடே! நன்றிகெட்ட துஷ்டா! ஆக்கத் தெரிந்தவனுக்கு அழிக்கத் தெரியாதென்று நினைத்தாய். உன் அதிகாரம் எதுவரை செல்லும் பார்க்கின்றேன்' என்று எச்சரித்துவிட்டு உள்ளே சென்றான்.

**துவாரபாலன்:**—ரோஷம்பொறுக்காமல், பரபரப்புடன் தர்பார் மண்டபத்து உள்ளே சென்று, சிம்மாசனத்தின்கண் ராஜகோலத்துடன் அமர்ந்திருக்கும் மஹாராணியாருக்கு ராணுவ ஸலாமிட்டு, 'அம்மணி! தமது ஆணைப்படி நடப்பதா! அல்லது—"

**மஹாராணி:**—இதைக்கேட்கவே அவள் கண்கள் கோபாவேசத்தால் சிவந்தன. "துவாரபால! என்ன நடந்தது? சொல் சீக்கிரம்."

**துவாரபாலன்:**— அம்மணி! தமது ஆணையைச் சிரமேல் வஹித்து ஆசாரவாசலில் காத்திருக்கையில், தமது மந்திரி நரசிம்மராஜாவுடன் யாரோ வந்தார். அவரை உட்புகாது தடுத்ததற்கு என்னை மந்திரியார் கூறிய வார்த்தைகளையும் செய்த அவமானத்தையும்—"

**மஹாராணி:**— ஆ! என்ன!! நரசிம்—; என்ன நினைத்தார். உம்மை இப்பதவிக்குக் கொண்டுவந்தது நானல்லவோ! அப்படியிருக்க, கதிரவனைக் கேவலம் ஓர்குடை மறைக்கும் வண்ணமாய், என் ப்ரஜைகளை நீர் பலவாறு பேசுவதா! நாம் இட்ட கட்டளையை மறுக்க உமக்கு யார் அதிகாரம் கொடுத்தது. பத்திரம்! இனி ஜாக்ரதை! இம்மதுரை நகரில்! ஏன் இம்மதுரை ராஜ்யம்முழுதும் எனது ஆணைக்கு மீறி நடக்கத் துணிபவன் யாவன். நாய்க்கர் வம்சத்துதித்தவள் யாம் என்று நினையுங்கள். நம் கட்டளையை நிர்வஹிக்கும் ஸேவகனை அவமதித்தால் என்ன நம்மை அவமதித்தால் என்ன. துவாரபால! நீ போகலாம். ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்."

**துவாரபாலன்** வந்தனம் செய்து திரும்பிச் சென்றான்.

இக்கோபா வேசத்தையும் கம்பீரத்தையும் கவனித்த நரசிம்மராஜனுடைய கட்சிக்காரர்கள் திகிலடைந்தார்கள். கிருஷ்ண ராஜனைச் சேர்ந்தோர் முகமலர்ந்தார்கள். ஆங்குள்ள மற்ற ஸபையோர்களும் ப்ரபுக்களும் மின்சார ப்ரயோகமானவர்கள் போல ஸ்தம்பித்து விட்டார்கள்.

இதையறிந்த மஹாராணி அதேகம்பீரமாய் 'நரசிம்மராஜனுக்குச் சொல்லுவது, கிருஷ்ணராஜ்! உமக்குந்தான், ஆட்கள் சேர்ப்பது, கட்சிப்படுவது! என்ன நினைத்தீர்கள். பெண்பிள்ளை அரசாட்சிதானே என்று அலட்சியமாய் நினைத்தீர்களோ? என்றாள். இருதாப்பினரும், இவ்வார்த்தைகளால், மக்னமடைந்தார்கள்.

**கிருஷ்ணராஜ்:**—'அம்மணி!'

**மஹாராணி:**—'என்னோடு வார்த்தையாடவா வருகின்றீர். உடனடுத்தவர் நரசிம்மராஜ் எவ்வளவு வினயமாய் இருக்கின்றார்.? நீர் கவனித்தீரா?" கிருஷ்ணராஜ் உமக்குச் சொல்லுகின்றேன், நரசிம்மராஜ் உமக்குந்தான், இதோ கட்டளையிடுகின்றேன், நம் முன்னிலையில் நீங்களிருவரும் கைகுலுக்கி, சிநேகிதர்களாக இருக்க வழி தேடுங்கள். ஏதோ விளையாட்டாய் எண்ணுதேயுங்கள். நானிடும் கட்டளையை நிறைவேற்ற நமக்குச் சக்தியுண்டென்று இதோ சிறிது பொழுதில் காட்டுகின்றேன்."

இருவரும் சற்று தயங்கினார்கள்.

**மஹாராணி:**— என்ன? செய்கின்றீர்களா என்ன? நீங்களிருவரும் சத்துருவாய்த்தான் இருப்பதாய்த் தீர்மானிக்கும் விஷயத்தில் இம்மதுரை—இப்பாண்டிய ராஜ்யத்தின் வணங்காமுடி மன்னர் வஹித்த இச்செங்கோல் ஆணை! உங்களிருவருக்கும் நாம்கொடிய சத்துருவென்று நினைத்துக்கொள்ளுங்கள்; மறுபடி சொல்லுகின்றேன்— ஆணையிடுகின்றேன்—" இருவரும் இன்னும் தயங்கினார்கள்.

**மஹாராணி:**— ஸேனாபதி நமது சைநியங்கள் நொடிப்பொழுதில் தயாராகட்டும். சிறைச்சாலையைத் திறந்துவையுங்கள். இவர்கள் ஏதோ ராஜகலகம் செய்ய எத்தனித்திருக்கின்றார்கள் போலும். கடைசியாக இருவரும் மனவெறுப்புடன் கை குலுக்கினார்கள்.

இதுவரை கோபா வேசமாயிருந்த மஹாராணியார் முகம் சற்று மலர்ந்தது. 'அதுதான் சரி' அன்புடன் "நண்பர்களே! நீங்களிருவரும் கட்சிப்படுவதால், ராஜ்யமே இருகட்சியாகின்றது. எவ்வளவு அனர்த்தமாகின்றது தெரியுமல்லவா?"

"சரி இருக்கட்டும் நரசிம்மராஜ்! உம்மிடம், மஹாவீரன் என்ற ஓர் ஸேவகனிருக்கின்றானே?"

**நரசிம்மராஜ்:**—அம்மணி! அவனைத்தான் மஹாராணியாரின் தரிசனத்துக் கழைத்துவந்தேன்—அதற்குள்—துவாரபாலன்—"

**மஹாராணி:**—நரசிம்மராஜ்! உம்முடைய ஸேவகன் சிறுபாளையம் ஜமீன்தாரின் மகளை ஏமாற்றி, அவளனுமதியன்றி, அபஹரித்துப்போய் விட்டானும். இதோ நம்மிடம் புகார் செய்யப்பட்டிருக்கின்றது" நரசிம்மராஜ்! ஏது ஒருவாறு வாட்டமாய் இருக்கின்றீரே! உடம்பு சௌக்கியமில்லையோ?—"

**நரசிம்மராஜ்:**— அம்மணி! தமது தயவால், அப்படி ஒன்றுமில்லை.

**மஹாராணி:**—சரி, யாரங்கே, மஹாவீரனை அழைத்து வாருங்கள். உடனே மஹாவீரன். மஹாராணி முன்வந்து நின்றான்.

**மஹாராணி:**— ஆங்குள்ள ஸபையோர்களை ஒரு தடவை கம்பீரமாய்ப் பார்த்துச் சற்று ஆலோசித்து விட்டுச் சந்தேகத்துடன், "ஒருவேளை இதில் விசேஷமாய் ஏதாவது மாயமிருக்கின்றதோ? எங்கே மஹாவீரன். இந்த விண்ணப்பத்தில், தர்மராஜன் என்ற ஒருவன் குறிக்கப்பட்டிருக்கின்றான், அவன் யார்?

மஹாவீரனும் தர்மராஜனும் மஹாராணியார்முன், வந்தனம் செய்து வணக்கமாய் நின்றார்கள்.

மஹாவீரன் முதலில் நரசிம்மராஜனையும், பிறகு மஹாராணியையும் தர்மராஜனையும் முறையே பார்த்துத் தன் நிலமையையுணர்ந்தான். மஹாராணியின் முகத்தைப் பார்த்ததும் பெரும்புசலுக்குச் சற்றுமுன் தோன்றுங் கருங்கடல் போல உணர்ந்தான். ஆனால் அவன் தைர்யமும், புத்தித் திறமையும் வாய்ந்தவனாதலால் எப்படிப்பட்ட புசலையும் எதிர்த்து நடத்தும் மாலுமிபோல் விளங்கினான். நரசிம்மராஜன் பதவிக்கு ஓர் விஞசகாரணமாய்த் தோன்றும் இந்நிலமையில் அவனை எப்படியாவது தப்புவிப்பதே தனது முதற் கடமையென்று தீர்மானித்தான்.



**மஹாராணி:**— மஹாவீரனை ஒருவாறு கம்பீரமாய் ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "மஹாவீர! சிறுபாளையம் ஜமீன்தாரின் புதல்வியை ஏமாற்றி நீ அபஹரித்துச் சென்றது வாஸ்தவந்தானா? என்றாள்.

**மஹாவீரன்:**— வணக்கத்துடன், 'அம்மணி, ஏதோ பரஸ்பரக் காதல் பரவசத்தால் நடந்த—'

நரசிம்மராஜனுடையமுகமும் கண்களும் மஹாவீரன்வார்த்தைகளாலுண்டான கோபாவேசத்தால் சிவந்தன. ஒருதடவை தன் தேகம் முழுமையும் குலுக்கினான்; மஹாராணியாரிடம், தனக்கும் பாநுமதிக்குமுள்ள பாந்தவ்யத்தை, என்ன நேரிட்டாலும் சரி என்று தெரிவித்துவிடலாமா என்று எண்ணினான்' பிறகு தன் எதிரி கிருஷ்ணராஜனை நோக்கினான். அல்ல, இப்பொழுது செய்தால் நமது எதிரி மீறிவிடுவான் என்று நிறுத்திக்கொண்டான்.

**மஹாராணி:**—'காதல்—! துஷ்டா! உனக்கு என்ன காதல் வேண்டியிருக்கின்றது? யோக்யனானால் நீ ஏன் அப்பெண்ணின் தகப்பன் அனுமதி பெற்றிருக்கலாகாது?"

**மஹாவீரன்:**— 'அம்மணி! அடியேன் என்ன பதிலுரைப்பது?—மேலும், அம்மஹான் சிறுபாளையம் ஜமீன்தாரவர்கள், தன் புதல்வியை இப்பொழுது மஹாராணியார் சந்நிதியில் நிற்கும் தர்மராஜரவர்களுக்கு விவாஹம்செய்விப்பதாய் வாக்களித்திருக்கின்றார். அவரோ ஸத்தியஸந்தர்—"

**மஹாராணி:**— அப்படியானால் அப்பேதைப் பெண்ணை, அவள் தகப்பனாரிடமிருந்து பிரித்துச் செல்ல நீ துணிவதற்கு உனக்கு என்ன அதிகாரமிருக்கின்றது?

**மஹாவீரன்:**— அம்மணி! அடியேன் என்ன கூறப்போகின்றேன். காதலுக்குக் கண்ணேது? அடியேனும் மனிதன்தானே!"

**மஹாராணி:**— இவ்வார்த்தையால் வந்த கோபத்தையடக்கி, சற்று புன்னகை கொண்டு, "நீ சுத்த அயோக்யன் போலிருக்கின்றாயே! சரி, இருக்கட்டும், நீ அப்பெண்ணை விவாஹம் செய்து கொண்டு விட்டாயா? அல்லது—"

நரசிம்மராஜனுடைய மனம் குழம்ப ஆரம்பித்தது. மஹாவீரனுடைய விடையோடு தன்னுடைய மண்ணாசை வாழ்வெல்லாம் தீர்ந்ததென்று உணர்ந்து அதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான்.

**மஹாவீரன்:**— சற்று ஆலோசித்து, ஆம் அம்மணி!' என்றான்.

**நரசிம்மராஜன்:**— கோபாவேசத்துடன், 'அடே பாமபாதகி!' என்றான்.

**மஹாராணி:**— பொறும் நரசிம்மராஜ்; சற்று பொறும். உம்முடைய கோபத்துக்கு இது அவகாசமில்லை. இன்னும் நமது விசாரணை முடியவில்லை. மஹாவீர! உனது எஜமானர் உன் அழகான இக்காரியத்தை அறிவாரா? உண்மையைச் சொல்.

**மஹாவீரன்:**— 'அம்மணி! வாஸ்தவம் என்னவென்றால், என் எஜமானர் தான் இவ்வளவுக்கும் காரணம்.

**நரசிம்மராஜன்:**— அடே துஷ்டா! என்னையா நீ காட்டிக்கொடுக்கின்றாய்?

**மஹாராணி:**— (கோபத்துடன்) சொல்லு சீக்கிரம்! மஹாவீர, நமது ஆணைப்படிதான் நீ நடக்கவேண்டுமே யொழிய நரசிம்மராஜனை நீ கவனிக்கவேண்டாம்.

**மஹாவீரன்:**—"அம்மணி! மஹாராணியவர்கள் இட்டதே சட்டம் ஆயினும், என் எஜமானனுடைய சொந்த சங்கதிகளை மஹாராணியவர்களுக்குத் தவிர மற்றோர்க்குத் தெரிவிக்க—"

**மஹாராணி:**— சபையோர்களே! சற்று விலகியிருங்கள். இவ்விபசாரச் செய்கையில் உன் எஜமானருக்கு என்ன சம்பந்தம். ஞாபகம், வீண் அவதூறு சொல்லாதே!

**மஹாவீரன்:**— "அம்மணி! என் உயிர் ரக்ஷகனாகிய எஜமானரை நான் அவதூறு கூறுவேனா? "அம்மணி! சிறிது காலமாய் என் எஜமானர் தான் காதலித்த மங்கை கைகூடுமோ வென்ற மனவருத்தத்தால், தன் வீட்டு சமாசார மொன்றையும் கவனியாது, எங்களெல்லோரையும், இவ்வாறு மீற விட்டுவிட்டார்."

**மஹாராணி:**— இதைத்தவிர வேறு காரணமில்லையே?

**மஹாவீரன்.**—'இல்லை அம்மணி!'

**மஹாராணி:**— சரி! இருக்கட்டும். தர்மராஜனை நோக்கி 'தர்மராஜ்!'

தர்மராஜன் தலைவணங்கினான்.

**மஹாராணி:**— தர்மராஜ்! உன் நிலமையைப் பார்க்க நமக்குப் பரிதாபமாய் இருக்கின்றது. 'பெண்கள் எல்லோரும் பேதையர்களே' என்ற விஷயத்தை அவ்வினத்தைச் சேர்ந்த நாமும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கின்றது. சபல சித்தமென்பது பெண்களுக் கியற்கைக் குணம்தான். தர்மராஜ்! ஆயினும் இதுவிஷயத்தில் நீ இவ்வளவு துக்கப்படுவேதேன். அம்பு ஒன்று தவறினால், வில்லுமா முறிந்துவிட்டது. இம்மங்கையில்லா விட்டால், உலகத்தில் எத்தனையோ பேர்கள் உன் மெய்யன்புக்குத்தக்கவர்களிருப்பார்கள்—தர்மராஜ்! இனி என்ன செய்யலாம், நீ கோரியமங்கை இன்னொருவனை விவாஹம் செய்துகொண்டு விட்டாள். இனியவள் உன்னை எப்படி மணம் புரிவது.

**தர்மராஜன்:**— அம்மணி! அப்படியானால் நான்

செய்த விண்ணப்பத்துக்கு இதுதானு முடிவு. என்னுயிர் உள்ளவரை பழிக்குப் பழி வாங்கியே தீருவேன்.

மஹாவீரன் சொல்லுவது அவ்வளவு சத்தியவாக்கு என்று நம்பத்தக்கதல்ல."

**மஹாவீரன்:**—இந்தமாதிரி வார்த்தை ஸந்நிதானத்தி லல்லாது வேறு எங்கேயாவது நீ உபயோகித்திருப்பாயாகில், தர்மாராஜ்! உன்கதி என்ன ஆயிருக்கும் தெரியுமா? உடனே என்கத்தி—"

**தர்மராஜ்:**—உன்கத்தி! இப்பொழுது உத்தரவாகும் விஷயத்தில் உடனே என் கத்தித் திறமையை இதோ காட்டிவிடுகின்றேன்" என்று கோபாவேசத்துடன் உரையினின்றும் வாளை யுருவினான்.

**மஹாராணி:**—சீ! சும்மா இருங்கள் துஷ்டப் பசங்களா. நீங்கள் நிற்கும் நிலை தெரியாது என்ன பிதற்றுகின்றீர்கள். கிருஷ்ணராஜ்! நரசிம்மராஜ்! உங்கள் விரோத மல்லவோ இவ்வளவு கட்சிக்கும் காரணம். இனியாராவது நம்முன் சண்டை சச்சரவு செய்தால், உடனே அவர்களுக்கு விலங்கிட்டு, சிறைச்சாலை அனுப்பிவிடுவோம். ஞாபகமிருக்கட்டும் எவனானாலும் சரி". சற்று ஆலோசித்து விட்டு, பொறுமையுடன், அற்பர்களாயினும் நம்மிடத்தில் அவர்களுக்கு ந்யாயக் குறைவு கிடையாது. நரசிம்மராஜ், உன் ஸேவகன் மஹாவீரன் சொல்லுவதெல்லாம் உண்மைதானு! அவன் பாநுமதியை விவாஹம் செய்து கொண்டு விட்டது வாஸ்தவம்தானு?" இக்கேள்வியானது நரசிம்மராஜனுக்கு இடி விழுந்தாற்போல மஸ்தகத்தைக் கூடப் பேதித்துவிட்டது. அம்மணி! எனக்குத் தெரிந்தமட்டும், அவனுக்கு விவாஹமாய் விட்டது.

**தர்மராஜன்:**—அம்மணி! விவாஹம் நடந்ததாய் சொல்லுவது எப்பொழுது எவ்வாறு?

**மஹாராணி:**—கோபத்துடன், சீ போ! நீயோ லட்சணமோ! விவாஹம்-நடந்ததாய்ச்-சொல்லுவது, இவ்வளவு பெரிய மனிதன் உனக்குப் பொய்சொல்ல வந்தானோ? சரி இருக்கட்டும். இவ்விஷயத்தை ஸாவகாசமாய் நாமே நேரில் விசாரிப்போம். நரசிம்மராஜ், இவ்வார முடிவில் உம்முடைய வஸந்த மாளிகையின் க்ருஹப்ரவேச மஹோத்ஸவம் நடக்கின்ற தல்லவா? அதற்கு கிருஷ்ணராஜனையும், அழைக்கவேண்டும்.

**நரசிம்மராஜ்:**—அம்மஹான், அடியேன் வீடு வந்து என்னைப் பெருமைப் படுத்துவாராகில்—

**மஹாராணி:**—தடையென்ன! வரத்தான் வேண்டும். கிருஷ்ணராஜ் தெரிந்ததா? அங்கே இச்சங்கதி முற்றிலும் விசாரணை செய்யப்படும். மகாவீர உன் மனைவி பாநுமதியுடன் ஆஜராகவேண்டும். தர்மராஜ் நீயும் அப்படியே ஞாபகமிருக்கட்டும்.

(தர்பார் கலைந்தது.)

# இராமாயண அகவல்

## RAMAYANA AGAVAL

### இராவணனுற்பவச் சருக்கம் (தொடர்ச்சி)

அண்டம் யாவும் அடியனே யாட்சியில்
மண்டை யுளவரை யடங்கவு மாண்மோ
டடியனே ஞண்டு அடையவுமின்பம்
படியுள யாந்தர் வேந்தர் நீங்கலும்
வீரராம் தேவர் மன்ன னிந்திரன்
சூர ரிவரால் சாவெற் கிலாது
மூன்றரைக் கோடி ஆண்டுகள் சுகமாய்
நான்முக வாழ்தற் கருள்தி வாழும்"
என்றே சாற்றலும் எம்பிரான் மகிழ்ந்து
சொன்ன வரமெல்லாம் ஈந்து பின்னர்
கும்பு கர்ணனின் பக்கலிற் சென்றான்.
கும்ப கர்ணனீ தறிந்தே யெழுந்து
நிந்தியத் தவத்தைக் கேட்க நினைந்தான்;
நித்திரைத் துவமென வாக்கி லெழுந்தது
கேட்டலும் பிரமன் "கொடுத்தேன் கொடுத்தேன்,
நாட்ட மொன்றுண்டு செல்லுவேன் நானும்"
என்றே கூறி அன்னவா கனனும்
மன்றின் மலிபுகழ் மன்னவன் விபீடணன்
பக்கலிற் செல்லலும் பக்தனு மெழுந்து
பக்கலில் நிற்கும் பராபரன் றன்னை
சக்கரம் போல மூவ்வலம் வந்து
"திக்கெலாம் போற்றும் நான்முக, நம்பி!
ஈச்வர பக்தியைச் சாச்வத மாக
ஈச்வர! அருள்தி. அன்பனே! இன்னும்
அடியார் பக்தியும் அரும்பெருங் குணனும்
மடிதனை மடிக்க நல்மதி யுடனைய !
பாப ரகிதனாய் புண்ணிய சகிதனாய்
கோபம் போக்கி விளங்கு விளக்கமும்
தயை தாக்ஷண்யமும் தீங்கிலாச் சிந்தையும்
தயை செய்தடியேற் கருளிடல் வேண்டும்
அன்னவா கனனே! அருள்மா லுந்தியின்
சொன்னதா மரையிற் றோன்றிய புண்ணிய!
வேத வித்தே ! வேதிய" என்றே
காதலாற் கரைந்து கதறினன் மாதோ
தண்ணருந் தாமரைத் தடங்களில் வசிக்கும்
வெண்ணிறைப் பறவையை வாகன மாக்கியோன்
மனமகிழ் வாகி மன்னனைத் தழுவி
கனவர மீந்து, கண்ணிய மாக
சிரஞ்சீ வியாவென முடிசிர மேற்றி
கானிடம் சென்று வரம்பல வீந்து
நிறம் வெண் ணிறையுடை பறவையிலேறி
சிர நான் குடையோ னுருக்கரந் தனனே
அப்பால்,
தம்பி மாருடனே தசக்கிரீபனும்



வம்புகள் புரியு மரக்கரை யழைத்து
சேனையாக் கொண்டு சென்றா னிலங்கை.
தானையோ டிருநிதிக் கிழவன் எதிர்ந்துதன்
வீரர் மாயவும் புறங்கொடுத் தோடி
சூரர் வாழும் அளகைசேர்ந் தாண்டான்,
இராவணன் புகழோ டிலங்கையைப் புரந்தான்.
இராவணப் புகழைக் கேட்ட அரக்கர்
பற்பல திசையிருந் திலங்கையைச் சேர்ந்து
நற் செயல் காய்ந்திடு மிராவணன் தொழுது
தானையின் வீரராய்ச் சேனையின் தலைவராய்
மானைக் கொண்டான் தாசர் புகழ் கெட
வெற்றியை நாட்டி வாழ்ந்துவந் தனரே
கற்றவர் புரியும் யாகம் கெட்டது
திண்டோளி ராவணன் திருமணப் பந்தலில்
மண்டோ தரியை மணந்து சுகித்து
உலகினர் மாய்த்திடு மிராவணி தன்னையும்
கலக வல்லவன் அதிகாயனையும்
இன்னு மநேகம் மதலைய ரீன்றான்.
மன்மிகப் பூண்ட தம்பியர்க் கெல்லாம்
மணமும் நிகழ்த்தி மன்னவன் வாழ்ந்தனன்.
கணங்கள் பயந்து கெடுக்கலங் கினரே
தம்பியர் பலமும் தனையரின் நலமும்
எம்பிரான் வாமும் தானையின் பலமும்
மற்றுள நலமும் மாண்புடன் கொண்ட
வெற்றி பானு மிராவண வீரனும்
அகந்தைமேற் கொண்டு யாரையு மதியா
சுகந்தையைக் கொன்று அகத்தினை வென்று
பத்தர் பலரைப் பதறவே கொல்வான்
சித்தரை யெல்லாம் சீர்கெட வடிப்பான்
தேவரை யெல்லாம் தேடிச் சிறையினில்
தேவ விந்திரனுடன் தள்ளியே மிதிப்பான்.
அகந்தையைக் கொண்டோர் தன்மை இதுதான்
ஜகமெலாம் பயத்தால் பதறித் தவித்தது. [போலும்.
செல்வமும் பலமும் சீருட னுற்றால்
செல்வர் யாவரு மகந்தையே பூண்பர்.
அகந்தை வந்துற்றால் அறிவிலாப் பதர்போல்
நிகரிலை நமக்கென நினைந்து தலைமேல்
கர்வமாம் பித்தம் குபீலென வேறி
சர்வமும் வாட்டச் சடுதியிற் சொல்லிடும்.
உலக இயற்கை இதுவே போலும்.
இதற்குக்
கலக விராவணன் சரியா கின்றான்.
சிற்சில ரிதனின் வலையிற் படாது
பற்பல நீதியைப் புகட்டுவர் பலர்க்கு.
உலக ஆட்சியும் ஊரின் சிறப்பும்
பல புகழ்த்தம்பியர் பலமும் கொண்ட
மாமமாம் துளைத்த மகிபன் பரமன்
இராமனே இதற்குச் சரியெனச் சாற்றுவல்.
மலத்தினைப் போ[illegible] மாண்புட னிந்த
வுலகினை உய்க்க [illegible] னன்றோ!
[illegible]றக,
சிரம்பத் துடைய [illegible]
பரம்பொருள் அன்பன் [illegible],
தம்பியைப் படைத்தோர் தானைக் கஞ்சார்.
எம்பியர் செய்தியோ என்னெனச் சொல்வேன்
தேவரை வாட்டித் திக்கெலாம் நடுங்க
தேவரின் அகிதராய்த் திரிகின்றனரே.
எம்பிய ரிருந்து மெற்கென் நற்பேர்?
வம்பரின் தமையன் வடதிசை யரசன்
என்றே உலகம் பழிக்குமென் செய்வேன்"
என்னவே வருந்தி தூதனை யழைத்து,
"செல்வம் வேண்டுமேற் றேவரைப் போற்றுக
நல்லபேர் பெற்று நலம்பட வாழ்வீர்.
ஆகையாற் றேவரைச் சிறையினின் நீக்குவீர்.
வாகை சூடிய எம்பி இராவண!
கரும்பினை நீத்து வேம்பை வேண்டன்மின்,
பெரும்பேர் வேண்டின் பொய்யுரை நீங்குமின்,
நற்புகழ் விரும்பிடில் நலம்பல புரிமின்,
கற்பதைக் கற்று அதன் வழி நின்மின்.
மற்றவை யறிந்தால் மாண்புட னீங்குமின்.
பற்பலர் பெற்ற பதந்தனை நாடுமின்.
பதம்பெறற் பொருட்டு பரமனைப் பணிமின்.
சிதம்பரக் கூத்தனைத் தேடி யடைமின்.
இயாகம் பலவே இனிதா யியற்றுமின்.
மயானத் தாடுமெய்யனு மாள்வான்"
எனவே ஓலையொன் றெழுதிக் கொடுத்து
மனம் கொன்றிட்ட மகிபனும் சொல்வான்,
" தூதுவ நீ போய் இலங்கையை யடைந்து
தீதுகள் புரியு மிராவண னிடத்தே
இந்த ஓலையைக் கொடுத்திடக் கடவாய்
கந்தத் தொடைபூண் அரசனு மேற்பான்"
எனவே பணித்தலும் தூதனு மோடினன்.
மனவே கத்தோ டோடிய தூதனும்
இலங்கையைச் சேர்ந்து கொலுவையும் கிட்டி
இலங்கைவேந் தனிடம் ஓலையை ஈந்தான்.
பத்துச்சிரமுடை மன்னனும் பார்த்து
சித்தம் வெந்திடக் கோபமும் பூண்டு
நெறநெற வென்னப் பல்லைக் கடித்து
கறகற வென்னக் கரத்தைப் பிசைந்து
"தேவர் உதவியைப் பூண்ட தன்மையோ?
தேவர் நாயகன் நேயனென் றெண்ணித்
தான்தான் யோக்கியன் நானயோக்கியனென்ன
தான்எனு மகந்தையால் விடுத்தனன் போலும்.

(இன்னும் வரும்.)

# தரணீபதிஅல்லது தந்திரபாலன்

## DHARANIPATHI or THE BOY DETECTIVE

### முதல் அத்தியாயம்

### நன்மை கடைப்பிடி

(தொடர்ச்சி)

தரணீபதி மறுநாள் அதிகாலையில் எழுந்திருந்தான். அவன் தாயாரோ அவனுக்கு முன்னமேயே எழுந்து வேலைசெய்து கொண்டிருந்தாள். அவள் சுறுசுறுப்பாய் வீட்டுக்காரியங்களைக் கவனித்ததைப் பார்த்தால் அவ்வம்மணிக்கு உடம்பு நன்றாய்சொஸ்தமாய் விட்டது என்று சொல்லலாம்.

"இன்று மப்பு மந்தாரமில்லாமல் நிர்மலமாயிருக்கிறது; மழை வராதுபோலிருக்கிறது" என்று தரணியிடம் கூறினாள்.

தரணீபதி கொஞ்சம் உத்ஸாகத்துடன்: "ஆமாம், அம்மா, நல்லதுதான், நமக்கு நாலுகாசு சம்பாதிக்க இன்றைக்கு வழிஉண்டு. மருந்துக்காக பணமில்லையே என்று ஏங்கவேண்டாம். ஆனால், நீ இந்த உடம்போடு வேலை செய்யவேண்டாமே, அம்மா!"

"வேலை செய்யாமலிருக்கிறது நல்லதாடா அப்பா, நீயே சொல்லேன்."

பகவான் மீது எல்லா பாரத்தையும் போட்டுவிட்டு வந்ததனால் எல்லாவற்றையும் சகித்து வந்தான்; அது மாத்திரமல்ல, வரவேண்டிய கஷ்டங்களெல்லாம் வந்தாய்விட்டன; சற்றுப் பொறுத்துக்கொள்ளுவோமே என்றிருந்தாள். பொறுமையின் அவதாரமேபோல் விளங்கினாள்.

தரணீபதி கொஞ்சம் பழையமுதுண்டு வெளியே புறப்பட்டுப் போய்விட்டான். அவன் சொன்னபடியே அன்றையதினம் அவனுக்குக் கிடைத்தகூலிப் பணத்திலிருந்து மருந்துக்குக் கொடுக்கவேண்டியதைச் செலுத்திவிட்டு, மீதியைத் தன் அன்னையிடம் கொடுத்தான். பிறகு சற்றுநேரம் தெருப் பக்கமாய் வந்து உலாவிக்கொண்டிருந்தான்.

அப்பொழுது அங்கே முன்னே கூறப்பட்டுள்ள அடுத்த வீதி சங்குவைச் சந்தித்தான்.

சங்கு, மிக டாம்பீகமாய் உடை தரித்திருந்தான். பார்ப்பவர் கண்ணைப்பறிக்கும்படி பளபளவென்று மின்னும் மேலங்கியும், இடையில் நான்கு விரற்கடை அகலம் கரையுள்ள காஞ்சீபுரவேஷ்டியும், தலையில் சரிகைருமாலுமாய் விளங்கினான். குடி, புகை, புனை சுருட்டு, பொய்முதலியவைகள் நிறைந்த களஞ்சியமாகவுமிருந்தான். பணம் கிடைப்பதென்றால் அவன் எக்காரியமாயினும் செய்யத்தாமதியான். அவன் தன் ஒன்றரைக் கண்ணுடனும் இளித்தவாயுடனும் தரணீபதியை நோக்கி,

"அடே, ஒங்கப்பா, இப்போ எப்படி இருக்காரு?" என்றான்.

தரணீபதி வெட்கமடைந்தவனாய்: "எங்கப்பா நெடுநாளாம் போய்விட்டார். மொண்டிக் கிட்டு வந்து சொல்லிவிட்டுப் போனான்."

இளித்துக்கொண்டே, "ஹாம், அப்படியா! போயிட்டாரா, அப்படியே போனப்லேதான். அவர் அங்கே என்ன பண்ணமுடியும். முதல்லே மம்டி தூக்க முடியுமா? பாவம், ஒங்கம்மா இன்னு சொல்ரா?" வருத்தத்துடன்: "உஹூம், ஒன்றும் சொல்லவில்லை." "பாவம். என்னமோ யெல்லாம் நெனைப்போ, ஹோனு அழலேடா? ஏண்டா அழனும், நீதான் இருக்கயே!" தரணீ நடுக்கத்துடன்: அ— ஆண்டா, எங்கம்மா அப்படித்தான் சொன்னு."

இரக்கமும் ஆனால் அதே சமயத்தில் வஞ்சகமும் சங்குவின் முகத்தில் தாண்டவமாடின. சிறிது நேரம் ஏதோ ஆலோசிப்பவன் போலிருந்தான். பிறகு குனிந்து தரணீபதியுடன் ரஹஸ்யமாய் "அடே, நீ பயப்படாதே நான் இருக்கேன் இன்னிக்கி ராத்திரி நல்ல வேட்டெ நன்னு சேட்டெ போள்ளாம். இன்னு, நீயும் வறயா, சொல்லு." என்றான்.

தரணீபதி அவனை உற்றுப் பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தான். சற்றுநேரம் கழித்து சங்கு, "அதெல்லாம் முடியாதப்பா. பணம் சம்பாதிக்க ஆசைதான். ஆனால் பட்டம் பகலில் நல்ல வழியில் சம்பாதிக்க வேணும். எனக்கு அவமானமும் எங்கம்மாவுக்கு துக்கமும் வேண்டவேவேண்டாமப்பா."

"போடா, போ. நீ எப்பவும் இப்படிதான் பிரமாதமா வேதாந்தம் பேசறது, ஒங்கம்மா இதெல்லாம் வேண்டாம் என்றுப்லே இருக்குது. எங்கம்மா, தெரியுமா, நான் இன்னு பண்ணறதும் ஒண்ணும் சொல்றதில்லை. திருட்டோ, பொரட்டோ, எப்படி பணம் கொண்டுவந்தாலும் ரொம்ப சந்தோஷம்தான். ஏண்டா, தரணீ, யோக்கியமா பொழைக்கிறவாளுக்கு இது காலமாடா?"

"மோசம் பண்ணி பிழைக்கிறவர்களுக்கும் இது காலமில்லையப்பா. சங்கு, போகப் போக உனக்கே அது தெரியும் பாரு."

"எப்பொடா தெரியும்? காப்பி ஹோட்டலில் பலகாரம் சாப்பிடச்சயா? அப்பொ நான் பாத்துக்குவேன் எனக்குத் தெரியாதா?—ச்—அடே, போலீஸ் ரங்கண்டா!"

இவர்கள் இப்படி பேசிக் கொண்டிருக்கும்போது அத்தெருவின் ஓரமாய் ஒருவன் வெகு வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தான். அவன் தான் சங்கு கூறிய போலீஸ் ரங்கன். வேகமாய்ப் போய்க் கொண்டிருந்த போதிலும் ஆங்காங்கு நடக்கும் எல்லாவற்றையும் மிகவும் கவனமாய்ப் பார்த்துக் கொண்டுபோனான். இவர்களுக்குச் சமீபத்தில் போனபோது தன் கைக்கடியாரத்தை எடுத்து மணி



என்ன வென்று பார்க்கவும், அக்கடியாரம் பொன்னாலானதால் வெயிலில் பளிச் சென்று மின்னிற்று.

"சங்கு, போலீஸ் வேலை நல்லது தானா?" என்று தரணீபதி கேட்டான்.

"ஆமாம், அதிர்ஷ்டம் இருக்கிற வரையில் தான். அதிலேயும் சாமார்த்தியம் வேணும். ஆனா ரொம்ப ஈனமான தொழில். ரங்கன் எப்படி சம்பாதிச்சிருக்கான், ரொம்ப யோக்யமா வாக்கும். லஞ்சப் பணம்ணு அவனுக்கு அப்படி குவிஞ்சு இருக்குது. தனக்கே திருடத் தெரிஞ்சாதானே திருடர்வழி யெல்லாம் தெரியும். சாமார்த்திய மிருந்து போலீஸ் வேலையிலயர்ந்தும் ரொம்பசேர்க்காவிட்டா யார்தப்பு? சமயம், சாமார்த்தியம் இல்லேன்னு அர்த்தமில்லே;உன்னாட்டம் யோக்கியமா பொழைக்கணும்னா?"

"அவர்களுக்குச்சம்பளம் கிடைக்கிறதில்லையோ?

"அப்பப்பா! அதைமட்டும் நம்பிக்கொண்டிருந்தால் உபவாஸம்தான் இருக்கணும். எப்படி சம்பாதிச்சாலும் மேல்வரும்படிதானே கொஞ்சங்கொஞ்சமா குவிஞ்சு போறது. திருடனுக்கும் போலீஸ்காரனுக்கும் என்ன வித்யாஸம்? திருடனிலும் பக்காதிருடனச்சே போலீஸ்காரன்: இப்படி உளவுபார்க்கிறான், பொடிவைக்கிறான், பித்தளாட்டம் செய்கிறான், மோசம் பண்ணி உடனே ஆளைக் காட்டிக் கொடுத்து விடுகிறான், உயிருக்கே ஓலை வைக்குறான். தரணீ, எப்பவும் போலீஸ் வேலைக்குப் போகாதே; சாதுவா, யோக்கியமா யிருந்தயோ, தம்பிடி கூட கிடைக்காது; தவிர, தலைக்கே சில சமயங்களில் கல் விழுந்து விடும்.

உடனே இரண்டு பேரும் பிரிந்து போய்விட்டார்கள். சங்கு சொன்னதை தரணீ சிறிதாவது அங்கீகரிக்கவில்லை. நல்ல யோக்யதையுடனும் மிக்க வரும்படியுள்ள போலீஸ் உத்யோகஸ்தர்கள் இருக்கிறார்கள் என்று தரணீபதிக்குத் தெரியும். ஜனங்களிடத்தில் யாதொரு மோசமும் செய்யாமலேயே அவர்கள் நன்மதிப்பைப் பெறுவதுடன் கவர்ன்மெண்டாரிடமிருந்து பென்ஷனும் அவர்கள் அடையலாம் என்பதை அறிந்திருந்தான்.

"நான் போலீஸ், அல்லது துப்பறியும் போலீஸ் உத்யோகஸ்தனாகத்தான் இருக்கப்போகிறேன்" என்று தனக்குத்தானே உரக்கச் சொல்லிக்கொண்டான்.

சிறு பையனுக்கு விநோதமான உத்யோகந்தான்! ஆனால் அந்த உத்யோகத்தின் மீது அவன் மனம் பதிந்துவிடவே, அதைப்பெறுவதில் கண்ணுங்கருத்துமாயிருந்தான்.

மறுநாள் காலை சுமார் எட்டுமணிக்கு தரணீபதி துப்பறியும் போலீஸ் கச்சேரிக்குப் போய் எப்பொழுது அப்போலீஸ் உத்யோகத் தலைவரைக்கண்டு பேசுவோமோ என்று பொறுமையுடன் காத்திருந்தான். அவன் சங்கதியைக் கேட்டவர்களெல்லாரும் அவனைக் கேலிசெய்து நகைக்கலானார்கள். யாரோ ஒரு பையன் தம்மைப் பார்க்க வந்திருக்கிறான் என்று போலீஸ் தலைவரான மாதவராவ் அவர்களுக்குத் தெரியவந்தது. அவர் மேஜையின்மீது இருந்த ரிகார்டுகளைச் சற்று பார்ப்பதும், பிறகு பையனை வெகு நிதானமாய்க் கவனிப்பதுமாக இருந்தார்.

மாதவராவ் நடுத்தரமான உயரமுடையவர். சற்று ஒல்லியாயிருப்பார். கூர்மையான பார்வை. நீண்டு வளைந்த புருவங்கள். தலையில் கன்னங்கரேலென்று மயிரிருந்தபோதிலும் அங்கங்கே வெள்ளிக்கம்பியோ என சிறிது நரையையும் காணலாம். கொஞ்சம் மெல்லிய குரலில்தான் பேசுவார். ஆனால் மிக்க சுறுசுறுப்புள்ளவர். யார் அவரிடத்தில் வந்தபோதிலும் அவர்களைக் காக்கவைக்காமல், அவர்கள் வேலையையே முதன் முதல் கவனிப்பார்.

"துப்பறியும் வேலையா உனக்கு வேண்டும்?" என்று தரணீபதியை யாரோ கேட்டதுபோலிருந்தது. யாரென்று பார்த்தான். மாதவராவ் எதிரில் நிற்கிறார்.

"ஆமாம், ஸார்" என்று உடனே பதில். அவருக்கு இது எப்படித் தெரியும் என்று ஆச்சரியப்பட்டான்.

"ஏன்?"

"என் தாயார் ஆதரணையின் பொருட்டு."

"ரொம்ப சிலாச்யமான நோக்கம்தான், ஆனாலும் இன்னும் எத்தனையோ உத்யோகங்கள் இருக்கின்றனவே. இந்த வேலைக்கு புதிதாய் ஒன்றும் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை; வரவர அனுபவ முதிர்ச்சியே போதும். இதற்கு சாமர்த்தியம் இருக்கவேண்டும். எல்லாருக்கும் இந்தசாமர்த்தியம் வந்துவிடுமா?"

தரணீபதி வெகுகவனமாய் அவர் சொல்வதைக் கேட்டு வந்தான். பிறகு,

"ஒருவேளை எனக்கு இந்த வேலைக்கு வேண்டிய சாமர்த்தியம் இருக்கலாமோ, இல்லையோ?" என்றான்.

மாதவராவ் சிறிது மகிழ்ந்தவராய் "ஆஹா, இருக்கலாம். இந்த வேலைக்கு என்னென்ன அவசியம், கொஞ்சம் சொல்லு, பார்க்கலாம்" என்றார்.

"சாமர்த்தியம் இருக்கவேண்டியது ஒன்று" என்று தைரியமாய் ஆரம்பித்தான் தரணீபதி.

"அப்பா, சாமர்த்தியம் இல்லாமல் எந்த காரியம் தான் முடியும்? பொதுவாய் எல்லா உத்யோகங்களுக்கும் இது அவசியம்வேண்டும், யோசித்துச்சொல், பார்ப்போம்."

தரணீபதி உடனே பதிலுரைக்கவில்லை. சற்று நேரம்புருவங்களை நெறித்துக்கொண்டு தன்கைகளை உற்றுப் பார்த்துக்கொண்டே நின்றிருந்தான். கடைசியில், "ஒன்பது விஷயங்கள் வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது" என்றுசொன்னான்.

"தனித்தனி ஒன்பதா? என்னசொல்?"

"நிதானித்தறிதல், கொண்டது விடாமை, வாய்ப்பதட்டமின்மை,"

"ஆமாம், மூன்று; மேலே?"

"தைரியம், தந்திரம், தக்கவண்ணம் நடத்தல்."

"ஆமாம், ஆறாயிற்று; தக்கவண்ணம் நடத்தல் என்றாயே; எதற்குத் தக்கவண்ணம் நடக்கவேண்டும்?"

"சமயத்திற்குத் தக்கவண்ண மெல்லாம் தான் நடக்க வேண்டும்."

"நன்றாய்ச் சொன்னாய், மேலேசொல், பார்ப்போம்"

"ரஹஸ்யம்—மானிட குணங்களைப் பற்றியும், அவர்களுடைய தீய ஒழுக்கங்களைப் பற்றியும் தெரிந்திருத்தல். இவைதவிர, முகச்சாயலை அடக்கி வேறு படுத்தவும், மாறுவேஷம் போட்டுக் கொள்ளவும் தெரியவேண்டும். பலபாஷைகளிலும் பயிற்சி இருக்க வேண்டியது. நம்பகம்—பிறர்நம்மிடம் நம்பகம் கொள்ளும்படியாய் அவர்களை வசியம்செய்து கொள்ளுகிற சக்தி இருத்தல் இன்றியமையாதது."

"முக்கியமாய் திருட்டுப் பயல்களின் நம்பகம்தான் வேண்டும். அவசியமான விஷயங்கள் உனக்கு நன்றாய்த் தெரிகின்றனபோலிருக்கிறது. இன்னம் ஏதாவது தெரியவேண்டியது அவசியமோ?"

"ஆம், ஆம், ஒன்று மறந்து விட்டேனே! வெட்கமற்று இருக்கவேண்டும்."

இச்சம்பாஷணையை வெகு கவனத்துடன்கேட்டுக்கொண்டிருந்த உத்யோகஸ்தர்கள் எல்லாரும் தாணீபதியின் கடைசிவார்த்தையைக் கேட்டு கலீரென நகைத்தார்கள். மாதவராவும் சிரித்தார். அவர் தாணீபதியின் மதி நுட்பத்தைப்பற்றி மிகவும் வியப்படைந்தார்; பதில்சொல்லஏதாவது தயங்கினானோ? அவன் வாக்சாதுர்யத்தைக் கண்டீர்களோ?

"சரி, உன்னை வேலையிலமர்த்தி எப்படி வேலை பார்க்கிறாய் என்பதை நான் தெரிந்து கொள்ளவேண்டும்" என்றார் மாதவராவ்.

தாணீபதியின் கண்களில் ஆனந்தக்கண்ணீர் ததும்பின:

"எனக்கு என்ன சம்பளம் போடுகிறீர்கள்?" என்றான் தாணீபதி.

கண்ணைச் சிமிட்டிக்கொண்டு "அப்படியல்லவா காரியத்தின்மேல் கண்ணாயிருக்கவேண்டும்; பன்னிரண்டு ரூபாய் போட்டுவைக்கிறேன். கச்சேரி வேலைக்காரப்பையன் போய்விட்டான்; தற்காலம் அவன் வேலையைப்பார்த்துவா. தந்தியடிக்கக் கற்றுக்கொண்டாயானால்—ஆம், அதுகற்றுக் கொண்டால் தான் வேலைஉனக்கு காயமாகும்—சம்பளம் இன்னம் அதிகம் போடலாம். தெரிந்ததா? உன்பேரென்ன?"

"தாணீபதி."

"ஆ, நல்ல பேர்தான். நீ நாளையதினம்காலை ஏழு மணிக்கு இங்கு வந்துவிடு. ரிகார்டு, புஸ்தகங்கள், இவற்றை யெல்லாம் சுத்தமாயும் சரியாயும் எடுத்துவைக்கவும் போகவும் தான் உனக்கு வேலை. தெரிந்ததா?"

"தெரிந்தது, ஸார். சரி, நாளைக்கு சரியாய் வந்து சேர்ந்துவிடுகிறேன். நமஸ்காரம், ஸார்" என்று மனக்கிளர்ச்சியுடன் சொல்லிவிட்டு புறப்பட்டுப் போய்விட்டான்.

"ஆ, அச்சிறுவன் நல்ல ஸ்திதிக்கு வருவான்" என்று தமக்குள்ளேயே சொல்லிக் கொண்டிருந்தார் மாதவராவ்.

---

தாணீபதி மிகக்களிப்படைந்தவனாய் வீட்டிற்கு வெகு விரைவாய்ச் சென்றான். இனிமேல் கஷ்டப்படவேண்டிய அவசியமில்லை. நற்காலம் பிறந்துவிட்டது என்றே சொல்லலாம்.

வீட்டுக்காரியங்களை முடித்துவிட்டுத் தன் தாயார் ரவிக்கைகள் தைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவனுக்கு ஆச்சரியம் கிளம்பிவிட்டது.

"அப்பா, தாணீ, நீ மாத்திரம் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறாயே; நானும் என்னாலானமட்டும் வேலை செய்கிறேன்" என்று புன்முறுவலுடன் சொன்னாள்.

வியாதியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த தன் தாயாருக்கு எங்கிருந்து அவ்வளவு தீரமும் மனோதிடமும் வந்தனவென்று ஆலோசிக்கலானான்.

அங்கிருந்த ரவிக்கை சீட்டிகளைக் கண்டு, "அம்மா, இதெல்லாம் வாங்கிவர, நீ கடைக்குப்போயிருந்தாயோ? கடையில் கடன் கொடுத்தானோ?" என்றான்.

"இல்லையடா, அப்பா. இங்கு வைத்தியர் வந்திருந்தார், அவர் வாங்கியனுப்பினார்."

திடீரென்று உருக்கத்துடன் "அம்மா, அம்மா, உனக்குத் தையல் மெஷீன் ஒன்று வரவழைக்கிறேன். மாசம் கொஞ்சம் கொஞ்சமாய் அதன் விலையைக் கொடுத்துவிடலாமோ, இல்லையோ?"

"தாணீ, நாம் இப்பொழுது ஒன்றுக்கும் கடனாக வேண்டியதில்லை. நீ எங்கேயோ போனாயே, உன் காரியம் எப்படியாயிற்று?"

"பழந்தான், தெரியாதோ? ஆபீஸில் உத்யோகம். மாசம் பன்னிரண்டு ரூபா சம்பளம்; மேலே மேலே சம்பளம் உயரும், அம்மா."

"அப்பா, நமக்குக் குறைச்சலேயில்லை. என்ன உத்யோகம்டா, அது?"

மிக்க பரபரப்புடன்: "அம்மா, நான் துப்பறியும் போலீஸ்காரனாகப் போகிறேன்'.'

அவன் தாயார் தையல்வேலையை திடீரென நிறுத்திவிட்டு அவனை உற்றுப்பார்த்தாள். சிறிதும் நம்பாமல், "என்ன, துப்பறியும் உத்யோகமா?" என்றாள்.

"ஆமாம், அம்மா."

"அடா, உனக்கென்ன இப்படிப்பட்ட வேலையின் மேல் ஆசை. உனக்கு இந்த உத்யோகத்திற்குத் தகுந்த சாமர்த்தியம் இருக்கிறதா? எப்பொழுதும் அபாயம்தானே இந்த வேலையில். கண்டபடி லஞ்சம் மூத



லானதுகள் வாங்க நேரிடும். கஷ்டம், அவமானம் தவிர வேறே ஒன்றும் இதிலே கிடையாதேடா."

"ஏனம்மா, இந்தவேலை ஈனம், இது நல்ல உத்யோகம் என்பதெல்லாம், நாமே செய்துகொள்ளுகிறது தானே. நான் பார்க்கிறேன் என்னாலானமட்டும்."

"அதெல்லாம் இல்லை. இப்பொழுது உனக்கு நல்ல பெரிய கேஸ்களாய் தருவார்களென்று எனக்குத் தோன்றவில்லை.'

"எல்லாம் நம்மால்தான் இருக்கிறது. என்னுடைய இளமையும் உருவமும் எனக்கு விரோதமாயிருக்கின்றனவாக எனக்குத்தோன்றவில்லை; ரொம்பஅனுகூலமாகவே யிருக்கும். தைரியம், யுக்தி ஆகிய இவைகள் உள்ளவர்கள் தான் காரியங்களைச் சாதிக்கிறவர்கள். எனக்கு இரண்டும் இருக்கிறது, அம்மா."

மறுநாள் காலையில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே போலீஸ் கச்சேரிக்கு வந்து சேர்ந்து, தனக்குள்ள வேலைகளை எல்லாம் வெகு சீக்கிரம்செய்து வைத்திருந்தான். பத்துமணி வரையில் இவனை ஒருவரும் கவனிக்கவில்லை. பிறகு மாதவராவ் உள்ளே நுழைந்து தாணீபதி எவ்வளவு சீராய் தன்வேலையைச்செய்து முடித்திருக்கிறானென்பதை யுணர்ந்து மகிழ்ச்சி யடைந்தார். தம் அறைக்குள் சென்றதும், தாணீபதியை வரும்படி கூப்பிட்டார். அவன் வந்ததும் ஒரு ரிஜிஸ்டரை அவனிடம் கொடுத்து,

"அதில் உன்பெயர், இருப்பிடம் இவைகளை எழுது" என்றார்.

அங்கிருந்த பேனாவையெடுத்து அவர் கட்டளையிட்ட வண்ணம் முத்துப்போன்ற அக்ஷரங்களில் எழுதினான்.

"பேஷ், படிப்பு விஷயத்தில் அவ்வளவு மோசமில்லை.—நீ நல்ல பையன்தானே?"

"ஒருவேளை யிருக்கலாம். என்னைப்பற்றி நான் நல்ல பையன், என்று நானே எப்படிச் சொல்லிக்கொள்கிறது."

மாதவராவ் சிரித்தார்.

"தாணீபதி, உன்பார்வைநுட்பத்தையும் யுக்தியையும் இன்றையதினம் பார்க்கப்போகிறேன்."

தாணீபதியின் முகம் ஆனந்தத்தினால் மலர்ந்துவிட்டது. மாதவராவ் சிறிய துண்டுக் கடிதத்தில் ஏதோ எழுதினார்.

"இந்தக்கடிதத்தில் குறிக்கப்பட்டுள்ள வீட்டில் நேற்றிரவு களவுபோயிருக்கிறது, போய் வீட்டைச் சோதனைசெய்து உனக்கு என்ன தோன்றுகிறதோ, வந்து எனக்கு சொல்லவேண்டும்" என்றார்.

"எழுதிக்கொண்டுவரட்டுமா?"

"ஆகா! தெளிவாயும் சுருக்கமாயும்,"

"நான் சிறுவனாயிற்றே,ஒருவேளை உள்ளே விடாவிட்டால்."

"அந்தக் கடிதத்தில் என்பெயர் எழுதியிருக்கிறது அதை வீட்டுக்காரனிடம் கொடுத்து விடு. இன்று காலை அவ்விடம் போய்ப் பார்த்தேன். உன் அபிப்பிராயம் என்ன என்பதை நான் அறியவேண்டும்.'

கடிதத்தில் குறிக்கப்பட்ட இடத்திற்குப் புறப்பட்டான். ஒருமணி நேரத்திற்குள் வந்து தனக்குத் தோன்றிய அபிப்பிராயங்களை எழுதி மாதவராவிடம் கொடுத்தான். அவர் அதைப் படித்துப் பார்த்து மகிழ்வடைந்தார்.

"தாணீ, இந்த உத்யோகத்தில் எவ்வளவோ அனுபவமுள்ளவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த கேஸ் விஷயத்தில் அவர்கள் உன் மாதிரி நடந்திருக்க மாட்டார்கள். உன் எதிரில் நான் ஒன்றும் சொல்லக்கூடாது. நம்மிருவருடைய அபிப்ராயமும் ஒரு விஷயத்தில் தவிர ஒத்திருக்கிறதைப் பார்த்தாயா? சொத்தைக் களவாடினது வீட்டிலிருக்கிற ஆசாமிகளில் ஒருவனே என்றல்லவா உன்அபிப்ராயம்?"

"ஆமாம், எனக்கு தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன ஸார்."

"தாணீ, அது தப்பபிப்பிராயம். களவாடியவன் வீட்டின் வழியாய் வெளியே போயிருக்கிறான். ஆகையால் தான் நீ அப்படிச் சொல்லுகிறாய். அவன் இரண்டா மாடி ஜன்னல் வழியாய் வெளியிலிருந்து உள்ளே பிரவேசித்திருக்கிறான்."

தாணீபதி தலையை யசைத்துக்கொண்டே, "அது தான் நீங்கள் தப்பபிப்ராயம் கொண்டிருக்கிறது" என்றான்.

மாதவராவ் தம்மபிப்பிராயமே சரியெனக் கருதியவராய், சிரித்தார்.

மேஜையிலிருந்து ஒரு ரிகார்டை எடுத்துக்காட்டி, "இதோபார், என் குறிப்புக்களை: பந்தல் சாய்ந்துள்ளது; கொடிகள் நசுங்கி உள்ளன: பூந்தொட்டிகள் உடைந்துள்ளன; பக்கத்து சந்து; இரண்டா மாடி ஜன்னலில் ஏறி உள்ளே இறங்கியுள்ளான்? பார்த்தாயா? நீ வெளியே சோதனை செய்யவில்லை," என்று மெதுவாக தாணீபதியின் கன்னத்தைக் கிள்ளினார்.

தன்னுடைய பக்கத்தில் தான் ஜயம் என்று தாணீபதிக்கு ஆனந்தம் பொங்கியது.

---

மலை **வேம்பு**:— இதற்கு கிருமிகளைப் போக்குகிற குணமுண்டாம். கசப்பும் வெகட்டலுமுடைய இதனுடைய வேரின் பட்டையைக் கஷாயமிட்டு (வேரின் பச்சைப்பட்டை 4 ஔன்ஸ்ஜலம் 2 பைண்ட் 1 பைண்ட் அளவுக்குக் காய்ச்சிக் கொள்ளவும்) குழந்தைக்கு 1-பாலடைவீதம் 3 மணி நேரத்துக்கொருதரம் வாந்தியாவது பேதியாவது காணுகிறவரையில் கொடுக்கவும். அல்லது காலை மாலை இரண்டு நேரம் சிலநாள் கொடுத்து பிறகு பேதிக்குக் கொடுக்கலாம். மாத்திரை அதிகமானால் விஷமிருக்கும். பட்டையானது உலர்ந்து விட்டால். வீரியம் குறையுமென்றும், சாய்க்கும், இலைக்கும், விஷகுணமுண்டென்றும் கண்டிருக்கின்றது.

# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### I. ஆத்திசூடி விளக்கம்

### 34. கிழமைப்பட வாழ்

இந்த ஸூத்திரத்திற்கு உரிமை நிலைத்திருக்கும்படி வாழ்ந்துவருவாய் என்பதுபொருள்: அதாவது பிறருக்கு உன் விஷயங்களில் உள்ள உரிமை அல்லதுபாத்யதை உன் மனததைவிட்டு அகலாதபடி வாழ்நாளைச் செலவிட்டு வரவேண்டும் என்பதாயிற்று. ஆகவே நமது தேஹம் முதலிய எல்லா உரிமைப்பொருளும் பரோபகாரத்திற்கே உபயோகப்பட்டு நாம் கடைத்தேற வேண்டும் என்று ஏற்பட்டிருக்கும் ஈசாஞ்ஞையை நாம் எந்தத் தாழ்ந்த நிலையிலிருந்தாலும் உயர்ந்த நிலையிலிருந்தாலும் அலக்ஷ்யம் செய்யாது, செய்ய வேண்டிய ஸத்கர்மங்களைக் கூடியவரையில் பரோபகார விஷயத்திலே செய்து தீர்க்கவேண்டும். இப்படிச் செய்து வருவதால்தான் மனித ஜன்மம் எடுத்ததனுலாய பயன் கைகூடும்.

இந்த ஸூத்திரத்தினால் ஒருவன் தனது பொருள், சக்தி முதலியவைகளைப் பெரும்பாலும் பரோபகார விஷயத்திலும், சிறுபான்மை தன் விஷய ஸம்பந்தத்திலும் செலவிட வேண்டும் என்பது வெளியாகும். ஆனால் வரவரத் தன்விஷயம் குறைந்தும் கூடியவரையில் மறக்கப்பட்டும் வந்தால்தான் பரோபகார விஷயம் ஓங்கிக்கொண்டு வரும். ஏராளமாக இடம் பொருள் ஏவலுள்ளவர்கள் இந்த விஷயத்தில் வெகு ஒழுங்காக நடந்து வரலாம். ஆனால் விரலுக்குத் தகுந்த வீக்கம் என்பது போல ஏழைகளும் தம்மால் கூடியவரையில் இதில் பழகி வரலாம். மனங் கொண்டது மாளிகை என்றபடி மனம் மாத்திரம் இப்படிச்செய்வதில் பற்றி விட்டால் போதும்: இந்த ஸூத்ரதர்மத்தை யாரானும் அவன் நிலைக்கு ஏற்றபடி செய்து விடலாம். இது பற்றியே கர்ணன் பாரதத்தில் தன் தர்மபலனை அபகரித்து, தன் தானகுணத்தை மெச்சி என்னவேண்டுமோ கேட்டுக்கொள் என்ற கிருஷ்ணபரமாத்மாவைநோக்கி தானம்செய்து கொண்டிருப்பதற்குப் பொருளும் சீரும் சிறப்பும் வேண்டும் என்று கேட்டுக்கொள்ளாது, ' இல்லை என்றிரப் போர்க்கில்லை யென்று ரையா விதயமளித்தருள் என்றான்.'

கிழமைப்பட வாழ்வது உலக விஷய ஏற்றத்தாழ்வைப் பொருத்ததேயல்ல, மனோபாவத்தைப் பொருத்தது என்பதை இது நன்கு விளக்கும். நமக்கு அவசியம் வேண்டியதுபோக மிகுந்ததெல்லாம் அதிதிகள், அனாதைகள் போன்ற உபகார பாத்திரங்களுக்கே என்ற மனோபாவம் மாறாதிருக்கும்படி வாழ்ந்து வர வேண்டும் என்பதே இம் முதுமொழியின்கருத்து.

பரோபகாரம் என்பது அவரவர்கள் நிலைக்கு ஏற்றபடி பலவிதமாகவிருக்கும். நமது பாத கண்டத்தில் உள்ள நாற்பெரும் வருணத்தாருக்குப் பரோபகாரரூபம் விதம் விதமாகவிருந்தது. இக்காலத்தில் இந்த விஷய ஒழுங்கு தவறி விட்டபடியால் நம்மவர் தம் நிலை தெரியாது கிழமைப்பட வாழத் தொடங்குகின்றனர். ஜனங்களுக்குப் பெரும் பொது நன்மைகளாகிய சத்திரம், சாவடிகள் கட்டல், வைத்தியசாலைகள், கலாசாலைகள் ஏற்படுத்தல் கூன் குருடுகளைக் காத்தல் எல்லாம் க்ஷத்திரியர்களுக்கே உரியவை. முற்காலத்தில் யாராவது ஒருவன் இவைகளைச் செய்யமுயன்றால் அரசர்கள் தம்மை அவமதிப்பதாகக்கூடக் கருதுவார்கள். பிராம்மணர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தர்மம், வைதிககர்மானுஷ்டானங்களில் ஏற்படும் தர்மம், வேதசாஸ்திர பாடசாலை நிர்மாணம், வித்தை, தானம் முதலியவைகளே, அன்னதானம் அதிதிபூஜை முதலியவைகள் தகுந்த காலத்தில் நடத்துவது பொதுவான தர்மம். தானதர்ம விமர்சைகள் ஸ்மிருதிகளில் விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளன. இந்த ஒழுங்குதெரிந்து பரோபகாரம் செய்ய முயலாவிடில் செய்ய முடியாத விஷயங்களில் தலையிட்டுக்கொண்டு கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பதுபோலக் கடன்பட்டு உரிமைப்பட வாழ வேண்டிய அதோகதிவந்து, நெஞ்சம் கலங்கவேண்டிவரும். ஆகவே இந்த ஸூத்திரத்திற்கு தன் உரிமையானவைகளை தகுந்த பரோபகாரத்தில் முக்கியமாக உரிமையுடையன வையாகக் கருதி வாழவேண்டும் என்று பொருள் விரித்துக்கொள்ளவேண்டும்.

இதனால் சொத்து முதலியவைகளை வைத்துக்கொண்டிருப்பவர் பரோபகாரத்திற்குத் தேடித் திரிய வேண்டுமென்று பொருள் படுத்திக்கொள்ளவே கூடாது. அவசியம்வேண்டியதற்குமேல் அதிக ஸம்பாத்யத்திற்கு முயற்சி செய்யக்கூடாது. அப்படிச் செய்தோ செய்யாமலோ அதிகப் பொருள் வந்து சேர்ந்துவிட்டால் வேதசாஸ்திரங்களில் தன் வருணத்தாருக்கு ஏற்பட்டிருக்கும் காம்ய கர்மாக்களை காமனையோடாவது அல்லது ஈசாஞ்ஞைப்படி மிகுந்தபொருளுக்குத் தகுந்த செலவு ஏற்படுத்திக் கிழமைப்படவாழ்கிறோம் என்றாவது செய்துவிடவேண்டும் ஒவ்வொருவனும். அதிகப் பொருள் வந்துவிட்டது என்று மேல் வருணத்தான் தானதர்மாதிகளில் முயலவே கூடாது. முயன்றால் அந்தப் பரோபகாரம் நிலைக்காமல் போவதோடும்கூடச்செய்தவனையும் கடன் சண்டைசச்சரவுகளுக்கு ஆளாக்கி மீளாத்துயரத்திற்கும் உட்படுத்திவிடும். இந்த வழி நீங்கிச்செய்யப்படும் உபகாரங்கள் எல்லாம் இந்த ஸூத்திரப் பொருளுள் அடங்காது. தத்காலப் பொது ஜனஸங்க உழைப்புக்குப் பணஉதவிசெய்வது எல்லாம் உதவிகளேயல்ல : வெறும் பெயரை மாத்திரம் பெற்றுப் பணத்தைக்கொடுத்து விட்டிருக்கும் தாமஸநிலையே ஓங்கிக்கொண்டுவரவீண்கர்வம் முதலிய துர்க் குணங்கள் நிலைக்கக் காரணமாகும்.

முன்காலத்தில் தர்மபுத்திரர் ஸ்ரீராமர் முதலிய ராஜாக்கள் அச்வமேதாதி யாகங்கள் செய்தது, ஸாதாரணமாக நித்ய தானாதிகள் செய்தது, எல்லாம் இந்த ஸூத்திரபாவத்தை உள்ளத்திருத்திக் கொண்டுதான். ராஜ்யம்செழித்து ஓங்கி கஜானா நிறைந்தகாலத்தில் எல்லாம் ராஜாக்கள் யாகாதி க்ருதுக்களைச் செய்ததும் இக்காரணம்பற்றியேதான். இம்மாதிரியான மனத்துடனே நாம் எல்லோரும் நமது உரிமையானவஸ்துக்களை பிறர்விஷயங்களில் உபயோகப்படுத்த முயல வேண்டும். ஸ்மிருதிகளில சிலசில உரிமைப்பொருள்களை (உதாரணமாகப் பெண்சாதி, மூத்தபிள்ளை) கொடுத்துதவலாகாது என்று தடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு விரோதமாகக்காணப்படும் புராணகதைகளை வெறும் அர்த்தவாதமாகவாவது அல்லது உண்மையுணர்ந்து கேடொன்றும் வாராது என்றுகண்டு, செய்தவைகள் என்றாவது கொள்ளவேண்டும், ஸாதாரண விஷயங்களில் இக்கதைகளை ஆதாரமாக எடுத்துக் கொள்ளவும் கூடாது.

இந்தஸூத்திரம் பொதுவாக உரிமை நிலைத்திருக்கும்படி வாழ் என்றபொருளில் அமைந்திருக்கிறது. இதுவரையில் பிறர்பாத்யம் உன்விஷயங்களில் மாறாதிருக்கும்படி பரோபகார சிந்தையுடன் வாழ் என்ற பொருள் எடுத்து விஸ்தரிக்கப்பட்டது. இதையே உன்னுடைய உரிமை நிலைத்திருக்கும்படி வாழ் என்றும் பொருள்படுத்தலாம். மனிதன் உரிமை யாது? அவன் பொருள் முதலிய உலகஉரிமைகள் என்றுகொள்ள இடமேஇல்லை : இந்தஉரிமை நிலைத்துவிட்டால் பிறருக்கு அவைகளில் இயற்கையாயுள்ளது என்று கருதவேண்டிய உரிமைவந்தணுக இடமில்லாமல் போய்விட, முற்கூறிய பொருளுக்கு நேர்விரோத மாகிவிடும் இந்தப்பொருள். மானிட ஜன்மத்திற்குப் பொதுவாயும் மிக உயர்ந்ததாயும் உள்ள உரிமைமோக்ஷ நிலையே: ஆகவே இந்த ஸூத்திரத்திற்கு முக்திநிலை நிலைத்துவிடும்படி உன் வாழ்நாளை ஸத்விஷயங்களில் செலவிடு என்பது பொருளாகும்.

தானத்துள் அன்னதானம் விசேஷம், அதைவிட வித்யாதானம் விசேஷம் ; எல்லாவற்றையும்விட முக்திநிலை வரும்படி செய்யப்படும் ஞானதானம் மிகவிசேஷம் என்று நமதுசாஸ்திரம் கூறும். எல்லோருக்கும் முக்திவரும்படி செய்வது மற்றைய தானங்களைப்போல நேரிடச் செய்யவே முடியாது. சில பரிபாகிகளுக்குத்தான் நேரிட முக்திதானம் செய்யமுடியும். பெரியோர்க்கு. ஸாதாரணமாக எல்லோரும் முக்தி நிலையைப்பெற்று கடைத்தேறப் பொதுவாக ஸத்கர்மானுஷ்டானம் செய்துகொண்டிருக்கவேண்டும்; அப்பொழுதுதான் மற்றை எல்லோரும் தமது ஸத்கர்மானுஷ்டானத்தை விடாதிருந்து ஸ்வர்க்காதி பதவிகள்பெற்று வைராக்யத்துடன் புண்யவான்களாக உலகில் வந்து பிறந்து, மேல்மேலும் உயர்ந்த புண்யபதவிகளை யடைந்து நழுவி வைராக்யம் திடப்பட்டுக் கொண்டும் விரிந்து கொண்டும் வர, முக்திதானமாகிய உபதேசம் நேரிடப்பெற யோக்யதை காலக்கிரமத்தில் வந்துசேரும் எல்லோருக்கும். இந்த ரஹஸ்யத்தை மனதில் உணர்ந்து ஈசாஞ்ஞைப்படி ஸத்கர்மங்களை அனுஷ்டிப்பதாக மதித்து இயற்கையாகவே யாதொரு முயற்சியும் இன்றி ஸத்கார்யங்களில்ப்ரவிருத்திப்பதே முக்திநிலைக்கும்படி பரோபகாரமாக ஒழுகுவது இம்மாதிரி உலகில் ஒழுக ஒவ்வொருவரும் கடமைப் பட்டிருக்கிறோம் என்ற உணர்ச்சியுடன் நடந்து கொள்ளுவதே கிழமைப்பட வாழ்வது.

இந்த ஒழுக்கம் ஏற்பட இடமில்லா ஒழிவுவேளைகளில் கிழமைப்பட வாழ்வது என்பது தனது உள்நாட்டப் பழக்கமாகிய முக்திநிலையில் மற்றவைகளை மறந்து உள்ளது உள்ளபடி நிற்றலாகிய ஸமாதியில் இருப்பதே. ஸத் கர்மானுஷ்டான காலத்தில் முக்தி நிலையில் விசேஷப்ரஞ்ஞையும் பரோபகார நிலையில் முக்திநிலையை ஒட்டிய ஸாமான்யப்ரஞ்ஞையுமே இருக்கும். ஸமாதி நிலையில் கேவலம் முக்திநிலை ப்ரஞ்ஞையு மாத்திரம் தானிருக்கும். இம்மாதிரி ஸதாஸர்வகாலமும் முக்திநிலையின் விசேஷநாட்டம் நிலைபெற்றிருக்கும்படி வாழ்வதே ஒவ்வொருவனும் தனது கிழமைப்பட வாழ்வது. இவ்வாறு ஞானவழியிலும், இந்த ஸூத்திரம் பொருள் தரும். இந்த தன்மையில்தான் நமதுபாதகண்ட ரிஷிகளாகிய வியாஸவஸிஷ்டவிச்வாமித்திர, அத்ரி, ப்ருகு முதலிய மஹான்கள் கிழமைப்பட வாழ்ந்து வந்தது.

ஆகவே முற்பொருள் பிற்பொருளுக்கு மிகுந்த ஸாதகமானது, பின்பொருள் முன்பொருளின் பூரண நிலையே ஒழிய வேறொன்றுமன்று. இவ்விருவிதப் பொருள்களின் பொருத்தங்களை நன்கு உணர்ந்து பழகி நாமும் உள்ளபடி கிழமைப்பட வாழ முயல வேண்டும் என்பதே ஔவையாரின் நோக்கம்.



### II மொழிபெயர்ப்பு விளக்கம்

### TRANSLATION MODELS

You see in the picture a boy blowing bubbles. He has in his hand a pipe, containing some soap and water taken from a dish on his knee. When he blows through the pipe, bubbles are formed, which shine in the sun with all the colours of the rainbow. The bubbles are beautiful, and it is pretty to see them floating in the air; but they soon break, and a few drops of water are all that is left.

Blowing bubbles is a nice amusement for boys; but some people go on blowing bubbles all their lives.

Pleasure is one bubble, honour is another and money is a very common bubble.

But there are things which do not vanish away like bubbles of air, which will be a joy

for ever, which no one can take from us. What are these? Doing our duty, loving and serving God, taking to do good to all around us.

ஒரு சிறுவன் ஊதிக் குமிழிகள் கிளப்புவதை இச் சித்திரத்தில் காட்டியிருக்கிறதுபார், தன் முழங்கால்களுக்கிடையிலுள்ள வட்டிலிலிருந்து எடுக்கப்பட்ட சவர்க்கார தண்ணீர் நிறைந்த ஒரு குழாயைக் கையில் பிடித்திருக்கிறான் இவன். குழாய்வழியாக ஊதுங்கால் குமிழிகள் உண்டாக, அவைகள் வானவில் வர்ணங்களை வெளிப்படுத்திக்கொண்டு ஸூர்யன் ஒளியில் விளங்குகின்றன. இவ்வழகான குமிழிகள் ஆகாயத்தில் மிதந்துலாவுவதைக் காண மிக நேர்த்தியாகவிருக்கும்: ஆயினும் அவைகள் விரைவில் சிதறிவிட சிறு நீர்த் துளிகள் தான் மிகுந்து நிற்கும்,

ஊதிக், குமிழிகள் கிளப்புவது சிறுவர்களுக்கு ஒரு நல்ல பொழுது போக்காகும். ஆனால் சிலர் தம் வாணாள் முழுவதும் குமிழிகிளப்புவதிலேயே செலவிடுகின்றனர். அவர்கள் கிளப்பும், பார்க்கப் பகட்டாயிருக்கும், நிலையில்லாக் குமிழிகளில் விஷயஸுகம் ஒன்று, கௌரவம் மற்றொன்று; பணம் என்பது எல்லோருக்கும் பொதுவான ஸாதாரணக் குமிழி. இப்படி இருப்பினும், இக்காற்றுக் குமிழிகள்போல மறைந்துவிடா விஷயங்கள்சிலவுள: இவைஎப்பொழுதும் மனக்களிப்பையே தந்துகொண்டிருக்கும்: இவைகளை ஒருவராலும் நம்மை விட்டு விலக்கவே முடியாது. இவை யாவையோ எனின், கடமை கடைப்பிடித்தல், கடவுள் வணக்க வழிபாடுகள், எல்லாவற்றிற்கும்நன்மையேசெய்தல், ஆகிய இவைகளே.

---

**நல்ல பால்.**—நல்ல பால் கிடைக்கவேண்டுமானால் கீழே சொல்லப்படுபவைகளைக் கவனிக்கவேண்டும். (1 முதல் கறந்தபாலை, உபயோகிக்கக் கூடாது. (2) பசுக்களை நாள்தோறும் தேய்க்கவேண்டும். பால் கறக்குமுன் மடியைக் கழுவவேண்டும். (3) பால் கறப்பதற்கு சில நாழிகைக்கு முன்னே பசுவுக்குத் தீனிபோடவேண்டும். சாணியை அப்புறப் படுத்தவேண்டும். 4) மாட்டுக்கொட்டிலை தினமும் இருமுறை சுத்தஞ்செய்யவேண்டும். நிலத்தைத் தண்ணீரால் நன்றாய்க் கழுவவேண்டும். (5) மாட்டுக் கொட்டிலில் தாராளமாய் வெளிச்சமும் காற்றோட்டமும் இருக்கவேண்டும். (6) பால் கறப்பவர்கள் கறக்கும்பொழுது சுத்தமான ஆடைகள் தரித்திருக்கவேண்டும். ஒவ்வொரு பசுவையும் கறக்குமுன்னும் பின்னும், கறப்பவர்கள் கைகளை நன்றாய்க் கழுவவேண்டும். (7) பால் கறக்கும் பாத்திரத்தை நீராவியில்பிடித்து சுத்தமாக்கவேண்டும். நீராவியில்பிடிக்கும்பொழுது பாத்திரத்திலிருந்து உண்டாகும் ஜலம் வடியும்படி கவிழ்த்து வைக்கவேண்டும். அதைக் குளிர்ந்த ஜலத்தால் அலம்பவும் கூடாது. துணிகொண்டு துடைக்கவும் கூடாது.

## தென்புலத்தார் ஸம்பாஷணை

## SOUTHERNERS' DISCOURSE

### பிரவேசம்—அகஸ்தியர், தொல்காப்பியர், பவணந்தி, விசாகப் பெருமாளையர்.

**அகஸ்தியர்:**—சொர்க்க வாசலில் தொண்டைமானும் தோட்டியுந்தான். மண்ணுலகில் என்றால் அவன் பார்த்திவன், இவன் தாழ்த்தி என்று வழக்கிடுவாருண்டு. இங்கு நாம் அனைவரும் ஒரேபதவியினர் அக்ராஸனாதிபதி என்று ஒருவருந் தெரிவித்துக் கொண்டு திரியப் பாத்யதையில்லை. ஆயினும் நீவிர் எனக்கு ஆதிகால முதற்கொண்டு ஒரு கவுரவம் வைத்திருக்கிறீர். அதை நினைத்து உங்கள் நடுவில் பேசலாமென்று வந்தேன். முதலில் பரமசிவன் தமிழ்ப்பாஷையை எனக்கு உபதேசஞ்செய்து உலகத்தில் பரவச்செய்யக் கட்டளை பிறப்பித்தார் அவராக்ஞைப்படி நானும் என்னாலியன்ற மட்டும் பாஷையின் இலக்கணத்தை அனேகருக்குப் போதித்தேன். அவ்விலக்கணத்துக்கு நீவிர் பேரகத்தியம் என்று பெயரிட்டு சிலகாலம் உபயோகித்து வந்தீர். தெய்வானுக்ரஹம் பூர்ணமாயிருந்த பாண்டியர்கள் சங்கம் ஸ்தாபித்து அதன் மூலமாய் தமிழை ஆதரித்து வந்தனர். இலக்கியங்கள் கணக்கில்லாமல் உண்டாக புதிய இலக்கணங்கள் உண்டாயின. என்னுடைய நூலை அநுஸரித்தே நம்மில் தொல்காப்பியர் ஐந்திலக்கணங்களையும் ஐயந்திரிபறச்செய்தார். தொன்னூற்கஞ்சித் தடுமாறுவோர் எக்காலத்திலும் சங்கியையில் மிகுதி. நான் செய்த நூலும் தொல்காப்பியர் செய்ததும் எவராலும் கையாடப் படாமல் அநாதையாய்ப் போனதைக் கண்டு நம்மில் பவணந்தி குட்டித் தொல்காப்பியமென்று வழங்கும் நன்னூலைச்செய்து தமிழபிமானிகளுக்கு உதவிபுரிந்தார். இதையும் தமிழர் படிக்கக் கஷ்டப்படுவதைக் கண்டு வசனநடையில் விசாகப் பெருமாளையர் இலக்கணத்தைச் செய்தார். நான் செய்த பேரகத்தியம் கரையான் அரித்து இருந்த இடமே தெரியாமற் போயிற்று. மற்றவர்களுடைய நூல்களின் நிலைமையை அவரவரே சொல்லட்டும்.

**தொல்காப்பியர்:**—தமது நூல் தலையெடுக்காவண்ணம் நான் இலக்கணஞ் செய்தேனென்று மனஸ்தாபப்படலாகாது. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே என்றபடி இலக்கியங்கண்டதற்கிலக்கணம் இயம்பல் நியாயமானபடியால் நான் என்காலத்தில் வழங்கிவந்த இலக்கியங்களுக்கு ஒத்தவாறு தம்முடைய நூலை யநுசரித்தே நான்செய்தேன். பனை ஓலையிலே எழுதப்பட்டுத் தென்னாட்டுத் தமிழபிமானிகளால் பாதுகாக்கப்பட்டு வந்தேன். ஈழ நாட்டுப் பிரபு ஒருவர் மனத்தில் என் இலக்கணத்தை உஜ்ஜீவிக்கச் செய்யவேண்டுமென்று எண்ணம் பிறந்தது. பொருளுதவி செய்யவும் சிலர் வந்தார். என்னூல் அச்சிடப்பட்டது. சில முறை சிலஅதிகாரங்கள் மாணாக்கர் பரீக்ஷைக்குப்பாடமாகவும் வைக்கப்பட்டுப் பெருமையடைந்தேன். தாங்



கள் செய்த நூலுக்கு வந்தமலினம் எனக்கும் இக்காலம் வந்துவிட்டது. தாமோதரம்பிள்ளை செய்த தருமத்தால் பழமையான இலக்கியங்கள் சில வெளிவந்தன. இல்லாவிட்டால் அவையும் செல்லுக்கிரையாயிருக்கும். திருவாவடுதுறை ஆதீனத்தில் சுவாமிநாத தேசிகர் தலைமைபெற்றிருந்த காலத்தில் ஜீவகசிந்தாமணி முதலிய தொன்மையான இலக்கியங்கள் அச்சியற்றப்பெற்றன. வித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை, அவர் சிஷ்யர் மஹா மஹோபாத்யாயர் சாமிநாதையர் இவர்களால் தமிழ் சிறிது உயிர்பெற்று உலாவிற்று. இக்காலம் தம்மைப்போலவே நானும் அநாதையானேன். என் துக்கம் தம்மிலும் மிகுந்தது.

**பவணந்தி:**—நான் ஜைனமதத்தினனாயினும் பாஷைக்கும் மதத்திற்கும் என்றும் முரண் கிடையாதென்பதைக் கைக்கொண்டும், பேரகத்தியத்தின் கதி தொல்காப்பியத்திற்கும் வந்ததை யறிந்தும் எல்லாவற்றையுஞ் சுருக்கி நன்னூலைச் செய்தேன். "எந்நூலாரும் நன்னூலாற் கிணையாவரோ என்னுந் துணிவே மன்னுக" என்று சைவகுரவரும என்னைப் புகழ்ந்து கொண்டாடினதை யறிந்து பூரித்தேன். என்னிலும் மேம்பாடடைந்தவரை மறக்க நான் நன்னூல் செய்தமையால் அநாவுச் சின்னாளில் உதாஸனிக்கப்படுவதை யறிந்து விசாகப்பெருமாளையர் வசன நடையில் ஒரு இலக்கணம் எழுதினார். இது காலம் பனை ஓலைக்காலமல்ல. அச்சியந்திரங்கள் ஏற்பட்டுவிட்டன. மற்றுமுள்ள விஷயங்களை அவரே எடுத்துப் பேசுவார்,

**விசாகப்பெருமாளையர்:**—தமிழ்ப்பாஷைக்கு நீவிர் மூவரும் தாய் போன்றவர்: தகப்பன்மார் என்றாலும் தகும். உங்கள் உருத்தோன்றிய விடத்தில் பேச என் நா எழவில்லை. உங்கள் அருமை பெருமைகளைப் பரமசிவனே அறியவல்லார், எம்போலியர் வான்கோழி மயிலாகப்பாவித்து நடமாடுதல் போலாகும் ஆயினும் ஸன்னிதி பகத்வத்தால் எனக்குச் சிறிது துணிபுண்டாயிருக்கின்றது. மக்களின் மழலைச் சொற்களைப்பெற்றோர்கேட்டு மகிழ்ந்தாங்கு நீங்களும் செய்தல் வேண்டும். தமிழகத்தில் ஆர்யர் புகுந்து தமது சொற்களை யுபயோகித்துத் தமிழ்ச்சொற்களை மறைத்தனர். ஆயினும் திராவிடம் என்று தமிழுக்குப் பெயரிட்டுத் தமிழில் அபிமானம் வைத்துத் தமது வடமொழியை வைதிக கார்யங்களுக்கு மட்டில் உபயோகித்துக்கொண்டு லௌகிக கார்யங்களுக்குத் தமிழையே பழகிக் கற்று வந்தனர். அவ்வார்யரில் அனேகர் தமிழிற் சிறந்த நிபுணரானார். ஆர்யர் மேற் குறை கூற வந்தேனில்லை. தமிழிற்கு நிகண்டுகள் செய்து வைத்த ஜைன முனிவர்களுடைய பேருதவி என்றும் மறக்கற்பாலதன்று. தமிழகம் தெலுங்கராலும் மராட்டியராலும் துருக்காராலும் பிரவேசிக்கப்பெற்றபின், பாஷைக்கு மலினம்வர ஆரம்பித்தது. முற்றிலும் தமிழ் கெடுமுன்னே பாஷை பண்ணின புண்ணியத்தாலோ வேறு எந்தக்காரணம் பற்றியோ தமிழ்நாடு ஆங்கில துரைத்தாருக்கு வசமாயிற்று. தமிழின் பெருமையைக் கிறிஸ்தவப் பாதிரிமார் அறிந்த அளவு தமிழரும் அறியாரென்னலாம். பவணந்தி சொன்னவாறு பாஷைக்கும் மதத்திற்கும் முரண் ஒன்றுமில்லை யென்பதைப் பாதிரிமாரும் ஸ்தாபித்தார். மாகாண ஆளுகைக்கு நியமனம் பெற்ற ஆங்கில துரைமாரும் தமிழைக்கற்றுத் தமது ஆளுகைக்குட்பட்ட பிரஜைகளிடத்தில் அவரவர் சுயபாஷையிலேயே பேசிக் குறைகளைக் கேட்டுப் பரிகாரமுஞ் செய்துவந்தனர். ஆங்கில துரைத்தனத்தார் கல்வியின் சிறப்பை அறிந்தவாறு தெலுங்கராவது மராட்டியராவது துருக்கராவது அறிந்தாரென்று சொல்ல நான் துணியேன். ஆங்கில அரசாட்சி ஸ்திரமாக ஏற்பட்டவுடனே பிரஜைகளுக்குக் கல்வி கற்பிப்பது அரசருடைய பிரதமக் கடமை யென்றுணர்ந்து ஸர்வகலாசாலைகளையும் பிறகல்லூரிகளையும் ஸ்தாபித்து அவற்றில் ஆங்கிலபாஷையோடு தமிழும் கற்பிக்கும்படி ஏற்பாடுசெய்தனர். துரைத்தனத்தாருடைய பாடசாலைகளில் தமிழ்ப் பண்டிதர்களை நியமித்துச் சிறுவர்க்குத் தமிழிலக்கிய விலக்கணங்களைக் கற்பிக்கச் செய்தனர். ஊதியம் மட்டில் தமிழ்ப் பண்டிதர்களுக்குக் குறைவுதான். அதனாலென்ன? பதினையாயிரம் மைல் தூரத்திலிருந்து வந்தவர் தமிழுக்கு யோக்யதை யுண்டென்று எண்ணித்தமது பாடசாலைகளில் மாணாக்கர் அவசியம் படிக்க வேண்டிய பாடங்களி லொன்றாய் நியமித்ததே பெரும்பாக்ய மென்று நினைத்துத் தமிழ் வித்வான்கள் பண்டிதர் வேலையிற் புகுந்தனர். ஸர்வகலாசாலை விசாரணை கர்த்தர்களும் தமிழை மதித்து எம். ஏ. என்னும் பரீக்ஷை தமிழிலேயே கொடுக்கலாமென்று சட்டஞ்செய்தனர். இது மட்டில் தமிழுக்கு நல்ல காலமாயிருந்தது. பின்பு அந்தப் பாஷைக்கு மாத்திரமில்லை; பரதகண்ட பாஷைகளனைவற்றிற்கும் ஏழரை நாட்டுச்சனி பிடித்தது. தமிழிற்கு கலி காலம்வந்திருக்கிறது. தமிழகம் பாஷையைப் பற்றின மட்டில் கலியுகமாய்விட்டது.

நான் மண்ணுலகிலிருந்த பொழுதே பாஷைகெட ஆரம்பித்துவிட்டது. "திருவினு நல்லான் மனைக் கிழத்தியேனும், பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பர்" போலத் தமிழர் சுயபாஷையில் உட்கருத்தை அறிவிக்கப் போதுமான சொற்களிருக்க ஆங்கிலச் சொற்களைக் கலக்காமல் பேசுவதில்லை. ஒருவனை ஒருவன் அழைக்குங்கால் "அண்ணா, தம்பி" என்று சொல்லாமல் "என்ன பிரதர், இன்றைக்கு கோல்டு பிடித்துக் கொண்டு ரொம்ப ட்ரபிள் கொடுக்குது. ஆபிஸில் ஓர்க் ஒன்றும் செய்ய முடியவில்லை. மாஸ்டரிடத்தில் ரிபோர்டு செய்து லீவ் பெற்றுக் கொண்டு ஒரு மினிட்டுக்குள் ரூமுக்கு வந்தேன் பிரதர். அப்போ பிடிச்சு கண்டிநூயல் ஸ்னீஜிங் பிரதர். என் நோஸை கொஞ்சங் கேருடன் பாருங்க, ஒயின் சாப்பிட்டவன் நோஸ்போல டீப் ரெட்டா யிருக்குது. ஹோம்

ஸமாசாரத்தை என்குயர் செய்யவே வேண்டாம். ஒயிபுக்கு பீவர்; ஸைல்டுக்கு டிஸென்டரி, ஓல்ட் மதருக்கு காபிங். நேடிவ் ப்லேஸிலிருந்து இந்த டவுனுக்கு வந்ததைப் பற்றி ரிக்ரெட் பண்ணுத அவர் கிடையாது பிரதர். உங்கள் விஸிட்டினால் கொஞ்சம் கான்ஸொலேஷனுண்டாயிருக்கு. நீங்களும் அப்ரப்டாக என்னை அபான்டன் செய்தீர்களாயின் நம்முடைய பாடு கம்ப்லீட் ருயின்தான்." இந்த மாதிரி சிறிது காலமிருந்தது. இக்காலம் ஒருவருக்கொருவர் தமிழிலேயே கடிதம் எழுதுவது நின்று போயிற்று. எல்லாம் ஆங்கில பாஷைதான். ஆண்மக்கள்மட்டில் இருந்தமாதிரி இருக்கிறார்கள் என்று எண்ணலாகாது. பெண்மக்களும் ஆங்கில பாஷைகளைக்கற்றுத் தாமும் ஆங்கிலதுரைசானிமாரைப்போல நடிக்கின்றார்கள். விதை ஒன்று போடச் சுரை ஒன்று முளைக்காதல்லவா? தாய் ஓரடிபாய்ந்தால் குட்டி நாலடி பாய்கின்றது. தானாகப் பாதி தம்பிரானாகப் பாதி என்றவாறு சுயமாகவே பாஷை கெட்டு வந்து கொண்டிருக்கையில் ஸர்வகலாசாலை விசாரணை கர்த்தர்கள் உயர்ந்த பரீக்ஷைகளுக்குத் தமிழே வேண்டாமென்று தீர்மானஞ் செய்தார்கள். பாஷைக்கு இப்பெருங்கேட்டைத் தேடினவர் தமிழிற் பிறந்து தமிழிலே வளர்ந்தவர். தன்கையே தன்கண்ணைக் குத்திக்கொண்டு விட்டது. ஆங்கிலதுரைத்தனத்தார் இந்தத் தீர்மானத்தை அங்கீகரியாமல் சுயபாஷைஷியாசம் பரீக்ஷைக்குண்டென்று கட்டளை பிறப்பித்தார். இதனால் மட்டில் சிறிது தலைநீட்டி வருகின்றது தமிழ்ப்பாஷை.

தற்காலத்தில் தமிழர் சிலர் இலக்கியங்களின் பதங்கள் வழக்கச் சொற்களாயில்லாமைபற்றி இலக்யப் பயிற்சியே அனாவசியமென்றெண்ணி பிராகிருதத் தமிழையே பழகவேண்டுமென்கின்றார். இலக்கணம் எள்ளளவேனுமறியாத நிரக்ஷரகுக்ஷிகளுடைய தமிழே எவரும் எழுதவும் பேசவும் கற்கவேண்டுமாம். அதன் மாதிரியைச் சற்று எடுத்துச் சொல்லுகின்றேன். [நீ அங்கே போனையானா நானும்வர்ரேன். சும்மா சும்மா பேசாத்திலே என்ன. காரியத்தை அல்லோ பாக்கணும். ஆட்டே போனா தின்கிறத்துக்குஒன்னுமில்லட்டா வாயிலே மண்ணுதான்.] எனக்கு அதிகப்பழக்கமில்லாமையாலே விரித்துச் சொல்ல முடியவில்லை. பரீக்ஷைக்கு ஏற்பட்ட வாசகக் கட்டு மேற்சொன்ன ரீதியாயிருக்க வேண்டுமாம். தமிழ் எழுத்து மறியாத கனவான்கள் தமிழ்ப் பண்டிதர்களுக்கு ஒன்றுந் தெரியாது; போதனாசக்தி முற்றிலும் கிடையாது; ஆற்றமாட்டாத பிழைப்பாக என்னவோ சொல்லிக் கொண்டு போகிறார்கள். பண்டிதர்களையே சுய பாஷை கற்பிக்கநியமிக்கலாகாதென்று கூறுகின்றார். குதிரை கீழே தள்ளினது போதாதென்று குளம்பரிக்கவும் ஆரம்பித்ததாமென்றபடி, பிரான்ஸ்தேசத்திலிருந்து தமிழ்பாஷையைப் பற்றி உபன்யாசஞ்செய்ய பிரான்சியர் ஒருவரைத்தருவிக்கப் போகிறார்களாம். பிரான்சியருக்கு-ட என்னும் எழுத்தாவது ழ-என்னும் எழுத்தாவது உச்சரிக்கவராது. "கூட்டி" என்பதைக் "கூத்தி" என்பார். 'குடம்' என்பதைக் "குதம்" என்பார். இவ்வாறாகத் தமிழ் ஆபாஸப்பட்டு நாசத்தையடையும்ஸமயம் இது. நாமிதற்குச்செய்யக் கூடியதென்ன? காலத்தின் கொடுமையால் பிள்ளைகளுக்குப்பெற்றதாயிடத்திலும்வெறுப்பு வருவதுபோல் தமிழர்களுக்குத் தமது சுயபாஷையில் விபரீத புத்தி வந்துவிட்டது. இதனைத்தடுத்தற்கு முக்கண்ணன் கருணையிருந்தாலன்றிப் பயனில்லை. ஒரு ஜாதியாருடைய ஆசாரங்களும் அனுஷ்டானங்களும் அவரவருடைய பாஷையிலுள்ள காவியங்களால் நிலை நிறுத்தப்பட்டுப் பிறர் அறியக் காரணமாயிருக்கின்றன. ஆங்கில பாஷைக்கு முதல் பாக்குக்கொடுப்பதில் ஆக்ஷேபம் யாதொன்றுமில்லை. அது ராஜபாஷை. வயிற்றுப் பாட்டிற்கு இன்றியமையாதது. ஸ்ரீரங்கம் கோயிற் குயவர்கள் நெற்றியில் விபூதியும் வயிற்றில் திருமண்ணும் இட்டு வருகிறார்களாம். காரணங்கேட்கின், விபூதி ஜாதி முறை, திருமண் வயிற்றுப் பிழைப்பு என்பார்களாம். தலைமயிரை ஐரோப்பியர் போல் கத்தரித்து டொப்பி போட்டும் சட்டை நிஜார் பூட்ஸ் தரித்தும் நம்மவர் வேஷம் பூண்டிருப்பதினால் குற்றம் அதிகமில்லை. அவ்வாறு செய்வதில் சில ஸவுகரியங்கள் இக்காலத்திலுள. இதனாலேயே, பிரஷ்டர்களாகார்கள். ஐரோப்பியர் நமது நாட்டு ஆசாரங்களிடத்தில் எத்தனை அபிமானம் வைத்தவராயினும் தமது நடை உடை பாவனைகளைக் கைவிட்டாரில்லை. தமது பெண்மக்களுக்குச் சிற்றாடை கட்டுவதில்லை; ஆண்மக்களுக்குச் சேலம் காஞ்சிபுரம் வேஷ்டிகளும் கட்டுவதில்லை. ஐரோப்பியரால் அச்சிட்டு நடத்தப் பெற்ற பத்திரிகைகளை முதல் முதலில் படித்துவிட்டுத்தான் இதரஜாதிப் பத்திரங்களைப் படிப்பார். தமது நாடு, பாஷை, ஜனங்கள், மதம், வேதம் எல்லாவற்றிலும் அபிமானக்குறைவு எள்ளளவேனும் ஐரோப்பியருக்குக் கிடையாது. நம்மவர் விஷயம் வேறாய்த் தானிருக்கிறது. பாஷை ஒன்றால்ஜாதிவெளிப்படையாக அறியப்பட்டுவந்தது. பாஷை ஒளிக்க நடை, உடை, பாவனைகள் முற்றிலும் மாறுபடும். நமது வேத சாஸ்திர புராணங்கள் போன இடம் புல் முளைத்துப்போம். கோயிலும் குளமும் பாழாகும். இவ்வளவு கேட்டை விளைத்தும் நாம் எக்காலமும் ஐரோப்பியராகோம் என்பதும் திண்ணம். "நிக்கர்" என்றபெயர் நமக்கு மாறாதபட்டமாகவே இருக்கும். கேடுவருமுன் காத்தல் அவசியம். இக்காலம் அலக்ஷியமாயிருந்தோமாயின் நமக்கு விமோசனகாலம் பின்பு வாராது.

[எல்லோரும்]

நாமனைவரும் எல்லாம் வல்ல கடவுளைப் பூசித்துத் தமிழுக்குக் கேடுவாராமல் செய்வோம்.

**கே. வேங்கடராமய்யர், பி. ஏ.**



## சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S & LADIES' PAGES

### பழிக்குப்பழி

எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அது நடந்து பத்து வருஷமிருக்கும்; இல்லை இருபத்துநாலுவருஷமாயிற்று. அப்பொழுது நான் பெரிய காஞ்சிபுரத்தில் கோவிற்குப் பக்கத்திலிருக்கும் வைகுண்டப் பெருமாள் தெருவில் இருந்தேன். என் வீட்டிற்கெதிரில் பெரிய மாடிவீடு. அதிலிருந்தவர் பெரிய பணக்காரர்; அவர்க்கு நல்ல மனைவி; அவள் வெகு உத்தமி; லக்ஷ்மி போல் கண்ணிற்கழகாக இருப்பள்; ஒடிந்து விழுங்கொடி போல் மிகு மெல்லிய சரீரமுடையவள்; கணவனுக்கும் மனைவிக்கும் ஒரு நாளாவது சண்டை சச்சரவே கிடையாது; பூனையும் எலியும் போலவர் கூடிக் குலாவியதே கிடையாது. ஒரு குறைதான்— குழந்தையில்லாக் குறைதான்.

அம்மங்களவல்லி ஒரு நாளாவது தவறாது தனக்குப் பிள்ளைக் கலியைத் தீர்க்க வேண்டுமென்று கடவுளை வணங்குவாள். சுக்ரவாரங்களில் ஸுமங்கலிகளுக்கு வெற்றிலைப் பாக்கு தக்ஷிணை கொடுப்பாள். சனிக்கிழமைகள் தோறும் மாவிளக்கேற்றுவாள். கிருத்திகை விரதமிருப்பாள். அவள் அத்தனை பாடுபட்டும் பிள்ளை என்பதே இல்லாமல் இருந்தது. ஒருநாள் தன் வீட்டுப் புறக்கடையிலிருந்த சம்பக மரத்தின் கீழ் நின்றுகொண்டு மாம்பழமொன்றை சிறு கத்தியால் தோலைச் சீவிக்கொண்டிருந்தாள். அப்பொழுது கத்தி தவறி, விரலை அறுத்துவிட்டது. அந்த இரத்தம் பக்கத்தில் படர்ந்திருந்த ஜாதிக்கொடியில் பூத்திருந்த பூமேல் விழுந்தது. அதைப்பார்த்ததும் அவள் இந்த இரத்தம்போல் சிவந்தும் அப்பூவைப் போல மலர்ந்தும் எனக்கொரு குழந்தை இருந்தால் எனக்கெவ்வளவு ஸந்தோஷமாயிருக்கும்? இவ்வாறவள் எண்ணியதும் அவளுக்கும் தெரியாமல் அவள் உள்ளம் கிளைத்தது; அவளுங்களிப்படைந்தாள். உடனே கர்ப்பமடைந்தவள் போல் அவள் களிப்படைந்தாள்.

அப்பொழுது மார்கழி மாதம். பனிநாள்கள் வரவர ஒழிந்தது. ஒரு மாதமானதும் மூடுபனியும் தொலைந்தது. இரண்டு மாதம் ஆனதும் பூமிமுழுதும் பச்சென்று சோலை விளங்கியது. மூன்றாவது மாதம் மரங்களெல்லாம் இலைகள் நிறைந்திருந்தன, நான்கு மாதம் ஆனதும் அவள் வீட்டுப்புறக்கடையிலிருந்த மரங்களில் எல்லாம் பசுந்தழையும் மலர்ந்த புஷ்பமும் நிறைந்திருந்தன; குயில்களும் வானம்பாடிகளும் பக்ஷிக்கூட்டங்களும் அங்கு குலாவிக்கொண்டிருந்தன; புஷ்பங்களிலிருந்து விழுந்த மகரந்தப்பொடிகள் அங்கு வாசனைப் பொடியைத் தூவின. ஐந்து மாதம் ஆனதும் மங்களவல்லி அந்த சம்பகமரத்தின் கீழ் எப்பொழுதும் வருவதுபோல் வந்தாள். அங்கிருந்த வாசனையும் பக்ஷிக்குரலும் அவள் மனதைக் கொள்ளை கொண்டு மகிழ்ச்சியில் ஆழ்த்தின. அப்பொழுதவள் தனக்குந்தெரியாது பரவசமாகி தெய்வங்களைக் கொண்டாடினாள். ஆறு மாதமானதும் மரங்களில் காய்கள் எல்லாம் பழுத்துக்கொண்டிருந்தன; கிளைகள் பழக்கொத்துகளை தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டிருந்தன ஏழாமாதமானதும் மங்களவல்லி மாமரத்திலிருந்து பழங்களை எல்லாம் பறித்து பறித்துக் கணக்கில்லாமல் தின்றாள்; அவளுக்கதனால் கொஞ்சம் கவலையும் வருத்தமும் உண்டாயிற்று. எட்டா மாதமானதும் அவள் தன் கணவனைப் பார்த்து "நான் இறந்து விட்டால் என்னை இந்த மாமரத்தின் கீழேயே புதையும்" என்று சொன்னாள். அதைச் சொல்லியதும் அவள் மனம் அமைதியடைந்தது; மீண்டும் ஆனந்தமடைந்தது. ஒன்பதாவது மாசமும் பிறந்தது; மங்களவல்லி ஒரு அழகிய மகனைப் பெற்றெடுத்தாள். அது இரத்தம் போல் சிவப்பாயும் ஜாதிப் பூப்போல அழகுமலர்ந்தும் இருந்தது. அக்குழந்தையை வாரி அணைத்து உச்சி மோந்து முத்தமிட்டு உள்ளங்களித்தாள். அவள் ஆனந்தத்திற்களவேயில்லை; அந்த ஆனந்தமிகையால் மெய்ம்மயங்கி உயிரை விட்டொழிந்தாள்.

அவள் கணவன் முன்னவள் சொன்னபடியே அவள் சவத்தை மாமரத்தின் கீழ் புதைத்தான். நெடுநாள் அவள் ஞாபகத்தால் உள்ளமழிந்தான். இரவும் பகலும் அழுதான். காலஞ் செல்லச் செல்ல வருத்தஞ் சிறிது குறைந்தது. பின் சிலநாள் ஆனதும் அவன் இரண்டாவது தரம் கல்யாணம் செய்து கொண்டான். அவளுக்கோர் குழந்தை பிறந்தது; அது பெண் குழந்தை. அதற்கு மிருநாளகாந்தி என்று நாமகரணமிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்தாள். அக்குழந்தையைப் பார்க்குந்தோறும் அவள் மனம் பொங்கும்; ஆனால் தன் சக்களத்தி மகனைப் பார்த்தால் அவள் மனம் பொறாமைகொண்டு கவலைப்படும்; அக்கவலை அவள் தூக்கத்தையும் ஒழித்து விட்டது. அவனிருந்தால் தன் பெண்ணிற்குத் தடையும், ஆஸ்தி எல்லாம் வருவதற்குத் தடங்கலாகவும் இருக்கும் என்று பட்டது. ஆகையால் அவள் அந்தப்பையனைக் கண்டால் எள்ளுங்கொள்ளும் வெடிப்பாள். அதன் தலையில் எருக்கு வெட்டியெறிய ஸமயம் பார்த்திருந்தாள். அவனைத் தொடவேதென்றால் காதைப்பிடித்துத் தூக்குவாள். போ என்று சொல்லும் போதெல்லாங் கழுத்தைப்பிடித்துத் தள்ளுவாள். வா என்றழைத்தால் காலைப்பிடித்து இழுப்பாள். அக்குழந்தையை மூலைக்கு மூலைதூரத்தி காலால் உதையாத நாளில்லை. அது பசியென்று சொல்லவும் பயப்பட்டு நடுங்கும்; தன் தகப்பனிடம் சொல்லவும் பயப்படும். அவனுக்கிருந்த பயத்தின் பெருக்கால் பள்ளியிலிருந்து வந்தால் எங்குங்கண்ணிற்குப் படாமல் ஒளித்துக்கொள்வோம் என்று எண்ணமும் தெரியாமல் நடுங்கிக் கிடந்தான்.

ஒருநாள் தன் தாய் உக்கிராணத்திலிருந்தபோது மிருநாளகாந்தி தனக்கு மாம்பழம் கொடுக்கக் கேட்டது.

"நல்லது. கொடுக்கிறேன் அம்மா; வா" என்று சொல்லியவள் பெட்டியிலிருந்து ஒரு நல்ல மாம்பழத்தை எடுத்துக்கொடுத்தாள். அந்தப் பெட்டியின் மூடி வெகு கனமானது அதற்கு கூரான பல்லிருந்தது; பூட்டுந்தாழ்ப்பாளுமிருந்தது.

"அம்மா! அண்ணைக் கொண்ணு வாணும்?" என்று குழந்தை தாயாரைக் கேட்டது.

தாயாருக்குக் கோபம் வந்துவிட்டது. அவள் குழந்தையை விழித்துப்பார்த்து "எல்லாங்கொடுக்கலாம் அவன் பள்ளியிலிருந்து வரட்டுமே!" என்றாள். அப்படி சொல்லிக் கொண்டிருக்கும்போதே சிறுவன் வீட்டிற்கு வருவதைக் கண்டவள் தன் குழந்தை கையிலிருந்த பழத்தை "அண்ணைக்குக் கொடுத்தா உனக்கில்லை" என்று சொல்லிக்கொண்டு வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டாள்.

பிறகு அந்தப் பழத்தைப் பெட்டியில் வைத்துத் தாழிட்டாள். பின் சிறுவன் வீடு வருவதைக் கண்டதும் அவனிடம் ஆசைகொண்டவள் போல அவள் அபிநயித்து "வண்டா! என்னப்பா! உனக்கு மாம்பழம் வேண்டாமா?" என்றுகேட்டாள். "ஐயோ வேணம்மா அப்படிப் பார்க்கையே! என்; குடேன் எனக்கு ஒரு மாம்பழம்" என்றவன் பதில் சொன்னான்.

"ஆனால்; வா! இதோ இருக்கு என்று எடுத்துக் கொள்" என்று சொல்லிக்கொண்டு பெட்டியின் கதவைத் திறந்தாள். சிறுவன் பழத்தை எடுக்கக் குனிந்ததும் கதவைமூடி அமுக்கிவிட்டாள். தாழ்ப்பாளும்கனமாக விழுந்து விட்டது. சிறுவன் தலையும் மாம்பழத்தோடு மாம்பழமாக உள்ளே உருண்டு விட்டது. அப்பொழுது அவன் சிற்றாய்க்கு பெருங்கவலை உண்டாகி விட்டது. தான் செய்த காரியம் எங்கு வெளிவந்து விடுமோ என்று நடுங்கினாள். அவள் கவலையில் அங்குமிங்கு மோடி ஒரு கைக்குட்டையும் ஒட்டும் பிசினையும் எடுத்து வந்தாள். அப்பிசினைக்கொண்டு சிறுவன் உடலையுந் தலையும் ஒட்டி கைக்குட்டையால் ஒட்டிய இடம் தெரியாமலிருக்கும்படி மூடினாள். பின் அச்சவத்தை கதவண்டை நாற்காலியில் உட்கார வைத்து அதன் கையில் மாம்பழத்தையுங் கொடுத்தாள்.

சில நிமிஷங்களானதும் மிருநாளகாந்தி தாயிடம் வந்தாள். அவள் அப்பொழுது உலையில் கொதிக்கும் நீரைக் கிளறிக் கொண்டிருந்தாள். அப்பொழுது "அம்மா! அம்மா! அண்ணை வாசப்படியண்டே இருக்கானே! மூஞ்செல்லாம் வெளுத்திருக்கு! கண்ணை மூடிண்டிருக்கான். கையிலே பழம் வெச்சிண்டிருக்கான். கேட்டாக் குடுக்கமாட்டேங்கிறானே. அம்மா பதிலே சொல்ல மாட்டேங்கிறான்" என்று மிருநாளகாந்தி தாயிடம் மனுகொடுத்தாள்.

"நீ மறுபடியும் போ. அவன் கொடுக்கமாட்டேன்னா செவிட்டிலே ஒரு அறை அறைஞ்சால் கொடுப்பான்; காலாலே உதை அப்போ பேசுவான்" என்று தாய் குழந்தையை ஸமாதானப்படுத்தினாள்.

மிருநாளகாந்தி மறுபடியும் போனாள். "அண்ணா! மாம்பழந்குடு" என்று கேட்டாள். பதில் இல்லை. செவிட்டில் ஓர் அறை அறைந்தாள். என்ன அவள் கடுக்கமடைந்தாள்; பயந்தாள்! அண்ணாதலை அடிபுரண்டு கீழே விழுந்தது. ஐயோ முறையோ என்று கூவிக்கொண்டு இறைக்க இறைக்க அவள் ஓடோடி வந்து தன் தாயைக் கட்டிக்கொண்டழுதாள். "ஐயோ! அம்மா! அண்ணை தலையை உருட்டிவிட்டேன்; உருட்டிவிட்டேன்" என்று அழுதாள். அவள் தாய் என்ன ஸமாதானப்படுத்தியும் அவள் ஓயாமல் அழுதுகொண்டே இருந்தாள்.

"அடி மின்னாளி! ஜாக்ரதை! வாயைத் திறக்கப் போறே? தெரியுமா? காரம்பக் கெட்டது! கப்சிப்! வாயைத் திறக்காதே! இந்த ஸமாசாரம் யாருக்குந் தெரியக்கூடாது. அவன் என்ன ஆனான் என்று ஒருவரும் அறியக்கூடாது. நான் அவனைக் குழம்பாக்கி உங்களப்பாக்கு இடப்போகிறேன்" என்று சொன்னாள். பின் சிறுவன் சவத்தைத்தோலுரித்து எலும்பைக்களைந்து மாம்ஸபிண்டத்தைப் பொடிப்பொடியாக நறுக்கிக் குழம்பிட்டாள். மின்னாளி அழுதுகொண்டே இருந்தாள். அவள் கண்களிலிருந்து விழுந்த நீர் அக்குழம்பு பாத்திரத்தில் விழுந்துகொண்டேயிருந்தது. கண்ணீரே குழம்புக்கு உப்பாயிற்று; வேறு உப்பு அதற்குத் தேவையில்லை.

தகப்பன் வீட்டிற்கு வந்ததும் பையன் எங்கே என்று கேட்டான். "அவஸரமாக வந்திர்களே! சாப்பிடுங்கள். பையன் எங்கேயும் போய்விடவில்லை; எல்லாம் இருக்கிறான்—" என்று சொல்லிக்கொண்டே கணவனுக்குச் சாப்பிடப் பீடம்போட்டாள். அவனும் பசியாலலைந்ததால் சாப்பிட உட்கார்ந்தான். இலையில் பதார்த்தமிட்டு அன்னமிட்டு சிறுவன்குழம்பையுமிட்டாள். அக்குழம்பிட்டதைக் கண்ட மிருனாளி தனக்குந்தெரியாமல் கதறி வீரிட்டு அழுதாள். தகப்பனும் "பையன் எங்கே" என்று மறுபடியும் கேட்டான்.

"பையனா? அவன் பாட்டி வந்தவளை அழைத்துப் போனான். அவனும் பாட்டியோடு சிலநாள் இருந்து வருவதாகச் சொல்லி விட்டுப்போனான். நான் தடுத்தேன். என் வார்த்தையைக் கேட்டாதானே!—" என்று அவன் மனைவி பதில் சொன்னாள்.

"என்ன, என்னோடு கூடச்சொல்லாமலா போய் விட்டான்?"

"போகவேண்டும் என்று ஒரே காலில் நின்றான் பாட்டியிடம் அவ்வளவு ஆசை! குழந்தைதானே. என்னை உங்களிடம் சொல்லும்படிச் சொல்லி விட்டவன் பாட்டியுடன் நடந்துவிட்டான். உங்கள் முன் மாமியாரும் உங்களிடம் சொல்லும்படி சொன்னாள்: நான்முடியாதென்றெப்படித்தடுக்கமுடியும்?"—



"ஸரிதான். அவன் போனதெனக்குக் கொஞ்சம் அஸமாதானந்தான். என்னோடவன் சொல்லிவிட்டுப் போயிருக்கலாம்; போனால் போகட்டும்" என்று சொல்லிக்கொண்டு சாப்பிட ஆரம்பித்தான்.

ஆனால் மிருநாளகாந்தி ஓயாமலே அழுதுகொண்டிருந்தாள். "ஏண்டியம்மா அழுகிறாய்? எல்லாம் அண்ணை வருவான்" என்ற தன் பெண்ணை ஸமாதானப்படுத்திக்கொண்டு சாப்பிடலானான். அவனுக்கு குழம்பு வெகு ருசியாக இருந்தது. மேலும் மேலும் வேண்டுமென்று கேட்டுக்கேட்டுச் சாப்பிட்டான்; "இவ்வளவு ருசியான குழம்பை நான் இதுவரையும் கண்டதே கிடையாது" என்று சொல்லிக்கொண்டே சாப்பிட்டான். ஆனால் மின்னாளி அக்குழம்பைக் கையாலும் தொடவில்லை; சாப்பிடவும் இல்லை. சாப்பிட்டானதும் மிருநாளகாந்தி தோலையும் எலும்பையுஞ் சேகரித்து தனது பட்டுக்குட்டையில் சுத்திக்கட்டி எடுத்துக்கொண்டு, கண்ணீர் வடித்துக்கொண்டு புறக்கடையிலிருந்த மாமரத்தின் கீழ்போனாள். அம்மரத்தின் கீழ் வளர்ந்திருந்த புல்தரையில் அக்கட்டை அவிழ்த்து விரித்தாள். அப்பொழுது அவளுக்கும் தெரியாமல் உத்ஸாகமுண்டாகியது; அவள் அழுகையும் பறந்தோடிவிட்டது. மாமரமப்பொழுது அசைந்தசைந்தாடி நாட்டியஞ்செய்வது போலிருந்தது; அம்மரத்தின் இலைகள் மின்னல்போல் மின்னாளியின் கண்கள் பூக்கும்படி தீப்பிழம்புபோல் ஜ்வலித்தன. அந்த ஜ்வாலையிலிருந்து ஒருகுயில் படபடவென்று இறகையடித்துக்கொண்டு வெளியே வந்தது; கூவிக்கொண்டே அது சுற்றிக்கொண்டு ஆகாசவீதியை நாடிப்பறந்தது. அது மேல் பறந்துபோனதும் கீழிருந்த பட்டும் அதிலிருந்த எலும்பும் எல்லாம் காணாமலே மாயமாய்ப் போய்விட்டன. பின் மாமரமும் எப்போதுமிருப்பதுபோலவே விளங்கியது. மின்னாளிக்கும் தன்னண்ணன் பிழைத்திருப்பதாக விளங்கியது. அவள் வீடையடைந்து எப்பொழுதும் இருப்பது போலிருந்து சாப்பிட்டாள். (இன்னும்வரும்)

ஸ்ரீ சிதம்பரம் அத்வைத ஸபா.—இப்பெயர் கொண்ட சபையானது ஸ்ரீ சிதம்பரம் சமஸ்கிருத பண்டிதர் பிரம்ம ஸ்ரீ சி. கண்டபாணி ஸ்வாமி தீக்ஷிதரவர்கள் முயற்சியின்பேரில் சங்கர ஜயந்தியிலேயே ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு அங்கத்தினர்கள் அவர்கள் உட்பட இருபதுபேர்கள். இச் சபையின் முயற்சியினால் 1914 வரு ஜனவரி மீ 2உ முதல் பத்து நாள் ஸ்ரீ சிதம்பர ஆருத்ரா மஹோத்ஸவ காலத்தில் அத்வைத பரீக்ஷை, அத்வைத மஹோபந்யாசம், ஷை வித்வான்களுக்கும் வித்தியார்த்திகளுக்கும் சம்பாவனை, மேற்கண்டவர்களுக்கும் சபைக்கு வருபவர்களுக்கும் உபசாரணை, இவைகள் நடத்தப்படும். மேற்கண்ட ஸத்விஷயத்துக்குப் பிராமணோத்தமர்கள் ஒரு ரூபாய் முதற்கொண்டு ஸ்ரீ சிதம்பரம் அத்வைத சபா காரியதரிசிக்கு மணியார்டர் செய்யலாம்.

## புதுக்கோட்டை மகாராஜா அவர்கள் 39ம் வருஷவர்த்தனி மஹோற்சவம்

## THE 39th BIRTHDAY CELEBRATION OF H. H. THE MAHARAJA OF PUDUKKOTTAH

இவ் வருஷோற்சவம் புதுக்கோட்டை டவுனில் 1913-ம் வரு டிஸம்பர் மீ 10,11,12உகளில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இச்சமஸ்தானத்து உத்தியோகஸ்தர்கள் ஒருங்கு கூடி பலவருடங்களாக இம்மஹோற்சவத்தை மிக வைபவத்துடன் நடத்திவருகிறார்கள். டிஸம்பர் மீ 10உ காலையில் பாட்டுக் கச்சேரி நடந்தது. அன்று சாயங்காலம் 5 மணிக்கு மகா-ா-ா ஸ்ரீ மகாராஜா அவர்கள் தமது மாட்சிமை பெற்ற பங்களாவிலிருந்து விசேஷ விருதுகளுடன் G. C. I. E. பதக்கத்துடன் டவுன் ஹாலிற்குவிஜயம் செய்தார்கள். இம் மஹோற்சவத்தைச் சிறப்பாக நடத்திவரும் கம்மிட்டி மெம்பர்கள், மகாராஜா அவர்கள் டவுன் ஹாலுக்கு வந்ததும் நன்கு உபசரித்து, ஆசிகூறி, அழகாய் அலங்கரிக்கப் பெற்றிருந்த ஹாலில் போட்டிருந்த அவர் ஸிம்மாஸனத்தில் வீற்றருளிய பின்னர் வாத்திய கோஷங்கள் சபையோர்களனைவருக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கும்படி முழங்கின. கம்மிட்டி மெம்பர்கள் ஒவ்வொருவராக மகாராஜா அவர்கள் பேட்டிபெற்ற பின்னர் கம்மிட்டி அக்கிராசனாதிபதியாகிய இச்சமஸ்தானத்து திவான் ஸ்ரீ விஜயரகுநாத துரைராஜா அவர்கள், பி.ஏ., சபையோர்கள் மனம் பூரிக்கும்படி களிகூர் பத்திரிகை ஒன்று வாசித்து, அதைப் புத்தகரூபமாய் அமைக்கப்பட்டிருந்த ஒரு வெள்ளிப்பேடகத்தில் வைத்து, மகாராஜா அவர்களுக்கு சமர்ப்பித்தார்கள். இச்சமஸ்தானத்து சங்கீத வித்வான்களும் இப்பிரகரணத்தை முன்னிட்டு தருவழைக்கப்பட்டிருந்த சங்கீதவித்வான்களும் தங்கள் தங்கள் வித்வத்திறமையை, ஹாலிலிருந்தோர் அனைவர்களும் களிக்கும்படி காட்டினார்கள். மாலையில் மகாராஜா அவர்கள் டவுன் பிரதான வீதிகளில் ஊர்கோலமாகத் திரும்ப, அவர்கள் பிரஜைகள் களிகூரும்படி தமது பங்களாவிற்குச் சென்றார்கள். இரவில் கதாப்பிரசங்கம் நடந்தது. 11உ சங்கீத கச்சேரி நடந்தது. மகாராஜா அவர்கள் உத்தியோகஸ்தர்களுக்கு வேடிக்கையான பேட்டிப்பரீக்ஷைகள் ஏற்படுத்தி அவைகளில் தேறினவர்களுக்குப் பரிசு அளித்தார்கள். 12உ பாட்டுக்கச்சேரி விமரிசையாய்நடந்தது. இப்பூபதி, சிடசாத்திராய் இன்னும் மேன்மையான பட்டங்கள் பெற்று, நீடூழிகாலம் ஸிம்மாஸனத்தில் பிரக்கியாதியுடன் வீற்றிருக்கும்படி, கிருபாநிதியும் சிறந்த குணங்கள் பொருந்தியவருமாகிய இந்நாட்டு மகா-ா-ா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் குலதெய்வமான ஸ்ரீ பிரகதம்பிகை பூரணமாகக் கடாக்ஷித்தருள சபையோர்களனைவரும் கரகோஷத்துடன் பிரார்த்தித்தார்கள்.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**மிஸ்டர் மேஹியூ.**—இச்சென்னை கல்வியிலாகாவைச் சேர்ந்த மிஸ்டர் மேஹியூ மத்தியமாகாண வித்தியாதிகாரியாய் ஆக்டெசப்ப நியமிக்கப்பட்டிருக்கிறாரெனத் தெரியவருகிறது.

***

**ஹாஸ்டல் கிராண்டு.**—மதுரை காலேஜ் மாணவர்களின் உபயோகத்தின்பொருட்டு ஒரு ஹாஸ்டல் கட்டுவதற்காக ரூ 38,000, சென்னை கவர்ன்மெண்டார் சாங்கிஷன் செய்திருக்கிறார்களெனக் கேட்க மிகவும் சந்தோஷப்படுகிறோம். ஏற்கனவே மேற்படி ஹாஸ்டலுக்காக வென்று நிலமொன்று வாங்கப்பட்டிருப்பதால், கட்டடம் சீக்கிரம் முடிவு பெறும் என நினைக்கிறோம்.

***

**மதுரைத் தமிழ்ச் சங்கம்:**—சென்ற மாதத்தில் நடந்த சங்கம் மீட்டிங்கில், இராமநாதபுரம் ஹிஸ் ஹைனஸ்ஸேதுபதி மஹாராஜா அவர்கள் சங்கத்துக்கு பிரஸிடெண்டாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இது தமிழர் யாவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியதே.

***

**1914-ம் வருஷத்து காங்கிரஸ்.**—மிஸ்டர் N. சுப்பராவ் சென்னைக்கு அழைத்திருக்கிறார்.

***

**புதுக்கோட்டை ஸ்ரீ மார்த்தாண்ட தொழிற் பொருட்காட்சி.**—சென்றமாதம் 19வ ஷை பொருட்காட்சி புதுக்கோட்டைசமஸ்தானம் ஸூப்ரின்டெண்டெண்டு Mr குவின் துரையவர்களால் திறக்கப்பட்டது.

***

**வில்வ மரம்.**—வில்வ மரக்காயில் ஒருவித பிசின் இருக்கிறது. இதை ஒட்டுவதற்கு உபயோகிக்கலாம். இதோடு சுண்ணாம்பைச் சேர்த்தால் நேர்த்தியான பசையாகிறது. இந்தப் பசையைச் சில இடங்களில் கிணறு கட்டுவதற்கு உபயோகிக்கிறார்களாம். இப்பிசினை சித்திரம் எழுதும் வர்ணங்களோடு ஜலத்தில் கரைத்து உபயோகித்தால் படங்கள் அதிகப் பிரகாசமாயிருக்கின்றனவாம். புஷ்பத்திலிருந்து ஒரு வாசனைத் தைலம் உண்டாக்கப்படுகிறது.

***

**வெள்ளரி.**—தேனும் பாலும் சரிபங்காக கலந்து அதிலே இப்பயிரின் விதையை 6-மணி நேரம் நனையவைத்தெடுத்து, பின்பு அதை நிழலிலே உலர்த்தி பின்னும் இருமுறை அப்படிச்செய்து, ஒரு முழ அகலம் ஒரு முழ நீளம் ஒரு முழத் தாழ்வுள்ள கிடங்கை வெட்டி அதிலே தழை எருப்போட்டு மிதித்து மண்ணால் மூடி அதிலே நட, காய்கள் நட்ட விதையின் தாய்க்கொடியிலுள்ள காயைவிடப் பருத்ததாகக்காய்ப்பதுமன்றி, ருசியிலும் மிகவும் மேன்மையானவையாக இருக்கின்றனவாம்.

**காலஞ்சென்ற மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தர அய்யர்.**— சென்ற டிஸம்பர்மீ 21வ காலை சுமார் 7 30 மணிக்கு ஐயரவர்கள் காலம் சென்றாரென்று அறிந்து மிகுந்த துக்கப்படுகிறோம். இவர் ஜீவிய சரித்திரத்தைப்பற்றி இம்மாதப் பத்திரிகையில் எழுத இடமில்லாதது பற்றியும், பத்திரிகை குறித்தகாலத்தில் வெளிப்படுத்தவேண்டியதைப்பற்றியும், அடுத்த மாதத்தில் ஷை விஷயம் இவர் உருவப்படத்துடன் பிரசுரிக்கப்படும். ஐயரவர்கள் அகால மரணம் எவருக்கும்வருத்தத்தையே கொடுக்கும் என்பதிற் சந்தேகமில்லை.

***

**இந்து ஸிலோன் ரயில்வே.**—இந்த இருப்புப் பாதை அடுத்த மீ 24வ கனம்பொருந்திய சென்னை கவர்னர் அவர்களால் திறக்கப்படுமெனத் தெரிய வருகிறது. இந்த இருப்புப்பாதையைப்பற்றி அடுத்த சஞ்சிகையில் விவரமாய் எழுதுவோம்.

***

**தென்னாப்பிரிகாவுக்கு இந்தியா கவர்ன்மெண்ட் பிரதிநிதி:**—யூனியன் கவர்ன்மெண்டார் தென்னாப்பிரிகா இந்தியர்களின் விஷயத்தைக்குறித்து விசாரணை செய்ய நியமித்திருக்கும் கமிஷன் முன், இந்தியாகவர்ன்மெண்டின் பிரதிநிதியாய் ஆஜராக மத்தியமாகாண சீப் கமிஷனர் ஸர் B. ராபர்ட்ஸன் தெரிந்தெடுக்கப்பட்டு, ஜனவரிமீ 2வ பம்பாயிலிருந்து, தென் ஆப்பிரிகாவுக்குப் பிரயாணமானார்—பம்பாய் துறைமுகத்தில் இந்தியப்பிரபுக்கள் அநேகர் அவரை வரவேற்று வழியனுப்பினார்கள்.

***

**ஓர் சுதேசாபிமானியின் பெரு நன்கொடை:**—லாலா லஜபதிராய் தமது வரும்படியில் தம்முடைய செலவுபோக மிகுவதைப் பொதுஸ்தாபனங்களுக்கும் தருமத்துக்கும் கொடுப்பதாய் சங்கற்பித்துக்கொண்டபடி இப்போது 50,000 ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார். அத்தொகை முழுதும் ஆரிய சமாஜத்துக் காலேஜுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாய்ச் சொல்லப்பட்டிருப்பதானாலும், இதனில் ரூபா 30,00 தாழ்வகுப்பாரை உயர்த்தும் முயற்சியில் செலவு செய்யப் படுவதற்கும்; ரூபா 10,000 அவர் பிறந்துவளர்ந்த கிராமத்தில் அவர் தகப்பனாரின் பேரால் ஒரு ஸ்கூல் வைப்பதில் செலவு செய்யப்படுவதற்கும் உதவப் பட்டிருக்கின்றனவென்று தெரிகிறது.

***

**தக்காளி எண்ணெய்.**—இப்போது அதிலிருந்து ஒருவித எண்ணெயை எடுக்கிறார்கள். அந்த எண்ணெய் சீக்கிரத்தில் உலர்ந்து போகக்கூடிய தன்மையுடையது. ஆனபடியினாலே அதை வார்னிஷ்களில் கலந்து உபயோகிக்கிறார்கள். இத்தாலி தேசத்தில் தக்காளியை டப்பிகளில் அடைத்து மறுதேசங்களுக்கு அனுப்பும் சாலைகள் அநேகம் உண்டு. பர்மா மாகாணத்தில் மாத்திரம் 54,000 டன் "தக்காளிப் பழம் டப்பிகளில் அடைக்கப்படுகிறது. இப்பொழுது அந்தப் பழத்தின் விதையிலிருந்து 600 டன் எண்ணெய் ஆயத்தப்படுத்தப்படுகிறதாம்.

SUPPLEMENT TO THE "VIVEKA BODHINI"  "விவேக போதினி" அனுபந்தம்



காலஞ்சென்ற ஹைகோர்ட் ஜட்ஜ் மிஸ்டர் பி. ஆர். சுந்தரய்யர்

# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED

தொகுதி VI { பிரமாதீச வருடி தைமீ =1914-வருடி பிப்ரவரிமீ } பகுதி 8.

## வேதாந்தத் திரட்டு

### VEDANTIC SELECTIONS

### 3. க்ஷேத்ரம் ஆத்மானாத்ம விவேகம்

இல்லாத தொன்றற் கிலையுண்மை உள்ளதனுக்
கில்லாமையில்லை இசை இவ்விரண்டின்-சொல்லறிய
நிச்சயத்தை உண்மை நிலையுணரும் சீரார்தாம்
நச்சியறிந்துள்ளார் நீ நாடு (1)
(பகவத்கீதை II—16. முத்துவையர் மொழி பெயர்ப்பு)

யாகம் தவமிவற்றைத் துய்ப்பவனை எப்புவிக்கும்
ஏகனெனும் ஈசனை எவ்வுயிர்க்கும்-ஓசையுடன்
இன்பளிக்கும் நண்பனை என்னையறிந் தன்னோன்றன்
துன்பொழித்து முத்தியனும் (2)
(கீதை-V-29)

திருவுடைய தாய்வளரும் தேஜஸுடையதாகி
மருவும் குணதிசயம் வாய்த்த-பொருவில் பொருள்
என்னுளவோ அன்னவெலாம் என்தேசின் ஓர்கூற்
றால்
மண்ணுலகில் தோன்றும் மதி (3)
(கீதை X—41)

தாவரமோஜங்கமமோயாது ஜனிப்பது காண்
பூவுலகில் பாரதருட்பேரேறே-தாவிலது
க்ஷேத்ரமும் க்ஷேத்ரஞ்ஞனும் புணரக் கேடின்றி
வாய்த்திடுமென்றோர்ந்திடுகமற்று (4)
(கீதை XIII—27)

பல்லுயிரின் உள்ளத்தும் ஈசன்பதிந்தவற்றைச்
செலுத்தும் சுழல்விப்பன்-வல்லதொரு
மாயையினால் எந்திரத்தின்மீதவற்றை வைத்ததென
நீயுணர்க இன்னதனையோர்ந்து— (5)
(கீதை XVIII—61)

என்னிடத்துப் பற்றும் இதயம் தனைப் பெற்றுச்
சொன்ன தொரு யோகத்துறைமருவி-என்னையே
சார்ந்து நீ முற்றுமெனைச் சந்தேகம் அற்றினிது
தேர்ந்திடும் வண்ணம் கேள்சிறந்து (6)
(கீதை VII—1)

ஆயிரவர்க்குள் ளொருவன் ஆரிய சித்திபெற
நேயமுடனேமுயல்வன் நீணிலத்தில்-மேயவுயர்
சித்தரவர் ஆயிரருள் தேசின் எனைத்தெரியும்
சித்தனொருவன் போலும் தேர். (7)
(கீதை VII—3)

ஆனபொருளாலே அமைத்தபல வேள்வியினும்
ஞானமெனும் வேள்வி நலனுருமால்-ஊனமறு
கன்மங்கள்யாவும் கருதியஞானத்தடங்கும்
தன்மையிது காணுதி நீ சார்ந்து (8)
(கீதை IV—33)

பாதம்பணிந்தும் பரிவோடுசாவியும்
ஏதமறச்சேவித்தும் ஈதறிக-நீதறவே
மெய்கண்டஞானியர்கள் மேவரியஞானத்தைக்
கைகண்டிடத் தருவர்காண். (9)
(கீதை IV—34)

நற்றவர்கள் போதித்தஞானமிதைப் பெற்றதன்பின்
உற்றநெடுமோஹம் ஒழியப்—பெற்றற்றமிலா
எல்லா உயிர்களையும் என்னிடத்தும் உன்னிடத்தும்
வல்லாய் நீ காண்கிற்பாய் மற்று. (10)
(கீதை IV—35)

# விவேக போதினி

தொ.6.] பிரமாதீச ௵ தை ௴ [பகுதி.8.

## மோக்ஷ ஸோபானம்

### THE STEPS TO THE GOAL

(2) கர்மயோகம் (தொடர்ச்சி)

(4) ஈசுவரார்ப்பண புத்தி என்பது தான் நான்காவது அங்கம் கர்மயோகத்திற்கு. மேலெழுந்தவாரியாக நோக்கினால், இதற்கும்முதல் அங்கமாகிய பலத்தில் இச்சை இன்மைக்கும் வேற்றுமையே யில்லை என்றும் தோன்றும். ஆழ்ந்து விசாரிக்கப் புகுங்கால் முதலில் பல இச்சை இன்மை வெளி விஷயம் என்றும், அது நிலைப்பதற்குக் காரணமாயுள்ள உள் விஷயம் இந்த அங்கம் என்றும் வெளியாகும். இந்த உள்விஷயமான பற்று இரண்டு விதமாகவிருக்கும். (1) நான் இந்த ஸத்கர்மங்களைச் செய்கிறேன் என்ற அபிமானம் (2) இந்த ஸத்கர்மங்களைச் செய்வதால் ஈசன் திருப்தியடையட்டும்: என்பவைகள் தான் இந்தப் பற்றின் தன்மை. இவ்விருவிதப்பற்றில் எது இருந்தாலும் கர்மயோகத்தன்மை ஸத்கர்மங்களுக்கு ஏற்படமாட்டாது. நான் செய்கிறேன் என்ற பற்றிருந்தால் அது ஸத்கர்ம பலனைக் கோரும்படி தடித்து அப்யாஸியை நாளடைவில் சந்தியிலிழுத்துவிடும். இரண்டாவது விதப் பற்று இவ்வளவு ஆபாஸமானதல்லாவிடினும் கர்மத்தை முற்றிலும் ஈசபரமாகவிருந்து செய்து முடிப்பதற்கு ஸூக்ஷ்மமான தடையாகவிருக்கும். நமக்கு ஸத்வாஸனை கிளம்பி நல்வழியில் நிற்குங்கால் கெட்டப்ராரப்தம் பலிக்கும் தருணமாகவிருந்தால் துக்கம் ஏற்பட்டுவிடும் ஈசஆஞ்ஞைப்படி. இம்மாதிரியான தருணங்களில் ஈசன் நமது ஸத்கர்மத்தால் திருப்தியடையவில்லையோ என்ற மயக்கம் உண்டாக இடம் ஏற்பட்டுவிடும். இரண்டாவது விதப் பற்று இருந்தால். இந்தவித மயக்கத்திற்குக்கூட இடங்கொடாதிருக்க இரண்டாவது விதப்பற்றையும் மாற்றிவிடவேண்டும். இவ்விரண்டுவிதப் பற்று நீக்கம், ஈச்வரார்ப்பண புத்தி என்ற இந்த பற்றின்மையால் உண்டாகும். இதனால் ஈசன் ஆஞ்ஞைப்படி நடக்கிறோம், அவர் பாரம் நம்மை நடத்தும் விதம், என்ன வந்தாலும் அவர் ஆஞ்ஞையை மீறி நடக்க இடங்கொடுக்கலாகாது என்று, ஸத்கர்மங்களில் ஈசன் ஆஞ்ஞை என்ற கௌரவ புத்தியும் அவைகளை நடத்துவதில் நாம் ஈசன்கைக் கருவியே ஒழிய வேறொன்றுமன்று என்ற பகவத் ஆதீன புத்தியும் மாத்திரமே மிஞ்சிநிற்பதுதான் இந்த பற்றின்மையின் லக்ஷணம். இதனால் வரவர ப்ரபஞ்சம் எங்கும் ஈசனிருப்பதாகவும் அதில் நாம் அவன் கைக்கருவி என்ற நமது உண்மைநிலை திடப்பட்டுக் கொண்டேவரும். இது பலப்பட்டு வருங்கால்தான் தாயுமானவரோடு 'எல்லாம் உன் உடைமை, எல்லாமுன்னடிமை எல்லாம் உன்னுடைய செயலே எங்கணும் வியாபி நீ' என்று மனப்பூர்வமாகக் கூறமுடியும். பிரஹதாரண்யக உபநிஷத்திலுள்ள அந்தர்யாமிப்ராஹ்மணத்தின் உண்மைப் பொருளும் விளங்கும். இந்த அபிப்ராயத்தை உள்ளடக்கித்தான் கீதையில் கிருஷ்ணபரமாத்மா:—

மூதறிஞராயுயர்ந்து புத்தியுத்தர் மும்மும் வினைப்
போதம்பயன் துறந்து பொற்பினராய்த்—தீதார்



பிரவித்தளைதவிர்ந்து பின்னரிடர் ஒன்றும்
உறவில் இடத்தமர்வார் உற்று

என்றார் II-51-ம் ச்லோகத்தில்.

பொதுவாக ஸத்கர்மத்திற்கே தாமஸகுணத்தைக் கலைத்துக் கெடுக்கும் தன்மை உண்டு. நிஷ்காம்யகர்மத்திற்கு இந்தப்பற்றின்மைமுக்ய அங்கமாகவிருப்பதால் ராஜஸத்தையும் கலைத்து ஒடுக்கும் திறன் உண்டு. காம்யமான ஸத்கர்மங்களுக்கும் இந்த நிஷ்காம்ய கர்மத்திற்கும் இந்த அங்கத்தால் மிகுந்த வேற்றுமை ஏற்படும். புருவைக் காக்க சிபிசக்கிரவர்த்தி தேஹத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டியற்பணம் செய்தது: இந்திராதிதேவதைகள் நன்மைக்காக தம் உயிரை மதியாது முதுகெலும்பை பரிவுடன் ததீசிஅளித்தது: இவைகளைப்போன்ற சிறந்த நிஷ்காம்ய கர்மங்களை விட்டு ஸாதாரண அற்ப நிஷ்காம்ய கர்மங்களை எடுத்துப் பார்த்தாலும் காம்யகர்மங்களை விட இவைகள் எவ்வளவோ மேலாகவே யிருக்கும். காம்ய கர்மத்தில் பரோபகார சிந்தைமேலிட இடமே இல்லை; அதனால் கீர்த்தி, முதலிய தந்நயம் கருதுவதே ஏற்றமாக விருக்கும். இது பற்றி கிருஷ்ணபரமாத்மாவும்:—

வேண்டாது செய்புத்தி யோகத்தின் மேவு பயன்
வேண்டிச் செய்கன்மம் மிக விழிவால்—வேண்டும்
பயன் விழையாப் புத்தியை பற்றுக நீ பார்த்த
பயன்விழை வார் பூரியர் தாம்பார்.

என்று II-49-ம் ச்லோகத்தில் கூறியுள்ளார்:

இந்த அங்கத்தால் ஈசனை உள்ளபடி பற்றி வழிபடும் தன்மை ஏற்பட்டு அடுத்தபடியாகிய பக்தியோகத்திற்கு ஆதாரமாகின்றது இந்தக் கர்மயோகம். இந்த அங்கம் உள்ளபடி அமையாமல் பலத்தில் இச்சைகழலுவது மிகக்கடினம். கர்மபலத்தில் இச்சை இருக்கலாகாது என்று வாயாரக் கூறலாம். அதை ஒழிக்கத் தொடங்குங்கால்தான் கஷ்டம் தெரியும். மனம் ஒன்றையும் பற்றாது நிராலம்பமாக நிற்பது கடினம். மேல் விஷயம் ஒன்றில் பற்று விழுந்தால்தான் கீழ் விஷயத்தை விடும் மனம்: கர்ம பலத்தில் இச்சை மனதிற்கு விட்டுப்போக வேண்டுமானால், கர்மபலதாதாவான ஈசன் தன்மையையும் ஆஞ்ஞையையும் ஒருவாறு உணர்ந்து அதைப் பற்றினால்தான் முடியும். ஆகவே ஸத்கர்மங்கள் எல்லாம் ஈச்வராராதன ரூபமாகச் செய்யப்பட்டால்தான் அவைகள் பலத்தில் உள்ள பற்று நீங்க இடமுண்டு. ஆதலால் தான் மோக்ஷஸோபான நிலைகள் எல்லாவற்றிலும் நமது பெரியோர்கள் ஈச்வரதத்துவத்தை ஏதாவது ஒரு விதமாக வெளிக்காட்டாமலிருக்க வில்லை. இந்த கர்மயோக நிலையில் ஈசன் கர்மபலதாதா; அவன் ஆஞ்ஞைப்படி அவன் கைக் கருவியாகவிருந்து, எங்கும் ஈசனிருந்து பார்த்திருப்பதாக மதித்து ஸத்கர்மங்களில் முனையவேண்டும் என்று காட்டப்பட்டிருக்கிறது. இந்த எண்ணத்தோடு ஸத்கர்மாப்யாஸம் செய்து வரவர மனதில் உள்ள ராஜஸதாமஸ குணகாரியமான அறியாமை ஸ்வகாரியப் பரபரப்பு அடங்கிக் கொண்டே வந்து ஸாத்வீக நிலை ஓங்கி ஸுகம் அதிகரித்துக்கொண்டே வரும்.

உலகவிஷயங்களிலும் தன்னிலைமறந்து காரியங்களில் முயலுபவரே அக்காரியங்களை நன்றாகத் திருந்தச் செய்து முடிக்கின்றனர். இது எல்லோருடைய அனுபவத்திலும்வந்திருப்பது தான். நாடகம் ஆடுபவன் ஒருவன், தான் நடிக்கும் பாத்திரமாகவே பாவித்து தன் தனியிருப்பை மறந்து நடந்துக் கொண்டால்தான் அவன் ஆட்டம் மிகுந்த ஸந்தோஷம் தரும் பிறருக்கு. இதுவன்றி அவன் பிறரை திருப்திப்படுத்த வேண்டுமென்ற ஆவலை எவ்வளவு அதிகமாகக் கொண்டாலும் அவ்வாறு அவனால்

செய்யவே முடியாது. ஆடும் வரையில் அவன் பிறரை முற்றிலும் மறந்து தன் தனி நிலையையும் மறந்து யாராக நடிக்கிறானோ அந்த ஆளாகவே இருந்து விட வேண்டும். பாட்டின் ரஸத்தைத்தானே அனுபவித்துப் பாடுபவனே, பிறரைத் திருப்திப் படுத்த மாத்திரம் கருதும் பாடகனை விட, சிறந்த பாடகனாகிவிடுவான். ஆகவே எந்தக் காரியத்தில் காரியமாத்திரமாகவிருந்து அதனால் ஏற்படும் வேறு பயனைக் கருதாது எவ்வளவுக்கெவ்வளவு ஒருவனால் இருக்கமுடியுமோ அவ்வளவுக்கவ்வளவு அந்தக்காரியத்தை அவனால் திருந்தச் செய்ய முடியும். கர்மயோக விஷயத்தில் இது முற்றிலும் பொருத்தமுடையதாகவிருக்கும். இங்கு தன்னை மறந்து கர்மாகாரமாகவிருத்தலாவது நாம் செய்கிறோம் அதற்கு இந்தப் பலன் உண்டாகவேண்டும் என்பதை முற்றிலும் மறந்து ஈசாஞ்ஞையால் நமது நன்மைக்கேற்பட்ட கர்மம் இது ஆதலால் இதைச் செய்துவிடவேண்டும் என்று செய்வதுதான். நாம் செய்யும் கர்மத்திலேயே ஒருவிதப் பிடிப்பும் அது முடிந்த விடத்து அதை மறுபடியும் எப்பொழுது செய்யும்படி நேரும் என்ற பரபரப்பும் உண்டாக இடம் தரவேகூடாது. அந்த பரபரப்பை அதிகப்படுத்தும் கர்மங்களிலும் அதிகமாக முயலவும் கூடாது. செய்யும்படி நேர்ந்த தருணங்களில் ஈசுவரார்ப்பணமாக அவைகளைச் செய்து அமைதியையே விருத்திபண்ண வேண்டும் இந்த அங்கம் திடப்பட.

இரண்டாம் அங்கமாகிய பாபஸம்பந்தமே ஏற்படாமை என்பதில் ஈச்வரார்ப்பண புத்தியுடன் செய்து கர்மயோகமாகக்கூடிய கர்மங்கள் வைதிகமாயும் நான்கு வர்ணத்தாருக்கு ஏற்பட்டதாயும் உள்ள தகுதியான சிறப்புக் கர்மங்களும் அதற்கு சற்றேறக்குறைய ஸமானமான பொது கர்மங்களாகிய திருடாமை முதலியவைகளுமே என்று வற்புறுத்தப் பட்டது. அது நன்றாக ஞாபகத்திலிருந்தால் கர்மயோகமாகும் கடமைகளுக்குப் பொதுவாக கடமைகள் என்று பெயரிட்டழைக்கலாகாது. ஜாதிவர்ணாச்ரமத்தை ஒழுங்கும்படி செய்து அதிவர்ணாச்ரமி என்ற பரமபுருஷனை வெளிப்படுத்த எடுத்துக்கொண்ட வேதம் தவழ்ந்து வந்த இப்பாரத கண்டத்திலேயே தொழில் நிலைமைகளும் தர்மங்களும் நிலைகுலைந்து விட்டன. எக்காலத்திலும் மற்ற தேசங்களில் எப்பொழுதுமே இவ்விஷயத்தில் பெருங்குழப்பம் தான். இப்பொழுது அந்தவிஷயம் பெருங்குழப்பம் என்பதை எடுத்துக் கூறவும் வேண்டுமோ? இப்படி அம்மிக்குழவிகள் எல்லாம் ஆலாகப்பறக்குங் காலத்தில் கர்மயோகம் என்றால் ஈச்வரார்ப்பண புத்தியுடன் ஒவ்வொருவனும் தனது கடமையை செய்துவிடுதல் என்றுகொண்டு விட்டால் பெரிய அனர்த்தம் உண்டாகிவிடும். ஈச்வரார்ப்பண புத்தியுடன் அம்பட்டன் க்ஷவரம் செய்தல், வக்கீலும் வியாபாரியும் கொள்ளையடித்தல், பிழைக்க வகையறியாதோர் பொய்ஸாக்ஷி சொல்லல், திருடன் திருடுவது, நியாயாதிபதி நியாயம்தீர்த்தல், ரஜோகுணமுடையோர் பிறர் நன்மைக்குழைப்பதாக எண்ணித் தாம் வேலையன்றி ஓய்ந்திருக்கத் தெரியாதவராகிப் பொதுக்காரியங்களைத் தேடிச் சென்று முயன்றுவீண் காலம் போக்குவது, எல்லாம் இந்தக் காலத்தில் கர்மயோகங்களாகி விடும். இப்படிக் கர்மயோகத்தை தத்கால நாகரீகத்தால் ஏற்பட்டிருக்கும் பலவித அபிமானத்துடன் முயலப்படும் கர்மங்கள் விஷயங்களில் எல்லாம் பொருத்திக்கொண்டு கீதை முதலிய நமது சாஸ்திரங்களுக்கு குதர்க்கப் பொருள் கூறுவர் அநேகரை இக்காலத்தில் காணலாம். தேசாபிமானி, கீதை தேசத்திற்கு உழைப்பதைக் கர்மயோகமாகச் செய்துவிட வேண்டுமென்று கூறுகிறது என்பன்:



பொருளாளிகள் பணத்தை தர்மவிஷயங்களில் முயலும் ஸபையோருக்குக் கொடுத்துவிட்டு அதைக் கவனியாமலிருப்பதுவே பணச்செலவு விஷய கர்மயோகம் என்பதுதான் கீதையின் நோக்கம் என்பர்: பெருங்குடும்பியாக உள்ளவன் தன் குடும்பத்தை எப்படியும் காப்பாற்ற பொருளில் ஆசையில்லாது பொருள் ஸம்பாதிப்பதே கீதையின் கர்மயோகம்என்றும்கூறுவன். சாஸ்திரீயமாக நோக்குங்கால் இந்த கர்மங்கள் எல்லாம் கர்மயோகத்திற்கு ஸாதகமான கர்மங்களே யல்ல. இவைகளில் கூடியவரை மோசையின்றிப் பழகிவந்தால் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கும் கர்மயோகத்திற்கு வேண்டியமனோநிலை ஒருவேளை வரலாம்: அவ்வளவுதான். சாஸ்திரீயமான கர்மயோகத்திற்குப்பொருத்தமான கர்மம்(1)வைதிககர்மமாயிருத்தல்வேண்டும்(2) சிறப்பானவைகள்என்றுகூறப்பட்டவைகளான வர்ணாச்ரமங்களுக்கு ஏற்றவைகளாயும்(3) நேரிடதிரஷ்டபலனுடன் ஸம்பந்தப் பட்டிராதனவாயும்(4)லோகாந்தரத்திலோ ஜன்மாந்தரத்திலோ பலிக்கக்கூடியவைகளாயும் இருத்தல் வேண்டும் (5)ஒரு ஒழுங்குப்படி செய்யப்பட்டுவருவனவாகியும் ஈசாஞ்ஞையாகக் கருதப்பட்டு வழிபட்டு வருவனவாகியும் இருத்தல் வேண்டும். இந்த லக்ஷணங்களில்லாத கர்மங்களைப் பற்றிக் கர்மயோகம் அப்பாஸம் செய்யத் தொடங்கினால் மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்கிய கதையாகத்தான் முடியும். கர்மபந்தம் நீங்காது, வரவர வ்யஹாரம் அதிகப்பட, ஓய்வு ஒழிவு கூட இல்லாது காரியம் செய்யும்படியாகவும், ஓய்வு ஏற்பட்டால் காரியங்களில்லாதிருக்க முடியாமையாகிய பரபரப்பு நிலையும் லக்ஷணங்களாக அமையப்பெற்ற ராஜஸ நிலை திடப்பட்டு கர்மபந்தம் வரவர அதிகமாகிக் கொண்டேவரும். இப்படியல்லவோ இருக்கிறது தத்காலத்தில் மிக கற்றுத் தேர்ந்தவர்கள் நிலையும். இதனாலேயே இவர்கள்பற்றிக் கர்மயோகமாகச் செய்யமுயலும்கர்மங்களை உள்ளபடி ஈச்வரார்ப்பணமாகச் செய்யவே முடியாது. அவைகளின் பலன்கள் நெருங்கியும் தெளிவாயும் உள்ளவையாதலால் முழுமூடனாலும் அவைகளை மறந்து ஒதுக்கி நிறுத்த இயலாது: ஆகவே லௌகிகபல ஸம்பந்தம் நெருக்கமாக இல்லாது ஈசாஞ்ஞையால் நமது உண்மையான சிறப்பிற்கு ஏற்பட்டதாயும், அதிர்ஷ்ட பலனுடையதாயும் உள்ள கர்மங்களையே கர்மயோகமாகச் செய்யமுடியும் என்பது நமது சாஸ்திர ஸித்தாந்தம். இந்த விஷயத்தைக் கவனியாது எல்லாக் கர்மங்களையும் கர்மயோகமாகச் செய்து விடலாம் என்று கூறுவது வீண்வாசாடம்பரமாக முடியுமே ஒழிய, அப்யஸித்து கடைத்தேற முடியாததாய்ப் போய்விடும். இத்தருணத்தில் ஒரு குதர்க்கி தலைதூக்கி, பகவான்.—

யாதொன்றியற்றிடினும் யாது நுகர்ந்திடினும்
யாதொன்றை ஒழித்திங்கீந்திடினும்—யாதோர்
தவம் செயினும் குந்திதவப்புதல்வ செய்வாய்
உவந்தெனக்கிங் கர்ப்பணமா யோர்ந்து.

என்றுகீதை IX-27-ம் ச்லோகத்தில் கூறியிருக்க, அதற்கு விரோதமாக வைதிக கர்மங்கள் தவிர மற்றவைகளை கர்மயோகமாகச் செய்யமுடியாது என்று கூறலாமா? என்னலாம். இந்த ச்லோகம் ஜாதிவர்ணாச்ரமங்களில் தாழ்ந்தவருக்கும் அதற்குப் புறம்பானவருக்குமே மிக முக்கியமானது. மேல்வருணத்தாராகி, உள்ளபடி கர்மயோகத்தை அனுஷ்டிக்கும் திறன்பெறுவதற்கு அவர்கள் நடந்துகொள்ள வேண்டியவிதம் இது. அவர்களையும் அனாதையாகவிட மனம் வாராது பகவான் கூறி, இம்மாதிரி தமது ஸத்கர்மங்களை எல்லாம் என்னிடம் அற்பிக்க முயலுபவர் பெண்களாயினும், வைச்யராயினும், சூத்திராயினும் ஹீன

குலத்தின ராயினும், நற்கதி யடைந்து ஸுகமாய் வாழ்வர் என்றும், அவர் அடையும் நற்கதியில் பிராஹ்மணரும் ராஜரிஷிகளும் இருப்பதால் ஸுகமடைவர் என்று கூறவும் வேண்டுமோ என்று பகவான் இந்த உபதேசத்தை முடிக்கிறார். ஆகவே, குதர்க்கி எடுத்துக் காட்டிய ச்லோகத்தை ஸந்தர்ப்பத்தை ஒட்டி நோக்கில் கர்மயோகத்திற்கு முக்யமான சிறப்பு, ஸத்கர்மானுஷ்டானம் இல்லாதவர்கள் தாம் செய்யும் உபகாரம், பொய்யாமை, திருடாமை முதலிய ஸத்கர்மங்களை எல்லாம் ஈசாராதனையாகக்கருதிச் செய்து வந்தால், லௌகிக ஸம்பந்தம் நெருக்கமாக இல்லாது இருக்கும் வைதிக கர்மங்களை கர்மயோகமாகச்செய்து கடைத்தேறும் ஆற்றலும், நிலையும் நாளடைவில் வரமோக்ஷ ஸோபான முதல்படியில் அடி எடுத்து வைக்க யோக்யராகலாம்: அந்த யோக்யதையுடைய பிரஹ்ம க்ஷத்ரியர்கள், உள்ளபடி கர்மயோகத்தை சிறப்பாக அனுஷ்டித்துக்கொண்டே இருப்பர் என்பவை வெளிப்படும். ஆகவே ஈசுவரார்ப்பணம் செய்யத் தகுந்தவைகளான கர்மங்கள் வைதிக விஹிதகர்மங்களே; எல்லாஸாமான்ய ஸத்கர்மங்களுமல்ல: ஸாமாந்ய கர்மங்களைக் கர்மயோகமாக அனுஷ்டிக்க முயன்றால் நிஜமான கர்மயோகத்தை அணுகலாம் என்பவை நமது சாஸ்திர ரஹஸ்யம். அப்படிப்பட்ட கர்மங்களில்தான் கர்மயோக நான்காம் அங்கமாகிய ஈச்வரார்ப்பண புத்திக்கு இடம் இயற்கையாகவே அமைந்து கிடக்கிறது, என்பதை நாம் எப்பொழுதும் மறக்கவே கூடாது.

---

**எலிமெண்டரிப் பாடசாலைகள் தோட்ட அபிவிருத்தி:**—எலிமெண்டரிப் பாடசாலைகளைச் சேர்ந்த தோட்டங்களை விருத்தி செய்வதற்காகக் கல்வியிலாகாத் தலைவர் சென்னை மாகாணத்துள்ள போர்ட் ஸ்கூல்களுக்கு 20,000, ரூபாய் கொடுக்கவேண்டுமென்று சென்னைக் கவர்ன்மெண்டாருக்குச் சிபார்சு செய்திருந்தார். அதனைக் கவர்ன்மெண்டா ரங்கீகரித்திருக்கின்றனர்.

பண்டைகாலத்
# தமிழ்ப் புலவர்கள்
## TAMIL MEN OF LETTERS
## திருவள்ளுவர்
Tiruvalluvar

"அறம் பொருள் வீடென்னு மந்நான்கின்
திறந் தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பான் ஓர் பேதை, அவன் வாய்ச்சொ
[ல்
கொள்ளார் அறிவுடையார்".—மாமூலனார்.

ஆசிரியர் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரின் பெருமையினையும், அவர் அருளிச்செய்த தெய்வத் திருக்குறள் நூலின் அருமையினையும் இந்நிலவுலகத்துள்ள எல்லாத் தேசத்தினரும், எல்லாச் சாதியாரும், எல்லா மதத்தினரும், எல்லாப் பாஷையினரும் ஒருங்கே புகழ்ந்து பாராட்டி வருதலோடு, அவரவர்கள் தத்தம் பாஷைகளில் அந்நூலை மொழிபெயர்த்துப் பொன்னேபோல் போற்றிப் பயின்றும் வருகின்றார்களென்றால்; ஆசிரியரின் பெருமையினை யாங் கூறப்புகுவது கதிரவன்முன் மின்மினிபோல் இருக்குமென்பதை நன்கறிவேம். அற்றாயினும், கலாசாலைகளிற் பயிலும் மாணவர்கட்குப் பயன்படும்படி இப்பொய்யில் புலவரின் சரிதத்தை எமக்குத் தெரிந்தவரையில் சுருங்க உரைத்தல் இழுக்காகாது என்னுந் துணிபால் இவ்விஷயத்தை எழுத முன் வந்தாம். ஆன்றோர் குற்றங்களைந்து குணங்கைக்கொள்வார்களாக.

### ஆசிரியரின் பெற்றோர்கள்

பண்டைக் காலத்தில் நம் செந்தமிழ் நாட்டில் யாளிதத்தர் என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் இருந்தார். இவர் நற்குண நற்செயல்கள் பெரிதும் வாய்ந்தவராய்த் துறவறவொழுக்கத்தை இளம்பருவத்திலேயே கைக்கொண்டு அத்துறையிலேயே நின்று ஒழுகலானார். துறவிகளுக்கு வேண்டும் பண்டபதார்த்தங்களைச் சேகரித்துக் கொடுத்தற்கும் அவர்களிடும் வேலைகளைச் செய்தற்கும் ஏவலாளர்களும் பணிப்பெண்களும் அவர்களிடம் இருத்தல் பண்டைக் காலத்து வழக்கமாகும். அவ்வழக்கப்படியே யாளிதத்தரிடம் ஒரு புலைச்சி பணிப்பெண்ணாக அமர்ந்து அவரிடும்வேலைகளை மனமுவந்து செய்துவந்தாள். அவள் உலகானுபவமற்றச் சிறுமியாதலால், ஒரு சமயம்



தன் எஜமானனுக்குப் பெருங்கோபம் விளையும்படி ஏதோ பிழை செய்துவிட்டாள். யாளிதத்தர் உடனே வெகுண்டு அவளை அடித்து ஒரு கிணற்றுள் தள்ளிவிட்டுப் போய்விட்டார்.

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தலரிது"

என்னும் குறட்பா இவரை நோக்கியே இவருடைய புத்திரரால் பிற்காலத்தில் அருளிச்செய்யப்பட்டது போலும்! யாளிதத்தர் எப்பொழுதும் தேசசஞ்சாரம் செய்து கொண்டிருக்கும் இயல்புடையவ ராகையால், அவர் கிணற்றில் தம்மால் வீழ்த்தப்பட்ட பணிப்பெண்ணைப் பிறகு பார்க்கவுமில்லை; அவள் கதி யாதாயிற்றென்று கவனிக்கவுமில்லை. அவர் அவ்விடத்தைவிட்டு அந்த நிமிஷத்திலேயே புறப்பட்டுத் தம் பிரயாணத்தைத் தொடங்கினார்.

அவர் சென்ற சிறிது நேரத்திற்குப் பிறகு அவ்வழியே வந்த வடநாட்டுப் பிராமணர் ஒருவர் கிணற்றுள் அப்பெண் கிடந்து வருந்துவதைத் தற்செயலாய்க் கண்டு அவளை உடனே, இரக்கமிகுதியால், வெளியே யெடுத்துத் தம்முடன் அழைத்துக்கொண்டு வடநாடு சென்றார். அந்த அந்தணருக்கு வேறு மகவின்மையாலும், அப்பெண்ணின் குலம் யாதென்பதை அவர் அறியாராதலாலும், அப்பெண் பார்ப்பன மகளிரைப் போன்ற தோற்றமும் வனப்பும் வாய்ந்தவளாயிருந்தாளாதலாலும் அவளைத் தம் புத்திரியைப்போல் கருதி மிக்க செல்வத்துடன் வளர்த்து வந்தார். இங்ஙனம் சிலகாலம் கழிந்தது. அவளைக் கிணற்றில் தள்ளிச்சென்ற யாளிதத்தர் பல ஊர்களையும் சுற்றிக்கொண்டு அவ்வந்தணர் வசிக்கும் ஊருக்குக் கடைசியாக வந்து தெய்வச் செயலால் அவ்வந்தணர் இல்லத்திலேயே விருந்தினராயமர்ந்தார். அவ்வந்தணர் துறவிகளிடத்து உண்மைப் பத்தியும் விசுவாசமுங் கொண்டவராதலால் அவர் யாளிதத்தரை மிகுந்த அன்புடன் உபசரித்துச் சில காலம் வரையில் அவரைத் தமதில்லத்திலேயே வைத்திருந்தார். யாளிதத்தருடைய சிறந்த ஒழுக்கமும், நுண்ணிய அறிவும் அவ்வந்தணர் மனத்தைக் கவரலாயின. யாளிதத்தர் துறவொழுக்கத்தை மேற்கொண்டவ ராயிருந்த போதிலும், இளம்பிராயத்தினரா யிருந்தமையால் அவற்குத் தன்னுடைய வளர்ப்புப் புத்திரியை மணஞ்செய்து கொடுக்க வேண்டுமென்னும் விருப்பம் அவ்வந்தணருக்கு எழுவதாயிற்று. அவர் தம் எண்ணத்தை முனிவரிடம் தெரிவித்தார். யாளிதத்தருக்கு இல்லற வாழ்க்கையில் சிறிதும் விருப்பமில்லையாயினும் அந்தணப் பெரியாரின் வேண்டுகோளை மறுத்தற்கு இஷ்டமில்லாதவராய் அப்பெண்ணை மணக்க இசைந்தார். அவ்வந்தணரும் தம் வளர்ப்புப் புத்திரியை யாளிதத்தருக்கு விவாகம் செய்து கொடுத்தனர். யாளிதத்தர் தாம் விவாகஞ் செய்துகொண்ட புலைப்பெண்ணையும் உடன் அழைத்துக்கொண்டு ஊரூராய்ச் சுற்றுவாராயினர். அப்பெண், மகளிற்கு இயல்பாகவுள்ள அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களுள் "மடம்" என்னும் குணம் மிகுதியும் வாய்ந்தவளாய் இருந்தாளாதலின் உலகத்தார் அவளை ஆதி என்னும் காரணப் பெயரால் அழைக்கலானார்கள். "மடம்" என்பதற்கு "அறியாமை" என்று பலர் இக்காலத்தில் பிழைபடப்பொருள் உரைக்கின்றார்களேனும், ஆசிரியர் நக்கீரனார் "மடம் என்பது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை" என்று களவியலுரையில் உரைக்கின்றாராகலின், "பிறர் ஒரு விஷயத்தைப் பற்றி அறிவுறுத்த அதனை மனத்தில் வாங்கிப் பின்னர்த் தான் அறிந்ததை ஆண்மக்களைப்போல் எளிதில் வெளிப்படுத்தா திருக்கும் குணமே "மடம்" என்று கோடலே பொருத்தமுடைத்து. இங்ஙனம் அறிந்தும் அறியாதவர்களைப் போல் நடிக்கும் தன்மை பெண்கட்கு இயல்பாதலின், அக்குணத்தை "அறியாமை" என உபசாரமாக உலகத்தார் வழங்கலானார்கள். "ஆதம்" என்னுஞ் சொல்லுக்கு "அறியாமை" என்பது பொருளாகும். இது, "ஆதமிலி நாயேனை அல்லலறுத்தாட் கொண்டு", "ஆதமிலியான் பிறப்பிறப்பென்னும் அருநரகில்" என்னும் திருவாசகத் திருவாக்கான் இனிது பெறப்படும். ஆகவே ஆதமுடையாளை, அதாவது அறியாமை உடையாளை "ஆதி" என அழைத்தார்கள். இதனால் யாளிதத்தரின் மனைவிக்கு ஏற்பட்ட "ஆதி" என்னும் பெயர் காரணப் பெயர் என்பதும், அவ்வம்மையாரின் இயற்பெயர் யாதென்பது தெரியவில்லை என்பதும் கூறப்பட்டன, யாளிதத்த முனிவர் ஆதி என்னும் புலைச்சியை மணந்தார் என்பதை ஞானாமிர்தத்தில் வரும்,

"யாளி, கூவற்றாண்டும் ஆதப்புலைச்சி
காதற் காசினியாகி மேதினி
இன்னிசை யெழுவர்ப் பயந்தோளீண்டே"

என்னும் அகவற் பகுதிக்கு விரித்தெழுதப்பட்டுள்ள பழையவுரை நன்கெடுத்து விளக்குகின்றது. இவற்குப் பகவன் என்னும் மற்றோர் பெயருண்டென்பதும், அப்பெயரே பெரும்பாலும் எல்லோராலும் அக்காலத்தில் வழங்கப்பட்டு வந்ததென்பதும்,—இக்காலத்திலும் வழங்கப்பட்டு வருகிற தென்பதும்,—இவருடைய புத்திரர்களுள் ஒருவரான கபிலர் என்பவர் பிற்காலத்தில் கூறிய

"அருந்தவ மாமுனியாம் பகவற்கு
இருந்தவா ரிணைமுலை யேந்திழை மடவாள்
ஆதி வயிற்றினி லன்றவதரித்த
தான் முளையாகிய கபிலனும் யானே."

என்னும் அகவலால் வலியுறுத்தப்படும். இத்துணையுங் கூறியவாற்றால் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரின் தந்தை பெயர்யாளிதத்தர் என்பதும், அவற்குப் பகவன் என்னும் வேறோர் பெயர் உண்டென்பதும், ஆசிரியரின் தாயார் பெயர் ஆதி என்பதும், அவ்விருவர் தம் வரலாறு இது வென்பதும்வாசகர்கட்கு ஒருவாறு புலப்பட்டிருத்தல்கூடும்.

ஆசிரியரின் பிறப்பு

பகவன் என்பவர் ஆதியை மணந்த பின்பும் ஊர்கள் தோறுஞ் செல்லும் வழக்கத்தினைக் கைவிட்டார் இல்லை. அவ் வம்மையாரையும் உடன் அழைத்துக்கொண்டு தேச சஞ்சாரம் செய்வாராயினர். அங்ஙனம் தேச சஞ்சாரம் செய்து கொண்டுபோவதில் பல வருஷங்கள் கழிந்தன. ஒரு ஊரிற் சென்று அங்கே இரண்டொரு வருஷங்கள் வசிப்பதும், பின்னர் அவ்வூரை விடுத்து வேறோர் ஊரிற் சென்று அங்கே சில வருஷகாலம் வசிப்பதும், மீண்டும் அதனை விடுத்து மற்றோர் ஊருக்குச் செல்வதும் யாளிதத்தருடைய வழக்கமாகும் உலகியல் அறிவையும்இயற்கை அற்புதங்களின் இரகசியங்களையும் முறையே பெறுதற்கும் அறிதற்கும் விழையும் நுண்மதியாளர்கள் ஒரே இடத்தில் என்றும் வசித்தற்கு ஒருப்படார். இங்ஙனம் யாளிதத்தர் தம் அருமை மனைவியாருடன் தேச சஞ்சாரம் செய்து கொண்டே சென்று ஊற்றுக்காடு என்னும் ஊரில் தங்கி வசித்து வந்தபோதுதான் அவருக்கு ஆதி வயிற்றில் உப்பை என்னும் பெண்மகவு பிறந்தது. அக்குழந்தையை யாளித்தத்தரும் அவர்மனைவியாரும் மிக்க அருமையுடன் சிலகாலம் வளர்த்துவந்தார்கள். இவர்கள் வசித்துவந்தஇல்லத்திற்கு அருகாமையிலுள்ள வண்ணான் ஒருவன் மகப்பேறின்றிப் பெரிதும் வருந்தியதைக் கண்ட பகவன் உப்பையை, அவன்மாட்டுத் தமக்கெழுந்த இரக்கமிகுதியால், அவனிடம் கொடுத்துவிட்டு மனைவியுடன் காவிரிப்பூம்பட்டினஞ் சென்று சிலகாலம் வதிவாராயினர். அங்கிருக்கும்போது உறுவை, ஔவை என்னும் வேறிரண்டு பெண்குழந்தைகள் ஆதிவயிற்றிற் பிறந்தன. அவைகளையும் மிக்க அன்புடன் வளர்த்துவந்தார்கள். மகப்பேறில்லாது வருந்திய வேறுசிலர் அவரைக் குறையிரந்து வேண்டவே, அம்மக்களையும் அவர்களிடம் விட்டுச்சென்றார். இவ்விஷயத்தை இன்னும் விரிப்பிற் பெருகுமாதலான், ஆசிரியருடைய சகோதரரான கபிலர் பிற்றைஞான்று தம்முடன் பிறந்தார்களை எல்லாம் தனித்தனியே சந்தித்து அவர்களோடு உரையாடி அறிந்துகொண்ட உண்மைகளை எல்லாம் தொகுத்துக் கூறிய,

"என்னுடன் பிறந்தவர் எத்தனை பேரெனில்
ஆண்பான் மூவர் பெண்பால் நால்வர்
யாம்வளர் திறஞ்சிறி தியம்புவல் கேண்மின்
ஊற்றுக் காடெனும் ஊர்தனிற் றங்கியே
வண்ணாரகத்தில் உப்பை வளர்ந்தனள் ;
காவிரிப்பூம் பட்டினத்திற் கள்விலைஞர் சேரியிற்
சான்றா ரகந்தனில் உறுவை வளர்ந்தனள் ;
நரப்புக் கருவியோர் நண்ணிடுஞ் சேரியிற்
பாணரகத்தில் ஔவை வளர்ந்தனள் ;
குறவர் கோமான் கொய்தினைப் புனஞ்சூழ்
வண்மலைச் சாரலில் வள்ளி வளர்ந்தனள் ;
தொண்டை மண்டலத்தில் வண்டமிழ் மயிலையில்
நீளாண்மை கொளும் வேளாண்மரபுயர்
துள்ளுவரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர் ;
அரும்பார் சோலைச் சுரும்பார் வஞ்சி
அதியமா னில்லிடை யதியமான் வளர்ந்தனன்
பாரூர் நீர்நாட் டாரூர் தன்னில்
அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்"

என்னும் வரலாற்று அகவல்கொண்டு உய்த்துணர்ந்து கொள்க.

நிற்க. பகவன் என்பவர் ஆதிக்குக் கருப்பந்தரித்தால், பிறக்கும் குழந்தைகளைப் பிறந்த இடத்தில் அப்போதே போட்டுவிட்டு வந்துவிட வேண்டுமென்று அவளிடம் உடன்படிக்கை செய்துகொண்டு பின்னரே அவளை மணம் புரிந்தாரென்றும், அவ்வுடன்படிக்கைப்படியே ஆதி, தான்பெற்ற பிள்ளைகளைப்பிறந்த இடத்திலேயே போட்டுவிட்டுப் பகவனுடன் சென்றார் என்றும், அக்குழந்தைகள் அச்சமயம் ஒவ்வொரு பாடல்பாடின என்றும், பிற்காலத்து நூல்கள் சில கூறுகின்றன. தவிர்த்தும், பகவனுக்குப் பிறந்த எழு குழந்தைகளும் பிறந்தவுடனே பாடியதாக "இட்டமுடனென்றலையில் இன்னபடி. என்றெழுதி விட்ட சிவனுஞ் செத்துவிட்டானே?" என்ற தொடகத்துச் சில பாடல்களும் அந்நூல்களில் காணப்படுகின்றன. சிறந்தவொழுக்கமும் முதிர்ந்த ஜீவகாருண்யமும் வாய்ந்த யாளிதத்த மகாமுனிவர் இத்தகைய உடன்படிக்கை ஒன்று தம் மனைவியிடம் செய்துகொண்டார் என்று நாம் கொள்வோமானால் "ஜீவகாருண்ணியம்சிறிதுமற்றவன் கண்மையுடையவர்" என்னும் பெருந்தோஷம் அவருக்கு எற்படுகிறது. ஆதி அவ்விதம் தான்பெற்ற குழந்தைகளை அநாதைகளாக விட்டுச்செல்ல ஒருபட்டிருப்பாளாயின் அவளை "அன்னை?" என்று சொல்லுவதற்கே நம் நா கூசுகின்றது. எப்படிப்பட்ட வன்னெஞ்சரும் தாம் ஈன்ற குழந்தைகளைப் பிறந்த இடத்திலேயே அநாதைகளாகப் போட்டுவிட்டுச் செல்ல மனந் துணியார்களன்றே? அங்ஙனமிருக்கும்போது, அறத்தின் வழிநின்றொழுகும் சிறந்த மகானாகிய பகவனும் அவருடைய மனைவியும் தாங்களீன்றகுழந்தைகளை அவ்வவ்விடங்களில் அவ்வப்போதே விடுத்துச்சென்றார்கள் என்று கூறுவது அசம்பாவிதமாயும் யுக்திக்கும் அனுபவத்திற்கும் இணங்காததாயும் இருத்தலோடு, அப்பெருந்தகையாளர் இருவர்பேரிலும் பெருந்தோஷாரோபணஞ் செய்தற்கு ஏதுவாயுமிருத்தலின், அந்நூல்கள் கூறுவன கொள்ளற்பாலன அல்லவென மறுக்க. அவைகளில் காணப்படும் பாடல்கள், ஔவை, உப்பை, முதலான எழுவர் பாடியதாகப் பிற்காலத்துப் புலவரால் எழுதிச் சேர்க்கப் பட்டவைகளாம் என்று அறிக. மற்று, பகவனும் ஆதியும் தாங்கள் ஈன்ற குழந்தைகளை மிக்க அன்புடன் வளர்த்து வந்தார்களென்றும், புத்திரப் பேறின்றிவருந்திய நன் மக்கள் சிலர் முனிவரிடம் தங்கள் குறையைத் தெரிவிக்க, அவர் அவர்கள் மாட்டெழுந்த இரக்கத்தாலும், ஊரூராய்ச் சுற்றித் திரியும் தங்களோடு தாங்கள் ஈன்ற சிறு குழந்தைகள்வருவார்களாயின், வெயிலாலும் மழையாலும் பனியாலும் வழி நடக்கும் சிரமத்தாலும் பெரிதும் துன்புறுவார்கள்என்னும் எண்ணத்தினால் அச்சிறுவர்கள் மாட்டெழுந்த பரிவாலும், அக்குழந்தைகளுக்குத் தாய்ப்பால் மறந்த பின்னர் அவர்களைத் தகுந்த நன் மக்களிடம் ஒப்புவித்துச்சென்றார் என்றும், அப்படிச்சென்ற போதிலும் அவர் தம் மனைவியுடன் அடிக்கடி அக்குழந்தைகளை வந்துபார்த்து அவர்கட்கு அறிவுறுத்தும் அவர்களோடு அளவளாவியும் வந்தார் என்றுங்கோடலே பொருத்தமுடைத்தாம்.



திருவள்ளுவர்

இனி, மேற்கூறப்பட்ட கபிலர் அகவால், திருவள்ளுவர் தொண்டைமண்டலத்திலுள்ள திருமயிலையில் (திருமயிலை என்பது சென்னை நகரை அடுத்திருக்கும் மயிலாப்பூர்தான்.) ஒரு பறையனால் வளர்க்கப்பட்டார் என்பது இனிது

புலப்படுகிறது. அதாவது பகவனும் ஆதியும் மயிலாப்பூரில் சிலகாலம் தங்கி வசிக்கலானார்கள். அங்கே இவர்கட்கு ஐந்தாவது குழந்தையாகத் திருவள்ளுவர் பிறந்தார். ஆதிக்குப் பிறந்த எழுமக்களுள் முதல் நான்குபேர் பெண்மக்கள் என்பதும், பிறகு பிறந்த மூவரும் ஆண்மக்கள் என்பதும், ஆண்மக்களுள் திருவள்ளுவரே மூத்தவர் என்பதும், கபிலர் மற்றை அறுவரைக் காட்டிலும் இளையோர் என்பதும் அவ்வகவலினாலே இனிது புலப்படுகின்றன. மயிலாப்பூரில் பிறந்த குழந்தையைப் பகவனும் ஆதியும் மிக்க அன்புடன் வளர்த்து வருங்கால் அவ்வூரிலிருந்த வேளாளன் ஒருவன் முனிவரிடம் மிகுந்த பற்றுடையவனாய் ஒழுகிவந்தான். அவனுக்கு மகப்பேறின்மையால், முனிவர் மயிலையை விட்டு நீங்கியபோது தம்முடைய குழந்தையை அவனிடம் கொடுத்து வளர்க்கும்படி ஆக்கியாபித்துச் சென்றார். அவனும் அக்குழவியை மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்று வளர்த்துவந்தான். ஆனாலும், அவனுடைய உறவினர் பலரும் "இவன் யாரோ இழிகுலத்தாள் பெற்றுப் போட்டுவிட்டுச் சென்ற குழந்தையை எடுத்து வளர்க்கின்றான். இவனை நம் ஜாதியிற் சேர்க்கலாகாது" என்று இழிவாய்ப்பேசி அவனை நிந்திக்கவே, அவர்களுடைய நிந்தனைக்குப் பெரிதும் அஞ்சினவனாய், அக்குழந்தையை விட்டுப் பிரியவும் மனமில்லாதவனாய்த் தன்னிடம் உழவுதொழில் செய்துகொண்டிருந்த ஒரு பறையினிடம் அக்குழந்தையைக் கொடுத்து "நீ இக்குழந்தையை ஜாக்கிரதையாக வளர்த்து வருதல் வேண்டும்; அதன் போஷிப்புக்கு ஏற்படும் செலவை நான் தருகின்றேன்" என்று கூறிக் கட்டளை யிட்டான். அப்பறையனும் அக்குழந்தையை மிகுந்த அன்புடன்வளர்த்து வந்தான். எனவே, திருவள்ளுவர் மயிலாப்பூரில் பிறந்தார் என்பதும், அங்கே ஒரு வேளான் மகனுடைய ஆதரவினால் ஒரு பறையனிடம் வளர்ந்து வந்தார் என்பதும் வலியுறுத்தப்பட்டன.

திருவள்ளுவருடைய சகோதரரான கபிலர் திருவள்ளுவர் பிறந்து வளர்ந்த இடம் திருமயிலை என்று தம்முடைய அகவலில் இனிது விளக்கியிருக்கவும், "மதுரையை இவர் பிறப்பிடமாகவும் மயிலாப்பூரை இவரது வாழ்விடமாகவும் கருதலாம்போலும்" என்று அபிப்பிராயப்பட்டு ஸ்ரீமான் மு. இராகவையங்கார் அவர்கள், ஸ்ரீமான் மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்களால் புதிதாக அச்சிடப்பெற்றுள்ள சிற்றுருவத் திருக்குறளில் சில கூறியிருக்கின்றார்கள். அவர்கள் வள்ளுவர் பிறந்த இடம் மதுரை என்பதற்குக் காட்டும் ஆதாரம்:

"உப்பக்க நோக்கி யுபகேசிதோண் மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநுபங்கி மறுவில் புலச் செந்நாப்
போதார் புனற் கூடற் கச்சு"

என்று திருவள்ளுவமாலையில் நல்கூர்வேள்வியார் பாடியுள்ள செய்யுளேயாம். "உத்தரமதுரைக்குக் கண்ணபிரான் எப்படி ஆதாரமோ அப்படியே தென்மதுரைக்குத் திருவள்ளுநர் ஆதாரம்" என்பது இப்பாட்டின் கருத்தாகும். கண்ணன் கீதையை அருளிச்செய்து உலகைவாழ்வித்ததுபோல் திருவள்ளுவர் திருக்குறளை அருளிச்செய்து தமிழ்நாட்டை வாழ்வித்தாராதலால், கண்ணனுக்கும் அவருக்கும் ஒப்புமை கூறி, அவர்வடமதுரைக்கு ஆதாரமானதுபோல் இவர் தென்மதுரைக்கு ஆதாரமானார் என்று நல்கூர் வேள்வியார் கூறினார். அது கொண்டு கண்ணன் வடமதுரையில் பிறந்ததுபோல் திருவள்ளுவர் தென்மதுரையில் பிறந்தார் என்று ஸ்ரீ ஐயங்காரவர்கள் முடிவுகட்டுதல் யாங்ஙனம் பொருந்துமோ? வடமதுரையில் பிறந்ததினால் கண்ணன் அத்திசைக்கு ஆதாரமாகவில்லை; மற்றுக் கீதையை அருளிச் செய்தமையினால் அத்திசைக்கு ஆதாரமாயினர். அதுபோலவே மதுரையில் பிறந்தார் திருவள்ளுவர் என்று சொல்லுவதினால் மதுரைக்குச் சிறப்பு ஏற்பட்டுவிடாது. ஆசிரியர் திருவள்ளுவனார் திருக்குறளை மதுரைக் கடைச்சங்கத்தில் அரங்கேற்றினமையானும், சங்கப் புலவர்களின் அகந்தையை அங்கே அடக்கினாராதலானும், சங்கப் புலவர் பலரிடமிருந்து தம் நூலைக்குறித்து நல்லபிப்பிராயம் பெற்றாராதலானும், மதுரை தமிழ்நாட்டிற்குச் சிரத்தானமாய் அக்காலத்தில் விளங்கியதாதலானும், "தென்மதுரைக்குத் திருவள்ளுவர் அச்சுப்போன்றவர்" என்னும் பொருள்படும்படி நல்கூர் வேள்வியார் அக்கவி இயற்றினாரே யன்றிப் பிறிதில்லை. திருவள்ளுவர் மதுரையில் பிறந்தார் என்பதை வலியுறுத்தற்



கான ஏது அவர்பாட்டில் சிறிதும் இல்லை, அங்ஙனம் ஒருகால் இருப்பதாகக் கொள்ளினும் அவருடைய உரையைவிட ஆசிரியரின் உடன் பிறந்த சகோதரரின்கூற்றே மிக வலியுடைத்து. ஆகவே ஆசிரியர் பிறந்த இடம் நம் ஐயங்காரவர்கள் கருதுகிறபடி மதுரை அன்றென்பதும், மயிலாப்பூரேயாம் என்பதும் ஈண்டு அறியற்பாலன.

## வள்ளுவர் என்னும் பெயர்

திருக்குறள் ஆசிரியரின் இயற்பெயர் யாதென விளங்கவில்லை. அவருக்கு "வள்ளுவர்" என்னும் பெயர் சாதிபற்றி வந்த காரணப்பெயராகும். பறையர்களுள் குறிசொல்லி ஜீவனம் செய்யும் ஒரு வகுப்பார் வள்ளுவர் எனப்படுவர். இவர்கள் பறையர்களுள் சிறந்தவர்களாகவும், அவர்கட்குக் குருக்களாகவும் கருதப்படுகின்றனர். வள்ளுவர் என்னும் பதமானது வள் என்னும் முதனிலையிற் பிறந்து தோல்வினைஞர் என்னும் பொருளைத் தருவதாகும். வள்பு என்பது தோலினலாயவாரைக் குறித்தல் "மாசற விசித்தவாருறுவள்பின்" என்னும் புறநானூற்றால் தெளியப்படும். ஆகவே, வாரினால் இறுகப் பிணிக்கப்பட்ட பறையைத் தட்டி ஊராருக்குச் செய்தி யறிவிக்கும் தொழிலினைச்செய்வோர் வள்ளுவர் எனப்படுவர். 'பறையர்' என்பது பறையறைவிக்குந் தொழில் பற்றி இவ்வள்ளுவர்களுக்கு ஏற்பட்ட காரணப் பெயராகும். திருமயிலையில் ஒரு வேளாளரின் கட்டளைப்படி அவரிடம் வேலைபார்த்த பறையன் ஆசிரியரை, அவர் குழந்தைப் பருவத்தினராயிருந்தபோது, வளர்த்துவந்தானாதலால், வள்ளுவக் குடியில் வளர்ந்து வந்தவர் ஆசிரியர் என்பது இனிது தோன்ற அவரை "வள்ளுவர்" என்று யாரும் அழைப்பாராயினர். ஆகவே, ஆசிரியர்க்கு வள்ளுவர் என்பது ஜாதிபற்றி வந்த காரணப் பெயரேயாம். இவ்வுண்மை இவ்விஷயத்தின் தலைப்பிலுள்ள மாமூலனார் திருவாக்காலும்,

"மெய்த்த திருவள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலந்
துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார் சோமேசா—வுய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப் பிறந்துங்
கற்றாரனைத்திலர்பாடு"

என்னும் ஆசிரியர் சிவஞானயோகிகள் திருவாக்காலும் வலியுறுத்தப்படுகின்றது.

## ஆசிரியர் விவாகம்

இங்ஙனம் ஆசிரியர் திருமயிலையில் வள்ளுவன் வீட்டில் வளர்ந்துவரவே இவரை "வள்ளுவப்பிள்ளை" என்று பலரும் அழைப்பாராயினர். ஆசிரியர்க்குப் பருவம் முதிர முதிர இயற்கை நுண்ணறிவும் விரிந்த நூலறிவும் அவருக்கு முதிர்ந்து அருந்தமிழ்ப் பெரும்புலவராய் அவர் திகழலானார். ஜீவகாருண்ணியம், பொறுமை, தயாளம், முதலான சிறந்தகுணங்கள் அவரிடம் அடைக்கலம் புகுந்தன. ஆசிரியருடைய கல்வித்திறத்தையும் குணத்தின் சிறப்பையும் கேள்வியுற்ற பலர் பல ஊர்களிலிருந்தும் மயிலாப்பூர்வந்து ஆசிரியரைத் தரிசித்து அவரிடம் அறவுபதேசம் கேட்கலானார்கள். ஆசிரியரும் அவர்கட்குக் கனிவுடன் அறவுபதேசம் செய்துகொண்டிருந்தார். நிற்க; காவிரிப்பாக்கம் என்னும் ஊரில் பிரபல மிராசுதாரராயும், பெருங் கொடையாளியாயுமிருந்த மார்க்கசகாயர் என்னும் வேளாளப் பிரபு ஒருவர் ஆயிரம் ஏர்வைத்துக்கொண்டு விவசாயஞ் செய்துவந்தார். அவருடைய நிலங்கள் நன்றாய் விளைந்த போதிலும், பயிர்கள் அறுவடை காலங்களில், எக்காரணத்தாலோ, கருகி அழிந்துபோய்க் கொண்டிருந்தன. அதனால் அவருக்குக் கவற்சி பெரிதாயிற்று. தம்முடைய பெருங்குறையை நிவர்த்திக்கக் கூடிய மகான் எங்கிருப்பர் எங்கிருப்பர் என்று மிகுந்த ஆவலுடன் மார்க்கசகாயர் விசாரித்துக் கொண்டிருக்கையில், சிலர் திருவள்ளுவரின் பிரதாபத்தையும் அவரிடம் சென்று பலர் தங்கள் மனக்குறையை நிவர்த்தி செய்து கொண்டு போதலையும் அவரிடம் தெரிவித்தார்கள். உடனே மார்க்கசகாயர் திருமயிலை சென்று ஆசிரியரின் திருவடிகளைப் பணிந்து தம்முடைய குறையை அவரிடம் தெரிவித்துக்கொண்டார். ஆசிரியர் திருவள்ளுவனார் அன்பின் சொரூபமுடைய வராதலால், அவ்வேளாண்மகனின் குறையை நிவர்த்திக்கும் பெருங்கருணை கொண்டவராய் மார்க்கசகாயருடன் தாம் நேரிலேயே காவிரிப்பாக்கம் சென்று அவருடையநிலங்களைத் தம் கடைக்கண்ணால் ஒருமுறை நோக்கி,

"வித்துமிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்"

என்னும் அருமைத் திருக்குறளைக் கட்டளையிட்டருளினார். ஆசிரியருடைய கடைக்கண்

நோக்கம் பட்டமாத்திரத்தில் மார்க்கசகாயருடைய நிலங்கள் உரம்பெற்று நன்றாய் விளைந்தன. சிலகாலம் ஆசிரியர் மார்க்கசகாயருடைய மாளிகையிலேயே தங்கியிருந்தார். ஆசிரியரது மகிமையை இனிதுணர்ந்த மார்க்கசகாயர் ஒருநாள் ஆசிரியரை நோக்கி "என்னை வாழ்வித்த குருவே! என் குறையை நிவர்த்திப்பவர்களுக்கு என்னுடைய ஏகபுத்திரியாகிய வாசுகி என்பாளை மணஞ்செய்து கொடுக்கிறதென்று நான் ஒரு பிரதிக்ஞை செய்துகொண்டிருக்கிறேன். இதனைத் தங்கள் சமுகத்தில் தெரிவித்துக் கொண்டேன்" என்று மிகுந்த பணிவுடனும் அச்சத்துடனும் கூறினார். ஏனெனில், ஆசிரியர் ஐம்புலன்களையும் வென்று மிகத் தூய்மையான துறவறநெறியில் நின்றொழுகுபவராதலால், அவரிடம் இவ்விஷயத்தை வெளியிட அவர் பெரிதும் அஞ்சினார். ஆசிரியர் பெருந்தவமியற்றும் மகாயோகியாயிருந்தாரேனும், மார்க்கசகாயருடைய வேண்டுகோளை மறுத்தல் கூடாதெனத் தமக்கெழுந்த பரிவாலும், உலகத்தாருக்கு இல்லறத்தின் சிறப்பைத் தாமே நடத்திக் காட்டவேண்டுமென்று மக்களிடத்து அவருக்குண்டான பெருங்கருணையாலும் அவர் ஒருவாறு மார்க்கசகாயருடைய வேண்டுகோளுக்கு இசைந்து "ஐயா, உம்முடைய புத்திரி நான் கொடுக்கும் இருப்புக் கடலையை நன்றாய் வேகவைத்துக் கொடுப்பாளானால், அவளை நான் மணம்புரிந்து கொள்கின்றேன்" என்று மொழிந்திட்டார். மார்க்கசகாயர் அதற்கு இணங்கி ஆசிரியர் கொடுத்த இருப்புக் கடலைகளை தன் மகளிடம் கொடுத்து ஆசிரியர் கருத்தையும் அவளிடம் தெரிவிக்கவே, அப்பெண்மணி அக்கடலைகளை நன்றாய் அவைத்து பாகம் செய்து ஆசிரியருக்குப் படைத்திட்டாள். ஆசிரியர் பின்னர் வாசுகியை மணஞ் செய்துகொண்டார். இனி, "நாயனார் அப்பெண்ணைச் சோதனை செய்வதற்காக இருப்புக் கடலையைக் கொடுத்து அவைக்கச் சொன்னார்; ஆனாலும் இருப்புக் கடலையை வேகவைத்தல் முடியாது என்பதை அவர் நன்கறிவர்" என்று சிலர் கூறுவார்கள். அவர் கூற்று ஒருசிறிதும் பொருந்தாது. ஏனெனில், அக்கடலையை அவைக்க முடியாதென்று தமக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும், முடியாத ஒரு செயலைச் செய்து முடிக்கும்படி அவர் அப்பெண்ணுக்குக் கட்டளையிட்டாராயின் "நடுநிலை திறம்பிய வஞ்சக நெஞ்சினர்" என்னும் பெருந்தோஷம் அவருக்கு ஏற்படும். தவிரவும், "பொய்யர்" என்னும் நிந்தனை மொழிக்கும் உள்ளாவர்.

"தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

என்னும் உபதேசத்தையும், இன்னும் "பொய்யாமை" யைப்பற்றிய சிறப்பையும் உலகத்தாருக்கு அருளிச்செய்த ஆசிரியர், தாம் பொய் புகன்றார் என்றல் பெரிதும் அசம்பாவிதமாம்,— ஏதமுமாம். இருப்புக் கடலையை அவைக்க முடியும் என்பதை ஆசிரியர் நன்குணர்ந்தே அங்ஙனம் கட்டளையிட்டார். அப்பெண் கணவனிடம் விசுவாசமுடையவள்தானா என்பதை மாத்திரம் அவர் அறிந்துகொள்ள விரும்பினார். அவளுடைய செயல் அவள் விசுவாசமுடையவள் என்பதை இனிது விளக்கிற்று. விசுவாசத்தாலும், நம்பிக்கையாலும் ஆகாத காரியம் ஒன்றுமே இல்லையன்றே? பின்னர் ஆசிரியர் வாசுகியோடு இல்லறம் நடத்துவாராயினர்.

## ஆசிரியர் தொழில்

இல்லறத்திற் புகுந்த பின்னர் பிறருடைய ஆதரவில் இருப்பதற்கு ஆசிரியர் சிறிதும் சம்மதியாராய், பாவமில்லாத தொழிலாகிய நெய்தற்றொழிலை மேற்கொண்டு சீரை நெய்துவிற்று அதனால் வரும் சிறு லாபத்தைக் கொண்டு "விருந்தோம்பல்" முதலிய சிறந்த செயல்களோடு இல்லறத்தை இனிது நடத்திவந்தார். ஒழிந்த நேரங்களில் இவர் தம்மிடம் கல்வி பயில வரும் மாணவர்கட்குப் போதித்தும் வந்தார். இவர் மனைவியின் சிறப்பையும், அவளுடைய கற்பையும், இல்லறத்தின் மேன்மையையும் விளக்கும்படியான கர்ணபரம்பரைக் கதைகள் சில இன்றும் வழங்கப்பட்டு வருகின்றன. அவைகளைச் சில தமிழ் நூல்களிலும் காணலாம். விரிவஞ்சி அவற்றை இங்கே கூறாது விடுத்தாம். இவருடைய அருமை மனைவியார் காலஞ்சென்ற போது,

"அடிசிற்கினியாளே அன்புடை யாளேப்
படிசொற் பழிநாணு வாளே அடிவருடிப்
பின்றூங்கி முன்னுணரும் பேதையை யான் பிரிந்தால்
என்றூங்கு மென்கணெனக்கு"

என்று கூறி ஆசிரியர் வருந்தியது இவரும் இவருடைய மனைவியாரும் ஒருவர்மாட்டொருவர் எவ்வளவு அன்புடையாயிருந்தார்கள் என்பதை இனிது புலப்படுத்துகிறது.



## ஏலேலசிங்கன்

ஏலேலசிங்கன் என்னும் பெயருடைய ஒரு நூல்வியாபாரியிடம் ஆசிரியர் தமக்கு வேண்டிய நூல்களை வாங்கிவருவது வழக்கமாகும். ஒருநாள் நூல்வாங்குதற்காக ஆசிரியர், அவர் வீட்டுக்குச் சென்று அவர் எங்கே என்று விசாரித்தபோது "அவர் பூஜையிலிருக்கின்றார்; இறைவனை வழிபடுகின்றார்" என்று அவ்வீட்டிலிருந்த ஸ்திரீகள் சொன்னார்கள். "இல்லை; அவர் கணக்கு வரவு செலவு பார்க்கின்றார்" என்று ஆசிரியர் சொன்னார். பிறகு இதனை அறிந்த ஏலேலசிங்கன் ஆசிரியரின் பெருமையை அறிந்து அவருக்குச் சீடனானான். ஆசிரியர் அவனை அழைத்துக் கொண்டுபோய் ஒரு மரத்தின் மீதேறச்சொல்லி உயர்ந்த ஒரு கிளையைப் பிடித்துக்கொண்டு தொங்கச்சொன்னார். அவன் அவ்விதமே செய்தான். "உன்னுடைய இரண்டு கைகளையும் விட்டுவிடு" என்று ஆசிரியர் கட்டளையிட்டார். அவன் அங்ஙனமே கைகளை விட்டுவிட்டான். ஆனால் யாதொரு அபாயமுமின்றி அப்படியே அந்தரத்தில் நின்றான். அவன் பக்குவம் முதிர்ந்தவனென்பதை இனிதறிந்துகொண்ட ஆசிரியர் பிறகு அவனுக்கு அறவுபதேசம் செய்துவந்தார். அதுமுதல் அவன் ஆசிரியரின் பிரதமசிஷ்யனாக விளங்கினான்.

## ஆசிரியர் மதம்

திருவள்ளுவருடைய கொள்கைகளும் போதனைகளும் எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுவியல்புடையவைகளாக இருத்தலின், அவரை ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் மதத்தைச் சேர்ந்தவராகக் கூறுவர்.

"சமயக் கணக்கர் மதிவழிகூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன்"

என்று கல்லாடத்தில் கூறப்படுவதுகொண்டும், இவ்வுண்மை அறியப்படும். ஆனாலும், உலகிற்கு ஒரு முதல்வன் உண்டு, கடவுளினும் வேறாய் ஆன்மாக்களுண்டு, நல்வினை தீவினை உண்டு, முற்பிறவி பிற்பிறவி உண்டு என்பவை போன்ற கொள்கைகள் ஆசிரியர்க்கு உடன்பாடென்பது அவருடைய திருக்குறட் பாக்களைக் கொண்டு அறியக்கிடத்தில், ஆசிரியர் வைதிக வழியை அனுசரித்த அஸ்திகசமயத்தினர் என்பது இனிது புலப்படுகிறது.

## ஆசிரியர் காலம்

கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட 95-ஆம் ஆண்டில் ஆசிரியர் பிறந்திருக்க வேண்டுமென்றும், கி-மு. 20-ஆம் ஆண்டில் அவர் திருக்குறளைக் கடைச் சங்கத்தில் அரங்கேற்றியிருக்கவேண்டுமென்றும், திருக்குறள் அரங்கேறிய பின்னர் அவர் பத்துவருஷம் உயிர்வாழ்ந்திருத்தல் கூடுமெனக் கொள்வது இழுக்காகாதென்றும், ஆகவே ஆசிரியர் 85 வருஷம் உயிர் வாழ்ந்திருத்தல் கூடுமெனக் கோடல் சரித மரபுக்கு இயைந்ததே என்றும் அறியதோர் ஆராய்ச்சி செய்து, சரித்திரமுறைக்குப் பிறழாத பல பிரபல நியாயங்களை விரிவாக எடுத்துக் காட்டி ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் முடிவு செய்திருக்கின்றார்கள். அவ்வாராய்ச்சியின் விரிவை அவர்களுடைய "ஞானசாகர"ப் பத்திரிகையிற் கண்டுகொள்க. எனவே, கிறிஸ்து பிறப்பதற்கு முன் முதல் நூற்றாண்டில் அதாவது இற்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் வருடங்கட்கு முன் திருவள்ளுவர் இருந்தார் என்பது பெறப்பட்டது.

## ஆசிரியர் தேகவியோகம்

ஆசிரியர் இறந்தபோது அவருடைய பிரதம சிஷ்யரான ஏலேலசிங்கன் பெரிதும் துயருற்று வருந்தினான். அவன் அவருடைய ஞாபகார்த்தமாக அவரைப்போல் உருவச்சிலை ஒன்று செய்வித்து அதனை மயிலாப்பூரில் ஸ்தாபித்தான். அவனால் ஸ்தாபிக்கப்பெற்ற ஆசிரியரின் திருவுருவ விக்கிரகமே இன்றும் மயிலாப்பூரில் எல்லோராலும் உபாசிக்கப் படுகிறதென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். அவ்வபிப்பிராயம் உண்மையாயிருப்பினும் இருக்கலாம்.

நாகை- ஸி. கோபாலகிருஷ்ணன்.

---

உபாத்தியாயர்களுக்குப் போதனா முறைப் பாடசாலை:—சென்னை கவர்ன்மெண்டார், டைரக்டர் செய்த சிபார்சை அங்கீகரித்து, சென்னையில் மார்ச் மாதம் முதற்கொண்டு 2 வருஷத்திற்கு உபாத்தியாயர்களுக்குப் போதனா முறைப் பாடசாலையொன்று ஸ்தாபிக்க உத்தரவு செய்திருக்கிறார்கள்.

# தேகதத்துவ சாஸ்திரம்

## PHYSIOLOGY & THE LAWS OF HEALTH

### ஸந்திகளும் ஸந்திபந்தங்களும்

நம்முடைய சரீரத்தில் நாம் செய்யக்கூடிய பலவித சலனவிதங்களை யாராய்வோம். கழுத்தை முக்கியமாய் முன்புறமும் பின்புறமுமாகவும் பக்கங்களிலும் அசைப்பதற்கும் சாய்ப்பதற்கும் முடியும். நம்முடைய புஜங்களை எந்த திக்கில் வேண்டுமென்றாலும் திருப்பவும் சக்கிராகாரமாக சுழட்டவும் ஸாத்தியமாகிறது. புஜங்களின் மேற்புறம் நிற்க, கீழ்புறம் அதாவது முழங்கையைத் தூக்கவும் தணிக்கவும் ஸாத்தியப்படுகிறது. மணிக்கட்டை ஸ்வல்பதூரம் வரை சக்கிராகாரமாய் சுழட்டுவதற்கு ஏற்ற ஏற்பாடுகளிருக்கின்றன. அப்படியே விரல்களையும் வளைக்கவும், குவிக்கவும் முஷ்டியாகப் பிடிக்கவும் நம்மால் கூடும். ஆனால் விரல்கள் முற்புறம் வளையக்கூடியனவா யிருக்கின்றனவே யன்றிப் பின்புறம் வளையக்கூடியனவல்ல. இப்படி ஒவ்வொன்றும், ஒவ்வொரு விதமாயிருக்கிற பலவித சலனங்கள் இயையுமாறு, வெவ்வேறு விதமான ஏற்பாடுகளிருக்க வேண்டுமென்பது கிடைக்கப் பெற்றது. அவ்வித ஏற்பாடுகள் இன்னின்னவை யென்று ஆராய்வதுதான் இவ்வத்தியாயத்தின் காரியம்.

எலும்புகள் ஒன்றோடொன்று எங்குப் பொருதப்பட்டிருந்தாலும், அதற்கு ஒரு ஸந்தி யென்று பெயரிடுவோம். இவ்வித ஸந்திகள் கொஞ்சங்கூட சலனத்திற்கே ஹேதுவில்லாதிருக்கும்படி பொருதப்பட்டிருப்பினு மிருக்கலாம். அல்லது ஸ்வல்ப சலனங்களுக்கு மட்டும் இடங் கொடுக்கும்படி அமைக்கப்பட்டிருக்கலாம். அல்லது பூரணமாக நாலாதிக்குகளிலும் அசையும்படி ஏற்பட்டிருந்தாலு மிருக்கலாம்.

உதாரணமாக மண்டை எலும்புகள் ஒன்றோடொன்று பொருதியிருப்பதையும், மேற்கையெலும்பும் முழங்கை யெலும்பும் பொருதப்பட்டிருக்கும் மாதிரியையும், மேற்கை எலும்பும் தோள் எலும்பும் பொருதப் பட்டிருக்கும் விதத்தையும் கவனிப்போம். முதல் ஸந்தியில் சலனமே கிடையாது. இதையுண்மையில் ஒரு ஸந்தி என்று வியவகரிப்பதுமில்லை. அடுத்த ஸந்தியில் ஒருபுறந்தான் சலனமிருக்கிறது. கடைசி ஸந்தியில் நாலாபக்கங்களிலும் சலனமிருப்பது நமக்கு நன்றாய்த் தெரிகிறது.

ஆதலால் நாம் ஸந்திகளின் பேதங்களை அறியவேண்டும். ஸந்திகள் முக்கியமாய் மூன்றுவகுப்பினவாயிருக்கின்றன. அவைகளாவன (1) கீல் ஸந்திகள் (2) குடுமிக் கதவு ஸந்திகள் (3) அச்சு ஸந்திகள்.

இவைகளில் கீல் ஸந்திகளைப்பற்றிப் பேசுவோம். நீங்கள் ஒவ்வொருவரும் சாதாரணமாகப் பெட்டிகளிலும், கதவுகளிலும் தைக்கப்பட்டிருக்கிற கீல்களை பார்த்திருப்பீர்கள். அந்தக்கீல்கள் ஒரு புறந்தான் சலனங் கொடுக்கக் கூடியவைகள். இதில் முன்புறமும் பின்புறமாக இரண்டு சலனங்கள் அடங்கும். இவ்விதமமைக்கப்பட்ட ஸந்திகள்தாம் நம்முடைய சரீரத்தில் விசேஷமானவை. முழங்கைகள், முழங்கால்கள், மணிபந்தங்கள், கணுக்கால்கள், விரல்கள், முதலிய அங்கங்களிலுள்ளவைக ளெல்லாம் இவ்வித ஸந்திகளே.

ஆனால் மற்ற விரல்களிலுள்ள ஸந்திகளையும் கட்டை விரல்களிலுள்ள ஸந்திகளையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானால் ஒருவித்தியாஸம்தென்படும். அதாவது கைக்கட்டைவிரல்மட்டும், விரல்கள் அசையக்கூடிய திசைக்குஎதிர்த்திசையிலும் அசையக்கூடும். அவ்விதம் அசையும் திசைக்குக்குறுக்காகவும் அசையக்கூடும். இப்படி இவை அசையும் ஒவ்வொருபக்கமும் கீல்கள் (இரண்டு கீல்கள்-ஒன்றற்கொன்று குறுக்காக வைக்கப் பட்டவை) இன் சலனம்போலவேதா மிருக்கின்றன. ஆகையா லிவ்வித ஸந்திகளுக்கு இரட்டைக்கீல் ஸந்திகள் என்று பெயர்.

குடுமிக்கதவு ஸந்திகள்-இவ்வித ஸந்திகளில் ஸந்தியில் ஒன்று சேரும் இரண்டு எலும்புகளில் ஒன்று, சேரும் நுனியில் உருண்டையாகவிருக்கும்; மற்றொரு எலும்பின் நுனி ஒரு சிறு கிண்ணம்போல் அமைந்திருப்பதில்லை உருண்டையானது அந்தக் கிண்ணத்திற்குள் கணக்காகப் பொருதும்படி, அமைக்கப்பட்டிருக்கிறது. ஸாமானியமான ஸ்திதியில் இந்த உருண்டை, அக்கிண்ணத்தை விட்டு வெளியே விழாதிருக்கும்படியாக விருக்கிறது. இவ்வித மேற்படும் ஸந்திகளுக்கு, கர்ணடகத்தில்ஏற்பட்டிருக்கும் குடுமிக் கதவுகள் போல்



அநேகமாய் அமைப் பிருப்பதால், குடுமிக் கதவுஸந்திகள்,எனபெயரிடலாயிற்று. இவ்விதமான ஸந்தியினால், பொருதப்பட்ட எலும்புகள் சக்கிராகாரமாக எந்தத்திசையிலும் சுற்றும்படியாக விருக்கின்றன.

மேற்கையின் எலும்பு, தோள் (Blade) எலும்போடும் தொடை எலும்பு இடுப்பெலும்போடும் இவ்வித ஸந்திகளால்தான் இணைக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் அவ்விரண்டு ஸந்திகளுக்குள்ளும் ஓர் வித்தியாஸ மிருக்கிறது. அதாவது நாம் கைகளை எவ்வளவு விஸ்தாரமாய் அசைக்கவோ அல்லது சுற்றவோகூடுமோ அவ்வளவு தூரம் கால்களை அசைக்கவும் சுற்றவும் முடியாது. ஆயினும் இரண்டும் குடுமிக் கதவு ஸந்திகள்தாம். அதேனெனில் கைஸந்தியிலுள்ள கிண்ணம் ஆழமில்லாததாகவும் எலும்பின் உருண்டை மேலாகவும் வைக்கப் பட்டிருக்கிறது தொடை ஸந்தியிலோ, கிண்ணம் வெகுஆழமாகவும், அதற்குள் தொடை எலும்பின் உருண்டை ஆழத்திலுமாக இணைக்கப் பட்டிருக்கிறது.

ஏந்திர அச்சுஸந்திகள்:—அதாவது இவ்வித ஸந்திகளில், ஒன்றோடொன்று சேரும் இரண்டு எலும்புகளுக்குள் ஒன்றின் மத்தியிலிருந்து ஒரு ஆணிபோல் எலும்பின் பாகம் நீட்டிக் கொண்டிருக்கும். மற்றொரு எலும்பிலோ அந்த ஆணிபோன்ற பாகத்தில் வந்து உட்காரும்படி ஒரு பள்ளமாவது அல்லது ஒருதுவாரமாவது காணப்படும். இவ்வித ஸந்திகளை நாம் நம்முடைய வீடுகளில் அரைப்பதற்கு உபயோகப்படுத்துகிற ஏந்திரத்தின் மேல்மூடி கீழ் மூடிகள் பொருதப்பட்டிருப்பதற்கு உபமானமாகச் சொல்லலாம். கீழ்மூடியிலிருந்து ஒரு அச்சு ஒன்று அடிக்கப்பட்டு வெளியே நீட்டிக்கொண்டு இருக்கிறது. மேல் மூடியிலுள்ள ஒரு துவாரம் அந்த அச்சின்பேரில்வந்து உட்காருகிறது. ஏந்திரம்சுற்றும்பொழுது, இந்த அச்சுத்தான் மேல் மூடி தன்னிடம் விட்டுப் பெயரா திருக்கும்படி செய்கிறது ஆகையால்தா னிவைகளுக்கு ஏந்திர அச்சு ஸந்திகள் என்று பெயரிடலாயிற்று.

இப்படி நம்முடைய சரீரத்தில் ஏற்பட்டிருக்கும் நிரம்பப்பெரிதான ஏந்திரஅச்சு ஸந்தி, நம்முடைய கழுத்தின் பிரதேசத்திலுள்ள வர்டிப்ராக்களில்தான் இருக்கிறது. நம்முடைய சிரஸானது எல்லாவற்றிற்கும் மேலே யிருக்கும் வர்டிப்ராவில் பொருதப்பட்டிருக்கிறது. ஆதலால் இந்த வர்டிப்ரா இடத்தைவிட்டு நகருமானால், சிரஸும் அத்துடன் நகரும். இந்த வர்டிப்ரா மத்தியில், ஒரு துவாரமிருக்கிறது. அந்த துவாரத்தால், அதற்குக் கீழிருக்கும் வர்டிப்ராவினின்றும் வெளி நீட்டிக்கொண்டிருக்கிற ஆணிபோன்ற எலும்பில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் இந்த மேல் வர்டிப்ரா அதற்கு கீழிருக்கும் வர்டிப்ராவின் மேல் சுற்றக்கூடும். அப்படிச் சுற்றினால் அத்துடன் தலையும் சுற்றும்.

ஆனால் இவ்வித ஸந்திகள், இணைக்கப்பட்ட எலும்புக்கும் முழுவதும் சுற்றிவர இடங்கொடுக்க வேண்டுமே. அப்படி நம்முடைய தலையை நான்கு புறத்திலும் சுற்ற முடியாதே. அதாவது உதாரணமாக சாதாரணமாய் நம் முகம் அமைக்கப்பட்டிருக்கும் திசைக்கு எதிர்த்திசையிலிருப்பதை சரீரம் முழுவதையும் திருப்பாமல் பார்க்க முடியாதே. இதெப்படி செய்யப்பட்டிருக்கிறதென்று நீங்கள் வினவலாம். அப்படி அந்த ஸந்தி ஒன்று மட்டுமிருந்தால் சிரசானது தாராளமாய் சக்கிராகாரமாய்ச் சுற்றக்கூடும். ஆனால் அவைகளைச் சுற்றி மாம்சங்களும், நரம்புகளும், தோல்களும், அமைக்கப்பட்டிருக்கின்றனவல்லவா? அவைகளை யெல்லாம் நாசப்படுத்தி சிலவற்றை அறுத்தும், சிலவற்றைக் கிழித்தும், இப்படி அலங்கோலமாகச் செய்து பிராணஹானியையுண்டாக்கிவிடும். கழுத்தைத் திருகுவது என்று கேழ்விப்பட்டிருப்பீர்களே. இவ்விதமான ஸந்திபந்தங்கள் ஏற்படாவிடில் கழுத்தைத் திருகுவது அவ்வளவு கஷ்டமாயிராது.

ஆனா லிப்படி இந்த ஸந்தி பந்தங்கள் ஒன்றோடொன்று சேர்ந்து, உறைந்து, தேய்ந்து போகுமானால் பிறகு அவைகள் சரியாக தம்வேலையைச் செய்ய முடியாமல் போய் விடுமல்லவா? அதிகப்பழக்கத்தினால் கீல்கள் தேய்ந்து கடகடத்துப்போகும் பட்சத்தில், அவைகள் விறைப்பாய் நிற்பதற்குக் கூடாமல் போகின்றனவல்லவா? அவ்விதம் நம்முடைய சரீரத்திலுள்ள ஸந்திபந்தங்கள் கெட்டுப்போகாமலிருப்பதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றனவென்று பார்ப்போம்.

தையல் மெஷீன், ஸ்டீம் என்ஜின் முதலியவைகள் வேலை செய்யும்பொழுது கவனித்துப் பார்ப்போமானால் ஒன்றோடொன்று அடிக்கடி உரையும்படியான பாகங்களுக்கு எண்ணெயிட்டு இருப்பதைப் பார்க்கலாம். அவ்விதம் எண்ணெயிடுதல், அவைகள் ஒன்றின் மேலொன்று உரைந்து தேயாமல், வேலை செய்யும் பாகங்களுக்கு அழிவில்லாமற் காக்கவேண்டிய தற்காகவே. மேலும் ஒன்றோடொன்று உரைகின்ற பாகங்கள் எஃகினால் செய்யப்பட்ட வெகு மழமழப்பான மேற்பரப்பையுடையவைகளாயிருக்கின்றன. உருக்கினால் செய்யப்படும் நோக்கம் அவைகள் சீக்கிரம் தேயாமலிருக்கும்படி காப்பாற்றவேண்டுமென்பதே.

நாம் ஏதாவதொரு ஸந்திபந்தத்தில் வந்து சேருகின்ற இரண்டு எலும்புகளையுற்று நோக்குவோமானால் பொருதப்பட்டிருக்கும் பாகங்களின் மேற்பாகங்கள், ஓர்வித, வெகு மழமழப்பானதும், பளபளப்பானதுமான கிரிஸில் என்ற ஓர்வகை வஸ்துவால் பூசப்பட்டிருக்கிறது. ஒரு கத்தியை யெடுத்து, எலும்புகளின் மேற்புறத்திற் சுறண்டுவோமானால், சுத்ததாவள்யமான பொடிகள் உதிருவதை நாம் பார்க்கலாம். அதுதான் Gristle என்ற பதார்த்தம். இந்தப்பொடி உதிர்ந்து விடுமானால் அதன் கீழிருக்கும் நிஜமான எலும்பு, பழுப்பு வர்ணமாக விருப்பதைக் காணலாம். மற்றப்படி உரைந்து சீக்கிரத்தில் தேயாதிருக்க வேண்டியதற்காகவே, அந்த எலும்புகளின் ஓரங்கள் வெகு உறுதியாக செய்யப்பட்டிருக்கின்றன வென்பது, அந்தப் பாகங்களை நம்முடைய கைகளால் பரிக்ஷித்துப் பார்த்தால் நன்றாய் விளங்கும்.

இதையுந்தவிர ஒவ்வொரு சந்திபந்தத்திலும் ஒவ்வொரு சிறுபை மூடிக்கொண்டிருக்கிறது. இந்தப்பை மிருதுவான ஒருவித தோலால் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு (synovial sac) என்று இங்கிலீஷ்க்காரர் பெயரிட்டிருக்கிறார்கள். இப்பைகளுக்கு ஒருவித சக்தியுண்டு. அதாவது எண்ணெய் போலவே மழமழப்பானதும் ஆதலால் கோழி முட்டையின் கருவைப் போலிருப்பதுமான ஓர் வித திரவத்தைத் தம்மினுள்ளே யுண்டு பண்ணி, அந்த ஸந்திபந்தத்தை எப்பொழுதும் தைலப் பசையாகவே வைத்துக்கொள்ளும் சக்தியுடையதாயிருக்கின்றது; இந்த திரவத்திற்கு (synovia) என்று பெயர். மற்ற மெஷின்கள் கெட்டுப் போகாமலும், துருவேறி, அழியாமலிருக்கவும் எண்ணெயுபயோகப்படுவதுபோல் இந்த (synovia) என்ற திரவம் உபயோகப்படுகிறதென்று நாம் சொல்லாமலே விளங்கும். இந்த ஸினோவியப் பைகள் அவ்வக் காலங்களுக்கு வேண்டிய (synovia) எண்ணெயை, சேகரம் பண்ணி வைத்துக் கொண்டு, அந்தந்த சந்திகளுக்கு வேண்டியவளவு அவ்வக்காலங்களிற்கொடுத்து வருகிறது.

இவ்விதமான தைலங்கள் சில சமயங்களில் வேண்டியவளவு ஸந்திபந்தங்களில் உண்டாகாமலாவது அல்லது (synovia) பைகளிலிருந்து அவைகளில் வந்து சேராமலாவது போய் விடலாம். அப்படிப்பட்ட ஸமயங்களில் அவ்விடங்களில் பொருதப்பட்ட எலும்புகள் ஒன்றன் மேலொன்றாக அசையுங்காலங்களில் திரவமில்லாததால் ஒருவித 'சொடக்கு' என்ற சப்தம் கேட்கும். நாம் கைவிரல்களை சொடக்கிக்கொள்ளுகிறோமல்லவா? அப்படிச் சொடக்கிக்கொண்டவுடனே இப்பைகளிலிருந்து திரவம் ஓடி ஸந்திகளில் பரவுகிறது. அதனால் அவைகளையுடனே சொடக்கினால், மறுபடி சொடக்குச் சப்தம் கேட்பதில்லை.

இவ்விதமாக சேர்க்கப்பட்டிருக்கிற சந்திபந்தங்கள் இன்னப் பதமாக விருக்கவும், ஒன்றைவிட்டொன்று பிரிந்து போகாமலிருக்க வேண்டியதின் பொருட்டும் மேலே நாம்சொல்லியுள்ள (Gristle) என்ற பதார்த்தத்தாலாகிய நாடாக்கள் கொண்டு இந்த ஸந்திபந்தங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இந்த நாடாக்கள் வெகு கெட்டியாகவிருக்கின்றன. இவைகளுக்கு ஸந்தி பந்தனங்கள் என்றுபெயரிடலாம்.

---

**மிஸ்டர் ரபீந்த்ரநாத் தாகூரின் நன்கொடை:—** மிஸ்டர் ரபீந்த்ர நாத் தாகூர் தமக்குக் கிடைத்த நோபெல் வெகுமதியை, போல்பூர் ஸ்கூலுக்குவினியோகஞ் செய்துவிடுவதாகத் தீர்மானித்திருக்கிறார். போல்பூர் ஸ்கூல் 12 வருஷங்களுக்குமுந்தி மிஸ்டர் ரபீந்த்ர நாத் தாகூரால் ஸ்தாபிக்கப்பட்டது போல்பூரிலுள்ள குழந்தைகளுக்குச் சகல விதத்திலும் சௌகரியமாயிருந்து, ஸ்கூலுக்குப்போவதில் அவர்களுக்குப் பிரியத்தை யுண்டுபண்ணி, அவர்களை படிப்பில் முன்னுக்குக் கொண்டு வருவதற்காகவே அவர் அந்த ஸ்கூலை ஸ்தாபித்திருக்கிறார்.



162048

# ஆலய வழிபாடு

## TEMPLE WORSHIP

பூலோகத்திற்கு ஓர் திலகமாக விளங்கிக்கொண்டு ஆர்யாவர்த்தம் என்றும், இந்தியா என்றும் பேர்பெற்ற புண்ய பூமியில் ஜனித்து ஆர்ய வம்சத்தாரென்ற பெருமையை நாம் எல்லோரும் அடைந்திருந்தும், நமது தேசத்தில் நமக்குக்கிடைத்த பிறப்புக்கு முக்ய ப்ரயோஜனம் என்ன என்று தெரிந்துகொள்ளாமலிருப்பது வியக்கத்தக்கதாக இருக்கிறது. மேற்கு தேசங்களிலிருந்து நவீன நாகரீகம் நம்முடைய தேசத்தில் குடியேறினபோதிலும், அதிலிருந்து உயர்ந்ததானவும் நம்முடைய நாகரீகத்திற்கு அனுகுணமானதுமான அம்சங்களை மட்டும் நாம் எடுத்துக்கொள்ளவேணுமே ஒழிய, செல்வச்செருக்காலும் ராஜாங்க நாகரீகத்தைக் கைக்கொள்வதில் பரபரப்பாலும் நம்முடைய ஒப்பற்ற நாகரீகத்தின் அம்சங்களை கைவிட்டு விடுவது, அரசனை நம்பி புருஷனைக்கைவிடுவது போலொழிய வேறில்லை. நம்போன்ற ஆர்யர்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ள முக்யமான வித்யாஸம் என்னவென்றால், நாம் மற்றவர்களைப்போல் உலகவாழ்க்கையில் சிரமப்பட்டு நம்மையும் நம்முடைய நாகரீகத்தையும் முன்னுக்குக்கொண்டு வருவதுடன், நம்முடைய முயற்சிகளையெல்லாம் பரமபுருஷார்த்தத்தைக் கருதிக்கொண்டே செய்வது தான் என்பதில் ஐயமே இல்லை. ஈசுவரனுடைய கருணைவிலாஸம் நம்முடைய சங்கத்தார் இடத்தில் சம்பூர்ணமாக இருப்பதும், நம்முடைய முயற்சிகளுக்கு இறைவனுடைய அடிமலர்களைச் சேருவதே முக்யபலம் என்பதும் ஒரு விஷயத்தை கவனித்தால் புலப்படும். வடமொழியை பரிசோதித்தாலும், அழகும் இனிமையும் நிறைந்தநம்முடைய தமிழைக்கவனித்தாலும், வேறு நம்முடைய தேசத்தில் வழங்கிவரும் எந்த பாஷையை ஆலோசித்துப்பார்த்தாலும் பகவத் விஷயமான புத்தகங்கள் அவைகளில் நிறைந்து எப்படி விளங்குகின்றனவோ அப்படி வேறெப் பாஷைகளிலும் இல்லை. மற்ற பாஷைகள் லௌகிக சாஸ்திரங்களில் எப்படிதேர்ச்சி பெற்றிருக்கின்றனவோ, அவ்வளவு தேர்ச்சி நம்முடைய பாஷைகள் அடையாமல் இருக்கலாம். ஆனால் உலகத்தின் இறைவன் ஸ்வரூபமும் லீலைகளும் அவனுடைய அருளைப் பெறும் வழிகளும், அவனுடைய கருணையின் பெருமையும் நம்முடைய புத்தகங்களில் வெளியிட்டிருக்குமாறு வேறு ஓரிடத்திலும், ஒரு நாகரீகத்திலும், ஒரு பாஷையிலும் இல்லை யென்பது நிச்சயமான விஷயம்.

நம்முடைய ஆர்யமதத்தின் ஒரு முக்யமான பெருமை யென்னவென்றால், அது பலமாதிரி மனதும் போக்குமுள்ள ஜீவர்களுக்கெல்லாம் அவர்கள் ஆன்மலாபம் அடையும் வழி விட்டிருப்பதேயாம். இதை நம்முடைய பெரியவர்கள் மட்டுமல்ல, மேல் நாட்டுப்பெரியவர்களும், கண்டு வெளியிட்டிருக்கிறார்கள். பிலிப் கிப்ஸ் (Philip Gipps) * என்பவர்: "இந்த உயர்ந்த ஆர்யமதமானது அந்த மதஸ்தர்களுடைய மனதையும் நடத்தையையும் எவ்வாறு மாற்றுகிறது என்று ஆலோசித்தால், அது எல்லாவிதமான ஸ்வபாவங்களுக்கும் புத்தி கௌசலங்களுக்கும் இடங்கொடுத்து கைதூக்கிவிடும் என்பது நன்றாக புலப்படுகிறது" என்றுஎழுதியிருக்கிறார். கர்மயோகம், பக்தியோகம், ராஜயோகம், ஞானயோகம், என்ற ஒப்பற்றவழிகளால் மனதைச்சுத்தமாக்கிஈசன் திருவடிகளை அடையச்செய்யும் பெருமையை வகிப்பதுநம்முடைய உயர்ந்தஆர்யமதமேயாம்.

இங்ஙனம் இறைவன் அடிகளின் அழகை அறிந்துகொள்வது மனிதனுடையமுக்யமுயற்சியாகவேண்டுமானால், அந்த பரம புருஷார்த்தத்தை அடைவதற்கு எது சுலபமானதும் நிச்சயமானதுமான வழியென்று நாம் அறிந்து கொள்ளவேண்டும். பரிபூர்ண காருண்யத்தால் இறைவனே அவதாரம் செய்து நம் மருகில் வந்தால் அவருடைய அடிமலர்களை இடமாகப் பிடித்துக்கொள்வதுதான் அதிசுலபமானதும் அதிநிச்சயமுமான வழி. இந்த உயர்ந்த வழி அகப்படாவிட்டால் பக்தியாகிற ராஜமார்க்கத்தின் வழியாக நாம் போனால் நம்முடைய ஆசைநிறைவேறும் என்பது திண்ணம். பகவானே கீதையில்,

---

* "If we examine as to the practical effect of this great religion upon the character of its disciples, we find that it is adapted to almost every temparament and to every grade of intellect."



3m211, N08.V4
N08.6

என்னில் நிலை பெற்ற இதயத்தார் அன்னவரைத்
துன்னுறுசம் சாரமெனும் துன்பமிக—மன்னும்
சடலகத்து நின்று கரையேற்றிக் காப்பேன்
விடையனையாய் சில் பகலில் மிக்கு.

பகவத்கீதை, அத். xii ச்லோ 7.

என்றும்,

வேறொன்றும் எண்ணு மனத்தனுய் விட்டொழியா
தீறின்றி என்னுளும் எண்ணியெனை—மாறின்றி
ஓர் நிலைகொள் பத்தியுறு யோகியெவனே அவற்குச்
சேர வெளியேனென்று தேர்.

—பகவத்கீதை, அத். viii ச்லோ-14.

என்றும் கிருபை கூர்ந்து அருளியிருக்கிறார். மகாகாருணிகர்களான நம்முடைய முன்னோர்கள் இக்காலத்தின் வைபவத்தை நன்குணர்ந்து பக்தி சாஸ்திரங்களையே வெகு விரிவாக வெளியிட்டு தங்களுடைய அனுபவங்களாலும் ஸ்தாபித்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் நாயன்மார்களும் ஆழ்வாராதிகளும் பிறந்து ஈச்வரனும் அம்பாளுமே மதுரையில் அவதரித்து பரிசுத்தப்படுத்தினார்கள் என்ற கொடி கட்டி ஏதோ நாம் வீர்யம் பேசுவதில் ப்ரயோஜனமில்லை. பக்தியின் பெருக்கு மனதில் உத்பத்தியாகி, ஆநந்தக்களிப்பில லேசமாவது உண்டானல் நாம் மேற்சொல்லிய காரணத்தையிட்டு பெருமை பாராட்டலாம். ஆகையால் பக்திசாஸ்திரங்களை எவ்வளவு விரிவாக பகவானே நமக்கு இக்காலத்தில் வெளியிட்டிருக்கிறுரென்றும் பக்தி பரம புருஷார்த்தத்தை அடைய முக்கிய வழியென்றும் நாம் எப்பொழுதும் உணரவேண்டிய விஷயம்.

கருணாமூர்த்திகளான நம்முடைய பெரியோர்கள் உலகங்களைப்படைத்து காத்து அழிக்கும் பரம்பொருளை மனதில் நிறுத்துவது இக்காலத்தியவர்களுக்கு அஸாத்யம் என்று நன்குணர்ந்து வெகு ஸுலபமான வழிகளை வெளியிட்டிருக்கிறார்கள். நம்முடைய மனதானது இடமிடமாக ஓடித்திரிந்து சஞ்சலமேகுடிகொண்டு வருத்தப்படும் தன்மையுள்ளது. புத்தகங்கள் எழுதுகிறவர்களும் உபந்யாஸம் செய்கிறவர்களும் மனதிற்கு ஏகாக்ரதை வேணுமென்றும் ஈச்வரன் விஷயத்தில் மனது எக்காலத்திலும் ஒருமைப்பட்டு லயித்திருப்பதுதான் பக்தியென்றும் சுலபமாக சொல்லிவிடுகிறார்கள். மனஸு, இந்திரியங்கள் ஒன்றுபட்டிருப்பதே சிறந்ததவம் எனப்படும் என்று ஜீவன் முக்தி விவேகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் இதுவிதமும் துர்லபம் என்பதைத் தாயுமானவரே வெளியிட்டிருக்கிறார்.

"சிந்தை சிதையச் சிதையாத வானந்தமெந்த வகையாலே வந்தெய்தும் பராபரமே." இவ்வளம் மனதிற்கு தூய்மை அதினின்று மலம் நீங்கினலல்லது எப்படி கிடைக்கும்? நமக்கெல்லாம் மனதானது புயலில் அகப்பட்ட மரக்கலம்போல் திசைதெரியாமல் மயங்குகின்றது. மனதை அடக்குவது முடியாதவிஷயமாக இருக்கிறதே என்று கிருஷ்ணபரமாத்மாவை, அர்ஜுனன் கேட்டபொழுது, பகவான் அதுகடினமான போதிலும், அப்யாஸத்தாலும் வைராக்யத்தாலும் அடக்கலாம் என்று சொல்லிவிட்டு ஒரு ஸுலபமான வழியை வெளியிட்டிருக்கிறார். தன்னையே சரணமாக அடைந்து நித்யமான சுகத்தை ப்ரார்த்திக்கும் ஜீவர்களை தன்னிடத்தில் அழைத்துக்கொள்வதாக சொல்லியிருக்கிறார். ஆகையால் வெளிவிஷயங்களில் இழுக்கப்படாமல் ஈசன் அடிமலர்களில் மனதை சேர்க்க வேணுமானல் விக்ரஹங்கள் மூலமாக அதற்கு ஒரு பிடிப்பைக் கொடுத்து அதுபிடித்துக்கொண்டிருக்கும் மற்ற விஷயங்களை விலக்க வேணும். ஈசனே அம்மாதிரி விக்ரகங்களில் தன்னுடைய ஸாந்நித்யமுண்டென்று சொல்லியிருக்கிறார். சிலை முதலியவைகளான உருவங்களில் நான் நிலை பெற்றிருக்கிறேன் என்று ராமோத்தரதாபனீயோபனிஷத்தில் சொல்லுகிறது. மனதுபரிசுத்தமாகி ஈசனை மனதிலேயேகண்டுகொண்ட யோகிகள்கூட புண்ய க்ஷேத்ரங்களுக்குப்போயும் விக்ரகாராதனம் செய்தால், நம்போன்றவர்களுக்கு இந்த விஷயத்தில் ஸந்தேகம் வேண்டுவதேயில்லை. இது விஷயத்தைப்பற்றி வேறுமதஸ்தர்கள் ப்ரஸங்கங்கள் செய்துநம்முடையபாலர்களின் மனதை மயக்காவிட்டால் நாம் இதைப்பற்றி விசாரிக்க வேண்டிய அவச்யமே ஏற்படாது. அந்த மதஸ்தர்களும் சிலுவை புறு, (dove) முதலான அடையாளங்களை ஸ்தாபித்து மனதை ஈச்வரனிடத்தில்நிறுத்த ப்ரயத்னப்படுகிறார்கள். கல் கட்டிடங்களும், மாசாமன்களும், படங்களும் இந்த விஷயத்தில் உபயோகப்படுத்தக் கூடிய உபகருவிகள் ஆகுமானல், ஸர்வ ஸுந்தரமானதும் ஸ்ருஷ்டியில் அதற்கு ஒப்பில்லாததுமான மானிட உருவம் மட்டுந்தான் பாவம் செய்ததா? ஸ்தல விசேஷமும் மூர்த்தி வைப



வமும் எப்படி உண்டாகிறதென்றல், மகாத்மாக்கள் நல்ல இடங்களைத் தேடி அழகிய பிம்பங்களை அமைத்து ப்ராண ப்ரதிஷ்டை செய்து பகவத் ஸாந்நித்யத்தை நிலை நிறுத்தி தங்களுடைய நிஷ்களங்கமான எண்ணங்களை அப்பிம்பங்களில் செலுத்தி ஜகத்ரக்ஷகரான பரமாத்மாவை பக்தியால் கட்டிப் பிடித்து எப்பொழுதும் இப்பிம்பங்களில் விளங்கி உபாஸகர்களை ரக்ஷிக்கவேண்டுமென்றல் பகவான் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கியே இருக்கவேணும் என்பதில் சந்தேகமுண்டோ? விஷயங்களை நுட்பமாக அறியாதவர்கள், கல்லையே நாம் தேவனுகக் கொண்டிருக்கிறோம் என்று நினைக்கிறார்கள். ஆனல் ஈசனுடைய அனந்த கல்யாண குணங்களை மூர்த்திகளில் பாவனை செய்கிறோம் என்பதில் நமக்கு ஸந்தேகம் இல்லை.

இப்படி விக்ரகாராதன மூலமாகபக்தி பெருகி மனதின் மலம் நீங்கி ஈச்வரதரிசனம் கிடைப்பதற்கு இரண்டு வழிகள் உண்டு. எக்காலத்திலும் எல்லாவிடத்திலும் நம்முடைய வீடுகளில் மூர்த்திகளை பூஜை செய்வது வழங்கி வந்திருக்கின்றது. வடதேசங்களில் இந்த வழியையே அதிகமாகக் கைப்பற்றி இருக்கிறார்கள். நம்முடைய தக்ஷிணதேசத்தில் இந்தவழியும் ஆலய வணக்கமும் ப்ரபலமாக இருந்து வருகிறது. ஆகையால் தக்ஷிணம் இருவிதத்திலும் புண்ய பூமி என்பது நிச்சயம். ஆலயங்கள் நம்முடைய தேசத்தில் வெகு காலமாக இருக்கின்றன என்பது ரகுவம்சம் மேகஸந்தேசம், ராமாயணம், பாரதம், ஸூதஸம்ஹிதை:முதலிய க்ரந்தங்களால் வெளிப்படுகிறது. பழைய தமிழ்ப் புத்தங்களாலும் இது புலப்படுகிறது.

நாமெல்லோரும் சிறுவயதிலேயே "ஆலயந் தொழுவது சாலவுநன்று" என்று வாசித்திருக்கிறோம். உயர்ந்த தத்துவங்களை எளிய நடையில்தெரிவித்து மனதில் புலப்படச்செய்வதில், ஒளவையைப் போன்றவர்கள் கிடையாது. நாம் கிளிப்பிள்ளைகள் மாதிரி இந்த வசனத்தைச் சொல்லிவருகிறோமே யொழிய அதன் உண்மையை அறிந்து கொள்ள இல்லை. கோவிலுக்குப் போகவேணுமா, வீட்டிலேயே ஈசனைத்துதிக்கக்கூடாதா, என்று சிலர் கேட்கிறார்கள். இவர்கள் வீட்டிலானும் பூஜாக்ரஹம் அமைத்து ஈசுவரபிம்பத்தை பூஜைசெய்தால் அவர்கள் பேச்சை நாம் ஒப்புக்கொள்ளலாம். ஆனல் நாம் வீடுகள் கட்டும்பொழுது நகை நாணயங்கள் வைக்க அரங்குள் (Safe Room) கட்டுவதைகவனிக்கிறோமேயொழிய பூஜாக்ரகம் அமைப்பதைப்பற்றி கவனிக்கிறோமா? வீட்டில் பலர் போக்கு வரத்தாக இருந்து எவ்வளவோ அசுத்தங்களும் அபசாரங்களும் ஏற்படக் கூடிய இடத்தில் மனதை ஈசுவரார்ப்பணம் பண்ணுவது எவ்வளவு அஸாத்யமென்பது விவரிக்கவேண்டியதில்லை. எவ்வளவு ஜனஸங்கம் உள்ளஊர்களிலும் ஆலயங்களுக்குள் போனல் நாம்வேறு உலகத்திற்குள் போவதுபோல நமக்கேதோன்றவில்லையா; கோவிலுக்குள் போகும் பொழுது பாதரக்ஷைகள் வெளியில் வைப்பதுடன், நம்முடைய ஆசைகள் துக்கங்கள் கோபங்கள்எல்லாவற்றையும் வெளியில் விட்டுவிட்டு ப்ரவேசித்தால் நமக்கு அமைதியும், தெளிவும், சுகமும், உத்ஸாகமும்மனதில் உண்டாக வில்லையா? இதெல்லாம் ஆலோசிக்காமல் ஆலயங்களை இகழ்வது புத்தியீனமான கார்யமே தவிர வேறில்லை.

இந்தத் தப்பெண்ணங்களைத் தவிர்த்து ஆலயங்களுக்குப்போகிறவர்களும் சரியான மாதிரியாகச் செல்லுகிறார்களா என்று நாம் சற்று ஆலோசிப்போம். கேவலம் வேடிக்கைக்காகப் போகிறவர்களை நாம் நிந்திக்கக்கூடாது. விளையாட்டிற்குப்போகிறவர்கள் மனதில் களங்கமில்லாததால் அவர்களுக்கு பிறகாகிலும் பக்தியுண்டாகும் என்பதில் ஸந்தேகமில்லை. த்வேஷபுத்தியுடன்போகிறவர்களையும், பொது சொத்துக்குக் கேள்வி முறையில்லாததால் கையாடலாம் என்றுநினைத்து கோவில்களில் சம்பந்தப்படுகிறவர்களையும், வழிதப்பி அபசாரங்கள் செய்கிறவர்களையும் நாம் என்ன என்று சொல்லலாம்? சைவ வைஷ்ணவப்போர்களையும், தென்கலை வடகலைச் சண்டைகளையும், அர்ச்சகர்கள் நடத்தும் பூஜாவிதானங்களையும், தர்மகர்த்தர்கள் பெரும்பாலும் ஆலய வேலைகளை நடத்தும் மாதிரிகளையும் நாம் கவனித்தால், கோவில்களை எல்லாம் பூட்டி விட்டால் உத்தமம் என்று தோன்றுகிறது. அனேக இடங்களில் சங்கர நாராயண பிம்பங்களை அமைத்தும் சாஸ்திரங்கள் தத்வங்களை பல முறை முறையிட்டும் சைவ வைஷ்ண த்வேஷங்கள் இன்னும் ஒயவில்லை. தென்கலை

வைஷ்ணவர்களும் வடகலை வைஷ்ணவர்களும் பெரும்பாலும் கோர்ட்டுகளை விட்டு வெளியேறுவதே இல்லை. பாஞ்சராத்ர வைகானஸச் சண்டைகளும், ஆகம வேதப் போர்களும், நாங்களும் இருக்கிறோம் இருக்கிறோம் என்று தலையைக் கிளப்பிக்கொண்டேயிருக்கின்றன. அர்ச்சகர்களில் அனேகர்களுக்கு சீலம் படிப்பு பக்தி இல்லாதது மன்றி பிம்பங்கள் வெருங்கல் லென்னும் பாவனையே அதிகட்பட்டுவருகிறது. இதுவுந்தவிர இக்காலத்திய தேவதாஸிகளையும் கோவிலில் சேர்ப்பித்து நம்முடைய மனதை நோகும்படி செய்கிறார்கள். ராஜாங்கத்தாரால் கோவில் சட்ட சீர்திருத்தங்களில் முயலுவதற்கு முடிய இல்லை. இதுநம்முடைய வேலையல்லவா? உயர்ந்த மூர்த்திகளில் எந்த மூர்த்தியை பிடித்துக்கொண்டாலும் ஈசன் அருள் கைகூடும் என்றும், தயா மூர்த்தியின் பேரைச்சொல்லி நாம் போர் செய்யக்கூடாதென்றும், பரிசுத்தமான ஸ்தலங்களில் ஆபாஸங்களை சேர்க்கக் கூடாதென்றும், பொதுப்பணங்கள் பொது விஷயங்களுக்கு உபயோகப் படும்படி நம்மவர்கள் கூட்டங்கள் கூடி ப்ரயத்னம் செய்யவேணும் என்றும் நாம் நன்றாக உணர்ந்தால் ஒழிய ஆலயங்கள் நல்ல ஸ்திதிக்கு வாராமல் போய்விடும் என்பதை நாம் மறக்கக்கூடாது.

இதுவரையிலும் ஆலயங்களைப் பற்றியும் அவைகள் சீர்தப்பி இருப்பதையும் பொதுவாக விசாரித்தோம். இப்பொழுது சாஸ்திரப்படி ஆலயம் என்றால் என்ன, ஆலயவழிபாடு எம்மாதிரி யானது என்று ஆலோசிப்போம். ஆலயம் என்றால் ஈசனை நாம் பாவனைபண்ணும் இடம், மனது லயிக்கும் இடம் என்றும் சொல்லலாம். ஒவ்வொரு தினமும் காலமே எழுந்து உருக்கின தங்கம்போல விளங்கி எல்லோருக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கும் சூர்யனை ப்ரகாசிக்கும்படி செய்து சூர்யனுக்கும் அந்தர்ஜ்யோதிஸ்ஸாக இருக்கிற பரவஸ்துவை நாம்சூர்யனிடத்தில்தியானம் செய்தால், அப்பொழுது சூர்யபிம்பமே ஈசனுக்கு மனிதர்களால் கட்டப்பட்ட கோவில்களைக் காட்டிலும் உயர்ந்தபரிசுத்த ஜ்யோதிர்மயமான கோவிலாகிறது. பரமேச்வரனை நம்முடைய ஹ்ருதயாகாசத்தில் பாவனைசெய்து மனதாகிற தங்கப்பலகையில் எழுந்தருளப் பண்ணி பரிசுத்தமான கர்மாக்களாகிற புஷ்பங்களால் அர்ச்சனைசெய்து அன்பென்னும் அமிருதத்தை நைவேத்யமாகக் கொடுத்தால் நம்முடைய ஹ்ருதயமே இறைவனுக்கு ஒரு ஒப்பற்ற கோயிலாகிறது. இதையே பக்தி சாஸ்திரத்னமான திருவாசகத்தில் மாணிக்கவாசக ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளி இருக்கின்றார்.

"இன்பம் பெருக்கி யிருளகற்றி யெஞ்ஞான்றுந்
துன்பந்தொடர் வறுத்துச்சோதியா—யன்பமைத்துச்
சீரார் பெருந்துறை யானென்னுடைய சிந்தையே
யூராகக் கொண்டானுவந்து."

ஜகத்தை யெல்லாம் ஈசனுடைய விலாஸமாகத் தெரிந்துகொண்டு அவனுடைய விச்வரூபம் என்னதென்று ஆலோசித்து சூர்ய சந்திரர்களை அவன் கண்களாகவும் உலகமெல்லாம் அவன் சரீரமாகவும் நினைத்தால், அப்பொழுது உலகமெல்லாம் அவனுடைய ஒரு கோயிலாகும். விச்வரூபத்தை உபாஸனைசெய்து விராட்புருஷ வடிவத்தை பார்க்கவேணுமென்று அவாவுள்ள உபாஸகர்கள் இந்த அண்டாலயத்திலேயே ஈசனை பாவனை செய்கிறார்கள். பிண்டாலயம் என்பது ஜீவசரீரமேயாம். இத்தேவாலயத்தில் மகாமண்டப ஸ்தானமாகிய மார்புக்குள்ளாக ஹ்ருதயத்தில் செய்யும் உபாசனை தகரோபாஸனை யென்று சொல்லப்படும். ஹ்ருதய கமலத்தில் ஜீவனை சிவமாகவே பாவனை செய்வதுதான் ஸோகம் பாவனை. ஜீவனில் சிவமணம் பூத்தது என்று திருமூலர் சொன்னது இது தான். அந்தர்யாகம் என்றும் மானஸ பூஜை என்றும் சொல்லப்பட்டது மிகவும் ச்ரமமானது. வெளிப் பூஜையிலேயே நின்றுவிட்டால், உயர்ந்த பலம் கிட்டாது. மானஸிக பூஜை போதும் என்று வெளிப்பூஜையை விட்டுவிட்டால் இரண்டும் சித்திக்காமல் போய்விடக்கூடும். இரண்டும் சேர்த்து செய்து மானஸீக பூஜையில் மனம் நிலைத்த பிறகு வெளிப் பூஜை நழுவிப்போனால் ஆக்ஷேபணையில்லை. வெளிப் பூஜையானது மனதைக் கண்டவிடங்களில் ஓடாமல் தடுத்து ஈசனிடத்தில் சேர்ப்பிப்பதால் அது உயர்ந்ததேயாம்.

(தொடரும்.)

K. S. ராமஸ்வாமி சாஸ்திரி, பீ. ஏ,



# இராமாயண அகவல்

## RAMAYANA AGAVAL

கெட்டவ னுக்கு நல்லவை சொல்லினும்
துட்டத் தனம் விடான்; துட்டனீ தறியனோ?
நல்லறி வேற்றலை நாடினன் போலும்
நல்லறி வெற்கு மில்லையோ? நலனிலான்
குணம்போல் நடத்தையு மாகுமென் றறியான்
குணமெற் கிதுவே சாசுவத மாயது.
செல்லாப் பணமும் செல்லுமோ, அன்றிக்
கல்லா மடையர் கற்றவ ராவரோ?
விஷப்பாண் டத்தி லமுதம் கலப்பில்
விஷமே யாமென வறிந்திலன் போலும்.
நல்லபாம் பிற்கு நற்பால் வார்ப்பின்
நல்ல குணத்தைப் பூணுமோ? வதுபோல்
நற்குணங் களையே என்னிடம் புகன்றான்.
விற்போர் புரிய மாண்புடன் செல்வேன்.
சிறிதில் நகத்தாற் கிள்ளா திருப்பின்
பெரிதாய்த் தடித்தபின் கோடரி வேண்டும்.
படைகாள் என் பின் சடுதியில் வாரும்
கடைகெட் டவனை மாய்த்திடச் செல்வேன்"
எனவே துடித்து எழுந்தனன் மாதோ.
தனவா சானைச் சடுதியிற் கிட்டி
கோட்டையைச்சுற்றியே கொடும்போர்விளைத்தனன்
பாட்டையின் விலகிடும் பாவி யிராவணன்.
கருணைக் குபேரனும் களைத்தோ டினனே.
அருளைக் கொன்ற அயோக்கிய னிராவணன்
புட்பக மெடுத்துப் போயின னந்தோ!
புட்பக மேறிப் புல்லியன் செல்கையில்
பரமன் வாழும் கயிலையைக் கிட்டலும்
மரம்போற் புட்பகம் நின்றுபோ யிற்றே.
இராவணன் தம்பியர் அரக்கர் யாவரும்
சராசரம் காக்கு நந்தியைக் கண்டனர்.
சொல்லற் கரிய தவங்களை யியற்றி
மல்லன் மாஞாலவாகையை மாய்த்து
சிவத்தை யடைந்த நந்திகேச் சுரனும்
நவமணிக் கிரீடி யிராவணன் நோக்கி
"இராவண வேந்தே! இலங்கையை யாள்வோய்
பராபரன், சராசரம் காக்குசர் வேசுவரன்
திரிபுர மெரித்த திண்டோள் வீரன்,
கரியுடை யுடுத்த காருண்ய வள்ளல்
சிவபிரான் எம்பிரான் சிற்சபா நடன்முன்
தவம்பல பலிக்குமோ, புட்பக மென்செயும்?
புந்தியில் லாதவ! புல்லிய! நீயும்
எந்தையைப் போற்றி இப்பவே திருமு"
எனலும் வேந்தன் இராவண நாமன்
"வனத்திற் றிரியும் வானர மனையாய்!
என்முன் நீயோ இவ்விதம் புகல்வது
மன்னென வெண்ணிலை படையனே" யெனவே
விதிவந் திழுத்தலால் விளம்பினன் மாதோ.
மதியில் கோபி மன்ன னிராவணன்
செல்வம் பின்செலு நிலைத்த லிலாமைபோல்
அல்லல் ஈந்திடும் முன்வினை யடைந்திட
மதித்திடா துரைத்த வார்த்தை செவிப்புக
பதியின் தாசன் நந்திகேச் சுரனும்,
வாக்கினுற் கூறிய வானரத் தாலே
சாக்கா லம்வர சடுதியிற் காண்பாய்.
நீயுநின் குலமும் குலத்துட னிலங்கையும்
பேயனே குரங்கா லழிவீ ரெனலும்,
இலங்கை வேந்தன் புட்பக மிழிந்து
பலங்கொடு சூலால் பர்வதம் கெல்லி
இருபது தோளொடும் கோபமா யெடுத்தான்.
மருளை நீக்கும் மங்கையர் பாகன்
திடவன் புடையோர்க் கருள்வோன் நோக்கி
இடக்கால் விரலை இலேசா யூன்றினன்.
பத்துத் தலையும் படீரென நொறுங்க
சித்தம் நொந்து புலம்பின னிராவணன்
கனநாட் சென்றன கதிகிட் டிலதே
மனம்பதைத் திராவணன் வாடினன் மாதோ.
ஈசனைப் போற்றியே நாரதர் சென்று
பாசமாய்க் கயிலையைச் சுற்றுமையிலிராவணன்
பதறிக் கதறிப் புலம்பலைப் பார்த்து
"பதரே! பதரே!! மதத்தினைக் கொண்டோய்
ஈசனை யெண்ணு தெடுத்தாய் வரையும்.
ஈசரின் தாசன் தந்திடா னருளை; ஆயினும்
தாமம் புனைந்தோ னருளை பெற்றிட
சாம வேதம் பாடுவாய் சடுதியில்
ஈசனு மருளுமென் றியம்பிச் சென்றனர்.
மாசகத்திடவே நினைந்த இராவணன்
ஈசன் மகிழ்ந்திட ஈசுவரி மகிழ்ந்திட
தாசர் களின்புற சாமவே தத்தை
பாடினன்— பாடினன் பாடினன் மாதோ.
ஆடியோன் தில்லையில் அகமகிழ்ந்த னனே
சிரமொன் றறுத்து சிவனைத் தொழுது
கரமொன் றறுத்து கயிலையைப் பணிந்து
வீணையா வாக்கி மீட்டுப் பாடினன்
வீணை வலவ னுபாயத் தாலே.
ஈசன் களித்து இடபவா கனனாய்
பாசமாய்ப் பார்வதி யுடனே யழைத்துத்
தோன்றி யன்பன் இன்னலைத் தீர்த்து
சான்றோ ருடனே கயிலையைச் சார்ந்தான்.
கந்தனை யாய கருணைச் சிவத்தை
சிந்தையிற் கொண்டு சென்றா னிராவணன்.
காதூ ஷணனொடு திரிசிர னையுமே
திறம்பல படைத்த வீர ரோடே
தண்டகாரண்யம் வாழவே விடுத்து
திண்டோட் டம்பியர் மைந்தர் இலங்கையில்
வாழவே விடுத்தபின் புட்பக மேறி
பாழாக்க னுமே அந்தோ! சென்றான்.
சென்றுதிக் கெட்டையும் ஜயித்து மீளுமுன்
நின்று கொழுத்து தனையர் யாவரும்
பசுபதி வரத்தைப் பெறவே சென்றனர்.

பசுவென த்தூங்கும் இயல்பினைத் தவத்தால்
பெற்ற வரக்கனும் தூங்கியே யிருந்தான்.
கற்றவர் புகழும் கணம் பெற்றிட்ட
மன்னன் வீபீடணன் மாத்திர மிலங்கையில்
மன்மிகக் கொண்டு வாழ்ந்திருந் தனனே.
அந்த வேளையிலரைய னிந்திரனும்
பந்த மொழிக்கும் பசுபதி பத்தரோ
டிலங்கையைத் தாக்கி அரக்கர் யாவரும்
கலங்கிட வடித்து வாட்டியே சென்றான்.
இராவணன் வந்தபின் விபீடணன் செப்பலும்
சரா சரமெல்லாம் சடுதியி லழித்திட
கோபம் கொண்டு கோவு முடனே
பாபம் நீக்கிய இந்திர லோகம்
தானையோ டேகித் தாக்கினன் மாதோ
தானையின் தலைவன் இராவணன்பிள்ளை
தந்தையை நிறுத்தித் தானே சென்று
இந்திரன் ஜயித்து இறுகவே கட்டி
இலங்கை யடையலு மிராவணன் மகிழ்ந்து
"நிலமெலாம் பரவும் புகழினைப் பூண்டோய்.
இந்திர ஜித்தெனு நாம மீந்தேன்
இந்திரன் ஜெயித்தோ யேற்பா" யெனவே
பலபல சொற்களை யாடியே யிருந்தனன்.
சொலச்சொல முடியாப் பெருமையைப் பூண்ட
பிரமனீ தறிந்து இலங்கையைச் சேர்ந்து
சிரம்பத் துடையனை வேண்டி, யிந்திரனை
கட்டினின் விடுத்துத் தன்னுல கேகினன்.
பட்டபா டெல்லாம் பார்த்து வருந்தி
கார்வா கனனும் தன்னுல கடைந்தான்.
பார்வாழ் மாந்தர் வருந்தி யிருந்தனர்.
இராவணன் வெகுநா ளிலங்கையை யாண்டான்
சராசர மெல்லாம் வாடி யிருந்ததுவே. 824

## இராமன் படையெழுச்சிச் சருக்கம்

நாராய ணாய நமவென்று நாமெண்ணிப்
பாராயணங்கள் மிகச்செய்தால் —நாரணனும்
தூணில் வெடித்ததுபோற் றோன்றி யருளிடுவான்
காணியடை வாய்நெஞ்சே காண்.

கரனின் தங்கை சூர்ப்ப நகையும்
பரன்லோகதொடு பல வுள வுலகெலாம்
சுற்றித் திரிந்து கா குத்தனைக் கிட்டலும்
பற்றிப் பிடித்தது காமப் பிசாசம்.
இராமனை யணைந்திட வோடின ளரக்கி.
பராபரன் நோக்கிப், "பாவாய்! கேளாய்;
உலகின ளொருத்தியே மணந்திடல் வேண்டும்
பலபேர் மணப்பின் பழிக்கிட மாய்விடும்.
ஆசையாற் போய் நீ அதோவென் தம்பியின்
ஜாகையுளது சடுதியிற் சேர்தி" யென்
றறைதலு மரக்கி விரைந்தே யோடி
இரைகட லுடுத்த வித்தேயம் காத்திடு
மிலக்குன னடைந்து வேண்டினள் சேர்ந்திட
இலக்குன வேந்தனு மரக்கியைப் பற்றி

அங்க ஈனம் செய்தே யனுப்பினான்.
மங்கையும் சென்று கரனிட மலறலும்

சேனையோ டேற்று இராமனைக் கிட்டினன்
தானை யுடனே யரக்கனைக் கொன்றான்.
மராமரம் துளைத்த மாண்புடை வீரன்
சராசரம் காக்கு மிளையோன் தமையன்
பார்த்தலும் பயந்து பாவியு மோடி
காத்தற் றொழிற் கா யிராவண னடைந்து,
"அண்ணா, அண்ணா!! அருமை மருகா!
எண்ணரும் புகழுடை யிந்திர ஜித்துவே!
எற்கு இக்கதி கிட்டிட லாகுமோ.
பொற்றன மிழந்தேன் முடிமூக் கிழந்தேன்.

அண்ணா, அண்ணா!! அறைவதைக் கேளீர்
திண்டோ ளிராம னிலக்குன வேந்தன்
பஞ்சவடியினிற் பார்த்திபர் வாழ்கிறார்.
பஞ்சல க்ஷணமும் படைத்த சீதையை
அனுப வித்தற் குகந்தவ ரவரிலை
தனுசில் வல்லவ! நீதானுகந்தவன்
மாதைத் தூக்கிடச் செல்லையில் மன்னன்
பாதையைக் காப்பான் இலக்குன வேந்தன்
என்னைப் பிடித்து எந்த னங்கத்தை
மன்மிகக் கொண்டு சேதித் தனுப்பினான்.
அண்ணா, அண்ணா!! அடியனேன் சென்று
அண்ணன் கரனிடம் அலறியே விழுந்தேன்.
கரனும் சென்று கடுங்கோ பத்துடன்
திறம்பல படைத்த விராமனை யெதிர்த்தனன்.
அண்ணா, அண்ணா; என்னெனச் சொல்வேன்!
மண்டோ தரியை மணந்த பூபதி
கரனை யண்ணனைக் கால்நொடி தன்னில்
சரத்தாற் கொன்றனன் இராமப் பெயரோன்,"
எனவே புலம்பலும் இராவண வேந்தன்
மனமது நோக மாரீசனை யடைந்தான்.
சென்று,

"மாமா, மாமா!! மங்கை சீதையைக்
கோமா கொண்டிட வருளும் புரிதி.
காமாக் கினியால் காய்தலைக் காணாய்.
மாமா உந்தன் மலர்த்தாள் பணிந்தே"
னெனலுமா ரீசனு மினிதி னியம்புவான்,
"அனலை வீசிடும் அக்கினி யொத்த
சீதையை நினைத்தாய் சீர்கெட நினைத்தாய்.
மாதை மணந்த மன்ன னிராமன்
கணையொன் றனுப்பிற் காய்ந்திடு முன்றலை.
கணைவல் லோனை யெய்த்தலு மாகா.
வஞ்சகத் தாலே வஞ்சியை யெடுப்பினும்
கஞ்சிக் கலையும் குக்கலி னிடத்து
முழுத்தேங் காயது கிட்டிலென் செய்யும்?
முழுநிலங் காக்கு முகுந்தனு னின்னை
அம்பாற் கொன்று யமனுக் கீவான்.
தம்பிரா னருளைப் பெற்றிட நினைத்தி
'காமமே குலத்தைக் கெடுத்திடு களங்கம்
காமமே தரித்திரம் புகட்டிடு கடாரம்



காமமே பாசுதி மறைத்திடு கபாடம்,
காமமே பகையாய்க் கழுத்தரி கத்தி.
பிறர்மனை நாடிடல் பெரும்பா தகமே
பிறர்மனை யடைந்திட தன்மனை நீப்போன்
பதரினும் பதரென வறிதி மருக.
மதத்தாற் சீதையை நாடலை நீத்தி
சேலை கட்டிய தங்கையை நம்பியே
காலையில் மலரும் போதுறை செல்வியை
நாடலை நீத்து நலம் பெறல் நாடுவாய்.
காடலை சூரர் சாடிடில் நீயும்
நின்குலம் யாவும் நீறாய் மாய்வீர்.
சொன்ன சொலேற்றுத் திருமுவா" யெனலும்
கண்கள் சிவந்திட ரோமம் புகைவிட
திண்டோள் குலுங்கிட தீப்பொறி பறந்திட
பத்துத் தலையுடை பாதகன் பாவி
கத்துவான் கடிந்து, கனைத்தே யலறுவான்,
"மட்டிமா ரீச! மன்னனின் மாற்றம்
சட்டம் பேசி மறுத்தனை? சபலனே!
உத்தர வதனை உடனே முடித்தி.
கத்தியால் மாய்ப்பேன் கள்ளனே செல்வாய்"
என்றே கூறலு முடன்மா ரீசனும்
பொன்மா னுருவெடுத் தறைகுவன் நோக்கி,
"உன்னால் மாயின் நரகமே கிட்டும்.
மன்னனால் மாயின் மோக்ஷமே யடைவேன்.
செல்வே னீதோ செல்வே" னென்றே
செல்லலு மிராவணன் பின்னே கின்னே
மாயமா னுருவினன் மாரீசனை நோக்கி

மாயமா யெண்ணா தன்னையு மண்ணலார்
பாதம் பணிந்து மான்தர வேண்டினள்
பாதம் பணிந்து இலக்குன வேந்தன்
"அண்ணலே! மாயமான்; அரக்கரின் மாயை
கண்ணனே! கண்டு செல்லா திருப்பீர்"

எனப்பல வார்த்தை இயம்பிடக் கண்டும்
மனம்கொள் றோர்க்கருள் மகிபன் சீதையின்
வேண்டுகோட் கிசைந்து வேட்டையிற் புகுந்தான்.
மாண்டுபோ வோமென மாயமா னறிந்து
வேகமாயோட இராமனும் தொடர்ந்து

'சாக' வென்றே சரம்தொடுத் தனனே.
அம்புமேற் படலும் அரக்கன், "இலக்குனா
தம்பீ" என்றே அலறிவீழ்ந் திறந்தான்.
கேட்ட சீதையும் மனம் புண்ணாகி
நாட்டமா யிலக்குன வேந்தனை நோக்கி

"அய்யா! அண்ணலை நாடுவீ ரெனலும்
"பொய்மான் மாற்றம் பொய்யிது காணீர்"
என்றான். சீதை கடுமொழி கழன்று
மன்னன் வருந்திடப் பேசினள். நாடிச்
சென்றா னிராமனைச் செவ்விய மேனியன்

கன்றைப் பிரிந்தவா வொத்தனள் சீதையும்.
அரக்கரின் மாயையி துதா னிதுதான்!
சரம்பட் டிடவும் இராமன்போல் கூய்

சீதையை மருட்டி யிலக்குனன் பிரித்தான்.
சீதையு மருண்டு இலக்குன னனுப்பினள்.
நிற்க,
இராவணன் தவசியாய் வேடம் புனைந்து
மராமரம் துளைத்த மகிபன் குடிசைபோய்
சீதையைத் தூக்கிச் சென்றனன் மாதோ.
பாதையி லெல்லாம் பாவையும் புலம்பினள்.
ஜடாயுவா மரசன் சடுதியில் வந்து,
"அடாபடு பாவியே! அரக்கனே! அம்மையைத்
தூக்கியோ செல்கிறாய்? துட்டா நில்நில்.
சாக்கா லம்உனை யடுத்தது" வென்றே
கூறி மேல்விழுந் தடித்துக் கொத்தி
கூரிய நகத்தால் கிழித்த திராவணன்
பரமன் கொடுத்த வாளினா லந்த
அரக்கன் ஜடாயுவின் சிறகை யரிந்தான்
ஜடாயுகீழ் வீழலும், அம்மன் நோக்கி,
"படாது, என் பத்தா வந்ததும் எந்தன்
சங்கதி கூறி ஜடாயுவே மாள்வீர்.

பங்கம் துறாது பலிக்க வென்வர" மென்
றறைந்து சென்றன ளரக்கனின் தேரில்.
விரைந்து சென்றது அரக்கனின் ரதமும்.
பின்னரோர் மலைக்கண் பலபே ரிருக்கவும்
கன்னல் மொழியாள் கழற்றி நகைகளை

வீசி யவரிடம் சென்றனள் தேருடன்.
மாசுபடிந்த மனத்தின னிராவணன்
இலங்கையைச் சேர்ந்து அசோக வனத்தில்
நலம்பல கொண்ட நங்கையை வைத்து
மனத்தைத் திருப்பிட மாதரைப் பணித்தனன்.

மனமிக வாடி மங்கை சீதையும்
பற்பல நாமமும் பரந்தா மனையே
சொற்பல புகன்று துதித்திருந் தனளே.
நிற்க,
இலக்குன வேந்தன் விரைந்தே யோடி
பலம்பல படைத்த பரமனைக் கண்டு

பாததா மரையில் வீழ்ந்து பணியலும்
சீதா மணாளன் தம்பியை நோக்கி,
"தம்பி! சீதையைத் தனிவிடுத்ததே" னென
வெம்பிரான் கேட்டலும் இராமனை நோக்கி
செவ்விய மேனியன் செப்புவான், "அண்ணே!

நவ்வி நோக்கியர் சீதையென் னன்னையர்
பற்பல கடுமொழி பகன்றுமைத் தேட
எற்குச் சொல்லினர்; வந்தே" னெனலும்
"சீதையை யிழந்தோ மிலக்குன" வென்றார்.
மாதைத் தேடி மன்னவ ரோடினர்.

'சீதையை யாவனோ வெடுத்தே கினனே'
ஈதை யறிதலு மெம்பிரான் வெகுண்டு
வில்குனித் தம்மை வில்லிலே பூட்டி,
"அல்லல் வருமென வறிந்திலர் தேவர்?
பார்த்தே யிருந்தனர்; தடுத்தில ரேயால்.
சேர்த்தே யாவரும் சென்னி யிழந்திட

பாணம் தொடுத்தேன் தொடுத்தே" னெனலும்
காணற் கரிய கருப்பனின் தம்பி
அண்ணலி னடியை மும்முறை வணங்கி,
"அண்ணா! அடியனே னறைவதைக் கேளீர்.
ஒருவ னிழைத்த இன்னலுக் காக
இருவ முலகும் மாய்த்திட வெண்ணினீர்.
தரும நீதிக் கடுக்கா தியம்பினேன்.
தருமமே யுருவெடுத் துதித்த தயாபரா!
எனய்யனே! கல்லை எழில்மா தாக்கியோய்!"
எனவே இயம்பலு மெம்பிரான் நோக்கி,
"தம்பி பின் நாம்நின் தாயைத் தேடிட
நம்பியை நம்பிச் செல்வோ" மென்றான்.
வீர ரிருவரும் விரைந்தே சென்று
மாரன் மிஞ்சிய மன்னனின் தாரம்
தேடித் தேடித் தேடி யலைந்தனர்.
வாடிட மனமும் கால்கள் சோர்ந்திட
சீதையைத் தேடிச் சென்ற வேந்தர்
மாதைக் காத்திடச் சென்று மடிந்த
புள்ள ரசான ஜடாயுவைக் கண்டார்.

## ஓம் தத்ஸத்!

கள்ள னிராவணன் செய்தியைக் கழறி
பார்வதி யனையாள் பாத மடைந்தது.
பூர்வஜன் மத்தின் வாசனை யாலே
பறவையு நல்ல குணத்தையே பூண்டு
அறத்தின் வழியே அகலா தொழிகி
துர்ச்சனர் கண்டால் கோபமே பூண்டிடும்.
துர்ச்சனர் பிறப்பின் துர்ச்சன ரன்றி
வேறு வதிலையால் வேறு வதிலையால்.
தீராக் காமநோய் கொண்ட இராவணன்
மதியிலி மங்கை சீதையை யெடுத்தான்.
விதியைப் பிழைத்தவர் ஞாலத் தில்லையால்
விதியே பூர்வ வாசனை யாயிடும்.
மதியால் விதியை வெல்ல லசாத்தியம்
உத்தம குணனுடை உயிரின் மீது
உத்தமர் வாஞ்சையைப் பூண்டிடு வாரே!
உத்தம னிராமன் உத்தம ஜடாயுவை
பத்தியாய்க் கர்மம் புரிந்து பரம
பதியைக் கிட்டிடத் தானனுப் பினனே.
மதிவலன் புள்ள ரசடைந்தான் மோக்ஷம்.
பின்னர்கார் மேனியனும் சொர்ன மேனியனும்
பார்மா தாகிய பாவையைத் தேடி
தென்திசை நோக்கிச் சென்றனர் வழியில்
மன்னவர் கவந்தனைக் கிட்டினர். மன்னரை
வாயினிற் றள்ளிட கரத்தை நீட்டினன்.
மாயிருள கற்றிடு மன்ன ரிருவரும்
வாளுரை நீத்து அரக்கனின் தோள்களை
மாளவே வெட்டினர். அரக்கனும் மாண்டு
விமான மூர்ந்து விண்ணிற் றேறி
"புமானே! புண்ணிய! புவியைப் புரப்போய்!
விச்சா தரன்யான் விண்ணுவே கேளீர்.
நச்சர வணிந்த நம்பியி னருளை
நாடி நாடி உருகையி லோர்நாள்
தேடி வந்தது பிரமனின் சாபமும்,
ஆகையா லிவ்வித மாயினே னய்யனே!
வாகை சூடிய மார்பனே! அப்பனே!

அன்னையைத் திருடிய அயோக்கிய னரக்கன்
மன்ன னிராவண னாமவன் கொடியன்.
யமதிசை நோக்கி அய்யனே சென்றால்
யமனை வென்ற அனுமசுக் கிரீவாள்.
வாழ்கி ன்றார்கள் வானில் வலவ!

பாழ் அரக்கனையும் பாழ்படச் செய்வர்.
அன்னவரிடம் நீர் அடைந்தா லப்பனே!
அன்னையைத் திண்ணமா யடைவீ" ரென்றே
சொல்லிவிச் சாதரன் தொழுதுகை கூப்பி
மல்லன் மிக்கவிச் சாதர நாட்டை

அடைந்து வாழ்ந்தனன் அய்யனைப் போற்றி.
அடைந்தோர் காத்திடு மய்யனும் பின்னர்
செவ்விய மேனியன் சிறந்த நோக்கினன்,
பவ்விய மாகப் பணியுலக் குனனோடும்
சென்றுபம் பாநதிக் கரையை யடைந்தனன்.

குன்றி லிருந்த வானர வரசன்
சுக்கிரீ பனின்மனம் பதைபதைப் படைந்து,
தக்க குணனுடை அனுமனைக் கூயி
மன்னர் யாரென அறியவே விடுத்தனன்.

(இன்னும் வரும்.)

**புதுக்கோட்டை ஸ்ரீமார்த்தாண்ட தொழிற் பொருட் காட்சி:**—இக் காட்சியானது சென்ற டிஸம்பர்மீ 19உ திறக்கப் பட்டதென்று சொன்னோம்—1914-ம் ௵ ஜனவரிமீ 25உ இவ் விராஜ்யாதிபதி பொருட்காட்சி ஹாலுக்கு சில கனவான்களுடன் விஜயஞ்செய்து, மறுமுறை காட்சிப் பொருள்களைப் பார்த்து விட்டு தமது சிம்மாஸனத்தில் வீற்றருளி விலையுயர்ந்த பரிசுகளைத் தாமே உரியவர்களுக்கு அளித்ததும் தவிர, தாம் இருமுறை பொருட் காட்சியைப் பார்த்ததிலிருந்து 1913ம் வருடத்தில் வந்திருக்கும் பொருட்களில் அனேகம் சென்றவருடத்தில் வந்திருந்த சாமான்களைக்காட்டிலும் மிக்க சிலாக்கியமானவைகளாயிருந்தனவென்றும் இக்காட்சியை வருஷா வருஷம் அபிவிருத்திக்குக் கொண்டு வரும்படி சபையோர்கள் யாவரும் ஊக்கத்துடன் முயலவேண்டுமென்றும் வற்புறுத்தினதுடன், கமிட்டி ப்ரெஸிடென்டு, காரியதரிசி, இதர மெம்பர்கள் மிகுந்த சிரத்தையுடன் காரியங்களை சீர் பெற நடத்தி வந்திருக்கிறார்களென்றும் இங்கிலீஷில் துலக்கமாக யாவரும் கேட்டுக் களிக்கும்படி உரைத்து விட்டு, இவ்வருஷத்துப் பொருட்காட்சி அந்தக்ஷணம் முதற்கொண்டு மூடப்படுமென்றும் ஆஞ்ஞாபித்தார்கள். இவ்விதம் 1913ம் வருஷத்தியப் பொருட்காட்சி மங்களகரமாய் நடந்தேறியது.



# தரணீபதி அல்லது தந்திரபாலன்

## DHARANIPATHI or THE BOY DETECTIVE

(முன் தொடர்ச்சி.)

"ஸார், நான் சொல்வதுதான் சரி; தாங்கள் சாமர்த்தியத்திலும் அனுபவத்திலும் சற்றேனும் குறைந்தவரல்லர் என்று எனக்குத் தெரியும். தாங்கள் சொல்வதுபோலதான் வெளியிலும் சோதனை செய்தேன். தாங்கள் கவனித்த விஷயங்களையே, இன்னும் நுட்பமாய் நானும் கவனித்தேன்; ஆனால் அங்குள்ள அடையாளங்கள் மனுஷ்யனால் செய்யப்பட்டவையல்ல என்பதை அறிந்து கொண்டேன். அங்கே எதிரிலுள்ள சுருட்டுக் கடையில் விசாரித்ததில் நேற்று மாலையில் ஒரு குரங்காட்டி அவ்வழி வந்ததாகவும் அவனுடைய குரங்கு தாவிக்குதித்து பந்தலின்மேல் ஏறி உட்கார்ந்து கொண்டதாகவும், அக்குரங்காட்டி கயிற்றினால் அதை வேகமாய் இழுக்க குரங்கு பூந்தொட்டியின்மேல் குதித்து அதை உடைத்துவிட்டதாகவும் தெரியவருகிறது. சுருட்டுக் கடைக்காரன் தொட்டி உடைந்துபோன சப்தத்தைக் கேட்டதாகச் சொல்கிறான்."

மாதவராவ் சற்றுநேரம் பிரமையடைந்துவிட்டார். மூக்கின்மேல் கையைவைத்தார்; பெருமூச்சுவிட்டார்; பிறகு தாம் குறிப்பு எழுதிவைத்திருந்ததைக் கிழித்தெறிந்துவிட்டு தரணீபதியின் குறிப்பை எடுத்து பத்திரப்படுத்தினார்.

"தரணீ, இந்த கேஸ் உன் குறிப்பின் ஆதாரத்தைக் கொண்டே இனி நடத்தப்படும், நான் நினைத்ததைக் காட்டிலும் அதிக சாமர்த்தியசாலியாய் விளங்குகின்றாய், உன்னைப்போல் ஒருவன் இங்கிருந்தால் எங்களுக்கு எவ்வளவு நன்மை தெரியுமா?" என்று அவன் முன்னிலையிலேயே அவனைப்புகழ ஆரம்பித்தார்.

## இரண்டாம் அத்தியாயம்

### புத்திமானே பலவான்

தரணீபதி மூன்று மாதத்திற்குள் தந்தியடிக்க நன்றாய்க் கற்றுக்கொண்டான். அவன் சம்பளமும் இப்பொழுது இருபது ரூபாவாயிற்று,

திடீரென்று ஒருநாள் மாதவராவ் ஜன்னலின் வழியாய் ஒருவனைச் சுட்டிக்காட்டி, "தரணீ, அதோ, பார்; அவன் எங்கு போகிறானோ அங்கே கூடப்போய்ப் பார்த்துவா" என்றார்.

"எவன்?" என்று சொல்லிக்கொண்டே நடக்கச் சித்தமா யிருந்தான்.

"கையில் பிரம்பு, முறுக்கிவிட்ட மீசை, சிவப்புத் தலைப்பாகை, அல்பாகா சட்டை; இதுதான் அடையாளம். சீக்கிரம்!"

உடனே புறப்பட்டான். மாதவராவ் காட்டிய மனிதனைப் பிடித்து அவன் பின்னாலேயே சென்று கொண்டிருந்தான். அம்மனிதனோ ஒரு தந்தியாபீஸில் நுழைந்து ஏதோ துண்டுக்கடிதத்தில் சில வரிகள் எழுதி அத்துண்டுச் சீட்டையும் பணத்தையும் தந்தியடிப்போரிடம் கொடுத்து அதைச் சீக்கிரம் அனுப்பும்படியாகக் கேட்டுக்கொண்டான். நம் தரணீபதியோ ஒரு தூண்மறைவில் நின்றுகொண்டு எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்தான். தந்தியடித்துக் கொண்டிருக்கும்போதே தரணீபதி தனக்கு அவ்வித்தை நன்றாய்த் தெரியுமாதலால், அனுப்பப்பட்ட சமாசாரத்தை தன் குறிப்புப் புத்தகத்தில் உடனே பதிந்து கொண்டான். அந்த மனிதன் வெளியே வர, தரணீபதியும் அவன் பின்னாலேயே சென்று அவன் ஒரு ஹோட்டலில் நுழைவதைக்கண்டு, தான் இன்னும் அவனுடனேயே திரியவேண்டிய அவசியமில்லை யென்பதை யறிந்து தானறிந்த விஷயங்களை மாதவராவுக்கு 'ரிபோர்ட்' செய்யத் திரும்பினான். மாதவராவ் எல்லாவற்றையும் கேட்டு "அப்பா, தரணீ, எல்லாம் சரிதான், என்ன தந்தி விஷயம் என்பது தெரிந்தால் நமக்கு எவ்வளவோ நல்லதாயிற்றே!" என்றார்.

"ஸார், இதோ தந்தியின் காபி" என்று தான் வரைந்துள்ளதை எடுத்துக்காட்டினான்; மாதவராவுக்கு அளவில்லா ஆனந்தமுண்டாய் விட்டது. "பசங்களென்றால் இப்படியன்றோ எப்பொழுதும் சாமார்த்தியத்துட னிருக்கவேண்டும்" என்று சொன்னார்.

* தந்தி:—

"வீரவர்மன்,
10, வீரகோயில் வீதி, சென்னை,

அவளை அதிசீக்கிரம் அனுப்பிடவும். தீர்த்தஸேனன் ராஜிக்கு வரமாட்டேனென்கிறான்.
தியாகன்."

மாதவராவ் தந்தியைத் திருப்பித்திருப்பி படித்துப் பார்த்தார். அவர் முகம் ஏதோ வருத்தத்தை விளக்கிற்று.

* ஆங்கிலத்தில் இருந்தது பின்வருமாறு:—

Viravarman,
10 Virakoil Street, Madras
Send her over very early as Tirthasena offers no compromise either.

கடைசியில் "அப்பா, தரணீ, நீ வேறு யாரோ ஒருவனைப் பார்த்திருக்கிறாய்" என்றார்.

"இல்லை, ஸார், தாங்கள் சுட்டிக்காட்டிய மனிதனையே நான் பின்பற்றிச் சென்றேன்."

"இருக்கலாம், ஆனால் நான் குறிப்பிட்டுச் சொன்னவன் போலி நாணயங்கள் செய்வதில் மிக்க பேர்போன பேர்வழி. தந்திவிஷயமோ வெகு சாதாரணமாயிருக்கிறது. யாதொரு உளவும் இதில் அகப்படவில்லையே" என்றுசொல்லி அக்குறிப்புப் புத்தகத்தை தரணீபதியிடம் திருப்பிக் கொடுத்தார் மாதவராவ்.

"அப்படிப்பட்ட பேர்வழியா?" என்று மெதுவாய்ச் சொல்லிக்கொண்டே யோசனையில் ஆழ்ந்திருந்தான். 'சரி எனக்கு ஒரு புலனகப்பட்டுவிட்டது!" என்று மகிழ்ச்சியுடன் கூறினான். "இதோ பாருங்கள், தந்தியிலுள்ள வார்த்தைகளின் முதலெழுத்துக்கள் (Shove at once) தள்ளிவிடு, என்று பொருள் தருகின்றன." உடனே மாதவராவ் அக்குறிப்பை தாணியிடமிருந்து வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு "அப்படியா? ஆமாம்! அப்படிதான் செய்கிறார்கள். தள்ளிவிடு!, அதாவது: போலி நாணயங்களைச் செலுத்திவிடு-ஊம்-அப்படியே யாகட்டும்.—தாணீ நீதான் சாமர்த்தியசாலி. நீ இந்த வேலைக்கென்றே அவதரித்தவன்" என்று சொல்லி அவனைத் தட்டிக் கொடுத்தார்.

மாரிகாலஞ்சென்று வேனிற்காலம் வந்தது. தாணீபதியின் தாயார் வரவர சவுக்கியமாய்க் கொண்டே வந்தார்கள் அவர்கள் கஷ்டமெல்லாம் சிறிது சிறிதாய் நீங்கிக்கொண்டே வந்தன. கஷ்டம் நீங்கவும் மனோ வியாதியும் நீங்கலாயிற்று. தங்கள் வீட்டை மிக்க சுத்தமாயும் அழகாயும் வைத்திருந்தார்கள். தாணீபதியென்றால் எல்லாருக்கும் இஷ்டம். ஊரில் எல்லா முக்கியமான கேஸ்களும் தாணீபதிக்கே வந்து சேரும். ஆனால் இவனைவிட அனுபவசாலிகள் இந்தத் துப்பறியும் உத்யோகத்தில் இல்லையென்றல்ல. இவன் வயதையும் மதிநுட்பத்தையும் கருதியே மாதவராவ் இவன்மீது அவ்வளவு அன்பு செலுத்தலானார்.

ஆகஸ்ட்மீ ஒருநாள் காலை தாணீபதி தன் உத்யோக விஷயமாய் சென்னைக்குப்போகும் புகைவண்டியில் போய்க்கொண்டிருக்கிறான். இவனைப்போல சுறுசுறுப்பும் உத்ஸாகமும் உள்ளவர்கள் அவ்வண்டித் தொடரில் பிரயாணம் செய்தவர்களில் ஒருவராவது கிடையாது. வண்டி தாராபுரத்திலிருந்து சென்னைக்கு பாதி வழிகூட செல்லவில்லை. திடீரென்று ஏதோ முறிந்து விழுந்தது போல் ஓர் பயங்கரமான ஓசையுண்டாகி பிறகு ரயில் 'என்ஜின்' உடைந்து விடவும் ஏக கூச்சலுண்டாயிற்று. உடைந்த என்ஜினின் நீராவி யோசையும் பிரயாணிகள் போடும் கூப்பாடும் காதை செவிடுபடச் செய்தன. பிணைக்கப்பட்ட வண்டிகள் ஒன்றோடொன்று மோதவும், உள்ளிருந்த பிரயாணிகள் உள்ளிருந்தபடியே குப்புற விழுந்தார்கள். தாணீபதி மாத்திரம் உடனே எழுந்து ஏதோ ரயில் வண்டிக்கு விபத்து நேரிட்டது என்றறிந்து முன் வண்டிகளில் உள்ளவர்களுக்கு காயம் அதிக மென்பதைத் தெரிந்து அவர்களைப் பார்ப்பதற்கும் அப்படி காயப்பட்டவர்களுக்குத் தன்னாலியன்ற உதவிபுரியவும் தான் ஏறியிருந்த வண்டியினின்றும் குதித்துச் சென்றான்.

அம்மம்மா! தாணீபதி கண்ட காட்சியை என்னென்று கூறுவது! எங்குகண்டாலும் சேதம்! என்ஜின் ஒருபக்கம் சாய்ந்துகிடந்தது. வண்டிகள், முக்கியமாய் முன்வண்டிகள்-ஒன்றன் மேலொன்று மோதி உடைந்து கிடந்தன! உள்ளேயிருந்த சாமான்களெல்லாம் நாலாபுறமும் மூலைக்கொன்றாய் சிதறுண்டு கிடந்தன! வண்டியின் கீழ் நசுக்குண்டு இறந்து கிடந்தவர்கள் அனேகர்! உடைந்த துண்டுகளின் கீழ் விழுந்து எழுந்திருக்க சக்தியற்று உதவிக்காகக் கெஞ்சினவர் பலர்! ரெயில் கார்ட், இதர ரெயில்வே உத்தியோகஸ்தர்கள் ஆகிய இவர்களின் இரைச்சலோடு பிரயாணிகளின் கூக்குரலும் சேர்ந்து மகா தடபுடலாயிருந்தது.

"வைத்தியர்களையும் ஒரு ஸ்பெஷலையும் அனுப்பும்படி தந்தியடிக்கவேண்டும்" என்று ரெயில்வே கார்ட் சிலருக்குச் சொல்லிக்கொண்டிருப்பது தாணீபதியின் காதில் விழுந்தது.

"வண்டியில் தந்தியடிப்போனும் இருந்தான். பாவம் அவன் இறந்து விட்டானே! என்ன செய்வோம்!" என்று கூறுவதையும் கேட்டான் தாணீபதி.

"தந்தியடிக்கும் யந்திரம் ஒன்றும் கெட்டுப்போகவில்லையா?"

"இல்லை. உனக்கு தந்தியடிக்கத் தெரியுமா?"

"ஆகா, தெரியும், உங்களுக்காக வேலை செய்வதில் எனக்கு நிரம்ப சந்தோஷம்."

"அப்படியா, அதோ இருக்கிறது யந்திரம். இதோ கம்பிச்சுருள். சமாசாரங்களை நான் எழுதிவிடுகிறேன்."

தாணீபதி மிக்க சுறுசுறுப்புடன் வேலை செய்து, யந்திரத்தை சீர்படுத்தி தந்திக் கம்பிகளை வேண்டிய வண்ணம் கோத்து எல்லா தந்தியாபீஸுகளுக்கும் சமாசாரம் தெரியும்படி செய்தான். "நாம் நல்ல அதிர்ஷ்டசாலிகள். இம்மாதிரி ஒருவர் இருக்கவேண்டியது அவசியம். அப்பா இதோ தந்தியடிக்க சமாசாரங்கள்" என்று சில துண்டுக் கடிதங்களை தாணீபதியிடம் கொடுத்தான். தாணீபதி ஓர் பெட்டியை மேஜைக்குப் பதிலாய் வைத்துக்கொண்டு தந்தியந்திரத்தை அப்பெட்டியின் மீது பொருத்தி தான் கீழே முழந்தாளிட்டு உட்கார்ந்து தந்தியடிக்க ஆரம்பித்தான். அவனைச்சுற்றி வேடிக்கை பார்க்க வந்தவர் அனேகர். சிறிது பொழுதிற்கெல்லாம் எல்லாரும் எதிர் பார்த்த வண்ணம் ஸ்பெஷல் வண்டியும் வைத்தியர்களும் வந்து சேர்ந்தார்கள்.

இப்பொழுது தாணீபதிக்கு யாதொரு வேலையுமில்லாததினால் அவ்விடத்தில் சற்று உலாவிக் கொண்டிருந்தான். புகைவண்டி விபத்தில் எவ்வளவு சேதமுண்டாயிற்று என்பதைக் கவனித்துக் கொண்டேவருகையில் கீழே குப்புற ஒரு மனிதன் விழுந்திருந்ததையும், அப்படி விழுந்திருந்தவனது தலையைத் தன் மடியில் வைத்துக்கொண்டு ஓர் அழகிய பெண் உட்கார்ந்திருந்ததையும் கண்டு அப்பெண்ணருகில் சென்றான். கீழே விழுந்திருந்தவன் இறந்து விட்டான் என்பதையும், துக்கத்திலும் அங்கிருந்த பெண் தன் சௌந்தர்யத்தில் யாதொரு குறைவுபடாமலிருந்தலையும் கண்டறிந்



தான். உருவத்திலும் மனோபாவனையிலும் அப்பெண் சற்று தாணீபதியை ஒத்திருந்தாள். கொவ்வைப்பழம் போன்ற இதழும், அகன்று நீண்ட கண்களும், மேகம்போன்ற கரிய கூந்தலும், வருத்தத்திலும் யாதொரு தாழ்வையுமடையாத சோபையும் அவளது இயற்கைக்குணங்களை எடுத்துக்காட்டுவன போலிருந்தன. அவள் சற்று வாடின முகத்தினளாய் இருப்பதை தாணீபதி கவனித்தான். பரிதாபத்துடன் மெல்லிய குரலில் "அவர் உன் தகப்பனாரோ?" என்றான் தாணீ.

யாரென்று உடனே தலையை நிமிர்த்திப்பார்த்தாள். அவன் தந்தியடித்துக் கொண்டிருக்கும்பொழுது தான் கவனித்த இளைஞனென்று அறிந்து "ஆமாம்" என்று மாத்திரம் பதில் அளித்தாள்.

ஆனால் உடனே அம்மொழி வரவில்லை, உள்ளதைச் சொல்லுவதற்குச் சற்றுயோசித்தனளோ, அல்லது உண்மையையே மொழியவில்லையோ நமக்கு இப்பொழுது ஒன்றும் தெரியாது.

"இறந்து விட்டனரே!"

"ஆமாம், எனக்குத்தெரியும்."

"உனக்கு உற்றதுணை யாராவது இங்கு இருக்கிறார்களோ?"

தாணீபதியை நன்றாய் உற்றுநோக்கி, "இல்லை" என்றாள் அம்மாது.

அப்பெண்ணுக்கு எவ்விதமாய் உபகாரம் செய்வது என்பதை யறியாமலும், ஏதாவது உதவிசெய்தால் தன்னை என்ன நினைப்பார்களோ என்னும் எண்ணமுடையவனும் அவ்விடத்திலேயே சற்று நின்று கொண்டிருந்தான்.

"பாவம், உனக்கு இப்படிப்பட்ட கஷ்டம் வரக்கூடாது!" என்றான் தாணீபதி.

"என்ன செய்யலாம்! எல்லாம் ஈசன் செயல்!" என்றாள் அப்பெண்மணி.

"இப்பொழுது வெகுசாந்தமாயிருக்கிறாள். பாய்ந்தால் புலிபோலிருப்பள்!" என்று தனக்குள்ளே அவளது இயற்கையைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். இப்படி அவன் எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் வைத்தியர்களும், மற்று உதவிபுரியவந்த ஆட்களும் பெருங்கூட்டமாய் அப்பக்கம் வந்து கொண்டிருந்தார்கள்.

அச்சிறுமி அக்கூட்டத்தைக்கண்டு மிகவும் அஞ்சினவளாய் தாணீபதியை கெஞ்சும் பாவனையாய் கடைக்கண்ணால் நோக்கினாள். தழுதழுத்த குரலில்: "தயவுசெய்து சற்று எனக்குத் துணையாக இருப்பீர்களா? அவர்களைக்காண எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது" என்றாள். அங்கு வந்த வேலையாட்கள் அச்சிறுமியைச் சிறிதேனும் கவனியாதவர்களாய் கீழே இறந்திருந்த மனிதனைத் தூக்கினார்கள். அப்பெண்ணுக்கு மகா கோபம் பொங்கிவிட்டது. என் செய்வாள் பாவம்! தாணீபதியை நோக்கி மிகவும் பரபரப்புடன்: "நீர்தான் எனக்குத் துணை. உங்களையேதான் நம்பியிருக்கிறேன். அச்சவத்தை மறுபடியும் எளிதில் கண்டறியக்கூடுமோ என்று நன்றாய்க் கவனித்துக்கொள்ளும். அவர் சட்டையிலுள்ள கைக்கடியாரத்தையும் மற்றுமுள்ள சாமான்களையும் எடுத்துக்கொண்டு வாரும். அவர் இடுப்பில் நேர்த்தியான வார்க்கச்சை ஒன்றிருக்கிறது. அதையும் எடுத்துக்கொண்டு வாரும்" என்று கூறினாள்.

இப்படி அவள் வெகு கம்பீரத்துடன் மொழிந்ததைக்கேட்டு ஆச்சர்யமடைந்தவனாய் பதிலுரைக்காமல் அவள் சொல்லியவண்ணம் செய்ய முயன்றான். பிணத்தைத் தூக்கவந்த இருவரை நோக்கி தான் இறந்துபோனவரது உடுப்பிலிருக்கும் சொத்துக்களை எடுத்துக்கொள்ளும்வரைச் சற்று நிற்கச்சொன்னான். அவர்கள் சற்றுத்தயங்கவும் உடனே கடியாரத்தையும் சட்டையிலிருந்த குறிப்புப் புத்தகத்தையும் எடுத்துக்கொண்டான்.

அருகில் நின்றுகொண்டிருந்த ஒருவன், "ஏ, என் அப்பையனை இப்படி விடுகிறீர்கள்; ஏதாவது இப்பயல் உறவினனோ! திருட்டுப்பயலாயிற்றே!" என்றான். ஆட்களில் ஒருவன் திடீரென தாணீபதியின் கையைப் பிடித்துக்கொள்ள, நம் தந்திரபாலன் அவன் பிடியை உதறித்தள்ளிவிட்டு, தன்னை இகழ்ந்துரைத்தவன் யாரெனக் கண்டறிந்துகொண்டான். கைப்பிரம்பு, முறுக்கிவிட்ட மீசை, சிவப்புத்தலைப்பாகை, அல்பாகாசட்டையுள்ள மனிதன்! எப்பொழுது இவனைப்பார்த்திருக்கிறான் நம் தாணீபதி! வேற்றுக் குரலாகவும் இல்லை!

"இவன் என் நேசன். இறந்துபோனவர் என் தகப்பனார்," என்று அழுத்தமாகவும் திருத்தமாகவும் அப்பெண் கூறலானாள். சற்றுமுன் பேசிய அந்நியன்மீது அவளுக்குண்டான ஆக்ரோஷத்திற்களவில்லை.

"ஆமாம், அவர்கள்—அம்மனிதனும் சிறுமியும் வண்டியில் உட்கார்ந்திருந்ததை நான் பார்த்தேன். அவர்கள் மைசூர் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கவேண்டுமென்று அப்பொழுதே நினைத்தேன்" என்று அங்கிருந்த ஒரு பிரயாணியும் சொன்னான்.

"ஓ, அதெல்லாம் சுத்த பொய். அவன் அவள் தகப்பனல்ல. அந்தப் பயல் சுத்த முடிச்சுமாறி. இறந்து போயிருப்பவன் என் நண்பன் வீரவர்மன். சென்னையில் பாங்க் நோட் செதுக்கு வேலை செய்பவன். அவரது உடலையும் சொத்துக்களையும் நான் பார்த்துக் கொள்கிறேன்."

"அப்பப்பா! நீ சொல்வதெல்லாம் சுத்த அபத்தம், த்யாகு, நீ எப்பவாவது எங்கப்பாவுடன் நேசமாயிருந்ததுண்டா, சொல், பார்ப்போம்" என்று அவ்வந்நியனைக் கண்டு கூவினாள் அச்சிறுமி.

"இதோ பாருங்கள், [illegible] ஜனங்களுக்குத் தெரியும் என்பதை ஒப்புக் கொள்கிறாள்" என்று இளித்துக் கொண்டே கும்பல்கூடியிருந்த ஜனங்களை நோக்கிக் கூறினான்.

த்யாகன்! வீரவர்மன்! யார் இவர்கள்! யோசித்தான் தாணீபதி. முன்ஞாபகம் வந்துவிட்டது! கும்பல் வரவர அதிகமாகத் தொடங்கிற்று. சிறுமியை

நோக்கி, "வார்க்கச்சையென்று கூறினாய்?" என்றான் தாணீ.

"ஆம், அதுவும் சாமானின் ரயில்வேசீட்டும்." தாணீபதி குனிந்து அவைகளை எடுக்கச் சென்றான். சிவப்புத் தலைப்பாகையான், "அப்பா, என்ன கெட்டிக்காரத்தனம். திருட்டுப்பயலைப் பாருங்கள். இம்மாதிரி இறந்து போனவன் உடைகளை யாரோ ஒருவன் சோதனை போடலாமா?"

பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சற்று வாயாடியான ஒருவன்: "நீ யாரப்பா, பிரமாதமாய் இறந்து போனவனைப்பற்றிப் பரிந்துபேச வந்துவிட்டாய்! அடே! மோரையைப் பாரடா! உனக்கு அந்த கடியாரமும் குறிப்புப் புத்தகமும் ரொம்ப அவசியம்போலிருக்கு! ஸ்பெஷலுக்காகத் தந்தியடித்து நன்மை செய்தவன் இச்சிறுவன். உன்னைவிட எவ்வளவோ யோக்யனாகக் காணப்படுகிறான். ஜாக்ரதை!"

எல்லாரும் இதைக் கேட்டுச் சிரித்தார்கள். சிவப்புத் தலைப்பாகையான் தன் நூதன எதிரியை உற்று நோக்கி, தன் சட்டையின் உட்புறத்தில் கையை விட்டான். தாணீபதியோ வார்க்கச்சையையும் ரயில்வே ரசீதையும் எடுத்துக்கொண்டு, "கனவான்களே, இப்படிச்சற்றுப் பாருங்கள்; நான் தாணீபதியென்னும் தாராபுரத்துத் தந்திரபாலன். துப்பறியும் போலீஸ் உத்யோகத் தலைவர் மாதவராவ் அவர்கள் எனக்களித்திருக்கும் உடையும் தாக்கீதும் என்னிடத்திலிருக்கின்றன. வேண்டும்போது காட்டத் தயாராய் இருக்கிறேன். இதோ இங்கே சச்சரவு செய்து, கண்டபடி பேசும் மனுஷ்யன் யாரெனில், போலி நாணயங்கள் செய்வதில் மகா கியாதிபெற்ற பேர்வழியாகிய தியாகராஜன்" என்று சொல்லி முடிப்பதற்குமுன் அம்மனிதனின் முகம் வெளுத்துப் போய்விட்டது. தாணீபதியோ விடாமல் சற்று உரத்த குரலில், "இதோ இறந்துள்ள மனிதன் இவன் தொழிலில் கூட்டுவேலை செய்து வந்தவன். இவன் மீது குற்றம் ஏற்படக் கூடிய ஏதாவது வார்க்கச்சையில் இருக்குமோ வென்று இவன் அஞ்சுகிறான். நான் இவர்கள் இருவரையுமே தேடிப் பின்பற்றிவந்திருக்கிறேன்.' சோதனையின் பொருட்டும் இறந்து போனவனது குழந்தையாகிய இச்சிறுமியின் வேண்டுகோளினிமித்தமும் இச்சொத்துக்களை நான் கைப்பற்றுகிறேன்" என்றுபேசி அச்சிறுமியை நோக்கினான். அவள் தன் முகக்குறிப்பினால் அவனுக்கு ஒன்றும் வெளிப்படுத்தவில்லை. அவர்கள் இருவரும் ஒருதொழிற் கூட்டாளிகள் என்று தாணீபதிக்குத் தெரியாமலிருந்தபோதிலும் தைரியமாய் மனதில் தனக்குத் தோன்றினதை யுரைத்தான். ஜனங்களும் உண்மையென்றே நம்பி விட்டார்கள்.

தியாகராஜன் (கோபத்துடன்):—"அடே, நீ திருடன், சுத்த அயோக்யன்" என்று கூறிக்கொண்டே கையில் ஒரு பெரிய கத்தியுடன் தாணீபதியை நோக்கி எதிர்க்க வந்தான்.

ஆனால்சிறுமியோ திடீரென ஓர் சிறிய பிச்வாவைத் தன் மார்பினின்று எடுத்து "தாணீ, தாணீ, இதோ இதை எடுத்துக்கொள்" என்று கூவினாள். எல்லாரும் ஆச்சர்யமடைந்தார்கள். தாணீபதியும் மிக்க வியப்படைந்தபோதிலும் அப்பிச்வாவை வாங்கிக்கொள்ளாமல் தன்சட்டையின் உட்பையிலிருந்த கைத்துப்பாக்கியை சரேலென எடுத்து மருந்தெடுத்துக் கிடித்து சுடும்பாவனையில் நின்று, "அடே, அப்படியே நிற்கிறாயா? அல்லது சுடட்டுமா உன்னை, என்ன?" என்று அதிகாரத்துடன் பேசலானான்.

தியாகராஜன் ஒருபெரும்பயங்காளி; தவிர அவனுக்குச் சிறிதேனும் மதிநுட்பமும் கிடையாது. தாணீபதியோ தன்காரியத்தை முடிப்பதில் கண்ணாயிருப்பவன்; வெகுகம்பீரத்துடன் சுடுவதற்குத் தயாராயிருந்தான். கடைசியில், தான்செய்தது பிழை என்று த்யாகு அறிந்து கொண்டான். கூட்டத்தில் எல்லாரும் தாணீபதியின் பக்ஷமாயிருப்பார்கள் என்றும் அவனுக்குத் தெரிந்தது. நேரே வந்து கொண்டிருந்தவன் திடீரென நின்று, ஆவென்றுகதறி, தன் மதியீனத்திற் கறிகுறியாக சற்றுத் தலையசைத்து, கத்தியை முன்போல தன் சட்டைப்பையில் போட்டுக்கொண்டு வந்தவழியை நோக்கிப்போகலானான். எல்லாரும் நகைத்தார்கள்.

சற்று வாயாடியாயிருந்த பிரயாணி: "அடே, பையன் ஏமாந்த பேர்வழி என்று நினைத்து விட்டையோடா?" என்றான்.

தாணீபதி புன்னகைசெய்து தன் கைத்துப்பாக்கியைத் தன் சட்டைப்பையில் போட்டுக்கொண்டான். ரயில்வே கார்ட் அவனருகில் வந்து, "அந்தப்பயலுக்கு அப்படிதான் செய்யவேண்டும், நல்லது, நீ தந்தியடித்தாயே, அதற்காக உனக்குச் சேரவேண்டிய தொகையை கம்பெனியார் கொடுப்பார்கள், உன் விலாசம் என்ன, தம்பி."

தாணீபதி சற்று மயங்கி. "உங்—எனக்கு அப்படி அதற்காகப் பணம் ஒன்றும் வேண்டியதில்லை."

"இறந்துபோன தந்தியாபீஸரது உத்யோகத்தை உனக்குக் கொடுக்கச்சொல்கிறேனே!"

"ஸார், ஏற்கனவே நான் நல்லவேலையிலிருக்கிறேன். வேண்டுமானால் எனக்கு என்—இவளுக்கு உதவி செய்யுங்கள், அவள் தந்தையின் உடலை—"

"தெரிந்துகொண்டேன், தெரிந்துகொண்டேன். உலகநாதன்!"

அப்படி உலகநாதன் என்று கூப்பிடப்பட்டவன் இருப்புப்பாதைக்கு அருகில் வசித்து வந்த ஓர் குடியானவன். அவன் வந்ததும் தாணீபதியை நோக்கி, தான் என்ன செய்யவேண்டும் என்று கேட்கும் பாவனையில் நின்றான். தாணீபதி பேசுவதற்குப் பதிலாய் அருகிலிருந்த சிறுமி உடனே: இதோ என் தகப்பனார் இறந்துகிடக்கிறார். தயை செய்து அவரை அடக்கம் பண்ணுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுகின்றேன், செலவுக்கு வேண்டியதெல்லாம் தங்களுக்குக் கிடைப்பது மன்றி வேண்டியமட்டும் இனாமும் அளிக்கிறோம். எங்கள் அத்தையின் விலாஸத்தை எழுதிக்கொள்கிறீர்களா!" என்றாள்.



அப்படியே உலகநாதன் எழுதிக்கொண்டவுடன், "நானே உங்கள் வீட்டிற்கு வருகின்றேன்" என்று சொல்லிவிட்டு வேண்டிய காரியங்களைச் செய்ய முயன்றான். அதற்குள் ரயில்வேகார்ட் தாணீபதியிடம் வந்து "தந்தியந்திரத்தையும் தந்திக் கம்பிகளையும் எடுத்து விடவேண்டுமே!" என, "இதோ வந்துவிட்டேன்" என்று தன் பக்கத்திலிருந்த சிறுமிக்குச் சொல்லிவிட்டு குறித்த இடத்திற்குச் சென்றான். தன் தாயாரும் மாதவராவும் புகைவண்டி விபத்தைப் பற்றிக்கேள்விப்பட்டுத் தன்னைப்பற்றி ஒன்றும் தெரியாததினிமித்தம் வருந்துவார்களேயெனக் கருதி, தந்திகளைக் கழற்றுவதற்குமுன் தன் க்ஷேமத்தைப் பற்றி மாதவராவுக்குத் தந்தி மூலமாயே தெரிவித்தான். எல்லாவற்றையும் பிரித்து வண்டியில் சேர்த்த பிறகு சிறுமியை விட்டுப்பிரிந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான். அவளைக் காணவில்லை. ஆனால் அங்குமிங்கும் பார்க்கையில் சற்று தூரத்தில் முழங்காலின்மேல் கை ஊன்றிகொண்டும், கன்னத்தின் மீது உள்ளங்கையைப் பதிய வைத்துக்கொண்டும், ஓர் மரத்து நிழலில் அவள் உட்கார்ந்திருந்ததைக் கண்டான். தாணீபதியும் சென்று அவள் பக்கத்தில் உட்கார்ந்தான். இருவரும் இருப்புப்பாதையில் வேலை செய்யும் கூலியாட்களைக்கவனித்துக்கொண்டிருந்தார்கள். சற்றுநேரம் கழித்து தாணீபதி, "உன்பேர் என்ன? எனக்குச் சொல்லவில்லையே!" என்றான்.

...வெகுநேரம் மௌனமாயிருந்து, பிறகு "ஆமாம், சொல்லவில்லை.—என்பேர்—நீலாம்பாள்" பிறகுமறுபடியும் மௌனம்.

"நாம் இப்பொழுது போக சாத்யப்படாதோ?"

"உஹும்—முடியாது. ஆனாலும் வேலை வெகு சீக்கிரம் நடந்துவருகின்றது."

"அப்படியா? இருக்கட்டும்—எங்கப்பா உனக்குத் தெரியுமோ? அவரையா பின்பற்றி வந்தாய்?"

"இல்லை, இல்லை. நான் அப்பொழுது வேண்டுமென்று சொன்னேன். உங்—அவர் உன் தகப்பனாரா? எனக்குத் தெரியாதா?"

நீலாம்பாள் திடுக்கிட்டு விட்டாள்.

"உனக்கெப்படித் தெரியும்?"

தாணீபதி நகைக்கலானான்.

"அப்பா, உன்னைக்கண்டால் எனக்குப் பயமாயிருக்கிறது!" என்று தாணீபதி அறிய விரும்பியதை அவன்நேரில் கேட்காமலே ஒத்துக் கொண்டுவிட்டாள்.

"நீ சென்னைக்கா போகிறாய்?"

"ஆமாம்."

"நீ என்னுடன் எங்கள் வீட்டிற்கு வரவேண்டும்."

"அம்மம்ம! என்னால் முடியவே முடியாது."

"அப்படியெல்லாம் சொல்லக்கூடாது." குறிப்புப் புத்தகத்தை எடுத்து, இதோ வீரவர்மரின் டிக்கட் இருக்கிறது. நீ அதை உபயோகப்படுத்திக் கொள்ளலாமே!" என்றாள். "வேண்டியதில்லை. எனக்கு என்னுடைய சொந்த டிக்கட் இருக்கிறது. நீ முன்னே அவரை உன் தகப்பனார் என்று சொன்னாயே?"

நீலாம்பாளின் முகத்தில் கோபமும் வருத்தமும் வந்துபோய்க்கொண்டிருந்தன.

"இப்படியெல்லாம் என்னைக்கேட்கவேண்டியதில்லை. என் சமாசாரத்தைப்பற்றி ஒன்றுமே நீ அனாவசியமாய்க் கேட்பதில் யாதொரு பிரயோஜனமுமில்லை. அப்படிக் கேட்டால் உன்னுடன் பேசவுமாட்டேன். என்னோடு எங்கள் வீட்டிற்குமாத்திரம் வந்துவிட்டுப் போகவேண்டும்."

"இவ்வளவு தூரம் நீ சொல்கிறபடியால் ஆகட்டும், வருகிறேன்."

"அப்பா, வருகிறேன் என்பதற்கு இவ்வளவு பாடா" என்று சொல்லி ஏதோ கன்னட பாஷையில் சொல்லிக்கொண்டாள். தாணீபதியைக் கடைக்கண்ணால் பார்த்து, தான் சொன்னதில் ஏதாவது வருத்தமுண்டாயிற்றோ என்று வியப்படைந்தாள்.

தனக்குத் தானே "ஏனோ சொல்லுகிறபடியெல்லாம் கேட்கிறது" என்று சொல்லிவிட்டு பிறகு "நீ தியாகராஜனை சுட்டுவிட்டிருப்பாயோ?" என்றாள்.

"அப்படியே, வாழைமரத்தைச் சாய்க்கிறது போல சாய்த்துவிட்டிருப்பேனே!"

"நான் பிச்வாவைக்கொடுக்க வந்தேனே. ஏன் வாங்கிக்கொள்ளவில்லை?"

"எனக்கு எதற்குவேண்டும்? நீ ஏன் பிச்வா வைத்திருக்கிறாய்? எனக்கு ரொம்ப ஆச்சர்யமாயிருக்கிறது?"

"அப்படியா? நான் ஏன் வைத்திருக்கிறேனென்றால்—" என்று ஏதோயோசனை செய்துகொண்டே பேச்சை நிறுத்திவிட்டாள். சற்றுக்கழித்து "உனக்கு வேண்டுமானால் அதைக்கொடுத்து விடுகிறேன்" என்றாள்.

"ஊங்—அது எனக்கு எதற்கு? வேண்டாம்.

அவளுக்கு வருத்தம் வந்துவிட்டது.

"அப்பப்பா! உன்னைப்போலத்தான் இருக்கவேண்டும்! பிச்வாவைப் பார்த்தாயா? தங்கத்தில் வைரம் பதித்துள்ள பிடியைப் பார்."

"ஆமாம், போயும் போயும் பிச்வாதான் உன்னிடத்திலிருந்து வாங்கிக்கொள்ள வேண்டுமாக்கும். உன் ஞாபகார்த்தமாய் வேறு ஏதேனும் கொடுத்தால் எனக்குச் சந்தோஷம்."

அப்பொழுதுதான் அவள் வருத்தம் நீங்கிற்று.

"தாணீ! நீ எப்பொழுதும் என்னை மறந்துவிடக்கூடாது." என்று தாணீபதியை கடைக்கண்ணால் நோக்கினாள். தாணீபதியும் அவளை நோக்கினான்.

"தியாகராஜனைப்பற்றி உனக்கென்ன தெரியும்? கொஞ்சம் சொல்வாயா?"

"நீ துப்பறியும் போலீஸ் வேலையிலிருக்கிறாய். வேறு யாரையாவது கேள்."

தான் தகாத மனிதர்களுடன் வசிப்பதாகவும் அவர்கள் ரஹஸ்யங்களைத் தான் தெரியப்படுத்தக் கூடாதென்றும் இவள் வார்த்தையால் வெளியாய் விட்டது.

“இவளென்ன? துஷ்டையோ? ஏதாவது அபாயம் நேரிடுமோ? என்ன நேரிடப்போகின்றது? தெய்வாதீனம். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்துவிட்டது!” என்று தரணீபதி தனக்குத் தானே பேசிக்கொண்டான்.

தியாகராஜன் தன் பிரம்பைச் சுழற்றிக்கொண்டே மரத்தின் பின்னால் சென்றான். தரணீபதி அவன் போவதைக் கண்டு எழுந்து நின்றான்.

“அடே, உன்னை இன்னும் விட்டு விடவில்லை, ஜாக்கிரதை” என்று கோபாவேசத்துடன் கர்ஜனை செய்தான் தியாகன்.

“அப்படியா, ரொம்ப சந்தோஷம். இன்னம் கூட வேண்டுமானால் சேர்த்துக்கொடுக்கிறேன்” என்று புன்னகையுடன் புகன்றான் தரணீ.

“அடே பயலே, ஆகட்டும் வட்டியும் முதலும் தீர்த்துவிடுகிறேன், பார்” என்று கறுவினான் தியாகன்.

“சரிதான்” என்று உடனே தியாகன் அனுப்பிய தந்தி சமாசாரத்தை ஒப்புவித்தான் தரணீ. தியாகன் திடுக்கிட்டான். அவன் முகம் வெளுத்துப்போய் விட்டது.

“அடே நீ மகாகெட்டிக்காரன் என்று நினைத்துக் கொண்டனையோ?—நீலா, நீ உன்னைச் சேர்ந்தவர்களுக்கு துரோகஞ்செய்ய ஆரம்பித்துவிட்டாய்!” என்றான் தியாகராஜன். “ஆமாம், அது என்னிஷ்டம். உன் திருவாயை மூடேன்” என்றாள் நீலாம்பாள்.

“அப்படியா, உன்னையும் விடுவதில்லை, தீர்த்து விடுகிறேன்.”

நீலாம்பாள் மிக்க கோபத்துடன் எழுந்தாள். ஆனால் தரணீபதி அவளைத் தடுத்துவிட்டான். நீலாம்பாள், “அவனைக் கழுவேற்றினாலும் தோஷமில்லை.” என்று தியாகராஜனுக்குக் கேட்கும்படியாய்க் கூறினாள். தியாகராஜனோ நடந்துகொண்டே மௌனமாய்ப் போய்விட்டான்.

தரணீபதியும் நீலாம்பாளும் அவ்விடத்திலேயே சற்றுநேரம் உட்கார்ந்து இளைப்பாறிவிட்டுப் பிறகு தங்களுடைய பெட்டிகள் இருக்குமிடத்தை யடைந்தார்கள்.

---

**பொன் விளைவு.**—நடந்த 1913-ம் வருஷத்தில் உலக முழுவதிலும், 455 லக்ஷம் டாலர் பெருமான தங்கம் விளைந்திருக்கின்றதென்றும், 1912-ம் வருஷத்தை விடப் பதினொரு லக்ஷம் டாலர்கள் பெருமான தங்கம் குறைந்திருக்கின்றதென்றும் கணக்கிடப்பட்டிருக்கின்றது.

## Abou Ben Adhem and the Angel

Abou Ben Adhem (may his tribe increase)
Awoke one night from a deep dream of peace,
And saw, within the moonlight in his room,
Making it rich, and like a lily in bloom,
An angel writing in a book of gold:—
Exceeding peace had made Ben Adhem bold.
And to the presence in the room he said,
"What writest thou?"—The vision raised its head,
And with a look made of all sweet accord,
Answered, "The names of those who love the Lord."
"And is mine one?" said Abou. "Nay, not so,
Replied the Angel. Abou spoke more low,
But cheerly still, and said, "I pray thee then,
Write me as one that loves his fellow-men."
The Angel wrote, and vanish'd. The next night
It came again with a great wakening light, [bless'd,
And show'd the names whom the love of God had
And lo!; Ben Adhem's name led all the rest.

## ஆபு பென் ஆதமும், தேவதூதனும்

ஆபு பென் ஆதம்.—(அவன் குலம் ஓங்குக)
நீடிய சுகத்துயில் நின்றும் ஓர் இரா
விழித்தெழுந்தனன் அவன்: விண்ணவன் ஒருவன்:
நன்கலர் அல்லி நாண்மலர் எனவே
சந்திரி கையினைச் சுந்தர மாக்கி அந்
நில வெளிச்சத்தினின் ஒரு செம்பொன்
ஏட்டினில் ஏதோ எழுதக் கண்டனன்
பேரமைதியினாற் பென் ஆதாம் பயம்,
நீங்கித் துணிவுகொள் நெஞ்சினனாகி
அறையினில் தன் முன்னாகநின்றவனை
“எழுதுவதென்னை?” என்றனன். தலைநிமிர்ந்
தார்வமிக்க பார்வையினோடும்
“ஈசனிடத்தே நேசமுள்ளோர்களின்,
நாமமே” என்ன நவின்றதவ்வுருவம்.
“என்னதும் ஒன்றோ?” என்றனன் ஆபு.
“இலை அவ்வாறிலை” என்றனன் தேவன்.
தன் குரல் தாழ்த்தியும் தளர்வில் மனத்துடன்
ஆபு கூறினன்: “அங்ஙன மாயின்,
ஒத்த சிருஷ்டியில் 2 உழுவலன் புடையவன்
என என்னை எழுதுமா 3 றிறைஞ்சுகிறேன். என
வரைந்து வானவன் மறைந்தனன்; மறுநாள்
இரவினில் அவனை எழுப்புபே ரொளியுடன்
அந்தத் தேவனே அவன்முன் வந்து நின்
றிறை 4 நேசப்பேறு எய்தியோர் பெயர்களை
எடுத்துக் காட்டினன். எவற்றினுக்கும் முத
லாகநின்றது பென் ஆதமின் பெயரே.

பண்டித ம. கோபாலகிருஷ்ணையர்.

* மன்னுயிரிடத்தில் மெய்யன்புடையவர்களே பகவத் பக்தியிற் சிறந்தவராவர் என்ற உயர் நன்னீதியைப் புகட்டும் இச்செய்யுள், “James Henry Leigh Hunt” என்ற மேற்றிசைப் புலவர் இயற்றியது.

1. ஆர்வம்=அன்பு
2. உழுவலன்பு=விடாது தொடர்ந்த அன்பு
3. இறைஞ்சுகிறேன்=பிரார்த்திக்கிறேன்
4. இறை=கடவுள்



# வஸந்த மாளிகை
## VASANTHA MALIKAI
### அத்தியாயம்-18
### மனவேதனை
### Mental Anguish

தர்பார் கலைந்ததும், மஹாராணியார், நரசிம்மராஜனை ப்ரத்யேகமாயழைத்துப் பலவிதமாய் ஆறுதல் சொல்லியனுப்பினாள். ஆயினும், யந்திரப்ரயோகமான பாவைபோல, தந்நினைவற்று, நரசிம்மராஜன் தன் அரண்மனை வந்து அந்தப்புரம் ப்ரவேசித்தான். உடனே வேலைக்காரன்வந்து, அவருடைய உடைகளைக் கழற்றிவிட்டு, அவருடைய உத்தரவை எதிர்பார்த்துச் சற்று வணக்கமாய் நின்றான்,

‘சரி போகலாம், கூப்பிடும்பொழுது வா!’ என்று அவனை அனுப்பிவிட்டுத் தன் இருகைத்தலங்களாலும் தன் கபோலங்களைப்பிடித்துக்கொண்டு அப்படியே ஸோபாவில் சாய்ந்தான்.

‘உலகவாழ்வில் எது பெரிது? பெண் பெரிதா. பணம் பெரிதா? பதவி பெரிதா? அல்லது இவைகளெல்லாங்காட்டிலும் பேரின்பம் என்பது பெரிதா? முதலாவது, பேரின்பமென்பது தான் ஒன்றுண்டோ?

என்று பலவாறு சிந்திக்கலானான். ஒரு சமயத்தில் சரி! இவ்வமானத்துக்கு எவ்வளவு தூரம் உட்படுவது! வருவனவரட்டும், மஹாராணியிடம் சென்று எல்லா ரகஸ்யங்களையும் வெளியிட்டு, என் காதலியுடன் எங்கேயாவது சென்று மீத வாழ்நாட்களையாவது மனவமைதியுடன் கழிக்கின்றேன்!—ஆனால் இப்பதவியை யிழக்கவா? —எவ்வளவு கஷ்டப்பட்டு இப்பதவி யடைந்தேன்?—என்ன பதவி! என்று பலவாறு சிந்திக்கலானான். கருங்கடல் நடுவில் பெரும்புசலில் அகப்பட்டுத் தத்தளிக்கும் கப்பல் போல, அவன் மனம் நிலைபற்றுத் தவித்தது.

இந்நிலைமையில் வேலைக்காரன் ப்ரவேசமாய் மஹாராஜ்! மஹாவீரர், பேட்டிக்குக் காத்துக்கொண்டிருக்காங்கள் ஆசாரவாசலில்’ என்று தெரிவிக்க, நரசிம்மராஜன் ‘சரி’ யென்று மெதுவாய்த் தலையசைத்தார்.

சிறிது நேரத்தில் மஹாவீரன் ப்ரவேசமாய், நரசிம்மராஜனை ‘மஹாராஜ்!’ என்றழைத்து ராணுவ சலாமிட்டு முன் நின்றான். “மஹாவீர! நீ ஏதோ புத்திமான் என்று எண்ணியிருந்தேன். நீ தர்பாரில் செய்தவேலையானது எனக்குப் பலவித துன்பங்களுக்கு ஏதுவாய் விட்டது!—”

‘மஹாராஜ்! அப்படியானால், தங்களுடையபரமரகஸ்யத்தை அச்சபையினடுவே வெளியிட்டு, எவ்வளவோ கஷ்டப்பட்டுச் சம்பாதித்த தங்கள் பதவிக்கும் கேடு விளைவித்து, ‘சிரிப்போர் கண் முன் இடறிவிழுவது போல,’ அதோகதியாய்ப்போகுமாறு நான் செய்யவில்லையென்று மஹாராஜா உத்தரவாகிறதோ? மஹாராஜ், தாங்களே இருந்தார்களே! அடியேன் சொன்னதை உடனே மறுத்து, அதனால் ஏற்படும் கஷ்டத்துக்குத் தாமே உட்பட்டுக் கொண்டிருக்கலாமே. மஹாராஜ் தங்கள் அன்னத்தைப் புசித்த அடியேன், எவ்வாறு செய்யலாம். அதெல்லாம் எஜமானத் துரோகிகளும் உண்டவீட்டுக்கு இரண்டு நினைக்கும் பாதகர்களும் செய்யும் வேலையல்லவா?”

‘அதுவும் வாஸ்தவந்தான்,’ என்று சொல்லிக் கொண்டே நரசிம்மராஜன், அவ்வறையில் முன்னும் பின்னும் சிந்தையுடன் நடந்துகொடுத்தான்.

“அல்லது, மஹாராஜ்! தங்கள் பதவிக்குக்கேடு காதல்—”

“என்ன சொன்னாய்? மஹாவீர!”

“மஹாராஜ்! கடைசியாய் என்மனத்துன்பத்தை வெளியிட்டு விடுகின்றேன். மஹாராணியவர்களின் பேத்தியைத் தாம் விவாஹம் செய்ய நேர்ந்தால்,—அது விஷயத்தில் எனக்கு யாதொரு சந்தேகமும் தோன்றவில்லை—; சொக்கநாதன் கட்சி கடைசியாய்த்தோற்றுப் போகும் விஷயத்தில்—அதுவும் நிச்சயம்—; மஹாராஜ்! அடுத்த வாரிஸ்யார்,—! இப்பெரியபதவியைக் கேவலம் ஒரு—க்ராமாந்தரப் பெண்—

**நரசிம்மராஜன்;**—என்ன பிதற்றுகின்றாய்! மஹாவீர! மீசை முளைத்த ஆண்பிள்ளைக்கு லக்ஷணம், சம்பாதித்தாளுவதல்லவா? கேவலம் தன் மனைவியின் சொத்தைக்கொண்டு பிழைப்பது பேடியின் குணமல்லவோ? என்ன நினைத்தாய் நான் நாயக்கர் வம்சத்துதித்தவன் என்பதைச் சற்றேனும் மறந்தாயோ—?”

‘மஹாராஜ்! நேரக்கூடிய ஆபத்துகளை நிர்ப்பயமாய்த் தெரிவிப்பதே அபிமானமுள்ளவர்க்கழகு. மஹாராஜ்! தங்களிடம் முகஸ்துதியாய் வார்த்தைகளைச் சொல்லி நல்லபிள்ளை யென்ற பெயர் பெற்றுச் செல்லலாம். ஆனால் அடியேன் அப்படிச் செய்வதென்றால் உண்ட வீட்டுக்கு இரண்டு நினைத்தவனாவேன். அடியேன்—ஏழை வார்த்தை யம்பலம் ஏறுமா?—மஹாராஜ்—!”

**நரசிம்மராஜன்:**— சற்று ஆலோசித்துவிட்டு, “கூசாமல் சொல்லு உன் அபிப்ராயத்தை—”

மஹாராஜ்! அரசர்கள் எத்தனை மனைவிகள் வேண்டுமானாலும் விவாஹம் செய்துகொள்ளலாம். அடியேன் கூறுவதென்னவென்றால், சொற்பகாலம் தங்களுக்கும் பாநுமதிக்கும் உள்ள பாந்தவ்யம் ரகஸ்யமாகவே இருக்கவேண்டும். மஹாராணியவர்கள் பேத்தியைத் தமக்கு விவாஹமாய், சொக்கநாதருடைய தடையன்னியில் ராஜ்யம் தமது வசம் ஸ்திரப்பட்டபிறகு—”

**நரசிம்மராஜன்.**—‘அதுவரை—’

**மஹாவீரன்:**—பாநுமதியம்மாள், நான் ஸதவில் கூறியவாறுதா னிருக்கவேண்டும் அல்லது தமக்கு போகஸ்திரீ—”.

**நரசிம்மராஜன்:**—தன் கபோலங்களைக் கைத்தலங்களால் பிடித்துக்கொண்டு தனக்குள் ‘ஐயோ!

பாநுமதி! உன்கதி எவ்வாறாயிற்று. கண்மணி! உன் மெய்க்காதலுக்கு நான் தக்கவனா? உன்னிடத்துள்ள காதலால் கைக்கெட்டியராஜ்யத்தைக் கைவிடுவேனா? அல்லது ராஜ்ய ஆசையால் உன்னைக் கைவிடுவதா? ஐயோ! என்மனம் எவ்வாறு தவிக்கின்றது! ஆ—ஆ—ஆ—'கண்மணி! ராஜ்யம் என் கைவசமானதும். நீதான் பட்டமஹிஷி! இதுதான் சரியானயோசனை'' 'மஹாவீர! நீ சொல்லுவதும் சரியான யோசனைதான். சரி நீ சற்று வெளியே இரு. நான் சிறிது நேரம் ஏகாந்தமாய் இருக்க விரும்புகின்றேன்.''

மஹாவீரன் வெளியே சென்றான்.

**நரசிம்மராஜன்:**—'என் க்ரஹசாரம் எவ்வாறு இருக்கின்றதோ?' என்று கண்ணீர் சொரிந்தான்.

ஒன்றும் நம்பாத நாஸ்திகன்கூடக் கஷ்டகாலங்களில், க்ரகங்களையும், ஜாதகங்களையும் அழைக்கின்றானல்லவா? நரசிம்மராஜன் தன் பெட்டியைத் திறந்து அதிலிருந்த ஓர் காகிதச் சுருளை எடுத்து விரித்துப் பார்த்துச் சற்றுநேரம் ஆலோசித்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது இரவு சுமார் 11-மணி நேரமிருக்கலாம். அச்சுருளை மறுபடி சுருட்டிக் கையிலடக்கிக்கொண்டு, அருகிலிருந்த படிவரிசைகளின் வழியாய் மேல்மாடியேறி நீலவர்ணமான ஆகாய விதானத்தில், முத்துக்களைப்போல ஜ்வலிக்கும் தாரகணங்களையும் அவைகளின் நடுவில், சந்திரன் மெதுவாய்ச் சஞ்சரிப்பதையும் சற்றுநேரம் உற்றுப்பார்த்தான்.

'ஸ்வாமீஜி! பரமானந்தஸ்வாமீஜி!' என்று நரசிம்மராஜன் மெதுவாயழைத்ததும், 'இதோ வந்துவிட்டேன்,' என்று சொல்லிக்கொண்டு, பாதாதிகேசம் வரை காஷாய உடை தரித்த யோகி ஒருவர் ப்ரவேசமானார். இவருக்குச் சுமார் 50-வயதிருக்கலாம்.

"ஸ்வாமிஜீ! தங்கள் குறிகளெல்லாம் தவறிப்போயினவே. அந்த மந்திரி உயிர்தப்பிவிட்டாரே!"

'குழந்தாய்! அவர் இறந்து போய்விடுவாரென்று இந்த சரீரம் சொல்லவில்லையே! க்ரகங்களின் வீக்ஷண்யத்தாலும், சம்பந்தத்தாலும் ஏற்படும் பலன்கள், தக்க பரிஹாரங்களால் நிவர்த்திக்கப்படக்கூடியவைகள்.

"செப்புகிறேன் கேளப்பா யூகமாகச்
சரியான மணிமந்த்ர ஔஷதத்தால்
சாலவே கிரகசார தோஷமெல்லாம்,
கனல்கண்ட பனிபோல விலக்கலாமே.

என்று சட்டமுனி அருளியதை நீ கேட்டதில்லையா?

'அப்படியானால் உம்முடைய ஜோஸ்யத்தால் என்ன பயன்?'

**பரமானந்தர்:**—"குழந்தாய்! அப்படி லகுவாய்க் கூறிவிடலாமா? கிரஹ சாரங்களெல்லாம், ஜாதகனுடைய வாழ்வின் கதியைத் தெரிவிக்கும். ஆனால் க்ரஹங்கள் ஈசுவரனுடைய உறுதிக் குட்பட்டுத்தானே ஸஞ்சரிக்கின்றன! அன்றைக்கு, இந்த சரீரத்திடல் ஒரு ஜாதகத்தைக் காட்டினையல்லவா? அதில் சனி ஆறாமிடத்தில், செவ்வாய்க்கு ஸப்தம ஸ்தானத்தில்,— வக்ரசாரமாக— ஆயுஸ்தானத்திலே— இருந்தான். அதன் பலன், பிருஹந் ஜாதகத்திலே சொல்லியிருக்கிறது.—

"கேளப்பா! கிரகசார பலனுந்தன்னை
கடுமையாய்ச் சீக்குண்டாம் ஜாதகர்க்கு
கண்டமென்றே கதறிடுவார் வையகத்தோர்
காளிணியில் பரிஹாரம் உரைத்தோர் மேலோர்"

ஆயினும் குழந்தாய்! நீ அவருடைய பெயரை எனக்குரைப்பாயாகில்,—அந்த நாமநக்ஷத்திரத்தைக்கொண்டு பலாபலனைச் சொல்லிவிடுவேன். சிலசமயங்களில் ஜாதகம் சரியானபடியே கணிப்பதில்லை. கணம் தப்பினாலும் பலன் காண்பதரிது!"

**நரசிம்மராஜன்:**—ஸ்வாமீ! மன்னிக்கவேண்டும். அந்த ஜாதகனுடைய பெயர் பரமரகஸ்யமானது! ஆயினும், தாங்கள் சொன்னகுறி அநேகமாய்ப் பலித்துவிட்டது. அவர் வியாதியாய் விழுந்தார். —கொடும் வியாதி. சாகத்தான் இல்லை. சரி இருக்கட்டும், மஹாவீரன் சொன்ன பிரகாரம் என் ஜாதகத்தைத் தாங்கள் பார்த்தீர்களா! என்பாக்ய—"

"குழந்தாய்! உன் ஜாதக பலனை சரியானபடி சொல்லாது நான் ஜோஸ்யம் கற்றுத்தான் பயனென்ன! உன் ஜாதகத்தில் பாக்ய ஸ்தானாதிபதி சுபர்களோடு சம்பந்தம் பெற்றிருக்கிறான். ஆனால் பாபிகளுடைய வீக்ஷண்யம் கொஞ்சமிருப்பதால்— அதனால்தான்,—கொஞ்சம் மனக்கவலை—சஞ்சலம்— இடையூறுகள்—ராஜகோபம்—"

**நரசிம்மராஜன்:**—ஐயனே! தாங்கள் சொல்லுவது இந்த க்ஷணம் வரை சரியாகத் தானிருக்கிறது. இம் மதுரை ஸமஸ்தான—"

**பரமானந்தர்:**—"குழந்தாய்! நீ இருக்கும் நிலைமையோ மஹாராணியாருக்கும் அடுத்தபடி. உன்ஜாதகத்தில் பாக்கியஸ்தானாதிபதி உச்சனாயிருப்பதை நோக்குமிடத்தில் இதைவிட உயர்ந்தபதவி நீ அடையவேண்டும், அது எப்படிப்பட்ட பதவியோ நீ தான் ஊஹித்துக்கொள்ளவேண்டும்!"

**நரசிம்மராஜன்:**—"ஸ்வாமி! சும்மாக் கூசாமல் அது என்னவென்று துலங்கச் சொல்லும்" என்று அதிக உத்ஸாகத்துடனும் முகமலர்ச்சியுடனும் வினவினான்.

**பரமாநந்தர்:**—"குழந்தாய்! நீயே அறியலாமே! இதோப் பார், பாக்யஸ்தானத்தில் சுக்ரன் உச்சமாயிருக்கிறான்—குருவுடன் சேர்ந்து—. சொல்லுகிறார்.

கேளப்பா! சுக்கிரனும் பாக்யத்தால்
குருவுடனே உச் சமதாய் இருப்பானாகில்,
பாரப்பா! சொல்லுகின்றார் அறிந்தமேலோர்,
பாராளும் வேந்தனென்றே ஜாதகர்க்கு!"

**நரசிம்மராஜன்:**—"ஸ்வாமி! ஒருவேளை அடியேனைக் கேலிபண்ணுகின்றீர்களோ?"

**பரமாநந்தர்;**—"குழந்தாய்! வீடு போ போ, என்கிறது! காடு 'வா வா' என்கிறது! விண்ணுலகை நாடி நிற்கும் இச்சரீரத்துக்கு இம்மண்ணுலகில் என்ன கேலி வேண்டியிருக்கிறது?"



**நரசிம்மராஜன்:**—ஆலோசித்துக்கொண்டே அவ்வறையில் இரண்டு மூன்றுதரம், முன்னும் பின்னும் நடந்து வந்தான். அதனடுவில், ஜோஸ்யர், குறுகுறு என்று கள்ளத்தனமாய்த், தன்னைப்பார்ப்பதைக் கண்டுவிட்டான். உடனே நரசிம்மராஜனுக்கு ஏதோ சந்தேகமுண்டாய் விட்டது. திடீரென்று ஜோஸ்யர் பக்கம் பாய்ந்து அவன் கழுத்தைப்பிடித்து ஒரு குலுக்குக்குலுக்கி "ஆண்டிப்பயலே; உண்மையைச் சொல்! நீ என்னைக் கேலிபண்ண வந்திருக்கிறாய். இவ்வாறு என்னைமுகஸ்துதி செய்யும்படி உன்னை யாராவது அனுப்பியிருக்கிறார்களா? உண்மையை உரைக்காவிடில் உன்முதுகுத்தோலை இப்பொழுதே உரித்துவிடச் சொல்லுவேன்," என்று கம்பீரமாய் எச்சரித்தான்.

ஜோஸ்யர் பயத்தால் சற்று மனம் திடுக்கிட்டவராயினும், அதை வெளிக்காட்டிக்கொள்ளாது தைர்யமாய், நரசிம்மனை நோக்கி, "குழந்தாய்! (புன்சிரிப்புடன்) ஏது அப்பா உனக்கு இவ்வளவு கோபம்? என்றார்.

**நரசிம்மராஜன்:**—(கோபத்துடன்) "என் பகைவரால் நீ இவ்வாறு பிதற்ற அனுப்பப்படவில்லை என்று ருஜுப்படுத்த உன்னால் முடியுமா?"

**பரமாநந்தர்:**—இதற்கு ருஜுவும் வேண்டுமா? நீ என்னை அந்த கோபுரத்துமேலே அடைத்துவிட்டு ஒரு நாள் முழுதும் இரவுகோலை உன்வசமே வைத்துக்கொண்டிருக்கின்றாய்! இராமுழுதும், ஆகாயத்தைப் பரிசோதித்துக்கொண்டே திருக்கணித பூர்வமாய் உன் க்ருக நிலைகளைக் கணக்கிட்டு ஸ்புடப்படுத்தி வைத்திருக்கின்றேன். இம்மண்ணுலக உணவையும் நான் அருந்தவில்லை; மானிடர் சத்தமும் கேட்கவில்லை. நான் சொல்லுவது பொய்யாகும் விஷயத்தால், இந்த ஜோஸ்ய சாஸ்திரமே பொய்யாக வேண்டும் அல்லது ஏதாவது உலகத்துக்கே ப்ரளயம் வந்திருக்கவேண்டும். என்மேல் யாதொரு குற்றமுமில்லை. நான் சொல்லுவதில் ஏதாவது தவறிற்றோ, சூரியசித்தாந்தம், ரோமக சித்தாந்தம், பிருஹத் ஜோதிடம், பாஸ்கராசாரியம், அஷ்டாங்க சித்தி, பதினெண் சித்தர்பாடல் எல்லாமே பொய்யா இருக்கவேண்டும்! உலகம் புரண்டால்தான், இம் மஹான்கள் வாக்கும் பாழாகும்!"

**நரசிம்மராஜன்:**—(சற்று ஆலோசித்துவிட்டு) "அதுவும் வாஸ்தவம்தான்! தாம் கட்டளை இடுகிறபடியே எனக்கும் கொஞ்சம் அதிருஷ்ட காலமாய்த்தான் தோன்றுகின்றது—"

**பரமாநந்தர்:**—அதனால் தான் இந்த சரீரத்தை நீ தூஷித்தாயாக்கும். இந்த சரீரத்துக்குப்பாதகமில்லை. தேவவாக்கு ரிஷிவாக்கு இவைகளுக்கெல்லாம்— அபசாரமல்லவோ நேர்ந்துவிடும்." (தொடரும்.)

---

**சீனாவில் சோப்புத் தொழிற்சாலை:**-35,000,000 பவுண்டு மூலதனம்வைத்துப் பிரிட்டிஷ்காரர்கள் ஒரு பெரிய சோப்புத்தொழிற்சாலை ஸ்தாபிக்கிறார்கள்.



# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

## 1. ஆத்திசூடி விளக்கம்

### 35. கீழ்மை யகற்று

இது மூன்று வகையான பொருளை யடக்கியுள்ளது. அவையாவன: (1) நம் நிலைவிடத் தாழ்ந்தவர் ஸஹவாஸம் நீக்க வேண்டியது. (2) தாழ்ந்தவர்கள் சேர்க்கையை நீக்கு (3) தாழ்ந்தவைகளான குணங்கள் அணுக இடங் கொடுக்காதே, என்பவைகளே.

(1) தாழ்ந்தநிலையி லிருப்பாரோடு ஸ்நேஹம் கூடாது என்ற முதற்பொருளை எடுத்துக்கொள்ளுவோம். நேசம் எப்பொழுதும் ஸமானமானவர்களோடே இருத்தல் வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயமே: அதிலும் மேலானவர்களோடு நேசம் பாராட்டினால் நாம் வெறும் ஊழியின் நிலையில் தான் இருந்து நமது மரியாதையை இழக்கவேண்டி வரும் என்பதும் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். இங்கு ஔவை இந்த இரண்டையும்கூறாது கீழோரோடு இணங்காது நீங்கு என்று கூறுகிறாள். இந்த விஷயத்தில் தான் உலகத்தவருக்கு ஒரு ஸந்தேஹம் வருமென்று எண்ணி இப்படிக் கூறினாள். ஸமானமானவரோடு நேசம் இருக்க வேண்டியதும், மேலானவரோடு நேசமில்லாமலிருப்பதும் நியாயமே: தாழ்ந்தவரோடு ஏன் நேசம் இருக்கக்கூடாது? அப்படி இருப்பதனால் தாழ்ந்தவரை உயர்த்திய புண்யம் வருமல்லவா நமக்கு என்ற சங்கை பிறக்கும் ஸாதாரண ஜனங்களுக்கும், இப்படி சங்கிக்கலாகாதென்று தான் ஔவை இந்தஸூத்திரத்தையும்'கீழோராயினும் தாழவுரை' என்பதையும் கூறியுள்ளாள். கீழோர்களை மரியாதையாக நடத்தி அவர்களுக்கு வேண்டிய உபகாரங்களைச்செய்யவேண்டியது முக்கிய தர்மம்தான்.அந்தக்கொண்டு அவர்களிடம் ஸமானமானவர்களிடம் உள்ளநேசம் என்ற மனக்கலப்பைக் கைக்கொள்ளலாகாது என்பதுதான் இவ்விரண்டையும் பொருத்துங்கால் வெளியாகும் பொருள், கீழோர்களுக்குஉபகரிப்பதைவிட்டு நேசர்போலஅவர்களை நடத்தத்தொடங்கிவிட்டால், அவர்கள் தங்கள் நிலைக்கேற்ப உலகத்தில் ஸுகமாக வாழ்ந்துவந்த நிலைதவறி நமது மேலான நிலைக்கேற்ப வாழப்பிரியப்படுவர். அதற்கு வேண்டிய இடம் பொருள் ஏவல் அவர்களிடம் இல்லாமலிருக்கலாம். ஆதலால் பூர்ணமாகா. ஆசையினால் அவர் வருந்திப் பிறர் ஸுகிப்பதைக்கண்டு பொறாமைப்படும்படியாகவும் மேலோரை அனாவசியமாக குற்றங்கூறும்படியாகவும் உள்ள தூர் நிலை நமது விவேகமில்லா நேசத்தால் விளைந்த தீங்காய் விடும். இதை நன்கு உணர்ந்து கீழோரிடம் தயவுடனும் நெருங்கிய பழக்கமில்லாமலும் மேல் நிலையிலுள்ளோர் பழகி அவர்கள் ஸாதாரண ஸுகநிலையைக் கெடுக்காமலிருக்க

முயலவேண்டும் என்பது இந்த ஸூத்திரத்தின் கருத்து. ஆகவே யார்யாரை எவ்வெந்நிலையில் வைத்துப் பழகவேண்டுமோ அவ்வந்நிலையில் வைத்தே பொதுவானபணிவுடன் பழகிவரவேண்டும் என்றச்சுது.

(2) தீயோர்நேசம் எப்பொழுதும் நீக்கவேண்டியதே. தீயோர் நேசம் காலைநிழல்போலக் குறையுந்தன்மையுடையது தான்: ஆயினும் அதுவாகக் குறையும் வரை காத்திருக்கவேகூடாது: அது குறைவதன் முன் நம்மைக்கெடுத்து தண்டனையால் தான் மீளவேண்டிய கதிக்கு நம்மை உட்படுத்தி விட்டால் என்ன செய்வது? ஆதலால் அந்த நேசத்தை நீக்கமுயற்சித்துக் கொண்டே இருத்தல்வேண்டும். முயற்சி உடனே பயன்படா விட்டாலும் ஒரு கெடுதியும் வாராது: முயற்சிமாத்திரம் ஓயவேகூடாது. நேரான பிரிவு உடனே ஏற்படாவிடினும், பிரிவதற்கு வேண்டிய வெறுப்பு, ஸமயம் ஏற்பட்ட வேளைகளிலெல்லாம் பின் வாங்காது தைர்யமாக நற்புத்திகூறல் முதலியவைகளை வெளிக்காட்ட வேண்டிய முயற்சி குன்றுமலிருந்து விட்டால், தருணம் வாய்க்குங்கால் தீயோர் இணக்கம் நீக்க மிக எளிதாகிவிடும். பிரிவதற்கு வேண்டிய முயற்சி நம்மால் உள்ளது என்று உணரும் தீயோர்கள், அவர்கள் முனையும் தீயதொழிலுக்கு எல்லாம் நாம் உதவி புரியமாட்டோம் என்று நம்பிவருவர்: ஆகவே நமது புத்திமதி பயன்பட முடியாது மிக மீறிவரும் தீயோர் காரியங்களில் கலவாமலே நாம் ஒதுங்கி விடலாம்: அதனுல் அவர்களுக்கு 'பார் இவ்வளவு நாள் நம்முடனிருந்து விட்டு அபாய ஸமயத்தில் ஒதுங்கி விட்டானே நன்றி கொன்றவன்' என்ற மனவருத்தமும் உண்டாகாது. ஆகவே தீயோர்களோடு சிலகாலம் பிரியமுடியாது சேர்ந்திருக்கும்படி நேரிட்டால் நல்லோர் தமது தன்மையை வெளிக்காட்டித் தமது ஸஹாயத்தை அவர் தீயமுயற்சிகள் விஷயங்களில் எதிர்பார்க்கவே கூடாது என்று காட்டிக்கொண்டே வரவேண்டும். இப்படிச்செய்து வந்தால் நம்மை மீறி அவர்கள் கொடிய காரியங்களில் முயன்றால் எளிதில் நாம் அவர்களைவிட்டு நீங்கிவிடலாம். முன்னர் நாம் அவர்களோடு கூடி இருந்தும் பிரிந்தே தான் இருந்தோம். ஆகவே கீழோர்களை நேரிடவாவது நீக்க வேண்டும், அல்லது பிரியாது அவர்களோடு இருக்கும்படி நேர்ந்துவிட்டால் நாம் அவர்களைவிட்டு வேறுயிருப்பவர் என்பதை காட்ட வேண்டிய தருணங்களில் வெளிப்படையாகவாவது காட்டிக் கொண்டே இருத்தல் வேண்டும் என்பது இந்த ஸூத்திரத்தின் பொருள்.

விபீஷணரும் விதுரரும் கீழோர்களாகிய ராவண துர்யோதனர்களிடம் சேர்ந்திருக்கும்படி நேரிட்ட காலத்திலும் அவர்களை விட்டு முற்கூறியபடி அகன்றே இருந்ததால், கீழோர் கொடிய முயற்சியாகிய யுத்தகாலத்தில் அவர்களைவிட்டு அகன்று ஒதுங்கிவிட அவர்களால் முடிந்தது. கும்பகர்ண, துரோண பீஷ்மர்களுக்கு எவ்வளவு நல்லுணர்ச்சி நல்லறிவு இருந்தபோதிலும் ஒரே அடியாய் ஒதுங்கிவிட முடியாது முடிவில் தீயோருக்காக உடல் இழந்து கடைத்தேற வேண்டி வந்தது. தாம் நடந்துகொண்ட மாதிரியில் தீயோருக்கு 'நமது முரட்டுத்தனம் முதிரும் காலத்தில் இவர்கள் உதவியை நாம் எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கை திடப்பட்டுக்கொண்டே வந்தது என்பதை உணர்ந்து விட்டனர் இவர்கள். இந்தச் சேர்க்கை ஏற்பட்டுவிட்டபடியால் கீழோரோடு இவர்கள் சேர்ந்துவிட வேண்டியே வந்துவிட்டது. கர்ணன் நல்ல தர்மாத்மாவாயினும் சற்று கவனக்குறைவாய் தீயோரிணக்கஞ்செய்துவிட்டபடியால் தீயோனுகவே போய் விட்டான். இவைகளிலிருந்து தீயோரிடமிருந்து பிரிந்து நிற்கச் செய்யும் முயற்சியை ஒருக்காலும் தளரவிடக்கூடாது என்பது வெளியாகும்.

3. கீழான குணநீக்கம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம். இந்த விஷயம் கவனிக்கப்படாவிடின் அஜாக்ரதையான தருணங்களில் தீயோரிணக்கம் ஏற்படும்படி தூண்டி நம்மை சந்தியிலிழுத்துவிடும். தீயோரிணக்கத்தால் விருத்தியடைந்து நம்மை மீளா நரகிற்காளாக்குவது இந்தகீழான குணங்களின் ஸம்பந்தமே. கீழான நிலை என்பது நமது நோக்கமாகிய மேலான நிலைக்கு விரோதமானவைகளே. எந்த நிலையில் தேறுவதற்கும் சோம்பல், தாமஸம், மந்தம், அதிக விஷய ஸுகானுபவம், ஆஹார வ்யவஹாராதிகள் அதிகமாக விருத்தல் எல்லாம் விரோதமானவைகளே. மனம் ஒரு நிலைப்பட்டு சாந்தம் குடிகொண்டு எப்பொழுதும் ஸுகமாக இருப்பதாகிய பரமபுருஷார்த்தமான முக்தி நிலைக்கு காமக்ரோதாதி கடுங்குணங்கள், ஆப்த வாக்யங்களில் நம்பிக்கை இன்மை, ஒழுங்கின்றி உலகில் உழலுதல் எல்லாம் விரோதமான குணங்களே. ஆகவே எந்த மேலான நிலையை அடைய வேண்டுமாயினும் அதைவிடத்தாழ்ந்தனவாயும் மனதைக் கவர்ந்து கீழே இழுத்து மேலே போகவொட்டாது தடுக்குந் தன்மை உடையனவாய் உள்ள நிலைகளில் ஒருவித வெறுப்பும் ஸம்பந்தம் சற்று மற்ற பிரிவும் அவசியம் வேண்டும் என்று வற்புறுத்தும் இந்த ஸூத்ரம். தாழ்ந்த நிலைகளில் பலவைகளி லாகட்டும் அல்லது ஏதாவதுஒன்றிலாகட்டும் மனம் செல்லவே கூடாது. ஸ்வப்நத்தில் மனம் புத்தியின் சக்தியை மீறி நடக்குங்கால்கூட அந்த தாழ்ந்தவிஷய ஸம்பந்தம் ஏற்படுவதாகக் காணக்கூடாது. இப்படி தன்னை மறந்தும்தாழ்ந்த நிலைகளைக் கனவிலும் நினைக்காமைக்கே ஔவை அகற்றுதல் என்று போற்றலுடன் பெயரிட்டாள்.

விச்வாமித்ர மஹரிஷி கீழ்மை அகற்றி நிற்கும் வரையில் ப்ரஹ்மரிஷி என்று மதிக்கப்படவில்லை. கீழ்மை அகற்றுவதற்கு விச்வாமித்ரர் பட்டபாடுகளை ராமாயணம் பால காண்டத்தில்விஸ்தாரமாகக் கூறியிருப்பதை எல்லோரும் காணலாம். கீழ்மை அகற்றுவதில் சற்று அஜாக்கிரதையாக ரிஷிச்ரேஷ்டர்கள் சிற்சில ஸமயங்களில் கெட்டவழிகளில் போய்த்திண்டாடி மண்டைகலங்கி பின்னர் கடைத்தேற



வேண்டி வந்தது என்பது தூர்வாஸர் அம்பரீஷரிடமும்; வனவாஸம் செய்துகொண்டிருந்த பாண்டவர்களிடமும் பட்டபாடுகளால்வெளியாகும். அநேக சிறந்த அப்யாஸிகள் எல்லாம் உலகமதிப்பிற்கு ஈடுபட்டு தமது ஸத் அப்பியாஸங்களை விட்டு தாழ்ந்த நிலைகளை அடைந்துஸித்திகாட்டுகிறேன்என்றுஉலகில்உழன்று திண்டாடுவது இந்தக் கீழ்மை யகற்றுவதை முற்றிலும் செய்யாததால்தான் என்பது திருவருட்பாப் பாடிய சிதம்பரம் ராமலிங்க ஸ்வாமிகள் அந்தியகால சரித்திர பாகத்திலிருந்து வெளியாகும். நெருப்புக் கடல், விரோதி, இவைகளை முற்றிலும் மிகுதி வைக்காது கெடுத்துவிடவேண்டும்! இல்லாவிடில் மிகுந்தது மூண்டெழுந்து நம்மைக் கெடுத்தும்விடும் என்பர் பெரியோர். கீழ்மையும் இந்தத் தன்மைவாய்ந்ததே. கர்வாதி கீழ்மையின் ரூபாந்திரங்களுக்கு எப்பொழுதும் எக்காரணம் பற்றியும் இடங்கொடுக்கவே கூடாது: சற்று ஏமாந்தால் நம்மை முழுத்திவிடும் தன்மையுடையன இவைகள். ஆகவே இவைகளை அகற்றிவிடவேண்டும் என்பதே இதன் கருத்து.

## IIமொழிபெயர்ப்பு விளக்கம்

### TRANSLATION MODELS

In the city of Vienna there once reigned a duke of such mild and gentle temper, that he suffered his subjects to neglect the laws with impunity; and there was in particular one law, the existence of which was almost forgotten, the duke never having put it in force during his whole reign. This was a law dooming any man to the punishment of death, who should live with a woman that was not his wife; and this law, through the lenity of the duke, being uttery disregarded the holy institution of marraige became neglected, and complaints were every day made to the duke by the parents of the young ladies in Vienna, that their daughters had been seduced from their protection and were living as the companions of single men.

முன்னொருக்கால் வீயன்னு நகரத்துச் சிற்றரசன் மிகுந்த அமைதியுடனும் தயவுடனும் ஆண்டுவந்ததால் அவ்வூரார் தண்டனைக்கு அஞ்சாது அவ்வூர்ச் சட்டங்களை அசட்டைசெய்ய இடங்கொடுத்து விட்டான். அச்சிற்றரசன் தன் ஆளுகையில் ஒருசட்டத்தை மாத்திரம்உள்ளபடி எப்பொழுதும் செலுத்தாமலே இருந்து விட்டபடியால், அந்த சட்டத்தின் இருப்பைக் கூட மறந்துவிட்டனர் அந்நாட்டார். தன்பெண்சாதியல்லாத ஒருபெண்மணியுடன் தனித்து ஒதுங்கிச் சேர்ந்துவாழும் ஒவ்வொருவனையும் உயிர்த் தண்டனைக்கு உள்ளாக்கும் ஆற்றலுடையது இச்சட்டம். சிற்றரசன் பொறுமையால் இந்தச்சட்டத்தை எல்லோரும் அனுதாவு செய்து விட்டபடியால், விவாஹம் என்ற பரிசுத்தமான சிறந்த ஏற்பாடு குலைந்து போய்விட்டது.

'எங்கள் புதல்விகள் எமது மேல் பார்வைவிட்டு மயக்கி வெளியேற்றப்பட, இப்பொழுது அவர்கள் பெண்சாதியில்லா இளைஞரோடு தோழிகளாக வாழத் தொடங்கிவிட்டனர், என்ற புகார் வீயன்னுவிலுள்ள பெண்மணிகள் தந்தையர்களிடமிருந்து ஒவ்வொரு நாளும் சிற்றரசரிடம் வந்து எட்டத் தொடங்கியது.

---

**பப்ளிக்ஸர்விஸ்கமிஷன்முன்கல்வியிலாகாவைப்பற்றியராவ்பகதூர்மிஸ்டர்M.ரங்காச்சாரியாரின் சாட்சியம்:**—இந்தியன் எடுகேஷனல் ஸர்விஸென்றும், மாகாண எடுகேஷனல் ஸர்விஸென்றும், ஸபார்டினேட் ஸர்விஸென்றும் 3 பிரிவு உத்தியோகங்களிருக்கவேண்டியதில்லையென்றும், உயர்ந்த (superier service) ஸர்விஸென்றும், தாழ்ந்த(subordinate service) ஸர்விஸென்றும் 2பிரிவுகளிருந்தால் போதுமான தென்றும்; விசேஷ புத்தி கூர்மையும், சோதனுசக்தியும், கல்வித்திறமையும், போதனுசக்தியும்பொருந்திய இந்தியர்கள் உயர்ந்த ஸர்விஸைச் சேர்ந்தவர்களாயிருக்க வேண்டுமென்றும் உயர்ந்தஸர்விஸ் 2வகுப்புகளையுடையதாயிருக்கவேண்டுமென்றும், அந்த வகுப்புகளில் முதல்வகுப்பு100பேரில்35பேர்கள் இந்தியாயந்திரியால் நியமிக்கப்படவேண்டுமென்றும், 35பேர்கள் இரண்டாவது வகுப்பிலிருந்து முதலாவது வகுப்புக்கு உயர்த்தப்படவேண்டு மென்றும் 30 பேர்கள் மாகாண கவர்ன்மெண்டாரால் தெரிந்தெடுத்து நியமிக்கப்படவேண்டுமென்றும், இரண்டாவது வகுப்புக்கு 100-ல் 50 பேர்கள் தாழ்வகுப்பிலிருந்து உயர்த்தப்படவேண்டுமென்றும், 50 பேர்கள் மாகாண கவர்ன்மெண்டாரால் தெரிந்தெடுத்து நியமிக்கப் படவேண்டுமென்றுசொன்னதுமன்றி, கவுன்ஸில் மெம்பர்களாகவும், ஹைகோர்ட் ஜட்ஜ்களாகவும் இந்தியர்கள் திறமையுடன் வேலை பார்க்கும் போது, அவர்கள் இன்ஸ்பெக்டர்களாகவும், காலேஜ்பிரின்ஸிபால்களாகவும், கல்வியிலாகாத்தலைவர்களாகவும், வேலைபார்க்க லாயக்காக மாட்டார்களென்று சொல்லப்படுவது தமக்குவிளங்கவில்லையென்றும் சொன்னர்.

**இந்து ஸிலோன் ரயில்வே:**—தனுஷ் கோடிக்கும் தலைமன்னருக்கும் போக்குவரத்துக்காக தென்னிந்திய ரயில்வே கம்பெனிக்காக தயாரிக்கப்பட்ட ஸ்டீமர்கள் (steam ferry) மூன்றில், ஹார்டிஞ் என்னும் ஸ்டீமர் ஏற்கனவே பாம்பன் துறைமுகம் வந்துவிட்டது. கர்ஸன் என்னும் ஸ்டீமரும் பாம்பனுக்கு வந்துவிட்டது. எல்ஜின் ஸ்டீமரைப் பற்றிய விஷயம் ஒன்றும் தெரியவில்லை.

## சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S & LADIES' PAGES

வெளிக்கிளம்பிய குயில்பறந்தோடி ஓர்தட்டான் வேலை செய்யுங் கூடத்தின் கூரையில் உட்கார்ந்து கொண்டு பாட வாரம்பித்தது. அது பாடிய பாட்டிது தான்:—

"அம்மா என்னைக் கொன்ற'
அப்பா என்னைத் தின்ற'
அங்கச்சி மின்ஞளி
எலும்பெல்லாம் பொறுக்கி
பட்டுக்குள்ளே யிறுக்கி
ஒட்டு மாமரங்கீழே
தொட்டு வைத்த நாளே
மட்டில்லாமல் பாடும்
குட்டிக் குயிலானேன்.
என் குரலைக் கேளேன்! என் குரலைக் கேளேன்!!
கூகூ குக்கூ குக்குக்கு குக்கூ
கூஉ, கூஉ குக்குக்கு குக்கூ"

தட்டான் அப்பொழுது தான் ஒரு நயமான தங்கக் கொடி ஒன்று செய்து முடித்தான். இப்பாட்டைக் கேட்டதும் அவன் ஆச்சரியமடைந்து மறுபடியும் பாடும்படி குயிலைக் கேட்டான்; அவ்வளவு நயமாக அக்குயில் பாடியது. அவன் கேட்டதிற்குக் குயில் பதிலே சொல்லாமல் சும்மா இருந்தது. அவன் மறு படியுங் கேட்டான், அது கனத்த கிராக்கி செய்தது; 'உன் கையிலிருக்குங் கொடியை என் கழுத்தில் போட்டால் நான் மறுபடியும் பாடுவேன், சும்மா பாடு என்றால் நான் பாடுவேனா?" என்றுமேலுஞ்சொன்னது. அதற்கு அவன் ஒப்புக்கொண்டு "குயிலே! குயிலே! பாடு கேட்போம்" என்று சொன்னான்.

குயிலும் கீழிறங்கி வந்து கம்மாளனிடமிருந்து கொடியைப் பெற்றுக் கொண்டு பஞ்சமஸ்வரத்தில் வெகு நயமாக இசை கெடாவிதம் யாழை மீட்டினால் எப்படி இருக்குமோ அந்த விதமாக,

'அம்மா என்னைக் கொன்ற'
அப்பா என்னைத் தின்ற'
அங்கச்சி மின்ஞளி
எலும்பெல்லாம் பொறுக்கி
பட்டுக்குள்ளே யிறுக்கி
ஒட்டு மாமரங்கீழே
தொட்டு வைத்த நளே
மட்டில்லாமல் பாடும்
குட்டிக் குயிலானேன்.
என் குரலைக்கேளேன், என் குரலைக் கேளேன்!
கூகூ குக்கூ குக்குக்கு குக்கூ
குஉ குஉ குக்குக்குக் குக்கூ"

என்று பாடிக்கொண்டு ஆகாச வழியாகப் பறந்தோடியது. பின் அது ஒரு சக்கிலி வேலை செய்யுங் கூடத்திலிருந்த பாண்மேல் உட்கார்ந்துகொண்டு,

"அம்மா என்னைக் கொன்ற'
அப்பா என்னைத் தின்ற'
அங்கச்சி மின்ஞளி
எலும்பெல்லாம் பொறுக்கி
பட்டுக்குள்ளே யிறுக்கி
ஒட்டு மாமரங்கீழே
தொட்டு வைத்த நாளே
மட்டில்லாமல் பாடும்
குட்டிக் குயிலானேன்
என் குரலைக் கேளேன்! என் குரலைக்கேளேன்
கூகூ குக்கூ குக்குக்குக் குக்கூ
கூஉ கூஉ குக்குக்கு குக்கூ"

என்றுபாடியது. இது சக்கிலியைத் தூக்கிப் போட்டது. மலர மலர கண்ணை விழித்துக்கொண்டு வாயைப்பிளந்து ஆவென்றலறி அண்ணாந்து பார்த்தான். ஆனால் வெளிச்சத்தின் சோபையால் கண்ணுக் கெதிரென்ன இருந்ததென்றவனுக்குத் தெரிய வில்லை. கண்ணைக் கையால் சற்று மறைத்துக் கொண்டு அந்த சப்தம் வரக்காரணம் என்னவென்று பார்த்தான். "ஆ! நீயா" என்று அதிசயித்தந்தக் குயிலைப்பார்த்து மறுபடியும் பாடும்படிக்கெஞ்சினான். ஆனால் அது என்பாடும்? "நீ நன்றாகப் பாடுகிறாய். ஏதோ கொஞ்சம் மறுபடியும் பாடு" என்று மேலுஞ் சக்கிலி கேட்டான். இதற்குள் அவன் ஸம்ஸாரம் அண்டை அயலார் எல்லோரும் வந்தங்கு கூடி விட்டார்கள். சக்கிலி தங்கக்கொடியோடு விளங்கிய குயிலைத் தமதுறவினர்களுக்குக் காட்டி அதைப்பாடும்படி மறுபடியுங் கெஞ்சினான்.

"நான் இரண்டாவது முறையே பாடுவது கிடையாது. அதுவுஞ் சும்மாப் பாடென்றால் யாரால் முடியும்?" என்றது.

இதைக்கேட்டதும் சக்கிலி தன்மனைவியைப் பெட்டியில் வைத்திருந்த பாதரக்ஷை ஜோடி ஒன்றை எடுத்து வரும்படி ஏவினான். அவளுங்கொண்டுவர அதைப்பெற்று அந்தக் குயில் வீணா கானத்தைத் தோற்கடிக்கும்படி

"அம்மா என்னைக் கொன்ற'
அப்பா என்னைத் தின்ற,
அங்கச்சி மின்ஞளி
எலும்பெல்லாம் பொறுக்கி
பட்டுக் குள்ளே இறுக்கி
ஒட்டுமா மரங் கீழே
தொட்டுவைத்த நாளே
மட்டில்லாமல்பாடும்
குட்டிக்குயிலானேன்
என்குரலைக் கேளேன்! என்குரலைக் கேளேன்!
கூகூ குக்கூ குக்குக்குக் குக்கூ
கூகூ கூகூ குக்குக்குக் குக்கூ"

என்றுபாடிக்கொண்டு ஒருகாலில் தங்கக் கொடி விளங்க மறுகாலில் பாதரக்ஷையைத் தூக்கிக்கொண்டு ஆகாசமார்க்கத்தில் பறந்தோடியது. பின் அது ஓர்யந்திரசாலையில் உட்கார்ந்தது. அங்குசிறுபயல்கள்



கற்களைப் பொளிந்துகொண்டிருந்தார்கள் 'கிட்டங் கிட்டங்' என்று சுத்தி சப்தித்துக் கொண்டிருந்தது. எந்திரமும் 'கடகடக் "குடுகுடுக்" என்று சப்தித்துக் கொண்டு ஓடிக்கொண்டேயிருந்தது. அப்பொழுதக் குயில் எதிரிலிருந்த இலந்தை மரத்தின்மேல் உட்கார்ந்துகொண்டு,

"அம்மா என்னைக் கொன்ற"

என்று பாடியது. இதைக் கேட்டதும் ஒரு பையன் தன் வேலையை நிறுத்திவிட்டு ஆ என்றலறிவிழுந்து அண்ணாந்து பார்த்தான்.—

"அப்பா என்னைத் தின்ற"

என்றக்குயில் மேலும் பாடியதும், மற்றுமிரண்டு பையன்கள் தலையை நிமிர்ந்து யார் பாடுவதென்று பார்த்தார்கள்.—

"அங்கச்சி மின்ஞளி"

என்றதும் நாலு பையன்கள் வேலையை விட்டெழுந்தார்கள்.—

"எலும்பெல்லாம் பொறுக்கி"
பட்டுக் குள்ளே யிறுக்கி

என்று குயிலின் உச்சஸ்வரத்தைக் கேட்டதும், எழெட்டுபேர் அலறிவிழுந்தார்கள்; தங்கள்வேலையை விட்டு ஒழித்தார்கள்; எழுந்து என்ன சப்தம் என்று பார்த்தார்கள்.—

"ஒட்டு மாமரங்கீழே"

என்றதும் ஒன்பது பேர் ஓட்டம் பிடித்தெல்லாரையும் வேடிக்கை பார்க்க அழைத்துவரப் போனார்கள்.

"தொட்டு வைத்த நாளே"

என்றதும் ஒருவன் தவிர எல்லாரும் தமதுவேலையை விட்டு விட்டார்கள்.—

"மட்டில்லாமல் பாடும்
குட்டிக் குயிலானேன்"
என் குரலைக் கேளேன்! என் குரலைக் கேளேன்!
கூகூ குக்கூ குக்குக்குக் குக்கூ
கூஉ கூஉ குக்குக்குக் குக்கூ"

என்று அந்த குயில் தன் இயற்கைப் பஞ்சமஸ்வரத்தில் பாடியபோது கடைசிப் பையனும் வேலையை விட்டு "குயிலே! என்ன நன்றாய்ப் பாடுகிறாய்? இன்னும் ஒரு முறை பாடேன்" என்று கேட்டான்.

"நான் சும்மா பாடுவேனா? இரண்டாவது முறை நான் பாடுவதே கிடையாது. அந்த எந்திரக்கல்லை எனக்குக் கொடுத்தால் நான் மறுபடியும் பாடுவேன்" என்று குயில் பதில் சொல்லியது.

"நீ பாடினால் அதைத்தருகிறேன்" என்றுபையன் சொன்னான். குயிலுங்கீழே இறங்கி வந்து எந்திரக் கல்லைக் கழுத்தில் மாட்டும்படிச் செய்தது. அக்குயில் அக்கல்லைக் கழுத்தில் மாட்டிக் கொண்டு அட்டிகை கட்டிக்கொண்டசைப்பதுபோல் அசைத்துக்கொண்டு

"அம்மா என்னைக் கொன்ற'
அப்பா என்னைத் தின்ற'
அங்கச்சி மின்ஞளி
எலும்பெல்லாம் பொறுக்கி
பட்டுக்குள்ளே யிறுக்கி
ஒட்டு மாமரங்கீழே
தொட்டு வைத்த நாளே
மட்டில்லாமல் பாடும்
குட்டிக் குயிலானேன்
என் குரலைக் கேளேன்! என் குரலைக் கேளேன்!
கூகூ கூகூ குக்குக்குக் குக்கூ
கூஉ கூஉ குக்குக்குக் குக்கூ

என்று பாடிக்கொண்டு தங்கக் கொடியுஞ் செருப்புங் காலில் விளங்க கழுத்தில் எந்திரக்கல் துலங்கமேலே பறந்தோடியது. நேராகத் தனது தகப்பன் வீட்டை நோக்கி யதுபறந்தோடியது.

நிற்க. தகப்பனுஞ் சிற்றாயும் மிருநாளகாந்தியும் கூடத்தில் குலாவிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுதவர் சாப்பிட்டுவிட்டு தாம்பூலம் தரித்துக்கொண்டு வேடிக்கையாகப்பேசிக்கொண்டிருந்தார்கள். பேசிக் கொண்டிருக்கும்போது சிறுவன் தகப்பன் "எனக்கு என்னமோ வலது கண் துடிக்கின்றது; உள்ளத்தில் எனக்கும் தெரியாமல் உத்ஸாகமுண்டாகிறது" என்று சொன்னான்.

"நிச்சயமாகவா? எனக்கென்னவோ வயிற்றில் கல நெருப்பைக்கொட்டினாற்போல ஸங்கடமுண்டாகிறது. என்னமோ கஷ்டம் வரும்போலத் தோற்றுகிறது. எனக்கும் அந்தப் பாழும் வலக்கண் என் துடிக்க வேண்டும்?" என்றவன் மனைவி வருத்தத்துடன் கேட்டாள்.

மிருநாளகாந்தி அழுது அழுது கண் சிவந்தாள். அப்பொழுது அக்குயில் வீட்டின் கூரைக் கெதிரிலிருந்த சுவர் முட்டின் மேல் வந்துட்கார்ந்தது.

அதே ஸமயம் "ஆமாம்! ஆமாம்! நான் பொய் சொல்லவில்லை. என் ஆப்த நேசனை எதிர்கொள்ள இருக்கும்போது எவ்வளவு குதூஹலம் இருக்குமோ அவ்விதந்தான் எனக்கிப்பொழுதிருக்கிறது. நிச்சயமாக எனக்குயிர் நண்பனை நான் காண்பேன்" என்று மின்ஞளியின் தகப்பன் சொன்னான்; உள்ளங்களித்தான்.

"என்ன ஆச்சரியம்! உங்களுக்கவ்வளவு உத்ஸாகம் உண்மையிலிருக்கிறதா? எனக்கு மப்படி யிருந்தால் எனக்கெவ்வளவு ஆநந்தமாக இருக்கும். என் வயிற்றில் புளிகரைக்கிறது. ஸங்கடமோ பொறுக்க முடியவில்லை. நெருப்பில் விழுந்த புழுப்போல் என் மனந்துடிக்கிறது." என்று சொல்லி ஒன்றுந்தோன்றாமல் பித்தம் பிடித்தவள் போல அப்புறம் எழுந்து போனாள்.

மிருநாளகாந்தியும் எழுந்துபோய் ஒருமூலையில் உட்கார்ந்து அண்ணனை நினைத்து நினைத்து அழுத வண்ணமாகவே இருந்தாள். அவள் கண்ணீர் படிந்து கட்டியிருந்த ஆடையும் நனைந்துவிட்டது.

நிற்க, அந்த ஸமயத்தில் குயில் ஒட்டுமாமரத்தின் மேல் உட்கார்ந்துகொண்டு,

"அம்மா என்னைக் கொன்ற,"

என்று பாடியது. இதைக்கேட்டதும் சிற்றாய் தன் இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்டு "ஐயோ

என்தலை வெடித்து விடும்போலிருக்கிறதே! எனக்கென்ன வென்னவோ செய்கிறதே" என்று சொல்லிக்கொண்டு கிடந்தாள். மீண்டும் கண்கள் படபடவென்று துடிக்க, மின்னல் வளையங்கள்போல் மாய வடிவங்கள் அதன் முன் தோன்றித் தோன்றி மறைவதுபோல் தோன்றின. மீண்டுமந்தக் குயில்

"அப்பா என்னைத் தின்ற"

என்று பாடியது. இதைக்கேட்டதும் "அம்மாடி! என் ஜன்மத்தில் நான் கண்டதில்லை. என்ன விசித்திரமாகப் பாடுகிறது. ஆநந்தகரமான நாளானதால் அதன் சந்தோஷத்தை அடக்க முடியாமல் கீதமாரியாகக் கொட்டுகிறது" என்று சிறுவன் தகப்பன் சொல்லிக்கொண் டிருக்கும்பொழுது,

"அங்கச்சி மின்னொளி"

என்று குயில்சொல்லி பாடியது. அதைக்கேட்டதும் மிருநாளகாந்தி அழுகையை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தாள். அவள் தகப்பன் "நான் போய் பார்க்க வேண்டும். அந்தப்பக்ஷி எப்படி இருக்கிறது என்று காண எனக்காவலாய் இருக்கிறது" என்றான். அவன் மனைவி "ஐயோ! வேண்டாமே; வேண்டாமே. எனக்கென்னவோ வீட்டை பற்றிக்கொள்ளும்போல் தோன்றுகிறது" என்று தடுத்தாள். ஆனால் அவன் அவள் வார்த்தையை லக்ஷ்யஞ் செய்யாமல் பறவையைப் பார்க்கப் போனான். குயிலும் விடாமல்.

"எலும்பெல்லாம் பொறுக்கி
பட்டுக்குள்ளே யிறுக்கி
ஒட்டுமாமரங்கீழே
தொட்டுவைத்த நாளே
மட்டில்லாமல் பாடும்
குட்டிக் குயிலானேன்
என் குரலைக்கேளேன்! என் குரலைக்கேளேன்!
கூகூ கூகூ குக்குக்குக் குக்கூ
கூஉ கூஉ குக்குக்குக் குக்கூ"

என்று பஞ்சமஸ்வரத்தில் பாடிக் கொண்டிருக்கும்போது தன் தகப்பன் அங்கு வருவதைக் கண்டதும் தன்னிடமிருந்த தங்கக்கொடியை அவன் கழுத்தில் விழும்படிப் போட்டது. கொடியும் பொறுத்தமாக அவன் கழுத்தில் விழுந்தது. உடனே அவன் உள்ளே சென்று "பார்த்தையா, அப்பறவை எனக்கென்ன பஹுமானஞ் செய்தது? இந்தத் தங்கக் கொடி எவ்வளவு நன்றாகச் செய்யப்பட்டிருக்கிறது" என்று தன்மனைவியிடம் சொன்னான். இதைக் கேட்டதும் அவளுக்கு மேலும் பயமதிகரித்தது; மயங்கி பூமிமேல் களைத்து விழுந்தாள். விழுந்தவேகத்தில் அவள் தலையில் வைத்திருந்த திருகுப்பு சூர்ணமாய் விட்டது. ஆனால் குயில் மாத்திரம்.

"அம்மா என்னைக் கொன்ற"

என்று மறுபடியும் இரண்டாம் தடவை முன்னிலும் விமரிசையாகப் பாட ஆரம்பித்தது. "அடியம்மா! ஒரு கூடைப்பஞ்சைக் கொண்டுவந்து காதில் அடைத்தாலும் இது கேட்காதிருக்காது போல் இருக்கிறதே" என்றந்த சிற்றாய் பதைபதைத்தாள்; பூமிமேல் புறண்டு புறண்டு மனங்கலங்கினாள். அவள் என்னதான் செய்தபோதிலும் அந்தக் குயில் தன் வேலையை நிறுத்தாமல்,

"அங்கச்சி மின்னொளி

என்று பாடிக்கொண்டிருந்தது. அதைக் கேட்டதும் மிருநாளகாந்தி "நானும் போய்ப் பார்க்கேன்; எனக்கேதாவது அந்தப் பறவை கொடுக்கிறதா பார்ப்பேன் என்று சொல்லிக்கொண்டதைக் காணப்போனாள்.

"எலும்பெல்லாம் பொறுக்கி
பட்டுக்குள்ளே இறுக்கி

என்று பாடிக்கொண்டிருந்த குயில் தான் கொண்டுவந்த பாதரக்ஷையைக் கீழே எறிந்தது. அதை மின்னொளி எடுத்துத் தன் காலிற்குத் தொடுத்தாள். அவை அவள் கால்களிற்கென்று அளவிட்டுச் செய்தாற்போலப் பொறுத்தமாக இருந்தன. போட்டுக்கொண்டதும், அந்தக் குயில்

"ஒட்டுமாமரங் கீழே
தொட்டு வைத்த நாளே
மட்டில்லாமல் பாடுங்
குட்டிக் குயிலானேன்
என் குரலைக்கேளேன்! என் குரலைக்கேளேன்!
கூகூ கூகூ குக்குக்குக் குக்கூ
கூகூ கூகூ குக்குக்குக் குக்கூ

என்று விடாமல்பாட அதற்கிணங்க மிருநாளகாந்தி கூத்தாடிக்கொண்டு வெகு குதூஹலமாக உள்ளே போனாள். 'அடியம்மா! பாரத்தையாடி! பார்த்தையா எனக்குச் செருப்புப் பார்த்தையா! என்று சொல்லிக்கொண்டு தன் தாய் முன் கூத்தாடினாள்.

சிற்றாயும் மெல்ல எழுந்தாள். உள் இருக்கமுடியவில்லை என்று சொல்லிக்கொண்டு வெளியே வந்தாள். வாசப்படியைத் தாண்டி யிருப்பாள். அப்பொழுது "பளால்" என்று அந்த எந்திரக்கல் அவள் தலைமேல் விழுந்தது. என்ன ஓசையென்று காண மிருநாளகாந்தியும் அவள் தந்தையும் வெளிவந்தார்கள். அவர் முன் ஓர் பெருங்கூட்டம் மேகம்போல நெருப்புபோல் பிரகாசிக்க அவர் பார்த்தார்கள். அதுவும் க்ஷண நேரத்திற்குள் மறைந்தது.

அப்பொழுது அவர் முன் சிறுவன் முன்போல் மனித உருவில் நிற்கக்கண்டார்கள். பின் அவர் மூவரும் வெகு கொண்டாட்டமாக உள்ளே போய் ஸந்தோஷமாக இருந்தார்கள். வேறென்ன சொல்ல வேண்டியது?

---

**மைனரின் வயது.**—ருஷியாவில் 26 வயது வரையில் ஒருவன் மைனரொன்றும் அதுவரையில் அவன் சம்பாத்தியத்தில் ஐந்தில் நாலு பங்கு அவனது பெற்றோரைச் சேரவேண்டுமென்றும் சட்டம்.

***

**ஜப்பான் பூகம்பத்தில் இறந்தவர்கள்.**—ஜப்பானைச் சார்ந்த க்கோஷிமா என்னுந் தீவில் உண்டான பூகம்பத்தாலிறந்தவர்கள் 600 பெயர்கள் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.



# காலஞ்சென்ற ஹைகோர்ட் ஜட்ஜ் ஆனரபில் மிஸ்டர் பி. ஆர். சுந்தரய்யர்

# THE LATE HON'BLE Mr. JUSTICE SUNDARA AYYAR

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

—திருவள்ளுவர்.

இவர் பாலக்காட்டுக்குப் பதினைந்து மைல் தூரத்திலுள்ள புதுக்கோடு என்னுங்கிராமத்தில் ஓர் ஏழைக்குடும்பத்தில் 1862-ம்வருஷத்தில் பிறந்தார். ஆதியில் மிக்கவறுமையை யனுபவித்து தம் ஸ்வய முயற்சியினாலேயே முன்னுக்குவந்து புகழ்படைத்த சில தென்னாட்டு ச்ரேஷ்டர்கள் போலவே இவரும் தம் இளமைப்பருவத்தில் பலவித கஷ்டங்களை அனுபவித்து, தம் விடாமுயற்சியாலும் மனோபலத்தினாலும் அவைகளை லட்சியம் செய்யாது, தாம் முன்னுக்கு வரும்வழியையே நாடினார். எர்ணாகுளத்திலும், கள்ளிக்கோட்டையில் உள்ள கேரள வித்யாசாலை (தற்காலம் ஜாமோரின் கலாசாலை) யிலும் ஆங்கில பாஷையைக் கற்றுப் பிறகு சென்னைக் கிறிஸ்தவ கலாசாலையில் பி. ஏ. வகுப்பில் வந்து சேர்ந்தார். 'விளையும் பயிர் முளையிலேதெரியும்' என்றவண்ணம் இவர் இளமையிலேயும் கலாசாலை மாணாக்கனா யிருந்தகாலத்தும் தம்மதி நுட்பத்தையும் விடாமுயற்சியையும் நற்குணங்களையும் காண்பித்தார். தென்னிந்திய கல்வித்தலைமை வஹித்துள்ள மில்லர் துரையவர்களுக்கு சுந்தரய்யரென்றால் அத்யந்த ப்ரியம். கலாசாலையில் இவர்படித்த வகுப்புக்கு உள்ள எல்லாபரிசுகளும் இவருக்கே கிடைத்தன. 1884-ம் வருஷத்திய பி. ஏ. பரீட்சையில் முதல்வகுப்பில் முதல்வராகத் தேறினர். உடனே அங்கேயே தர்க்க, தத்வசாஸ்திரங்களைப் போதிக்கும் ஆசிரியராகநியமிக்கப்பெற்றார். இக்காலத்தில் விஷயங்களை மிக்க நுட்பமாய் ஆராய்வதிலும் கோர்வையாக விஷயங்களை எடுத்துரைக்கும் வன்மையிலும் முதர்ச்சிபெற்றார். இரண்டு வருஷத்திற் கெல்லாம் சட்டங்களைப்படிக்க முயன்று மிக்கஊக்கத்துடன் உழைத்து பரீட்சையில் உயர்தரம் வஹித்தவராய்த் தேறினார். அப்பொழுது வக்கீல்களுள் முதன்மை பெற்ற ஸர். எஸ். ஸுப்ரமண்ய அய்யர் அவர்களுடன்நெருங்கிப்பழகி உழைத்துவந்தார். அக்காலத்திலேயேதான் இவருக்கும் இவரைப்போலவே ஸர். எஸ். ஸுப்ரமண்ய அய்யர் அவர்களுடன் உழைத்துவந்த காலஞ்சென்ற வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களுக்கும் நெருங்கியநேசம் ஏற்பட்டது. ஸர் எஸ். ஸுப்ரமண்ய அய்யர், தம்முடன் உழைத்துவரும் சுந்தரய்யரின் புத்திகூர்மையையும் அவருக்கு சட்டத்தில் உள்ள ஞானத்தையும் ஊக்கத்தையும் கண்டு களித்தவராய் தமக்குப் பதிலாய் முக்யமான கேஸுகளை நடத்தும்படி சுந்தரய்யரையே அனுப்புவது வழக்கம். இவரது அரியசட்ட ஞானத்தைக்கண்டு வியந்து மதுரை, ராமநாதபுரம் இப்பக்கங்களிலுள்ள தனவந்தர்களாகிய நாட்டுக்கோட்டைச் செட்டிகள் இவரையே தங்கள் வக்கீலாக ஏற்படுத்திக் கொண்டார்கள். ஸர் எஸ். ஸுப்ரமண்ய அய்யர் ஹைகோர்ட்ஜட்ஜாக நியமிக்கப்படவும் அவருடன் வக்கீல்களில் முதன்மை வஹித்த ஸர் வி. பாஷ்யம் அய்யங்கார் காலஞ்சென்று விடவும் ஏறக்குறைய முக்யமான கேஸுகளெல்லாம் இவரையும் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யரையுமே அடையத்தொடங்கின. இம்மாதிரி கேஸுகள்மேன்மேலும் வரத்தொடங்கவும் இவர் தம் தேகசௌக்யத்தைச்சிறிதேனும் பொருட்படுத்தாது தம்கட்சிக்காரரைத் திருப்தி செய்வதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தனர். இப்படி இருந்ததினாலேயே கடைசியில் கொடியவியாதிக்குள்ளானார். 1911-ம் வருஷம் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் ஜட்ஜ்ஸ்தானத்திலிருந்து கவுன்ஸில் மெம்பராக உயர்த்தப்பட்டபோது ஸுந்தரய்யர் அந்த ஜட்ஜ் ஸ்தானத்தைப் பெற்றார். ஆனால் இப்படிப் புதியவேலை கிடைப்பதற்குச் சிறிது முன்னமேமிகவும் சாமர்த்தியசாலியாய் இருந்து பி. ஏ. பரீட்சையில் தேறின தம் மூத்தமகனையிழந்தார். தவிரவும் இவரது அரியநண்பராகிய வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர்தம்புதிய உத்யோகத்தில் ஒரு வருஷகாலமேயிருந்து தேகவியோகமடைந்தார். இவை யெல்லாம் சுந்தரய்யர் மனதிற்கு அளவில்லா வியாகூலத்தை விளைவித்தன. ஆனாலும்இவர் தம் உத்யோகத்தில் மிகவும் கவனத்துடனும் ஊக்கத்துடனும் உழைத்து நிரம்ப சாமர்த்தியசாலி என்ற பெயரைப்பெற்றார். இவர் தேக அசவுக்கியத்தினிமித்தம் ரஜாபெற்றுக் கொண்டபோது, பொதுஜன அபிப்ராயம் இருந்ததை நோக்கின் இவரது பெருமையும் சாமர்த்தியமும் இனிது விளங்கும். எல்லாரும் இவர் சவுக்கியமடைந்து வருகிறார் என்று கேள்விப்பட்டு மகிழ் வெய்தியவர்கள் திடீரென சென்ற டிஸம்பர்மீ 21உ ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 7½மணிக்கு இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டு துக்கக் கடலில் ஆழ்ந்தார்கள். நம் தென்னாட்டில் உயர்தர உத்யோகங்களை வஹித்து வந்தவர்கள் நெடியகாலம் உலகத்தில் நன்மை புரிய இடம்பெறாததுநம்மவரின் அதிர்ஷ்டஹீனம் போலும்!

சுந்தரய்யர் தம் வாழ்நாள் முழுமையும் பொது ஜன நன்மையின் பொருட்டேபற்பலதுறைகளினும் உழைத்துழன்றார். வக்கீலாயிருந்த காலத்தும் ஜட்ஜ் ஸ்தானத்தை அடைந்தகாலத்தும் தாம் ஆதியில் இருந்த நிலைமையை அடிக்கடிநினைந்தும் உலகத்தில் பற்பல அனுபவங்களை உணர்ந்தும்உள்ளவராதலால் எவர்களிடத்தில் எப்படி நடக்கவேண்டுமோ அவ்வண்ணமே ஒழுங்காய் நடப்பர். கட்சிக்காரர்களை வீணாய்த் தம்மிடத்தில் காக்கவைக்காமல் அவ்வப் போதே அவர்கள் வேலைகளை முடித்தனுப்பிவிடுவர். கட்சிக்காரர்

களது கேஸ் விஷயங்களில் தம்மாலியன்றவளவு ஆராய்ந்து சட்டத்தின் நுட்பங்களை யெல்லாம் எடுத்துரைத்து தம்கட்சி ஜயமாவதையே எதிர்பார்ப்பர். அது மாதிரியே இவர் ஜட்ஜானபிறகுங்கூட வாதிக்கவரும் வக்கீல்கள் வார்த்தைகளை வெகு பொறுமையுடன் காது கொடுத்துக்கேட்டு வெகு நடுவுநிலையாய் நியாயம் தீர்ப்பர். வக்கீல் தொழிலை இவர் எப்படி நன்குமதித்து அருமைபாராட்டினர் என்பது இவர் அவர்களின் பொருட்டு யாதொரு ச்ரமத்தையும் பாராட்டாது சில முக்யமான உபன்யாஸங்கள்செய்ததினால் வெளியாகின்றது. தவிரவும் வக்கீல்களுக்குப் பயனுள்ள பத்ரிகையான 'சென்னை லா ஜர்னல்' என்பதை ஆரம்பித்து சுமார் 20 வருஷகாலம் அதன் முக்யமான பத்ராதிபருள் ஒருவராய் இருந்தார். இவரைப்பற்றி பொது ஜனங்கள் வைத்துள்ள நல்லபிப்ராயம் அவர்கள் அவரை 1910-ம்வருஷத்துசென்னை மாகாண கான்பரன்ஸுக்கு அக்ராஸனாதிபதியாகத் தெரிந்தெடுத்ததனால்விளங்கும். இவர் சென்னையிலுள்ளவறக்குறையஎல்லாமுக்யமான சங்கங்களுடனும் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதையும் இவரதுமரணம்அச்சங்கங்களுக்குஎன்ன நஷ்டத்தைஉண்டாக்கிற்றுஎன்பதையும் எல்லாருமறிவர். நம்நாட்டிளைஞரின் கல்வித்தேர்ச்சியைப்பற்றி இவருக்குள்ள ஊக்கத்தைக்குறித்து சென்னை யூனிவர்ஸிடி வைஸ்சான்ஸலாவர்களே புகழ்ந்து கூறியிருக்கும்போது நாம் அதிகமாய் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. பொது ஜன நன்மைக்குரிய பற்பல விஷயங்களிலும் சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும் என்னும் பேரவா இவர் மனத்திலிருந்து வெளிப்பட்ட போதிலும், எக்காலும் எக்காரியத்தையும் தைரியமாய்க்கடைப்பிடித்து ஒழுகும் விஷயத்தில் பின்வாங்குமியல்பினையுடைய நம்தென்னாட்டாருக்குத்தாமே தாம் கூறியவிஷயங்களை அவலம்பித்துக் காட்டும்படி பகவான் இவருக்கு நீடியஆயுள் அளித்திடவில்லை. ஆயினும்இவர் போன்றவர்நமக்குக்குறிப்பிட்டுள்ளவழியைப்பற்றி நாமாவது காம் நமக்கு நல்லதென்று தோன்றும் விஷயங்களில் பின்வாங்காமல் மேற்கொள்ளும் மனோதிடத்தையுள்ளவர்களாயிருப்போமாக.

---

**மதுரை மிஸ்டர் பி.நாராயண ஐயர், பி.ஏ. பி.எல் காலஞ் சென்றார்.**— மதுரை பிரபல வக்கீலாக விருந்தவரும், 'பூரண சந்திரோதயம்' என்னும் யாதப்பத்திரிகையின் பத்ராதிபருள் ஒருவராயும், பொது ஜனகாரியங்களில் உழைத்தவரும், மதுரை பிருஹ்ம ஞான சங்கத்திற்கு உயிர் போன்றிருந்தவருமான, இத்தேசாபிமானி ஜனவரி௴ 27௳ காலஞ் சென்றாரெனக்கேட்டு மிகவும் துக்கிக்கிறோம்—இவர் தமிழ்ப் பாஷையின் வளர்ச்சியில் மிகவும் அக்கறைகொண்டவர். மதுரைத் தமிழ் சங்கத்து நிர்வாக சபையாருள் ஒருவராக இருந்து வந்தவர். இவரது பிரிவால் தமிழ் நாட்டார்க்கு ஒரு பெரிய நஷ்டந்தான். இவர் குடும்பத்தாருக்கு நமது அனுதாபத்தை தெரிவிக்கிறோம்.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**1911-ம் வருஷத்திய இந்தியா ஸென்ஸஸ் கணக்கு:**—1911-ம் வருஷத்தில் இந்தியா முழுவதிலும் ஸென்ஸஸ் எடுத்ததில் மொத்த ஜனத்தொகை 31, 51, 56,39,6; அதில் 16,13,38,935 பேர் புருஷர் என்றும்; 15,38,17,461 பேர், ஸ்திரீகள் என்றும் கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது.

***

**ஹானரபில் மிஸ்டர் T. V. சேஷகிரி ஐயர்.**- இவர் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ்களில் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கிறாரெனக் கேட்டு மிகவும் சந்தோஷிக்கிறோம்.

***

**திருவாங்கூர் கவர்ன்மெண்டின் தீர்மானம்:**—திருவாங்கூர் சமஸ்தானத்து மகாராஜா காலேஜில் ப்ரொபெஸர்களாக இருக்கும் இந்தியர்களின் சம்பள விஷயத்தில் அந்தக் கவர்ன்மெண்டார் பாரபட்சமில்லாத முடிவு அபிப்பிராயங் கொண்டிருப்பது யாவர்க்கும் சந்தோஷத்தைவிளைக்கும். மகாராஜா காலேஜில் 4 ஐரோப்பிய ஆபீஸர்களும் 3 இந்திய ஆபீஸர்களும் வேலைபார்த்து வருகிறார்கள், இங்கிலீஷ், பிஸிக்ஸ் அண்ட் கெமிஸ்ட்ரி, ப்ரொபெஸர்கள் ஐரோப்பியர்கள். அவர்களின் சம்பளம் 400 ரூபாயிலிருந்து ஆரம்பித்து 700 ரூபா வரையில் உயர்கிறது. வருஷா வருஷம் 50 ரூபாய் ப்ரொமோஷன் கொடுக்கப்படுகிறது ஸம்ஸ்கிருதம், த்ராவிட பாஷைகள், கணிதசாஸ்திரம் சரித்திரம், ஆகிய இவைகளைப்போதிக்கும் ப்ரொபெஸர்கள், இந்திய ஆபீஸர்கள். அவர்களின் சம்பளம் 350 ரூபாயிலிருந்து ஆரம்பித்து, 450 ரூபாய் வரையில் உயர்கிறது. வருஷா வருஷம் 20 ரூபாய் ப்ரொமோஷன் கொடுக்கப்படுகிறது. சம்பளவிஷயத்தில்ஐரோப்பியர்களுக்கும் இந்தியர்களுக்குமுள்ள வித்யாசத்தை அடியோடு தொலைத்துவிட வேண்டுமென்று கவர்மெண்டார் யோசனை செய்து அப்படியே அந்த வித்தியாசத்தை நீக்கிவிட்டார்கள். இந்திய ப்ரொபஸர்களான மெஸ்ஸர்ஸ் A. R. ராஜ ராஜ வர்மா, R. கிருஷ்ணஸ்வாமி அய்யர், K. V. ரங்கசாமி அய்யங்கார் இம்மூவரும் ரூபா 400 சம்பளத்தில் ஆரம்பித்து 750 ரூபா வரையில் உயர்த்தப்படுவார்கள்.

***

**மைசூரில் ஒரு புதியஇருப்புப்பாதை.**—மைஸூர் ஹாஸான் இருப்புப்பாதை என ஒரு புதிய ரயில்வே லயன் 106மைமயில் தூரத்திற்குபோடப்போகிறார்கள். இதற்கு ரூ 67, 27,000-செலவாகுமாம்—இப்பாதை, காவிரித்தேக்க அணைக்கட்டின் வழியாகச் செல்லுமாம்.

[" விவேக போதினி" அனுபந்தம்.]

SUPPLEMENT TO THE "VIVEKA BODHINI"



ஸ்வாமி விவேகானந்தர்.



ஸ்வாமி ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

THE REGISTRAR OF BOOKS
REGISTERED
1914
MADRAS.

# விவேக போதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VI { பிரமாதீசவூ மாசிமீ =1914-வூ மார்ச்மீ } பகுதி 9.

## வேதாந்தத் திரட்டு

### VEDANTIC SELECTIONS

4. குஹ்யதமம்; ஈசனே எங்கும்

அர்ப்பணமும் ஆவியும் அக்கினியும் அக்கினியில்
அர்ப்பணம் செய்கிற்பானும் அச்செயலும்—செப்பு
மொரு
கன்மத்தினிற் பிரமம் காணுமவன் நண்ணுவதும்
இன்னவையாவும் பிரமமே. 1.
(பகவத்கீதை iv 24 முத்துவைய்யர் மொழிபெயர்ப்பு)

அங்கங்கள் எப்புறத்தும் ஆமையடக்குதல்போல்
பொங்கும் விடயங்களிடைப் போகாமல்—எங்கு
மெவன்
இந்தியங்கள்யாவையு முள்ளீர்த்தடக்கும் அன்
றைக்கே
சிந்தியவன் ஞானம் திரம். 2.
(கீதை ii—58)

யாதொன்றினும் பற்றல் இல்லானாய் இன்னல் தரு
தீதொன்றினும் நன்மை சேருகினும்—போதும்
விருப்பு வெறுப்புற்றிடுதல்விட்டவன்றன் ஞானம்
திரப்படுவ தென்று தெரி. 3.
(கீதை ii—57)

துன்புவரிற் சற்றும் துடியா மனத்தனாய்
இன்பதனில் ஆசைஎழல் இல்லானாய்—அன்ப
விருப்பும் விளைபயமும் வெஞ்சினமும் விட்டிங்
கிருப்பவனே ஞானிமுனி எண். 4.
(கீதை—ii—56)

நிரம்புறுதன் உள்மகிழ்ச்சி நேர்ந்துதானாக [மா
விரும்புமனத் தாசைஎலாம் விட்டான்—உரம் பெறு
ஞானநிலை பெற்ற ஒருநல்லோன் எனப்படுவான்
தேனொழுகும் தாராய் தெரி. 5.
(கீதை ii—55)

அறிவும் ஒழுக்கமும் ஆர் அந்தணனில் ஆனில்
தறுகட் களிற்றிடைநாய் தன்பால்—சிறுபுலையன்
கண்ணு மெங்கும் ஒன்றனையே காண்பவரே காசினி
யில்
கண்ணரிய ஞானியர் நீ நாடு. 6.
(கீதை v—18)

யாவனது கன்மங்கள் எல்லாம் விருப்புடனே
மேவு மொரு ஸங்கல்பம் விட்டனவோ—தாவிலவன்
சின்வினைகள் ஞானத்தழலால் எரிந்தனவோ
அன்னவனே பண்டிதனா மாங்கு. 7.
(கீதை iv—19)

எவ்வுயிர்க்கும் யாதொன் றிரவாமோ அவ்விடையில்
மெய்வழிசேர் ஞானி விழிப்புறுவன்—எவ்விடையில்
பூதங்கள் யாவும் விழித்திருப்ப அவ்விடையக்
கோதின் முனி வற்கிரவாம் கொள். 8.
(கீதை ii—69)

பல் பிறவி பாரில் எடுத்துப்பின் பார்ப்பவெலாம்
செல்வமலி யும்வாஸுதேவனது—நல்வடிவே
என்றறிந்து ஞானிஎனை எய்துமவ னிற்பெரியோன்
ஒன்றலரி திவ்வுலகில் ஓர். 9.
(கீதை vii—19)

ஆகலினால் நீயெழுக ஆரும் புகழ் பெறுக [த்து
ஓகையொடு முன்னின்ற ஒன்னலரைக்கொன்றொழி
வாகையடைந் தொப்பரிய மாநிலத்தைப் பெற்றிடுக
சாக இவர் யாவரும்என் றன்னாற் கொலப்பட்டார்
ஆதகநீ ஓர்நிமித்தம் மாத்திரமே அம்பெய்வாய்
வாகின் இடக்காத்தும் வாய்த்து. 10
(கீதை xi—33)

விவேக போதினி

தொ.6.] பிரமாதீசவஸ்ரீ மாசிமீ [பகுதி.9.

# மோக்ஷ ஸோபானம்

## THE STEPS TO THE GOAL

### (2) கர்மயோகம் (தொடர்ச்சி)

(5). கர்மயோக முடிவைக்கூடக் கவனியாதிருத்தல் என்பதுதான் கர்மயோகத்தின் கடைசியான அங்கம். முன்னர் கூறியவைகளிலிருந்து நிஷ்காம்ய கர்மந்தான் மிகச் சிறந்த கர்மம் என்று வெளியாகியிருக்கும். இதனால் ஏற்படும் பலனாகிய சித்தசுத்திக்குநிகர் வேறு எந்த உலக விஷயபலனும் இல்லை. இந்தபலன் ஒன்று மாத்திரம் ஏற்பட்டுவிட்டால் எப்படிப்பட்ட கஷ்டமான ஸமயங்கள் வந்துவிட்டாலும் மனம் தத்தளிக்காமலும், எப்படிப்பட்ட ஸுக ஸமயங்கள்வந்துவிட்டாலும் மனம் தலைகால் தெரியாது ஒரே அடியாய் மூழ்கிவிடாமலும், ஒரே விதமான சாந்தரூபமாகவே இருக்கும். இப்படிப்பட்ட நிலையை மனதில் பற்றி மற்றைய தாழ்ந்த பற்றுக்கள் எல்லாவற்றையும் விட்டு கர்மயோக அப்பியாஸத்தில் இறங்கி முதல் நான்கு அங்கங்களையும் நன்கு உணர்ந்து தேறி வருங்கால்தான் இந்த 5-ம் அங்கத்தின் தன்மையினது ஸூக்ஷ்மம் நன்கு விளங்கத் தொடங்கும். அதுவரையில் கர்மயோகத்தை அனுஷ்டிக்காது வெளியிலிருந்துகொண்டு எவ்வளவுபேசிக்கொண்டிருப்பினும் இந்த அங்கத்தின்சிறப்பு நன்கு விளங்காது.

எந்த நிஷ்காம்ய கர்மமுடிவை உத்தேசித்து மற்றையப் பற்றுக்களைவிட்டு இந்த யோகத்திலிறங்கினேமோ, அந்த முடிவிலுள்ள விசேஷப்பற்றையும் வரவர மறந்துவிட முயலவேண்டும் என்பதுதான் இந்த அங்கத்தின்ஸூக்ஷ்ம விஷயம். தொடக்கத்தில் இந்த முடிவை கவனியாது கர்மயோகத்தில் முனைவது முடியாத காரியமாயினும், கர்மயோகத்தில் முயன்று வரவரத் தகுந்த யுக்திகளால் இந்த முடிவையும் மறந்து கேவலம் ஈச்வரார்ப்பண புத்தியையே வலுக்குப்படி செய்துகொள்ளவேண்டும். அப்பொழுதுதான் கர்மயோகம் அடுத்த படியாகிய பக்தியோகத்திற்கு வழிகாட்ட, அதனால் சற்று முதிரத்தொடங்கும். இந்த முடிவு விஷய ஞாபகமிருக்கும் வரையில் அடுத்த படியில் அடி எடுத்து வைப்பதே கடினமாகிவிடும்.

ஆகவே இந்தக் கர்மயோக முடிவில் உள்ள பிடிப்பை இழப்பதற்குத் தகுந்த யுக்திகள் யாவை என்ற கேள்விபிறக்கும். அதற்கு அநேக யுக்திகள் உண்டு: அவைகளை முறையே எடுத்து விஸ்தரிப்போம். (1) கர்மயோகத்தை உள்ளபடி அனுஷ்டித்து வந்தால் சித்த சுத்தி தானே உண்டாகிவிடும் இப்படித் தானே உண்டாகவேண்டிய விஷயத்தைப்பற்றி முன்னாலேயே சிந்திப்பதால் பயன் ஒன்றுமில்லை. சீக்கிரம் இந்த முடிவு ஏற்படாவிடில் ஒருவித மனத்தளர்ச்சியும், சீக்கிரம் ஏற்படுவதற்கு அடையாளமாகச் சிற்சில குறிகள் தென்படுமாயின் அவைகளின் உணர்ச்சியால் ஒரு அல்ப ஸந்தோஷமும் திருப்தியும், ஏற்பட்டு கர்மயோக விஷய தீவ்ர முயற்சியின் வலிவு குன்றும்படிசெய்து முடிவு எளிதில் கைகூடாதபடி தடுத்துத்தானே விடும். ஆதலால் கர்மயோக முடிவைப்பற்றிய சிந்தனையை வரவரக் குறைத்து வரவேண்டும். (2) உலகில் பொது



வாக முயற்சி ஒன்றும் அதன் முடிவும் என்ற இரண்டாவதும் உண்டு. இந்த முடிவில் அவாந்தரம் என்றும் முக்யம் என்றும் இரண்டுவிதம் உண்டு. கர்மயோக முயற்சிக்கு முதல் முடிவு சித்தசுத்தியாயினும், அதற்கு அப்பால் அடையவேண்டியதாகிய மோக்ஷம் என்பது ஒன்று உண்டு. ஆகவே அதை உத்தேசித்தும் நமது மனதை தீவ்ரமாக சித்தசுத்தி விஷயத்தில் பற்றி நிற்கும்படி விடாது, கர்மயோக முயற்சியில் பாய விடவேண்டும். (3) உலகில் உள்ள நல்வழிகளுக்கெல்லாம் இவ்வுலகிலேயே நல்ல பெயர் பொதுஸுகம் தருவது முதலிய நற்பயன்கள்உண்டு. ஆயினும் இவைகளைக் கருதி நல்வழியில் நிற்கப் பழகுவது முதல் முயற்சிக்கு சற்று ஆதாரவாயிருப்பினும் விருத்தியாக ஆக ஆக இதையே மாத்திரம் ஆதாரவாகக் கொண்டு நல்வழி நடந்துநிலைப்பது முடியாமற் போய்விடும். இந்தப் பலன்களை விட்டு நல்லவழி நடப்பதிலேயே ஒருவித ப்ரீதி ஏற்பட்டுவிடவேண்டும். இவ்வாறின்றி முற்கூறிய நற்பயன்களை நம்பி ஸந்மார்க்கத்தில் முயலுவது ஒரு வேளையைப்போல இராது. நமக்கு ப்ராரப்தம் கெட்டதாக இருக்குங்கால் இந்த ஸந்மார்க்கப் பிடிப்புத் தளர்ந்துவிடும். இதுபோல சித்த சுத்தியை தீவ்ரமாகப் பற்றிக்கொண்டே இருந்து கர்மயோகத்தைநடத்துவதும் தளர்ந்தநிலைக்குவந்துவிடும். (4) பலத்திலேயே இச்சையை விட்டு சஞ்சலமற்று ஸத்கர்மானுஷ்டானம் செய்வது கர்மயோகமாயின், அதன் முடிவு இன்னும் வரவில்லையே என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருப்பது இந்தக் கர்மயோக லக்ஷணத்திற்கு விரோதமாகாதா? இப்படிக் கர்மயோகத்தை அனுஷ்டிப்பது நுனிமரத்திலிருந்து அடிமரத்தை வெட்டும் மடையர் பிரயத்தனம் போலப் பேரபாயத்தைத்தான் விளைவிக்கும். (5) கர்மயோகம் மோக்ஷ ஸோபானத்தில் முதல் படி. ஒவ்வொரு படியும் அதற்கு அடுத்தபடிக்குச் சென்றால்தான் பூர்ணமாகும்; எல்லாப்படியும் முடிவான படியைக் கடந்தால் உள்ளபடி முற்றிலும் பூர்ணமாகும் என்பது பொது அபிவிருத்தி விஷயமான நியாயம். ஆகவே முடிவாகிய ஞானயோகப்படி கடந்த முக்தனிடம் கர்மயோகம் உள்ளபடி காணப்படும். ‘உலகில் நடப்பதெல்லாம் ஈசனாலேயே நம்மால் நடப்பதுபோல ஏற்படுபவைகளில் எல்லாம் நாம் நிமித்தமாத்திரம்தான், நாம் ஈசன் கைக்கருவியாக்கும்’ என்ற எண்ணம் அவன் மனதை விட்டகலாதிருக்கும் உலகில் உலாவுங் காலத்தில். “முற்பழக்க விசேஷத்தால் இயற்கையாக அவனால் முயலப்படுவதும், அவனது முக்தி நிலையைச் சற்றும் மறைக்கும் தன்மை இல்லாததும், ஈசன் கைக்கருவியாக கேவலம் நிமித்த மாத்திரமாகவிருந்து அவனால் செய்யப்படுவதுமான கர்மயோக ஆதாரமாகத் தகுந்த கர்மாக்களையே நாம் செய்யமுயலுவது. அந்த முக்தி நிலையை அடையுங்கால் தான் கர்மயோகம் முற்றிலும் அமையப்போவது. அதுவரையில் இப்படி அமைந்து போய்விடக்கூடிய ஈசாஞ்ஞையான கர்மங்களை அனுஷ்டிப்பதே ஒரு சிறந்தகாரியம். கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமோ? இப்படி ஈசன்மேல் பாரத்தைப் போட்டு இப்படிப்பட்ட கர்மங்களை அனுஷ்டிப்பதற்கு வேண்டிய உணர்ச்சியும், தேஹ நிலையும், பிறப்பும், ஸங்கமும் கிடைத்ததே. இதுவேபோதும்; சித்தசுத்தி வருங்கால் வரட்டும். இந்த கர்மத்திலேயே உண்மையனுபவத்தை மறைக்காத்தன்மை இருக்கிறதே!’, என்று கர்மயோக ஆதார கர்மங்களின் தன்மையை வியந்து அனுஷ்டித்துக்கொண்டு, வரவர கர்மயோகமுடிவாகிய சித்த சுத்தியிலுள்ள பற்றையும் நழுவவிட்டு விடவேண்டும். இந்தப் பற்றும்நழுவி “உன்பற்றொழிய வேறுபற்றில்லை

என்னைப்பனே!" என்று ஈச்வரார்ப்பண புத்தி திடப்படுங்கால்தான் கர்மயோகம் பக்தியோகமாக மாறத்தொடங்கும். இதைத்தான் பகவான் பகவத்கீதை II-48-ச்லோகத்தில் ஸமத்துவம் யோகமெனப்படும் என்று கூறியிருக்கிறார். அந்த ஸமத்துவம் என்பதையும் பகவானே முன் பாதத்தில் ஸித்தி அஸித்திகளில் ஸமபுத்தியுடனிருப்பதே ஸமத்வம் என்று கூறி கர்மயோக ஸித்தி அஸித்திகள் என்று த்வனிக்கும்படி அமைத்திருக்கிறார்.

இதுகாறும் விஸ்தாரமாக வெளியிடப்பட்டு வந்த கர்மயோக பஞ்சாங்கங்களையும் கீதை II 47, 48-ம் ச்லோகங்களில் சுருக்கமாக வெளியிட்டிருக்கிறார் பகவான். அவைகளை வகுத்துப் பின் வருமாறு கூறலாம்:—

(1) வேத சாஸ்திரங்களிலிருந்து வெளியாகும் (ஸத்கர்ம) பலத்தில் பற்று எப்பொழுதும் ஏற்படாமை. அதாவது பலத்தை ஆவலுடன் எதிர்பாராமை.

(2) அகர்மத்தின் (முடிவான) பலமான (பாபத்தின்) காரணமாகிய (தீயதொழிலில்) முயலாமை: அதாவது பாபகாரணமாகாமை.

(3) அகர்மத்தில் (ஸத்கர்மம் செய்யாமையில்) ஸம்பந்தமே ஏற்படாமை. ஸத்கர்ம அனாதரவின்மை.

(4) கர்திருத்துவம்: (ஈச்வரதிருப்திகாரணம் என்றபற்றின்மை:) அதாவது ஸாதாரண ஸங்கநீக்கம் ஈச்வரார்ப்பண (ஈசனுக்குக் கீழ்ப்படுவது என்ற) புத்தி.

(5) கர்மயோக ஸித்தி அஸித்திகளில் ஸமமாக இருப்பதாகிய யோகநிலை.

இவ்வாறாகவெல்லாம் செய்வதால் நம்மைக் கடைத்தேறவைப்பதற்கு தகுந்த கர்மங்களுக்குப் பின் கூறப்பட்டுள்ள முக்ய லக்ஷணங்கள் இருத்தல் வேண்டும்:—

(1) நெருங்கினதாயும் எல்லோருக்கும் நேரிட விளங்கக் கூடிய தாயுமுள்ள லௌகீக பலனோடு ஸம்பந்த மிருக்கவே கூடாது.

(2) இவைகளின் பலன்கள் வேத சாஸ்திரங்களிலிருந்து மாத்திரம் தான் வெளியாகக் கூடியதாக இருக்க வேண்டும்.

(3) இந்தப் பலன் லோகாந்தரத்திலும் ஜன்மாந்தரத்திலும் ஏற்படக் கூடியவைகளாக இருக்கல் வேண்டும்.

(4) இந்தக்கர்மங்கள் ஈசராஞ்ஞையால் ஏற்பட்டவை என்ற கௌரவ புத்தியுடன் வெகுகாலம் நமது முன்னோரால் அநுஷ்டிக்கப் பட்டவையாக இருக்கல் வேண்டும்.

(5) கர்மங்கள் பொதுவாக ஞான விரோதமாயினும் இக்கர்மங்கள் முக்தராலும் அநுஷ்டிக்கத் தக்கவையாகவும், அவரது பரம அநுபவத்தை மறைக்குந்தன்மை இல்லாததாகவும் இருக்கல் வேண்டும்.

இப்படிப்பட்ட கர்மங்கள் நமது வேத சாஸ்திரங்களில் விஹித கர்மங்கள் என்று விதிக்கப் பட்ட நித்ய (என்றும் ஸரியான காலத்தில் செய்து சித்த சுத்தியைச் செய்து கொள்ள வேண்டியதான) கர்மங்களும், நைமித்திக (ஏதோ ஒரு காரணத்தை ஒட்டி நமது பித்ர்க்கள் க்ஷேமத்திற்காகச் செய்யப்படுவனவான) கர்மங்களுமே என்பது நன்றாக விளங்கும். மூன்றாவது விஹித கர்மங்களாகிய காம்ய கர்மங்கள் பொதுவாக கர்மயோகத்திற்கு விரோதமானவை. ஆயினும் அதிகப் பணம் மிகுந்து விதிப்படி நேர்ந்த காலத்தில் இவைகளைப் பலத்தில் இச்சை விட்டு செய்தாலும் கர்மயோகமாகும். இவைகளை வெகு ஜாக்ரதையாகக் கத்தியுடன் பழகுவது போலிருந்து செய்ய வேண்டும். இவை நீங்கலான மற்றைய கர்மங்கள் எல்லாம் கர்மயோக ஸம்பந்தமே இன்றி அந்த நிலைக்குத் தாழ்ந்த நிலையிலிருந்து அநுஷ்டிக்க வேண்டியவை. இவைகளிலும் நித்ய கர்மங்கள் செய்தே தீரவேண்டியவைகளாதலால் ச்ராத்தாதி தானதர்மங்கள் செய்வதற்கு இடம் தரும் நைமித்திக கர்மங்களே கர்மயோகத்திற்கு மிகப் பொருத்தமானவை.

ஆகவே முற்கூறிய பஞ்ச லக்ஷணமுடைய கர்மங்களை முன் எடுத்துக் காட்டப்பட்ட பஞ்சாங்கமுடைய கர்மயோகமாக அநுஷ்டித்து வந்தால் கூடியசீக்கிரத்தில் கர்மயோக நிலையை விட்டு, எளிதில் பக்தியோக நிலைக்கு ஏற யோசிக்கலாம்.



# ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்
# SRI RAMAKRISHNA PARAMAHAMSA
## I சரித்திரம்

சரித்திர ஆராய்ச்சிக்கும் எட்டாத ஆதிகால முதற்கொண்டு உலகை நன்மையின்பொருட்டும், நாகரீகத்தின் பொருட்டும், கல்வியின் பொருட்டும், வாணிபத்தின் பொருட்டும் எல்லாத்துறைகளிலும் உழன்று பயனளித்தது ஆசியா கண்டமென்பர். அதிலும் புண்யபூமியாகிய பாரதவர்ஷமானது எல்லாவித நாகரிகப்பாங்கிற்கும் பிறப்பிடமாயுள்ளது என்பது யாவருமறிந்தவிஷயம். சகலவிதத் தேர்ச்சிக்கும் காரணமாய் நின்றுள்ள மதவுணர்ச்சியானது இந்நேரத்தில் அநாதிகாலந் தொடங்கியுள்ளதென்றால் இந்நாட்டின் பெருமையையும் கூறல் வேண்டுமோ? நமக்குச் சரித்திரவாயிலாகத் தெரிந்தவரையில், உலக ஜனங்களை உய்வித்தற்பொருட்டு அவ்வக்காலங்களில் அவதரித்து தம் வாணாளை எல்லா வழிகளிலும் மேல்வரிச் சட்டமாகக் கொண்டொழுக வேண்டுமென்று காட்டித்தருளிய மகான்களின் பெயரைக்குறிக்கவும் வேண்டுமோ? ஏழை பாமரர்களிடத்திலும், யாதொரு பகுத்தறிவுமில்லா ஜீவராசிகளிடத்திலும் அன்பு பூண்டு கண்ணீர் பெருகிய ஸ்ரீபுத்தரென்ன, ஸ்ரீ வேதவேதாங்கங்கள் அழிந்து போகாவண்ணம் காப்பாற்றியருளி அருமையான பாஷ்யங்கள் எழுதிவைத்து ப்ராசீனதர்மத்தை நிலை நிறுத்திய மகான் சங்கரரென்ன, எல்லா ஜனங்களும் கடைத்தேறும்வண்ணம் பக்திமார்க்கத்தையுபதேசித்து வந்த பகவான் ஸ்ரீராமாநுஜரென்ன, இவர் சிஷ்யபாரம்பரையில் வந்த ராமாநந்தர், கபீர் சைதன்யர், ஆகிய இப் புருஷோத்தமர்களென்ன, இத்தகைய ச்ரேஷ்டர்கள் நந்தேசத்தில் அவதரித்திருக்க நம்நாடும் எக்காலத்திலேனும் சீர்குலையுமோ? உலகத்துள்ள மற்றநாடுகளின் ப்ராசீன நாகரிகமெல்லா மொழிந்து அவைகள் புதிய வேஷங்களை மேற்கொண்டு சிறிது காலம் உலகவரங்கில் நடித்து மறுபடியும் மறைந்து விடலாம். ஆனால் இந்தியாவின் ப்ராசீன வழக்க வொழுக்கங்களும், நாகரிகப்பாங்கும், கல்வித் தேர்ச்சியும், செல்வவளமும் ப்ராசீன ஸநாதனதர்மம் நிலைத்திருக்குமளவும் நிலைபெற்றிருக்கும் என்பதற்குத் தினையளவும் ஐயமில்லை. மேற்கூறியபடி அவ்வப்போது தர்மத்தை ஸ்தாபிக்கும் பொருட்டும் அதர்மத்தை ஹதம்செய்யும் பொருட்டும் பகவானே பக்தசிகாமணிகளாகவும், மகாவீரர்களாகவும் திருவவதாரம் செய்தருள்கிறார் என்று அவரே கீதையில் முறையிடுகிறார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியகாலமும் இறுதிக்காலமும் இத்தகைய அவதார புருஷன் வெளிக்கிளம்புவதற்கு ஏற்றதாயிருந்ததென்னலாம். மேனாட்டு நாகரிகம் உலகெங்கும் பரவிவிடவும், மானிடகோடிகளே தம் உண்மை நோக்கங்களை மறந்து பணம் என்பதையே கடவுளெனமதித்து, அதை அபிவிருத்தி செய்யக்கூடிய வழிகளையே கொண்டாடி உண்மைக்கடவுள் ஒருவர் உளரோ என்றும் சந்தேகித்து வாதாடி வந்ததும் தவிர ப்ராசீன தர்மங்களை அடியோடே அழிக்கவும் தொடங்கினர். வேறு சிலர், உள்ள மதங்களுக்குள்ளேயே பகைமையை உண்டாக்கி எங்கள் கடவுளேஉண்மை, மற்றவையெல்லாம் பொய்க் கடவுளேயாவர் என்று வாதாடி வழக்குரைத்தார்கள். இத்தகைய கோளாறுகளெல்லாம் நீங்கவும், உலகெங்கும் ப்ராசீன சமாதானக் கொடி பறக்கவும் 1835-ம் பிப்ரவரிமீ 20உ ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்தனர் போலும்!

பங்காளத்தில் ஹூக்ளி ஜில்லாவைச் சேர்ந்த காமார்புகார் என்னும் குக்கிராமத்தில் க்ஷுதிராம் சட்டோபாத்தியாயர் டேரி என்னும் தம் பித்ரார்ஜித கிராமத்திலிருந்து வந்து குடியேறி தம் பத்னியாகிய சந்திரமணீதேவியுடன் வெகுபக்தி பூர்வகமாக வாழ்ந்து வந்தார். தம்பதிகளிருவரும் செய்த அருந்தவப்பயனாக இருபெண்மணிகளும் மூன்று ஆண்மக்களும் உதித்தனர். அவர்களில் இளையவரே கதாதரர் என்னும் நம் ஸ்ரீராமகிருஷ்ணர். க்ஷுதிராம் சட்டோபாத்தியாயரும் சந்திரமணீதேவியும் மிக்க தேவதா பக்தியுள்ளவர்கள். சிறிதேனும் சுயநலம் பாராட்டாது பகவானையும் பகவத்பக்தர்களையுமே கொண்டாடி யுபசரிப்பர். க்ஷுதிராம் ஒருக்கால் ஓர் ஊர்போக நேரிடவும் இடையில் தளிர்த்திருந்த வில்வ மரத்தைக்கண்டு நிறைய வில்வ தளங்கள் பறித்து தம் சொந்த கிராமத்திற்கு பகவத்பூஜார்த்தம் திரும்பி வந்து விட்டனரென்றும், சந்திரமணீதேவி ஸ்ரீராமகிருஷ்ணரது பிரதம சிஷ்யனான மதுராநாதன் பஹுமானமாய் ஓர்

பெருந்தொகையை யளிக்கவந்தபோது வாங்கிக்கொள்ளாது மறுத்து விட்டனரென்றும் சொல்வதை உய்த்து நோக்கின் அவர்தம் பக்தியும் நயப்பின்மையும் கூறாமலே விளங்கும். இத்தகைய சீலர்களைப் பெற்றோராயடைந்திருந்த தகாதாரது அறிவிற்கும் ஒழுக்கத்திற்கும் காருண்யத்திற்கும் பகவத் பக்திக்கும் வேறு ஆதாரங்களும் வேண்டுமோ? தவிர இளமை முதற்கொண்டே பூர்வஞானம் நிரம்பப்பெற்றவரின் மகிமையையும் எடுத்துரைக்க வல்லார் யார்?

இளமைப் பருவந்தொட்டே இவர் பகவத் பக்தியுள்ளவராய் தம் தோழர்களுடன் கூடி பகவானை ஆராதிப்பதும் பகவத் லீலைகளைத் தாமும் செய்து அனுபவிப்பதுமாயிருந்தார். பௌராணிகர் வாயிலாகவும் நாடகங்கள் மூலமாகவும் தம் கிராமத்தின் வழியே செல்லும் யாத்திரிகர் சாதுக்கள் இவர்களிடமிருந்தும் மதசம்பந்தமான அநேக விஷயங்களை அறியலானார். இயற்கைவனப்பைக் காணும் பொழுதெல்லாம் ஆனந்த வெள்ளத்திலாழ்ந்து கிடப்பர். இப்பருவத்திலேயே இவர் மஹா வித்வான்கள் நிறைந்துள்ள ஸபையில் சென்று எல்லாரும் ஆச்சர்யப்படும் வண்ணம் மத விஷயங்களைப் பற்றிப் பேசிப்புகழடைந்தார். இவருக்குப் பதினாறும் வயதில் உபநயனஞ் செய்வித்து கல்கத்தாவில் ஓர் பாடசாலை வைத்திருந்த இவர் தமையனும் ராமகுமாரிடம் படிப்பிற்காக அனுப்பினார்கள். அப்பாடசாலையில் படிப்பவர் பலவித சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தும் பாமரஜனங்களைப் போலவே பொருளீட்டலையே மேற்கொள்கிறார்களென்றும் உண்மைப்பொருளை யடைதற்குயாதொரு ஊக்கமும் கொள்கின்றனரிலரென்றும் உணர்ந்தவராய் அப்பொழுது முதற்கொண்டு கல்விகற்பதை நிறுத்திவிட்டார். ஆகவே ஸ்ரீராமகிருஷ்ணர் கல்விப் பயிற்சி யதிகமில்லாதவர். அப்படியிருந்தும் அவரது உபதேசமொழிகளையும் ஒழுக்கத்தையும் கண்டால் உயர்தரக்கல்வி கற்றவனும் இவருக்கு இணையாவனோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது.

1853-ம் வருஷத்தில் கல்கத்தாவுக்கு ஐந்துமைல் தூரத்திலுள்ள தக்ஷிணேச்வரம் என்னுமிடத்தில் ராணிராஷ்மணி என்பவள் ஏராளமான பணம் செலவிட்டு அழகான ஆலயமொன்று நிருமித்து அதில் ஸ்ரீராமகிருஷ்ணரின் தமையனை அர்ச்சகராக நியமித்தார். கங்கைக்கரையில் அவ்வாலயத்தைக் கட்டி வைத்தது சூத்ர ஸ்திரீயாதலின் ஸ்ரீராமகிருஷ்ணர் முதலில் காளிகாதேவியை பிரதிஷ்டை செய்விக்கும் சமயத்தில் நிவேதனமான பிரஸாதத்தை ஏற்றுக் கொள்ள மாட்டேனென்றும் அவ்விடத்திலிருக்கவே மனமில்லையென்றும் கல்கத்தாவிற்குச் சென்றுவிட்டார். பிறகு தம் தமையனிடம் மீண்டுவந்து வசித்து வந்தவர் நாளடைவில் தாமே அவ்வாலய அர்ச்சகராகவே அமரும் வண்ணமும் நேர்ந்தது. அதுமுதற்கொண்டு இவர் ஞானம் அதிகரிக்க பகவத்பக்தியும் முற்றுந்தலைப்பட்டது. பக்திபரவசராய் அம்பிகையைக் குறித்து அர்ச்சனை பண்ணத் தொடங்கினார். இவர் பூஜித்து வந்த காளிகாதேவியே ஜகன்மாதாவென மனப்பூர்வமாய் நம்பி அவளைப் பிரத்யக்ஷமாய்க் காணவேண்டுமென இரங்குவார்; பாடுவார்; ஆடுவார். இதைக்கண்டோர்கள் எல்லாரும் இவருக்கு பித்தம் பிடித்து விட்டதென்று கருதினார்கள். இவர்பார்த்து வந்த அர்ச்சகவேலையையும் இவர் சிருடன் நடத்திவர அஸாத்தியமாய் விட்டது. விவாஹம் செய்து விட்டால் பித்தம் தெளிந்துவிடுமென்ற நம்பிக்கையின் பேரில் இவரைக் கல்கத்தாவிலிருந்து அழைத்துப்போய் ஸ்ரீராமசந்திர முகோபாத்யாயரின் புதல்வியான ஐந்து வயதுள்ள ஸ்ரீ சாரதாமணி தேவியை மணம் செய்து முடித்தார்கள். விவாஹமுடிந்ததும் முன்போலவே தக்ஷிணேச்வரம் வந்து தம் அர்ச்சகத் தொழிலிலமர்ந்தார். ஆனபோதிலும் இவரது பக்தி, பிரேமை, வைராக்யங்கள் அதிகரித்துக் கொண்டே வந்தன. அவர் அம்பிகைப் பிரத்யக்ஷமாகாமை நோக்கி கண்ணீர் ஆறாய்ப்பெருக்கி "தாயே, ஒருநாள் வீணாயிற்றே, நின்னைக்கண்டுகளிக்கவும் அடியேனுக்கருள் புரிவையோ" எனக்கூறியழுவார். இந்நிலைமையிலிவர் இப்படியிருக்க, பலர் பலவிதமாய்க் கூறுவதைக்கேட்ட ராஷ்மணியம்மாளின் மருமகனாகிய மதுராநாதன் இவரை ஒரு வைத்யரிடம் காண்பிக்க, அவர் ஸ்ரீராமகிருஷ்ணர் மகாயோகி யென்றும் அவர் உலக வ்யவஹாரங்களுக்குப் பயனற்றவரென்றும் கூற அப்பொழுதுதான் எல்லாருக்கும் இவரது உண்மை நிலை வெளியாயிற்று.



இன்னம் தேவி பிரத்யக்ஷமாகாமை கண்டு மகாத்துயரடைந்து ஏங்கி நிற்குங்காலையில் அம்பிகைப்ரத்யக்ஷமாக, ஆனந்தக் கடலிலாழ்ந்தார். அதற்குறிகுறியாக இவர் விரும்பியவண்ணம் பல அதிசய சம்பவங்களையும் காணக் கிடைக்கப் பெற்றார். இத்தருவாயில் தமக்கும் அம்பிகைக்கும் பேதமின்மையைப் பாவித்து பூஜாதிரவியங்களை தமக்காகவே விநியோகப் படுத்தி அம்பிகை தரிசனம் கிடைக்கப்பெற்றது போதாமல் நிர்விகல்ப ஸமாதியை யடைய வேண்டி பன்னிரண்டு வருடம் கடுந்தவம் புரிந்தார். இக்காலத்தில் இவர் பலவித தாபங்களையுமடைந்ததுமன்றி அநேக ஆச்சர்ய காட்சிகளையும் கண்டு வெளிப்புலன்களுணர்ச்சி சிறிதேனுமின்றி இருந்ததனால் இவருடம்பைப் பாதுகாப்பதே அரிதாயிற்று. இவர் மருகர் ஹ்ருதயாநந்தரின் முயற்சியினாலே இவர் தேகம் மிக்க அருமையுடன் பாதுகாக்கப்பட்டு வந்தது.

இவர்தம் அஹம்பாவத்தைக் கழிக்கக் கருதி சண்டாளர் வீடுகள் சென்று அவர்கள்செய்யும் ஈனத்தொழிலைத் தாமே செய்ததுமன்றி அவர் வீடுகளைத் தம்கையாலேயே சுத்தம் செய்தும் வருவார். பொன்னாசையை ஒழிக்கக் கருதி இவர் கங்காதீரம் சென்று ஒருகையில் பொன்னையும் வெள்ளியையும் மற்றொருகையில் மண்ணையும் எடுத்து, இப்பொன்,மண்ணிற்குச் சமானம், என்று பன்முறைகூறி இரண்டையும் கலந்து கங்காநதியில் எறிந்து விடுவாராம்.

இவ்வாறிருக்கும் காலையில் இவர் மஹா தாபத்தையடைய அவ்விடத்திற்கு வந்த ப்ராஹ்மசாரிணியான ஓர் ப்ராஹ்மணமாது இவர்தாபத்தைத் தீர்த்து சகலவேத வேதாங்க யோக ரஹஸ்யங்களை யெல்லாம் உபதேசித்தாள். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் ஸரஸ்வதியின் அவதாரம் போன்ற அவ்வம்மணியின் உபதேச மொழிப்படி ஒழுகி யோக சித்திகளை அடைந்தார்.

இக்காலத்திலே தான் இவர் உலகத்திற்குத் தம் அனுபவங்களை யெல்லாம் எடுத்துக்காட்டி மானிடகோடிகளை நல்வழிப்படுத்துவாரென்று இவருக்கே எடுத்துரைக்கப்பட்டது. பிறகு தோதாபுரி என்னும் மகாத்மாவிட மிருந்து அவர் பிரயாசைப்பட்டு நாற்பது வருஷகாலமாய்க் கற்றசித்திகளை யெல்லாம் மூன்று நாட்களிலேயே கற்றுணர்ந்து 'குருவுக்கு மிஞ்சிய சிஷ்ய'ராய் விளங்கினார். இவர் பிறகு நீடித்த காலம் நித்ய நிர்விகல்ப ஸமாதியி லிருந்ததாகவும் அதனால் அவர் தேகம் சுஷ்கித்த பிறகே அந்நிலையி லிருந்து வெளிப்புலனறிவைப் பெற்றதாகவும் இவரே கூறியுள்ளார்.

பின்னர் வைஷ்ணவ மத சித்தாந்தத்தை அனுசரித்து அதன் மூலமாய்ப் பகவானையடையக் கருதி கண்ணனிடத்தில் காதல் கொண்டு பக்திபண்ணி அவருடைய ஸாந்நித்யத்தையடைந்தார். பிறகு பாதகண்டத்திலுள்ள இதரமத சித்தாந்தங்களையும் அனுசரித்து முஹம்மதிய,கிறிஸ்தவமதப் பற்றுகளைக் கைக்கொண்டு அவைகளிலும் சித்தி யடைந்தார். இவர் மனப்பூர்வமாய் அவ்வவ் விஷயங்களை யடையக் கோரினராதலின் அவ்வம்மதத்திற்குரிய ஆசார்யர்கள் இவரை வந்தடைந்து இவர்க்குபதேசம் செய்து போயினரென்பர். பக்தி மார்க்கத்தைப்பின்பற்றி எந்தத்தேவதையைத் தியானித்தாலும் அவைகள் பிரத்யக்ஷமாகி இவரிலேயே லயித்து விடுகிறதைக்கண்ட இவர் ஜீவாத்ம பரமாத்மாக்களுக்குள் பேதமில்லை யெனத் தெளிந்தார். ப்ரஹ்மம் ஒன்றேயென்றும், அதையே ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு வடிவமாக ஆராதிக்கின்றனரென்றும், ஆகையால் எல்லா மதங்களும் ஸமமே என்றும் தம்மனுபவத்தினாலேயே நிலைநாட்டினார்.

இவர் மணஞ்செய்து கொண்ட பாலிகையான ஸ்ரீசாரதா மணிதேவிக்கு வயது 18 ஆயிற்று. தன் கணவன் இருக்கும் நிலையைக் கேள்விப்பட்டுத் தானே அவரைப்போய்ப் பார்க்கும் பொருட்டுத் தன் பெற்றோரிடம் செலவுபெற்று 80 மைல் தூரம் நடந்து தக்ஷிணேச்வரத்தை யடைந்து தன் கணவனைத் தரிசிக்கவும் எல்லா ஸ்திரீகளையும் தேவியின் அம்சமாக மதித்து வந்த ஸ்ரீராமகிருஷ்ணர் தம் கருத்தை வெளியிட்டு நமஸ்கரிக்க ஸ்ரீ சாரதாமணி தேவியும் தன்கணவர் உள்ளக்குறிப்பை யுணர்ந்து அவர் அருகிலிருந்து கொண்டே அவர்க்குப் பணிவிடை செய்து வரும்பாக்கியத்தை யருளும்படி வேண்ட அப்படியே அவருடைய ப்ரதான சிஷ்யையா யமர்ந்தனள். ஸ்ரீராமகிருஷ்ணரும் தக்ஷிணேச்வரத்திற்கு வரும் யாவத் ஜனங்களுக்கும் யாதொரு பேதமுமின்றி நல்லுபதேசம் புகட்டுவதாயினார்.

இச்சமயத்தில் இவர் அன்பார்ந்த சிஷ்யரு

கிய மதுரா நாதன் புண்ய க்ஷேத்ர யாத்திரைக்காகச் செல்லலும் இவரையும் கூட அழைத்துச்சென்றான். புண்ய ஸ்தலங்களாகிய ஸ்ரீ காசி, ப்ருந்தாவனம் முதலிய இடங்களில் அநேக மகா யோகிகளைக் கண்டு உரையாடி ஆங்காங்குள்ள மகிமையைக் கொண்டாடித் திரும்பினார். திரும்புமார்க்கத்தில் வைத்யநாத க்ஷேத்திரத்திற்கருகில் ஒரு குக்ராமவாசிகள் பெரும் பஞ்சத்தாலும் வறுமை நோயாலும் தவிப்பதைக்கண்டு மனம் சகியாது இவர்கள் கஷ்டம் நீங்கினாலொழிய தக்ஷிணேச்வரம் திரும்பேன் எனவும் மதுரா நாதன் அவ்வண்ணமே அக்கிராம வாசிகளுக்கு வேண்டியவைகளைச் சேகரித்துக் கொடுத்து அவர்களை நன்னிலைமைக்குக் கொண்டு வந்தான். பின்னர் தான், ஸ்ரீராமகிருஷ்ணரும் தம் ஊர் வந்து சேர்ந்தார்.

பின்னர், தாம் இவ்வுலகிலுள்ளவரையில் தக்ஷிணேச்வரத்திலிருந்து கொண்டே, பண்டிதன் முதல் பாமரனீறாக சகலருக்கும்ப்ரஹ்மஞானோபதேசம் செய்துவந்தார். ஆனால் இவரைப் பற்றி ஸ்ரீ கேசவசந்திரஸேனர் வெளியிடுமுன்னம் வெகுவாய் ஜனங்களுக்குத் தெரியாது. எல்லா விதத்திலும் மேலான மதமொன்றை யவலம்பித்து வந்தவரென்று கருதப்பட்ட ஸ்ரீ கேசவசந்திரஸேனர் இவரைப் பூஜித்தனரென்றால், இவர் பெருமையையும் கூறல் வேண்டுமோ? ஆனாலும் இவரது பிரதான சிஷ்யரும், இவரது உபதேச மொழிகளை உலகமுழுமையும் பரவச் செய்வதற் கறிகுறியாய் மேனாடுகளுக்குச் சென்று பாரதவர்ஷ ப்ராசீன மஹிமையை எடுத்து முழங்கி வேதாந்த கர்ஜனம் செய்தவருமான ஸ்ரீமத் ஸ்வாமி விவேகானந்தரும் அவரது ஸஹாக்களுமே இவரது பெருமையை நிலை நிறுத்தவந்த புண்ய புருஷர்களாவர்.

இவர் தம் நோயையும் கவனிக்காது ஸதா வருபவர்களுடன் பேசி நல்லுபதேசம் செய்து காலத்தை ஆனந்தமாய்க் கழித்து 1886வரு ஆகஸ்டு மீ 16௳ இரவு பத்துமணிக்கு ஸமாதியிற் சேர்ந்து பரப்ரஹ்மத்தில் இரண்டறக் கலந்தனர். இவருடைய சிஷ்ய கோடிகள் நாளது வரையிலும் இவர் கொண்டிருந்த ஒழுக்கங்களைப் பின்பற்றி இவர்போலவே பரோபகாரிகளாய் ஆங்காங்கு இருந்து விளங்குகின்றனர்.

## II உபதேசஸாரம்

### சர்வஸமய ஸமத்வம்

1. முக்யமாய் நம்முடைய ஆரியமதம் என்றும், வைதிக மதம் என்றும் சொல்லப்படுகிற ஹிந்து மதத்தின் ஸாராம்சத்தைப் பார்த்தால் இவ்வளவு இதர மதத்வேஷமில்லாத பொதுவான மதம் யாதும் இல்லை யென்று சொல்லலாம். முக்திக்கு வழிகள் அநேகமிருக்கலாம் என்கிற கொள்கை நமக்குப் புதிதல்ல.

“அஜாயமானோ பஹுதா விஜாயதே” ஸர்வேச்வரன் பிறப்பில்லாதவனாயிருந்தாலும் பல அவதாரங்களை செய்கிறான். அவதாரம் செய்யச் செய்ய அவனுக்கு ஒளியும் மஹிமையும் விளங்குகிறது என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது. பகவத்கீதையில் நான்காம் அத்தியாயத்தில் “எனக்கு அநேக பிறப்பு உண்டு, உனக்கும் உண்டு. என்னுடையது கர்மத்தாலல்ல. உன் பிறப்பெல்லாம் உன்னுடைய புண்ணிய பாப ரூபமான கர்மத்தால்.—நான் பிறப்பிலா ஸர்வேச்வரன். என்னுடைய மகிமைக்கும் சக்திக்கும் யாதொரு குறைவுமில்லாமல் என் அப்ராக்ருத (பஞ்சபூத ஸம்பந்த மில்லாமல்) மங்கள விக்ரஹத்தில் என்னுடைய இச்சையாலேயே அவதரிக்கிறேன். முக்யமாய் மஹாத்மாக்களுக்கு கண்ணாரப் பார்த்து ஆநந்தித்துத் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் துஷ்டர்களை நிக்ரஹம் செய்யவும் நான் அநேக தடவை அவதரிக்கிறேன்” என்று பகவான் அர்ஜுனனுக்கு அருளிச் செய்கிறார்.

இப்படி அவதாரம் நிச்சயமானால் இந்த இந்தியாவில் மட்டுந்தானா பகவான் அவதாரம் செய்வர்? இதனால் இதர மதங்களும் தெய்வீகமாக இருக்கலாம். ஸ்ரீராமகிருஷ்ணர் பின் வருமாறு அருளிச் செய்கிறார். (i) பகவானுக்கு அநேக நாமங்கள் உண்டு. ஜலத்தை வெவ்வேறு பாஷையில் வெவ்வேறு பெயரிட்டுச் சொல்வது போல் வெவ்வேறு மதத்தில் பகவானுக்கு அல்லா, ஜிஹோவா, ப்ரம்மா, என்னும் பெயர்கள் இருக்கின்றன. (ii) ஒவ்வொருவனும் தன் தன் மதத்தை அநுஷ்டிக்கக் கடவன். ஹிந்துக்களுக்கு ரிஷிகளுடைய பூர்வீக வைதிக மதந்தான் அனுஷ்டிப்பது உத்தமம். (iii) தங்கள் தங்கள் நிலங்களை எல்லை கட்டி பாகித்துக் கொள்ளலாம். மகா பெரி



தான கண்ணுக்கு அடங்காத ஆகாசத்தை யார் பாகித்து குறுக்க முடியும்? (iv) வியாதிக் குழந்தைகளுக்கு தாயார், ஒன்றுக்கு அரிசி கஞ்சி, ஒன்றுக்கு ஜவ்வரிசி கஞ்சி, இன்னொன்றுக்கு ஆரூட்மாக் கஞ்சி இன்னொன்றுக்கு ரொட்டி வெண்ணெய் கொடுப்பது போல் அந்தந்த தேசங்களுக்கும் ஜனங்களுக்கும் தகுந்தபடி மதங்களை உபதேசித்திருக்கிறாரே தவிர வேறே இல்லை. (v) ஞாயமான பக்தன் இதரமதங்களும் முக்திக்குக் கொண்டு போய் விடலாம் என்று ஒரு மரியாதையுடனிருக்க வேண்டும். உன் மதத்தில் ஊற்றமிருக்கலாமே யொழிய இதர மதத்தின் பேரில் பகையும் அவமரியாதையும் கொஞ்சமும் இருக்கக் கூடாது. (vi) கிணற்றுத் தவளைகளுக்கு வேறு பெரிய ஜலம் நிறைந்த இடத்தைப் பாராமையால் வேறு ஜலமில்லை போலத் தோன்றலாம். ஸ்வமத வெறியுள்ளவர்கள் இத்தவளைகளைப் போல்வர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் ஒவ்வொரு மதத்தையும் ப்ரீதியுடனும் பக்தியுடனும் அனுஷ்டித்துக் காண்பிக்கிறார்; சிலகாலம் மகம்மதிய மதத்தையும், சிலகாலம் கிறிஸ்து மதத்தையும் மனப்பூர்வமாக அனுஷ்டித்து அதனதன் அந்தரங்கமான மகிமை நிலைகளை ஸாட்சாத்கரித்தார். அவ்வப்போது அந்தந்த மதத்து மகான்களைக் கொண்டு தத்வத்தை அறிந்து பிரத்தியக்ஷமாய் அனுபவித்து ஆனந்தக்கடலில் மூழ்கியிருப்பர். பகவான் ஒருவரே; முக்திக்கு அனேக வழிகள் உள்ளன என்று அவருக்குத் தோன்றிற்று.

இந்த இதர மதத்துவேஷ மின்மையை இன்னொரு விதமாக விசாரிக்கலாம். நம்முடைய வேதத்தில் பூர்வ பாகமாகிற கர்ம காண்டத்தில் யஞ்ஞம், யாகம் முதலானவை செய்யவேண்டிய முறைகளை விவரித்திருக்கிறது. இந்திரன், வருணன், அக்கினி முதலான அநேக தேவதைகளை ஆராதிக்கும் வழியையும் பயனையும் விவரமாகச் சொல்லியிருக்கிறது. உபநிஷத்துக்களில் பரமாத்மாவாகிற பரப்பிரம்மத்தின் ஸ்வரூபத்தையும் குணங்களையும் தியானிக்கும் பிரகாரங்களையும் விவரிக்கப் பட்டிருக்கிறது.

ஆனால், அக்கினி, வருணன் இந்திரன் முதலான தேவதைகளை ஆராதிப்பது கூட இந்த தேவதைகளுக்கு அந்தர்யாமியான பகவானுக்குத்தான் சேர்கிறது. ஜகத்துக்குக் காரணமாயும் அந்தர்யாமியாயும் நிர்வாஹகனாயும் இருக்கப்பட்ட ஒரு வஸ்துவை சில இடங்களில் உபநிஷத்தில் இந்திரன், ப்ராணன், என்று சொல்லப் பட்டிருக்கிறது. இந்தப் பெயர் இப்படியிருந்தாலும் பகவானைக் குறிக்கிறது என்று வேதாந்த ஸூத்திரத்திலும்சொல்லியிருக்கிறது. I. (1) (27—32).

இதர தேவதைகளெல்லாம் தனக்கு சரீரம். அவர்களுக்குச் செய்யும் ஆராதனமும் தனக்கே செய்ததாகும் என்று கண்ணன் கீதையில் 7-வது அத்தியாயத்தில் சொல்கிறார். ஒரு நிலையில்லாப் பயனை உத்தேசிக்காமல், நாம் செய்யவேண்டிய கடமையென்று சாஸ்திரத்தில் முக்யமாய் விதிக்கப்பட்ட நித்திய நைமித்திக கருமங்களை ஒருவன் செய்தால் அதுவே பகவானுக்கு ஆராதன ரூபம் என்கிறது. இதெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், பெயர் எப்படி சொன்னாலும் ஸர்வக்ஞ ஸர்வ சக்தியுள்ள ஜகத்காரணமாகிற உலகில் எங்கும் வியாபித்திருக்கும் ஆநந்த ஸ்வரூபமாய் பிறவிக்கடலிலிருந்து நீக்கி மோட்சத்தை அளிக்கும் வஸ்துவையும் அதனுடைய குணங்களையும் தியானிப்பதே மதத்துக்கு முக்கியமானது. ஆகையினால் ஒருவரை ஒருவர் நிந்திக்காமலும் த்வேஷிக்காமலுமிருக்க வேண்டும் என்று தெளிவாகிறது.

25 வருஷத்துக்கு முன் சென்னை கிறிஸ்டியன் காலேஜிலிருந்த மில்லர் என்னும் கியாதி பெற்ற மகான் ‘எல்லாமதங்களும் தெய்வீகம், ஒருவரை யொருவர் தூஷித்து நிந்திக்கக் கூடாது’ என்று உபந்யஸித்திருக்கிறார். ஸ்ரீராமகிருஷ்ணரின் ஸித்தாந்தத்தைப் பார்த்தாலும், நம்முடைய மூல கிரந்தங்களின் அந்தரங்க ஸித்தாந்தத்தைப் பார்த்தாலும், சைவ வைஷ்ணவர் சண்டையும் விஷ்ணுகோவிலில் தென்கலை வடகலை சண்டையும், கிறிஸ்தவர்களும் அன்னியர்களும் சண்டை செய்வதும், மகம்மதியர்களும் இந்துக்களும் விரோதம் பாராட்டுவதும் மிக அநியாயம் என்று தெளிவாகிறது. இதனால் நம்முடைய பொது நன்மை மிகவும் கெட்டு, இவ்வுலகிலும் மேலான ஸ்திதியை அடையாமலிருக்கிறோம். தேவஸ்தானப் பணமும் வீண்செலவாகிறது. ஒவ்வொருவரும் இதரமதத்வேஷத்தை ஒழித்துவிடவேண்டும்.

நிற்க இராமகிருஷ்ணரது பக்திநிலையைப் பற்றி சற்றுக் கவனிப்போம். அவனவன் கடமையை பகவானுக்கு ஆராதன ரூபமாக இதர விஷயங்களில் பற்றின்றி அகங்காரமில்லாமல் செய்தால் மனது மிகவும் சுத்தப்பட்டு ஆத்மாவின் நிலை நன்றாய்த் தெளிவாய்த் தெரிந்து அந்த ஆத்மாவும் பகவானுக்கு உட்படுகிறது. நம் தேகத்துக்கு எப்படி ஆத்மாவோ அப்படி சகல சராசரங்களுக்கும் பகவான்தான் உயிர். நியந்தாவாய் ஆளுபவன். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. அவன் எங்கும் வியாபித்துக்கொண்டிருக்கிறான் என்று ஒருவனுக்கு நன்றாய் விளங்கினால் அந்த பகவானைத் தியானம்செய்யச்செய்ய அதுமனதில்நன்றாய் நிலைத்து அவனுடைய கல்யாண குணங்களில் ஈடுபட்டு ஆராதப்ரேமரூபமான தைலதாரையைப் போல இடைவிடாத இனிதான அனுபவம் அல்லது ஞானத்தை அடைவது பக்தி. இப்படி ஆராதன பக்தியுண்டானால் இந்த ஞானி அந்த பகவானைச் சேர்ந்தாலல்லது தரியான். ஒருவித மகா பெரிய அளவற்ற இன்பரூபமான ஞானத்தை உள்ளிட்டு இதை பக்தி யென்று சொல்கிறார். சகலமும் பகவானுடைய அருளால்தான். நம்முடைய யோக ஞானத்தாலும் பிரயத்தனத்தாலும் செயலாலும் மோட்சத்தை அடைவது முடியாத காரியம் என்று தெரிந்து அருளையே முக்கியகாரணமாய் அறியும் ஞானத்துக்கு பக்தியோகம் என்று பெயர். இந்த இருவகை ஞானங்களுக்குள் ஒன்றுக்கொன்று விரோதமில்லை. முக்கியமாய்ப் பழையகாலத்து ரிஷிகள் ஞானயோக பக்தியோக நிலைகளை முக்கியமாய்ச் சொன்னார்கள். பின்காலத்து சைவ வைஷ்ணவ ஸித்தாந்தங்களில் பகவானுடைய (கடாட்சம்) அருளையே முக்கியமாகச் சொல்லுகிறார்கள். ஆனால் பகவானுடைய ஸ்வரூபத்தை நன்றாய்த் தெரிந்து அருளில் முழுநம்பிக்கை வைத்தவர்களுக்கும் அவனை அடைவதில் ஒரு அடங்காத காதலுண்டாகி, "அவனைப்பெற்றன்றி தரியேன். அவனையே நாடுவேன்" என்றிப்படி நாடித்தியானித்துக் கொண்டிருப்பதனால் ஒருவித அம்ருதரூபமான அநுபவம் உண்டாகும். இந்நிலையில் பிரபத்தி பக்திமார்க்கங்களுக்கு வித்தியாசமில்லை. ஸ்ரீராமகிருஷ்ணரை பக்தர் என்றும் பிரபன்னர் என்றும் சொல்லலாம்.

1. "நான் உண்டு உடுத்து உலகமாதாவின் குழந்தையாய் விளையாடிக் கொண்டிருக்கிறேன். அவளுக்குத்தான் என்ன என்ன செய்வது என்று தெரியும். எனக்கு சுத்தமாய் ஒன்றும் தெரியாது. நான் கர்த்தா அல்லன். நான் அவள் கையில் உள்ள ஒரு கருவி.

2. தாய் முகம் பாராமற்போன குழந்தை மிக துர்ப்பலமாயிருப்பதுபோல நானும் உள்ளேன். அவர் தாம் எனக்கு குரு, ஆசாரியன்! எனக்கு அவர் தவிர வேறு உபதேசம் செய்வாரில்லை.

3. பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்யுங்கள். அவரையே ரட்சகராக நம்புங்கள். உங்கள் தேகமும் மனஸும் ஆத்மாவும் நிர்மலமாகும்.

4. எதற்காக பாவம் செய்து விட்டோமோ, என்று இவ்வளவு பயப்படுகிறீர்கள். பகவானை சரணமடையுங்கள்—அவரிடத்தில் முழு நம்பிக்கை வையுங்கள்—ஸகல பாபங்களையும் போக்கி உங்களை நிச்சயம் ரட்சிப்பார்.

5. பகவான் ஸர்வத்தையும் நியமித்து நடத்துவோன். நம்மால் ஒன்றும் முடியாது. அகங்காரத்தையும், நான் என்னுடையது என்கிற எண்ணத்தையும் விடுங்கள். அவனிடத்தில் ஈச்வரன் கிருபை கூர்வன்.

6. நான் யந்திரம்—நீ யந்திரி நான் தேர்; நீஸாரதி-நீ இட்ட வழக்கு நான், நீ பேசப்பண்ணுகிறாய். நான் பேசுகிறேனே தவிர வேறில்லை. நான் அல்ல நான் அல்ல—எல்லாம் நீயே, மேற்குறித்த ஸ்ரீராமகிருஷ்ணர் வாக்யங்களால் பகவானுடைய கிருபையே நம்மைக் காப்பாற்ற வேண்டுமே தவிர வேறில்லை. இதில் முழுநம்பிக்கை வேண்டும் என்றார். பின்வரும் ஒரு கதையையும் உபந்நியசித்தார்:—

ஆற்றுக்கு அக்கரையில் ஒரு பிராமணனிருந்தான்; பால்காரி ஒரு சிறுமி; இக்கரையிலிருந்து தினந்தோறும் பால் கொண்டு வந்து கொடுப்பாள். படகுக்காரன் சரியாய் வாராததினால் சில நாள் சரியானகாலத்தில் பால் வரவில்லை. பிராமணன் கோபித்தான். பால்காரி படகு தாமஸப்பட்டது என்றாள். பிறவிக்கடலை பகவந்நாமஸங்கீர்த்தனத்தால் தாண்டுகிறீர்களே. நீ பால்கொண்டு வரமுடியவில்லையா? என்றான். அவள் களிகூர்ந்து மறுநாள் முதல் திருநாமஸங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டு படகு இல்லாமலே ஜலத்தில்நடந்தே இவ்விடம்வந்து



கொண்டிருந்தாள். பிராமணன், 'படகுக்காரன் இப்போது ஸரியாய்வருகிறானா?' என்றுகேட்க, 'தாங்கள் சொன்னபடி பகவந்நாமஸங்கீர்த்தனம் செய்கிறேன். படகு இல்லாமலே வருகிறேன்' என்று சொன்னாள். பிராமணன் ஆச்சரியப்பட்டு நம்பாமல் எனக்குக்காண்பி என்று சொல்ல அவனை யழைத்துக்கொண்டுபோய் ஆறு பெருகி வெள்ளமாய்ப்போகையிற் கூட இவள் இடையூறின்றி நடந்தாள். பிராமணன் பகவான் பேரைமட்டும் சொன்னானே யொழிய தன்னுடைய வஸ்திரம் தண்ணீரிற் படாதிருக்கவேண்டும் என்று அதைத் தூக்கிக்கொண்டு நடக்கப் பிரயத்தனப்பட்டான். சிறுமி பார்த்து 'தமக்கு பகவானிடத்தில் முழு நம்பிக்கையில்லையே, முழுகிவிடுகிறீரே' என்றனள். ஆகையால் கொஞ்சமும் நம்முடைய பிரயத்தினத்தால் என்று எண்ணாமல் எல்லாம் அவனருளாலே என்று முழுநம்பிக்கை யிருந்தால் தான் ரட்சிக்கப்படுவார் என்று ராமகிருஷ்ணர் இந்தக் கதையை உபந்யஸித்தார்.

துரியோதனன் சபையில் இருகையும் விட்ட பிறகுதான் பகவான் திரௌபதியை அவமானத்திலிருந்து ரட்சித்தார். இராமாயணத்தில் சீதா பிராட்டியை அனுமான் தான் லங்கையிலிருந்து எடுத்துக்கொண்டு போவதாகச் சொன்னபோது, நம்முடைய பிரயத்தனத்தாலே ரட்சித்துக் கொள்வது உண்மையானநிலைக்குஒவ்வாது, ராமபிரானுக்கு அடிமை; அவரிஷ்டப்படி அவரே வந்து ரட்சிக்கக்கடவர் என்றாள். ராவணன் நிர்ப்பந்தித்தபோது 'உன்னை இப்போது பஸ்மமாக்குவேன். ஆனால் ராமனுடைய கட்டளையில்லை. அவருடைய நினைவைச் செல்லவிட்டால் பதிவ்ரதையின் தர்மத்துக்குத் தகாது. ஆகையால் நான் உன்னைத் தண்டிக்கவில்லை' என்றாள். இவைகளாலெல்லாம் ரட்சணத்துக்கு பகவான் நினைவே முக்யம் என்றாயிற்று.

ஸ்ரீராமகிருஷ்ணருக்கு ஐசுவரியத்தில் ஆசையே கிடையாது. அவர் உறங்கும் பொழுதுகூட தங்கத்தை அவர்பேரில் வைத்தால் உடம்பு சுருங்கி நடுங்கும் என்று அவர் சிஷ்யர்கள் சொல்கிறார்கள். மதுராநாத் என்னும் ஒரு ஐசுவரியவான், வருஷம் 25,000ரூபாய் அவருக்குக் கொடுப்பதாய்ச் சொன்னார். தக்ஷிணேச்வரம் கோவிலையே ஒப்புவிக்கிறேன் என்றுசொன்னாராம். அப்படிதனக்கு யாதொரு அதிகாரம் ஐசுவரியம் ஒன்றும் வேண்டாம்என்றும் அப்படி நிர்ப்பந்தித்தால் அவ்வூரைவிட்டு ஓடிப்போவேன் என்றும் ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்னாராம். இப்படி பகவான்அல்லாத விஷயத்தில் மிக வைராக்கிய முடையராயிருந்தால், பகவான் விஷயத்தில் பைத்தியம் பிடித்திருப்பர். கிருஷ்ணாவதாரத்தில் கோபிகளுக்கு இருந்த பக்தி போல, இவர் பக்தி இவ்வளவு என்று சொல்லமுடியாது. கோபிகள் அநுபவித்தது போல பகவானை யனுபவித்து, ஆநந்தக்கடலில் வேறொரு ஞாபகம்யாதொன்றுமில்லாமல் இருப்பவர். சிலவேளையில் பகவத்தியானத்தில் மூர்ச்சையி லிருப்பது போல இருப்பர்.

பகவானிடத்தில் இடைவிடாத மகாப்ரேமையுடனிருந்து கொண்டு அம்ருதக் கடலில் மூழ்கி அவனில் மனது லயித்துவிடுகிறதுதான் எல்லாநிலையிலு முயர்ந்த நிலையென்று அவர்கள் சொல்வராம். தன்னையு மிருப்பிடத்தையும் மறந்து மனஸு முற்றிலும் பகவானிடத்தில் மூழ்கவேண்டும். மகாத்மாக்களுள் தங்களுக்குத் தாய், தந்தை, சகோதரன், பர்த்தா, எஜமானன் எல்லாம் பகவானே என்றிருக்கும் "சேலைய கண்ணியரும், பெற்றதாய் தந்தையரும் எல்லாம் அவரே, உண்ணும் சோறும் பருகுநீரும் தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்." இப்படிப்பட்ட ஞானியே தனக்கு ஆத்மா என்று கீதையில் பகவான் சொல்கிறார். ராமாயணத்தில் லட்சுமணன் தனக்கு தாய் தந்தை எஜமானன் எல்லாம் ராகவனே என்றும் தனக்கு ஐசுவரியம் சுகாநுபவம் ஈறிலின்ப மோட்சம் என்றும் ராமனுடனில்லாமல் வேண்டாம் என்றார். நானும் சீதா பிராட்டியும் தம்மை விட்டிரோம். ஜலத்தைவிட்டு மீன் இராதுபோல நாங்கள், ஒரு வேளை தாம் எங்களை அயோத்தியில் விட்டு விட்டுப் போவதாய் நிச்சயித்தால், அந்த தீர்மானம் எங்களுக்குத் தெரியும் வரையில் மீனானது நீர் நசையறுமளவும் உயிருடனிருப்பது போல பிற்பாடு உயிரிராது என்றார். இப்படிப்பட்ட மஹான்களில் நவீன காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் ஒருவர் என்று சொல்லலாம். எனக்கு ஐச்வரியம் வேண்டாம். மூவுலகம் வேண்டாம். தம்மிடத்தில் பக்தியே வேண்டு

மென்ற ப்ரஹ்லாதனைப் போல கண்ணும் கண்ணீருமாய்ப் பிரார்த்திப்பாராம். ஞானம், அஞ்ஞானம், பாபம், புண்ணியம், சுத்தம் அசுத்தம் நன்மை, கெடுதி யாதொன்றும் வேண்டேன். தம்பிடத்தில் அடங்காத காதலே எனக்கு வேண்டும் என்பாராம். ராமாயணத்தில் அநுமான் தனக்கு மோட்சமும் வேறு அவதார ஞானமும் வேண்டாம் ராமபக்தியேயிலே நிற்க வேண்டும் என்று சொன்னது போல, தனக்கு பகவானிடத்தில் ஆராத ப்ரேம ரூபமான பக்தியையே வேண்டுகிறேன் என்று அடிக்கடி பிரார்த்திப்பர். அருளை முன்னிட்டு இப்படி அடங்காத காதலே இக்கலியுகத்துக்கு மோட்சசாதனம் என்று அடிக்கடி அருளிச் செய்வாராம். இப்படிப்பட்ட ஒருவரிருந்தாலும் தேனை ஈக்கள் மொய்ப்பதுபோல ஒருவரும் வேண்டாமலே அவருடைய குணம் நடை உடை பாவனைகளால் உலகத்துள்ளவர்கள் திருந்துவார்கள். ஒரு பயனையும் உத்தேசிக்காமல் அவரவர் கடமையை பகவானுக்கு ஆராதன ரூபமாக அகங்காரமில்லமற் செய்தால் மனது சுத்தமாகி பகவான் கடாட்சத்தால் உயர்ந்த நிலையை அடைவார்கள் என்று ஸ்ரீராமகிருஷ்ணர் அடிக்கடி சொல்வார். த்வேஷமில்லா பக்தியே முக்கியம் என்று இவர் சரித்திரத்தால்வெளிப்படுகிறது.

---

ஒருவன் திடமொனத்தாவிக்குறித்து ஜனகராஜர்வஹித்தஉச்சஸ்தானத்தைஅடையமுயல்வதுபிரயாசை. பக்திசாதனங்களைக் கைக்கொண்டு உலக ‘தடபுட’ லினின்றும்விலகி ஏகாந்தத்தில் வெகுகாலம் அவர்இருந்துவந்தார். ஆதலின் ஒவ்வொருவரும் சிறிதுகாலமேனும் ஏகாந்தத்தை அடையவேண்டியது அவசியமாகின்றது. மானிட சஞ்சாரமில்லாத ஏகாந்த வெளியில் இருந்துகொண்டு மூன்று நாள் இடைவிடாமல் பகவானைப் பற்றியொருவன்கதறுதல் எவ்வளவு உத்தமமானது தெரியுமா? மனப்பூர்வமாய் ஒரு நாள் அப்படி யிருந்தாலும் எவ்வளவோ லாபமுண்டு. தங்கள் மனைவிமக்களின் பொருட்டு குடம் குடமாய்க் கண்ணீர் சொரிய தயாராய் இருப்பார்கள். ஆ! பகவானைப்பற்றி இரங்கி யழுதற்கு யார் இருக்கிறார்கள்? பகவத் தர்சனம் பெற்று அவரை யடையும் வண்ணம் அடிக்கடி ஏகாந்தமடைந்தால் லௌகிகர்களுக்கு அளவற்ற நன்மைஉண்டாகும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

## காப்டன் ஸ்காட் என்பவர் செய்த தக்ஷிணதுருவப் பிரயாணம்

## CAPTAIN SCOTT'S EXPEDITION TO THE SOUTH POLE

பதினைந்தாம் நூற்றாண்டு முதல் ஐரோப்பாவில் உண்டாகிய ஸமுத்திர ஸஞ்சாரப் பிரியமும் பிரயத்தனமும், இடைபெறாது விருத்தியாகி வந்தபடியால் பஸிபிக் சமுத்திரத்திலுள்ள அநேக தீவுகளைக் கண்டுபிடித்து அநேகர் அவ்வவ்விடங்களில் குடியேறி யிருக்கிறார்கள். வடசமுத்திர மார்க்கமாக கீழ் நாட்டுப் பாதை ஒன்றைக் கண்டுபிடிக்க முயலும் போதுதான் வடக்கே கிரீன்லண்ட், ஸ்பிட்ஸ் பர்கன் முதலிய தீவுகளைக் கண்டுபிடித்தார்கள். இவ்வித முயற்சிகளில் அவர்களுக்குண்டாகும் ஆபத்துக்களும், குளிரிலும் பனிக்கட்டிகளிலும் அவர்கள் படும் கஷ்டங்களும் கணக்கிட முடியாது. இவ்வித நூதன தேசங்களைக் கண்டுபிடிக்க முயன்று பிராணனை விட்டவர்களநேகர். ப்ராங்க்ளின் (Franklin) துரை வட சமுத்திரத்தில் பனிக்கட்டியில் அகப்பட்டு 1845-ம் வரு பிராணனைவிட்டார். 1893-ம் வரு நார்வே தேசத்து நான்ஸன் (Nansen) என்பவர் வட துருவத்திற்குச் சமீபத்தில் போனபோதிலும் துருவத்தைப் பார்க்காமல் திரும்பினார்.

அமெரிகா தேசத்துப் பியரி (Peary) என்பவர் 1909-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 9-ம் தேதி வட துருவத்தில் அமெரிகன் கொடியை நாட்டிவிட்டுத் திரும்பினார்.

மேலும் தென் துருவத்தின் கிட்ட விஸ்தாரமான அன்டார்டிகா என்னும் நிலப்பிரதேசம் வியாபித்திருக்கிறதென்று தெரிகிறபடியால் அவ்விடங்களுக்குச் சென்று அங்கங்கேயுள்ள நாடுகளைக் கண்டுபிடித்தும், தக்ஷிணத் துருவத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்ற அவா எல்லாருக்கும் உண்டாயிற்று. 1842-ம் வருஷம் தக்ஷிணத் துருவம் பார்க்கப்போனவர்கள் 13,000 அடி உயரமுள்ள எரிபஸ் (Erebus) டேரர் (Terror) என்ற இரண்டு எரிமலைகள் துருவத்திற்கு 800 மைல் வடக்கே இருப்பதென்று கண்டார்கள். அது முதல் பலபல ஊக்கமுள்ள மானுஷிகள் தக்ஷிணத் துருவத்திற்குப் போகப் புறப்பட்டார்கள்.



தக்ஷிணத் துருவத்திற்குப் பிரயாணம் செய்வதென்றால் சாமான்யமான காரியமல்ல. குளிரினால் உறைந்துபோன பனிக்கட்டியில் கால்நடையாகத் தங்களுக்கு வேண்டிய சாமான்களை வழுக்கு வண்டிகளில் ஏற்றி, நாய்களைக் கொண்டோ அல்லது தாங்களாகவோ இழுத்துச்செல்வதும், குளிர்காற்றும் பனிக்கட்டிப் புசலும் அடிப்பதால், மனிதர்கள், வண்டிகள், சாமான்கள், எல்லாம் பனியில் புதைபட்டுப் போவதும், தரை கெட்டியாக இருக்கிறதென்று நினைத்துப் போகும்போது, திடீரென்று பனிக்கட்டி காலின்கீழ் உடைந்து, வண்டி, நாய், சாமான்கள், எல்லாவற்றையும் பூமிக்குள் ஆழச் செய்வதும், வெளியே புறப்பட்டுப் போன சிநேகிதர்கள் வாராததனால் அவர்களைத் தேடிச் சென்று பனி மூட்டுக்கள் ஒவ்வொன்றையும் கலைத்துச் செல்வதும், முதலான பலவித கஷ்டங்களை அநுபவிக்க நேரும். இவ்விதமான ஆபத்துக்களும் பிராணநாசமும் நேருகின்றதென்று தெரிந்தும், தைரியமாக முன்னிலும் அதிகமானபுத்திசாலிகள்ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் தேச நன்மைக்கும், ராஜ்ய பெருமையை அதிகரிப்பதற்கும் செல்வது, மேல்நாட்டாரிடம் இருக்கும் விசேஷகுணம். இவ்விதம் தக்ஷிணத் துருவத்திற்குப் போய்ப்பார்த்து அவர் தேசக்கொடியை நாட்ட 400 வருஷங்களாகப் பிரயோஜனமில்லாமல் பிரயாசைப்பட்ட வேலையை இங்கிலாண்டிற்குப் பெருமையுண்டாகும்படி செய்து, திரும்புகாலையில் பிராணனை விட்ட மிகத் தைரியம் நிறைந்த வீரர் காப்டன் ஸ்காட் (Captain Scott) என்பவர். ஆனால் இவர் செய்த பிரயாணத்திற்கும் இதற்குமுன் போனவர் பிரயாணத்திற்கும் வெகு வித்யாஸம் உண்டு. ஸாதாரணமாக யார் முதல் முதல் துருவத்தைப் பார்த்து தேசக் கொடியை நாட்டும் பெருமை யடைவார்கள் என்பது ஒரு காரணமா யிருந்தபோதிலும், காப்டன் ஸ்காட் (Captain Scott) செய்தபிரயாணத்தின் நோக்கம் அது மாத்திரமல்ல. தக்ஷிண குளிர்ப் பிரதேசங்களில் உள்ள ஆகாயத்தின் அழகுநிலை, இயற்கை, வேறுபாடு, காற்றடிக்கும் திசை, பூமியில் படிந்திருக்கும் பனிக்கட்டியின் உருவம், அதன் கீழ் இருக்கும் தரையின்மண், பாறைகள் இவற்றின் அமைப்பு, அவ்விடங்களில் இருக்கும் மிருகங்கள், பக்ஷிகள், ஊர்வன, புழுக்கள், வளரும் செடிகள், கொடிகள் முதலியவற்றை முற்றிலும் சாஸ்திர ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன், அவ்வித சாஸ்திரங்களில் வித்வான்களான பெரிய நிபுணர்களைத் தேர்ந்தெடுத்து அவ்வித ஆராய்ச்சிகளுக்கு வேண்டியிருக்கும் நுட்பக்கருவிகள், ஆயுதங்கள் எல்லாவற்றையும் சேகரித்துக்கொண்டு இன்னும் எவ்வெவ்விதமான சாமான்கள் வேண்டியிருக்குமோ வென்று முன்னமேயே எதிர்பார்த்துத் தயார் செய்துகொண்டு புறப்பட்டார்கள். அவர்கள் பிரயாணத்திற்குவேண்டிய உணவுப் பொருள்களும், குளிர் தேசங்களுக்குத் தகுந்த உடைகளும் கொண்டுபோனதுடன் பிரயாணத்திற்கு அவசியமான வண்டிகளையும், வழுக்கு வண்டிகளையும் இழுக்கக் குதிரைகளையும், நாய்களையும்,பனியில் வழுக்கு மோட்டார் வண்டிகளையும் தயாரித்துக் கொண்டு, 1910-ம்வரு நவம்பர்மீ 26உ டேர்ரா நோவா (Terra Nova) என்னும் கப்பலில் நியூஜிலெண்ட் (New Zealand) தேசத்தினின்று ஜனங்களும் நண்பர்களும் ஜெயமடைந்து திரும்பவேண்டுமென்று மனப்பூர்வ கோஷங்களுக்கு நடுவே புறப்பட்டார்கள். புறப்பட்ட சில தினங்களுக்குள்ளாக துர்நிமித்தம் போன்ற காற்றடித்து தொந்திரவுண்டாயிற்று. காற்றடங்க சமுத்திர நீரோட்டங்களையும், காற்றையும் எதிர்த்துச் சென்ற கப்பல் டிசம்பர்மீ 10உ பனிக்கட்டியால் சூழப்பட்ட உறைந்த சமுத்திரப்ரதேசம் வந்தது. இவ்விடங்களில் விசேஷமான பென்குவின்ஸ் (Penguins) என்னும் பறவைகள் தென்பட்டன. இவைகளுக்கு சங்கீதத்தில் அதிகப் பிரியம் என்று தெரியவந்தது. 1911-ம் வருஷப்பிறப் பன்றைய தினம் அவர்கள் (Erebus) எரிபஸ் எரிமலையை சமீபித்தார்கள். இவ்வெரிமலை யிருக்கும் தீவு 40 மைல் நீளமுள்ள முக்கோணம். இவ்விடத்தில் தான் 1902-ம் வருஷம் டிஸ்கவரி (Discovery) என்ற கப்பலில் பிரயாணம் வந்த இவர்கள் குளிர் காலத்தில் தங்கியிருந்தார்கள். இவ்விடத்தில் 20 மைல் தூரத்தில் தங்குவதாக உத்தேசித்து வெகு சிரமத்துடன் சாமான்களை எடுத்துச் சென்று ஸ்திரமான குளிர்கால வீடுகட்டி பந்தோபஸ்து செய்துகொண்டார்கள். இவர்கள் வந்த கப்பல் பனிக்கட்டியால் சூழப்பட்டபடி

யால் இதற்கு தெற்கே போக முடியவில்லை. ஆகையால் இவ்விடத்தையே ஸ்திர இருப்பிடமாக வைத்துக்கொண்டு 750 மைல் தெற்கேயுள்ள துருவத்திற்குப் பனிக்கட்டியில் கால்நடையாகவும், வழுக்கு வண்டிகளிலும் பிரயாணம் போகவேண்டியதாயிற்று. இவ்விதம் சாமான்களை கரையேற்றும்பொழுது பனிக்கட்டி திடீரென்று உடைந்து விலகி ஒரு மோட்டார் வண்டி பூமிக்குள் பதிந்து போயிற்று. பத்திரமாகசாமான்களை யெல்லாம் தங்குமிடம்கொண்டுவந்துசேர்த்தபிறகு தெற்கு நோக்கிச் சுற்றிப் பார்க்கத் தொடங்கினார்கள். இவ்விடத்தில்இவர்களுடைய உடுப்புக்களும் ஆகாரங்களும், குளிருக்குத்தக்கபடி மாற்றவேண்டியிருந்தது. பனிக்கட்டியால் மூடப்பட்ட நிர்மானுஷ்யமான பூமியானது காற்றின் அலைகளாகவும், மேடுகளாகவும் குவிந்திருப்பது கண்ணிற்கு வெகு இனிமையாக விருந்தபோதிலும் வழி நடைக்கு வெகு ஆபத்தாய் இருந்தது நாய்க் கூட்டங்கள் வழுக்கி பனிக்குழியில் விழுந்து விட்டன. வெகு பிரயாசையுடன் வெளியேற்ற வேண்டியதாயிற்று. இராவில் படுத்துத் தூங்குவதற்கென்று பைகள், தயார் செய்து குளிரினின்று காப்பாற்றிக் கொள்ள அதற்குள்ளேயே தூங்க வேண்டியதாயிற்று. இவ்விடத்தில் நார்வேதேசத்து அமுண்ஸன் (Amundson) என்பவர் 8 நண்பர்களுடன் 7 வழுக்கு வண்டிகளும் 90 நாய்களும் கூடவர, உயர்ந்த பனிமலையின் உச்சியைக் கடந்து துருவத்திற்குச் சமீபமாய்ப் போய்க் கொண்டிருப்பதாக இவருக்குத் தெரியவந்தது. அமுண்ட்ஸன், இவர்கள் இருந்த இடத்திற்கு 116மைல் முன்னமே தெற்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். சாதாரணமாக நாம் முந்தி துருவத்தைபடையவேண்டு மென்ற போட்டி இவர்கள் மனதில் உண்டாயிருக்கலாம். ஆனாலும் இவர்கள் அந்த வருஷம் குளிர்கால மெல்லாம் அவ்விடத்திலேயே இருக்கவேண்டியதாயிற்று. பூமிக்குத் தெற்கு பாகத்தில் நமக்கு கோடைகாலமா யிருக்கும்பொழுது அவர்களுக்கு குளிர்கால மென்பது அறிந்துக் கொள்ள வேண்டியது. இவர்கள் சில சமயங்களில் வழி நடந்து களைத்து இளைப்பாறும்போது இவர்கள் காலின்கீழ் பனிக்கட்டி வெடித்து, குதிரைகள், சாமான்கள்,ஜலத்தில்அமிழ்ந்து போனதுமுண்டு. பிறகு கோடை ஆரம்பித்ததும்தெற்கு நோக்கிப் புறப்பட்டார்கள். இடையிடையே பனிமலைகளில் 1000 அடி ஏறினதும் இறங்கினதும், பனிமழை ஓயாமல் 3, 4 நாள் வரையில் அடித்ததால் ஒன்றும் செய்யமாட்டாமல் தவித்ததும் சொல்ல முடியாது. தினம் ஒன்றுக்கு 10, 12 மைல் வீதம் பனியைக் கடந்து, கூடாரம், ஆகாரம் முதலானவற்றைத் தாங்களே இழுத்துக்கொண்டு டிசம்பர்மீ 19உ, 85 டிக்ரீ வந்து சேர்ந்தார்கள். கிருஸ்ட்மஸ் டே, கூடவந்த லாஸ்ட்லி என்பர் 80 அடி ஆழமுள்ள பனிப்பள்ளத்தில் விழுந்து விட்டார். கயிறு போட்டு மேலே இழுத்து விட வேண்டியதாயிற்று. அன்றையதினம் சாப்பாடு பூர்த்தியாகச் சாப்பிட்டுவிட்டுத் தூங்கினார்கள். இவ்விடத்திலிருந்து தினம்தினம் வேகமாகச்சென்றுகடைசியாக டிசம்பர்மீ 31உ துருவத்திற்கு 200 மைலுக்குள் சேர்ந்தார்கள். புதுவருஷத்தினத்தன்று (1912) துருவம் 173 மைல் தான் இருந்தது. ஜனவரிமீ 4 உ ஸ்காட்டும், ஓட்ஸ் (Oates), பவர்ஸ் (Bowers), வில்ஸன் (Wilson) இவன்ஸ் (Evans) இவ்வைவரும், 145 மைல் தூரத்திலுள்ள போலை நோக்கிச் சென்றார்கள். ஜனவரிமீ 16உ துருவத்தை யடைந்தார்கள். ஆனால் அவ்விடத்தில் பறந்து கொண்டிருந்த 1911௵ டிசம்பர்மீ 14உ நாட்டப்பட்ட அமுண்ஸன் கொடியைப் பார்த்ததும், "ஆஹா! நார்வீஜியன் நமக்கு முந்திவிட்டானே" என்று பெருமூச்சு விட்டார்கள். அமுண்ஸன் கூடாரமும் அவனுடன் கூடவந்த ஐவர் சரித்திரமும் எழுதியிருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். தாங்கள் கொண்டுவந்த "யூனியன் ஜாக்" என்கிற ஐக்கிய பிரிட்டிஷ் கொடியை, அமுண்ஸன் கொடிக்கு $\frac{3}{4}$ மைல் தெற்கே உண்மையான துருவம் என்று தெரிந்த இடத்தில் நாட்டி, அவ்விடத்திலேயே இரண்டு நாள் இருந்து விட்டு, 19உ யன்று ஊர்நோக்கி, வடமுகமாய்த் திரும்பினார்கள். முதலில் காற்று சவுகரியமாக அடித்ததால் வேகமாய்ப் பிரயாணம் நடந்தது. ஆனால் பனிப்புசல் 23, 24, 25 தேதிகளில் அடிக்க, வேகம் குறைந்து களைப்பு மேலிட்டது. 21 உ யன்று ஆறு நாள் உணவுதான் இருந்தது. அடுத்த இடம் 45 மைல் உண்டு. அவ்விடத்தில் 7 நாளைக்கு உணவுவைத்து விட்டு வந்திருக்கிறார்கள்.



பிப்ரவரிமீ 4 உ போலைவிட்டு 15 நாளில் 200 மைல் வந்திருக்கிறார்கள். இனிதான் இவர்களுக்குக் கஷ்டகாலம் ஆரம்பித்தது. பனிப்பள்ளத்தில் ஸ்காட்டும், இவன்ஸூம் விழுந்து விட்டார்கள். இவன்ஸூக்கு மண்டையில் அடிபட்டடியால் மூளைகலங்கி விட்டது. பனிக்கட்டிகள் பெரும்பள்ளங்களாகப் பிரிந்து நிற்பதைப், பாலமில்லாமல் அவைகளைத் தாண்டிச் செல்வது அசாத்தியமாயிற்று. பனிமலையை விட்டு இறங்க 11நாள் ஆயிற்று. எங்கே பார்த்தாலும் வெளிச்சம் பனியில் படுவதால் கண் கூசிற்று. இதோடு பனிமழையும் அடித்தது. பிப்ரவரிமீ 17உ இவன்ஸ் நடக்கமாட்டாமல் மயங்கிக் கீழே விழுந்தார். அன்றிரவு இறந்து போய் விட்டார். மிகவும் பலசாலியும்,தைரியமுமுள்ள சிநேகிதனை இப்பேர்ப்பட்ட சமயத்தில் இழப்பதைப் பார்க்கிலும் பயங்கரமான ஸம்பவம் வேறொன்று மில்லை. அப்பொழுது இராக்காலங்களில் பனிக்கட்டியைப் பார்க்கில் 40 டிக்ரீ குளிர்ச்சி தாழ்ந்தது. பிப்ரவரிமீ 28உ வடதிசையிலிருந்து காற்றடிக்கவே பிரயாணம் வேகமாய்ச் செய்ய முடியவில்லை. மார்ச்மீ 15உ ஓட்ஸ் என்பவர் நடக்கமாட்டாமல்படுத்துவிட்டார். அன்றிரவு உடப்பு அதிகமாகிவிட்டது. பனிப்புசல் ஓயாமல் அடித்தது. அவர் படுக்கையிலேயே இறந்துவிட்டார். அவருடைய சாமான்கள் எல்லாம் விட்டுவிடப் பட்டன. மறுநாள் மற்றைய மூவரும் துயரத்துடன் புறப்பட்டார்கள். கால்கள் புண்ணாகி விட்டன. நடக்க முடியவில்லை. அதனால் வேகமும் குறைந்தது. ஓயாமல் பனிப்புயல் அடிக்கவே கூடாரத்தைவிட்டு வெளிக்கிளம்ப முடியவில்லை. ஆகாரமும் குறுகிவிட்டது. அடுத்த தங்குமிடம்11 மைல்தான். அவ்விடம் சென்று விட்டால் 7 நாளைக்கு ஆகாரம்வைத்துவிட்டுவந்திருக்கிறார்கள். ஆனால்பனிப்புசலில்பிரயாணம் போவதென்றால் மூச்சுவிட முடியாமல் திக்கு முக்கலிட்டு பிரமித்து வழிதெரியாமல்திண்டாடிப்பனியில் புதைய வேண்டியதுதான். பவர்ஸூம், (Bowers) வில்சனும் (Wilson) முன்னேக்கிச் செல்லத் தீர்மானித்தார்கள். ஆனால் கூடாரத்திற்கு வெளியே செல்வது அசாத்திய மாகிவிட்டது. 29உ யன்றும் குளிர் மழை யடித்துக்கொண் டிருந்தது. இனி பட்டினியால் இறக்க வேண்டியதுதான் என்றுதெரிந்ததும்(ஜனங்களுக்குவிக்ஞாபனம் என்ற,ஒரு நிருபத்தை காப்டன் ஸ்காட் எழுதி வைத்துவிட்டு மூவரும் கூடாரத்திலேயே இறந்து கிடந்தார்கள். அக்கடிதத்திலிருந்து அவர்கள் பட்டகஷ்டங்களும், அவர்கள் தைரியமும், அவர்கள் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டுமென்ற வேண்டுகோளும் தெரிகிறது. சுமார் 8 மாதம் கழித்து 1912 வருஷம் அக்டோபர்மீ அவர்களைத் தேடிச் சென்ற அட்கின்ஸன் (Atkinson) முதலியவர்கள், 400 வருஷமாக ஒருவராலும் அடையமுடியாத கீர்த்தியை அவர்கள் அடைந்ததையும், தைரியமாக அவர்கள் கஷ்டங்களைச்சகித்து அதில் பிராணனை விட்ட சமாசாரத்தையும், அவர்கள் கூடாரத்தில் அவர்கள் பிரேதங்களும், அவரது தினசரியும் இருந்ததையும், உலகத்திற்கு வெளியிட்டார். காப்டன் ஸ்காட் என்னதான் சாதாரணமாக பனியில் கஷ்டப்பட்டு இறந்த போதிலும், அவர் யுத்தகளத்தில் போர்செய்து ஜெயத்தையடைந்ததும்,தற்செயலாய்க்காயமடைந்து பிராணனை விடும் ஜனரலைப் பார்க்கிலும் அதிக கீர்த்தியை அடைந்தார். இந்த சமாசாரம் இங்கிலாந்திற்கு எட்டியதும் ஜனங்களும் ராஜாங்க பூகோள சங்கத்தாரும் பிரபுக்களும் அளவில்லாத துக்கத்தில் ஆழ்ந்து, அவர்கள் ஆத்மா நற்கெதியடைய ஸெயின்ட் பால் (St. Pauls) ஜெபாலயத்தில் கூடிய ஜெபத்திற்கு வந்திருந்து அத்தினத்தை துக்க தினமாகப் பாவித்தார்கள். இறந்தவர்கள் வேண்டுகோளின்படிகவர்ன்மெண்டும் அவர்கள் குடும்பத்தாருக்கு வேண்டிய பொருளுதவி செய்ததோடு லேடிஸ்காட் (Lady Scott) அம்மாளுக்கு அவர் இருந்தால் என்னமரியாதை நடக்குமோ அதே மரியாதை இப்பொழுதும் நடக்கும் என்று சக்கரவர்த்தியவர்கள் விளம்பரப்படுத்தினர்.

இவ்விதம் உலகத்தில் வெகு துக்கமான இச்சம்பவம் நடந்தது. இனி அடுத்த வருஷம் 'ஸர் எர்னஸ்ட் ஷாக்கல்டன், (Sir Earnest Shackleton)என்பவர் தக்ஷணத்துருவத்திற்கு மறுபடி புறப்பட்டுப்போய்,நியூ ஜீலண்டில்(New Zealand) இருந்து, துருவத்தைக் கடந்து தென் அமெரிக்காவின் தெற்கில் வந்துசேர, பெரிய ஏற்பாடு செய்து கொண் டிருக்கிறார். அதில் அவருக்கு ஜயத்தை ஈசுவரன் கொடுப்பார் என்று பிரார்த்திக்கிறோம்.

## ஆலய வழிபாடு

## TEMPLE WORSHIP

இந்த மானஸிக பூஜையைப்பற்றி பின் வருமாறு வெகு அழகாகச்சொல்லப்பட்டிருக்கிறது.

அபேத தர்சனம் ஞானம் த்யானம் நிர்விஷயம் மன:
ஸ்நாநம் மனோமலத்யாக: சௌசமிந்த்ரிய நிக்ரஹ:

அக்ரியைவ பராபூஜா மௌனமேவ பரம்தப:
அசிந்தைவ பரம்த்யானம் அநிச்சாபரமம் ஸுகம் சிவ:
தேஹோதேவாலய: ப்ரோக்தோ ஜீவோ தேவ: ஸதா
த்யஜேதஞ்ஞான நிர்மால்யம் ஸோஹம் பாவேனபூஜயேத்

இப்படி அன்பின்பெருக்கால் ஈசனை மானஸஹோம பீடத்தில் அன்பான புண்ய தீர்த்தத்தால் அபிஷேகம் செய்வித்து அஹிம்ஸா முதலான புஷ்பங்களால் அர்ச்சனை செய்து, ஞானமென்ற தீபத்தால் மங்களாரார்த்தி செய்வது உயர்ந்ததே. பத்மபுராணத்தில் அஹிம்ஸா முதலான புஷ்பங்களைப்பற்றி வெகு அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்ப மிந்திரிய நிக்ரஹ:
ஸர்வபூததயாபுஷ்பம் க்ஷமாபுஷ்பம் விசேஷத:
ஞானம்புஷ்பம் தப:புஷ்பம் த்யானம்புஷ்பம்ததையச
ஸத்யமஷ்டவிதம்புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத்

இந்தபிண்டாலயத்திலும்கர்ப்பக்ருஹம், அர்த்த மண்டபம், ஸ்நாநமண்டபம், ந்ருத்யமண்டபம், ஆஸ்தானமண்டபம், மகாகோபுரம் முறையே சிரஸ், மார்பு, நாபி, முழந்தாள், கெண்டைக்கால், பாதங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தவிதமான உயர்ந்த வழிகளில் நடக்கச்சக்தியற்றவர்களுக்குக் கோவில்களில் பகவத்பக்திசெய்வதுதான் தகுந்தமார்க்கம். இவ்விதமான ஆலயவழிபாடு மூவகைப்பட்டது என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவற்றுள் அவிக்ரகோபாஸனை யென்பது கோவிலுக்குள் சென்று ஈசனை நினைத்து மனமுருகித் தியானிப்பதுதான். சிதம்பரரகஸ்யத்தின் தாத்பர்யம் இது தவிர வேறில்லை. நிரவ்யவ விக்ரகோபாஸனையாவது அங்கங்களில்லாத லிங்கத்தில் பரமேச்வரபாவனை பண்ணுவதுதான். அங்க விக்ரகோபாஸனை யென்றால் சோமாஸ்கந்தர், நடராஜர், ஸ்ரீ ராமர், கிருஷ்ணபரமாத்மா, அம்பிகை முதலான் மூர்த்திகளை த்யானிப்பது தான். இந்த விதமாக தாழ்ந்தபடியில் நின்று மேல்படி கடந்துப் போய் பேரின்ப மடைதல்தான் ஆலயங்களின் முக்ய ப்ரயோஜனமேயாம்.

இப்படிப்பட்ட ஆலயநிர்மாணம் செய்ய நம்முடையகாமிகாகமம் முதலான இருபத்தெட்டு சிவாகமங்களிலும், வைஷ்ணவாகமங்களிலும், சில்பசாஸ்திரங்களிலும் வெகுவிஸ்தாரமாக விதிகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. நம்முடைய கோயில்களில் செய்யப்பட்ட சில்பவேலையின் அருமையைப் பற்றி புகழாதவர்களே இல்லையாது. ஆனால் நமக்குள் சிலர் முன் காலத்திய மனிதர்கள் பணத்தையும் பொழுதையும் கோயில் நிர்மாணம் செய்வதிலும், சத்திரம் கட்டுவதிலும், குளம் வெட்டுவதிலும், செலவழித்துவிட்டார்கள் என்று இகழ்ந்து பேசுகிறார்கள். இவர்கள் மிக்க நுண்ணறிவுள்ளவர்கள் போலும்! ரஸ்கின் என்ற மஹான் மேற்குத் தேசங்களில் தேவாலயங்களின் அழகைப்பற்றிக் கவனியாமலிருப்பதையும் சொந்தவீடுகளைச் சிறப்பாகக் கட்டுவதையும் பற்றி வெகு விரிவாகவும் கம்பீரமாகவும்எழுதியிருக்கிறார். நம்முடைய தேசத்திலோ தேவாலயங்களைச் சிறப்பாகக் கட்டுவதில் நம்முடைய முன்னோர்கள் வெகு ஊக்கத்துடன் பாடுபட்டிருக்கிறார்கள். ஈச்வரன் உலகத்தை யெல்லாம் படைத்து நம்மை ரக்ஷித்து தன்னுடைய ஆநந்தத்தை எல்லோரும் அடைந்து முக்தி சாம்ராஜ்யத்தைப் பெறவேணும் என்று இருக்க, அவருடைய உலகில் உண்டாகிற அருமையான பதார்த்தங்களை அவருக்குச்சேர்ப்பிக்காமல்நம்முடைய அலங்காரத்திற்கும் புகழுக்கும் சுகத்திற்குமா எடுத்துக்கொள்வது? அவைகள் அவருக்கு வேண்டுமென்றல்ல. அவரிடத்தில் நமக்கு நிஜமான அன்பிருந்தால், அந்த அன்பின் ஸ்வரூபம் என்ன என்றால் தத்ஸுகஸுகித்வமே. அளவற்ற அன்பானது எல்லா சௌக்யங்களையும் அலங்காரங்களையும் அன்பிற்கு பாத்ரமான வஸ்து அடையவேணும் என்று நினைக்குமே தவிர தனக்கு வேணுமென்றே நினைக்காது. இது நம்முடைய சிற்றின்ப விஷயங்களிலேயே நாம் பார்க்கலாம். இப்படிப்பட்ட உயர்ந்த தேவாலயங்கள் அமைப்பைப்பற்றி நம்முடைய சாஸ்திரங்களிலும் ஆகமங்களிலும் அநேக விதிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளை இவ்விடத்தில் விவரிப்பது அஸாத்யமான விஷயம்.



## கமலரேகை

## KAMALAREKA

### ஐந்தாம் அத்தியாயம்

### மனோ நிலையை மறையாதுரைத்தல்

இந்த நிலவுலகத்திலே நிகழும் அதிசயமான பல சம்பவங்களுள் சில சம்பவங்கள் பேராச்சரியத்தை விளைவிக்கும் விதமாய் நிகழ்கின்றன. தரித்திரத்தில் தரித்து நிற்கும் ஒருவன் திடீரென்று செல்வத்திற் செல்வதையும், சாமானிய நூல்களைப் படித்தறிவதற்குரிய ஆற்றல்தானும் வாய்க்கப்பெறாத ஒருவன், சரேலென்று, ஆன்றோரியற்றிய விசேட நூல்களை அளந்தறியக் கூடிய பெரும் புலவனாவதையும் நாம் சிற்சில அமயங்களிற் இவ்வுலகத்தில் காண்கின்றோம். சிறுபான்மை நிகழும் இத்தகைய நிகழ்ச்சி, பேராச்சரியம் பயப்பதொன்றன்றோ? வறுமையால் வருந்தும் வெறுங்கையன் ஒருவன், வெருக்கையால் சூழப்பெற்ற கோடீசுவரன் வீட்டிற் பெண்கொள்ளும்படியான சந்தர்ப்பங்களும், புரவலன் வீட்டுப் பெண் இரவலன் வீட்டில் வாழ்க்கைப்படும்படியான சமயங்களும் சிற்சில காலங்களில் நேர்தல் பேராச்சரியமான சம்பவமன்றே? இங்ஙனம் ஒன்றனுக்கொன்று பெரிதும் மாறுபட்டிருக்கும் இயல்புகளை ஒன்றுபடுத்தும் விதமாய் நிகழும் நிகழ்ச்சி, பேராச்சரியப் படத்தக்கதேனும், ஒன்றுபடுதற்குரிய ஒற்றுமை பெரிதும் வாய்ந்த சில இயல்புகளை ஒன்றுபடவொட்டாமற் றடுத்துவிடக்கூடிய விதமாய்ச் சம்பவிக்கும் சம்பவம், அதனினும் பேராச்சரியம் விளைப்பதொன்றாம். சிறந்த குலமும், விரிந்தகல்வியும், தீர்ந்தஅழகும் முதிர்ந்த அறிவும் இனிது வாய்ந்த ஒருவன் இந்நான்கும் ஒருங்கமைந்த அரிவை ஒருத்தியை அறிந்து மணப்பதற்கு விரும்புகின்றான். தான் விரும்பியவாறு ஒருதெரிவை இருப்பதைப்பின்னர் இவன் தெரிந்து கொண்டதோடு, அவள் தன்னை மணந்து கொள்வதில் நாட்டம் மிக உடையளாயிருக்கின்றாள் என்பதையும் குறிப்பாலறிந்து கொண்டான். இங்ஙனம் ஒத்தகுலனும், குணமும், அழகும், அறிவும் இனிதமைந்த இவர்கட்கு இவ்வொற்றுமைகளோடு எல்லாவற்றினுஞ் சிறந்த 'மன ஒற்றுமை' எற்பட்ட பின்பும், இவர்கள் விருப்பம் சிற்சில சமயங்களில் நிறைவேறாமற் போகின்றதை, நாம் உலகானுபவத்தில் காண்கின்றோம். இதற்குக் காரணம் யாது? ஏதாவது ஒரு சிறு வேறுபாடு இடையே நின்று, இவ்வளவு ஒற்றுமையையும் கடலிற்கரைத்த புளியாக்கிவிடுவதே காரணமாம். உதாரணமாக இவ்விருவருள் அவன்மிக வறியோனும், அவள் பெரும் செல்வவதியாயும் இருப்பதாக நாம் வைத்துக்கொள்வோம். இந்த ஒரு வித்தியாசமானது,—அதாவது, 'வறுமை', 'செல்வம்' என்னும் இந்த ஒரு வேறுபாடானது,—அவர்கட்கு இடையூறாக நின்று அவர்கள் எண்ணத்தை நிறைவேற்றா தொழிகின்றது. ஒருவரை ஒருவர் மணம் புரிந்து கொள்ளுதற்குரிய ஒற்றுமை நயங்கள் பல, அவனிடத்தும் அவளிடத்தும் அமைந்திருந்தவேனும், இந்த ஒரு வேற்றுமையானது, அவர்களை ஒன்றுபடமுடியாமற் செய்துவிட்டதன்றே? இத்தகைய சம்பவம் இரண்டாவது வகையின் பாற்படும். சத்தியசந்தன் என்னும் புனைபெயர் பூண்ட கமலநாதன் நிலைமை, இவ்விரண்டாவது நிலைமையிலிருந்தது.

அவன் கமலரேகையை முதன் முதல் சந்தித்த போதே,—அதாவது விக்டோரியா சபாமண்டபத்தில் கண்டபோதே,—அவள்மீது அவனுக்குண்டான 'காதல், அவனகத்தே கருக்கொள்வதாயிற்று. ஒருவனுலும் ஒருத்தி பாலும்முறையே ஒருத்திமீதும் ஒருவன் மீதும் காரணம் புலப்பட்டோஅல்லதுபுலப்படாமலோ,—முதன் முதல் செலுத்தப்படும் காதல், பச்சை மரத்தில் அறையப்பட்ட ஆணியைப்போலும், கருங்கல்லிற் பொறிக்கப்பட்ட எழுத்துக்களைப்போலும், முறையே அவரவர் மனத்தில் ஆழப்பதிந்து, அவர்கள் ஒருவரை ஒருவர் முதன் முதல் சந்தித்த இடத்தையும், காலத்தையும் என்றும் அவர்கள் மனத்திலிருந்து நீங்கவொட்டாமற் தடுத்து அவர்களை மனோபாவகப் பேருலகில் சஞ்சரிக்கும்படி செய்து வருகின்ற தென்பதை, மக்கள் தங்கள் அனுபவத்தினால் இவ்வுலகில் பெரும்பாலும் அறிந்திருக்கின்றார்கள். இத்தகைய அனுபவ நிலை கமலநாதனுக்கு வாய்க்கவில்லை என்றாவது, அல்லது அந்த நிலை அவனுக்குப் புறம்பான தென்றாவது நாம் சொல்லத் துணியோம். எனெனில், கமலரேகையை அவன் தன் முழுமனத்துடனும் பூரண இருதயத்துடனும் காதலித்தான். ஆகவே, காதலர்களுக்கு இயல்பாகவுள்ள 'விழிப்பு நிலை இன்பக் கனவும்' 'மனோபாவகப்பிரபஞ்ச சஞ்சாரமும்' அவனுக்கு முண்டு எனக் கொள்வதில் எதம் எதுமில்லை. இவைகளில் தோய்ந்து நின்ற அவனுடைய மனம், கமலரேகையின் துயரங்கண்டு அவளை ஆற்றுவிக்க முற்பட்டது இயல்பேயாம் என்க.

"சத்தியசந்தரே! விடியற்காலையில் நாம் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று, அநுவிந்தனுடைய படுகொலையைப் பற்றியும், அந்த ஸ்திரீ மறைந்துபோனதைப்பற்றியும் எழுதிவைக்கவேண்டுவது அவசியந்தானே?" என்று கமலரேகை மீண்டும் ஒருமுறை சத்தியசந்தனைக் கேட்டாள்.

"ஆம்; அவசியந்தான். எனெனில், கொலை செய்தவர்களைக் கண்டு பிடிக்க வேண்டுவது போலீஸாரின் கடமையன்றோ? நாம் சென்று எழுதிவைக்காவிட்டால், அவர்கள் நம்மை விசாரிப்பதற்கு நாமிருக்கும் இடந்தேடி வருவார்கள். ஆனாலும், அநுவிந்தன் கொலைசெய்யப்பட்டான் என்று இன்னம் நிச்சயமாய்த் தெரியவில்லையே? அவன், மாரடைப்பு, முதலான காரணங்களால் திடீரென்று இறந்திருக்கக்கூடும் என்று ஒரு சமயம் வைத்தியர்களால் அபிப்

பிராயம் சொல்லப்பட்டால், அவனுடைய மரணத்திற்கும் கொலைக்கும் எத்தகைய சம்பந்தமும் இராதன்றோ?" என்று கமலநாதனாகிய சத்தியசந்தன் கூறினான்.

"இல்லை; என் காதலர் வேண்டுமென்றே அப்பாதகியால் கொல்லப்பட்டார்! நான் அப்போதே உம்மிடம் தெரிவித்தேனன்றோ? நான் எச்சரித்தும் அவர் கேட்காமல், அநியாயமாய்க் காலனுக்கு இரையானார்."

"நல்லது; அவருக்கு அபாயம் நேரும் என்பதை நீங்கள் எவ்விதம் அறிந்துகொண்டீர்கள்?" என்று சத்தியசந்தன் கமலரேகையைக் கேட்டான்.

"அவ்விதம் நேரும் என்று, நான் எனக்குக் கிடைத்த முன்னெச்சரிக்கையைக் கொண்டு அறியலானேன். சத்தியசந்தரே! நீர் இன்னும் விவரமாய் விஷயங்களை அறிந்துகொள்ள விரும்புகிறீர் என்பதை நான் உம்முடைய வினாவினால் அறிந்துகொண்டேன். ஆனாலும், தற்சமயம் இதைவிட அதிகமாகவாவது, விவரமாகவாவது சொல்லுவதற்கு நான் இசையேன். **அநுவிந்தனுடைய இரகசியம்** என்னுடையதே; அது பிறருக்குப் புலப்படக்கூடியதன்று" என்று கமலரேகை பிடிவாதமாகக் கூறினாள்.

அவள் கூறிய இந்த வார்த்தைகள் கமலநாதனை ஸ்தம்பிக்கும்படி செய்தன. பெண்களின் பிடிவாதம் சில சமயங்களில் **மாத்திரமே** நிறைவேறாமற் போகின்றதென்பதை இனிதறிந்த அவன், இவ்விஷயமாய்க் கமலரேகையை மேற்கொண்டு வினவாதிருந்தது ஆச்சரியமன்று.

"அம்மையே! ஆனாலும் தங்களுடைய இரகசியத்தைப் போலீஸார் எவ்விதத்திலாயினும் அறிந்துகொள்ள முயல்வார்களே?" என்று மிக நயமாய்க் கமலரேகையைச் சந்தியசந்தன் வினவினான்.

"ஓ! அதுமுடியவே முடியாது; அதற்கு நான் இடங்கொடுக்கவே மாட்டேன். சத்தியசந்தரே! நீர் எனக்குஉதவிபுரிவதாக வாக்குத்தத்தம் அளித்திருக்கின்றீர்! அவ்விஷயம் ஞாபகத்திலிருக்கட்டும்" என்று கமலரேகை மிகுந்த அச்சத்துடனும், பரிவுடனும் கூறினாள்.

"என்னால் செய்யக் கூடிய உதவியை, அம்மையே, நான் மனமுவந்து செய்தற்குத் தயாராயிருக்கின்றேன். தங்களுக்காக நான் என்னுடைய உயிரையும் தத்தம் செய்யக் காத்திருக்கின்றேன். ஆனாலும், 'விக்டோரியா சபாமண்டபத்தில்' தங்களுடைய முகவுறை கழன்று வீழ்ந்தபின்பும், போலீஸார் தங்களை யார் என்று அறிந்து கொள்ளாமலிரார்கள் என்றே நான் நினைக்கிறேன். ஆதலால் நாமே போலீஸ் ஸ்டேஷனுக்கு வலிந்து சென்று ஏதாவது எழுதிவைத்தல் நலமாகும்" என்று சத்தியசந்தன் சொன்னான்.

"சத்தியசந்தரே! நான் இவ்விடத்திலிருந்து தப்பிச்செல்ல விரும்புகிறேன். இங்கே இருந்து, இப்படு கொலை விஷயத்தில் என்னை நானே அநாவசியமாய்ச் சம்பந்தப்படுத்திக்கொண்டு வீண்அபவாதத்திற்கும் அவமானத்திற்கும் உள்ளாவதைவிட, வெளியே சென்று கொலைசெய்த அந்தப் பாதகியைக் கண்டுபிடிக்க என்னாலான சூழ்ச்சிகளைச் செய்வது நலமென்பது என் எண்ணமாகும். பழிக்குப்பழி வாங்க வேண்டுவது என்னுடைய கடமையாகும். அதற்கு யாதுசெய்வதென்பதையும் நான் அறிந்திருக்கிறேன். போலீஸாருடைய உதவி எனக்கு வேண்டுவதில்லை. அவர்களால் இக்கொலை விஷயமாய் எத்தகைய உண்மையும் கண்டு பிடிக்கப்பட மாட்டாது. இவ்விஷயத்தில் அவர்கள் பிரவேசிப்பது சிறிதும் விரும்பத்தக்கதன்று. ஏனெனில், உண்மையைக் கண்டுபிடிக்க அவர்களாலும் முடியாது; உண்மையைக்கண்டுபிடிக்க நாம்செய்யும் முயற்சிக்கு அவர்களுடைய பிரவேசம் பெரும் இடையூறாகவுமிருக்கும்" என்று கமலரேகை வற்புறுத்திக் கூறினாள்.

கமலரேகை, '**நகர பாதுகாவலர்கள்**' எனப்படும் போலீஸார் விஷயத்தில் இவ்வித அபிப்பிராயம் கொண்டதில், உண்மையில்லாமலும் இல்லை என்பது உண்மையேயாம். இதற்கு நாம் அனுபவத்தில் பார்த்து வரும் பல விஷயங்களே பிரத்தியட்சப் பிரமாணங்களாயிருக்கின்றன. நம் தேசத்தில் போலீஸ் இலாகாவின் வேலை மிகவும் பாராட்டற்பாலதாயிருப்பினும், ஜனங்களுடைய உடல்பாதுகாப்பு, பொருள் பாதுகாப்பில் மிகுந்த கவனம் செலுத்திவருகின்ற அரசாங்கத்தார், பெரும்பொருட் செலவில் அந்த இலாகாவைப் பலவகையிலும் விருத்திசெய்திருக்கிறார்கள் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையாயிருப்பினும், இவ்வளவு ஏற்பாட்டுக் கிடையில் தேசத்தில் கொலைகளும் கொள்ளைகளும் நாளுக்கு நாள் விருத்தியாகி வருகின்றன என்பதும் எவராலும் மறுக்கவும் மறைக்கவும் முடியாத உண்மையாயிருக்கின்றது. எத்தனையோ கொலைபாதகர்கள் தங்களால் இயற்றப்பட்ட மறச்செயல்களுக்கு தண்டனையே பெறாமல் மறைந்து திரிகின்றார்கள்! எத்தனையோ கொள்ளைகளும் களவுகளும் கண்டுபிடிக்கப்படாமலே மறைந்தன! "பண்டம் ஓர் புறம், பழி ஓர் புறம்" என்னும் பழமொழிக் கிணங்க, எத்தனையோ மனிதர்கள் குற்றவாளிகள் எனப்பிறழ உணரப்பட்டவர்களாய், உண்மையில் குற்றம் புரிந்தவர்கள் சட்டத்திற்கும் அதிகாரிகளுக்கும் அகப்படாமல் மறைந்து திரிய, அவர்கட்குப் பதிலாய்ப் பிடிக்கப்பட்டு தண்டனை அடைந்து வருந்தி யிருக்கின்றார்கள்! இத்தகைய சம்பவங்கள் நம் தேசத்தில் அடிக்கடி நிகழ்கின்றன என்பதற்குப் பத்திரிகைகளும், நியாயஸ்தலங்களில்செய்யப்படும்தீர்ப்புகளுமே போதிய சான்றாம். இங்ஙனமெல்லாம் நிகழ்வதற்குக் காரணங்கள் யாவை? போலீஸ் இலாகாவில் உயர்பதவி வகித்துள்ள பெரிய உத்தியோகஸ்தர்கள் நுண்மதியும், சிறந்த செயலுமுடையவர்களே யாயினும், அவர்கட்குக் கீழ்வேலை பார்க்கும் சாமானிய சேவகர்களும் பிறரும் பெரும்பாலும் கல்வியறிவில்லாதவர்களாயும் தரித்திரத்தின் சோதனைகளுக்கு உட்படக் கூடியவர்



களாயுமிருக்கின்றார்கள். இவர்கட்குப் போதிய சம்பளம் அதிகாரிகளால் கொடுக்கப்படுவதுமில்லை; அதிகாரிகள் கொடுக்கும் இந்தச்சம்பளத்திற்கு இவர்களைக் காட்டினும் மதியின் மிக்கவர்கள் இவ்வேலைக்கு வருதற்கு உடன்படுவதுமில்லை! தவிர, மேலதிகாரிகள், ஒரு கேஸைக் கண்டுபிடிப்பதில் முயன்றுவரும் கீழுத்தியோகஸ்தர்களை, அவசரப்படுத்துவதாலும், கண்டுபிடிப்பதில் தாமதம் நேர்ந்தால் காரணமும் விவரமும் கூறும்படி நிர்ப்பந்தப்படுத்துவதாலும், இந்தக் கீழுத்தியோகஸ்தர்கள், மிகுந்த அவசரத்துடன் எப்படியாவது ஒருவழியில் கேஸை முடித்துவிட முயல்கின்றார்கள்! இதனால் உண்மை கண்டுபிடிக்கப்படாமல் மறைந்து போகின்றது! அம்மட்டோ! பொது ஜனங்களுக்குப்போலீஸாரிடம்அகாரணமான அச்சமும் அவநம்பிக்கையும், அவர்களில் சிலருடைய செயலால், ஏற்பட்டுவிடுகின்றனவாதலால். ஜனங்கள் தங்களுக்குத் தெரிந்த,உண்மையை அவர்களிடம் சொல்லாமல் மறைத்து விடுகின்றார்கள்! ஆகவே, இவ்விஷயங்களை நன்கறிந்த கமலரேகை இவ்விதம் சொன்னது ஆச்சரியமன்று.

"அப்படியானால், நீங்கள் இவ்வூரைவிட்டு அப்புறப்படவேண்டுமென்று கருதுகின்றீர்களோ? நீங்கள் இச்சமயம் சென்னையிலிருந்து வெளிநாடு செல்லுதல் உசிதமன்றென நான் நினைக்கிறேன். ஏனெனில் அவ்விதம் செய்வது போலீஸாருக்குள்ள சந்தேகத்தை அதிகப்படுத்தும். ஆனாலும், தங்களுடைய விருப்பத்திற்கு நான் மறுத்து ஏதும் சொல்லத் துணிந்திலேன். தங்கள் இஷ்டம்போல் செய்யுங்கள்" என்று சத்தியசந்தன் நயமாக எடுத்துரைத்தான். ஏனெனில், தன்னுடைய வார்த்தை பயன்படாதென்பதை அவன் இனிதறிந்து கொண்டான்.

"சத்தியசந்தரே! நான் அவசியம் வெளிநாடு நாடிச்செல்ல வேண்டும்; அதற்கு நீர் உதவிபுரிய வேண்டும்" என்று கமலரேகை பிடிவாதமாய்க்கூறினாள்.

"ஆனால்சரி; நான் என்னாலான உதவியை மனமுவந்து புரிகின்றேன். அம்மையே! நீங்கள் எந்த ஊருக்குப் போவதற்கு உத்தேசித்திருக்கிறீர்கள்? எப்போது புறப்படக் கருதியிருக்கின்றீர்கள்?" என்று சத்தியசந்தன் உசாவினான்.

"நண்பரே! விடியற்காலையிலேயே நான் புறப்பட்டுவிடவேண்டும். காலை ஆறுமணிக்கு எழும்பூரில் ஒரு இரயில் தொடர் புறப்படுகின்றது. இன்றிரவு நாடகம் பார்ப்பதற்குச் சைதாப்பேட்டை, பல்லாவரம், பரங்கிமலை முதலான இடங்களிலிருந்து எண்ணிறந்த ஜனங்கள் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் அந்த வண்டியில் ஏறியே தங்கள் தங்கள் ஊருக்குச் செல்லுவார்கள். ஆதலால் காலையில் எழும்பூர் ஸ்டேஷனில் கூட்டம் அதிகமாக விருக்கும். நான் காலையில் புறப்பட்டால் ஒருவருக்கும் தெரியாமல், கும்பலில் கலந்து சுலபமாய் எழும்பூரில் இரயில் ஏறிவிடுவேன். அங்கிருந்து **புதுச்சேரிக்குப் போவேன்**" என்று கமலரேகை சொன்னாள்.

"அம்மா! புதுச்சேரியில் உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கின்றார்களா?" என்று சந்தியசந்தன் வினவினான்.

"புதுச்சேரியில் எனக்கு உறவினர்கள் இருக்கின்றார்கள். அங்கே நான் போய்விட்டால், என்னுடைய பாட்டியார் என்னை மறைவாகவைத்துக் காப்பாற்றி வருவாள்" என்று கமலரேகை பதில் பகர்ந்தாள்.

"அம்மையே! நீங்கள் செய்யும்யுக்தி மிகவும் பாராட்டப் படத்தக்கதே. ஆனாலும் எழும்பூரில் இரயில் ஏறுவது அவ்வளவு உசிதமன்று. ஏனெனில், "விக்டோரியா சபாமண்டபத்தில்,இன்றுநடந்தபடுகொலையைப்பற்றிக் கேள்வியுற்ற போலீஸார், அவசியம் காலையில் எழும்பூர் ஸ்டேஷனுக்குத் துப்பறிய வருவார்கள். ஆதலால், சைதாப்பேட்டைக்கு இங்கிருந்து ஜட்காவிற் சென்று, அங்கே, 'டிக்கெட்' வாங்கிக் கொண்டு இரயில் ஏறுவதுதான் நலம்" என்று சத்தியசந்தன் எடுத்துரைத்தான்.

"நண்ப! நீர் கூறியது சிறந்த ஆலோசனையாகும்! அவ்விதவமே செய்வோம். ஆனாலும், இன்னொரு விஷயம் முக்கியமாகக் கவனிக்கப் படவேண்டும். அதாவது, என்னுடைய தந்தையாருக்கு நான் **புதுச்சேரிக்குப்** போயிருக்கின்றேன் என்பது தெரியவே கூடாது. நான் **மதுரைக்குப்** போயிருப்பதாக அவர் நினைத்துக் கொள்ளவேண்டும். அதற்காக நான் ஒரு யுக்தி செய்யப்போகிறேன். அதாவது, நான் **மதுரைக்குவந்திருப்பதாக** ஒரு தந்தி எழுதி அதைத் தபால் மூலமாய் மதுரையிலிருக்கும் என்நண்பர் ஒருவருக்கு அனுப்பி, அதை உடனே என் தந்தையார் பேருக்கு பேசிவிடவேண்டுமென்று தனியாக ஒரு துண்டுக்கடிதத்தில் குறித்தனுப்பிவிட்டால், அவர் அவ்விதமே செய்துவிடுவார். நான் தந்தியும், கடிதமும் எழுதி அவைகளைஒரு காகித உறையுள் வைத்து மதுரையிலுள்ள நண்பரின் மேல் விலாசமும் எழுதி உம்மிடம் தருகின்றேன். தயை செய்து நீர் அக்கடிதத்தை எனக்காக மறந்து விடாமல் தபாலில் சேர்த்து விடவேண்டும்" என்று கமலரேகை சத்தியசந்தனைக் கேட்டுக் கொண்டாள்.

"அம்மையே! அப்படியே செய்கின்றேன்!" என்று சத்தியசந்தன் கூறினான்.

உடனே ஒரு தந்தி பாரத்தை எடுத்து, அதில் ஏதோ கமலரேகை எழுதினாள்; பிறகு ஒருகடிதம், தனியாக வரைந்தாள். இரண்டையும் மடித்து ஒரு 'கவருள்' வைத்து அதனை ஒட்டி மேல்விலாசம் எழுதி அதைச் சத்தியசந்தன் கையிற்கொடுத்தாள்' "**ஸ்ரீமான் ஆனந்த சாணலய சுவாமிகள்; ஜமீன்தார் நன்மாறனின்தலகரு; மதுரை**" என்று அக்கவரின்மேல் விலாசம்எழுதப் பட்டிருந்தது. சத்தியசந்தன் அதனை வாங்கி தன் சட்டைப்பையினுள் வைத்துக் கொண்டான்.

"அம்மா! இப்போது மணி நான்கு ஆகிறது. இப்போது புறப்பட்டால் மாத்திரமே சைதாப்பேட்டை

குச்சென்று, அவ்விடமிருந்து இரயில் ஏறுதல் சாத்தியமாகும் என்று சத்தியசந்தன் உரைத்தான்.

“ஆம்; இதோ புறப்படுகின்றேன். என்னுடைய சொந்தவண்டியில் ஏறிச் செல்வது உசிதமன்று. ஆதலால் நாம் இந்த, பத்ம **விலாஸ**, மாளிகையிலிருந்து ஒருவருக்கும் தெரியாமல் வெளிப்பட்டு சிறிது தூரம் நடந்துசென்று, பிறகு ஒரு வாடகை வண்டி பிடித்து அதிலேறிக்கொண்டு சைதாப்பேட்டைசெல்வோம். நண்பரே! நீரும் என்னோடு சைதாப்பேட்டைக்குவந்து அங்கே என்னை இரயிலில் ஏற்றிவிட்டுசென்னைக்குத்திரும்புதல்வேண்டும். நான் உள்ளேசென்று வேறு உடைதரித்துக் கொண்டு, பிரயாணச்செலவுக்குக் கொஞ்சம் பணமும், சில சாமான்களும் எடுத்து வருகின்றேன்” என்று கமலரேகை சத்தியசந்தனிடம் சொல்லிவிட்டு மாடியைவிட்டுக் கீழிறங்கிச் சென்றாள்.

சுமார் கால் மணிநேரம் கழித்தபின், ‘பத்மவிலாஸ’ மாளிகையின் மாடிமீது தனியாக ஒருநாற்காலியில் வீற்றிருந்த சத்தியசந்தனுடைய மனமொருங்கிய ஆழ்ந்த ஆலோசனை சிதர்ந்து போம்படி, பேரொழிலும் பெருவனப்பும் இனிதமைந்த வாலிபன் ஒருவன், அவன் முன், புன் முறுவல் பூத்த முகத்துடன், தோன்றினன். அவ்வுருவைக் கண்டவுடன் சத்தியசந்தன், இன்னதென்று உரைக்கப்பட முடியாத ஆச்சரியத்தினால், அறிவு கலங்கியவனாய்த் தன் இருக்கையிலிருந்து சரேலென்று எழுந்தான். ஆனாலும் மறுநிமிஷத்தில் அவ்வுரு, மாறுவேடம் பூண்டுள்ள கமலரேகையின் திருவுரு வென்பதை அவன் இனிதறிந்து கொண்டான்.

“நண்பரே! என்னைப்பார்த்தால் ஓர் அரசிளங்குமரன் போல் இருக்கின்றதன்றோ!” என்று ஆண்வேடம் தரித்த கமலரேகை சிரித்துக் கொண்டே சத்தியசந்தனை நோக்கிக் கேட்டுவிட்டு, “இவ்விதம் வேடம் தரித்துக் கொள்ள வேண்டுவது, நான் செய்யப்போகும் பிரயாணத்திற்கு இன்றியமையாததாகின்றது. இனி, நாம் தாமதித்தல் கூடாது. நண்பரே! எனக்குப் புதுவைக்குக் கடிதம் நீர் எழுதினால், விலாசம் பின்வருமாறு எழுத வேண்டும்:— **‘தேவிசாரதா மேல்பார்த்து கமலாகரனுக்குக் கொடுப்பது; “கலை மகள் நிலயம்”; புதுச்சேரி.’** நான் உமக்குக் கடிதம் எழுதவேண்டுமானால், எந்த விலாஸத்திற்கு எழுதவேண்டும் என்பதைத் தெரிவியும்!” என்று மீண்டும் கூறி உசாவினள்.

“அம்மா! **கமலநாதன், அரக்கு மாளிகை, காஞ்சிபுரம்,** என்னும் விலாசத்திற்கு நீங்கள் எழுதினால், நான் எங்கிருந்தபோதிலும்கடிதங்கள் எனக்குக் கிடைத்துவிடும்” என்று கமலநாதன் கூறினன்.

பிறகு இருவரும், ‘பத்மவிலாஸ’ மாளிகையிலிருந்து புறப்பட்டு வெளியே வந்து சிறிது தூரம் நடந்து சென்று, புரசைவாக்கத்திலேயே ஒரு ஜட்காவை வாடகைக்கு பிடித்துக்கொண்டு அதிலேறிச் சைதாப்பேட்டைக்குச் சென்றார்கள்.

# திருவானைக்காப்
# பதிற்றுப்பத்தந்தாதி
## TIRUVANAIKKA PADIRRUPPATTANTADI

விநாயகர் துதி

### நேரிசை வெண்பா

நந்தார் வயற்றிருவா னைக்காப் பதிற்றுப்பத்
தந்தாதி சொல்ல வருளும்பாற்—சிந்தார்
பணபதிமா லீசனயன் பண்டேத்து மாதிக்
கணபதிமா தண்டைக்கழல்.

சமயாசாரியஸ்தவம்

### எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

வடமொழியிற் றென்மொழியே வலிமைத் தாய
வுலைகாட்ட மறைக்காட்டம் மறையான் மூடுந்
தடமணிக்கோ புரக்கதவத் தாடி றப்பச்
சாத்தப்பைந் தமிழ்ப்பதிகஞ் சாற்றினார்நீட்
படமணிபாப் பணிப்பரமன் றோழனன்பிற்
பரவுமொரு புலியுநெடும் பாம்பு மேத்தத்
திடமணியம் பலநடத்தன் கரத்தாற் றீட்டைந்
திணைக்கோவை சொற்றவன்றாள் சிரமேற் கொள்வாம்.

### அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

கார்கொண்ட கடற்பருகுங் கடமுநிகைக் கமண்டலத்திற் கவினுற் றூர்ந்த
நீர்கொண்ட வொருநதியே யிருநதியா வகந்தழுவ நிலவா னைக்காப்
பேர்கொண்ட பெருநகரி லகிலாண்ட வல்லிதொழப் பெருது மேவுஞ்
சீர்கொண்ட வான்சரணைச் சிந்திப்போர் வினையனைத்துஞ் சிந்திப் போமால் (1)

சிந்திக்க வரமருளுந் திருவானைக் காவடிக டினமு நெஞ்சே
வந்திக்க மலர்க்கரமும் வாழ்த்தபசுந் தமிழ்வாக்கும் வணங்க மெய்யும்
பந்திக்கத் தலையன்பும் பரிந்தளித்து மவன் மலர்த்தாட் பரவா தந்தோ
நிந்திக்க வுடற்குழைக்கு நின்செப்கை விழற்கிறைத்த நீர தன்றே. (2)

நீரோங்கு மடவாலை நிதஞ்சுமப்போ னெனலறத்தன் னிலைமை நீளப்
பாரோங்கு மமுதேசப் பதியினிலங் நீருருவாய்ப் பயிலுங் கொன்றைத்
தாரோங்கு நெடுஞ்சடிலத் தற்பரநின் பொற்பமர்செந் தாட்டுணைக்கே
சீரோங்கு திருத்தொண்டின் றிறனேங்க வருள்க வினை தீர்தற் கின்றே. (3)



தீர்த்தவடி வுற்றிலகுந் தீர்த்தனே செவ்வியதுற் சிலம்பி முன்னா
ளார்த்தசெழு மணிக்கோயி லமுதேசப் பெருமானே யடியா ருள்ளச்
சீர்த்தவிசின் மேவியருள் சிற்பரனே யுனைப்பரவுஞ் சிறிய னேனைப்
போர்த்தமல மிரித்தமலப் புனைகமலப் பதநிழலிற் புகுவிப் பாயே. (4)

ஆயமறை யந்தமளந் தளந்தறியா வமலதிரு வானைக் காவின்
மேயநினைப் பரவிபமுஞ் சிலந்தியுமா மிவற்றொன்று மேலை நற்பே
றேயமற்றென் றிச்சகவாழ் வெய்தவரு ளியதென்சொ லெவ்வு யிர்க்குந்
தாயனையா யுள்ளன்பி லாவெளியே னுணர்ந்துவினை தணக்கு மாறே. (5)

தணக்கருமைங் கணைக்கிழவன் றனைச்சினவும் விகடவிழித் தழற்கொ டென்றன்
கணக்கறுவெம் மலவிருட்கட் டறச்சினவி நின்சீரண கமல நீழன்
மணக்குறுமா றருள்புரிக கோச்செங்க ணன்முன்னர் வணங்கிப் போற்ற
வெணற்கருநின் பதமுத்தி யீந்தொளிர்வெண் ணாவனிழ லிருக்குந் தேவே. (6)

தேவர்மணி முடியிடறுன் றிருவடிப்பேற் றினைவிழையிச் சிறியே னென்று
மூவர்திரு நெறித்தமிழும் முழுமணிவா சகன்முறையு முறையிற் றேறே
னாவலிற்கண் மணிநீறு மணியகிலே னைந்தெழுத்தி னடைவுந் தேரே
னாவலடி யமர்ந்தருளு நாயகனே யெங்ஙனதை நண்ணு கேனே. (7)

நண்ணருமிப் பிறவிவிடி னனுகுவதெப் பிறவிகொலோ நாயி னேற்கென்
றெண்ணிநின தருட்கிடனா வகையுணற்று திளமானி னெழிலேனைக் கன்ன
கண்ணியர்த மிடையகரங் கவின்றிலகுங் கல்வியினிற் களிப்புற் றேற்கும்
புண்ணியர்க டொழுமுனடிப் போதருள்க பிரமேசப் பொருவி லோயே. (8)

பொருதுறுமோர் முநிவனுகர்ந் துமிழ்தரப்பற் பலரென்பிற் புரள்வான் யாற்றி
னொருமுநிகைக் கமண்டலநின் றெழீஇயரன்பூ சனைக்குதவி யுயரும் பொன்னி
மருவுதிரு வானைக்கா வாணவுனைக் கோதமன்போன் மயலுற் றேத்தா
திருவினையை யிரித்துனரு ளீகவென விறைஞ்சுமெனக் கிரங்க னன்றே. (9)

நன்றுமய னிருமிக்கக் கண்டகியுட் படிந்தாழ்ந்து நற்பொன் னிக்க
ணின்றெழுவி மானத்து நின்மலனே யபன்மாலு நேடிக் காணா
வுன்றன்மலர் மலரடிப்பே றுள்ளன்பி லாவெளியே னுறுமா றெங்ங
னென்றணவும் பொழிற்சுலவு மெழிலிலகு ஞான தலத் திருக்குங் கோவே. (10)

### எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

இருக்காதி வேத முடிமீது மன்ப ரிதயால யத்து மூலவா
பெருக்காவை மேவு முநிமேனி வந்த பெருநாவ லத்து மிளிரா
திருக்காலெ னாது சிரமே லிலங்கு திறனானி லத்து றுவனே
லொருக்காலு மாலு மயனாரு மென்று முனும்வாழ் வுறப்பெ றுவனே. (11)

பெறவேவி ரும்பு வரமென்று நின்றாட் பெரும்புண்ட ரீக மிதயத்
துறவேவி ளைந்து நிதமுன் றனிச்சீ ருவந்தன்பி னோடு சிரமேன்
மறவாதி ரண்டு கரமோலி கொண்டு வணங்காவெ னாது வினைவே
றறவேய ருள்க சிறையாரும் வண்ட ரமரும் வெணாவன் மணியே. (12)

மணியாய் மணிக்கு ளொளியாய் மலர்க்குண் மணமா யுரைக்கு ளுரையாய்
குணியாய் குணிக்க வரிதா குநித்த கொலையார் மழுப்ப டையினாய்
பணிசூ டுமெத்த வொருகா வைமுத்த பதிஞா னமெற்க ருளுவாய்
அணியார் விடைக்கொ டியனை மறைக்கு மரியாய் தவத்த ரமுதே (13)

தவஞான மீகை யருளோ டடக்கந் தயை சாந்த மேது மிலனாய்
யவமேகு லாவு மகமே தருக்கி யடியே னுயா தழிவனோ
சிவமேவி சாக சனகா மதர்த்த சிறியேனை யாண்ட ருள்வையே
பவமேவி ராய நெடுமால் பழிச்சு பவனே வெணாவ லமுதே. (14)

அமுதேச ஞான தலவாச தும்பி யகிலாண்ட வல்லி யயன்மால்
குமுதேசன் பானு முநிகோத மன்வண் குறுமாத வத்தன் முதலாஞ்
சமுதாய மான தவரால் வணங்கு தலைவாமி குத்த வவரன்
பிமியேனு மின்றி யிறுமாந் திருக்கு மெளியேனு முய்ய வருளே. (15)

அருளேது மின்றி யன்பேது மின்றி யறமேது மின்றி யறிவின்
தெருளேது மின்றி செந்தாளி றைஞ்சு திறமேது மின்றி மகளிர்

மருளேது வன்றி மனமே கவன்று
வளர்வேனு முன்ற னுயரன்
பருளே யடைந்து னடியே வணங்க
வருள்வாய் வெனுவ னிலையே. (16)

நிலையாத வாழ்வு நிலையாக நாடி
நிதமே யலைந்து திரிவேன்
கலைமாறு சீத மதிசூடி நீடு
கவினார் குடந்தை யரனே
யலையாரு ஞால மிசையேழை யேனு
மருளோடு கின்ற துளதோ
தொலையாத சீர்மை மலிகாவை மேவு
சுடரே வெனுவ லரசே. (17)

அரைசேர் தாக்கி னதளும் புழைக்கை
யதளும் பணங்கொ ளரவுந்
திரைசேர் கடற்க ரளமும் வழுத்திச்
செறியுங் கொடுங்க னலதும்
பரைசே ருடற்கண் பயின்மற் றெனைத்தும்
பணுபுண் ணியங்க ளிதெனு
விரைசே ரறற்றண் டலவிங்கி சைக்கின்
விழைவே னவைக் கெளியனே. (18)

எளியேனி னாது திருமேனி பூப்ப
வெழுநீறு மக்க மணியு
மொளியேவி ராய புவிமீதி லேற்றிங்
குலவாவு டற்பி ணியையுங்
களியேற னாதிப் பவப்பிணியு மோச்சுங்
கடைப்பாடு முன்னி ஞானத்
தளியேவி ளங்கு பவவாண் டருள்க
சரணத் தடுத்த வெனையே. (19)

எனக்கும்மெ னக்கு ளிறையா முனக்கு
மிடையாம் வினைக்கு முளவாம்
பனைக்குந்தி னைக்கு முளவாய பேதப்
பகுப்போர்கி லாக்க யவனேன்
றனக்கிங்க னைத்துந் தெரித்தே மனத்த
சரணீய தென்று புகலாய்
வனக்குங்கு மத்தண் டடமார்பி னாண்முன்
வருகாவை மேவு பொருளே. (20)

## எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

### வேறு

பொழிசுவைக் கனியே பூசனை புரிந்த
புழைக்கையும் மதப்பொருப் பினுக்கே
கழிபெருங் கமலக் கழலிணை யருளிக்
ககனவான் முகட்டினைக் கனுலுஞ்
செழிதரு சினைவெண் ணாவலின் மூலச்
செல்வமே சிறியனே னுருற்றும்
பழிதபுத் தருள்க பலவெணக் கிளைத்துப்
பாவுயா மறைமுதற் பொருளே. (21)

பொருளுடை யவர்க்கப் பொருளினை யுதவல்
புண்ணிய மன்றென லோர்ந்துந்
தெருளுடை யவர்க்கே திருவருட் புரிதல்
சிறப்பதோ திருவெணீ றளித்தீண்
டருளுற வமைத்த வணிவெயிற் காவை
யகிலநா யகிதொழுந் தேவே
மருளுறு மடியேற் குனதருள் வழங்கன்
மாண்பதோ மதித்துத வுகவே. (22)

உதவுவா ருதவும் பொருளினில் வெருப்பு
முன்கழல் பழிச்சுனர் கமலப்
பதயுக ளத்திற் படிந்துக ளதனிற்
பயிறரு விருப்புமீண் டெளியேற்
குதவுறி லஃதென் றனக்குமா லறியா
வுன்பத மளிக்குமான் மணிசெய்
கதவுறு கோயிற் காவையம் பரம
கருத்தநின் கருத்தறி கிலனே. (23)

அறிவரு மறைமே யம்மறைப் பொருளே
யாகமாந் தத்துறுந் தெளிவே
மறிமழு வேந்து மருவளர் மரைக்கை
வள்ளலே மதுகர மார்க்கப்
பறிதரு கொன்றை மலர்மலர் சடிலப்
பண்ணவ நண்ணருங் காவைச்
செறிவுறு மிறையே நின்னடிக் கடிமை
செயவருள் செய்வதெப் பொழுதே. (24)

தேவரு மறியாச் சிவபரஞ் சுடரே
சிருட்டியா தியமுறை பயின்ற
மூவரு மறியா முதல்வனே மூவர்
மொழிதமிழ்ச் சுவையுணர் முடிவே
சேவரு முனது திருவருட் படிவச்
சேவையைக் காவையுட் கண்டேன்
றேவறு மெளியே னுளத்துனை யல்லாற்
சகத்திய லேதுங்காண் கிலனே. (25)

காண்டொரு முள்ளக் களிதுளும் பெளியேன்
கருத்தநின் றுதவுறின் மறிப்பா
ரீண்டெவ ரிளஞ்சேய்க் கறிக்கவாய்ச் சென்று
ளெவருவனை மறித்தவ ரெந்தாய்
சேண்டவழ் சோலைக் காவையங் கோயிற்
றெய்வமா னத்தொளிர் விளக்கே
வேண்டுதல் வேண்டா மையிலா யதனால்
விழைந்தவை விழைந்தவா றருளே. (26)

அருந்தமி ழாரூர்க் கவிஞர்க்கு டளவி
லடியவர்க் கிரந்திடு சோற்று
விருந்தினை யுகவேன் பூந்தராய் வாழ்க
விஞன்மண நாளள விலர்க்குத்
தருந்திரு மணத்துச் சோற்றினை விழையித்
தமியனேற் கருள்செய லென்றே
கருந்தட நெடுங்கட் கௌரிமு னேத்துங்
காவைவாழ் தருபெருந் தகையே. (27)

தகைப்பரு யாபா தகஞ்செய்தண் டீசன்
றனைநிக ரன்பில னேனு
மிகைப்புரி யவன்றன் றந்தைபோல் வன்பின்
மிகுதரு மறிவிலேன் றனக்குந்



திகைப்பற நோக்கித் திருவருள் புரிதல்
செவ்விதே யாமுவந் தருள்க
பகைப்புல னொறுத்த முனிவர்சூழ் காவைப்
பதியமர்ந் திலகுயா பதியே. (28)

பதித்தக முன்றுள் பரவுனர்க் கருளும்
பரமனென் றருமறை பலவும்
விதிப்பவுங் காட்டாய் வேடுவர் கோமான்
விளங்கவும் விரிதிரைப் பொன்னி
நதிப்பெரும் புனல்சூழ் நாவலி னடிக்க
ணண்ணியொண் ணதிமுடி மிலைந்த
பதிப்பொரு ளானுநின் பதமலர்க் கன்பு
படைத்தில னுய்வதெப் படியே. (29)

படியளந் தவனும் பங்கயத் தயனும்
பரமியா மென்றுளத் தருக்கி
னடிமுடி யறியாதகழ்ந்துயர்ந் தெய்ப்ப
வழலுரு வாயவெப் பறவோ
துடியிடை மடவா டுதிப்பநீ ருருவாய்த்
துன்னிய தறிகிலேன் காவைக்
கடியவிழ் கடுக்கைத் தாமவென் மனத்தீக்
கட்டறுத் தாண்டரு ளுவந்தே. (30)

## கலிவிருத்தம்

வந்த னங்கள் வளரு மரைமலர்க்
கந்த மல்குங் கயஞ்செறி காவையுள்
வந்தி றைஞ்சிமுன் வாரணம் பெற்றபே
றெந்த நாளெளி யேற்கெய்து மீசனே. (31)

ஈச னேசுர ரேத்தெழிற் காவையுள்
வாச னேமறை வாழ்த்திப் பரவுறூஉந்
தேச னேநின் றிருப்பதஞ் சிந்திக்கும்
நேச னேற்கருள் வாய்சிவ நிட்டையே. (32)

நிட்டை யுற்ற நிலைச்சித்த ஞானிநீ
றிட்ட மைத்த வெயிலெழிற் காவுளா
யட்ட சித்திமு னூற்றிய துண்மையே
விட்ட சித்தி யெனக்கரு ளெந்தையே. (33)

எந்தை நின்கழற் கும்மினி தேத்துறூஉ
மந்த மேவு மகிலாண்ட வல்லிக்குஞ்
சந்த மாலை தமிழினிற் சாற்றுநற்
சிந்தை தந்து தினந்தொழச் செய்கவே. (34)

வைய மூர்தா வாழ்வதி லென்பய
னைய னேகயா ரண்ணியத் தண்ணலே
மெய்ய னேயுன் விரைமலர்த் தாடொழச்
செய்ய வேகட னிச்சிறி யேனையே. (35)

சிறிய னேன்பிழை சித்தத் தடக்கியைம்
பொறிய வித்துனைப் போற்றுநர் நாடுநன்
னெறிய ளித்தெனை நித்தமுங் காத்தரு
ணறிய பூம்பொழின் ஞான தலத்தனே. (36)

தலங்க ளெந்திற் சலத்தல நாதனே
சிலந்தி முன்னருச் சிக்கமன் னாக்கிய
நலங்கண் டுன்னரு ணண்ணப் பரவுமென்
மலங்க ளைந்தெனை வாழ்விக்க வேண்டுமே. (37)

வேண்டு நின்னடித் தொண்டும் விழைகுநர்க்
கீண்டொன் றில்லென் றிடாவகை யீதலு
மீண்டி வண்பிற வாமெய்ப் பதவியுங்
காண்ட குஞ்சீர்க் கயாரணி யத்தனே. (38)

அத்த நின்கழற் கன்புடை யாரெலாம்
பத்தி யோடுனைப் பாடலு ணர்ந்திழி
பித்த னேனும் பிதற்றுரை கேட்டரு
ணத்து லாம்வய லூவற் பதியனே. (39)

பதிய தாகினைப் பாடவு நான்மறை
மதியி லாமன் மறந்தவெற் கிங்கருள்
வதியு மாலயன் மற்றுள தேவருங்
கதிபெ றப்பணி காவையுள் வாசனே. (40)

## அறுசீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்

வாசந் தருகற் பகவாசன்
மருவும் பிரமச் சாயையற
நேசம் பெறவர் பொடுமூழ்கு
நிரைவண் டலறநற் றடமூழ்கிப்
பாசந் தெறவுற் றியல்வேனுன்
பதவொண் கமலத் தார்வேனே
தேசம் பரவத் திகழ்காவைச்
செழுமா நகரத் தமர்வானே. (41)

வானா ரனல்கான் மண்ணீரான்
மாமதி யென்று மெண்வகையு
மானா யலரா னன்னீரி
னூடியை யம்பான் றொடுமெம்பின்
மானார் மயலா னொந்தாழ்வேன்
மால திரிந்துன் வரியவரியார்
தேனார் மலர்மாண் செந்தாளிற்
சேர்தர லென்றமு தப்பரனே. (42)

பரனே பரமார்த் தம்வினவும்
பதியே நிதியே படர்கங்கா
தரனே வியனார் விண்டருவின்
றகைதேர் பொழிலாற் றருகாவை
யரனே யலர்பா தம்விழையு
மவர்தா மறியாரோ முன்சந்
திரனே படியா வம்புனலின்
செழுநீர்த் திவலைப் பெருமையையே. (43)

மையார் கண்டத் திறையோனே
மலையான் மணக்கு மணவாளா
வையா வுன்ற னருளுறுதற்
சறமென் றவமே னருச்சனையே
னெய்யா திங்கக் கதிரவன்மு
னெண்ணியே முழுகாத் தடமுழுகி
மொய்யார் பொழிற்கா வைமருவும்
முதல்வா வெனிலோ பெறலாமே. (44)

K. V. சுப்பய்யா அய்யர், எம். ஏ., எல். டி.

# தாரணீபதி அல்லது தந்திரபாலன்

## DHARANIPATHI or THE BOY DETECTIVE

### மூன்றும் அத்தியாயம்

### நன்றி மறவேல்

இரவு சுமார் எட்டுமணி இருக்கும். வீதிகளில் உள்ள லாந்தர்களெல்லாம் மின்மினிப் பூச்சியோ என்று சொல்லும்படி பளிச் பளிச்சென்று ஒளிவீசிக்கொண்டிருந்தன. விளக்குஸ்தம்பங்கள் உள்ள இடங்கள் தவிர மற்றெங்கும் ஒரே இருள் சவிந்துகொண்டிருந்தது. இத்தகைய இரவில் சென்னையில் அதிக சந்தடி யில்லாத ஓர் தெருவில் ஓர் மாடிவீட்டின் கதவை யாரோ இடித்தார்கள். சற்று நேரத்திற்குள் கதவும் திறக்கப்பட்டது. ஒரு வாலிபனும் சிறுமி யொருத்தியும் உள் நுழைந்தார்கள். உள் கூடத்தில் உள்ள ஊஞ்சலின் மீது நடுத்தரமான உயரமும், பருத்துள்ள தேகமும், பார்க்கப் பயங்கரமான கண்களும் செம்பட்டை மயிரும் கோரமான பற்களும் ஆகிய இத்தகைய கோலம் பொருந்திய ஸ்திரீ உட்கார்ந்திருப்பதைக் கண்டார்கள். அப்படி வீற்றிருந்தவள்,

"வந்தாயா அம்மா, நீலா, வீரவர்மர் எங்கே?"

"அத்தை, நான் என்ன சொல்லட்டும். அவர் வண்டி விபத்தில் அகப்பட்டுக்கொண்டார்."

"என்ன ரொம்ப காயம் பட்டதோ?"

"அப்பப்பா—அவர் அப்படியே நசுங்கிப்போய் விட்டார். இவருடைய புண்யத்தினால் தான் நானாவது பிழைத்து வந்தேன்." என்று தாரணீபதியைக் காட்டினாள் அத்தை கல்யாணிக்கு.

கல்யாணிக்குச் சொல்ல முடியாத துக்கம் வந்துவிட்டது. ஆனாலும் தன் விசனத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு தாரணீபதியைப்பற்றி எல்லாம் கேட்டு பிறகு அவனை நீலாம்பாள் எதிர்பார்க்கக்கூடாத அவ்வளவு ஒழுங்காய் உபசரிக்கத் தொடங்கினாள். "பாவம், ரொம்ப அலைச்சலாயிருக்கும் உங்களுக்கு. சாதம் போடச் சொல்கிறேன். சாப்பிட்டுவிட்டுச் சற்று நன்றாய்த் தூங்குங்கள்" என்று சொல்லி பரிசாரகனைக் கூப்பிட்டு இருவருக்கும் அன்னமிடச் சொன்னாள். போஜனம் பண்ணும்போது நீலாம்பாள் கல்யாணியிடம் தாரணீபதியின் செயல்களைப் பற்றியும் அவன் குணங்களைப் பற்றியும் புகழ ஆரம்பித்தாள்.

சாப்பிட்டான பிறகு நீலாம்பாள் தானே தாரணீபதியை அவன் படுத்துக்கொள்ள வேண்டிய அறைக்கு அழைத்துப் போனாள். கல்யாணிக்கு நீலாம்பாளின் நடத்தை அருவருப்பை யுண்டாக்கிற்று. ஆனாலும் தன்னை ஒருவாறு அடக்கிக் கொண்டு "மூன்றுமாடி முன்னறைக்குக் கொண்டுபோய் விடு" என்றாள். நீலாம்பாள், "வேண்டாம், வேண்டாம்" கச்சேரி உள்ளுக்கு அடுத்த அறையில் தாரணீ படுத்துக் கொள்ளட்டும்" என்றாள்.

அப்படியே அழைத்துக் கொண்டு போனாள். அங்கு மேஜையின் மீது ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பக்கத்தில் ஒரு சித்திரப்படப் புத்தகமும் இருந்தது. தாரணீபதி அதைத் திறந்து பார்த்தான். அதில் நீலாம்பாளின் உருவப் புகைப்படமொன்றைக் கண்டான். "நீலா, உன் ஞாபகமிருக்கும்படி இந்த புகைப் படத்தை நான் எடுத்துக் கொள்ளட்டுமா?" "வேண்டாம், நாளைய தினம் நல்ல படம் ஒன்று தருகிறேன். கொஞ்சம் படுத்துத் தூங்கு" என்று சொல்லி மெத்தையைத் தட்டிப் போட்டுவிட்டு விளக்கொளியையும் சிறியதாக்கிவிட்டு வெளியில் வந்து சேர்ந்தாள்.

தாரணீபதிக்குச்சற்றுவது மனவமைதி கிடையாது. கல்யாணி படுப்பதற்கு ஓர் அறை சொல்லியிருக்க, நீலாம்பாள் வேறோர் அறைக்குத் தன்னைக் கொண்டு வந்ததற்கு என்ன காரணம் இருக்கவேண்டும் என்று ஆலோசிக்கலானான்.

தாரணீபதியை படுக்கச் சொல்லிவிட்டு நீலாம்பாள் வெளியில் வந்தாளோ இல்லையோ வீட்டின் கதவை வெகு மும்முரமாய் யாரோ தட்டுவதாகத் தெரிந்தது, அவள் அப்படியே நின்றுவிட்டாள். இந்நேரத்தில் வீட்டிற்கு வருவது யாராயிருக்கலாம் என நினைத்தாள். சற்று நேரத்திற்கெல்லாம் கீழே தியாகராஜனும் கல்யாணியும் ஏதோ பேசிக்கொண்டிருப்பதாக அறிந்தாள். தன்னைப்பற்றியும் தாரணீபதியைப் பற்றியும் பேசுவதாகவும் தெரியவந்தது.

புகைவண்டி விபத்து நேரிட்ட இடத்தில் தாரணீபதியின் செயல்களை யெல்லாம் தியாகராஜன் கல்யாணிக்கு எடுத்துரைத்து "கல்யாணி, அந்தப் பயலை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும். மகா துஷ்டன். நம் நடவடிக்கைகளை யெல்லாம் பகிரங்கப் படுத்திவிடுவான்? என்ன சொல்கிறாய்?" என்று மிக்க ஆனந்த மடைந்தவனாய்க் கேட்டான்.

கல்யாணி "அப்பா, தியாகு, நான் அதற்கு ஒப்ப மாட்டேன். அவன் இந்த வீட்டிற்கு விருந்தினனாய் வந்திருக்க, அவனைத் தொலைத்துவிட வழிதேடுகிறதா? இதுகொஞ்சமாவது நமக்கடுக்காது" என்று பதிலுரைத்தாள்.

நீலாம்பாள் தனக்குள், "அத்தை, அப்படிச்சொல். வீணாய் அபவாதம் தேடிக்கொள்ளவேண்டாம். அடே, த்யாகு, தாரணியின் மீது அப்படி உன் கைபடட்டும், நீ என்ன பாடுபடுவா யென்பது ஞாபக மிருக்கட்டும்" என்றாள்.

படுக்கையில் தூக்கம் சற்றேனு மில்லாத தாரணீபதியோ தன்னறையில் ஏதோ காலடிசப்தத்தைக்கேட்டுத் திடுக்கிட்டெழுந்தான். தன் தலையணையடியில் வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து யார்வந்து தன்னை யெதிர்த்த போதிலும் காத்துக் கொள்வதையும் தவிர அங்ஙனம் வருபவர்களையே தான் எதிர்க்கும் நிலையிலும் நின்றுவிட்டான். ஆயினும் விளக்குச் சற்று மங்கலான வொளியையேனும் வீசியதால் தன்னைநோக்கி வருவது ஓரழகிய பெண்மணியினுருவமெனத் தெளிந்தான்! "நீலா,—இப்பொழுதுதான் வெளியே போனாயே, என்ன சங்கதி? சந்தடி செய்யாமல் பூனைபோல் வருகிறாய். யாரோ எனக்குத் தீங்கிழைக்க வருகிறார்களென்றல்லவா நினைத்தேன். நல்ல காலம்! விளக்கு அழுது கொண்டாவது எரிகின்றது" என்று பரபரப்புடன் பேசவாரம்பித்தான் தாரணீ.



நீலாம்பாவோ தாரணீபதிஅருகில்வந்து ரஹஸ்யமாய் "தாரணீ, த்யாகராஜன் வந்திருக்கிறான். கல்யாணியுடன் உனக்கு விரோதமாய்ப் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு உன்னிடம் தெரிவிக்கலாமென வந்தேன். எதற்கும் நானிருக்கிறேன். பயப்படவேண்டியதில்லை இந்த வீட்டிலிருக்கிறவரையில். கல்யாணி அத்தையும் அப்படிப்பட்ட மனுஷியல்ல" என்று சொல்லிவிட்டு தன் உருவமமைந்துள்ள ஓரழகிய சித்திரத்தை அவன் கையில் கொடுத்தாள். அச்சித்திரத்திற்கு சட்டம் வெகுஅழகாய்ப் பொருந்தியிருந்தது. தான் கேட்டதை மனதில் வைத்துக் கொண்டு படம் கிடைத்ததும் கொண்டு வந்து கொடுத்தாளென்று அவளிடத்தில் மிக்க அன்பு செலுத்தலானான்.

நீலாம்பாள் அறையைவிட்டு நீங்கினதும் தாரணீபதி மறுபடியும் படுத்தவண்ணமாய் பற்பலயோசனைகளில் ஆழலானான். நீலாவின் வீரதீரகுணங்களைப் பற்றியும்,அவளுக்கு நேர்ந்த ஆபத்துக்களைப் பற்றியும், அவளிருக்கும் இடத்தைப் பற்றியும், அவள் எத்தகை யசங்கத்தில் பழகி வருகிறாள் என்பதைப் பற்றியும் கருதலானான். இப்படி எண்ணி வந்தவன் மனதில் தன் வசமிருக்கும் கச்சையின் ஞாபகம் வந்தது. உடனே படுக்கையினின்றும் குதித் தெழுந்து மேஜையின் மீது வைத்துள்ள தன் கைப்பெட்டியைத் திறந்து கச்சையை எடுத்து பரிசீலனை செய்ய ஆரம்பித்தான். அதில் அமைந்துள்ள பையில் ஓர் தடித்த கடிதத்தில் பின்வருமாறு வரையப் பட்டிருந்தது.

() துவறன்ழ

விசா ழ்கீடிப

தைாகிக்ஜா

"இம்மாதிரி ஒருவர் பெயரையாவது இடத்தின் பெயரையாவது நான் கேள்விப்பட்டதில்லையே! ஒருவேளை ஏதாவது புது தபாலாபீஸாயிருக்குமோ? அட! என்ன விந்தையான பெயர்! இது என்ன இடது கைப்புறத்தில் பெரிய சுன்னம் ஒன்றிருக்கிறதே! இதற்கு என்ன அர்த்தம்.—ஓஹோஹோ, இது எச்தா மறை பொருளையுடைய கடிதமாயிருக்கிறது. ரஹஸ்யார்த்தங்களையுடைய கடிதங்கள் எழுதும் மனுஷ்யர்கள் இவ்வீட்டில் குடியிருக்கிறார்கள் போலிருக்கிறது. எதற்கும் நாம் இதை இப்படியே குறிப்புப்புத்தகத்தில் பதியவைத்துக் கொள்வோம். பின்னால் ஒருக்கால் உபயோகப்படலாம்" என்று இவ்வாறு பேசிக்கொண்டே அவ்விநோத விலாஸத்தைப் பதிவு செய்துகொண்டான். இரவெல்லாம் அவனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. பலவித ஸ்வப்னங்களால் அவன் மனது அலைக்கழிக்கப்பட்டிருந்தது.

உதயமாயிற்று. நீலாம்பாள் தாரணீபதியிருக்கும் அறைக்கதவைத் தட்டினாள். தாரணீ உடனே எழுந்து வந்து கதவைத்திறக்க, நீலா: "சீக்கிரம் பல் தேய்த்துவிட்டு வந்தால் காப்பி சாப்பிடலாமே" என "இதோ வந்து விட்டேன்" என்று அங்கு மாடியின்மேலேயே வைத்துள்ள குழாய்க்குச் சென்று தந்த சுத்தி செய்து கொண்டான். அப்பொழுதுதான் அவ்வீட்டின் அமைப்பு, அந்தஸ்து முதலானவைகளைக் கவனிக்க நேர்ந்தது. வெகு விசாலமான வீடு. சாதாரணமாய் நான்கு பெரிய தனிவீடுகளாகப் பிரித்துக் கட்டமுடியும். தான் இருந்த மாடியினின்றும் அவ்வீட்டின் பின்புறத்தில் நீளமாக ஒரே வரிசையில் சற்றுத்தாழ்வான மாடியுடன் ஏகாண்டமான கட்டடமாயிருந்தது. இவைகளுக்கப்பால் விசாலமான முற்றமொன்றும், அம்முற்றத்தினின்று அடுத்த சிறு வீதிக்குப் போவதிற்கு ஒரு அகன்ற வாயிலும், அதற்குக் கிராதிபோட்ட இருப்புக்கதவும் அமைந்திருந்தன. தானிருந்த மாடியிலுள்ள ஜன்னலிலிருந்து ஒருவன் யாதொரு காயமும் அடையாமல்குதித்து அடிமாடிகளின் வழியாய்ப் போகலாமென்பதையும் தாரணீபதி யறிந்தான். தவிர பகல் வேளை ஊரொலியுடன் கலந்ததாய் அக்கட்டடத்தின் பின்பாகத்திலிருந்து மெஷீன்கள் வேலைசெய்யும் போது உண்டாகும் சப்தம் போன்று, டிங், டிங், டாங், டாங், என்னும் ஒலியையும் கேட்டு "ஆம், ஆம், நாம் போலி நாணயங்கள் செய்யும் அயோக்யர்கையில் சிக்கியுள்ளோம்.—ஹூம்! தாரணீ, பயப்படாதே,தைரியத்தை விட்டுவிடாதே" என்று சொல்லிக்கொண்டான்.

தான் படுத்திருந்த அறைக்கு வந்தான். காப்பி வைக்கப்பட்டிருந்தது. நீலாம்பாள் கொண்டுவந்த பக்ஷணங்களைத் தின்று காப்பியை யருந்திவிட்டு தன் உடுப்புகளைத் தரித்துக்கொள்ள, நீலாம்பாள் அவன் வசமிருக்கும் இறந்த வீரவர்மருடைய சொத்துக்களைக் கல்யாணியிடம் கொடுத்துவிடச் சொன்னாள்.

தாரணீபதி படுத்திருந்த மாடியிலேயே வேறோர் அறை. வெகு அழகான சித்திரங்கள் அமைந்து பார்ப்போர் கண்ணை வசீகரித்தது. இரண்டொருகண்ணாடி யலமாரிகள் மாத்திரமே அங்கிருந்தன. அறையின் நடுவே ஓர் வட்ட மேசையும் அதன் பக்கத்தில் இரண்டு சிறு நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. அறையின் ஓர் மூலையில் ஒரு சிறு மேடையொன்று காணப்பட்டது. இவ்வறையில் இருவர் உட்கார்ந்து ரகஸ்யமாய்ப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தாரணீபதியும் நீலாம்பாவும் வந்து சேர்ந்தார்கள். கல்யாணி தான் உட்கார்ந்திருந்த நாற்காலியினின்றும் எழுந்து தாரணீபதியை அதில் அமரச்செய்தாள். பிறகு அவள் அங்கு உட்கார்ந்திருந்தவரை தாரணீபதிக்கு அறிமுகம் செய்வித்தாள்.

"ஆஹா, இவரை எனக்குமுன்னமேயே தெரியுமே தியாகராஜரை நான் ஏற்கனவே கண்டிருக்கிறேன்."

"சரி, அவரும் உன்னைப் புகழ்ந்து பேசினார் என்னிடம். ஆனாலும் இனி நீங்கள் நேசத்துட

னிருக்கவேண்டும்.—நம் காரியத்தைப் பார்ப்போம். வீரசர்மருடைய சாமான்கள் உம்முடமிருக்கின்றனவாமே! அவை எங்கே?’

“இதோ” என்று எல்லாவற்றையும் ஒன்றொன்றாய் எடுத்து வைத்தான்.

“தரணீபதி! அவைகள் எல்லாம் அப்படியேயிருக்கின்றனவோ?”

“ஆஹா, அவை இறந்து போனவரிடம் எப்படியிருந்தனவோ, அப்படியே யிருக்கின்றன.”

“சரி, நீ கொடுக்கும் சொத்துக்களின் ஜாப்தாவை எழுதி கையெழுத்துப் போட்டுக்கொடு” என்று சொல்லிச் சற்றுப் பின்னிடைந்தாள்.

தரணீபதி மேசைக்குச் சமீபத்தில் நாற்காலியை இழுத்து எழுதப் போனான். தியாகராஜன் மூலையில் வைத்திருந்த தன் பிரம்பை எடுத்துவரப்போனவன் போல் சென்றான். நீலாம்பாள் சித்திரப்படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாளாதலால் அங்குநடப்பதைச் சற்றேனும் கவனிக்கவில்லை.

ஆஹா, என்ன ஆச்சர்யம்! என்ன மோசம்! இப்படியுமுண்டோ! தரணீ உட்கார்ந்திருந்த இடத்தில் ஓர் பொறிக்கதவு இருந்தது போலும்! தரணீ நாற்காலியுடன் மறைந்துவிட்டான் ஒரு நொடியில்! கல்யாணியும் தியாகராஜனும் யாதொரு ஆச்சர்யமுமடையாதவர்களாய் ‘தொலைந்தது சனி’ என்று சாவதானமாய்த் தங்கள் வேலையைப்பார்க்கத் தொடங்கினார்கள். நீலாம்பாளோ திக்பிரமையடைந்தவளாய் அலையத் தலைப்பட்டாள். கல்யாணி “நீலா, போய் உன் சொந்த வேலையைக்கவனி. வீணாகத் திரிந்து உடம்பைக் கெடுத்துக்கொள்ளாதே” என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

எல்லாரும் தத்தம் வேலையை கவனித்துக் கொண்டிருந்தார்கள். மணி பன்னிரண்டாயிற்று. தியாகராஜன் மாடியில் வருவதை நீலா கவனித்துக்கொண்டிருந்தாள். காலையில் எல்லாருமிருந்து தரணீபதியை வரவேற்ற அறைக்குள் நுழைந்தான். கதவு ஜன்னல்களெல்லாம் திடீரென மூடப்பட்டன. சில நிமிஷங்களுக்கெல்லாம் ஓர் குண்டு சப்தம் மாடியை அதிரச் செய்தது. என்ன அதிசயம் இது! தியாகராஜன் உள்ளே என்னசெய்கிறான். நாம் ஒருவருக்குந் தெரியாமல் எல்லாவற்றையும் கவனிப்போம். தரணீபதி விழுந்த பொறிக்கதவு திறக்கப்பட்டிருக்கிறது. தியாகராஜன் முழுந்தாளிட்டு குகைபோன்றிருக்கும் அடிச்சுரங்க அறையில் உற்றுக் குறிபார்க்கிறான். அவன் முகம் கொலைகாரனதுபோல் துலங்குகிறது. கையில் துப்பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறான். ‘படீர்’ என்ற சப்தத்திற்குக் காரணத்தையறிந்து கொண்டோம். இருட்டறையில் யாதொரு அரவத்தையும் காணோம். அவ்வறையில் உள்ள ஓர் லாந்தரை ஏத்தி ஓர் கயிற்றில் கட்டி முழுந்தாளிட்டவண்ணமாய் இருட்டறைக்குள் விட்டு இங்கும் அங்கும் பார்க்கிறான் ஆ! என்னவிநோதம்! யாரோ மெதுவாய்ப் பின் பக்கத்தில் வந்து அவனை பொறியின் வாயிலாக இருட்டறையுள் தள்ளிவிட்டார்களே! பொறிக் கதவும் மூடிக்கொண்டு விட்டதே!

ஆ! இதோ அவ்வறைக்குள்ளேயே தியாகனைத் தேடிவரும் ஸ்திரீயார்? அவள் அறைக்குள் நுழையும்போது அங்கு ஒருவரும் தென்படவில்லையே! எல்லாம் அமைதியாய்த்தானே இருக்கின்றது! மூலைக்குப் போய் பொறிக்கதவைத்திறக்கும் ஆணியைத் திருப்புகிறாள்! கதவுதிறந்து கொண்டது! “ஹே, தியாகா எங்கேயிருக்கிறாய்? என்ன பண்ணுகிறாய்? நான் சொன்ன வார்த்தையைச் சற்றுச் செவிகொடுத்துக் கேளேன். வீணாகக் கொலை செய்யவேண்டாம்.

“கல்யாணீ, இங்கு அந்தப் பயலைக்காணோம்! அந்த நீலிப்பெண் எங்கே? அவளை விட்டு விடாதே. முதலிலே எனக்கு மேலேறிவர கயிறு கொஞ்சம் கொண்டுவா! அந்தக்குரங்கு என்னை எப்படியோ திடீரென்று இதில் தள்ளி விட்டது” என்று முடிப்பதற்கு முன்னே, “ஆமாம், அத்தை, நீயும்கூட கொஞ்சம் அவனுக்குத் துணையிரு” என்று சொல்லிக்கொண்டே நீலாம்பாள் கல்யாணியையும் இருட்டறையில் தள்ளிவிட்டாள்.

“அப்படியா, எவ்வளவு சொல்லியும் உங்களுக்குப் புத்தியில்லையா? வேடிக்கையைச் சற்றுப் பாருங்கள். தீவைத்துக் கொளுத்துகிறேன்.—பாபம் தரணீ எக்கதியாயினனோ” என்று சொல்லிக்கொண்டே போய் விட்டாள். பொறிக்கதவும் மூடிக் கொண்டது.

ஒருமணிநேரத்திற்குள்ளே வீடு தீபிடித்துக்கொண்டது என்று ஜனங்களும் போலீஸ் சேவகர்களும் வந்து நிறைந்தார்கள். வீட்டின் பின் புறத்தில் யாது காரணம் பற்றியோ இருபது போலீஸ் சேவகர்கள் வந்து வரிசையாக நிற்கிறார்கள். தரணீபதி என்னவாயினனோ ஒருவருக்கும் தெரியவில்லை.

---

**கறிகாய்.**—தாவர வஸ்துக்களில் கத்திரிக்காய், வெண்டைக்காய், அவரைக்காய் ஆகியவைகளிலேயே போஷணை சக்தி அதிகம் உண்டு. வெள்ளரிக்காய், பூசணிக்காய் முதலானவைகட்குப் போஷணை சக்தி சிறிதேனும் இல்லை. வாழைக்காய் மிகவும் உபயோகமான பதார்த்தம். இதிலே போஷணை சக்தி அவ்வளவு அதிகம் இல்லாவிடினும், பசை(Starch) மதுரம் (Sugar) முதலானவை அடங்கியிருக்கின்றன. வாதுமை, முந்திரி இவைகளின் பருப்பில் போஷணைசக்தி அதிகம் காணப்படுகின்றது. கிழங்கு வகைகளுள் சேனை என்னும் காராக்கருணை, கருணைக்கிழங்கு, உருளைக்கிழங்கு இவைகள் மிகவும் விசேஷமானவைகள். கருணைக்கிழங்கு மூல ரோகங்களைச் சாந்தி செய்யும் சக்தியுள்ளது. உருளைக்கிழங்கு மிகவும் போஷணை சக்தியையுடைய நல்ல வஸ்து. இது அதிகப்பற்றாய் சீதளமுள்ள தேசங்களில் உண்டாகின்றது.



# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

### ஆத்திசூடி விளக்கம்

### 36. குணமது கைவிடேல்

எங்கு நற்குணம் காணப்படினும், அதை அலக்ஷியமாக விட்டுவிடலாகாது: அதைக் கவனித்து அதனால் நாம் நல்ல நிலையை அடைவதற்கு வேண்டியபடி முயற்சிக்கவேண்டும்: என்பது இதன் பொதுப் பொருள். இதை ஆழ்ந்துநோக்கினால் மூன்றுவிதமான பொருள் வெளியாகும். அவையாவன:—

(1) எந்த வஸ்துவிலுள்ள குணத்தையும் கண்டு அதைத் தகுந்தபடி உபயோகப்படுத்திக்கொள்ளத் தயாராக விருக்கவேண்டும். (2) எந்த மனிதனிடத்திலும்உள்ள குணபாகத்தைக் கண்டுணர்ந்து அவனையும் அலட்சியம் செய்யாதிருக்கவேண்டும். (3) நற்குண நற்செய்கைகளை எப்பொழுதும் கைசோரவிட்டு ஓய்ந்திருக்க எண்ணவேகூடாது, என்பவைகளே. மேலும் இந்த சூத்திரத்தையும், இதற்கு முந்தியதான கீழ்மையகற்று என்ற ஸூத்திரத்தைப் பொருத்தியே ஒரு பொருளைக் கைக்கொள்ளவேண்டும்.

(1) **வஸ்துக்களின் குணத்தைக் கைசோரவிடாதே**:—உலகில் உள்ள வஸ்துக்களில் எல்லாம், குணதோஷங்கள் கலந்தே காணப்படும். இன்னும் ஆழ்ந்துநோக்கில் ஈச்வர ஸ்ருஷ்டி என்று வகுக்கப்படும் வெளிப்பிரபஞ்ச வஸ்துக்கள் எல்லாம் பொதுவாகவே இருக்கும். அவைகளைக்குணமுடைய வஸ்துக்கள் என்றும், தோஷமுடைய வஸ்துக்கள் என்றும் பகுக்கமுடியாது. நாம் அவைகளை உபயோகிக்கும் மாதிரியைப் பொருத்தது அவைகள் குண முடையனவாகவாவது அல்லது தோஷமுடையனவாகவாவது காணப்படுவது. உதாரணமாக நெருப்பை எடுத்துக்கொள்ளுவோம். சமயல் முதலியவைகளில் பார்க்குங்கால் நெருப்புகுணமுடையதாகவே காணப்படும். கையைச்சுட்டு விடுதல் அல்லது வஸ்துக்களை எரித்துச் சாம்பலாக்குவது இந்தத் தருணங்களில் நெருப்பு தோஷமுடையதாகக்காணப்படும். விஷம் அதிகமாகி விட்டால் ஆளைக்கொன்று தோஷமுடையதாகவும், ஒரு அளவுக்கு உட்பட்டு நிற்குங்கால் சிலவியாதிகளை நீக்கும் குணமுடையதாகவும் காணப்படும். சாப்பாடு அளவுக்குள் ளிருந்தால் குணமுடையதாகவும் அளவுக்கு மிஞ்சினால் அதுவே மரண காரணமாகும் தோஷமுடையதாகவும் இருக்கும். அளவிற்கு மிஞ்சினால் அமிருதமும் நஞ்சு: அளவிற்குட் பட்டிருப்பின் நஞ்சும் அமிர்தமாகும்: சிறு துரும்பும் பற்குத்த உதவும்: பெரிய தொகையும் ஸமயத்திற்கு உபயோகப்படாமல் போய்விடலாம். ஒரு வஸ்துவே ஒருவனுக்குக் குணமுடையதாகக் காணப்படும் தருணத்தில் வேறொருவனுக்கு தோஷமுடையதாகக் காணப்படலாம். இம்மாதிரியான விசித்திரங்கள் இவ்வுலகில் இருப்பதால், உலகில் உள்ளவஸ்துக்கள் ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு குணமிருக்கும்: அதைக்கண்டு அதை உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டுமே ஒழிய அதை அலக்ஷயம் செய்துவிடலாகாது என்பதாகும் இந்த ஸூத்திரத்தின் முதற் பொருள்.

இப்படி இருப்பினும் கீழ்மையகற்று என்பதை இந்தப்பொருளோடு எப்படிப் பொருத்துவது? இந்த இரண்டு ஸூத்திரத்தையும் பார்த்தால் பொதுவாகக் குணமுடையது தோஷமுடையது எனஉலகில் விஷயங்கள் பாகுபாடுடையதாகவேண்டும் என்றும் அதில் குணமுடையதைக் கைவிடலாகாது தோஷமுடையதை அகற்றவேண்டும் என்றும் வெளியாகிறதே. ஆகவே இந்தப் பாகுபாட்டின் ஆதாரத்தை திருக்குறள் பின்வருமாறு விளக்குகிறது.

> குணநாடி குற்றமுநாடி யவற்றுள்
> மிகைநாடி மிக்ககொளல்.

உலகிலுள்ள வஸ்துக்களில் எல்லாம் குணதோஷம் கலந்திருப்பினும் எது அதிகமாக உள்ளதோ அதன் வகுப்பில் அவைகளைச் சேர்த்து, இவ்விருஸூத்திரங்களின்படி நடக்கவேண்டும் என்றாச்சுது. இப்படிப் பகுத்து நடந்துவருங்கால் குணமுடையவைகளைப் பற்றிப் பழகியும், தோஷமுடையவைகளை ஸாதாரணமாக அகற்றிவைத்து அவைகள் குணமும் உபயோகப்படுங்கால் அவைகளை வெகு கவனத்துடன்பற்றிக் காரியம் முடிந்ததும் தயங்காது அவைகளை ஒதுக்கியும் நிறுத்திப்பழகி வரவேண்டும் என்பதே இவ்விருஸூத்திரங்களிலிருந்தும் வெளியாகும் பிண்டப் பொருள். குணமுடைய வஸ்துக்களை எப்பொழுதும் அலக்ஷியமாக விட்டுவிடாது பற்றியே நிற்கவேண்டும் என்பதும் இந்த ஸூத்திரத்தின் கருத்துத்தான். தத்கால நாகரீக முயற்சிகள் எல்லாம், வஸ்துக்கள் எல்லாவற்றிலுமிருந்து நமது தேஹஸுகத்திற்கு வேண்டியவைகளை எளிதில் பிரித்தெடுத்து, அவைகளிலிருந்து ஏற்படக்கூடிய துக்கங்களுக்கு ஆளாகாதிருக்கச் செய்யப்படும் முயற்சிகளே.

(2) **மனிதர்களை குணத்தைக் கண்டுமதிக்கவேண்டும், தோஷத்தைக் கண்டு தூஷிக்கலாகாது** என்ற இரண்டாம் பொருளை எடுத்துக்கொள்வோம். முற்கூறிய வஸ்துக்கள் விஷயத்திற்கும் மனிதர்கள் விஷயத்திற்கும் மிகுந்தபேதம் உண்டு. வஸ்துக்கள் எல்லாம் ஈச்வர ஸ்ருஷ்டியாதலால் எல்லோருக்கும் பொது; நல்லவையு மல்ல கெட்டவையுமல்ல. மனிதர்களோ தமது ஜீவஸ்ருஷ்டி களாகிய காமக்ரோதாதி கடுங்குணங்களையும், பக்திச்ரத்தையாதி நற்குணங்களையும் உடையவராயிருப்பர். இவர்கள் விஷயத்தில் இந்த ஸூத்திரம், வஸ்துக்கள் விஷயத்தில் அமைவது போல அமைந்து நிற்காது. இந்த விஷயத்தில் இந்த ஸூத்திரத்தை ஒருவாறுதான் பொருத்தலாமே ஒழிய முற்றிலும் பொருத்தமுடியாது. இதுபற்றியே இந்தஸூத்திரப்பொருள் வஸ்துக்கள் விஷயமானதே

ஒழிய பாப புண்ய சிந்தை கலந்து பின்னிக்கிடக்கும் மனமுடைய மானிடர்கள் விஷயமானதல்லவென்பது பெரியோர்கள் அபிப்பிராயம். இந்த எச்சரிக்கையின் கருத்தை நன்கு கவனியாது தத்காலத்தவர் மானிடர்கள் விஷயத்தில் இந்த ஸூத்திரத்தை முற்றிலும் பொருத்திக்கொண்டு குதர்க்க நிலைகளை அடைந்து அதோகதிக்கு ஆளாகின்றனர். குணம் குற்றம் என்ற பாகுபாடு மானிடர்கள் விஷயத்தில் அதிகமாக உண்டு. தோஷமுடைய வஸ்துக்களின் குணத்தை சிலஸமயங்களில்பற்றலாம் என்று முன்னர் கூறினோம். அதுபோல தோஷமுடையவர்கள் குணத்தை எப்பொழுதும் பற்றவே கூடாது. அப்படிப் பற்றத் தொடங்கினால், அவர்கள் தோஷங்களைப் பக்ஷபாதத்தால் ஸஹிக்கும் தன்மை ஏற்பட்டு நாமும் அந்த தோஷத்திற்காளாகி விடலாம். இந்த அபாயம் வஸ்துக்கள் விஷயத்தில் ஒருக்காலும் ஏற்படாது. இந்த குணவான்களிடமிருக்கும் குணத்தைத் தான் நாடவேண்டுமே ஒழிய, தோஷிகள் குணத்தை நாடுகிறேன் என்று புறப்படுவது வீண் குதர்க்கம்தான்: போபத்தாகத் தான் முடியும்.

இப்படி இருப்பினும் தோஷமுடையோர் குணத்தைக்கூட ஒரு விதமாக உபயோகப் படுத்திக்கொள்ளும் வழியுண்டு. இதனால் மனிதர்கள் விஷயத்தில் குணமது கைவிடேல் என்ற ஸூத்திரத்தின்பொருத்தம் நன்கு விளங்கும்.

ஸாதாரணமாக நமது மனம் கெட்டதைப்பற்றி தூஷிப்பதிலும், நல்லதைப்பற்றிப் பூஷிப்பதிலும் பாய்ந்தோடும். இதிலும் கெட்டதைப்பற்றி தூஷிப்பதில் அதிகப்பற்றோடு பாய்ந்தோடுவது வழக்கம், இந்தக் கெட்டவழக்கம் தடைபடுவதற்காக கெட்டவரிடமிருக்கும் நற்குணபாகங்களை கைவிடாது ஞாபகத்திற்குக் கொண்டுவந்து பிறரைத் தூஷிக்கும் கெட்டவழக்கத்திற்கு இடங்கொடாமல் அந்தக் கொடிய நிலையைத் தலை எடுக்கவொட்டாது அடித்து நாம் கடைத்தேறமுயலவேண்டும். இதனால் இக்காலத்திய அறிவுடையோர் சிலர் கூறுவதுபோல தோஷமுடையவரிடத்துமுள்ள குணத்தைப்பற்றி அவர்களையும்அணுகிப்பழகலாம் என்பது இந்த ஸூத்திரத்தின் கருத்தாகுமா? இப்படி மானிடர் விஷயத்தில் வரம்பு மீறி நடக்கலாகாது என்பதைத்தான் கீழ்மையகற்று என்றஸூத்திரம் வற்புறுத்துகிறது. ஒருவனிடம் நற்குணமிருக்கிறது என்று கண்டு அவன் துர்க்குணங்களைக்கூடக் கவனியாது அவனிடம் பற்றிப்பழகவேண்டும் என்றபொருள் இந்த ஸூத்திரத்திற்கு இல்லவே இல்லை. இதைக் கவனியாமலிருப்பதால் தான் தத்காலத்தில் அநேக ஜீவன்முக்தர்களும் குருநாதர்களுமிருப்பதாக தத்காலத்தோர் அபிப்ராயப்பட்டு 7-ம் அத்யாயத்தில்:—

ஆயிரவர்க் குள்ளொருவன் ஆரிய சித்திபெற
நேயமுடனேமுயல்வன் நீணிலத்தில—மெய்யுயர்
சித்தரவர் ஆயிரருள் தேசின் எனைத்தெரியும்
சித்தியொருவன்போலும் தேர்.

என்று கிருஷ்ணபரமாத்மா கீதை 3-ம் ச்லோகத்தில் கூறியதற்கு மாறாக பலரை வழிபட்டு அவர்களையும் கெடுத்து தாமும் கெட்டுப்போகின்றனர். மானிடர் விஷயத்தில் இந்த ஸூத்திரத்தைப் பொருத்திப் பின் வருமாறு தான் உணரவேண்டும். 'உலகில் குணமுடையோர் சிலரே; அவர்களைவிட அதிகம் தோஷமுடையோர். இவ்விருதிறத்தாரையும்விட மிக அதிகம் குணதோஷக்கலப்புடையோர். ஆதலால் பொதுவாக ஜனங்களது தோஷத்தைப் பாராட்டி வீண்பொழுது போக்கி நாம் அதோகதியடையாமலும், அவர்கள் குணத்தைக் கண்டறிந்து தோஷத்தைக் கவனியாது அவர்களை வழிபட்டு சிஷ்யனாகி, அவர்களையும் தம்மையும் அதோகதிக்கு இழுத்து விட்டுக்கொள்ளாமலும் நடுநிலையிலிருந்து ஒதுங்கியே இருக்கவேண்டும். மிகக்கொடியோரை கவனிக்காமலே உபேக்ஷித்து அகற்றி ஒதுங்கிப்பழகவேண்டும். குணத்தையே உடையோரைத்தான் வழிபட்டுக்கடைத்தேற முயலவேண்டும்? இந்தப்பொருள் எல்லையைக்கடந்து இந்தஸூத்திரத்திற்குப் பொருள் கொண்டால், தத்காலத்தில் நடப்பவை போன்ற துன்மார்க்கர்கள் ஸத்கதாப்பிரஸங்கம் செய்து பெரியோராக மதிக்கப்பட்டு எல்லோரையும் கெடுப்பதும், ஸ்திரீகள் புருஷர்கள் ஸபையில் பாடிக் கூத்தடித்து கதாப்ரஸங்கம் செய்வதும், தகுந்த நடத்தை இல்லாதவர்கள் எல்லோரும் குருவென மதிக்கப்படுவதுமான இவைபோன்ற வரம்பு மீறி நடப்பதற்கெல்லாம் இந்த ஸூத்திரம் இடங்கொடுப்பதாகிவிடும்.

இப்படி எல்லாம் குதர்க்கம் ஏற்படலாகாது என்ற எண்ணத்துடன் நமது பெரியோர், இந்த ஸூத்திரம் மானிடர் ஒழிந்த மற்றைய ஈச்வர ஸ்ருஷ்டிப் பொருள்கள் விஷயமானதே ஒழிய, மானிடர்கள் விஷயத்தில் முற்றிலும் பொருத்தமுடையதல்ல என்று எச்சரிக்கை செய்திருக்கின்றனர். துன்மார்க்கியான துர்யோதனனிடமிருந்த நற்குணமாகிய உதாரத்தைக் கருதி அணுகிய கொடையிற் சிறந்த கர்ணனும் கொடியவனான். பெரியோர்களது குற்றங்களை எடுத்துப் பாராட்டி மகிழுபவர் அவர்களது பாபத்தை எல்லாம் பரித்துண்பர் என்று சாஸ்திரம் கூறும். தர்மாத்மாவான தர்மபுத்திரர் செய்த பாரதப் போரைக் குற்றங்கூறி அவர் மனதை நோகவைத்த சாருவாகன் என்ற அஸுரன் ப்ராஹ்மண சாபத்தால் சாம்பலாய் விழுந்தான். மஹாத்மாவாகிய ரிஷிகளைக் குருவாக கருதி நாடிய சிஷ்யர்கள் கடைத்தேறியிருக்கின்றனர். பீஷ்மத்ரோணாதிகள் கொடியவனாகிய துர்யோதனன் நல்வழிக்கு வருவான் என்று மோசம் போயினர்; விதுரரோ அவனைவிட்டகன்று நற்கதி யடைந்தார். ஆகவே குணமது கைவிடேல், கீழ்மையகற்று, இவை இரண்டையும் வெகு கவனத்துடன் மனிதரிடம் பொருத்தி நடந்துக்கொள்ளவேண்டும். இவ்வளவு கவனம் வேண்டியதில்லை இவைகளை வஸ்துக்களிடம் பொருத்திப்பார்க்க.

**(3) நற்குணங்களைக்கைவிடவேகூடாதுஎப்பொழுதும்:** மேலான நிலையை அடைவதற்கு ஸாதனமாக விருப்பவை நற்குணங்கள். தற்காலத்திய சில வேதாந்திகள் 'காலில் முள் தைத்தால் அதை வேறு ஒருமுள்ளால் எடுத்துப் பின்னர் இருமுள்ளையும் எறிந்து விடவேண்டும். இது போல கெட்ட செயல்களையும் குணங்களையும் நற்குணங்களால் தடுத்து நீக்கி, முடிவில் நற்குணங்களையும் விடவேண்டும். கெட்ட குணம் இரும்புவிலங்கு: நற்குணம் பொன் விலங்கு: இரண்டும் விலங்குதான். இரண்டையும் ஒழிக்கவேண்டும் என்று வெகு ஒழுங்காக வேதாந்தம் பேசிக் குடியைக் கெடுக்கத் தலைப்பட்டிருக்கின்றனர். அவர்கள் வாதத்தை கண்டிக்கவந்தது இந்த ஸூத்திரம். கெட்ட கர்மங்களை மனப்பூர்வமாகத் தள்ளுவது போல நற்கர்மங்களையும் தள்ளவே கூடாது. இப்படிதள்ளமுயன்றால் நற்கர்மம் ஒதுக்கப்பட துஷ்கர்மமே நடைபெறத் தொடங்கும். இது மானிட இயற்கை. இது பற்றி நாம் உணர்ச்சி இருக்கும் வரையில் நற்கர்மங்களையும் குணங்களையும் ஒதுக்கவே கூடாது. இப்படியானால் நன்மை தீமை இவைகளுக்கு அப்பாற்பட்டதாகிய நிலை எப்படித்தான் ஏற்படும் என்றசங்கை பிறக்கும். நற்குணம் நம்மிடம் பழக்கத்தால் இயற்கையேயாகி நிற்கும். மேலான நிலை வருவதற்கு இது தடையாகவே இராது; வந்த பின்னரும் இது அதை எவ்விதத்திலும் மறைக்காது, அந்த நிலை மேலீட்டால் நற்குணங்கள் தூங்குபவன் கைபுஷ்பம் போலவும் சவம் சுடும் தடியைப்போலவும் தாமே நம்மை விட்டு நழுவிவிடும். ஆதலால் நற்குணங்களை எப்பொழுதும் தன்முயற்சியால் ஒருவனும் கைவிடவே கூடாது. இது பற்றித்தான் இந்த ஸூத்திரம் குணமது கைப்பற்று என்று உடன்பாடாக அமையாது குணமது கைவிடேல் என்று எதிர்மறையாக அமைந்ததும்: முன் ஸூத்திரம் கீழ்மை அகற்று என்று உடன்பாடால் அமைந்து, கீழ்மை கைப்பற்றேல் என்று எதிர்மறையாக அமையாததும். இதனால்குணத்தைக் கைவிடவும் தோஷத்தை அகற்றாதிருப்பதற்கும் அதிக முயற்சி வேண்டுவதில்லை. குணத்தைக் கைவிடாதிருப்பதற்கும் தோஷத்தை அகற்றுவதற்கும்தான் முயற்சிவேண்டும் என்பது வெளியாகும்.



---

# II மொழிபெயர்ப்பு விளக்கம்

## TRANSLATION MODELS

Rip Van Winkle inherited but little of the martial character of his ancestors. I have observed that he was a simple, good natured man; he was moreover a kind neighbour, and an obdient henpecked husband. Indeed, to the latter circumstance might be owing that meekness of spirit which gained him such universal popularity; for those men are most apt to be obsequious and conciliating abroad who are under the discipline of shrews at home. Their tempers, doubtless, are rendered pliant and malleable in the fiery furnace of domestic tribulation; and a curtain lecture is worth all the sermons in the world for teaching the virtues of patience and long suffering. A termagant wife may, therefore, in some respects, be considered a tolerable blessing; and if so, Rip Wan Winkle was thrice blessed.

தன் முன்னோர்களிடமிருந்த வீரத்தன்மைக்கேற்றவைகளில் ஒன்றைக்கூட உரிமையாகப் பெறவே இல்லை ரிப்வான் விங்கிள் என்பவன். அவன் கவடற்றவன், நல்லவன் என்று எனக்குத் தெரியவந்திருந்தது, மேலும் அவன் ஒரு அன்புடைய அயலான், பெண்புத்தி கேட்கும் பணிவுடை பதியுமாவன். உண்மையாக நோக்கில், அவனுக்கு ஒரு பொதுப்புகழ் ஏற்படுத்திய அவன் அடக்கமுடைமைக்குக்கூடக் கடைசியிற் கூறியநிலையே தகுந்த முகாந்திரமாக இருக்கலாம். வீட்டுள் அடங்காப் பிடாரிகள் கடுகடுப்பிற்கு அடங்கி இருப்பவர்கள், வெளியில் இணக்கம் பணிவு இவைகளுடன் இருக்கத்தகுந்தவர்களல்லவா? அவர்கள் குணம் வீட்டுச் சச்சரவு என்னும் உலையில் காய்ந்து துவண்டு குழையும் தன்மையை ஐயமின்றி அடையுமல்லவா? பொறுமை, தீராத்துயரம் இவைகளின் பெருமையைப் புகட்டும் தொழிலில் ஒரு தலையணை மந்திரம் உலகிலுள்ள உபதேசங்களைவிடச் சிறந்ததல்லவா? ஆதலால் சண்டிமுண்டையையும் சில வழிகளில் பார்த்தால் பொறுக்கக் கூடிய பாக்கியம் தான் என்று மதிக்கலாம். அப்படியானால் ரிப்வான் விங்கள் பாக்கியவான் தான் என்று மூன்றுதரமும் கூறிவிலடாம்.

---

**ஆகாய விமானத்தில் உலகத்தைச் சுற்றி வருதல்.**—ஆகாய விமானத்தில் ஏறி உலகத்தைச் சுற்றிவர அமெரிக்கா ஏரோகிளப் என்ற சங்கம் ஒரு பந்தயம்போட ஏற்பாடு செய்திருக்கிறது. மேமாதம் 15 ம் தேதி சான் பிரான்ஸிஸ்கோ (San Fransisco) நகரத்திலிருந்து பந்தயம் ஆரம்பிக்கும். பத்தொன்பது தினங்களில் உலகத்தைச் சுற்றிக்கொண்டு திரும்பி வந்து விடவேண்டும். ஜயம் அடைந்தவருக்கு முதல் வெகுமானம் மூன்று லக்ஷத்து அறுபதினாயிரம் (360,000) ரூபாய் என்று திட்டமாயிருக்கிறது.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

## கங்காவதாரணம்

## THE DESCENT OF THE GANGES

"ஸுரலோகத்தினின்றும் புண்யவாஹினியான கங்கையைக் கொணர்ந்து இறந்தவிடத்தின் வழியே நடத்தினால் கபிலமுனிவரது கோபாக்னியால் உடலெரிந்து பஸ்மமாய்ப்போன அறுபதினாயிரம் ஸகரர்களுக்கும் நற்கதி கிடைக்கும்" என்ற கருடனுடைய வார்த்தையை ஸகரராலும் அவர் பேரப்பிள்ளை அம்சுமானாலும் பல காரணங்கள் பற்றி நிறைவேற்ற முடியாமற் போயிற்று. பிறகு, திலீபன் பட்டமடைந்து அநேக யாகங்கள் செய்து இராஜ்யத்தைத் தன் புதல்வன் பகீரதனிடம் விட்டு வியாதியடைந்து அவனும் காலமானான்.

பகீரதனுக்குக் கங்கையைக் கொணர்ந்து மூதாதையர்களுக்கு நற்கதி பெறுவிக்க வேண்டிய எண்ணம் மேலிட்டிருந்தமையாலும் வெகுகாலமாய் சந்தானமில்லாததனாலும் நாட்டைத் தன் மந்திரிகள் வசம் ஒப்புவித்துத் தான் கோகரணம் சென்று அங்கு உக்கிரமான தவஞ்செய்ய யத்தனித்தான். இக வாழ்க்கை மறந்து, மாதமொருமுறை யுண்டு பஞ்சாக்னி மத்தியில் நின்று ஆயிரவருடகால மருந்தவத்திற் கழித்தவுடன் சிருஷ்டிகர்த்தரான பிரும்மதேவன் வெகு களிபபுற்றுத் தேவ கூட்டங்களை யழைத்துக் கொண்டு பகீரதன்முன் வந்து "நீ செய்த தவத்தால்மிக்க சந்துஷ்டியடைந்தேன். உன் வேண்டுகோள் யாது?" என்று வினவ, பகீரதன் வணங்கி "உங்களுக்கு என்னிடம் பிரீதி வந்திருப்பதும், தவத்திற்குப் பலனுண்டென்பது முண்மையாகில், அறுபதினாயிரம் ஸகரர்களுக்கும் பரமபதங் கொடுக்கு நிமித்தம் ஸுரநதியாகிய கங்கையை மேலுலகத்திலிருந்து வரவழைத்துத்தந்து, என் வம்சம் முடிவு பெறாது எனக்கொரு சந்ததியுண்டாகக் கடாக்ஷித்தருளவேண்டு" மெனப் பிரார்த்தித்தான். நான்முகனும் "உன் விருப்பம் புகழத்தக்கது. அவ்வாறே செய்கின்றேன். கங்கையென்பவள் ஹிமவானுடைய மூத்த புதல்வி. அவள் வானத்தினின்றுங் கீழ்நோக்கி வருங்கால் அவள் வேகத்தைத் தாங்க வல்லமை யிப்புவிக்கில்லாமையால், பரமசிவனிடஞ்சென்றுப் பிரார்த்தித்துக் கொண்டா லுனதெண்ணம் முடிவுபெறு" மெனச்சொல்லிக் கங்கையிடமு மிவ்விஷயத்தைத் தெரிவித்துவிட்டுத் தான் ஸ்வஸ்தானமடைந்தார்.

ஜகத்கர்த்தா ஸ்வஸ்தானமடைந்ததும் பகீரதன் ஒருவருடகாலம் கால் பெருவிரலூன்றித் தவஞ்செய்ய, யாவராலும் நமஸ்கரிக்கப்படும் ஸாக்ஷாத் பார்வதீநாதன் தோன்றி 'உத்தமனே, தவத்தால் மகிழ்ந்து உன் வேண்டுகோளுக் கிணங்கினேன். பர்வதராஜபுத்ரியான கங்கையை என் முடியிலேற்றிக் கொள்வேன்" என்று சொல்லி அந்தர்த்யானமடைந்தார். உடனே கம்பீர சப்தத்தோடும், தாங்கமுடியா வேகத்தோடும் புரண்டலறிக்கொண்டு இம்மகாநதி கங்கை ஜடாமண்டலதாரியான பரமசிவனுடைய சிரஸில் "என் பிரவாகத்தின் வேகத்தினாலிச்சங்கரனை யடித்துக்கொண்டு பாதாளலோகஞ் சேர்ந்துவிடுகிறேன்" என்ற கர்வத்தோடு வந்து விழச் சிவபிரான் தன் மைத்துனி இவ்வளவு செருக்கையடையக் கூடா"தென்றெண்ணிப் 'புன்னுனித்தருபனியென வாநதி புனிதன் சென்னியிற்கரந் தொளிதர' என்றபடிக் குகைபோலுள்ள தன் சடையிலவளிறங்கினதும் என்ன முயற்சி செய்து மெப்பாடுபட்டும் பூமிக்கு வரமுடியாமல் அநேக வருடங்கள் திகைத்துப் பிரமித்துத் திண்டாடச் செய்தவளது கொட்டத்தை யடக்கிவிட்டனர். பகீரதனோ கங்கையைக் காணாது மறுபடி கடுந்தவஞ்செய்யச் சிவபிரான் சந்தோஷித்துச் சிகையினின்றும் கங்கையைப் 'பிந்து ஸரவி'ல் பெருகவிட ஏழு முகங்களாகப் பிரிந்து, ஹ்லாதினீ, பாவனீ, நளினீ, என்ற மூன்றுபிரிவுகள் கிழக்கு நோக்கியும், ஸுசக்ஷு, ஸீதா, ஸிந்து என்ற மூன்று பிரிவுகள் மேற்கு நோக்கியும் சென்றன. ஏழாவது பிரிவு, பகீரதன் திவ்யமான இரதமேறி முன் செல்ல அவன் பின் சென்றது. அதில் மச்சங்கள், முதலைகள், மற்ற ஜலஜந்துக்கள் கணக்கின்றிச் சில உயரக்கிளம்பியும், சில கீழே விழுந்தும், சில வால்களினால் தண்ணீரிலடித்தும், சில விளையாடி சீறி கத்திபோல் ஜலத்தைக் கிழித்துக் கொண்டும் செல்லுகின்றன. அச்சமயத்தில் பூதேவியொருவித சோபையை யடைந்தாள் போலும்! தேவரிஷிகளும் கந்தர்வர்களும் மற்ற தேவகணங்களுமான எல்லோரும் வானத்தினின்றுப் புவியில் விழும் பிரவாகத்தின் பேரானந்தத்தைப் பார்க்கச் சிலர் விமானங்களிலும், சிலர் யானைகள் குதிரைகள் மீதும் மர்த்தியலோகத்தை நெருங்கினார்கள். அப்பொழுது தண்ணீர்த்திவலைகள் வெண்ணுரையுடன் கூடி வானத்திற் கிளம்பி யங்கு வந்து நிற்குந்தேவர்களணிந்திருக்கும் ஆபரணங்களின் தேஜஸோடு சம்மந்தித்து நூறு சூரியனுடைய காந்தியை யடைகின்றன. நீர்ப்பாம்புகள், பாம்புக்குட்டிகள், முதலைகள், மச்சங்கள், துள்ளிக் குதித்து, நீரிலணைந்து உலாவி வருஞ்சமயத்தில் வானமேகம் மின்னற் கொடிகளாலிரைக்கப்பட்டதுபோல் காணப்பட்டது. கொஞ்சதூர மதிவேகமாய்ச் செல்லுகின்றது. கொஞ்சதூரம் வளைந்து வளைந்து சுட்டிப்பார்த்தது. கொஞ்சம் படிந்தும், கொஞ்சம் மேல் கிளம்பியும், கொஞ்சம் மெள்ள மெள்ள ஹம்ஸ நடையோடும் நகர்ந்தது. மேலே கிளம்பும் ஸ்படிகமயமான நீர்ச்சொட்டுகள் கீழே திரும்பிவரும் நீர்ச்சொட்டுகளோடு போராடின. அடிக்கடி வெகுதூரம்வரை அலைகள் உயர எழும்பிக் கீழே விழுந்தன.

இவ்வாறாகச் சிவபிரானது சடையில் விழுந்து வண்டலன்றி நிர்மலமாய் வருமளவுச் சாபத்தினால் கைலாயத்திலிருந்துப் பூலோகத்தை யடைந்திருந்த தேவ



### கங்காவதாரணம் (தொடர்ச்சி.)

ரிஷிகளதில் நீராடித் தத்தம் பாபங்களைப் போக்கிக் கொண்டு தத்தமிருப்பிடஞ் சேர்ந்தார்கள். பகீரதனிரதத்தை யோட்டி முன்செல்ல அவன்பின் தொடர்ந்து செல்லுகிற இம்மகாநதியுஞ் சென்றது. அதனுடன் முனிவர்களும் தேவர்களும் சென்றார்கள். இக்கங்கை தவஞ்செய்து கொண்டிருக்கு ஜன்னு மஹாரிஷியின் ஆச்ரமத்தில் விரைவாய்ப் புகுந்து அங்குள்ளவைகளை மிதக்கச்செய்ததும், மகரிஷி சினங்கொண்டு கங்கையின் மிக்க இனிமையான ஜலம்முழுதையும் தன் தவ வலிமையாற் பானஞ் செய்துவிட்டார்.

பகீரதன் தான்பட்ட சிரமம்வியர்த்தமாய்ப்போனதைக்கண்டு துயரடைந்து மாமுனிவரை வணங்கிப் பிரார்த்தித்துக் கொண்டான். உடன் வந்த தேவர்களும் பகீரதனெடுத்த முயற்சியையும், அனுபவித்த கஷ்டங்களையுந் தெரிவித்துக் கங்கை வெளிவந்தால் ஜனங்களின் நன்மைக்காக விருக்கு மென்றுரைத்ததும் மகரிஷி ஆனந்தமடைந்துச் செவிவழியால் மறுபடி கங்கையை யொழுகவிட்டார். பகீரதனால் கொணர்ந்திடப்பட்டதால் 'பாகீரதீ'என வழங்கிவரும் நதி 'ஜான்னவீ' என்ற பெயரையும் அடைந்தது.

நதிகளுள் சிரேஷ்டமான இக்கங்கை மறுபடியும் பகீரதனைப் பின் தொடர்ந்து கடலிலிறங்கி யவ்வழியே பாதாள லோகஞ்சேர்ந்து சகரர்களிறந்தவிடத்தின் வழியே பாய்ந்து நீற்றை நனைத்துப் பரிசுத்தஞ்செய்ய, ஸகரர்களும் புண்ணியான்மாக்களாகிப் பரலோகமடைந்து மகிழ்ந்தனர்.

"நிரைய முற்றிய சகரர்கள் நெடுங்கதி செல்ல
விரைமலர் பொழிந்தார்த்தன விண்ணவர் குழாங்கள்
முரைச முற்றிய பல்லிய முறைமுறை முழங்க
அரைசனம் பொழுதணிமதிலயோத்தி மீண்டடைந்
தான்."

(முற்றிற்று.)

# இந்திய ஸிலோன் இருப்புப்பாதை

## INDO—CEYLON RAILWAY

"எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"

என்று வள்ளுவனார் கூறிய விதம் யாவரும் ஆச்சரியமடையும்படி தென் இந்தியா ரயில்வே கம்பெனி கடந்த நாற்பதாண்டுகளாக எண்ணி எண்ணி இவ்வருஷம் பெப்ரவரிமீ இந்திய இலங்கை இருப்புப்பாதையில் வண்டிகள் ஓடும் நிலைமையில் வைத்து, முதல் முதல் வண்டிகள் நேராக இராமேசுவரத்தில் தனுஷ்கோடிவரையிலும் நேராகப் போகும்படிச் செய்தனர்.

இவ்வாறிவர் இந்தியாவையும் இலங்கையையும் ஒன்று கூட்டும்படிச்செய்த இவ்விருப்புப்பாதை அதியத்புதமான செயல்களில் ஒன்றென்பது யாவருமுணர்ந்த விஷயம். நிற்க இவ்வாறு இருப்புப்பாதையால் இந்தியாவையுமிலங்கையையுங் கூட்டியது, நம்மவர்க்கு அத்யந்த ஆனந்தத்தையூட்டும் எம்பெருமானிராமன் முன் காட்டிற் பிரிந்த தனது மனைவியை நாடி வந்து சேதுவி லணையிட்டு குரங்குப்படையோடு இராவணனை எதிர்த்து இலங்கை நகர் தூள் தூளாக அடித்ததெல்லாம், அச்சேதுவின் மஹிமையாற்றானே. முன் நீலன் குமுதன் முதலியவர் முதுகின்மேற் பாறைகொண்டு நளனுடைய ஏவலுக்குட்பட்டு ஸேதுவணையைக்கட்டினார். இக்காலத்து சிற்பநூலாய்ந்தவல்லார் தமது மதியூகத்தின் மஹிமையாலுண்டாக்கிய அணையும் அதிசயிக்கத்தக்கதே. இந்த இந்தியவிலங்கைப் புகைவண்டித்தொடர் முதலில் போகவிடும் கொண்டாட்டம் கொண்டாடியபொழுது கனம் கவர்னர் பெண்ட்லண்ட் துரையவர்கள் "பிரீஸ்டிலி துரையவர்கள் தாபிதைச்செய்ய எண்ணங்கொண்டதின் காரணத்தை எடுத்துக்கூறினார். இக்காலத்து எஞ்சினீயர்கள் முற்காலத்து நளன் அநுமான் முதலியோரது முயற்சியை முற்கொண்டு செய்யத்தூண்டியதே யது என்றார். தாமிப்பொழுது சட்டிய அணை யாவரு மதன் மேற் செல்லக்கூடிய நிலையிலிருக்கின்றதென்றுஞ் சொன்னார். அவர் சொல்லியவிதம் இராமதூதர்கள் முன் செய்த காரியத்திற்கும் இக்காலத்திப்பொழுது செய்த செயலிற்கும் ஒற்றுமை யில்லாமலிருக்கவில்லை. எவ்வாறு இராமனிட்ட அணை ஸீதையை இராவணனது கொடுங் காவலிலிருந்து ஆனந்தத்துடன் வெளியேறச் செய்ததோ, அவ்வாறே இவ்விந்தியாவைக் காணவரும் ஐரோப்பியர்களைத் தம் நாட்டின் நடுக்கும் கார்காலக் குளிர் பனிகளிலிருந்து ஸூர்யப் பிரகாசத்துடன் விளங்கும் சென்னையின் வெயிலில் வெளி ஏறுவர் என்பதற்கு இன்றுமுதல் இங்கோடும் வண்டியுங் கப்பற்றொடரும் அணையாகும்" என்று யாவருமானந்த மடையும்படிப் பேசினார். அவர் பேசியதொரு வேளை உயர்வு நவிற்சியா? அவர் சென்னையிடங்கொண்ட அன்பைக் காட்டவில்லையா?

இவ்வளவு கோலமும் வைபோகமும் இராஜாங்கப் பிரேரபணைகளும் இந்திய விலங்கை ரயிலை ஓட்டத்திற்கு விடும்போது செய்து முற்றும் பொருந்தும். ஸேதுவைப்பற்றி ஹிந்துக்கள் எண்ணாத நாள்கள் இடையா? அதன் புகழ் புத்தகத்தே எங்கும் பரவிக்கிடக்கின்றது. அதன் அமைப்பு உலகப்பிரவித்தம்; முதற்காவ்யத்திற்காதாரம். மற்று ஐரோப்பியர்கட்கு அலையாது வர, ஸாதனமாகிய வழியாய் விட்டது. க்ஷேத்திரங்களுக்கெல்லாம் ரயில் பாதையிடும் தென்னிந்தியஇரயில்வே கம்பெனியார் பேராவலோடு நெடுநாள் யோசித்து முடித்தவேலை தீர்ந்த வேலையும் உலகத்திலெங்கும் கொண்டாடும்படியுமானது; மனிதனுடைய மனத்தின் பெருமையையும் யந்திரத் தொழிலின் அனுபவத்தில் வரக்கூடிய விஸ்தாரத்

தையுங் காட்டுவதற்கு இப்பொழுதிட்ட இந்திய இராமேசுவரயனை சரித்திரப்பிரஸித்தமாயிருக்கும். அதன் ஆரம்பம், முடிவு, நிலை முதலியயாவும் அதிசயிக்கக் கூடியனவே.

இந்த அணையிடுவதற்காக 1876 வருஷத்திலேயே கவர்ன்மெண்ட் கன்ஸல்டிங் ஆர்கிடெக்ட் (Consulting architect) அவர்களால் பிரேரேபிக்கப்பட்டது. ஆனால் 1894-ம் வருஷம் வரை இதை கவர்ன்மெண்டாரால் கவனிக்க முடியவில்லை. 1894ஆ இலங்கை கவர்ன்மெண்டாரால் இந்தியாவையும் இலங்கையையுஞ் சேர்த்தணையிட ஒரு மதிப்பு போடப்பட்டது. அவர்கள் அதற்கு ரூ. 250,0000பிடிக்குமென மதித்தனர். 1895ஆ இவ்வேலைக் 5 குறையாமல் ரூ. 240,00000 பிடிக்கும் என்று இந்திய கவர்ன்மெண்டார் எண்ணினர்கள். (ஆனால் இப்பொழுதவ்வாறு அணையிட்டதற்கு செலவழிந்தது ரூ. 111,00000 தான்). 1899ஆ மதுரையிலிருந்து இராமேசுவரத்திற் கிருப்புப்பாதை போட்டு, குண்டுகல் முனையில் துறைமுகங் கட்டி கொழும்புக்கும் அதற்கும் கப்பல் மார்க்கத்தை யேற்படுத்தி விடுவதென முன்னிருந்த எண்ணமாறியது. பின் 1907ஆ தென்னிந்திய ரயில்வே கம்பெனியாரின் அத்யக்ஷராகிய கிம்பர்லி துரை இந்து வந்திருந்தபோது ஸேதுவை எப்படியாவது அணையிடவேண்டும் எனக் கவலைகொண்டு தன்னூரையடைந்ததும் அப்போது இந்திய மந்திரியான கனம் மார்லி, எல்ஜின் இவர்களுடன் கலந்து பேசிக் கார்யானுகூலத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். அப்படி செய்த ஏற்பாடுகளில் இலங்கை கவர்ன்மெண்டார் தலைமன்னார் வரையும் தமது இருப்புப்பாதையைக் கொண்டுவருவதுடன், தலைமன்னாரில் ஓர் கப்பற்றுறை வாராவதியுங் கட்ட ஒப்புக்கொண்டார்கள்; இந்தியா கவர்ன்மெண்டாரும் 1908ஆ நவம்பர் மீ த்தில் இராமேசுவரத்தில் இலங்கை கவர்ன்மெண்டாருடன் கலந்து பேசி, பாம்பன் நீரோட்டத்திற்கு இடையூறாகாதவிதம் பாக்ஸ் ஜலஸந்தியின்மேல் ஒரு வாராவதி கட்டி தென்னிந்தியா இருப்புப்பாதையை தனுஷ்கோடிவரையும் கொண்டுவருவதுடன், தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்குக் கப்பலோட்டமுண்டாக்குவதுமாக நிச்சயித்தார்.

அவ்வாறே இப்பொழுது தனுஷ்கோடிவரை இருப்புப்பாதை போடப்பட்டு, தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்குப் புகைக்கப்பலோட்டமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மூன்று கப்பல்கள் கர்ஸன், எல்ஜின், ஹார்டிஞ் என்னும் பெயர்களோடு இப்பொழுதங்கு தென்னிந்தியா இருப்புப்பாதையாரால் ஓட்டப்படுகிறது. இந்தியா கவர்னர்களாகிய அம் மூவரிடமும் அநுமதிபெற்று கப்பல்களுக்கவ்வாறு பெயரிடப்பட்டன. மற்று இந்தியாவில் மண்டபத்திலிருந்து இருப்புப்பாதை கடற்கரையோரம் இராமன்முனைவரும் வருகின்றது அங்கிருந்து பாம்பன் கடற்கரை வரையும் வாராவதி. இருக்கின்றது. இவ்வாராவதியின் நீளம் 14-மைல்கள். இது இரும்பு தண்டவாளங்களால் கட்டப்பட்டு மேடுக்கங் தூண்களின் தாங்க, மெட்டியும் கல்லுங் கலந்த அஸ்திவாரம் கனமாக உடையது. இவ்வேலைக்கு 2000டன் உருக்கும் தண்டவாளமும், 29700 கன அடி மேக்கும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. வாராவதி வேலை 1911ஆ ஜூன்மாதம் ஆரம்பித்து 1913ஆ ஜூலை மாதம் முடிவுற்றது. அவ்வாராவதியின் நடுவிலுள்ள பிரித்திணைக்கும் பாலம் 1913ஆ ஜூலை மீ அவ்வருஷம் டிஸம்பர் மீ முழுதும் வேலை கொண்டது. தனுஷ்கோடியில் கட்டப்பட்ட இரண்டு கடற்றுறைமுகப் பாலங்கள் கட்டிட ஒரு வருஷம் பிடித்தது. ஆனாலும் வேலைகளெல்லாம் வெகு தீவிரமாக நடத்தப்பட்டு முடிவு பெறச் செய்யப்பட்டது. ஆனால் பாம்பன் நீரோட்டத்தின் மேல் பாலம் கட்டுவது வெகு கஷ்டத்துடன் செய்யப்பட்டது. இந்த அற்புதமான பாலம் கட்டப்பட்டது உலகமெலாம் ஆச்சரியந்தான். இதுவரையும் இந்தியாவில் வந்த பெரும் வேலை தொடங்கினாலும் தங்கலின்றியே முடிந்து கொண்டிருந்தது. நீர்மேல் கொண்ட இந்தவேலைக்கும் சற்று இடையூறிருந்த போதிலும் தடையென்பதில்லாமல் முடிந்தது ஐரோப்பியர்களுக்கத்யந்த வாச்சர்யம். இவ்வாறவர் நாட்டில் முடிவதஸாத்தியம். இந்தியா கவர்மெண்டார் பக்கம் இந்தியாவையும் இலங்கையுஞ் சேர்க்கச் செய்ததற்குப் பிடித்த துகை ரூ 70,000,0). இந்த அத்புதமானவேலையில் அத்யத்புதமானபாகம் பிரித்திணைக்கக்கூட்டியபாலம். அது பாம்பனீரோட்டத்தின்மேல் கட்டப்பட்டிருப்பதுடன்வருங்கப்பல்களுக் கிடங்கொடுக்கப் பயன் படுகிறது. இந்த பாகம் அமெரிக்கா கண்டத்து ஷ்ருயர் பிரிட்ஜ கம்பெனியாரால் பிளான் போடப்பட்டு, அவர்களுக்காக லாஸன் துரையவர்கள் இருப்புப்பாதையாரது மேற் பார்வையின்கீழ் செய்தார். இதன் அமைப்பு யாவருங் கொண்டாடத்தக்கது.

தனுஷ்கோடியில் பருவக்காற்றால் கப்பல்களுக் கிடையூறுண்டாகக்கூடாதென்று இரண்டு துறைமுகப்பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. தலைமன்னாரிலும் அவ்வாறே இரண்டு அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வித வமைப்புடன் இந்தியாவையும் இலங்கையுங் கூட்டப்ப்ரயத்னஞ் செய்த தென்னித்தியா ரயில்வே கம்பெனியாரையும் அவர்க்குதவிசெய்தயாவரையுங் கொண்டாடாமல் இருக்க யாராலும் முடியாது.

இப்பொழுது இந்தியாவும் இலங்கையும் இருப்புப்பாதையாலும் அதைத் தொடர்ந்த கப்பலோட்டத்தாலும் ஒன்று சேர்க்கப்பட்டதினால் வியாபாரிகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் இலங்கைக்குப்போய்வர ஸௌக்யமாயிருப்பதுடன், நம்மவரனைவர்க்கும் பிரயாண கஷ்டமும் குறையும். ஐரோப்பியர்களுக்கும் நேராக கொழும்புவிலிருந் திங்குவரவும் சுகமுமுண்டு. இந்தியரும்இலங்கையரும் ஒருவரை ஒருவ ரறிய ஸாதனமுமுண்டு. மற்றின்னமும் நற்ப்ரயோஜனங்கள் காலானுபவத்தில் தாமே வெளிவரும்.



# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### சாந்தை அல்லது பொறுமைபினிலே

அயோக்யன் நெடுநேரம் யோசித்தான் பூனைக்குங் காவல் பாலுக்குந் தோழன் என்றபடி நடக்கச் செய்ய வேண்டிய வியவஹாரங்களிற்கு அஸ்திவாரமிட்டுக்கொண்டிருந்தான். பார்ப்பவர்க்கெல்லாம் தன்னைக்காட்டிலும் நல்லவன் இருக்கமுடியாது என்று எண்ணும்படியாக நடக்கத் தனக்கு ஸமயம் வாய்த்ததென்று குதூஹலித்தான். அவனுக்கு வேறென்ன குறை? கொடுமையிடம் அவனுக் கத்தியந்த வாத்ஸல்யம்; இடைவிடா அன்பு. அதற்காகத் தன்னுயிரையுங் கொடுக்கக்கூடிய மகான். என்னதான் அவன் செய்யமாட்டான்? முட்டாளா? அதுவுமில்லை. நல்லயுக்தியும் செய்யும் திறமும் இயற்கையிலேயே அடைந்தவன். மித்ரபேதஞ்செய்வதில் கைதேர்ந்த வேலைக்காரன்! ஸமயம் வாய்க்கக் காத்திருந்தவனுக்கு காச்யபோத்புல்ல மித்ரபேதக் கட்டடங் கட்ட இயற்கையில் ஏற்பட்ட காமக்கோரோதாதிகளை அஸ்திவாரமிட்டு அவாந்தர கலசஸ்தாபனஞ்செய்யத் தன் மனத்திற்குக் கனவேகமாக வேலைசெய்யக் கட்டளையிட்டான். அது சிறிதுந் தயங்காமல் இவ்விதம் யோசித்தது:—

" இனி என்னை அயோக்யனென்று யார் சொல்வார்கள்? நான் காச்யபனுக்கு உத்தமமானதையே சொல்லியிருக்கிறேன் – அதனால் அவன் மௌர்யனுடைய பிரியத்திற்குப் பாத்திரனுமாகலாம். ஏனென்றால், உண்மையாகக்குற்றமற்றவர் பங்கில் உழைக்கச் செய்வது வெகு ஸுலபம் அவளால் மௌரியன் வசப்படுவ ததினும் ஸுலபம். களங்கமற்ற அவளிடம் அவன் மயங்காதிருக்க முடியாது. அவன் உலகத்தையே வெறுத்து ஸர்வஸங்கபரித்தியாகஞ் செய்யத்தான் நிஸ்சயித்தால் என்ன? காஷாயபத்த உடையை தரிக்க ஆயத்தமானால்தான் என்ன? அவன் மனத்தை ஆட்டுவிக்கும் வலிமை அவளிடந்தானே இருக்கிறது? அவள் ஆசைப்பெருக்கில் மூழ்கி அல்லவா அவன் மனங் கிடக்கின்றது? அவள் இஷ்டந்தானே பலிக்கும்? அவள் இட்டது சட்டமாகவல்லவா முடியும்? அவன் ஜபம் அப்பொழுது எங்கு பலிக்கும்? அவளைக் கண்டும் அவள் அபீஷ்டத்தைத் தடுக்கக்கூடிய மனோவலிமை யவனுக்கேது? ஆகையால் காச்யபனை நான் தூண்டியதில் தவறு ஏது? அதனால் அவனுக்கு நன்மை கிடைக்கக்கூடியதா யிருக்க நான் எப்படி அயோக்யனா யிருக்கமுடியும்?—இதுதான் மாயாவிலாசம்; இன்பமாய்த் துன்பஞ்செய்வது; சிரித்துக் கழுத்தறுப்பது; இதுவே பாபத்தின் தெய்வீக ப்ரபாவம். மாயாபிசாசங்கள் பெருந்தீங்கு செய்யுமுன் பிப்படித்தான் வெகு நயமாகக் காட்டிக்கொள்ளும். ஸந்யாஸி வேஷங்கொண்டுதான் ஸீதையை அந்த இராவணன் கவர்ந்துபோனது. இவை எல்லாம் இன்பமாய் துன்பம் பயக்கும் என்பதை நான்அறிந்தவன்தான். நிற்க, இந்த வெள்ளன், பேதபுத்தி என்பதின்னதென்றறியாத இம்மடச்சாம்பிராணி, சாந்தையிடம் போய், தன் நஷ்ட பதவியைப்பெறக்கெஞ்சுவன்; அவள் அதற்காக அம் மௌர்யனிடம் வெகு தீவிரமாகப் பரிந்துபேசி வழக்காடுவள்; இதற்குள் அம் மௌர்யனுடைய மனம் வெறுக்கக் காதுகளில் இவ்வாறு விஷக்கோளைப்புகட்டுவேன், அவள் காச்யபனை மீண்டும் பதவிக்குக் கொண்டுவர வழக்கிடுவதெல்லாம் காமவழக்கென்று கடுகச் சொல்வேன்; எவ்வளவுக் கெவ்வளவு அவள் காச்யபனுக்கு நன்மை செய்ய உழைப்பாளோ, அவ்வளவுக்கவ்வளவு அவளிடம் மௌர்யன் கொண்ட மதிப்பு நம்பிக்கை எல்லாந் தொலைந்திடச் செய்துவிடுகிறேன்; இவ்வாறே அவளது உத்தம குணங்களை அனர்த்த குணங்களாகக் காட்டச் செய்து வருகிறேன்—அவை மாயஜாலமென்றெண்ணும் படிச்செய்கிறேன்;—அதுதான். பின் அவளது நன்மை என்னுங் கயிற்றைக்கொண்டு பின்னிய மாய வலையில் யாவரும் ஈக்கள்போல வீழ்ந்திடச் செய்வேன்."

இவ்வாறவன் மனம் கனவேகமாக கார்யதந்திர விசாரஞ் செய்துகொண்டிருக்கும்போது, அதற்கனுகுணமாக ருத்ரகாமன் எதிரில் தோன்றினன். அவன் தான் வந்த மான்வேட்டை முடியாமல் போயிற்றே என்று அயோக்யனிடம் பிரலாபித்தான். அடி எல்லாம் நமக்கு படி எல்லாம் பிறர்க்கே யாய்விட்ட கதையாய்விட்டதே என்று ஏங்கினன். ஆனால் அவனைத்தடுத்து அயோக்யன் " பொறுமையற்றவர் வறுமையுற்றவர்தான்! காலமில்லாமல் இரணமெப்படியாறும்? மந்திரத்தில் மாங்காய் விழுந்துவிடுமோ? தந்திரந்தானே வேண்டும்? கூழுக்குமாசை மீசைக்குமாசை என்றால் எவ்வாறு முடியும்? நமது மதுபிந்து கலகத்தில் காச்யபனுனக்குச் சிறிதூறு செய்தான்; அச் சிறுகாயம் அவனை வேலையிழக்கச் செய்தது. முதலில் பழுத்த பழந்தானே முன் வீழ்ந்தழியும்? ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்கலாகாதா? கவலைவேண்டாம், போ" என்றவனை அனுப்பிவிட்டு மேலுஞ் சிந்தித்தான்:—" செய்ய வேண்டியதின்னு மிரண்டிருக்கின்றன. என்மனைவி காச்யபனுக்காகச் சாந்தையிடம் பரிந்து பேசவேண்டும்—அதை நான் செய்து விடுகிறேன். மற்றொன்று நான் மௌர்யனிடஞ் சென்று காச்யபன் சாந்தையை வேண்டு மதே ஸமயத்தில் அங்கு வரும்படிச் செய்ய வேண்டியது. ஆமாம் அதுதான் வழி. அசிரத்தையும் தாமதமும் என் சூழ்ச்சியைக் கெடுக்காதிருக்க வேண்டும்" என்று எண்ணிக் கொண்டவன் வெகு ஆத்திரமாக வீட்டை நோக்கிப்போனான். போகும்வழியில் காச்யபனைக் கண்டான். அவன் "அயோக்யரே! நான் வெகுதைர்யமான வேலை யொன்று செய்து விட்டேன்; மன்னிக்கவேண்டும். தமதுமனைவி அமலையை அழைத்துவரச் சொல்லியிருக்கிறேன். என் எண்ண மென்ன

வென்றால், அவள் மூலமாக நான் உத்தம சாந்தையை காண வழி யுண்டாகலாமென்பதே" என்றான். "அவ்வளவுதானே; நானே போய் அனுப்புகிறேன்; அவளை அனுப்புகிறேன். மேலும் நீங்கள் நிர்பயமாகச் சாந்தையிடம் பேசும்படி மௌர்யனுரையும் வழிவிட்டு விலக வழிசெய்வேன்" என்று சொல்லிவிட்டு அயோக்யன் போனான். காச்யபன் பல்லாண்டவன் வாழும்படி வாழ்த்திக் கொண்டாடினான்.

அதேஸமயத்தில் அயோக்யன் மனைவி அமலை, அங்குவந்து வந்தனஞ்செய்து காச்யபனிடந் தனது அனுதாபத்தைக் காட்டினாள். "பயப்பட வேண்டாம்; தங்களது விஷயத்தைப்பற்றி அவரிருவரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். உத்புல்லர் உம்மிடம் வெறுப்பு கொண்டாடவில்லை. ஏதோ தற்காலத்திற்காகச்செய்ததாகத் தெரியவருகிறது. உம்மை மீண்டு முன்பதவியில் வைப்பதற்கு ஸமயத்திற்காகக் காத்திருப்பதாகச் சொன்னார். தாங்கள் ஊறுபடுத்திய ஆள் இவ்வூரில் யாவராலு மதிக்கப்படுவோராம்; அதனால் காலதாமஸம். ஆயினும் உம்மை முன் பதவியில் வைக்க கங்கணங் கட்டி யிருக்கிறார்" என்று அவள்மேலுஞ் சொன்னாள். இதைக்கேட்டதும் காச்யபன் "தங்கங்களுக்கு நியாயம் என்றுபட்டால் அல்லது, செய்யலாமென்று தோன்றினால் நான் சாந்தையம்மாளைச்சந்தித்துச் சிறிது பேசும் லாபத்தை அடையச்செய்ய வேண்டிக்கொள்கிறேன்" என்று கேட்டான்.

"அதற்கென்ன தடை தாங்கள் எங்கெங்கு பேசக்கூடுமோ அங்கெல்லாம் உம்முடன் பேசச் செய்கிறேன்" என்று அவள் சொல்லக் காச்யபன் அவளைக் கொண்டாடிக்கொண்டு அவளுடன் சாந்தையைக் காணப் போனான்.

நிற்க. உத்புல்லன் ஊர்முழுதுஞ் சுற்றிப்பார்த்து வந்து சிபிரத்தீவிற்கு வேண்டிய காவல் முதலியவைகளை ஏற்படுத்திப் பட்டினத்தைச் சீர்திருத்திப் பலப்படுத்த ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தான். பக்கத்திலிருந்த அயோக்யனுடன் இராஜ காரியங்களெல்லாம் தவறாது நடக்க பலவிதகட்டளையிட்டுக்கொண்டு தேசத்தின் க்ஷேமவிசாரஞ் செய்து வந்துகொண்டிருந்தான். வரும்பொழுதுஅயோக்யன் தான்அழைத்து வந்ததாகத்தெரியாதபடி அவனை காச்யபனுஞ் சாந்தையும்பேசுமிடத்திற் கழைத்து வந்துகொண்டிருந்தான்.

அமலை காச்யபனைச்சாந்தை முன்விட்டுபேசும்படிச் செய்த தோடிராமல் "அம்மணீ! என்னுடைய நாதனுக்கு இரவும்பகலுந் தூக்கமே கிடையாது; எப்பொழுதும் இவரைப்பற்றிய கவலைதான், தனக்கே கஷ்டம் வந்தாற்போலத் தவிக்கிறார்" என்று தானுஞ் சாந்தையிடம் சொன்னாள். காச்யபனைக்கண்ட சாந்தை அவனை வருந்தவேண்டாமென்று ஹிதங்கூறினாள். "நீர்உத்தமர்; சாந்தர்; உம்மையான்நன்றாய் அறிவன்; என் நாதனும் நீரும் முன்போலிருக்கும்படிச் செய்ய என்னால் ஆனதெல்லாஞ் செய்வேன். ஒதுங்கியிருப்பது போலவர் காட்டிக் கொள்வதெல்லாம் எத்தனை நாள்முடியும்? காலங்குணந்தரும்" என்றுசொன்னாள்.

"அது எப்படிச் சொல்ல முடியும்? எதிரிலில்லாத பொழுதென்னைப்பற்றிய ஞாபக மவர்க்கிருக்க முடியாது. அதுவும் எனக்குப் பதிலாகவும் ஒருவன் வந்துவிட்டால் காரிய மாகுமென்று சொல்ல தசாத்யம்" என்றவன் மறுத்தான்.

இதற்குச் சாந்தை "உமக்கேன் வீண்கவலை. நீர் கவலைபடவேண்டாம். எப்பொழுது உமக்காக நான் பரிந்து வேலை செய்வதாக வாக்களித்தேனோ அப்பொழுது என் உயிர் நீங்கினாலும் நீங்க விடுவேனேயல்லாமல் நான் கொண்ட காரியத்தைக் கைசோர விடேன்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது உத்துல்லனும்அயோக்யனும் இவர்கள் பேசுமிடத்திற்குஎதிரில்கொஞ்ச தூரத்தில் வந்து நடப்பதென்னவென்றுபார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அமலை "இதோ எங்கள் ஐயா வருகிறார்" என்று எச்சரித்தாள். காச்யபன் "நான் செலவு பெற்றுக்கொள்கிறேன்" என்றுசொன்னான். "என்ன? இரும்—நான் பேசுவதைக் கேளுமே" என்று சாந்தை யவனைத் தடுத்தாள்.

"அம்மணி! இப்பொழுது முடியாது;—என் மனம் எனக்குச் சரியாயில்லை; இல்லை—என் அபிப்பிராயத்தை வெளியிடக்கூடிய நிலைமையில் நான் இல்லை."

"ஆனால் ஸரி; உமதிஷ்டப்படிச் செய்யும்" என்று சாந்தை சொல்லக் காச்யபன் செலவுபெற்றுக்கொண்டு போனான். மித்ரபேத ஸங்கல்பங் கொண்ட அயோக்யன் அதேஸமயத்தில் "ஹா! அதுதான் எனக்குப்பிடிக்கவில்லை" என்று உத்துல்லன் காதில் படும்படியாக மெதுவாகச் சொல்லிக்கொண்டு தன் கார்யத்திற்கு அங்குரார்ப்பணஞ்செய்தான். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல வெகு நயமாக உத்துல்லனது மூளையைக் கலக்க இம்மொழிகளை அயோக்யன் கூறியது பசுமரத்தில் ஆணியடிப்பது போல் வேண்டும் என்றேசெய்தவேலை. சும்மா ஆடுமோ சோழியன் குடுமி? இவ்வளவு கவலையாக ஸ்வயகார்யதுரந்தரனைப்போல அயோக்யன் உத்துல்லனுடைய பஞ்சேந்திரியங்களையும் இயற்கை வழியிலிருந்து வேறுபட மருந்திடுவதற்காகவே இவ்வாறு அவன் பேசியது. அது அறியாமையாலல்ல. தெரிந்து உத்துல்லனை மயக்கவேண்டுமென்றே செய்தது. உலகவழியை முற்றுமுணர்ந்தவனாகையினாலே அவ்வுத்துல்லன் "என்ன சொல்கிறாய்?" என்று கேட்டதிற்குத்தெரியாதவன்போல "ஒன்றுஞ்சொல்லவில்லை—சொன்னேனோ?—அது ஒன்றும் எனக்கு ஞாபகமில்லை" என்று பதில் சொன்னான். அயோக்யன் உத்துல்லனுடைய மூளையுள் தான் சொன்ன மெதுவான மொழிகள் பாய்ந்து குடையவேண்டும் என்றே சொன்னான். அதை விருத்திசெய்யவேண்டுமென்றே உத்துல்லன் 'அது என்ன?' என்று கேட்டபோதும் ஒன்றும் ஞாபகமில்லாதவன் போலப் பதில் சொல்லி அவன் மனத்தில் ஸந்தேஹமுதித்து சாந்தையிடம் வெறுப்புகொள்ளச்செய்ய விஷமிட்டுக்கொண்டிருந்தான்.



# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**கனம் வி. பி. மாதவராவ் அவர்கள் C. I. E.**—திருவாங்கூர், மைசூர், நாடுகளின் மாஜிதிவானாகிய கனம் V. P. மாதவராவ் அவர்களைத் தமது இராஜாங்கத்துக் திவானாக மகிழுட்பமும், மேன்மையும் பொருந்திய பரோடா மஹாராஜா அவர்கள் தேர்ந்தெடுத்தது யாவர்க்கும் ஸந்தோஷ மூட்டும் என்பதிற் கையமில்லை.

***

**பம்பாயில் மோட்டார் வண்டிகள்:**—பம்பாயில் சென்ற வருஷக் கடைசியில் 2898 மோட்டார் வண்டிகள் ரெஜிஸ்தர் செய்யப்பட்டிருந்தன. அவைகளின் மொத்த மதிப்பு சுமார் ஒரு கோடி 15 லக்ஷம் ரூபாயாகும்.

***

**ஸர் பீச்சாம் டப்:**— இந்தியாவிலுள்ள படைகளுக்குக் கமாண்டர் இன் சீப்பாய் (Commander-in-Chief) ஸர் ஓமூர் கிரீக்குப் பதிலாய் நியமிக்கப்பட்டு ஷைஸேனாபதி ஸ்தானத்தை இம்மாதம் 7௳ அந்த ஸ்தானத்திற் கேற்பட்ட மரியாதைகளுடன் ஒப்புக்கொண்டார்.

***

**மின்சாரத்தால் விபத்து:**—ஸ்காட்லாண்டிலுள்ள ஒரு யந்திரசாலையில், ஒரு இரும்பு உத்திரம் கீழே விழுந்து மின்சாரத்தைச் செலுத்தும் கம்பியை முறித்துவிட்டது. அதனால் அந்த இரும்பு உத்திரத்தில் மின்சார சக்தி பாய்ந்துவிட்டது. மின்சார சக்தியை நிறுத்திவிடுவதற்கு முன்னால், அந்த சாலையி லிருந்த வேலைக்காரன் ஒருவன் அந்த இரும்பு உத்திரத்தைத் தொட்டுவிடவே, உடனே இறந்துபோனான். அந்த சாலையில் தேவைக்கு மிஞ்சி மின்சார சக்தி பாய்ந்துகொண்டிருந்ததென்று தெரிய வந்தது.

***

**தேசமன்னர் கான்பரன்ஸ்:**—இந்தியாவிலுள்ள தேசமன்னர்களின் கான்பரன்ஸ் இம்மாதம் 3-ம் தேதி டெல்லியில் கூடிற்று. தேசமன்னர்களின் கல்வியபிவிருத்திக்காக ஒருகாலேஜ் ஸ்தாபிக்கும் விஷயமாய் இராஜப்பிரதிநிதி லார்டுஹார்டிஞ்சு அப்போது பேசினார். தேசமன்னர்களுடைய இந்தயோசனை மிக நலமென்றும், அதற்குத் தாம் உதவிசெய்வதாகவும் லார்டு ஹார்டிஞ்சு சொன்னார். டெல்லியில் இந்தக் காலேஜ் ஸ்தாபிக்கப்படுமென்றும், அதற்கு 64லட்சம் ரூபாமதிப்புப் போடப்பட்டிருக்கிறதென்றும் 24 லட்சம் ரூபா இப்போது கையொப்பம் செய்யப்பட்டிருக்கிறதென்றும், இந்தியாக் கவர்ன்மெண்டார் வருஷாவருஷம் 50,000 ரூபா இக்காலேஜிக்குக் கொடுப்பார்கள் என்றும் இராஜப்பிரதிநிதியின் பேச்சால் அறிகிறோம்.

**பிரிட்டிஷ் சேனையின் தொகை.**—சென்ற 1913 ௵ அக்டோபர் ௴ 1௳ யன்று 247,250படையாட்கள் சேனையிலிருந்ததாக ராணுவ ரிபோர்ட் 10 வருஷங்களிலும் சென்ற வருஷத்தில் சேனையின் தொகை குறைந்துபோயிருந்தது போல் ஒரு வருஷத்திலும் இருந்ததில்லை. 1912-ம் வருஷத்தில் 253,762 படையாட்கள் இருந்தனர்.

***

**காலஞ்சென்ற லார்டு மிண்டோ.**—இந்தியாவுக்கு கவர்னர் ஜெனரலும் இராஜப்பிரதி நிதியுமாயிருந்து 1910 ம் வருஷத்தில் தம் ஜென்மதேசம் சென்ற இவர் மார்ச் ௴ 4௳ காலஞ்சென்றாரெனக்கேட்டு மிக்க விசனத்தையடைகிறோம். இவர் 1905 ௵ இந்தியாவுக்கு லார்டு கர்ஸனுக்குப்பிறகு கவர்னர் ஜெனரலாய் வந்தார். அவருக்கு இறந்தபோது 67 வயது. தேசமன்னர்களுக்கு அதிக ஸ்வாதீனத்தைக் கொடுத்தவர். ஜனங்களிடத்தில் பிரியம் வைத்தவர். இராஜதந்திர விவேக முள்ளவர். இவர் இறந்தது இந்திய ஜனங்களுக்கு விசேஷ துக்கத்தை உண்டாக்கும்.

***

**ஒங்கோல் கால்நடைக் காட்சி:**—மார்ச்மாதம் 7௳ காலை 9மணிக்கு இக்காட்சிச் சாலை ஆனரெபில் மிஸ்டர் P. S. சிவஸ்வாமி அய்யாவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இக்கால்நடைக் காட்சி 1904ம் வருஷத்தில் ஆரம்பமானது. இதில் கவர்ன்மெண்டார் மிகவும் அக்கறை கொண்டவர்கள்—வேண்டிய பண உதவியும் செய்து வருகிறார்கள். இக்கால் நடைக் காட்சிச்சங்கத்தை ஸ்தாபித்ததின் நோக்கம், நல்ல ஜாதி கால்நடைகளை வளர்ப்பதில் ஜனங்களுக்கு உற்சாகத்தை உண்டாக்குதல். நல்லஜாதி மாடுகளை வளர்ப்பவர்களுக்கு வெகுமதி கொடுப்பதற்காக கமிட்டியார் 1000 ரூபாய் துண்டாக வைத்திருக்கிறார்கள்.

***

**ஸ்ரீதனக் கொடுமையால் தற்கொலை:**—கல்கத்தாவுக்கு அருகில் போக்ரா என்ற நகர் இருக்கிறது. இந்த நகரின் ஸப் ரிஜிஸ்ட்ராருக்கு 15 வயதுள்ள ஸரளபால தேவி என்ற பெண் உண்டு. இப்பெண்ணின் புருஷனும் அவன் பெற்றோரும் ஏராளமான ஸ்ரீதனம் கொடுக்கவேண்டுமெனத் துன்பப்படுத்தினர். தன் தகப்பனால் அவ்வளவு அதிக்கிரமமான ஸ்ரீதனம் கொடுக்கமுடியாதெனக் கண்ட ஸரளபால தேவி "ஐயோ நாம் பெண்ணாய்ப்பிறந்து பெற்றோர்க்குப் புண்ணாயினமே" என்று கருதி மார்ச் மாதம் 1௳ ஞாயிற்றுக்கிழமை இரவு தன்னை நெருப்புக்கிரையாக்கி மாண்டு போயினள். இதேமாதிரியான வேறொரு ஸம்பவம் சின்னாட்களுக்கு முன்னடந்தது இன்னும் நமது மனத்திலிருந்து நீங்கவில்லை. இம்மாதிரி ஸம்பவங்கள் இந்தியாது மணவிஷயங்களில் ஏதோ பெருத்த தோஷ மிருப்பதைப் புலப்படுத்துகின்றன.

**மணிலாக் கோட்டை விளைவு:**—சென்ற ஜனவரி மாதக் கடைசிவரை, இச்சென்னை மாகாணத்தில் வேர்க்கடலைப் பயிர் செய்யப்பட்ட பூமியின் விஸ்தீர்ணம் 11,75,200 ஏகரென்றும் இது முந்திய வருஷத்தில் பயிர் செய்யப்பட்ட விஸ்தீர்ணத்தை விட 100 க்கு 27 அதிகமென்றும் 4,11,320 டன் (மேல் தோல் உள்பட) நிறையுள்ள கொட்டை இவ்வருஷம் அறுவடையாகக் கூடுமென்றும் விவசாய டைரெக்டர் தமது ரிபோர்ட்டில் சொல்லியிருக்கிறார்.

***

**பம்பாயில் சீர்மைத்துணி வியாபாரம்:**—சீர்மையிலிருந்து துணிகளைவரவழைத்துவிற்கும் வியாபாரிகள் பம்பாய் நகரத்தில் அதிகம். இவர்கள் நான்கு மாதங்களுக்கு இங்கிலாந்திலிருந்து ஜவுளிகளை வரவழைப்பதில்லை என்று யோசித்திருப்பதால் மான்செஸ்டர் வியாபாரிகளுக்கு அதிக கவலையுண்டாகியிருக்கிறது. ஆனால் பம்பாய் வியாபாரிகளுக்குள்ளேயே போட்டி அதிகமாக இருப்பதால் அப்படிப்பட்ட பொதுவான ஏற்பாடு பம்பாயில் செய்யப்படமாட்டாதென்று ஆங்கிலோ—இந்தியப் பத்திரிகைகள் கூறுகின்றன. நிற்க; பம்பாய் நகரத்திலோ சீர்மைத்துணிகள் ஏராளமாய்த் தங்கிக் கிடக்கின்றன. அச்சரக்குகளை வாங்குகிறவர்கள் அதிகமாயில்லை. கையிருப்புச் சரக்குகளைக் குறைந்த விலைக்காவது விற்றுவிட பம்பாய் வியாபாரிகள் கருதுகிறார்கள். கடந்த ஜனவரி 15-ம் தேதியில் பீஸ் துணிகளின் கையிருப்பு ஒன்றரை லட்சம் பேல்கள் பம்பாயில் இருந்திருக்கின்றன.

***

**கல்வி இலாகா இன்ஸ்பெக்டர்கள்.**—சென்னைக் கல்வி இலாகாவில் சென்ற மாதம் 12-ந் தேதி முதல் கல்வி இலாகா 8 சர்க்கில்களும் 9 சர்க்கில்களாகப் பிரிக்கப்பட்டு அவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு இன்ஸ்பெக்டர் நியமிக்கப்பட்டிருக்கிறார். முதல்சர்க்கிலுக்கு மிஸ்டர் ரான்ஸ்பொர்டும், இரண்டாவது சர்க்கிலுக்கு மிஸ்டர் M. காமேசுவரராவும், மூன்றாவது சர்க்கிலுக்கு மிஸ்டர் லிட்டில்ஹேல்ஸும், நான்காவது சர்க்கிலுக்கு ராவ்பகதூர் A.O. பிரணதார்த்திஹர அய்யரும், ஐந்தாவதுசர்க்கிலுக்கு மிஸ்டர் சாம்பியனும், ஆறாவது சர்க்கிலுக்கு மிஸ்டர் மேஹியூவும், ஏழாவது சர்க்கிலுக்கு மிஸ்டர் டக்லஸும், எட்டாவதற்கு மிஸ்டர் கர்ஷாவும்,ஒன்பதாவதற்கு மிஸ்டர் ஹாட்ஜஸும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

***

**தென்னாப்பிரிக்காவிலுள்ளபிரிட்டிஷ்ராணுவப்படை.** இப்போது தென்னாப்பிரிக்காவில் 6,888 போர் வீரருள்ள பிரிட்டிஷ் ராணுவப்படையொன்று தென்னாப்பிரிக்காவின் பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டிருக்கின்றது. இதற்காக வருஷந்தோறும் 6, 33, 500 பவுண்டு செலவு செய்யப்படுகின்றன.

**ஒரு பெரிய ஆப்பிள் தோட்டம்.**—அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணத்தில் பார்க்கர் ஆர்சர்ட்என்று பெயருள்ள ஓர் ஆப்பிள் தோட்டமிருக்கின்றது. அதன் விஸ்தீரணம் 12,000 ஏக்கராம். அதில் 96,000 ஆப்பிள் மரங்களிருக்கின்றனவாம். அத் தோட்டத்தின் மதிப்புச் சுமார் 6 லட்சம் டாலராம்.

***

**மண்டபத்தில் ஒரு புதிய ஆஸ்பத்திரி:**—இராமேசுவரம் மார்க்கத்திலுள்ள மண்டபத்தில் கான்பகதூர் காஸிம் மகம்மது மரக்காயர் பதினான்காயிரம் ரூபா தம் சொந்தப் பணத்திலிருந்து செலவு செய்து ஒரு ஆஸ்பத்திரி கட்டி வருகின்றார். கடந்த மாதம் 25-ம் தேதி இவ்வாஸ்பத்திரி கட்டிடத்திற்குச் சென்னைக் கவர்னர் அஸ்திவாரக்கல் நாட்டினார்.

***

**மிகு நீளமுள்ள ரயில்வண்டித்தொடர்.**—அமெரிக்காவில் பென்சில்வேனியா என்னும் ரயில்வே அதிகாரிகள் 133 வண்டிகளைப் பூட்டி, அவற்றை மூன்று இஞ்சின்களிழுத்துச் செல்லும்படி செய்கின்றனர். அவ்வண்டித் தொடரின் நீளம் $1\frac{1}{4}$ மைல் தூரத்திற்கதிகமாகின்றதாம். இவ்வாறு நீளமுள்ள ரயில்வண்டித் தொடர் ஓடுவது உலகத்தில் எங்குமில்லையாம்.

***

**ஆகாயகமனப்பாடசாலை:**இந்தியாவிலுள்ள இராணுவ உத்தியோகஸ்தர்களுக்கு ஆகாய கமன வித்தையைக்கற்பிக்கும் பொருட்டு இந்தியாக் கவர்ன்மெண்டார் வங்காளத்திலுள்ள சீதாப்பூரில் ஒரு பாடசாலை ஏற்படுத்த உத்தேசித்திருக்கின்றனர். ஆகாய விமானம் பறப்பதற்கு இந்தியாவின் சீதோஷ்ண நிலைமை பொருத்தமானதா வென்று பரீட்சிக்கும் வண்ணம் சில நிபுணர்களைக் கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருந்தனர். அவர்கள் அவ்வாறு பறந்து பார்த்ததில் இந்தியாவின் சீதோஷ்ண நிலைமை அதற்குப் பொருத்தமாயிருக்கின்றதென்று தெரியவருகிறது.

***

**இந்தியாவில் குற்றவாளிகள்.**—இந்தியாவிலுள்ள முப்பதுகோடி ஜனங்களுள் 2,400 பேருக்கு ஒருவன் குற்றவாளியா யிருக்கிறானென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

***

**இரங்கூனில் தீவிபத்து.**—இம்மாதம் முதற்றேதி மாலை 4-மணிக்கு இரங்கூன் பட்டணத்தின் கீழ்ப்பாகத்தில் ஒருபெரியதீவிபத்து நேர்ந்தது.முதலில்ஓர் இந்து வீட்டில் நெருப்புப்பற்றியது. அப்பொழுது காற்றும் பலமாகவீசினமையின், தீ நாலாபக்கமும் பரவியது. அதனால் சுமார் 300 வீடுகள் சாம்பலாயின. 1,500 பேர் குடியிருக்க இடமின்றிப் பரதவிக்கின்றனரென்றும் சுமார் 50,000 ரூபாய் நஷ்டமிருக்குமென்று சொல்லப்படுகின்றது.

Supplement to the "Viveka Bodhini" ["விவேக போதினி" அனுபந்தம்]





# விவேக போதினி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 13 APR 1914 MADRAS.

தொகுதி VI { பிரமாதீசஹு பங்குனிமீ =1914-ஹு ஏப்ரல்மீ } பகுதி 10

## வேதாந்தத் திரட்டு
## VEDANTIC SELECTIONS
### 5. கீதா ஸாரம்

தாபத்தின் நீங்குதற்குச் சாதுக்கள் சார்மாமாய்
ஆபத்தில் நின்றார்க் கரும்புகலாய்—மாபத்தி
பண்ணன்போர் பீழைமுறிப் பாணுகிச் சீமானும்
கண்ணன்று னெற்குக் கதி. (இ.வை.அ.)1.

தெள்புனலிற் சென்று தினம்தோறும் ஆடுதலால்
விள்ளுமுடல் மாசே விலகுறுமால்– எள்ளரிய
கீதையெனும் மண்புனலால் கேளீர் ஸமுஸாரத்
தீதார் மலந்தவிரும் சென்று. 2.
(கீதைவெண்பா, பக்கம்9)

சீரா ருபநிடதம் சேதாவாம் தேவர்பிரான்
பாராருமாயனும் பார்த்தனேர்—சீரார்
இளங்கன்றும் கீதையே இன்னமுதாம் உண்பார்
களங்கமில்உள் ளத்தவராம் காண். 3.
(கீதைவெண்பா, பக்கம்9)

சீர்திகழும் தூய குருநிலத்தில் தெண்டிரைசூழ்
பார்புகழும் எம்மவரும் பாண்டவரும்—போர்கருதிச்
சென்றெருங்கு கூடியபின் செய்ததெவன் ஸஞ்ஜய
விங்
கொன்றெழியா தெல்லாம் உரை. 4.
(கீதைவெண்பா—i—1.)

அன்னதன்பின் வெண்பரிகள் ஆர்த்த கொடிஞ்சித்
தேர்
மன்னியுறும் பாண்டவனும் மாதவனும்—மின்னொளி
செய்
திவ்வியவெண் சங்கெடுத்துச்செம்பவள வாய்வைத்துக்
கவ்வைமுகில் போலொலித்தார் கண்டு 5.
(கீதை வெண்பா— i —14)

சிந்தையழி வுற்றுச் செயற்குரிய தன்மத்தில்
புந்திநிகைத் துற்றேனின் பொன்னடியை—எந்தாய்
நலக்குரிய தொன்றை நவின்றருள்வாய் நானுன்
மலர்க்கழல்சேர் மாணுக்கன் மற்று. 6.
(கீதைவெண்பா— ii —7)

துயர்க்குரியர் அல்லார்க்குச் சோகிப்பாய் தூயோய்
நயக்கறிவின் நல்லுரையும் சொல்வா (லா)ய்—மயக்
கொழிவார்
சென்றார்க்கும் தம்மாவி செல்லாதித் திண்புவியில்
நின்றார்க்கும் நேரார் துயர். 7.
(கீதைவெண்பா ii —11)

[இடையில் மூன்மூன்று ஸஞ்சிகைகளில் எடுத்துக் காட்டியுள்ள மூன்றுவித ரஹஸ்யங்களையும் அமைத்துக் கொள்ளலாம்.]

எல்லா அறங்களையும் விட்டொழிந்திங் கென்ற
னையே
நல்லாய் சரண்புகுக நானுன்னை—அல்லல்தரு
பாவங்க ளின்முற்றும் பற்றறவே வீடுவிப்பேன்
மேவுதுயர் எல்லாம் விடு. 8.
(கீதைவெண்பா— xviii —66)

மோஹமெலாம் போயினவால் முன்னவனே நின்
னருளால்
வாரு றுமெய்ஞ்ஞானம் மருவினனல்—எகினவென்
ஐயமெலாம் திண்மைநிலை ஆர்ந்தேன் இங்காற்றவ
னின்
செய்யவுரை யின்படியே சென்று 9.
(கீதை வெண்பா xviii —73)

யோகேசன் கண்ணனெங் குள்ளானே வில்விஜயன்
வாகினெவண் உற்றிடுமோ மற்றங்குப்—போகத்
திருவும் விசயமும் செல்வப் பெருக்கும்
மருவிடுமே நியாயமொடு வாய்த்து. 10.
(கீதைவெண்பா xviii —78)

## CALENDAR—பஞ்சாங்கம்

| யோகம் | ஹிஜ் | இங்கி | தமிழ் | வாரம் | ஆநந்த௵ சித்திரைமூ ; சாலிசகம்1836 கலியாப்தம் 5015 ; பசலி1323 கொல்லம்1089 ; 1914௵ ஏப்பிரல்—மேமூ |
|---|---|---|---|---|---|
| ர-செ பு] | 16 | 13 | 1 | திங் | திரு 16-2, விசா 4-3, ஸித் 4-18, வ்ய 53-20, பத் 16-2, திதி 13-35, அக 30-35, மேஷரவி 8 7, புன 3 செ 0-55, உத் 2, புத 4-45, சூனியதிதி, சித்திரைவிஷு சங் சது விய பிரா வருஷப்பண்டிகை, ஸமார்கம். |
| சு | 17 | 14 | 2 | செ | சது 11-24, அனு 1-9, கே 57-46, வரி 51-37, பா 11-24, திதி 14-38, பர 1, சுக் 49-40, மேஷ கி பஞ்சமிதிதி. |
| பு | 18 | 15 | 3 | புத | பஞ் 7-34, மூல 57-43, பரி 46-22, தை 7-34, திதி 18-31, ரா 23-7, உத் 3, புத 3.34, தாபவிசேஷம். |
| ர | 19 | 16 | 4 | வியா | சஷ் 4-43, பூரா 57-37, சிவ 41-59, வணி 4 43, திதி 21-35, அசு 2, ரவி 32-23. |
| பு-சு | 20 | 17 | 5 | வெ | சப் 3-0, உத்தி 58 44, ஸித் 38-33, பவ 3-0, திதி 17-59, அக 30-41, உத் 4, புத 2-23, பர 2, சுக் 30-49, காளாஷ்டமி. |
| | 21 | 18 | 6 | சனி | அஷ் 2-58, திரு 60-0, சா 35-45, கௌ 2.58, திதி 9-8, சிர உப வராக ஜ கரிநாள் மழை 7 க்குள். |
| ர-பு | 22 | 19 | 7 | ஞா | நவ 3-21, திரு 1-10, சுப 34-41, கர 3-21, திதி 11-46, அசு 3, ரவி 57-40, ரேவ 1, புத 1-11. |
| செ-பு | 23 | 20 | 8 | திங் | தச 5-29, அவி 4-49, சுப் 34-11, பத் 5-29, திதி 24-14 சுடசெவ் 14-0, பச்சாதஸ்தபுத 55-7, ரேவ 2, புத 60-0, |
| சு] | 24 | 21 | 9 | செ | ஏகா 8-40, சத 9-32, பிரா 34 30, பா 8-40, திதி 27-2, அசு 30 51, மேஷாய 30 58, சர்வஏகா. [பா 3, சுக் 12 0. |
| பு-சு | 25 | 22 | 10 | புத | து 12-49, பூ 15-9 மா 35-30, தை 12 49, ரா 10 48, ரே 3, புத 41-38, பர 4, சு 53-31, பிரதோ. |
| ர | 26 | 23 | 11 | வியா | திர 17-38, உத்தி 21-23, வை 36-53, வணி 17-38, ரா 23-42, அசு 4, ரவி 22-23, சதுர்த்தசி மாசி வை கிரா |
| பு | 27 | 24 | 12 | வெ | சது 22-38, ரே 27-48, விஷ் 38-20, சகு 22-38, தியா 0-0, ரேவ 4, புத 23 12, அதிதி போதாயனம் பிரவாசமே கோர்பத்தி. (சர்வ அமா கல்பாதி பிண்டபிய யோ இஷ்டி. |
| சு | 28 | 25 | 13 | சனி | ●அமா 27-29, அசு 34-3, பரி 39-38, நா 27-29, திதி 23-0, அக 30-53, கார் 1, சுக் 34-42, அமாதிதி |
| ர-பு | 29 | 26 | 14 | ஞா | பிர 31-53, பர 39-49, ஆயு 40-30, பவ 31-53, திதி 0-21, வைசா சுத் பர 1 ரவி 48-43, மேஷபுத 4-46, இஷ்டி சதுர்தசி. (1 சனி 4-30, கார் உப கரிநாள். |
| செ பு | 1 | 27 | 15 | திங் | திதி 35-29, *கார் 44-48, ஸௌ 40-45, பா 3-41, திதி 12-18, பூசு 1 சே 16-6, அசு 2 புத 46-24, ரோ 4 |
| ச] சு | 2 | 28 | 16 | செ | திரு 37-59, ரோ 48-40, சோ 40-6, தை 6-44, திதி 27-23, ரிஷபசுக் 15-54, அக்ஷய திருதியா திரேதாயுகாதி பரசு ஜ கல்பாதி. (புத 30-51, சது விரு இடிமின்னல் 8 க்குள். |
| பு | 3 | 29 | 17 | புத | சது 39-26, மிரு 51-24, அதி 38-33, வணி 8 42, திதி 3-18, அசு 30 56, அசு 3 |
| ர-கு-சு] | 4 | 30 | 18 | வியா | பஞ் 39-14, திரு 52-49, சுக 35-59 பவ 9-20 திதி 12-54, பர 2 ரவி 14-54, அவி 2 குரு 60-0, கார் 3, சுக் 57-24, லாவண்ய கௌ விரு |
| பு | 5 | 1 | 19 | வெ | சஷ் 37-55, புன 52-58, திரு 32 23, கௌ 8-34, திதி 22-53, அசு 4 புத 23-8சஷ் உப. |
| | 6 | 2 | 20 | சனி | சப் 35-29, பூச 52-4, சூல 27-53, கர 6-42, திதி 12-40, சப் விரு மழை 9-க்குள். |
| ர-செ பு சு | 7 | 3 | 21 | ஞா | அஷ் 32-0, ஆயி 50-8, கண் 22 33, பத் 3-44, திதி 23-2, அக 31-2, பர 3 ரவி 31-20 பூசு 2 செ 57 54, பர 1 புத 15-25, கார் 4 சுக் 38-36. |
| | 8 | 4 | 22 | திங் | நவ 27-40, மக 48-26, விர் 16-29, கௌ 27-40, திதி 19-17, நவமிதி |
| பு சு | 9 | 5 | 23 | செ | தச 22-37, பூர 44-8, துரு 9-50, கர 22-37, திதி 7-0, பர 2 புத 7-43, ரோ 1 சுக் 49-47, திதித் |
| பு | 10 | 6 | 24 | புத | ஏகா 17-3, உத் 40-15, வியா 2-41, ஹர் 52-34, பத் 17 3, திதி 0-58, ரா 28-44; பர 3 புத 45-40, துவாதி சர்வ |
| ர-பு | 11 | 7 | 25 | வியா | துவா 11-8, ஹஸ் 36-12, வஜ் 47-37, பா 11-8, சே 3-50, ரா 23-46, அக 31-6, பர 4 ரவி 8-57, பர 4 புத 31-36, பிரதோ அக்னிநக்ஷத்திரம் 8-57. |
| சு | 12 | 8 | 26 | வெ | திர 5-12, சது 53-56, சித் 32-11, ஸித 40-3, தை 5-12, ரா 14-9, ரோ 2 சுக் 4-0, நரசிம்மஜய மழை 10 க்குள் |
| பு | 13 | 9 | 27 | சனி | ○பௌ 53-21, சுவா 28-14, விய 32-35, பத் 26-14, ரா 10-17, கார் 1 புத 17-7, சௌரசித்திரா பூர்ணிமா சம்பத் கௌரீவிரு வைகாசி பூர் விய சிரா ஆ சா மாவை. (3 சுக் 50-0 இஷ்டி. |
| ர-செ ச] பு | 14 | 10 | 28 | ஞா | பிர 48.5, விசா 24-39, வரி 25-26, பா 20-43, ரா 3-1, வை பகு கார் 1 ரவி 36.34, பூசு 3 செ 37-30, ரோ |
| | 15 | 11 | 29 | திங் | திதி 43.27, அனு 21.38, பரி 18-44, தை 15.46, ரா 3-56, அக 31-10, ரிஷபபுத 2-55. |
| | 16 | 12 | 30 | செ | திரு 39-28, கே 19.20, சிவ 12-37, வணி 11-27, ரா 7-42, திருதியாதிதி சங் சது. (சதுர்திதி. |
| பு-சு | 17 | 13 | 31 | புத | சது 36-41, மூல17-55, ஸித் 7.10, பவ 8-2, திதி 13-55, ரா 1?-35, கார் 3 புத 2-56, ரோ 4 சுக் 34-0 மே தி |

| புத | ரவி சுக் | சனி | செ |
|---|---|---|---|
| ராகு | 8சுடக செ 14மேஷபு 16ரிஷப சு 29ரிஷபபு | | |
| குரு | | | கேது |



# விவேக போதினி

தொ.6.] பிரமாதீச௵ பங்குனிமீ [பகுதி.10.

## மோக்ஷ ஸோபானம்.

## THE STEPS TO THE GOAL

### (2) கர்மயோகம் (தொடர்ச்சி)

### பீஷ்மர் சரித்திரம்

இதுவரையில் கர்மயோகத்தின் பஞ்சாங்கங்களையும் அதற்கு நேரிட உபயோகப்படக்கூடிய கர்மங்களின் பஞ்ச லக்ஷணங்களையும் எடுத்து விஸ்தரித்தாய்விட்டது. இந்த கர்மயோகம் முதிருவது பக்தியோகத்தில் என்றும், பூர்ணமாக அமைந்து நிலைத்துவிடுவது ஞானயோகத்தில் என்றும் முன்னரே எடுத்துக் காட்டப்பட்டது. ஆகவே கர்மயோகத்தின் உண்மையான ஸ்வரூபத்தை ஞானிகளிடத்தில்தான் காணலாம்; அதைக்கண்டு அப்யாஸிகள் அதைப் பின்பற்ற முயலவேண்டும். நமது புராண இதிஹாஸாதிகளில் உள்ள பெரியோர்கள் எல்லோரும் இம்மாதிரி கர்மயோக அப்யாஸம் செய்து கர்மயோக பூர்ணராக விளங்கும் ஞானிகளே. இப்படிப்பட்டவர்கள் அநேகர் நிலையை பகவான், கீதை ii-51-ம் ச்லோகத்தில் பின்வருமாறு எடுத்துப் பாராட்டுகிறார்:—

> மூதறிஞ ராயுயர்ந்த புத்தியுத்தர் முற்றும்வினைப்
> போதும் பயன்துறந்து பொற்பினராய்—தீதார்
> பிறவித் தளைதவிர்ந்து பின்னரிடர் ஒன்றும்
> உறவில் இடத்தமர்வார் உற்று.

இந்த கர்மயோக புத்திமாத்திரம் ஒருவனிடம் பதிந்து அவன் வைதிக ஸத்கர்மங்களை உள்ளபடி அனுஷ்டிக்கத் தொடங்கிவிடுவானாகில் அவன் வ்யவஹாரத்தில் ஒரு நாளும் நெறிதவறாது ஒரேபிடியாக இருந்து விடும் திறன் உடையவனாகி விடுவன். ஒவ்வொரு கஷ்டமான தருணங்களிலும் அந்தக் காலத்திற்கேற்ற ப்ரியவிஷயத்தில் மனம் பாய்ந்தோடாது எப்படி நடந்துகொண்டால் எக்காலத்திலும் மாறாத ச்ரேயஸ்ஸும் மனஸ்ஸமாதானமும் ஏற்படும் என்று முனைந்துநிற்பன் அவன். பிறருக்கு ஒருவிதக் கேடும் வாராது நடந்துகொள்ளும் விதத்திலேயே இவன் புத்தி நிலைத்துவிடும். இவனால் உலகில் ஒருவருக்கும் எக்காலத்திலும் கெடுதி யுண்டாகவே மாட்டாது; உபகாரம் நேர்ந்தாலும் நேரலாம்; இல்லாமல் போனாலும் போகலாம். எந்த ஸமயத்திலும், 'சாஸ்திரவொழுங்கு எதுவோ, எப்படி பெரியோர் அதைப்பின்பற்றி நடந்திருக்கின்றனரோ, அவ்வாறேநாமும் ஒழுகிவிடவேண்டும் தற்கால பலனைக் கவனியாது' என்ற எண்ணமே இப்படிப் பட்டவர் மனதில் ஊறிக்கொண்டிருக்க இவர்கள் நடத்தை மேலெழுந்தவாரியாக நோக்குபவருக்கு சற்று முரணுடையதாகக் காணப்படினும், உள்ளபடிப் பகுத்துணருவோர்களுக்குத் தகுந்ததாகவே காணப்படும். இப்படிக் கர்மயோக நிலையில்நின்று பரமபதம் பெற்றிருப்பவர்கள் நம்முன் அநேகர் உளர். அவர்களுள் இங்கு பீஷ்மாசாரியர் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறி, கர்மயோக நிலையை நன்கு விளக்குவோம். இதைக்கூறப்புகுமிடத்து அவர் சரித்திரபாகங்களை ஒருவாறு சுருக்கமாக அமைத்துவிட்டு, அவர் கர்மயோகாநுஷ்டான பாகங்களை சற்று விஸ்தாரமாக எடுத்துக் காட்டுவோம்.

பீஷ்மாசாரியர் கௌரவபாண்டவர்கள் பாட்டனர். இவர் வஸிஷ்டர் சாபத்தால், அவர் காம

தேனுவைத் திருடியதின் தண்டனையை அனுபவிக்க, கங்கைக்கும் சந்தனுவுக்கும் பிள்ளையாகப் பிறந்தார். ஆதலால் இவருக்கு முதலில் காங்கேயன் (கங்காபுத்திரன்) என்ற பெயர் அமைந்தது. இவர் உடன் பிறந்த மற்றைய வஸுக்கள் இவருக்குக் காமதேனுவைத் திருடுவதில் ஸஹாயம் மாத்திரம் செய்ததால் பிறந்ததும் முன் ஏற்பாட்டின்படி கங்கையால் கங்காநதியில் எறியப்பட்டுத் தமது வஸு பதவியை அடைந்தனர். பீஷ்மர் பிறந்ததும் கங்கை இவரையும் நதியில் எறியப்போனாள். இது வரையில் பொறுத்துக்கொண்டு பயந்திருந்த சந்தனு இந்தப்பிள்ளையையாவது நதியில் எறியாமலிருக்கும்படிக் கேட்டுக் கொண்டான். முன் ஏற்பாட்டின்படி கங்கை சந்தனுவை விட்டுவிட்டு பீஷ்மரையும் கூட்டிக்கொண்டு கங்காநதியில் மறைந்து விட்டாள். அரசன் மிகுந்த துக்கத்துடன் 10 அல்லது 12 வருஷம் மறு விவாகத்தைக்கூடக் கவனியாது பத்னீ சோகம் புத்திரசோகம் இவைகளில் மொத்துண்டு கழிக்க, முடிவில் ஒரு நாள் கங்கைக் கரையில் வேட்டையாடிக்கொண்டு வந்தான். கங்காஜலம் மிகக் குறைந்திருப்பதைக் கண்டு வியந்து நதிக்கரை யோரமாக எதிர்த்துச் சென்று பார்க்கையில், அங்கு ஒரு 12 வயதுச் சிறுவன் கங்கைக்குக் குறுக்கே பாண அணையிட்டுத் தண்ணீரைத் தடுத்து விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். தன் பிள்ளையின் ஞாபகம் வந்து சற்று அசைவற்று நின்றுவிட்டான். உடனே கங்கை அவன் முன் தோன்றி 'இது தான்உன் எட்டாவது பிள்ளை. அவனை உன்னிஷ்டப்படி கொல்லாது தனுர்வேதம் முற்றிலும் நன்றாகத் தெரியும்படிப் பழக்கிவிட்டேன். இவனை பெற்றுக்கொள்' என்று ஒப்புவித்துவிட்டு மறைந்தாள். அரசன் காங்கேயனை நாட்டுக்கழைத்து வந்து யுவராஜாவாக்கிச் சற்று மனம்தெளிந்திருந்தான். இப்படி வஸிஷ்டசாபத்திற்கு முக்ய இலக்கான வஸு உலகில்தங்கி ஒரு புருஷாயுள் முழுவதும் வாழவேண்டிவந்தது. 'சீரியர் கெட்டாலும் சீரியர் சீரியரே' என்றபடி தேவதைகள் பூமிக்கு வரும்படி நேரிட்டபோதிலும் அவர்கள் சிறப்புப் போய்விடுமா? அவர்கள் அப்பொழுதும் நம் போன்ற பாமரர்களுக்குக் குன்றின் மேலிட்ட விளக்காக விளங்கி, நம்மை நேர்வழியில் ஒழுகும்படி தூண்டும் தன்மையராகவே இருப்பர் என்பதை பீஷ்மர் வ்யவஹாரத்தில் கர்மயோக சிகாமணியாகவிருந்தது நன்கு விளக்கும்.

மனம் சற்றுத் தேறப்பெற்ற சந்தனு மஹாராஜன் உத்ஸாஹமாக வேட்டைக்குப் புறப்பட்டு யமுனைக்கரை யோரமாக வந்து சேர்ந்தான். அங்கு அணுகி வருகையிலேயே புஷ்ப வாஸனைகள் கம் என்று வீசின. அருகில் வாஸனைப் புஷ்பச் செடிகள் ஒன்றும் காணப்படவில்லை: கண்ணுக்கெட்டிய வரையில் காட்டு மரங்கள்தாம் தென்பட்டன. யமுனையைக் கிட்டக்கிட்ட வாஸனை அதிகரித்தது. யமுனைக் கரைக்கு வந்து பார்த்ததும் அங்கு ஒரு ஓடத்தில் அழகியகன்னிகை ஒருத்தி தோன்றினாள். உடனே இந்த திவ்யகந்தம் அவள் உடலிலிருந்து தான் வந்தது என்று அரசனுக்கு விளங்கிவிட்டது. புத்திரசோகம் நீங்கி உத்ஸாஹமாயிருந்த அரசனுக்கு பத்னிவேண்டும் என்ற ஆவல் தலைதூக்கி விட்டது. நாணம் கூச்சம் முதலியவைகளைவிட்டு அவளிடம் சென்று தன் குலகோத்திரங்களை வலுவில்கூறித் தன்னை விவாஹம் செய்துகொள்ளும்படி கேட்டுக் கொண்டான். அவள், தனக்கு இந்த விஷயத்தில் முடிவாக ஒன்றும் கூறமுடியாதென்றும் தன் தகப்பனார் தாஸராஜன் என்ற செம்படவ ராஜன் அருகாமையிலிருக்கிறார் என்றும் அவரைச் சென்று விசாரித்துக் கொள்ளலாம்



என்றும் கூறி, அரசனை ஓடத்திலேற்றித் தன் வீடுகொண்டு சேர்த்தாள். விஷயங்களை விசாரித்துணர்ந்த தாஸராஜன் 'உமது இஷ்டப்படி என் பெண்ணை உமக்குக் கொடுக்க யாதொரு தடையுமில்லை. ஆனால் ஒரு விஷயம் கவனிக்காமலிருக்கவும் முடியவுமில்லை. உமக்கோ முதல்மனைவி மூலமாக ஒருபிள்ளை இருக்கிறான் என்றீரே: அவனுக்கு அல்லவோ ராஜ்யம் போகும். என்பெண் வயிற்றுப் பேரர்கள் சோற்றிற்குச் செலவாகவும் பூமிக்குப்பாரமாகவும்தானே இருக்கும்படி வரும். இதை ஒரு வழியாக ஸரிப்படுத்தி விட்டால் எல்லாம் இசைந்துவிடும். கல்யாணம் உடனே நடத்திவிடலாம்' என்று முடிவான மறுமொழி கூறிவிட்டான். யமுனைக்கரையில்கண்ட ஸத்யவதியிடம்சென்றமனம் தன் வசப்படாது தத்தளித்துக்கொண்டிருந்த அரசன், காங்கேயனிடம் இருந்த ஆசையால் இப்பொழுது மனம் மறுபுறம் இழுக்கப்படுவது கண்டு, பதைத்தான்: 'கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை' என்ற கதையாக திண்டாடும்படி வந்துவிட்டது. இன்னதுசெய்வது என்று விளங்காமற்போக பதில் ஒன்றும் கூறாது ஊருக்கு வந்து தன் பள்ளியறையில் படுத்துவிட்டான் அரசன்.

இதுதான் காங்கேயன் கர்மயோகம் முதல் அனுஷ்டித்துக் காட்டும் தருணம். தகப்பனார் முன்போல ஸாதாரணமாக இராது ஏதோ ஏக்கம்பிடித்துப் படுத்திருக்கிறார் என்று கேள்விப்பட்டு, அவரிடம் சென்று மிகுந்த பரிவுடன் அவர் துக்க காரணத்தை விசாரித்தான். 'நீ ராஜ்யத்தை இழந்தாவது எனக்குக் கல்யாணம் பண்ணிவைக்கவேண்டும் இந்த வயதில்' என்று எப்படி அவரால் தன்பிள்ளையை நோக்கிக் கூற முடியும். காங்கேயருக்கு ஒன்றும் விளங்காமல்போக வேட்டைக்குத் தேரோட்டிச்சென்ற ஸாரதிமூலமாக தாஸராஜன் வீட்டில் நடந்தவை வெளிவந்தன. உடனே தாய் தந்தையரை என்ன கஷ்டப்பட்டாவது திருப்திப்படுத்தவேண்டும் என்ற சாஸ்திர ஒழுங்குபடி நடக்க முயன்றுவிட்டார் காங்கேயர். தகப்பனாருக்குத் தெரிவிக்காமலே தாஸராஜன் வீடு சென்று 'ஹே ராஜனே! என் தகப்பனாருக்கு உன் பெண்ணைக் கொடுத்துவிடு: நான் ராஜ்யம் விரும்புவதில்லை, பிறக்கும் என் தம்பிகளுக்கே கொடுத்துவிடுகிறேன்' என்று சபதம் செய்துகொடுத்தார். இவர் ஆண்மை பிதிர்பக்தி இவைகளைக்கண்டு நம்பின தாஸராஜன் சந்தனுமுதலானோரை வரவழைத்து வைத்துக்கொண்டு எல்லோர் முன்னிலையிலும் காங்கேயரை நோக்கி 'உமது பிதிர்பக்தியை மெச்சினேன். நீர் வேண்டுமானால் உமது சபதத்தை நிறைவேற்றிவிடுவீர். உமது பிள்ளைகளும் அப்படியே இருப்பார்கள் என்பது என்ன நிச்சயம். இந்த ஒரு ஸந்தேஹம் நீங்கிவிட்டால், இப்பொழுதே விவாஹம் நடத்திவிடலாம்' என்றான். பார்த்தார் காங்கேயர்! அவன் சொல்வது நியாயம்தான் என்று பட்டது. உடனே ஸூர்யசந்திராதி ஈச்வர ஸ்ருஷ்டிகளை ஸாக்ஷியாகக் கூறி 'என் உயிர் உள்ளளவும் யான் விவாஹமே செய்துகொள்ளுவதில்லை! நித்ய பிரஹ்மசாரியாகவே நெறியாக நானிருந்துவிடுகிறேன்! நீங்கள் மனதில் ஒருவிதத் தயக்கமுமின்றி என் தகப்பனாருக்குப் பெண்ணைக் கொடுக்கலாம்' என்று கர்ச்சித்தார். இந்த கோரமான விரதம் பூண்டதும், தேவர்கள் பூமாரி பொழிந்தனர்; உலகம்செழித்தது. இவர்செய்த சபதம் பீஷ்மம் (மஹாபயங்கரமானது) என்று தேவாதிகள் வியந்து ஆரவாரித்தனர். இது முதல் இவருக்கு பீஷ்மர், தேவவ்ருதர் என்ற பெயர்கள் ஏற்பட்டன. இவைகளுக்கு முறையே மிகக்கொடிய விரதம் பூண்டவர், தெய்வத்தன்மை வாய்ந்து மேன்மை தரத்தகுந்த

விரதம் பூண்டவர் என்று பொருள்.—'அப்பா! திடீரென்று என்னகாரியம் செய்துவிட்டாய்! இனி என்னசெய்வது!" என்று ஏங்கினார் சந்தனு. தகப்பனாரைத் தேற்றி தனக்கு இந்த நிலையிலிருப்பது வெகு ஸாதாரணம்தான் என்று அவர் மனதில் நன்றாகப் படும்படி செய்ய, அவர் ஒருவாறு தேறி ஸத்யவதியை விவாஹம் செய்துகொண்டு, தன்பிள்ளையை நோக்கி மிகுந்த ஸந்தோஷ பரவசராகி 'அப்பா நித்ய ப்ரஹ்மசாரியாக இருக்கும் திறன் உனக்கிருப்பதால், மெச்சி, ஒருவரம் தருகிறேன்; வாங்கிக்கொள். உனக்கு ஸ்வச்சந்த மரணசக்தி வரட்டும்' (உன் இஷ்டத்தை அநுஸரித்தே உனக்கு மரணம் வருமே ஒழிய எல்லோரையும்போல யமதர்மன் உன்னை வலுவிலிழுத்துச்செல்ல அணுகாமலிருக்கட்டும்) என்று வாழ்த்தினார்.

இம்மாதிரியாகத் தகப்பன் இஷ்டத்தைப்பூர்த்திசெய்துவைக்கக்கூடிய தருணம் அகப்பட்டதால் பீஷ்மர், பகவான் அவதாரமாகிய ஸ்ரீராமசந்திரமூர்த்தியைவிட பித்ர்வாக்ய பரிபாலன ஒழுங்கில் சிறந்து விளங்கும்படி நேரிட்டது. வைரம், மற்றைய கற்களைவிட மேலாயினும் பித்தளைக்கட்டில் அமைந்த வைரத்தைவிட பொன் அல்லது வெள்ளிக்கட்டில் உள்ள புஷ்பராகாதிகள் மிகுந்து சோபிப்பதுபோல, ஸ்ரீராமசந்திரமூர்த்தி அவருக்கு அமைந்திருந்த தகப்பன் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் நிலைமையில் கர்மயோக ஒழுங்குபடி பூர்ணமாக நடந்துகாட்டினார்: ஆனால் பீஷ்மருக்கு இதைவிடச் சிறந்து விளங்கும்படியான தருணம் ஏற்பட்டதால் அதில்அவர் கர்மயோகத்தைச் செலுத்திக்காட்டி விளங்கினார். ஆகவே உண்மையில் பீஷ்மரைவிட எவ்வளவோ மேன்மையுடைய ஸ்ரீராமசந்திரமூர்த்தி இந்த விஷயத்தில் பீஷ்மரைவிடத் தாழ்ந்தவர் என்ற குதர்க்கவாதத்திற்கு இடமேகொடுக்கலாகாது. மேலும் பீஷ்மர் தருணங்களுக்கேற்ப கர்மயோக நிலையை இவ்வாறு வெளிப்படுத்தினர் என்பதைப் பின்னர் எடுத்து விஸ்தரிப்போம்.

## சாலிவாகனனைப் பற்றிய ஒரு கதை

## A LEGEND ABOUT SALIVAHANAN

சாலிவாகனன் அயோத்தி வளநாட்டில் ஆதிசேஷன் ஏவலினால் குயவர்பாடியில் புத்ரனாய்ப் பிறந்து வளர்ந்தான். அந்த ஆதிசேஷ மகிமையினால் தானாகவே ஸகல வித்தைகளையுங் கற்றுணர்ந்து பிரபலனானான். சகல கலைகளிலும், சகல தொழில்களிலும் யுத்தத்தில் ஜயிக்கத்தக்க சௌர்ய பராக்கிரமத்திலும், உலகத்தில் முதல்வன் என்று பெயர்பெற்றான். பிறகு அயோத்தியை ஆண்டுவந்த விக்கிரமாதித்திய மஹாராஜனை ஜயித்து, அயோத்தி வளநாட்டைக்கட்டி, சர்க்கரை வழங்கி, ராஜ்யபாரம் வகித்தான். இவன் இப்படி ராஜ்யபரிபாலனம் செய்ய வாரம்பித்தநாள் சாலிவாகன சகாப்தம், அதாவது சாலிவாகன துரைநாள், என்று பெயர்பெற்று எங்கும் வழங்கினது.

சாலிவாகனன் ராஜ்யமாண்டபொழுது, உலகம் பாழடைந்தது. குடிநீதி, துரைநீதி, குருநீதி இல்லாமலும், சிவாலயம், குருவாலயம், மடாலயம் இவைகளை விசாரியாமலும், வாய்க்கால் வரப்பு இன்னதென்று நிகுதி செய்யாமலும், குலமரபு, குலப்பிரிவு கவனிக்காமலும், கடமை கந்தாயம் இன்னதென்றும் இத்தனையென்றும் ஏற்பாடு செய்யாமலும், சாலிவாகனன் ராஜநீதி ஒழுக்கம் தவறி, புவனத்துள்ள ஐம்பத்தாறு தேசங்களிலுமுள்ள ஜனங்களுக்குப் பொறுக்கமுடியாத கஷ்டத்துக்குக் காரணனாய்விட்டான். எங்கும் பிரம்படியும், சண்டையும், வல்லடியும், வழிப்பறியும், துவாபரயுகத்தில் துர்யோதனன் ராஜ்யத்தைப்போலும், திரேதாயுகத்தில் ராவண ராஜ்யத்தைப்போலவும் கொடுமை யதிகரித்து ஜனங்கள் சௌக்கியமென்பதையே இழந்துவிட்டார்கள். மேலும் சாலிவாகனன் சமண மதத்தைச் சேர்ந்தவன். ஸர்வேச்வர தீக்ஷையையும், விஷபுத்தியையும் பாராட்டிக்கொண்டு வந்தபடியால், இப்புவனத்தில் முன் துவாபரயுகத்தில் விக்கிரமாதித்தியன் ஏற்படுத்தி நடத்திவந்த சிவாலயங்கள், விஷ்ணுவாலயங்கள், ஸுப்பிரமணியர் திருவாலயங்கள், மடாலயங்கள், குருவாலயங்களாகிற பஞ்சாலயங்களும் பாழாயின. தண்ணீர்ப்பந்தல், அன்னசத்திரம், சாலைமரம்,



நந்தவனம், கோயில், குளம், தேர், தெரு எல்லாம் அழிந்தன. முன் விக்கிரமாதித்தியன் அளித்த வரிசை மான்யங்களெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டன. சமணமதத்துக்கும் ஸர்வேச்வர தீக்ஷைக்கும் உட்பட்டவரைமாத்திரம் அவன் அநுசரித்துக்கொள்வான். சிவமதம், விஷ்ணுமதம் இவைகளைச் சார்ந்த ஜனங்களை அடித்து ஆக்கினைசெய்து சமணமதத்தில் பலாத்காரமாய்ச் சேர்ப்பான்.

இப்படி அநீதி ராஜ்யத்தில் குடிகொள்ளவே, தேசத்தில் மழையற்று, விளைவற்று, க்ஷாமம் வந்து, சேனைகள் மடிந்து, நாழிகைக்கு ஒரு காடும், காதத்துக்கு ஒருவீடுமாய், ராஜ்யமெல்லாம் அழிந்துபோய், எங்கும் செடி வனாந்தரத்தால் மூடப்பட்டது. தேசமெல்லாம் மெத்த இருளடைந்தது. தவயோகிகளும் சிவயோகிகளும் அரசனுக்குத் தெரியாத வனாந்திரங்களிலும் மலைக்குகைகளிலும் ஒளிந்துகொண்டு, தபஸுசெய்து, ஆதிஸதாசிவனுக்கு முறையிட்டார்கள். ஸதாசிவன் மகாகோபத்தையடைந்து சாலிவாகனனையும் அவன் ஜனங்களையும் அக்கினிமழையால் கொன்றுவிட யத்தனித்தார். ஆனால் சிவன் இப்படி செய்யப்போகிறார் என்கிற சமாசாரத்தை சாலிவாகனன் ஆதிசேஷன் மூலமாக சொப்பனத்தில் அறிந்துகொண்டான். உடனே சமணர்கள் எல்லாரையும் வரவழைத்து, அக்கினிமழை வரப்போகிறதைச் சொல்லி, அவர்களை கற்களால் வீடுகட்டி அதில் குடியிருக்கவேண்டுமென்று உத்தரவிட்டான். கல்வீடு கட்ட சக்தியற்றவர்கள் கங்கை, யமுனை, ஸரஸ்வதி, துங்கபத்ரை, காவேரி, மற்ற நதிகளின் கரையி லிருக்கவேண்டுமென்றும், அக்கினிமழை வந்தவுடன் ஜலத்திலிறங்கிவிடவேண்டுமென்றும் உத்தரவளித்தான். இந்த ஸமாசாரத்தை நிருபமெழுதி ராஜ்யமெங்கும் சமணருக்குத் தெரிவித்தான். அப்படியே எங்கும் வீடுகள், மாடமாளிகைகள், அரண்மனை ஆஸ்தானங்கள் எல்லாம் கல்லால் கட்டப்பட்டன. ஏழைகள் கடல்போல் விசாலமாகவுள்ள நதிகளின் கரையில் காத்துக்கொண்டிருந்தார்கள். சாலிவாகனனும் தன் சதுரங்க சைன்யத்தோடு காவிரியாற்றின் கரையிலிருந்தான். ஸதாசிவனும் நெற்றிக்கண்ணைத் திறந்து அக்கினிமழையைப் பொழிவித்தார். உலகமெல்லாம் அக்கினியால் மூடப்பட்டது. கல்வீட்டில் இருந்தவர்கள், நதிக்கரையிலிருந்தவர்கள் எல்லாரும் பிழைத்துவிட்டார்கள். பரமசிவனுக்குக் கோபம் வெகு தீவிரமாய்விட்டது. உலகத்தை யழிக்கும் பரமேச்வரனாகிய தன் உத்தேசத்துக்கு விரோதமாக சில மனிதர் ஜயித்தனர் என்று நினைக்க அவர் பொறுக்க முடியாத கோபத்தை யடைந்தார். உடனே மண்மாரியைப் பொழிவித்தார். அப்பொழுது கல்வீடுகளிலிருந்தவர்கள் மண்மூடி யிறந்தனர். நதிக்கரையிலிருந்தவர்கள் ஜலத்திலிறங்கிவிட்டதனாலும், பெய்தமண், ஜலத்தில் கரைந்து போனதனாலும், சௌக்கியமாய் நீந்திக் கரையேறிவிட்டார்கள்.

தன்னால் உண்டாக்கப்பட்ட அக்கினிமழை, மண்மழை இவைகளுக்குச் சாலிவாகனன் தப்பித்துக்கொண்டான் என்று அறிந்ததும் பரமசிவன் இவனைக் கொல்வதற்கு வேறு உபாயத்தைத் தேடினார். தீர ஆலோசனை செய்து, புவனத்தைப் பார்த்து ஒருதரம் தியானித்துவிட்டு, மூன்றுபேர்களை சாலிவாகனனுக்கு யமன்களாக சிருஷ்டித்தார். இம்மூவர் யாரெனில், சோழவளநாட்டில் வேளாளர் பாடியில் பிறந்த வீரசோழனும், "லாடவளநாட்டில்" நந்தகோபால இடையர்பாடியில் பிறந்த உலாச்சேரனும், பாண்டிவளநாட்டில் வலையர்பாடியில் பிறந்த வஜ்ராங்கபாண்டியனுமாம். பரமசிவன் சாலிவாகனனுக்கு இம்மூவரில் வீரசோழன் கையினால் மரணம் என்று நிர்ணயித்தார்.

இப்படி ஸதாசிவன் அருளால் பிறந்த சேர சோழ பாண்டியர் அதிவீரபராக்கிரமத்துடன் தங்கள் தங்கள் ராஜ்யத்தை யாண்டார்கள். கொஞ்சகாலத்துக்குள் தங்கள் பிறப்பின் காரணத்தை யறிந்துகொண்டு உத்தேசித்த காரியத்தை முடிக்கப் பிரயத்தனமும் செய்யவாரம்பித்தனர். இதற்காக அவர்கள் "திருமுக்கூடல்" என்னும் நகரத்தில் கூடி, மும்முடியும் ஒருமுடியாய்ச் சேர்ந்து, திருமுக்கூடல் நதியில் ஸ்நானஞ்செய்து,-சிவதரிசனமுஞ் செய்துகொண்டு, சாலிவாகன ஸம்ஹாரத்தைப்பற்றி ஆலோசித்தார்கள். உத்தேசித்த காரியம் முடிவதற்கு சத்துருவின் பலம், தனம், குறை, பூர்வீகம் இவைகளை அறிந்துகொள்ளவேண்டுமென்றும், அப்படி அறிவதற்கு உலகமெங்கும் தாங்களே நேரில் சுற்றிப்பார்க்கவேணுமென்

றும் தீர்மானித்து, அம்மூவரும் தேசமெங்கும் சுற்றிக்கொண்டு கடைசியில் காசிநகரையடைந்தனர். அந்நகர் அப்பொழுது அழிந்து பாழாய்க்கிடந்தது. செடி மரங்களால் மூடப்பட்டு, எங்கும் ஒரே இருள்வனமாயிருந்தது. கங்கா நதியையும், விசுவ லிங்கத்தையும் ஒரு பெரிய வடவிருக்ஷம் விழுதோடிப் படர்ந்து வனமாய்ச் சூழ்ந்துகொண்டிருந்தது. அந்த ஆலவனத்திலம்மூவரும் புகுந்து பார்க்க, அங்கு நதியையும், நதிக்கரையில் ஒரு லிங்கத்தையுங் கண்டனர். நன்கு சோதித்துப் பார்க்குமளவில், அந்த நதி கங்காநதியென்றும், அந்தலிங்கம் விசுவநாதலிங்கமென்றும் தெரிந்தது. அந்த லிங்கத்தினடியில் ஒரு கல்சாஸனத்தை மூவரசரும் கண்டனர். அந்த சாஸனத்தில் கங்காநதியின் விசேஷத்தைப் பற்றியும், விசுவலிங்கத்தின் பெருமையைப் பற்றியும் எழுதியிருந்தது. "இந்நதியில் மூழ்கி, விசுவநாதனையும் தரிசித்து, இவ்வாலவிருக்ஷத்தையும்தரிசித்தால்பஞ்சமாபாதகங்களும், தீராத வல்வினையும், தோஷமும் தீரும். கபிலையில் முளைத்து, காசியில் கொடியோடிப் படர்ந்து, காஞ்சியில் பூத்துக் காய்த்து, மதுரையில் பழுத்த சிவமகிமை என்னும் கனியானது அதிமதுரமானது. இந்த காசித்தலம், காஞ்சித்தலம், மதுரைத்தலம், இம்முத்தலமும் எத்தலத்துக்கும் மெய்த்தலம்." இவ்வாறு பிரஹ்மதேவன் எழுதினதாக அந்தசாஸனம் கூறிற்று. மூவரசரும், இதை வாசித்துப்பார்த்து, ஸந்தோஷமடைந்து, கங்காநதியில் புனலாடி, விசுவலிங்கத்தையும் வடவாலவிருக்ஷத்தையும் தரிசித்துக்கொண்டு, காசியைவிட்டுக் காஞ்சிநகரையடைந்தனர்.

காஞ்சிமாநகரும் அதே ஸ்திதியிலிருந்தது எட்டிவனத்தால் மூடப்பட்டு, இருளடைந்த பெருங் கானகமாயிருந்தது. மூவரும் அதற்குள் பிரவேசித்து, கம்பமா நதியையும், கம்பலிங்கத்தையும் கண்டுபிடித்து, அந்த லிங்கத்தினடியில் ஒரு கல் சாஸனத்தையும் கண்டார்கள். அதில், "இந்தக் கம்பலிங்கம் கிருதயுகத்தில் தேவேந்திரன் அதிகாரத்தில் பிரஹ்மப்ரதிஷ்டையானது. இந்த ஸ்தலம், இதைச் சேர்ந்த 56 தேசங்கள் இவைகளின் பூர்வசரித்திரம், பூர்வத்தில் ஸுப்ரமணியர் அருளால் கனப்படுத்தப்பட்ட நந்திகோத்ரம் வீரபாகு வம்சக் கைக்கோளரில் லக்ஷம் தளவீருக்கு முன்னேறிய 'கச்சிவீர காமாக்ஷிராயன்' என்பவனுக்குத் தெரியும். காஞ்சி ஸ்தலத்தைக் கண்ணால் கண்டு, கம்பமாநதியில் தீர்த்தமாடி கச்சி ஏகாம்பரநாதரையும், காமாக்ஷியம்மையையும் தரிசித்தால் பஞ்சமா பாதகங்களும், தீரா வல்வினையும், நவ தோஷங்களும் தீரும்" என்று வரையப் பெற்றிருந்தது. இதைக்கண்ணுற்ற வம்மூவரும், சாஸனத்திற் கூறிய கைக்கோள தளவீரனைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு, அந்தக் காஞ்சிவனத்தின் ஒரு பாகத்தை யழித்து, அங்கோர் குடிசைகட்டி அதில் குடியிருந்தால் அங்கே வரும் மனிதர்களின் உதவியைக்கொண்டு, அவனைக் கண்டுபிடிக்கலாம் என்று தீர்மானித்து, அவ்வாறு எட்டிவனத்தை வெட்டினர். அப்படி வெட்டி வழி பண்ணும்போது இவர்களுக்கோர் ஸங்கடம் நேர்ந்தது. அதாவது, அந்த வனத்தைக் காத்துக்கொண்டிருந்த வீரமாரி என்னும் துர்க்கை ரண வீரபாக்கிரமத்துடன் சீறி இவர்கள் முன் வந்து, "நான் இந்தவனத்து அருமாரி. எனக்கு உக்கிரமாரி, ரணமாரி, கருமாரி என்றும் பெயர். சதுர்யுகங்கள்தோறும் காஞ்சிஸ்தலம் எனக்கு ஜன்மகாணியாட்சியாயிருக்க, இப்படிப்பட்ட என் மகிமையறியாமல் என் வனத்தை யழித்தவுங்களைப் பலிகொள்வேன்" என்று கர்ஜித்தது.

மூவரசரும் பயந்துவிட்டார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் அவர்கள் திகைத்து நிற்கையில், அதிருஷ்டவசமாய் ஒரு விசேஷம் நடந்தது. அந்த எட்டி வனத்தில் ஒரு மூலையில் ஒரு ஊர்கட்டி, அதில் பலகுடிகளையேற்றி, எப்பொழுதும் கம்பமாநதியில் ஸ்நானம் செய்து, எட்டித்தழை பறித்து, ஏகம்பலிங்கத்தை அர்ச்சித்து, "எப்பொழுது சமணராஜன்தொலைவான்? எப்பொழுது தர்மதுரையும் வருவான்? எப்பொழுது இப்புவனம் கஷ்டம் தீர்ந்து ஸுகத்தைப்பெறும்? இந்த வனம் எப்பொழுது நகராகும்? இந்த ஆலயம் எப்பொழுது விளங்கும்?" என்று ஒவ்வொருநாளும் பிரார்த்தித்துக்கொண்டு வந்த கச்சிவீரன் என்னும் கைக்கோளனொருவன் வழக்கம்போல பூஜா திரவியங்கள் சேர்க்க, கையில்கூடையுடன் வனத்துக்குள் வந்தான். அங்கு காடு அழிந்திருப்பதையும், ஏகாம்பரலிங்கக்கண் தோண்டியிருப்பதையும், கண்ணுற்று ஆச்சரியப்பட்டு, யாரிப்படிச் செய்தார்கள் என்று யோசிக்கும்பொழுது, ஒரு மரத்தடியில் அந்த மூவரசர் துர்க்கையோடு சம்பாஷித்துக்கொண்டு நிற்பதைக்கண்டான். உடனே அங்கேபோய் அவர்களை யாரென்றுகேட்க, அதற்கு அவர்கள் தங்கள் பிறப்புவளர்ப்பையும், தாங்கள் அங்கே வந்த காரணத்தையும், ஏகாம்பரலிங்கத்தினடியிற்கண்ட சிலாசாஸன விருத்தாந்தத்தையும், கச்சிவீரனைக்காணக் காட்டையழித்ததையும், காளிதடுத்ததையும் புகன்றார்கள். உடனே கச்சிவீரன் தன்னை இன்னானென்று அவர்களுக்கு அறியப்படுத்திவிட்டு, காளியையும் ஸமாதானஞ் செய்யவாரம்பித்தான். "சதுர்யுகமாக சிவஸுப்ரமண்யனருளால் எனக்கும் உன்னைப்போல் இக்காஞ்சித்தல ஆட்சி கிடைத்திருக்கிறது. இப்படியிருக்க, என் சினேகிதர்களை நீ வருத்துவது நியாயமில்லை" என்று சொன்னான். உடனே காளிக்குக் கோபம் பிறந்துவிட்டது. ஆனால் தன் வனம் வெட்டின பழிக்கு ஆயிரம் பேரைப் பலிகொடுக்கும் பக்ஷத்தில் தான் திருப்தியடைவதாகச் சொன்னது. அதற்குக் கச்சிவீரப்பன், ஆயிரம்பேரை மாத்திரமல்ல, ஆயிரத்தெட்டு பேரைப் பலிகொடுக்கிறேன். தவிரவும், என் வம்சபரம்பரையில் வருஷந்தோறும் உன்னையும் என் குலதெய்வமாகக் கொண்டாடுகிறேன். மேலும், இப்புவனத்து அரசர்கள் சண்டைசெய்யும்போது உனக்கு ரணகளபலியும் அவர்களைக்கொண்டு நடத்திவைக்கிறேன்" என்று சபதங்கூறினான்.

காளி பிறகு கச்சிவீரனை மாரிக்குளமென்னும் தன் தடாகத்துக்குக் கூட்டிப்போய் "முன் சாலிவாகனனுக்கும் விக்ரமார்க்கனுக்கும் நடந்த சண்டையில் ஓடின படைகளின் ஆடையாபரணமும், ஜோடிப்பு முஸ்திப்புகளெல்லாம் ஒருபெட்டியில் போட்டு, உன் முன்னோனொருவன் இந்தக் குளத்தடியில் ஒரு குகை செய்து, அதற்குள் அப்பெட்டியை வைத்து, குகையையும் நன்றாய் மூடி முத்திரைபோட்டு வைத்திருக்கிறான். இந்தப்பெட்டியை எடுத்தால் சாலிவாகனவதம் என்னும் உன் காரியம் எளிதில் கைகூடும்" என்று சொல்லி, அந்த இடத்தைக் கச்சிவீரனுக்குக் காண்பித்தது. அவனும் உடனே குகைக்குள்புகுந்து, பெட்டியைவெளியே எடுத்துவந்து, கருமாரிபாதத்தில் அதைவைத்து வணங்கி நின்றான். பிறகு இருவரும் ஏகாம்பரேச்வரர் ஸந்நிதிக்குச் செல்லவும், அங்குமாரி அவனுக்கு முன் திரேதாயுகத்தில் தேவேந்திரனதிகாரத்திலுண்டுபண்ணின பாதாள குகைதளவரிசை ஸ்தலத்தைக்காண்பித்துவிட்டு மறைந்தது. பிறகு கச்சிவீரன் மூவரசரையடைந்து, பெட்டியையும் அவர்களிடம் காண்பித்து, நடந்தவிர்த்தாந்தத்தையும் சொல்லிக்கொண்டிருக்கும்போது, ஒரு தீக்ஷிதர் உருவங்கொண்டு, பரமசிவன் அங்கு தோன்றினார். குரு சைவாசாரியர் என்று பெயர்கொண்ட அந்த தீக்ஷிதர் கச்சிவீரனைக் கம்பமாநதிக்கு அழைத்துப் போய் ஸ்நானம்செய்வித்து, அவனுக்கும் அவன் மனைவி மகன் மருமக்களுக்கும் உபதேசமுஞ் செய்வித்து குருப்பிரஸாதமும் கொடுத்தார். பிறகு பச்சைக்குடிசையொன்று கட்டச்செய்து, அதற்குள் தானிருந்துகொண்டு, குளத்தடியிற் கண்ட பெட்டகத்தைக் கொண்டுவரச்சொல்லி, அதைத் தான் திறந்துபார்க்க, அதனுள் ஆராதனபூஜைப்பெட்டி ஒன்று, வீரகட்டாரி ஒன்று வீரவாள் ஒன்று, பிடிசம்பு ஒன்று, பாதாள தளவரிசை முத்திரைக்கோல், பாதாளதளவரிசைசோதிக்கும் பஞ்சமுத்திரிகை, கைகட்டப்பாரை, பதினாயிரம்பொன் இவைகளிருந்தன. உடனே பூஜைப்பெட்டியைத்திறந்து, அதற்குள்ளிருந்த ஸுப்ரமண்யர், வள்ளியம்மை, தெய்வயானை, சிதம்பரேசர், சிவகாமி, விக்கினேசர் இவ்வாறு திருவிக்கிரகங்களையும், சிவலிங்கம், திருவெண்ணீறு, ஏகமுக ருத்ராக்ஷம், வலம்புரி சங்கு, நணுவில்லாப்பிரம்பு, சிவமாலை, ஸமயாசார சற்சமய முத்திரைமோதிரம் முதலியவைகளைக் கண்டார். இந்த விக்கிரகங்களை அவர்புண்ணியாங்கம் செய்வித்து, பூஜைப்பெட்டிக்கு ஆராதனமும்செய்தார்.பிறகு குருசைவாசாரியர் உத்தரவின்படி வீரப்பன்தன்மகன் முத்துவீரப்பன்வசத்தில்பாதாளதளவரிசைமுத்திரைக்கோலையும், கட்டப்பாரையையும், சற்சமய முத்திரைமோதிரத்தையும் ஒப்புவித்தான்.பிறகு மரத்தடியில் காத்திருக்கும் மூவரசரையும் அழைத்துக்கொண்டுபோய் ஏகாம்பரர்காமாக்ஷியிருக்கும் இடத்துக்குச்சென்று, அங்குள்ள பாதாள தளவரிசைப் பட்டயத்தைப் படித்துக் காண்பித்துவிட்டு, குரு சைவாசாரியர் மறைந்தார்.

பிறகு காமாக்ஷிசிலை விக்கிரஹத்தைப் பிரதிஷ்டைசெய்து, பூஜைநைவேத்தியமுமுடித்து,

முத்துவீரப்பன் கட்டப்பாரையினால் பாதாளதளவரிசையைச் சோதித்து, முத்திரைக்கோலினால்கதவைத்திறந்து, குகையினுள்ளேபுகுந்து, பொற்பட்டயத்தை எடுத்துக்கொண்டு வெளியேவந்து, மூவரசர் முன் வைத்தான். அதில் "இப்புவனத்தை திரேதாயுகத்தில் தக்கமுனி, பத்மாஸுரன், தேவேந்திரமகாராஜன், இரணியாஸுரன், பிரஹ்லாதன், பரசுராமர், முசுகுந்தன், அரிச்சந்திரன், லோஹிதாக்ஷன் ஆண்டனர். பிறகு தசரத சக்கரவர்த்தியாண்டனர். துவாபரயுகத்தில்மஹாபலி, பாணாஸுரன்முதலியவர்கள் ஆட்சி செய்தனர். பிறகு சந்திரகுலத்தில் சந்தனு, துர்யோதனன், தர்மர், பரீக்ஷித்து ஜனமேஜயன், விக்ரமார்க்கன் ராஜ்யபரிபாலனம் பண்ணினார்கள். பிறகு விக்ரமார்க்கன் சாலிவாஹனனால் கொல்லப்பட, அவன் நடத்தி வந்த ராஜ்ய ஒழுக்கம் சீர் குலைந்தது" என்று எழுதப்பட்டிருந்தது. அவ்விபரத்தை வாசித்தான பிறகு, பொற்பட்டயத்தைப் பெட்டியில் வைத்துவிட்டு, நால்வரும் புறப்பட்டு காசிக்குச் சென்று, அங்கு விசாலாக்ஷியம்மையின் சிலையை ஸ்தாபித்து, பூஜை நைவேத்தியமும் செய்து, அங்குள்ள பாதாள தளவரிசைக் குகையிலிருந்து, ஒரு வெள்ளையானையையும், நீலமேகவர்ண பஞ்சகல்யாணிக் குதிரையையும், சீராச்சோடையும், விக்கிரமார்க்கன் வைத்திருந்த கோடி திரவியத்தையும் எடுத்துவந்து வீரசோழன் வசத்தில் ஒப்புவித்து, "நீ இவை கொண்டு சாலிவாகன சங்காரஞ் செய்து, வெற்றிவாகைமாலைசூடி, ராஜ்யபாரமும் முடியும் பெறுவாய்" என்று கச்சிமுத்து வீரப்பன் வாக்குக் கொடுத்தான். பிறகு எல்லாரும் காசியைவிட்டுப்புறப்பட்டு, காஞ்சியை யடைந்து, அங்கு சிவதரிசனம் செய்துவிட்டுப் பிறகு கூடுதுறையூர் வனத்துக்கு வந்தார்கள்.

அங்கு சாலிவாகனனை சங்காரஞ்செய்வதற்கு ராணுவப்படை கூட்ட ஏற்பாடு செய்தனர். உலகத்திலுள்ள சிவமதம், விஷ்ணுமதம் இவைகளுக் குட்பட்டவரனைவருக்கும், பன்னிருஜாதி கம்பளத்தவருக்கும் வீரசோழன் நிருபம் விடுத்தான். அவ்வாறே ராணுவப்படை கூடுதுறையூரில் கூடிற்று. இவ்விஷயத்தை, அயோத்திவளநாட்டில், போஜராஜபுரத்திலிருக்கும் சாலிவாகனன் கேள்விப்பட்டு, இந்த சத்துருக்களிடமிருந்து எங்கேபோய் மறைந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று யோசிக்கும்போது, திருச்சினாப்பள்ளிக்கோட்டை ஸரியான இடமென்று அறிந்துகொண்டான். முன் திரேதாயுகத்தில் ராவணனால் கட்டப்பட்டதும், 'திரிசிரஸ்' என்னும் ராக்ஷஸனால் ஆளப்பட்டதுமான அந்தக் கோட்டை, கெட்டிமன்னருக்கல்லாமல், முடிமன்னர் இருந்து அரசாண்டால் முடிபெறுதென்றும், அது ஒருவராலும் ஜயிக்கமுடியாதென்றும் அறிந்து, வீரசோழனை படைமுன்னுக்கு அந்தக் கோட்டையிலிருந்தே எதிர்க்கவேண்டுமென்றும் யோசித்துக்கொண்டு தன்னுடைய சமணர்களுடன் திருச்சிக்கோட்டைக்கு வந்து விட்டான்.

இஃதிப்படியிருக்கமூவரசரும் பன்னிருவகை ஜாதி கம்பளத்தவரையும், பதினெண்சாதி பலகுலத்தவரையும், கூடுதுறையில் கூட்டி, சண்டைக்குமுன் ஸமாதானம் பேசும் பொருட்டு கச்சிவீரனை தூதாக அனுப்பினர். அவன் போய் சாலிவாகனனை யணுகி, "சமணமதம், சர்வேச்வரதீக்ஷை, இவைகளை விட்டு, சிவ விஷ்ணுமதத்துக்குள்பட்டுவீரசோழனுக்கு 'பாதி பவிசும்' கட்டிக்கொண்டு வரவேணும். தவிர, போஜராஜபுரத்துக்குத் திரும்பிப் போகவேண்டும். இல்லையாகில் சண்டைக்குத் தயாராயிருக்கவேண்டும்" என்று சொன்னான். அதற்கு அவன் மறுதளித்து, அம்மன்னர்கள் தன்னுடன் சமர் செய்து, தன்னை ஜயித்து, சமணமதத்தையும் சர்வேச்வர தீக்ஷையையும் விடுவித்து, தங்களுக்கு ஆட்படுத்திக்கொள்ளட்டும். "இல்லாவிட்டால், அவர்கள் என்பக்கம் சேர்ந்து, சமணமதத்தை யனுசரித்து, ஸர்வேச்வர தீக்ஷைக்குட்பட்டு, எனக்கும் அஞ்சி ஆட்படவேண்டும்" என்றும் சொன்னான். இதைக்கேட்டதும் அரசர் கோபித்து என்னசெய்ய வேண்டுமென்று கச்சிவீரனைக் கேட்டபொழுது, அவன் இன்னொருதடவைத்தூதுபோய் சமருக்கு நாளும் நிலையும் ஏற்படுத்த வேணுமென்று சொன்னான். அவர்கள் அவனையே மறுபடி ஸ்தானாதிபதியாக அனுப்பினர். சிறிது ராணுவத்துடன் திருச்சினாப்பள்ளியை யடைந்து போஜனைக் கண்டு, விஷயத்தைச் சொல்லும்போது, போஜன் பங்குனிமாஸம், ஏழாந்தேதி, குருவாரம், அபரபக்ஷம், த்ரயோதசியில், மூவரசர் கூடுதுறை கடந்து திருவானைக்காவுக்கு வரலாமென்றும், அதேகாலத்தில் தான் திருச்சினாப்பள்ளியை விட்டு சிந்தாமணிக்கு வருவதாயும், மற்று நாள் சூரியவுதயத்தில் சமராரம்பிக்கலாமென்றும் தீர்ப்புச் செய்து கச்சிவீரனை யனுப்பினான்.



உடனே,சேரசோழபாண்டியர் யுத்தத்துக்கு ஏற்பாடுசெய்தனர். ஜயமடைவதற்கு ராணுவத்தின் உத்ஸாஹமும் பலமும் அவசியமென்று தெரிந்து, அவர்கள் முன் காசியிலிருந்து கொண்டுவந்த மூன்றுகோடி திரவியத்தை "சம்பளம் சரிகையாக" செலவழித்து, அவர்களுக்கு அம்பு, வில், வெடிதுப்பாக்கி, "கதணை சாகோவை, சஞ்சாலிசக்கரம், சீனிகுழல், பீரங்கி, படைவாணம், வெடிவாணம்" முதலிய முஸ்திகளைக் கொடுத்துத் திருப்திசெய்தனர். உடனே வண்டி, தேர், காலாள், யானை, பரி, இவைகளோடு கூடிய மும்மன்னர் சேனை கூடுதுறையைவிட்டு சீக்கிரத்தில் திருவானைக்காவின் வனம் வந்து சேர்ந்தது. சேர்ந்ததும், வெகு உத்ஸாஹத்தோடு "அறிய திருக்கம்பம்" நாட்டி, "அறியகுருக்ஷேத்திர ரணவீரபத்திரகாளிக்கு ரணகளப் பொங்கல் பலிகொடுத்து," வீரசோழனுக்கு வீரப்பட்டம் கட்டினது. வஜ்ராயுதத்தை கையில்தாங்கி "சீராச்சோடும்" தரித்து, வீரசோழன் அதிசூரனாக விளங்கினான். உடனே யுத்தத்துக்குப் புறப்பட, வீரகொம்பு, வீரகாளம், வீரசங்கு, வீரபேரிகை, வீரமல்லாரி, வீரமுரசு முழங்கின. வீரமேளம், வீரவாத்தியம் சப்தித்தன. ரணவீரகுளவை யிடப்பட்டது. இவைகளின் மத்தியில் வீரசோழன் ரணவீரபராக்கிரமத்துடன் படையை யெழுப்பி, சுக்கிரவார சூரிய உதயத்தில் திருச்சினாப்பள்ளிக் கோட்டையை யடைந்து முற்றுகை போட்டான்.

அகோரயுத்தம் ஆரம்பித்தது. இருதிறத்தாரும் சூரர்களானபடியால் ஜயம் யாருடையதென்று வெகுநேரம் சந்தேகமாகவிருந்தது. இப்படியிருக்கும் பொழுது மும்மன்னருக்கும் அதிர்ஷ்டவசமாய் ஜயத்துக்குவேண்டிய ஒரு பெரிய சாதனம் கிடைத்தது. அதாவது, காஞ்சீபுரம் தளவிசுப்பட்டயத்தில், ஸ்ரீராமர் திருச்சினாப்பள்ளிக்குள் கொண்டுபோய் விடுகிற ஒரு குகையைப்பற்றி யெழுதியிருந்தார். வீரசோழன், அந்த குகையை யிப்பொழுது கண்டுபிடித்து, அதின் வழியாய்ப்போய், சிந்தாமணி வாசல் கதவைத்திறந்து, உள்ளே பிரவேசித்து, சாலிவாகன சைன்யத்துடன் சண்டைசெய்து, சாலிவாகனனையும் சம்ஹாரம் செய்தான். அந்த ரணகளத்திலிருந்து தப்பித்தவர்கள் அரிது. சாலிவாகனபோஜனுக்கு குதிரைவேலைபார்த்த சமணப்பறையன் வல்லான் என்பவனொருவன் மாத்திரம் தப்பிப்பிழைத்து, 100 சமணரோடு ஓடிப்போய், கீழ்சமுத்திரக் கரையிலுள்ள ஒரு தீவை யடைந்தான். சேர சோழபாண்டியர் கோட்டையுட்புகுந்து, கொள்ளையிட்டு, அழித்து, கோட்டையையும் கவுல் வாங்கி, வெற்றிக்காளமூத, வெற்றிமுரசறைய, வெற்றி வாகை மாலைசூடி, வீரசகண்டி வலம்புரிமுழங்க, விருது ரணவீரக்கொடியுடன் வீரகேளிகையாட, ரணவீரமேளமுழங்க, கோட்டையை கைவசப்படுத்திக் கொண்டார்கள். பிறகு திருச்சினாப்பள்ளிச் சீமையில் தோரணம்கட்டுவித்து, குடிபலருக்கும் சர்க்கரைவழங்கி, ராணுவத்துக்கெல்லாம் உடுகரை பாக்குவெற்றிலை வெகுமானம் செய்து, ஜனங்களின் நன்மையையே கோரிக்கொண்டு, வஜ்ராங்கபாண்டியன் மதுரையிலும், உலாச்சேரன் கொங்குதாராபுரத்திலும், வீரசோழன் சோழவளநாட்டிலும், அரசாண்டு வந்தனர்.

V. ரங்காச்சாரி, எம். ஏ., எல். டி.

---

**சென்னையில் ஸ்திரீகளின் காலேஜ்:**—சென்னையிலுள்ள உபாத்தினிமார்களின் போதனாமுறை ஸ்கூலை, காலேஜாகஉயர்த்த சென்னைக்கவர்ன்மெண்டார் தீர்மானித்து விட்டார்கள். அந்த ஸ்கூல் இனிமேல் சென்னை ஸ்திரீகளின் காலேஜ் என்ற பெயருடன் விளங்கிவரும். இந்த வருஷத்திலேயே அதில் ஜூனியர் இண்டர்மீடியேட் வகுப்பு ஒன்று வைத்து நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் கூடிய சீக்கிரத்தில் செய்யப்படும். இதற்காக யோக்கியதை பெற்ற இரண்டு ஆங்கில உபாத்தினிகளை இங்கிலாந்திலிருந்து வரவழைப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த காலேஜுக்கு இன்னும் சில கட்டடங்களும் விளையாடுமிடங்களும்அவசியம்வேண்டியிருப்பதால் ஜெனரல் ஆஸ்பத்திரி கட்டுவதற்கு ஸ்பர்டாங்கில்கவர்ன்மெண்டாரால்விசர்லமான இடம் வாங்கப்படும். அப்பொழுது அங்கு இக்காலேஜுக்கு வேண்டிய இடம் கிடைக்கும்.

# ஆலய வழிபாடு

## TEMPLE WORSHIP

எந்த இடத்தில் கோயில் கட்டவேணும் என்பது பூபரிக்ஷை சாஸ்திரம். காமிகாகமத்தில் பன்னிரண்டு வாஸ்து பேதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்படித் தகுந்த பூமியை பரிக்ரஹம் செய்து, பிறகு பாலஸ்தாபனாலயத்தை நிர்மாணம் செய்து, பிறகு ஆலயத்தைக் கட்டி வாஸ்து சாந்தி செய்து ப்ரவேசித்தல் வேண்டும். இன்னும் கூட நம்முடைய சில்பாசாரிகள் ஆலய நிர்மாணம் விக்ரஹ வார்ப்பு முதலான வித்தைகளில் பரம்பரையாக வந்த புத்தி கௌசலத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் காலத்தின் போக்கைக் கவனித்தால் நாம் நம்முடைய கடமைகளையும் நாகரீகத்தின் பெருமையையும் பரமபுருஷார்த்தத்தையும் மறந்தோமேயானால் சில்பாசாரிகள் அவர்களுடைய பழைய வித்தைகளை கைவிட்டு விடுவார்கள் என்பதில் ஐயமுண்டோ? இப்பொழுதே அநேக வித்தைகளையும் வழிகளையும் மறந்துவிட்டார்கள். ஆலயங்களில் ப்ராகாரங்கள், கோபுரங்கள், த்வஜங்கள், ஸபைகள், மண்டபங்கள், விமானங்கள் முதலியன அமைக்கும் வழிகளைப் பற்றிச் சொல்லும் விதிகளை வாசித்தால் மிகவும் ஆச்சர்யகரமாக இருக்கின்றன. அவைகளைப் பற்றி இவ்விடத்தில் விவரிக்கச் சாத்யமில்லாததால் வேறு சில விஷயங்களைக் கவனிப்போம்.

இப்படி நிர்மாணம் செய்யப்பட்ட கோயில்களில், ஈச்வரமூர்த்திகளை ஸ்தாபித்து த்யானிக்கவேண்டியது. விக்ரஹாராதனத்தின் அவச்யத்தைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறோம். இதுவே ஒரு ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது.

தைவதம்
அக்னௌ தேவோ த்விஜாதீனாம் முனீனாம் ஹ்ருதி
ப்ரதிமாஸ்வ ப்ரபுத்தானாம் ஸர்வத்ர ஸமதர்சினாம்

ரகுநந்தனர் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:—

சின்மயஸ்யா த்விதீயஸ்ய நிஷ்கலஸ்யா சரீரிண:
உபாஸகானாம் கார்யார்த்தம் ப்ரஹ்மணோ ரூபகல்பனா

இதே தாத்பர்யத்தைத் திருவுந்தியாரிலும் உய்யவந்த தேவநாயனார் வெளியிட்டிருக்கிறார்.

“ அகள மாயாருமறிவரிதப் பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத்தந்த தென் றுந்தீபற.”

ஆனால் நாமிஷ்டமானபடி மூர்த்திகளைக் கல்பிக்கக்கூடாது. வாக்குக்கும் கண்ணுக்கும் மனதிற்கும் எட்டாத விஷயங்களில் சாஸ்திரமே ப்ரமாணமாதலால், சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட மூர்த்திகளையே வணங்கி த்யானித்தல் வேண்டும். ஸர்வாங்க ஸுந்தரமான, பரிபூர்ண கலைகளையும் கருணையும் பொருந்திய மூர்த்திகளை பக்திசெய்து வணங்கும் வழிகள் நமக்குப் பெரியோர்கள்மூலமாகத்தெரிந்தும் நாம் சஞ்சலப்படுவானேன்? நடராஜமூர்த்தி, பராசக்தியாகிற ராஜராஜேச்வரிமூர்த்தி, வேணுகோபாலமூர்த்தி கோதண்டராமமூர்த்தி, ஸுப்ரமணியமூர்த்தி முதலிய மூர்த்தி வைபவங்களைப்பற்றி எல்லோர்களுக்கும் ஸ்வானுபவம் இருக்குமாதலால் நான் சொல்ல வேண்டியதே இல்லை. லிங்கங்களைப்பற்றிமட்டும் சிலவிஷயங்களைச் சொல்லுகிறேன். லிங்கம் என்பது அடையாளம். ஈச்வரனுடைய அடையாளம் என்று தாத்பர்யம். சிலர் வேதிகையில் ப்ரகாசிக்கும் அக்னியின் உருவத்திலிருந்து லிங்கத்தின் உருவம் நிர்மாணம் பண்ணப்பட்டதாக அபிப்ராயப்படுகிறார்கள். ஸதாசிவ லிங்கம் என்பது விச்வரூபம். அண்டலிங்கம் என்பது பூமண்டலத்தை ஆவுடையாராகவும் ஆகாயத்தை லிங்கமாக பாவனைசெய்தல். பிண்டலிங்கமென்பது மனித தேகமேயாம், ஆத்மலிங்கம் என்பது ஜீவனுக்குள் அந்தர்யாமியாயுள்ள பரதத்வம். ஸ்தாவர லிங்கம் என்பது கோபுரமே. பரார்த்த லிங்கம் என்பது கர்ப்பக்கிருஹத்திலுள்ளது. இது ஐவகைப்பட்டது என்று சொல்லுகிறார்கள். ஸ்வயம்பு லிங்கமென்பது தானே தோன்றியது. ஹிமாசலத்தில் அமரநாதத்தில் உள்ள ஸ்வயம்பு லிங்கத்தைப் பற்றி நாம் எல்லோரும் கேட்டிருக்கிறோம். கணலிங்கம் என்பது சிவகணங்களாலே ஸ்தாபிக்கப்பட்டது. தைவிக லிங்கமாவது தேவர்களாலே ஸ்தாபிக்கப்பட்டது. ஆர்ஷ லிங்கமாவது ரிஷிகளாலே ஸ்தாபிக்கப்பட்டது. மானுஷலிங்கம் மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இஷ்டலிங்கமானது ஒவ்வொருவரும் பெரியோர்களிடத்தில் வாங்கிப் பூஜிக்கும் லிங்கம். இது பாணலிங்கம், ஸ்படிக லிங்கம், ரத்னலிங்கம், லோகலிங்கம், சைல



லிங்கம், க்ஷணிகலிங்கம் என்று பலவகைப்படும். ஆகமங்களில் லிங்க லக்ஷணங்கள் வெகு விரிவாய் சொல்லப் பட்டிருக்கின்றன. இதுவுந் தவிர பார்த்திவலிங்கம், அப்புலிங்கம், அக்னிலிங்கம், வாயுலிங்கம், ஆகாசலிங்கம் முறையே திருவாரூர், திருவானைக்காவல், திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் என்ற ஸ்தலங்களில் விளங்குகின்றன. ஞானலிங்கம் என்பது பரப்பிரம்மமேயாம். பரிவார தேவதைகள் ஸ்தாபனத்தைப்பற்றி வெகு விஸ்தாரமாக ஆகமசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இது விஷயங்களை யெல்லாம் நாம் ஸம்பூர்ணமாகத் தெரிந்து கொள்ளவேண்டியதான போதிலும் இந்த வ்யாஸத்தின் அளவுக்குள் வெளியிட முடியாததால் எல்லோரும் ஆகம சாஸ்திரங்களைப் படிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம். ஆனால் ஒரு விஷயம் மட்டும் மறக்கக்கூடாது. எல்லாமூர்த்திகளும் ஸத்யமூர்த்திகள் என்றும், பரம்பொருளானது ஜீவர்கள் பேரின்ப வீட்டை அடையும்படி கருணைகூர்ந்து ஸ்வீகரித்துக்கொண்டஉருவங்கள் என்பதிலும் ஸந்தேகமில்லை. சிவன் விஷ்ணுவை அர்ச்சித்து ராம மந்திரத்தை எல்லோருக்கும் உபதேசிக்கிறார் என்றும், விஷ்ணு சிவனைப் பூஜைசெய்தார் என்பதும், எல்லா தேவர்களும் அம்பிகையை வணங்குகிறார்கள் என்பதும், இதையேபோதிக்கின்றது. “ஹரியும் சிவனும் ஒன்று, அறியாதவன் வாயிலேமண்ணு” என்று பழமொழி கேட்டிருக்கிறோமல்லவா? இதையே பின்வருமாறு வெகு அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

சிவாய விஷ்ணுரூபாய சிவரூபாய விஷ்ணவே [சிவ:
சிவஸ்வ ஹ்ருதயம் விஷ்ணு: விஷ்ணோஸ்ச ஹ்ருதயம்
யதாந்தரம் நபச்யாமி சிவகேசவயோ: ஸதா

ஆகையால் நாமெல்லோரும் சைவவைஷ்ணவ த்வேஷங்களையெல்லாம் ஒழித்து அவரவர் ஜன்மாந்தர வாஸனைகளுக் கனுகுணமான மூர்த்திகளைப்பூஜித்து தத்வமறிந்து மனதுருகி பரவஸ்துவை தர்சித்து பேரானந்தத்தைப் பெறவேண்டியது ஜன்மமெடுத்ததின் ப்ரயோஜனம்.

நம்முடைய புத்தகங்களில் ஆலயதரிசனவிதியைப்பற்றி வெகு விரிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். வைஷ்ணவாலயங்களிலும் சைவாலயங்களிலும் வெவ்வேறு தரிசன விதிகள் சாஸ்திரங்கள் மூலமாயும் ஸதாசாரம் மூலமாகவும் வழங்கிவருகின்றன. சைவர்களுக்கு விபூதி உருத்திராட்சம் எவ்வளவு அவச்யம் என்று தெரியுமாதலால் அதை நான் விரிவாக உரைக்க இல்லை. நித்யகர்மாக்கள் சரிவரசெய்யவேண்டிய தென்பதும் நன்றாகப் புலப்படுகிறது. அவைகளைச் சரிவரச் செய்யாமல் ஈச்வரனைவசப்படுத்திக் கொள்வது அஸாத்யமான காரியம்.

ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ:

என்று கீதாசார்யர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். இவைகளை யெல்லாம் செய்து பிறகு ஆலய கைங்கர்யங்களையும் நாம் செய்ய வேண்டும். நந்தவனம் வைத்தல், மாலைகட்டுதல், தூபமிடுதல், திருவிளக்கேற்றுதல், தோத்திரங்கள்பாடல், ஆனந்த நடனம்செய்தல், முதலியவை கைங்கர்யங்களாகும். பூஜா த்ரவியங்களை சேகரித்தல் ஒரு முக்கியமான பணிவிடையாகும். பாத்தியம், ஆசமனீயம், அர்க்யம், அபிஷேகம், பஞ்சாமிருதம், நைவேத்யம், தாம்பூலம் முதலியவைகளை சேகரிக்க வேண்டியது ஒரு முக்யமானகடமை. அபிஷேகக்ரமங்களைப் பற்றியும், அர்ச்சனை ப்ரகாரங்களைப்பற்றியும், உத்ஸவங்களைப்பற்றியும், ஆகம சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட விஷயங்கள் அபாரமாகயிருத்தலால் அவைகளை இவ்விடத்தில் விவரிக்கமுடியாது. ஆலயங்களுக்குள் நாம் போனால் வணங்கவேண்டிய முறைகளையும் சாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன. சிவாலயங்களில் பலிபீடத்தருகில் நமஸ்கரித்து பிறகெழுந்து ப்ரதக்ஷிணம் செய்து பிறகு ஸந்நிதானத்திற்கு போகவேண்டும். அபிஷேக காலத்தில் உட்ப்ராகாரத்திலே பிரதக்ஷணம் நமஸ்காரம் முதலானவை பண்ணலாகாது. ஸோமவாரம், அஷ்டமி, பிரதோஷம், பௌர்ணமை, அமாவாஸை, திருவாதிரை, உத்தராயணம், தக்ஷிணாயனம், சித்திரைவிஷு, ஐப்பசி விஷு, மாதப்பிறப்பு, சூரியக்ரஹணம், சந்திரக்ரஹணம், சிவராத்ரி முதலிய புண்யகாலங்களில் சிவதர்சனஞ் செய்தல் மகாபுண்யத்தைக் கொடுக்கும்.

நம்முடைய ஆலயங்களில் ஏற்பட்டிருக்கும் நித்யபூஜாவிதிகள் உத்ஸவங்கள் இவைகளின் தாத்பர்யத்தை நாம் நன்குணர வேண்டும். அபிஷேகம், அலங்காரம், ந்ருத்தம், கீதம், வாத்யம், புஷ்பங்கள், நைவேத்தியம், முதலியவை ஈச்வரனுடைய உபயோகத்துக்கல்ல.

ஸ்வச்சஸ்ய பாத்யமர்க்கியம்ச சுத்தஸ்யாசமனம் குத:
நிர்கந்தஸ்ய குதோ தூப: ஸ்வப்ரகாசஸ்ய தீபகம்
நிர்மலஸ்ய குத: ஸ்நானம் வஸ்த்ரம் விச்வோதரஸ்யச
நிரம் சஸ்யாபவீதம் ஸ்யாத் ரம்யஸ்யாபரணம் குத:
நித்யத்ருப்தஸ்ய நைவேத்யம் நிஷ்காமஸ்ய பலம் குத:
தாம்பூலம்ச விபோ: குத்ர நித்யாநந்தஸ்ய தக்ஷிணா
ஸ்வயம்ப்ரகாச ரூபஸ்ய கதம் நீராஜனம் பவேத்
ப்ரதக்ஷிணமநந்தஸ்யா த்விதீயஸ்ய காநுதி:
வாசாமதீத ரூபஸ்ய கதம் ஸ்துத்ய நுவர்ணனம்
நித்யாபரோக்ஷ வித்தஸ்ய த்யானம் வாயிகதம் பவேத்

எல்லா உயர்ந்த வஸ்துக்களையும் ஈசனுக்கு ஸமர்ப்பிப்பது அன்பின் காரணமும் கார்யமுமாகும். இதன் மூலமாக அன்புவெள்ளம் பெருகி பரமானந்த பூர்த்தி வருமென்பது திண்ணம். இதுவுந்தவிர ஒவ்வொரு உபசாரத்திற்கும் உயர்ந்த அருமையான ரகஸ்யதாத்பர்யம் இருக்கின்றது. இதை நாம் தகுந்த குருக்களிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டும். தீபதர்சனத்தை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம். ஈச்வரனுக்கு நாம் காட்டும் தீபம் இல்லாமல்போனால் கண் தெரியாதா? தீக்கண்ணனாகவும் தேஜோமயமாகவும் விளங்கப்பட்ட பொருளுக்கு நாம்வெளிச்சம் காட்ட வேணுமா? ஆனால் ஈசன் மங்களஜ்யோதி ஸ்வரூபனென்பதும்,

தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி

என்பதும், அவனருளால் அஞ்ஞானமாகிய இருள்விலகி அவனுடைய திவ்யமங்கள ஸ்வரூபம் மனதின் கண்ணே புலப்படும் என்பதும்தான். இதேமாதிரி ஒவ்வொரு உபசாரங்களிலும் உயர்ந்த தத்வங்களை அடக்கிவைத்திருக்கிறார்கள். தேங்காயை உடைத்து பழங்களை நைவேத்யம் செய்கிறார்களே இதனுடையதாத்பர்யம் என்னவென்றால் நம்முடையக்ரந்திகளைப்பேதித்துஸர்வகார்ய பலத்யாகம் செய்யவேணுமென்பதே. புஷ்பார்ச்சனையின் அர்த்தத்தைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறோம். இங்ஙனமே நம்முடைய உத்ஸவங்களிலும் அநேக உயர்ந்த தத்வங்களை காட்டியிருக்கிறார்கள். ஈசனும் தேவியும் ரதத்தில் வருகிறார்கள் என்றால் காற்றுவாங்க உல்லாஸமாக வருகிறார்கள் என்றா தாத்பர்யம்? இல்லை. மனதாகிற ரதத்தில் சிவமும் சக்தியும் விளங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான். இதுமாதிரியுள்ள தத்வங்களை தகுந்தவர்களிடத்திலிருந்து தெரிந்துகொண்டு பாமரர்களைப்போல தத்வமறியாமலும் நாஸ்திகர்களைப்போல் அன்புமாநந்தமும் இல்லாமலும வாழ்நாளை வீணுக்காமல் ஸத்கர்ம, அன்பு, ஞானம் முதலிய மார்க்கங்களால் பரமேச்வரனைத் தேடியடைந்து பேரானந்தத்தை அடையவேணும்.

இனிமுடிவுரையில் சொல்ல வேண்டிய சில விஷயங்களைச் சொல்லி இந்த வியாஸத்தை முடிக்கிறோம். ஆலய சீர்திருத்தங்களைப்பற்றி நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். ராஜாங்கத்தார் உதவியின்மேல் வரக்கூடிய சிலசீர்திருத்தங்கள் உள்ளன. அவைகள் விஷயமாக நம்முடைய ப்ரதிநிதிகள் மூலமாக நாம் நம்முடைய அபிப்ராயங்களை வெளியிடுவதோடு அநேக கூட்டங்கள் கூட்டி நம்முடைய எண்ணங்களை ஸர்க்காருக்குத் தெரிவித்துக் கொண்டேயிருக்கவேணும். ஆனால் இந்த சீர்திருத்தங்களைவிட நம்மாலே நாம் செய்து கொள்ளக்கூடிய சீர்திருத்தங்கள் அநேகம் இருக்கின்றன. இதற்குமுன், எப்படி ஓரிடத்தில் கஸ்தூரியைவைத்தால் அது சுற்றுமுள்ள இடங்களையெல்லாம் ஸத்வாஸனையுள்ளதாகச் செய்யுமோ அப்படி ஆலயத்தில் விக்ரஹத்தை மந்த்ரபூர்வமாக ப்ரதிஷ்டை செய்தால் அது நமக்கு ஸத்வாஸனைகளைக் கொடுத்துப் பேரின்பத்தை விளைவிக்கும் என்று கூறினோம். மந்திர சக்தி குறைந்து போகாமலிருப்பதற்காகத்தான் 25 வருஷங்களுக்கு ஒரு முறையாகிலும் கும்பாபிஷேகஞ் செய்ய வேணுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. இப்படி தேவாலயங்களில் பூஜைகள் உத்ஸவாதிகள் விதிப்படி நடக்க வேணும் என்பதில் சந்தேகமுண்டோ? அவைகள் சரிவர நடக்காவிட்டால் மழைகுன்றும், வியாதிகள் அதிகரிக்கும், பஞ்சங்கள் வரும்.

“ஆற்றரு நோய் மிகும் அவனிமழை குன்றும்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத்தான்றிருக் கோவில்களானவை
சாற்றிய பூஜைகள் தப்பிடிற்றானே.

முன்னவனார் கோயிற்பூஜைகள் முட்டிடின்,
மன்னர்க்குத் தீங்குள, வாரி வளங்குன்றும்,
கன்னம் களவும் மிகுத்திடும், காசினிக்கு
என்னருள் நந்தி எடுத்துரைத்தானே.

திருமந்திரம்.

இப்பொழுது நடந்து வரும் பழிதப்புகளையும் அபசாரங்களையும் கவனித்தால் நமக்கெல்லாம் திகப்பமாகயிருக்கிறது. உதாரணமாகத் திருக்கல்யாணோத்ஸவத்தை எடுத்துக் கொள்வோம். அதில் ஈச்வரன் தாஸிவீட்டுக்குப்போவதாகவும் அதற்கு ஈச்வரி பிணங்குவதாகவும் ஆபாஸ வழக்கங்கள் வந்து விட்டன. திருக்கல்யாண உத்ஸவத்தின் பரமதாத்பரியம் என்ன என்றால் சிவமும் சக்தியும் சேர்ந்தால் தான் ஜகத்ஸ்ருஷ்டி முதலிய வ்யாபாரங்கள் உண்டாகின்றன என்பதுதான். இந்த மாதிரி உத்ஸவ வழிகளில் குறைகள் ஏற்பட்டால் அவைகளைப் பொதுஜனக் கூட்டங்கள் கூட்டி சரியானபடி சீர்திருத்தி சரிப்படுத்தவேண்டியது நமது ஒரு முக்யமான கடமை.

இதுவுந்தவிர ஆலயங்களில் பூஜை சரிவர நடக்க முற்காலத்தில் வேதாகமங்களில் சிரத்தையுள்ளவர்களாகவும், த்ரிகரண சுத்தியுள்ளவர்களாயும், புண்யாத்மாக்களாகவும் இருப்பவர்களையே பூஜகர்களாக நியமித்து வந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் பூஜை செய்தாலல்லவோ ஈச்வர சாக்ஷாத்காரம் இருக்கும். நமக்கும் மனத்தூய்மை வரும். சாஸ்திரப் பயிற்சியற்று ஸதாசாரமில்லாமலிருக்கும் அர்ச்சகர்கள் பூஜை செய்வது பெரிய அபசாரமல்லவா? ஆகையால் நாம் அநேகக் கூட்டங்கள் கூடி ஒவ்வொரு தர்மகர்த்தரையும் ஒவ்வொரு கமிட்டியையும் பூஜகர்களுக்கு சாஸ்திரமும் ஸதாசாரமும் பயிற்சி செய்து வைக்க வேணுமென்று வற்புறுத்துவது நம்முடைய முக்ய கடமைகளில் ஒன்றாகும்.

இதுவுந் தவிர மதப்ரஸங்கங்களும், ஈச்வர கதைகளும், பஜனைகளும் கோயில்களில் அடிக்கடி ஏற்படுத்தி வருவதுந்தவிர நம்முடைய தேசத்தின் மூலைகளுக்கெல்லாம் ப்ரஸங்கம் செய்கிறவர்களும் கதை செய்கிறவர்களும் பஜனைபண்ணுகிறவர்களும் சென்று பக்தியைப் பரவச்செய்யவேணும்.

“அன்போடுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன்மணியிலை எய்த வொண்ணதே”

என்று திருமூலர் சொல்ல இல்லையா? அன்ய மதஸ்தர்கள் இவ்வழிகளில் முயன்று நம்முடைய மதஸ்தர்களை இழுத்துக் கொண்டுபோய் விடுகிறார்களே? நமக்குத் தேசபக்தியும் நம்முடையக் கூட்டத்தாரிடத்தில் அன்பும் கூடப் போய்விட்டதா? இது விஷயத்திலும் நாம் ஊக்கத்துடன் முயற்சிக்க வேணும்.

இதுவுந் தவிர நமக்கு ஒருபெரிய கடமை இருக்கிறது. நாம் வெகு காலமாகப் பஞ்சமர்கள் விஷயமாக சரிவர நடக்க இல்லை. நந்தன் மாதிரி ஒரு பக்தன் அவர்களுக்குள் உண்டாகக்கூடுமானால் ஈசனிடத்தில் அன்பு செலுத்துவது எல்லாமனிதர்களுக்கும் பொது என்பதில் சந்தேகமுண்டோ? பஞ்சமர்களும் மற்றவர்களும் பொதுவாகப் பூஜிக்கக் கூடியப் புதுக் கோவில்களைக் கட்ட முயற்சி செய்யவேண்டும். முக்கியமாக நம் ஜன்மத்தின் பயன் ஈசன் அருள் பெறுவதுதான் என்பதை நாமறிந்து ஸன்மார்க்கத்தில் ப்ரவேசித்து பக்தி செய்து, பரமபுருஷார்த்தத்தை அடைவது தான். அதை அடையும்படி கருணை செய்ய நாம் ஈச்வரியையும் ஈச்வரனையும் ப்ரார்த்திப்போம்.

கர்ணாந்த ஸ்பார நயனாம்
ஸ்புரதிந்தீவர ப்ரபாம்

சந்த்ராலங்க்ருத தம்மிலாம்
பவபத்னீம் நமாம்யஹம்

ரிதம் ஸத்யம் பரம் ப்ரஹ்ம
புருஷம் க்ருஷ்ண பிங்கலம்

ஊர்த்வரேதம் விரூபாக்ஷம்
விச்வரூபாயவை நம:

**கே. எஸ். இராமஸாமி சாஸ்திரி, பி.ஏ., பி.எல்.**

---

**ஜப்பான் ஜாவா இவைகளிலிருந்து நம் இந்தியாவில் இறக்குமதியான சாமான்களின் விலை விபரம்.**—1908-9-ல் ஜப்பானிலிருந்து இறக்குமதியான சாமான்களின் மொத்த விலை சுமார் 215-லட்சம் ரூபா; 1912-13-ல் 406½-லட்சம் ரூபா; 1908-9ல் ஜாவாவிலிருந்து இறக்குமதியான சாமான்களின் மொத்த விலை 606-லட்சம் ரூபா; 1912-13-ல் 944-லட்சம் ரூபா; 1908-9-ல் ஜப்பானிலிருந்து வந்த கண்ணாடி சாமான்கள் விலை 2-லட்சம் ரூபா; 1912-13-ல் 22-லட்சம் ரூபா; 1908-9-ல் ஜப்பானிலிருந்து வந்த நெருப்புப் பெட்டிகள் விலை 12-லட்சம் ரூபா; 1912-13-ல் 39-லட்சம் ரூபா. ஜப்பானிலிருந்துவரும் சாமான்களில் பட்டுத்துணிகள்தான் மிகவும் அதிகம். பூவேலைசெய்த பருத்தித் துணிகள் முன்னிலும் இருமடங் கதிகமாயிருக்கின்றன. ஜாவாவிலிருந்தோ சர்க்கரையும் வெல்லப்பாகும் வருஷா வருஷம் ஏராளமாய் இந்தியாவுக்கு வந்து கொண்டே இருக்கின்றன.



OFFICE OF THE REGISTRAR MADRAS

# அக்பர் நீதிமொழிகள்

## SAYINGS OF AKBAR

1. துன்மார்க்கத்துக்குச் சோம்பலே காரணம். நன்மையை நாடுகின்றவன் ஒரு தொழிலைக் கற்று அதில் ப்ரவர்த்திக்க வேண்டும்.

2. லௌகிக சிந்தையுள்ளவர்கள், சோம்பலுக்கு இடங்கொடாமலும், அக்ரமமான விஷயங்களில் விருப்பஞ் செலுத்தாமலும், ஏதாவது ஒரு தொழிலில் முயற்சி செய்திருப்பதே தகுதி.

3. உலக வாழ்க்கைக்கு அவச்யமான கல்விப்பொருளையும் செல்வப்பொருளையும் தேடுவதில், ஒவ்வொரு நாளையும் வாழ்நாளின் கடைசி நாளாகவே பாவித்து, இன்றைக்குச் செய்யத்தக்கதை நாளைக்குச் செய்யலாமென்று காலதாமஸம் பண்ணுதல் கூடாது.

4. நித்ரையால் சரீர ஸௌக்யம் உண்டாவது உண்மையே. ஆயினும் மனுஷ ஜன்மம் பெறுப்பேறாகையால், மனிதர் நெடுநேரம் நித்ரையில் போக்காமல் விழித்திருந்து கார்யங்களை கவனிக்கவேண்டும்.

5. தேவநியமனத்தை நிறைவேற்ற முயல்வதில் அப்போதப்போது தேஹபலத்தைப் புதுக்கிக்கொள்வதற்கு ஊணும் உறக்கமும் ஸாதனங்களேயாயினும், அறிவிலார் சிலர் அவைகளை ஸாத்யமாகவே கருதுகின்றனர்.

6. நல்வினையின் மேன்மையைக் கருதியே நல்வினையைச் செய்யவேண்டும். அதனாலுண்டாகும் நய நஷ்டங்களைக் கருதலாகாது.

7. ஒவ்வொருவனுக்கும் ஸாமர்த்யம் வேறுபடுவதே மனித ஜாதி தொடர்ந்து வருதற்குக் காரணம்.

8. மனத்தடுமாற்றம் உற்றவர்க்கு நல்லோர் கூட்டுறவு போன்ற பரிகாரம் வேறில்லை.

9. சிநேகருடைய சேர்க்கையால் மனிதர் சிநேகருடைய இயல்பைப் பெறுவர். அவரவர்க்கு உண்டாகும் நன்மை தீமைகளில் அநேகத்துக்கு அதுவே காரணம்.

10 பகவானைப் போற்றுவதால் மனிதருக்கு இம்மைப்பேறும் மறுமைப்பேறும் உண்டாகும். தந்தைக்குக் கீழ்ப்படிந்து நடப்பதால் சிறுவர்களுக்கு க்ஷேமம் உண்டாகும்.

11. குருவுக்கு மிஞ்சின சீஷனாக இருந்தாலும் குருவினிடத்தில் மரியாதையாகவும் வணக்கமாகவும் நடக்கவேண்டும்.

12. சரீர ஸம்பந்தமான வ்யாதிகள் ப்ரத்யக்ஷமாக இருந்தும் எத்தனையோ வைத்யருடைய ஔஷதங்கள் பலிக்காமற் போகின்றன. அப்ரத்யக்ஷமான ஆத்ம வ்யாதிகளுக்கு எந்த ஔஷதம் உபயோகமாகும்?

13. ஸ்ருஷ்டிகர்த்தாவுக்கும் ஜீவப்ராணிக்கும் உள்ள ஸம்பந்தம் வார்த்தையால் விளக்க முடியாதது.

14. ப்ரகிருதியில் சூந்ய ப்ரதேசம் இல்லை என்பதை விவரிக்க நிமித்தம் இல்லை. கடவுள் ஸர்வாந்தர்யாமி.

15. தன் ஞான நிலைமைக்கு ஏற்றபடி ஒவ்வொருவனும் பரம்பொருளுக்கு ஒவ்வொரு பெயர் இடுகிறான். உண்மையைப் பார்க்குமளவில், அறியலாகாத பொருளுக்கு பெயரிடுவது வீணே.

16. கேவலமானவர் அப்ராக்ருதமான செயல்களின் மஹத்வத்தை நம்புவர். அறிவுள்ளவன் ஏற்ற ப்ரமாணமில்லாமல் ஏதொன்றையும் ஏற்றுக்கொள்ளான்.

17. பகுத்தறிவாகிய பூஷணமே மனிதனுடைய உயர்வுக்குக் காரணம். ஆகையால் அது கற்பிக்கின்ற வழியிலிருந்து விலகாமையே உத்தமம்.

18. அவனவன்பகுத்தறிவே அவனவனுக்கு ஆசிரியன். அது இயற்கையில் விளக்கமுள்ளதாயின் அதுவே அவனவனுக்கு வழிகாட்டும்.

19. முன்னோருடைய மரபைப் பின்பற்றி நடப்பதே பெரிதென்று கொள்ளும் மூடர்கள், முன்னோருடைய ஐதிகங்களைப் பகுத்தறிவின் கற்பனையாகக்கொண்டு தீராத விநாசத்தைத் தேடிக்கொள்வர்.

20 ஞானமானது குணபூரணத்தின் சிகாமேயாயினும், கார்யமாத்ரத்தில் அநுஷ்டிக்காவிட்டால், அதைப் பெற்றும் பயன் இல்லை.

21. உலக உயிர் வாழ்க்கைக்கு அன்பு இன்றியமையாதது. எந்த ஜீவப்ராணியும் தன்னுபடி செய்யத்தக்கதல்ல.

22. மனிதன் தன் இரைப்பையை ப்ராணிகளின் ப்ரேதக் குழியாக்குவது தகுதியல்ல.

23. மனிதர் மாம்ஸம் உண்பது பெருவழக்காக இருக்கின்றது. நோவெடுக்காவிட்டால் தங்கள் உடலையே உண்பார்போலும்.



24. ஜீவஹிம்ஸையே தொழிலாக உள்ள கசாயிக்காரரும் செம்படவரும் பிறரும் ப்ரத்யேகமான இடத்தில் வசிக்கவேண்டும். அவர்கள் மற்றவர்களோடு கூடுவதை அபராதத்தால் விலக்கவேண்டும்.

25. மனிதருடைய குண குணங்களை நிதானித்தறிவது மிகவும் கஷ்டமான வித்தை. அது எல்லாருக்கும் ஸாத்யமாவதில்லை.

26. பொய் புனைசுருட்டைக் கண்டு பிடிப்பது மிகவும் கஷ்டம். பேசுவோனுடைய வார்த்தைகளை நன்றாய் நிதானிப்பதே அதைக்கண்டுப் பிடிப்பதற்கான உபாயம்.

27. பண்ட சாலையில் எலி குருவி முதலிய ப்ராணிகளுக்குப் பொதுவான நலங்கள் உண்டு. ஆயினும் அர்க்குணத்தால் ஒவ்வொரு ப்ராணியும் அவ்விடத்தைத் தனக்குச் சொந்தமாக நினைக்கிறது.

28. ந்யாயத் தீர்ப்புத் தவறாக இருப்பதற்கு மூன்று காரணங்கள் உண்டு:—விவேகம் போதாமை—உட்பகையுள்ள சிநேகர் கூட்டுறவு—தங்கள் சொந்த நன்மையை நாடும் ஸ்நேகருடைய இரண்டகம்.

29. அரசியலாவது தாரதர மறிந்து ஸிக்ஷிப்பதும் பரிபாலனம் பண்ணுவதுமாகும். அரசியல் ஸித்தி பெறுவதற்கு இதுவே உபாயம். க்ஷேம லாபத்தோடு பெருமையும் உண்டாகின்றது.

30. குடிகள் செய்யலான கடமைகளை அரசன் தான் செய்யும்படி மேற்கொள்ளலாகாது. மற்றவர்களுடைய குற்றங்களைப் பரிகரிப்பது அவன் கடமை. அவனுடைய தவறுகளைத் திருத்துவார் எவர்?

31. அரசனுடைய உதார குணம் போலவே அவன் சினமும் பொதுஜன க்ஷேமத்துக்குக் காரணமாகும்.

32. பேராசையால் எவனும் தன் காரியத்தின் எல்லையைக்கடந்து நடவாதபடி தேசாதிபதிகள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

33. பேரரசர்களுடைய ஸம்ஸ்தானத்தில் அந்தரங்க ஆலோசனைக் குரியவர்கள் க்ஷேமமாக இருக்க வேண்டினால் ந்யாய வொழுக்கமும் யஜமான விச்வாஸமும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். சுய நன்மையும் பொருளாசையும் ராஜகார்யத்தில் இடையிடுதல் ஆகாது.

34. ராஜ்யத்தை ஆளும் திறமையுள்ளவர் எவராகிலும் கிடைப்பராயின், இந்த ராஜ்ய பாரத்தை அவர் தோளில் இறக்கிவிட்டு நான் அகன்று விடுவேன்.

35. நான் யாதொரு அக்ரமஞ்செய்த குற்றத்துக்கு உட்பட்டால் என்னை நானே தண்டிக்கப் புறப்படுவேன். அப்படியிருக்க, என் குமாரர் உறவினர் முதலானவர் விஷயத்தில் நான் என்னென்று சொல்லவேண்டும்.

36. இருபதாவது பிராயம் நிறைவுறுகையில் என்னிடம் ஒருவித மனக்கசப்பு உண்டாயிற்று. மறுமைக்கான யாதொன்றையும் செய்யாமையால் என் ஆத்மா அதிக துக்கத்தால் பீடிக்கப்படுவதாயிற்று.

37. என் மதானுசாரத்துக்குக் கேற்ப முன்னெல்லாம் நான் மனிதரை இன்னல் படுத்திவந்தேன். அங்ஙனம் செய்வது இஸ்லாமிய மதக் கொள்கையென்று எண்ணியிருந்தேன். ஞானம் விர்த்தியாகி வருகையில் எனக்கு வெட்கம் மேலிட்டது. என்மட்டிலே நான் முகம்மதியன் அல்லேனாகவும், பிறரை முகம்மதியராகுமாறு நிர்ப்பந்திப்பது அக்ரமம். நிர்ப்பந்தத்தால் புதுமதத்தைச் சேர்ந்தவர்கள் அம்மதத்ததை உண்மையாக அநுஸரிப்பார்களென்று எதிர்பார்க்க முடியுமா?

38. முன்னமே எனக்குத் தகுந்த விவேகம் தோன்றியிருந்தால், என்னுடைய ராஜ்யத்திலிருந்தே ஒரு மனைவியையும் தேடியிருக்க மாட்டேன். ஏனெனின், என் குடிகள் எனக்குப் புத்ரப்ராவமாவரன்றே?

39. என்றளவில் என் ஆயுள் முடிவதென்பது கடவுள் சித்தமோ அதற்குமேல் நீடித்திருக்க எனக்கு விருப்பம் இல்லை.

40. ராஜ்யங்கள் ஆறுகளாலும் மலைகளாலும் வனாந்தரங்களாலும் பாஷைகளாலும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கப்படுகின்றன.

41. ஒன்றுகூடியிருப்பதனாலே ஜனங்கள் பேசக் கற்றுக் கொள்ளுகிறார்கள். இல்லாவிட்டால் மனிதர் (மிருகங்கள் போல் கத்துவதன்றித்) திருத்தமாகப் பேசமாட்டார்கள்.

42. பெருமையாவது தன் னிலைமையில் தாழ்வு வாராமல் காத்துக்கொள்வதாம்.

43. நன்மையை எதிர்பார்த்துத் தீமையை அஞ்சிநடப்பவன் இம்மைப்பயனையும் மறுமைப்

(இது 378-ம் பக்கத்தில் முடிவுபெறுகிறது.)

# இந்தியர்களின் தத்கால நிலையும் செயலும்

## INDIA ITS PRESENT AND FUTURE

நூதனமாக ஒன்றை உண்டாக்கும் சக்தியானது ஒன்றைப் பார்த்து அதைப்போல் வேறொன்றை உண்டாக்கும் சக்தியைப் போல் அத்தனை சுலபமன்று. மேலும் சமயத்துக்குத் தக்கபடி அந்நூதன சக்தியானது தன்னை அமைத்துக்கொண்டு பிரவர்த்திக்கக்கூடியது. பார்த்துச்செய்யும் சக்திக்கு இந்த மாதிரி அமைத்துக்கொள்ளும் திறமையும் உண்டானால் இதையும் நூதனமாய் சிருஷ்டிக்கும் சக்திக்கு ஸமானமாகவே சொல்லலாம். இக்காலத்தில் இந்தியாவில் இங்கிலீஷ் படித்து தேர்ச்சியடைந்தவர்களில் பலர் நூதனமாய் ஒன்றை உண்டாக்கும் திறமை அத்தனையுடையவர்களா யிராமலிருப்பதற்கு இதுதான் காரணம். இங்கிலீஷ்பாடசாலைகள் எல்லாம் ஆங்கிலேய ரீதியாய் ஏற்பட்டிருப்பதினால் அதில் படித்த நம்மவர்களுக்கும் அவர்களைப்போல் நடை உடைபாவனைகளில் பழகவேண்டு மென்கிற எண்ணம் உண்டாகின்றது. ஆங்கிலேயர்களும் அவர்களின் பழக்க வழக்கங்களையும் சுபாவங்களையும் விட்டு இந்தியர்களுக்கு இயற்கையாயுள்ள பழக்க வழக்கங்களில் சீர்திருத்தம் செய்து இவர்களை செம்மைப்படுத்த சக்தியுடையவர்களல்ல. இது வரையில் இந்தியாவில் உண்டாயிருக்கிற ஆங்கிலேய ஏற்பாடுகளையும் சட்ட திட்டங்களையும் இராஜ்ய தந்திரங்களையும் ஆசார சீர்திருத்தங்களையும் பார்த்தால் அவைகள் ஒவ்வொன்றுக்கும் முதலால் அல்லது மேற்கோளாக எடுத்துக்காட்டக் கூடிய மூலப்பிரதி யொன்று இங்கிலாந்து தேசத்தில் நடைபெற்று வழங்கும் என்பது நன்றாய்த் தெரிய வரும்.

ஆங்கிலேயருடைய நடை உடை பாவனைகளையும் குண நிசயங்களையும் ஆராய்ந்து பார்த்தால் அவைகளில் நன்மையை தாக்கத்தக்கதான குணங்கள் பல இருக்கின்றனவென்று தெரிய வரும். உலகத்தில் பொருளும் கீர்த்தியும் ஸம்பாதித்து பெருமையடைவதற்கு இன்றியமையாத குணங்கள் அவர்களிடத்தில் நிறைந்திருக்கின்றன. வேலையில் அபிலாஷை, சிக்கனம், தன்னடக்கம், திடமான நம்பிக்கை, விடாமுயற்சி, இந்திரிய நிக்ரஹம், கல்பனா சக்தி முதலிய நற்குணங்கள் உலகத்தில் ஞானத்தையும் புகழையும் அடைவதற்கு சாதனங்களாயிருக்கின்றன. இவைகள் பெரும்பாலும் ஆங்கிலேயரிடத்தில் பூர்ணமாயிருக்கின்றன. இவற்றுள் முக்கியமானது கல்பனாசக்தி—அதாவது நூதனமாய் ஒன்றை ஏற்பாடு செய்யும் திறமை. அதற்கு உதவியாக உண்மையும், அப்யாஸமும், எச்சரிக்கையும், கண்டிப்பும், விநயமும், ஒழுங்கும், சிக்ஷையும் அவசியம் வேண்டும். இத்தன்மையான உதவி குணங்களோடு கூடிய கல்பனாசக்தியை நம்பவர்கள் வெகு காலத்திற்கு முன்னே இழந்துவிட்டார்கள். இதைப்பெற்றால் இனி எல்லாம் பெறலாம். எல்லாப்புகழும் நம்முடையதாகும்.

இக்காலத்தில் நமக்குண்டாயிருக்கும் கஷ்ட நிஷ்டூரங்களெல்லாம் இந்த சக்தி க்ஷீணதசையையடைந்ததினாலேதான். இல்லாவிடில் ரத்னங்களும், பொன்னும் நிறைந்திருக்கிற இந்நாட்டில் பிறந்துள்ள நம்மை தரித்திரம் வருத்துவானேன்? மிகவும் உழைப்பாளி என்று பிரஸித்திபெற்ற இந்தியர்கள் உண்ணச் சோறும் உடுக்கக் கூறையும் கிடைக்காமல் கஷ்டப்படுவானேன்? மிகவும் சிறந்த தீர்க்கதரிசிகளென்றும் ஞானவான்களென்றும் ரிஷிகளையும் முனீச்வரர்களையும் தோற்றினவர்களென்றும் சிறப்பை யடைந்த இவ்வாரியர்கள் இக்காலத்தில் ஒரு விஷயத்தையும் நன்றாய் ஒழுங்குபடுத்திக் கொள்ள முடியாமல் முன்னின்று வழிகாட்ட அயலாருடைய ஸஹாயத்தை அபேக்ஷிப்பானேன்? யமனையும் ஜயித்து தங்க

(377-ம்பக்கத் தொடர்ச்சி)

பயனையும் பெறுவான். அங்ஙனம் நடவாதவன் துன்பம் விளைத்துக்கொள்வான்.

44. கழைக்கூத்தன் கையாலும் காலாலும் தன் வேலையைச் செய்கிறான். தன் வேலையைக் கவியானவன் நாவால் செய்கிறான்.

45. பிறனுடைய கவிகளைத் தன்னூரில் இடமறிந்து இசைத்துக் கொள்வதனாலும், அல்லது பொருத்தமான ஸந்தர்ப்பங்களில் எடுத்துக் காட்டுவதனாலும், அந்தக்கவியின் திறமும் விளங்கும். இவன் திறமும் விளங்கும்.

T. செல்வகேசவராய முதலியார், எம். ஏ.



ளுக்கு வேண்டும்பொழுது உயிர் துறக்கும் திறமையையும் யோகஸித்தியையும் உடைய ரிஷிகளின் வம்சத்தில் வந்தவர்களாயிருந்தும் ஆண்மையற்றவர்கள் என்றும் பயங்காளிகள் என்றும் உலகத்தார் நிந்திக்கும்படியான தாழ்வான நிலைமையை அடைவானேன்? இவைகளும் இவைகளைப்போன்ற இதர கெடுதிகளும், தாழ்வுகளும் இந்த கல்பனாசக்திக் குறைவினாலேயே வந்தது என்று சொல்லவேண்டும்.

இந்தக் குறையை நீக்கி இந்தியர்களை ஸமர்த்தர்களாக்கிவைக்க ஆங்கிலேய உபாத்தியாயர்களினால் அத்தனை எளிதாக ஆகக் கூடியதல்ல. இந்தியர்களின் நிலைமையையும் சுபாவத்தையும் உள்ளபடி யறியவும் இவர்களின் பூர்வ நிலையின் சிறப்பையும் அதற்கனுகுணமான முயற்சியையும் தெரிந்து தக்கபடி துறைகளை ஏற்படுத்தவும் திறமையுள்ளவர்கள் இந்தியர்களே. நமக்குள்ளேயே ஒருவர் கிளம்பினால் நமது சக்தியை நன்றாய்த் தெரிந்துகொண்டு குறையுள்ளவிடத்திலே தக்க முயற்சி செய்து சிறப்பை உண்டாக்க ஸாத்தியமாகும்.

இது விஷயத்தில் நமது கடமை இரண்டு. அதில் முதலாவது ஐக்கிய விஷயத்தில் முயற்சி. காஞ்சீபுரத்துத்தேர் ஒருவர் இருவர்கூடி இழுத்தாகிறதன்று; பலர்கூடியே நடக்கவேண்டியதாயிருந்தாலும் ஒவ்வொருவனும் தனது சக்தியை பூர்ணமாகச் செலுத்தி தன்னால்தான் தேர் ஓடுவதுபோல் எண்ணி முயற்சிசெய்யவேண்டியதாயிருக்கிறது. ஒவ்வொருவனும் அயலார் கஷ்டப்பட்டு வேலை செய்வார்கள் என்று தான் முயற்சி செய்யாமலிருந்தால் அத் தேர் எங்ஙனம் ஓடும்? ஆகையால் பொது நன்மைக்காக பலபேர் ஒன்று சேர்ந்து பாடுபட்டாலொழிய அந்தக் காரியம் நிறைவேறாது. இரண்டாவது நற்குணத்தை அங்கீகரிக்கும் தன்மை. யாராயினும் ஒருவன் ஏதாவது ஒரு நல்லகாரியத்தைச் செய்தால் அதற்காக அவனை கௌரவிக்கவும் பெருமைப்படுத்தவும் விருப்பமுடையவராகயிருக்க வேண்டும். களிமண்ணினாலும் சாணத்தினாலும் இரும்பு செப்புகளினாலும் விக்ரஹங்களைச் செய்து நமது மனதின் நிலைநின்ற பக்தியாலும் உறுதியான நம்பிக்கையாலும் அதைத் தெய்வமாகப் பூஜிக்கிறோம். ஆகையால் நம்முடைய மனதின் தூய்மையினாலே தாழ்ந்தவஸ்துவையும் உயர்த்தி பெருமையுடையதாகச்செய்ய சாத்தியமாகும். இவ்வாறு ஒரு குணமில்லாதவஸ்துவில் தெய்வத்தன்மை உண்டாக்கக்கூடிய நாம் நம்மைப்போல் ஒரு மனிதனிடத்தில் உள்ள சில நற்குணங்களை அங்கீகரித்து அவனை கௌரவப் படுத்துவதை விட்டு பொறாமைகொண்டு அந்த நற்குணத்திற்குக்காரணமாக சுயநலம், கியாதிலாப பூஜாபேக்ஷை முதலான தோஷங்களை அவனிடத்தில் ஆரோபித்து அவனை நிந்திக்கவும் அவமதிக்கவும் வழிதேடுவது அறியாமையின் காரியமன்றோ? இல்லாத குணங்களையும் ஒருவனிடத்தில் இருப்பதாகப் புகழ்ந்து பேசினால் அந்த வார்த்தைகளை மெய்யாக்கும் பொருட்டாக அவன் அந்த குணங்களை தன்னிடத்தில் உண்டாக்கிக்கொள்ள முயல்வான் என்கிறஎண்ணத்தினால் பெரியோர்கள் கொஞ்சம் அந்தஸ்துள்ளவர்களை விசேஷமாகப் புகழ்வார்கள். அப்படியிருக்க பொறாமையினால், உள்ள நற்குணத்தையும் அங்கீகரியாமல் ஒருவனை இகழ்ந்து பேசினால் அதுவே அவமானத்துக்கும் கெடுதிக்கும் மூலகாரணமாகும். இந்தமாதிரியான அற்பகுணம் நம்மவர்களிலிருப்பது நம்முடையவிருத்திக்குக் குறைவு. எல்லாரையும் அற்பமாகவே மதிக்கும் சுபாவமுடையவர்களாகையால் எல்லாரும் அற்பகுணமுடையவர்களாகவே நின்றுவிடுகிறார்கள். பெரிய காரியங்களில் ஊக்கத்துடனும், விடாமுயற்சியுடனும் பிரவேசிக்க புத்தியுண்டாகிற தில்லை. ஆகையால் இந்த அற்பபுத்தியை விட்டால்தான் நமக்குள் யாராவது பெரியவனாகக் கிளம்பி அரிய பெரிய காரியங்களில் முயற்சிசெய்ய ஸாத்தியமாகும். ஒருவன் சொற்படி செய்பவர்கள் பலரிருக்கிறார்களென்று ஏற்பட்டால்தான் தலைவனாகஒருவன் முன்னின்று பொதுநன்மைக்குப் பாடுபடுவதற்கு இடம் உண்டாகும். உண்மையில் நமது நாடு பொன்னும் ரத்னமும் வைரமும் உண்டான தேசந்தான். பெருங்குணங்களுக்கு வேண்டிய அங்குரங்கள் அநேக முண்டாயிருக்கின்றன. இல்லாவிடில் நமது தேசத்தில் இத்தனை விதமான மதவித்யாஸங்களும் சித்தாந்த பேதங்களும் எப்படி உண்டாகக் கூடும்? இப்படி புதுமதத்தை ஸ்தாபித்தவர்களும், புதுதரிசன பேதத்தை உண்டுபண்ணினவர்களும் இருந்தபடியால் மிகவும் சிறந்தபதவிக்கு வரக்கூடிய

நற்குணங்களும் சுபாவங்களும் அவர்களிடத்தில் இருந்திருக்கவேண்டும்.

நன்றாய் ஆலோசித்துப் பார்த்தால் எப்படிப் பட்டவனாயினும் புதிதாய் ஒன்றைக்கற்பித்து அதை சிறப்பாக நடத்தினவனாயின், அவனிடத்தில் நன்குமதிக்கத் தக்கதான நற்குணம் ஒன்று இருக்கிறது என்று எண்ணவேண்டும். "கால ராத்திரியும் கரும்பாம்பும் ஈசுவரனுடைய அம்சம்" என்று கீதையில் கண்ணனுபதேசிக்க வில்லையா? எந்தெந்தவஸ்துவில் அருமையான குணங்கள் விளங்குகின்றனவோ, அந்த வஸ்துவெல்லாம் ஈச்வரனுடைய அம்சத்தைச் சிறப்பாகப் பெற்றுள்ளதென்று எண்ணவேண்டும். ஆனால் நம்முடைய தற்கால நிலைமையும் செயற்பாலவற்றையும் யோசித்தால் நம்முடைய தலைவனிடத்தில் எப்படிப்பட்ட குணங்களிருக்கவேண்டும் என்று எடுத்துச் சொல்வது அத்தனை எளிதல்ல. உதாரணமாக (1) சுயநய மென்பதைவிட்டு எல்லாரிடத்திலும் அன்பும் பொறையுமுள்ளவனாக நடந்துகொள்வான். (2) பலபல கக்ஷிகளாகப் பிரிந்து கிடக்கிற இந்தியர்களை ஒன்று சேர்த்து ஏகமுகமாகத் திருப்பி நடத்திவருவதற்கு தகுந்த வழிகளிற் பாடுபட்டு அவரவர் கட்சிக்கும் கொள்கைக்கும் விரோதமின்றி எல்லோரையும் ஸமமாக நடத்த முயற்சி செய்வான். (3) நமது முன்னோர்களுடைய பெருமையையும், கீர்த்தியையும் இகழாமல் உண்மை நிலையையறிந்து அவர்கள் கற்பித்த நெறிகளை இக்காலத்துக்கு அநுகுணமாக செம்மைப்படுத்தி ஆசரித்துக்காட்டுவான். (4) நமது வேத சாஸ்திரங்களில் சொல்லிய விஷயங்களை இக்காலத்து தத்வசாஸ்திர விதிகளோடு (Science) புணர்த்தி இரண்டிலுமுள்ள நன்மைகளைப்பற்றி தன்னுடைய ஸித்தாந்த மேற்பாடு செய்வான். (5) நமது பூர்விகமஹான்களைக் காட்டிலும் சிறப்பாக விளங்கினாலும் அவர்கள் சிறப்பை இகழ்வாவது ஒளிக்கவாவது தாழ்த்தவாவது ஸஹிக்கமாட்டான். (6) இந்த குணங்களோடு கூட நுட்பபுத்தியும் ஆழ்ந்த அறிவும் மெதுவான வாக்கும் சுலபமான சொல் நடையும் உடையவனாய் அன்பு நிறைந்து அருளொழுகும் திறத்தனாய் கியாதிலாப பூஜா அபேக்ஷையில் பற்றில்லாமல் விளங்குவான். இப்படிப்பட்ட குணங்களில் ஒன்று அல்லது இரண்டென்று குணங்கள் ஒருவனிடத்திலிருப்பினும் அவனை ஸர்வேச்வரனுடைய அம்சமாக அங்கீகரித்து அவனைப் பெருமைப்படுத்துவதினால் அந்த குணங்கள் அவனிடத்தில் விருத்தியடைவதற்கும் அதற்குச் சார்பான இதர குணங்கள் வந்து கூடி புகுவதற்கும் ஏதுவாகும். நாட்டிற்கும் விசேஷநன்மை உண்டாகும். இதர குணவான்கள் கிளம்புவதற்கும் காரணமாகும்—நம்முடைய உஜ்ஜீவனத்திற்காக நம்முடைய தலைவர் சீக்கிரம் வருவார் என்கிற நம்பிக்கையுடன் ஒவ்வொருவனும் தன்னால் கூடிய அளவு பொது நன்மைக்கு உழைத்துவருவானேயாயின் ஸ்ரீகிருஷ்ணபகவான் கீதையில் சொல்லியிருக்கிறபடி எல்லாகுணங்களையும் பரிபூர்ணமாகவுடைய ஒரு மஹான் நமக்குள் உண்டாகாமல் போகமாட்டான். ஆகையால் ஒரு தலைவன் உண்டாவது நிச்சயமென்று நம்பி ஒவ்வொருவனும் தன்னுடைய வீட்டில் தன்னுடைய விசாரணைக்குட்பட்டிருக்கும் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் தகுந்தபடி நல்ல படிப்பையும் ஒழுக்கங்களையும் ராஜபக்தியையும் பழக்கவழக்கங்களையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். மிகவும் உயர்ந்த பதவிக்கு வரக்கூடியவனென்று ஒவ்வொருவனையும் நினைத்து அதற்குத் தக்கபடி நல்லொழுக்கங்களில் பயிற்சி செய்யவேண்டும். ஆகாயத்தை லக்ஷ்யமாக்கி பாணத்தை எய்தால் அதிக உயரம் போகக்கூடியதாகும். அதைவிட்டு ஒருமரத்தின் நுனியைக்குறிப்பாக்கி பாணத்தைப் போட்டால் அது அத்தனை உயரம் கிளம்ப ஸாத்தியமில்லை. பல சிறுவர்களுக்கு அதிக பெரிய குணங்களை உண்டாக்கவழி தேடினால் நாட்டில் நற்குணம் அதிகமாகும். அதுவே தலைவன் கிளம்புவதற்கு முதல் வழியாகும். சமபூமியினின்றும் மலை கிளம்புவதைவிட மேட்டுநிலத்தினின்றும் மலை கிளம்புவதே ஸகஜமாயிருக்கிறது. அநேக அற்ப புத்தியுள்ளவர்களுக்குள் அதிக ஞானவான் கிளம்புவது அத்தனை சுலபமல்ல. அநேக வித்வான்களுக்குள் அதிகவல்லமையுள்ளபுத்திமான் உண்டாவது ஸஹஜம். ஆகையால் நமது சிறுவர்களை அலக்ஷியம் செய்யாமல் ஒவ்வொருவனும் தலைவனாகக் கூடியவனென்று எண்ணி அதற்குத் தக்கபடி அவனைப் படிப்பித்து விர்த்திக்குக் கொண்டுவரவேண்டும். நுட்பபுத்தியும், தற்பயிற்சியும், ஆழ்ந்த அறிவும், சபைரஞ்சகமும்



# தரணீபதி அல்லது தந்திரபாலன்
## DHARANIPATHI or THE BOY DETECTIVE
### நான்காம் அத்தியாயம்
### தைரியம் தலைகாக்கும்

பயங்கரமான இருட்டறை. மேலே சுவற்றிலுள்ள சிறு சன்னலின் வழியாய் உட் பிரவேசிக்கும் வெளிச்சம் அவ்வறையின் அமைப்பைச் சற்றுஎடுத்துக்காட்டிற்று. கீழே மூங்கிற்பாய் விரிக்கப்பட்டிருக்கிறது. சுமார் பத்தடி நீளமும் ஐந்தடி அகலமுமுள்ள இருப்பு மேசையொன்று மாத்திரமே புலப்படுகின்றது. வேறு யாதொரு தட்டுமுட்டுகளும் அங்கு காணோம். ஆ! அதோ தீக்குச்சியை எடுத்து மெழுகுவர்த்தியை ஏற்றி அவ்வறையைச் சுற்றிப்பார்ப்பது யார்? ஐயோ பாபம்! வெளியே செல்வதற்கு வழியையே காணோமே! இப்படிப்பட்ட அறைக்கு இவ்வாலிபன் வரக்காரணமென்ன? ஓகோ! கண்டு கொண்டோம், கண்டு கொண்டோம்! நம் தரணீபதியன்றோ இவன்! இவ்விருட்டறையில் அவனைக்கண்டுபிடிக்க நம்மாலேயே முடியவில்லை. விளக்கேற்றினபிறகே அவனைப் பார்த்தோம். ஆம்! ஆம்! இத்தகைய இடத்திற்கு அவன்வந்துசேர்ந்த சந்தர்ப்பம் இப்பொழுதுதான் ஞாபகம்வருகிறது. கையில் விளக்குடன் இரண்டொருமுறை சுற்றிச் சுற்றி வந்தான். அவன் மனதில் பலவித எண்ணங்கள் உதிக்கின்றன. 'நம்முயிர் இன்றோடே ஒழிந்தது. இனி நாம் வெளிச்ச

(380-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருந்தன்மையும் உள்ளவனாகும்படி செய்து தேசாபிமானம் நிறைந்திருக்கும்படி செய்ய வேண்டும். ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் பத்தாவது அவதாரமாக கத்தியும் கேடயமுமாய்க் குதிரைமீதேறி ஒரு வீரனைப்போல் வருவாரென்பதை நிரூபித்துப்பார்த்தால் படிப்பும், ஞானமும் ஆகிற கத்தி கேடயங்களை கையிற் கொண்டு அகங்காரம் என்கிற குதிரையை அடக்கி நமது நாட்டிலுள்ள அஞ்ஞானமாகிற அந்தகாரத்தை நீக்கி ஞான ஒளியைப் பரவச் செய்வார் என்று பொருள் விளங்குகிறபடியால் நாமெல்லாரும் பக்தியும் சிரத்தையுமுடையவர்களாய் ராஜபக்தியும் தேசாபிமானமும் நிறைந்து இப்படிப்பட்ட நற்குணங்களை நம்முடைய சிறுவர்களுக்குப் புகட்டி ராஜ்யத்தின் சிறந்த குடிகளாகும்படி செய்ய முயன்றுவந்தால் சீக்கிரத்தில் பெருமையும் புகழும் உண்டாகுமென்பது நிச்சயம்.

P. B. விஜயராகவாசாரியன், பி. ஏ., எல். டி.

த்தையும் நல்லகாற்றையும் அடையப் போகிறதில்லை. எக்காலும் மாசனை நம்பொணாது. லீலா எப்படி ஏமாற்றினான்! கிடக்கட்டும். இவ்வறை அவ்வளவு பயங்கரமாக இருக்கவில்லை. சற்று நன்றாய்ப் பார்ப்போம்' என்று பலவாறு பேசிக்கொண்டு விளக்கை இருப்பு மேசையின் கீழ்த் தாழ்த்தினான். ஒரு சிறு மேடை காணப்பட்டது. அம்மேடையைக் கையால் தடவிப் பார்த்தபோது சில செதுக்கிய அக்ஷரங்கள் தட்டுப்பட்டன. விளக்கை இன்னும் சமீபத்தில் கொண்டு வந்து மேடையைப்பார்வையிடவும் முன்கச்சையில் இருந்த கடிதத்தில்கண்ட விலாஸத்தைப் போன்ற விநோதபாஷையில் எழுதப்பட்டிருந்ததை உணர்ந்து தன்னிடமிருந்த அவ்விலாஸத்தின் பிரதியை எடுத்து ஒத்திட்டுப்பார்த்தான். ஒன்றாகவேயிருந்தன. இது என்னவாயிருக்கலாம் என்று சிறிது ஆலோசிக்கவும் மனதில் அவைகளின் குறிப்பு புலப்பட்டது. "வரி வரியாக பின்புறத்திருந்து முன்னிடம் நோக்கி வாசித்தால் அருத்தமாகின்றது. ஏதோ பார்ப்போம்" என்று பின்வருமாறு வாசித்தான்:— "மூன்றவது படிகீழ் சாவி ஜாக்கிரதை." "சாவி! எதற்குச் சாவி? இங்கு கதவு, பூட்டு ஒன்றையும் காணோமே! இவ்வறையிலிருந்து வெளியில் போவதற்குத்தான் சாவியிருக்கவேண்டும்! அல்லாவிடில் இவ்வறையில் அதைப்பற்றி எழுதுவானேன்? மூன்றாவதுபடிகீழ்; எங்கே மூன்றாவதுபடி? இதுமேடைதானே" என்று உற்றுப்பார்த்தான். சுவரோரத்தில் மேசையின் கீழேயே படிகள் இருப்பதைக் கண்டு மெதுவாகக் கையை விட்டான். அங்கு ஒரு சிறு குழியில் சிறியகுச்சி போன்ற இருப்புத்துண்டு ஒன்றிருந்தது. எடுத்தான். "சாவிதான் கிடைத்து விட்டது. கதவு எங்கே? பூட்டெங்கே?" என்று அலையலானான். மூன்றுமுறை அறையைச் சுற்றி வரும்போது இருப்பு மேசை இருந்த விடத்திற்கு நேர் எதிரே சுவரில் ஏதோ ஆணியடித்த துவாரம் ஒன்று இருப்பதாகத் தெரிந்தது. அதில் அவ்விருப்புத்துண்டைவிட்டான். உடனே சுவரிலிருந்து கதவுபோன்ற ஓர்பலகை தானாகவே திறந்து கொண்டு விட்டது! கதவுதிறந்ததும் எதிரே நீண்டதாழ்வாரம் தென்பட்டது. இருட்டாயிருந்த போதிலும் இவ்வறையைக்காட்டிலும் சற்று வெளிச்சமும் காற்றுப் போக்கும் உள்ளதாகவேயிருந்தது. தரணீபதி தாழ்வாரத்தில் நுழைந்தான். சுவரோடு சுவராய் அமைக்கப்பட்டிருந்த கதவு உடனே தானாகவே மூடிக் கொண்டது. தரணீபதி தன் கையிலிருந்த சாவியைத் தன் சட்டைப்பையில் போட்டுக்கொண்டு அத்தாழ்வாரத்தின் வழியேசென்றான். கடைசியில் அவன் சிலபடிகள் ஏறி ஓர் அகன்றமண்டபம் போன்ற அறைக்கு வந்து சேர்ந்தான். அவ்வறை, தான் இருட்டறையில் விழுவதற்கு முன்வந்திருந்த அறைமட்டத்தில் இருப்பதாகத் தெரியவந்தது. இவ்வறையில் உள்ள சாளரத்தைத் திறந்து எட்டிப் பார்த்தான். கீழே அகன்ற முற்றமும் அதன் பின்னால்

தெருவுக்குப் போகும் கிராதிகளமைந்த இருப்புக்கதவுடன் கூடிய வாயிலையும் கண்டான். தன் செவிக்குக் காலையில் எட்டிய மெஷின்களின் ஒலிமாத்திரம் வெகுதெளிவாய் இப்பொழுது கேட்கலானான். அவன் மனதில் தனக்கு நேர்ந்த எல்லா சம்பவங்களும் ஒன்றன்பின் ஒன்றாய் நிகழலாயின. அவைகள் எல்லாவற்றையும் வெகு ஆழ்ந்து கவனித்து தான் சிக்கிக்கொண்டது போலி நாணயங்கள் செய்து வருபவரும் சங்கேதமொழிகளை தமக்குள் ஏற்படுத்திக்கொண்டு கடிதப்போக்குவரவு செய்பவருமான மகா அயோக்யர்களிடத்தில் என்று நிச்சயித்துக் கொண்டான். உடனே வெளியே தப்பிப்போகும் வழியைக் கண்டுபிடிக்க முயன்றும் முடியாமல், இறுதியாய் தன் சட்டைப்பையிலிருந்து ஒருதுண்டுக்கடிதம் எடுத்து அதில் சிலவரிகள் எழுதி கையிலிருந்த ஒரு ரூபாயை அக்கடிதத்துள் மறைத்து வைத்துச் சுருட்டி எடுத்து தன்கைத்துப்பாக்கியின் வழியாய் சன்னலின் ஊடே தெருவுக்குக் குறிபார்த்து விடுத்தான். அச்சுருளும் நடுத்தெருவில் வந்து விழுந்திருந்தது.

அவ்வாறு தனக்கு நேரிட்ட ஆபத்தை வெளிப்போவோர் அறியும் வண்ணம் தன்னாலியன்ற வரை செய்துவிட்டுப் பிறகு அவ்வறையினின்றும் கீழேயிறங்கி இங்குமங்கும்பார்த்து விழித்தான். ஏதோ சுவரில் குமிழ்போல் காணப்பட்டது அதைத் தொட்டானோ இல்லையோ உடனே அது இடைவெளி விட்டுவிட்டது. கோடி சூரியர்கள் பிரகாசிப்பது போன்ற ஒளிமயமாய்க் காணப்பட்ட ஓரறையில் வந்துசேர்ந்தான். எங்குபார்த்தாலும் யந்திரங்களும், தந்திகளுமாகவேயிருந்தன. ஒரு புறத்தில் இரண்டுமூன்று பேர் கும்பல்கூடி பேசிக் கொண்டிருந்தார்கள். யந்திரங்களின் ஓசையாய் இருக்கவே கதவுதிறக்கப்பட்டு தரணீபதி வந்ததை ஒருவருமறிந்திலர். மேலும் அவர்கள் பேச்சோ வெகு மும்முரமாய் இருந்தது. மெதுவாய் தரணீபதியும் அவர்கள் இருக்கும் இடத்தை நோக்கிச் சென்றான். உள்ளிருக்கும் விஷயங்களை வெகுநுட்பமாய் அறிந்து கொண்டான். பேசிக் கொண்டிருந்தவர்களில் இருவர் இவனைக் கண்டு விட்டனர்.

“ நீ யார்? ” “ ராதிங்கேபேடு.”

“ எங்கிருந்து வருகிறாய்? ” “ ரபுராதா.”

“ யாரைத் தேடிக்கொண்டு வந்தாய்? யார் உன்னை அனுப்பினது?”

“ கயாதியிடம் மர்வாவீ என்னை அனுப்பினார். அவர் எங்கே? இப்பொழுது வருவாரோ?”

“ ஆம், வருவார். அவர் எங்கோ வெளியே போயிருந்தவர் நேற்றைய இரவு வந்துவிட்டதாகக் கேள்வி. இங்குதான் இரு, வருவார்.”

“ நல்லது, அப்படியே” என்று சொல்லி முடிப்பதற்குள் அடுத்த கோடியிலிருந்து அவ்விடத்தை நோக்கித் தரணீபதியின் உயரத்தையும் வயதையும் ஒத்த ஒரு வாலிபன் வந்து சேர்ந்தான். யார் வேலைக்காரர்களிடம் பேசிக்கொண்டிருக்கிறாரென்று சற்று உற்றுப்பார்த்தான். தான் சிறு பையனாயிருந்த காலத்தில் தன்னுடன் சிநேகமாயிருந்த தரணீ யென்று அறிந்து கொண்டு, அவன் தற்காலத்தில் வகித்துள்ள உத்யோகமும், தான் இருக்கும் நிலைமையும் மனதில் தோன்றவும், தரணீ அங்கு வந்திருக்கும் காரணத்தை தன் மதிநுட்பத்தால் தெரிந்துகொண்டு, உடனே வேலைக்காரருக்கு எச்சரிக்கை செய்யலானான்.

“ தைரகிக்ஜா. ன்வயி துத்பபுராதா ன்லபாரதிந்த திபணீரத! தைரகிக்ஜா.”

என்றுசொன்னானோ இல்லையோ தரணீபதி இவர்கள் தன்னைப்பிடித்து விடுவார்கள் என்று சற்றுப்பயந்து விட்டான். தவிரவும் தன்னைப்பற்றி எச்சரித்தவன் தன்னை போலீஸ் உத்யோகத்திற்குப் போகவேண்டா மென்று புத்திமதி சொன்ன சங்கு வென்று கண்டுகொண்டதனாலும் அவன் இப்பொழுது முன்னையினும் அதிகமான அக்ரமங்களில் தலையிட்டு வருவதனால் அவன் தன்னை உபத்ரவத்திற்கு ஆளாக்குவான் என்று புலப்பட்டதினாலும் எப்படியாவது அவ்விடத்தினின்றும் தப்பிப் போகவேண்டுமென்று சமயமென்று எழுந்து வேகமாய் நடக்கலானான். ஆனால் சங்குவின் சங்கேத வார்த்தைகளைக் கேட்ட இருவேலைக்காரர் தரணீபதியைப் பின்தொடரலானார்கள். ஓடிவந்து பின்னாலிருந்த தரணியின் தோளைப் பற்றினார்கள். அவர்கள் பிடியை க்ஷணத்தில் உதறி விட்டான். அவர்கள் மார்பைநோக்கி பலமானகுத்தாய் ஒன்று விட்டான். அவர்கள் ‘அப்பாடா’ என்று அப்படியே கீழ்வீழ்ந்து விட்டார்கள். தரணீபதி மறுபடியும் வேகமாய் ஓடி அங்கு காணப்பட்ட சுற்றுப்படியின்வழியாய் அம்மாடியினின்றும் கீழ்மாடிக்கு இறங்கிப் போகலானான். அங்கு தாழ்வாரத்தில் காவலாய் ஓர் கிழவன் உட்கார்ந்திருந்தான். தரணீபதியை அவன் முதலில் தன்னைச் சேர்ந்தவர்களில் ஒருவனாகக் கருதினான். ஆனாலும் அரைக்கணத்தில், வந்தவன் தன் காவலைக் கடந்தவன் என்று தெரியவந்தது. தாழ்வாரத்துக் கோடியில் உள்ள கதவைத்திறந்து வெளிக்கூடத்திற்கு வந்து கதவின் தாழ்ப்பாளைப் போட்டுவிட்டு அங்கிருந்த ஒரு பளுவான இருப்புலக்கையையும் கதவிற்கு முட்டாக வைத்து விட்டான். கீழே கூடத்தையும் கடந்து உபயோகமற்று கிலமாய்க்கிடந்த அறைகளின் வழியாய் நுழைந்து கடைசி அறையின் சன்னலிலிருந்து வெளி முற்றத்தில் குதித்தான். அதற்குள் உள்ளே மிக்க பிரமாதமான ஆரவாரம் கேட்டது. இவைகளை ஒன்றும் கவனியாமல் தரணீபதி முற்றத்தின் வாசற்படியை யடைந்துவிட்டு, இருப்புக்கிராதி போட்டுள்ள கதவைத்திறந்து வெளியே கண்மண் தெரியாமல் ஓடலானான். வாயிலை விட்டு இரண்டடி கூட வெளியேறவில்லை. சற்று உயரமும் பருமனுமுள்ள இருவர் உடனே தரணீபதியைக் கெட்டியாய்ப் பிடித்தார்கள்.

“ இன்னும் யார்யார் உள்ளிருந்து வருகிறார்கள். அடபயலே! இந்த வீட்டின்மேல் எங்களுக்கு ரொம்ப



நாளாய் கண். நல்லகாலம்! இன்று எங்கள் கையில் சிக்கிக்கொண்டாய்!”

“ நீங்கள் யாரப்பா? சற்றுப் பார்த்துப் பேசுங்கள். கண்டபடி நாக்கை விட்டுவிட வேண்டாம்.”

“ ஆகா, பெரிய மனுஷ்யா! அப்படியே யாகட்டும்.” என்று அவர்களில் ஒருவன் நகைத்துக்கொண்டே சொன்னான்.

“ ஏ, என்னை யாரென்று நினைத்துக் கொண்டாய்—”

“ ஆகா, நாங்கள் அவ்வளவு முட்டாள்கள் என்று நினைத்துக் கொள்ளாதே. உங்கள் போலிநாணயக் கம்பெனியில் இன்னும் எத்தனை பெயர் இருக்கிறார்கள்? எப்பொழுது வெளிவருவார்கள்?”

“ அடேடே! நீங்கள் துப்பறியும் போலீஸைச் சேர்ந்தவர்களா? சரிதான், நான்வந்த வேலைக்கே நீங்களும் வந்திருக்கிறீர்கள்—.”

“ அடே, வாயைமூடு. பிற்பாடு எல்லாம் பேசிக் கொள்ளலாம்” என்று தரணீபதியை பயமுறுத்தினார்கள்.

“ இருக்கட்டுமே, கேளுங்கள் சற்று. அப்படி சந்தேகம் என்மேலிருந்தால் தாராபுரத்து மாதவராவ் அவர்களுக்குத் தந்தியடித்து நான்யாரென்று தெரிந்து கொள்ளுங்கள். நான்தான் தாராபுரத்து தந்திரபாலன் என்று சாதாரணமாய்ச்சொல்லப்படும் தரணீபதி” என்று சொல்லி முடிக்கும்பொழுது தரணீபதியை முன்னொரு கேஸ்விஷயமாய் அறிந்துள்ள தனபாலர் என்பவர் அவ்விடம் வந்தார். தரணீபதி அவரைக்கண்டு.

“ ஸார், சௌக்யந்தானே, தங்களைக்கண்டு வெகு நாளாயிற்று. அந்த ‘ மகிபதி’ கேஸ் என்னவாயிற்று?” என்றான். தனபாலரும் துப்பறியும் உத்யோகத்தில் உள்ளவராதலால் தரணீபதியைப் பிடித்த இருவருடைய மனதிலும் சிறிது குளிரெடுத்தது.

“ தரணீ, எல்லாம் சவுக்யம்தான். நீ அங்கே எங்கோ அகப்பட்டுக் கொண்டாய் என்று தந்தி மாதவராவுக்கு அனுப்பினார்களே. எப்படிப் போய் அகப்பட்டுக் கொண்டாய்?”

“ ஆமாம், அகப்பட்டுக் கொண்டேன். அது கிடக்கட்டும். அங்கே அந்தப் பயல்களை நன்றாய்ப் படைத்து விட்டேன். இவர்களிடம் சொல்லுங்களேன். இது தான் நல்ல சமயம். இன்றைய தினம் இந்த அயோக்யர்களைப் பிடித்துத் தொலைத்து விடலாம்.”

“ ஆகா” வென்று அவர்களிடம் தரணீபதியைப் பற்றி எடுத்துக்கூறி தம்சட்டைப்பையிலிருந்து ஒரு குழலை எடுத்து வாயில் வைத்து ஒரு விதமான சப்தம் செய்தார். ஐந்து நிமிஷத்திற்குள் வீட்டைச் சுற்றிப் போலீஸார் முற்றுகை போட்டு விட்டார்கள். இதற்குள் வீட்டின் மத்திய பாகத்திலிருந்து கொண்டல் கொண்டலாய்ப் புகை எழும்பலாயிற்று. தனபாலன் தரணீபதியைப் பார்த்து “ தரணீ, இதென்ன, ஆச்சர்யம். அங்கே பயல்களை உதைத்ததும் தவிர நெருப்பும் வைத்து விட்டாய் போலிருக்கிறது” என்று சொல்லி நகைத்தார்.

தரணீபதி “அப்படி நான் ஒன்றும் செய்யவில்லையே” என்று வீட்டை நோக்கிச் சற்று ஆச்சர்ய மடைந்தான். “ ஆமாம், வீடு பற்றிக்கொண்டது போலிருக்கிறதே, நீலா—நீலா, என்ன கதியானளோ” என்று கருதலானான். இதற்குள்ளாகத் தரணீபதிமுதலானவர்கள் வீட்டின் பின்புறத்தைவிட்டு ஓர்சந்து வழியாய் வீரகோயில் தெருவுக்கு வந்து சேர்ந்தார்கள். ஏகரும்பலாயிருந்தது! வீட்டு வாயிலண்டை வந்துபார்த்தார்கள். கதவு மூடப்பட்டிருந்தது. இரண்டு நிமிஷங்களுக்குள் கதவு திறக்கப்படவும் ஓர் மாது கையில் சிறு மூட்டையுடன் வெளியில் வந்து வாசற் படியில் சற்று நின்று நாலா பக்கமும் பார்த்து “தரணீ, தரணீ” என்று கூவினள். தரணீபதியைக் கண்டதும் ஒரே பாய்ச்சலாய்க் கும்பலில் பாய்ந்து கும்பலில் ஒருத்தியாய் மறைந்து போனாள். போலீஸ் படைகளோ நெருப்பைக் கண்டவுடன் தீயணைக்கும் யந்திரத்தை உடனே கொண்டுவந்து கொழுந்து விட்டெரியத் தொடங்கின ஜ்வாலையை அணைக்க முயன்றார்கள்.

தரணீபதியை அநியாயமாய் மோசஞ்செய்து அவனைத் தொலைத்து விட எண்ணினவனே இருட்டறையில் அழுது புரள்கிறான். சோபிக்கிறான், கர்ஜிக்கிறான். சற்று நேரம் தன்னுடன் அவ்வறையில் துணைக்கு வந்த கல்யாணியுடன் பேசி ஆறுதலடைவான். எப்படியாவது அவர்களைத் தொலைத்து விடுவதே நலமென்று தீர்மானித்தான். வெளியேறித் தானே தொலைக்கவேணும்! பாபம் அவனுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் ஏராளம் அதிகரித்தன. சில நாழிகைக்கெல்லாம் புகைநாற்றம் ஒன்று கிளம்பியது. ஒரு வேளை தங்கசாலையிலிருந்துதான் வருகிறதோ என சந்தேகித்தான். கடைசியில் இவர்கள் இருந்த இருட்டறைசற்று சூடாகத் தொடங்கி, வரவரசூடும்அதிகரித்தது; பொறுக்க முடியவில்லை. குதிக்கிறான்; விழுகிறான்; அழுகிறான்; எழுந்திருக்கிறான்; எல்லாவற்றிற்கும்கல்யாணி மாத்திரம் சற்று பொறுத்திருந்தாள். இப்படியிருக்குந் தறுவாயில்தான் நெருப்பவிக்கும் யந்திரத்தால் தண்ணீர் வேகமாய்க் கொண்டுவரப்பட்டு மேன்மாடிக்கு ஜனங்கள் வரக்கூடியதாயிருந்தது. தரணீபதி எல்லாருக்கும் முன்னாலேயே வந்தான். தன்னை தியாகராஜன் கல்யாணி இவர்கள் வரவழைத்த அறைக்கு வந்தான். அங்கு தரையில் எங்குபார்த்தாலும், மேல் எங்கு பார்த்தாலும் பொறிக் கதவைத் திறக்கும்படியான ஆணியையேனும் விசையையேனும் காணப்பெறவில்லை. உடனே ஒரு சேவகனையனுப்பி கோடரி கொண்டுவரச் சொல்லி தன் கையாலேயே பொறிக்கதவைப் பிளந்தான். கீழ் இருண்மூடியகுகை தென்பட்டது, மெதுவாக புகை அவ்வழியாய் மேலேறியது.

“ அடேடே, சீக்கிரம் வெளி யேற்றிவிடுங்கள்.

வேண்டியவெல்லாம் நடந்திருக்கிறேன்'' என்று ஈனஸ்வரமான குரல் ஒன்று கேட்டது தூலகரிலிருந்து. தாரணீபதி பக்கத்திலிருந்த சேவகனை நோக்கி: "உள்ளே உடனே குதி, நானும் வருகிறேன்'' என, அச்சேவகன் தயங்கினான். தாரணீபதி "நான் குதிக்கிறேன், என் பின்னாலே வா'' என்று சொல்லி வெகு சாமர்த்தியமாய் உள் குதித்தான். அவன் பின்னுல் நாலைந்து சேவகர்கள் ஒருவர் பின்னொருவராய் உள்குதித்தார்கள்.

மேலிருந்தவர்களுடன் சொல்லி ஒரு பலமான கயிற்றை உள்விடச் சொன்னான் தாணீ. உள்ளேயே தியாகராஜனுக்கு இருப்புக்காப்பு மாட்டப்பட்டது. கல்யாணி மாத்திரம் பயத்தால் கைகால் நடுக்க வெடித்து கதறத் தொடங்கிவிட்டாள். தாரணீபதி அவளுக்குத் தேறுதல் சொல்லி அழவொட்டாமல் செய்தான். பிறகு உள்ளிருந்து ஒவ்வொருவராய் வெளியேறினார்கள். தாரணீபதியின் உதவியின் பேரில் அவ்வீட்டைச்சேர்ந்த வேலையாட்கள், பெட்டிகள் முதலிய சகலமும் போலீஸ் வசமாயின. தியாகராஜன், சங்கு முதலானவர்கள் கேஸ் விசாரணைகள் நடந்தபிறகு கடுங்காவலில் வைக்கப்பட்டார்கள். கல்யாணி மாத்திரம் விடுதலை செய்யப்பட்டு பழையபடி வீட்டில் வந்து வாசஞ் செய்யலானுள்.

தியாகராஜன், கல்யாணி முதலானவர்கள் வெளியில் கொண்டுவரப்பட்டபோது திரளான ஜனங்கள் கூடியிருந்தார்கள். அதில் சற்றேறக்குறைய தியாகராஜனைப்போன்ற உயரமும் வயதுமுள்ள ஓர்புருஷனும் அவர் பக்கத்தில் அவர் மனைவியும் அவர்கள் நடுவில் 7, 8 வயதுள்ள அவர்கள் குழந்தையும் நின்றிருந்தார்கள். இவர்களைக் கண்டதும் தியாகராஜனுக்குக் கிலிபிடித்துவிட்டது. இதுமாதிரி அவன் பயந்ததை அறிந்த தாரணீபதி இவன் பயத்திற்குக் காரணமான அம் மூவரையும் பார்த்து "ஆகா, யார் இவர்? ரயிலில் இறந்துபோன வீரவர்மனின் சாயலாயிருக்கிறார். இச்சிறு குழந்தையும் இந்தம்மணியும் நம் நீலாவின் சாயலாயிருக்கிறார்கள். ஏனோ தெரியவில்லை, இத்தியாகராஜன் ஏன் இப்படி பயப்படுகிறான். பார்க்கலாம். நிதானமாய்க் காரணத்தை யறியலாம்'' என்று ஆலோசனையில் ஆழ்ந்தான்.

சென்னை பவழக்கார வீதியில் ஓர் உயர்ந்த மாடி வீடு. இதில், வெகுகாலமாய் மைசூர் ராஜ்யத்தில் உத்யோகம் பெற்று உபகாரச் சம்பளம் தற்காலம் கிடைக்கப்பெற்ற ஓர் தனவான் வசித்து வருகிறார். இவர் வீட்டிற்கு அடிக்கடி மைசூர்ப்பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள் வந்து போவது வழக்கம். இவ்வருஷமும் மேலே சொல்லப்பட்ட சம்பவங்கள் நடக்கும் சமயத்தில் ஓர் ப்ரபுவும் அவர் மனைவி குழந்தை சகிதம் வந்திருந்தார். அவர் ஒரு நாள் மாலை தம்மனைவியை நோக்கி, "ஏ, நாம் வந்து எத்தனை நாளாகிறது, நாம் ஊருக்குப் போகவேண்டாமா?'' என்றார்

"ஆம், நாம் போகவேண்டியதுதான், போவதற்கு முன் நம்குழந்தை பாஸ்கரனின் புகைப்படம் நல்ல ஒரு இடத்தில் பிடிக்கவேண்டு மென்றிருக்கிறது. ஞாபகம், நம்ப நீலாமாத்திரம் இருந்தால் எப்படியிருக்கும். அவள் உருவம் இன்னம் என் மனதை விட்டகலவில்லை.''

"என்ன செய்கிறது, எல்லாம் ஈசன் செயல். இந்த ஊருக்கு நான் எப்பொழுது வந்தாலும் நீலா ஞாபகம் எப்படியோ வந்து விடுகிறது. நானும் யார் யாரிடத்திலேயோ சொல்லியிருக்கிறேன். அவளைப் பற்றி இன்னும் ஒன்றும் தெரியவில்லையே.''

"இம் முறையும் தகுந்தவர்கள் யாரிடத்திலாவது சொல்லி ஏதாவது ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

'அசட்டே, எனக்கு மனதில் இல்லையா? நாமும் சீக்கிரம் ஊருக்குப் போகவேண்டும். நாளையகாலை புகைப்படக்கடைக்குச் சென்று நம் குழந்தை பாஸ்கரன் படம் ஒன்று எடுக்கச் சொல்லலாம் காலை வெகுசீக்கிரத்தில் போகவேண்டியதாகையால் எல்லா காரியங்களையும் இன்றைக்கே செய்து விடு'' என்றார் வீரவர்மர்.

வீரவர்மர்! யார் இவர். வீரவர்மர் என்பவர் ரயில் விபத்தில் இறந்து விட்டனரே! இவர்க்கும் அவர்க்கும் ஏதாவது சம்பந்தம் உள்ளதா? என்று இயற்கையாகவே மனதில் சங்கைகள் எழலாம்.

ரயில்விபத்தில் மாண்ட வீரவர்மர் போனவர்போனவர் தான். ஆனால் அவர் உண்மைவீரவர்மரல்லர். பொய்ப்பெயரைவகித்து மெய்ப்பெயர் வகித்தவரை வஞ்சித்தொழுகிய புண்யவான் அவர். தியாகராஜனுடன் சேர்ந்து அனேகரை ஏமாற்றியுள்ளார். அவர் செய்கைகளுக்குத் தகுந்த பலனையனுபவித்து விட்டார். இது நிற்க.

நம் வீரவர்மரும் அவர்மனைவி காமாக்ஷியும் முந்திய நாள் மாலை பேசித் தீர்மானித்தபடி தங்கள் குழந்தை பாஸ்கரனை அழைத்துக்கொண்டு புகைப்படங்கள் பிடிக்கும் கடைக்குச்சென்றார்கள். புகைப்படம்பிடித்தாய்விட்டது. திரும்புங்காலையில் அங்கு வைத்திருந்த சிலமாதிரிப் படங்களைப் பார்க்கத்தொடங்கினார்கள். தங்கள் குழந்தை நீலாவின் சாயலாகவே ஆனால் முன் இவர்கள் பார்த்த காலத்திலும் சற்று வளர்ந்துள்ள ஓர் பெண் குழந்தையின் உருவப்படம் வெகு அழகாய் அங்கு வைக்கப்பட்டிருந்தது. அதைக்கண்டது தான் தாமதம், உடனே காமா—காமாக்ஷியம்மாளை வீரவர்மர் சுருக்கமாகக் கூப்பிடுவது வழக்கம்-நாமும் அப்படியே அழைப்போம்: அந்தப் படத்தின் விவரத்தைக்கேட்கும்படி சொன்னாள்: அப்படத்தில் இருக்கும் பெண்குழந்தை இருக்கும் வீடு தனக்குத் தெரியாதென்றும் வெளியில் போயிருக்கும் தன்வேலைக்காரப்பையனுக்குத்தான் தெரியுமென்றும் சொல்ல அப்பையன் வருமளவும் இவர்கள்காத்திருந்து அப்பையனை வீட்டைக்காட்டும்படி கடைக்காரர் அனுமதியின் மேல் அழைத்துப்போனார்கள். இவர்கள் இப்படி அந்த அமைதியான வீரகோவில் தெருவின் பின் பக்கத்தில் வந்தபொழுதுதான் நம் தாரணீபதி விடுத்த



கடிதச் சுருள் கீழ்விழுந்தது. வீரவர்மர் அச்சுருளை எடுத்துப்பார்த்து உள்ளிருக்கும் விஷயங்களைப் படித்து ஆச்சர்யப்பட்டு அவ்வீட்டில் மிகுந்த ஆபத்தில் இருப்பதாகத் தெரிந்த தாரணீபதிக்கு உதவிசெய்ய நாடியவராய் போலீஸ் ஸ்டேஷனுக்கு உடனே சென்றார். அங்கு கடிதம் கிடைத்த சங்கதிகள் எல்லாவற்றையும் சொல்லி கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி தாராபுரம் மாதவராவுக்கும் தந்தியனுப்பப்பட்டது. போலீஸ் ஸ்டேஷனிலிருந்து சேவகர் சிலருடன் புறப்படுவதற்குள்ளாகத்தான்முன்னே கூறியுள்ளபல சம்பவங்களும் நடந்தேறின. போலீஸார் உபயோகப்படுத்தும் குழாச்சத்தம் கேட்டு அனேகர் வந்துசேரவும் வீடு பற்றிக் கொண்டதைக் கண்டு தீயவிக்கும் யந்திரம் முதலானவை வரவும் தாரணீபதியைமுன்னிட்டு எல்லாக்காரியங்களும் நடந்தேறி வந்தன. வீரவர்மர் காமாட்சி இவர்கள் வருவதற்குள் கும்பல் அதிகப்பட்டு விட்டதால் அவர்கள் தயங்கிக் கூட்டத்தில் கலந்து விட்டார்கள். தங்களுடன் கூடவந்த புகைப்படக் கடைக்காரச்சிறுவனையும் எங்கேயோ கும்பலில் பிரிந்துவிட்டார்கள். வீட்டின் கதவு திறந்ததும் ஒரு பெண் "தாணீ, தாணீ'' என்று சொன்னதைக் கேட்டு அவளைப்பார்த்து அவள் தங்கள் நீலாதானோ என்று ஐயுற்றார்கள். பிறகுதான் நம் நீலாவும் காணுமல் கும்பலில் மறைந்ததும்.

"இது யார் வீடு? என்ன சமாசாரம்?'' என்று தங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அங்கு இருந்த இரண்டொரு போலீஸ் சேவகரைக் கேட்டார்கள்.

"என்ன? உமக்குத் தெரியாதா? இது மிகப் பேர்போன பேர்வழிகள் வசிக்கும் வீடு. இங்கு போலி நாணயங்கள் செய்யும் கனவான்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாரும் சீக்கிரம் கைக்காப்பு தரித்தவண்ணம் அரண்மனைக்குக் கோலம் போவார்கள். நீங்கள் சற்று இருந்து வேண்டுமானால் வேடிக்கைபார்க்கலாம்'' என்றான் சேவகன்.

வீரவர்மருக்கும் காமாவுக்கும் மனதில் வருத்தம் இவ்வளவு அவ்வளவு அல்ல. "என்ன, நம் நீலா, இத்தகைய குணவான்கள் மத்தியிலா இருக்கவேண்டும்? தொலைகிறது. அவளை இனிக் காணப்போகிறோமா என்றிருந்தோம், உயிருடனிருக்கிறாளே. இனிமேல் அவளைக் கொண்டுவந்து சேர்க்கும் வழியைத்தேடி அவள்சகிதம் ஊருக்குத்திரும்புவது என்று தீர்மானித்து விட்டேன்'' என்று மனதிற்குள்ளேயே சொல்லிக்கொண்டார்.

கூட்டமெல்லாம் கலைந்துவிட்டது. நீலா எங்கும் காணேம். தாணீபதிமட்டும் அவள்எங்காவது சவுக்கியமாயிருப்பாள் என்ற தைரியத்துடனிருந்தான். ஆனால் அவள் இருக்குமிடத்தைச் சீக்கிரம் கண்டுபிடிக்கவேண்டும் என்று எண்ணங் கொண்டிருந்தான்: இதற்குள் இவன் நண்பராகிய தனபாலர் அவனிடம் வந்து "தாணீ, உன் நன்மைக்காக பாடுபட்ட ஒரு பெரியவரை நீ பார்க்கவேண்டாமா? அவர் வீட்டுக்குப் போகிறாரே.—சே—உடனே அவரைப் பார்த்து நன்றி செலுத்திவிட்டுவா'' என்றார்.

"ஸ்வாமி, முன் 'தடபுட' வில் தங்களைக் கவனிக்கக் கூடாமற்போயிற்று. மன்னிக்க வேணும். சிறைவைக்கப்பட்டிருந்த என்னிமித்தம் சிரம மெடுத்துக் கொண்ட தங்களுக்கு நான் என்ன உபகாரம் செய்யப் போகிறேன். தங்களை நான் நன்றாயறிந்தவனல்லன். இனிமேலாகிலும் தெரிந்துகொள்ள பகவான் கிருபை செய்யட்டும். என்னைத் தாராபுரத்து தந்திரபாலன் தாணீபதி என்பார்கள். தனபாலர் தங்களுக்குச் சொல்லியிருப்பாரே!''

"ஆம், சொல்லியிருக்கிறார். அவரிடத்தில் சிலவிஷயங்கள் நானும் சொல்லியிருக்கிறேன். தாங்களும் அவருடன்கலந்து மேல் நடக்க வேண்டியதைச் செய்ய வேண்டுகின்றேன். சரி, வெயிலாகிறது. நாங்கள் போய்வருகிறோம். கூடிய சீக்கிரத்தில் தங்களைப் பார்க்கிறேன்'' என்று சொல்லிப் போய்விட்டார்.

அவர்கள் கண்ணுக்கு மறையும் வரையில் இமை கொட்டாமல் தாணீபதி பார்த்திருந்தான். "இவர்கள் நீலாவின் சாயலையும் குணவிசேஷங்களையும் பெற்று இருக்கிறார்கள். இவர்களைக் கண்டதும் தியாகராஜன் தயங்கினான். இவர் பேரும் வீரவர்மர் என்கிறார்கள். இவர்களுக்கும் த்யாகராஜ பொய்வீரவர்மர்களுக்கும் ஏதோ பரஸ்பர ஒற்றுமை வேற்றுமைகள் இருந்துள்ளன!'' என்று கருதலானான். தனபாலரை விசாரித்ததில் இவன் கருதினவையெல்லாம் உண்மை விஷயங்கள் என்றும் நீலாம்பாள் சிறுகுழந்தையாயிருந்தபோது களவாடப்பட்டாள் என்றும், அப்படிக் களவாடினது வீரவர்மாது தாயாதி கிருஷ்ணவர்மனென்றும் அவர்பொய்ப்பத்திரங்கள் முதலானவை சிருஷ்டிப்பதில் நிபுணனென்றும் அவர் த்யாகராஜன், கல்யாணி இவர்களுடன் சேர்ந்து வசித்துவந்ததாகவும் தெரியவந்தன. இவ்விஷயங்களை யெல்லாம் வெகுசமீபத்தில் தான் அறிந்ததாகவும் நீலாம்பாள் போனவிடம் தெரியாமையினால் அவளைத் தேடிப்பிடித்துத் தன்னிடம் சேர்ப்பிப்பவர்களுக்குத் தன் ஆஸ்தியில் பாதியைக் கொடுத்து விடுவதாக போலீஸ் ஸ்டேஷனில் எழுதிவைத்திருக்கிறார் என்பதையும் தனபாலரிடமிருந்து கேட்டு ஆனந்தமடைந்தான் தாணீபதி. இவ்விளம்பரம் எல்லா வர்த்தமான பத்திரிகைகளிலும் போட்டிருப்பதைக் கண்டும் தன்னையும் நீலாவையும் பற்றிய முக்யமான விஷயங்கள் அப்பத்திராசிரியர்களின் மனதில் முதன்மை யடைந்திருந்தன என்பதையும் கண்டு மேன்மேலும் பெருமிதமடைந்தான்.

---

**தபால் தந்தி இலாகாக்கள்:**—தபால் தந்தி இந்த இரண்டு இலாகாக்களும் இம்மாதம், முதல்தேதிமுதல் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறதென்றும் தந்திஇலாகாவைக் குறித்து இதுவரையில் தந்தி ஸுபரின்டென்டெண்டுக்கு எழுதப்பட்டு வந்த கடிதங்கள் இனிமேல் போஸ்ட்மாஸ்டர் ஜெனராலுக்கே எழுதப்படவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## திருவானைக்காப்
# பதிற்றுப்பத்தந்தாதி
## TIRUVANAIKKA PADIRRUPPATTANTADI

பெறுதற் கரிய பெரும்பேறும்
பெறுவார் பிறவித் தளையறுவார்
தெறுபற் பலது யரமாறிச்
சிவமாம் பெருமைச் செறிதருவார்
உறுகட் களிறு துதிஞான
தலனார் சரணஞ் சரணமெனக்
குறுநற் படிவத் தொருமுனிமூழ்
குறுநீர் முழுகி யாடுநேரே. (45)

ஆடிற் காவை யயோத்தியர்கோ
னறலாற் கொலைபா தகமறுவீர்
நாடிவெ ளைராவதமிவர் வீர்
நான்முக னாகி யனமிவர்வீர்
தேடிக் கலுழன் மீதூர்வீர்
தீயவு லுத்தர் மீதுகவி
பாடிப் பாடி யுழல்வீரெம்
பானா ருளும் பெறுவீரே. (46)

ஈர்ந்தண் புனலான் ஞானதலத்
திலகுஞ் சம்புப் புனன்மூழ்கிற்
சேர்ந்தண் மிகுபா தகமேதுஞ்
சிவமார் முத்தி நிலைகூடுங்
கூர்ந்தீ தறியாக் கொள்கையெனோ
கோதா வரிசிந் தலைகங்கை
யார்ந்த யமுனை யென் றுனியாங்
கலைந்தே யுழலு மவரவரே. (47)

அவனோ டவளங் கதுவாகி
யமைந்த மாயாப் பிரபஞ்ச
மெவையு நீயே யாயிலக
வெளியேன் புறம்பிங் காவேனோ
நவமார் காவைப் பெருமானே
நல்கா யெளியேற் கெழுநாவான்
கவலா நிலைநீக் கியநீரோர்
காலுற் றாடும் பெருவரமே. (48)

ஒருவா தனைமா ருதாத்தி
லுற்றுப் பவமார் பிறவியற
வருளா லெளியே னோர்சூழ
லறிந்தே னஃதீந் தருள்செய்வாய்
மருவார் பணிகோச் செங்கண்ணன்
வணங்கு ஞான தலத்தாருந்
தெருளா ருமையா டியசீமத்
தீர்த்தத் தன்பான் மூழ்குதலே. (49)

குதலைப் பயிலோர் மதலைமுனாட்
கொளும்பாற் கடலும் வெண்டிரைவீ
சுதலைப் பெறுவா னதிமுதலேழ்
தூநதி யுங்கவுண் மதமார்தும்
பிதலைப தன்பிற் பணிகாவைப்
பிறங்கொன் பான்நீர்த் தமுநல்கு
முதலைப் பலன்யா வையுமொருவர்
மூழ்கத் தருஞ்சிவ கங்கையதே. (50)

### அறுசீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்

கங்கை வெண் மதிநற் றும்பை
கடுக்கையுஞ் சிரத்தி லங்கப்
செங்கையொண் டழன்மான் சூலந்
திகடம ருகமுந் தங்கப்
பங்குறு முமையா ளோடும்
பரிந்திட பத்தி லூர்ந்தே
யிங்குவந் தருளக் காவை
யீசனை வணங்காய் நெஞ்சே. (51)

நெஞ்சகத் தன்பி லார் நூ
னெறிமுறை யாற்றும் பூசை
நஞ்சென வெறுத்து ளன்பி
னற்கலாற் புடைக்கும் பூசை
யெஞ்சலின் மகிழ்விற் கொள்ளு
மீசனை காவை மேவுஞ்
செஞ்சடைப் பெரும நல்குன்
றிருவடி வணங்கு மாறே. (52)

மாறனுக் கருளுஞ் செம்பொன்
மலைப்பொருள் விரும்ப இல்லே
னேறெனப் புவியை யாண்டுண்
டிருந்திட விரும்ப இல்லேன்
வீறணி சுவர்க்கத் தார்தம்
விழைநலம் விரும்பே னின்றாட்
சோறதே விழைவே னல்க
சுடர்மதிற் காவை வாழ்வே. (53)

வாழ்த்துனர் வாழ்த்த யானோ
வசைமிகப் புரிவ னேனுந்
தாழ்த்துனைப் பித்த னென்னச்
சாற்றுமத் தகைமை தேர்வேன்
சூழ்த்தறு காற்புள் ளூதுஞ்
சோலையங் காவை நாத
பாழ்த்தவென் பிறப்ப றுத்துன்
பதந்தரத் தகுமிந் நாளே. (54)

நாளும்வெண் ணீறுபூசி
நயனநன் மணியும் பூண்டு
நீளுகல் லாடை போர்த்து
நினதடி யவரி னஞ்சாக்
கோளுறு வஞ்ச வேடங்
கொண்டிழி தொழிற்செய்வேனுன்
றாளுற வென்றோ ஞானத்
தலனுறை தருமெம் மானே. (55)

மானன விழியார் மையல்
வலைப்படிந் தவா டித்தொண்
டானவை புரிவே னுன்ற
னடியர்தொண் டியற்ற இல்லே



னீனமா ரெளியே னின்றுன்
ணிணையடிநினைவுற் றோவா
மோனமார்ந் திருக்கை யென்றோ
மொழியமு தேசத்தேவே. (56)

தேவர்தம் வாழ்க்கை முற்றுந்
திரும்பவும் பிறவிக்கேதென்
றாவயி னவைவெறுத்து
னலரடி விழைந்து நின்றேன்
பாவணி பவரைச் சோதிப்
பவனலை யென்றிங் கோர்ந்தே
யாவலி னனைந்தேன் காவை
யமுதநின்குறிப்பிங் கென்னோ. (57)

குறிப்பறிந் தருளா யேனுங்
குறையிரந் தாமு ழக்கந்
திறப்படப் புரியு மெற்குன்
றிருவருள் சுரவா தென்னோ
விறப்பவு மிரப்பார்க் கில்லை
யென்பவ ரீனமொன்னு
முறைப்பொரு ளுணர்ந்த காவை
முயங்கருட் படிவக்கோவே. (58)

கோடியாம் வெறுக்கை நேடிக்
கோதையர் மக்களின்ப
நீடின ரெனினு நின்றா
ணிலையறிந் தேத்தா ரன்றோ
நாடியற் சினைய நாவ
னோதவொண் ணிதிய முற்றும்
வீடின ராகி மேலை
விரிநர காட்சி பூண்டோர் (59)

பூண்பல பூண்டு மெய்யிற்
பொற்படாம் போர்த்து நாளுங்
காண்பல மாதர் மெச்சக்
காளையாய்த் திரிவே னல்லாற்
சேண்பயி னாவன் மூலச்
சிவபரஞ் சுடரே நின்றாண்
மாண்பொடு பணிந்துன் கோயில்
வலம்வர முயல்கி லேனே. (60)

### எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

முயன்றன்பிற் பரவடியார்க் கெளிய னென்னு
முழங்குமறை யுண்மையமர் நீதி யாரன்
பியன்றிடுதட் டேறநின்கீட் கோவ ணத்தட்
டெளிமையிற்றா ழுறலோர்ந்துன் றாட்க ணன்பு
குயின்றனனின் குறிப்பறியேன் குறிக்கொணாவெண்
குணக்குன்றே ஞான தலக்கோவே யென்பாற்
பயின் றுளவைம் பாசமறுத் தருட்க டைக்கண்
பார்த்தருணின் பதம்பெறவிப் பாரின் மீதே. (61)

K. V. சுப்பய்யா ஐயர், எம். ஏ., எல். டி

# வஸந்த மாளிகை
## VASANTHA MALIKAI
## அத்தியாயம் 19
### துராலோசனை
### Conspiracy

**மஹாவீரன்.**—நான் கீழேயிருந்து செய்த ஜாடைகளை நீ பார்த்தாயா?

**பரமானந்தர்.**—என்னடா! அவ்வளவுதெரியாதா? அவைகளைப் பார்த்துத்தானே ஜாதகத்தையும் திருத்திக் கொண்டேன்.

**மஹாவீரன்.**—எஜமானருக்குச் சந்தேக மொன்றும் தோன்றவில்லையே?

**பரமானந்தர்.**—கொஞ்சம் சந்தேகந்தான். பிறகு எல்லாம் சரிப்படுத்தி விட்டேன். ஓர் ரஹஸ்யமான அபாயம். மேற்குத்திசை யான்—என்றேன்—

**மஹாவீரன்.**—(தனக்குள்) ஆஹா! எனக்கு அன்னமிட்ட எஜமானனையே ஏமாற்ற முயல்கின்றேன் என்ன செய்வது! எல்லாம் அவர் நன்மையின் பொருட்டே! பயன் நற்பயனாயிருக்குமானால், அதையடையச் செய்யும் சாதனம் எப்படியானால் என்ன? (பரமானந்தரை நோக்கி). சரியப்பா! ஜோதிடக் களஞ்சியமே! உன் ஜாதகத்தைப்பார்த்தாயா? நீ கூடியசீக்கிரம் இவ்விடம் விட்டுப் புறப்பட்டு அவஸரமான கார்யமாய்ச் செல்லவேண்டும். அது தான் உன் க்ரஹசாரம்.

**பரமானந்தர்.**—அப்பப்பா! என்னை விட்டு விடு! நான் எங்கேயாவது ஏகாந்தமாய் தவம் செயயப்போகிறேன். இந்த லௌகீகத்தில்—

**மஹாவீரன்:**— வந்து விட்டாயே என்னிடமே வாலைக்காட்ட! சுக்ரன் உனக்கு வக்ரித்து விட்டானோ? இந்த நிலமையில் தனிமையாய்ப் புறப்பட்டாயோ—அவ்வளவுதான் — மாரகதசைதான் — என்ன விழிக்கிறாய் திறு திறுவென்று ஆடு திருடின குறவன் மாதிரி. என் கிராமத்தில் ஒரு நல்ல பங்களா இருக்கிறது. தனிமையாய் அங்கேஅடைந்துவிட. அங்கே வைத்யமோ—இன்னும் என்ன பைத்யமோ—

**பரமானந்தர்:**—என்ன அப்படிச்சொல்லுகிறாய். அநேகமாய் தாம்ரத்தை ஒன்பதுமாற்றுக்குக் கொண்டுவந்து விட்டேன். இன்னம் ஒன்றறை மாற்று ஆய் விட்டதோ—

கேளப்பா தாமிரத்தைச் சூர்ணமாக்கி
கோரக்கர் பச்சிலையின் சாறு சேர்த்து,
வாரப்பா வாலையிலே புடமேழிட்டு—

**மஹாவீரன்:**—சீ! சீ! சீ! பைத்யம் பலமாய்விட்டதே! அடே மண்டு! எல்லோரையும் ஏமாற்றவெண்ணி நீயே பைத்யமாய்விட்டாயே. நீ கிருஷ்ணராஜனுக்குத் தயாரித்த கார்க்கோடக விஷமானது வேலையைத் தீர்த்திருந்தால், உன், வைத்தியம், மந்த்ரம்,

ஜோதிஷம்—எல்லாவற்றையும் நம்புவேன்—உன் சாமர்த்தியத்தையும் மெச்சுவேன்,

சரி! அதெல்லாம் கிடக்கட்டும், இவ்வளவு பேசினையே. என் கிருஷ்ணராஜனிடத்தில் உன் விஷத்தின் வீர்யம் செல்லவில்லை?

**பரமானந்தர்:**—ஆ! அப்படிக்கேளு! சொல்லுகிறேன்.

"மைந்தனே மேதினியில் வித்தை நான்கு
மணி மந்திர ஔஷதங்கள் ஜோதிடந்தான்."

கிருஷ்ணராஜனுடையஜாதகத்தில் உச்சஸ்தான—

**மஹாவீரன்:**—சீ! சீ! சீ! என்ன பிதற்றுகிறாய்! உன் கடையைக் கட்டு! நான் என்ன, நரசிம்மராஜனென்று நினைத்தாயா,உன் பேத்தலெல்லாம் நம்புவதற்கு?

**பரமானந்தர்:**—கோவித்துக்கொள்ளாதே. ஸத்யமாய்ச் சொல்லுகிறேன். நான் தயாரித்த விஷத்துக்கு ஒரே மாற்றுத்தான். அதில் சேர்க்கவேண்டிய ஓர் முக்ய மூலிகைஉண்டு.அதையறிந்தவன் என்னைத் தவிர இந்த ஜம்பூத்தீவில் ஒரே ஒருவன்தான்—

**மஹாவீரன்:**—ஆ! அப்படிச்சொல். யாரோ ஒருவன் புதிதாகக் கிருஷ்ணராஜனுக்கு வைத்யம் செய்ததாய் வதந்தி—

**பரமானந்தர்:**—அது எவ்வாறு இருக்கமுடியும். என்னிடம் பூர்வாச்ரமத்தில், ஒருவேலைக்காரனிருந்தான். அவன் என் ரஹஸ்யங்களில் சிலவற்றைத் திருட்டுத்தனமாய் அறிந்துக்கொண்டதாய் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. உடனே அவனைக் கூட்டோடு கைலாஸ மனுப்பிவிட்டேனே! சரி, கிடக்கட்டும். நீ சொல்லுகிற பங்காளாவில், என்னுடைய வித்தையை விருத்தி செய்யத்தக்க ரஸவாதசாலை இருக்கிறதா?

**மஹாவீரன்:**—எல்லாம் இருக்கிறது. சும்மா அடைந்துகிட, பச்சிலையோ, வாலை, துருசோ உப்பேர, புடமோ என்னவேண்டுமானாலும் செய்.—

**பரமாநந்தர்:**—ஆ! அப்படிச்சொல். நீ கேலி பண்ணினாலும் சமயத்தில் இந்தவிஷயங்களில் உனக்கு நம்பிக்கை யிருக்கிறது. மஹாவீர! நான், விந்த்யம், ஹிமயம், கேதுமாலம், மேரு, ஸபத்தாவு, முதலியவைகளைச் சுற்றிவந்திருப்பது வாஸ்தவமானால், ஸஞ்சீவிகரணி, ஸந்தானகரணீ, முதலான மூலிகைகளின் குணகுணங்களை அறிந்தது உண்மையானால், நீருப்பு, வெடியுப்பு, வங்க பஸ்பம், தாளகம், முதலானவைகள் சேர்ப்பதில் எனக்குச் சாமர்த்தியம் உண்டென்பது உண்மையானால்—குழந்தாய்! இன்னும் ஆறுமாதகாலம்—ஆறே ஆறுமாதம். நான் இதுவரை ச்ரமப்பட்டதற்கும், தங்க மாற்றுமுறைக்கும் கொஞ்சந்தான்—அதைக்கண்டு பிடித்துவிட்டேனே. அவ்வளவுதான். என்ன சொல்லுகிறாய் ஹ, ஹ, ஹா!

"வையகத்தில் தாரித்ரியம் விலகிப்போமே!
வயதான கிழவரெல்லாம் இளமையாவார்—"

**மஹாவீரன்:**—ஜமாய்! தாத்தா! ஜமாய்! ஆனால் ஒன்று மாத்திரம் மனதில் வைத்துக்கொள். இந்தப் பேத்தலுக்கெல்லாம், மஹாவீரன் ஏமாறமாட்டான். அதெல்லாம் போகட்டும். நீ போனதும் எனக்கு ஒரு மருந்துமாத்திரம் தயாரிக்க வேண்டும்.

**பரமானந்தர்.**—ஹ ஹ ஹ ஹா ஹாம்! இனிமேல்அந்த சனியன் பிடித்த மருந்தைச் செய்யவேமாட்டேன். மஹாபாவம்! மஹாபாவம்!

**மஹாவீரன்.**—சரித்தான்! உனக்குப் பிடித்தது சைத்தான். தாத்தா! நீ இந்த உலகுக்கு உன் ரஸவாதத்தால் எவ்வளவோ நன்மைசெய்ய வெண்ணியிருக்கிறாய். நான் சொல்வதை நீ செய்யவில்லையோ உனக்கு யமலோகயாத்திரை தான்.பாவம்! அந்யாயமாய், இந்த அல்ப காரணத்தால், உலகத்துக்கு உன்னால் ஏற்படப் போகிற உபகாரத்தைக் கெடுத்து விடாதே! நான் ஒன்றும் அதிகமாய்க் கேட்க வில்லை. ஒருவரையும் கொல்லவேண்டாம். ஒரு சிறு மருந்து. உண்டால், கொஞ்சம் அசைதி, ஜல்பு, தலையிடி, கொஞ்சம்ஜ்வரம், நாவறட்சி, வீட்டைவிட்டு வெளிப்போகாமல்—

**பரமானந்தர்.**—ஆ! அவ்வளவுதானே அது ஆகட்டும். உயிரை வதைப்பதென்றால்—

**மஹாவீரன்.**—அவ்வளவு தான். நீ கொடுக்கும் மருந்து இக்குணங்களைச் செய்து விட்டதோ உனக்கு வரும் சம்மானத்துக்கு அளவில்லை. உயிருக்கு ஏதாவது ஹானிவந்ததோ, நீயும் அவள் செல்லும் இடம் போகவேண்டியதுதான்.

**பரமானந்தர்:**—அவள்! ஆ சிவ சிவ சிவ! ஒரு அபலையின் பேரிலா என் வைத்தியத் திறமையைக் காட்டுவது?

**மஹாவீரன்:**—அடேமுட்டாள்! அவளைக்கொல்ல எத்தனமல்ல. அவளை வஸந்தமாளிகைக்கு அழைத்து வரும்படி மஹாராணியார் உத்தரவு! நீ கொடுக்கும் மருந்தால், அவள் இருக்குமிடம் விட்டு சொல்ப காலம் வெளியேறாது செய்யவேண்டும்:

**பரமாநந்தர்:**—அப்போ சரி! அப்போ சரி! ஆனால்—யாராவது கண்டுவிட்டால்.

**மஹாவீரன்:**—அதெல்லாம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன். சொன்னபடிமாத்திரம் செய்.

மஹாவீரன் உடனே, பலபத்ரனையழைத்து அவனிடம் சிறிதுநேரம் ரஹஸ்யம் பேசிவிட்டு 'பலபத்ர! நான் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கட்டும்.இந்தக் கிழவன் பாநுமதியைப் பார்க்கவும் கூடாது. மாளிகையைவிட்டு வெளி யேறவும் கூடாது. இவன்வந்திருக்கும் விஷயம் பாநுமதியும் அறியலாகாது.! ஜாக்ரதை! அதிகமாய்க்குடித்துக் கெடுத்துவிடாதே! இப்பொழுதே இவனையழைத்து விடியுமுன் திருவூர் மடம் செல்" என்று ஆக்ஞாபித்தான்.

பரமாநந்தனும், பலபத்ரனும் இரவே ப்ரயாணம் செய்து விடியுமுன் திருவூர் மடம் வந்துசேர்ந்தார்கள்.



## அத்தியாயம் 20

### மாற்று

### Antidote

நமது கதாஸ்தலம் இப்பொழுது மறுபடி திருவூர் மடத்துக்கு மாறிவிட்டது. முன் அத்யாயத்தில் கூறிய விருத்தாந்தங்கள் நடந்த மறுநாட்காலை சுமார் 8-மணி யிருக்கலாம். திருவூர்மாளிகையைச் சேர்ந்த ப்ராகாரத்துக்குட்பட்ட சோலையிலுள்ள பலவகை விருக்ஷங்களின் நிழலில், நமது பாநுமதியும் அவள் தோழி ஜானகியும் மெதுவாய் உலாவிக்கொண்டிருந்தார்கள். உத்ஸாகமா? ஸந்தோஷமா? ஒன்றுமல்ல. பானுமதி தன் நிலமையையும் தன்காதலன் தன்னை எல்லோருமாய் விவாஹம் செய்து உலக அபவாதத்தை நிவர்த்திக்காது காலதாமதம் செய்துவருவதையும் இந் நிலைமையில் தன் தந்தைக்கு ஏற்படும் அவமானத்தையும், அதனால் அவர் மனம் நொந்து வியாதியால் வருந்தி, யமனோடு போராடுவதையும், தான் இம்மாய மாளிகையில், மாயமாய் மறைபட்டிருப்பதையும் நினைத்து நினைத்து,

எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணி யெண்ணி யேழை நெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப்
போதும் பராபரமே

என்றவாறு, பலவித மனோவியாகூலத்தால் இளைத்த சரீரமும், வெளிறின நிறமும், காலத்துக்கும், பருவத்துக்கும் பதவிக்கும் தக்க ஆடையாபரணம் யாதொன்று மணியாதவளாய், அடிக்கடி பெருமூச்செறிந்துகொண்டு உலாவிவந்தாள்.

ஐயோ பாவம்! என்ன பேதமை! இதுதான் ஸ்வயம் வரம்! தன்பெற்றோரையும் உற்றோரையும், உலக அனுபவமுள்ள மற்றோரையும் கேளாது, சிறு வயதிலேயே, உலக அனுபவமே யில்லா நிலமையில், கேவலம், அழகு, பேச்சு, நடையுடை பாவனை முதலான பாஹ்ய இங்கிதங்களால் மாத்திரம் ஆகர்ஷிக்கப்பட்டுக் காம வெறியால் ஸ்வயம்வரம் செய்யும் பாலர் பாலைகளின் கதி இவ்வளவுதானே. இதெல்லாம் ஸ்வல்ப வாழ்வு தானல்லவா?

பானுமதியும் ஜானகியும், அம்மரநிழல்களில் சஞ்சரித்துக்கொண்டு வருகையில். சிறிது தூரத்தில் சில்லறை வியாபாரி யொருவன், ஓர் பெரிய மூட்டையைத் தோளின்மேல் சுமந்துகொண்டு,

சீனா தேசப்பட்டுகளாம்,
ஜப்பான் தேசப்பெட்டிகளாம்,
காஞ்சீவரக் கருப்புகளாம்,
கொரநாட்டுச் சேலைகளாம்,
சிங்கப்பூருச் சீட்டிகளாம்,
சீனாதேசப் பீங்கானும்,
வங்காளத்து வத்திகளாம்,
கும்பகோண வில்லைகளாம்,
திண்டுக்கல்லுச் சரிகைகளாம்,
தஞ்சாவூருச் சந்தனமாம்,

என்று பலவாறு தன்சரக்குத் தினுசுகளின் பெருமையைப் பாடிக்கொண்டு அப்ராகாரத்துட் பிரவேசித்தான்.

**பாநுமதி:**—ஜானகி, இன்று என் மனம் ஏதோ ஒருவாறு கலக்கமுற்றே யிருக்கின்றது. இவ்வியாபாரியிடம் சரக்கு வாங்கும் பாவனையாய்ச் சற்று நேரம் விளையாட்டாய்க் காலங்கழிப்போம்.

**ஜானகி:**—அம்மணி! அப்படியே செய்யலாம்—ஆனால்—என் தகப்பனார்—

**பானுமதி:**—"என் தகப்பனாரல்ல—.கூப்பிடு அவனை. நான் சில ஸாமான்கள் வாங்கவேண்டும்" என்று கம்பீரமாய் ஆக்ஞாபித்தாள்.

**ஜானகி:**—வேண்டாம்,அம்மணி!வேண்டாம்! தாங்கள்நாவசைத்தால்போதும்;இப்பரத கண்டத்திலுள்ள சமஸ்த வைபவங்களும் தமது பாதார விந்தங்கள் வந்து சேரும். அம்மணி! நான் சிறுமி சொல்வதை ஆட்சேபியாதேயுங்கள். இதில் ஏதாவது சூதுக்கிடமிருந்தாலு மிருக்கலாம்."

**பானுமதி:**—சொன்னால் உடனே செய்யவேண்டும். நீ மாட்டாய் என்றால் இதோ நானழைக்கின்றேன் அடே யாரடா! வியாபாரி!.

அம்மணி! இதோ வந்து விட்டேனென்று சொல்லிக்கொண்டு வியாபாரி வேஷம்பூண்ட நமது மாயனாசாரி, அவர்களருகில் ஓடிவந்து அவஸரமாய்த் தன் மூட்டையை யவிழ்த்து, அதிலிருந்த சரக்குகளை ஒவ்வொன்றாய் எடுத்து அவர்கள் முன் பரப்பினான்.

**பானுமதி:**—எங்கே அந்தக் கும்பகோணம் ரவிக்கைத்துண்டில் ஒன்று—ஜானகிஉனக்கும் ஒன்றிருக்கட்டும்—அதிலே இரண்டு,—காஞ்சீவரம் கருப்பில் ஒன்று—எங்கேடா; அந்த பம்பாய்வளை—ஜானகி, இது எவ்வளவு நன்றாயிருக்கடி—

**மாயன்:**—அம்மணி இது புது தினிசு, அக்கரைச் சீமையிலே, பாங்கிக்காரர் செய்தது!

"அடே! எனக்கொரு ஜதை, இந்தச் சின்னம்மாளுக்கு ஒருஜதை."

**மாயன்:**—(தனக்குள்) ஐயோ வியாபாரியாய்ப் பிழைத்தாலும் எவ்வளவோ சுகமாய்க் காலம் கழிக்கலாமே.

**பானுமதி:**—அதென்னடா பெட்டியிலே!

**மாயன்:**—"அத்தர், பில்லை, ஜவ்வாது, கஸ்தூரி கோரோசனை, காச்மீரத்திலிருந்து நேரே வந்தது அம்மணி! டில்லி பாதுஷா போடுவாக அம்மணி! நல்லாயிருக்குமம்மணி! முகர்ந்துபாருங்கஅம்மணி! மங்கமாராணியவுகபத்துவாரகனுக்குவாங்கினுகஅம்மணி!" என்று சொல்லிக்கொண்டே ஓர் சிமிழியைத்திறந்து கொடுக்க, அதை முகர்ந்ததும் தன்னறியாத குதூகலமும், தேகோத்ஸாகமும் பாநுமதிக்கு ஏற்பட்டது.

**பானுமதி:**—ஏண்டா! இது என்ன மருந்து!

மாயன்:—அம்மணி! இதுதான் ஸர்வஸஞ்சீவி மாத்திரை. இதனால் குணப்படாத, சரீரவியாதி, மனவியாகுலம், ஒன்றுமில்லே.

பானுமதி:—"ஏண்டா! மருந்து சரீரவியாதியைக் கண்டிக்கும் கேட்டிருக்கோம்—மனவியாகுலத்தைக் கண்டிப்பதுண்டோ? என்ன அப்பா, ஏமாற்றுகிறாயா?" "அம்மணி! அடியேன்மேலே கோபிக்கலாகாது; கேட்டீங்க, சொன்னேன். நான் வியாபாரி. இதனாலே அநேகம்பேர் சொஸ்தப்பட்டிருக்கிறாங்க. சிறுபாளையம் ஜமீன்தார் அவுக, ஏன், நேற்று மந்திரியவுக நரசிம்ம ராஜா அவுக எத்தனும் போம்மணி! வேணுமின்னு வாங்கிக்கொள்ளுங்கோ. இல்லாட்டா பணம் உங்கது பண்டம் என்னது" என்று சொல்லிச் சற்று நிறுத்தினான்.

பானுமதி.—ஏனப்பா! சிறுபாளையம் ஜமீன்தார் பூரா சௌக்கியமாய் விட்டார்களா?

மாயன்.—என்ன அம்மணி! இந்த எரிஞ்சுபோகுறானே (சூரியன்) அவனுக்குத் தெரியும். பூலோகத்திலுள்ள மருந்தெல்லாம் குடம்குடமாகக் கொடுத்தாக. அடியேன் பார்த்தேன். இது சரீரவியாதியல்ல மனவியாகூலம் என்னு கண்டுகிட்டேன். இந்தமாத்திரையை ஒரு தடவை, ஒரே தடவை உரைத்துக்கொடுத்தேன் அவ்வளவு தான்—"

பானுமதி.—நான் ஒரு புட்டி மாத்திரை வாங்கிக்கொள்ளுகிறேன்— அதையும் சேர்த்துவையடா!

ஜானகி.—அம்மணி கோடிப் புண்ணியமுண்டு. வேண்டாம். எப்படியிருக்குமோ!

மாயன்.—அம்மணி! அப்படியெல்லாம் பயப்படவேண்டாம். இதோகாட்டுகிறேன், என்று சொல்லிக்கொண்டு, அதில் ஒரு மாத்திரையை எடுத்து மாயன் வாயிற்போட்டு, மென்று தின்னான்-

உடனே பானுமதி மருந்தையும் மற்றச்சாக்குகளுடன்வைத்துக் கட்டச்சொல்லி, "ஜானகி! அவனுக்குக் காசைக்கொடுத்தனுப்பு! எல்லாவற்றையும் உள்ளே எடுத்து வா!" என்று ஆக்ஞாபித்துவிட்டுச் சரேலென்று அரண்மனை நோக்கிச் சென்றாள். அவள் தலை மறைந்ததும், மாயன் ஜானகியைநோக்கி "அம்மணி! உன் முகத்தைப்பார்த்தால் உன் எஜமானியிடம் அதிகப் பிரியமுள்ளவள்போல காண்கின்றீர்கள்" என்றான்.

ஜானகி.—திடுக்கிட்டுத் திரும்பி "இருக்கட்டும்.—அதனாலென்ன?"

"அம்மணி! நான், வியாபாரி அல்ல —"

"அப்படியா! நீ என்ன மோசம் செய்யவந்தாய். இதோ கூப்பிடட்டுமோ சேவகர்களை?"

"அம்மணி! அவ்வளவு பதட்டம் வேண்டாம். உன் எஜமானியின் நன்மையைக் கருதுபவர்களில் நான் ஒருவன். அவள் உயிரைக் காக்கும்பொருட்டு இவ்வேஷம் தரித்து இங்கு வந்தேன்."

ஜானகி.—நீ சொல்லுவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. தெளிவாய்ச் சொல்லு.

மாயன்.—அம்மணி! சிறிதுநேரத்தில் ஒரு கிழவன் வரப்போகிறான் இவ்வரண்மனைக்கு. அவன் மஹாபாதகன் ஸர்வசண்டாளன். அவன் போனவிடமெல்லாம் போரும், சாவும், பீடையுமே. அவன்தான் சிறுபாளையம் ஜமீன்தாருக்கும் மந்திரி கிருஷ்ணராஜாவுக்கும் மருந்திட்டது. அவன் யார் குடியைக் கெடுக்க இங்கு வருகிறானோ. அம்மணி! பானுமதியின் உயிருக்கு என்ன அபாயம் நேரிடப்போகிறதோ. தாங்கள் ஒன்றும் வெளியிடவேண்டாம். அப்படி ஏதாவது நேரிடுமானால் நான் கொடுத்த மாத்திரையை உபயோகியுங்கள். ஐயோ! அதோ வந்து விட்டார்களே மஹாபாவிகள்" என்று சொல்லிக்கொண்டு எல்லாவற்றையும் சுருட்டிக்கட்டிக்கொண்டு அங்கோர் புதரில் மறைந்தான்.

இதற்குள் ஜானகியின் தகப்பனும், பரமானந்தனும், வலபத்ரனும் சிரிப்பும் விளையாட்டுமாய் உள்ளே நுழைந்தார்கள்.

வலபத்ரன்.—(ஜானகியின் தகப்பனைநோக்கி) அடே சாமியாரே! என்னடா நான் ஒருபெரியமனுஷன். இங்கே வந்தால்மரியாதை பண்ணவேண்டாமா. இதோ வருகிறாரே இவர்யார் தெரியுமா! உன்தாடியெல்லாம் தங்கமாக்கி விடுவாராக்கும்.

சாமியார்:—அடேடே! உனக்குப் புண்ணியமுண்டு. சத்தம் போடாதே உள்ளேவா. உனக்கு, சீமைச் சாராயமாய் ஒரு புட்டி உன்இழவுக்கு அழுறேன்.

பரமாநந்தர்:—நாராயண! நாராயண!

வலபத்ரன்:—அத்தே இங்கே கொண்டுவாவேன்.

பரமாநந்தர்:—சாமியார்! அதேதான் கொண்டு வந்து தொலையேன்! நாராயண! நாராயண!

வலபத்ரன்:—அடேடே பரம! என்ன உன்கை மருந்தை கலந்து விடலாமெண்டு நினைக்கிறையோ என்ன செய்வேன் தெரியுமா?

இதற்குள், சாமியார் ஓடிப்போய் ஒரு குப்பி சாராயம் கொண்டு ஓடிவந்தான்.

வலபத்ரன்:—"அத்தே இங்கே கொடு' என்று வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு, குப்பிமுழுமையும் குடித்துவிட்டு,

"அடே! சுத்துதடா சுத்துதடா கண்களெல்லாம் சுத்துதடா.

நரசிம்மன் ராசனுவான், மாஹாவீர மந்திரியாம், வலபத்ர! உன்பாடு ஷோக்குடப்பா ஷோக்கு! அடே! என்னடப்பா இந்த இழவுதோட்டமெல்லாம் சுத்துதடா. அடே! அடே பரம! நீ மருந்திருந்து வைச்சுட்டாயாடா! ஊம் ஹ—ம்.—" என்று கதறிக்கொண்டே குடிவெறியால் கீழே சாய்ந்தான். சாமியாரும் பரமானந்தரும், தடபுடலாய், அவனைத் தூக்கிக்கொண்டு யாருமறியாமல் உள்ளே சென்றார்கள்.

இதெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ஜானகி, தன்விதியை நொந்துகொண்டு உள்ளே சென்றாள்.

புதரில் மறைந்திருந்த மாயன் தலைதப்பியது தம்பிரான் புண்யமென்று வெளியே சென்றான்.



# மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

## ஆத்திசூடி விளக்கம்

### 37. கூடிப் பிரியேல்

இந்த ஸூத்திரத்திற்குச் சேர்ந்து பிரியாதே என்பது பொருள். உடனே பல கேள்விகள் நமது மனதில் உண்டாகும். (1) யாரோடு? (2) பின்னர் பிரியாமலிருக்கவேண்டும் என்பதைக் கருதியேதான் கூடவேண்டுமோ? (3) கூடிப் பிரிந்தால் என்ன? (4) கூடாது பிரிந்தே இருக்கலாமோ? (5) எதனோடு அல்லது எதை? என்பவைகளே இக்கேள்விகள்.

(1) யாரோடு? ஸத்துக்களோடு, நற்குணமுடையாரோடு. மனிதர்களது நற்குணங் கண்டு நாம் முதலில் நெருங்கவேண்டும் அவர்களை. பின்னர் நீரவிசாரித்து நிதானித்துப் பார்த்து அவர்களுடன் கூடிப்பழகவேண்டும். இப்படிப் பழகிவருங்கால் அவர்களிடம் சில துர்க்குணங்களிருப்பதாகக் கேள்விப்பட்டமாத்திரத்தில் அவர்களை விட்டுப்பிரிய திடமென்று தீர்மானித்து விடவேகூடாது. அவஸரப்பட்டு அவர்களை எதிர்த்துக்கொள்ளவும் கூடாது. சற்று நிதானிக்கவேண்டும். மேலே யோசனைகளையும், உற்றுநோக்குவதையும் அவர்கள் நடத்தைகள் விஷயமாகச் செய்துபார்க்கவேண்டும். அதன்பின் அவர்களிடம் சில துர்க்குணங்கள் இருப்பதாக விளங்கிவிட்டால், அது அவர்களிடம் மாத்திரமிருந்துகெடுதலைச் செய்யக்கூடியதா அல்லது சேர்ந்தவர்களையும் கெடுக்கக்கூடியதா என்று ஆராய்ந்துபார்க்கவேண்டும். அவர்களைமாத்திரம் கெடுக்கக்கூடியதென்று தெரிந்தால் அவர்கள் இணக்கத்தைவிடாது நெருங்கிப் பழகி தகுந்த தருணங்களில் அவர்களுக்குப் புத்திமதிகூறி அவர்களைத் திருத்த முயலவேண்டும். அப்படி முடியாவிடில் அவர்கள்பாடு என்றும் பட்டால்தாமே தெளிவர்என்றும் விட்டுவிட்டு நெருங்கிப் பழகுவதைக் குறைத்து ஸாவதான மனத்துடனே இருந்துவிடவேண்டும். அவர்கள் துர்க்குணம் பிறரையும் கெடுத்துவிடுவதாக இருப்பின் நெருக்கப் பழக்கத்தை அதிகப்படவொட்டாது வரம்புள் நிற்கும்படி செய்துகொண்டு ஒரே அடியாகப் பிரிந்துவிடாமல் பிரியக்கூடிய தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கவேண்டும். இப்படி பிரிவதற்குத் தயாராகவே மானஸீகமாக மாத்திரம் இருந்தால் போதாது தகுந்த ஸமயங்களில் வாக்குத் தொழில்களாலும் நமது மனோநிலையை நமது ஸ்நேகிதர்களுக்குக் காட்டியே வரவேண்டும். இல்லாவிடில், அவர்கள் 'இப்படித்தான் இவன் நமக்கு தர்மோபதேசம் செய்துகொண்டிருப்பான்: தகுந்த ஸமயங்களில் நமது தொழில் கெட்டதாயினும் கைவிடமாட்டான் நம்மை' என்று எண்ணி நம்பிவிட நாம் அவர்களைவிட்டு முற்றிலும் பிரிய இடமில்லாமலே போய்விடும். இதற்காகவே தகுந்த ஸமயங்களில் நமது நண்பர்களுக்கு நம்பிக்கை பிறக்காமலிருக்கும்படி உறுதிப்புத்திமதிகள் கூறியும், காரியங்கள்செய்தும் 'இவன் நம்முடன் சேர்ந்திருப்பான், நாம் கொடிய காரியங்களில் முயலாதிருக்கும் வரையில்; முயன்றுவிட்டால் இவன் உதவியை எதிர்பார்க்கவேகூடாது' என்ற உறுதியான எண்ணம் நமது நண்பர் மனதில்பதியும்படி நடந்து கொள்ளவேண்டும். ஆகவே நல்லாரோடு நீரவிசாரித்துச் சேரவேண்டும். சேர்ந்துவிட்டால் பிரியும் தருணம் ஏற்பட்டாலொழிய பிரிந்துவிடவேண்டும் என்று எக்கொடியகாலத்திலும்நினையாமலிருக்கவேண்டும். கொடியகாலத்தில் பிரிவதில் ஆவல்கொள்ளாது காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு அக்காலத்திலும் அதிகமாக நெருங்காது பழகியே வரவேண்டும் என்பதும், அப்படிப் பிரியுங்கால் விரோதம் பாராட்டவே கூடாதென்பதும் இந்த ஸூத்திரத்தின் பொருள். இதற்கு விதுரரே தகுந்த திருஷ்டாந்தம்.

(2) பிரியாமலிருக்கவேண்டும் என்பதைக் கருதித்தான் கூடவேண்டுமோ ஒருவருடன்? இதைக்கருதியேதான்கூடவேண்டும் ஒருவருடன் என்பது இந்த ஸூத்திரத்தின் கருத்து. ஒருதரம் ஒருவருடன் கூடிவிட்டால் அவருக்கும் நமக்கும் ஒருவித ஸமமில்லை ஏற்பட்டுவிடும்: நம்பிக்கை இடையில் உண்டாய்விடும். இருவருக்கும் ஸம்பந்தங்கள் நெருங்கிவிடும், இடங்கொடுத்து விட்டால். ஆகவே எவருடனும் நெருங்கிப் பழகுவதன்முன் நீரயோசித்துத்தான் செய்யவேண்டும். இதற்கு திருஷ்டாந்தம் விவாஹம்தான். இதில் ஏற்படும் ஸம்பந்தம் மிக நெருங்கிய தாதலால் இது 'ஸரிவர ஏற்படவேண்டியாக முடியாமலிருக்கச் செய்யும் யோசனைகள் எவ்வளவு? இதன்ஸம்பந்தப்படும்மாப்பிள்ளையும்பெண்ணும் இந்தத்தீர்க்கயோசனைக்குத் தகுதியற்றவர்கள் என்றே நமது வைதிக தர்மம் இவர்கள் தாய்தகப்பன்மாரிடம் இதை ஒப்புவித்து விட்டது. மேற்பிரியாமலே இருந்து விடவேண்டும் என்ற ஆழ்ந்தகருத்துடனே தகுந்தயோசனைகளின்பேரில் சாஸ்திரீயமாக தகுந்தவர்களால் நடத்தப் பெறும் நமது விவாஹங்கள் பெரும்பாலும் நல்லவைகளாகவும் ஸுகங்களாகவும் அமையவில்லையா? இக்கருத்துடன் நடத்தப்படாது மாப்பிள்ளை பெண்கள்வழியிலே பொருந்தின்று அவர்கள் மனக்குழப்பத்தால் அமையும் பிறநாட்டார்து விவாஹங்கள் இப்படிப் பெரும்பாலும் நல்லவைகளாக அமையவில்லை என்பது நமக்குத்தெரிந்த விஷயமல்லவா? விவாஹத்திற்குக் கூறிய ஒழுங்குதான் மற்றையஸ்நேஹம் முதலிய மனநெருக்க விஷயங்களுக்கும், தத்காலத்திய நாகரிக வ்யாபாரப் பழக்கம் மனிதருள் ஏற்படுவது இந்தபிரியாமைக்கருத்தைப்பற்றி இராததால் தகுந்தபழக்கமேயல்ல. பணம் உள்ளவரையில்தான் இந்தக் காலத்து நாகரிகப் பழக்கம்தரித்து நிற்கும்: குணமுள்ளவரையில் ஒட்டிநிற்பதற்கு வேண்டிய வலிவு இந்த நாகரீகப் பழக்கம்

அல்லது கூடுதலுக்கு இல்லவே இல்லை. இந்த நாகரிகக் கூடுதல் நமது மனதை எல்லாம் மாற்றிவிட தத்காலத்திய விவாஹம் கூட சிற்சில விடங்களில் நாகரீக நெருக்கமாக முடிந்து ஸம்பந்தப்பட்டவர்களை நரகத்திற்குத் தகுந்தவர்களாக்கிக் கொண்டு வருகிறது. இம்மாதிரி காட்டுத்தீபோலப் பரவிவரும் புதிய நாகரீகமான நெருக்கத்தை நன்குணர்ந்து ஒதுங்கிநிற்பதே இக்காலத்திய ஸன்மார்க்கங்களில் ஒன்றாகும்.

**(3) கூடிப்பிரிந்தால் என்ன கெடுதி?** கூடிப்பிரிந்தவர்களுக்குத்தான் அதுதெரியும். இயற்கையாகக் கூடியிருக்கும்படி பிறவியிலேயே நேரும் உறவினர்கள் பிரியும்படிநேரிட்டால் மனக்குழப்பம் எவ்வளவுஉண்டாகும்? காலம் வீண் துக்கத்தில் எவ்வளவுபோகும்? மரணம்நேரிட்டுவிட்டால் துக்கத்திற்குக்கேட்கவேண்டுமா? இதுபற்றித்தானே உலகில் பிள்ளை பிறக்காமலிருந்தால் ஒரேதுக்கமாய்ப்போய்விடும்; பிறந்து இறந்தால் அனேகமடங்கு துக்கம்என்று ஒருபழஞ்சொல் வழங்கி வருகிறது. ஸ்திரீ புருஷஸம்பந்தம் விபசாரதோஷத்தால் பிரியுங்கால் மனப்பதைப்பு எவ்வளவு? திண்டாட்டம் எவ்வளவு? அர்ஜுனனைப் போர் செய்யாமல் தடுத்து நிறுத்தப்பார்த்தது கூடிப் பிரியவேண்டிவந்ததால் ஏற்பட்ட துக்க மல்லவா? பிறரோடு நாம் சேருவது நமக்கும் அவர்களுக்கும் மிகுந்த சிறப்பை உண்டாக்கக் கூடியது என்று பல விதமாகவும் ஆராய்ந்துணர்ந்து ஏற்படும் சேர்க்கை திடீரென்று பிரியும்படி நேரிட்டு விட்டால் நமது எண்ணமெல்லாம் வீண் மனக்கோட்டையாகி நமக்குத் துக்கத்தையல்லவா உண்டாக்கும்? மஹாபாரத யுத்தம் நடப்பதற்குமுன்னும் நடந்தபின்னும் தருமபுத்திரர் மனம் தத்தளித்தது கூடியிருந்தவர்களை விட்டுப் பிரியும் விஷயத்தினால் தானே. ஆகவே கூடிப்பிரிவது இருதிறத்தாருக்கும் வீண்மனக் கலக்கத்தையும் அதனால் அவர்கள் குலதர்மங்கள், முதலிய நல்ல நிலைகளுக்கு கெடுதியையும் உண்டாக்கும். உலகில் கூடி இருந்தும் பிரிந்து வாழவேண்டி நேரிட்டுவிடும் ஸஹோதரர்களைக் கூட பிரிவை அதிகப்படுத்தும்படியான கொடுஞ்சொற்களைக் கொண்டு பிரித்துக்கொள்ளாது ஸாவதானமாக பிரித்துக்கொண்டால்தான் இருவருக்கும் க்ஷேமம் என்று நமது தர்ம சாஸ்திரங்கள் கூறும்: இல்லாவிடில் இருதிறத்தாருக்கும் பெருங்கேடுவந்தாலும் வரும் என்பதற்கு மஹாபாரத யுத்தமே தகுந்த ஸாக்ஷி. ஆகவே கூடுதல் இயற்கையாகவாவது செயற்கையாகவாவது ஏற்பட்டிருக்குமிடத்து எப்பொழுதும் விரோதம் பாராட்டக்கூடாது பிரியும்படி நேர்ந்தால் கூடியிருப்பதை மறப்பது வரையில் தான் போகலாம்.

**(4) கூடாது பிரிந்தே இருக்கலாமோ?**—இந்த ஸூத்திரம் கூடிப்பிரியேல் என்றிருப்பதால் கூடாமல் பிரிந்தே இரு என்ற த்வனிப் பொருளை அடக்கியுள்ளதுபோலக் காணப்படுகிறது. இது செயற்கை கூடுதல் ஏற்படும் இடங்களில் முற்றிலும், இயற்கை ஸம்பந்தம் ஏற்படக்கூடிய விடங்களில் ஒருவிதமாகவும் தான் பொருந்தும். செயற்கை சம்பந்தம் ஸ்நேஹிதம் போன்றபழக்கங்கள். இவைகள் விஷயத்தில் எப்பொழுதும் எச்சரிக்கையுடன் தான் இருக்கவேண்டும். அதிகமாக ஸ்நேஹம் பாராட்டாமலே ஒவ்வொருவரும் இருந்து பழகுவது மேல். தீரவிசாரித்துதெளிந்தபின் பேரில் கூடிப்பழகத் தொடங்கலாம். பொதுவாக யாருடனும் நெருக்கப்பழக்கம் பண்ணாமலே இருந்து விடுவது மேலானது தான், பிரிவால் ஏற்படும் கஷ்டங்களை உத்தேசித்து. தாய் தகப்பன், ஸஹோதர, புத்திர சம்பந்தங்கள் இயற்கையாக அமைபவை. இவைகளில் முற்றிலும் கூடாதிருப்பது முடியாதாயினும் அபிமானித்து கலந்து பிரியும் காலம் வருகையில் அடங்காத்துயரத்திற்கு ஆளாக்கும்படி அவ்வு கூடிவிடாது ஒதுங்கிநிற்கவே முயலவேண்டும். ஆனால் சாஸ்திரவிதிப்படி ஒவ்வொருவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகள் இருப்பதால் கூடாமலே இருந்துவிடவும் முடியாது. ஆகவே இவைகளுடன் கூடாமல் கூடிப்பழகவேண்டும். பெண்சாதி, குரு, மேலதிகாரி இவர்களுடன் சேர்க்கை ஏற்படுத்திக் கொள்வதை திடச் செயற்கை என்னலாம். இந்த சம்பந்தங்களை உண்டாக்கிக்கொண்டே தீரவேண்டும் ஒவ்வொருவனும். இல்லாவிடில் வாழ்க்கை பயனற்றதாக முடிந்துவிடும். இங்கு கூடாமல் பிரிந்தேயிருந்துவிட ஸாதாரணர்களுக்கு முடியாது. ஆதலால் இது இயற்கைச் சேர்க்கைபோலக் காணப்படும். ஆயினும் இவைகளில் முன்னதும் மூன்றாவதும் ஸந்யாஸ ஆச்ரமதர்மத்தால் விலக்கிவிடலாம். ஸந்யாஸிக்குக்கூட குரு சம்பந்தம் ஏற்பட்டே தீரவேண்டும். இவைகள் விஷயத்தில் கூடினால் பிரியாமலே இருக்கும்படி கூடி விடவேண்டுமே என்ற நோக்கத்துடன் ஆழ்ந்து விசாரித்துக் கூடியவரையில் கூடுவதை சீக்கிரத்தில் ஏற்பட இடங்கொடுக்காது இருந்துவந்து தகுந்தபடி யெல்லாம் நேர்ந்தால் இனிப்பிரியவே கூடாது என்றசபதத்துடனே கூடிவிடப் பார்க்கவேண்டும். ஆகவே சென்றவரையில் செல்லட்டும், தகுந்த விஷயங்கள் அமையும் வரையில் கூடாமலே இருந்து விடவேண்டும் என்று தான் விசித்ரம் நிறைந்த இவ்வுலகில் பழகி வரவேண்டும், தகுந்தபடி கூடிப் பிரியாமலிருக்கவேண்டுமானால், என்பதும் இந்த ஸூத்திரத்தில் அடங்கியிருக்கும் கருத்து.

**(5) எதைக் கூடிவிட்டபின் பிரியாமலே இருந்துவிட வேண்டும்?** இதுவரையில் கூறிவந்தவைகளிலிருந்து பிரியேல் என்பதற்கு எதிர்த்துவிரோதம் பாராட்டக்கூடாது என்று கொண்டால் மாத்திரம்தான் எவரோடும் ஒருதரம் ஆய்ந்தோய்ந்துப் பார்த்துக்கூடிய பின் பிரியலாகாது என்பதற்கு தகுந்த பொருளாகிவிடும். அப்படியின்றி பிரியேல் என்பதற்கு நேரான பொருளால் ஒதுங்காமலே இருத்தல் என்றுகொண்டால் முற்கூறிய விஷயங்களுக்கு மிகுந்த பொருத்தம் ஏற்படமாட்டாது. இந்த நேர்பொருளுக்கும் பொருத்தமான விஷயம்ஒன்றுமில்லையாஎன்ற சங்கை



பிறக்கலாம். முன் ஸூத்திரத்தில் கூறியபடி நற்குணங்களை என்றும்கொண்டு புருஷஸம்பந்தத்தை விலக்கி விட்டால் இந்த ஸூத்திரம் ஒரு சிறந்த சாஸ்திரார்த்தத்தை விளக்கும். அதாவது நற்குணங்களைப் பின்பற்றி ஒழுகி அவைகளை விட்டு எந்தக் கஷ்டசமயத்திலும் பிரிந்து நில்லாதே; நின்றால் கேடுதான் வரும் என்பதே. இதை முன் ஸூத்திரவிளக்கத்தில் நன்கு விஸ்தரித்தாகி விட்டது. இதோடு நிறுத்தாது நற்குண முடிவும் ஆதாரமுமாகிய வஸ்துவை நாடிச் சென்றால் வேறொரு பொருளும் வெளிப்படும். விஷயங்களை துச்சமென்று தள்ளி உள் முகப்பட்டுப் பழகி கடவுளது அல்லது ஆத்மவஸ்துவினது சிறப்பைப்பற்றிவிட்டால், அதிலிருந்து மனம் பிரிந்து வெளிமுகப்பட்டு விஷயங்களில் உழலும்படி விட்டுவிடவே கூடாது. தானே உள்ளம் அதில் நிலைக்கும் வரையில் பொதுவாக மேல் நிலையை நாடுவோர் தாழ்ந்தநிலை எவ்வளவு சிறப்புற்றதாகக் காணப்படினும் அதைப்பற்ற முயலவே கூடாது. மயங்கி அவ்வாறு செய்தால் பாறைமேலேறுபவன் கீழே உள்ள அழகிய புஷ்பத்தைப் பிடிக்க முயன்றால் எப்படி உருண்டடித்துக்கொண்டு கீழே விழுந்து திண்டாடுவானோ. அதுபோன்ற கதி தான் ஏற்படும். இதற்கு திருஷ்டாந்தம்: ஜடபரதர் அவர் மானின்மேல் ஜீவகாருண்யம் காட்டப்போய் அஜாக்ரதையாக விருந்து அதை அபிமானமாகத் தடிக்கவிட்டதால் மான ஜன்மம் அடையும்படி நேர்ந்ததல்லவா. ஆகவே மேல் நிலையைக் கூடிப்பிரியேல், தாழ்ந்த நிலையின் சிறப்பை நோக்கி எக்காரணம்பற்றியும் என்பதும் இந்தஸூத்திரத்தில் புதைந்துகிடைக்கும் மறை பொருள்.

# மொழி பெயர்ப்பு விளக்கம்

## TRANSLATION MODELS

The Greeks united in doing honour by monuments and inscriptions, to the brave warriors who, had they been better supported, might have saved the whole country from invasion. But these have all long since passed away; even the very spot itself has changed—new soil has been formed, and there are miles of solid ground between Mount Œta and the Gulf, so that the Hot Gates no longer exist. But more enduring than stone or brass—nay, than the very battle field itself—has been the name of Leonidas. Two-thousand three-hundred years have sped, since he braced himself to perish for his country's sake in that narrow, marshy coast road, under the brow of the wooded crags, with the sea by his side. Since that time how many hearts have glowed, how many arms have been nerved at the remembrance of the pass of Themopylae, and the defeat that was worth so much more than a victory!

தகுந்த உதவி இருந்திருப்பின் நாடு முழுவதையும் வேற்றரசன் படை எடுப்பிலிருந்து காக்கும் திறமை வாய்ந்திருந்த துணிவுடைய வீரர்களைத் தகுந்தபடி அறிகுறிகற்களாலும் சிலாசாஸனங்களாலும் சிறப்பிக்க ஒன்று கூடிவிட்டனர் க்ரீக்ஜாதியார்கள். இவ்வறிகுறிகள் எல்லாம் வெகு காலத்திற்கு முன்னேயே அழியத்தொடங்கிவிட்டன. இப்போர்வீரர்கள் மாண்டவிடமே இப்பொழுது மாறிப்போய்விட்டது—புதுமண் மேலமர்ந்து விட்டது: ஈடாக்குன்றுக்கும் முன்னருகிலிருந்த வளைகுடாவிற்கும் இடையில் இப்பொழுது சிலகாதம் கெட்டி நிலம் ஏற்பட்டுவிட்டது. ஆதலால் முன்னிருந்தவென்னீர் ஊற்று நிறைந்த இடைவழி இப்பொழுது இல்லவேயில்லை. அறிகுறி பொருள்களாகிய கல்லையும் பித்தளையையும், இதுமாத்திரமன்று போர்நிலத்தையும்விட மிகத்தரித்து நிற்கும் தன்மையுடையது அந்தப்போர்வீரர்கள் தலைவனை லியோனிடாஸ் என்பவன் பெயர். கடலோரமாக காடடர்ந்த கற்பாறைகளின் கீழ் குறுக்கமான சதுப்புநிலப்பாதையில் தன் நாட்டிற்காக உயிர் துறக்கஇழுத்துக்கட்டிக்கொண்டு இவ்வரசன் நிமிர்ந்து இன்றைக்கு சற்றேறக்குறைய இரண்டாயிரத்து முன்னூறு வருஷங்களாகி விட்டன. அன்றுமுதல் தர்மாபிலேக் கணவாய், அங்கு ஏற்பட்ட வெற்றியைவிட மிகச்சிறந்ததான தோல்வி ஆகிய இவைகளின் ஞாபகத்தால் உத்ஸாஹம் மூண்ட மனங்கள்தான் எத்தனை! வலிவுபெற்ற கைகள்தான் எத்தனை! கணக்கிட்டு முடியுமா?

**சென்னையில் கம்பியில்லாத் தந்தி:**—சென்னையில் கோட்டையை அடுத்துள்ள மைதானத்தில் கம்பியில்லாத் தந்தியை ஏற்படுத்துவதற்காக, உயரமான ஸ்தம்பங்கள் நடப்பட்டு வேலை நடந்துவருகிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய முழுதும் கம்பியில்லாத்தந்தியால் சீக்கிரத்தில் பிணைக்கப்படும். மற்ற தேசங்களிலும் இம்மாதிரியான ஏற்பாடு செய்யப்பட்டு வருவதால், உலகமுழுதும் கம்பியில்லாத்தந்தியால சேர்க்கபட்டுப்போம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு மத்திய ஸ்தானத்திலுள்ள ஈஜிப்டில் கம்பியில்லாத் தந்தி ஏற்படுத்தப்போகிறார்கள். ஈஜிப்டிலிருந்து இங்கிலாந்து 1950 மைல் தூரத்திலும், கீழ் ஆப்ரிக்கா 1900 மைல் தூரத்திலும், இந்தியா 2500 மைல் தூரத்திலும் இருக்கின்றன. ஈஜிப்ட் அந்த மூன்று தேசங்களுடன் கம்பியில்லாத் தந்தியால் சம்பந்தப்பட்டிருக்கும். பம்பாயில் கம்பியில்லாத் தந்தி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சென்னையில் கட்டப்படும் தந்தி சுமார் 500 மைல்தூரம் சமாசாரம் அறிவிக்கக் கூடும் என்று தெரிகிறது.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### என் சிநேகிதர்

என்னுடைய சிநேகிதர் ஒருசமயம் நாயொன்று வைத்து வளர்த்துவந்தார். குட்டியாயிருந்தபொழுதே அவருடைய வீட்டிற்கு அது கொண்டுவரப்பட்டது. நாள்முழுவதும் அநேகமாய்த் தன்னிடத்திலேயே போக்கும்படி, வேடிக்கைகளினாலும் விளையாட்டுகளினாலும் அதனிடத்து அதிக ஆசை அவருக்கு உண்டாகியது. அன்னியர் யாராகிலும் வீட்டிற்கு வந்தால் அது கடிப்பதுமில்லை, குரைப்பதுமில்லை. ஆனால், அவர் முன் சென்று படுத்துத் தலையைக் கொஞ்சம் தூக்கிப் பார்க்கும்; பார்க்கும்பொழுது முகத்தில் அநேக விஷயங்கள் அடங்கியிருக்கும். யஜமானன் வாவென்றழைத்தாலொழிய, வந்தவர் அந்நாயைத்தாண்டி உள் செல்ல யத்தனித்தால் விபரீதமாய் முடியுமென்று சொல்லாமலே விளங்கும். என் சிநேகிதர் தம் வயல்களுக்குச் செல்லும்போது அவர்பின் போகும்வழியில் தன் சடைமயிரை ஆட்டிக்கொண்டு கண்மறை தூரம் சிட்டாய்ப் பறந்து பிறகுத் திரும்பிக் குதித்துக் கூத்தாடிவரும். அவர் அங்குமிங்கும் எறியும் பந்துகளை வாயில் கௌவியெடுத்து அவர் காலின் சமீபம் கொண்டுவந்து சேர்க்கும். ஓரிடமும் அகப்படாமற்போனால் சட்டைப்பையில் முகத்தை வைத்துத் தேடி அவர் ஏமாற்றினதற்காக அவரிடம் கோபம்போல் ஒருவாறு உறுமும். இந்தமாதிரியாக நாயும் எஜமானனும் ஒருவரையொருவர் நேசித்து வந்தார்கள். நாய்க்கு, ஒரு வியாதி தீங்கு நேரிட்டால் அவர் படும் கஷ்டம் எவ்வளவென்று சொல்லி முடியாது.

சில வருடங்கள் சென்றன. குழந்தையைவிட அதிக அன்போடு நாய் பரிபாலித்து வரப்பட்டது. அது செய்யும் புதிது புதிதான ஒவ்வொரு வேலையும் யஜமானனுக்கு சந்தோஷத்தைப் புகட்டியது. அதன் முகத்தைப் பார்க்குமளவிலேயே அது ஏதோ விசேஷமாய் செய்துவந்திருப்பதாய் அறிவிக்கும். அவருடைய ஆனந்தத்திற்கு ஏகாஸ்பதமாகவும், குற்றமற்ற ஒரு சிநேகிதற்கு நிகரானபடியால், அவர் அதை அடிக்கடி உற்றுப்பார்க்குமளவில் கண்கள் இரண்டிலும்பேரானந்தம் பெருக, தாமல்லவோ இந்நாய்க்குடையவர் என்ற கர்வமும் வெளிப்படும். உடனே அதை 'டயர்' என்று கூப்பிட்டு கழுத்தில் தட்டிக்கொடுத்து விட்டுக் கொஞ்ச தூரம் சென்றுத் திரும்பிவந்து மறுபடி அதே விதம் செய்வார். அதனிடத்திலிருந்த அத்யந்தப்ரேமையினாலும் அதுவும் அவ்வளவு புத்தி கூர்மையுள்ளதாயுமிருந்ததால் படுக்கப்போகும்பொழுது கூட அருகில் வைத்து முத்தகொடுத்துத் தூங்கப்போவார்.

ஒருநாள் யஜமானன் வயல்களிலிருந்து வருவதற்கு நாழிகையாய்விட்டது. அதிக களைப்படைந்திருந்ததால் சீக்கிரம் படுக்கப் போய்விட்டார். நன்றியறிவுள்ள நாய் சமீபத்திலிருந்தும் அதற்குக் கிடைத்தப் பிரீதி வார்த்தைகளும் முத்தங்களும்கொஞ்சமே. மறுநாளுதயத்தில் எழுந்து படுக்கையறையிருந்து வெளியே வரும்போது அவருடன் நாய்வரவில்லை; 'டயர்' 'டயர்' என்று கூப்பிட்டார். வழக்கம்போல உடலைக் குலுக்கி காதுகளையாட்டும்சப்தம்கேட்கவில்லை. சிறிது நிமிஷங்கள் கழித்து மறுபடி உரக்கச் சத்தமிட்டார். "டயர் டயர்," என்னும் குரல்மாத்திரம் வீடு முழுதும் பிரதிபொலிக்கப்பட்டதேயொழிய அப்பேருடைய கண்மணியைக் காணவில்லை. உடனே படுக்கையறையடைந்து ஜன்னல் கதவுகளைத் திறந்தார். தன் தலையணையருகில் உடம்பு கால்களைச் சுருட்டிக் கொண்டு கிடந்த நாயைப்பார்த்ததும் மனதில்ஒரு சந்தேகம் ஏற்பட்டது. ப்ரிய மொழிகளாலழைத்தார். புரட்டிப் பார்த்தார். கையை முகத்தில் வைத்துப் பார்த்தார். அதேக்ஷணத்தில்வெளிச்சம்கொஞ்சம் அதிகமுண்டாகவே, அறையின் ஒருமூலையில் தலை ஒரு புறத்திலும் உடல்வெகு நீளம் வியாபித்திருந்தவும் இறந்திருக்கும்பொழுதுகூட பயமுண்டாகத் தக்கவுமிருந்த ஒரு காலசர்ப்பத்தைக் கண்ணுற்றார். நடந்த செய்திகள் யாவற்றும் பிரத்யக்ஷமாய்த் தெரிந்துவிட்டன. சுமார் அரைமணி நேரம் வரையில் ஒன்று மறியாதவராகப் பிறகு தன் மனோ வியாகுலத்துக்கிரையாகி தாரை தாரையாய்க் கண்ணீர்பெருக்கத் தொடங்கினார்— நாயைத் தழுவி யெடுத்து மடிமேல் வைத்துக்கொஞ்சி மார்போடணைத்து முத்தமிட்டார். அவசரத் தந்தியொன்று வந்திருந்ததைத் தான் வீட்டிலில்லாததாகச் சொல்லியனுப்பிவிட்டு அநேக சிகித்ஸைகளால் உயிர் பிழைப்பிக்க முயன்றார். அவருடைய ஆசை நிறைவேறுமா? இறந்துபோன செல்லத்திற்கு உயிர் கொடுக்க எம்மருந்தால்தான் எந்தமாயத்தினால்தான் கூடும்?

தனக்கிருக்கும் ஒரே இளம்பிள்ளையை இறக்கக் கொடுத்தவன்போல 'ஓகோ' வென்றலறிக்கொண்டு முகம் வெளுக்க, நெஞ்சம் பதற, கால்களெழும்ப மாட்டாமல், திக்கு முக்குற்று, தன் கண்ணுக்கும் கண்ணான கண்மணியை மார்பில் சாத்திக்கொண்டு சமீபத்திலிருந்த வயலையடைந்து தன் கையினாலேயே குழியொன்று தோண்டி, அதனுள் மெதுவாய் நாயை வைக்க, உயிரோடிருந்தாற்போலவும், என்னையனே! என்னையும் இவ்விடம் விட்டுப்போக உங்களுக்கு மனம் வந்ததோ? என்றுசொல்லும் பாவனையாயுமிருந்த முகத்துடன் கூடிய தலை மேலிருக்க, அதனுடைய பூர்வ அபூர்வச் செய்கைகள் ஒன்றின்பின் ஒன்றாய் சங்கிலி போல்,வெடித்துவிடும்தருணத்திலிருந்த ஹிருதயத்தில் தோன்ற, கண்ணீர்த்துளிகள் வெகு சீக்கிரமாய் வெளிவந்து ஒன்றாய்ச் சேர்ந்து குழியில் விழுந்து நாயை ஸ்நானம் செய்வித்தன. மெல்லென எடுத்து, பொழுதுபோவது தெரியாமல், கண்கள் கொட்டாமல் உற்றுநோக்கி, மறுபடியும் வைத்து, மறுபடியும் எடுத்து, மடியில் ஏந்தி, வலது இடமாய் முத்தமிட்டுக் கடைசியாய் அதிக சிரமப்பட்டு மனதைக் கட்டுப்படுத்தி அப்புறம் நோக்கி, பள்ளத்தில் சரேலென்று சத்தப்படாமல் வைத்து, மண்ணைத்தள்ளிவிட்டு திரும்பிப்பாராமல் போனவழிவந்தார் என் சிநேகிதர்.



அன்று முதல் பலநாட்கள்வரை சிநேகிதர்களோடு அதிகமாய்ப் பேசாமலும், குழந்தைகளைத் தவிர மற்றவர்களையும் பார்க்காமலுமிருந்தார். எதைத் தொட்டபோதிலும் நாயின் ஞாபகம் மேலாயிருந்தது சாப்பிடும் தருணத்தில் நினைப்புவந்தால் சட்டென்று எழுந்துபோய் மறுபடியுமன்று உண்ணவருவதில்லை.

கேளுங்கள்! நாய்க்குட்டி வருவதற்கு முன் என் சிநேகிதரை ஒரு முரட்டாத்மாவென்றே சொல்லலாம். பதினெட்டாவது வயது வந்திருக்குமளவும் அநேக நாய்களின் மண்டைகளைக் கலங்கும்படி கல்விட்டெறிவதும், பக்ஷிகளைப்பிடித்து சிறகுகளைக் கத்தரித்து அவைகள் கஷ்டப்பட்டுக் கத்தும் சமயத்தில் களிப்படைவதும், அயல் வீட்டார்களுடைய தோட்டங்களில் புகுந்து செடிகொடிகளைத் தரையோடு தரையாய்க் கிடத்துவதும், ஓடும் தண்ணீரில் அவர்கள் நெல்மூட்டைகளை அமிழ்த்தித் திறந்து விடுவதும் அவர்கள் குழந்தைகளைப்பேயைக்கண்டதுபோல நடுநடுங்கச் செய்வதும்,இதர இடையூறுகள் அநேகம் உண்டாக்குவதும் அவருக்குப் பிரமாதமான காரியமன்று. ஆனால் நாய் தன்னிடம் வந்து அதற்குத் தன்னை யஜமானனாய் ஏற்படுத்திக்கொண்டது முதல் அவர் நடத்தை கொஞ்சம் கொஞ்சமாய் ஒருவாறு மாறுதலைப்படைய ஆரம்பித்தது. முதலில் நாயின் திருப்திக்காகப் பறவைகளை வேட்டையாடவும் மிருகங்களைக் கொல்லவும் சம்மதித்த போதிலும் வரவர உயிர் ஜந்துக்களை வருத்துவதின் கொடுமை மனதில்பட்டு "டயர், வேணுமளவு உணவு உனக்குக் கொடுக்கிறேன். அவ்வெளிய ஜந்துக்களை வதை செய்யாதே" என்று சொல்லித் தடுப்பார். அதை யறிந்த நாய் தன்உடம்பை இரண்டொரு தடவை குலுக்கிக்கொண்டு, தான் அவர்து அடிமை என்பதுபோல் அவர் கால்களிடையில் வந்து படுக்கும். அதை விச்வசித்தவர் அவருக்கும் வேண்டியவனாயினர். ஆத்மாபிமானத்தைஅதிகமாய்ப் பாராட்டாமல் அண்டைவீட்டார்களையும் ஏனையோர்களையும் முன் போலல்லாமல் தன் சிநேகிதர்களென்றே கருதினார். என்னையழைத்துப் "பார்த்தீர்களா! என்ன ஆட்டம்! என்ன ஆட்டம்! இதோ! எவ்வளவு அமைதியாய் வந்து படுத்து விட்டது" என்பார். அதுவோ, ஒருவேளை விளையாட்டாகக் கீழே கிடந்து புரளும், ஒருவேளை தன் முன்னங்கால்களை அவருடைய முழங்கால்களின் மேல் வைத்து அண்ணாந்து பார்க்கும். சுமார் ஐந்து அடி உயரத்திற்கு மேல் தூக்கியிருந்தாலும் கீழிருந்து ஒரே எழும்பாய் எழும்பி அவர் கையை நாக்கினால் தொடும். மற்றொரு வேளை அவர் தேடிப்பிடிக்கும்பொருட்டு ஒரு மூலையில் போய்ப் பதுங்கிக்கொள்ளும். கண்டு பிடிக்க முடியாவிட்டால் சந்தடி செய்யாமல் பின் வந்து காலடியில்நிற்கும். இதையெல்லாம் பார்த்து அவர், திருஷ்டிப்படும்போல், நிராமகிழ்ச்சியடைந்து, பாவம்! ஆநந்த பாஷ்பம் பெருகவிடும் சமயங்களுக்குக் கணக்கில்லை.

நாளாக, பொறுமை, பக்ஷம், தயை இவை அவரிடம் குடிகொண்டன! வீட்டில் வந்தால் நெருப்புத்துண்டமாயிருந்தவர் அசூயைப்படத்தக்க சாந்தகுணமடைந்தார். தெரு மாணவர்களிடத்துத் தன் தயவை ஏராளமாய் ஈந்து அவருடைய விளையாட்டுகளிலும், சௌக்கியத்திலும் அபிமானக்கண்ணுடன் நோக்கலானார். தன் வீட்டில் குழந்தைகளில்லாமலிருந்தும் மற்றவர்கள் வீட்டிலிருந்து சிறுவர்கள், சிறுமிகளை நாய்க்கு விளையாட்டுத் துணையாக அழைத்து வந்து பக்ஷயங்கள் கொடுத்து நாள் முழுதுமங்கிருக்க அவா உண்டாகும்படி செய்வார். அநேக பந்தய ஓட்டங்கள் நாய்க்கும் அவர்களுக்கும் ஏற்படுத்தித் தந்து அவைகளில் கெலித்து வரும் நாயைக் கைகளில் தூக்கியெறிந்து பிடித்து முகவாய்களின்கீழ் கட்டியணைத்துக்கொள்வார்.

நாய் இறந்ததினம்,குழந்தைகள் வழக்கம்போல் அவ்விடம் வந்து நடந்த விபத்தையும் கேள்விப்பட்டார்கள். ஆ! சாதாரணமாய், இன்றையதினம் நமது சிநேகிதன் தலைவலியால் வரமுடியாமலிருந்து விட்டான் என்று சொன்னவுடன் விளையாட்டில் திருப்தியடையாமல் போவது குழந்தைகளின் ஸ்பாவமன்றோ? அப்படியிருக்க அவர்களுடைய விளையாட்டிற்கு முக்கியமான தோழன் வரவில்லை, இனி ஒரு பொழுதும் வரப்போகிறதில்லை என்று சொன்னால் அவர்கள் படும் துயரத்தையும்,பெருக்கும் கண்ணீர்ப்பிரவாகத்தையும் யார்தான் எடுத்துரைக்க முடியும்? என் நண்பர் அவர்களைப்பார்க்க மனம் சகியாதவராய், அருகில் வந்து எல்லோரையும் ஒரே கும்பலாய்க் கட்டிக்கொண்டு "என்னருமைக் கண்மணிகளே, டயர் இனி உங்களுடன் —" என்று சொல்வதற்குள்ளேயே, கோழை நெஞ்சில் அடைத்துக்கொண்டு ஒரு பெண்மணிபோலழத்தொடங்கிவிட்டார். குழந்தைகளும் அவர் முழங்கால்களைச் சுற்றிக்கொண்டு மழலைக்குரலோடு மனவ்யாகுலத்தை வெளியிட்டுத் திகைத்து நின்றனர்.

பெரியோர்களாலும் சிறியோர்களாலும் அன்புடனபிமானிக்கப்படும் ஏழைகளுக்கு உதவி செய்தும் ஜீவ ச்ருஷ்டியில் சதாகாலமும் சந்தோஷமடைந்தும் தனி வீட்டில் வளர்ந்துவரும் பிராணிகளில் ஒன்றையாகிலும் கூட்டிலடைக்காமலும் அவைகளுக்குத் தன் கையினாலேயே அமுதளித்து அவைகள் அருகாமையிலேயே நாட்களைப் பெரும்பாலும் கழித்துக்கொண்டும், வெகு தூரத்திற்கப்பாலுள்ள பெற்றோர்களின் ஒரு பெண் குழந்தை இரண்டு பிள்ளைக் குழந்தைகள் இவர்களுடைய சௌக்கியத்திலும் சந்தோஷத்திலும் கவலை யெடுத்து, அவர்கள் சிரித்த முகம்கோணாது பரிபாலித்தும் வரும் என் சிநேகிதரின் ஆயுள் நாட்களிலிருந்து நாம் ஒருபாடம் கற்றறிகிறோம்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### சாந்தை அல்லது பொறாமையின்மை

ஆனால் பேசுவதில் இருவித தந்திரத்துடன் முன் யோசித்தே பேசினான்; சொல்லாமற் சொல்வதொன்று; தான் சொல்வதால் பின்னே ஏதேனுந் தவறாக முடிந்துவிட்டால் தான்சொல்லவில்லை என்று மறுக்க எண்ணியது மற்றொன்று இவ்விரண்டு எண்ணங்களையுந் திரயோசித்துதான், உத்புல்லன் தன்னை "என் மனைவியிடம் செலவு பெற்றுக்கொண்டு போனது காச்யபன் தானே ?" என்று கேட்டபோது "காச்யபனா?—உம்மைக்கண்டாலும் அப்படி ஏதோ குற்றஞ்செய்தவன்போலத் தலை தெரியாமல் பதுங்கியோடுவது காச்யபனாக விருக்குமா?—இருக்காது" என்று அவன் சொல்லியது.

அதையுணராத உத்புல்லன் "அவன்தான் என்று நான் நன்றாக நம்புகிறேன்" என்றுசொல்லிக்கொண்டிருக்கும்போது சாந்தை பயந்துபயந்து தன் கணவனிடம் காச்யபனைப்பற்றி மிகப்பரிந்து பேசினாள். அவனை மன்னித்து முன் பதவியில் வைக்கும்படியாகக் கெஞ்சினாள். தன் கொஞ்சும் நயமொழிகளால் அவள் பேசிக் கெஞ்சியதல்லாமல், அவளது அன்பு அடக்கம் வணக்கமுதலிய வகையின் ஒழுங்கினால் அவளது விருப்பத்தைத் தடுக்க விரும்பாவிடினும், தனது மதிப்பிற்கு ஹானியுண்டாகும் என்று உத்புல்லன் சற்றுத் தயங்கினான். ஆனால் சாந்தை தனது காரியம் பலிக்கும் வரை பேசினாள். உத்புல்லனும் "உன் விருப்பமெதையுந் தடுக்கேன்; எனக்கும் அவ்வாறே நீயும் செய்ய விரும்புகிறேன். நான் சற்றுத் தனித்திருக்க விரும்புகிறேன்;" என்று சொன்னான். சாந்தையுடனே "நீங்கள் சொல்லியதற்கு அன்யதா உண்டோ? நான் போய்விட்டு வருகிறேன்" என்று செலவு பெற்றுக் கொண்டானந்தத்துடன் அமலையையு மழைத்துக்கொண்டு அந்தப்புரம் போனாள்.

இவ்வாறிருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது அயோக்யன் மனம் வேலைசெய்துகொண்டே தான் இருந்தது. தன்வலையை வீச கண் கொட்டாது நல்ல சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். சாந்தை போனதும் தன் மனதில் அவளிடம் கொண்ட அன்பை அடக்க முடியாது வெளியிட்டுக்கொண்டிருந்த நல்ல ஸமயம் பார்த்து "என் ஐயனே! தாங்கள் அம்மாளிடம் முதலில் அன்பு பாராட்டியபொழுது, தாம் காதல் கொண்டது காச்யபர் அறிவாரா?" என்று கேட்டான்.

"அது அவனுக்காதிமுதல் அந்தம் வரை தெரியும்; ஆனால் நீ கேட்கவேண்டிய காரணம் என்ன?"

"வெறுமனே தான் சொன்னேன்; தவறொன்றுமில்லை."

"வெறுமனே சொன்னேனென்கிறாயே! ஏன் அப்படி கேட்டாய்?"

"அவருக்கு சாந்தையம்மாள் தெரிந்திருக்குமென்று நான் எண்ணவில்லை."

"நன்றாகத் தெரியும்; எங்களிருவருக்கும் நடுவே பலமுறைத் தூது நடந்திருக்கிறான்."

"ஹா! அப்படியா? உண்மையாகவா?"

"உண்மையாகவே; ஆம், உண்மையாகவே. அதில் ஏதேனும் உனக்கு தவறாகப் படுகிறதா? ஏன் அவன் யோக்யனல்லவா?"

"யோக்யனா? என் ஐயனே!"

"யோக்யனா? ஆம் யோக்யன் தான்."

"எனக்குத் தெரிந்தமட்டும் ஐயனே!"

"ஏன்? உன் அபிப்பிராயம் என்ன?

"அபிப்பிராயமா என் தலைவனே?"

"என்ன? அபிப்பிராயமா என் தலைவனே? என்று சொல்லுகிறான். நாம் சொல்லிய மொழிகளையே மீண்டுங் கூறிப் பாகிக்கின்றான். கடவுளாணை, இதில் ஏதோ விகற்பமிருக்கின்றது. ஏதோ சொல்லமுடியாத சமாசாரத்தை மனதில் வைத்துக்கொண்டு தவிக்கின்றவன்போல் காண்கின்றான்" என்று இவ்வாறு எண்ணிக்கொண்டு உத்புல்லன் அயோக்யனை நோக்கி "உன் மனதில் ஏதோ இருக்கின்றது. சற்று முன்பு காச்யபன் என் மனைவியிடமிருந்து அகன்றபோது கூட அழுதான். எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லியதுகூட என் காதில் விழுந்தது. எது உனக்குப் பிடிக்கவில்லை? மேலும் அவன் என் காதற்கதை முழுதுமறிவனென்று சொன்னபொழுது 'அப்படியா!' என்று சொன்னவிதம் விபரீதம் பேசுகிறது? அம்மொழிகளைச் சொல்லிய பொழுது புருவங்களை நெறித்துச் சுளித்து என்ன கடுமையான எண்ணத்தை மனத்துள் ஒளித்து வைத்திருப்பவன்போல் இருந்தாய். என்மேல் உனக்குப் பிரியமிருந்தால் அவ்வெண்ணத்தை வெளியிடு" என்றான்.

"என் ஐயனே! உம்மிடம் யான் கொண்ட அன்பு தாங்கள் அறியாததா?" என்றயோக்யன் உத்புல்லனைத் தடுத்துக்கேட்டான்.

"ஆம்! அது எனக்கு நன்றாகத்தெரியும். அளந்து பேசும் வார்த்தைகள் உமது அன்பையும் விச்வாஸத்தையும் நன்றாக வெளியிடுகின்றன. என்னால் இனி பொறுக்கமுடியாது; என்மார்பு பிளந்துபோய்விடும்படி இந்த வேதனை ஒழியும்படியாக உன் மனத்திலுள்ள எண்ணத்தை வெளியிடு."

"காச்யபன் யோக்யனாய் இருப்பான் என்றுதான் என் எண்ணம்."

"நானும் அப்படித்தான் எண்ணுகிறேன்"

"ஜனங்கள் தாங்கள் சொல்லும் வெளித்தோற்றம்போல்தான் நடக்கவேண்டும்; அல்லது, அப்படியில்லாவிட்டால் அவர் தோற்றமில்லாமையேயாம்."

"உண்மையாக அப்படித்தான். அகத்தைக் காட்டுவது முகந்தானே!"



"அப்படியானால் நான் காச்யபனை யோக்யனென்றுதான் எண்ணுவேன்."

"இது என்ன விபரீதம்? கிணறுவெட்டப் பூதம் புறப்படுகிறது. நீ சொல்லுமொழிகள் எல்லாம் புண்ணில் கோல் இட்டதுபோல் தோன்றுகின்றனவே. ஏன் இந்த ஒளிப்பு. உன்பாழும் எண்ணத்தைத்தான் வெளியிடுவாய். அது மிக்க கொடுமையானதாக இருந்தபோதிலும் அக்கொடிய மொழிகளை அதிசீக்ரத்தில் வெளியிடுவாயாக!"

இவ்வாறு உத்புல்லன் கேட்கவேண்டுமென்றே அயோக்யன் வெகு வேலையாக இவ்வாறு பேசியது. உத்புல்லனது மனத்தில் ஸம்சயம் என்னும் வித்தை விதைத்து தான் ஒன்று மறியாதவன்போலத் தன் வாயால் ஒன்றுங் கூறாமலே காச்யபனிடம் உத்புல்லன் வெறுப்புக்கொள்ளவும் சாந்தையிடம் ஆத்திரங்கொள்ளவுந் தூண்டினான்.

பின் உத்புல்லன் கேட்டதற்கு அயோக்யன் பதில் கூற விருப்பமில்லாதவன்போல "ஐந்து விரலுமொன்றாயிருக்கின்றதா? எல்லாம் பொருந்துதல் முடியுமா? எல்லார்க்கும் ஒவ்வொன்றெளிது பெரிய அரண்மனையிலும் தகாப்பொருள்வந்து சேருமல்லவா? ஏதோ கல்லெல்லாம் மாணிக்கக்கல்லாமா? எங்காவது துர்எண்ணம் சிறிதுமில்லாத மனமுண்டா? அனர்த்த சிந்தைக் கிடந்தராத அவ்வளவு சுத்தாத்மா யாரிருக்கிறார்? யதார்த்த சிந்தனை என்று நியாயந் தீர்ப்பவனுக்குஞ் சிலவிடு முறைகளிருக்கதத்தானே செய்யும். அதில் என்ன அதிசயம்?" என்று கேட்டான்.

இதைக்கேட்ட உத்புல்லன் "நீ இவ்வாறு பேசுவது தவறு. உன் நண்பன்மேல் நீ வீணே பழி சுமத்துகிறாய்; அவன் காதில் படாமல் இவ்வாறு நீ பேசுவது தகாது" என அவனை மறுத்தான். இதைக் கேட்ட அயோக்யன் சற்றுந் தயங்காமல் "குற்றங்கூறலே என் குணம். சிலசமயம் நான் கொள்ளும் அபிப்பிராயங்கள் பொருத்தமில்லாமலுமிருக்கலாம் நான் ஏதோ சொல்லிய விம்மொழிகளால் கவலையடையாதிரும். நான் அரைகுறையாகக் கண்டவைகளிலிருந்து தெரிந்ததைக்கேட்டுக் கஷ்டத்தைக் கட்டிக்கொள்ள வேண்டாம். என் அபிப்பிராயம் உமக்கு எதற்கும் உபயோகமில்லை—உமது அமைதி, ஸுகம், ஆண்மை எவைக்குந்தகாது" என்று தன் அபிப்பிராயத்தை வெளியிட விரும்பாதவன்போல அபிநயித்தான்.

"நீ சொல்வது விளங்கவில்லையே" என்று உத்புல்லன் தடுத்தான்.

"ஆண் பெண் இருவகையார்க்கும் தமது மானந்தானே பெருமணிகலம்.

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர் நீப்பர் மானம் வரின்'

என்றதைக் கேட்டதில்லையோ? என் பொருள் முழுதும் ஒருவன் திருடினால்கூட அற்பத்தைக் கவர்ந்தான் என்றே சொல்வேன். ஆனால் என் பெயரை ஒழிக்கவுநயனைத் தனக்குச் சிறிதும் பயனில்லாத பொருளைக்கவர்ந்து என்னை வறியனாக்குபவன் என்று சொல்வேன்" என்று உண்மையைச் சொல்ல விரும்பாதவன்போலப் பேசிக்கொண்டே இருந்தான்.

இவ்வாறு அவன் வேண்டுமென்றே செய்தான், தான் கூறும் மொழிகள் புல்லன் மனத்துள் பாய்ந்து தீவிரமாக வேலைசெய்யவேண்டுமென்றே அவன் செய்தான். உத்புல்லனுடைய ஸம்சயத்தை மேலுமேலும் விருத்திசெய்யவேண்டும் என்றே செய்தான். தவிர உத்புல்லனது உண்மையை உணரவேண்டும் என்னும் அவாவைத் தூண்டித்தூண்டி அவனுக்குப் பெருமாத்திரமுண்டாகும்படியான தனது வாயில் கொண்டுவந்து "என் ஐயனே! ஜாக்ரதை! அபிமானசிந்தை ஆபத்திற்கே இடந்தரும். பார்த்ததை எல்லாம் பழியாகவே எண்ணச் செய்யும். குரோதங்குடியைக் கெடுக்கும். எவன் சாரம்போன தன் மனைவியை விட்டொழிகின்றானோ எவன் ஆசையிலழுந்தி ஸந்தேஹத்தோடு விளங்குகிறானோ எவன் ஸந்தேஹித்தும் மனமார மயங்குகிறானோ இவர் ஒவ்வொரு க்ஷணத்தைப் பெரும் யுகமாகக் கடக்க முடியா மன நோய்க்காளாகிறார்கள்" என்று ஒருவாறு தனது அபிப்பிராயத்தை முற்றும் வெளியிடாமலே வெளியிடுபவன் போலச் சொன்னான். மேலும் ஸம்சயங்கொள்வது தகாதெனவும் புத்திகூறினான். இதைக்கேட்டதும் உத்புல்லனுக்குக் கோபமேலிட்டது. கண்கள் சிவக்க மீசை துடிக்க உதடு படபடக்க அவன் கீழ்வருமாறு மனந்துடிக்கச்சொன்னான்:—

"ஏன் இப்பொழுதிவ்வளவு பேச்சு? நாள்தோறுந் திவ்ய கலைபெற்று விளங்குஞ் சந்திரன்போல் நித்தியமொரு ஸந்தோஷங் குடிகொள்ளும்படியான வாழ்க்கையை யான் வாழ்வேன் என்று நினைக்கின்றனையா என்ன? அப்படி இல்லை, ஸந்தோஷங் கொண்டால் உடனே உண்மையை அறியவேண்டியது தான். மற்றுக் குமிழிபோல் நிலையாத உன் அனுமானங்களையும் வீண்மொழிகளையுநம்பி மனத்தை உபயோகித்தறிய வேண்டிய உண்மைகளை உணர்ந்துகாரியங்களைச் செய்து என்மனத்திற்குமாறாக நான் நடந்தால் என்னைப்பசும்பிராயமாகவே நீ எண்ணலாம்; மிருகமென்றே சொல்லலாம். என் மனைவி அழகாயிருக்கிறாள், நன்றாய் ஆதரிக்கிறாள்; எல்லாருடனும் சேர்ந்து ஒட்டிவாழ்கிறாள்; நயம்படப்பேசுகிறாள்; ஸுகமாகப் பாடுகிறாள்; வீண்காலம் செய்கிறாள்;—இவை முதலான செயல்களிருந்து நான் சந்தேகம் கொள்ளவே மாட்டேன். கற்புடையவர்க்கவை கலனாகவே இருக்கும். மற்று எனது ஸ்வபாவதோஷத்தால் அவளென்னிடஞ் சரியாய் நடவாள் என்றுகுற்றங் குறை கூறவுமாட்டேன்; அவள் என்னைக் கண்ணாரப் பார்த்தாள்; கல்யாயாணஞ் செய்துகொண்டாள். ஆகையால் அயோக்யா! நீ எண்ணியவிதம் நான் ஒருநாளுஞ் செய்யேன். ஸந்தேகம் கொள்வதற்கு முன் நான் கண்ணாரக்கண்டுதான் கொள்வேன். அவ்வாறு ஸந்தேகம் கொண்டால் உண்மை உணர்வேன். உணர்ந்தபின்

ஆசையோ ஸந்தேகமோ எது உண்மையாயிருக்கின்றதோ அதற்குகந்தவாறு கொள்வதோ தள்ளுவதோ அதைத் தான் செய்வேன்.”

இம்மாதிரியான மொழிகள்வேண்டுமென்று தான் அயோக்யன் காத்திருந்தான். தன் தலைபாரம் நீங்கியதேயென குதூஹலித்தான். பின் அப்படித் தாங்கள் செய்வதானால் நான் இனி வெளிப்படையாகக் கூறலாம்என்று சொல்லிக்கொண்டு காச்யபனையுஞ் சாந்தையையும் வெகுஜாக்ரதையாகக் கவனிக்கும்படி சொன்னான். தனதெண்ணத் தூண்மை விளங்குமென்றுஞ் சொன்னான். விஞ்சைய நகரத்துப்பெண்கள் கணவர்களுக்குத் தெரியாமல் செய்யும் வஞ்சகமெல்லாம் தான் உணர்ந்தவனென்றும் சொன்னான்.

இதைக் கேட்ட உத்புல்லன் வெகு கவலையோடு “என்ன அவ்வாறு சொல்கின்றனையே. இது அடுக்குமா” என்று கேட்டான். “உன்னை மணந்து தன் தகப்பனை வஞ்சித்தாள்; உன்னைப் பார்க்கப்பயந்த அந்த நாள்களில் அவள் தனது பெற்றோரை தெய்வமாகப் பாராட்டினாள்” என்று அயோக்கியன் சொன்னான். “அவ்வாறு தான்செய்தாள்” என்று உத்புல்லன் தலையசைத்தான். பின் நெடுநேரம் வரையுந்தர்க்கஞ் செய்து மனத்திலிருக்கும் எண்ணத்தை வெளியிட விருப்பமில்லாதவன் போல காட்டிக் கொண்டு, அத்யந்த வாத்ஸல்யத்துடன் உத்புல்லனிடம் விளங்கியதால் ஒப்பியவன்போல, உத்புல்லன் மறுப்பதையுங் கவனியாது “அப்படிப்பட்டவள் இப்பொழுது ஏதோ தமது வர்ணபேதத்தை விரும்பித் தமது குலத்துக்கினிய ஒத்த நலன், குலம், அழகு முதலிய உடையவனை அடைய விரும்புவதில் என்ன தவறு?” என்று சொன்னான். இவ்வாறு அவன் சொல்லியது உத்புல்லனது மனத்தைப் புண்ணாக்கியது. அவன் இயற்கையிலேயே பெருந்தன்மை யுடையவன். தன்னைப் பற்றி அயோக்கியன் பேசியது அவனுக்குத் தாளவில்லை. தன்மனைவியை மேற்பார்வையிட அவன் மனைவிக்குத்திரவிடும்படி அயோக்யனை ஏவினான்; அவனும் அவ்வாறே போனான்.

அயோக்யனுடைய மொழிகள் மனத்திலாழ ஆழ உத்புல்லனுக்கு மனவமைதி நீங்கியது. அவனுக்குச் சாந்தையிடம் ஸந்தேஹமில்லாவிடினும், அயோக்கியன் தவறாய்ச் சொல்லமாட்டான் என்று ஏங்கினான். இதற்குள் அயோக்கியன் அங்கு வந்து “இந்த விஷயத்தைப்பற்றி எண்ணாதிரும்; காலம் செல்லச் செல்ல குணம் வரும்” என்று சொல்லிச் செலவு பெற்றுக் கொண்டுபோனான்.

நிற்க. உத்புல்லன் தன் மனநோய்க்காளாய்ப்பலவாறு யோசித்துக்கொண்டு மனம் வாடியிருக்கும்பொழுது சாந்தையும் அமலையும் எதிர்வருவதைக் கண்டான். சாந்தையைக் கண்டதும் அவனுக்குத் தனக்கும் தெரியாமல் “அவள் தவறாக நடந்திருந்தால், வானமே பொய்த்துவிடும், நான் அதை நம்பவில்லை” என்ற எண்ணம் மனதிற்பட்டது.

இதற்குள் சாந்தை கணவனை ஆதரித்து “ஊர்முழுதும் விருந்திற்கு உமது வரவை எதிர்பார்க்கின்றனர்” என்று சொன்னாள். “என் தோஷம்தான்” என்றயோக்யன் மெதுவாகச் சொன்னான். “தாங்கள் இவ்வாறு ஹீனஸ்வரத்திற் பேசக் காரணம் என்னவோ? தங்களுக்குடம்பு அசௌக்யமோ?” என்றவள் கேட்டாள். “என் தலைமுழுதும் வலிக்கின்றது” என்று பதில் சொன்னான். இதைக்கேட்ட சாந்தை தனக்குத் தன் நாதன் முதல் முதல் கொடுத்த ஞாபகப் பொருளாகியச் சிறு கைகுட்டையைக் கொண்டு “தூக்கமில்லாமைதான் அதற்குக்காரணம் இந்தக் கைக்குட்டையால்உமது தலையிலிறுக்கிக்கட்டுகிறேன். சீக்ரத்தில் அவ்வலி நீங்கிவிடும்” என்று சொல்லிக் கொண்டதைக்கட்டினாள்.

“உன் குட்டை மிகவுஞ் சிறியது” என்றவன் அதை அவள் கையில் கொடுத்தான். அதை அவள் கணவனையாதரித்துப்போகும் அவசரத்தில் கைசோரவிட்டாள். அது கீழேவிழுந்துவிட்டது. அதைப் பாராமலே தன் நாதனுடன் அவள் சென்றாள்.

பின்னங்கேயே நின்றிருந்தஅமலை அதை எடுத்துக் கொண்டு “இதை நெடுநாளாய் என் நாதன் கேட்கிறான்” என்று தனக்குள் சொல்லிக் கொண்டிருக்கும் போதங்கு அயோக்யன்வர அதை அவள் அவனுக்குக் காட்டி அதை யடைந்தவழியையுஞ் சொன்னாள்.

---

**சர்ப்பக்கடி:**—பாம்புவிஷம், நர்வ்ஸ் என்னும் நரம்புகளுக்கு மூலமாகிய, மூளையையும் ரத்தத்தையும் கெடுத்துவிடுகின்றது. உறக்கம், இசிவு காண்பதற்குக் காரணம் மூளையின் விகல்பம்—புப்புசத்தில் ரத்தம் அதிகம் சேர்ந்து கஷ்டசுவாஸம் பிறக்கிறது. பாம்புகடித்து செத்தபிறகு அறுத்துப்பார்த்தால், ரத்தம் கறுத்து நீராயிருக்கும்—பாம்புக்கடியில் காணுகிற லக்ஷணங்கள், விஷத்தின் குணம், அதின் உக்கிரம், தேகப்பிரகிருதி, ஆகிய இவைகளுக்குத் தக்கபடி வித்தியாசப்படும்—சில பாம்பின் விஷம் சிறிய ஜந்துக்களை மாத்திரம் கொல்லும்—சில பாம்பின் விஷம் மெத்த கொடியது. ஆனால் கடித்துக் கடித்து விஷம் செலவழிந்து போகும். சில பாம்பின் விஷம் சாந்தமானது. சில பாம்பின் விஷம், நர்வ்ஸ்களின் மேல் வியாபித்து, வெகு சீக்கிரத்தில் கொல்லும், வேறு சில விஷங்கள், சுவாஸப்பையைப் புண்ணாக்கும். சில பாம்பின் விஷம் நரம்புகளைக் கெடுக்க சக்தியில்லை—கடித்த விடத்தை மாத்திரம் வீங்கச்செய்து கெட்டபுண்ணாக்கிவிடும்—நல்ல பாம்பு கடித்துவிஷம் ஏறினால், ஆயாசம், மூர்ச்சை, இசிவு, உறக்கம், கஷ்டசுவாஸம், ஆகிய இவ்வி லக்ஷணங்கள் காணும் வீக்கம் இராது.



# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**மைசூரில் பிடிபட்ட யானைகள்.**—ராஜப்பிரதிநிதி மைசூருக்கு விஜயஞ் செய்திருந்த காலத்தில் யானைபிடிக்குந்தொழில் ஆரம்பிக்கப் பட்டபொழுது பல யானைகள் பிடிக்கப்பட்டன. அவைகளில் இரண்டு டஜனுக்கு மேற்பட்ட யானைகளுக்கு 40,000 ரூபாய் கொடுத்து அமெரிக்கர்கள் வாங்கினார்கள். சிந்தியா மஹாராஜாவும் வேறு சில இந்திய மன்னர்களும் பிரபுக்களும் சில யானைகளை விலைக்கு வாங்கினார்கள். நஞ்சன்கூடுக்கருகில் ஓடும் கபிலாநதிக் கரையில் 70 யானைகள் வரையிலும் வைக்கப்பட்டிருக்குன்றன.

***

**ரீவா மஹாராஜாவும் குருக்ஷேத்திரமும்.**—குருக்ஷேத்திரத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களைப் பழுதுபார்ப்பதற்கு ரீவா மஹாராஜா லட்ச ரூபாய் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். பஞ்சாப் கவர்ன்மெண்டார் அதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்த குரு க்ஷேத்திரந்தான் முன் காலத்தில் பாண்டவர்க்கும் துரியோதனதியருக்கும் யுத்தம் நடந்த இடம்.

***

**மன்னார்குடியில் முனிஸிபல் பெண்பாடசாலை திறந்து வைக்கப்பட்டது:**—மன்னார்குடியில் முனிஸிபல் பெண்பாடசாலையொன்று மார்ச் மாதம் 21-ந் தேதி சனிக்கிழமை காலை 8-மணிக்கு, மிஸ்ஸஸ் உட்டால் திறந்துவைக்கப்பட்டது. அச்சமயம் கலெக்டர் மிஸ்டர் உட்டு அக்கிராசனம் வகித்தார். சக்ரவர்த்தி தம்பதிகளின் டெல்லிகாரொனேஷன் காலத்தில், அந்த சுபதினத்தின் ஞாபகார்த்தமாக, மன்னார்குடி பொது ஜனங்கள் அவ்வூர் பெண்களின் படிப்புக்காக ஏராளமான பணம் செலவழித்து ஒரு கட்டடங்கட்டி, அக்கட்டடத்தில் முனிஸிபல் பெண்பாடசாலையை வைத்து நடத்தும்படியாக, முனிஸிபாலிடியார் வசம் ஒப்புவித்துவிட்டார்கள். அக்கட்டடத்தின் அஸ்திவாரக்கல், அப்பொழுதிருந்த மன்னார்குடி டிப்டி கலெக்டரும், இப்பொழுது கவர்ன்மெண்டு அண்டர் செக்ரிடெரியுமான மிஸ்டர் C. S. அனந்தராமய்யரால் நாட்டப்பட்டது. கட்டடத்திற்கு மொத்தச் செலவு 8000 ரூபாய்.

***

**கவர்ன்மெண்ட் போதனாமுறை ஸ்கூல்கள்.**—சென்னை ராஜதானியிலுள்ள உபாத்திமார்களின் போதனாமுறை ஸ்கூல்கள் சிலவற்றிற்கு அங்கங்கே கட்டடங்களை வாடகைக்குவாங்கி அவைகளில் ஹாஸ்டல்கள் வைக்கவேண்டுமென்று சென்னை கல்வியிலாகா டைரெக்டர்செய்த சிபார்சை சென்னை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டு விட்டார்கள். 1914-15-ம் வருஷத்திற்கு ஹாஸ்டல்களுக்கென்று தனியாக எடுத்து வைக்கப்பட்டிருக்கும் தொகையிலிருந்து 9774 ரூபாய் செலவழிக்கப்படும்.

**கோடீசுவரருக்கு வருமான வரி.**—மிஸ்டர் ஜான் D. ராக்பெல்லருக்கு வருஷமொன்றுக்கு 2 கோடி பவுன் வரும்படி வருமென்றும், அதற்கு 12,00,000 பவுன் வருமானவரி விதிக்கப்படலாமென்றும் அமெரிக்காவிலுள்ள வருமானவரி அதிகாரிகள் இப்போது மதிப்புப் போட்டிருக்கிறார்கள். உலகிலுள்ள 6 கோடீசுவரர்களில் ராக்பெல்லர் ஒருவர். அவர் “ஸ்டாண்டெர்ட் ஆயில்” என்ற மண் எண்ணெய் வியாபாரி.

***

**இரயில்வே கம்பெனிகள்.**— இந்தியாவிலுள்ள இரயில்வே கம்பெனிகள் அனைத்திற்கும் 1913-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் முதற்றேதி முதல 1914-ஆம் வருஷம் பிப்ரவரிமாதம் 21ஆம் தேதிமுடியக்கிடைத்திருக்கும் மொத்தலாபம் 8,619,389 ரூபா என்று தெரிகிறது.

***

**வாரமிருமுறைத் தபால்.**—லண்டனிலுள்ள வர்த்தகசங்கத்தின் நிர்வாக சபைக்கு ப்ரிட்டிஷ் போஸ்ட்மாஸ்டர் ஜனரலுடைய கடிதம் ஒன்று வந்திருக்கிறது. இந்தியா முதலிய கீழ்த்தேசங்களுக்கு வாரமொருமுறை தபால் அனுப்பப்படுவதை இரண்டு தடவையாக அனுப்பும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று ஒரு பிரேரணை செய்யப்பட்டிருக்கிறதென்றும், அதைத் தாம் ஆலோசித்துக் கொண்டிருப்பதாகவும், அப்படிச் செய்வதால் செலவு ஏராளமாகப் பிடிக்குமென்றும் அதனால் உண்டாகக் கூடிய நன்மையை உத்தேசிக்க விசேஷ அதிகச் செலவு செய்வது சரியாக விருக்குமாவென்றும் அறிவிக்கும்படியும் அந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறது.

***

**பச்சையப்பன் காலேஜ் ஹாஸ்டல்:**—சேத்துப்பட்டு ரயில்வேஸ்டேஷனுக்கருகில் புதிதாய் வாங்கியிருக்கும் காலியிடத்தில் பச்சையப்பன் மாணவர்களுக்கென்று புதிதாய்க் கட்டப்போகும் ஹாஸ்டலுக்கு, H. E. கவர்னர் லார்டு பெண்ட்லண்டு முதல்தேதி மாலை 5·15 மணிக்கு அஸ்திவாரக் கல்லை நாட்டினார். அச்சமயம் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜிகளும், ஹைகோர்ட்டு வக்கீல்களும் சட்டசபை மெம்பர்களும், காலேஜ் ஹைஸ்கூல் உபாத்திமார்களும், ப்ரொபஸர்களும், பிரபலமான வியாபாரிகளும் வந்திருந்தார்கள். கவர்னர் தம்பதிகள் வந்தவுடனே அவர்களை பச்சையப்பன் தர்மஸ்தாபனங்களின் பிரஸிடெண்டும் ட்ரஸ்டிகளும், வரவேற்றார்கள். ட்ரஸ்டிகளின் பேரால் மிஸ்டர் C. P. ராமஸ்வாமி அய்யர் ஓர் அட்ரெஸ்ஸை வாசித்து அதை ஒரு வெள்ளிச் சிமிழில் போட்டு கவர்னருக்குக் கொடுத்தார். அச்சிமிழில், 1914-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல்தேதி யன்று “பச்சையப்பன் மாணவர்களுக்கென்று கட்டப்படும் ஹாஸ்டலின் அஸ்திவாரக் கல்லை கவர்னர் நாட்டுகையில் அவருக்கு இந்தச் சிமிழ் கொடுக்கப்பட்டது” என்ற வாசகியம் செதுக்கப்பட்டிருந்தது.

**பசு ஸம்ரக்ஷணை:**—பசு ஸம்ரக்ஷணை சங்கம் என்ற ஒரு சபை பம்பாயிலுள்ள தேசசமஸ்தானமாகிய கத்பவாரிலிருக்கிறது. இச்சபையால் சென்ற வருஷத்தில் 2174 பசுக்கள் கொல்லப்படாமல் காக்கப்பட்டன என்று சபையின் கௌரவக் காரியதரிசி அறிவிக்கிறார்.

***

**சென்னைக்கும் ரங்கோனுக்கும் புதிய ஸ்டீமர் ஸேர்விஸ்:**—சென்னைக்கும் இரங்கூனுக்கும் இப்பொழுது பி. ஐ. எஸ். என் கம்பெனியென்னும் ஒரு ஐரோப்பியக் கம்பெனியார் ஸ்டீமர்கள் விட்டுவருகிறார்கள். ஒரு ஜப்பானியரும், பம்பாயிலுள்ள இந்துப்பிரமுகர்களும் சேர்ந்து ஒரு கம்பெனி ஏற்படுத்தி முதலில் ரங்கூனுக்கும் சென்னைக்கும் ஸ்டீமர்கள் விடப்போகிறார்களென்றும், அக்கம்பெனி காலக்கிரமத்தில் பெர்ஷியா வித்தும் ஸ்டீமர்கள் விடுமென்றும், இந்து வர்த்தகர்கள் பலர் அந்தக் கம்பெனிக்கு உதவியாயிருந்து வருகிறார்களென்றும் ஒரு ஜப்பானியப் பத்திரிகை கூறுகின்றது.

***

**பம்பாயில் பால் சப்ளை.**—பம்பாயில் பால் தயிர் வெண்ணெய்சாலை வைத்திருப்பவர்கள் தாங்கள் பால் பண்ணைக்கு பால்சப்ளை செய்யும் பால்காரர்கள் பால் போடாமல் வேலை நிறுத்தஞ் செய்துவிட்டபடியால் தாங்கள் தங்களிடம் வாடிக்கையாய்ப் பால் வாங்குகிறவர்களுக்கு பால்போட முடியாமற் போயிருக்கிறதென்று தெரியப்படுத்தியிருக்கிறார்கள். பால்காரர்கள் பால் பண்ணைக்குக் கொண்டுபோகும் பாலை சமீபத்தில் அமுலுக்கு வந்த கார்பொரேஷன் விதிகளின்படி பால் சப்ளையைக் கவனிக்கும் பொறுப்பையேற்ற இன்ஸ்பெக்டர்கள் சோதித்து, அவைகள் கலப்படமாயிருந்தால் அபராதம் போட்டு விடுவதே நகரின் பால் சப்ளை குறைந்தும் நின்றும் போயிருப்பதற்குக் காரணமெனப்படுகிறது.

***

**ஆகஸ்டு மாதத்திய பூரண சூரியக்கிரகணம்.**—இவ்வருஷம் ஆகஸ்டுமாதம் 21ந் தேதி அமாவாசையன்று பூர்ண சூரியக்கிரகணம் தோன்றும். இந்த சூரியக்கிரகணம் ஐரோப்பா ஆசியாக் கண்டங்களில் நன்றாகத்தெரியும். ஐரோப்பாவிலுள்ள பல நாகரீகமான ஸ்தலங்களில் சூரியகிரகணத்தை ஆரம்பமுதல் முடிவு வரையிலும், பரிசோதனை செய்வதற்கு வேண்டிய கருவிகளைக்கொண்டு சோதித்து ரிகார்ட்டு செய்யப்படும். பாரஸீகம், ருஷியா, ஸ்வீடன், நார்வே முதலிய விடங்களில்தான் தெரியும். இந்தியாவில் தெரியாது. அதிலும் சென்னையில் தெரியவே தெரியாது. ருஷியாவின் தென்பாகத்தில்தான் வான சாஸ்திர ஆராய்ச்சி வல்லோர்கள் தங்கள்தங்களுடைய கருவிகளைக்கொண்டு சோதனை செய்வார்கள்.

**இந்தியாவில் கரும்புப் பயிர்.**—இந்தியாவில் இந்த வருஷம் கரும்பு பயிராயிருக்கும் நில விஸ்தீரணத்தைவிட 6900 ஏகர் குறைச்சலென்று தெரிகிறது. அதுபற்றி இந்த வருஷம் கரும்பு மகசூல் 100-க்கு 12 வீதம் குறையாயிருக்குமென்றும், இவ்வருஷம் கிடைக்கும் சர்க்கரை போனவருஷம் கிடைத்த சர்க்கரையைவிட 3,21,000 டன் குறையாகவேயிருக்குமென்றும் எதிர் பார்க்கப்படுகிறது.

***

**ஹௌராவிலுள்ள ஒரு பெண்பாடசாலை:**—இந்தியாவிலுள்ள பெண் பாடசாலைகளுள் பொதுப் படிப்புக் கற்பிக்கப்படுவதுடன் பூப்போடவும், துணிகள் தைக்கவும், சித்திரமெழுதவும், கற்பிக்கப்படுகின்றன. கல்கத்தாவைச் சேர்ந்த ஹௌராவிலுள்ள யாகுசாலப் பெண் பாடசாலையிலோ பெண்களுக்குச் சமையல்வேலையும், பாத்திரங்கள் சுத்திசெய்யும் வேலையும், நூல் நூற்கும் வேலையும், குழந்தைகளைப் போஷிக்கும் வேலையும், நெல்லுகுத்தும் வேலையும், வறட்டி தட்டும் வேலையும் கற்பிக்கப்படுகின்றனவாம். பெண்களுக்குக் குடும்ப வேலைகள் எல்லாவற்றையும் கற்பிப்பதே அப்பெண் பாடசாலையின் நோக்கமாகும். இந்த வழி தமிழ்நாட்டிலுள்ள பெண்பாடசாலைகளில் ஏற்படுமாயின், மிகு நன்மைக்கு ஏதுவாகும்.

***

**மழை ஜோஸ்யம்:**—இவ்வருஷத்தில் மழை பெய்வதைபற்றி ஸ்ரீஜி. சுப்பிரமணிய ஜோஸ்யலு பின்வருமாறு எழுதுகிறார்:—இவ்வருஷம் எப்ரல் மாதம ஆரம்பத்திலிருந்தே வடமேற்குத் தென்மேற்கு மலைப் பிரதேசங்களில் மழை பெய்ய ஆரம்பிக்கும். எப்ரல்மாதம் 20-ந்தேதிக்குமேல் சென்னையை யடுத்த விடங்களில் சிறிது மழை பெய்யும். மேமாதம் 10-18-ந்தேதிகளுக்கிடையில் வடகிழக்குப் பிரதேசங்களிலாவது தென் கிழக்குப் பிரதேசங்களிலாவது பெருமழை பெய்வதுடன் பிரசண்ட மாருதமும் வீசும். இந்த வருஷம் எப்ரல்மாதக் கடைசியில் வெயில் மிகவும் உக்கிரமாயிருக்கும். கிராமாந்தரங்களில் தீவிபத்துக்கள் நேரிடாமல் காக்கக் கிராமாதிகாரிகள் எச்சரிக்கையா யிருக்கவேண்டும். எப்ரல் மாதம் 20 ந்தேதி முதல் 24-ந்தேதி வரையிலும், 28-ந்தேதிமுதல் மே மாதம் 3-ந்தேதி வரையிலும் 16-ந்தேதிமுதல் 20-ந்தேதி வரையிலும், 28-ந்தேதி முதல் ஜூன் மாதம் முதல்தேதி வரையிலும் மழைபெய்யும். அக்காலங்களில் சென்னைக்குச் சுற்றுப்பக்கங்களில் மிதமாக மழைபெய்யும். ஜூன் மாதம் 3-ந்தேதிமுதல் 8-ந்தேதிவரையிலும், 11-ந்தேதி முதல் 16-ந்தேதி வரையிலும், 24-ந்தேதி முதல் 28-ந்தேதி வரையிலும், வடமேற்குப் பிரதேசங்களிலும், மேற்குப் பிரதேசங்களிலும் மழைபெய்யும். சென்னையிலும் அதன் சுற்றுப்பக்கங்களிலும் மழைபெய்யும்.



தஞ்சாவூர் காட்சிகள்

# விவேக போதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VI { ஆனந்த௵ சித்திரைமீ =1914-௵ மேமீ } பகுதி 11

## வேதாந்தத் திரட்டு

## VEDANTIC SELECTIONS

### 6. தாயுமானவர்

### 1. பரம்பொருள் வணக்கம்

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமா
யானந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடி யெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மன வாக்கினிற்
றட்டாம னின்றதெது சமய கோடிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெரு வழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ள தெதுமேற்
கங்குல்பகலறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டன வெலாமோன வுருவெளியதாகவுங்
கருதியஞ் சலி செய்குவாம்.

(—பரசிவ வணக்கம்—1.)

### 2. நமது ஸாதாரண நிலை

வாசா கயிங்கரிய மன்றியொரு சாதன
மனோவாயு நிற்கும் வண்ணம்
வாலாய மாகவும் பழகியறி யேன்றுறவு
மார்க்கத்தி னிச்சை போல
நேசானுசாரியாய் விவகரிப் பேனந்த
நினைவையு மறந்த போது
நித்திரைகொள்வேன்றேகநீங்குமெனவெண்ணிலோ
நெஞ்சந் துடித்த யருவேன்
பேசாத வானந்த நிட்டைக்கு மறிவிலாப்
பேதைக்கும் வெகு தூரமே
பேய்க்குண மறிந்திந்த நாய்க்கு மொரு வழிபெரிய
பேரின்ப நிட்டை யருள்வாய்
பாசாடவிக்குளே செல்லாதவர்க்கருள்
பழுத்தொழுகு தேவ தருவே
பார்க்கு மிடமெங்கு மொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே.

(—பரிபூரணானந்தம்—1.)

ஆவியே யுனை யானறிவாய் நின்று
சேவியேன்களச் சிந்தை திறைகொடேன்
பாவியேனுள பான்மையைக் கண்டு நீ
கூவியாளெனை யாட் கொண்ட கோலமே.

(—பொன்னைமாதரை—3.)

### 3. நிஷ்டையின் ஆவசியகம்

கேட்டலுடன் சிந்தித்தல்கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமறு வுற்பவ நோய் மாறுமோ—நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர் கட்கன்றோதான்
பொய்யாம் பிறப்பிறப்புப் போம்

(—உடல் பொய்யுறவு—8.)

## CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | துலு | இங் | தமிழ் | வார | ஆநந்தஹு வைகாசிமூ { சாலிசகம்1836 கலியப்தம்5015 } பசலி1323 கொல்லம்1089 { 1914ஹு மே—ஜூன்மூ |
|---|---|---|---|---|---|
| ர | 18 | 14 | 1 | வியா | பஞ் 34-57, பூரா 17-35, சா 2-7, சுப 56-20, கௌ 5-49, ரா 6-39, அக 31-13, விருஷபரவி 3-39, சூன்ய விஷ்ணு சூன்யா. |
| செபு | 19 | 15 | 2 | வெ | சஷ் 34-23, உத்தி 18-25, சுப் 56-19, கர 4-40, திவி 28-45, பூச 4 செ 48-34, கார் 4 புத 50-38, சூன்யதிதிசிர உப. |
| சு | 20 | 16 | 3 | சனி | சப் 35-6, திரு 20-31, பிரா 54-45, பத் 4-44, திவி 31-4, மிரு 1 சுக் 20-0, ரிஷப கி சப்திதி காளாஷ்டமி. |
| ர-பு | 21 | 17 | 4 ரிஷப | ஞா | அஷ் 37-1, அவி 23-50, மா 54-6, பா 6-3, ரா 11-55, கார் 3 ரவி 31-59, ரோ 1-புத 40-44, மழை 5-க்குள். |
| | 22 | 18 | 5 | திங் | நவ 40-6, சத 28-17, வை 54-20, தை 8-33, ரா 14-27, அக 31-17, வை-சிரா. |
| புசு | 23 | 19 | 6 | செ | தச 44-9, பூரட் 33-42, விஷ் 55-16, வணி 12-6, ரா 28-27, ரோ 2 புத 17-28, மிரு 2 சுக் 4-23. |
| | 24 | 20 | 7 | புத | ஏகா 48-48, உத்தி 39-46, பிரி 56-37, பவ 16-28, சே 3-44, சர்வ ஏகா கரிநாள் வாதசஞ்சாரம் 10-க்குள். [ரோ 3 புத 19-50, மிதுன சுக் 50-0. |
| ரசெ | 25 | 21 | 8 | வியா | துவா 53-48, ரே 46-12, ஆயு 58-12, கௌ 21-18, திவி 13-14, கார் 4 ரவி 0-19, ஆயி 1 செ 59-40, |
| புசு] | 26 | 22 | 9 | வெ | திர 58-37, அசு 52-32, ஸௌ 59-38, கர 26-25, ரா 10-8, அக 31-24, மிதுனய 26-38. பிரதோ. |
| பு | 27 | 23 | 10 | சனி | சது 60-0, பர 59-0, சோ 60-0, பத் 29-18, திவி 19-7, பிராகுதய புத 55-7, ரோ 4 புத 10-20, மா-சி. |
| ரசுச | 28 | 24 | 11 | ஞா | சது 3-0, * கார் 60-0, சோ 0-41, சகு 3-0, திவி 31-18, ரோ 1 ரவி 29-47, மிரு 4 சுக் 35-0, பச்சாதஸ் 47-7, சர்வ |
| பு | 29 | 25 | 12 | திங் | ●அமா 6-30, கார் 3-37, அதி 1-8, நா 6-30, ரா 14-54, மிரு 1 புத 12-13, இஷ்டி காற்றதிகம் 15 நாள். [அமா சார்உப. |
| | 30 | 26 | 13 | செ | பிர 8-56, ரோ 7-42, சுக 0-44, திரு 58-49, பவ 8-56, திவி 22-24, அக 31-26, ஜேஷ்ட சுத் சந் தரி டௌத்தஜ. |
| ரபுசுச | 1 | 27 | 14 | புத | துதி 10-13, மிரு 10-40, சூல 57-15, கௌ 10-13, ரா 0-48, ரோ 2 ரவி 59-13, மிரு 2 புத 14-0, திரு 1 சுக் 20-0. |
| செ | 2 | 28 | 15 | வியா | திரு 10-12, திரு 12-21, சண் 53-53, கர 10-12, ரா 11-6, ஆயி 2 செ 10-1, சது விரு மழை 4-க்குள். [மரு 1 சு 7-30, அ 59-13. |
| பு | 3 | 29 | 16 | வெ | சது 8-55, புன 12-48, விர் 49-35, பத் 8-55, ரா 1-7, மிதுன புத 15-0, கரிநாள். |
| சு | 4 | 30 | 17 | சனி | பஞ் 6-30, பூச 12-9, துரு 44-28, பா 6-30, ரா 11-48, அக 31-27, திரு 2 சுக் 5-0 சஷ் உப சரிநாள். |
| ரபு | 5 | 31 | 18 | ஞா | சஷ் 3-1, சப் 55-36, ஆயி 10-27, வியா 38-29, தை 3-1, ரா 7-51, ரோ 3 ரவி 27-34, மிரு 4 புத 17-24, சப் விரு. |
| சு | 6 | 1 | 19 | திங் | அஷ் 53-30, மக 7-52, ஹர் 31-56, பத் 26-3, திவி 26-48, திரு 3 சுக் 53-9. |
| பு | 7 | 2 | 20 | செ | நவ 47-54, பூர 4-40, வஜ் 24-57, பா 20-42, திவி 21-34, திரு 1 புத 30-0, சிலவிடங்களில் உஷ்ணதிகம் 9-க்குள். [ரோ 4 ரவி 57-41, விய சிரா. |
| ர | 8 | 3 | 21 | புத | தச 41-56, உத்தி 0-59, அஸ் 55-57, வரி 17-36, தை 14-55, திவி 20-34, அக 31-30, |
| செபு | 9 | 4 | 22 | வியா | ஏகா 35-51, சித் 52-49, விய 10-3, வணி 8-53, திவி 15-34, ஆயி 3 செ 5-19, திரு 2 புத 41-45, திரு 4 சுக் 38-21, சர்வ ஏகா. [பூர 1 கே 43-26, துவாதி பிரதோ கூர்மஜ |
| சு] | | | | | |
| ரா | 10 | 5 | 23 | வெ | துவா 29-49, சுவா 48-50, வரி 2-27, பரி 52-31, பா 29-49, திவி 5-53, சத 3 ராகு |
| | 11 | 6 | 24 | சனி | திர 24-4, விசா 45-12, சிவ 47-49, தை 24-4, திவி 1-59, ரா 23-9, திதித்வயம் வாதமேக சஞ்சாரம் 7-க்குள். [புன 1 சுக் 23-53, பூர்ணிமாதிதி. |
| ர-பு | 12 | 7 | 25 | ஞா | சது 18-42, அனு 42-0 சித் 41-1, வணி 18-42, ரா 22-55, அக 31-31, மிரு 1 ரவி 27-29, திரு 3 புத 12-12, |
| சு] | 13 | 8 | 26 | திங் | ○பௌ 13-53, கே 39-33, சா 34-54, பவ 13-53, ரா 27-30, வடஸாபூர் பௌச்ச ம இஷ்டி மழை 4-க்குள். |
| செ | 14 | 9 | 27 | செ | பிர 9-56, மூல 37-56, சுப 29-24, கௌ 9-56, சே 3-1, ரா 2-24, ஜேஷ் பகு ஆயி 4 செ 59-0. |
| ரபுசு | 15 | 10 | 28 | புத | துதி 6-47, பூரா 37-17, சுப் 24-40, கர 6-47, திவி 1-40, ரா 25-57, மிரு 2 ரவி 57-16, திரு 4 புத 8-14, புன 2 சுக் 13-14, அகஸ்தியாஸ்தம் 57-16. |
| | 16 | 11 | 29 | வியா | திரு 4-58, உத்தி 37-56, பிரா 21-0, பத் 4-58, சே 1-30, ரா 16-40, அக 31-33, சங் சது மழை 5-க்குள். |
| | 17 | 12 | 30 | வெ | சது 4-14, திரு 39-41, மா 18-13, பா 4-14, ரா 18-39, பஞ்சமிதிதி சிர உப வை சிரா. |
| புசு | 18 | 13 | 31 | சனி | பஞ் 4-46, அவி 42-45, வை 16-26, தை 4-46, தியா —0—0 புன 1 புத 24-0, புன 3 சுக் 2-35, ரிஷ-கி சஷ்டிதிதி, |

| | | |
|---|---|---|
| | ர-சு- பு-சு- | |
| ராகு. | 8-மிது-சுக் 16-மிது-பு | செ. |
| குரு. | | கே. |



# விவேக போதினி

தொ.6.] ஆனந்தஹு சித்திரைமீ [பகுதி.11.

## மோக்ஷ ஸோபானம்

### THE STEPS TO THE GOAL

(2) கர்மயோகம்

பீஷ்மர் சரித்திரம் (தொடர்ச்சி)

தகப்பனுர் விருப்பத்தைக் கர்மயோக ஒழுங்குப்படி முடித்து வைத்தபின்னர், பீஷ்மர் தாம் எடுத்துக் கொண்ட ப்ரஹ்மசரிய விரதத்தை அவ்வழியிலேயே அனுஷ்டிக்கத் தொடங்கிவிட்டார். இந்தக் காலங்களில் இவரை இந்த விரதத்திலிருந்து விலக்கவந்த இடையூறுகள் மிகுந்த வலிவுடையனவாயும், ஸாதாரணர்கள் மனதை எளிதில் கலக்கக் கூடியனவாயும் இருந்தன. இந்தக் கர்மயோகப் பிடிப்பு மாத்திரம் பீஷ்மருக்கு இருந்திராவிடில் முதல் அல்லது இரண்டாம் தடையுள்ளேயே இவர் விரதம் தவறிப் போய்விட்டிருக்கும். இந்தத் தடைகளின் விஷயங்களை விசாரித்தால் இவரது கர்மயோக உணர்ச்சியின் பெருமை நன்கு விளங்கும்.

இந்தத் தடைகள் விஷயத்திற்குப் போகுமுன், சந்தனுவுக்கு ஸத்யவதியிடம் இரண்டு பிள்ளைகள் உண்டாக, பின்னர் சந்தனு காலகதியை அடைந்ததையும், மேல் தகுந்தவயது காலத்தில் ஸத்யவதியின் மூத்த பிள்ளை ஒரு கந்தர்வனுடன் ஏற்பட்ட சண்டையில் இறந்ததையும், இளைய பையனுகிய விசித்திரவீர்யன் மாத்திரம் ராஜ்யபாரத்திற் குரியவனுக இருந்ததையும், இவனுக்காக பீஷ்மர் காசிராஜ்யஸ்வயம்வரம் சென்று பெண்கள் கொண்டு வந்ததையும் எடுத்து விஸ்தரிக்க வேண்டியதனுவசியம்.

காசிராஜன் பெண்கள் மூவரையும் ஹஸ்தினுபுரம்கொண்டு சேர்த்ததும், அவர்களுள் மூத்தவளாகிய அம்பை என்பவள், 'நான் காசியிலிருக்கையிலேயே மனதால் ஸாளுவ ராஜனைப் பதியாக அடையலாம் என்று எண்ணிவிட்டேன், ஆகலால் என்னை அவரிடம் அனுப்புவித்தால் நலமாகவிருக்கும்' என்று கேட்டுக்கொள்ள, இந்த விஷயத்தை ராஜ ஸபையில் தீர விசாரித்து அவளை ஸாளுவனிடம் போய்விடும்படி அனுமதி கொடுத்தார் பீஷ்மர். அவள் ஸாளுவனிடம் சென்று தனது அபிப்ராயத்தைக் கூற, அதற்கு அவன் 'நீ என்னிடம் மனதில் காதல் கொண்டிருந்தது உண்மையாயினும், நீ பீஷ்மரால் அபஹரிக்கப்பட்டு விட்டமையால், நீ இப்பொழுது அவரைச் சேர்ந்தவளாகி விட்டாய். ஆகலால் நான் உன்னை அங்கீகரிக்க முடியாது, போய்வரலாம்' என்று கூறி அனுப்பிவிட்டான். அவன் சொல்லுவதும் நியாயம் என்று அவளுக்குப்பட 'ஸரிதான் சிறுவயதில் பல காரணங்களால் முன் பின் யோசனை இன்றி பெண்களுக்குக் காதல் ஏற்படலாம்; மேல் நமது தகப்பனுர் ஸ்வயம்வரம் ஏற்படுத்தி வீரத்தன்மை யுடையவர்களுக்கு என் பெண்கள் ஸொந்தம் என்று ஏற்பாடு செய்ய அதன்படி பீஷ்மர் வசமானேம் நாங்கள். ஸாளுவன் சொல்லுவதும்உசிதமே. கன்னிகைக்கு ப்ரஹ்மசாரிகள் எல்லாம் கணவனுகக் கூடியவராயினும், ஒழுங்குப்படி அமையும் புருஷனே கணவனெனப்படுவன்' என்று எண்ணமிட்டுக் கொண்டு, பீஷ்மரிடம் வந்து, 'ஐயா ஸகல சாஸ்திரமும் உணர்ந்த பெரியவரே! என் ஸ்வயம்

வாத்தில் என் மனதை உணர்ந்து நீர் என்னை அபஹரிக்கவில்லை. நீர் என்னை அபஹரித்ததால் என்னை ஸாளுவன் இப்படி நீக்கிவிட்டான். என்னுடன் உமக்கே ஸம்பந்தம் ஏற்பட்டிருப்பதால், நான் கதியற்றுப் போகாதிருக்கும்படி நீரே என்னை விவாஹம் செய்து கொண்டு விடும்,' என்று பலவாறு நியாயம் காட்டிக் கெஞ்சினாள். ஒரு அழகிய கன்னிகை இப்படிக்காரணம் காட்டி தன் கஷ்டஸ்திதியை தெரிவித்து மணம்புரியும்படி கேட்பது என்று வந்து விட்டால் கல்யாணம் பண்ணிக்கொள்ள இசையாதவர் யார்தான் இவ்வுலகில் உண்டு! பணம் துச்சம் என்று உதறித்தள்ளும் குணமுடையவர்கள் அநேகர்கூட எதிரில் பொன் முதலிய நாணயங்களையாவது புதையலையாவது திடீரென்று காணும்படி நேர்ந்துவிட்டால் தமக்கென்று அதை மறைத்து வைக்க எண்ணம விருந்துவிடுவார்களா? இப்படிப் பட்டவர்களைத் தூண்டவல்லவா 'வலுவில் வந்த ஸ்ரீதேவியை காலால் உதைத்துத் தள்ளாதே' என்ற பழமொழியும் வழங்கிவருகிறது. ஆகவே தானாக ஒரு கெடுதலில்லா வஸ்துவில் ஒருவன் மனம் பாய்ந்து தனக்கு வேண்டும் அது, என்ற காம விருத்திக்கு இடம் தராமலிருப்பினும், அந்த வஸ்துவே நேரிடக் குறுக்கிட்டு அவனை விட அதற்கு கதிவேறில்லை என்ற எண்ணத்தை உண்டாக்கும் நிலையிலும் அது இருந்து விடுமாயின், அதை தனதாக்கிக்கொள்ள விரும்பும் தன்மை மானிடர்க்கு இயல்பல்லவா? ஆதலால் இங்குக் காட்டப்பட்ட அம்பாவின் வேண்டுகோள் பீஷ்மர் ப்ரஹ்மசரியத்திற்கு பலமான முதற்றடை. இம்மாதிரித் தடையை மீறி நின்று ஸாதாரண ஸன்மார்க்கிகளால் தமது பிரஹ்மசரியத்தை நிலை நிறுத்தவே முடியாது. சற்று நிதானித்தார் பீஷ்மர். 'நாம் பிரஹ்மசரியம் ஆயுள் முழுவதும் பூண்டிருப்போம், என்று தகுந்த ஸமயத்தில், தகுந்த காரணங்களால் தூண்டப்பட்டு, மிகுந்த மனத்தெளிவுடன் முன் பின் யோசித்து, செய்த கட்டுரைப்படி நடக்க வேண்டியது நமது கடமையல்லவா?' என்று எண்ணமிட்டார். 'எது எப்படிப்போனால் நமக்கென்ன? நமது ஸத்ய சாஸ்திரீய உறுதியே நமக்கு முக்யம்! அதன்படி நாம் நடந்து விடவேண்டும்! வரும் எந்தப் பெரும் பலன் ஒதுங்கிப் போய்விட்டாலும் போய்விடட்டும்' என்று தீர்மானித்து, அம்பாவை நோக்கி 'என்னிடமிருந்து, நீ உன் கோரிக்கையை நிறைவேற்றக் கருதியிராதே.' நான் ஆயுள் பிரஹ்மசரிய விரதம் பூண்டவன்! நீ போகலாம்' என்று கூறி முடித்துவிட்டார்.

அம்பாவின் காரியம் இதோடு போய்விடவில்லை. அவளுக்கு பீஷ்மரிடம் தீராப்பகை உண்டாகி விட்டது! எப்படியாவது அவரைக் கொன்று விடவேண்டும் என்ற பரபரப்பு உண்டாகி விட்டது. தான் தகப்பன் வீட்டிற்கும் போவதற்கில்லை, ஸாளுவனிடமும் போவதற்கில்லை, இப்படி எல்லாம் ஏற்படக்காரணமாகியிருந்த பீஷ்மரிடமும் போவதற்கில்லை என்ற எண்ணம் இந்தப் பகையை அதிகப் படுத்தி விட்டது. காட்டில் சென்று உலாவிக் கொண்டிருந்து முடிவில் பரசுராமரை அடுத்துத் தன் காரியத்தைக் கூறி எப்படியாவது பீஷ்மரைக் கொன்றுவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அதற்கு அவர் 'எப்படியாவது உன்னை விவாஹம் செய்து கொள்ளும்படி என் சிஷ்யனை காங்கேயனைத் தூண்டுகிறேன், அவன் மறுப்பானாயின் அவனைச் சண்டை செய்துகொல்ல முயல்வேன், வா போவோம்' என்று சொல்லி அம்பாவையும் கூட்டிக் கொண்டு ஹஸ்தினாபுரத்தருகில் வந்து சேர்ந்தார்.

அம்பா மூலமாகவே இரண்டாவதாகிய அதி



பலமான தடையும் இவ்வாறு ஏற்பட்டு விட்டது. குருவாக்கியத்தை மீறலாகாது என்று சாஸ்திரங்கள் கோஷிக்கின்றன. குரு ஹிதாஹிதம் தெரியாது கட்டளையிடுவானாயின் மீறிவிடலாம் என்றும் அதிலேயே கூறப்பட்டிருக்கின்றது. வஸிஷ்டரிடம் சாஸ்திராப்யாஸம் ஐயம் திரிபற பீஷ்மர் செய்தவராதலால், பரசுராமராகிய க்ஷாத்ர குரு முன் வந்து 'எப்படியாவது என் வாக்கைத் தட்டாது இப்பெண்ணை விவாஹம் செய்துகொள்' என்று கேட்டதும் தயாரானபதில் கொடுத்து விட்டார். நம்போன்றவருள் சாஸ்திர மர்மம் தெரியாதவர்கள் குருவாக்குக்குக் கட்டுப்பட முயலுவோம் விரதத்தை விட்டு. பீஷ்மரோ 'குருவாக்கியத்தின்படி நடந்தே தீரவேண்டும் என்பது குருகுலவாஸம் செய்யும் பிரஹ்மசாரிக்கு. குருவை மற்றைய நிலைகளி லிருக்கையிலும் மரியாதையுடன் நடத்திக் கூடியவரையில் அவரது ஒழுங்கான விருப்பங்களின்படி நடந்தே தீரவேண்டும். ஆனால் மற்றைய ஆச்ரம நிலைகளிலிருக்கையில் குருவந்து ஒழுங்குக்கு விரோதமாகக் கூறினால், அதைப் பகுத்துணர்ந்து அதன்படி நடவாமலும் இருக்கலாம். நீரோ எனது ஆயுஸ் பிரஹ்மசரிய விரதத்தையும், இந்த அம்பாவின் மனம் பலவகைப்பட்டு கவலைபாய்ந்தோடியதையும் கவனியாமலே, பாணிக்ரஹணம் அவளை நான் செய்துகொள்ள வேண்டும் என்று மந்திரி நிலையிலிருந்து ராஜ்யகாரியம் பார்க்கும் எனக்குக் கூறி விட்டீர். அதன் குணதோஷங்களை ஆராய்ந்து பார்க்குங்கால், நீர் தூண்டுவது வீணே என்று தோற்றுகிறது. ஆதலால் உமது வாக்குப்படி நடக்க முடியாது' என்று கூடியவரையில் விநயத்துடன் கூறி விட்டார் பரசுராமரை நோக்கி. பரசுராமருக்குக் கோபம் வந்து விட்டது. சண்டைக்கு அழைத்து விட்டார் பீஷ்மரை. தமது பிரஹ்மசரியத்தை கர்மயோக விதிப்படி அனுஷ்டிக்கும் திறனுடைய பீஷ்மருக்கா, குருமரியாதை குறையாமலும், க்ஷத்ரிய தர்மப்படி வலுவில்வந்த சண்டையை விடாமலும் இருக்கத் தெரியாது. ஸரி என்று ஒப்புக்கொண்டு குருக்ஷேத்திரத்தில் வந்து சேர்ந்து விட்டார். கங்கை கூடியவரையில் இருவரையும் தடுக்கப்பார்த்தாள், முடியவில்லை. பரசுராமருக்குக் கோபமும், பீஷ்மருக்கு தாம் அக்காலத்தில் அனுஷ்டிக்க வேண்டிய கர்மயோக ஒழுங்கு ஆசார்யனை எதிர்த்துச் சண்டையையே செய்வது தான் என்ற சாந்தமும், குடிகொண்டிருந்ததால், இந்தச் சண்டை தடை பெறாது நடைபெறத் தொடங்கியது. நடந்த பதினைந்துநாள் சண்டையில் பீஷ்மரும் ராமரும் வெகு ஸாமர்த்தியமாகப் போர்புரிய முடிவில் பரசுராமர் தோல்வி அடைந்தார். பீஷ்மர் கொக்கரித்துக் குதித்தாரா? சண்டைக்கழைத்தவர் குருவாயினும் விடலாகாது என்பது இந்த க்ஷத்ரியதர்ம கர்மயோகமே ஒழிய, தோல்வி அடைந்தவரை, தன் பெருமை அவர் சிறுமை முதலியவைகளைப் பாராட்டி அவமதிக்க வேண்டும் என்பதும் அதன் பாகமாகுமா? இதுதெரியாதா பீஷ்மருக்கு? மேலும்கொக்கரிப்பது வீண் குரு அவமானபாபமேயாகித்தமது கர்மயோக நிலைக்கு முற்றிலும் விரோதமானது என்பதும் அவருக்குத்தெரிந்ததுதான். உடனே குருவிடம் சென்று அடிபணிந்தார். தோல்வி அடைந்த குரு தமது தோல்வியைப் பாராட்டாது பீஷ்மசிஷ்யரை வாரி எடுத்து ஆசீர்வதித்து, அம்பாவை நோக்கி 'உன் விஷயத்தில் என்னாலானதைப் பார்த்து விட்டேன். இனி உன் இஷ்டப்படிப் போகலாம்' என்று கூறி தமதிருப்பிடம் சென்றார் பரசுராமர். இந்த அம்பாதான் தவமிருந்து உயிர் விட்டு துருபதராஜன் பெண்ணாகப் பிறந்து பிள்ளையாகிய சிகண்டி எனக் கருதப்பட்டு இடையில் பிள்ளை

யேயாகி பாரதயுத்தத்தில் பீஷ்மரைக் கொல்வதற்குக் காரணமாக ஏற்படுகிறாள்.

ஸந்மார்க்கத்தில் மேன்மேலும் இடம் பெற்று வருபவர்களும் கண்டு தயங்கக் கூடிய தடையைப் பற்றி இது வரையில் விஸ்தரித்துக்கூறி, அதில் ஏற்பட்ட குருவாக்கிய பரிபாலனம் என்ற அலை வீசும் ஸமுத்திரத்தில், க்ஷத்திரிய தர்மம், குருமரியாதை என்ற எதிர் காற்றுகளுக்கிடையில் அகப்பட்ட, விரதானுஷ்டானம் என்னும் சரக்கேற்றிய கர்மயோகக் கப்பலை, பீஷ்மர் தேர்ந்த மாலுமிபோல கவிழவொட்டாது நடத்திய சிறப்பையும் எடுத்து விளக்கியாகிவிட்டது. இனி ஸந்மார்க்கத்தில் தேர்ந்தவர்களையும் ஒருகை பார்த்துக் கலங்கச்செய்யும் மிகவலுத்த பலமான மானஸீகத் தடையையும் எடுத்துக் காட்டுவோம். இதில் இவரது கர்மயோக உணர்ச்சி எவ்வளவு ஆழ்ந்துள்ளது என்பது நன்கு விளங்கும்.

விசித்ரவீர்யன் பால்யவயதிலேயே விஷய ஸுகத்தில் அதிகமாக உழன்று, தனது மனைவி இருவரையும் ஸந்தானமின்றி விதவைகளாக்கிப், பரலோகம் அடைந்தான். குருவம்சம் ஸந்ததியற்றுப்போய் விட்டது. ஸத்யவதீ தேவி மிகத்துக்கித்து பீஷ்மரிடம் என்னசெய்வதென்று யோசனை கேட்க வந்தாள். பீஷ்மரை நோக்கி, ‘சந்திரவம்சம் ஸந்ததியற்றுவிட்டது. உனது தம்பியின் பத்னிகளும் குழந்தை இல்லையே என்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள். சாஸ்திர விதிப்படி அவர்களுக்குக் குழந்தைகள் உண்டாகும்படி அனுக்ரஹம் செய்துவிடு. அப்படிச் செய்ய இஷ்டமில்லாவிடில், நீயே ராஜ்யத்தை ஒப்புக்கொண்டு விவாஹம்செய்துகொண்டு குழந்தைகளை உண்டாக்கு’ என்றாள். ‘அம்மா! என்ன இப்படிச் சொல்லுகிறாய்! உன் விவாஹகாலத்தில் நான் செய்ததெய்வீகசபதத்தைமறந்துவிட்டாயோ? நான் இதைச் செய்யலாமா? அதன்படி’ என்று மிகுந்த விநயத்துடன் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டார். ‘அப்பா என் அருமை மகனே! எனக்காகவல்லவோ நீ அவ்வாறு செய்தது! இப்பொழுது நானே அதை மீறிவிடு என்று உனக்கு மனப்பூர்வமாக அனுமதி கொடுக்கையில் நீ தயங்கவேண்டிய காரணமொன்றுமில்லை. உன்னை உலக ஸுகத்திலிருந்து நீக்க வந்தபாபியாயினேனே என்றவருத்தமெனக்கு இது வரையில் மனதை அறுத்துக்கொண்டிருந்தது. அந்த பாபத்தின் பலனை என்பிள்ளைகளை (யாருக்காக உன்னை ப்ரஹ்மசாரியாகவிருக்கும்படி செய்தேனோ அந்தப்பிள்ளைகளை) ப்பறிகொடுத்து அனுபவித்துவிட்டேன். பாபம் போயும் புண்யம் செய்த திருப்தி என் மனதிற்கு வரவில்லை. நீ ராஜ்யபாரம் வஹித்து ராஜகுமாரர்கள் போலவிருந்தால்தான் என் மனம் திருப்தி அடையும். நான் கூறுவதைத் தட்டி ராஜ்யத்தையும் என்னையும் வீணாக்கிவிடாதே’ என்று மிகுந்த பரிவுடன் மொழிந்துவிட்டாள் ஸத்யவதீ. பார்த்தார் பீஷ்மர். தன் சிற்றன்னையின் உருக்கத்தை மனதார அனுபவித்தார், சற்று மனம் கலங்கித் தெளிந்தது: ப்ரஹ்மசரியம் என்ற உணர்ச்சியே தலைதூக்கி நின்றது.

இம்மாதிரியான தடை ஒருவன் விரதத்திற்கு வந்துவிட்டால் உலகத்தில் தேர்ச்சியடைந்தவன் எவனாயினும் எதிர்த்துத் தலைதூக்கமுடியுமா? அப்படியே பெட்டிப் பாம்பு போல அவன் விரதானுஷ்டானப்பிடிப்பு அதனுள் அடங்கிவிடாதா? இது மிகுந்த நயவஞ்சகமான தடை. நல்ல சாஸ்திர உணர்ச்சியும் திடமான விரதவிஷய கர்மயோகப் பிடிப்பும் இல்லாவிடில் இந்த ஸமயத்தில் விரதபங்கம் வாராது தப்புவித்துக்கொள்ளவே முடியாது. இதுபற்றியே கிருஷ்ணபரமாத்மா பகவத்கீதை



யில் ‘பலத்தில் எப்பொழுதும் இச்சை இல்லாமை’ கர்மயோகத்தின் ஒரு அங்கம் என்று கூறியுள்ளார். பலத்தில் சற்று இச்சைமனதுள் பதிந்து மிகுந்த நுட்பமாக மறைந்துகிடக்குமாயினும் அதைப்பிடித்து வெளியில் இழுத்து கர்மயோகத்தை பங்கம் பண்ணும் தடை இப்பொழுது பீஷ்மருக்கு வந்திருப்பது. ஸ்ரீமத் ராமசந்திர மூர்த்திக்கும் இப்படிப்பட்ட பலமான தடை சித்திரகூட பர்வதத்திலிருக்கையில் வரவில்லையா? பிதிர்வாக்ய பரிபாலனத்திற்காதாரமான பிதாபோய்விட்டார்: அவர் வாக்யத்தை கிளப்பிவிட்ட கைகேயியும் தனது கொடுமையை எண்ணி வருந்தத்தொடங்கிவிட்டாள்; பிதிர்வாக்யத்தின்படி ராஜ்யம்பெற்ற பரதனும் அதை ராமனுக்கு அர்ப்பணம்பண்ண வந்துவிட்டான்; வஸிஷ்டாதி மஹரிஷிகளும் பரதனுடன் சேர்ந்துகொண்டு ராமரை ராஜ்யத்திற்கு வரும்படி அழைத்துவிட்டனர். இப்படி இருக்க தகப்பனார் வாக்கியத்தைப் பரிபாலனம் பண்ணும்பொருட்டு தனது தமயன் நிலையை கைக்கொண்டு பரதனை ராஜ்யம் போகும்படி உத்தரவு செய்து தப்புவித்துக்கொள்ளவில்லையா ஸ்ரீராமர்? மிகுந்த குழப்பமுண்டாகக்கூடிய ஸமயங்களிலும் ஸரிவர கர்மயோகம் அனுஷ்டிக்கும் திறன் மிகச் சிறந்த பெரியோருக்கும் அவதாரங்களுக்கும்தான் இருக்கும்.

பீஷ்மர் ஸத்தியவதியை நோக்கி ‘அம்மா! நான் விவாஹம் செய்துகொண்டு ராஜ்யம்ஆளுவது முடியாத காரியம்! என் விரதத்திற்கு நேரே அதுவிரோதமானது. விரதம் உன் ஸம்பந்தப்பட்டெழுந்தாலும் பின்னர் நான் எப்பொழுதும் அனுஷ்டித்துத்தீரவேண்டிய கடமையாகிவிடவில்லையா? உன்னால்கூட அந்த விரதப்பிடிப்பைநீக்கமுடியாது. அதைவிட்டால் உன் மனம்திருப்தியடையுமாயினும், அதைப்பற்றியே நினைக்க இடங்கொடுக்கவில்லை. என்மனம்: அது தடைபடாது உன்னையும் திருப்திப்படுத்தவே என்மனம் முனைந்துவிட்டது. என் தம்பி பெண்சாதிகளுக்கு புத்திரானுக்ரகம் பண்ணச்சொன்னாய், அதுவும் என்னால் முடியாத காரியம். ஆனால் எந்த சாஸ்திர ஒழுங்குப்படி என்னை நீ அவர்களுக்குப் பிள்ளை உண்டாக அனுக்கிரஹிக்கச் சொன்னாயோ, அதே சாஸ்திரம், அந்த அனுக்கிரஹம் சிறந்த மஹரிஷிகளும் செய்யலாம் என்று காட்டியிருக்கிறது. ஆதலால் உனக்குத் தெரிந்த மஹரிஷி ஒருவரை வரவழைத்து உன் இஷ்டத்தை முடித்துக்கொள்’ என்றார்.

ஸத்யவதிக்கு இதுவும் ஸரிதான் என்றுபட தன்பிள்ளை வியாஸர் ஞாபகம் வந்துவிட்டது. சந்தனுவின் விவாஹத்திற்கு முந்தி கன்னிகைப் பருவத்தில் வியாஸர் உண்டான விதத்தைக் கூறினாள் ஸத்யவதீ பீஷ்மரிடம். ‘அம்மா நல்லகாரியம் செய்தாய்! வெண்ணெயை வைத்துக்கொண்டு உன்னைப்போல யாராவது நெய்க்கலைவார்களா? நான் எந்த உறவில் என் தம்பி பெண்சாதிகளுடன் ஸம்பந்தப்பட்டிருக்கிறேனோ அதே உறவிலிருப்பவரல்லவா வியாஸ மஹரிஷியும். அவர் யோக்யதை எங்கே! என்னதெங்கே! அவரை அழைத்து அனுக்கிரஹிக்கச்சொல்; என் விரதத்திற்கும் கேடுவாராது உன் மனமும் திருப்தியடையும்’ என்று ஆலோசனையை முடித்து கர்மயோகத்திற்கு ஏற்படக்கூடிய பலமான தடையையும் தாண்டி பூர்ணகிரஹணத்திலிருந்து வெளிப்பட்ட ஸூர்யன்போல விளங்கலுற்றார் பீஷ்மர்.

---

**நமது சந்தா நேயர்களுக்கு.**—சந்தா நேயர்கள், கடிதம் எழுதும்போதும், சந்தாத்தொகை அனுப்பும்போதும், புத்தகங்களுக்கு ஆர்டர் செய்யும்போதும், தமது விலாஸத்துக்கெதிரே யிருக்கும் நெம்பரைக் குறிப்பிட்டு எழுதக்கோருகிறோம். அப்படிச் செய்யாதபக்ஷத்தில் கடிதங்கள் பைசல் செய்ய வீண் காலதாமதம் ஏற்படும். தவிர, சந்தா நேயர்களுக்கு அந்தந்தமாத பத்திரிகை இங்கிலீஷ் மாதம் 16உக்குள் கிடைக்காவிட்டால், உடனே நமது ஆபீஸுக்குத் தெரிவிக்கவேணும்.

**மானேஜர்.**

# ஐக்கிய நாணயம்

## CO-OPERATIVE CREDIT

இந்திய விவசாயிகள் அனேகவிதமான கஷ்டங்களை அனுபவித்து வருவதற்கு அவர்கள் பழைய வழக்கங்களை கையாடி வருவதே ஒரு காரணம். ஆனால் உலகத்தில் மற்ற விடங்களில் கொஞ்சகாலமாய் சாகுபடியில் அநேக அபிவிருத்திகள் செய்யப்பட்டு கையாடப்பட்டு வருகின்றன. இந்தியாவின் பழைய வழக்கங்களின் குறைவுகளை போக்கி சாகுபடியில் அபிவிருத்திகளை செய்யும்பொருட்டு இந்தியா கவர்ன்மெண்டார் விவசாய இலாகாவை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். குறைந்த வட்டிக்கி வேண்டிய முதல் பணத்தைக் கிடைக்கச் செய்வது இந்திய விவசாயிகளுக்கு கவர்ன்மெண்டார் செய்திருக்கும் மற்றொரு உதவி. சாகுபடிக்கும் மற்றசிலவுகளுக்கும் விவசாயிகளுக்கு பணம் தேவை. இதற்காக அவர்கள் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. இது விஷயத்தில் அவர்களுக்கு உதவி செய்வது ஐக்கிய சங்கங்களின் நோக்கம். ஐக்கிய சங்கங்களின் நன்மைகள் அனேகருக்குத் தெரியும். தெரியாதவர்களும் அநேகர் உண்டு. 1913ம் வருஷம் ஜூன்மீ 30உ யில் இந்த ராஜதானியிலுள்ள கிராமங்களில் 64,037 மெம்பர்கள் அடங்கிய 1,006 கிராம சங்கங்கள் இருந்தன. இவைகளில் தமிழ் ஜில்லாக்களில் 46,030 மெம்பர்களடங்கிய 696 சங்கங்களும், தெலுங்கு ஜில்லாக்களில் 16,003 மெம்பர்களடங்கிய 276 சங்கங்களும் இருந்தன. 9 சங்கங்களில் 647 மலையாள தேசவாசிகளும். 27 சங்கங்களில் 1,357 கன்னடதேசவாசிகளும் ஐக்கிய சங்கங்களின் பயனை அடைந்தவர்கள். இந்த ராஜதானியில் ஆங்கிலேயர்களின் ஆளுகைக்கு உட்பட்ட கிராமங்களின் ஜனத்தொகை 41,405,404. இவர்களில் 20,382,955, ஆண்கள். இந்தத்தொகையில் 64,037ஜனங்கள் மாத்திரம் ஐக்கிய சங்கங்களில் மெம்பராயிருப்பதால் ஐக்கியத்தின் நன்மைகளை பெரும்பான்மையான கிராமவாசிகள் அனுபவிக்கிறதில்லை என்று நன்றாய் விளங்குகிறது.

2. ஐக்கிய சங்கங்களில் மெம்பராயிராத ஆயிரக்கணக்கானவர்கள் மிதமிஞ்சின வட்டிக்கு கடன் வாங்குகிறார்கள். அப்படி வாங்கும் கடனுக்கு அதிகவட்டி கொடுக்கவேண்டிய காரணங்கள் மூன்று.—

i கிராமங்களில் பணம் கொடுக்கும் முதலாளிகள் குறைவு. ஆகையால்தான் வட்டியின் விகிதம் அதிகப்படுகிறது.

ii தக்க ஈடில்லாமல் கடன்கொடுப்பதாலும், நாணயமில்லாத கடன்காரர்களால் கடன் கொடுப்பவனுக்கு ஏற்படும் நஷ்டங்களை நாணயமுள்ள கடன்காரர் கொடுக்கும் வட்டியைக் கொண்டு ஈடுசெய்யவேண்டி யிருப்பதாலும், தான் கொடுக்கும் கடனுக்கு முதலாளி அதிக வட்டி கேட்கிறான்.

iii பூமியின்மேல் கடன் கொடுப்பது நல்ல ஈடேயானாலும் அப்படி கொடுக்கப்பட்ட கடன்கள் எல்லாம் அதிக நாள் கழித்தே வசூலாகுமானதாலும் கோர்ட்டில் செய்யும் தாவா முதலானவைகளுக்கு அதிக செலவு செல்லுகிறதாலும், கொடுக்கும் கடனுக்கு அதிக வட்டி கேட்கப்படுகிறது. கிராமங்களில் வேண்டிய தொகை இருந்து மேற்கூறியபடி பணம் சந்தேகமில்லாமலும் கோர்ட்டு முதலிய விடங்களுக்குப் போகாமல் கடன்கள் வசூலிக்கக் கூடுமென்ற நிச்சயம் இருந்து கடன்கொடுப்பவர்களும் கடன் வாங்குகிறவர்களும் ஒருவருக்கொருவர் மோச நினைவு இல்லாமல் நடந்துகொள்ளும்படி ஏற்பட்டால் தற்காலம் கடன் வாங்கும் சமுசாரிகள் அதிக வட்டி கொடுக்கக் காரணமிராது.

3. கூடுமான வரையில் மேற்கூறிய அன்னியோன்னியங்களும் கிரமமான நடவடிக்கைகளும் இருக்கும்படிக்கு ஐக்கியசங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நிச்சயமாய் ஈடில்லாதவைகளில் கைமுதலைப்போட்டு தேம்புவதற்கு பதிலாக அவசியமாய் அபிவிருத்தியாகவேண்டிய விவசாய விஷயங்களுக்கு வேண்டிய முதலை ஐக்கியசங்கம் சேர்க்கிறது. கைமீதியாயிருக்கும் பணங்களை பலரிடத்திலிருந்தும் ஒருமித்து சேர்த்து ஏழைக்குடியானவர்களுக்கு தேவையான பணஉதவியை ஐக்கிய சங்கம் கொடுக்கிறது. கடன்கொடுப்பவர்களுக்கும் கடன் வாங்குகிறவர்களுக்கும் நியாய வட்டியும் ஐக்கிய சங்கத்தால் ஏற்படுகிறது.

4. ஒரு கிராமத்தில் அனேகர் தாங்கள் கடன் கொடுக்கவும் கடன் வாங்கவும் ஒரு ஐக்கிய சங்கத்தில் சேருகிறார்கள். தனியே எடுத்





துக் கொள்ளும் பிரயாசையினால் எவ்விதத்திலும் அடையக்கூடாத அனுகூலங்களை எல்லோரும் ஒன்று சேருவதனால் அடைகிறார்கள். தவிரவும் ஒரு ஐக்கிய சங்கத்தில் விசேஷ சொத்தில்லாத ஏழைக் குடியானவனும் மற்றவர்களைப்போல் அனுகூல மடைகிறான். ஒருவன் யோக்கியனாயும் சம்பாதிக்க சக்தியுள்ளவனாயு மிருந்தால் அவன் ஏழையாயிருந்தாலும் அவனுக்கு ஈடுவைக்க சொத்திருப்பதுபோல பாவிக்கப்படும். அதாவது அவனை ஒரு நாணயஸ்தனாகக் கொள்ளப்படும். ஒருகிராமத்தில் பிறரிடம்போய் பேசாமல் யோக்கியமாய் இருப்பவர்கள் அனேகர் உண்டு. இதுதான் நாணயத்துக்கு காரணம். இதுவே ஐக்கிய நாணயத்துக்கு முக்கிய காரணம். ஒவ்வொருவனுடைய நன்மைக்காக எல்லோரும் தங்களுடைய எல்லா சொத்தையுமேயல்லாமல் தங்களுடைய வல்லமைகளையும் ஒன்றுசேர்க்க ஒப்புக்கொள்ளுவதுதான் ஐக்கிய மென்பது. இப்படி ஒன்றுசேர்ந்த ஒருகூட்டத்தார் கடன் வேண்டு மென்றால், கடன் கொடுப்பவனுக்கு வாங்கும் கடனை இவர்கள் எல்லோரும் சேர்ந்தால் வாபசு செய்வார்கள் என்பதில் முழுநம்பிக்கையல்லவா? அப்படியிருக்கும் நம்பிக்கையினால் நாணயமுள்ளவர்கள் ஒன்றுசேர்ந்த ஒரு சங்கத்துக்கு குறைந்த வட்டிக்கு கடன் கிடைக்கிறது. இப்படி அனேகம் சங்கங்கள் ஏற்பட்டால் அனேகவிடங்களிலிருக்கும் ஸாவ்கார்கள் இச்சங்கங்களுக்கு கடன் கொடுக்க அதிக சீக்கிரம் தலைப்படுகிறார்கள். அப்பொழுது தேவையான பணம் வெளிவருகிறது. சென்னை ராஜதானியில் ஒவ்வொரு கிராமத்திலும் இம்மாதிரி சங்கம் ஒன்று இருக்கலாம். அப்படி ஏற்பட்டால் கிராமவாசிகளுக்கு அச்சங்கத்தால் அதிக நன்மையுண்டாகும்.

5. அப்படி ஐக்கிய சங்கங்களை எப்படிக் கூட்டி வேலைநடத்துவது என்றால் ஒருகிராமத்தில் ஒருவருக் கொருவர் நம்பிக்கை ஏற்பட்ட சில நல்லவர்களும் யோக்கியர்களும் சேர்ந்து ஐக்கிய சங்கத்தின் பயன்களை அடைய ஒப்புக்கொண்டு ஐக்கிய சங்கங்களின் அதிபதியாகிய ரிஜிஸ்திரார் அவர்களுக்கு ஒருமனு செய்துகொண்டால், ரிஜிஸ்திரார் அவர்கள் மனுபாரங்களை அனுப்புவார். விண்ணப்பத்துடன் கீழ்கண்ட விவரங்களும் அனுப்பவேண்டும்:—

1. சங்கத்தில் சேரவிரும்பும் மெம்பர்களின் பெயர்கள்.

2. ஒவ்வொரு மெம்பருக்குள்ள பூஸ்திதியின் விஸ்தீரணம், ஜங்கம சொத்தின் மதிப்பு.

3. ஒவ்வொரு மெம்பரின் சராசரி வருஷ வருமானம்.

4. ஒவ்வொரு விண்ணப்பதாரரின் தற்கால கடன்தொகை.

5. பழைய கடன்களைத் தீர்க்கவும் தற்கால செலவுக்குமாக ஒவ்வொருவருக்கும்வேண்டிய கடன்தொகை.

இவ்விவரங்களுடன் ரிஜிஸ்திரார் அவர்களிடம் விண்ணப்பம் சேர்ந்தவுடனே சங்கத்தின் நடவடிக்கைகள் ஒழுங்காக நடப்பதற்கு விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு வேண்டிய சட்டங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யும்பொருட்டு, ரிஜிஸ்திரார் அவர்கள் ஐக்கிய சங்கங்களின் இன்ஸ்பெக்டர் ஒருவரையாவது, ஒரு ஹானரெரி ஆர்கனைஸரை (Honorary Organiser)யாவது அனுப்புகிறார். சங்கத்தின் சட்டங்கள் சரியென்றும் சங்கத்தின் மெம்பர்கள் சங்கத்தை சரிவர நடத்துவாரென்றும் ரிஜிஸ்திரார் அவர்களுக்கு திருப்தியானால் ஐக்கிய விஷயத்தைப்பற்றிய சட்டங்களடங்கிய 1912-ம் வருஷத்திய 2வது ஆக்டின்படி ஐக்கிய சங்கங்களில் ஒன்றாக இந்த சங்கத்தை ரிஜிஸ்தர் செய்கிறார்.

6. அப்படி ஏற்படுத்தப்பட்ட ஓர் சங்கத்தின் சட்ட திட்டங்கள் ஒரு கிராமத்தில் மாத்திரமே செல்லத்தக்கது. அதாவது ஒரு கிராமத்திலுள்ளவர்கள் மாத்திரம் அந்த சங்கத்தில் சேரலாம். ஏனெனில் ஒவ்வொருவரும் இதர மெம்பர்களுடைய நாணயத்தையும் ஸ்திதியையும் அறியக்கூடும். புத்திமாருட்ட மில்லாத 18வயதிற்கு மேற்பட்ட ஒரு கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் அந்த சங்கத்தில் மெம்பராகலாம். ஆனால் சங்கத்தார் ஒவ்வொருவரையும் மெம்பராக சேர்க்கவேண்டிய நிபந்தனையில்லை. நல்ல நடத்தை யில்லாதவனை அச்சங்கத்தில் மெம்பராகச் சேர்க்காமல் தள்ளிவிடவேண்டியது. எல்லா மெம்பர்களுடைய பொதுப் பொறுப்பின்பேரிலும், தனித்தனிப் பொறுப்பின்பேரிலும் சங்கத்திற்கு வேண்டிய முதலைக் கடன் வாங்குவது சங்கத்தின் நோக்கம். ஆகை

யால் அப்படி சேரும் ஒவ்வொரு மெம்பரும் அந்த சங்கத்தின் எல்லாக் கடன்களுக்கும் பாத்தியப்படுகிறான்.

சங்கத்தால் வாங்கப்பட்ட தொகையைகடன் வேணுமென்று விண்ணப்பம் செய்துகொள்ளும் மெம்பர்களுக்குக் கடன்கொடுக்கப்படுகிறது. இந்தவேலை, மெம்பர்கள் எல்லோரும் இருந்து செய்யக்கூடியதல்ல. ஆகையால் சங்கத்தின் காரியங்களை நடத்துவதற்காக மெம்பர்கள் எல்லோரும் தங்களுக்குள் சிலரை சாதாரணமாய் 5 பேர்களைப் பொறுக்கியெடுத்து இவர்கள் (இந்த பஞ்சாயத்தார்) வசம் சங்கத்தின் அதாவது கிராமநிதியின்விசாரணையை ஒப்புவித்துவிடுகிறார்கள்.

மெம்பர்களாகிய பொதுக்கூட்டத்தாரின் உத்தரவின்பேரில்தான் இந்தசங்கத்தின் காரியங்கள் எல்லாம் நடத்தப்படும். பஞ்சாயத்தார் பொதுக் கூட்டத்தாரின் தீர்மானங்களை நிறைவேற்றுகிறார்கள். ஆனால் பஞ்சாயத்தார் செய்யும் வேலைக்கு பிரதிபலன் ஒன்றும் இல்லை. சங்கத்திலிருந்து மெம்பர்கள் வாங்கும் கடன்களை சொல்பம் சொல்பமாய் வாபசு செய்யலாம். சில சமயங்களில் வாங்கிய கடனை ஒவ்வொரு ரூபாய் வீதம் வாப்சு செய்தாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு மெம்பரும் வாங்கக் கூடும் கடன் தொகை இவ்வளவென்று குறிக்கப்பட்டிருக்கின்றது.

பூஸ்திதியை விருத்தி செய்வதற்காகவோ, கால் நடைகள் வாங்கவோ, சாகுபடி செலவின் நிமித்தமாகவோ, மெம்பர்கள் அல்லது அவர்கள் குடும்பத்தின் கல்யாண விஷயமாகவோ, இவ்விதமான அவசியமாயும் அல்லது பிறகு பலனைத் தரக்கூடியதுமான விஷயங்களுக்கு மட்டுமே கடன் கொடுக்கப்படுகிறது.

வாங்கிய கடனை ஒரு மெம்பர் துர்விநியோகப்படுத்தினால், அவன் அக்கடனை உடனே வாபசு செய்யவேண்டியது. வாங்கிய கடனை கொஞ்சம் கொஞ்சமாய் வாபசு செய்தபோதிலும் ஒவ்வொரு வருஷமும் கொஞ்சம்கொஞ்சம் கொடுத்து விடவேண்டும். சங்கத்தின் மெம்பர்கள் எல்லோரும் அதினிடத்தில் எப்பொழுதும் விசுவாசமும் அதினுடைய நன்மையைக் கருதுபவர்களாகவும் இருக்கவேண்டும், சங்கத்தைக் கோர்ட்டிற்கு இழுக்கும் மெம்பரையும், வேறு விஷயங்களால் நல்ல நடத்தையில்லாத மெம்பரையும் சங்கத்தை விட்டு நீக்கப்படும்.

7. ஐக்கிய சங்கத்தால் உண்டாகும் நன்மைகளைக் கூறுமிடத்து சங்கத்தில் சேர்ந்த ஓர் கிராமத்தின் மெம்பர்கள் தங்கள் தங்கள் நடவடிக்கையில் ஒவ்வொருவரிடத்திலும் நம்பிக்கையுடனும் நாணயமாயும் இருக்கத் தெரிந்து கொள்ளுகிறார்கள்.

தங்கள் கடன்களை சீக்கிரமாக அடைத்துவிட ஏற்பாடாகிறது. இவ்விஷயங்களில் தங்களை ஆளவும் தெரிந்து கொள்ளுகிறார்கள். இவைகளையல்லாமல், ஒரு கிராமத்தில் உற்பத்தியாகும் மகசூலை ஒன்றுசேர்க்கவும், தக்கவிலை வரும் காலத்தில் ஒருமித்து விற்கவும், சாமான்கள் விலைசாசமாயிருக்கும் காலத்தில் ஒருமித்து வாங்கவும் மற்றும் மேம்பாடான ஐக்கிய விஷயங்களை தெரிந்துகொள்ளவும் காரணமாயிருக்கிறது. ஆகையால் விவசாயிகளுக்கு தங்கள் தற்கால நிலைமை விருத்தியடையவும் அதினால் உண்டாகும் சுகபோக பாக்கியங்களை அடையக் காரணமாயுமிருக்கிறதென்றும் தெரியவருகிறது.

எல். டி. சுவாமிகண்ணு,
கோ ஆபரேடிவ் ஸொஸைடி ரேஜிஸ்ட்ரார்.

## பெண் கல்வி.
## FEMALE EDUCATION

வயது சென்ற சில ஸ்திரீகளும் குணங்களில் அவர்களைப்போன்ற சில புருஷர்களும் பெண்களுக்குப் படிப்பு அனாவசியமென்றும், அவர்கள் படித்தால் கெட்டுப் போவார்களென்றும், கர்வத்தினால் வீட்டு வேலைகளை ஸரியாய் கவனிக்கமாட்டார்களென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் ஆழ்ந்து நோக்கி, படிப்பினால் வரும் நன்மைகளையும், அதில்லாமையினால் வரும் குறைகளையும், சீர்தூக்கிப்பார்ப்பார்களானால், கல்வி வேண்டுமென்பதை ஒப்புக் கொள்ளுவார்கள். இதுபற்றியே,

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்றும், " இளமையிற்கல் " என்றும் பெரியோர் கூறினர். ஆழ்ந்துநோக்குமிடத்து கல்



வியானது ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் பொதுவாயிருக்கிறது என்றும், கல்வியறிவில்லாதவர்கள் மிருகங்களுக்குச் சமானமானவர்களென்றும் அறியுமாறு,

"விலங்கொடுமக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடேனையவர் "

என்றும், மற்றும் ஐம்புலன்களிலும் மிகச் சிறந்ததாகிய கண்களின் பயன் கற்பதொன்றேயென்றும், அப்படிக் கல்வி கற்கப்பயன்படாத கண், முகத்தில் தோன்றும் புண் என்றும், கல்லார்மனம் புண்படும் என்றும் தெரிவிக்கும் பொருட்டு,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையோர்கல்லாதவர் "

என்றும் அருளினார் தெய்வப்புலவர். இன்னமும் கல்வியை ஓர் பெண் தெய்வமாகக் கொண்டு உபசரித்தும் மதித்தும் வருகிறோம். தவிர, எண்ணிறந்த கல்விமான்களின் நீதிவாக்கியங்களெல்லாம் உலகிலிருக்க பெண்பாலாகிய ஔவையின் நீதிவாக்கியங்களையே சிறுவர்களுக்கு மனப்பாடம் செய்விப்பது வழக்கம் என்பதையும், நாமெல்லோரும் அறிந்த விஷயமே.

களம்பு நிலத்திற்குச் சமானமான மனிதர்களது இயற்கையறிவானது, செயற்கையாம்கல்வியென்னும் கலப்பையால் பலதரமும் உழப்பட்டு கேள்வி யென்னும் நீரும் பாய்ச்சப் பெற்றாலல்லது, செழித்து விளைந்து நன்மை யென்னும் பலன் தரக்கூடினதல்ல.

கல்வியானது ஒவ்வொருவருக்கும் மனதில் எத்துணைக் கவலையிருந்தாலும் அதை மாற்றிக் களிப்பூட்ட வல்லமருந்தாகிறது. தனித்திருக்கும் வேளைகளில் மனம் சஞ்சலத்துடன் கவலை பாய்ந்துகொண்டிருந்தாலும், அந்த சமயத்தில் கல்வி, அந்தரங்க சிநேகிதம் பூண்டு, கவலையைத்தீர்த்து மனதை நிலைநிறுத்தி, இனிய விஷயங்களை நினைப்பூட்டுகிறது. இன்னமும் கல்வியானது, சோம்பலைத் தவிர்த்து, உற்சாகத்தை யெழுப்பி, மூடர்களின் கூட்டுறவைப் பிரித்து, ஸத்ஸங்கங்களின் ஸகவாஸத்தை நாடி, இளமையின் இயல்பால் சில துர்க்குணங்கள் ஏற்படினும் அவற்றை யகற்றி மனதைப் பரிசுத்தப்படுத்துகிறது.

இனி, செல்வங்கள் எல்லாவற்றிலும் கல்விச்செல்வமே சிறந்ததாகும். பொருட் செல்வம் முதலான மற்ற செல்வங்களைப்போல திருடர்களால் இதனை அபகரிக்க முடியாது. நீரால் நனைக்கவும், நெருப்பால் எரிக்கவும், காற்றால் அகற்றவும் முடியாத வஸ்துவும் கல்வியே.

பொருட் செல்வம் பிறர்க்குக் கொடுத்தால் குறையும்; அதனால் மனதுக்கு ஓர் வித பந்தமும், பாசமும் ஏற்பட்டு மனதைக்கலக்கி அறிவைசஞ்சலத்திற்குள்ளாக்குகிறது. கல்விச் செல்வமோ வென்றால், இறைக்க இறைக்கச் சுரக்கும் ஊற்றுப்போல தம்மையடுத்த பலருக்கும் கல்விச் செல்வத்தைக்கொடுக்கக் கொடுக்கதம்மறிவையேமேன்மேலும் விருத்தியடையச் செய்கிறது. உடலைவளர்க்க உணவு எப்படி யவசியமோ அப்படியே பகுத்தறிவை வளர்க்கக் கல்வியும் அவசியமாகிறது.

கல்வியென்னும் சூரியனொளியானது, மனிதர்களது மனோபுவனத்தை மூடிக்கொண்டிருக்கும் அறியாமையாமிருளையோட்டி அதற்குள்ளிருக்கும் அறிவைப் புலப்படுத்துகிறது. இவ்வுலக இயற்கையமைப்பையும், இவ்வண்ட சராசரங்களில் உள்ள நானாவிதமான இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள்களது பல மாறுதல்களின் வித்யாசங்களையும், விசித்திரங்களையும் கண்டு, அறிவைத் தெளியச் செய்யவும் கல்வியே கருவியாகிறது.

உலகில் மனிதர்கள் அறிவா லனுபவிக்கும் எல்லா விதமான இன்பங்களிலும் சிறிது துன்பமும் கலந்து தீபத்தின் நிழல்போல உடன் நிகழ்வதியற்கை. ஆனால் அவ்வின்ப துன்பங்களை சமமாகப் பாவித்து அறிவை நிலைநிறுத்த வேண்டுமானால் கல்வியென்னும் கருவியால் சுலபமாக அடையலாம்.

ஆகையால் மனித சிருஷ்டியில் ஆண் பெண் ஆகிய இவ்வித்தியாசத்தைத் தவிர, அறிவு முதலிய மற்ற எல்லாவிதத்திலும் பக்ஷபாதமில்லாமல் கடவுள் சிருஷ்டித்திருக்க, கல்வி விஷயத்தில்மட்டும் பெண்களிடத்தில் பக்ஷபாதம் பாராட்டுவது நீதியாகுமோ ?

முன்காலங்களில் அனேக ராஜஸ்திரீகளும், பிராமணஸ்திரீகளும் படித்து வெற்றிபெற்றதாகவும், எவ்வளவோ நற்காரியங்களை செய்திருக்கிறார்கள் எனவும் படித்தும் கேட்டுமிருக்கின்றோம். கார்க்கி என்ற ஓர் மஹா ஸன்யாஸினி யாக்ஞவல்க்யர் என்ற ஓர் மஹானுடன்

தர்க்கம் செய்து ஜயம்பெற்றதாகவும், முக்கிய உபநிஷத்துக்களில் ஒன்றாகிய "சாந்தோக்ய" உபநிஷத்தில்கூறியிருக்கிறது. படிப்பில்லாமல் இவ்வித வெற்றிபெற முடியுமா? ஆகையினால் பண்டைக் காலங்களிலும் ஸ்திரீகள் படித்து வந்ததாக புராண இதிஹாஸங்களிலும், உபநிஷத்துகளிலும் மற்ற நூல்களிலும் கூறியிருக்கிறது.

இம்மையில் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்களைச் செய்யவேண்டினும் கல்வியே துணைக்கருவியாக விருக்கும். மற்றும், மறுமையை அடைய வேண்டினும் கல்வியே காரணமாயிருந்து அதை அளிப்பதாகும் என்று நன்றாய் வற்புறுத்துமாறு,

"அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடைநல்லிசையுநாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியினூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை"

என்று நீதிநெறிவிளக்கத்தி லிருப்பதையும் காண்க.

கல்வியழகில்லாதார் எவ்வித ரூபமுடையாராயினும், வஸ்திராபரணங்களுடையவர்களாயிருந்தாலும், அது அவர்களுக்கு அவமதிப்புக்கே காரணமாயிருக்கிறதென்றும், அறிவுடையோரால் இகழப்படுமென்பதையும் வற்புறுத்தும் பொருட்டு,

* "குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவுநிலைமையாற்
கல்வியழகே யழகு"

என்று பெரியோரும் கூறியுள்ளார். விரிக்கிற் பெருகும். கல்வியின் அவசியத்தைப் பற்றியும், அளவைப்பற்றியும், எத்தனை கல்விமான்கள் எவ்வளவு காலம் எவ்வளவு விரிவாய் எடுத்துக் கூறினும் அவை யனைத்தும் அதற்கொரு முடிவுரையாக மாட்டாது. இதை,

"கற்றது கைம்மண்ணளவு கல்லாத துலகளவென்
றுற்றகலைமடந்தை யோதுகின்றாள்"

என்று பெரியோர் கூறியிருப்பதனால் காண்க.

இவ்வளவு சிறப்பு வாய்ந்ததும் இகபர மிரண்டிற்கும் பயனளிக்கக் கூடியதுமான இக்கல்வியை புருஷர்கள் தாங்கள் மட்டும் அனுபவித்து ஸ்திரீகள் அனுபவிக்கக்கூடாது என்று சொல்லுவதும், அவர்கள் கல்வி விஷயத்தில் அஜாக்கிரதையாகவும் அசட்டையாகவும் இருப்பதும் எப்படியிருக்கிறதென்றால், ஒருகைக்கு,குளிர் பனி முதலியவைகள் தாக்காமல் உறையணிந்து, மற்றொருகையை திறந்துவைத்திருத்தல் எவ்வளவு நாகரீகமும், ந்யாயமும் அலங்காரமுமாக விருக்குமோ அப்படிப்போலவே யிருக்குமென்பதி லாக்ஷேபணையென்ன?

ஆனால் கல்வி வேண்டுமென்றால் புருஷர்களைப் போலவே ஸ்திரீகளும் F. A. அல்லது B. A. முதலான பரீக்ஷைகளுக்குப் படிக்க வேண்டுமென்றாவது, அப்படிப்படித்து உத்தியோகம் செய்து, மேல் நாட்டு ஸ்திரீகளைப் போல பொருள் ஸம்பாதிக்க வேண்டுமென்றாவது இங்கு சொல்லப் பட்டதல்ல. ஆனால் அப்படி பொருள் சம்பாதிக்க வேண்டிய அவசியம் நேரிட்டிருந்தால் அப்படி சம்பாதிப்பதில் ஆக்ஷேபணையென்ன? ஸ்திரீகளுக்கு அப்படி சம்பாதிக்க வேண்டிய அவசியமென்ன வென்றாலோ, விதிவசத்தினால் பால்யத்திலேயே விதவைகளாகவோ, அல்லது வேறு விதமாய் தங்கள் புருஷர்களை இழக்கும்படியாகவோ நேரிடவும், இன்னம் பலவிதமாக அனாதைகளாகவும் இருந்து, சாப்பாட்டிற்குக் கஷ்டப்பட்டு மானமிழந்து வயிற்றின் கொடுமையால் தங்கள் பந்துக்கள் வீடுகளிலாவது, அல்லது இன்னம் மற்றவேறுயார் வீடுகளிலாவது வெட்கமும் துக்கமும் பின்னிழுக்க, வயிற்றின் கொடுமை முன்னிழுக்க இப்படியாக மனம் ஊசலாடிக்கொண்டு, ஓரிடத்தில் வேலைக்கமர்ந்து நாள் முழுதும் வேலை செய்தாலும் அவர்களுக்குத் திருப்தியில்லாமல் கோபித்துக் கொள்ளவும், கேவலம் அடிமைகளிலும் கேடாக அவர்களை நடத்தவும், மற்றும், சில துர்ச்சனர்களுடைய துஷ்ட எண்ணங்களுக்கும் இலக்காகி தங்கள் கற்புக்கே பங்கம் நேரிடும்படியான அனேக கெடுதல்களுக் கெல்லாம் உட்படவும், இன்னம் பலவிதமான கஷ்டங்களுக்கெல்லாம் உட்பட்டு தங்கள் வாழ்நாள் முழுதும் கண்ணீரும் கப்பலையுமாகக் காலத்தைக் கழித்து, இதையெல்லாம் "தலைவிதி" என்னுமோர் சமாதானத்தைக்கொண்டு கஷ்டப்பட்டு காலத்தைக் கழிக்கிறவர்களுக்கு, படிப்பிருந்து தகுந்த கட்டுமானமுள்ள பெண்கள் பள்ளிக்கூடத்திலோ, அல்லது வேறு ஓர் ஏற்பாடாகவோ வேலைக்கமர்ந்து ந்யாயமாக வேலைசெய்து ஸம்பாதித்தால் உபகாரமாகவும் தங்கள் ஜீவனம் கௌரமாகவு மிருப்பதோடு அவர்களுடைய மனோவிசாரத்தைப் போக்கி சமாதானமடையவும் இடமிருக்கிறது. ஆகையினால் மேற்கூறியபடி கஷ்டப்படுகிறவர்கள் படிப்பினால் பரோபகாரமாகவும், ந்யாயமாகவும் உத்தியோகம் செய்து பொருள் சம்பாதிப்பதி லாக்ஷேபணை யென்ன ? நிற்க.

* இச்செய்யுளில் கல்வி யழகைப் பொதுவாய்க் கூறவந்தவர் 'மஞ்சளழகும்' என்று மகளிரும் கல்வி யழகைப் பெறுதற் குரியார் என்று குறிப்பட்டது ஊன்றி யுணரற்பாலது. (ப-ர்)



நம் தேசபாஷையை பிழையற எழுத வாசிக்கவும், குடும்பப்பாதுகாப்பின்பொருட்டும், குழந்தைகளை நல்வழியில் பயிற்றி வளர்க்கவும், உற்றார், பெற்றோர் உறவினர் நட்பினர், எளியவர், துறந்தவர் ஆகிய இவர்களை அவரவர்களுக்கு ஏற்றமுறையாய் உபசரிக்கவும், கற்பிற்கலங்காதிருக்கவும் வரவிற்கு மிஞ்சி செலவு செய்யாதிருக்கவும் இன்னம், ஸ்திரீகளுக்குரிய, நாணம், மடம் அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையும் உடையவர்களாயிருக்கவும் வேண்டுமானால் கல்வி யென்னும் கருவி யில்லாமல் அடைவதெங்ஙனம் ?

ஆனால் நம் இந்தியரில் சிலர், பெண்கள் படிக்கக் கூடாது என்றும் பெண்கள் படித்தால் கர்வத்தினால் கெட்டுப்போய், வீட்டு வேலையைச் சரியாக கவனிக்க மாட்டார்களென்றும் நினைக்கிறார்கள். இன்னமும் அவர்கள் "நாங்களெல்லாம் என்ன படித்துத்தான் வாழ்ந்தோமோ? நாங்களெல்லாம் ஸரியாக விருக்கவில்லையா" என்றும் சொல்கிறார்கள்.

அவர்கள் சொல்லுகிறபடி படிப்பில்லாமலே அவர்கள் அப்படியிருந்தார்களானால், படித்தவர்களுடைய குடித்தனம் இன்னம் ஒழுங்காகவும், சீரும்சிறப்புமாகவும், நாகரீகமாகவுமிருக்குமல்லவா?ஸ்திரீகள் படிப்பினால் கெட்டுபோகிறார்களென்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர் சொல்லுகிறபடி ஏதோ சில ஸ்திரீகள் இருந்தார்களானால்அதற்குபடிப்பையா குற்றம்சொல்லுகிறது? அது அவர்களுடைய பிறவிக்குணத்தினாலும், ஸகவாஸ தோஷத்தினாலும் ஏற்பட்டதென்பதை அவர்கள் ஏன் அறிகிறதில்லையோ தெரியவில்லை. இது பற்றியே,

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்விமனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக்குணம்

என்று சான்றோர் கூறியுள்ளார். இதையெல்லாம் கவனிக்காமல் படிப்பொன்றையே அவர்கள் குற்றம் சொல்லுவதெப்படியிருக்கிறதென்றால், நெல்வயலுக்கு நீர் பாய்ச்சும்பொழுது அந்தத் தண்ணீரானது நெல்லோடு கூடவிருக்கும் புல்லுக்கும்கூடப் பாய்கிறதென்றுசொல்லி நெல்லுக்கே நீர்பாய்ச்சாமல் நிறுத்திவிடுகிறதுபோல இருக்கிறது. ஏதோ சில ஸ்திரீகள் அரைகுறைப்படிப்பினால் அகங்காரம் கொண்டு அதோடு துர்ச்சன ஸகவாஸமும் ஏற்பட்டு கெட்டுப்போனார்களானால், அதற்கு பெண்களுக்குப் படிப்பே கூடாது என்று சொல்லுவதுஸரியாகுமா? அந்தோ, அவர்கள் மூட நம்பிக்கையைப் பற்றி என்னசொல்லுவது!

ஆனால் நாம் நம்முடையபடிப்பை நல்விஷயத்தில் உபயோகிக்கவேண்டும். கண்டபடியெல்லாம் அனாவசியமாகவும், அசந்தர்ப்பமாகவும் அஸங்கியமாகவும் உள்ள நாவல்களை யெல்லாம் படிக்கக் கூடாது. எவ்வளவோ நல்விஷயமாகவும், பக்தி விஷயமாகவும், ஸன்மார்க்கோபதேசம் செய்யக் கூடினதுமான அநேக புஸ்தகங்கள் இருக்கின்றனவல்லவா? அவைகளையெல்லாம் படித்து மனதை நல்வழிக்குக் கொண்டு வரவேண்டும். சமாசாரப் பத்திரிகைகளையும் வரவழைத்துப் பார்க்கலாம். அவைகளில் எவ்வளவோ தூரதேசங்களிலுள்ள சங்கதிகளெல்லாம் இருக்கின்றனவல்லவா? ஆனால் இங்கு சிலர் ஆக்ஷேபம்பண்ணக்கூடும். என்னவென்றால், கிணற்றுத்தவளைக்கு நாட்டு வளப்பமேன் என்பது போல் வீட்டிலிருந்து வேலை செய்கிறவர்களுக்கு ஊர் வம்பெல்லாம் எதற்கு என்றும், எந்த வூரில் எது எப்படிப் போனால்தான் என்ன! அதைப்பற்றியெல்லாம் அவர்களுக்கு ஆகவேண்டியதென்ன? என்றும் சொல்லக்கூடும். இவை எல்லாம் நாம் சாதாரண வம்பாக நினைக்கக் கூடாது. ஏனென்றால் அதிலிருந்து நாம் எவ்வளவோ சங்கதிகள் தெரிந்துகொள்ளவும், அதினால் நம்மனமானது பரோபகார சிந்தையினால் தூண்டப்பட்டு நல்வழிக்குத் திரும்பும்படிக்கும் இடமிருக்கிறது.

உதாரணமாக, இப்போது தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களாகிய நம் சகோதர சகோதரிகள் படும் கஷ்டங்களையும், அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களையும் இங்கு யாவரே எடுத்துரைப்பவர்? நம் இந்தியாவிலிருந்து எவ்வளவோ தொலை தூரத்திலுள்ள தென்னாப்பிரிக்கா சமாசாரத்தையும் மற்றும் அன்றன்று நடக்கும் சங்கதிகளையும் நாம் பத்திரிகைகள் வாயிலாக அறிகிறோமல்லவா? இதற்கு இவ்விந்தியாவிலிருந்து நம் சகோதரர்கள் தங்கள் தேக சிரமத்தை சிரமமென்று பாராட்டாமலும், மனோ வாக் காயம் ஆகிய மூன்றுவிதமாகவும், ஒற்றுமையாகவும், லோகோபகாரமாகவும், உழைத்து அவர்களுக்கு பொருளுதவி செய்தும் வருகிறார்கள். இதைப்போலவே நாகரீகமும் படிப்பும் மிகுதியாகவிருக்கும் மற்ற மாகாணங்களில் ஸ்திரீகளும் ஸபைகூடி, தென்னாப்பிரிக்காவில் நம் ஸகோதர ஸகோதரிகள் படும் கஷ்டங்களையும் அவர்கள் அங்கு அனுபவிக்கும் துன்பங்களையும் மற்றவர்களுக்குத் தெரியுமாறு எடுத்துக்கூறி அவர்களும் தங்களாலானமட்டும் பணம் வசூலித்து அனுப்புகிறார்கள். இவை எல்லாம் நாம் பத்திரிகை மூலமாக அறிகிறோமல்லவா?

இதனால் நாம் முக்கியமாக அறியவேண்டியதென்னவென்றால், ஸ்திரீகளுக்குப்படிப்பு அவசியம் வேண்டுமென்பதும், அதனால் அவர்களுக்குப் புத்தி விசாலமாய், பரோபகார சிந்தையினால் மனம் தூண்டப்பட்டு, அதனால் ஒற்றுமையேற்பட்டு லோகோபகாரமாய் உழைக்க வேண்டு மென்பதுமேயாம்.

ஆனால் இது எல்லோருக்கும் ஒன்றுபோலச் சொன்னதல்ல; ஏனென்றால் ஒவ்வொருவருக்கும் அவரவர்க்குள், குடும்பங்களுக்கும், ஸம்ஸாரங்களுக்கும் தகுந்தபடி வேலைகள் இருக்கத்தான் இருக்கும். அப்படியிருந்த போதிலும், கொஞ்சமாகிலும் சாவகாச மில்லாமல் போகாது; அந்தக்கொஞ்ச சாவகாசத்தையும் தூக்கத்திலாவது, சோம்பலிலாவது வீண் வம்பிலாவது செலவிடாமல், படிக்கத் தெரிந்தவர்களாயிருந்தால் அவர்கள் தங்களுக்குத்தெரிந்ததை படிப்புத் தெரியாத மற்றவர்களுக்குச் சொல்லித்தரவும், அப்படியும் இல்லாதபக்ஷத்தில் தங்களுக்கு வந்தபடிப்பை மறக்காமல் இருக்கும்படி ஏதாகிலும் புஸ்தகம் படித்துக் கொண்டிருக்கவும் செய்யலாமல்லவா?

முக்கியமாக நாம் இதைப்பற்றி யிங்குகொஞ்சம் கவனித்தோமானால் சுமார் 30 அல்லது 32 வயதுக் குட்பட்ட ஸ்திரீகளில் பலர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகவே யிருப்பார்கள். ஆனால் அவர்களை இப்போது கொஞ்சம் எழுதவோ அல்லது ஓர் புஸ்தகத்தை வாசிக்கவோ சொன்னோமானால் அதற்கு அவர்கள் "நான்5-6-கிளாஸ் வரையில் படித்தேன். அப்புறம் புக்ககத்துக்கு வந்ததுமுதல் எனக்கு வீட்டுவேலையே சரியாகவிருக்கும். கொஞ்சம் சாவகாச மிருந்தால் அப்போது என் தோழி வருவாள். நான் புஸ்தகம் பார்க்கிறதே அவளுக்கு பிடிக்காது. ஏதாகிலும் பல்லாங்குழிகட்டம் ஆடலாமென்று என்னைத் தூண்டுவாள். நானும் என்கொஞ்ச சாவகாசத்தையும் வீணில் போக்கி வந்தபடியினால் என் படிப்பெல்லாம் மறந்துபோய்விட்டது" என்றும், இன்னம் சிலர் தங்களுடைய சோம்பலினால் மறந்து போய்விட்டது என்றும், மற்றும் சிலர் தங்களுடைய வீட்டுத் தொல்லையினாலும் மற்றப் பெரியோர்களுடைய அப்பிராயத்தினத்தாலும் தொந்தரவினாலும் புஸ்தகம் பார்க்க சரிப்படாமையினால் மறந்துபோய் விட்டதாகவும், வேறு சிலர் "எனக்கு வீட்டுவேலை ஜாஸ்தி, அப்படியும் நான் என் வீட்டு வேலையெல்லாம் முடித்து விட்டு புஸ்தகம் படிக்கவோ எழுதவோ உட்கார்ந்தேனானால் எங்கள் வீட்டிலிருக்கும் பெரியோர்கள் அடவு அறிந்துகாரியம் செய்தால் விரல் மடக்க தேச காலமில்லையென்றும், ஸ்திரீகளெல்லாம் படிக்கக் கூடாது என்றும்சொல்லி வேறு ஏதாகிலும் ஓர்வேலையை செய்யச்சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது, கிண்டிவிட்டுக் கேலி பார்க்கப்பட்ட சிறு பையன்களாவது, சிறு பெண்களாவது வந்து "தாத்தா, பாட்டி, அவள் இங்கிலீஷ்வாசிக்கிறாள்" என்றுசொல்லி. அவர்கள் கோபத்தை மூட்டி விடுவார்கள். அப்பொழுது அவர்கள் ஸ்திரீகளெல்லாம் படிக்கவே கூடாது என்றால் இங்கிலீஷ் கூட படிக்கிறார்களே என்று சொல்லிக்கோபித்துக் கொள்ளுகிறார்கள். ஆகையினால் எனக்கு புஸ்தகம் பார்க்க சரிப்படாமையினால்மறந்து போய் விட்டது" என்று பலவாறாகத்தங்கள் தங்களுடைய குறைகளையும், மனவருத்தங்களையும் சொல்லிவருத்தப்படுவார்கள்.

அந்தோ, பரிதாபம்! அவர்கள் அருமையா



கப் படித்த படிப்பை யெல்லாம் மறந்துவிட்டு பச்சாத்தாபப்படுவதற்குள்ள காரணம் என்னவென்றால், நம் பெரியோர்களுடைய அனுதாபம் இல்லாததே. நாம் அவர்களுடைய ஸம்மதமும், அனுதாபமும் பெறவேண்டுமானால்

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும்மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினர்."

என்று பெரியோர் சொல்லியிருப்பதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு மனச்சாக்ஷிக் குவிரோத மில்லாமல் ஓர் காரியம் செய்யும் பொழுது அதற்கு அவர்கள் விரோதம் சொன்னார்களானால், நாம் அவர்களை சமயத்துக்குத் தகுந்த ந்யாயவார்த்தைகளை எடுத்துக் கூறி, அவர்களை ஸமாதானப்படுத்தி நாம் அவர்களுடையஸம்மதம் பெறவேண்டும்.

இன்னமும் ஓர் விஷயத்தைப் பற்றியிங்கு கொஞ்சம் கவனிக்கவேண்டிய தவசியமாகவிருக்கிறது. என்னவென்றால், இப்பவும் சில கிராமங்களில் படிப்பில்லாத சில ஸ்திரீகளுடைய நடவடிக்கைகளெப்படி யிருக்கிறதென்றால், மத்தியானம் சாப்பாடான பிறகு புருஷர்களுடைய வேலையைப் பின்பற்றினவர்களாக (அதாவது புருஷர்கள் எப்படி தங்கள் அலுவலுக்காக ஸ்கூலுக்கோ, கோர்ட்டுக் கச்சேரிக்கோ, ஆபீஸுக்கோபோய்த் தங்கள் வேலையைப் பார்க்கிறது போல) ஸ்திரீகளும் தங்கள் அண்டை அயல்வீட்டு சிநேகிதிகளும், இராமாயணத்தில் மந்தரை அல்லது கூனியைப் போன்ற சிலகிழவிகளும், மற்றும் பூலோகநாரதர்என்று சொல்லும்படியான சில ஸ்திரீகளுமாக வம்பர் மஹாஸபை ஏற்படுத்தி அதில் யார் வம்பிலும் வீணிலும் கெட்டிக்காரியோ அவள் அக்கிராஸனாதிபத்யம் வகிக்கவும், மெம்பர்களாகிய மற்றவர்கள் ஊரிலுள்ள வம்பெல்லாம் உபன்யாஸமாகப் பிரஸங்கம் செய்து, மறுநாளும் அதேமாதிரி ஸபை கூடும்படியாக அக்ராஸனாதிபதி வற்புறுத்தவும், இப்படியாக ஸபையின் உத்தேசத்தைப் பற்றியவர்கள் தங்களுக்குள் ஓர் தீர்மானம் செய்துகொண்டு, ஸபைகலைந்து தங்கள் தங்களிடம் போய்ச் சேருவார்கள்.

ஆனால் இந்த ஸபையின் உத்தேசமென்னவென்றும், அதினால் வரும் பலன்களென்னவென்றும், இதைப் படிப்பவர்களுக்கு நாம் சொல்லாமலே விளங்கும்.

ஆனால் நாம் இங்கு ஒன்று சொல்லவேண்டியதவசியமாகவிருக்கிறது. என்னவென்றால், இப்படி யெல்லாம் வம்பில் வீணாகப் பொழுதைப் போக்கினாலும் போக்கலாம். நல்ல விஷயத்தில் தலையிட்டுக் கொள்ளக்கூடாது. அது எப்படி முடியும்? அவர்களுக்கு நல்ல படிப்பு இருந்து அதனால் அவர்களுடைய புத்திவிசாலமாய், அதோடு ஸத்ஸங்க ஸகவாஸமும் இருந்து அற்பசந்தேகங்களும்தெளிந்து, அவர்களுடைய உள்ளத்தில் தயை, சாந்தம், பொறுமை இவைகள் தோன்றி நிலைக்க பிறகல்லவோ நல்ல விஷயங்களைச் செய்ய புறப்படுவார்கள். நிற்க, மேற்கூறியபடி அனாவசியமாகவும் வம்பிலும் வீணிலும் அவர்கள் தங்கள் ஸாவகாசத்தைப் போக்கினார்களானால், அதனால் அவர்களுக்கு பொய்யும் பொறாமையும், வம்பும் அதிகமாகி, அதன் பலனாகிய அஸூயையும், அகங்காரமும் கோபமும்முற்றி, அதனால் அவ்வழக்கமே தங்கள் குழந்தைகளுக்கும் படிந்து அவ்வீட்டிலுள்ள மற்ற வேலைக்காரர்களுக்கும் அதுவே வழக்கத்திற்கு வந்துவிடுகிறது. ஆகையினால் இவையெல்லாம் படிப்பில்லாமையினால் துர்ச்சனஸகவாஸமேற்பட்டமையினால் வரும் கெடுதல்களென்று நன்றாய் விளங்குகின்றன வல்லவா?

ஆகையினால் இந்தியமாதர்கள் இயல்பாகவே உத்தமகுணம் பொருந்தியவர்களா யிருந்தாலும் அதோடு கல்வியறிவும் கேள்வி நலமும் பெறாவிட்டால் தூண்டப்படாததீபம்போலவும், சாணையிடாத ரத்தினம் போலவும், கடைசலிடாதமுத்துப்போலவும் பிரகாசிக்காமல் ஒளியிழந்து மங்கலாகவே யிருக்க நேரிடும். ஆகையினால் "கல்வியினூங் கில்லை சிற்றுயிர்க்குற்ற துணை," என்று முன்னோர்கள் கூறியிருப்பதை நிலை நிறுத்தும்படியாக இந்திய மாதர்களின் அறிவாகிய மனோதீபத்தை கல்வியென்னும் தூண்டுகோலினால் தூண்டி பிரகாசிக்கச்செய்யும்படியாக ஏற்கனவே இப்போது கொஞ்சம் விருத்தியாய்க் கொண்டுவரும் பெண்கல்வி விஷயத்தில் இன்னமும் மேன்மேலும் விருத்தியாகும்படியாக யாவரும் முற்பட்டு ஒற்றுமையுடனும், ஊக்கத்துடனும் உழைக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப் போமாக.

அலமேலு அம்மாள்.

## பவணந்தியாரும் அவரியற்றிய நூல்களும்

## PAVANANDI AND HIS WORKS

பவணந்தியார் இயற்றிய நூல்கள் இவைதாம் என்று வரையறுத்து ஓர் உரை வரைகவென்று நண்பர் சிலர் எம்மை வேண்டிக் கோடலின், அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கிச் சுருக்கமான ஓர் உரை ஈண்டு எழுதுதற்கு ஒருப்பட்டேம். இவ்வுரை விரித்தெழுதப்படா திருப்பினும், இச்சுருக்க வுரைப் பொருள் கொண்டு நடுநிலை திறம்பாது உண்மை ஈதெனத் தெளிந்து கோடல் இன்னோரன்ன ஆராய்ச்சியில் விழைவுமிக்கு நிற்பார் எல்லார்க்கும் இன்றியமையாத கடமையா மென்று நம்புகின்றேம்.

பவணந்தியாரால் இயற்றப்பட்டனவாக இஞ்ஞான்றும் வழங்கிவரும் நூல்கள் நன்னூற் பெயர்கொண்ட எழுத்ததிகார சொல்லதிகாரங்களேயாம். இனி இவ்விரண்டு அதிகாரங்களின் வேறாகப் பொருள் யாப்பு அணி அதிகாரங்களும் அவர் இயற்றினரோ அல்லரோ என்பதே ஈண்டு ஆராயற்பாற்று. இங்ஙனம் ஓர் ஆராய்ச்சி தோற்றுவித்தற்கு ஏதுவாய் நின்றது அந் நன்னூலின் முகத்தே பெய்து வைக்கப்பட்டிருக்கும் சிறப்புப் பாயிரமேயாம். இப்பாயிர வுரைக்கண், ஐந்திலக்கணங்களையும் எல்லாரும் எளிதிலுணருமாறு ஒரு நூல் செய்து தருக வென்ன சீயகங்கன் என்னும் அரசன் வேண்டியதற் கிணங்கிப் பவணந்தி என்பார் 'நன்னூல்' என்னும் பெயரால் ஒரு நூல் வகுத்தனர் என்பது கூறப்பட்டது. இதன் கட்போந்த சீயகங்கன் வேண்டுகோளுரையில் ஐந்து இலக்கணங்களும் இயற்றித்தரல் வேண்டும் என்பது தெளிவுறுத்தப்பட்டாற் போல, இவ்வேண்டுகோளுக்கு இசைந்து அவர் நன்னூல் இயற்றினா ரென்பது தெளிவுறுத்துரைக்கப்பட்டிலது. நூல்வரலாறு தெரிவிக்குஞ் சிறப்புப் பாயிரவுரையாய் எழுந்த இதுதன்னால் நுவலப்படும் நன்னூலின்கட் பகுத்துரைக்கப்பட்ட பொருள்கள் இவ்விவையென்று விளங்க எடுத்துக்கூறுதலே முறையாம். அங்ஙனம், நூற்பொருள்கள் இவையென்பது காட்டுதற்கு உரிய இடத்தே அவற்றைக் காட்டாது வாளா நன்னூற் பெயரின் வகுத்தனன் என்று ஐயுறுதற்கு ஏதுவாய் நெகிழ்ந்துரை கூறிப்போதல் முறையன்றாம். அற்றன்று, முன்னர்ப் போந்த சீயகங்கன் வேண்டுகோளுரைக்கண் ஐந்திலக்கணங்களுஞ் செய்துதரல் வேண்டு மென்பது இனி தெடுத்துக் கூறப்பட்டமையின், பின்னர் அதற்கு ஒருப்பட்டு நன்னூல் இயற்றினா ரென்னும் உரைக்கண்ணும் அவ்வைந்தினையும் பெயர்த்து மெடுத்து மொழிதல் வேண்டா கூறலா மெனில்;— அறியாது கூறினாய், நுண்மாண் நுழை புலமுடைய கற்றோர் ஒருவரது கல்வி மாட்சியினை யுணர்ந்தோர், தாம் விரும்பிய நூல் எல்லாம் அவர் செய்துதரல் வேண்டு மென்றே அவரைப் பெரிதும் இரந்து கேட்பர்; இஃதியற்கை. மற்று அவர் கேட்டவாறே அக்கற்றோர் எவ்வெந்நூல்கள் இயற்றினா ரென்பதனை அறிதற்கே எவரும் விழைந்து முந்துவராகலின், அவர் இயற்றின இவ்விவை என்று கிளந்தெடுத்துக் கூறுதலே வரலாறு தெரிப்பார்க்கு இன்றியமையாத கடப்பாடாம். இவ்வியற்கைநிகழ்ச்சி முறையில் வைத்துச் சீயகங்கன் ஐந்திலக்கணங்களுஞ் செய்து தருக வென்று கேட்டதுண்மையாகலாம்; ஆனால், அவன் கேட்டதற்கேற்பப் பவணந்தியார் அவ்வைந்திலக்கணங்களுஞ் செய்து தந்தனரோ, அன்றி அவற்றுட் சில பல குறையவே செய்தனரோ, என்று உண்மையறிவு பெற விழைந்து ஆராய்வார்க்கு ஒரு தலையால் ஐயஞ் செல்லுமாகலின், அவ்வையம் அறுத்தற் பொருட்டு இவ்விவை செய்தார், அல்லது இவ்வைந்துஞ் செய்தார் எனக் கிளந்தெடுத்துக் கூறுதலே செயற்பாலதாம். அங்ஙனம் ஐந்துஞ் செய்தார் எனவாதல், எழுத்துஞ் சொல்லுமே செய்தார் எனவாதல் புலப்பட வகுத்துரையாது வறிதே 'நன்னூற் பெயரின் வகுத்தனன்' என மயங்கக் கூறிச் சொல்லல் பாயிர முறைப்பார்க்குச் சிறிதும் இயையாத நெறியாம் என்க. தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் உரைத்த ஆசிரியர் பனம்பாரனார் இங்ஙனம் மயங்கவுரை கூறாது, "எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச், செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு, முந்து நூல் கண்டு முறைப்பட வெண்ணிப், புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்" என்று அந்நூல்



அதிகரித்த பொருள் இவ்விவை என்பது தெற்றென விளங்க வைத்துரைத்தவாறுங் காண்க.

அற்றேல், நன்னூற் சிறப்புப் பாயிர முரைத்தார் நன்னூலின்கண் அதிகரிக்கப்பட்ட பொருள் இவ்விவை என்று கிளந்து கூறாது "நன்னூற் பெயரின் வகுத்தனன்" என்றுவாளா கூறியதுதான் என்னையெனிற், கூறுதும். நன்னூற்குப் பாயிரம் உரைத்த புலவர், நன்னூலை ஆக்கிய பவணந்தியாரோடு ஒருகாலத்திருந்தனராயின் அவர் இயற்றிய நூல்கள் இவ்விவைதாம் என்று நன்கு அறிந்து அவற்றைக் கிளந்து கூறியிருப்பர். மற்று அவர் அவ்வாசிரியர் காலத்திலன்றிப் பிற்காலத்தில் இருந்ததனாற்றன் அவர் செய்த நூல்கள் இவ்விவையென்று காணமாட்டாராய், அங்ஙனங் காணமாட்டாமையின் துணிவுரை கிளக்கலாது பொதுப்பட வைத்து 'நன்னூற் பெயரின் வகுத்தனன்' என்று கூறுவாராயினர். பவணந்தியார் இயற்றிய எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் பிற்காலத்தில் மிக்கு வழங்குதல் கண்டு, அதனைச் சிறப்பித்துப் பாயிரங் கூறுவான் புகுந்த பிற்றை ஞான்றைப் புலவர் ஒருவர், 'சீயகங்கன் ஐந்திலக்கணமுஞ் செய்து தருகவென வேண்டியதற்கு இசைந்து பவணந்தியார் நன்னூல் இயற்றினர்' என்று பலர் பரம்பரை வழக்காகப் பொதுப்பட வழங்கி வருவதனை ஓர்ந்து, அந்நூலில் எழுத்துஞ் சொல்லுமன்றிப் பொருள் யாப்பணி இலக்கணங்கள் இல்லாமையுங் கண்டு, ஐந்திலக்கணங் கேட்ட அரசன் கருத்துப்படி இவர் ஐந்தும் இயற்றினரோ, அன்றி எழுத்துஞ் சொல்லும் மாத்திரமே இயற்றினரோ என ஐயுற்று, அவ்வையத்தின் நீங்கித் தெளிதற்குத் தாம் வேறுவழி காணாமையின், தாம் கேட்டபடியே வைத்துத் துணிவுரை கிளவாது, தாங்கொண்ட ஐயம் நுனித்தறிவார்க்கு விளங்கும் வண்ணம் 'நன்னூற் பெயரின் வகுத்தனன்' என்று ஐயப் பொது மொழித் தொடரே கொண்டு அப்பாயிர வுரையினை இயற்றியிட்டார். இனி இவர் பவணந்தியாரோடு ஒரு காலத்திருந்தனராயின், இங்ஙனம் ஐயுறுதற்கு இடம் பெறாராய், அவர் நன்னூற் பெயரில் இவ்விவ் வதிகாரங்கள் ஆக்கினா ரென்று துணிவு தோன்றக் கூறியிருப்ப ரென்பதூஉங் கடைப்பிடிக்க.

எனவே, நன்னூலுக்குச் சிறப்புப்பாயிரம் நுவன்ற புலவர் நன்னூலை ஆக்கிய பவணந்தியார் காலத்திலன்றி அவர்க்குப் பிற்காலத்தே இருந்தன ரென்பதூம், அவர் தங்காலத்தே நன்னூலில் எழுத்துச்சொல்லையன்றிப் பிற இலக்கணங்களைக் காணாராயினும் சீயகங்கன் ஐந்து இலக்கணங்களையுஞ் செய்து தருகவென்று கேட்டதற் கிணங்கிப் பவணந்தியார் நன்னூலை இயற்றினர் என்னும் பரம்பரை வழக்கைக் கேட்டு ஒருகால் இவர் ஐந்திலக்கணங்களும் இயற்றினரோ என ஐயமுற்றன ரென்பதும், அங்ஙனம் ஐயமுற்றது பற்றியே நன்னூலில் இவ்விவ்விலக்கணங்களை நுதலுவதெனத் தோன்றக் கூறாது பொது வகையால் வைத்து ஐயவுரையே கூறினரென்பதும் இனிதுபெறக் கிடந்தன.

இங்ஙனம் நன்னூலுக்குச் சிறப்புப் பாயிரமாய் எழுந்தவுரையே நன்னூலுள் அதிகரிக்கப்பட்ட பொருள்களிவ்விவை என்று உரையாமல் ஐயுறவுகொண்டு நெகிழ்ந்தொழுகுமாயின், இஞ்ஞான்றுள்ள ஒருசிலர் பவணந்தியார் எழுத்துச்சொல்லே யன்றிப் பொருள் யாப்பு அணிகளும் இயற்றினர் எனத்தமக்குத் தோன்றியவாறே பற்றித் துணிந்துரைக்கு முரை வெறும் போலியுரை யாவதன்றி மற்றென்னை?

அற்றன்று, "ஐந்துந் தருகெனச் சீயகங்கன் வேண்ட நன்னூற் பெயரின்வகுத்தனன்" என்ற அப்பாயிரவுரையால் அவ்வைந்திலக்கணமும் இயற்றினரென்பதுதானே பெறப்படுமாலெனின், அறியாது கூறினாய், ஐந்துந்தருகென வேண்டினவனுக்கு அவன் வேண்டியவாறே நன்னூற்பெயரின் ஐந்தும் வகுத்தனன் என்று அப்பாயிரம் கிளந்து ஓதாமையின் அது பெறப்படுதல் யாண்டையதெனக்கூறி மறுக்க. பவணந்தியார் ஐந்திலக்கணமும் இயற்றினார் என்னுமேற்கோளை வலியுறுத்தற்குச் சீயகங்கன் வேண்டுகோளுரையை ஓரேதுவாகக்கூறுதல் சற்பிரதிபக்கம் என்னும் ஏதுப்போலியாய்த் தருக்க வழுவா மென்று உணர்க. என்னை? ஒருவர் வேண்டியபொருளெல்லாம் அவர் வேண்டியவாறே செய்து தருதற்குடன்பட்டார் அவற்றை கடைபோகச் செய்து முடிக்கமாட்டுவார் என்னும் நியதமான உடன்நிகழ்ச்சி நிலையாமையுள்ள இந்நில வுலகத்தின்

கண் யாண்டுமின்மையானும், ஒருவர் வேண்டியவாறே வேண்டப்பட்டார் முற்றுஞ்செய்து முடிக்கும் ஆற்றல் இல்லாராய்ப் போதலும், வேண்டியதற்கு மாறாயின விளைதலும் நாடோறும் அறியப்பட்ட நிகழ்ச்சியாகலானும் என்க. கிளந்தோதற்கு இன்றியமையா இடமாகிய இச்சிறப்புப்பாயிர வுரையுள் அங்ஙனம் ஓதாமையே, அப்பாயிரம் இயற்றினோர் நூலாசிரியன் காலத்தவர் அல்லரென்பதையும், அதனால் அவர் துணிந்துரை கூறற்கு இசைந்திலரென்பதையும் நிறுவுஞ் சான்றாமென முன்னரே விளக்கிப் போந்தாம்.

இனி, நன்னூலுக்கு அகலவுரைவகுத்த சங்கர நமச்சிவாயப் புலவரும் துணிபு தோன்றக் கூறாது 'போலும்' என்னும் ஐயச்சொற்பெய்து "இந்நூலுட் கூறிய பொருள் யாப்பணிகள் என்னு மூன்றதிகாரங்களும் அக்காலத்துள்ளனபோலும்" என்று ஐயுற்றுக்கூறுதலின், இவ்வையவுரைகொண்டு பவணந்தியார் ஏனை மூன்றதிகாரங்களும் இயற்றினோர் எனத்துணிபுரை கூற்றுவார் கூற்று சங்கர நமச்சிவாயர் கூற்றினும் மிக்கதுபோலும்!

இனிப் பவணந்தியார் தாம் எடுத்த எழுத்திகார சொல்லதிகாரங்களை முடித்து, அவற்றின்மேல் வேறு மூன்றிலக்கணங்களும் எழுதுங் கருத்தில்லாமையால், தாம் அவ்விரண்டதிகாரங்களால் முடித்ததமது நூல்முழுவதற்கும் முடிபுரைப் புறனடைச் சூத்திரமாகவைத்த "பழையனகழிதலும்" என்பதனை நன்னூலுக்குரை எழுதின சமணவுரைகாரர் பவணந்தியார் ஐந்ததிகாரத்திற்கும் சிங்கநோக்காக இச்சூத்திரத்தை நிறுத்தினர் எனக்கூறியது சிறிதுங்கொள்ளற்பாலதன்றாம். என்னை? ஆற்றொழுக்காகவும், சிங்கநோக்காகவும், தவளைப்பாய்த்தாகவும், பருந்தின் வீழ்சியாகவும் நிற்கும் நால்வகைச் சூத்திரநிலை ஓர் இயலுள்ளும், ஓரதிகாரத்துள்ளும் வருவனவே யல்லாமல், ஓரதிகாரத்திற்கும் பிறிதோர் அதிகாரத்திற்கும் இடையில் ஒரு சிறிதும் வருவன அல்லவாகலினால் என்க. சீயகங்கன் ஐந்திலக்கணமுஞ் செய்து தருகவென்றுகேட்டதே பற்றிப் பவணந்தியார் ஐந்திலக்கணமுஞ் செய்திருப்பார் என்று பிழைபட நம்பிவிட்ட அச்சமணவுரைகாரர், தாங்கொண்ட பிழையுணர்ச்சிக்கேற்ப நூலின் முடிபுரையாய் நின்ற "பழையனகழிதலும்" என்னும் அச்சூத்திரத்தைப் பொருந்துவான் புகுந்து இடர்ப்பட்டுச் சூத்திரநிலைகளுக்குரிய இலக்கணவரம்பையுங் கடந்து, அதனை ஐந்ததிகாரங்களுக்குஞ் சிங்கநோக்காய் நின்ற புறனடைச் சூத்திரமென்றுரை கூறி இழுக்கினர். ஆகவே, கருத்த முறையறியாது பிழைபட மயங்கிய இச்சமண உரையைப் பற்றுக்கோடாகப்பற்றி எழுந்தவர் அது முறிபட்டு வீழ்ந்து தாமும் இழுக்குறுவரென்றுணர்க.

இனிப் பெரிய தனிமொழித் தனியனுரைகாரரும் சீயகங்கன் ஐந்திலக்கணங்களுஞ்செய்து தருக என்ற வுரையை ஓர் ஏதுவாக்கொண்டு பவணந்தியார் ஐந்துஞ் செய்திருப்பரெனப் பிழைபட நம்பிக் கூறிய பின்னோராதலின், அவருரையுங் கொள்ளற்பாற்றன்றாதல் சிறிதறிவுடையார்க்கும் விளங்கக் கிடந்தது.

பவணந்தியார் எழுத்துச்சொல்லே யன்றிப் பொருள் யாப்பு அணிகளும் இயற்றினரென இவ்வாறெல்லாம் பிழைபட வுணர்ந்த பின்னவர் சிலர் தருக்கத்திற்கு இசையாத வெறும் போலிநம்பிக்கையேபற்றி அங்ஙனங் கூறினரல்லால், ஆகாயத் தாமரைபோல் இலவாகிய அம்மூன்றதிகாரங்களிலிருந்து ஒரு சூத்திரமேனும் எடுத்துக்காட்டிற்றிலராதலின், அவருரைகண்டு உண்மையறிவுடையோர் சிறிதும் மயங்கார் என்க.

அற்றேல் அஃதாக, சீயகங்கன் ஐந்திலக்கணங்களுஞ் செய்து தருக வென்ற வேண்டுகோளுக்கு இயைந்து நூல் செய்வான் புக்க பவணந்தியார் எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் மாத்திரமே செய்து ஏனை மூன்று அதிகாரங்களுஞ் செய்யாது விட்டமைதான் என்னையெனின்;—அது சிறிது விளங்கக் காட்டுதும். முற்காலத்தவர்க்குப் பேரிலக்கணமாய் விளங்கியது தொல்காப்பியம் ஒன்றுமேயாம். இந்நூல் ஒன்றே ஐந்திலக்கணங்களையும் முற்ற வெடுத்து முடியக்கூறும் முழுமுதல் இலக்கணமாகும். சொற்பொருட்டிட்ப நுட்பங்கள் செறிந்து, எடுக்குந்தோறுங் குறையாத பொருளாழமுடைத்தாய்க், கடல்போல் விரிந்து செல்லும் விழுப்பமும் மிக்கது இந்நூல். பிற்காலத்தவர் அறிவு ஆற்றல் குறைந்து இவ்வரிய பெரிய நூலைத் துவக்கிப் பயிலுதற்கு வலாதாகவே, அந்நூலை மிகவருந்திக் கற்றுத் தேறிய சான்றோர் சிலர் அந்நூலினுட்பொருள்களைத் தனித்தனியே எடுத்துப் பின்னவர் எளிதிலுணருமாறு வேறுவேறு சிற்றிலக்கணங்கள் செய்வாராயினர். இங்ஙனமே அந்நூலின்கட் சொல்லப்பட்ட அகப்பொருளிலக்கணமானது, வேறு தனியாக எடுத்து 'இறையனார் அகப்பொருள்' என்னும் பெயராற் சுருக்கமாக இயற்றப்பட்டது; அதன் புறப்பொருளிலக்கணமானது 'புறப்பொருள் வெண்பாமாலை'யிற் சுருக்கமாக எடுத்து விளக்கப்பட்டது; அதன் யாப்பிலக்கணமானது "யாப்பருங்கலம்" "யாப்பருங்கலக்காரிகை" முதலிய சிற்றிலக்கணங்களில் தெளிவாய்க் கூறப்பட்டது; அதன் அணியிலக்கணமானது தண்டியலங்காரத்'தில் விரித்து விளக்கப்பட்டது. இவ்வாறு அதன்கட்கூறப்பட்ட பொருள்யாப்பு அணிகளை இனிது விளக்குஞ் சிற்றிலக்கணங்கள் பிற்காலத்துச் சான்றோராற் செய்யப்பட்டனவேனும், அதனுளெஞ்சி நின்ற எழுத்திலக்கண சொல்லிலக்கணங்களைச் சுருக்கிச் செவ்வனேவிளக்கும் நூல்கள் அவரால் எழுதப்பட்டில. இது கண்ட பவணந்தியார் தொல்காப்பியத்தின்கட் போந்த எழுத்துச் சொல்லை மாத்திரம் வேறெடுத்துக்கொண்டு, அவற்றைப் பயில்வார் எளிதிலுணரும்படி விளக்கமாக நன்னூல் இயற்றி, ஏனைப்பொருள் யாப்பு அணிகளை விளக்குதற்கு 'இறையனாரகப்பொருள்' 'யாப்பருங்கலம்' முதலான ஏனைச் சிறந்த நூல்கள் இருத்தலின் தாமும் அவற்றிற்கு நூல்கள் எழுதுதல் மிகையாமென்பதுணர்ந்து அவற்றை இயற்றாதுவிட்டனர் என்பதே தேற்றமாம் என்க.

ஸ்வாமி வேதாசலம்.



**தென் இந்தியாவில் பெய்த மழையின் அளவு.—** ஏப்ரல் மாதம் 1-தேதி முதல் மேமாதம் 1-ம்உ வரை

| | | |
|---|---|---|
| சென்னை | ... | 2·05 |
| கடலூர் | ... | 1·54 |
| நாகப்பட்டணம் | ... | 0·18 |
| கொடைக்கானல் | ... | 3·46 |
| உதகமண்டலம் | ... | 1·79 |
| வேலூர் | ... | 0·65 |
| சேலம் | ... | 3·01 |
| திருச்சினாப்பள்ளி | ... | 1·50 |
| மதுரை | ... | 2·42 |
| திருநெல்வேலி | ... | 0·23 |

# வைதிக மத ஞானம்—I

## KNOWLEDGE OF VEDIC RELIGION

இக்காலத்தில் நமது மதவிஷயத்தில் அநேகவித ஸந்தேஹங்கள் ஏற்பட்டுள்ளன. படித்துத் தேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்கு நமது மதம் பொதுவானது, உலகத்திலுள்ள மதங்களை எல்லாம் அடக்கியுள்ளது, என்ற மேல்நோக்கான அபிப்ராயம்தான் உண்டு. உள்புகுந்து விசாரிக்கப்போனால் நமது மதவிஷயங்களில் தொட்ட விட மெல்லாம் ஸந்தேஹமாகத் தானிருக்கும் அவர்களுக்கு. உதாரணமாக கர்ம ஒழுங்கு, மரணத்தின் பின் நடைபெறுவன இவைகளைப்பற்றி அவர்களுக்கு உள்ள நமது மத விஷய ஞானம் வெறும் அஞ்ஞானமாகத்தான் முடிந்துவிடும். கர்மாவை மீறமுடியாது, புருஷ ப்ரயத்னத்தை விடாது செய்யவேண்டும், ஈசன்வசம்தான் எல்லாம் என்ற சாஸ்திரவாக்கியங்கள் அவர்கள் மனதைக் குழப்பித் திண்டாடவைத்துள்ளன. கர்மவிஷயமான சில சாஸ்திர பாகங்கள், ஸாதாரண அறிவீனர்கெட்டு, ஸுக ஸமூக வாழ்க்கைக்கு விரோதிகளாகி விடலாகாதென்று பெரியோர்செய்த கட்டுப்பாடே ஒழிய, நம்போன்றவர்கள் அவைகளை அனுஷ்டிக்க வேண்டியதில்லை என்பது அவர்கள் ரஹஸ்ய தத்துவ அபிப்ராயங்களில் முதன்மையானது. மரணத்தின் பின் நடைபெறுவன விஷயத்திலோ அவர்கள் அஞ்ஞானத்திற்கு அளவே இல்லை. சாஸ்திரங்களில் தொட்டவிடங்களில் எல்லாம் கூறாமல் விடாத ஸ்வர்க்க நரகங்கள் லோகாந்தரங்கள் எல்லாம் வெறும் பொய், ஸாதாரண ஜனங்கள் பயந்து நல்வழி நடந்து உலக வாழ்க்கையை ஸுகமாக நடைபெறும்படி செய்வதற்கே; ஆதலால் இறந்ததும்மறுபடி இவ்வுலகில் பிறப்புத்தான் உண்டு; இப்படி பிறந்திறந்து ஜீவன் முக்தி வரும்வரையில் அதிகக் கெட்டவழிகளில் நாம் போகாமலிருப்பதற்காக உண்டாக்கப்பட்டவைகள் லோகாந்தரவிஷயங்கள், ஜீவன் முக்தராய்விட்டால் எப்படி இருப்பினும் இவைகளில்லவே இல்லை என்பது அவர்களது இரண்டாவது தத்துவ அபிப்பிராயம். இவைகள் நமது மதவிஷயமே அல்லஎன்று, தைர்யமாகக்கூறிவிடலாம். கர்மம், லோகாந்தரம், இக்கதியை அடைந்துவிட, அரசமரத்தைப்பிடித்த சனியன் பிள்ளையாரையும்

பிடித்ததாம் என்றபடி, இவைகளால் நமது கர்மாக்களுக்கு ஏற்ப நடத்திவரும் ஈச்வரனுக்கும் இதேகதிதான் வந்துவிட்டது. நமது உத்யோகஸ்தருக்கு ஜீவன், ஜீவன்முக்தி, பாவஸ்து இவைகளைத் தவிர மற்றவைகள் எல்லாம் கட்டுப்பாடே என்பது பொது அபிப்பிராயம். ஈசன் வெறும் சாஸ்திரக்கட்டுப்பாடு. ஜீவன் முக்தியானால் ஈசன்: ஈசன் பந்தப்பட்டதுபோல்காணப்பட்டால் ஜீவன், இப்படி இருக்க ஜீவன்ஈசன் பாவஸ்து, என்று முப்பொருள் எதற்கு என்பது அவர்கள் கேள்வி. இப்படியுள்ள நிலைக்காத விபரீதஞானத்தால் கர்மாவும் பக்தியும் இக்காலத்தில் குறைந்துபோய்விட வாசாஞானம் மாத்திரம் பலத்துவிட்டது. நுனிக்கிளையிலிருந்து அடிக்கிளையை தத்காலத்திய நாகரீக ஹிந்து வித்வான்கள் ஓயாது வெட்டுகின்றனர். ஈசன் இவ்வாறு ஒதுக்கப்படவே அவர் வாக்காகிய வேதாதி சாஸ்திரங்களில் அப்பிராமண்யபுத்தியும் அதிகரித்துவிட்டது உத்யோகஸ்தருள். வேதம் எப்படி அனாதி, அபௌருஷேயம் பிராமணநூல் என்பதே விளங்காமல்போய்விட்டது. ஆகவே நமது மதவிஷய ஞானஆதாரமான கர்மா, லோகாந்தரம், ஈச்வரன், வேதாதிசாஸ்திர ஸ்வரூபங்கள் இவைகள் விஷய ஞானம் நமக்கு இல்லவே இல்லை என்று கூறலாம்.

ஸமஸ்கிருத பண்டிதர்கள் கதியும் இதுதான். அவர்கள் நமது சாஸ்திர ரஹஸ்யங்களை குரு முகமாக உணராது உத்யோகஸ்தர்களுக்குத் தமது ஸாதாரண ஸமஸ்கிருத ஞானத்தோடு பாடம் சொல்லவருவதாலும், உத்யோகஸ்தருக் கிருக்கும் ஆங்கிலப் பயிற்சியால்ஏற்பட்டிருக்கும் யுக்திவாதத் தன்மையும் விமர்சைசக்தியும் அதிகமாக இல்லாததாலும் தமது புத்திக்கு எட்டியவரையில் தமது மதவிஷய உணர்ச்சிகளை அவர்களுக்குக் கூறி அவரது அபிப்ராயங்களுடன் கலந்து அவைகளை திடப்படுத்தி விடுகின்றனர். உத்யோகஸ்தர்களிடம் முற்கூறிய விஷய ஞானங்கள் குறையத் தகுந்த காரணம் தத்கால நாகரீகயுக்தி ஸம்பந்தம் என்பதுபோல, அப்படிப்பட்ட தகுந்த காரணம் பண்டிதர்களிடமில்லையே என்னலாம். தகுந்த காரணமில்லாவிடில் சிறந்தநமது மதத்திற்கு இக்கதி வருமா? நமது மதவிஷயங்களை நன்குவிளக்கி நம்மை நல்வழிப்படுத்தவந்த ஆறு சாஸ்திரங்கள் என்று நான்கு வேதங்களோடுசேர்த்து கௌரவித்துக் கூறப்படும் ஷட்தர்சனப்பயிற்சிக்குறைவே இந்தக்காரணம். இதில்ஸாங்க்யம் யோகம் என்ற தர்சனங்களில் லோகாந்தரமும் கர்மாவும், ஈச்வரதத்துவமும் நன்குவிளக்கப்பட்டுள்ளன. மற்றைய தர்சனங்களில் வேதங்களின் தன்மை முதலியன விளக்கப்பட்டுள்ளன. இவைகளை நன்குஉணர்ந்தபின் வேதமுடிவை விளக்கவரும் பிரஹ்மஸூத்ரம் அதாவது வேதாந்த தர்சனம் குரு மூலமாகப் படித்து நமது பண்டிதர்கள் தேறி இருந்தால் தத்காலத்திய நிலைமை நமது மதவிஷயஞானத்திற்கு உண்டாயிருக்கவே மாட்டாது.

இந்தக் குறைவின் நிஜஸ்வரூபத்தைக் கண்ட சில உத்யோகஸ்தர்களும் பண்டிதர்களும் தம் முயற்சியால், நேபாளம் ஜனகபூரிலிருந்து சென்னைவந்துசிலநாளிருந்து தேஹம் நீங்கியவரானமஹான் ஸஹஜானந்த உபாத்தியாயர் சிஷ்யரான மருவூர். கே. கணேச சாஸ்திரிகளை நமது நான்கு வேதம் ஆறுதர்சனம் இவைகளில் காட்டப்பட்டுள்ள நமது மததத்துவம் இன்னது என்பதை வெளியிடத்தூண்ட, பலர்க்குபகாரமாக வெளிவந்தது வேதசாஸ்திர தத்வம் என்றபுத்தகம். இதற்கு முன்னரே மனதைப்பற்றி நமதுசாஸ்திரங் கூறியுள்ள நுட்பங்களை மனஸ்தத்வம் என்ற புத்தகத்தின் மூலமாக இவர் வெளியிட்டிருந்தார். * இந்த வேதசாஸ்திர தத்துவத்தில் நமது மதக் கோட்பாடுகள் இன்னவை என்பது நன்றாக விளங்கிவிடும். இவைகளை முன்னர் உணராது நமது மதத்தை ஆராயப்புகுந்த உத்யோகஸ்தர்களுக்கும் பண்டிதர்களுக்கும் இவை சாஸ்திரங்களின் அனாவச்யமாக வீண் விஸ்தாரம் என்று தோற்றலாம். இது அவர்களுடைய குற்றமேயல்ல. சில யுக்திகள் காட்டிமுந்திக் கொண்டவர்கள் கக்ஷி ஜயிக்கும் இக்காலமே இதற்குக் காரணம். முன்னர் இங்கு காட்டப்பட்டுள்ள விஷயங்கள் உணரப்பட்டிருந்துபின்னர் சாஸ்திர ஆராய்ச்சி நடைபெற்றிருக்குமாயின் நமது உத்யோகஸ்தர்களும் பண்டிதர்களும் இப்படி மோசம் போயிருக்க மாட்டார்கள். இப்புத்தகத்தில் பலருக்கு கர்மாவைப் பற்றியுள்ள பாகம் பொருத்தமுடையதாகப் படலாம், மற்றைய லோகாந்தரம், ஈசன், வேதம் இவைகள் கட்டுப்பாடென்றே தோற்றலாம். இக் குதர்க்கத்திற்கு அவர்கள் கல்வி ஒழுங்கேதான் காரணம், அவர்கள் மேல் யாதொரு குற்றமும் இல்லை; காலகதியில்தான் இவ்வபிப்ராயம் அவர்களைவிட்டு அகன்று அவர்கள் கடைத்தேறவேண்டும்.

இந்தப்புத்தகம் தற்காலத்தில் மாறான அபிப்ராயத் துடனிருப்பவர்களை மாற்ற உபயோகப்படுவதோடுங் கூட, குரு உபதேசமின்றி வேதாந்ததர்சனம் வாசிக்கப் புகுவோரைத் தம் முன்னவர்கள் எளிதில் விழுந்த குழியில் விழாதவண்ணம் காக்கும் குணமுடையது. நமது சாஸ்திர விஷயங்களை ஆராயப்புகுமுன் வேதசாஸ்திர தத்வம், மனஸ்தத்வம் ஆகிய இவ்விரு நூல்களையும் வாசித்துமனதை திடப்படுத்திக்கொண்டு ஒவ்வொருவரும் தொடங்குவார்களாகில், அவர்களுக்கு ஷட்தர்சன ஞான பலனும், குருமுகப்பயிற்சின் பலனும் ஒருங்கே ஸித்திக்கும். நமது மதவிஷயஞானம் மாறாத் தெளிவுடையதாகவிருந்து, கர்மா, பக்தி, யோகம் இவைகள் உள்ளபடி அமைந்துவிட, அவர்களுக்கு எளிதில் ஞான வழி நடந்து ஸாக்ஷாத்காரம் அடையும் திறன் ஏற்பட்டுவிடும் என்பதற்கு ஸந்தேஹமில்லை

வேதசாஸ்திர தத்துவம் —விலை ரூ $1\frac{1}{2}$; மனஸ்தத்துவம் $\frac{1}{4}$ ரூ. திருவல்லிக்கேணி 22 நெ. ரதவீதியிலிருக்கும் ம-ா-ா-ஸ்ரீ, மருவூர் கணேச சாஸ்திரிகளிடமிருந்து வி· பி. மூலமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**இந்தியாவுக்கு கடன்கொடுப்போரின்சட்டம்:—** இந்தியாவிலே அநேக ஜனங்கள் சௌகார்களிடம் மிகுந்த வட்டிக்குக் கடன் வாங்கியே இளைத்துப் போவது மன்றி, தங்கள் சொத்துக்களை விற்றுக் கடன்களை யடைத்துவிட்டுத் திண்டாடுகிறார்களென்பது தெரிந்த விஷயம். அதுபற்றி கல்கட்டாவிலுள்ள சமூகநிலை ஆராய்ச்சிச் சங்கத்தில் (Social Study Society) வான்டிமர்கல் என்ற பாதிரியொருவர் இந்தியாவில் கடன் கொடுப்போரின் சட்டம் ஏற்படுத்துவதைப்பற்றி பொது ஜன அபிப்பிராயத்தை யறியவேண்டுமென்று தாம் விரும்புவதாகச் சொன்னதை யாவரும் அங்கீகரிப்பார்கள். கடன் கொடுக்கும் சௌகார்கள் இவ்வளவு வட்டிக்குமேல் கேட்கக்கூடாதென்று வரையறுத்துவிடும் கடன் கொடுப்போர் சட்டமொன்று ஏற்படுவதுபொதுஜன சம்மதமாகவே யிருக்கும்.



# தஞ்சாவூர் ஜில்லா

## அத்தியாயம் 2

### தேச சரித்திரம்

தஞ்சாவூர் ஜில்லாவின் பழைய சரித்திரத்தைக் கூறவேண்டுமானால் அது பெரும்பாலும் சோழ வம்ச சரித்திரத்தைக் கூறுவதாக வேமுடியும்.

*பூர்வ சரித்திரம் பூர்வ குடிகள்.*

சோழர்கள் குடியேறுவதற்குமுன் இப்பிரதேசத்தில், 'நாகர்' என்ற ஒரு முரட்டுஜாதியார் வாழ்ந்துவந்தனரென்று பழைய தமிழ்க் காவியங்களினால் தெரிகின்றது. வாசுகிமுதலிய குல நாகங்களின் பாம்பரையிற் பிறந்து நாக இலச்சினையுடையராயிருத்தலின் இவர் இப்பெயர் பெற்றாரென்பர். இப்போது தென்னிந்தியாவில் வாழும் கள்ளர் மறவர் முதலிய வீரம் படைத்த ஜாதியார் மேற்கூறிய நாகர்களின் வழித்தோன்றலாவார். மலையாள நாட்டில் உள்ள 'நாயர்' ஜாதியாரும் இந்த நாகர் பரம்பரையாரென்று விற்பன்னர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். நாகரீகமற்றவர்களாயும் இழிவான தொழில்களைச் செய்து கொண்டிருந்தவர்களாயுமுள்ள நாகர்களை நல்வழிப்படுத்தியவர் சோழர்களேயாவர்.

*சோழர்கள் வரலாறு.*

சோழர்களோ வெனில், கீழ்வங்காளப் பிரதேசத்திலிருந்து கடல் மார்க்கமாய் தென்னிந்தியா, பர்மா, சிங்களம் முதலிய நாடுகளில் பரவிய ஓர்வகைச் சாதியாராவர். இவர்கள் ஆரியர்கள் அல்லர்.

சோழமண்டலம் வெகு புராதன காலந் தொடங்கி ஒரு தனி ராஜ்யமாகவே விளங்கி வந்ததென்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. கிறிஸ்தவாப்தத்துக்கு முந்திய 260 ம் ஆண்டில் பௌத்த சக்கரவர்த்தியாகிய அசோகவர்த்தனர் ஆக்ஞைப்படிசெதுக்கப்பட்ட ஒரு கற்றூணில், புத்ததருமம் பரவியிருப்பதாகக் கூறப்பட்டுள்ள பிரதேசங்களில் சோழநாடும், தாமிரவருணி தீரம் வரையிலுள்ள பாண்டிய நாடும் அடங்கினவையாகக் கண்டிருக்கிறது. ஆதலால் அசோகர் காலத்துக்குப் பலவாண்டுகள் முன்னமேயே சோழவம்சம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவேண்டு மென்று நாம் நிச்சயிக்கலாம். ஆனால், அசோக வர்த்தனருடைய வம்சத்தவராகிய மௌர்யராகட்டும், அவர்களுக்குப் பின் வந்த ஆந்திரர்களாகட்டும், சோழராஜ்யத்தை ஜயித்ததாகத் தெரியவில்லை.

கிரேக்க பூகோள வாசிரியர்களுக்கும் சோழமண்டலம் அறிமுகமாக விருந்தது. கி. பி. 246-ம் ஆண்டில் எழுதப்பட்ட "பெரிப்ளஸ் மேரிஸ் இரித்ரீ" என்ற நூலிலும் கி. பி. 130ல் டாலமியாசிரியர் எழுதிய கிரந்தத்திலும் சோழவம்ச விபரங்கள் காணப்படுகின்றன. சோழ நாட்டின் தலை நகர் உறையூராக விருந்ததென்று டாலமி கூறுகிறார். பழைய சிங்கள வம்ச

சரித்தாலும் சோழ நாட்டின் பழைய விஷயங்கள் கொஞ்சம் கொஞ்சம் தெரிகின்றன.

**சோழநாடு.** பூர்வத்தில் சோழநாடு, இப்போதுள்ள தஞ்சாவூர் திருச்சிநாப்பள்ளி ஆகிய இரண்டு ஜில்லாக்கள் அடங்கிய பிரதேசமாக விருந்தது. வடக்கே பெண்ணையாறும் தெற்கே வெள்ளாறும் கிழக்கே கடலும் மேற்கே கோட்டைக்கரை என்ற இடமும் இதற்கு எல்லைகளாம். தலை நகரம் ஒரேயிடத்தில் இருந்ததில்லை. காவிரிப்பட்டினம், உறையூர், தஞ்சாவூர், கும்பகோணம் ஆகிய விடங்கள் சில சில காலம் தலை நகரங்களாக விருந்தன. அதற்கு ஆதாரமான சின்னங்கள் பல இன்னும் ஆங்காங்கு காணப்படுகின்றன.

அக்காலத்தில் தென்னிந்தியாவில் சேர சோழ பாண்டியர்களே மூன்று முடியுடை மன்னர்களாக விளங்கினர். அவர்களுடைய சண்டை சச்சரவுகள், நாகரீகம் முதலிய விவரங்கள் பழைய தமிழ்க் காவியங்கள் மூலமாக நன்கு தெரிகின்றன.

**கரிகால் சோழன்.** சோழவரசர்களில் கரிகால் சோழனுக்கு முற்பட்டோரின் சரித்திரம் தெரியவில்லை. கரிகால் சோழன் கி.பி. முதல் நூற்றூண்டின் பிற்பாதியில் இருந்தான். நெருப்பால்கரிந்த காலை யுடையவனுதலால் இவன் இப்பேர் பெற்றான். இவன் பிறப்பதற்கு முன்னமேயே இவன்பிதா (உருவப்பஃறே ளஞ்சேட்சென்னி) இறந்துபோய்விட்டபடியால், ராஜ்யத்தைப் பெறுவதில் இவனுக்குச் சில இடையூறுகள் நேர்ந்தன. கரிகாலன் வெகுதீரம்படைத்த போர்வீரன். சோணாட்டிலுள்ள "வெண்ணி" யென்னு * மூரில் சேர பாண்டியர்களை ஒரு காலத்துப்பொருது வென்றான். இந்தப் போரில் தோல்வியுற்றதற்கு வெட்கிய சேரன், உயிர் வாழப்பொருனாய்ப் பட்டினி கிடந்து பிராணனை விட்டுவிட்டான். கரிகால் சோழன் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அரசாட்சி செய்தான். ஒரு காலத்து இமையமலை வரையில் சென்று இடையிலுள்ள அரசர்களையும் வென்றனனும், நாகர்களையும் குறும்பர்களையும் அடக்கி, காவிரி நதியின் இருமருங்கும் உயர்ந்த கரைகள் போட்டு, பாசன வாய்க்கால்கள் வெட்டி, நாட்டைப் பண்படுத்தி, கரிகாலன் தன் புகழை நிலைநாட்டிப் போனான்.

**கரிகாலன் சந்ததியார்.** கரிகாலனுக்குப் பின், அவன் மகன் நலங்கிள்ளி அரசனானன். அவன் நற்குணமும் சாமர்த்தியமும் உடையனாயினும் பேராசையுள்ளவன். அவன் காலமெல்லாம் சேரபாண்டியரோடு போர் புரிவதிலேயே கழிந்தது. அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தவன் அவன் மகன் கிள்ளிவலவன் என்பவன். கிள்ளிவலவன்ராஜ்யத்தைப் பெறும் முன்னல் தாயாதிக்காரர் ஒன்பதின்மரோடு பொருது ஜயம் பெறவேண்டியிருந்தது. இவனும் சேர பாண்டியரோடு சண்டையிட்டான். ஒரு காலத்து அவர்களுடைய தலை நகர்கள் வரையில் படையுடன் சென்றதாகவும் தெரிகின்றது. கிள்ளிவளவனுடைய முதன் மனைவி சிங்கள ராஜவம்சத்து நங்கையாம்.

கிள்ளி வளவனுக்குப்பின் அவனுடைய தம்பி பெரு நற்கிள்ளி சிங்காதன மேறினன், இவன் கி. பி 150ம் வருஷம் வரையில் ஆண்டபோதிலும் இவனைப்பற்றிய விபரங்கள் தெரியவில்லை. இவன் ஒரு ராஜசூயயாகம் செய்ததாகவும் அதற்குச் சேரபாண்டியர்களை அழைத்திருந்ததாகவும் தெரிகின்றது.

கோச்செங்கணான் என்றும், கோக்கிள்ளியென்றும் இரண்டு சோழவரசர்களுடைய பெயர்கள் சிலாசாஸனங்களில் காணப்படுகின்றன. முன்னவன் பற்பல சிவாலயங்களையும் விஷ்ணுவாலயங்களையும் கட்டியவன். பின்னவன் ஒரு நாக கன்னிகையை மணந்து அவள் வயிற்றில் பிறந்த தொண்டைமான் இளந்திரையன் என்பவனுக்குத் தொண்டைமண்டலத்தைக் கொடுத்ததாக ஒரு கதையுண்டு. இக்கதையில் உண்மையிருப்பதாகத் தெரியவில்லை, பல்லவர்களுக்குச் சோழவம்ச பாந்தவ்யம் ஏற்படுவதற்காக எழுந்த கட்டுக்கதை போலும்!

உறையூரைத் தலைநகராக்கிக் கொண்டு அரசாண்ட பலசோழவரசர்களுடைய பெயர்கள் பழைய நூல்களில் காணப்படுகின்றன. என்றாலும் சிலாசாஸனங்கள் மூலமாயாவது சரித்திர மூலமாயாவது அவர்களைப் பற்றிய விவரங்கள் தெரியவில்லை.

**பல்லவர்கள்.** அப்பால் அநேக வருஷங்கள் வரையில் சோழவம்ச சரிதம் ஒன்றுமே தெரிவதற்கில்லாமல் அந்தகாரத்தில் மடங்கிக் கிடக்கின்றது. சரித்திர பூர்வமான விவரங்கள் கிடைக்கும் காலத்தில் சோழர்கள் பல்லவர்களுக்கடங்கிய மன்னர்களாகிவிட்டதாகக் காணுகின்றனர், பல்லவர்கள், கி.பி. இரண்டாம் நூற்றூண்டில் வடமேற்குப் பிரதேசத்திலிருந்து மத்திய இந்தியாவுக்குவந்து, அடுத்த நூற்றூண்டின் முற்பாதியிலேயே ஆந்திரர்களை ஜயித்து அவர்களுடைய நாடுகளையும் மற்றையோர் நாடுகளையும் கைப்பற்றிக்கொண்டு ஆண்டனர் என்று தோன்றுகிறது. காஞ்சீபுரத்தைத் தலைநகராக்கிக்கொண்டு பல்லவர்கள்ராஜ்யபாரம் புரிந்ததாகமட்டும் கூறலாமேயன்றி அவர்களுக்கும் தென்னிந்தியாவிலுள்ள பழைய வரசர்களுக்கு மிருந்த சம்பந்தத்தைப் பற்றி ஒன்றும் கூறுவதற்கில்லை. பல்லவ அரசர்களாகிய சிம்மவிஷ்ணு, நரசிம்மவர்மன் I, மகேந்திரவர்மன் I, முதலியோர் தாங்கள் சோழவரசர்களை ஜயித்தவர்களென்று பிருது கூறிக்கொண்டிருக்கின்றனர். இதில் எவ்வளவு தூரம் உண்மை யிருக்குமென்று நிச்சயிக்கக் கூடவில்லை. என்றாலும் கி. பி. 6-7-வது நூற்றூண்டுகளிலெல்லாம் சோழராஜ்யம் இன்னும் பிரபல ராஜ்யமாகவே இருந்த தென்பதற்குச் சான்றுகள் பலவுள்ளன. சோழகன்னிகை யொருத்தி, பாண்டியவரசனை மணந்து திருஞான சம்பந்த சுவாமியின் உதவியால், தன்னாயகனை ஜெயினமார்க்கத்திலிருந்து சைவ சமயத்துக்குக் கொண்டுவந்ததாக வுள்ள 'பெரிய புராணச்' செய்தியும், சோழராஜ்யம் ஒரு தனி ராஜ்யமாக விருந்ததை நேரில் கண்டு போயினும், கேட்டதாக எழுதிவைத்திருக்கும் சீன யாத்திரிகரான ஹியூன் த்ஸியாங் என்பவருடைய விவரமும் இவ் விஷயத்தை வற்புறுத்தும். பல்லவர்கள் அடிக்கடி சோழவரசர்களை ஜயித்ததாகச் சொல்லிக் கொள்வதிலிருந்தே சோழர்கள் சுயேச்சையை இழந்து போகவில்லை யென்று துணியலாம். ஆகவே சோழர்களும் பாண்டியர்களும் பேருக்கு மட்டும் பல்லவர்களுக்கு அடங்கியவராக விருந்தனரே யன்றி உண்மையில் அவருக்குக் கீழ்ப்பட்ட குறு நிலமன்னர்களானதில்லை. மேலும், அக்காலத்தில் சளுக்கியர்களிடமிருந்து பல்லவர்களுக்குஹிம்ஸைகள் பலவேற்பட்டபடியால், பின்னவர்கள் ஆத்மரக்ஷை செய்துகொள்வதிலேயே கவனம் செலுத்தியிருக்கவேண்டும்.

**சளுக்கியர்.** பம்பாய் ராஜதானியிலுள்ள பாதாமி என்னுமிடத்தைத் தலைநகராகக் கொண்டு மத்ய இந்தியாவிலும் மேல்இந்தியாவிலும் பரந்த சார்வபௌம ராஜ்யத்தை ஸ்தாபித்த இந்தச் சளுக்கியர்கள் திடீரென்று கி. பி. 7-ம் நூற்றூண்டின் தொடக்கத்தில் தோன்றுகின்றனர். இரண்டாம் புலிகேசி என்ற சளுக்கிய வரசன் தனது நாட்டை கோதாவரிக்கரை வரையில் விஸ்தாரமாக்கி, பல்லவர்களைக் காஞ்சீபுரத்துக்கு வெளியே வரவொட்டாமல் அடக்கியிருந்தனன். சளுக்கியர்கள், பல்லவர்களையும் சோழர்களையும் வென்று காவேரியைக் கடந்து சேரபாண்டிய ராஜ்யங்களில் படையெடுத்துப் போனதாகப் பெருமை கூறிக் கொள்கின்றனர். இதன் உண்மை எவ்வாறிருந்தபோதிலும் சோழநாட்டில் சளுக்கியர் அதிகாரம் நிலைத்திருந்ததாகத் தெரியவில்லை. அவர்களுக்குள்ளேயே கீழைச் சளுக்கியர் மேலைச்சளுக்கியர் என இரண்டு பிரிவு ஏற்பட்டது. மேலைச் சளுக்கியர் பழைய பாதாமி நகரையும்கீழைச் சளுக்கியர்கள் வடசர்க்கார் மாகாணத்திலுள்ள எல்லூருக்குச் சமீபித்த வேங்கை நகரையும்தலை நகராக் கொண்டனர்.

பல்லவ அரசனான நந்திவர்மன் பல்லவ மல்லன் என்பவன் "மண்ணைக்குடி" என்னுமிடத்தில் பாண்டியனை வென்றதாக மட்டும் ஒரு செய்தி கிடைத்துள்ளது. விபரங்கள் தெரியவில்லை. இதே நந்திவர்மன் பல்லவ மல்லன் மேலைச்சளுக்கியவரசனான இரண்டாம் விக்ரமாதித்தனால் (733-747) தோல்வியடைந்திருக்கிறான். பல்லவ-பாண்டியச் சண்டையில் சோழர்கள் யாருடைய பக்கத்தில் சேர்ந்திருந்தனரென்பது தெரியவில்லை. இந்தச் சண்டைக்குப்பின் கி. பி. எட்டாம் நூற்றூண்டின் முற்பாதியிலேயே பல்லவர்களுடைய ராஜ்யம் தலை கவிழ்ந்து போய்விட்டது. அப்பால், கொஞ்சகாலத்துக் கெல்லாம் மேலைச் சளுக்கியர்களுடைய அதிகாரமும் செல்வாக்கும் குன்றின. அவர்களுடைய பதவியைக் கன்னடநாட்டிலுள்ள மாலகேது ராஷ்டிர கூடர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

**சங்க பல்லவர்** பல்லவர்களின் ஓர் பகுதியாரான சங்க பல்லவர் என்ற வம்சத்தார் தமிழ்நாட்டில் தோன்றி பழைய பல்லவர்களுடைய அதிகாரத்தை வகிக்கத் தொடங்கினர். அவ்வம்சத்துக் கடைசியரசனான விஜய நிருப துங்க விக்ரவர்மன் காலத்துக்கு முன்னால், இந்த சங்க பல்லவர்கள் தங்களுடைய அதிகாரத்தைச் சோழமண்டலத்தில் நிலை நாட்டவில்லை. ஆதலால் இதனிடையிட்ட காலத்தில் சோழர்களுக்குச் சற்று சல்லியமொழிந்திருந்த தென்று எண்ணலாம். என்றாலும் சோழ நாட்டில் பாண்டியர் படையெடுத்து வந்திருக்க வேண்டு மென்று தோன்றுகிறது. கும்பகோணத்துக்கு அடுத்த "திருப்புரம் பயம்" என்றவூரில் சங்க அரசனான முதலாம் பிருதிவீபதிக்கும் பாண்டியன் வரதுணனுக்கும் சண்டைநடந்தது. அதில்பிருதிவீபதி உயிரிழந்தான். சோழநாட்டின் வடபாகத்தில் பாண்டியன் வந்து சண்டை செய்ததிலிருந்து அந்நாடு அவன் அதிகாரத்துக்குட்பட்டிருக்கலாமென்று ஊகிக்க இடமுண்டு. தில்லைஸ்தானம், செந்தலைமுதலிய விடங்களில் பாண்டியர்களின் சாஸனங்கள் காணப்படுவதும் இவ்விஷயத்தை வற்புறுத்தும்.

சங்க பல்லவர்களின் ஆதீனம்சீக்கிரத்தில்ஒழிந்தது. கி. பி. ஒன்பதாம் நூற்றூண்டினிறுதியில் விஜயாலயன் தோன்றி சோழ ராஜ்யத்தை விசாலப்படுத்தி அதிகாரத்தை நிலை நிறுத்தினன். இவன் கால முதற்கொண்டு, தஞ்சை நாட்டுச் சரிதம் சிலாசாஸனங்கள் மூலமாக ஒருவாறு வெளியாகிறது.

இவ்வம்சத்து முதல் அரசனான விஜயாலயனைப் பற்றியும் அவனுக்குப் பின் வந்த முதலாம் ஆதித்தனைப் பற்றியும் அதிகமான விவரங்கள் ராஜ ராஜனுக்கு கிடைக்க வில்லை. விஜயாலயன் மூந்தியவர் தஞ்சையைப் பிடித்துக் கொண்டு, கி. பி. 880-934 அதையே தனது தலை நகராக்கிக் கொண்டான். அது முதல் முதலாம் ராஜராஜன் காலம் வரையில் தஞ்சையே சோழ நாட்டின் தலைநகராக விருந்தது. ஆதித்தனுக்கு தொண்டைமானாற்றூர் துஞ்சிய உடையார் என்ற பேருண்டு. இது இவன் இறந்த இடத்தைக் குறிப்பிடும். விஜயாலயன் ராஜகேசரிவர்ம னென்றும், ஆதித்தன் பரகேசரி வர்மனென்றும் பட்டஞ் சூட்டிக் கொண்டனர். ஆதித்தன் கி. பி. 894ல் கொங்கு நாட்டை ஜயித்ததாகக் காண்கிறது. பழைய பல்லவராஜ்யமான தொண்டை மண்டலத்தையும் இவன் வென்றான். ஆதித்தனுக்குப்பின் சிங்காதனம் ஏறிய முதலாம் பராந்தகன் (906-946) வெகு பராக்கிரமசாலி. வீரநாராயணன் 'என்ற மறுபெயருள்ளவன்'. ராஜராஜன், குலோத்துங்கன், முதலியோர் பின்னர் அடைந்தபிரக்யாதிக்கு இவனே முதற்காரணமாக விருந்தான். இவன் திருவல்லத்தைத்

* தஞ்சாவூர் ஜில்லாவில் "கோயில் வெண்ணி" என்ற ஊர் இவ்வூராகவிருக்கலாமோ என்ற சந்தேகம் உண்டு.

தலைநகராகக்கொண்ட பாணவாசனை நான்காம் விஜயாதித்தனையும் மைசூரில் ஆண்ட கங்கவாசனை இரண்டாம் பிருதிவீபதியையும், மதுரையிலாண்ட ராஜஸிம்ம பாண்டியனையும், சிங்கள நாட்டரசனை ஐந்தாம் காசியபனையும் வென்று தனது நாட்டை வெகுதூரம் வரையில் விஸ்தாரப்படுத்தினான். இலங்கையை வென்றதற்காக "சங்கிராம ராகவன்" என்ற பிருதையும் பூண்டவன். கன்னியா குமரிக்குச் சமீபத்துள்ள சுசீந்திரத்திலும், வடக்கே காளஹஸ்தியிலும், மேற்கே கருஆருக் கடுத்த சோழுரிலும் இப்பராந்தகனுடைய சிலாசாஸனங்கள் காணப்படுகின்றனவாதலால் இவனுடைய அதிகாரம் வெகுதூரம் பரவியிருந்ததென்று துணியலாம். சிதம்பரம் கோவிலுக்குப் பொன் முகடு வேய்ந்து இவன் புகழ்பெற்றனென்று "லீடன்" சாஸனமும், ஹேமகர்ப்பம் துலாபாரம் முதலிய பலதான தருமங்களைச் செய்தனனென்று உதயேந்திரம் செப்புப்பட்டயமும் தெரிவிக்கின்றன. இவனது தலைநகர் காஞ்சீபுரமும் தஞ்சையுமாம். இவனது பட்டமஹிஷி ஒரு சேரநாட்டு நங்கை.

பராந்தகன் இறந்தது சோழ நாட்டுக்கு ஒரு பெரிய உற்பாதம் போன்றிருந்தது. அப்பால் ஐம்பது வருஷங்கள் வரையில் சோழவரசர்கள் தங்களுடைய பூர்வீக நாட்டையும் தொண்டை மண்டலத்தையுமே ஆண்டு வந்தனர். பராந்தகனுக்குப் பின் பட்டத்துக்குவந்த அவனது மூத்தகுமாரனை ராஜாதித்யன், மேலைச்சளுக்கிய நாட்டைக் கவர்ந்துகொண்ட ராஷ்டிரகூடவாசனை அகாலவர்ஷன் என்னும் மூன்றாம் கிருஷ்ண ராஜனுடன் கி.பி. 949ல் 'தக்கோலம், என்னுமிடத்தில் சண்டை போட்டு ஜயித்தான். என்றாலும் கிருஷ்ண ராஜனுடைய சகோதரி கணவனும், சங்கவமிசத்தவனுமாகிய பூதுகன் என்பவனுடைய வஞ்சனையால் கொல்லப்பட்டான். தக்கோலம் என்னுமிடம் ஆர்க்கோணம் ஜங்க்ஷனுக்கு ஆறு மைல் தூரத்தில் தெக்குளம் என்ற பேருடன் இன்னுமிருக்கின்றது. ராஜாதித்யன் இறந்ததும் தொண்டைமண்டலத்தை ராஷ்டிரகூட வாசன் கைப்பற்றிக்கொண்டான். என்றாலும் சில வருஷங்களுக்கெல்லாம் அந்தப்பிரதேசத்தை இரண்டாம் ஆதித்யசோழன் திரும்பக் கவர்ந்து கொண்டான். ராஜாதித்யனுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த கந்தராதித்யன், அரிஞ்சயன், இரண்டாம் பராந்தகன். ஆதித்ய கரிகாலன் அல்லது இரண்டாம் ஆதித்யன், மதுராந்தகன் ஆகிய ஐவரைப் பற்றிய விவரங்கள் அற்பம். இரண்டாம் ஆதித்யன் இரண்டாம் பராந்தகனுடைய மகன். அரிஞ்சயன் ராஜாதித்யனுடையசகோதரன். மதுராந்தகன் கந்தராதித்யனுடைய மகன். இவ்வாறு முறைமாறி இவர்கள் பட்டத்துக்கு வந்ததினின்றும் அவர்களுக்குள் ராஜ்ய விஷயமாக சண்டை சச்சரவுகள் ஏற்பட்டிருந்தது என்று ஊகிக்கலாம். இரண்டாம் பராந்தகனுக்கு "சுந்தர சோழன்" என மறுபேருண்டு: அவனுடைய மகனை இரண்டாம்ஆதித்யன் தொண்டை மண்டலத்தைத் திரும்பப் பெற்றானென்று மேமேலே கூறினோம். அவன் பாலியத்திலேயே வீரபாண்டியனைப் போரில் வென்று அவன் தலையைக் கொய்து பந்துபோல உருட்டி விளையாடினனும்.

ராஜ ராஜன்
985 1053

இரண்டாம் பராந்தகனுடைய கடைசிக் குமாரனும் ராஜகேசரிவர்மன் எனப்பெயர் பூண்டவனுமான முதலாம் ராஜ ராஜ சோழன் சிங்காதன மேறியது முதல் சோழவம்சம் பிரபலமடையத்தொடங்கிற்று. அப்பிரபல்யம் சுமார் ஒரு நூற்றாண்டளவும் குறைவுபடாமலிருந்தது. ராஜராஜன் என்ற பெயர் இவனுக்குச் சிதம்பரம் சோபிலதிகாரிகளால் இடப்பட்டது. இதைத் தவிர ராஜாசிரயன், நித்ய விநோதன், சோழ அருமொழி, மும்முடிச் சோழன், ஜயங்கொண்ட சோழன், சிவபாத சேகரன், க்ஷத்ரிய சிகாமணி என்ற பல பிருதுப்பேர்களும் இவனுக்கு உண்டு. இவன் மேற்கே கொல்லம் குடகு வரையிலும், தெற்கே கன்னியாகுமாரி முதல் வடக்கே ஒரிஸ்ஸா வரையிலும் தனது ராஜ்யத்தை விஸ்தாரப்படுத்தினான். இவனது சைந்நியங்கள் பர்மாவையும் மலே தீவுகளையும் ஜயித்தனர். ராஜராஜன் கி. பி. 994ல் சேரநாட்டுத் துறைமுகப்பட்டணமொன்றைத் தாக்கி அழித்தான். சேரபாண்டியர் மீது பன்முறை படையெடுத்துச் சென்றதாகவும் காண்கிறது. 998-999-ல் தலைக்காடு என்னும் நகரைத் தலைநகராகக் கொண்ட மைசூர்க் கங்கவாசனை வென்றான். துளம்பர் நாடு (பல்லாரி) தடிகைப் பாடி, வேங்கை நாடு, குடகு, பாண்டிய நாடு இவைகளும் இவனுக்குக் கீழ்ப்படிந்தன. இப்போதைய ராஜமஹேந்திரபுரத்தில் முன்னர் அரசுபுரிந்த கீழைச்சளுக்கியர்களை வென்று அவ்வரசைத் தன் மகள் குந்தவ்வையைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட விமலாதித்யனுக்குக்கொடுத்து அங்கு 27வருஷமாக நிகழ்ந்து வந்த அராஜகத்தை அகற்றினான். விமலாதித்யனுடைய மகனும் பேரனும்சோழவம்சத்திலேயே பெண் கொண்டனர். இந்த முறையினால் தான், பின்னர் முதலாம் குலோத்துங்கன் தனக்குத் தாய்வழியில் சோழ ராஜ்யத்தில் பாத்திய முண்டென்று கூறிக்கொண்டு அரசனானான். ராஜ ராஜன் 1006-7ல் மேலைச் சளுக்கியர்களை வென்று அவர்களுடைய நாட்டை நிர் மூலப்படுத்தினான் என்றாலும் அவர்கள் மறுபடியும் கிளம்பிச் சோழர்களுக்குப் பரம வைரிகளாகவே இருந்தனர். கி. பி. 1002-3 க்கு முன்னமேயே கொல்லம், கலிங்கம், ஈழம் மூன்றும் ராஜ ராஜனுக்கு கீழ்ப்படிந்துவிட்டன. சேரசோழ பாண்டிய ராஜ்யங்கள் மூன்றுக்கும் இவன் ஏகசக்ரவர்த்தி யென்றதை விளக்க "மும்முடிச்சோழன்" என்ற பேர் வந்தது. தனது ஆட்சியில் 29-வது ஆண்டில் இவன் துலாபாரம் செய்தான்.

தஞ்சாவூரிலுள்ள அழகிய பெரிய சிவாலயத்தைக் கட்டியவன் இவனே. தென்னிந்தியாவில் அப்பால்கட்டப்பட்ட பல கோயில்கள் இதை மாதிரியாகவுடையன. முக்கியமாக உடையார்பாளயம் தாலுக்காவில் உள்ள கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்ட



ப்பட்டிருக்கும் சிவாலயம் தஞ்சை ஆலயத்தை முழுவதும் ஒத்திருக்கிறது. ராஜராஜன் சைவசமயத்தில் பற்றுள்ளவனாயிருந்தாலும், மற்றைய மார்க்கத்தினரை விரோதித்தவனன்று. மாறவிஜயோத்துங்கன் என்னும் சிற்றரசனால் நாகப்பட்டணத்தில் கட்டப்பட்ட ஒரு பௌத்தாலயத்துக்கு ராஜராஜப் பெரும்பள்ளி என்று தன் பேரிடச்சம்மதித்ததுமன்றி அதற்கு ஆனைமங்கலம் என்னும் கிராமத்தையும் மானியமாகக்கொடுத்தானென்று "லீடன்சாசனம்" கூறுகின்றது. நீர்ப்பாசன சவுகரியம் செய்து கொடுத்து, கிராமசமுதாயத்தைச் சீர்திருத்தி, தன்னுடைய அரசாட்சியை உயர்ந்த நிலைமைக்கு ராஜராஜன் கொண்டு வந்திருந்தான். சிலாசாதனங்களின் ஆரம்பத்தில் தங்கள் தங்களுடைய பிரதாபங்களைக் குறிப்பிடுவது ராஜராஜன் தொடங்கிய ஓர் புதிய முறை; இதைப் பின்வந்தோரெவரும் பெரும்பாலும் அனுஷ்டித்தபடியால் சரித்திரவிபரங்கள் தெளிவாகத் தெரிய இடமுண்டாயிற்று.

ராஜேந்திர
சோழன்
1011-1044.

ராஜ ராஜனுக்குப்பின் அவன் மகன் ராஜேந்திர சோழன் பட்டத்துக்கு வந்தான். இவனுக்கு கங்கை கொண்ட சோழன் என்ற பிருது ஒன்று இருப்பதைக்கொண்டு இவன் ஒரு காலத்தில் கங்கைக்கரை வரையில் திக்கு விஜயமாகச் சென்றிருந்தானென்று ஊகிக்கலாம். இந்தப் பெயர், கொள்ளிடத்துக்கு வடகரையில் இவன் நிர்மாணித்த கங்கை கொண்ட சோழபுரம் என்னும் நகரமூலமாக இன்னும் இருக்கின்றது. சஞ்சம் ஜில்லாவிலுள்ள மகேந்திரகிரி வரையில் இவன்படையெடுத்துச் சென்றதற்கு அம்மலைமேல் இவனது சிலாஸாதனம் காணப்படுவது சான்றாகும். கீழ்பர்மாவை ஜயிப்பதற்கு கப்பற்படையொன்றனுப்பினதாகவும் போகும் வழியில் நிக்கோபர் தீவுகளை வென்றதாகவும் தெரிகின்றது. மேலைச்சளுக்கிய வாசனை இரண்டாம் ஜயஸிம்ஹனோடு இவன் போர்புரிந்தான். போரின் முடிவு தெரியவில்லை. இரு திறத்தாரும் ஜயம் பெற்றதாகக் கூறுகின்றனர். ஈழம், ஒட்டம் இலாடம், வங்காளம் முதலிய நாடுகளையும் இவன் ஜயித்தனனும். ஏதோ ஒரு காரணம் பற்றி, தலைநகரைத் தஞ்சையினின்றும் மேற்சொன்ன கங்கைகொண்ட சோழ புரத்துக்கு மாற்றி, அங்கு தஞ்சைஆலயத்தைப் போன்றதோர் அழகிய சிவாலயத்தைக் கட்டினான். அக்கோயில் இப்போது கிலமாகியிருக்கின்றது.

ராஜாதி ராஜ
தேவன் I.
1018-1053

அப்பால் அரசனானவன் முதலாம் ராஜாதி ராஜ தேவன். இவன் ராஜேந்திரனுடைய மகனோ அல்லது சகோதரன்மகனோ தெரியவில்லை. சேரர், பாண்டியர், சிங்களர் மூவரும் ஒன்று சேர்ந்து சோழ ஆதிபத்தியத்தைத் தள்ளிவிட முயன்றனர். ஆனால் கலகம் வெகு சீக்கிரத்தில் அடக்கப்பட்டது. இவன், மானுபரணன், வீரகேரளன், சுந்தரபாண்டியன் ஆகிய மூன்று பாண்டியரோடு போர்புரிந்து, மானுபாணன் தலையைக்கொய்து வீரகேரளனை யானைக்காலால் மிதிப்பித்து, சுந்தர பாண்டியனை முல்லையூர் புகத்துரத்தினன். மேலைச்சளுக்கிய வரசனை ஆஹவமல்லனோடு இவன் போர்புரிந்துவென்று, பல்லாரி ஜில்லாவில் அவனுடைய பட்டணமாகிய கம்பிலி நகரைத் தீயிட்டு எரித்து பம்பாய் ராஜதானியிலுள்ள கோலாபூர் வரையில் படையெடுத்துச் சென்றான். தான் ஜயசாலியாய் விளங்கும் வீரனென்பதைக்காட்ட, ராஜாதிராஜன் ஒரு அசுவமேதயாகம் செய்தான். சோழர்களுக்கும் ஆஹவமல்லன்கீழடங்கியசளுக்கியர்களுக்கும் மைசூர் தேசத்தில் கொப்பம் என்னுமிடத்தில் கி. பி. 1053ல் நடந்த சண்டையில் ராஜாதிராஜன் உயிரிழந்தான். என்றாலும் வெற்றி சோழர்களுடையதே.

ராஜேந்திர
தேவன்1052
-1064

ராஜாதிராஜ தேவனுக்குப்பின், ராஜேந்திரதேவனும் (1052-1064) அப்பால் ராஜமகேந்திரனும் பட்டத்துக்கு வந்தனர். ராஜேந்திரதேவன் வழக்கம் போல சளுக்கியர்களுடன் சண்டைக்குப் போய் ஜயம் பெற்றுக்கொண்டான். இவன் ஈழமண்டலத்தையும் மறுபடி வென்றான். கி, பி. 1054ல் இவன் காலத்தில் ஒரு க்ஷாமம் நேர்ந்தது. ராஜமகேந்திரன் வெகு தார்மீகன், ஸ்ரீரங்கம் கோவிலுக்கு ஒரு பிராகாரம் கட்டி அதற்கு ராஜமகேந்திரன் திருவீதியென்று பேரிட்டான்.

வீரராஜேந்
திரதேவன்
1062-1069

அடுத்துச் சிங்காதனமேறியவன் வீரராஜேந்திர தேவன். (1062-1069). இவனுடைய திக்கு விஜயங்கள் பல; சேரர்களையும் பாண்டியர்களையும் இவன் வென்றான். கீழைச்சளுக்கிய ராஜ்யமான வேங்கைநாட்டை மறுபடி கவர்ந்துகொண்டு, அங்கு விஜயாதித்தனை ஆளுகையில் இருத்தினான். மேலைச்சளுக்கியர்களை ஐந்து சண்டைகளில் முறியடித்து, கடைசியாக "கூடல்" நகரச் சண்டைக்குப்பின், அவர்களுடைய நாட்டை ஆறாம் விக்ரமாதித்தனுக்கு இனமாகக் கொடுத்து, கம்பிலி நகரைத் தீயிட்டழித்து, துங்கபத்ரைக் கரையில் 'கரடிக்கல்' என்னுமிடத்தில் ஒரு ஜயஸ்தம்பத்தையும் நாட்டித் திரும்பினான்: திரும்புமுன், அவ்வாறாம் விக்ரமாதித்தனுக்கு வீரராஜேந்திரன் தன் மகளையும் மணம் புரிவித்தான். கீழைச்சளுக்கியர்க்கும் சோழர்க்கும் வைவாஹிக சம்பந்த மிருந்ததை முன்னமேயே கூறினோம். இப்போது மேலைச்சளுக்கியர்க்கும் அவ்வித சம்பந்த மேற்பட்டது.

கீழைச்சளுக்கிய வரசனை விமலாதித்யன், ராஜராஜசோழன் மகள் குந்தவ்வையை மணந்து வேங்கை நாட்டுக்கு அதிபதியானானென்று மேலேகூறினோம். இவ்விமலாதித்யனுடைய மகன் சாளுக்கிய ராஜராஜன் 1023முதல் 1063வரையில் அரசாண்டான்.

இவனும், ராஜேந்திர சோழன் மகள் அம்மங்கதேவியை மணம்புரிந்தான். இவன் இறந்ததும், இவனுடையமகன் குலோத்துங்கன் சிங்காதனமேறவில்லை. ராஜராஜனுடைய சகோதரன் ஏழாம் விஜயாதித்தன் வேங்கை நாட்டரசனுனன். குலோத்துங்கனுக்கு ராஜ்யம் கிடைக்காமல் போனதன் காரணம் விளங்கவில்லை. அவன், தனது மாதாமகனுன ராஜேந்திர சோழனுக்குச் சுவீகாரமகனுக விருந்து, சோணுட்டிலேயே வாசஞ் செய்தபடியால், பிதாவின், மரணகாலத்தில் சமீபத்தில் இராதது பற்றி, ராஜ்யத்தை வேறொருவன் கைப்பற்றிக்கொண்டான். மேலும் சோழவரசனுன வீரராஜேந்திரதேவன் குலோத்துங்கனுக்கு விரோதமாக, மேலேகூறிய விஜயாதித்தனுக்குதவி செய்து, நாட்டை அவனிடம் ஒப்புவித்ததை நோக்கும்போது, சோழ சிங்காதனத்துக்கு,குலோத்துங்கன் தன்னுடன் போட்டியாக வருவானென்று, வீரராஜேந்திரன் பயந்திருந்தான் என்று எண்ணவும் கூடும்.

வீர ராஜேந்திரதேவன் இறந்ததும் (1069) சோழ நாட்டில் சீர்கேடுஉண்டாயிற்று. அவனுடைய மகன் அதிராஜேந்திரன் பட்டத்துக்கு வந்தான். அப்போது குலோத்துங்கன் தான் ராஜேந்திர சோழனுடைய பேரனும் சுவீகாரமகனுமென்று சோழ ராஜ்யத்துக்குப் பாத்தியம் கூறிக்கொண்டு, மேலைச்சளுக்கியவரசன் தம்பிசோமீசுவரன் துணையினுல், சண்டைசெய்து அதிராஜேந்திரனைக் கொன்று சிங்காதனமேறினுன்,

குலோத் துங்கன் 1. 1070-1118

மேலைச்சளுக்கிய வரசனுன ஆறும் விக்ரமாதித்யன் வீரராஜேந்திர தேவனுடைய மகளை மணந்தவனுதலால், தனது மைத்துனன் இறந்துபோன அதிராஜேந்திரனுடைய கட்சியை எடுத்துப்பரிந்து பேசும் பொருட்டு, பெருஞ்சேனையுடன் புறப்பட்டு வந்து குலோத்துங்கனுடன் சண்டை செய்தான். முடிவில் விக்ரமாதித்தன் தோற்ருேடினபடியால், குலோத்துங்கனுக்குச் சோழராஜ்யம் நிலைத்தது.

இவ்வளவு பரிசிரமத்துடன் சிங்காதனமேறிய குலோத்துங்கனைப்பற்றிய சரித்திர விவரங்கள் அதிகமாகத் தெரியவில்லை. இவனுக்கு ராஜேந்திரன், அநபாயன், கரிகாலன். ஜயதரன் எனப் பலபெயர்களுண்டு. குலோத்துங்கன் சோழ ராஜ்யத்தைப் பெற்ற பிறகும் கூட, தனக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பிதிரார்ஜித வேங்கை நாட்டைக் கைப்பற்றிக்கொள்ள முயற்சிக்கவில்லை, தனக்குப் பிரதிநிதியாக, தனது சிற்றப்பனையே ஆளும்படி செய்திருந்தான். என்ருலும் கொஞ்சகாலத்துக் கெல்லாம், அவனை அப்புறப்படுத்தி, தன்மகன் விக்ரமசோழனை அங்கு பிரதிநிதியாக்கினுன்.

ராஜ்யத்தைக் கைப்பற்றியவுடனேயே இவன் ஆறும்விக்ரமாதித்தனைவென்றசெய்தியைக்கூறினுேம். முதலில் படையெடுத்து வந்ததற்குச் சினந்து, மறுபடியும் அவன்மீது போருக்குப்போய் வென்றுமீண்டான். இவன் பாண்டியர்களையும் சேரர்களையும் வென்றதாகவும் தெரிகின்றது. வீரராஜேந்திர தேவனுடைய காலத்திலேயே கலகம் செய்து தனித்துப் போன கலிங்க நாட்டையாண்ட சோடகங்கன் கப்பங் கட்டாமலிருந்ததனுல், அவன்மீது படையெடுத்துச்செல்லவெண்ணி, தன் மகன் விக்ரமசோழனையும் சேனுபதி கருணுகரத்தொண்டைமானையும் அனுப்பி, சோடகங்கனை வென்று, அந்நாட்டைத்தன் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டான். இவ்விஷயம் 'கலிங்கத்துப்பரணி' என்னும் அழகிய தமிழ்நூலில் வெகு சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

வியாபாரத்துக்கு இடைஞ்சலாகவிருந்த சிலசுங்கங்களை (வரிகள்) இவன் தள்ளிவிட்டான். இது பற்றியே இவனுக்கு "சுங்கந்தவிர்த்த சோழன்" என்ற பேர் வந்தது. நாட்டு நிலங்கள் முழுவதையும் அளவிட்டு ஒழுங்காக்கினுன். காடுகளையழித்து நிலந்திருத்தியும், நகர்களை உண்டாக்கியும் கோயில்கள் கட்டியும் ஏரிகள் வெட்டியும் இவன் பலசவுகரியங்களை ஜனங்களுக்குச் செய்து கொடுத்தான். இவனுடைய தலை நகரம் கங்கைகொண்டசோழபுரம் என்ருலும் இவன் அடிக்கடி காஞ்சீபுரத்தில் வசித்துண்டு. இவனுக்கு மக்கள் எழுவர்,மனைவிமார்மூவர். மாமன் மகளாகிய மதுராந்தகியும், ஏனையோராகிய ஏழிசைவல்லபி, தியாகவல்லி, என்பவரும்.

கி. பி. 1118ல் வேங்கை நாட்டில் பிரதிநிதியாகவிருந்த தன் மகன் விக்ரமசோழனை வரவழைத்து, அவனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து, குலோத்துங்கன் காலகதியை யடைந்தான்.

குலோத்துங்கனுக்குப் பிறகு, சோழராஜ்யம் க்ஷீணிக்கத் தொடங்கிற்று. வேங்கை நாட்டில் சோழாதிகாரம்பெருக்குமட்டுந்தானிருந்தது. பாண்டியர்களை அடிக்கடி வென்றதாகக் காணப்படும் சிலாசாதனங்களால், சோழர்களுக்குப் பாண்டிய நாட்டில் நிலையான ஆதிபத்யம் இருந்ததில்லை யென்பது விளங்கும். தொண்டைமண்டலச் சிற்றரசர்களும் சுயேச்சாதிகாரத்தைவகிக்கத் தொடங்கினர்.

குலோத்துங்கனுடைய மகன் விக்ரமசோழன் (1118-1135) தனது பிதாவின் கீர்த்தியைக்கொஞ்சம் காப்பாற்றினுன். இவன்காலத்தில் (1124) சோழநாட்டிலும் அதற்கு வடக்கிலும் நெடுந்தூரம் பரவிய கொடிய பஞ்சம் ஒன்று நேர்ந்தது. இவன் ஸ்ரீரங்கத்தில் இரண்டு திருவீதிகள் கட்டினுன். அவைகளுக்கு அகளங்கன் திருவீதியென்றும் திருவிக்ரமன் திருவீதியென்றும்பெயர். அப்பால் பட்டத்துக்கு வந்த இரண்டாம் குலோத்துங்கன் (1135-1146) இரண்டாம் ராஜராஜன் (1146-1171) இரண்டாம் ராஜாதிராஜன் (1171-1178) இவர்களுடைய காலத்தில் சோழராஜ்யம் வெகு தீவிரமாகக் குழிந்தது.

குலோத்துங்கன் சந்ததியார். சோழராஜ்ய க்ஷீணாரம்பம்



# தரணீபதி அல்லது தந்திரபாலன்

## DHARANIPATHI or THE BOY DETECTIVE

### ஐந்தாம் அத்தியாயம்

#### அகதிக்குத் தெய்வமே துணை

முந்தின அத்யாயத்தில் உள்ள விஷயங்கள் நடந்து சில மாதங்களாய்விட்டன. நீலாம்பாள் எங்கு மறைந்தாளென்பது ஒருவருக்கும் புலப்படவில்லை. எப்படிப்பட்ட ரஹஸ்யங்களையும் உளவறிந்து வரும் போலீஸ் புலிகளுக்கும் யாதொரு புலனும் அகப்படவில்லை. என்ன யுக்தி வந்தனுயினும் சிறுவன் சிறுவன்தானே! தரணீபதிதன்னுலானவரை முயன்று பார்த்தான்: முடியவில்லை. தானே எல்லாம் வெளிக்குவந்துவிடும் என்று காலத்தை எதிர்பார்த்திருந்தான், பாபம்! நீலாம்பாளின் பெற்றோர்—வீரவர்மர், காமாட்சி—மிகவும் மனமுடைந்து தம் குழந்தைபாஸ்காரன் ஸஹிதம் மைசூர் போய்ச்சேர்ந்தார்கள். இனி எக்காலம் தன் அருமைக்கண்மணியைப் பார்ப்போம் என்று ஏக்கமடைந்திருந்தார்கள். ஆனுலும் கைவிட்டுவிடவில்லை. எப்படியாவது அவள் தங்களை சீக்கிரம் அடைவாள் என்ற எண்ணம் மாத்திரம் மனதில் இருந்ததினுல் முன் பத்திரிகைகளிலும் போலீஸ் கச்சேரிகளிலும் வெளியிட்ட விளம்பரத்தை அடிக்கடி எல்லா இடங்களுக்கும் தெரிவித்து வந்தார்கள். தவிர, ஆங்காங்குள்ள போலீஸ் கச்சேரிகளில் தாம் புகைப்படக் கடையில் கண்ட நீலாவின் உருவப்படப் பிரதிகளை அனுப்பிவைத்திருந்தனர்.

நிற்க, தரணீபதியின் நிலைமையைச் சற்று கவனிப்போம். நீலாம்பாளைப்பற்றி அவன் அடிக்கடி நினைத்து வந்தனுயினும் தன் வேலையின் மும்முரத்தினுல் அவளைத் தேடும் முயற்சியில் தலையிட்டுக்கொள்ள முடியவில்லை. ஆனுலும் நீலாவைக் கண்டது முதல் தரணீபதிக்கு அதிர்ஷ்டம் பெருகிற்று. போலி நாணயகொள்ளைக்காரரைக் கண்டுபிடித்து அவர்களை சிறையிலிடுவதற்கு முக்யகாரணமாயிருந்தது (நீலா)—தரணீபதியாதலின் மாதவராவ் தரணீபதியின் சம்பளத்தை உயர்த்தினுர். பெரிய துரைக்கு அறிமுகம் செய்வித்தார். இம்மாதிரி அவனது நிலைமை முன்னினும் சற்று உயர்வாகவேயிருந்தது. அவன் தாயாரும் சற்று சிக்கனமாகவே ஜீவனம் செய்து பையன் சம்பளத்திலிருந்து ஓர் சிறுதொகையையும் மீதமாக்கி வைத்தாள். அவர்களுக்கு இருந்த குறையெல்லாம் ஒன்றுதான்.—நெட்டாலத்துக்குப் போய்விட்ட தரணீபதியின் தகப்பனுர் திரும்பிவரவில்லை என்பதுதான்.

ஒருநாள் தரணீபதி கச்சேரியிலிருந்து வந்ததும் தன் தாயாரைப் பார்த்து:

"அம்மா, நான் வஹித்திருக்கும் வேலையில் அநேக ஆச்சர்யமான கேஸ்கள் வந்து சேர்கின்றன. இப்பொழுது பார், நான் இழந்து போன நீலாம்பாளைத் தேடவேண்டி யிருக்கிறது. அது தவிர, நான் யாரோ ஒரு மீனுக்ஷி என்பவளைக் கண்டுபிடித்து அவளிருப்பிடத்தைச் சொன்னுல் இரண்டாயிரம் ரூபா இனும் அளிப்பதாக மாதவராவ் வாக்களித்திருக்கிருர். அவள் எப்பொழுதோ—பதினெட்டு வருஷங்களுக்கு முன்—கோயமுத்தூரில் பழைய தபாலாபீசுக்குச் சமீபத்தில் வசித்து வந்த லக்ஷ்மியம்மாள் என்பவளின் தமயன் மகளாம். இவ்வளவு மட்டுந்தான் புலன் அகப்பட்டிருக்கிறது." என்ருன்.

அவனுடைய தாயார் இதைக்கேட்டதும், சற்று நிதானித்து "ஆமாம், நீ சிறிது கஷ்டப்பட்டுத் தேடுகிறதுதானே" என்ருள்.

"நன்ருய்ச் சொன்னுய், 18 வருஷங்களுக்கு முன் நடந்த விஷயம், எப்படி யென்றுதான் கண்டுபிடிக்கிறது.........ஏனம்மா, நீ எனக்கு எப்பொழுதோ கோயமுத்தூரில் இருந்ததாகச்சொல்லியிருக்கிருயே. உனக்கு ஏதாவது இதைப்பற்றித் தெரியுமோ?"

"ஏண்டா, எனக்கெப்படித் தெரியும்? துப்பறியும் போலீஸ் நிபுணனுகிய உனக்கே தெரியாமலிருக்கும்போது கேவலம் ஒரு பெண்பிள்ளைக்கு எப்படிப் புலனகப்படும்."

"தவிர, லக்ஷ்மி என்று அத்தை பாட்டி ஒருத்தியிருந்ததாகவும்கூட நீ எனக்குச் சொல்லவில்லையா, அம்மா? இப்பொழுது எங்கே அந்த அத்தை?......... ஆமாம், உன் பேர் கூட மீனுக்ஷி யென்று ஒன்றிருக்கிறது. அத்தை அப்படித்தான் கூப்பிடுவோ என்று நீ சொல்லியிருப்பது எனக்கு ஞாபகம் வருகிறது. யார் அந்த மீனுக்ஷி? எனக்கு நன்ருய்த் தெரியச் சொல். நல்லலாபம் ஆச்சே—இரண்டாயிரம் ரூபா—ஒரே அடியில்? யாருக்குத்தான் வரும்."

தரணீபதியின் தாயார் ப்ரமையுடன் நின்றுகொண்டு அவனை உற்று நோக்குகிருள். பணத்தாசை கொண்டு ஏதாவது தீங்கு தனக்கே இழைக்கும்படி நேருமோவென்று பார்த்தாள் மிக்க பரபரப்புடன். உடனே அவன் தாயார்:

"மெய்தான், தரணீ, நீசொல்லும் நபர்களைப்பற்றி என்னுல்சொல்லமுடியும். ஆனுல்இந்த சமாசாரமெல்லாம் எதற்காக என்று தெரிந்தால் தைர்யமாக எல்லாவற்றையும் விளங்க வைக்கலாம்" என்ருள்.

தரணீபதி ஆனந்தமடைந்தவனுய்: "அம்மா, அப்படியே யாகட்டும். மாதவராவ் என்னிடத்தில் ஒன்றும் ஒளிக்கிறதில்லை. நாளைக் காலையில் விசாரித்து வருகிறேன்" என்ருன்.

அப்படியே மறுநாள் காலையில் தரணீபதி வந்தான். லக்ஷ்மி யென்பவள் பெங்களூரில் சிலகாலம் வசித்து வந்ததாகவும் அங்கிருக்கும்போது இறந்து விட்டதாகவும், தனக்கு யாதொரு ஸந்ததியு மில்லாமையால்தன் பன்னீராயிரம் பெறுமான சொத்தை தன் தமையன் மகள் மீனுக்ஷிக்குக் கொடுத்து விடவேண்டுமென்றும், அம்மீனுக்ஷி தற்காலம் அகப்படவில்லையாதலின் அவளைக் கண்டுபிடிப்பவர்களுக்கு இரண்டாயிரம்

ரூபா இனும் அளிக்க வேண்டுமென்றும், மிகுதி பதினாயிரத்தையும் மீனாக்ஷிக்காவது அவள் புத்திரர்களுக்காவது கொடுக்கப்பட வேண்டுமென்றும். இவர்கள் ஒருவரும் அகப்படாத பக்ஷத்தில் சென்னையில் ஓர் தர்ம அன்ன சாலை ஏற்பாடு செய்யும்படி ராஜாங்கத்தார் எடுத்துக்கொள்ளலாமென்றும் இம்மாதிரியான விவரங்களை மாதவராவ் சொன்னதாக தரணீபதி தன் தாயிடம் சொன்னான். அவளுக்கு இவைகளைக் கேட்கும்போதே அளவிலாமகிழ்ச்சி உண்டாயது. கடைசியில் தன் பழைய (செல்லப்) பெயர் மீனாக்ஷி என்றும் தாராபுரத்தில் வந்தபிறகுதான் சிவகாமு என்று எல்லாரும் கூப்பிடுவதாகவும் தெரிவித்தாள். இவ்விஷயங்கள் மாதவராவுக்கு எடுத்துரைக்கப்படவும் அவரும் தரணீபதியின் அதிர்ஷ்டத்தைப்பற்றிப் புகழ்ந்தனர். கிரமமாக கச்சேரியில்போய் ரூபிக்கவேண்டிய விஷயங்கள் எல்லாம் ரூபிக்கப்பட்டு இறுதியில் தரணீபதியின்தாயாருக்குப் பதினாயிரமும் தரணீபதிக்கு இரண்டாயிரமும்— யார்க்கு வந்தாலென்!— ஆகிய பெருந் தொகை வந்து சேர்ந்தது· இனி தன் அந்தஸ்திற்குத்தக்கபடி ஒருசொந்த வீடுவாங்கி அதில் தன் தாயுடன் வாழத் தொடங்கினான்.

இரவு மணிசுமார் 9½ இருக்கலாம். எங்கும் இருள் மயமாய் இருக்கிறது, எதிரில் வருவாரும் போவாரும்கூடத் தெரியவில்லை. போதாக் குறைக்கு சிறு தூறலும் இருந்து கொண்டிருக்கிறது, வரவர அதிகப்படும் போலிருக்கிறது. பளிச் பளிச்சென்று மின்னல் மின்னும் வெளிச்சத்தைக் கொண்டு சற்று கவனிப்போமாயின், தெருவுகள் எல்லாம் வெள்ளம் புரண்டோடுவதும் தெரிகின்றது. மின்னலுக்குப் பின்னேயே மேக கர்ஜனை காது செவிடுபடும்படிச் செய்கிறது. மின்னும்போதும் தண்ணீரில் நடப்பதால் உண்டாகும் ஓசையாலுமே எதிரில் யாராவது வருகிறார்கள் என்றறிய முடியும். இத்தகைய இருட்டுக் காலத்தில், அதிலும் இம்மாதிரி மழை பெய்து கொண்டிருக்கும்போது, ஏழைஜனங்களியாது செய்வார்கள். நாம் அடிக்கடி தெருவில் பார்க்கும் நொண்டி, செவிடு, குருடு இத்தகையோரும் வீடு வாசலே தமக்கென்றில்லாது கேவலம் ஸந்யாஸிகளைப்போல ப்ரபஞ்சம் முழுவதுமே தம் வீடாகக்கொண்டு வானத்தைக் கூரையாகவும் பசும்புல்லைப்பாயாகவும் உள்ள பரம தரித்திரர்களும் இச்சமயங்களில் படும் பாடு என்னே! தம் சொந்த ஊரைவிட்டு அயலூர்களுக்கு, சென்னைபோன்றபெரிய நகரங்களுக்கு வர நேரிட்டு இத்தகைய இரவிலும் மழையிலும் அகப்பட்டுக் கொண்டால் அவர்கள் கதி என்னே! மேனாட்டு நாகரிகம் நம் தேயத்தில் தினேதினே விருத்தியாக, நம் புராதன தர்மங்களும் பழக்க வழக்கங்களும் க்ஷீணித்துவருகின்றன. நாம் நம்மவரை சுறு சுறுப்புடன் தான தர்மாதிகள் செய்யும்படி வலியுறுத்துகின்றோமில்லை. அந்தோ! வீட்டின் அமைப்புக்கூடவாமேனாட்டு வீடுகளின் அமைப்பைத்தழுவவேண்டும்! நம்நாட்டு வீடுகளில் திண்ணையென்ற ஓர் அங்கமிருக்க தத்காலத்து நாகரிக வீடுகளுக்கு அந்த அங்கமென்பதே கிடையாது. விருந்தோம்பல் என்னும் குணத்தை நம்மைவிட்டு ஒருகின்றனர் என்பதற்கு இதுவே தக்க அறி குறி போலும்! வீடுகளின் ஸ்திதியே இப்படியிருக்க, பொது நன்மையின்பொருட்டு கட்டப்பட்டு, அதிகாரத்தைக் கொண்டுள்ள சிலரின்கைவசத்துள்ள சத்திரங்களின் நிலைமையைக் கூறுவது அநாவசியம்.

நிற்க, மேற் கூறப்பட்ட அத்தகைய இருளில் சைதாப்பேட்டை ஜன மடர்ந்தபாகத்தில்............ வீதியில் ஒரு உருவம் போய்க்கொண்டேயிருக்கிறது. மையிருட்டானதால் ஆள் நிதானிக்கக் கூடவில்லை. தலையில் முக்காடு போட்டிருக்கிறது. எங்கும் தங்குவதற்கு இடமில்லை. தூறல் முன் சொன்ன பிரகாரம் அதிகரிக்க ஆரம்பித்து விட்டது. சில்லரைக் கடைக்காரர்கள் கூட இனியிருந்தால் மழை அதிகமாகுமென்று கடைகளைமூடிவிட்டு வீடுபோகும் சமயம். இம்மாதிரி மூடிக்கொண்டிருக்கும் ஒரு கடையினருகாமையில் வந்தது அவ்வுருவம், சற்று விளக்கு வெளிச்சமும் இருக்கவே அங்கிருக்கும் கடைக்காரனைப் பார்த்து,

“ஐயா, உமது கடையின் வெளித்திண்ணையில் இன்றிரவு சற்று படுத்துறங்கும்படி உத்தரவுகொடுப்பீரா?” என்றது.

இத்தகைய கேள்வியை அக்கடைக்காரன் இது வரையில் ஒருவரும் கேட்டறியாததலின் சற்று திப்பிரமை யடைந்தான். உடனே நிதானித்து தன்னை இப்படிக் கேட்பது யாரென்று விளக்கை யெடுத்துப் பார்த்தான். தலையில் ஈரத்துணியை விரித்துப் போட்டுக்கொண்டிருக்கும் ஓர் பெண் குழந்தை என்று அறிந்தான். உடனே

“அம்மா, நீ ஏன் அங்கு நிற்கிறாய், இப்படி வந்து ஒதுங்கிக்கொள்” எனவும் அப்பெண் கடைத்திண்ணையில் வந்துட்கார்ந்தாள். பிறகு கடைக்கதவைப் பூட்டிவிட்டு “குழந்தாய், நீ இங்கு தனியேபடுத்துக் கொள்ளுவது நல்லதல்ல. என்னுடன் வீட்டிற்கு வந்து இருந்துவிட்டு பொழுதுவிடிந்தவுடன் போகலாம்” எனலும் இருவரும் கடைக்காரன் வீடடைந்தனர். வீட்டில் பிரகாசமான விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. வீடும் பெரியதாகவே யிருந்தது. கடைக்காரர் சுமார்45வயதுக்குக்குறையாமலிருப்பார் என்றே சொல்லலாம். நடுத்தரமான உயரமும் அதற்கேற்ற பருமனும் உள்ளவர். எப்பொழுதும் நற்குணமும் அதற்கறிகுறியாய் இளமுறுவலும் இவர் முகத்தில் தாண்டவமாடும், வீட்டிற்கு வந்ததும் “கல்பகா, கல்பகா” என்று கூப்பிட்டார். சுமார் 30, 32, வயது என்று சொல்லக்கூடிய ஸாக்ஷாத் லக்ஷ்மிபோன்ற ஓர் ஸுமங்கலி—கடைக்காரரின் மனைவி—வந்தாள்.

“கல்பகா, இந்த குழந்தையைப் பார். பாபம் மழையில் நனைந்துபோயிருக்கிறது. வேறு துணி உடுத்திக்கொள்ளச் சொல்லி கொஞ்சம் வயிற்றுக்கும் ஏதாவது கொடு. நிரம்ப அலைந்ததுபோ லிருக்கிறது. ஒன்றும் இப்பொழுது அதைக்கேட்கவேண்டாம். காலையில் பார்த்துக்கொள்வோம்.”

“அதற்கென்ன, அப்படியே யாகட்டும்”

சாப்பிட்டுவிட்டு அப்படியே தூங்கிப்போய்விட்டது அக்குழந்தை

“பாபம், வெயிலில் பகலெல்லாம் அலைந்துதிரிந்துஇரவு கடைமூடுகிறவரையிலும் மழையில் நனைந்திருக்கிறது. ஒன்றும் உண்ணக்கூட வில்லை போலிருந்தது. கிடக்கிறது. உடம்பு சவுக்யமாயிருக்க வேண்டுமே காலையில். யார் வீட்டுக்குழந்தையோ! கல்பகா, அதன் தைர்யத்தையும் புத்திசாலித்தனத்தையும் பார்த்தாயா? ஆ! எவ்வளவு வினயமாய் திண்ணையில் படுக்கவேண்டி அனுமதி கேட்டது தெரியுமா? கல்பகா, அது எந்த மஹாராஜன் வீட்டுக் கண்மணியோ தெரியவில்லை. எல்லாம் காலையில் தெரிந்துகொள்வோம்” என்று இப்படி உரையாடிக்கொண்டே அவ்விரவைப் போக்கினர் நம் கடைக்கார கடகர்ப்பரும் அவர் மனைவியாம் கல்பகாம்பாளும்.

பொழுது விடிந்ததும் இரவே களைப்புமேலீட்டினால் தூங்கிவிட்ட நீலாம்பாள் எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்துவிட்டு எல்லாரும் சிற்றுண்டி புசித்தவுடன் கடகர்ப்பர் நம் நீலாம்பாளை அவள் வரலாற்றை விசாரித்தார். தனக்கு உற்றோர் பெற்றோர் ஒருவருமில்லையென்றும், அவர்கள் தான் சிறு குழந்தையாயிருந்தபோதே இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டதாகவும் தான் தன் அத்தை கல்யாணியுடன் சென்னையில் வசித்து வருங்காலத்தில் அவளும் தன்னைக் கைவிட்டு எங்கோ சென்றுவிட்டதாகவும், ஆகவே தான் ஆதரிப்பார் யாருமின்றி முந்தினநாள் முழுவதும் அலைந்து திரிந்து எங்கு போவதென்றும் தெரியாமல் இறுதியாய்கையிலிருந்த ஸ்வல்ப காசைக் கொடுத்து பழம்வாங்கி புசித்துவிட்டுத் தன் மனம் போனவழியிலேயே செல்லவும் மழை வந்துவிட்டதால் சைதாப்பேட்டையில் வந்து சேர்ந்து இரவு படுத்துறங்க இடங் கேட்டதாகவும் எல்லாவற்றையும் விவரமாய் எடுத்துரைத்தாள். கடகர்ப்பரும் கல்பகாம்பாளும் இவள் விருத்தாந்தத்தை வெகு கவனமாய்க் கேட்டார்கள்—

“குழந்தாய், இனி நீ எங்கும் போகவேண்டாம். இந்த வீட்டிலேயே உன் வீடு மாதிரி சுகமாய் இருக்கலாம். ஒன்றுக்கும் பயப்படாதே—”

“ஆம், அண்ணா, அப்படியே யாகட்டும்.”

“அவர் சொல்வதுபோல் இந்தகத்தை உன் அத்தை வீடு மாதிரியே நினைத்து வா, அம்மா—(கண்ணீர் உதிர்த்து) அம்மா, உன்னைப் போலவே எங்கள் குழந்தை ஒருத்தியிருந்தாள். அவளைப்பறிகொடுத்துவிட்டோம். குழந்தையில்லாப் பாவிகளாய்விட்டோம். அம்மா, நீயாவது எங்கள் குழந்தையாய் இருந்து கொண்டிரு.”

“அம்மா, நான் என் தாய் தந்தையரைப் பார்த்தறியேன். என் அத்தை கூட ஒவ்வொரு சமயம் இவ்வளவு பரிவாகப் பேசினதில்லை. நான் உங்களைத் தாய் தந்தையராகவே மனதிற்கொண்டேன் இராத்திரியே. இவ்வளவு அன்புடன் என்னை நடத்தினது ஒருவருமில்லை. என்னைப்போன்ற அகதிக்கு உங்களைத் தவிர துணை யார் இருக்கிறார்கள்” என்றாள். கண்களில் நீர் தாரை தாரையாய் வடிந்து கொண்டிருந்தது.

“குழந்தை, அழாதே, இனிமேல் என்ன பயம். ஒருவரும் உன்னைக் கைவிடமாட்டார்கள். கல்யாணியென்று சொன்னாயே யார் அது”

“அவளா, அவள்தான் என் அத்தை— அத்தையென்று சொல்லிக் கொண்டிருந்தவள்.”

“அவள் உன்னை எப்படி விட்டுவிட்டுப் போய் விட்டாள்?”

“நாங்கள் இருந்த வீட்டில் முதல்நாள் இராத்திரி அவள் இருந்தாள். பொழுது விடிந்து பார்த்தேன்; அவளைக் காணோம். கூப்பிட்டுப் பார்த்தேன். பதில் இல்லை. வீட்டில் சாமான்கள் கூட ஒன்றும் இல்லை. எங்கு போய்விட்டாளோ எனக்கே தெரியவில்லை. நானும் பட்டணத்தில் வெகு நாள் இருக்கவில்லை. எங்கும் தேடி அகப்படாமல் போய்விடவே அனாதையைப் போல் திரியலானேன்.”

“கிடக்கிறது........ஹூம்—உன் பேர் என்ன? கேட்டுக்கொள்ள மறந்தே போய்விட்டேன்.”

“நீலா—நீலாம்பா என்று கூப்பிடுவார்கள்.”

“ஸரி, பயப்படாதே. வீட்டிலேயே ஒழிந்த வேளையில் படித்துக்கொண்டு இரு. என்ன வேணுமானாலும் சங்கையில்லாமல் கேட்டு வாங்கிக்கொள்ளம்மா” என்று சொல்லிவிட்டு தம் வேலைகளைக் கவனிக்கச் சென்றார் கடகர்ப்பர்.

அன்றுமுதல் அவர் வீட்டிலேயே சௌக்யமாய் இருந்து கொண்டு வருகிறாள் நம் நீலாம்பாள். இத்தகைய காலத்தை இனிது கழிக்கிறாள் இன்னவிடத்தில் என்று ஒருவருக்கும் தெரியாது. தெரிவதற்கு யாதொரு முகாந்திரமும் ஏற்படவில்லை. தரணீபதி மாத்திரம் நீலாவைக் கண்டுபிடிக்க வேண்டுமென்னும் ஆவல் கொண்டுள்ளவனாயிருந்தாலும் அவனிருப்பது வெகு தூரமுள்ள பட்டணமாகையால் தகுந்த துப்புகள் துரிதத்தில் கிடைக்க வில்லை. கல்யாணிக்கு மாத்திரம் நீலாவைப்பற்றி மனதில் கோபம் ஒரு பக்கத்திலும் அனுதாபம் ஒரு பக்கத்திலும் இருந்து கொண்டே வந்தது. எனினும் நீலாவைப்பற்றி சிறிதேனும் அவள் கவலை எடுத்தவளாகக் காணப்படவில்லை. நீலாம்பாள் மாத்திரமோ எங்காவது மறுபடியும் த்யாகராஜன் முதலானவர்கள் கையில் அகப்பட்டு விடப்போகிறோமே என்று பயந்தே இங்ஙனம் தன் உண்மை வரலாற்றை சிறிது மாறுபடுத்தி யுரைத்தாள். அவள் காலம் சைதாப்பேட்டையில் யாதொரு கலவரமுமின்றி இனியதாகவே கழிந்து வந்தது.

# திருவானைக்காப்

# பதிற்றுப்பத்தந்தாதி

## TIRUVANAIKKA PADIRRUPPATTANTADI

பாராதி யண்டபகி ரண்ட முற்றும்
பரந்தெனைத்துந் தானாய பரனே மெய்ம்மைச்
சீராரு மணிமயவி மானத் தோங்குஞ்
சிற்பரனே சேதியர்கோ னன்பிங் கோர்ந்தும்
போராரும் வஞ்சகன்கைப் படவிட்டாற்போல்
போற்றுமெனைக் கைவிடா தெனைப்ப கைக்கு
நேராரைத் தவிர்த்தெளியேற் கருள்க நின்றா
ணிழன் மருவிச் சிவானந்த நீடு மாறே. (62)

ஆறேறு மணிமுடிகொ ளரனே நாவ
லடியமரும் பெருமானே யடர்க்கும் வீரப்
பாறேறு மேறேறும் பரனே கொன்றைப்
பைந்தருநின் றருக்காட்டப் பரவா ணாயன்
வீறேறு மன்பினில்யா னொருகூ றெய்த
விழைந்தருளி லென்பாற்கூற் றுவன்மே வாணாற்
பேறேறு மொருசிறுவன் பான்முன் போந்து
பெற்றவுதைத் தழும்புடலிற் பிறங்கலானே.63)

பிறங்குமுளத் தன்பினொடும் பரவி நின்றாட்
பேறுபெறு மதமாவாய்ப் பிறக்கி லேன் மஞ்
சுறங்குசிகைக் குன்றென வந்தெதிர்த்த வஞ்ச
வும்பலெனப் பிறக்கினுநின் னுருக்க ணார்வன்
கறங்குதிரைக் கடலகட்டிவ் விருவ கைத்தாங்
காரியக்கு மிடமிலனா யுழல்வே னென்றன்
றிறங்குலவு மலரடிக்காட் படுவ தெந்தாய்
தென்காவைப் பதியமருந் தேவ தேவே. (64)

தேவர்கோ னானற் றுகொடுஞ் செடித புத்தா
டிருவருட்பாங் கறிந்தனடிக் கடிமை பூண்டும்
பூவருபங் கயன் காத்தும் பங்க யன்றன்
புதல்வன்றன் காத்துமினிப் புகிலிப் பூவி
லேவருக்கும் பெருநகைப்பிற் கிடமன் றேவல்
வெண்மையெவர் பாற்றெனநன் கெண்ணி
யேனுஞ்
சேவருநின் றாள்பெறுமா றருள்வாய் காவைச்
செழுநகரி னமர்ந்திலகுஞ் சிவபிரானே. (65)

சிவமயமிவ் வகிலசரா சரம தென்னாத்
தேறேனம் புலநெறிச்செல் லகம டக்குந்
தவமிலேன் குருமுதன்முப் பொருளோர் கில்லேன்
றானதுவாந் தன்மையொரு சிறிது மோரேன்
உவர்மேனி யீரங்கொல் லியனைக் கண்டன்
றுன்னடிய னெனப்பரவு மடிச்சே ரன்பக்
குவமிலே னருட்பெறுமா றென்னோ காவைக்
குருமணிமா னத்தமருங் குணப்பொற் குன்றே. (66)

குன்றெடுத்தோ ணிரா புரந்தோன் விழிபெயர்த்
துன்
கோகனகத் தாட்கணியக் குலவு மாழி
யன்றுதவு வண்மையைக்கண் டின்ற டுத்தேற்
கன்பினருட் செயாதெனகி லாண்ட வல்லி
யொன்றினளோர் பான்மற்றோர் பான்மா னின்றா
னான்றனக்கே கிடமென்பா லில்லை யென்னி
லென்றெனக்காப் பொய்ம்மொழியேன் சராசரங்க
ளெல்லாநின் வயினொடுங்கு மியல்கண் டேனே. (67)

கண்டெழிற்காஞ் சியிலன்பும் பொருளு நேர்ந்து
காடவர்தங் கோமானு நின்னை யூரி
லெண்டகுபா வனையொன்றாற் பூச லாரு
மெடுத்த சிவா லயங்கடமி னினைத்தாபிக்கக்
கொண்டசுப நாளொன்றாக் கூடப் பின்னாட்
கொள்கெனக்கா டவர்க்குநவில் குறிப்பிங்கோரிற்
றிண்டிறல்சே ரங்கெறிகொண் டுய்வேன் காவைச்
சிலந்திநூற் றளியவது தேர்கி லேனே. (68)

தேர்ந்தகய வாயால வாய வாய்முன்
றென்றுமித்திஞ் சயமருளாற் சித்திக் கப்பெற்
றார்ந்தவலி யான்பெயரு நின்றாட் பேறு
மங்குறவு மையறிவோ டொன்றை யோருங்
கூர்ந்தபகுத் தறிவு முறு மொருபே ரியாக்கை
கொண்டுமுனைப் பரவகிலாக் கொடியே னின்
சார்ந்தசுகா தீதநிலை மருவ லெங்ஙன் (றாட்
றவஞான தலத்தமுதே சாற்று வாயே. (69)

சாற்றும லொருநால்வர்க் கன்றா லின்கீழ்ச்
சாற்றியகைக் காட்டறியேன் றமிழ்வேதத்தி
னூற்றாரு மெழினால்வ ரிரண்டற் றொன்றா
யுற்றிலகு மத்துவித முத்தி தேரே
னேற்றார்நின் சந்தான மரபுற் றேங்கு
மெழிற்குரவ ரார்ந்தநல மீதென் றோரேன்
கூற்றார்ந்த வுமைபரவக் காவை மேவுங்
குழைகழற்றா ணிழலெவணங் குறுகுவேனே. (70)

### எழுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

கூடகன்ற புள்ளொணக் குலாவு மெய்பி னுயிர்நிலை
நாடகன்ற வொள்ள றிவி னுயிமேனனு மளிமுரா
லேடகன்ற வண்கழற்க ணேயு மாறென் காவிரி
யூடகன்ற நற்றளிக்க ணோங்கிவாழு மீசனே. (71)

ஈசனேசுரேசனேத் துமிறைவனே வெண்ணாவல்வாழ்
நேசனேநற் றிரிபதார்த்தநிலையிதாமென்றோர்கிலாப்
பாச னேனைம் பாசமும்ப ரித்தியாக மாய்விசு
வாச நேசம்வாய்ந்துனை வணங்குமாறு செய்கவே.72

செயற்க ருஞ்செ யற்பரிந்து செய்வாற்பெரியரென்
னியற்ப ருஉக்கை மாவுரித்தெடுத்தவாற்றறேற்றவுங்
கயற்க ணார்ம யற்ப டிந்தொர் காலுநின்கழற்றொழே
னுயற்கெனக்கொர்வகைபணிக்கவுற்றகாவையத்தனே

அத்த விபபிறப்பில் யானி னடிகள்காணுமருளிலே
னெத்துவேதநாவன் மன்னிலுயர்வெணாவன்முயலகன்
னைத்த மேனி பரவைவாயிற்படியெனப்பிறக்கிலேன்
னத்தனையு முயல்கிலாது னடியினைக்கண் டுய்வனே



# வஸந்த மாளிகை

## VASANTHA MALIKAI

### அத்தியாயம். 21

### ஸூத்ரதாரன்

### The Wirepuller

அதிஸமீப காலத்தில் நடக்கப்போகிற வஸந்த மாளிகை க்ருகப்ரவேச ஸம்பார வைபவங்கள் தேசமெல்லாம் பரவிவிட்டன. நரசிம்மராஜன்மீது மஹாராணியின் அன்பு நாழிகைக்கு நாழிகை விருத்தியாய் வருகின்றது. வெளியில் பார்ப்போர்க்கு எவ்வளவோ ஆடம்பர மாயிருந்த போதிலும், அவன் மனம் பெருங்கடலில் கப்பல்நடத்தும் மாலுமியின் மனம் போலசஞ்சலமடைந்து கொண்டிருக்கின்றது. ஒருபக்கம்காதல்,ஒருபக்கம் கௌரவம்,ஒருபக்கம் அந்தஸ்து, இன்னொரு பக்கம் ராஜகோபம்—இவ்வாறு பலஅபாயங்களின் மத்தியலகப்பட்டுத் தவிக்கும் தன்வாழ்வெல்லாம் பாறைகளுக்கும் பெரும்புசலுக்கும் நடுவில் சஞ்சலிக்கும் மரக்கலம் போன்றதென உணர்ந்தான் நாயக்கர் வம்சத்துதித்த நமது ராணி, குணமாயுமிருப்பாள், க்ஷணநேரத்தில்கோபமும்வந்துவிடும். அவளிடமிருந்து நிர்வஹிப்பது அதிகக் கஷ்டம். கணங்கழிப்பது கல்பம் போல் தோன்றும்.

"ஆஹா! எவ்வளவு சிரமப்பட்டு இப்பெரும் பதவியடைந்தேன். இம்மங்கம்மாள் அரசில் மந்திரியாவதென்றால் சுலபமான காரியமா? இப்பதவியை, கேவலம் ஓர் பெண்ணின்மேல் கொண்ட காதலால் இழப்பதா?............ஐயோ!

பானுமதி! கேவலம் இவ்வந்தஸ்தின் நிமித்தம் உன்னை வெறுப்பேனா? .........உலக வதந்திப்படி மஹாராணியின் தௌஹித்ரியை நான் மணம்புரிய நேர்ந்தால்—"

இந்நிலையில் மஹாவீரன் ப்ரவேசித்தான்.

**நரசிம்மராஜன்:**—பானுமதி வராவிடில் மஹாராணியின் சந்தேகம் உறுதியாய் விடும்.

**மஹா:**—மஹாராஜ்! இப்பொய் வேஷம் பூண்டு பானுமதியம்மாள் சற்று காலமிருக்க.—

**நரசி:**—அடே துஷ்டா! என்காதலி உன்மனைவியென்ற பெயர் வஹித்தா—?

**மஹா:**—மஹாராத்! இல்லாவிட்டால், எல்லாம் வெளியாய் விடும் குடிகெட்டுப்போம்.

**நரசி:**—வேறு வழிசொல்.அவளும் உடன்படாள். எனக்கும் மனம்சகியாது.

**மஹா:**—ஐயனே! என் சொல்வேன்........... ஆனால்—ஆள் மாறாட்டம் செய்து வேறு மங்கையை வஸந்தமாளிகைக்கு வரச்செய்யலாமோ?

**நர:**—சுத்தபைத்யம். தர்மராஜன் வருவான்:—

**மஹா:**—தர்மராஜன் வராமல் செய்துவிடலாம்!

**நரசி:**—எப்படி?

**மஹா:**—எத்தனையோ வழியிருக்கின்றன! பெரியோர் காரியங்களில் அற்பர் தலையிட்டால்—அவர்கள் கதி அவ்வாறுதான்!

**நரசி:**—மஹாவீர! இன்னொரு முறை யிவ்வாறு பிதற்றாதே! தவிரவும் பானுமதியை யறிந்த எத்தனையோ பேர்கள் அன்று தர்பாருக்குவருவார்கள்—!

**மஹா:**—மஹாராத்! இனி எனக்கொன்றும்தோன்றவில்லை. தாங்களிட்ட சட்டப்படி நடக்கத் தங்கள் ஊழியன் இதோ காத்திருக்கின்றேன்.

நரசிம்மராஜன் சற்று ஆலோசித்தான்.

**மஹாவீரன்:**—என்ன செய்யலாம். 'ஆக்கப்பொறுத்தது ஆறப்பொறுக்கவில்லை' என்று முடிந்துவிடும். கிணற்று நீரை வெள்ளமா கொண்டுபோகும். பானுமதிஎங்கே போகிறாள். உங்கள் பதவி ஸ்திரமாய் விட்டால், பிறகு இஷ்டப்படி பானுமதியுடன் வாழ்வதால் என்ன தடை? நம் பேதமையால், ராணியார் கோபத்துக்கு ஆளாகிவிட்டால், ராஜ்ய ஸம்பத்தும் போய்விடும், இவ்வளவுக்கும் காரணமான பானுமதியையும் பிரிய நேர்ந்துவிடும்.—

**நரசி:**—பின்னை என்னதான் உத்தேசிக்கின்றாய்? சொல்லித் தொலை.

**மஹா:**—ஏதோ பானுமதி சிறிதுகாலமாய் உடம்பு சௌக்கியமில்லை. வெளியே வரமுடியாது. வைத்யர் உத்தரவும் அப்படியே என்று மஹாராணியாருக்குத் தெரிவிக்கவேண்டும். லேசானமருந்து ஒன்று—அல்லது அவளே உடன் பட்டுவிட்டால் அதுவும் அவசியமில்லை— ஆகையால் தாங்கள் பானுமதிக்கு ஒரு கடிதம் எழுதிக்கொடுத்தால் அவள் கட்டாயம் உடன்படுவாள். அவள் அறியாதவளா நமது சங்கடங்களை?

நரசிம்மராஜன் வெறுப்புடன் ஒரு கடிதத்தை வரைந்து, மஹாவீரன் முகத்தில் எறிந்தான். "போ சீக்கிரம்! என்ன வேண்டுமானாலும் செய்!" என்று ஆக்ஞாபித்துவிட்டு தூண்போல நின்று விட்டான்.

மஹாவீரன் ஆவலுடன் கடிதத்தை எடுத்துக்கொண்டு வெளியே விரைந்தோடி தயாராயிருந்த குதிரைமுதுகில் பாய்ந்து திருவூர் மடம் நோக்கிக் குதிரையைத் தட்டிவிட்டான்.

---

### அத்தியாயம் 22

### பெண் பாவம்

### Pity of Womanhood

நாட்டுப்புறத்தில் பிறந்தவளாயினும் பானுமதி செல்வமாய் வளர்ந்தவள். சிறுவயதிலேயே தன் தாயாரை இழந்தவளாயினும்தன் தகப்பனாரின் வாத்ஸல்யத்தாலும், தர்மராஜன் ஸ்நேகத்தாலும், எவ்வளவோ சுகமாகவும், செல்வமாயும் வளர்ந்து வந்தாள்.

"ஜானகி எனக்கு என்ன பதவியிருக்கின்றது? மனதுக்கிசைந்த மணவாளனுடன் பிரியாது வாழ்வதல்லோ மங்கையர்க்கழகு! ஐயோ! தர்மராஜன்—ஹா! இனி அவனைப்பற்றிப் பேசுவதில் என்ன பயன்?"

**ஜானகி:**—அம்மணி! அவரைப்பற்றி அடிக்கடி பேசாதிருப்பதே நலம்.

**பாநு:**—ஜானகி! என்ன சொன்னாய்? மதிலிடிந்தால் கட்டலாம்; மனமிடிந்தால் கட்டமுடியுமா? சிறு வயது முதல் எவ்வளவோ நேசமாய் வாழ்ந்து வந்தோம். காலப் பிசகாலும், பெண் பேதமையாலும்—தூரத்துப் பச்சை கண்ணைப் பகட்டும் என்றபடி—இவர்கள் இவ்வாறு ஸம்பாஷித்துக் கொண்டிருக்கையில் அறைக் கதவு திடீரென்று திறந்தது. பரதேசி பிரவேசித்து,

"அம்மணி! மஹாவீரர் வந்திருக்கிறார்" என்று சொன்னான்.

**பாநுமதி:**—மஹாவீரன்! என் தலை விதி அவன் முகத்திலும் விழிக்க நேர்ந்தது. ஒரு வேளை என் ப்ராணநாதர். அனுப்பியிருப்பார். வரச் சொல்லித் தொலை.

பானுமதி அதிக ஆவலுடன் மஹாவீரன் வரவை எதிர்பார்த்து நின்றாள். மஹாவீரன் ப்ரவேசித்தான். அவன் ஆவலும், ஆத்திரமும் அவன்முகத்தில் தோன்றின. பாநுமதி அவைகளைக் கவனித்து விட்டு "என் காதலர் உன்னை அனுப்பினாரா? ஐயோ! அவருக்கென்ன உடம்பு? ஜகதீசா?"

**மஹா:**—அம்மணி! அப்படி ஒன்றுமில்லை! அம்மணி! பரம ரஹஸ்யம் ஆகையால்.

**பாநுமதி:**—"ஜானகி! பரதேசி! சற்று வெளியே போயிருங்கள்"

ஜானகியும் பரதேசியும் வெளியே சென்று, கதவண்டை நின்றார்கள். கதவு உள் புறம் தாளிடப்பட்டது. சிறிதுநேரம் ஒன்றும் கேட்கவில்லை. பிறகு அதி கோபமான வார்த்தைகள் கேட்டன, உடனே "அடே துஷ்டா! கதவைத் திறக்கிறாயா இல்லையா? இனி என்னிடமிவ்வாறு மறுபடி சொல்லாதே! 'யாரடா அங்கே கதவைத்திற! அடிஜானகி! ஜானகி! கதவைத் திற! உடைத்தாவது திற! இச்சண்டாளன் வசமகப்பட்டுத் தவிக்கிறேன்" என்ற குரல்கள் பானுமதியிடமிருந்து கேட்டன.

'பானுமதி! நீ செய்யும் வேலையின் முடிவை நீயறியாய்—" என்று மஹாவீரன் கோபத்துடன் கூறினான்.

இதற்குள் பலாத்காரமாய்க் கதவு திறக்கப்பட்டது. ஜானகி விரைந்தோடி பானுமதியைக்கட்டிக்கொண்டாள். பற்களை நெற நெறவென்று கடித்துக்கொண்டு மஹாவீரன் நிற்கிறான்.

'அம்மணி! என்ன ஸமாசாரம்? என்று ஜானகி வினவினாள்.

"அடே பாவி! என்னடா செய்தாய் அவளுக்கு?" என்று ஆவலுடன் பரதேசி வினவினான்.

**மஹாவீரன்:**—நானா? ஒன்றுமில்லையே. எஜமானன் சொல்லியனுப்பிய கட்டளையை எஜமானிக்குத் தெரிவித்தேன். கேட்டால் கேட்கிறாள். இல்லாவிட்டால் அதன் பயனை யனுபவிக்கிறாள்—!

**பானுமதி:**—ஜானகி! இப்பரமதுரோகி, என் நாதனைப்பற்றிப் பழி கூறுகின்றான். பொய் சொல்லுகின்றான். நம்பேன். ஒருக்காலும் என் ப்ராணநாதர் அவ்வாறு சொல்லியிருக்கமாட்டார்.

**மஹாவீரன்:**—அம்மணி! தாங்கள் இப்பொழுது கோபாவேசமா யிருக்கின்றீர்கள். எல்லாம் ஆறின பிறகு தெளிவாய் விவரிக்கின்றேன்.

**பானுமதி:** ஒன்றும்வேண்டாம். ஜானகி! இந்தப் பாதகனுடைய உடையைப்பார்த்தாயா? என் ப்ராணநாதனைப்போல வேடம் பூண்டு வந்திருக்கின்றான். இந்தச்சண்டாளனோடுநான் வஸந்தமாளிகை செல்ல வேண்டுமாம். அங்கே மஹாராணிமுன், என் ப்ராணநாதர் ஸந்நிதியில் நான் இப்பாவியின்மனைவியென்று ஒப்புக்கொள்ளவேணுமாம். ஹா ஜகதீச! என்ன கர்ணகடூரமான வார்த்தை!

**மஹாவீரன்:**—பரதேசி! ஜானகி! நீங்கள் ஸாக்ஷி. பாநுமதி கையில் எஜமானன் என் மூலமனுப்பிய கடிதமிருக்க, நான் எவ்வளவோ வருந்திக் கேட்க—பானுமதி அவர் உத்தரவுப்படி நடக்க இணங்கமாட்டேன் என்கிறாள்.

**பரதேசி:**—இது பெரிய சங்கடந்தான். பெண் புத்தி பின்புத்திதானே. புருஷர்கள் முன்பின் யோசியாமல் செய்வார்களா? சிலசமயங்களில் சில காரியம் செய்யத்தான் வேணும். வழி எப்படியானாலும் பயன் நலமாயிருந்தால் போதும். இதெல்லாம் யோசிக்க வேணும் அம்மணி!

பானுமதி "என்ன ஆனாலும் சரி. என் நாதர் மனப்பூர்த்தியாய் இவ்வுத்தரவு செய்திருக்கமாட்டார். ஏதோ மோசமாயிருக்கிறது" என்று சொல்லி கையிலிருந்த கடிதத்தைக் கிழித்தெறிந்து விட்டாள்.

**மஹாவீரன்:**—நீங்கள் ஸாக்ஷி! இனி என்மேல் குற்றமில்லை!

**பாநுமதி:**—சீ! நீயொரு மனுஷ்யன்தானா? வெளியேறு.

மஹாவீரன் ஒன்றும் சொல்லாமல் கோபவெறியுடன் வெளியே செல்ல பரதேசியும் அவனைத்தொடர்ந்து சென்றான்.

மஹாவீரன் திடீரென்று திரும்பி 'பரதேசி! பரமானந்தன் எங்கே?' என்று வினவினான்.

**பரதேசி:**—மஹாராஜ் ! ரஸாயன சாலையில் ஏதோ கல்யம் சேர்த்துக்கொண்டிருக்கின்றார். நடுப்பகல் வரை அவரைப் பார்க்கலாகாது. ஒருவேளை நிஷ்டையில்—

**மஹாவீரன்:**—கோப வெறிநடுவில் சற்று சிரித்துவிட்டு, "கழுதையை ஒட்டி மேய்க்கிறார். எனக்குக் கூடவா அவ்வாறு காலவரை? அவன் அறைக்குவா" உடனே இருவரும் ரஸாயன சாலை வந்துசேர்ந்தார்கள். பரதேசி பயபக்தியுடன் பக்கத்தில் நின்றான். அறைக்கதவு உட்புறம் தாளிட்டிருந்தது. மஹாவீரன் திடீரென்று உரக்கத்தட்டினான்.

**பரமாநந்தர்:**—(உள்ளே இருந்தவாறே) என்ன சங்கடம்! அடிக்கடி என்னைப் பூலோகத்துக்கழைக்கிறீர்கள்?" என்றான்.



**மஹாவீரன்:**—ஆமா ! உன்னைப் பாழ்லோகத்துக்கழைக்கிறார்கள். அடே! தாடி! கதவைத் திறக்கிறாயா—?

கதவு திறக்கப்பட்டது. பரதேசியும் மஹாவீரனும் அறைக்குட்புகுந்து கதவை உட்புறம் தாளிட்டுக்கொண்டார்கள். மஹாவீரன் வெளியேறியதும், மானம் கோபம் முதலானவைகளால் பாதிக்கப்பட்டு பாநுமதி பலவாறு ஆலோசித்துக்கொண்டே அவ்வறையில் குறுக்கும் நெடுக்குமாய் உலாவிக்கொடுத்தாள்.

"அடே சண்டாளா! இரக்கமற்ற பாவி!—ஜானகி! என்ன பொய்! என் நாதர் நான் இச்சண்டாளனுடைய மனைவியென்று ஒரு க்ஷணமாவது சொல்லிக் கொள்ளும்படி ஆக்ஞாபித்திருப்பாரா? ஒருக்காலும் மாட்டார் ஜானகி! இனி அரைக்ஷணங்கூட இங்கே இருக்கமாட்டேன். எனக்கென்னவோ பயமாயிருக்கிறது. ஜானகி! உன் தகப்பனையும்—இந்தப்பாவி மஹாவீரனையும் பார்த்தால் யமனும் நமனும் மாதிரி தோன்றுகிறது. நான் எங்கேயாவது ஓடிப்போகிறேன். ஐயோ! நான் எங்கே போவேன்? எனக்குப் போக்கிடம் சொல்லேன்! ஐயோ! ஐயோ!"

**ஜானகி:**—அம்மணி! எங்கே போகமுடியும்—எனக்கொன்றும் சொல்லத் தோன்றவில்லையே! உங்கள் நிலைமை எனக்குப் பரிதாபமாயிருக்கிறதே!

**பாநுமதி:**—"ஐயோ! ஜானகி! ஒன்றும்தோன்றவில்லையே! ஹா! ஜகதீசா! ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! இப்பாவிகள் வசப்பட்டுப் பரிதபிக்கும் இப்பாலையின் மீது உமக்கிரக்க மில்லையா? முன் திரௌபதியை மான பங்கத்தினின்றும் காக்கவில்லையா? ஐயோ! ஐயோ!" என்று கதறிக்கொண்டு மூர்ச்சையாய் அப்படியே ஸோபாவில் சாய்ந்தாள்.

ஜானகி. பரபரப்புடன் அருகிலிருந்த செம்பில் தண்ணீர் கொண்டுவந்து பானுமதி முகத்தில் தெளித்து, மயில் தோகை விசிறியால் வீசி, ஆச்வாஸப்படுத்திக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்துக்குள் பாநுமதி மூர்ச்சைதெளிந்து கண்விழித்தாள்.

இந்த நிலைமையில் பரதேசி ஒரு டம்ளரில் ஏதோ ஒரு மருந்துகலந்த த்ராவகத்தைக்கொண்டு, உள்ளே நுழைந்தான். அவன் முகமானது ஹிருதயத்துள்ள கபடத்தை வெளியிட்டது. ஜானகி நடுநடுங்கினாள். உடனே தகப்பனண்டை யோடிவந்து, 'அப்பா! இது என்ன? யாருக்கு?' என்று வினவினாள்.

**பரதேசி:**—கண்மணி! இது உன் எஜமானி பாநுமதிக்கு. இது அம்ருத ஸஞ்ஜீவி!—

**ஜானகி:**—என்னிடம் கொடுங்கள். எஜமானியிடம் கொடுக்கின்றேன் என்றுசொல்ல, பரதேசி கை நடுக்கத்துடன் அதைத் தன் மகளிடம் கொடுத்தான்.

ஜானகி இரண்டுமூன்று தடவை தன் தகப்பன் முகத்தைப் பார்த்துவிட்டு,

அப்பா! நானும் கொஞ்சம் சாப்பிடுகின்றேன். என் எஜமானிக்குச் சேர்க்கப்பட்ட மருந்து எனக்கும் குணமாய்த் தானிருக்கும் என்று சொல்லிக்கொண்டு டம்ளரை உதடுவரை உயர்த்தினாள்.

உடனே பரதேசி அவள்மீது பாய்ந்து பலாத்காரமாய் அதைப் பிடுங்கிக்கொண்டு கோபாவேசத்துடன் தன் மகளை நோக்கினான். ஜானகி நடுநடுங்கினாள்.

**பாநுமதி:**—எங்கே நீயே கொஞ்சம் சாப்பிடு—

**பரதேசி:**—நான் மாட்டேன். உங்களுக்காகச் சேர்க்கப்பட்டிருக்கும் இவ்வருமையான ஔஷதத்தை நான் எப்படி யருந்துவது.

**பாநுமதி:**—என்முன் நில்லாதே! உடனே வெளியேறு, என்று கம்பீரமாய் ஆக்ஞாபித்தாள்.

பரதேசி ஒன்றும் சொல்லாமல் வெளியே சென்றான்.

ஜானகி விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

**பாநுமதி:**—ஜானகி! எனக்காக நீஅழவேண்டாம்! என் தலை விதிப்படி நடக்கட்டும். அதற்காக நீ ஏன் வருத்தப்படுகின்றாய்?

**ஜானகி:**—அம்மணி ஐயோ என் மனம் பதறுகின்றதே! எப்படியாவது உங்களை இப்பாவிகளிடமிருந்து வெளியேற்ற வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். நான் போய் வருகிறேன். சற்று விடையளியுங்கள்!

**பாநுமதி:**—என்னை இத்தருணம்தனியாய் விட்டுப் போகலாமா?

**ஜானகி:**—அம்மணி! இனிக் காலதாமதம் செய்வது அபாயகரம்; ஜடுதியில் திரும்பி வருகின்றேன். விடையளியுங்கள் என்று சொல்லிப் பதில் கூட எதிர்பாராமல் சரேலென்று வெளியேறி விட்டாள்.

இதற்குள் பரதேசி மறுபடி ரஸாயனசாலை நுழைந்தான்.

**மஹாவீரன்:**—குடித்து விட்டாளா பாநுமதி?

**பரதேசி:**—மறுத்துவிட்டாள். என்மகள் முன்னிலையிலேயேகொலை செய்யச்சொல்லுகின்றாயா என்னை?

**மஹாவீரன்:**—அடே முட்டாள்! உனக்கெத்தனை தடவை சொல்லுவது? இது உயிர்ச்சேதம் செய்யாது என்று—இம்மஹான் இதற்கெல்லாம் உடன் படுவாரா? உனக் கெங்கேடா புத்தி போயிற்று?

**பரமானந்தர்:**—இந்த ஸ்வர்ண ரேகை யறியச் சொல்லுகிறேன். ப்ராணபாயம் வராது; கொஞ்சம் தலைவலி கிறுகிறுப்பு, வியர்வை, சொக்கு, மயக்கம்—

**பரதேசி:**—ஐயா! போதும் போதும்! இது வரை செய்தபாவம்போதும். இனிமேலாவது கொஞ்சகாலம் நல்வழி தேட முயல்கின்றேன். என்னை விட்டு விடுங்கள். இத்தொழில்களுக்கு நான் உடன்படேன்.

**மஹாவீரன்:**—"நீ நாசமாய்ப்போ! உனக்குப்பிடித்துவிட்டது அனர்த்தகாலம் கொட்டோடு முழக்கத்தோடு!" என்று சொல்லி, அம்மருந்தைப் பிடுங்கிக்கொண்டு பாநுமதியிருந்த அறையை நோக்கி வெகு வேகமாய் விரைந்து சென்றான்.

# மாணவர் பங்கங்கள்

## STUDENTS' PAGES

## ஆத்திசூடி விளக்கம்

### 38. கெடுப்பதொழி

இதற்கு (1) பிறருக்குக் கெடுதி செய்யவேண்டும் என்ற எண்ணத்தைவிட்டு விடு என்றும் (2) நம்மைக் கெடுத்துவிடுவதான கெட்ட மனோ நிலைகளை தலையெடுக்க வொட்டாது வேரறுத்து விடு என்றும் இரண்டு விதமாகப் பொருள் கூறலாம். இதில் பின் அர்த்தத்துள் முன் அர்த்தம் அடங்கியுள்ளது.

(1.) கேடு நினைப்பதை ஒழி என்ற முதல் பொருளை எடுத்து ஆராய்வோம். ஒருவன் நல்ல நிலையில் உலக ஸுகங்களை அனுபவித்துக்கொண்டு ஆனந்தமாக இருப்பதைக் கண்டாவது, அல்லது தாழ்ந்த நிலையிலிருக்கும் ஒருவன் கூடிய சீக்கிரத்தில் மேலான நிலைக்கு வருவான் என்பதை கேட்டாவது, பொறாமை கொண்டு அவனை கஷ்டத்திற்குள்ளாக்கியாவது தடை செய்தாவது மகிழும் தன்மை வாய்ந்த மனோநிலைக்குக் கேடு நினைப்பது என்று பெயர். இம்மாதிரி வீண் அஸூயையால் கொடுமையான கேடு சூழும் எண்ணம் உண்டாக இடங்கொடுக்கக்கூடாது. இப்படி ஏன் எண்ணம் உண்டாக இடங்கொடுக்கலாகாது என்ற கேள்விக்குப் பதிலாக உள்ளது தான் 'கெடுவான் கேடு நினைப்பான்' என்றபழமொழி: அதாவது ஒருவன் பிறனுக்குக் கேடு நினைத்துக் கொண்டு காரியங்களைச் செய்து வருகையிலேயே, அந்தக் காரியக்கூட்டங்களைக் கொண்டே ஸர்வஸாக்ஷியான ஈசன் அவனைத் தகைந்து பெரிய கேட்டிற்குள்ளாக்குவார் என்பதே. இக்கருத்தை உள்ளடக்கி யுள்ளது தான் 'தன்வினை தன்னைச்சுடும்' என்றபழமொழியும். பொதுவாக அமைந்துள்ள நீதிகதைகள் நாடகங்கள் எல்லாவற்றிலும் ஒரு நல்லவன் கதாநாயகனாகவும் அவனுக்கு அந்த ஒருவன் கேடு சூழ்வதாகவும், கொடியவன் ப்ரயத்தனங்கள் வீணாகி எல்லாம் அவன் மேலேயே பாய்ந்து அவனைக் கேட்டிற்குள்ளாக்கித் தத்தளிக்கும்படி செய்வதாகவும், முடிவில் கதாநாயகன் அதைக் கண்டு தனக்குக் கேடு சூழ்ந்தவன் அவன் என்ற எண்ணத்தையும் ஆத்திரத்தையும் விட்டு அவனுக்கு இரங்குவதாகவும், கொடியவன் கஷ்டம் நீங்க அதனோடு அவன் மிக வெட்கித் தன் கொடியமனோ நிலையை விட்டு விடுவதாகவும்தான் காட்டப்பட்டிருக்கும். ஷேக்ஸ்பியர் ஸுககர நாடகங்கள் எல்லாம் இப்படியே அமைந்துள்ளன; துக்ககர நாடகங்களில் கதாநாயகன் கொடியோரால் இறக்கும்படி நேர்ந்தபோதிலும் கொடியவர் வெளிப்பட்டுத் திண்டாடாது மாத்திரம் போவதில்லை. புராண கதைகளில் எல்லாம் கேடு நினைப்பவர், செய்பவர் எல்லோரும் கடவுள் தண்டனைக்கு ஆளாகாமல் போவதேயில்லை. மாடுகள் ஸரியாக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும் என்ற பொய்க்காரணத்தை வெளியிட்டுக் கொண்டு, உண்மையில் பாண்டவர்களை அவரது கஷ்டகாலத்தில் தமது ஸுக தர்சனத்தால் நன்றாக வருந்தும்படி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் காடு சென்று ஜலக்ரீடாதிகள் செய்த தார்யோதனாதியர் சைத்ராதன் என்ற கந்தர்வனால் சிறை பிடிக்கப்பட்டு துக்கித்துப் பாண்டவர்களாலேயே தான் விடுபடும்படி நேரிட்டது. இம்மாதிரி அநேக கதைகள் புராணங்களிலிருந்து அடுக்கலாம். கெடுவான் கேடு நினைப்பான் என்ற கருத்தை நேரிடக் காட்டுவது சந்திரஹாஸ சரித்திரம். இதில் துஷ்டபுத்தி என்ற மந்திரி சந்திரஹாஸன் அரசனாகிருப்பதற்காக மூன்று தரம் அவனை ரஹஸ்யமாக கொலைசெய்துவிடப்பார்த்தான்; முதல் தரம் சிறுகுழந்தை பருவத்திலிருந்ததால் தப்பி பிழைத்துக்கொண்டான் சந்திரஹாஸன் கொலையாளிகள் கருணையால்; இரண்டாம் தரம் துஷ்ட புத்தி கடிதத்தில் அமைந்துள்ள இரு பொருள் விசேஷத்தால் அவன் பெண் விஷையையே கல்யாணம் பண்ணிக் கொண்டான்: மூன்றாம் தரம் அயனும் அவன் பிள்ளையுமே இறக்கும்படி வந்துவிட்டது. பின்னர் சந்திரஹாஸன் மனக்கனிவால்தான் அவன் பிழைத்தெழும்படி நேரிட்டது. மேலும் இந்தக்கதைகளின் போக்குகளை எல்லாம் கவனித்தால் வேறொரு உண்மையும் வெளியாகும். கேடு சூழ்பவன் எதிரி, பக்தியாதி ஆத்ம குணங்கள் நிறைந்த சாந்த புருஷனாகவும் இருந்து விட்டால், கேடு நினைப்பவன் ப்ரயத்தனங்கள் பயன் படாமல் போவதோடுகூட எதிரிக்கு அனுகூலமாகவே ஏற்பட்டு கொடியவனை வருத்தி மேல் மேலுமே கேட்டைச் சூழ்ந்துகொடுமையில்லைகைதேறும்படி செய்து முடிவான தண்டனையாகிய மரணம் அல்லது எதிரியின் கருணைக்குப்பாத்திரமாதல் ஆகிய மானங்கெட்ட நிலைக்குத் தயார் செய்து விடுகிறது. உண்மையை உணர்ந்தோர், கேடு சூழ்வது இவ்வாறு தனது போக்கின் விரிவால்தானே வளர்ந்து மனதை கெடுத்து தம்மையும் கொடியவராக்கிவிடும் என்று நன்றாக அறிந்து பிறர் தமக்குக்கேடு செய்தபோதிலும் அவர்களுக்கு நன்மையையே செய்ய விடாமல் முயலுகின்றனர். பிறர் ஸுகத்தைக்கண்டு பொறாமைப்படும் நிலை ஏற்படாதிருப்பதற்கு மைத்ரீ (ஸ்நேஹம்) பாராட்டல் என்றவழி, அதாவது ஸுகிப்போர் நமது தோழர் என்று கருதி அவர் ஸுகம் நமது தான் என்று கருதும் மனோநிலை, தகுந்த ஸாதனமாக சாஸ்திரங்களில் எடுத்துக் காட்டப் பட்டிருக்கிறது. மனதிற்கு மனமே சாக்ஷி என்ற பழமொழி ஒன்று உண்டு. கேடு சூழ்வோனைக் காணும் ஸாதுக்களுக்குக்கூட சற்று மனம் கலங்கி அவனுக்கு எதிர் கேடு செய்து விடவேண்டுமென்று தோற்றுமாம்: அல்லது அவனைக்கண்டதும் பயந்து விலகிவிடத் தோன்றுமாம்: அவனை ஒரு கொடியவன் கண்டுவிட்டால் கேட்கவேண்டுமா? நமது உயிரைக் காப்பாற்ற



பிறருயிரை திருணமாக எண்ணி வதைக்கத்தயாராகும் பொது ஜனங்களைக் கண்டு மிருகாதிகள் பயந்தோடுவதும் அல்லது பாய்ந்து கொல்லுவதும் ஸஹஜமல்லவா? நாம் அதற்கு பயந்து அதைக்கொல்லத்தயாராகிறோம்: அது நமக்குப் பயந்து நம்மைக்கொல்ல அல்லது வருத்தத்தயாராகிறது. இந்த ஹிம்ஸாபாவனை முற்றும் நீங்கப்பயிலும் வானப்ரஸ்தர்கள் ஸந்யாஸிகள் இவர்களைக்காணும் காட்டுமிருகங்களும் கூட தமது கொடுமை மறந்துபோய் இவர்களுக்கு, அவைகளோடு ஸஹஜமாக காட்டிலிருந்து, தவம் செய்ய இடங்கொடுத்து வந்ததில்லையா? ஆதலால் கேடுநினைப்பதால் நினைப்பவன் மனம் கெடுதிக்குள்ளாவதோடுகூட, அதனை அணுகும் மற்றைய மனங்களையும் கேடு சூழும்படி தூண்டிக் கெடுத்துவிடும். ஆதலால் கெடுப்பதொழி என்றாள் ஔவை.

(2 கெடுதிசெய்வதை ஒழி என்ற இரண்டாம் பொருளை எடுத்துக்கொள்ளுவோம். நம்மைக் கெடுக்கும் தன்மையை உடைய மனோநிலை செயல் எல்லாவற்றையும் விலக்கி விடவேண்டும். இப்படிப்பட்ட மனோ நிலைகளில் முதல் அர்த்தத்தில் எடுத்துக்காட்டிய கேடு சூழ்வதும்செய்வதும் ஒன்று தான்: ஆதலால் இப்பொருள் முன்னதை அடக்கியுள்ளது என்றோம். நமக்குக் கெடுதிசெய்பவை எவை? காமக்ரோதாதி கடுங்குணங்களே, ஈஷணாத்ரயம், மண்ணாசைபெண்ணாசை, பொன்னாசை, ஸ்வயசயம் கருதுவது முதலிய அபிமான ஸம்பந்தப்பட்டவை ஒழுங்குதவறிநடப்பது, இவை எல்லாம்தான். இவைகளை ஒழிக்கவேண்டும் புருஷமுயற்சியால் என்று வற்புறுத்துகிறது இச்சூத்திரம். இவைகளை எவ்வளவுக் கெவ்வளவு ஒழிக்க முடியுமோ அவ்வளவுக் கவ்வளவு சீரும் சிறப்பும் உண்டாகும்; ஒழிக்கப் படாமலிருக்கும் பாகங்களுக் கேற்ப பாபமும் பழியும் உண்டாகும். மிகுந்த பெரியோர்களுக்கும் இந்தக் கெடுப்பவைகள் இருந்து மாறாப் பழியை உண்டாக்கி விட்டன என்று நமது புராணங்களிலிருந்து நன்கு வெளியாகும். ஸ்ரீராமன் வாலியை மறைந்தடித்தது ஒழுங்கிற்கு விரோதமாதலால், ஸகலகுண ஸம்பூர்ணராயிருந்தும் அதனால் அவருக்கு மாறாப்பழிவந்துவிடவில்லையா? அதற்காக அவர் கிருஷ்ணாவதாரத்தில் வாலியின் மறுபிறப்பான வேடனால் இறக்கும்படி நேரவில்லையா? இதையே ஆத்திசூடி வெண்பாவும்,

வாலி கெடராமன் ஒருவாளி தொட்டவம்பழியை
மேலொரு சன்மத்திலன்றோ நீண்டுகொன்றான்.
ஞாலமதில் வல்லவனே புன்னைவனநாதாயாரெனி
னும் ஒல்லை கெடுப்பதொழி.

என்று எடுத்துப் பாராட்டுகிறது. தர்மபுத்திரர் சற்று ஏமாந்து தங்கயம் கருதிய தம்பிரசதார் பக்கம் சேர்ந்து அவர்கள்செய்ய எண்ணியிருந்தது இன்னதென்று முற்றிலும் உணராது, இறந்தான் அச்வத்தாமா (என்றயானையாக), என்றபொய்யைக் கூற, மாறாப் பழிக்கு ஆளாகி, ரதம் பூமியில் இறங்கப் பெற்று, நரகத்தையும் ஸ்வர்க்கத்தில் பார்க்கவேண்டி வரவில்லையா? இவ்வாறு அவதாரபுருஷர்களாம் அமிக்குழவிகளே ஆலாகப் பறக்குமானல் கெடுப்பதொழியாமை என்ற ஆடிக்காற்றில், செத்தைகள் போன்ற நம்முதலான ஸாதாரணர் கதியை என்னென்று சொல்வது! கொடுங்குணம் ஒழிக்க மனப்பூர்வமாகச்செய்யும் முயற்சிகளாகிய, அவை கிளம்ப இடம்தரும் விஷயங்களை விட்டுவிலகுதல், கிளம்பினும் விவேகத்தால் நாசம்செய்தால், எவ்வளவு கொடுமையாகக் கிளம்பினும் எக்காலத்தும் தொழிலாகமாறவொட்டாது தடுத்துநிறுத்துவது, ஸத்வாஸனைப் பழக்கம், ஆகிய இவைகளில் எப்பொழுதும் திவலை அச்ரத்தைகூடவாராமல் விழித்துக் கொண்டே இருத்தல் வேண்டும். இவைகளில் எதாவது ஒன்றில் தகுந்த ஸமயத்தில் கவனக் குறைவாயிருந்தால் திண்டாட்டம் தான். இது பற்றியேதான் பகவான் கீதை 5-ம் அத்யாயம் 23 ஸ்லோகத்தில்:—

ஈங்கிருக்கும் போதே எவன் வெகுளி ஆசையினால்
ஓங்குமொரு வேகத்தை உற்று உடல்—நீங்குமுனம்
ஓர்த்திருக்கவல்லானே அன்னேனே யோகியும்
சீர்த்த ஸுகவானு மெனத்தேர்

என்று இந்தக் கெடுப்பதொழிப்பதன் சிறப்பை எடுத்துப் பாராட்டியிருக்கிறார். ஆகவே நமக்குக்கெடுதிசெய்வனவாகிய ஆத்ம குண விரோதிகளான கொடுங் குணங்களை ஒழிக்கவேண்டியது அவசியம். முக்திமார்க்கத்தில் தள்ளாடாது முன் செல்ல என்பது தான் இந்த ஸூத்திரத்தில் புதைந்து கிடைக்கும் ஆழ்ந்த கருத்து.

# மொழி பெயர்ப்பு விளக்கம்

## TRANSLATION MODELS

It was indeed a pleasant morning that might have made any one happy, even with no Golden River to seek for. Level lines of dewy mist lay stretched along the valley, out of which rose the massy mountains—their lower cliffs in pale grey shadow, hardly distinguishable from the floating vapour, but gradually ascending till they caught the sunlight, which ran in sharp touches of ruddy colour along the angular crags, and pierced in long level rays through their fringes of spear—like pine. Far above shot up red splinted masses of castellated rock, jagged and shivered into myriads of fantastic forms, with here and there a streak of sunlit snow, traced down their charms like a line of forked lightning; far beyond and far above all these, fainter than the morning cloud but purer

and changeless, slept in the blue sky the utmost peaks of the eternal snow. The Golden River which sprang from one of the lower and snowless elevations, was now nearly in shadow; all but the upper-most jets of spray, which rose like slow smoke above the undulating line of the cataract, and floated away in feeble wreaths upon the morning wind.

பொன்னாறு தேடும் தொழிலில்லா ஒருவனைக் கூட களிப்படையச் செய்யுந்தருணமாக விருந்தது அக்காலை நேரம். மட்ட ஒழுங்காக அமைந்து கிடந்தன புகைப்பனிப்படைகள் அந்தப்பள்ளத்தாக்கில்: அவைகளின் இடையிலிருந்து கிளம்பித்தோன்றின பருத்த மலைகள். அங்கு தொங்கி நிற்கும் புகைப் பனியிலிருந்து பகுத்துணர முடியாவண்ணம் அம் மலையின் தாழ்ந்த செங்குத்துப் பாறைகள் மங்கல் வெளுப்பான நிழலில் மறைந்திருந்தன. ஆனால் ஸூர்யன் ஒளிபடும் மட்டம் வரையில் உயர்ந்ததால் அவைகளின் கூரிய சிகரப்பாறைகளை ஒட்டி ஸூர்யன் ஒளிசிவந்த வர்ணப்பூச்சாகக் காணப்பட்டதோடுங்கூட, அவைகளின் முகட்டிலிருந்தசட்டிகள்போன்ற தேவதாரு மரங்களுக்கிடையே மட்டமானகிரணங்களாகவும் ஊடுருவிப்பாய்ந்து கொண்டிருந்தது. இதற்கு வெகுதூரம் மேலே உயர்ந்து காணப்பட்ட கோட்டை கொத்தளம் போல அமைந்து சிதறிய கற்பாறைகள், பிளந்தும் கூராயும் பற்பல உருவங்களாகக் காணப் பட்டன. அவைகளில் அங்கும் இங்கும் கதிர் ஒளியில் கவர்பாயும் மின்னற்கொடி போல, பிளவுகளுக்கு இடையில் விளங்கின உருகும் பனிரேகைகள். இவைகளுக்கு எல்லாம் வெகு உயர அப்பால்காலை மேகங்களை விடமங்காலாயும், பரிசுத்தமாயும் மாறுததாயும்உள்ள மாறுபனிக்கட்டிகளில் மறைந்துநிற்கும் உச்சிக் கொடுமுடிகள் நீல ஆகாயத்தில் முழுகிக் கிடந்தன. தாழ்ந்தபாகமாகிய பனித்தாக்குதல் இல்லா உயரத்தில் உற்பத்தியான பொன்னாற்றில் மெதுவாக கிளம்பிச்செல்லும் புகைபோல ஏற்றத்தாழ்வுடைய அதன் அருவித்தலையிலிருந்து கிளம்பிக் காலைக்காற்றில் முடிமாலைபோலச் சுருண்டோடும் உயர்ந்த திவலைக்கூட்டம் தவிர மற்றைய பாகமெல்லாம் இப்பொழுது நிழலுள் மறைந்தே இருந்தது.

---

**ஓர் அற்புத சிருஷ்டி.**—இரட்டைப் பிள்ளைகளைப் பற்றிக் கேட்டும் பார்த்துமிருக்கிறோம். திருவண்ணாமலைக்கடுத்த ஓர் கிராமத்தில் ஓர் குடியானவனுக்கு இரண்டு பெண்குழந்தைகளும் ஓர் ஆண்குழந்தையும் ஒரே சமயத்தில் சென்றமீ 18உ பிறந்தனவாம். குழந்தைகள் சவுக்கியமாய் இருக்கின்றன. தாய் மாத்திரம் சிறிது துர்ப்பல மடைந்திருக்கின்றனளாம். இதுவும் கலிகால அற்புதம்.

# சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S AND LADIES' PAGES

அநேக நாள்கள் முன்பு மதுரையில் ஒரு பிராமணனிருந்தான். அவன் வெகுபுத்திசாலி, நெற்றி வெயர்வை சொட்டச் சொட்ட வேலை செய்து ஜீவித்து பெருமையுடன், வாழ்ந்தவன். பஞ்சாங்கக் குடுக்கையானாலும் ஸத்பாத்ரன். எல்லாரும் அவன் வரவை எதிர் பார்த்தால் மரியாதையுடன் விளங்கும் படியான ஒழுக்கத்தோடிருந்தவன். பொய் புனை சுருட்டு சூது வாது என்பன அவன் இன்னவென்று கனவிலுங்கண்டறியான். அவனுக்கோர் மகன், அவன் தத்ரூபம் குணத்தில் அவனே அவதாரம்; ஆனால் உலகத்தின் ஸ்வபாவத்தையே யறியாதவன். தன்னைப்போலவே எல்லாரும் சாதுக்கள் என்றே அவன் எண்ணம். வெளுத்ததெல்லாம் பால் கறுத்ததெல்லாம் தண்ணீர் என்ற எண்ணுகிறவன். இவ்வாறவன் விளங்குவது அவன் தந்தைக்கு வெகு கவலை. தனக்கப்புறம் அவனை கவனிப்பார் இல்லை என்று நெடு நாள் நெஞ்சமழிந்தான். எத்தனைநாள் என்றவன் அப்படி இருப்பது? வயது வரவர அதிகமாகத் தள்ளாமை அவனுக்கேற்பட்டது. சில நாள் கடந்ததும் தான் பிழைப்பது முடியாதென்று அவனுக்கே படத், தன் மகனைக் கூவி நல்ல புத்திகளைச் சொன்னான். பெற்றமனம் பித்து என்பது உலகப் பிரஸித்தம். தன் மகன் மேல் பெருமாசை வைத்தவனானபடியால் கடைசியாக தன் இடுப்பில் கட்டியிருந்த வஸ்திரத்திலிருந்த ஓர் பனை ஓலைச்சுருளை எடுத்துத் தன் மகன் கையில் கொடுத்து வெகு கஷ்டத்துடன் "அப்பா! உனக்கோ ஒன்றுந்தெரியாது. அந்த ஓலைதான் உனக்குப் பிதிரார்ஜித ஸொத்து; மற்றைப் பொருள் நிலம் எல்லாம் நிலையாயிருப்பது நிச்சயம் இல்லை. அந்தப் பனை ஓலையில் கண்டபடி நடந்துகொண்டால் அது எல்லாவற்றையும் கொடுக்கும், ஜாக்ரதையாக இரு" என்று சொல்லி சிலநாளைக்கப்புறம் கவலையற்றவன் காலமானான்.

மகனும் தனது தந்தை சொன்ன மொழிகளைக் கேட்டு அவர் சொல்லிபபடியே நடக்க மனத்தில் நிச்சயித்துவிட்டு, ஓலைச்சுருளை விரித்தான். அதில்

"௧. பழகின ஆளைத் தள்ளாதே
௨. பழைய நேசனைத் தள்ளாதே
௩. இராஜ தரிசனம் விடாதே
௪. கண்டதை யெங்குஞ் சொல்லாதே
௫. உள்ளதை மனைவிக்குச் சொல்லாதே
௬. தலை போனாலும் பொய் சொல்லாதே"

என்று வரிசையாக ஆறு வாக்யங்கள் எழுதியிருந்தன. அவைகளைத் தனக்குக் குருஉபதேச மொழிகள் என்று எண்ணிக்கொண்டு நித்யம் பாராயணஞ் செய்துவருவான். தான் நடப்பதில் அம்மொழிகளுக்கு விரோதமாக நடந்ததே கிடையாது. தினந்தோறும் அதிகாலையிலெழுந்து தன் அனுஷ்டானங்களை எல்லாம் முடித்துக்கொண்டு இராஜ ஸபைக்குப் போய் ராஜ தரிசனஞ் செய்து வருவான். பின் தன் நிலம் புலங்களை நேரில் போய் பார்த்துவருவது வழக்கம். ஆனாலுமவன் தகப்பனாருடைய உபதேச மொழியை அனுசரித்து தனது முன் வேலையாளைத் தள்ளாமலிருந்தான். அவ்வேலைக்காரன் நிதந்தோறும் குடியானவர்களிடம் போய் பிராமணனுக்குக் கொடுக்கவேண்டிய மாசூல் வாரம் முதலானவைகளைத் தவறாமல் கேட்டு வசூல் செய்வான். எப்பொழுது குடியானவர்கள் வரச்சொல்வார்களோ அப்பொழுது அவர்களிடம் அவன் ஹாஜராய் பணத்தைக் கேட்பான். இப்படியவன் செய்வதைக்கண்ட குடியானவர்கள் கோபங்கொண்டு வேலைக்காரனைத் தொலைக்க வழி தேட எண்ணினார்கள். அடுத்த நாள் பிராஹ்மணன் வயல் புறம் வந்தபொழுது அவனிடம்வேலைக்காரன் மேல், இல்லாததும் பொல்லாததுஞ் சொல்லிஅவனை மாற்றி வேறு வேலைக்காரனை அனுப்பும்படிக் கேட்டுக்கொண்டார்கள். பிராமணன் தலையையசைத்துவிட்டு வீட்டுப்புறம் நோக்கிப்போனான். வீட்டில்வந்ததும் ஒன்றும் அவனுக்குத் தோன்றவில்லை. "குடியானவர்கள் வேலைக்காரனைத் தள்ளிவிடவேண்டுமென்றார்கள்; தகப்பனாரோ 'பழகின ஆளைத்தள்ளாதே' என்று ஆணையிட்டு இருக்கிறார்; இன்னதுசெய்வது என்று தெரியவில்லை" என்றவன் எண்ணிக்கொண்டு இருக்கும்போது, தனது தகப்பனார் உபதேச மொழியில் பழயநேசனைத்தள்ளாதே' என்ற வாக்யம் ஞாபகத்திற்கு வந்தது.

உடனே அவன் பரபரப்புடன் தனது தகப்பனாருடைய அத்யந்த சிநேகிதரான இராமச்சந்திர சாஸ்திரி என்பவரைக் கண்டு தனது கவலையை முழுதும் ஆதியோடந்தமாகச் சொன்னான். அவர் அவ்வேலைக்காரனை வரவழைக்கும்படிச் செய்து உண்மையை விசாரித்துச் சொல்வதாகச் சொல்லி பிராமணனைக் கவலையில்லாமல் வீட்டிற்குத் திரும்பப்போகும்படி திட்டஞ்செய்தனுப்பினார். பின்தான் நேசனுடைய வயல் புறஞ்சென்றுகுடியானவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதைக் கேட்டு ஒருவாறு உண்மையை உணர்ந்தவரானாலும் இரண்டு பக்கமும் தீர விசாரிக்க வேண்டும் என்று யோசித்து, வேலைக்காரனை வரவழைக்கும்படி செய்து பிராமணன் வீட்டையடைந்தார். அங்கு பிராமணன்முன் சாஸ்திரியார் வந்த வேலைக்காரனை நடந்ததென்னவென்று கேட்டார். அவன் "எனக்கு ஒன்றுந்தெரியாது. யான் ஒன்றுஞ் செய்யவில்லை. வழக்கம் போல இன்றைக்குக் காலைமாசூல் வசூல் செய்யப் போனேன். நான் எப்பொழுதும் அவர்கள் சொன்ன வேளையில் அங்குபோய் நிற்பது வழக்கம். அந்த மாதிரி என்னைப் போகும்படி பெரியய்யா அவர்கள் திட்டஞ்செய்திருந்தார். அதே மாதிரிதான் நான் இடபொழுதும் நடந்து வருகிறேன். இதுவரையும் அவர்கள் என்னை எதிர்த்துப் பேசியதே கிடையாது. இன்றைக்கு மாத்திரம் என்னை யவர் லக்ஷ்யமே செய்யவில்லை. 'உன் வாழ்வின்னும் எத்தனை நாள்; தலையடா' என்று பலமொழிகள் கூறி வைதார்கள். நான் அதைத் தவறாக எண்ணவில்லை. அவர் கையில் பணமில்லாது இருந்திருக்கலாம்; அல்லது அவர் கஷ்டதசையில் இருந்திருக்கலாம்; ஆகையினால் பணமில்லா வருத்தத்தினால் சொல்லி யிருக்கலாம் என்று எண்ணினேன். கொடுக்க வேண்டிய பணத்தைக் கேட்டால் யாங்கும் கோபமாம் வருவது ஸஹஜந்தான். ஆனால் வரும்வழியில் 'இனி இவனை வேலையைவிட்டுத்தள்ளிவிடுவார்' என்று அவர்கள் ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டது என் காதில் விழுந்தது. அதைச் சொல்லக் கூடியவனல்ல. தாங்கள் கேட்ட பிறகு சொல்லாமலிருக்கக் கூடாதென்று சொன்னேன். நான் ஒருதவறுஞ் செய்யவில்லை. கண்டிப்பாய் பணங் கேட்டு வசூல் செய்வது தான் என்பாபம்" என்று சொல்லிமுடித்தான். பின் வியவஹாரத்தின் நிலையை உணர்ந்த சாஸ்திரியார் "குடியானவர் சொன்னது, இவனை ஏமாற்றமுடியாமையால், இவனிடம் பகை கொண்டு உங்களிடம் சொன்னதாகும்" என்று சொல்லி பிராஹ்மணனைச் சமாதானப்படுத்தினார்.

பிராஹ்மணன் அன்று முழுதும் தகப்பனார் கொடுத்த பனந்தாளை எடுத்தாயிர முறை படித்தான். "ஆஹா! அறியாமல் மோசம் போகவிருந்தோம்; 'பழகின ஆளைத்தள்ளாதே; பழையநேசனைத்தள்ளாதே' என்ற தந்தையின் மொழிகள் அல்லவா நம்மைஇப்பொழுது காப்பாற்றியது. மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்" என்று கொண்டாடினான்.

சிலநாள் கடந்தது. ஒருநாள் வழக்கம் போல் பிராமணன், ராஜஸபைக்குப்போனான். அன்றைக்கு ஒரு பெரும் கொலை விஷயம் கனமாக விசாரிக்கப்பட்டமையால் அரசன் செய்த தீர்ப்பிற்கு நகலில்முத்திரையிடுவதற்காக இராஜ முத்திரையைத் தேடினான் அது கிடைக்கவில்லை. அதைத் தனது படுக்கை யறையில் பத்திரப்படுத்தி வைத்திருந்தது அரசனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. வந்ததும், யாரையனுப்பி வரவழைப்பது என்று யோசித்துக்கொண்டிருக்கும்போது எதிரிலிருந்த பிராமணனைக் கண்டான். அவன் நாள்தோறும் தனது சபையில் தவறாது வருவதும், பொய்யென்பதே தெரியாதவனென்பதும் அறிந்தவனாதலால் அவனைத்தன் படுக்கை யறையில் போய் முத்திரைப் பெட்டியில் வைத்திருந்த இராஜ முத்திரையை எடுத்து வரும்படிச் சொன்னான். பிராமணனும் அரச ஆணையைத் தலைமேல் கொண்டு திறவுகோலுடன் அந்தப்புரத்துள் நுழைந்தான். அந்த ஸமயம அரசன் மனைவி காமாபரையாக மந்திரியுடன் கேளிக்கை நடத்துவதை விட்டுச் சற்று நழுவி அப்புறம் போனாள். மந்திரியோ போர்வை முக்காடிட்டு யாரென்றறியாதபடி உடல் முழுதும் மூடிக்கொண்டு கிடந்தான். பிராமணனும் கவனியாதவன் போல அரசியிடம் வெகு வணக்கத்துடன் தான் வந்த வேலை

யைச் சொன்னன். மெல்ல முத்திரை மோதிரத்தை எடுத்து வந்து அரசனிடம் ஒப்புவித்தான்

நிற்க, மந்திரிக்குப் பிராமணனெங்கேயாவது ரகஸ்யத்தை அரசனிடம் உடைத்து விடுவானோ என்று பயம். ஆனாலும் பிராமணன் அவ்வழிக்குட்பட்டவன் அல்லவென்பதும் அவனுக்குத் தெரியும். ஆனாலும் படபடவென்று சிற்சிறு இருண்டதெல்லாம் பேய் என்றபடி அவன் மனங்குமுறிக் கொண்டிருந்தது. அவனைக் கொலை செய்யத்தகுந்த வழிதேட அரசியுடன் யோசித்துக் கொண்டிருந்தான். பின் யோசித்துத் தான் இராஜ ஸபையை அடைந்தான், ஸபைகலையும் ஸமயம். பிராமணனைக் கூப்பிட்டு "நாளைக்குக்காலை பெரிய ஸந்தர்ப்பணை செய்ய விரும்புகிறேன். உம்முடைய துயவில்லாவிட்டால் நடக்காது இந்த ஊருக்கு வெளியில் ஓர் வாழைத்தோட்டமிருக்கிறது. அத்தோட்டக்காரனிடம் நான் சொல்லியிருக்கிறேன். நீர் போய் 'நறுக்கி ஆயிற்று; வெட்டி ஆயிற்று' என்று கேட்டால் உடனே ஓர் ஆள்வசம் வாழையிலைக்கட்டையும் வாழைக்காய் மூட்டையையும் உம்மிடம் ஒப்புவிப்பான். அவ்விரண்டையும் எடுப்பித்துக்கொண்டு வாருங்கள். அவ்வளவே. உம்மையல்லாது நம்பிக்கையாள் எனக்கில்லை. எதிர்சொல்லாமல் தாங்கள் செய்யும்படிக் கேட்கிறேன்" என்று சொன்னன். "தாங்கள் சொல்லும்போது நான் தடுத்துச் சொல்ல முடியுமா? தாங்கள் சொல்லியபடியே நடக்கிறேன்" என்று பிராமணன் தன் வீட்டை நோக்கிப்போனன்.

மந்திரியின் எண்ணம் பிராமணனுக்குத் தெரியாது. பிராமணன் தான் கண்ட விஷயத்தை நினைத்து நினைத்து வியசனப் பட்டுக் கொண்டிருந்தான். ஆனல் தனது தகப்பனர் "கண்டதை யெங்கும் சொல்லாதே" என்று சொல்லியதை மனதிலெண்ணி எங்குஞ் சொல்லாமலிருந்தான். ஆனல் அடுத்த விடியற்காலம் கைகால் கழுவி மனைவியுடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது தனக்குந் தெரியாமல் ஒரு வேடிக்கையின்று நான் கண்டேன்" என்று சொன்னவனுக்கு 'உள்ளத்தை மனைவிக்குச் சொல்லாதே' என்ற தந்தைமொழி ஞாபகத்திற்கு வர ஆனல் சொல்ல முடியாது; பெண்களை நம்பக் கூடாது என்று தன் மொழியை மறுத்தான்.

'பெண்டாட்டியாத்தாள் பெரியாத்தாள்' என்றபடி அவன் மனைவி சும்மா விடவில்லை. "எல்லாம் என்னோடு சொல்லலாம்; நான் எங்கும் சொல்லமாட்டேன். எல்லாம் சொல்லலாம்" என்று முகத்தை முறுக்கிக் கொண்டு வக்கணித்தாள். நெடுநேரம் கணவனுக்கும் மனைவிக்குந் தர்க்கம் நடந்தது. சூரிய உதயமாயும் அவ்விருவருடைய வாக்குவாத முடியவில்லை. பிராமணனுக்கு அப்பொழுது அது வரையும் மறந்திருந்த மந்திரியின் ஆணை ஞாபகத்திற்கு வந்துவிட்டது. உடனே திமிரிக்கொண்டு மனைவியிடம் செலவு பெற்றுக் கொள்ளப் பார்த்தான். ஆனல் அவள் தனது அஷ்டவக்ர முகத்திலிருந்து மலமலவென்று நீர்சிந்தச்சிந்த வழிமறித்து நின்றாள். "ஹே! பாக்கியமே! என்ன அதிசயம் கண்டுவிட்டேன், ஒன்றுமில்லை, இன்றைக்கரசர் ஸபாமண்டபத்துக்குப் போகும் போது மூன்று புறாக்கள் வெளிவந்ததாம். ஆகையால் அடக்கமுடியாச் சிரிப்பு வந்தது என்று சொல்லிவிட்டு வெகு வேகமாக வாழைத்தோட்டத்திற்கு மந்திரி சொன்னபடி கேட்கப் போனன். அங்கு போய் "நறுக்கி ஆயிற்று? வெட்டியாயிற்று? என்று மந்திரி கேட்கச் சொன்னர் என்ன" என்று கேட்டான். "காலை நெடுநாழிக்குமுன் வீட்டிற்கும் அனுப்பி ஆய்விட்டது" என்று அந்தத் தோட்டக்காரன் பதில் சொன்னன். "ஸரிதான்" என்று சொல்லிக்கொண்டு பிராஹ்மணன் ராஜஸபைக்குப் போக வழி நடந்தான்.

நிற்க, மந்திரிக்கு பிராமணனுக்குச் சொல்லியது முதல், நித்திரையே யில்லாமல் அலைந்தான். காலை ஆனதும் போராத்திரத்தோடு தான் ஏற்படுத்திய இடத்திற்குப் போய்த் தோட்டக்காரனை "நறுக்கியாய் விட்டதா? வெட்டியாயிற்றா?" என்று கேட்டான் அத்தோட்டக்காரன் காலையிருளில் ஆர் இன்னர் என்று பாராது, தனக்கு மந்திரியிட்ட ஆணைப்படி ஆலச்யஞ் செய்யாமலவனை வாளால் வெட்டி முன் வெட்டிய குழியிற்போட்டு மூடிவிட்டான்.

அரசசபையை பிராமணன் அடைந்தான். அங்கு அரசன், எப்போதும் சீக்ரமாக வருகிறவன் நேரங்கழித்து வந்ததால் "என் இவ்வளவு நேரம்?" என்று சும்மா கேட்டான். அப்போது பிராமணன் தான் தோட்டத்திற்குப் போயிருந்ததும் அங்குத்தோட்டக்காரர்கள் சொன்னதையுஞ் சொல்லி "நான் மந்திரி வீட்டிற்குப் போயிருந்தேன் அங்கவரைக் காணவில்லை. எப்படியவர்க்கு விஷயத்தைத் தெரிவிப்பது என்று யோசிக்கிறேன்" என்று மேலுஞ்சொன்னன். அதே ஸமயம் அங்கு கட்டியக்காரன் வந்து அரசி அரசரைப்பார்க்க வரும்படி விரும்பியதாகச் சொன்னன். அரசனும் அவளிடம் போனன்.

அங்கவள் "உங்கள் மேல் பெரும் புகார் வந்திருக்கிறது. எல்லாவற்றிற்கும் அந்தப் பிராமணன் தான் காரணம். அந்தப்பாவி தாங்கள் ஸபாமண்டபத்துக்குப்போன போது மூன்று புறாக்கள் வெளிவந்ததாகச் சொல்லியிருக்கிறான். நான் எல்லாவற்றையும் விசாரித்துத்தான் உங்களிடஞ் சொன்னேன். அவன் மனைவி அவன் வீட்டார்க்குச் சொன்னள். அவர்கள் சொசுசொசுவென்று தெருவிற் சொன்னர்கள். அவர்கள் சந்தையிற் காதோடுகாதாகப்பேசினர்கள். நமது தாருகன் அதைக்கேட்டு வந்தென்னிடஞ் சொன்னன். நானிதைக் கேட்டதும் படிப்படியாகக் கேட்டிவன் தானந்த வதந்திக்குக் காரணமென்றறிந்தேன். உங்களுடன் சொல்லிவிட்டேன். அவனை சும்மா விடாதேயும்" என்றுதான் அவனிடங்கொண்ட பகையுடன் அழுத்தமும் திருத்தமுமாகச் சொன்னள்.

இதைக் கேட்டதும்அரசன் கண்களில் தீப்பொறி பறக்க பிராமணனைக் கோபித்துக்கொண்டு "உண்மையைச் சொல்; இல்லாவிட்டால் உன்தலை போய்



விடும்" என்று வெருட்டினன். இதைக் கேட்டதும் தன் தகப்பனர் "தலைபோனலும் பொய் சொல்லாதே" என்று சொல்லியது ஞாபகத்திற்கு வரச் சிறிதும் தயங்காமல் தனக்குத் தந்தையிட்ட கட்டளையையும் அதன்படித்தான் நடந்ததையும், அரசியிடம்தான் கண்டதையும், மந்திரி தனக்கானையிட்டதையும், மனைவியிடம் வாது செய்ததையும், தான் எவ்வாறு விஷயத்தை மூடினன் என்பதையும், தோட்டத்தில் விசாரித்ததையும், அவர் சொல்லியதையும், அரசனிடம் வந்து தெரிவித்துக்கொண்டதையும் எல்லாம் சொன்னன். இதைக் கேட்டதும் அரசன் மந்திரியைக் தருவிக்க ஆட்களை அனுப்பிவிட்டுத் தோட்டக்காரனையும் தருவிக்கும்படிச் செய்தான்.

தோட்டக்காரன், ஓர் பிராமணன் என்மேலேங்கிடையூறாய் இருக்கிறான். அவனை உன் தோட்டத்திற்கு விடியற்காலம் இருள்போவதற்கு முன்பே வரும்படிச் செய்கிறேன். அவன் வந்ததும் 'நறுக்கி ஆயிற்றா! வெட்டி ஆயிற்றா!' என்பான். உடனே முன்பின் யோசியாமல் வெட்டிவிடுங்கள்' என்று மந்திரியவர்கள் சொன்னர். அவர் சொல்லியபடியே நான் அவனை வெட்டி குழியிலிட்டு மூடியிருக்கிறேன் தாங்கள் வேண்டுமானல் அதைத்தோண்டிச் சவத்தைக் காணலாம் என்றான். இதைக் கேட்டதும் அரசனுக்காச்சரிய முண்டாய்விட்டது. "இது என்ன! இன்று வெட்டப்பூதம் புறப்படுகிறதே" என்று எண்ணிக்கொண்டிருக்கும்போது "மந்திரியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவரெங்கேபோனரோ தெரியவில்லை" என்று ஓர் ஆள் வந்து சொன்னன்.

இதைக்கேட்டதும் அரசன் தனது பட்டாக்கத்தியை எடுத்துச் சுழற்றும்போது அதில் எழுதியிருந்த "அடைசாக்காரனுக்குப் புத்திமட்டு" என்ற பழமொழி அவன் கண்ணிற்பட்டது. அது சரியான உபதேசமென்று நினைத்துக்கொண்டு சில படர்களுடன் தோட்டத்தை படைந்து பரிசோதிக்கும்போது அந்த மந்திரி தலைவேறு உடல்வேறாகக் கிடப்பதைக்கண்டு ஆச்சரியத்துடன் வீட்டையடைந்து தன் மனைவியை உண்மையில் என்ன நடந்ததென்று கேட்டான் "இனி மந்திரி போய்விட்டான் நமது ரகசியம் தானப் வெளிவருவதைக் காட்டிலும் உண்மையைச் சொல்லி உயிர் விடுவதே நல்லது" என்று எண்ணிக்கொண்டு நடந்ததை எல்லாஞ்சொன்னள். "அடிபாவி! உன்வார்த்தையை நம்பி பிரஹ்மஹத்திக்காளாக இருந்தேனே" என்று சொல்லிக்கொண்டவளை சுண்ணாம்பு காளவாயிலிடும்படி ஆணையிட்டான்.

தலையாரியும் அரசனணையைத் தலைமேற்கொண்டு அரசியை ஓர் பெருங் குழியில் நிறுத்தித் தலைமட்டம் வரை வரும்படிச் சுண்ணாம்புக் கல்லை நிரப்பி அதில் நீர் ஊற்றும்படிசெய்தான். அப்போது அதில் கொதிக்கும்போதே அரசியுடலுங் கொதித்துப் பிணமாய் விட்டது.

நிற்க, அரசன் பிராமணனுடைய நெறிக்கு மெச்சி அவனைத் தனக்கு மந்திரியாக்கிக் கொண்டு வாழ்ந்தான். 'கெடுவான் கேடு நினைப்பான்' என்றபடி இறந்தமந்திரியைப்போலில்லாமல் பிராமணன், எல்லார்க்கும் நல்லவனுய் யாவர்க்கும் எளியவனகி பெரும் புகழோடு சத்தியந்தவறாது, மஹிமை குறையாது நெடுநாள் வாழ்ந்தான்.

# விசேஷக் குறிப்புகள்.

## NEWS AND NOTES

**சென்னை ஹைகோர்ட்டுக்கு இன்னும் இரண்டு ஜட்ஜிகள் நியமனம்.**—சென்னை ஹைகோர்ட்டுக்கு இப்பொழுதிருக்கும் ஜட்ஜிகளன்றி, இன்னும் இரண்டு ஜட்ஜிகளை டெம்பொரெரியாக நியமிக்கலாமென்று இந்தியா கவர்ன்மெண்டார் சமீபத்தில் சாங்கிஷன் செய்தார்கள். கொஞ்சம் டிஸ்ட்ரிகட்டு அண்டு ஸெஷன்ஸ் ஜட்ஜான திவான்பகதூர் C. V. குமாரசாமி சாஸ்திரியும், சென்னை கவர்ன்மெண்டு பிளீடரான பாரிஸ்டர் மிஸ்டர் C. F. நேப்பியரும் டெம்பொரெரி ஜட்ஜிகளாக நியமனம் பெற்று விட்டார்களென்றும், கோடைகால விடு முறைநாள் கழிந்ததும் தங்கள் வேலையை ஒப்புக்கொள்வார்களென்றும் அறிந்து சந்தோஷப்படுகிறோம்.

***

**திவான் பகதூர் P. ராஜகோபாலாசாரியார்.**—திருவாங்கூர் திவானன திவான்பகதூர் P. ராஜகோபாலாச்சாரியார் தம் திவான் வேலையை அந்த சமஸ்தானத்து சீப்ஜஸ்டிஸ் வசம் மே மாதம் 9-ந் தேதியன்று ஒப்பிவித்துவிட்டு அவர் தாம் முந்தியிருந்த பிரிட்டிஷ் சர்விஸுக்குத் திரும்பி வந்து வேலையை ஒப்புக்கொள்ளமாட்டார். அவருக்கு மே மாதம் 11-ந்தேதி முதல் இரண்டு வருஷத்திற்கு ரஜா சாங்கிஷனயிருக்கிறது.

***

**இராஜப் பிரதிநிதியின் பிறந்தநாள் கொண்டாட்டம்.**—வருகிற ஜூன் 22-ந் தேதியில் நடத்தப்படவேண்டிய இராஜப்பிரதிநிதியின் பிறந்தநாள் கொண்டாட்டத்தை மேமாதம் 18-ந் தேதியில் கொண்டாட வேண்டு மென்று தீர்மானமாயிருக்கிறது. அச்சமயம் வழக்கம்போல் குழந்தைகளுக்குச் சிற்றுண்டிகள் அளிக்கப்படும். இக்கொண்டாட்டத்தை வெகு விமரிசையாய் நடத்தப் பிரதி நிதி சபை யொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும், முக்கியமான எல்லா இடங்களிலும் இக்கொண்டாட்டத்தை நடத்த வேண்டுமென்று சமாச்சாரம் எட்டுகிறது.

**திருவாங்கூருக்குப் புதிய திவான்**—மைஸூர் ஸீனியர் கவுன்சிலரும் சீப்ஜட்ஜுமானமிஸ்டர் H.V. நஞ்சுண்டய்யா திருவாங்கூர் திவானாக நியமிக்கப்பட்டிருக்கிறாரெனக் கேட்டு சந்தோஷிக்கிறோம். மிஸ்டர் H.V. நஞ்சுண்டய்யா முதல்முதல் கொள்ளே காலத்தில் சப்ரிஜிஸ்ட்ராராக வேலை பார்த்து வந்தார். அங்கிருந்து அவர் மைசூர் ஜுடிஷியல் ஸர்விஸில் போய்ச்சேர்ந்தார். அதிலிருந்து படிப்படியாக டிப்டி கமிஷனர் பதவிக்கும், மைசூர் கவர்ன்மெண்டு செக்ரிடேரி பதவிக்கும் உயர்த்தப்பட்டார். அவர் இப்பொழுது ஸீனியர் கவுன்சிலராகவும் சீப் ஜட்ஜாகவும் இருந்து வருகிறார். அவருக்கு மாதம் 2000 ரூபாய் சம்பளம். தவிர சீப்ஜட்ஜு வேலை பார்த்துவருவதற்கு 1000 ரூபாய் கூடச் சேர்த்துக் கொடுக்கப்பட்டு வருகிறது. மைசூர் கவர்ன்மெண்டில் உன்னத பதவியை அடைந்து, அந்த ராஜ்ஜியத்தை விட்டு வேறொரு ராஜ்ஜியத்திற்கு திவானாக மிஸ்டர். V. P. மாதவராவ் முதல்தடவையாகப் போனார். இப்பொழுது நஞ்சுண்டய்யா இரண்டாந்தடவையாகப் போகிறார்.

***

**டெல்லிநகர் நிர்மாணம்.** டெல்லி நகர் நிர்மாணம் வெகு தீவிரமாய் நடந்து கொண்டிருக்கின்றது. சுமார் 3000 கூலிக்காரர்கள் வேலை செய்து பழைய பாழ்த கட்டடங்களையும் மேடுபள்ளங்களையும் நிரவிக் கொண்டிருக்கிறார்கள். கூலிக்காரர்கள் எளிதாய்க் கிடைத்த போதிலும் அக்கம்பக்கங்களில் கூலிகள் உயர்ந்துபோயிருக்கின்றன. மொத்தச் செலவு சுமார் 7½-கோடியும் இன்னும் 6 வருஷகாலத்தில் செலவு செய்து முடியும்.

***

**சென்னையில் ஓர் இராத்தாசயக்கழலை நோய்சிகிச்சைச் சாலை.**—சென்னையில் இராத்தாசயக்கழலை நோய் சிகிச்சைச்சாலையொன்று ஸ்தாபிப்பதற்காக, சென்னைக்கவர்ன்மெண்டார் எட்வர்ட் ஞாபகச்சின்ன நிதிக்கு 2, 18, 527-ரூபாய் உபகரித்திருப்பது மன்றி அந்த நிதிக்கமிட்டியாரை அந்தச் சாலையை எவ்விடத்தில் ஸ்தாபிக்கலா மென்றும், என்ன மாதிரியாய்க் கட்டிவிடலாமென்றும், எப்படி நிர்வகிக்கலாமென்றும் கேட்டிருக்கிறார்கள்.

***

**சென்னை ஐக்கியநாணயச் சங்க ரெஜிஸ்டிரார் ஸ்தானம்.**— இந்தமாதம் 20ந்தேதிமுதல் சென்னை ஐக்கிய நாணயச் சங்க ரெஜிஸ்டிரார் ஆபீஸில் திவான் பகதூர் L. D. சாமிக்கண்ணுப்பிள்ளை 3 மாத ரஜாவின்மேல் போகிறாராதலால், அவருக்குப் பதிலாய் திருச்சி சர்க்கில் ஐக்கிய நாணயச் சங்க அஸிஸ்டண்ட் ரெஜிஸ்டிரார் ராவ்சாகிப் K விஜய ராகவாச் சாரியார் ரெஜிஸ்டிராராய் ஆக்ட் செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**ராஜ சக்கிரவர்த்தியின் பிறந்த நாள் கொண்டாட்டம்.**—ராஜசக்கரவர்த்தியின் பிறந்தநாள் ஜூன் மாதம் 22 ந்தேதி யன்று கொண்டாடப்படுமாகையால் அன்று விடுமுறை நாளாகுமென்று கெஜட்டில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது.

***

**கொசுக்கள்.**—கொசுக்களில் 400 விதங்களுண்டு என்று சொல்லப்படுகிறது. வேட்டைநாய்க்கும் அச்சு நாய்க்குமுள்ள வித்தியாசத்தைப் போல கொசுக்களில் வித்தியாச மேற்பட்டிருக்கிறது. கொசுக்களில் பெண் சாதிகள் தான் கடிக்கும். ஆண்ஜாதிக் கொசுக்கள் சாக பட்சணிகள். புல் பூண்டுகளிலுள்ள ரஸத்தைச் சாப்பிடுவதினாலேயே அவைகள் திருப்தியடைகின்றன. பெண் கொசுக்கள் இரத்தத்தை உறிஞ்சின பிறகு தான் முட்டையிடும்.

***

**சென்னையில் மனைவரி**—இச்சென்னையிலே கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமாயிருந்து ஜனங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டிருக்கிற மனைகளின் வரிகள் 10-வருஷத்திற்கு ஒருமுறை சில விதிகளையனுசரித்து புனராலோசனை செய்யப்பட்டுப்புதுப்பிக்கப்பட வேண்டுமென்று சென்னைக்கலெக்டர் செய்திருந்த சிப்பார்சையனுசரித்து அம்மனைகளின் வாடகை 10-வருஷங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப் படுமென்று கவர்ன்மெண்டார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

***

**குருடர்களுக்கு உதவி.**—இங்கிலாந்தில், குருடர்கள் வாசித்து விருத்தியடைவதற்காக ஒரு பெரிய சாலை கட்டப்படவேண்டுமென்றும் அதைக்கட்டி முடிப்பதற்கும், அதில்குருடர்கள் வாசித்து முன்னுக்கு வருவதற்கு வேண்டிய உபகரணங்களைச் சேகரித்து வைத்து நடத்துவதற்கும், 30,000 பவுன் வேண்டுமென்றும்கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. போனமாதம் ராஜா சக்கரவர்த்தி தம்பதிகள் அந்த ஸ்கூல் கட்டடத்திற்கு அஸ்திவாரக்கல்லை நாட்டினார்கள். குருடர்கள் கையால்தொட்டு எழுத்துக்களை அறிந்துகொள்ளும்படியாய் எழுத்துக்கள் தடித்திருக்கவேண்டும். அவ்வித எழுத்துக்களில் நூல்கள் இயற்றவேண்டும். அவ்வித நூல்களுக்குப்பல்லாயிரம் பவுன் வேண்டும்.

***

**பஞ்சாபில் தினசரிப் பத்திரிகைகள்.**—பஞ்சாபில் தினசரிப் பத்திரிகைகள் விருத்தியாகிக்கொண்டுவருகின்றன. லாகூரில் தற்காலம் 8 தினசரிப்பத்திரிகைகள் பிரசுரமாவதில், 5 பத்திரிகைகள் ஹிந்துக்களாலும், 3-பத்திரிகைகள் மஹமதியர்களாலும் நடத்தப்படுகின்றன. இதுவரையில் வாரப்பிரசுரமாயிருந்த ஹிந்துஸ்தானி பத்திரிகை இப்பொழுது தினசரியாக மாறிவிட்டது. இப்பத்திரிகையை நடத்திவருபவர் சாரளதேவி சௌதராணி என்ற பெண்பால்.

# விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."——திருவள்ளுவர்

தொகுதி VI { ஆனந்தஸு வைகாசிமீ =1914-ஸு ஜூன்மீ } பகுதி 12

## வேதாந்தத் திரட்டு

## VEDANTIC SELECTIONS

### 6. தாயுமானவர்

### 1. ஆசையின் தன்மை: நீக்கஉபாயம்

ஆசைக்கோ ரளவில்லை யகிலமெல் லாங்கட்டி
யாளினுங் கடன்மீ திலே
ஆணை செலவே நினைவ ரளகேச னிகராக
வம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக்கலைந்திடுவர்
நெடுநாளிருந்த பேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சு புண்ணாவ ரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பது
முறங்குவது மாக முடியும்
உள்ளதே போதுநா னெனக் குளறியே
யொன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமன் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூர ணானந்தமே

(—பரிபூரணானந்தம்—10)

### 2. சிரத்தையின் ஆவசியகம்

சந்ததமு மெனது செய லினதுசெய லியாமெனுந்
தன்மைநினை யன்றியில்லாத
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவமிதுவே
இந்த நிலை தெளியநா னெக்குருகி வாடிய
வியற்கைதிரு வுளமறியுமே
இந்நிலையிலேசற் றிருக்கவென் றான் மடமை
யிதசத்ரு வாக வந்து
சிந்தைகுடி கொள்ளுதே மலமாயை கன்மந்
திரும்புமோ தொடுவழக்காய்ச்
சென்மம்வரு மோவெனவும் யோசிக்குதேமனது
சிரத்தை யெனும் வாளுமுதவிப்
பந்தமற மெய்ஞ்ஞான தீரமுந் தந்தெனைப்
பாதுகாத்தருள் செய்குவாய்-
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே

(—பரிபூரணானந்தம்—5

### 3. வேதாந்தஸித்தாந்த ஸமரஸம்

வாராதெலா மொழிய வருவன வெலாமெய்த
மனது சாக்ஷியதாகவே
மருவநிலை தந்ததும் வேதாந்த சித்தாந்த
மாபுசம ரசமாகவே
பூராய மாயுணர வாகமது தந்ததும்
பொய்யுடலை நிலையன் றெனப்
போதநெறி தந்ததுஞ் சாசுவத வானந்த
போகமே வீடென்னவே
நீராளமாயுருக வுள்ளன்பு தந்தது
நின்னருளின்னு மின்னும்
நின்னையே துணையென்ற வென்னையேகாக்கவொரு
நினைவு சற்றுண்டாகிலோ
பாராதி யறியாதமோனமே யிடைவிடாப்
பற்றா நிற்க வருள்வாய்
பார்க்குமிட மெங்கு மொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

(—பரிபூரணானந்தம்—8)

# CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | தெலு | இங் | தமிழ் | வார | ஆநந்தவுரு ஆனிமூ — சாலிசகம் 1836 கலியப்தம் 5015 — பசலி 1323 கொல்லம் 1089 — 1914வுரு ஜூன்—ஜூலைமூ |
|---|---|---|---|---|---|
| ர | 19 | 14 | 1 | ஞா | சவ்ஷ 6-33, சத 46-54, விஷ் 15-46, வணி 6-33, திவி 1-0, அக 31-34, மிதுனரவி 27-51, குன்ய, வஷ்ட கரிநா ஸமார் |
| செசு | 20 | 15 | 2 | திங் | சப் 9-30, பூரட் 52-9, பிரி 15-51, பவ 9-30, திவி 4-18, விம்மசெ 51-11, கடகசுக் 51-47, குன்யதிதி, காளாஷ்ட. |
| | 21 | 16 | 3 | செ | அஷ் 13-28, உத்தி 58-4, ஆயு 16-49, கௌ 13-28, திவி 18-31, மிது கிரு-நவமிதிதிமழை 6க்குள். தசமிதிதி. |
| ரபுகு | 22 | 17 | 4 | புத | நவ 18-2, ரேவ 60-0, ஸௌ 17-56, கர 18-2, திவி 31-17, மிரு 4 ரவி 58-22, புன 2 புத 46-40, குருவக்ரம்[43-7, |
| சு | 23 | 18 | 5 | வியா | தச 22-56, ரேவ 4-30, சோ 16-34, பத் 22-56, ரா 28-17, அக 31-36, பூச 1 சுக் 41-40, அதிதி. |
| | 24 | 19 | 6 | வெ | ஏகா 27-46, அசு 10-58, அதி 21-5, பா 27-46, சே 3-53, ரா 5-45, ஏகாதிதி சர்வ ஏகா—கரிநாள். |
| | 25 | 20 | 7 | சனி | துவா 32-4, பர 16-56, சுக 22-14, தை 32-4, ரா 17-59, கார் உப. [சுக் 27-34, மிரு 2 சனி 42-30, பிரதோ மாசி. |
| ரசெ | 26 | 21 | 8 | ஞா | திர 35-37, * கார் 22-14, திரு 22-49, கர 3-50, தியா—0—0, திரு 1, ரவி 28-54, மக 2, செ 38-18, பூச 2. |
| சுச] | 27 | 22 | 9 | திங் | சது 38-59, ரோ 26-37, சூல 22-36, பத் 7-18, திவி 5-9, ரா 9-44, அக 31-38, கடகாய 57-0. |
| | 28 | 23 | 10 | செ | ●அமா 39-24, மிரு 29-49, சண் 21-34, சது 9-11, ரா 19-53, சர்வ அமா மழை 4-க்குள். |
| ர-பு சுச | 29 | 24 | 11 | புத | பிர 39-25, திரு 31-49, விர் 19-31, கிம் 9-24, தியா—0—0, ஆஷா சுத் திரு 2 ரவி 60-0, புதவக்ரம் 55-7, பூச 3 சுக் 28-23, பிராகுதயசனி 47-7, இஷ்டி. |
| | 30 | 25 | 12 | வியா | துதி 38-9, புன 32-31, துரு 16-23, பா 8-47, திவி 2-10, ரா 20-44, சந்தரி மழை 10-க்குள். |
| பு | 1 | 26 | 13 | வெ | திரு 35-43, பூச 32-4, வ்யா 12-19, தை 6-56, தியா—0—0, அக 31-38, புன 1 வச்புத 12-42, பச்சாதஸ்த 55-7. |
| செசு | 2 | 27 | 14 | சனி | சது 32-16, ஆயி 30-36, ஹர் 7-23, வணி 3-59, திவி 3-17, ரா 27-46, மக 3, செ 17-43, பூச 4 சுக் 9-14, சதுர்வி௫. |
| ர | 3 | 28 | 15 | ஞா | பஞ் 27-54, மக 28-12, வஜ் 1-41, வித் 53-34, பா 27-54, சே 3-24, ரா 15-33, திரு 3 ரவி 30-54, பஞ்சமிதிதி. |
| சு | 4 | 29 | 16 | திங் | சஷ் 22-50, பூர 25-7, விய 48-19, தை 22-50, ரா 10-24, ஆயி 1 சுக் 60-0, திதித்வயம் சஷ் உப விய சிரா சப் விரு |
| | 5 | 30 | 17 | செ | சப் 17-16, உத் 21-31, வரி 41-1, வணி 17-16, ரா 9-31, அக 31-37, அஷ்டமிதிதி. [குமாரஷஷ்டி சமீ கௌரீ |
| | 6 | 1 | 18 | புத | அஷ் 11-20, ஹஸ் 17-35, பரி 33-33, பவ 11-20, ரா 4-38, சிலவிடங்களில் தாபத்தினால் அதிக கஷ்டம். |
| ரசெ புசு] | 7 | 2 | 19 | வியா | நவ 5-16, தச 53-56, சித் 13-32, சிவ 26-1, கௌ 5-16, திவி 26-36, திரு 4 ரவி 1-48, மக 4 செ 57-9, திரு 4 வக்புத 30-0, ஆயி 2 சுக் 49-50, சாக்ஷுஷ ம. [பத்மவிரு. |
| | 8 | 3 | 20 | வெ | ஏகா 53-21, சுவா 9-32, வித் 18-3, வணி 26-16, திவி 22-59, ஸ்மாஏகா சயனைகா கோ |
| | 9 | 4 | 21 | சனி | துவா 47-56, விசா 5-46, சா 11-20, பவ 20-38, திவி 15-13, அ 31-34, வை ஏகா. |
| ர-சு | 10 | 5 | 22 | ஞா | திர 43-5, அனு 2-16, சே 57-13, சுப 4-44, சப் 53-34, கௌ 15-30, திவி 15-47, புன 1 ரவி 32-20, ஆயி 3 சுக் 37-43, பிரதோ. [51-20, மழை 5-க்குள். |
| பு | 11 | 6 | 23 | திங் | சது 38-59, மூல 57-49, பிரா 52-26, கர 11-2, திவி 19-2, ரா 22-15, திரு 3 வக்புத |
| | 12 | 7 | 24 | செ | ○பௌ 35-56, பூரா 56-59, மா 47-38, பத் 7-27, திவி 21-29, வியாஸ பூர் அக்னி ஸா-ம-சிலவிடங்களில் சீதலத்தினால் ஜனங்களுக்கு சௌக்யமுண்டு. |
| செசு | 13 | 8 | 25 | புத | பிர 33-55, உத் 57-14, வை 43-42, பா 4-55, திவி 17-4, அக 31-32, ஆஷா பகு பூ 1 செ 46-10, ஆ 4 சுக 30-0, |
| ர | 14 | 9 | 26 | வியா | துதி 33-6, தி 58-43, விஷ் 40-45, தை 3-30, திவி 7-29, புன 2 ர 2-51, சிர உப மழை 9-க்குள் [இஷ் வை சிரா. |
| பு | 15 | 10 | 27 | வெ | திரு 33-34, அவி 60-0, பிரி 38-48, வணி 3-20, திவி 9-11, பிராகுதயபுத 55-7, சங் சது. |
| புசு | 16 | 11 | 28 | சனி | சது 35-16, அவி 1-33, ஆயு 37-51, பவ 4-25, திவி 21-21, திரு 2 வக்புத 60-0, விம்மசுக் 22-17. |
| ர | 17 | 12 | 29 | ஞா | பஞ் 38-10, சத 5-32, ஸௌ 37-48, கௌ 6-43, திவி 22-53, அக 31-30, புன 3 ரவி 33-23. |
| | 18 | 13 | 30 | திங் | சஷ் 41-58, பூர 10-34, சோ 38-28, கர 10-4, ரா 5-22, சஷ்டிதிதி. |
| செசு | 19 | 14 | 31 | செ | சப் 46-45, உத்தி 16-20, அதி 39-41, பத் 14-21, ரா 18-0, பூர 2 செ 16-34, மக 2 சுக் 14-34, சப்தமிதிதி. |
| பு | 20 | 15 | 32 | புத | அஷ் 51-24, ரேவ 22-39, சுக 41-14, பா 19-4, தியா—0—0 புதவக்ரிவ 55-7, மி கிரு அஷ்டமிதிதி காளாஷ்டமி. |

| | சனி | ரவி சு-பு. |
|---|---|---|
| ராகு. 2-சிம்மசெ | 2-கடகசுக் | செ. |
| குரு. 28-சிம்-பு | | கே |



விவேக போதினி

தொ.6.] ஆனந்தவுரு வைகாசிமீ [பகுதி.12

## மோக்ஷ ஸோபானம்
## THE STEPS TO THE GOAL
### (2) கர்மயோகம்
### பீஷ்மர் சரித்திரம் (தொடர்ச்சி)

'ஆனைக்கும் அடி சறுக்கும்' என்றபழமொழிப்படி, தமது விருதத்தை நிலை குலையாது நிறுத்தி பீஷ்மர் என்ற தமது காரணப் பெயரின் கருத்தை வற்புறுத்திய இம்மஹானுக்கு சிற்சில குறைகளும் இருந்தன. பாண்டவ கௌரவர்கள் விஷயத்தில், நியாயம் பாண்டவர்கள் பக்கமே இருந்த போதிலும், அவர்களுடனிருந்து தமது தர்ம விஷயத் தீர்மானத்தைக் காரியத்திலும் வெளிக்காட்டாது, வெறும் அபிப்பிராய மாத்திரத்தில் அவர்களிடமுள்ள மனப்பற்றைத் துர்யோதனனுக்கும் காட்டி, அவனிடமுள்ள வெறுப்பை மாத்திரம் நன்றாகத் திருத்தமாகக் காட்டாது அவனுடனேயே இருந்து வந்துவிட்டார் ஆதிமுதல். இப்படிப்பட்ட பயங்கர உறுதியுடைய மஹானுக்கு, இம்மாதிரி அபிப்பிராயக்காரர் பக்கம் அதிக விரோதம் பாராட்டாமல் சொல் மாத்திர புத்திமதியுடன் முடிவு வரையில் இருந்துவிடும்படி ஏன் தோற்றியது என்ற சங்கை சிலரை வருத்தலாம்.

இதற்கு பதில் இரண்டு விதமாகத்தான் கூற முடியும். முதலாவது, இவர் மனதிலேயே தர்மவிஷயமான ஒருகுழப்பம் இருந்தது என்பதற்கு ஒரு ஆதாரம் காணப்படுகிறது. ஸபா பர்வத்தில் மாயச் சூதாட்டத்தில் முதல் ஆட்டம் முடிவில் திரௌபதி ஸபைக்கு இழுத்து வரப்பட்ட உடன், அவள் ஸபையோரைநோக்கி "பெரியோர்களே! என்னை இவர்கள் எல்லோரும் அடிமை என்றழைத்து வருத்தப்பார்க்கிறார்களே! நான் எக்காலத்தும் அடிமையாக முடியாதே! என் நாதன் முதலில் என்னைத் தோற்று தம்மைத் தோற்றாரா, அல்லது தம்மைத்தோற்று என்னைத் தோற்றாரா? இரண்டு வழியிலும் நான் அடிமைப்படக் காரணமில்லையே! முதலில் என்னைப் பந்தயம் வைத்தார் என்று கூற தர்மசாஸ்திரம் இடங்கொடாதே! மனைவி, மூத்த பிள்ளை இவைகளை பிறர் பலதரம் கேட்பினும் கொடுக்க நாதனுக்கு பாத்யமில்லை என்பதல்லவா தர்மசாஸ்திரம். ஆதலால் தர்ம விரோதத்தையே ஸ்மரிக்கும் தன்மையில்லா என் நாதன் இப்படிச் செய்திருக்க மாட்டார்: அப்படிக் காலவித்யாஸத்தால் செய்திருப்பினும் அது என்னை அடிமைப் படுத்த வேமாட்டாது. இப்படி இன்றி தம்மைத்தோற்றே என்னை தோற்றார் என்றால் அப்பொழுதும் நான் அடிமையாகக் காரணமில்லையே! தனக்கே ஸ்வதந்திரமில்லாதவர் என்னை எப்படிப் பந்தயம் வைக்கலாம்?' என்ற பொருள்கள் நிறைந்த சுருக்கமான ஆழ்ந்த சொற்களைக் கூறி மௌனமானாள். இதற்குப் பதிலாக பீஷ்மர் 'ஏழையோ பந்தயம் வைக்க முடியாது: பெண்களோ கணவருக்கு ஸொந்தம்: தர்மபுத்திரரோ எதை இழப்பினும் தர்மத்தைக் கைவிடார்: நான் தோற்றேன் என்ற பின்னேதான் உன்னைப் பந்தயம் வைத்தார்: சகுனியோ மாய்ச்சூதில் மஹா நிபுணன்: அவன் மோசடியாக ஆடினன் என்று அவர் மதிக்கவுமில்லை. இப்படி

எல்லாம் இருப்பதால் ஹே த்ரௌபதீ! உன் கேள்விக்குத் தகுந்த விடையளிக்க முடியவில்லை எனக்கு; தர்ம கதி அதிஸூக்ஷ்மமல்லவா?' என்ற குழப்பமொழிகளைக் கூறித் தமது மனச் சஞ்சலத்தை வெளியிட்டார். இதனால் துர்யோதனாதிகளுக்கு அவர் எதிர்பாராததைர்யம் ஏற்பட த்ரௌபதீ மானபங்கப்ரயத்னங்கள் முனைந்தெழுந்தன. இம்மாதிரியான தகுந்த ஸமயத்தில் ஏற்படும் மனக்குழப்பம் தர்மாத்மாவான பீஷ்மர் துர்யோதனாதியர் பக்கமே இருந்துவிடக் காரணமாயிருந்தது. இரண்டாவது, துர்யோதனாதிகளும் பாண்டவர்களும் இவருக்குப் பேரர்கள்தானே. அதில் துர்யோதனன் கெட்ட வழியில் நடக்க முயலுவதால் அவனுக்கு புத்தி கூறித் திருப்பி எல்லோருக்கும் ஸுகமான நிலைமை உண்டாக்கிவிடவேண்டும் என்ற ஆசை இவர் மனதைவிட்டு அகலவே இல்லை. இதனால் இவர் புத்திமதிகள் கூட விதுரரதுபோலக் கடுமையாயிருக்கவில்லை. இவ்விரண்டு விதக் குறைகளைக் கண்ணுற்ற துர்யோதனனுக்கு 'தாத்தா இப்படித்தான் பாண்டவர்கள்! பாண்டவர்கள்!! என்று கத்திக்கொண்டிருப்பார், ஸமயம் வந்தால் ஸஹாயம் நமக்கே செய்வார், என்ற நம்பிக்கை திடப்பட்டுக்கொண்டே வந்தது. இந்த எண்ணம் வலுத்த பிறகு இது இப்படி ஓங்கித் தழைத்துவிட்டது என்று பீஷ்மருக்கும் தெரிந்துவிட யுத்த ஸமயத்தில்கூட ஒதுங்கமுடியாமல் துர்யோதனன் பக்கம் இருக்கும்படி அவரைச் செய்துவிட்டது.

மானிடயாக்கை எடுத்த பின்பு இக்குறைகூட இல்லாமலிருக்க முடியுமா? மானிடப்பிறவியின் தன்மை ஸ்ரீராமபிரானையும் வாலியை மறைந்திருந்தடித்துக் கொல்லும்படி செய்துவிடவில்லையா? தேவர்களேனும் மானிடராகிவிட்டால் அப்பிறவிக்குரிய சில குறைகளுக்கு இடம் கொடுத்தே தீருவர்: இது பிறவியின் இயல்பு. இதை முன்னிட்டு பீஷ்மரிடம் உள்ள குறையை, அவர் சிறந்த குணங்களை நன்கு மதித்துப் பொருத்துப்பார்த்தால், பாரத கதையிலிருந்தே அவர் இந்த விஷயத்தில் சற்று ஏமாந்து போனதற்குத் தகுந்த காரணங்கள் சில ஏற்படும்.—(1) துர்யோதனனுடன் சேர்ந்துள்ள அஸுரர்கள் மஹான்களையும் மயக்கி அவனுக்கு ஸஹாயமாகச் செய்யத்தயாராயிருந்தனர் (2) அரசன்உத்தரவிற்கு இணங்கி நடப்பதே குடிகள் தர்மம் (3) பீஷ்மரது நடத்தை துர்யோதனனுக்கு ஒருவித அவநம்பிக்கையும் உண்டாக்காது, அவர் தனக்கு முடிவில் உதவி புரிவார் என்ற எண்ணத்தையே திடப்படுத்தி வந்தது. (4) இந்தக் கலகம் குடும்பக் கலகம்: ராஜ்ய விஷயத்தில், குடிகள் கருத்து தர்மபுத்திரரிடமே போகாத வண்ணம், துர்யோதனன் நடந்து வர நல்ல அரசனாகவும் இருந்தான்: கூடவே இருந்த பீஷ்மருக்கு இவனை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. (5) பீஷ்மருக்கு சிகண்டி தன்மிருத்யு; அவன் பாண்டவர் பக்கம்தான் இருப்பானென்பதும் தெரிய, பாண்டவர் பக்கம் போவது அனாவசியம் என்று பட்டது (6) மனதிற்குள் உண்ட வீட்டிற்கு இரண்டு எண்ணலாகாது என்பதை முடிவு வரையில் நடத்திக்கீர்த்திபெற வேண்டுமென்றதோர் ஆசை இருந்தது இவருக்கு. இது ஸாதாரணமாக விதுரருக்கு இருந்தது போல இருந்தால் நல்ல ஆசை என்னலாம்: இது வரம்பு மீறி விட்டபடியால் துர் ஆசை என்றோம். இந்த ஆசையின் இருப்பை, தம்மை வந்தனம் செய்து யுத்தம் தொடங்க அனுமதி கேட்கவந்த தர்மநந்தனரிடம் பீஷ்மரே வெளியிட்டு வருந்துகிறார். "ஹே! தர்மாத்மாவே! மனிதன் தனத்திற்கு அடிமை:



தனம் ஒருவனுக்கும் அடிமையல்ல. துர்யோதனாதிகளிடம் தனத்தால் நான் கட்டுப்பட்டுவிட்டேன். உனக்கு எப்படியப்பா ஸஹாயம் செய்வது? சண்டை செய்து ஸஹாயமாக இருக்கவேண்டும் என்பதைவிட்டு வேறு எவ்வித ஸஹாயத்தையாவது கேள். ஸந்தோஷமாகச் செய்கிறேன்" என்று மனமுருகி மொழிந்தார் பீஷ்மர். இந்த விஷயத்தை ஆதாரமாகக்கொண்டே மூன்றாம் நாள் யுத்தத்தில் பீஷ்மர் பராக்கிரமத்தால் கீதை கேட்டும் சோர்ந்த அர்ஜுனனை உத்ஸாஹப்படுத்த சக்கிராயுதத்துடன் தேர்த்தட்டிலிருந்து குதித்து பீஷ்மரை அதற்கு இரையாக்க ஓடி வருகையில், பகவான், பீஷ்மரை நோக்கி 'ஹே! பிதாமஹரே! நீர்தான் இந்த ஜனநாசத்திற்குக் காரணம்! நீதி மொழி கேட்கா மன்னனை மந்திரிகள், வைத்தியக்காரைக் கண்டு ஓடிவிடும் ஜனங்கள்போல், தனியேவிட்டு ஓடிவிட வல்லவோவேண்டும்' என்றுகூறிப் பரிஹாஸம் பண்ணி அவர் மனதைத் துன்பப்படுத்துகிறார்.

ஆகவே மஹாதர்மாத்மாவான கர்மயோக சிகாமணி எனும் பீஷ்மர் பாண்டவரிடம் வாராமலும், விதுரரைப்போலஒதுங்காமலும் முடிவுவரையில் துர்யோதனன் பக்கமேயிருந்தது, அவர் மானிட ஜன்மக் குறைவினாலேயல்லது, அவரை முற்றிலும் குற்றங்கூறக்கூடிய கொடுங்குணங்களால் அல்ல. இப்படிப்பட்ட சில குற்றங்கள் பெரியோர்களிடம் இல்லாமல் போகாது. நம்போன்றவர்கள் குற்றங்கூறி வீண்பொழுது போக்க ஏற்பட்டதல்ல இவைகள். நம்போன்ற ஸாதாரணர் ஸந்மார்க்கத்தில் முயலுங்கால் நமது முயற்சிகள் வீணாகும்படியான குற்றங்கள் நம்மிடமிருந்து மனமழிந்து ஒழுங்குப்படியான முயற்சியை கைசோரவிடாது மனம்தேறி முயலுவதற்கே பெரியோர்களிடமும் சில குறைகள் அமையும்படி நேரிட்டிருக்கிறது என்னலாம். ஆதலால் இக்குறைகளைக்கண்டு 'உலகில் குறையில்லாதவர் யார்.! ஆதலால் நமக்குக்குறை இருக்கிறதே! ஸன்மார்க்கமுயற்சி எப்படிப் பலிக்கும்? முயலாமலே இருந்தால் என்ன? என்றுகுதர்க்கம் செய்யலாகாது. கூடியவரையில் பார்ப்போம் பலித்தவரையில் லாபம்: பலியாதவரையில் மனமழிந்து கீழே போய்விடாது பெரியோர்களைப்போல் நாமும் இருக்கவேண்டியது நமது கடன்' என்று மனோதைர்யமுண்டாகவே பெரியோர்களிடம் குறைகள் இருக்க இடம் தந்துள்ளான் போலும் ஈசன்? இப்படியுள்ள இப்பீஷ்மரது குறையை நமக்கு ஸாதகமாகவே கொண்டு, இதனால் ஏற்பட்ட ஸந்தர்ப்பக்குழப்பங்களுக்கு இடையிலும் பீஷ்மர் எப்படித் தமது கர்மயோகத்தை அனுஷ்டித்தார் என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

பீஷ்மருக்கு மேல் ஏற்படும் கர்மயோகானுஷ்டான ஸமயம் மிகக்கடினமானது. அது இவரது குறையிலிருந்து ஏற்பட்டபடியால் தான் இவ்வாறாகிவிட்டது. இந்த ஸமயத்தில் இவரைப் போல மனோதிடமில்லாதவர்கள் சாஸ்திர நெறிதவறி விடும்படியே நேரிட்டுவிடும். மிக ஸாதாரணனான கர்ணன், துர்யோதனன் பக்கமே சேர்ந்துகொண்டு கூத்தாடி விட்டான். த்ரோணரும் கூடியவரையில் இவர் போலவிருந்தும் தர்மபுத்திரர் விஷயத்தில் மிக உருகி தம்மைக் கொல்லத்தகுந்த வழியை அவருக்கு யுத்த முன்னரே கூறித் தமது அனுஷ்டான நெறியிலிருந்து சற்று வழுவிவிட்டார். பீஷ்மரைப் போலிருந்தவன் துர்யோதனன் தம்பிகளுள் ஒருவனான விகர்ணன் தான். பீஷ்மர் சிறப்பைக் கூறப்புகுங்கால் இந்த தர்மாத்மாவான விகர்ணனை ஸ்மரிக்காமல் எப்படி இருக்கமுடியும்? கர்ண

னுக்கு ஏற்பட்டதான துர்யோதன நெருக்கமும், பீஷ்மருக்கு ஏற்பட்டிருந்த உறவு நெருக்கமும், விதுரருக்கு ஏற்பட்டிருந்த தீர்மான வார்த்தையும் இவனுக்கு இருந்தும், கஷ்ட ஸமயத்தில் பீஷ்மரைப்போல உறுதியாகக் கர்மயோகம் அனுஷ்டித்தான். இவனுக்கு பீஷ்மருக்கிருந்த மனக்குறை கூட இல்லை, விதுரருக்கிருந்த உறுதி யிருந்ததால். பாரத யுத்தத்தில் விகர்ணன் கர்மயோகானுஷ்டானத்தைக் கண்டு வியந்தேதான் பீஷ்மர் விஷயத்திற்குப் போகவேண்டும், இரண்டும் சற்றேறக்குறைய ஒரே மாதிரியாக விருப்பதால். விகர்ணன் என்றால் எல்லோருக்கும் பரமப்ரீதி. 'நூறு துர்யோதனாதியர்களை நானே கொல்வேன்' என்று ப்ரதிஜ்ஞை செய்த பீமனுக்குக்கூட விகர்ணனிடம் மிகுந்த அன்புண்டு. பீஷ்மரைப்போல விகர்ணனும் துர்யோதனனுக்காக உயிர்விடத் துணிந்து தனியேபோனால் பீமன் தன்னைக் கொல்லத் தயங்குவானே என்று அஞ்சி தன் ஸஹோதரர்கள் கூட்டத்தில் போய், 14-ம் நாள் யுத்தத்தில் பீமனால் மாண்டு விழுந்தான். இதையுணர்ந்த பீமன் துக்கித்துத் துடித்து தன் பிரதிஜ்ஞையைக் கடிந்து கொண்டு தத்தளித்தான் அந்தயுத்தமத்தியிலேயே. இப்படிப்பட்ட விகர்ணன் கர்மயோகானுஷ்டானம் மஹாபாரதத்தில் புதைந்துள்ளது. இனி மேல் எடுத்து விஸ்தரிக்கப்படும் பீஷ்மர் கடுமையான கர்மயோகத்தின் சிறப்பெல்லாம் இந்த விகர்ணனுக்கும் பொருந்தும். ஆகவே எங்கெங்கு பீஷ்மரை இனி வரும் பாகங்களில் வியந்து கூறி அவர் சிறப்பில் ஈடுபடப் போகிறோமோ அங்கெல்லாம் விகர்ணனை மறவாமலிருந்து அவன் நடத்தை விஷயத்திலும் ஈடுபடவேண்டியது நமது கடமை. *

* தமது குறைவால்வளரவிடப்பட்ட கொடிய தருணமாகிய யுத்த ஸமயத்தில் பீஷ்மர் அதர்மப்ரவிருத்தியும் இன்றி, அதர்ம கக்ஷியிலேயே இருந்து, கர்மயோகம் அனுஷ்டித்து, எப்படிப்பட்ட கொடிய ஸமயத்திலும் நியாயம் தவறாமலே கர்மயோகத்தை அனுஷ்டிக்க முடியும் என்று இவ்வாறு காட்டினார் என்பதைப் பின்னர் எடுத்து விஸ்தரிப்போம்.

# முத்தும், முத்துச் சிப்பியும்

## PEARLS & PEARL - OYSTERS

நவமணிகளுள் ஒன்றான முத்தானது நத்தையின் வயிற்றில் பிறக்கின்றது என்பது யாவரும் அறிந்த விஷயம். பலவித நத்தைகளினின்றும் முத்தானது உண்டானாலும் முக்கியமாய் இரண்டுவகை நத்தையினின்றுதான், வியாபாரத்துக் கேற்றதாயும், அழகாயும், அபரிமிதமாயும் உண்டாகின்றது. அவற்றுள் ஒரு வகை கடலிலும், மற்றொன்று சுத்த நீர்கொண்ட ஆறு, ஏரிகளிலும் வசிக்கின்றது. ஆனால் கடலில் வசிக்கும் நத்தையே மிக விலையுயர்ந்த முத்துக்களை உண்டாக்குகின்றது.

மிகப்பருத்தும் உருண்டும் ஒளிவீசும் முத்தே உத்தமமானதென்று கொண்டாடப்படும். ருஷியா (Russia) தேசத்தில் மாஸ்கோ நகரத்துள்ள ஸோஸிமா (Zosima) நூதனாசிரியத்தில் பாதுகாத்து வைத்திருக்கும் லா-பெல்லிக்ரைனு (La-Pelligrina) என்னும் பெயர் கொண்ட முத்தே, இவ்வுலகிலுள்ள முத்துக்கள் யாவற்றிலும் சிலாக்கியமென்று சொல்லுகிறார்கள். அதன் அழகை இவ்வளவென்று சொல்லமுடியாதாம். அது நந்தேசத்தினின்று கொண்டு போகப்பட்டதாம்; 28 "காரெட்" (Carat)கனமுள்ளதாம். லண்டன் நகரத்து ஸௌத் கென்ஸிங்டன் (South Kensington) நூதனாசிரியத்தில் பெரிஸ்வோர்ட் ஹோப் (Beresford-Hope) என்பவர் சேகரித்து வைத்திருக்கும் பொருள்களுள் முத்தொன்று உளதாம். அது இது வரையில் தெரிந்த முத்துக்களுள் மிகப் பெரியதாம். ஆனால் முன் சொல்லப்பட்ட முத்தைப் போல் உருண்டு பருத்ததன்று; ஒழுங்கற்ற உருவங் கொண்டது. இப்



பெரிய முத்து 4½ அங்குல சுற்றளவுடன் 3 அவுன்ஸ் கனமுள்ளது.

பூர்வீகத்தில் மன்னார் குடாக் கடலும் பெர்ஷியக் குடாக் கடலும் முத்துச் சலாபங்களுக்கு மிகப் பேர் போனவை. இக்காலத்தும் இலங்கைத்தீவின் கரையோரமாகவும் தூத்துக்குடித் துறைமுகத்துக்குச் சமீபத்திலும் அந்தந்த துரைத்தனத்தார் உத்தரவின் பேரில் முத்துக் குளித்தல் நடந்து வருகின்றது. ஆனால் சில வருஷங்களாக நின்று போய் இருக்கிறது. முன் முத்துக்குளித்தல் வழக்கமாயிருந்த காலத்து, மார்ச்சு மாதம் நடுவில் தொடங்கி, சமயத்துக்குத் தக்கவாறு, நாலு, ஐந்து அல்லது ஆறு வாரம் முத்துக்குளிப்பார்கள். நடுஇரவில் 60, 70 படகுகள் ஒன்றாய்ச் சேர்ந்து புறப்பட்டு முத்துச் சலாபங்கள் இருக்கும் இடத்துக்கு சூரியோதய சமயத்தில் போய்ச் சேருவார்கள். முத்துக்குளிப்போர் இரண்டிரண்டு பேர்களாகச் சேர்ந்து வேலை செய்வார்கள். ஒருவன் இடையில் ஒரு கயிற்றைக் கட்டிக் கொண்டு தண்ணீருள் மூழ்கிக் காலாலும் கையாலும் அடியில் தேடி முத்துச் சிப்பிகளை வாரி, ஒரு கூடையில் போடுவான். மற்றவன் படகிலிருந்து கொண்டே மூழ்குவோனையும் கூடையையும் உயர இழுப்பான். தண்ணீருள் மூழ்குவோன் 50 முதல் 80 வினாடிவரையில் தண்ணீருக்குள் இருப்பான். முத்துக்குளிப்போரில் ஆறு நிமிஷம் வரையிலும் தண்ணீருள் இருக்கும் சக்தியுடையவர்களும் இருக்கிறார்களாம். இங்ஙனம் முத்துச் சிப்பிகளைச்சேர்த்து நடுப்பகலில் கரையில் கொண்டு வந்து அவற்றை நாலு பங்காகப் போட்டு, ஒரு பங்கை முத்துக்குளிப்போருக்கு கொடுத்து, மற்றைய மூன்று பங்கை 1000, இவ்வளவென்று விலைகூறி, ஏலமிடுவார்கள். அவற்றை வர்த்தகர்கள் வாங்கி சிப்பிகளிலிருக்கும் முத்துக்களைச் சேகரித்தெடுத்து, சுத்தி செய்து வியாபாரத்துக்கு கொண்டு போவார்கள். நமது இந்தியாவில் இவ்விரண்டு இடங்கள் தவிர கராச்சி (Karachi) துறை முகத்துக்கப்பால் முத்துச் சலாபங்கள் இருக்கின்றன. ஆனால் அவ்விடத்தில் முத்துக்குளித்தல் மிகுதியாக நடப்பதில்லை.

கிறிஸ்து பிறக்க பல நூற்றாண்டுகளுக்கு முன் காலந் தொட்டே, பெர்ஷியக்குடாக் கடலில் முத்துக் குளித்தல் நடந்து வருகிறது. முக்கியமாக வியாபாரம் நடக்குமிடம் லிங்கா (Lingah) என்னும் துறைமுகப் பட்டணம். அங்கிருந்து எடுக்கப்படும் முத்துக்களில், சற்று மஞ்சள் நிறமுள்ளன பம்பாய்நகரத்துக்கும், வெண்ணிறமுள்ளன பாக்டாட் (Bagdad) நகரத்துக்கும், விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. இவற்றைத்தாம் மேல் இந்தியாவில் "பம்பாய்முத்து" என்றுசொல்லுவார்கள். ஆனால் இவை "சூது" முத்தல்ல; நல்லமுத்தென்றே சொல்லவேண்டும். இவற்றுள் மிகச் சிறிதாயிருப்பவற்றை அரைத்து வெற்றிலையுடன் சுண்ணம்பாக அத்தேசத்துத் தனவான்கள் உபயோகிப்பார்கள்.

தற்காலத்தில் விற்பனைக்கு வரும் நல்ல அழகிய முத்துக்கள்முக்கியமாய் போர்னியோ(Borneo) என்று சொல்லப்படும் தீவிற்கு வடகிழக்கிலுள்ள (Sulu-Archipelago) சூலு தீவுகளிலிருந்தும், மத்திய அமெரிக்காவைச் சேர்ந்த கலிபோர்னியா (Gulf of California) குடாக் கடலிலிருக்கும் ஆஸ்திரேலியாவைச் சுற்றிய கடல்களிலிருந்தும் உண்டாகின்றன.

முத்தென்பது என்ன? நத்தையின் ஓட்டைப் பிரித்துப் பார்த்தால் அதன் உட்புறம் வெகு பளபளப்பாய் இருக்கும். அத்தகைய பளபளப்பை உண்டாக்குவது நத்தையின் இருபுறத்திலும் மூடிக்கொண்டிருக்கும் "மெய்ப்படாம்" (Mantle) என்று சொல்லப்பட்ட அங்கத்தினின்று பொசியும் நமது எச்சில் போன்ற ஒரு பொருளாம். அது சிறிது சிறிதாய் உண்டாகி, மேல் ஓட்டின் உட்புறத்தில் படிப்படியாய் ஒட்டிக் கொள்ளும். அது காரணமாகத்தான் ஓட்டின் உட்புறம் மெதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கின்றது. அப்பொருளே மிகத் திரண்டு உருண்ட வடிவம் கொள்ளுமானால் அதை முத்தென்கிறோம். எக்காரணத்தினால் அது உருண்டு முத்தாகிறது? அணுவளவாகிய வேறு சில பிராணி நத்தையின் தசையைத் தின்பதற்காக போர்வை போன்ற அதன் அங்கத்தின்மேல் வந்தணுகி அவ்வங்கத்தை அழற்றும். அப்போது அவ்வங்கத்தினின்று அப்பளபளப்பான பொருள் மிகுதியாய் வடிய ஆரம்பித்து அச்சிறு பிராணியைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுற்றிக் கொள்ளும். பின்பு அதே பொருள் மேன்

மேலும் படியலே திரண்டு உருண்டு அழகிய வடிவம் கொள்கிறது. அங்ஙனம் உருண்ட மணியே முத்தென்பதாம். அது எவ்வளவுக்கெவ்வளவு சுத்தமாயும் பருமனாயுமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அழகிலும் விலையிலும் ஓங்கும். சிற்சில சமயங்களில் மேலோட்டின் உட்புறத்திலேயே, இச்சிறு பிராணியின் உதவியின்றி, இப்பளபளப்பான பொருளே புடைத்து நிற்கும். அதுவும் முத்துத்தான்; ஆனால் அது அவ்வளவு அழகாயும் உருண்டையாயும் இராது.

முன் சொல்லப்பட்ட கடல்களில் சாதாரணமாய் வருஷா வருஷம் முத்துக்குளித்து வந்தாலும் சில வருஷங்களில் பயனில்லாக்காரியமாய் முடியும். சில வருஷங்களில் முத்துச்சிப்பிகள் ஏராளமாய் அகப்படும்; வேறு வருஷங்களில் ஆயிரக்கணக்காகத் திரவியம் செலவிட்டாலும் ஒன்றும் அகப்படுவதில்லை. காரணம் என்னவோ? முத்து நத்தையின் குஞ்சுகள் கடலிலுண்டாகும் பெருஞ்சுழல்களினால் வெவ்வேறிடங்களுக்கு வாரிக்கொண்டுபோகப்படுவதுமல்லாமல் மண்ணினாலும் கடற்பூண்டுகளினாலும் மூடப்பட்டுப் போகும். இத்தகைய அபாயங்களைத் தடுப்பதற்குச் செய்ய வேண்டிய சாதனங்கள் பல உண்டு. முக்கியமாய், முத்துச்சிப்பிகள் இருக்கும் "பார்"களைச் செவ்வனே பரிசோதித்துச் சிப்பிகள் நெருக்கமாய்ச் சேர்ந்திருக்காமல் தடுத்தும்; குஞ்சுபொரிக்கும் நத்தைகளைச் சரியாய் பாதுகாத்தும்; குஞ்சுகள் உண்டான காலத்தில் அவை ஒரே இடத்தில் கூட்டங் கூடாமலும் ஒரே இடத்தில் தங்கியபோதிலும் அவ்விடம் அவற்றிற்கு தகுந்ததல்லாவிடின் வேறு இடங்களுக்கு மாற்றியும்; இன்னினவும் செய்ய வேண்டிவரும்.

கடலிலுண்டாவது தவிர, ஆறுகளிலும் ஏரிகளிலும் முத்துச்சலாபம் உண்டாகுமென்று முன்னமேயே சொல்லப்பட்டது. ஒருகாலத்தில், ஸ்காட்லண்டு (Scotland) தேசத்திலுள்ள ஆறுகளிலிருந்து எடுக்கப்பட்ட முத்துக்கள் மிகவும் சிறப்பித்து நின்றன. அயர்லாண்டு, ஸாக்ஸனி, போஹிமியா, பவேரியா, கானடா (Canada) என்னும் தேசங்களின் ஆறுகளில் இக்காலத்தும் முத்துச்சிப்பிகள் உண்டாகின்றன. அமெரிக்காவின் ஐக்கிய மாகாணங்களிலும், ஜப்பான் தேசத்திலும், ஆறுகளில் முத்துச்சிப்பி வளர்ப்பது ஒரு பெரும் கைத்தொழிலாக மேற்கொண்டு அத்தேசத்தார் நடத்தி வருகிறார்கள். ஆனால் சீனா தேசத்தில்தான் சுமார் 4,000, 5,000, வருஷங்களாக முத்துச்சிப்பி வளர்த்தல் முக்கியமான ஒரு கைத்தொழிலாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. அங்குள்ள பெரிய நதிகளில் நத்தைகளை இட்டு, வளர்த்து, அவை இயற்கையாலன்றி செயற்கையாலும் முத்துக்கள் உண்டாகும்படி செய்கிறார்கள். முன் விவரித்தபடி ஒரு சிறு பிராணி நத்தையின் போர்வை அங்கத்தை அழற்றுவதற்குப் பதிலாக, இச்சீன தேசத்தார் சிறு சிறு கற்களையும் வேறு வஸ்துக்களையும் நத்தையின் ஓட்டிற்கும் போர்வை அங்கத்திற்கும் இடையில் நுழைத்துவிடுவார்கள். அவற்றைச்சுற்றி பளபளப்பான பொருள் பொசிந்து ஒட்டிக்கொள்ளும். சில காலங்கழித்து நத்தைகளை எடுத்து இவர்கள் திறமையால் உண்டாகியிருக்கும் முத்துக்களைச் சேகரித்துக்கொண்டு இறந்த நத்தைகளை உணவுக்கு உபயோகிப்பார்கள். இங்ஙனம் செயற்கையால் முத்துச் செய்வதை முதல் முதல் கண்டு பிடித்தவன் யீ-ஜின்-யாங் என்பவன்; ஹூச்சு என்னும் ஊரைச் சேர்ந்தவன்; ஏறக்குறைய அறுநூறு வருஷங்களுக்கு முன் இருந்தவன். இவ்விதம் முத்துச் செய்தல் சீனா தேசத்தில் பல இடங்களில் நடந்து வந்த போதிலும் முக்கியமாய் டேட்-ஸ்ங் என்னும் ஊருக்கருகாமையில் இக்கைத்தொழில் மிகுதியாய் தழைத்தோங்கி நிற்கிறது. அவ்விடத்தில் 5,000 6,000 ஜனங்கள் இதையே தொழிலாகக் கொண்டு காலங்கழித்து வருகிறார்கள். இத்தகைய முத்துக்கு "சைனா" முத்தென்றும் "சிப்பி" முத்தென்றும் நம்மவர்கள் பெயர்வழங்கிவருகிறார்கள். இம்முத்துக்களுள் மிகவும் வியக்கத்தக்கது பௌத்தருடைய உருவங்கொண்டது. சிப்பிக்குள் கற்களையும் மற்ற பொருள்களையும் நுழைப்பதற்குப் பதிலாக, சிறு தகரத் துண்டுகளில் பௌத்தருடைய உருவத்தை அச்சடித்து அத்துண்டுகளை நத்தையின் போர்வை அங்கத்துக்குள் நுழைத்துவிடுவார்கள். கல்லைச்சுற்றி முத்துத் திரண்டு உருவெடுப்பதுபோல் இத்தகரத் துண்டுகளைச் சுற்றியும் பளபளப்பான பொருள் படிந்து



பௌத்த உருவத்துடன் பிரகாசிக்கும். இவ்வுருவங்கள் பௌத்தமதம் சிறந்தோங்கும் நாடுகளில் அதிகமாய் விற்பனையாகின்றனவென்பது சொல்லவேண்டா விஷயம்.

முத்துச் சிப்பியிலிருந்து உண்டாகும் முத்துக்கள் பல வர்ணமுடையன. சாதாரணமாய் வெண்ணிறமும், அல்லது வெண்ணிறத்தோடு கலந்த மஞ்சள் நிறமும் கொண்டிருக்கும். ஆனால் கருப்பு நிறங்கொண்ட முத்துக்களும் உண்டு. அவை மிக விலையுயர்ந்தவை; அபூர்வமாகத்தான் அகப்படும்; மெக்ஸிகோ (Gulf of Mexico) குடாக்கடலில் வசிக்கும் முத்துச் சிப்பியிலிருந்து எடுக்கப்படுகின்றன.

அதன் பளபளப்பின் நிமித்தம் நத்தையின் ஓடு மனிதனுக்கு வேறு விதங்களில் பயன்படுகிறது. அதைத் துண்டு துண்டுகளாய் உடைத்து, மர சாமான்களில் பதிப்பு வேலை செய்வதற்கு உபயோகப் படுத்துவார்கள். இதுவுமன்றி சிப்பிப் பொத்தான் (pearl buttons) முதலியன செய்வதற்கு ஆஸ்திரேலியாவிலிருந்தும் இன்னும் இந்திய, பஸிபிக் சமுத்திரங்களிலுள்ள தீவுகளிலிருந்தும் இக்கைத்தொழில் செய்யும் மேனாடுகளுக்குப் பெரும்பாலும் ஏற்றுமதியாகின்றது.

இனி "சூது" முத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்வது அனாவசியமாகாது. நல்ல முத்து விளையும் நம் தேசத்தில் இப் "போலி" முத்து அபரிமிதமாய்க் கொண்டாடப்பட்டு வருவது நம் தேசத்தாருடைய விவேகத்தையும் நாகரீகத்தையும் ஒரு பால் வெளிப்படுத்துகின்றது. மேனாட்டு நிபுணர்களின் மனதையும் கவரும் நமது ஆரியமதத்தை விலக்கி, வேறு போலி மதங்களை மேற்கொள்ளுவது போலாகும். தற்காலத்தில் "சூது" முத்து பிரான்சு, ஜெர்மனி, இத்தலி, என்கிற தேசங்களில் செய்யப்பட்டு மற்ற தேசங்கட்கு இலக்ஷக்கணக்காய் வருஷா வருஷம் ஏற்றுமதியாகிறது. கி. பி. 1680-ம் வருஷத்தில் பாரிஸ் நகரத்தில் ஜெபமாலை செய்யும் ஜாக்கீன் (Jacquin) என்பவனால் முதன்முதல் செய்யப்பட்டுப்பின் வேறு இடங்களுக்கு இக்கைத்தொழில் பாவியிருக்கிறது. இம்முத்துக்கள் உட்புறத்து வெண்மெழுகு அடைக்கப்பட்டு வெளிப்புறத்துமெல்லியகண்ணாடி உண்டைகளால் ஆக்கப்பெற்றன.

V. நரஸிம்மய்யங்கார், எம். ஏ., பி. எல்.

# பிராணிகளின் வர்ணங்கள்

## COLOUR OF ANIMALS

நம்மைச்சுற்றிலும் இருக்கும் பிராணிகள், புழுக்கள், ஒவ்வொன்றும் ஒவ்வொரு வர்ணமுள்ளவையாயிருக்கின்றன. சாதாரணமாகப் பார்க்குமிடத்து பிராணிகளுக்கு வர்ணங்களினால் உபயோகம் இன்னதென்பது விளங்காவிட்டாலும், அவைகளின் வாஸஸ்தலம், ஆகாரம் இவைகளை உற்றுப்பார்த்து ஆராயும்போது ஒவ்வொன்றுக்கும் வர்ணங்கள் அவசியமென்று விளங்கும். முதல் முதல், வர்ணங்கள் எவ்விதம் உண்டாகின்றன என்பதைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். சூரிய வெளிச்சம் வெண்மையாகத் தென்பட்டாலும் அவை, ஊதா, அவுரிநீலம், நீலம், பசுமை, மஞ்சள், கிச்சிலி, சிவப்பு முதலிய ஏழு பிரதமவர்ணங்கள் கொண்டுள்ளன என்பது மூன்று பட்டைக்கண்ணாடியின் ஊடே, சூரிய வெளிச்சத்தைச் செலுத்துவதால் பார்த்து அறியலாம். இவ்விதமே பச்சைக்கண்ணாடி பசுமை வர்ணம் தவிர, மற்றைய வர்ணங்களை அடக்குவதால் அதனால் பார்க்கப்படும் வஸ்துக்கள் பசுமையாய் இருக்கின்றனவென்றும் மற்ற ஒவ்வொரு வஸ்துவும் இந்த ஏழு வர்ணங்களில் எவைகளையடக்கி மற்றவையை விடுகின்றதோ அதே வர்ணமுள்ளது என்றும் தெரிந்துகொள்ள வேண்டியது. ஆகையால் பிராணிகள் அவைகள் உடம்பில் உள்ள பண்டங்களுக்குத் தக்கபடி வர்ணங்களை அடைகின்றன. இவ்வித வர்ணங்களால் அவைகளுக்கு உபயோகமென்ன? குளிர்ப் பிரதேசங்களில் உள்ள பக்ஷிகள், மிருகங்கள் வெண்மையாகவும், பூச்சி புழுக்கள் கருப்பாகவும் இருக்கின்றன. இவ்விடத்தில் சாதாரணமாக கருப்புவர்ணத்திற்கு உஷ்ணத்தைச் சீக்கிரத்தில் கிரஹிக்கும் சக்தியுண்டென்பது அறியவேண்டியது. ஆகையால்தான் கரிபிடித்த வென்னீர்த் தவலையில் ஜலம் சீக்கிரம் சூடாகிறது. குளிர்ப்பிரதேசங்களில் உறைபனி நடுவே வசிக்கும் இப்பூச்சிகள், சூரியவெளிச்சம் அடிக்கும் சிலகாலத்திற்குள்ளாக வேண்டிய அளவு உடம்பைச் சூடாக்கிக்கொண்டு, குகையில் அடக்கமாகக் குளிர்காலங்களில் ஒரே அடியாகத் தூங்கப்போகின்றன. ஆனால் இடம் விட்டு மாறும்படியான மிருகங்களும் பக்ஷி

களுமோ, தங்களைப் பகைவர்கள் கண்டுபிடிக்க முடியாதபடி எங்கே பார்த்தாலும் ஒரே வெண்மையாகத் தோன்றும் உறைபனியிலேயே ஒளித்துக்கொள்ள வெண்மை நிறமாயிருக்கின்றன.

பிராணிகளுக்கு வர்ணங்களினால் விசேஷ உபயோகமுண்டு. முதல்முதல் தங்களைப்பிடித்துத்தின்னவரும் பிராணிகள் கண்களினின்று தப்பும்படி பக்கங்களில் உள்ள பண்டங்களின் வர்ணத்தை யடைந்திருப்பது இரண்டாவது தங்களுக்கு வேண்டிய ஆகாரப்பிராணிகளைப் பிடிப்பதற்கு அப்பிராணிகளுக்குத் தெரியாதபடி மறைவில் ஒளிந்துகொண்டு ஆகாரத்தைச் சம்பாதிக்கும் வழியாவது முதல்வகை வர்ணமுள்ளது தற்காப்பு வர்ணம் என்றும், இரண்டாவது, பிறஹிம்ஸை வர்ணம் என்றும் நாம் இவ்விடத்தில் குறிப்பிடுவோம். முயலின் வர்ணம் புதர்களில் ஒளிந்து கொள்வதால் பகைவர் கையினின்று தப்பும் தற்காப்பு வர்ணமாகும். சிங்கம் குளிர்ப்பிரதேசங்களில் உள்ள வெள்ளைக்காடி இவைகள் தங்கள் கிட்டவரும் பிராணிகளை இரையாகப்பிடிக்க அவைகளுக்குத் தெரியாதபடி புதர்களில் மறைந்திருக்க சவுகரியமாகிறபடியால் பிறஹிம்ஸை வர்ணமாகும்.

இன்னும் சில பிராணிகள் அவைகளிடம் உள்ள இயற்கையான துஷ்ட குணங்களினாலும், பயங்கரமான செய்கைகளாலும், பிறருக்கு ஹிம்ஸைசெய்கின்றன. அவைகள் இருப்பிடத்தை யெல்லாருக்கும் நன்றாகத் தெரிவிப்பதற்கு பளபளப்பான வர்ணங்களையடைந்திருக்கின்றன. இவ்வித வர்ணங்களை எச்சரிக்கை வர்ணமென்று கூறுவோம். குளவி, தேனீ, இவற்றின் பளபளப்பான இறக்கையும், நல்லபாம்பின்படமும், கட்டுவிரியன், கண்ணாடிவிரியன், முதலியவற்றின் பளபளப்பான வர்ணங்களும், புலியின் புள்ளிகளும் இவற்றிற்கு உதாரணமாகும்.

இன்னும் சிலபிராணிகள் தங்களாலியற்கையாகவே பிறபிராணிகளை ஹிம்ஸைசெய்யமுடியாமையால் அவ்விதம் ஹிம்ஸைசெய்யும் பிராணிகளைப்போன்ற வர்ணம் பெற்றிருப்பதால் அவைகளைப்பகைப்பிராணிகளும் மற்ற ஜந்துக்களும் ஹிம்சிக்காமல்தப்புகின்றன. இன்னொரு விதப்பிராணி தங்கள் ஆகாரஜந்துக்கள் என்ன வர்ணமுள்ளவையோ, அவைபோன்ற வர்ணங்களையடைந்து அதனால் தங்கள் ஆகாரங்களை சுலபமாக சம்பாதித்துக் கொள்கின்றன. இவ்வித வர்ணங்களை வேஷவர்ணம் என்று இங்கு கூறுவோம். இன்னும் கோழி, மயில், வண்ணாத்திப்பூச்சி, முதலிய பிராணிகளில் ஆண் ஜாதிக்கு அதிக அழகான சிறகுகள் இருக்கின்றன. பெண் பறவையும், பூச்சியும்சிறந்த ஆண்களுடன் கூடி குலவிருத்தி செய்வதற்காக அப்பெட்டையின் மனதைக் கவருவதற்கே அழகிய சிறகுகளை யடைந்திருக்கின்றன என்று சொல்வது தகும். மேற்கூறிய ஐந்து வகை வர்ணங்களில் சிலவற்றிற்கு உதாரணங்களை எழுதிவிளக்குவோம்.

“அநேக பிராணிகளின் வர்ணங்கள் அவைகள் பகைவர் கையினின்று ஒளிந்துகொள்வதால் தப்புவதற்கும், அவற்றின் ஆகாரப் பிராணிகளின்மேல் மறைந்து பாய்ந்து பிடிப்பதற்கும் சவுகரியமாயிருக்கும்படி அமைந்திருக்கின்றன” என்று டார்வின் (Darwin) துரை சொல்லுகிறார். இவ்விதம் ஒளிந்து கொள்வதற்கு பகைப்பிராணிகளின் கண்ணுக்குத்தெரியாதபடி வசிக்குமிடத்திற்குத் தகுந்தபடி வர்ணமடைந்திருப்பதும் உண்டு; அல்லது பகைப்பிராணிக்கு விருப்பமில்லாத வேறு பிராணிகளின் வர்ணத்தையடைவதால் அவைகளின்கவனத்தைக் கவராமல் விடுதலும் உண்டு. பட்டுப்பூச்சிகள், புழுக்கள் இலைகளில் இடப்பட்ட முட்டையிலிருந்து உற்பத்தியாகி, அவ்விலைகளைத் தின்றுவளருங்காலத்தில் அவை பசுமை நிறமடைந்திருக்கின்றன. அப்பொழுது இவற்றைத் தின்னவிரும்பும் பிராணிகள் கண்களுக்கு பசுமையான இலைகளின் நடுவேயிருத்தலால் புலப்படாமல் தப்புகின்றன. பாம்புகள், பல்லிகள் சாதாரணமாக பளப்பளப்பாக வரிக்கோடுகளையுடையனவாக விருந்தாலும் அவை சற்று தூரத்தில் மணலில் கிடப்பதைப்பார்த்தால் அவைகள் மேல் இருக்கும் வரிகளும் தெரிவதில்லை. அவைகள் இருப்பிடமும் நன்றாகப்படாது.

ஆப்பிரிக்காதேசத்து வரிக்குதிரையின்மேல் கருங்கோடுகளும் வெள்ளைக்கோடுகளும் கலந்திருப்பதால், சாதாரணமாக புதர்களில் ஒளிந்து கொண்டிருக்கும்போது அவைகளின் மூச்சுவிடும் த்வனி காதில்கேட்டாலும் அவை



கள் மாத்திரம் கண்ணிற்குப் புலப்படுவதில்லை. புழுக்களில் சில மரங்களின் கிளைகளில் ஒட்டிக் கொண்டிருக்கும்போது அவைகளின் தலை சாதாரண குருத்துப் போலவும் உடல் சிறு கிளை போலவும் தென்படுவதால் குருவிகள் கண்ணிற்குப் புலப்படுவதில்லை.

இன்னும் சிலர் இவ்விதம் ஒளிந்து கொள்ளுதல் எவ்வளவு தூரம் இப்புழுக்களைக் காப்பாற்றக் கூடும்? அவைகளைத் தின்னும் பிராணிகளின் பார்வை அதிக நுட்பமாகிறபடியால் முற்றிலும் தப்பாது என்று அபிப்பிராயப்படுகிறார்கள். புழுக்கள் இலைகளைத் தின்பதால் அவ்விலைகள் வாயிற்றி விருக்கும்பொழுது அதன் மெல்லிய சதையும் பசுமையாகத் தோன்றுகின்றன. கொஞ்ச காலத்திற்குப் பிறகு தோல் உரித்து பழுப்பு நிற மடையும்போது கீழே இறங்கி மண்ணில் ஊர்வதால் புழுதின்னும் பிராணிகளின் கண்களினின்றும் தப்புகின்றன. புழுக்கள் அகப்படாமல் பசியால் வருந்துங்காலங்களில் புழுக்களெல்லாம் பட்டுக்கூடு கட்டிக்கொண்டு உட்காருவதாலும், அக்கூடுகளைச் சருகுகளுக்குப் பின்புறத்தில் கட்டுவதனாலும், முற்றிலும் தப்புகின்றன. வண்ணாத்திப்பூச்சிகள் பல பல வர்ணமுள்ளவையாய் இருக்கின்றன. இவற்றுள் அதிக பளபளப்புள்ளவை ஆகாரத்திற்கு அவ்வளவு ருசியா யிராததால் பக்ஷிகள் அவற்றைக் கவனிப்பதில்லை. சாதாரணமாக பழுப்பு சிறகுகளை யுடைய பூச்சிகள்தான் ஆகாரத்திற்கு ருசியா யிருக்குமென்று பக்ஷிகள் அவைகளைத் தேடும். ஆனால் இவைகள் இலையில் உட்காரும்பொழுது அவற்றின் இறக்கை பழுத்த இலை மாதிரி இருப்பதால் பக்ஷிகள் கண்களினின்று தப்புகின்றன.

ஊர்வனவும் இவ்விதம் தற்காப்பு வர்ணங்கள் அடைந்திருக்கின்றன. பச்சைப்பாம்பும் செடிகளில் இருக்கும்போது கண்ணிற்குத் தெரியாதாகையால் தற்காப்பு வர்ணமாகும். இம்மாதிரியே சிலபக்ஷிகள் பழுப்பு முட்டைகளை மணலிலும், சருகுகளுக்குள்ளேயும், இடுவதால், முட்டை தேடித்தின்ன அலையும் ஜந்துக்களினின்று காப்பாற்றிக் கொள்கின்றன. சில முட்டைகள் ஒரு பக்கம் வெண்மையாகவும், மற்றொருபக்கம் கருப்பாகவும் இருப்பது, கீழேயிருந்து பார்க்கும்போது வெண்மையான பக்கம் தெரிவதால் வெண்மையான ஆகாயத்தினின்றும் வித்தியாசம் தெரிவதில்லை. கீழே நின்று பார்த்தால் தரை பழுப்பாக இருப்பதால் மேல் பக்கம் பழுப்பும் தெரிவதில்லை. மீன்களில் அநேகமாக அடிப்பக்கம் வெண்மையாகவும், மேல்பக்கம் கறுப்பாகவும் இருப்பது கீழே இருந்து பார்க்கும் இதரமீன்களுக்கு இதன் அடிப்பக்கம் வெண்மைக்கும் ஆகாய வெண்மைக்கும் வித்தியாச மில்லாமல் இருப்பதற்கேயாம். ஆகையால் இதுவும் தற்காப்பு வர்ணமாகும்.

## பிறஹிம்ஸை ஒற்றுமை வர்ணம்

சில ஓணான்களுக்கு மூக்கில் சிவந்த சதை தொங்கும். இது மணலில் அசைவற்று நிற்கும் பொழுது, பழுப்பாயிருக்கும். இதன் உடல் தெரிவதில்லை. அதனால் பூச்சிகள் இதன் மூக்கில் வளரும்சதையை புஷ்பம் என்று நினைத்து ஸமீபத்தில் சென்றதும் ஓணானால் பிடிபடுகின்றன. சிலமீன்களுக்கும் இவ்விதமான பளபளப்பான தும்பிகள் உண்டு. இவை மணலில் ஒளிந்து கொண்டு தும்பிகளை மட்டும் அசைக்கும் பொழுது தவளை முதலியவை நெருங்கும். அப்பொழுது அவைகளைப் பிடித்துத் தின்னுகின்றன. பூச்சிகளுக்குப் பறவைகளின் எச்சத்தில் அதிக விருப்பம். இதையறிந்த சில சிலந்திகள் பறவை யெச்சம்போல் கால்களை மடக்கி அசைவற்று நிற்கும். ஈ,பூச்சிகள் கிட்ட நெருங்கி இதன் மேல் உட்காரும்பொழுது அவற்றைப் பிடித்துத் தின்னும்.

பச்சோந்தி, தவளை, இன்னும் சில மீன்கள் நினைத்தபடி வர்ணத்தை மாற்றும் சக்தியை அடைந்திருக்கின்றன. இவ்விதம் வர்ணம் மாற்றும் சூக்ஷ்மம் அவைகளின் கண்களில் இருக்கின்றன வென்றும், அவற்றின் கண்ணைக் குத்திக் குருடாக்கி விட்டால் அவ்விதம் வர்ணம் மாற்றும் சக்தி இல்லாமற் போகிற தென்றும் தெரிகிறது.

## எச்சரிக்கை வர்ணம்

நல்ல பாம்புக்கு தற்காப்புவர்ணமே. ஆனால் எதிரிகள் நெருங்கினால் படத்தைக் காட்டும் பொழுது எதிரிகள் பயந்தோடுவதால் இது எச்சரிக்கை வர்ணமென்றும் சொல்லலாம். இம்மாதிரி எச்சரிக்கை வர்ணம் சில மீன்களுக்கும் உண்டு. இன்னும் சில புழுக்கள் கருப்பும்

சிவப்புமான பளிங்க வர்ணங்கள் அமையப் பெற்றுள்ளன. இவைகளைத் தின்னும் பிராணிகள் மிகவும் வருந்துகின்றன. ஆகையால் இவற்றை ஒன்றும் தொடுவதேயில்லை. இவற்றைக் கண்டதும் பக்ஷிகள் கொல்லாதிருப்பதற்காக 'நான் உனக்கு ஆகாரத்திற்கு உபயோகப் படமாட்டேன்; வீணில் என்னைத் தின்பதால் அவஸ்தைப் படாதே' என்றுசொல்லுவது போலாகும். இவ்விதம் எந்தப் புழுக்களுக்கு அதிக வர்ணங்கள் காணப்படுகின்றனவோ, அவைகள் புழுதின்னும் பிராணிகளால் வெறுக்கப்படுகின்றன. ஆனாலும் பக்ஷிகளால் விரும்பப்படும் சில புழுக்கள் வெறுக்கப்பட்ட புழுக்களின் வர்ணத்தையடைவதால் தங்கள் சத்துருக்களை ஏமாற்றுகின்றன. இவற்றிற்கு 'ஏமாற்று எச்சரிக்கை வர்ணம்' என்று கூறுவோம். இவற்றினிடம் துஷ்டகுணமில்லாமையால் காப்பாற்றிக்கொள்ளும் வழியில்லை. ஆதலால் புழுதின்னும் பிராணிகளால் வெறுக்கப்பட்ட பிராணிகளைப்போல் வர்ணம் பெற்றிருக்கின்றன.

கடைசியாக சிலபிராணிகளில் தக்கபருவமடைந்தவுடன் வெகு அழகான தோகைகளில் வர்ணங்கள் உண்டாவதைப் பார்க்கிறோம். பெண்பறவைகளின் மனதைக் கவரும் படியாக அவ்வளவு அழகையடைவதற்கே ஆண்பறவைகள் வர்ணத்தோகையை அடைந்திருக்கின்றன. இவ்விதம் நம்மைச் சுற்றிலும் காணப்படும் பிராணிகள் ஒவ்வொன்றையும் உற்று நோக்கும்பொழுது, அவற்றின் உண்மையான பழக்கங்கள், தந்திரங்கள் எல்லாம் விளங்கும். ஈசுவரனுடைய அதிஅற்புதமான சக்தியும், நம்மனதிற்குப் புலப்படும்.

S. பஞ்சாபகேச சர்மா, பி. ஏ., எல். டி.

---

## சந்தா நேயர்களுக்கு

அடுத்த ஜூலை மாதத்தில் நம் பத்திரிகையின் 7-ம் வருஷ ஆரம்பம் என்பதை நமதுநேயர்கள் அறிவார்கள். அத்தொகுதியில் அநேகம் சீர்திருத்தங்கள் செய்ய ஆவல் கொண்டிருக்கிறோம். வழக்கம் போல் வி. பியிலனுப்பப்படும் ஜூலைமாதப்பத்திரிகையை பிரியமுடன் அங்கீகரித்து எங்களையும் உத்ஸாஹப்படுத்தி பத்திரிகை நன்கு நடைபெறச் செய்வதுடன் தங்கள் நண்பர்களுக்கும் பத்திரிகையை சிபார்சு செய்து அவர்களையும் சந்தாதாரராகும்படி செய்யக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

## கொடுந்தமிழும், ஹிந்துஸ்தானி வார்த்தைகளும்

## CURRENT TAMIL AND ITS DEBT TO HINDUSTANI

"இந்த இந்தியாவின் விஸ்தாரமான ராஜாங்கத்தில் கன்னியாகுமரியிலிருந்து காஸ்மீரம் வரையிலும், பிரமபுத்ரா நதியிலிருந்து சிந்து நதிவரைக்கும் பெரும்பான்மையாய் வழங்கி வரும் பாஷை ஹிந்துஸ்தானிதான். அது இரண்டு விதம்: மகம்மதியர்கள் சாதாரணமாய் உபயோகிக்கிற உர்து பாஷை (இதற்கு ரேக்தா என்றும் பெயருண்டு) ஹிந்துக்களில் வழங்கிவருகிற ஹிந்திபாஷை. முதல்சொன்னதில் பேர்ஸியன் அரபிக் பாஷைகளிலிருந்து பலபதங்களும் சொற்கூட்டங்களும் அதிகமாய் உண்டு; பிற்சொன்னதிலோ, தேசபதங்களும் சம்ஸ்கிருதத்திலிருந்து எடுத்த பதங்களும்தானிருக்கின்றன.

இவ்விதமாகவே கிழக்குதேசபாஷைகளில் பாண்டித்தியம் பெற்ற டாக்டர் போர்ப்ஸ் (Dr. Forbes) தாம் எழுதின "ஹிந்துஸ்தானி கைப்புஸ்தக"த்தில் எழுதியிருக்கிறார். ஆகையால் நம்மாகாணத்தில் வழங்கிவரும் திராவிட பாஷைகளில் ஹிந்துஸ்தானி வார்த்தைகள் பல அகப்படுகின்றன. மகம்மதியர் ஆளுகையின் கீழ் வெகுகாலம் இந்நாடு இருந்தமையாலும், வியாபாரசாபார கொடுக்கல் வாங்கல் காரணத்தாலும், இது ஆச்சரியமானதல்ல. தமிழ் பாஷையில் இக்காரணங்கொண்டு—என்றால் இந்த உற்பத்தி ஸ்தானமூலமாய்-பல பதங்கள் காலாந்திரத்தில் வந்து சேர்ந்து உபயோகத்திலிருக்கின்றன. இச்சங்கதியை விவரிக்க பல உதாரணங்களை எடுத்து அடியில் வரைகின்றேன். எல்லா பதங்களையும் காட்டுகின்ற அகராதியல்ல இங்கே எழுதப்படுகிறது. விநோதார்த்தமாக காதில் கேட்ட சில வாக்கியங்கள் மட்டும் தலைவாலில்லாமல் கோர்க்கப்படுகின்றன.

நாம் வேலைக்காரர்களுக்கு உத்தரவு செய்யும்போது,"சல்தியாய்க் கடைக்குப்போ" என்கிறோம். முதல் பதம் ஹிந்துஸ்தானி என்று அநேகம்பேருக்குத் தெரியவே தெரியாது. "சல்தியாய் பஜாருக்குப்போ" என்று சொல்லுவோமானால் இரண்டு பதம் கடனாகிறது. ஹரிகதையிலிருந்து திரும்பின ஒருவன் "ஹரி



கதைக்கு நல்ல ஜமா சேர்ந்திருந்தது" என்கிறான். இதற்கு அர்த்தமென்ன வென்றால், "பக்கப்பாட்டு நன்றாயிருந்ததென்றே". ஆனால் ஹிந்துஸ்தானி பதமாகிய ஜமாவின் அர்த்தத்தை யோசிக்குமிடத்து கதைக்கு வெகு ஜனங்கள் வந்திருந்தார்கள்" என்பதுதான் சரியான அர்த்தமென்று புலப்படுகிறது.

சரியான நடத்தையில்லாத ஒருவனைப்பார்த்து நாம் சாதாரணமாய் "அவன் அத்துமீறி நடக்கிறான்" என்றுசொல்வது வழக்கம். இந்த அத்து என்பது ஹிந்துஸ்தானி 'ஹத்' என்கிற வார்த்தையின் மருபு.

(ஹத்=எல்லை)

வீட்டு விஷயமாய்; "மராம்மத்து," "துரஸ்து" என்னும் பதங்களைப் பிரயோகிக்கிறோம். இரண்டாவது பதம் "துருஸ்த்" என்றால் சரியான ஹிந்துஸ்தானியாய்விடும். கிருககிருத்திய அவசரத்திலும் பிரயாண தடபுடலிலும் "சாமான்" "தயார்" என்னும் பதங்கள் வெகு அடிபட்டு நொருங்குகின்றன. இவ்விரண்டும் தமிழ் பதங்களேயல்ல. "தயார்" என்பதின் முதல் எழுத்துக்கு ஐகார உச்சரிப்பு ஏற்பட்டால் "பலே" ஹிந்துஸ்தானியாய் விடும். பணமட்டுமிருந்தால் வேண்டிய காலி யிடம் வாங்கலாம். காலியிடம் வாங்கும் தரு ணத்தில் முழுத்தமிழ் பேசாமல் "காலி" என்று அரை ஹிந்துஸ்தானி பேசுகிறோம். "முழுத்தமிழ்" க்குப் பதிலாய் "பூராத்" தமிழ் என்றால் அரை ஹிந்துஸ்தானி வந்து விடுகிறது.

தனவான்களுடைய "மேஜை" "குறிச்சி" இரவலாயில்லா விட்டாலும் இவ்விரண்டு பதங் களும் இரவலே. மிட்டாயில் பிரியமுள்ளவர் கள் உபயோகிக்கும் "சேர்," "மிட்டாய்," "லட்டு" என்னும் பதங்களுமப்படியே. காகி தப் பிரியர்கள் வழங்குகிற, "மோடா," "காகிதம," "துக்டா" காகிதம் ஆக மூன்று பதங்களும் ஹிந்துஸ்தானிக்குச் சேர்ந்தன. இவைகளில் முதல் பதம் ஹிந்தி பாஷைக்குச் சேர்ந்தது. நான் எழுதும் "சாயி" (ink) ஹிந்துஸ்தானி "சியாஹி" யின் மருபு. கர் நாடக மனிதர்கள் நாம் "கோட்" (coat) என் பதை "அங்காக்" என்றும் "பாக்கட்" (pocket) என்பதை "ஜேப்பு" என்றும் சொல்லுகிறார்கள். இவ்விரண்டு பதங்களும் ஹிந்தி பாஷையிலிருந்து இரவல் வாங்கப்பட்டன.

மலைக்காச்சலில் விழுந்துஎழுந்த ஒருவனைப் பார்த்து நாம் "நீ ஏன் டிலாவாயிருக்கிறாய்" என்று க்ஷேமம் விசாரிக்கிறோம்.

(டிலா=தளர்ந்த)

புருஷனை யிழந்த ஸ்திரீ "நான் நாதாரியாய் விட்டே" னென்று அழுகிறாள். (நாதாரி =துன்பம்)சண்டைக்கார ஸ்திரீகளில் ஒருத்தி மற்றொருத்தியை 'தகல்பாஜி" என்று திட்டுகிறாள்.

(தகாபாஜி=போக்கிரி)

சத்திரம் வைத்தவன் "கங்காளங்களுக்குச் சாப்பாடு போடுகிறான்." (கங்கால்=ஏழையான) "நான் மிரட்டின பையன் தவிடு பிடுங்கினான்" என்கிறோம்.

(வினைச் சொல் தௌட்=ஓடுகிறது)

நாம் கடைக்கணக்கை பைசல் செய்து பேபாக்கி செய்து விடுகிறோம்.

பைசல்=தீர்மானம்: பேபாக்=மிச்சமில்லாமல்,

அதாவது, முழுத்தொகை கொடுக்கிறது.

"இந்த விஷயத்தில் என்ன லாபம் கிடைத்தது" என்று சொல்லாமல் "இந்த பாபத்தில் என்ன நபா கிடைத்தது" என்று முக்கிய தமிழ் அல்லது சம்ஸ்கிருத பதங்களைக் கைசோரவிடுகின்றோம்.

(பாபத்=விஷயமாய்) (நபா=லாபம்)

'பியூன்' கையில் 'லெடர்' கொடுத்து "ஜவாப் கொண்டு வா" என்கிறோம்.

(ஜவாப்=மறுமொழி)

"நெருப்பு உஷார்" என்று குழந்தைக்கும், போக்கிரிக்கு "கபர்தார் பத்திரம்" என்று சொல்லியும் எச்சரிக்கிறோம்.

(ஹுஷ்யார்=ஜாக்கிரதை)

(கபர்தார்=ஜாக்கிரதையாயிரு)

'குதிரை' தமிழ் பதமாயிருந்த போதிலும் "சீனி" "சவாரி" "மாலீஸ் செய்வது" இம் மூன்றும் அந்நியபதங்கள். உத்யோகஸ்தர்கள் உபயோகிக்கிற பதங்கள் முக்கால்வாசி ஹிந்துஸ்தானி தான்.

(கசஹ்ரீ=கச்சேரி)
(ஹாஜிர்=ஆஜர்)
(ரஜா=லீவ்)
(ஹர்ஜீ=அர்ஜி=பெடிஷன்)
இஷ்திஹார்=இஸ்தியார்=நோடீஸ்
ஜாரி=ஜாரியாய்=உத்திரவாய்
கா—இம்=காயம் (வேலை)
ரத்=ரத்து (மாற்றம், விரோதம்) செய்கிறது
கைதீ=கைதி=குற்றவாளி
பர்தர்பீ=பர்தரப்=ஸஸ்பெண்ட்
பேஷ்குஷ், ரஸ்தா
முசாபரி (வழிப்போக்கன்)
லடாய் சண்டை)
பத்தீ (வத்தி=Candle)
நாஜுக்கு (சொகுசு)

முதலான அநேக பதங்கள் வழங்கி வருகின்றன. அவைகளை யெல்லாம் குறித்து நாம் எழுதப்புகாததினால் சீக்கிரத்தில் பிரஸ்தாபத்தை முடித்து விடுகிறோம். ஆசார்கள் அடிக்கடி சொல்லும் "ஜக்ளா மாடு பேடா" வில் ஜக்ளா வும, மலையாளி குடிக்கும் "சாயை"யும் "ஸ்வாமிக்குக் கத்து கிட்டியோ" என்று அவன் தன் எஜமானனைக் கேட்கும்கேள்வியில் "கத்து" என்னும் பதமும், நாம் சிநேகிதனுக்கு விருந்திட்டு "சாப்பாடு பசந்தா யிருந்ததா" என்று கேட்கும் ஐயம் கொண்ட வினாவில் "பசந்து" என்னும் பதமும் ஹிந்துஸ்தானி வாசகங்களே.

ஜக்டா=சண்டை
சா=தேயிலை (கஷாயம்)
கத்=லட்டர்
பஸந்த்=இஷ்டம்

பொடி டப்பி அநேகம் பேர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் 'டப்பி' ஹிந்திபதம்.

(டிபியா=சிறுபெட்டி)

கைகுட்டை என்று வழங்குகிற "ஹாண்ட்கர்சீப்" பொடி போடுபவர்களுக்கு அவசியம். இதற்கு ஹிந்துஸ்தானியில் "ருமால்" என்று பெயர். இப்பதத்தின் விகாரமாகிய "உருமாலை" சிரோபூஷணமாயிருக்கிறது வீணாய் வளர்த்துவானேன். "வண்டி வாடகை" கூட பிற்பாதி ஹிந்துஸ்தானி என்பதை மறைக்கச் சக்தியற்றதாயிருக்கிறது.

(பாடா—வாடகை)

ஸி. எஸ். கிருஷ்ணையர், எம். ஏ.

## திலீப சக்ரவர்த்தியின் தபஸ்

## DILIPA'S PENANCE (Concluded)

விழித்துக்கொண்டதும், பதிவிரதா சிரோமணி ஸுதக்ஷிணை நந்தினிக்கு மாலைகள் போட்டாள். கன்றை ஊட்டவிட்டுக் கட்டிய பிறகு, சக்ரவர்த்தி தேனுவையவிழ்த்துக் காட்டுக் கோட்டிப்போகையில், சுருதியின் ஸாரத்தைஸ்மிருதியொட்டி வருவதுபோலப் பசுவின் பாததூளிகளால் பரிசுத்தி செய்யப்பெற்ற மார்க்கத்தை அவரது தர்மபத்தினி தொடர்ந்துசெல்ல, தயாளகுணம் மிக்குவாய்ந்த திலீபரவளைத் திரும்பவனுப்பிவிட்டு, நான்கு ஸமுத்திரங்களையும் ஸ்தனங்களாய்க்கொண்டு பூமியே பசுவிநுருவெடுத்து வந்ததுபோன்ற நந்தினிக்குச் சுச்ரூஷை செய்யவாரம்பித்தார். மனுவம்சத்திற் ஜனித்தவர்கள் பிறர் உதவியின்றி தங்கள் சரீரத்தைக் காத்துக்கொள்ள வல்லமை படைத்தோராதலால் தாமெடுத்த விரதத்தை யனுஸரிக்க, உடன் வந்த ஸைன்யங்களையனுப்பிவிட்டு, பசு நிற்கும்பொழுது தான்நின்று, நடக்கும்பொழுது தான்நடந்து, படுக்கும்பொழுது தான்படுத்து, நீர் பருகும்பொழுது தானும் பருகி, அதற்கினிய புல்லூட்டியதன்முதுகைத் தேய்த்து, மேலுட்காரும் ஈக்களையோட்டிச் சக்ரவர்த்தி அதன் நிழல்போற் பின்தொடர்ந்துசென்றார். வெளிவிடாத மதாவஸ்தையோடு கூடின யானைபோல், அரசனுக்குரிய ஆடைகளை யணியாதிருந்தும், பார்த்ததுமே வரும் அரசனெனச்சொல்லவேண்டிய ஒளியுடையவும், வருணதேவன்போற் றேகவலியுமுள்ள ராஜரிஷி பரிவாரங்களின்றி வருமளவும் வழியிலிரு பக்கத்திலுள்ள மரங்களினின்றும் பறவைகள் இனியகுரலுடன் அவரதுகீர்த்தியைப் புகழத்தொடங்கின. மந்தமாருதத்தாலசைக்கப்பட்ட கொடிகள் அவர்மேல் மலர்களைச் சொரிந்தன. அவரது இயற்கையாயுள்ள சாந்தகுணம் முகத்தில்வெளிவந்து நிற்க, அவர்கையில் வில்லைவைத்திருந்தும் மான்கம்பதிகள் அச்சமன்னியிலணுகி அவரைப்பார்த்தானந்தங் கொண்டு களித்தன. மூங்கில்களின் துவாரங்களிற் காற்றுப்புகுந்து புல்லாங் குழல்போற் பாட, அங்கிருக்கும் வனதேவதைகள் அவருடைய குண விசேஷத்தை மகிழ்ச்சியுடன் புகழ்ந்தன. மலையிலுதித்துப் பெருகி



யோடும் ஆற்றிற்றுளிரடைந்து, மரங்களின் மலர் வாஸனையைத் திருடிவரும் மாருதம் குடையின்றி வெயிலில் வருந்தி வந்து கொண்டிருந்த சக்ரவர்த்தியின்மேல் வீசி அவரது ஆயாஸத்தை நீக்கிற்று. அவர் கானகமடைந்ததும், அங்குள்ள தீ, மழையன்றியே யணைந்து விட்டது. புஷ்பங்களும் கனிகளும் ஏராளமாயுண்டாயின. வலிய மிருகங்களும் எளிய மிருகங்களைக் கொல்லவில்லை.

நாள் முழுதும் மேய்ந்து, பொழுது சாய்ந்ததும், திக்குக்களை சுத்திசெய்துகொண்டு ஆதித்தன் மேற்கு திக்குப் போவதுபோல், நந்தினியும் வஸிஷ்டரது ஆச்ரமத்துக்குத் திரும்பிற்று. தேவதை மூதாதையர்களுக்குச் சிராத்தாதி செய்யவும், விருந்து வருபவர்களை யுபசரிக்கவும் தன் பாலை சுரந்துதவிவந்த நந்தினியை திலீபர் பின் தொடர்ந்து வருமளவு, சிலவிடங்களில் சேற்றிலிருந்து காட்டுப் பன்றியின் கூட்டமெழுந்து நிற்பதும், மயில்கள் மரங்களினடியிற் போய்ச்சேருவதும், புற்களின்மேலசைபோட்டுப் புள்ளிமான்கள்படுத்திருப்பதும், ஒரே கன்றையுடைய நந்தினிஸ்தனபாரமிகுதியால் மெள்ள மெள்ள அசைவதும், அதைத் திலீபர் பின் தொடர்ந்து வருவதும் அவ்வழிக்கொருவித அழகைப் புகட்டின. இவ்விதம் வருபவர்களை ஆனந்தக் கண்ணுடன் ஸுதக்ஷிணை எதிர்வந்தழைத்தபோது, நந்தினி பகலுக்கும் இரவிற்குமிடையேயுள்ள ஸந்தியாகாலம்போல் விளங்கிற்று. உடனே ஸுதக்ஷிணை அதை வலம்வந்து நமஸ்கரித்துக் கையில் வைத்திருந்த அட்சதைகளால் ஜயவாசல் போலுள்ள அதன் கொம்புகளின் நடுவே அர்ச்சனைசெய்ய, நந்தினி தன் கன்றைக் காண ஆசையுற்றிருந்த போதிலும், அசைவற்று நின்று அம்மரியாதைகளை முழுதும் பெற்றுக்கொண்டது. இதுவே யவர்களது வேண்டுகோள் நிறைவேறுவதைக்காட்டியதுபோலும்! ஆச்ரமமடைந்து வஸிஷ்டருக்கு ராஜ தம்பதிகள் நமஸ்கரித்து ஸந்திக்கடன்களை முடித்துவிட்டுப் பால்கறந்த பிறகு, நந்தினிக்கு மறுபடியும் ஊழியஞ்செய்து, சமீபத்திற் பலியும் விளக்கும் வைத்து பசு நித்திரை போனபிறகு இவர்களிருவரும் நித்திரைபோய்க் காலையில் அது எழுந்ததும் இவர்களும் எழுந்தார்கள்.

இவ்வாறு திலீபசக்ரவர்த்தி தன்பட்டமகிஷியோடு இருபத்தோரு நாட்கள் கழித்தார். மறுநாள் நந்தினி தன்னுடன் வரும் திலீபரது மனத்தை யறியவெண்ணிக் கங்கை விழுந்து வரும் இமயமலைப் பிரதேசத்தில் புல்லடர்ந்தவொருகுகையில் நுழைந்தது. ஒரு துஷ்டமிருகமும் நந்தினியை எதிர்த்துக்கொல்ல வல்லமை படைத்ததல்லவெனத் தீர்மானங்கொண்ட திலீபர் அம்மலையின் அடிவாரங்களின் வளமையைக் கண் கொட்டாமற் பார்த்து ஆநந்தித்துக் கொண்டிருக்கும்பொழுது, திடீரென நந்தினியின் மேலொருசிங்கம் பாய்ந்து அதைப் பலாத்காரமாய்ப் பிடித்திழுத்தது. பசு 'அம்மா' வென்று கதற, அச்சத்தம் குகையில் பிரதிதொனித்து, மலைச்சாரலை யுற்றுநோக்கிக் கொண்டிருந்த அரசன்காதிற்பட, அவர் கையில் விற்பிடித்துத்திரும்பி நீண்ட பிடரிமயிருடன் கூடின சிங்கமொன்று நந்தினியின் மேலுட்கார்ந்திருப்பதைக் கண்ணுற்றார். சரணமடைந்தோரைக் காப்பவரும், சத்துருக்களுக்கு நெருப்புத்துண்டம் போலுமுள்ள திலீபர், சிங்கத்தைக்கொல்ல நினைத்துப் பாண மெடுக்கப்போனதும் அவரது வலது கைவிரல்கள் ஸ்தம்பித்து நின்று விட்டன. வலதுகை இவ்விதமாகவே மந்திரத்தால் கட்டுப்பட்ட பாம்பு போல் பிரமைகொண்டார். சிங்கமும் மனிதன் போற் பேசத்தொடங்கிற்று:

"அரசே, உன்முயற்சி முழுதும் வீண். உன் ஆயுதங்களைப் பிடித்தெறிந்தபோதிலும் அவை என்மேற் படா. காற்று, மரத்தை வேருடன் பிடுங்கக் கூடுமேயல்லாது மலையினிடம் அதன் வேகமிசையுமா? நானே சிவனடியான். கைலாய பர்வதம் போன்ற வெண்ணிறமுள்ள காளைமாட்டின் மீதேறும் பொழுதவர் என்முதுகில் அடிவைத்தேறுவதுவழக்கம். என் பெயர், கும்போதரன்; நிகும்பனுடைய நண்பன். அதோ நிற்கிறது பார் ஒருவன்னிமரம்! அதைச் சிவன் தன் புத்திரனாக ஸ்வீகாரஞ் செய்து கொண்டிருக்கிறார். பொற்குடங்களிலிருந்து நீரூற்றிப் பார்வதியம்மாள் அதைப் போஷித்து வருகிறாள். ஒரு நாள் மதங்கொண்ட யானையொன்று தன் கபோலத்தை யம்மரத்தில் உரைந்து தேய்த்துக்கொள்ள அதன் மேற்பட்டைகொஞ்சம் பெயர்ந்து விட்டது. அதைப் பார்த்து அவ்வம்மாள் அசுரர்களால் புண்படுத்தப்பட்ட ஆறுமுகனுடைய தேகத்தைப்பார்த்து போற்

றுயரமடைந்தாள். அன்றுமுதல் சூலபாணியால் நான் இவ்வனத்தைப் பாதுகாக்க கட்டளை யிடப்பட்டு, இங்கு வரும் மிருகங்களைக் கொன்று தின்ன அவரிடமிருந்து உத்தரவும் பெற்றிருக்கிறேன். நானின்னும் பொருட்டு இப்பசுவை இச்சமயம் சிவபிரான் இங்கனுப்பியிருக்கின்றார். அதன் இரத்தத்தைக் குடித்துத் திருப்தி யடைவேன். உனக்கோ, நீ செய்வதனைத்தும் வீணல்லாது வேறில்லை. உனது குருவுக்குத் தக்க சிட்ணைப் பத்தியை ஒழுங்கு தவறாது உன்னைவியன்றவரை காண்பித்திருக்கின்றாய். அஸ்திரங்களைக் கூடின மட்டும் உபயோகித்தும் சரணமடைந்தவனைக் காக்கமுடியாதாயின் ஒரு யுத்தவீரனுக்கு அதினின்று அபகீர்த்தி வாராது. நீ அவமானமடைவதும் நியாயமில்லை."

இச்சாமர்த்தியவார்த்தைகளைக்கேட்ட திலீபசக்ரவத்தி சற்றுயோசித்துக் கைலாயபதியின் சத்தியாலல்லவோ நமதாயுதங்கள் கௌரவத்தையிழந்தன வென்றெண்ணித் தான் கொண்ட அவமானத்தை ஒருவாறு தணித்துக்கொண்டு, "ஓ, மிருகராஜனே, நானுன்னைக் கொல்ல யத்தனித்தது கூடாமற் போனதால் நான் சொல்வதிழிவாய்த் தோன்றக் கூடும். ஆயினும் சொல்லுகின்றேன். ஸ்தாவர ஜங்கமங்களை சிருஷ்டித்து, இரட்சித்து துவம்ஸம்செய்யும் மஹாதேவருடைய ஆக்கினைக்குட்பட்டேன். இப்பொழுது என் குருவின் பசு என்முன் கொல்லப்படும் போது உபேக்ஷையாயிருக்க நான் எவ்வாறு சகிப்பேன்? என் மாமிசத்தையுண்டு வஸிஷ்டரது நந்தினியை விட்டுவிடு. சாயங்காலவேளை வந்துவிட்டது. கன்றும் தாய் வருவாள் வருவாளென்று எதிர்பார்த்திருக்கு"மென்று வேண்டிக்கொண்டார்.

தன் பற்களினொளியால் குகை முழுதையும் பிரகாசிக்கச் செய்து, மந்தகாஸத்துடன் திலீபரைப்பார்த்து "வேந்தா! இவ்வளவு அல்பப் பிராணியான பசுவின் பொருட்டா உன் ராஜ்யம், உன் யௌவனம், உன்னழகுவாய்ந்த சரீரம் இவைகளை இழக்கப் போகின்றாய்? நன்றாயிருக்கிறது! ஜீவ வர்க்கங்களிடத்து உனக்குத் தயை இருப்பது உண்மையே. ஆயினும் சற்று யோசித்துப்பார்க்கில், நீ இறப்பதால் இப்பசுவொன்றுக்குத்தான் க்ஷேமம். நீ உயிருடனிருந்தாலோ உன் பிரஜைகளை யடிக்கடி அபாயத்தினின்று காப்பாயல்லவா? மேலும் உன் குரு பசுவிறந்தால், அவர் கோபத்திற் கிரையாவாயெனப் பயமடைகிறாய். உன்னிடத்துள்ள பருத்த மடிகளுடைய மாடுகளைக் கோடிக்கணக்காய்க் கொடுத்து அவர் கோபத்தை தீர்க்க முடியாதா? அநேக இன்பங்களுக்கு ஆஸ்பதமாயிருக்கும் உன் வலியுள்ள யௌவனம் பொருந்திய சரீரத்தை நீ இரட்சித்துக்கொள்ள வேண்டியது அவசியம். உன் இராஜ்யமோ புவியிலிருக்கிறதென்ற குற்றத்தை நீக்கினால் இந்திரனது இராஜ்யத்துக்கு நிகரல்லவா?" வென்று சிங்கம் கேட்டதும், மாறொலி என்ற வியாஜத்தால் மலையினின்றும் அநேக சத்த முண்டாயிற்று.

கருணை கேட்கும் பாவனை பொருந்திய கண்ணுடன் பசு அரசன் முகத்தைப் பார்க்க அரசன் சிங்கத்தை நோக்கி "ஒருவனை அபாயத்தினின்று நீக்குவதல்லவா க்ஷத்ரிய தர்மத்துக்குரியது. அப்படி நான் நீக்காவிடில் எனக்கு இராஜ்யத்தாலென்ன, இப்பாழும் சரீரத்தாலென்ன? 'சுரபி' என்ற காமதேனுவுக்கு நிகருள்ள நந்தினிக்குப் பதிலாக கோடிப்பசுக்களைக் கொடுத்தும் முனிவர் திருப்தியடைவரோ? நீ பகை எதிர்த்து வென்றதும் ருத்திரனுடைய சக்தியாலல்லாது வேறில்லை. ஆதலாலென்னுயிரைவிட்டும் அதைக் காக்கவேண்டிய தவசியமே. நீயும் என் மாமிசத்தையுண்டு களிப்புறலாம். ரிஷியின் ஹோமாதிகளும் நடைபெறும். வன்னிமரத்தைக் குறித்து நீ ஜாக்கிரதையாயிருக்கிறது கண்டு பரமசிவனிடம் நீ எவ்வளவு பக்தி கொண்டவனெனப் புலப்படுகிறது? ஆகலால் நானும் துன்புறாமல், என்னிடமொப்புவித்திருந்த பசுவையுமிழந்து வஸிஷ்டரிடம்போய் நானெவ்வாறு முகத்தைக் காட்டுவது? என் கீர்த்தி கெடாமலிருக்க வேண்டுமே யல்லாது, பஞ்சேந்திரியங்களடங்கிய இக்காயத்தில் எனக்குச் சிறிதும் பற்றில்லை. காட்டிற் சற்றுநேரப் பேச்சாலேயே இருவருக்குச் சிநேகமுண்டாகிறதென்று ஸாதுக்கள் சொல்லுகிறார்கள். உன்னோடு இந்நேரம் சம்பாஷித்திருக்கிறேன். என் வேண்டுகோளுக்கிணங்காயா?" வென்று கேட்டுக்கொண்டார். சிங்கமும் "அப்படியே சரி" என்று சொல்ல, திலீபர் அஸ்திரங்களை யெறிந்துவிட்டுச் சிங்கம் தன்மேற் பாயுமென் றெதிர்பார்த்துத் தேகத்தைச் சுருக்கித் தலையை நட்டுக்கொண்டார்.



உடனே விண்ணவர் வானத்தினின்று பூமாரி பொழிந்தார்கள். "எழுந்திரு குழந்தாய்" என்றொரு அசரீரிவாக்கு முண்டானது. சக்ரவர்த்தி யெழுந்து பார்த்தார். சிங்கத்தைக் காணவில்லை. தன் தாயைப் போலருகில் நின்ற பசுவின் மடியினின்று பால் பெருகிற்று. ஆச்சர்யமடைந்த திலீபரைப்பார்த்து நந்தினி "உன்னையறிய வெண்ணி, நான் செய்த மாயை யிது. வஸிஷ்டரது மகிமை யிருக்குமளவு யமனும் முன்னைத் தொடமுடியாதென்றால் மிருகங்களைப்பற்றிக் கேட்பானேன்! என்னிடத்திலிருந்த உன்னன்பையும், உன்னாசிரியரிடத்திலுள்ள உன்பக்தியையுங்கண்டு களிப்புற்றேன். வேண்டிய வரத்தைத் தந்திடுவேன்" என்றுரைத்தது. இவ்வாறு ஆக்கினை செய்யப்பட்டு அரசன் கைகூப்பி வணங்கி "தாயே, என்வம்சம் விருத்தியடையும் பொருட்டு ஸுதக்ஷிணையிடத்தில் எனக்கொரு புத்திரனுண்டாக வேண்டு" மென்று கேட்க, நந்தினி "அவ்வாறே வரமளித்தேன். இலைகளாலொரு தொன்னை செய்து என் பாலை எடுத்துக் குடி" யென்று சொல்லிற்று. அதற்கவர் "அம்மா, உன் கன்றூட்டி ஹோமத்திற்குப் பால் வைத்தபிறகு, ரிஷியின் உத்தரவு பெற்று "விளைச்சலில் ஆறுவது பாகம்போல்" மீதியை நான் குடிக்கின்றேன்" என்று மறு உத்தரம் சொன்னார்.

மெத்த ஸந்தோஷமடைந்து நந்தினி இமயமலை குகையிலிருந்து வீடு திரும்ப திலீபசக்ரவர்த்தியும் பின்னோடு திரும்பினார். சந்திரபிம்பம்போல் பிரகாசமடைந்த அரசன் முகத்தில் ஸந்தோஷச் சின்னங்கள் வெளிப்பட, வஸிஷ்டரும் ஸுதக்ஷிணையும், நந்தினி திருப்தியடைந்து விட்டதாகச் சக்ரவர்த்தி சொல்வதற்கு முன்னமேயே யறிந்து கொண்டார்கள். கன்றூட்டிய பிறகு ஹோமத்துக்குப் பால் வைத்துவிட்டு, திலீபர் ரிஷியினுத்தரவு கேட்டு, வெண்ணிறமாயும் கீர்த்தியே உருவெடுத்து வந்தது போலுமுள்ள பாலை மிக்க அவாவுடன் குடித்தார். விரதமும் முடிவு பெற்றது.

மறுநாளுதயத்தில் வஸிஷ்டர், திலீபரையும் ஸுதக்ஷிணையையும் மங்களங்கள் புகழ்ந்து, ஆசிர்வதித்து, அவர்களுடைய பிரதான நகரத்துக்குப்போக அனுமதி கொடுக்க, இருவரும் அக்னி, வஸிஷ்டர், அருந்ததி இவர்களையும், கன்றுடனிருந்த நந்தினியையும் பிரதட்சணம் செய்து, சுபகார்யங்கள் செய்ததால் மிகுந்த தேஜஸடைந்தவர்களாக ஆச்ரமத்தைவிட்டு இரதத்திலேறினார்கள். ரமணீய சத்தத்தோடு இரதம்வர, பிரஜைகள் கிருஷ்ணபட்சங்கழித்து வரும் பூர்ணசந்திரனைப் போலிருந்தவும், ஸந்தானம் பெறுவதற்குரிய காரியங்கள் செய்தமையால் இளைத்துமிருந்த வேந்தனைக் கண்கொட்டாது பார்த்துப் பார்த்து மகிழ்ந்தார்கள்: ஜனங்கள் கோஷஞ் செய்ய, தோரணங்கள்கட்டிக் கொடிபறக்குந் தனது புரியையடைந்து இராஜ்யபாரத்தை விதிப்படி திலீபர் ஏற்றுக்கொண்டார். இக்ஷ்வாகு வம்சவிருத்தியின் பொருட்டு ஸுதக்ஷிணையும் கர்ப்பந்தரித்தாள்.

T. S. ராஜகோபாலன்.

# தஞ்சாவூர் ஜில்லா

## தேச சரித்திரம்

(தொடர்ச்சி)

### அத்தியாயம் 3

பாண்டியசின் கள சம்பந்தம்.

இத்தருணத்தில், பாண்டியநாட்டில், ராஜ்யத்தைப் பெறும் விஷயத்தில் பராக்கிரம பாண்டியனுக்கும், குலசேகர பாண்டியனுக்கும் விவாதம் ஏற்பட்டது. இரண்டாம் ராஜாதிராஜச் சோழன் குலசேகரனுடைய கட்சியை எடுத்துக் கொண்டான். பராக்கிரம பாண்டியனுக்குத் துணையாகச் சிங்களத்தரசன் பராக்கிரம பாகு வந்தான். சிங்களத்தரசனுடைய தண்ட நாயகனை இலம்காபுரி, குலசேகர பாண்டியனால் பராக்கிரம பாண்டியன் கொலையுண்டதைக் கேட்டு மனங்கொதித்து, குலசேகரனைக் கண்ட கண்ட விடங்களிலெல்லாம் தோற்றோடச் செய்து, பாண்டிய நாட்டில் பெரும் பாகத்தைப் பிடித்தும் அழித்தும் சூறையாடி, குலசேகரனுக்குத் துணையாகவந்த சோழன் மீதும் திரும்பி பட்டுக்கோட்டை வரையில் வந்து சில கிராமங்களைத் தீயிட்டுச்சென்றான். போகுமுன்னர், கொலையுண்ட பராக்கிரம பாண்டியன் மகன் வீரபாண்டியனை மதுரையில் முடிசூட்டிச் சென்றான்.

*குலோத்துங்கன் iii 1178—1215*

அடுத்துச் சோழச் சிங்காதனமேறிய மூன்றாம் குலோத்துங்கன் (1178-1215) மேற்கூறிய சிங்களரின் அதிக்கிரமத்துக்குப் பழிவாங்க வெண்ணி, மதுரையில் விக்கிரம பாண்டியனுக்கும் வீரபாண்டியனுக்கும் நேர்ந்த சண்டை வியாஜத்தைக் கொண்டு, விக்கிரம பாண்டியனுக்குத் துணையாகச்சென்று வீரபாண்டியனையும் அவனுக்குத் துணைவந்த சிங்களரையும் வென்று ராஜ்யத்தை விக்கிரம பாண்டியனுக்குக் கொடுத்தான். இச்சண்டையில் குலோத்துங்கன் சிங்களருடைய மூக்கையறுத்து, அவர்களைக் கடவிலோடச் செய்தான். இவ்வெற்றி வெகு சிலாக்கியமானதாக விருந்தபோதிலும், அதனால் சோழ வம்சக்ஷீணம் தடைபடவில்லை. குலோத்துங்கன் காலத்தில் 1202-ல் ஒரு க்ஷாமம் வந்ததென்றும் அப்போது காசுக்கு உழக்கு அரிசி விற்றதென்றும் திருவண்ணாமலைச் சாதனம் ஒன்று தெரிவிக்கின்றது

*சோழராஜ்ய நிர்மூலம்.*

மூன்றாம் ராஜராஜன் (1216-1244) காலத்தில்தான் சோழ ராஜ்யம் நிர்மூலமாகத் தொடங்கியது. பாண்டிய வரசனை முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் (1216-1235) சோழநாட்டை ஜயித்து, உறையூரையும் தஞ்சாவூரையும் தீயிட்டு, அந்நாட்டைச் சோழவரசனுக்கு இனாமாகக் கொடுத்துச் சென்றதாகக் கூறிக்கொள்கிறான். அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன் என்னும் பல்லவவரசன் 1230-ல் இச் சோழவரசனைச் சிறை பிடித்துச் சென்றான். போசள நாரசிம்ம தேவன் II என்ற ஹொய்சள பெல்லாளவரசன் தலையெடுத்து, இச்சோழனைச் சிறைமீட்டு அவனுடைய ராஜ்யத்தைப் பல்லவரிடமிருந்து வாங்கிக்கொடுத்து, "சோள ராஜ்யஸ்தாபனாசாரியன்" என்ற பேரும் பெற்றான். வீர நாரசிம்ம தேவன், ராஜராஜனுக்குப் பெண் கொடுத்த மாமனாதலால் இவ்விதம் உதவிக்குவந்தான். போசளர், அப்பால், ஸ்ரீரங்கத்துக்குச் சமீபத்தில் வீரசோமேசுவரனால் கட்டப்பட்ட கண்ணனூரில் தங்கினார்கள்.

*பாண்டியாதீனம்.*

விஜயாலயச்சோழன் வம்சத்தில் கடைசியாக அதிகாரத்தைச் செலுத்திய வல்லரசன் மூன்றாம் ராஜேந்திர சோழனாவான் (1246-1268). இவன் ஹொய்சளரை யெதிர்த்துத் தன் மாமனாகிய வீரசோமீசுவரனைக் கீழ்ப்படுத்தியதாகப் பெருமை பேசிக்கொள்கிறான். என்றாலும் 1251-ல் பட்டத்துக்கு வந்த முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (1251-1261) சோழன் முதலிய பலவரசர்களை ஜயித்ததாகச்சொல்லிக் கொள்வதாலும், ஸ்ரீரங்கம் கோயிலுக்குப் பொன் முகடு வேய்ந்து தானமியற்றியதாலும் அவனுடைய சிலாசாதனங்கள் சோணாட்டில் பலவிடங்களில் காணப்படுகிறபடியாலும், சோழநாட்டை அவன் ஜெயித்திருக்கலாம். மேலும் முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன், இரண்டாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் இரண்டாம் மாறவர்மன் குலசேகரன், முதலியோருடைய சிலாசாதனங்கள் சோழநாட்டில் காணப்படுவதால் கி. பி. பதினான்காம் நூற்றாண்டுவரையில் சோணாட்டில் பாண்டியாதீனம் தலையெடுத்திருந்ததுபோலும்.

*கடைசிச்சோழர்கள்.*

மேற்கூறிய ராஜேந்திரனுக்குப் பின் வீரசோழன் என்பவனும் அவனுக்குப்பிறகு வீரசம்பனென்பவனும் சிற்றரசர்களாக ஆண்டுவந்தனரென்று தோன்றுகிறது. என்றாலும் ஒரு பெரும் மாறுதல் சமீபத்தில் உண்டாயிற்று.

*மாலிக்காபூர் படையெழுச்சி 1310.*

கி. பி. 1310-ல் டில்லிச்சக்கரவர்த்தியின் தளகர்த்தனான மாலிக்காபூர் என்னும் துலுக்கன் தென்னிந்தியாவில் முதன் முதல் படையெடுத்துவந்தான். இதனால் ஹொய்சளராஜ்யம் தலைகவிழ்ந்தது. விஜயநகராஜ்யம் தலையெடுக்க ஏதுவாயிற்று. மாலிக்காபூர் இராமேசுவரம் வரையிலும் சென்று ஜெயசாலியாய்த் திரும்பினான். அவன் சென்றபின் அரை நூற்றாண்டளவும் மதுரையிலும் திருச்சிராப்பள்ளியிலும் துருக்க வரசர்கள் ஆண்டனர் (1327-1365). பாண்டியர்களும் சோழர்களும் சந்ததியற்றவர்களாகி நாளடைவிலே நசித்துப்போய்விட்டனர்.

சுமார் இருபது நூற்றாண்டுகள் அளவு நிலைபெற்று விளங்கிய சோழராஜ்ய நாகரீகத்தைப்பற்றி இரண்டொருவார்த்தை இங்கு கூறுவது மிகையாகாது:—



*சோழரின் நாகரீகம் முதலியன.*

பழைய சோழவரசர்காலத்திய நாகரீகம் பண்டைத் தமிழ்நூல்களால் வெளியாகிறது. வீரம் தியாகம், முதலிய குணங்களில் அவர்கள் சிறந்து விளங்கினர். பாசனவாய்க்கால் வெட்டியும், அழகிய அரண்மனைகள் கட்டியும் அந்நியநாடுகளுடன் கடல் மூலமாயும்கரைவழியாயும் வியாபாரம்செய்தும் நாகரீகத்தை மகோன்னதஸ்திதிக்குக்கொண்டு வந்திருந்தனர். காவிரிக்கு இருமருங்கும் கரைபோட்டவன் கரிகாலன். பெருமித வாழ்க்கையும் செல்வமும் மிகுந்திருந்த தென்பது பத்துப்பாட்டு, புறநானூறு முதலிய தமிழ் நூல்களைப் படிப்போர்க்கு நன்கு விளங்கும்.

விஜயாலயச் சோழன் ஸ்தாபித்த வம்சமும் நாகரீகத்தில் மேம்பட்டதுதான். ஒவ்வொரு அரசனும் கூறிக் கொள்ளும் பிருதுகளினாலும் மெய்க்கீர்த்திகளினாலும் அவர்களுடைய வீரம் வெளியாகும். அவர்களுடைய நாகரீகம் சிறந்த தென்பதற்குச் சான்றுகள் பலவுள்ளன. முதலாம் ராஜராஜன் (985-1013) காலத்துக்கு முந்தியே நிலமுழுவதும் அளக்கப்பட்டிருந்தது. குலோத்துங்கன் I (1070-1118) காலத்தும் இன்னொருதரம் அளக்கப்பட்டது. ஒரு சாஸனத்தில் $\frac{1}{52,428,800,000}$ வேலி நிலம் இறையிலியாக நீக்கப்பட்டிருந்ததென்று தெரிவதால் நிலம் எவ்வளவு நுட்பமாக அளக்கப் பட்டிருந்த தென்பது விளங்கும். வியாபாரத்துக்கு இடைஞ்சலாக விருந்த வரிகளைக் குலோத்துங்கன் தீர்த்துப் புகழ் பூண்டானென்று மேலே கூறினோம். பழைய சோழர்கள் பாசன விஷயத்தில் காட்டிய கவனத்தை, பிந்திய சோழர்களும் கைப்பற்றினர். தஞ்சை ஜில்லாவின் வளமைக்கு மூலாதாரமான பெரிய அணைக்கட்டு அவர்களால்தான்கட்டப்பட்டது. அதன்மீதுதான் இப்போதைய சீர் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அதினின்றும் புறப்படும் வாய்க்கால்களின் பேர்கள் அக்காலத்திய சிலாசாதனங்களில் காணப்படுகின்றன. திருச்சிராப்பள்ளிக்கு ஜலவசதியைக் கொடுக்கும் உய்யக்கொண்டான் கால்வாயின் தலை மதகு 1205-06-ல் மூன்றாம் குலோத்துங்கனுடைய சாதன மொன்றில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முசிரிக்குச் சமீபத்தில் உள்ள பெரியவாய்க்கால் மதகு 1219ல் கட்டப்பட்டது. அக்காலத்தில் கட்டப்பட்ட பெரிய பெரிய கோயில்கள் சிற்பிகளின் சாமார்த்தியத்தைக் காட்டக்கூடிய ஞாபகச் சின்னங்களாக இருக்கின்றன. கிராமங்களில் சமுதாயங்களால் அதிகாரம் நடை பெற்றது. மேற்பார்வை பார்ப்போர் இருந்தபோதிலும் சில்லறை விஷயங்களில் இச்சமுதாயத்துக்குச் சர்வாதிகாரமும் இருந்தது. வருஷச்சபை யென்றும், குளத்தைப் பாதுகாப்பதற்கும், தோட்டங்களை கவனிப்பதற்கும் ஞாயத்தீர்மானத்திற்கும் தனித்தனி சபையாக நான்கு சபைகள் இருந்தன.

ராஜ்யத்தில் முதற்பதவி அரசனுக்காயினும் அவன் "உடன் கூட்டத்து அதிகாரிகள்" என்னும் மந்திராலோசனைச் சபையாரின் அனுமதி கேட்டே கார்யங்களைச் செய்வது பதிவு. மண்டலம், கோட்டம், கூறு, நாடு, வளநாடு, நகரம், கிராமம் எனப் பற்பல பகுதிகளாக ராஜ்யம் பிரிக்கப்பட்டிருந்தது. மண்டலங்களை யாள்பவர் அரசவம்சத்தைச் சேர்ந்தவராகவிருப்பார்.

ஒவ்வோர் ஊரிலும் விளைந்த நெல்லில் ஒரு பகுதி அரசனுக்கு வரியாக இறுக்கப்பட்டது. தலைவரி யொன்றிருந்தது. அது குலோத்துங்கனால் தள்ளப்பட்டது. "பாடிகாவல்" என்ற ஊர் காவலுக்கு வாங்கிய வரி யொன்றுண்டு. பற்பல தொழில்களுக்கும் வரிகள் ஏற்பட்டிருந்தன.

நாணயங்கள் பொன், வெள்ளி, செம்பு இம்மூன்று உலோகத்திலும் செய்து வழங்கப்பட்டன. நல்ல பாதைகளையும், அவற்றின் இருமருங்கும் நிழற்றரும் மரங்களையும் உண்டாக்கினர். ஆங்காங்கு தர்மசத்திரங்களும் மடங்களும் கட்டப்பட்டிருந்தன. சோழர்களுக்கு யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகியமூன்றேயிருந்தன. கப்பற்படையுமுண்டு. கல்வியபிவிருத்தி விஷயத்தில் சோழர்கள் மிகுந்த அனுதாபம் காட்டினர். நம்பியாண்டார் நம்பி திருமுறைகள் தொகுத்தார். சேக்கிழார் பெரியபுராணம் பாடினார். வீரசோழியம், பரணி, நன்னூல் திருவிசைப்பா, சிவஞான போதம் முதலிய பல்வகைப்பட்ட கிரந்தங்கள் சோழர்கள் காலத்துத்தான் உண்டாயின.

சோழவம்சம் சீர்குலைந்து கொண்டிருக்கும் தருணத்தில், ஹொய்சள வம்சத்தின் சிற்றரசன் ஒருவன் துங்கபத்திரைக் கரையில் விஜயநகரத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரு ராஜ்யஸ்தாபனம் செய்தான்.

**விஜயநகர ஆதீனம்.**

இது பிரபல ஹிந்து ராஜ்யமாகி, முகம்மதியர்களுடைய அதிகாரம் அதிகமாய்ப் பரவாதபடி சுமார் இரண்டு நூற்றாண்டுக்கு மேலாகத் தடைசெய்தது. என்றாலும் தென்னாட்டில் விஜயநகரத் தரசர்களுடைய அதிகாரம் எவ்வளவு தூரம் வரையில் பரவியிருந்த தென்பது நிச்சயிக்கக் கூடவில்லை.

மாலிக்காபூர் படையெடுத்துப் போனபிறகு மதுரையும் திருச்சினாப்பள்ளியும் முகம்மதியர் வசம் ஐம்பது வருஷம் இருந்தன வென்று மேலேகூறினோம். தஞ்சாவூர்ச் சீமையும் அவர்களுடைய ஆதீனத்தில் இருந்திருக்கலாம். 1365-ல் தான் விஜயநகரத்தார் இந்தப் பிரதேசத்தைத் துருக்கர்களிடமிருந்து திரும்பப் பெற்றனர். பதினான்காம் நூற்றாண்டினிடையில் கம்பணவுடையார் என்பவனும் விருபாக்ஷன் என்பவனும் மதுரையிலும் தென்னாற்காட்டிலும் தங்கள் அதிகாரத்தை ஸ்தாபித்தனர். தஞ்சாவூரும் இவர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்திருக்கலாம். இவ்வாறு ஏற்பட்ட விஜயநகரத்தரசரின் ஆதிபத்யம் இரண்டு மூன்று நூற்றாண்டுகள் வரையில் தஞ்சைப் பிரதேசத்தில் நிலைபெற்றிருந்தது. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் விஜயநகரத்தைக் கவர்ந்து கொண்ட சாளுவர்களும், அவர்களுக்குப் பிந்திய துளுவர்களும், அப்பால்வந்த நாயக்கர்களும் தென்னாட்டில் தங்களுக்கு ஆதிபத்யம் இருப்பதை ஒருவாறு பாராட்டியே வந்தனர். என்றாலும் பழைய சோழவம்சத்தவர்களும் உறையூர் அரசர்கள் என்ற பட்டப்பெயருடன் ஒரு பக்கத்தில் வாழ்ந்து வந்தனர்.

**அச்சுதராயர் படையெழுச்சி. 1532.**

1532—ம் வருஷவாக்கில் விஜயநகரத்தரசனை அச்சுததேவன் தென்னிந்தியாவில் படையெடுத்து, தாமிரவருணியில் ஒரு ஜெயஸ்தம்பம் நாட்டி பாண்டியன் மகளை மணந்து, திருவாங்கூர் அரசனிடம் கப்பம்பெற்றுப் போயினன். இவ்வாறு படையெடுத்ததன் காரணம், பாண்டியனுக்கு திருவாங்கூரரசனும் விஜயநகரப் போர்வீரராலும் இடையூறு உண்டாகாமலிருப்பதற்கே. இது எப்படியிருந்த போதிலும், 1534-ம் வருஷத்தில் தஞ்சை ராஜ்யம் விஜய நகரத்தாரின் ஆதீனத்திலிருந்த தென்பதற்குச் சந்தேகமில்லை. 1537-ல் இருந்த போர்த்துகல் சரித்திரவாசிரியரான நூனிஸ் என்பவர், தஞ்சாவூர், நாகபட்டணம் முதலிய பிரதேசங்கள் விஜயநகரத்துக்குக் கப்பம் கட்டும் நாடுகள் என்று எழுதியிருக்கிறார். அவை அப்பால் அச்சுததேவனின் பிரதான மந்திரியான சாளுவ நாயக்கருடைய பிரதேசங்களில் அடங்கினவையாயின.

**நாயக்கவம்ச வரலாறு. 1549**

தஞ்சாவூர், மதுரை, செஞ்சி இவ்விடங்களில் தலையெடுத்த நாயக்க வம்சங்களின் ஆதிவரலாறும் காலவரையறையும் தெரியவில்லை. இவர்கள் தோன்றுவதற்கு முன்னால் "விட்டலன்" என்ற விஜயநகர ராஜகுமாரன் ஒருவனுடைய பெயர் காணப்படுகின்றது. அவன் ராமராஜனுடைய மகன் என்று மட்டும் தெரிகின்றது. முதலாம் ராமராஜனோ, அல்லது 1565-ல் தலைக்கோட்டைச் சண்டையில் இறந்த இரண்டாம் ராமராஜனோ, இவர்களில் எந்த ராமராஜன் என்பது விளங்கவில்லை.

**சேவப்பநாயக்கர் 1549-1572**

தஞ்சாவூரில் நாயக்க வம்சத்தை ஸ்தாபித்தவர் சேவப்ப நாயக்கர் என்பவராம். (1549-1572) தமது தோள் வன்மையினாலேயே இவர் தஞ்சாவூரை யடைந்தன ரென்பர் ஒரு சாரார்; மற்றொருசாரார், இவர் அச்சுதராயருடைய பட்டமகிஷியின் தங்கையைக் கல்யாணம் செய்து கொண்டாரென்றும், ராயரால் தஞ்சாவூர் அந்நங்கைக்குச் சீதனமாகக் கொடுக்கப் பட்டதென்றும் கூறுவர். இதில் உண்மையிருப்பதாகத் தோன்றவில்லை. தஞ்சை ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் உள்ள மசூதியொன்றில் 1549-ம் வருஷத்திய சிலா சாதனத்தில் இந்த சேவப்ப நாயக்கர்பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலையில் ஒரு தெப்பக்குளமும் ஒரு கோபுரமும் இவருடைய திருப்பணிகள். தஞ்சைக் கோட்டைக் குள்ளிருக்கும் சிவகங்கைக் குளத்துக்குத் தண்ணீர் வருகிற சேவப்பனேரித் தடாகமும் இவரால் வெட்டப்பட்டது. 1560-ல் இவர் மதுரையிலாண்ட விசுவநாதநாயக்கருக்கு



திருச்சிராப்பள்ளியைக் கொடுத்து விட்டு, அதற்குப் பதிலாக வல்லம் கோட்டையைப் பெற்றுக் கொண்டார்.

**அச்சுதப்ப நாயக்கர் 1572-1614**

இவருக்குப்பின் இவர் குமாரர் அச்சுதப்ப நாயக்கர் (1572-1614) தஞ்சாவூரதிபதியானார். இவருடைய மந்திரி கோவிந்த தீக்ஷிதர் என்னும் பிரக்யாதிபெற்றவர். அச்சுதப்ப நாயக்கர் ஒரு கலை விநோதர். ஊரத்தநாட்டுக்கு அருகிலுள்ள மூர்த்திமாம்பாபுரம் என்னும் கிராமம் இவ்வரசருடைய பட்டமகிஷியின் பெயரால் ஏற்பட்டது. பழைய சோழவம்சத்தாரில் கடைசியாக வாழ்ந்தவன் ஒருவன் இவர் காலத்தில் சிற்சில தொந்திரவுகள் செய்துவந்தான்.

**ரெகுநாத நாயக்கர். 1614 முதல்**

1614-ல் அச்சுதப்ப நாயக்கர் தமது குமாரர் ரெகுநாத நாயக்கருக்கு முடி சூட்டி விட்டு, தம்முடைய அந்திநாளை ஸ்ரீரங்கத்தில் கழித்தனர். ரெகுநாதரும் பிதாவைப்போலவே தர்ம பரிபாலனங்களையும் சாஸ்திரக்ஞர்களையும் ஆதரவுடன் போற்றிவந்தனர். அவரே ஒரு கிரந்தகர்த்தா. பல வைஷ்ணவாலயங்களையும் சத்திரங்களையும் நிர்மாணம் செய்தார். பாண்டிய வரசன் இவர் காலத்தில் தஞ்சாவூரில் படையெடுத்து வந்து காவிரியின் அணையை உடைத்துவிட்டுச் சென்றான். நடந்த சண்டையில் வெற்றி யாருடையதென்பது தெரியவில்லை. என்றாலும் பாண்டியராதீனம் தஞ்சாவூர்ஜில்லாவின் தென்பாகத்திலிருந்ததற்கு அவர் பேரால் ஏற்பட்ட துறை முகமாகிய அதிவீரராமன் பட்டணமே சான்றாகும். அதிவீரராம பாண்டியர் காலம் 1565-1610 ரெகுநாதர் பாண்டியன் மகளை மணந்து கொண்டதும் அவர்களுக் குள்ளிருந்த மனஸ்தாபம் நீங்கிவிட்டது.

**நாயக்கர்கள்சுயேச்சாதிகாரம்.**

இக்காலத்தில்தான் தஞ்சாவூரில் விஜய நகரத்தார்களின் ஆதிபத்யம் குறைந்தொழிந்தது. தலைக்கோட்டை (1565) யுத்தத்தில் விஜயநகர ராஜ்யம் தலைகவிழ்ந்ததும், அவ்வம்சத்தரசர் பெனுகொண்டையிலும் அப்பால் சந்திரகிரியிலும் வேலூரிலும் ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்டு சக்தியில் குறைவடைந்தவராயினர். முதன் முதலில் மதுரையிலாண்ட திருமலை நாயகர் (1623-1659) சுயேச்சையை அடைந்தனர். அப்பால் தஞ்சையரசரும் செஞ்சி நாயகரும் அவ்விதம் செய்தனர். ஆனால் 1640-ல் விஜய நகரத்தரசன் ரெங்கராஜன் செஞ்சியின் மீது படையெடுத்து வந்ததும் தஞ்சாவூர் நாயகர் பயந்து கீழ்ப்படிந்து விட்டனர். மதுரைத் திருமலை நாயகரோ, கோலகொண்டை சுல்தானுக்குச் சங்கதி சொல்லியனுப்பி அவனைச் செஞ்சி நாயகருக்குத் துணை வரும்படி வேண்டினர். துருக்கசேனை வந்ததும், ரெங்கராஜன் ஓடிப்போய் மைசூர் அரசனிடம் சரணம் புகுந்தனன். இதனுடன் விஜயநகரத்தார் ஆதீனம் நின்றொழிந்தது.

**துருக்கருக்குக் கீழ்ப்பட்டது**

துருக்கர்களைத் துணைக்கு அழைத்ததன் பயனைப் பின்னர் தெரிந்து கொண்டு நாயக்கர்கள் வெகுவாக வருந்தினர். 1644-ல் கோலகொண்டைச் சுல்தான் சுதாவிலேயே செஞ்சியின் மீது படையெடுத்தான். திருமலை நாயகர், இப்போது பிஜப்பூர் சுல்தானை துணை வேண்டினர். அவன் அனுப்பிய பட்டாளம், கோலகொண்டை சைனியத்தோடு சேர்ந்துகொண்டு செஞ்சியை முற்றுகைபோட்டது. என்றாலும் கோலகொண்டைச் சுல்தான் அவசர காரியமாக உடனே வடக்கே போய்விட்டான். போனவுடன் பிஜப்பூர் சுல்தான் செஞ்சியைப் பிடித்துக்கொண்டு மதுரை தஞ்சையின் மீதும் வந்து இவ்விரண்டிடத்திலிருந்தும் கப்பம் வாங்கினான். இவ்விதமாக முன்னூறு வருஷங்களுக்கப்பால் இன்னொரு முறை தஞ்சை ராஜ்யம் துருக்கர்களுக்குத் தலை குனியவேண்டியதாயிற்று.

**நாயக்க வம்ச முடிவு 1673**

ரெகுநாத நாயக்கருக்குப் பின்னால் அவருடைய குமாரர் விஜயராகவ நாயக்கர் தஞ்சையரசரானார். அவர்தாம் இவ்வம்சத்துக்குக் கடைசியரசர். முகம்மதியர்களுக்கு விரோதமாகக் கிளம்பிய மதுரையாண் முத்து அளகாத்ரி நாயக்கரைத் தண்டிக்கும் போது துருக்கர்கள் இவரையும்கூடச் சேர்த்தனர். விஜயராகவர், தாம் நிரபராதியென்று சொன்னபோதிலும் துருக்கர்கள் அதைக்கேட்காமல், தஞ்சாவூரையும் வல்லத்தையும் இவரிடமிருந்து பிடுங்கிக்கொண்டு இவரைக் காட்

டுக்கு ஓட்டிவிட்டனர். பின்னர், மதுரைச் சொக்கநாத நாயக்கருடன் இவரும் சேர்ந்துகலகம் செய்ததாகமுகம்மதியர்மறுபடியுங்குற்றம் சாட்டினர். ஆனால் இப்போது விஜயராகவர் முகம்மதியர் பக்கம் சேர்ந்து கொண்டனர். இதன் முடிவு என்னவெனில், இவர் பின்னால் சொக்கநாதருக்குக் கீழ்ப்படிந்ததுமன்றி, அவருக்கு இருமுறை நஷ்ட ஈடும் கொடுக்க வேண்டியதாயிற்று.

மதுரை நாயக்கருடன் இவ்விதம் நேர்ந்த மனஸ்தாபம்தான் தஞ்சைவம்சம் அற்றுப் போனதற்குக் காரணமாக விருந்தது. தஞ்சையரசர் தமது புகளை மதுரை யரசருக்குக் கொடுக்க மனமில்லாதிருந்ததை வியாஜமாக வைத்துக்கொண்டு, மதுரையர் தஞ்சையின் மீது படை யெடுத்துவந்து போர்புரிந்து வென்றனர். விஜயராகவ நாயக்கர் போரில் கொலையுண்டிறந்தனர். (1673)

ஜெயமடைந்த மதுரை நாயக்கர், தஞ்சாவூரில் தமது பிரதிநிதியாக அளகிரி நாயக்கர் என்னும் தளகர்த்தனை வைத்துச் சென்றார். அளகிரி, உடனே சுயேச்சாதிகாரம் வகிக்க ஆசைப்பட்டான். உள் நாட்டுக்கலகங்கள் காரணமாக மதுரை நாய்க்கர் உடனே வந்து அளகிரியை அடக்குவதற் கில்லாம லிருந்தார். இதனிடையில், தஞ்சைக் கோட்டை பிடிபடுவதற்கு முன் அதினின்றும் தப்பியோடிய விஜயராகவ நாயக்கருடைய மகன் செங்கமலதாஸ் என்பவன் செஞ்சியில் ஆண்டுவந்த பிஜப்பூர் சுல்தானிடம்போய் தன் குறைகளைச் சொல்லி, தனக்கு ராஜ்யம் கிடைப்பதற்கு உதவி செய்யவேண்டு மென்று வேண்டிக்கொண்டான். சுல்தான் அவ்விதம் செய்வதாக வாக்களித்து தன்னிடம் வேலையிலமர்ந்திருந்த வெங்காஜியை* யனுப்பி, அளகிரியை வெருட்டிவிட்டு, செங்கமல தாஸனுக்கு ராஜ்யத்தைக் கொடுக்கும்படி கட்டளையிட்டான். வெங்காஜி தண்டெடுத்துவந்து, அய்யம்பேட்டையில் அளகிரியோடு போர்புரிந்து வென்று, செங்கமலதாஸனைத் தஞ்சைச் சிங்காதனத்திலேற்றினான். இவான் ஸ்தானத்துக்கு அபேக்ஷகராக விருந்து பெருதுபோன ஒருவன் வெங்காஜியோடு சூழ்ச்சிசெய்து, செங்கமல தாஸனைப் பட்டத்தினின்றும் தள்ளிவிட்டு வெங்காஜியையே அரசனாகும்படி செய்தனன். (1674) இதுதான் தஞ்சாவூரில் மகாராஷ்டிர வம்சம் தோன்றிய வரலாறும்.

* இவன் ஷாஜியென்ற மகாராஷ்டிர தளகர்த்தருடைய மகன். பிரக்யாதி பெற்ற சிவாஜியின் சகோதரன்.

# கமலரேகை
# KAMALAREKA
## ஆறாம் அதிகாரம்
### இன்னும் சிற்சில உண்மைகள்

கமலரேகையுடன் சைதாப்பேட்டைக்குச் சென்ற கமலநாதன் அவளை அங்கே இரயிலில் ஏற்றிவிட்டு மீண்டும் உடனே சென்னைக்குத் திரும்பினான். அவன் தன்னுடைய பெயர் 'சத்தியவிரதன்' என்று கமலரேகையிடம் சொல்லியிருந்தானாதலாலும், இப்பெயர் அவனுடைய புனை பெயர் என்பதை அவள் அறியாளாதலாலும்,'கமலநாதன்; அரக்குமாளிகை; காஞ்சிபுரம்' என்ற விலாசத்திற்குத் தனக்குக் கடிதம் எழுதவேண்டு மென்று அவன் அவளிடம் சொன்னபோது, அவள் சிறிது சந்தேகித்தாளாயினும், கமலநாதன் என்னும் பெயர் தனக்குள்ள புனைபெயர் என்றும், இப்பெயராலேயே காஞ்சிபுரத்தில் அனைவரும் தன்னை அழைப்பது வழக்கம் என்றும் சொல்லி அவன் அவளுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்துவிட்டான். சென்னைக்குத் திரும்பிய கமலநாதன், காலை ஆகாரம் செய்து கொள்வதற்காக ஒரு காப்பி ஹோட்டலுக்குள் நுழைந்தான்.

'நாகரிகம்' என்னும் மடந்தையின் அற்புதச் செயல்கள் பற்பல தேசங்களில் பலப்பல விதமாய் புகழ்கின்றன. அமெரிக்கரின் ஆன்மதத்துவ ஆராய்ச்சியிலும், ஆங்கிலேயரின் பொருளீட்டுந் துறையிலும் பிரஞ்சுக்காரரின் இகலோக சுகங்களிலும், இத்தாலியரின் சங்கீதத்திலும், ஜர்மனியின் சாத்திராபிவிருத்தியிலும், ஜப்பானியரின் சுதந்தர உணர்ச்சியிலும் அவளுடைய திருவிளையாடல்கள் இக்காலத்தில் மிகுதியும் காணப்படுகின்றன. ஆனால், நம் இந்திய தேசத்திலோ சிறப்பும் உயர்வும் வாய்ந்த இத்தகைய நிலப்பகுதிகளில் அவளுடைய அடிச்சுவடு இன்னும் அழுந்திப் பதியவில்லை. உண்ணும் முறையிலும் உடுத்தும் வகையிலும் மாத்திரம் முறைபிறழ்ந்த சிற்சில மாறுதல்களை அவள் நம் நாட்டில் இப்போது உண்டாக்கி வருகின்றாள். 'காப்பி-ஹோட்டல்களில்' அவள் இக்காலத்தில் ஐரோப்பிய நடையும் உடையும் கொண்டு விளங்குகின்றாள்என்பதைச் சென்னை முதலிய இடங்களிலுள்ள காப்பி ஹோட்டல்களைப் பார்த்தவர்கள் இனிதறிந்து கொள்ளுவார்கள். சலவைக் கல் மேஜைகளும், கருங்காலி நாற்காலிகளும் இந்த ஹோட்டல்களில் காண்போர் கண்களைக் கவரும் விதமாய்ப் போடப்பெற்றிருக்கும். நிலைக்கண்ணாடிகளும், இரவிவர்மா படங்களும் நாற்புறச் சுவர்களிலும் மாட்டப் பெற்றிருக்கும்.மின்சார விசிறிகள் பல சுழல்வதையும், மின்சாரக் கிளை விளக்குகள் பல பிரகாசிப்பதையும் அயலூரான் ஒருவன் முதன்முதற் கண்ணுறுவானாயின், 'இஃதென்ன? தேவேந்திர சபையோ? நான் இருப்பது பூலவுலகந்தானோ?' என்று தனக்குள்ளேயே கூறி அதிசயித்தவனாய், விழித்த கண் இமையாமலும், திறந்தவாய் மூடாமலும் அந்த ஹோட்டல்களைப் பார்த்தபடியே நெடுநேரம் ஸ்தம்பித்து நிற்பான். இந்த ஹோட்டல்களில் ஒருவன் ஒருமுறை நுழைந்து சாப்பிட்டு விட்டானானால், அவனுக்குக் 'கர்நாடகப் பிடுங்கல்' என்னும் பழைய பட்டம் நீங்கி 'ஆசாரத் திருத்தக்காரன்' என்னும் புதிய பட்டம் சித்திப்பது நிச்சயம்! இந்த ஹோட்டல்களில் சாப்பிடுகிறவர்களுக்குக் கட்டுகளில் பட்சணங்களும், கோப்பைகளில் காப்பியும் கொண்டுவந்து வைக்கப்படும்! கையினால் பட்சணங்களை எடுத்துப் புசித்தல் நாகரிகக் குறைவானதால், அவ்விதம் செய்யாதிருப்பதற்காக ஒரு சிறு கரண்டியினைப் பலகாரத் தட்டில் ஹோட்டல்காரர்கள் வைத்திருப்பார்கள்! ஆதிசேஷன் நாவைக் காட்டிலும் அதிகமான நாக்களை ஒவ்வொரு கரண்டியும் பார்த்திருக்கும்! சாமவேதம் கோமுதி ஐயர், பட்டாச்சாரி கிருஷ்ணமாச்சாரி, ஆதிசைவர் அருளைய பண்டாரம், சுத்தபோஜனம் நித்தியானந்த முதலியார், வள்ளுவக் கணபதியா பிள்ளை, பக்கிரி அபூபக்கர் சாகிப், இயேசுமரி ஜான் நாடார் முதலானவர்கள் சகோதர உரிமையுடன், வட்டவடிவமான மேஜையைச் சுற்றிக் கிடக்கும் நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு சந்தோஷமாய்ச் சாப்பிடுவதையும் ஒருவரோடொருவர் உல்லாசமாய் வார்த்தையாடிக் கொள்வதையும் இந்த ஹோட்டல்களில் நாம் காணலாம்! அதிகம் சொல்லுவானேன்? 'ஆசாரத்திருந்தம்' என்பது 'எச்சிற்கலப்பே' என்று நினைக்கும்படியான விதமாய் ஹோட்டல்காரர்களின் செயலும், அவர்கள் ஹோட்டல்களில் சாப்பிடச் செல்லுவோரின் செயலும் இருக்கும்! இதனால் விளையும் பயன் யாதோ வெனின்;தேகாரோக்கியத்திற்கும் சுகாதாரப் பாதுகாப்பிற்கும் அடிப்படையாயுள்ள வைதிக ஆசார அனுஷ்டானங்களின் பிறழ்வும், அப்பிறழ்வினால் மனிதர்கட்கு எற்படும் புதிது புதிதான நோய் பெருக்கமுமேயாம்! இத்தகைய இயல்புடைய ஹோட்டல்களுள் ஒன்றேயாகும், அன்று காலையில் கமலநாதன் காப்பி சாப்பிடுவதற்குச் சென்ற ஹோட்டலும்!

கமலநாதன் சென்று காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்த அந்த ஹோட்டலில் அதே சமயத்தில் அவன் அமர்ந்திருந்த நாற்காலிக்குச் சிறிது தூரத்திற் கிடந்த வட்டமான மேஜையைச் சுற்றி மூவர் தனித்தனி வெவ்வேறு நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டு காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மூவரும்சம்பாஷித்துக் கொண்டிருந்த மாதிரியினால், அவர்கள் நெல்லூர் வாசிகளாயிருக்கவேண்டு மென்பதைக் கமலநாதன் இனிதறிந்து கொண்டான். அவர்களுடைய சம்பாஷணை தெலுங்கிலிருந்த போதிலும், கமலநாதனுக்குத் தெலுங்கு அரைகுறையாய்த் தெரியுமாதலாலும், அவர்களுடைய சம்பாஷணை முதல் நாளிரவு விக்டோரியா சபா மண்டபத்தில் நேர்ந்த மரணத்தைப்பற்றி இருந்ததாதலாலும் அவன் அவர்களுடைய பேச்சைக் கூர்ந்து கவனிக்கலானான்.

"வாடு சச்சிபோயினு; கொல சேயபடிநாடனி செப்புகுன்ச் சாரு" என்று ஒருவன் சொன்னான்.

"கம்பங்க உன்னதி; மேமு பந்திட்லு உண்டிமி! நேனுகூடலேது" என்று அம்மூவருள் ஒருவராயிருந்த பெண்மணி மற்ற இரண்டு ஆண்மக்களையும் நோக்கிக் கூறினாள்.

"பயங்கரம்; பயங்கரம்! வாடு நா சமீபால்லு கூச்சுண்டி. போஜனம் சேசுகுனி உண்டனு; நேனுசப்புடு விண்டினி, வாடு கிந்த படியுண்டிந்தினி சூஸ்தினி! வாடிகுட்டலு கிந்தபடி புட்டிலுதோ பரிக்ஷ படியுண்டனு" என்று வேறொருவன் ஏனைய இருவரையும் நோக்கிக் கூறினான்.

"வாடிதோ ஒக ஆடதி உண்டெனனி வினபடிதினி" என்று முதலிற் பேசியவன் மீண்டும் உரைத்தான்.

"அவனு; ஒக புத்திசாலியைன ஆடதி கொத்தசீர கட்டுகுனி உண்டனு! நேனு, தானெனெ சூஸ்தினி. அதி, முசுகு வேசுகுனி உண்டனு. ஒக நிமிஷமுகு முந்து, வாள்ளு நவ்வுகுனி மாட்லாடுகுனி சந்தோஷமுக உண்டிரி அதி, வாடினி "அனுவிந்தா" அனி பிலுசிந்தினி. நேனு விநுகுனி உண்டினி. அப்புடு நேனு வேறு ஞாபகமுக உண்டப்புடு சப்புடுவிண்டினி, நேனு திருகி சூசப்புடு ஆடதி மரிக்கி போயினு" என்று இன்னொருவன் சொன்னான்.

"அதி தப்பிபோயினு!" என்று கூடவிருந்த ஸ்திரீ சொன்னாள்.

"சச்சிபோயினவாடு பேரு தெலுசுனா" என்று ஒருவர் மற்றொருவரைக் கேட்டார்.

"அந்தோ ஒச்சே பேப்பர்வாடினி அடுகிதே தெலுசுனு!" என்று மற்றொருவர் பதில் சொன்னார்.

இவ்விதம் அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது, கடைசியாக ஒருவர் சொன்னபடியே, பத்திரிகை நிருபர் ஒருவர் அங்குவந்து அம்மூவர்களுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தார். அவர்கள் மூவரும் இது சம்பந்தமாய்ச் சிற்சில கேள்விகள் தெலுங்கிலேயே கேட்டார்கள். பத்திரிகை நிருபர்க்குப் பிறர் பேசிக் கொள்ளும் தெலுங்கு சம்பாஷணையை அறிந்து கொள்ளக்கூடிய சக்தி உண்டாயினும், அவருக்குத் தெலுங்கு பேசுவதற்குத் தெரியாதாதலால்,அவர் தமிழிலேயேபதில் சொல்லலானார். அவர்கள் மூவருக்கும் தமிழ்பேசத் தெரியாதாயினும், பிறர்பேசினால்ஒருவாறு அறிந்து கொள்ளக் கூடியவர்களாகவே அவர்கள் இருந்தார்களாதலால், பத்திரிகை நிருபர் சொன்ன விஷயங்களை மிகுந்த உற்சாகத்துடன் கவனித்து

வந்தார்கள். கமலநாதன் அவர்களைக் காட்டிலும் மிகுந்த கவனத்தோடு தன் இருக்கையில் இருந்தபடியே பத்திரிகை நிருபர், அவர்கட்குச் சொன்ன விஷயங்களைச் செவிகொடுத்துக் கேட்கலானான். அந்த நிருபர் பின்வருமாறு அவர்கட்குச் சொன்னார்.

“போலீஸார் இந்த மரண சம்பவத்தைப்பற்றி மிகுந்த ஊக்கத்தோடு விசாரித்து வருகிறார்கள். நான் அரைமணி நேரத்திற்கு முன்புதான் அநலன் என்னும் பெயருடைய போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை சந்தித்து அவரை இவ்விஷயமாய் விசாரித்தேன். இறந்துபோன மனிதனுடைய சரீரத்தை அறுத்து டாக்டர்கள் சோதனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும், அந்த மனிதனோடு நாடகப்பந்தலில் உட்கார்ந்துகொண்டிருந்தவளும், அவன் கீழேவிழுந்து இறந்தவுடன் திடீரென்று ஒருவருக்குந்தெரியாமல்மறைந்து போனவளுமான அந்த ஸ்திரீயைக் கண்டுபிடிப்பதற்குப் போலீஸ் உத்தியோகஸ்தர்கள் பற்பல இடங்களுக்கு ஆட்கள் அனுப்பியும் தந்திகள் கொடுத்தும் முயன்று வருகிறார்கள் என்றும் அவர் என்னிடம் சொன்னார். கொலை செய்யப்பட்டு அவன் இறந்தான் என்பதை டாக்டர்கள் இன்னும் நிச்சயிக்கவில்லை. ஆனால் அந்த மனிதன் கொலை செய்யப்பட்டே இறந்தான் என்று தாம் நிச்சயமாய் சொல்லக் கூடுமென்று அநலன் சொல்லுகிறார். அவனுடைய பெயர்யாது என்பது இன்னும் தெரியவில்லை. “அநுவிந்தன்” என்பது அவனுடைய உண்மையான பெயர் அன்றாம்; சிலர் அவனை அப்பெயரா லழைப்பதுண்டாம்; ஏனெனில், அது அவனுடைய ‘செல்வப் பெயராம்’! அவன் இச்சென்னை நகருக்குப்புதியவனென்றே பலர்சொல்லுகிறார்கள். அவனுடைய ஊர் எது, அவனுடைய குடும்பத்தார் யாவர் என்னும் விவரங்கள் தெரியவில்லை. அவன் அணிந்திருந்த சட்டைப் பைகளைப் பரிசோதித்துப் பார்த்தபோது ஒரு பையில் பணம் வைத்துக் கொள்வதற்கு உபயோகப்படும் சோற்றை ஒன்று அகப்பட்டதென்றும், அதைத் திறந்து பார்த்தபோது அதனுள் ஆறு நூறு ரூபா நோட்டுகள் இருந்தனவென்றும், அவைகளைத்தவிர சிற்சில கடிதங்கள் காணப்பட்டனவென்றும், அவைகளுள் இரண்டொன்று தமிழ்ப்பாஷையிலும் மற்றவை ஆங்கில பாஷையிலும் எழுதப்பட்டிருந்தனவென்றும், தமிழ்க் கடிதங்களைப் படித்துப் பார்த்தபோது ஆச்சரியமும் பயங்கரமுமான சிற்சில உண்மைகள் வெளியாயினவென்றும் ஆங்கில பாஷையில் எழுதப்பட்டிருந்த கடிதங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படுவதற்காகக் “கவர்ன்மெண்டு டிரான்ஸிலேடருக்கு” அனுப்பப் பட்டிருக்கின்றனவென்றும், அவை மொழி பெயர்க்கப்பட்டு வந்தால் இன்னும் சில பயங்கரமும் அதிசயமுமான உண்மைகள் ஒருகால் வெளிவந்தாலும் வரலாமென்றும் இன்ஸ்பெக்டர் அநலன் என்னிடம் தெரிவித்தார். அக்கடிதங்களில் எத்தகைய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன என்பது இன்னும் பயிரங்கத்திற்கு வரவில்லை. ஆனால் ஒரு உண்மை மாத்திரம் வெளிப்பட்டிருக்கிறது. அதாவது நாடகம் பார்க்கப் போக வேண்டாமென்றும், போனால் கொலைக்குள்ளாகும்படி நேரிடுமென்றும் முன்னெச்சரிக்கையாகவே அவனுக்கு யாரோ கடிதம் எழுதித் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கடிதமும் அவனுடைய சட்டைப் பையில் காணப்பட்டதாம். அவ்விதம் எச்சரிக்கப்பட்டும் அவன் அதனைப் பொருட்படுத்தாமல் வந்ததால் கொலையுண்டான். அக்கொலை மிகுந்த சாமர்த்தியத்துடன் செய்யப் பட்டிருக்கிறது. எவ்விதமாய் அவன் கொலை செய்யப்பட்டான்; அவன் இறந்ததற்கு உண்மையான காரணம் யாது என்பதை சோதித்தறியப் பிரபலமான டாக்டர்களாலும் முடியவில்லை என்றால் நான் அதிகம் சொல்லுவானேன்? அவனோடிருந்த ஸ்திரீயைக் கண்டு பிடிப்பதற்குப் போலீஸார் மிகமுயன்று வருகிறார்கள். ஆனாலும் அவளுடைய அங்க அடையாளம், அவள்முகமூடி கோஷா ஸ்திரீகளைப்போல் அணிந்திருந்தபடியால், எவருக்கும் தெரியாததலால், அவளைக் கண்டு பிடிப்பது அசாத்திய மென்று பலர் கூறுகின்றார்கள். அந்த மனிதன் நாற்காலியிலிருந்து கீழே விழுந்தவுடன் வேறொரு பெண்மணி ஓடிவந்தாள். அவள் வருமுன்னமே அவன் இறந்துபோனான். அவள் அவனுடைய இறந்த சரீரத்தின் மீது விழுந்து புரண்டு “அநுவிந்தா! அநுவிந்தா!” என்று வாய்விட்டுக் கூவி அழுதாள். அப்போது அவளுடைய முகவுறை கழன்று வீழ்ந்தது. அதனைக்கூட அவள் அறியாளாயினள். அச்சமயத்தில் ஒரு வாலிபன் அவ்விடத்திற்கு வந்து அவளுக்கு ஆறுதல் கூறி அவளை அழைத்துக் கொண்டுவெளியே போய்விட்டான். அவளது பேரெழில் அவள் முகவுறை சிறிதே விலகி வீழ்ந்தபோது, காரிருளின் இடையே தோன்றும் மின்னலைப் போல் பளீரென மின்னிப் பெரியதோர் மனத்தடுமாற்றத்தைப் பலர்க்கும் விளைத்தது. அவள் யார் என்பதையும் போலீஸார் அறிந்துகொண்டார்கள். அவளுடைய சாட்சியமும் அவளை அப்புறப்படுத்தி அழைத்துச் சென்ற வாலிபனுடைய சாட்சியமும், இக்கொலை சம்பந்தமாய் ஏற்படும் விசாரணைக்கு இன்றியமையாதவைகளா யிருத்தலின் அவர்கள் இருவரையும் போலீஸார் தேடித் திரிகிறார்கள்” என்று பத்திரிகை நிருபர் கூறினார்.

அவர்கூறிய கடைசி இரண்டொரு செய்திகள், தனியாக வேறோர் நாற்காலியில உட்கார்ந்து காப்பி சாப்பிடுவதைப்போல் அபிநயம்செய்துகொண்டிருந்தவனும், ஆனால் உண்மையில் அவர்களுடைய சம்பாஷணையைக் கூர்ந்து கேட்பதில் கவனம் செலுத்தியிருந்தவனுமான கமலநாதனுக்குப் பெரும் அச்சத்தை விளைவித்து அவனைத் திடுக்கிடச் செய்தன. அவன் அக்கூட்டத்தாரை எறிட்டுப் பார்ப்பதற்கும் அஞ்சினான். ஏனெனில், தன்னை அவர்களில் எவரேனும் அடையாளங்கண்டு பிடித்துக் கொண்டால், போலீஸார்வசம் தான்கைதியாகப் போகநேரும் என்



பதை அவன் உணர்ந்திருந்தான். ஆகவே, திடீரென்று அவன் தன் இருக்கையிலிருந்து எழுந்து, தன்னால் காதலிக்கப்படும் அப்பெண்மணியை,— அதாவது **கமலரேகையை**,— எவ்விதம் காப்பாற்றுவது என்பதைப் பற்றி ஆழ்ந்து ஆலோசித்துக் கொண்டே அந்த ஹோட்டலைவிட்டு நீங்கினான்.

கமலநாதன் **கோத்தவால் சாவடிக்குச்** சமீபத்தில் சென்று கொண்டிருந்தபோது இக்கொலை விஷயமாய் ஜனங்கள் பற்பல விதமாய்த் தங்கள் தங்களுக்குத் தோன்றியபடி பேசிக்கொண்டு போவதைக் கவனித்தான். வதந்தி, ஜனங்களுடைய மனப்போக்குக்குத் தகுந்தபடி பற்பல விதமான உருவங் கொள்ளுவது இயல்பேயன்றோ? ஒருவர் ஒருவிதமாய்க் கூறுவார்; இன்னொருவர் அவருரையைமறுத்து வேறுவிதமாய்க் கூறுவார்! ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயமாய்ப் புலப்பட்டது. அதாவது, இக்கொலை விஷயம், பொறாமை என்னும் கொடிய தீ, ஒழுக்கமற்றவர்களும், அற்பமான கல்வியறிவுடையவர்களுமான கடையர்களிடம் எவ்வளவு விரைவாயும் உக்கிரமாயும் சென்று பற்றி அவர்கள் மனத்தைத் தகிக்கின்றதோ, அவ்வளவு விரைவாயும் உக்கிரமாயும் நகரவாசிகளின் மனத்தைச் சென்று பற்றி எரிப்பதாயிற்று என்பதுதான்.

கமலநாதன், கொத்தவால்சாவடிக் குள்ளிருந்து, வடக்கு வாயில் வழியாக ஆதியப்ப நாயக்கன் தெருவிற்குச் சென்று, அத்தெருவிலுள்ள ஒரு வீட்டினுள் நுழைந்தான். சிறிது நேரங்கழித்து மீண்டும் வெளியே வந்தான். அப்போது அவன் வேறொரு மனிதனைப்போல் காணப்பட்டான். அவன் முன்னர் அணிந்திருந்த சட்டையும், உடுத்திருந்த வஸ்திரமும் இப்போது மறைந்தே போயின. வேறுவிதமாய் அவன் உடையணிந் திருந்தான். தலைமயிரையும் புதுமாதிரியாக அதற்குள் கத்தரித்துக் கொண்டான். இவ்விதம் இவன் செய்துகொண்டதற்குக் காரணம் தன்னை ஒருவரும் அடையாளம் கண்டு பிடிக்காமலிருக்க வேண்டுமென்பதைத்தவிர வேறன்று என்பதை நுண்ணறிவுடையோர் அறிந்து கொள்ளாமலிரார்கள். இவன் ஆதியப்ப நாயக்கன் தெருவழியாய்க் கிழக்கு நோக்கியே சென்று, ‘**பிராட்வே**’ வந்தவுடன் தெற்குப் புறமாய்த் திரும்பி நடக்கலானான். பிராட்வேயில் ஒருசிறுவன் பத்திரிகைகளை அடுக்கி ஒரு கையில்வைத்துக் கொண்டு, டிராம் வண்டியில் பிரயாணம் செய்பவர்களிடம் மற்றொரு கையினால் பத்திரிகையை எடுத்துக் கொடுத்துக் காசு வாங்கிக் கொண்டிருந்தான். கமலநாதனும் அச்சிறுவனிடம் சென்று, அவனிடம் அரையணா நாணயமொன்றை விசிறியெறிந்து விட்டு ஒருபத்திரிகையை மிகுந்த ஆவலோடு வாங்கினான். பத்திரிகை, அப்போதுதான் அச்சடிக்கப்பெற்று வெளிவந்ததென்பதை அதனுடைய ஈரப்பசையே இனிது புலப்படுத்திற்று. ஆனாலும், சூட்டோடு இருக்கின்ற தோசைகள் எவ்வளவு விரைவாய் விற்பனையாகுமோ அவ்வளவு விரைவாய் அப்பத்திரிகைகள் விற்பனையாயின. காரணம், கொலைவிஷயமாய் அதில் எழுதப்பட்டிருந்ததே யாகும். கமலநாதன், தான் வாங்கிய பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தான். முதலில் பெரிய எழுத்துக்களில் பின்வருமாறு மகுடமிட்டு எழுதப் பட்டிருந்த விஷயம் அவன் கவனத்தைக் கவர்ந்தது.

**விக்டோரியா மண்டபத்தில்**
**ஒரு பயங்கரமான படுகொலை!**
**இக்கொலையில்**
**இரண்டு ஸ்திரீகள் சம்பந்தம்!**
**இரகசியங்கள்**
**பகிரங்கமாய்விட்டன.**

இம்மாதிரியாய்ப் பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டிருந்தது, கமலநாதன் கவனத்தைக் கவர்ந்ததாயினும், எவ்வளவு ஆவலோடு அவன் பத்திரிகையைப் படிக்க ஆரம்பித்தானோ அவ்வளவு ஆவலோடு அவன் அதைப் படித்து முடிக்கவில்லை. ஏனெனில் ஏற்கெனவே அவனுக்குத் தெரிந்த விஷயங்கள் அதில் எழுதப் பெற்றிருந்தனவேயன்றிப் புதிதாக ஏதும் அக்கொலை விஷயமாய்க் காணப்படவில்லை. ‘பத்திரிகைகள் இவ்விதந்தான் வீணாரவாரம் செய்யும் போலும்! என்று அவன் நினைத்துக்கொண்டு அதனைக் கசக்கித் தெருவில்எறிந்துவிட்டு மீண்டும் வழிநடக்கலானான். இவன் வழிநடந்து சென்று கொண்டிருந்தபோது இவனுடைய மனத்தின் கண்ணும் பற்பல யோசனைகள் நடந்து கொண்டிருந்தன.

காஞ்சிபுரத்திலிருந்து தன்னை நாடகம் பார்ப்பதற்காகச் சென்னைக்கு அழைத்து வந்த **சித்திரவர்மனும்** அவனோடு வந்த **பேர்தெரியாத** ஸ்திரீயும் எங்கு சென்றார்கள்? அவர்கள் திடீரென்று தன்னை விட்டு நாடகம் பார்க்கச் சென்ற அன்றிரவு மறைந்து போனதற்குக் காரணம் என்ன? என்னும் இவைபோன்ற பலவிஷயங்கள் கமலநாதனுடைய ஞாபகத்திற்கு இப்போது வந்தன. சித்திரவர்மனையும் அந்தப் பெயர்தெரியாத ஸ்திரீயையும் கமலநாதன் கண்டுபிடிக்கவேண்டி எழும்பூர் இரயில்வே ஸ்டேஷனிலும், சென்ட்ரல் ஸ்டேஷனிலும் போய் ஒவ்வொரு வண்டியிலும் பார்த்தான்; ஆனால் அவர்கள் காணப்படவில்லை. ஆகவே அவர்களிருவரும் இன்னும் காஞ்சிபுரத்திற்குப் போகவில்லை என்பதையும், சென்னையிலேயே இருக்கிறார்கள் என்பதையும் கமலநாதன் இனிதறிந்து கொண்டான். அவர்களிருவரைப் பற்றியும் அவன் ஆழ்ந்து சிந்திக்க சிந்திக்க இன்னும் சிற்சில உண்மைகள் அவனுக்குப் புலப்பட்டன.

“என்ன? சித்திரவர்மனும் அந்தப் பெயர் தெரியாத ஸ்திரீயும், என்னை விட்டு மறைந்து போனது பேராச்சரியமாகவே இருக்கிறது! சித்திரவர்மனே தனக்கு நாடகம் பார்க்கப் போவதில் சிறிதும் இஷ்ட

மில்லை என்று காஞ்சிபுரத்திலேயே வற்புறுத்தி உரைத்தான். அந்த ஸ்திரீதான் அவனைக் கட்டாயப் படுத்தி அழைத்துக் கொண்டு வந்தாள்! அவளுடைய வார்த்தையைத் தட்ட முடியாமல், எவ்வளவு மனோபல முடையவர்களாயிருந்தாலும் ஆண்மக்கள், ஸ்திரீகளுடைய வார்த்தைகளை மீறி நடப்பது பெரும்பாலும் இல்லை என்பது உலகானுபவத்தில் காணப்படும் ஒரு உண்மையாகும், சித்திரவர்மன் நாடகத்திற்கு வந்தான். நாடகமண்டபத்தில் நிகழ்ந்த கொலைக்கும், அந்தப் பெயர் தெரியாத ஸ்திரீயின் வருகைக்கும் ஏதாவது சம்பந்த மிருக்கக்கூடுமோ என்று கமலநாதன் தனக்குத் தானே சொல்லிக் கொண்டு ஆலோசிக்கலானான்.

இவ்விதமாகக் கமலநாதன் ஆலோசித்துக் கொண்டே 'பிராட்வே' வழியாய் நடந்துசென்ற போது, பிராட்வேயிலுள்ள சிங்காரத் தோட்டத்தில் இருவர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள் அவர்கள் கமலநாதன் வழிநடந்து செல்வதைக் கண்டு 'கமலநாதா!' என்று உரத்துக்கூவி அவனை அழைத்தார்கள். அவர்கள் இருவரும் கமலநாதனுடைய நண்பர்களே யாவார்கள். கமலநாதன் உடனே அவர்களிடம் சென்றான்.

"கமலநாதா! நேற்றிரவு 'விக்டோரியா சபாமண்டபத்தில்' நிகழ்ந்த கொலையைப்பற்றி நகரம் முழுவதும் ஒரே பேச்சாயிருக்கிறதே? உனக்கு ஏதாவது தெரியுமா?" என்று அவ்விருவர்களுள் ஒருவனான நாவுக்கரசு என்பவன் கமலநாதனைக் கேட்டான்.

"எனக்கு ஒன்றுந் தெரியாது!" என்று கமலநாதன் பதில் சொன்னான்.

"நான் நாடகத்திற்குச் சென்றிருந்தேன். கொலையுண்ட மனிதனுக்கு அடுத்தாற்போல் உட்கார்ந்திருந்த ஸ்திரீக்குப் பக்கத்தில் நான் இருந்தேன் அவள் அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அவன் காதண்டை ஏதோ இரகசியமாய்ச் சொன்னாள். அவள் ஏதோ ஒரு இரகசியத்தை வெளியிடக் கூடாதென்று அவனை மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொண்டாள் என்று நான் நினைக்கிறேன் இவ்விஷயமாய் நான் ஸ்டேஷனில் வாக்குமூலம் கொடுத்திருக்கிறேன்," என்று நாவுக்கரசு கமலநாதனிடம் சொன்னான்.

"இறந்துபோன மனிதன் யாரென்பதைப் போலீஸார் கண்டுபிடித்து விட்டார்களா?" என்று கமலநாதன் கேட்டான்.

"இல்லை; அவனை யாரென்று கண்டுபிடிப்பதற்கு எவ்விதமான ஆதாரமும் கிடைக்கவில்லை. அவனுடைய சட்டை, கைக்குட்டை முதலியவைகளிலிருந்த விலாசங்கள் கூட அழிக்கப்பட்டிருக்கின்றனவாம். அவன் கொலை செய்யப்பட்டான் என்பது மாத்திரம் நிச்சயமாய்த் தெரிகிறது. ஆனால் எவ்விதம் கொலை செய்யப்பட்டான் என்பது கண்டுபிடிக்கப்பட முடியாத ஒரு போதிசமாகவே இருக்கின்றது" என்று நாவுக்கரசன் விடையளித்தான்.

சிறிதுநேரம் அவர்களோடு பேசிக்கொண்டிருந்து விட்டு கமலநாதன் பின்பு அத்தோட்டத்தை விட்டு நீங்கினான். சென்னையிலேயே இருந்து அன்று மாலையில் வெளியாகும் பத்திரிகையை வாங்கிப் பார்த்தால் புதிய உண்மைகள் வெளியாகும் என்று முதலில் கமலநாதன் நினைத்தான். சித்திரவர்மனைக் கண்டுபிடித்து விசாரித்தால் இன்னும் சில புதிய உண்மைகள் வெளியாகும் என்று பிறகு ஒரு யோசனை அவனுக்கு உதித்தது எந்த விதத்திலும் கமலவேணியைக் காத்தல் வேண்டும் என்னும் ஒரு உறுதி மாத்திரம் அவன் மனத்தில் வேரூன்றிவிட்டது. இந்தத் தீர்மானத்துடன், சித்திரவர்மனைப் பார்ப்பதற்காக, அவன் அன்று மாலையிலேயே சென்னையிலிருந்து புறப்பட்டுக் காஞ்சீபுரம் சென்றான்.

## திருவானைக்காப் பதிற்றுப்பத்தந்தாதி

## TIRUVANAIKKA PADIRRUPPATTANTADI

உய்பவுண்ட நஞ்சயின்
றுணர்த்த நின்ன ருட்டிறம்
பொய்யிலுந்த நிற்றெரு ழாது
போத மூழ்ப்பு ணர்ப்பினேன்
மெய்ய கன்று மாண்டு மாண்டு
மீண்டு வண்பி றக்குறாஉம்
வெய்ய வான வர்ப்ப ராவும்
வீணரென்சொல் பெறுவரே. (75)

பெற்ற மாய மாயன் முன்பி
றந்த லாய்ப்பி றங்குநாள்
சற்று நோக்கு றாவ டிக்கண்
டன்க ணிட்ட வாறுபற்
றற்ற வர்க்க ருள்வன் காவை
யண்ண லென்று ணர்ச்தவும்
மற்றொர் பற்றினேனும் வாழ்த்தும்
வாழ்ச்தி லென்ப யப்பதே. (76)

பற்றி லார்க்க ருள்வ னவற்
பதிய னென்னு மறைமொழி
வெற்றெ னவு ணர்ந்த னன்வி
லங்க நாவ லூரனுக்
கொற்ற னயு வந்து தூது
றுமைத்தி பைத்த வுண்மையா
லிற்றை நாளு மேவ லாக
வெனையி யக்கிற் சாலுமே (77)

சால நீள்வ யற்சு லாவு
சம்பு கேச வெங்கணும்
பாவி னீரின் விரவி நின்னின்
பரிசு காண்கை பொன்றமற்



றாலி சூழ்பு விக்க ணென்னை
யான றிந்தி ருத்தலொன்
றேலி யண்டி லொன்லற யானு
மெய்த விங்க னருள்வே (78

அரும றைக்கு லஞ்சொல காவை
யாத்த தூல சூக்குமக்
கருவி யென்னு மும்மை யாக்கை
யிற்ப டிந்தும் படிவிலா
தொருவில் கால மூன்றி னின்று
முறைய கக்கு ரூதயென்
னுருவை யானு முணரு மாறிங்
குனத ருடபு ரிகவே. (7 )

புரியு நின்ன டித்தொ ழும்பு
பூண்ட வென்முன் வெற்புநே
ரெரிவி ழிக்க ரும்ப கட்டி
னியமன் வந்தெ திர்ந்தநா
ளரிவி டைக்க ணார்ந்த வண்வந்
தருள்சு ரத்தல் வேண்டினேன்
விரிம லர்ப்பொ தும்பர் மேய
வெள்ளை நாவல் வள்ளலே. (80)

### கலிவிருத்தம்

வள்ளமலர் வாவிமத வாரண வனத்தோ
ரொள்ளிடையு ளன்பினடி யேத்தினர்களன்றே
விள்ளருமெய்ஞ் ஞானநிலை மேவியய னார்கைப்
புள்ளியையி கந்துசிவ போதநுகர் வாரே. (81)

ஆரமல ராரணி யார்மனைவி யாரஞ்
சோரவலை நித்திலது துன்னுநின் முடிக்க
ணாமலையன் காவைநக ராந்தவு னடிக்கீழ்ச்
சாரவரு ணல்குகத யாவினெளி யற்கே. (82)

எட்டுணைய வேனுமிர வாவகையு மேற்பார்க்
கிட்டுநுகர் தேட்டமுமி லங்கடியர் தொண்டு
முட்டுதையு மன்பினொடு முன்புகழ்ந வில்சொற்
கட்டுமிக நல்குகக யாரணிய வாழ்வே. (83)

வாரணவ னத்தவிர்வ னத்துருவ வெந்தா
யாரணமெ னைத்துமகி லாண்டமும்விராய
பூரணனெ னும்பொருளு போதமது ணர்ந்துங்
காரணமெ னுவுலகர் கண்டுபெர வற்கே. (84)

பரசமய மேவு மவர் பாரினெளி மூசும்
சுரசமய நாவனிழ றுன்னுபுவு லாசைக்
கரசமய நல்குமமு தேசனரு ளோரில்
வரசமய சைவதவ வாழ்வையிக வாரே. (85)

இகமிலகு தீயவுட லீரவெனி னெஞ்ச
மிகமறுகு முன்னருறு மேல்வினையி னந்தோ
வகமய லகன்றுனடி யார்ந்தருண்மெய்ஞ் ஞானச்
சுகமருவு மாறருள்க தோயவுரு வோனே. (86)

உருவமொரு நான்கருவ நான்குபய மொன்றாய்
மருவிநவ யார்வடிவ மன்னியும னாதம்
பொருவில்பொரு ளாய்நிறைபு னற்படிவ நாத
குருவடிவ மேவியொரு கூற்றருள்வ தென்றே. (87)

என்றுபணிந் தேத்தமமு தேசபடர் சோட்டுக்
குன்றுறழ்ப கட்டினிவர் கூற்றனெனை நேவி
லன்றுவிடை யேறிபெனை யாளுபுனை யாளோ
டொன்றுற வெதிர்ந்தருள்க வுள்ளுமெளி யற்கே.

உள்ளியிடு கந்தமென வோதுமய லோவா
தெள்ளிநவி னைக்குழல் வீரிலகு செகட்
கிள்ளியிடு மாலயகி லாலயநின் வெண்ணீ
றள்ளியிட வவ்வினைய கன்றொளிர்கு வீரே. (89)

ஒள்ளொளியெ னவெளிய னூர்மமவர் மேய
வெள்ளியந னுவலடி மேவமுத வள்ளா
தெள்ளுசிவ ஞானநிலை தேறவிழை வேனுக்
குள்ளநெறி யுள்ளபடி யுள்ளுற வுணர்த்தே. (90)

### எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

உறுபெரு நாரமோடு பிறைநீடு கொன்றை
யொளிரிண்டை மோலி சரணம்
மறுவறு வேதமோல மொடுநாடு கஞ்ச
மலரான நேச சரணம்
இறுதிகொண் மாலயன்றன் சிரமாலை கொண்ட
வெழிலாரு மார்ப சரணம்
நறுமலர் நாவனீழ லமுதேச மல்க
ணனிமல்கு பாத சரணம். (91)

சரவச ரங்களாய் பிரபஞ்ச முற்றுந்
தாளு மனாதி சரணம்
கரவச மெயசம்பு முநிநல்கு நாவல்
கனியுண்ட வண்ட சரணம்
பரவச மார்த்தநன்மா பழிநீக்கு காவை
பரநாத தத்வ சரணம்
உரவச னத்தகோத மன்விரசுதாப
மொழிவித்த நம்ப சரணம் (92)

நம்பகி லாண்ட வல்லிகொளமுன் னவிர்று
ஞானோப தேச சரணம்
கம்பலை நீடுகங்கை யினுங்கா விரிக்குக்
கனநல்கு நாத சரணம்
பம்பெழு சாகரங்க டிசைநான்கு மல்கி
பரவப் புலிங்க சரணம்
வம்பவிழ் மேருவாவி நதியாகு மாறு
வரநல்கு வள்ளல் சரணம். (93)

அப்பிறை பாரியாடொ ளணைவன்னி சாப
மகல்வித்த தேவ சரணம்
ஒப்பறு நேரியானில் லவள் சூடுமார
மொளிருக்க மாங்க சரணம்
செப்புச ரோருகன்றீ வினைநீக்கி யாக்குந்
திறநல்கு மூர்த்தி சரணம்
மைப்புரு கூதனைத்த வடர்பிரம பாவ
யாற்றும்ப ரும்ப சரணம் (94)

## சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S & LADIES' PAGES

### கல்மேல் நெல்முளைத்துக் கல்கோழி கூப்பிட்ட கதை

*"எத்தனை நாழிகை யோசிப்பது? சின்ன நாளில் சொல்லி என்னைச் சமாதானப் படுத்தின பாட்டி யிப்பொழுது பரலோகம் போகாதிருக்கக் கூடாதா? இருந்திருந்தால் எனக்கிவ்வளவு கவலை*

(469-ம் பக்கத்தொடர்ச்சி)

he had lifted it against Cæsar. Even his enemies respected the body, and gave it burial with full honours. "This," said Antony, "was the noblest Roman of them all. All the conspirators save him did, what theydid, in envy of Cæsar's greatness He alone joined them in honest motive and thought for the common good. His life was gentle and himself so composed, that Nature might stand up and say to all the world, 'This was a man.'"

ப்ரூடஸ் முதலில் செய்தபோர் ஒரு வழியாக முடிவுபெறாமல் போய்விட, அவன் மறுபடியும் சண்டை தொடங்கினான். மறுபடியும் சில வீரர்களுடன் அவன் போர்க்களம் விட்டு ஓடிவிடும்படிதான் நேர்ந்துவிட்டது. அவர்களுள் ஒவ்வொருவனையும் தனிமையாக அழைத்து தன்னை உடனே அங்கேயே குத்திக்கொன்று விடும்படி நயந்துகேட்டுக்கொண்டான். ஒவ்வொருவனும் முடியாதென்று தலை அசைத்துவிட்டான்! அவர்களுக்கு அவனிடமிருந்த அன்பு அவ்வளவு; முடிவில் ஒருவேலைக்காரன் தான்தலையை ஒருபுறம் திருப்பிக்கொண்டு கத்தியை நீட்டித் தன் பின்புறப் பிடித்தான். அதன்மேல் ப்ரூடஸ் ஓடிவந்து விழுந்துஸீஸரைக்கொல்ல அதை உயர்த்திய பொழுதிருந்த களிப்பைவிட மிகுந்தகளிப்புடன் இறந்தான். அவன் பகைவர்கள்கூட அவன்பிணத்திற்கு மரியாதைசெய்து, தகுந்த சிறப்புடன் அதைப்புதைத்தார்கள். "இவனுடன் கூடியரோமர் கூட்டத்துள் இவன் தான்மிகுந்தபெருந்தன்மை யுடையோன். இவனைத்தவிர மற்றைய ராஜத்ரோகிகள் எல்லோரும் ஸீஸரிடம் இருந்த பொறாமையால் தம்காரியத்தை முடித்தனர். இவன் ஒருவன்தான் உண்மையான கருத்துடன் அவர்களோடு கலந்து பொதுநன்மையை எண்ணியிருந்தவன். இவன் வாழ்க்கை அமைதியாய் இருந்தது: இவன் நிதானச்சிறப்போ, எங்குமுள சகதி வெளிப்பட்டு உலகை நோக்கி 'இவனே மானிடனெனத்தகும்' என்று கூறும் தன்மையாகவிருந்தது" என்றான் ஆண்டனி என்ற போர்த்தலைவன்.

யேன்? யோசனை யேன்? எத்தனை முறை எழுதிடும் மைக்கோல் மைவற்றி வேலை யொழிவது? ஆகா! அந்தப் பாட்டி இப்பொழுதிருந்து கதைகளைச் சொல்லிவைத்தால் கைகூசாமல் எழுதுவேனல்லவா? வாயுங் கூசாது "இன்னுஞ் சொல்லு. இன்னுஞ் சொல்லு" என்றவளைக் கட்டாயப்படுத்துவேன். இப்பொழுதென் பாட்டிக் கதை அவ்வளவு சுகந்தராது. ஆனாலும் ஞாபகம் எட்டியவரையும், பாட்டியுபதேசித்த கதைகளை யிப்பொழுது எழுதுவேன் என்று முன்காலத்திலிருந்த முக்காடிட்ட கிழவிபோல் எழுத ஆரம்பித்துவிட்டேன்; என்னை மன்னிக்கவேண்டும்"— இவ்வாறு கிராமியக் கதைகளை நவீனமாகச் சேர்க்க யத்தனித்த போாசிரியன் தன் மனதுக்குள் பேசிக்கொண்டிருந்தான். அவன் முகஞ் சிறிது மந்தஹாசமாக விளங்கியது எனக்குக் கொஞ்ச மாச்சரியமாகத்தானிருந்தது. கொஞ்சஞ் சிரிப்புக்கூட எனக்கு உதித்தது.

ஏன் சிரிக்கவேண்டுமென்று கேட்டாலோ?— எப்படி சிரிக்காதிருக்கமுடியும்? உதட்டைக்கிழித்துக் கொண்டவன் பற்கள் வெளியில்வந்து வளைந்து மூக்கை யண்ணாந்து பார்க்கும்; அதைக்கண்டு அஞ்சியித்த மூக்கு தான் இடைவளைந்து தன் வாயைத் திறந்து கூப்பிடும். அப்போது மூக்கில் ஏதேனும் உயிர்விடாமல் வாய்வழியாக வெளியேறிவிடும். சொல்வது பிசகல்ல. என் எதிரிலேயே அவன் மூக்குக்குள் நுழைத்த பொடி கம்பிபோல வாய்வழியாக வழிந்துவந்தது; அப்போது ஒரு ஈ கூட மூக்கிலிருந்து வாயுள் கிருஹப்பிரவேசமாகி நாக்கூரில் பாய்ந்து தடபுடலாக எச்சிலாரைக் கண்டு நடுநடுங்கி தலைதப்பினது தம்பிரான் புண்ணியமென்று வெளிவந்தெனக்குத் தரிசனங்கொடுத்தது. இத்தகைய மங்களபுருஷனைப் பார்த்ததும் எனக்குச் சிரிப்புவந்துவிட்டது. உங்களுக் கொருவேளை அழுகை வந்தால் அழும். அப்பொழுது உம்மைக்கண்டால்கூட எனக்குச் சிரிப்புதான்வரும் என்று இப்பொழுது வேண்டுமானாலுங் கைமேல் கைபோட்டுத் தருகிறேன்.

இது என்ன எனக்குந் தெரியாமல் மதிமயக்கம் எனக்கு வந்துவிட்டது? நேசஸ்வபாவத்தை வெளியிடலாகாதே—நான் பாபியாய்விட்டேனே? எனக்கேன் அந்தப்பழி. சிரிப்பதற்குக் காரணமொன்று சொன்னேன். மற்றொருகாரணம் எனக் கவரைப் பார்க்கும் போதெல்லாம் அவர் சொல்லிய கதைகள் ஞாபகத்திற்கு வந்துவிடும்; அதனால் எனக்குந் தெரியாமல் சிரிப்புவந்துவிடும். வந்தால் வரவொட்டாமல் தடுக்க ஒரு ஊசி நூலுக்குக்கூடப் பஞ்சமாய்விடும். அப்படித் தைத்துவிட்டு இருந்தால் தைத்த வாயுடன் கதை எப்படிச் சொல்லமுடியும்? ஏதோ நல்ல அதிருஷ்டத்தினால்தான் எனக்குப் பஞ்சம்வந்தது! பஞ்சம் வந்தால் ஜனங்களுக்குக் கஷ்ட மென்பார்கள்; எனக்கது ஏனோ பொருந்தாமல்போயிற்று. அதுவும் என் அதிருஷ்டந்தான். நிற்க, இவ்வளவு கதையைவளர்த்த தெதற்கென்று எனக்கே தெரியவில்லை,



என் புத்திசாலித்தனம் எவ்வளவு என்று இப்பொழுதாவது நிச்சயமாய்விடும். ஏதோ பாழும் பயித்தியமென்னை யொருவேளைப் பிடித்துவிட்டதோ என்னவோ? அது முதிர்ந்துவிட்டால் எல்லார்மேலுங் கல்லெறியவல்லவா புத்தி வந்துவிடும். என் வயிறெரிய சிரித்தது போய்க் கல்லெறிய காலம் வந்துவிடுமுன்னம் ஐயோ அந்தப்பாட்டி சொன்னகதையைச் சொல்லிவிடுகிறேன். பின் என்னை எல்லாரும் "என்ன இவனுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டது. சுத்தப் பித்தன். என்ன நம்பிக்கையுடன் கதையளக்கிறான்" என்று கொண்டாடுங்கள். என் பிரவேசமாய்விட்டது; கதைப் பிரவேசம் இதோ ஆய்விடுகிறது. கொஞ்சம் கவனத்துடன் கேளுங்கள்.

அளகாபுரி என்னும் நகரம்; அதைக் குபேர நகரமென்றே சொல்லலாம். அந்த நகரம் ஐராவதி நதியோடும் வடநாட்டின் தலைநகரம். அவ்வூரில் அளகேசனென்னும் அரசன் மநுநீதி தவறாமல்ஆண்டுவந்தான். அவனுக்கெல்லா போகங்களிருந்தும் குழந்தை யில்லாக்குறை ஒன்று மனதில் குடிகொண்டிருந்தது. என்னசெய்வான்? கோயில் கட்டிவைப்பது; பிராஹ்மணபோஜனஞ் செய்விப்பது; குளம்வெட்டி வைப்பது; சத்திரங் கட்டிவருவது; ஊர்க் குழந்தைகளை யெல்லாங் கூட்டிக் கொண்டாட்டம் கொண்டாடுவது;—இவை முதலாகிய காரியங்கள் எல்லாம் பிள்ளையில்லா பாக்கியத்தால் மேலோங்கி வளர்ந்தன. கடைசியாகக் கடவுளு மரசனைக் கண்திறந்து பார்த்தார். கோடி ஸூர்யனுதித்தாப்போல ஓர் ஆண் மகன் அவனுக்குதித்தான். மன்மத விக்ரஹமாக விளங்கிய அதன் ரூபலாவண்யத்தைக் கண்ட யாவரும் அழகுக்குக் காவல் தெய்வமென்றக் குழந்தையை கொண்டாடுவார்கள்.

அக்குழந்தைக் காசன் ஆசைக்குமாரன், செல்வக் குழந்தை என்னும்எண்ணத்தால் காமபாலன் என்று நாமகரணஞ் செய்தான். காமபாலனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்க்கப்பட்டு பால பருவந்தாண்டி, உடல் திரண்டு காளைப் பருவமடைந்து புருஷர்கள் கண்டாலும் தன்னைக் கண்டு மயங்கும்படியான ரூபலாவண்யத்துடனிருந்தான். தகப்பனது பெருமைக் கேற்ற வண்ணம் குதிரையேற்றம், ஆனையேற்றம் வில்வித்தை, சவாண்டெறிதல், கத்திசுழற்றல் முதலிய வீர பாடங்களில் தேர்ச்சியடைந்ததுபோலவே ராஜதந்திரம் வைதிக விஷயம் எல்லாவற்றிலுஞ் சிறந்து விளங்கினான். இளம் வயது, தேர்ந்தவித்தை, சத்குணம் மூன்றும் திருபுடீகரித்திருந்தவனுக்கு வயது பதினாறடைந்ததும் தகப்பனார் தன் கண்ணாரக்காண பாணிக்கிரஹணஞ் செய்விக்கவேண்டுமென்று நிச்சயஞ்செய்தார். அரசனது கட்டளையைத் தலைமேற்கொண்டு காமபாலனது ஓவியப்படத்தைக் கையிற்கொண்டு தூதர் நாடுநேராக அலைந்து ஒரு நதியின்கரையை அடைந்தார்கள். எதிர்க்கரையிலிருந்த மதுரை நகரத் தாசன் தூதர்கள் இவர்களது கூடாரங்களைக் கண்டதும் ஒரு

வேவுகாரனையழைப்பித்து ஸமாசாரமென்னவென்று கேட்டறிந்துஇக்கரையை அடைந்து தாம் கொண்டுவந்திருந்த மதுரேசன் மகளுடைய ஓவியப்படத்தைக் காட்டி காமபாலனது படத்தையும் கண்களாரக் கண்டார்கள். பின் இருபுறத்தாரும் தாம் அலைந்தவேலை பலிதமாயிற்றென்று மகிழ்ந்து படங்களைத் தத்தமது அரசரிடம் கொண்டுபோக நிச்சயித்தார்கள். அரசர்களும் படங்களைக்கண்டு பெருஞ் சந்தோஷத்துடன் மணத்திற்குச் சம்மதப்பட்டு மதுரை நகரில் வெகு விமரிசையாகத் திருக்கல்யாணத்தை நடத்தினார்கள்.

கல்யாணமானதும் எல்லாரும் அளகாபுரியை யடைந்தார்கள். காமபாலனும் தன் மனைவி யுடன்வர மங்களகோஷத்துடன் தனதரண்மனையை யடைந்தான். சிறுவர்களுக்குத் தமது மனைவியைக் காண வேண்டுமென்றால் கூச்சமென்பது உலகறிந்த விஷயம்; பாராததுபோல், யாரையோ பார்ப்பதுபோலத் திருட்டுத்தனமாகதான் அவர் தமது கண்களைவீசிப் பார்ப்பார் ஆனால் இதுவரையும் காமபாலனுக்குத்தனது மனைவியைப் பார்க்கத்தக்க சமயம் வாய்க்கவில்லை. அவள் முகத்தை ஏற இறங்கப்பார்த்துப் பரமானந்தமடைய வேண்டுமென்பதவன் பெருங்கோரிக்கை. தன் ஊரை அடைந்ததும் சில நாழிகைகூட தாமதியாமல் உண்டு உடுத்துத் தன் மனைவியைப் பார்க்க வெகு இனிய கோலத்துடன் புறப்பட்டான்.

போகும் வழியில் ஒரு பெரிய ஸ்திரீ அவனை குறுக்கிட்டாள். "எங்கு இவ்வளவு அவசரமாகப் போகிறாய்?" என்று மறுத்துக்கேட்டாள். இராஜ குமாரனும் உண்மையைச் சொன்னான். இதைக் கேட்டவள் "நான் இன்றைக்குத்தான் இவ்வூரை யடைந்தேன்; நெடுநாளாக இங்கில்லை. உமக்குத் திருக்கல்யாண மானதென்று எனக்கு வெகு ஸந்தோஷம். தயவுசெய்தென் வீட்டிற்கு வந்து போகவேண்டும். என் மகள், உம்முடன் படித்ததோஷம், உம்மைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிறாள்" என்று பேசிக்கொண்டே அவனைத் தன் மனைக்கு அழைத்துப் போனாள்.

அவள் காமபாலனது தந்தையின் வைப்பாட்டி. வெகு அழகியவள். வயது ஐம்பத்தாறாயும் மேனிமினுக்கந் தளுக்குங் குலுக்கு மொழிந்தவளல்ல. அவள் தன்மகளைத் தன் மகளுக்காளாக்கிச் சுகப்படவேண்டுமென்றிருந்தவள். காமபாலன் மனைவியிடஞ் செல்வதென்றால் அவளுக் கொப்புமா? அதற் கிடையூறு எவ்வளவு செய்யலாமோ அவ்வளவுஞ் செய்யச் சித்தமா யிருந்தாள்.

காமபாலன் தன் மனையுள் பிரவேசித்ததும் அவனுக்கு விமரிசையாக மரியாதைகள்செய்து, அபிநய கீதங்கள்பாடி, இலை மறைவு காய் மறைவென்பதுமில்லாமல் அவன் முன் தன்மகளைக் கருத்துவெளிப்படும்படிக் கூத்தாடும்படிச் செய்தாள். மன்னன் மகன் மனமயங்கியிருக்கும்போது அந்த வைப்பாட்டிக்கிழ "உனக்கு கல்யாணமாயிற்றே; பெண் என்ன சிவப்பா, கறுப்பா? கண்ணிற்கு லக்ஷணமாக

இருப்பாளா?" என்றிப்படிக்கேட்டாள். அரசன்மகன் வைப்பாட்டிமகள் மடித்துக்கொடுத்த வெற்றிலைச்சுருளைவாயில் பெற்றுக்கொண்டு "நான் என்ன என்று சொல்வது! எங்களப்பா வெகு சிரமப்பட்டு உலகத்துக்குள் வெகு அழகிய பெண்ணைப் பார்த்தெனக்குக் கல்யாணஞ் செய்வித்திருக்கிறார். அவள் அழகை இன்னதென்று வர்ணிக்க முடியாது. அவளிடந்தான் போகப் புறப்பட்டேன். இதற்குள் இங்கு வந்துவிட்டேன். இதோ அவள் படங்கூட இருக்கிறது. நீங்கள் வேண்டுமென்றால் பார்க்கலாம்" என்று சொல்லிக்கொண்டப்படத்தை எடுத்தான். அதை அவ்வைப்பாட்டி பார்த்துப் பரமானந்த மடைந்தவள்போல் நடித்து, பத்தாயிரந்தடவை தடவி முத்தமிட்டுக்கொண்டு "என்ன அழகு! என்ன அழகு!" என்றிரைச்சலிட்டாள். மேலும் தன் பெண்ணைக் கூவி விளக்கை எடுத்துவரச் சொல்லி அப்படத்தை மேலும் ஊன்றிப் பார்ப்பவள் போல அரசன் மகனைப் பார்த்து "எல்லாம் ஸரிதான். ஸர்வேந்திரியாணாம் நயனம் ப்ரதானம். கண்ணில்தான் பூபடர்ந்திருக்கிறது. பார்த்துப்பார்த்து இந்தப் பெண்ணை உனக்குக் கட்டி குருட்டுப்பெண் கணவனாக்கினனே. என்ன மதிமோசம் என் அரசனுக்கு! நீ வேண்டுமென்றாலும் பாரேன். கண்ணில் பூவிருப்பது தெரியவில்லையா? பலகாலத்துப் பயிராச்சே; பாராது செய்யலாமோ? இப்படியுந் தீர யோசியாது செய்யலாமோ?" என்று அவள் ஆட்டுக்குட்டிக் கையோவென்று சோனையழுதாற்போல அரசன் மகனுடைய நிலைக்கனுதாபங்கொள்வதுபோல கபடநீரை கண்ணிலிருந்து அளவு சங்கை கடந்து வழியவிட்டாள். இதைக்கண்ட மன்னன்மகன் படத்தைப் பார்த்துத் தானுமனமயர்ந்தான். உண்மையில் அப்படம் கண்ணில் பூபடர்ந்திருக்கக் காட்டியது. ஆனால் பாண்டியன் மகளது படத்தை எழுதினவன் தோஷமல்ல அது. அளகை மன்னன் வைப்பாட்டி தாம்பூலமணிந்துகொண்டிருக்கும்போது கையிலிருந்து தெளித்த அல்பச் சுண்ணம்பே இவ்வளவனர்த்தத்திற்குங் காரணம். ஆனால் இதை காமபாலன் அறியான். உண்மையில், தான் குருடியை மணந்ததாக எண்ணி மனம் புண்ணானான்.

இவ்வாறவன் கஷ்டப்படும் ஸமயத்தில் அவனுக்குச் சைத்யோபசாரஞ் செய்யும்படித் தன்பெண்ணைத் திட்டஞ் செய்தாள். அவளுமவளுக் கியற்கையிலிருந்த தந்திரங்கள் முற்றுங் கொண்டு அவனுள்ளங்களிக்கும்படிச்செய்தவனை முதலில் சிற்றுணவுகள் செய்யும்படிச் செய்துப் பின்மேலு மயக்கவாரம்பித்தாள். மறுபடியும் ஆடல்பாடல் எல்லாம் முன்னினும் அதிகமாக நடந்தன. பெரியகிழவியும் காமபாலனை நோக்கி "வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கழுவா ரெங்கேனு முண்டா? உனக்குக் கவலைவேண்டாம். அக்குருடி என்மகளாயிருந்தால் கண்ணால்கூடப் பார்க்கமாட்டேன். அவளைக் காட்டிலு மென் மகளெவ்வளவோ அழகு. உன்னுடன் படித்துச் சிறு நாள் முதல் விளையாடினவள். உனக்கென்றே வளர்ந்து வருகிறாள். உனக்கேன் கவலை" என்று மேலுஞ் சொன்னாள்.

சில நாள் மன்னன் மகன் தாசிமொழியை நம்பாது மனைவியைப் பார்க்கவேண்டு மென்று கிளம்புவான். வைப்பாட்டி வைத்தகாவல் கொத்தவால் சேவகராலு முடியாது. மெதுவாக அவன் மனத்தை பாண்டியன் மகளிடமிருந்து முறித்துவிட்டாள். அவளைப் பார்க்கும்படி அவனை வைக்கவில்லை. முடிவில் காமபாலன் வைப்பாட்டி மகள் வலையில் சிக்கி தன் மனைவியைக் கண்ணெடுத்தும் பாராது இருந்தான். பாண்டியன் மகளுஞ் சிறைகாத்து வந்தாள். காலஞ்செல்லத் தனக்குக்காலம் வருமென்றவள் காத்திருந்தாள்.

வைப்பாட்டி மகள் வீட்டிலேயே காமபாலன் குடியாய் விளங்கினான். நாள்கள்வளரவளரக் காமகள்ளிற் காளாகி மனதை முற்றும் அந்த வைப்பாட்டி மகளுக்கே விற்றுவிட்டான். அவனுக்குத் தன் தந்தை இறந்ததுகூடத் தெரியவில்லை. வீட்டில் வருவதென்றால் அவனுக்கு விஷமாய்விட்டது. இராஜ்யபாரமும் பெருந் தொல்லையாகப் பட்டது. தன் மனைவியைப்பற்றிய எண்ணமே தொலைந்தது. தனக்கொரு மனைவி இருப்பதாகவே அவனுக்கெண்ண மென்பதே கிடையாது. கடைசியாக வைப்பாட்டி மகள் வலையில் சிக்கிக்கொண்டு தனது ராஜ்யபாரத்தை மந்திரியிடம் ஒப்புவித்து விட்டான். தான் காமகேளிக்கையில் ஈடுபட்டுக் கண் தெரியாமல் ஆழ்ந்து கிடந்தான். வைப்பாட்டி மகள்பித்து தலைக்கேறி மூளையையே யொழித்து விட்டது.

நிற்க, கைப்பட்டால்தானே கண்ணாடி? நோக்கப் பாராத ராஜதானி எங்கு நிலைக்கும்? அரசனது பார்வையில்லாமல் குடிகள் நிலைமை வரவரக் குன்றத் தலைப்பட்டது. அதிகாரத்திலிருப்பவர் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டுமென்று கொள்ளை அடிப்பதே வேலையாக இருந்தார். பின் ராஜ்ய நிர்வாகம் மந்திரிமகனால் முடியாமற் போய்விட்டது. கட்டவேண்டியபணத்தைக் கட்டமுடியாமல் தத்தளித்த ஜனங்களது துரத்ருஷ்டத்திற்கு மாற்றரசர்கள் வெகு தீவிரமாகப் படை எடுத்து நாட்டை அபகரித்தார்கள். அன்றிரவே வைப்பாட்டியும் அவள்மகளும் இருந்த விடந்தெரியாமல் மாயமாய்ப் பறந்தோடி விட்டார்கள். காலை எழுந்த அரசன் மகன் கண்ணீர் விட்டுக் கலங்கித் தனது காமநாயகியைக் காணாது அலைய வாரம்பித்து, பித்தம் பிடித்தவன்போல தன் வீட்டை நோக்கித் தனக்குந் தெரியாமல் உள்நுழைய வாசற்படி முட்டமூர்ச்சையாகக் கீழ்விழுந்தான்.

தன் கணவன் வரவை ஆவலாகக் காத்திருந்த பாண்டியன் மகள், வெகு கவலையுடன் தன் நாதனுக்கு ஆசாரோபசாரஞ் சாங்கோபாங்கமாகச் செய்தும் அவன் மூர்ச்சை தெளியவில்லை என்ன செய்வாள்? தன் நாதனை எங்கு மாற்றரசர்கள் பிடித்தேகுவாரோ என்று பயந்து அவனுக்கு மாறுவேஷமிட்டுப்



போற்றிவந்தாள். சிலநாள் கடந்தன. இராஜ்யம் பிறர்வசமாயும், மந்திரி மகன் தனதுகௌரவத்தன்மையால் தன்னரசனையே கப்பங்கட்டு மரசனாக வைக்கும்படி ஏற்பாடுசெய்தான். இதற்குள் அரசனுக்கு புத்தி ஸ்வாதீனமாகி விட்டது; உடம்பும் நன்றாய்த்தேர்ந்துவிட்டது. ஆனால் அவன் மனத்தை விட்டந்த வைப்பாட்டிமகள் நினைப்பு ஒழியவேயில்லை. எவ்வளவு வற்புறுத்தியும் அவன் தன் மனைவியுடன் பேசவுமில்லை; அவளைக் கண்ணெடுத்துப் பார்க்கவுமில்லை; ஆனால் தான் வைப்பாட்டிமகளைத் தேட நினைத்தமையால் நாள்தோறும் மனைவி தானே சமைத்து வட்டித்த அன்னத்தை உண்டு பின் தேட உலாவ ஆரம்பிப்பான். இராஜ்யபாரம் மந்திரியுடையது; போற்றவேண்டியது மனைவியின் பொறுப்பாய்விட்டது; தன் காமமானைக் கண்டு வேட்டையாட உலாவுவதே அரசன் தொழிலாய்விட்டது.

இதற்கெல்லாம் பாண்டியன் மகள் சிறிதும் வருந்தவில்லை தான் சமைத்துப் படைத்த உணவைத் தனது கணவன் உணணக்கூடிய பாக்யங்கிடைத்ததென்று வெகுஸந்தோஷத்துடன் அவனுக்கினிக்கச் சமையலிட்டளிப்பதே தன் விரதமென்றுகொண்டாடி வந்தாள். 'பொறுத்தார் பூமியாள்வார்' என்று திட நம்பிக்கையுடன் நடந்தாள். தன் நாதனை எதிர்த்து ஒரு மொழியும் பேசியறியாள். தன் நிலைமையை எண்ணி அவனுக்குக் கெடுதியுண்டாக்கக் கூடாதென்று ஒரு பொட்டுநீருங் கண்ணிலிருந்து உகுக்காள் தன்னிலையுங்கண்டு களித்த கடவுள் கண் திறப்பார்; கருணைபொழிவார் என்றிருந்தாள்.

இவ்வாறு இருக்கு நாளில் ஒரு நாள் தன் நாதன் உண்டு கொண்டிருந்தான். அவனுக்கெல்லா வித உபசாரமுஞ்செய்துவிட்டுக் கை கழுவ செம்பில் நீருடன் வழியைக் குறுக்கிட்டுக்கொண்டு அவன் வெளிபோக முடியாதபடி அங்கு உட்கார்ந்து விட்டாள். அரசகுமாரன் வெகு நேரம் நின்றான். ஆயினும் அவன் மனைவி வழி விடவில்லை; ஒரே மூர்க்கமாக அவன் வாய்த்திறக்காமல் நின்றிருந்தான். எத்தனை நாழிகை நிற்பது? அப்பொழுதும் அவன் பேசவில்லை, முகத்தில் மாத்திரம் எள்ளுங்கொள்ளும் வெடித்துக்கொண்டே இருந்தான். பின் பாண்டியன் மகள் சற்றுத் தயங்கித் தனது கணவனை நோக்கி "என் ஐயனே! ஒரு பாவமுமறியாத என்மேல் கோபிக்கலாகாது; ஒரு தவறும் உமக்கு நான் செய்ததாக எனக்குத் தெரியவில்லை. உமக்கு என் மீது ஏன் கோபமென்றறிய வேண்டுமென்பது பெருங்கவலை; தாங்கள் என்னோடு பேசுவதே கிடையாது. உங்கள் பாதாரவிந்தமே கதியென்றிருக்கிறேன். உங்களுக் கன்னியதா நான் ஒரு நாளுஞ் செய்யேன் செய்ததுங் கிடையாது. என்னைக் காப்பாற்றவேண்டும். நான் ஏதோ தெரியாமல் செய்திருந்தால் எனக்குத் தகுந்த சிக்ஷை செய்தென்னைக் காக்கவேண்டும். என்னை அடக்கியாள வேண்டியது தங்கள் பொறுப்புதானே. என்னை அடிக்கவும் அணைக்கவும் உங்கள் திருக்கரங்களுக்கல்லவா பெருமை. என் நடத்தை உமக்குத் தெரியாததா? உங்களுக்கெப்போதும் சிச்ருஷை செய்யக்கூடியப் பாக்கியத்தை எனக்குக் கொடுக்கக் கூடாதா? உங்களையல்லால் எனக்கு ஸுகமேது? பொருள் ஏது? கடவுள் ஏது? எல்லாம் நீங்களே அல்லவா எனக்கு? என்னோடு தயவு செய்து கோபத்தை விட்டுப் பேசவேண்டுமென்று மிகு வணக்கமாகப் பிரார்த்திக்கிறேன். தங்களோடு பேசவேண்டு மென்னு மாவலோடு தானே இவ்வாறு வழியை மறித்தேன். என்மேல் என்ன வருத்தமோ? சொல்லலாகாதா? தயவு செய்துசொன்னால் காலாவிட்டவேலையைத் தலையாலே செய்கிறேன். எள்ளு என்ற இடத்தில் எண்ணெயாய் விளங்குகிறேன்" என்று தன் உள் அன்போடுகூறி அவன் பாதங்களை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு கெஞ்சினாள்.

ஆனால் அரசன் மகன் மறுபுறந் திரும்பிக்கொண்டவளைப் பாராமல், தன் காலை விடுவித்துக்கொள்ள உதறினான். அவனுக்கே சற்று திகைப்புண்டாகியது. ஆனாலும் வைப்பாட்டி மகள் ஞாபகமே மனதில் வேலைசெய்துகொண்டிருந்தசால் பாண்டியன் மகளைப் பாராமலே "கல்மேல் நெல்முளைத்து கல்கோழி கூப்பிடுங் காலத்தில் உன்னோடு பேசுவேன். உன்னுடன் பேச்சா?" என்று சொல்லிவிட்டு சரேலென்று வெளியே போனான்.

இவ்வாறு நடந்த சிலநாளைக்குள் பாண்டியன்மகள் பலவாறு நினைத்து கணவனது பிரதிக்ஞையை நிறைவேற்றுவதெப்படி; எவ்வாறு அவரைத் தன்னோடு பேசச் செய்யலாமென்று சிந்தனை கொண்டு, ஆண்வேஷங்கொண்டு தனக்கு வேண்டிய திரவியத்தைக் கொண்டு குதிரைமேலேறி பக்கந்தெரியாமல் சவாரி செய்யலானாள். போகும்போது கருடதரிசனங் கிடைத்தது. "உன் இஷ்டமினி பலிக்கும்" என யாரோ ஒரு பதசாரி இவள் எண்ணத்திற்குப் பொருந்தும்படிப் பதில் சொன்னான். பாண்டியராஜன் மகளுக்கும் தனக்குத் தெரியாமல் ஒரு உத்ஸாகமுண்டாகிவிட்டது. அவளும் திக்கற்றோர்க்குத் தெய்வமே கதி என்று குதிரையை நடத்திக் கொண்டிருந்தாள். அது வாயுவேகமாகப் பறந்துகொண்டிருந்தது. கடைசியாக நடுப்பகல்வேளை ஆய்விட்டது. வெயில் தாங்கமுடியாமையோடு, காமபாலன்மனைவிக்கு பசியும் பொறுக்க முடியவில்லை. தான் நெருங்கி வந்திருந்த அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் தனக்குந் தெரியாமல் பசியும் நெடுநாழி பிரயாணஞ் செய்த வருத்தமும் தொந்தரை செய்ய, களை மேலிட்டு அயர்ந்துகீழேபடுத்து பிரக்ஞையற்று மயங்கிக் கிடந்தாள்.

நிற்க. காமபாலன் மனைவி புறப்பட்ட இரவே, அளகாபுரியை, பல நாள். வருத்தியும் கப்பங்கட்டவில்லை என்று மகத நாட்டரசன் பெரும் படையனுப்பித் தீர்க்கச் சொன்னான். காமபாலனை எத்துணை முறை அவன் மந்திரி தூண்டுவான், தாவிலோலனாகவே அவன் எப்பொழுதும் விளங்குவது

மந்திரிக்குப் பெருந்தொல்லையாய் விட்டது; எத்துணைபேர்க்கவன் பதில் சொல்லமுடியும்? இம்முறையவனுல்ஸமதானஞ் செய்ய முடியவில்லை. ஆனல் தன்னரசனுக்குத் துரோஹஞ் செயயக் கூடாதென்று சண்டையில் முன்னிட்டுப் போர்செய்து உயிர் விடுவதே நலமென்று எண்ணினன். முடிவில் பெரும்போர் நடந்து அளகேசனைப் பிடிக்கவேண்டும் என்றந்த மகதநாட்டு வீரர்கள் தேடிவந்தார்கள். அவன் ராஜஉருவம் மாறி, மீண்டு மூளைத்தத் தன் வைப்பாட்டி மகளோடு குலாவிக்கொண்டிருப்பதவர்களுக் கெப்படித் தெரியும்? ஆனல் அவ்வைப்பாட்டி மகளும், அரசனைத் தேடுகிறர்ள் என்று தெரிந்ததும் "ஐயா! உங்களோடிருப்பது எனக்கு பெருமாபத்துக் கிடமாய்விடும். நீர் எங்காவது யார்க்குந் தெரியாமல் போய்விடும்" என்று நயமாகச் சொன்னள். அரசன் கவனியாததைக் கண்டவள் "உங்கள் காது கேட்கவில்லையா? தாங்கள் எவ்வளவு சீக்கிரத்தில் இவ்வீட்டைவிட்டு வெளி ஏறுகிறீர்களோ அவ்வளவும் நல்லது. அப்புறம் என்மேல் கோபிப்பது அழகல்ல. பின் இருப்பது, தாடி எரியும் போது சுருட்டிற்கு நெருப்புக் கேட்பதுபோல் தான் ஆகும்" என்று கடுகடுத்தாள். அதற்குமவன் அசையாமையைக் கண்டவள் அவனைக் கைபிடித்து வாசலில் விட்டுக் கதவைத் தாழிட்டுவந்தாள். பின் அவன் எங்கு மீண்டுவந்து மூளைப்பானே என்று புறக்கடை வழியால் மூட்டை முடிச்சுகளுடன் பிரயாணத்திற்கென்று வெளியேறிவிட்டாள். வாசலில் இருந்த காமபாலன் நெடுநாழி காத்தான். தன் காமக்கிழத்தியைக் கூப்பிட்டான். ஒன்றிற்கும்பதில் இல்லாமையால் வாசற்கதவைக் கோபத்துடன் ஒரு உதை உதைத்தான். அந்தக் கதவு முறிந்து கீழே விழுந்தது. உள்சென்று பார்க்க, வீடு சிதம்பரமாக வெட்ட வெளியாக விருக்கக்கண்டு, பித்து பிடித்துத் திக்கற்ற அநாதைபோல் வழி தெரியாமல் வெளி வந்தலைந்து கொண்டிருந்தான்.

இது இவ்வாறிருக்க மகத நாட்டு மன்னன் இறந்து விட, அந்நாட்டு ராஜ்ய பதவியை நிர்வஹிக்கக் கூடிய அரசன் ஒருவனுமில்லாமல் போய்விட்டது. மரணமடைந்த அரசனுக்கோ ஸந்ததிகிடையாது. அவனேடுசேர்ந்தவர்களோ கணக்கற்றவர். அவர்கள் "ராஜ்யம் எனக்கு, எனக்கு" என்று காச்சு மூச்சென்று கூச்சலிட்டுக்கொண்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனல் மந்திரி, நாட்டு ஜனங்களை எல்லாங் கூப்பிட்டு ஒரு பெருஞ் சபை கூட்டி ராஜ்யத்தின் கலவர நிலையைச்சொன்னன். என்னசெய்யவேண்டியதோ, சொன்னல் செய்யச் சித்தமாயிருக்கிறேன் என்றும் விஞ்ஞாபித்துக்கொண்டான். அவர்கள்முடிவாகச்சொல்லியபடி, பட்ட யானையின் மஸ்தகத்தில் நீர் நிறைந்த கலசமும், துதிக்கையில் மாலையுங் கொடுத்து அனுப்பி அது யாருக்கு அபிஷேகஞ் செய்து மாலையிட்டு முடி சூட்டுமோ அவரே மகத நாட்டரசன் ஆவாராக வென்று சொல்லி, சேனைத் தலைவனுடன் யானையை அனுப்பினன். அதுவும் காடுகாடாகத் தாண்டி ஆற்றைக் கடந்து பாண்டியன் மகள் படுத்திருந்த மரத்தின் கீழ் வந்து அவளுக்கு அபிஷேகஞ்செய்து, மாலை சூட்டி முதுகிலேற்றிக்கொண்டு பாடலீபுரத்தை நோக்கி வந்தது. சேனபதியும் அதன் பின்னே வந்தான். யானை, ஊரை அடைந்ததும் ஆண் வேஷங்கொண்டிருந்த பாண்டியன் மகளுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்தார்கள். அவளும் வலிய வந்த ஸ்ரீதேவியைத் தள்ளக் கூடாதென்று அரசாட்சியைக் கைக்கொண்டாளாயினும் தன் கணவன் அவன் சொன்ன மொழிகள் இவைகளைப்பற்றியே சிந்தனையாக இருந்தாள். மற்றும் அநேக ஆட்களை அனுப்பி அவனைத்தேடும்படிச்செய்தாள். நெடுநாளாயும் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பாண்டியன் மகளுக்குச் சிந்தனை மேலிட்டது. ஆனலும் தான் நடத்தவேண்டிய தர்மங்களில் ஒன்றையுந் தடுக்காது நடத்திவந்தாள்.

இவ்வாறு இருக்கு நாளில், தன் கணவனது துப்பு அவளுக்குத்தெரியவந்தது. அவன் தன் வைப்பாட்டி மகளால் பொருளுக்காசைப்பட்டு பகைவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டு அவர்களுக்குத் தெரியாமல் பாடலீபுரத்திற்கு ஓடிவந்து விட்டான். அவன் பாடலீபுரத்தரசன் வெகு நல்லவனென்று கேள்விப்பட்டங்கவனிடம் வேலைக்கமரலாமென்று வந்தது பாண்டியன் மகளுக்கெட்டியது. உடனே ஆலசியஞ்செய்யாமல் அவனைவரவழைத்து தனது குதிரையாளாக ஏற்படுத்திக்கொண்டாள். தான் போகுமிடமெங்கும் அவன் முன்னடக்கவேண்டுமென்றும் திட்டஞ்செய்து ஏராளமான சம்பளங்கொடுத்து வந்தாள்.

நிற்க, ஒரு பண்ணையாளைக்கூப்பிட்டு அவன் பயிர் செய்யுமிடத்தின்மேல் சிறு பொள்ளல்கள் பொளியப்பட்ட பல கற்பாறைகளைப் பதிக்கச் சொல்லி ஒவ்வொரு சந்துகளிலும் நெல் நாற்றுகளை நட்டு நீர் நிறையப்பாய்ச்சி செழிப்பாக நஞ்சை நிலத்தொரு பாகத்தை வைக்கும்படி உத்தரவிட்டாள். அவனும் கல்கொத்தர் பலரைப் பிடித்து கற்களைப் பொளிந்து, நஞ்சை நிலத்தில் பதித்து, நெல் நாற்றுகளை நடுவித்து செழிப்பாக வளரும்படிச் செய்தான். இது ஆனதும் கல்கொத்தனொருவனை அரசி கூப்பிட்டு கோழிக்குக் கல்லால் கவசமிட்டு கண்ணிற்கும் வாயிற்கும் மூக்கிற்கும் சந்து பார்க்கவும் மூச்சு விடவும் இடம் கொடுக்கும்படிச் செய்வித்து அக்கவசத்துள் கோழி ஒன்றை வளர்த்து வரும்படிச் செய்தாள். அவனும் அவ்வாறே செய்ய, அக்கற்கவசம் பூண்ட கோழியை முன் வளர்த்த நெற்கொல்லையிடம் வைக்கும்படித் திட்டம்செய்தாள்.

இவ்வாறெல்லாமானதும், பாண்டியன்மகள் தன் கணவனை குதிரையைப்பிடித்து வரச்சொல்லி அதன் மேல் ஏறிக்கொண்டு அவனை முன் நடக்கச் சொல்லித் தான் பின் ஸவாரி செய்துவந்தாள். போகும்வழியில் கொல்லையிருந்தது. அதில் காமபாலன் கல்மேல் நெல் முளைத்திருக்கக் கண்டான். அவன் அதைப் பார்த்தாசசரியப் பட்டுக்கொண்டிருக்கும் போது அங்கு "கக்காக்குரோய்! கக்காக்குரோய்!" என்று ஓசைகேட்டது. அது எங்கிருந்து வந்ததென்றவனுக்குத் தெரியவில்லை. கடைசியாக ஒரு கல்கோழி கூப்பிட்டதாக அவன் அறிந்தான். உடனே அவனுக்குத் தன் மனைவியினுடைய மொழிகள் ஞாபகத்திற்கு வந்தன. அவனுக்குந் தெரியாமல் அவன் கண்களில் நீர்த்துளிகள் ததும்பின

இதைக்கண்ட பாண்டியன்மகள், "நீ அழக்காரணமென்ன? வென்று கேட்டாள். அவன் தன் மனைவிக்குத் தான் சொன்னமொழியும் அவள் தன்னிடங் கொண்ட அன்பும் அவன் அன்று கண்ட காட்சியும் எல்லாவற்றையும் சொல்லி "அவள் எங்கு இருக்கின்றளோ? என்ன வாயிருக்கின்றளோ? என்னகதியை அடைந்தாளோ? நானும் அவளைக்கண்டு பேசுவேனே—" என்று சொல்லிக்கொண் டழவாரம்பித்துவிட்டான்.

"ஸரிதான். போனதைப்பற்றி அழுவதில் பிரயோசனம் என்ன? முன்யோசனையில்லாமல் இப்பொழுதழுவதில் பிரயோசனம் என்ன?" என்று சொல்லிக்கொண்டு குதிரையைத் திருப்பிக்கொண்டு அரண்மனையை யடைந்தாள்.

அன்றிரவு பாண்டியன்மகள் தன் கணவனைத் தனது அந்தப்புரத்துக்கு வரும்படிச் சொல்லி ஆட்களை அனுப்பினள். காமபாலனும் அரச ஆணைக்குப் பயந்து அந்தப்புரத்துள் போனன். அங்கு தனது மனைவியின் உருவம்போல ஒன்று எதிரிலிருந்தது. ஆனல் அவளுடன் பேச அவனுக்கு நா எழவில்லை. பாண்டியன் மகள் தனது கணவனது நிலையைக் கண்டு அவனைத் தழுவியணைந்து தான் செய்ததை எலலாஞ் சொல்லி இனிமேலாவது தன்னுடன் பேசும்படி வணக்கத்துடன் கேட்டாள். இதைக்கண்ட காமபாலன் தனது மனைவியின் குணத்தைக் கொண்டாடி பன்மடங் காசையுடன் அவளுடன் பேசினன். பிரிந்து கூடினவர்களாகையால் இருவரும் நெடுநேரம் தமது விருத்தாந்தங்களைப் பேசி அப்படியே கண்ணயர்ந்தனர்.

அடுத்தநாள் காலை அரசனுக விருந்த பாண்டியன் மகள், ராஜஸபையை அடைந்து தனது உண்மை நிலையை உரைத்து தனது கணவனை மகதனுட்டரசனுக ஒப்புக்கொள்ளும்படி ஸபையோர்களை வேண்டிக்கொண்டாள். பின் தன் உண்மை வடிவையுங் காட்டினள். அவளது குணத்தைக் கண்டதிசயித்த ஸபையோர் அவள் விருப்பத்திற்கிசைய அன்று காமபாலனை அரசனுகப் பட்டங் கட்டுவித்தனர். அவனும் தனது மனைவியும் நெடுநாள் ஸுகமாக வாழ்ந்து வந்தார்கள். உலகமுழுதும் சுகமடையும்படி ஆண்டு நல்ல பெயரை அவன் யடைந்திருந்தான். எல்லாம் சுபமாகவே எங்குமிருந்தது.



# தரணீபதி அல்லது தந்திரபாலன்

## DHARANIPATHI OR THE BOY DETECTIVE

### ஆறாம் அத்தியாயம்

"முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்"

திருவொற்றியூருக்குச் சென்னையிலிருந்து செல்லும் பாதை. வெயிலின் கொடுமையால் பிரயாணிகள் ஆங்காங்குள்ள தண்ணீர்ப்பந்தல்களிலும் சாவடிகளிலும் வழியினிருமருங்கும் வானுறவோங்கி வளம்பெற வளர்ந்த வடவாலனிழலிலும் இளைப்பாறுகின்றனர். அதிலும் நம்கதை நிகழுங்காலத்து திருவொற்றியூர்த் திருப்பதியில் ப்ரம்மோத்ஸவமாதலின், சென்னை பக்த ஜனங்களின் தான தர்மத்தைக் கேட்கவே வேண்டியதில்லை. தனம் என்னும் கனத்தைப் பெற்ற பெரியோர் சிலர் தம்பெயர் எக்காலத்தும் நிலைத்திருக்க வேண்டியே சிறியதோர் தருமஞ்செய்யுங் காலத்திலும் மிக்க கோலாஹலத்திலமர்ந்தவராய் சிலாசாஸனங்கள் அமைத்திருக்க, ஆண்டுதோறும்நடைபெற்று வரும் ப்ரம்மோத்ஸவத்தின்போது பலவித தானதர்மங்களையும் செய்துவரும் மஹான்களின் பெயரையறிவதும் துர்லபமாயிருப்பது அவர்களின் பெருமை பற்றி போலும்! உலகத்துள்ள பல நதிகளும் தீர்த்தங்களும் தனியேயிருக்குங்கால் நாநாவித நாமரூபங்களுடனிருந்து கடலையடையுங்கால் அந்நாமவேறுபாடுகளையிழந்து விடுவதும் இத்தன்மையதோ? ஆகவே இப்பக்த சிகாமணிகளது தர்மத்திற் குட்பட்டவனுய் சுமார் 18 அல்லது 19 வயதுடைய வாலிபனொருவன் இன்றையதினம் அச்சாலையில் செல்கின்றனன். அவனைக்கண்டால் சென்னைவாசி யல்லன் போலும், ஆயினும் கல்விச்சாலையில் படிக்கும் ஒரு மாணவன்போலும் காணப்படுகிருன். கம்பீரத் தோற்றத்துடனும் பார்ப்போர் மனதை வசீகரிக்கத் தக்க தேஜஸ் பொருந்தியவனுயு மிருக்கின்றன். யாரோ இவன்பின்னுல் இரண்டு பிரயாணிகள் மிக்க ஆடம்பரமாய் உடுத்துக்கொண்டு செல்கின்றனர். அவர்களை நோக்கி நம் வாலிபன்: "ஐயா, நீங்கள் எங்கு செல்கிறீர்கள்?" என்று கேட்டான்.

முதல்பிரயாணி: யாரப்பேன்நீ? நாங்க எங்கபோனு உனக்கென்ன?

இரண்டாம் பிரயாணி: சே! அப்படிகேக்காதே, அண்ணே! தம்பி! எங்களைப்பாத்தாலே தெரியல்லையா எங்கே போரோம்னு! எல்லாரும், இத்தனைபேரும் எங்கே போறுங்களோ அங்கத்தான்.

வாலிபன்: அப்படிச் சொன்னுல் எனக்குத் தெரியவில்லையே.

முதல்பிரயாணி: தெரியாபோனு போயேன், உம்பாடேபாத்துகினு! நாங்கோபோற எடத்துக்கு நாங்கோ போரோம். நீ போற எடத்துக்கு நீ போயேன். வழிலே போரவங்கள்லாம் இப்படித்தான் கேப்பே போல் ருக்குது.

இர. பிர. அண்ணே! நீ இப்படிப் பேசாது கொஞ்

சங் கூட நல்லாயில்லே அண்ணே! அந்தத்தம்பி, பாவம் கேட்டாக்க சரியானபதில் சொல்றதில்லெ. ரொம்ப விகடம் பண்றயே. தம்பி, உன்பேரு என்னமோ தெரிலெ, கிடக்கட்டும். நாங்க இன்னிக்கி மோழிடி சேவைக்கிப் போறோம்.

முதல் பிர: அடே வழிலே வர்ரவன் போரவனுக்கெல்லாம் இப்படி பேசிக் கிண்டிருந்தையோ நம்ம வேலெயெல்லாம் தொலெஞ்சுச்சு. அவோ எங்கியனு போயிட்டாள்ளு!

இர: பிர: அட்டே, அண்ணுத்தே! மறந்தேபோயிட்டேன்!—ஹூம், போயுள்ளான்றேன் அவங்க இன்னம் எல்லாரோடேயும் வந்திருக்காங்களோ யில்லெயோ! அப்பாடா, எவ்வளவு தூரண்டாப்பா பேசிக்கிண்டேபோ யிடறம். தம்பி, நம்ப ஊரு எந்தவூரு?

வாலிபன்—உம். இந்த ஊர்தான். மயிலாப்பூர்.

இர. பிர: (சற்று உற்றுநோக்கி) இல்லேயில்லே. இந்த ஊராயிருந்தா பாக்கச்செயே தெரியாதா நம்பள்கு?

வாலிபன்: ஐயா, நான் காலேஜில் படிக்கிறவன். இந்த ஊர் வந்து ஆறுமாஸந்தானுயிற்று. இந்த பட்டணத்தைச் சேர்ந்த ஊர்களைப்பற்றியாவது, ஏன், பட்டணததைப்பற்றியாவது எனக்குக் கொஞ்சம் கூடத் தெரியாது.

இர. பிர: அப்படிச் சொல்லு தம்பி! இப்படி இந்த பக்கம் எங்கே போறே?

வாலிபன். இப்படி உத்ஸவத்தைப் பார்க்கலாமென்றும் வழியில் உள்ள அதிசயக் காட்சிகண்டு களிக்கலாமென்றும் வந்தேன்.

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டு வருகையில், 'தீன ஸம்ரக்ஷணச்ரமம்' என்று தடித்த எழுத்துக்கள் செதுக்கப்பட்ட ஒரு பலகை தொங்கவிடப்பட்டிருந்த வாயிலையுடைய விசாலமான ஒருதோட்டத்தை நெருங்கினுர்கள். மேற்கண்டபெயரைப்பார்த்தவுடன் மிக்க வியப்படைந்தவனுய் நம்வாலிபன் கூடவரும் இருபிரயாணிகளையும் விளித்து "ஐயன்மீர், ஞாபகமிருக்கட்டும், நான் இந்தத் தோட்டத்தைப் பார்க்க வேண்டுமென்றிருக்கிறபடியால், உங்களுடன் வர சற்றுநேரமாகும். பிறகு உங்களைபார்க்கக்கூடுமென்று நம்புகிறேன்" என்று அவர்களிடம் விடைபெற்று தோட்டத்திற்குள் நுழைந்தான்.

ஆ! என்ன புதுமை! என்ன ஒழுங்கு! என்ன அழகு! என்ன அற்புதம்! இதைப்பார்க்கப் பதினுயிரங்கண்கள் வேண்டுமன்றோ! இது கல்பகவனமோ! அனேக விநோத கதைகளில் படித்தும் கேட்டுமிருக்கும் தேவதைகளின் இருப்பிடமே இவ்விடம்வந்து விளங்குகின்றதோ என்று சொல்லும்படி யிருக்கின்றதே! தோட்டவாயிலில் யாராவது காவல் இருக்கின்றனரோ? நமக்குக் கண்ணுக்கெட்டியவரையில் ஒருவரையும் காணுமே! என்ன இத்தோட்டத்திற்குக் கட்டுக்காவல்கள் கிடையாதா? ஓ! அதோ அந்த பக்கத்தில் ஓரேவித உடைதரித்துள்ள வாலிபர்கள் யார்? இவர்கள் மத்தியில் சாந்தஸ்வரூபியாய் விளங்கும் இப்பெரியவர் யார்? ஆ! இந்த பக்கத்துக் கோடியில் உல்லாஸமாய் உலாவிவரும் இம்மங்கையர் யார்? இவர்கள் மத்தியிலும் சாந்த ஸ்வரூபிணியாய் நிற்கும் மஹலக்ஷ்மி போன்ற மஹாராஜியார்? நாமும் நம் வாலிபனுடன் சென்று இவர்கள் யாரென அறிந்துகொள்வோம். ஆம்! ஆம்! அறிந்து கொண்டோம். இத்தோட்டத்தில் 'தீனஸம்ரக்ஷணச்ரமம்' இருக்கிறதலலவா? இவ்விளஞ்சிறுர்களும் சிறுமிகளும் யாதொரு ஆதரவும் வெளியில் அடையாததினுல் இவ்வாச்ரமத்தை யடைந்தனர்போலும்! இவர்களுக் காதரவாயிருந்து பாதுகாப்பவர்கள்தாம் அப்புண்ய புருஷரும் புனிதவதியும். இப்படி இவர்களை (தீனர்களையும் நாதனற்றுத்திரியும் குழந்தைகளையும்) பாதுகாப்பதே அப்பரம ஸாத்விகர்களுக்குத் தகுந்த தொழிலென மதித்து சென்னையிலஉள்ள சில விவேகிகளான தேசாபிமானிகள் ஒருங்குசேர்ந்து ஓர் ஆச்ரமத்தை ஏற்படுத்தி அப்பெரியோரது தலைமையின்கீழ் வைத்திருக்கின்றனர்.

நம் நண்பனும் வாலிபன் மேற்கூறிய விஷயங்களை அறிந்தவனுய் அச்சுதரென்னும் பெரிய அப்பெரியோரை நமஸ்கரித்து தான் ஒரு கல்விச்சாலை மாணவனென்றும் இத்தகைய ஆச்ரமங்களையும் இன்னம் இவைபோன்று ஏழை பரதேசிகளுக்கென்று ஏற்பட்டுள்ள விடுதிகளையும் பார்வையிடுவதில் மிக்க விருப்பமென்றும் கூறினுன். பெரியவர் அவனை அன்புடனழைத்து அவ்வாச்ரமத்திற்குரிய எலலாசங்கதிகளையும் எடுத்துக்கூறி அன்றிரவை அவருடன் கூடவேயே கழிக்கும்படி சொன்னுர்.

"ஸ்வாமி, இல்லை நான் மறுபடியும் என்விடுதிக்குச் செல்லவேண்டும். என் நண்பர்கள் என்னை 7½மணிக்கு எதிர்பார்ப்பார்கள். நான் போய்வருகிறேன். இன்னெருமுறை சாவகாசமாய் வந்து இருந்துவிட்டுப் போகிறேன்."

"பூபேந்திரா, இருக்கட்டும். நீ அதிகாலையில் எழுந்து செல்லலாம். எனக்கு உன்போன்றவர்கள் பேரில் மிக்க ப்ரியம். ஆச்ரம சட்டத்தின்படி அந்நியர் இங்கு இரவில் தங்கக்கூடாதுதான். ஆயினும் உன்னை அந்நியனுக நான் கருதவில்லை. எப்பொழுது உன் குணத்தைக் கண்டறிந்தேனே அப்பொழுதே உன் பிற்கால நிலைமையைத் தெரிந்துகொண்டேன். உன்னைப்போல் பிள்ளைகள்தானப்பா நம்தேசத்திற்கு வேண்டியது! அனேக சமாசாரங்கள் உன்னிடமிருந்து அறிய விரும்புகிறேன். ராத்திரிமட்டும் தங்கிவிட்டுப்போ',

என்றிவ்வாறு இவர் பேசவே பூபேந்திரனுக்கு அன்றிரவை அங்கேயே கழிக்கநேர்ந்தது. தனக்கு எல்லா விஷயங்களையும் நெருங்கியறிய சந்தர்ப்பம் நேரிட்டதைப்பற்றி மனதில் மகிழ்ச்சியேயொழிய வேறென்றில்லை. தான் இதுவரையில் காணுத புது முகங்களை அன்று காணலானுன். தன் உத்யோகமுறையில்காண நேரிடும் மனுஷ்யர்களின் குணவேறுபாடுகளை இங்கேயும் ஸ்பஷ்டமாய்க் கற்றறிய நேரம் நம் பூபேந்திரனுக்குப் போதுமானதா யிருந்தது. ஆயினும் தான்



எந்த நோக்கத்தை இங்கு மனதில் வைத்துக்கொண்டுவந்தானே அது இன்னம் நிறைவேறவில்லை. வெகு பொறுமையுடன் காத்திருந்தான் ஸமயானுகூலத்திற்கு. மணி ஏழரையாயிற்று. ஆச்ரமத்தைச் சேர்ந்த எல்லாரும் போஜனத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவ்வவர்கள் வருணுச்ரமபேதத்தின்படி வெவ்வேறு அறைகளில் எலலா சிறுவர்களும் சிறுமிகளும் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் போஜனம் செய்யும் வேளையில் பெரியவர் ஒவ்வோர் அறையாய் பூபேந்திரனை அழைத்துச்சென்றுர். பூபேந்திரன் மிக்க கூர்மையான பார்வையுடன் ஒவ்வொருவரையும் பார்த்துக் கொண்டு சென்றுன். தனக்கறிமுகமானவர்களாவது தான் எக்காலத்திலாயினும் பார்த்திருக்கக்கூடியவர்களாவது அவன் கண்ணிற்குப் புலப்படவில்லை. மௌனமே பரமஸாதகமெனக் கொண்டவனுய் இருந்தான் நம் பூபேந்திரன். இறுதியில்போஜன முடிந்தவுடன் எல்லாரும் தத்தம் படுக்கையறைக்குச் சென்று சிறிது நேரம் படிப்பில் கழித்தார்கள். பூபேந்திரனும் பெரியமனிதரும் (வார்டனும்) போஜன முடித்த பிறகு சற்று நேரம் பேசிக்கொண்டிருந்து மணி பத்தடிக்கவும் படுக்கைக்குச் சென்றுர்கள். தோட்டமும் நிச்சப்தமடைந்தது.

சுமார் இரவுமூன்றுமணியிருக்கும். "தீன ஸம்ரக்ஷணச்ம" ரத்திற்கு இதுவரையில் வராத ஒரு மனுஷ்யரூபம் வந்துகொண்டிருக்கிறது. எங்கும் இருட்டாய் இருக்கிறபடியால் அவ்வுருவத்தின் தோற்றங்களை எளிதில் கண்டறிந்து கொள்ள முடியவில்லை. தோட்டத்தில் உள்ள மரங்களினிடையே சந்தடி எழாவண்ணம் அடிமேலடி எடுத்து வைத்துவருகிறது. எல்லாரும் நித்ரைசெய்கிற கட்டடத்தின் வாயிலில்வந்துவிட்டது: அங்கிருக்கும் விளக்கொளியால் சற்று நிதானித்தால் இம்மனிதன் சற்றுப்பருத்துயர்ந்த திடசரீரத்தை ஒருகாலத்தில் உடையவனுயிருந்திருப்பினும் தற்காலம் உடம்பு தளர்ந்தவனுகவே காணப்படுகிறுன். தலை மொட்டை; பார்க்கப்பயங்கரமான தோற்றத்தை உள்ளவனுயிருக்கின்றுன். இவன் யாரென்பதை கதைப் போக்கினுல் இனிதறிந்து கொள்ளலாம். வந்தவன் கட்டடத்தில் மெதுவாய் நுழைந்து ஆச்ரமத்தைச் சேர்ந்தவர்கள் நித்ரைசெய்யும் ஒவ்வோர் அறையிலும் ஐவைந்து நிமிஷநேரம் தங்கிவெளிவருகிறுன். எல்லா அறைகளையும் பார்த்தாய் விட்டது. இன்னம் இரண்டறைகள்தாம் பாக்கி. இவனது முகத்தில் ஈயாடவில்லை. எல்லா நம்பிக்கைகளையும் இழந்தவனுய் இருக்கிறுன். கடைசி அறையில் சென்றுன். இதற்குமுன் தான் பார்த்திருக்கும் ஒருவனது முகத்தைப்பார்க்கிறுன். ஆயினும் எங்கென்றும் யாரென்றும் தெளிவாய் அறிந்து கொள்ளக்கூடவில்லை. ஆனுல் அறையில் படுத்திருப்பவனுக்கோ, தனக்குத் தூக்கம் வாராமையால் புரண்டுகொண்டிருந்தவன் யாரோ தன்னறையில் வரும் அரவம் கேட்டுத் தூங்குபவனைப்போல் அபிநயித்து இருந்தான். ஆகையால் தன்னைக் கூர்மையாகக் கவனிப்பவனைத் தானும் கவனிக்கலானுன். "ஆஹா! அப்படியா! வெளிக்கிளம்பி விட்டாயா? எதற்காக இவ்விடம் வந்தாய், யாரை இப்படிக் கூர்மையாகக் கவனிக்கிறுய்? நான் வந்த விஷயமாகவே நீயும் புறப்பட்டு வந்தனையோ?" என்று இத்தகைய கேள்விகளை மனதில் வைத்தவனுய் இருந்தவன் மறுபடியும் கண்ணயர்ந்து விட்டான். அப்படி அவனைக்கவனித்த ஆளும் வெளியே சென்று விட்டான். மறுபடியும் எங்கும் அமைதி பெற்றிருந்தது.

பொழுது விடிந்தது. பூபேந்திரன், அச்சுதரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு திருவொற்றியூரையே நோக்கி நடந்தான். அவ்வூரையடையும் பொழுது மணி ஏழரையாய் விட்டது. முதலில் பட்டினத்தடிகள் ஸமாதியை யடைந்து, அங்கிருக்கும் கிணற்றில் ஸ்நாநபானுதிகளை முடித்து பட்டினத்தடிகளைத் தரிசித்துப் பிறகு ஈச்வர ஸந்நிதானத்தை யடைந்தான். கோயிலின் வெளிப்பிராகாரத்தில் ஸந்தித்தான் இதற்கு முந்தியநாள் இவனுடன் வந்த இரு பிரயாணிகளையும். அவர்கள் சற்று மனக்கலக்கமடைந்தவர்களாகக் காணப்பட்டார்கள். இவர்கள் மீது சற்று ஸந்தேகங்கொண்டவனுயினும், நம் பூபேந்திரன் இவர்களை லக்ஷ்யம் செய்யாமல் தன் வேலையையே கவனித்தவனுய் வீடு திரும்பினுன். இப்படி "தீன ஸம்ரக்ஷணச்ரமம்" சென்று அங்குள்ளவர்களைக் கவனித்து வந்தவன், நீலாம்பாளைத் தேடிச் சென்ற தரணீபதியே!

***

சென்னைக்குத் திரும்பி தரணீபதி தன்னிருப்பிடம் செல்ல, "த்யாகராஜன் சிறையிலிருந்து வெளிப்பட்டுவிட்டான்" என்பதே எங்கும் பேச்சாயிருப்பதைக் கண்டான். தான் இரவில் கண்ட காட்சி எலலாம் தரணீபதியின் நினைவில் வந்தது. உடனே தனக்கு அறிமுகமாயிருக்கும் தனபாலரென்னும் போலீஸ் அதிகாரியை அடைந்து தன் விஷயங்களையும், நேரிட்ட அதிசய சம்பவங்களையும் எடுத்துரைத்தான். உடனே நாலாபக்கங்களிலும் போலீஸ் சேவகர்கள் தகுந்த ஏற்பாட்டுடன் விடுக்கப்பட்டனர். தரணீபதி தன் காரியம் முடிவுபெருதவனுய் சென்னையிலும் அதைச் சுற்றிலுமுள்ள ஊர்களிலும் நாடோறும் தேடித் திரியத் தலைப்பட்டனன்.

இப்படி யிருக்கையில், ஒருநாள் தாராபுரத்திலிருந்து திருப்பப்பட்ட கடிதம் ஒன்று இவனிடம் வந்து சேர்ந்தது. உடைத்துப்பார்த்தான். அதில் தேதிமாத்திரம் குறிப்பட்டிருந்ததே தவிர ஊர் முதலானவை ஒன்றையும் காணும். கடிதத்தின் விஷயம் வருமாறு:—

4-6-191-

அன்பார்ந்த நேசா

இதுவரையில் நான் உன்பேருக்கு கடிதம் எழுதாமலிருந்ததை மன்னிக்கவேண்டுகிறேன். என்னுடைய நடத்தை முதலானவற்றைப்பற்றியும் முழுமையும் தெரிவிக்க எண்ணங் கொண்டேன். கல்யாணியும் த்யாகராஜனும் செய்த தீங்குகள் இத்தகையவென்

ப்து அவர்கள் செய்யும்வரைக்கும் எனக்கே தெரியாது. ஏதோ ஆபத்து இருக்கிறதென்றுவற்கெனவே தெரிவித்தேனல்லவா? அவர்கள் உனக்கிழைத்த தீங்குகளுக்குப் பிரதி நான் செய்து விட்டது உனக்குத் தெரியும் என்று நம்புகிறேன். உனக்கு எத்தீங்கு நேரிடினும் அவைகளினின்று நீ ஒதுங்கிக்கொள்வாயென்று நன்ருய் எனக்குத்தெரியும்.

நான் தற்காலம் முன்னிருந்த இடத்திலிருந்தது போலில்லாமல், வெகு நல்லவர்கள் வீட்டில் அவர்கள் குழந்தையாக வெகு இனிமையாகவே காலத்தைக் கழித்துவருகிறேன். உன்னைப்பார்க்கவேண்டுமென்று எங்கெங்கோ விசாரித்தேன். உன் உத்தியோக நிமித்தம் எங்கோ வெளியில் போயிருப்பதாக அறிந்தேன். உன் சொந்த விலாசமும் இப்பொழுது மாறியிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். ஆனல் இக்கடிதம் சேரும் என்ற நம்பிக்கை மாத்திரம் எனக்கு உண்டு. என்னைப் பாராமுகமாகக் கருதாமலிருப்பாய் என்ற தைரியம் என்னிடத்திலிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் உன்னைப்பார்க்கக்கூடும் என்று எண்ணுகிறேன். அநேக நமஸ்காரம். நீலாம்பா

இக்கடிதத்தைக் கண்டு தாணீபதிக்கு ஆச்சர்யமும் மகிழ்ச்சியும் உள்ளத்தில் கிளர்ந்துகொண்டேயிருந்தன. நீலாம்பாள் எவ்விடத்தில் யார்வீட்டில் இருக்கிருள் என்பது விளங்கவில்லை. த்யாகராஜன் சிறையிலிருந்து கிளம்பி மறுபடியும் நீலாம்பாளைத் தன்வசமாக்கிவிட்டானே, அல்லது பழிக்குப்பழிவாங்கத்தீர்மானித்தானே என்றெண்ணினவனுக்கு இக்கடிதம் கிடைத்தபிறகு த்யாகராஜன் நீலாவை இதுவரையில் காணவில்லை என்ற தைர்யம்உண்டாயிற்று. நீலாவை எப்படியாவது கண்டுபிடித்துவிடுவோம் என்றநம்பிக்கையினல் மனக்கிளர்ச்சியும் அதனலேயே இனி நீலாவைப்பற்றிய தன்னேக்கம் அவளுக்காகவே தேடவேண்டுமே தவிர அவளைக் கண்டுபிடிப்பதற்கென்று ஏற்பட்டஇனைமைபற்றியல்லஎன்றும்தோன்றிற்று. மேற்கூறிய சம்பவங்கள் நடந்து சிலநாட்களாயின.

மாலை சுமார் ஆறரைமணியிருக்கும். ஜனங்கள் திரள்திரளாய்ப்போய்க் கொண்டிருக்கிருர்கள். கச்சேரி வேலை முடிந்ததும் வீட்டுக்குச் செல்கிறவர்களும், அப்படியே சற்றுநேரம் காற்றுவாங்க கடற்கரைக்குச் செல்பவர்களும், தங்கள் தங்கள் நேசர்களுடன் கைகோத்துலாவுகிறவர்களுமாய் இருக்கிறது.

தாணீபதி கடற்கரையோரமாகச் செல்லும்பாதை வழியாக வடக்கு நோக்கிச்சென்ருன். அன்றையதினம் வியாழக்கிழமையாதலால் ஐரோப்பியர்கள் அநேகர் "ஸெனெட் ஹௌஸிற்கு" எதிர் வாசிக்கப்படும் "பாண்ட்" வாத்தியங்கேட்க வந்திருந்தனர். தாணீபதி அவ்விடத்திற்கருகில் செல்லும்போது: அவனெதிரே அழகிய குதிரைகள்பூட்டிய "லாண்டா" 'வண்டியொன்றுவந்து நின்றது. அதிலிருந்து ஓர் அழகுவாய்ந்த பெண்மணியும், 45, 50 வயதுள்ள புருஷரொருவரும் இறங்கினர். அப்பெண்மணி கீழிறங்கினதும் பெஞ்சியில்உட்கார, எதிரேசெல்லும் தாணீபதியைப் பார்த்தாள். அவனும் இவளைப்பார்த்து ஆனந்த மடைந்தான். ஏனெனில்அக்கட்டழகிநீலாம்பாளே!

நீலாம்பாளைப்பார்த்த தாணீபதி, அவளருகிற்சென்ருன். அவள் சற்று வெறுப்புடன் "தாங்கள் சௌக்யந்தானே?" என்ருள். தாணீபதி ஆச்சரியமடைந்து, "சௌக்யமே! பேச இஷ்டமில்லை போலிருக்கிறதே" என்ருன்.

நீலா:— (பெருமூச்செறிந்து) "போட்டகடிதத்திற்கு பதிலில்லை; இஷ்டமென்ன.

தாணீ:—(சிரித்துக்கொண்டு) விலாசமில்லாமல் கடிதம் எழுதினல், எப்படி பதிலெழுதுகிறது. "நீலாம்பாள், சென்னை" யென்ருல் Dead Letter Office அன்றோபோய் சேரும்".

இதைக்கேட்ட நீலாம்பாள், "அப்படியா செய்தேன். நீங்கள் நான் கோபித்ததற்காக என்னை மன்னிக்கவேண்டும்." எனக்கூறி முகமலர்ச்சியுடன் க்ஷேமாதிசயங்களை விசாரித்தாள். இதற்குள் அவளுடன் வண்டியிலிருந்திறங்கினவர் அருகேவர, அவரை நோக்கி நீலாம்பாள்: "தாணீபதியென்று ஒருவரைப்பற்றி சொல்லியிருக்கிறேனல்லவா? அவர்தாம்இவர்" எனக்கூறி தாணீபதியைப்பார்த்து, "தாணீ இவருடன்தான் நானிருக்கிறேன். இவரும் மாமியும் சைதாப்பேட்டையி லிருக்கிருர்கள். இங்கு ஒருவர் வீட்டிற்கு விருந்திற்கு வந்திருக்கிறோம்" என்ருள்.

பிறகு, வீரவர்மர், காமாட்சி முதலியவர்கள் நீலாம்பாளைக் கண்டுபிடிக்கச்செய்த முயற்சிகளையும், தான் அவளைத்தேடி அலைந்ததையும் சவிஸ்தாரமாக அவர்களுக்குக் கூறினன். தம்மைவிட்டுப் போகக்கூடாதென்று கடகர்ப்பர் வற்புறுத்த, தன் பெற்ருேரிடம்தனக்கு இஷ்டமில்லாவிடில் கடகர்ப்பரிடமே தான்அவர் புதல்வி போலிருப்பதாக நீலாம்பாள் கூறினள்.

வீரவர்மருக்குத் தந்தியடிக்க, அவர் தம் மனைவியுடன் வந்து நீலாம்பாளைக்கண்டார். பாஸ்கரனும் நீலாம்பாளும் ஒரேசாயலாயிருந்ததினல், நீலாம்பாள் வீரவர்மர் புத்திரியென்பதற்குச் சந்தேகமில்லை. கடகர்ப்பரையும் அவர்மனைவியையும்விட்டுப்பிரிய நீலாம்பாளுக்கும் அவர்களுக்கும் மிகவும் வருத்தமாயிருந்தபோதிலும், உதிரக்கலப்பு விடாதாகையால் நீலாம்பாள் தன் பெற்ருேரோடு செல்ல சம்மதித்தாள்.

முன்பு பத்திரிகையில் பிரசுரித்தபடி வீரவர்மர் தாணீபதிக்குப் பரிசளித்தார். அதைவாங்கினதும் நீலாம்பாளிடம் தாணீபதிசென்று "உனக்கன்ருே இது சேரவேண்டும்" என்று கூறி அப்பரிசைக்கொடுத்தான். அதைக்கண்ட வீரவர்மரும் அவர் மனைவியும் புன்முறுவல் பூத்தனர்.

நீலாம்பாளின்மீது தாணீபதிக்குள்ள காதலை அறிந்த வீரவர்மர் விவாகமுடிக்க முகூர்த்த நாள் நிச்சயித்தனர். இப்படி எல்லாவிதத்திலும் வெற்றியும் கீர்த்தியுமடைந்த தாணீபதிக்கு இன்னமோர் குறையிருந்தது. அது நீங்குவதற்கு "எல்லாமீசன் செயல்" என்றெண்ணிக் காத்திருந்தான்.



முகூர்த்தநாள் நெருங்கிவிட்டது. தாணீபதி தன் உத்யோகவரும்படி, தாய்க்குஉயிலினல் வந்ததொகை முதலியவைகளால் திரண்டசெல்வவந்தனனன். தன் தாயார், உத்தியோகத்தைவிட்டு நீங்கியிருக்கும்படி வேண்ட, தன்னை அவசரமாக வரும்படி மாதவராவ் எழுதினலொழிய துப்பறியும் தொழிலில் பிரவேசிப்பதில்லை யென்று உறுதிமொழி கூறினன். ஆனல் மாதவராவ் இவனை அழைக்கவேண்டியது இவ்வளவு அவ்வளவுதானென்றுவரையிட்டுக்கூற நம்மாலாகாது. தான் உத்யோகத்திலிருந்து அடைந்த செல்வத்தை முதலாகக் கொண்டு "யூனியன் கம்பெனி" என்று ஒரு கம்பெனி ஏற்படுத்தி அதற்கு மானேஜராக இருக்கத் தாணீபதி தீர்மானித்தான். துப்பறியும் வேலையிலிருக்கும்போது, தாணீபதியின் மேலதிகாரியான மாதவராவ், மேற்படிகம்பெனி ஏற்படுத்தும்படி தாணீபதியைத் தூண்டினர். அக்கம்பெனி இப்பொழுது செழித்துவருகின்றது.

ஒருநாள் காலை தாணீபதியின் புது வீட்டிற்குப் புதியவர் ஒருவர் வந்தார். அவர் மிகுந்த செல்வவந்தராய்த் தோன்றினர். தான் தாணீபதியை ஒருவியாபார விஷயமாகப் பார்க்கவந்திருப்பதாய்க் கூற, சேவகன் உள்ளே அழைத்துச் சென்ருன். தன்னறையிலிருந்த தாணீபதி யோகக்ஷேமங்களை விசாரிக்க, அவர் நீர் "யூனியன் கம்பெனி" என்று ஏற்படுத்தி யிருக்கின்றீரன்ருே? அதைப்பற்றி என் நண்பர் மாதவராவ் எனக்கு எழுதினர். வியாபார விஷயங்களில் பழக்கமுள்ள கூட்டு முதலாளி இருந்தால் சௌகரியமாயிருக்கும் என்று சொன்னர். அவரும் அக்கம்பெனியில் பாகஸ்தரானதால், நான் பாகஸ்தராகயிருக்க விரும்பி என்னையும் சேர்த்துக் கொண்டார்.

தாணீ:—"மிகவும் சந்தோஷம். மாதவராவே இங்குவருவதாக எழுதியிருக்கிருர். தங்கள் நாமதேயமென்னவோ? தாம் எந்த ஊரோ?" என, "கோபாலன் என்று என்னைக் கூப்பிடுவார்கள். முன்பு தாராபுரத்திலிருந்தேன். நெட்டாலில் இத்தனை நாளாக உத்யோகத்திலிருந்தேன். இப்பொழுது வந்துவிட்டேன்" என்ருர்.

இதைக்கேட்ட தாணீபதிக்கு மனம் திடுக்கிட்டது. தம் முன்னின்றவரை உற்று நோக்கினன். சற்றுக் கழித்து "அண்ணு! அம்மா!" எனக்கூறி, எதிர் நின்றவர் காலண்டை விழுந்துவிட்டான். இவன் "அம்மா! என்று கதறியதைக் கேட்ட, அவன் தாய் ஓடிவந்தாள். தன் மகன் கீழே கிடப்பதையும் யாரோ ஒருவர் குனிந்து அவனை வாரி யெடுப்பதையும் கண்ட தாணீயினன்னை திடுக்கிட்டு நின்றுவிட்டாள். பிறகு கோபாலனென்றவர் தலை நிமிர அவரைக் கண்ட மீனுக்ஷி, "நாதா?" எனக்கூறி கண்ணீர் சொரிந்தாள்.

பிறகு கோபாலர், தாம் நெட்டாலுக்குச் சென்றதையும், அங்கு சென்றபிறகு தமது தரப்பியாசங்களெல்லாம் நீங்கினதும், நல்ல ஒரு கம்பெனியில் முதலில் குமஸ்தாவாக வமர்ந்து பிறகு அக்கம்பெனிக்கு தமது சாமர்த்தியத்தினலும் தெய்வ கடாக்ஷத்தினலும் முதலாளியானதையும், வெகு காலமாகப் பிரிந்த தமது மனைவியையும், புதல்வனையும் காண சென்னைக்குத் திரும்பி, மாதவராவைக் கண்டு, தாணீபதியைப்பற்றி தாமெல்லா மறிந்ததையும் ஸவிஸ்தாரமாகக் கூறினர். வீரவர்மர் முதலியவர்களும் கேட்டு மிக்க ஆநந்தமடைந்தனர்.

"ஆக்ராபாங்க்" கேஸில் சம்பந்தப்பட்டதால் தியாகராஜன் சிறையிடப்பட்டு, கோர்ட்டில் விசாரித்த பிறகு 20 வருஷம் தீபாந்தறசிக்ஷை விதிக்கப்பட்டான். சங்குவும் அந்தக் கேஸில் அகப்பட்டுக் கொண்டமையால் குற்றவாளி யெனத் தீர்மானிக்கப்பட்டு சிறுவனேயாதலால் "ரிபர்மேடரி ஸ்கூலு" (Reformatory School) க்கு அனுப்பப்பட்டான் தியாகன் இருபது வருஷங்கழித்து சிறையிலிருந்து வந்தால் என்ன செய்வானே என்ற பயம் யாவருக்கு மிருந்தது எனக் கூறலாம்.

சுபமுகூர்த்தத்தில் தாணீபதிக்கும் நீலாம்பாளுக்கும் விவாகம் நடந்தது. அனைவரும் ஆநந்தத்துடன் இருக்கின்றனர்.

தாணீபதி, தான் "யூனியன் கம்பெனி" க்கு மானேஜராயிருந்த போதிலும், அதிநுட்பமான கொலை களவு முதலியவைகளைக் கண்டுபிடிக்க மாதவராவால் அனுப்பப் படுவதுண்டு. அதில் அவன் ஜயித்துவருவானெனக் கூறவேண்டியதில்லை. அவன் இன்னும் சில கேஸுகளில் துப்பறிவதால், அக்கேஸுகள் முடிந்த பிற்பாடு, அவைகள் பிரசுரிக்கப்படும் என்ற நம்பிக்கை நமக்கிருக்கின்றது.

முற்றிற்று.

---

**'விவேக போதினி' 6-ம் தொகுதியின் அட்டவணை.**—இவ்விஷய அட்டவணை, அடுத்தமாதப்பத்திரிகையுடன் சந்தாதார்க்கு அனுப்பப்படும்.

***

**லார்டு மார்லியின் சித்திரப்படம்.** இந்தியாவுக்கு நன்மை புரிந்தவர்களில் மிகவும் சிறந்தவரெனக் கருதப்படும் லார்டு மார்லிக்கு அவருடைய சித்திரப்படமொன்று தயாரித்து அதை அவருக்கு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் லண்டன் நகரில் ஒரு கமிட்டி ஏற்பட்டிருக்கிறது. அவர்மிகவும் சிறந்த இராஜ தந்திரியாயும், ஜன சமூகத் தலைவராயும், அநேகம்நூல்களின் ஆசிரியராயும்இருப்பதுமல்லாமல் இந்தியா கவர்ன்மெண்ட் நிர்வாகத்தில் இந்தியர்களுக்கு அதிக உரிமை கிடைப்பதற்கு வேண்டிய வழியையும் தேடிக் கொடுத்தவராகையால், இந்தியர்கள் பலராலும் அவர் நன்கு மதிக்கப்படக்கூடியவர். ஆகலின் அவருக்கு சித்திரப்படம் தயாரித்து அளிக்க 22,500 ரூபாய் தேவை. இந்தியா மந்திரி சபையில் மெம்பராயிருக்கும் ஸர் கிருஷ்ண குப்தா அந்தக் கமிட்டியின் சேர்மனவர்.

# புத்தகக் குறிப்பு

## REVIEW OF BOOKS

வைத்யநாத தீக்ஷிதீயம்.—என்பது தமிழ் நாடுகளில் பலரால் அனுஷ்டிக்கப்பட்டுவரும் ஸ்மிருதிகளில் மிக முக்கியமானது. மேலும் இது பல ஸ்மிருதிகள் அபிப்பிராயங்களையும் காட்டும் தொகுதி நூல் என்பதும் எல்லோரும் அறிந்திருப்பார்கள். இது வர்ணாச்ரமதர்மம், ஆன்ஹிகம், ஆசௌசம், சிராத்தம், திதிநிர்ணயம், ப்ராயசித்தம் ஆகிய ஆறு காண்டங்களை உடையது. எல்லாப் பிராஹ்மணருக்கும் அவசியமாகவேண்டிய இந்த நூல், முன்னமே பிரஹ்மவித்யா ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகளால் மொழிபெயர்க்கப்பட்டு வந்தது. அவர் சிராத்தகாண்டம் நீங்கலாக மற்றைய ஐந்து காண்டங்களைப் பூர்ணமாகவும், சிராத்தகாண்டத்தில் முன்பாகமாகிய ஒரு பாதியையும் தான் மொழிபெயர்த்திருந்தார். அதில், இப்பொழுது சில புத்தகங்கள்தான் விலைக்கு அகப்படும். அந்த மஹான் எடுத்த லோகோபகார வேலையை அரைகுறையாக விட மனம் வாராத் திருவாலூரிலிருக்கும் (பென்ஷன்ஸால்ட் இன்ஸ்பெக்டர்) ஆர். ஸ்ரீநிவாஸய்யர் அவர்கள் தமது கைப்பொருளைக்கொண்டு மிகுந்த கஷ்டத்தின்பேரில் சிராத்தகாண்டம் பின்பாக மொழி பெயர்ப்பை நடைபெறும்படி செய்து அச்சுஇட்டு வெளிப்படுத்தி இருக்கின்றனர். இது அவரிடமிருந்தே தபால் சார்ஜ் நீங்கலாக ரூ. 2-8-0 க்குப் பெற்றுக்கொள்ளலாம். மற்றைய பாகங்கள் எல்லாம் ரூ. 18-0-0 க்கு அகப்படும் என்றும் தெரிய வருகிறது. தமிழ் வாசிப்போருக்கு காலஞ்சென்ற ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் செய்ய எடுத்துக்கொண்ட உதவியை அப்படியேகொண்டு வேறொருவர் பூர்ணமாக்கிவெளிப்படுத்தியும் விட்டனர். இதனால் நன்மையடைந்து கடைத்தேற முன்வரவேண்டுபவர்கள் தான் இத்தருணத்தை கைவிடாது இப்புத்தகத்தை வாங்கி அனுஷ்டான வித்திபெற்று ஈடேற முயலவேண்டும்.

***

### தென் ஜில்லாக்களில் பெய்த மழையின் அளவு

ஏப்ரல் மாதம் முதல் தேதி முதல் ஜூன் மாதம் முதல் தேதி வரை

| | |
|---|---|
| சென்னை | 2·06 |
| கடலூர் | 1·91 |
| நாகப்பட்டணம் | 1·50 |
| கொடைக்கானல் | 14·63 |
| உதகமண்டலம் | 6·97 |
| கோயமுத்தூர் | 0·70 |
| வேலூர் | 4·37 |
| சேலம் | 4·02 |
| திருச்சிராப்பள்ளி | 2·08 |
| மதுரை | 3·03 |
| திருநெல்வேலி | 0·83 |

**உதகமண்டலத்தில் ஸ்கூல் இன்ஸ்பெக்டர்களின் கான்பரன்ஸ்**:—இந்தமாதம் 15, 16-இவ்விரண்டு தேதிகளில் உதகமண்டலத்தில், கல்வியிலாகா டைரெக்டரின் அக்கிராசனத்தின்கீழ் ஸ்கூல் இன்ஸ்பெக்டர்களின் கான்பரென்ஸு ஒன்று கூடும். பத்திரிகைகளிலும், சென்னை சட்டைசபையிலும் சமீபத்தில் வாதத்திலிருந்துவரும் வித்யா சம்பந்தமான விஷயங்கள் அந்த மீட்டிங்கில் பேசப்படும்.

***

**ஞானசம்பந்த நற்சபை, கோநகர்**:—இச்சபையின் இரண்டாவது ஆண்டுநிறைவுக்கொண்டாட்டம் சென்ற மே மாதம் 21, 22, 23உ களில் செவ்வனே நடைபெற்றது. சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மஹாமஹோபாத்யாய பிரம்ம ஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள் அக்கிராஸனம் வகித்தார். வெளியூர்களிலிருந்து அநேகம் தமிழ்ப் பண்டிதர்களும், மற்ற கனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள். அவர்களில் சிலரால் பற்பலஉபயோகமான விஷயங்களைப் பற்றி உபந்யஸிக்கப்பட்டன.

***

**அரசர் பிறந்ததினக் கொண்டாட்டம்**.—ஜியார்ஜ் சக்கரவர்த்தி தம்முடைய ஜன்ம தினக் கொண்டாட்டத்தை பக்கிங்ஹாம் அரண்மனையில் கொண்டாடினார். உலக முழுமையி லிருந்தும், ஆசி கூறி தந்தி சமாச்சாரங்கள் வந்தன. அரசரின் தாயாகிய அலெக்ஸாண்டிரா மகாராணியிட மிருந்துதான், முதல் ஆசீர்வாதம் வந்தது. விசேஷமொன்று என்னவென்றால், 50 ஆயிரம் குழந்தைகள் அரசருடைய க்ஷேமத்தைவேண்டிக்கடிதமனுப்பியிருந்தார்கள். அரசருடைய பிறந்த தினத்தை உத்தியோக முறையில் கொண்டாடுவது 22-ந் தேதி நடக்கும். கவுரவப் பட்டங்கள் ஜூன் 21-ந்தேதி வெளியிடப்படும்.

***

**மதுரை தமிழ்ச் சங்கம் 13-வது வருஷோற்சவம்**.—இச்சங்கத்தின் வருஷோற்சவம், மேமீ 16, 17, 18உ களில் ராமநாதபுரம் ராமலிங்க விலாசத்தில், ஆனரெபில் மிஸ்டர் P. ராமநாதனுடைய அக்கிராசனத்தின்கீழ், நிரம்ப விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. தெரிந்தெடுக்கப்பட்ட பிரஸிடெண்டு 15-ந் தேதி யன்று வந்துசேர்ந்தார். தென் இந்தியாவின் பலபாகங்களிலிருந்து வந்த தமிழ்வித்வான்களில் மஹாமஹோபாத்யாய ஸ்வாமிநாதய்யர், மிஸ்டர் J. M. வேலுபிள்ளை, ராவ்சாஹேப் T. ராமகிருஷ்ணபிள்ளை ராம்சாஹேப் M. அப்பஹாம் பண்டிதர், மிஸ்டர் கோபாலசாமி ராஜாளியார், சங்கத்தின் வைஸ் பிரஸிடெண்டான மிஸ்டர் பெத்தாச்சிசெட்டியார், முதலிய பலர் வந்திருந்தார்கள். உபசாரணை கமிட்டி ப்ரெஸிடெண்டான மிஸ்டர் வேலுசாமித் தேவர் வந்தவர்களை உபசரித்தார். தமிழபிவிருத்திக்குரிய அநேக விஷயங்கள் தக்கவர்களால் பேசப்பட்டன.